சுவாமி விவேகானந்தரின்
ஞான தீபம்

சுவாமிகள் பேசியும் எழுதியும்
அருளியவற்றின்
தமிழாக்கம்

சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம்

சுவாமிகளின் நூற்றாண்டு விழாப் பதிப்பு

சுடர்–3

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை–4

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ஆம் ஆண்டுச் சட்டப் பிரிவு XX-ன்படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமை பதிப்பாளர்க்கே

சாதாரண பைண்டு ரூ. 5·00
காலிகோ பைண்டு ரூ. 6 50

அச்சிட்டோர் :
கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை–5.

முன்னுரை

திருவளர்ந்தோங்கும் பரத மாநாட்டிலே அவதரித்து, குரு வருளும் திருவருளும் பெற்று, ஆணையால் ஊரையும் நாட்டையும் உலகத்தையும் தம்மைப் போலாக்கும் ஞான ஒளி பரப்பி உய்விக்கக் கருதினர் வீரமாகுரவர் சுவாமி விவேகானந்தர். அவர் பரம்பொருளோடு மன்னிக் கிடந்து யோகத் துயிலில் அமரந்து அறிவுற்று விழித்தபின், மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு வேதாந்தச் சிங்கம் போல மேலை நாடும் கீழை நாடும் திரிந்தார். சென்னையிலிருந்து சிக்காகோப் பல்சமயப் பெருமன்றத்திற்குச் சென்று தொண்டாற்றத் தொடங்கிய காலை, இறைமைப் பண்பாம் அமுத ஆழியுட்புகுந்து முகந்துகொண்டு, நாவீறுடைய ஆசாரிய பதத்தில் ஏறினர். அருட்காளமுகில் வடிவாய் மெய்ப்போத ஒளியினை மின்னலென வீசினர். அகப்பகைகள் அஞ்சி நடுங்கியொழியும்படி அம்முகில்போல அதிர்ந்து, சார்ங்கம் உதைத்த சரமழைபோலச் சொன்மாரியை அமெரிக்க நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் பொழிந்து, மக்களை விழிக்கச் செய்து, சென்றவிடமெல்லாம் ஞான நற்பயிர் தழைக்கச் செய்து வந்தனர்.

அப்பெரியார் தம் மாபெருங்குரவரின் திருவடிக்கு இவ்வாறு ஞானச்சுடர் விளக்கேற்றும் பணியினில் ஈடுபட்டிருந்தபோது, அவரது திருவாயினின்றும் திருக்கரத்தினின்றும் வெளிவந்த ஞான மொழிகள் அத்தனையையும் திரட்டிப் பத்துத் தொகுதிகளாக்கித் தமிழ் உலகம் தழைக்குமாறு தமிழாக்கம் செய்து, 'விவேகானந்தரின் ஞான தீபம்' எனப் பெயரிட்டுப் பத்துச் சுடர்களாக வெளியிடும் நோக்கம் பூணலானோம்.

'ஞான இயல்' என்ற பெரும் பகுதியும், 'கரும யோகம்' என்ற பகுதியும், 'யோகங்கள்,' 'அறிக்கைகள்' என்பனவும் சேர்ந்து மூன்றும் சுடராய் மிளிர்கின்றன. இவற்றில் 'ஞான இயல்' என்பதில் கீதையைப் பற்றிய சொற்பொழிவுகள் (22, 23, 24, 25) நான்கையும் ஸ்ரீ 'அண்ணா' (சுப்பிரமணிய ஐயர், பி.ஏ., எல்.டி.) என்பவரும், ஏனையவற்றை ஸ்ரீ செல்லம் (எம். ஏ.) என்பவரும், 'கரும யோகம்' என்பதை சுவாமி விபுலாநந்தரும், மொழிபெயர்த்து உதவினர்; 'யோகங்கள்' (சுருக்கம்) என்ற

பகுதியில் முதல் நான்கையும் சுவாமி பரமாத்மாநந்தரும், ஐந்தாவதை சுவாமி சர்வக்ஞாநந்தரும், 'அறிக்கைகள்' என்பதை ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகனும் மொழி பெயர்த்தனர்.

இந்நூலைத் தமிழ்த்தாயின் தாளிணையில் ஆர்வத்தோடு சமர்ப்பிக்கின்றோம். தமிழகத்தார் இதனை மனமுவந்தேற்று, சிரத்யையுடன் பயின்று, திருவருள் பெற்று இன்புறுவாராக!

பதிப்பாளர்.

பொருள

பொருள்		பக்கம்
I. ஞான இயல்		
1. வேதாந்தம்	...	1
2. வேதாந்தம் நாகரிகத்தின் ஓர் அமிசம்	...	13
3. வேதாந்தத்தின் உயிரும் அதன் ஆட்சிச் சக்தியும்	...	18
4. இந்து வேதாந்த தத்துவத்தின் படிகள்	...	25
5. மெய்ஞ்ஞானப் படிகள்	...	40
6. வேதாந்தமும் உரிமையும்	...	55
7. உரிமை	...	71
8. வருங்காலச் சமயம் வேதாந்தமா ?	...	79
9. மறைவற்ற மறைபொருள்	...	105
10. பேரின்பப் பேற்றுக்கு நெறி	...	116
11. யாஞ்ஞவல்கியரும் மைத்ரேயியும்	...	128
12. ஆன்மா, இயற்கை, இறை	...	137
13. சுதந்தரமான ஆன்மா	...	147
14. உள்ளது ஒன்று பலவாகத் தோற்றுதல்	...	163
15. ஆன்மாவின் இயல்பும் அதன் குறிக்கோளும்	...	175
16. ஆன்மாவுக்கு அழிவில்லையா ?	...	186
17. மறு பிறவி	...	191
18. வேதாந்தத் தத்துவமும் கிறித்தவ மதமும்	...	209
19. பிரபஞ்ச சாத்திரம்	...	212
20. சாங்கியத் தத்துவத்தைப்பற்றி ஓர் ஆராய்ச்சி	...	224
21. சாங்கியமும் வேதாந்தமும்	...	237
22-24. கீதை-I, II, III	...	247
25. கீதையைப் பற்றிய நினைவுகள்	...	287
26. இலட்சியம்	...	297
II. கரும யோகம்	...	311
III. யோகங்கள் (சுருக்கம்)	...	414
IV. அறிக்கைகள்	...	468
பொருட் குறிப்பகராதி	...	493

ஞான இயல்

வேதாந்தம்

[இது 1896-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள், 25-ம் நாள் ஹார்வர்டு பல்கலைக் கழகப் பட்டம் பெற்றோர் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு.]

இன்று பொதுவாக வேதாந்த தத்துவம் என்று சமயக் கொள்கை ஒன்றைக் குறிப்பது வழக்கமாய் இருந்தாலும், இந்தியாவில் இன்று நடைமுறையில் இருக்கும் பல வைதிக சமயக் கொள்கைகளும் இதற்குள் அடங்கும். எனவே, ஒரே கொள்கைக்குப் பலவிதமான விரிவுரைகள் இருந்திருக்கின்றன. இந்த விரிவுரைகள், இரண்டு அல்லது துவைதக் கொள்கையில் தொடங்கி இரண்டற்றது அல்லது அத்துவைதக் கொள்கை வரையில் படிப் படியாக முன்னேறி யிருக்க வேண்டுமென்றே நான் நினைக்கிறேன். இந்துக்களின் ஆதி சமய நூல்கள் வேதங்களே.[1] 'வேதங்களின் முடிவு' என்பதே 'வேதாந்தம்' என்பதன் சொற்பொருள். வேதங்கள் என்றால் துதிப்பாடல்களும் சடங்குகளும் மட்டுமே என்று நினைப்பதை மேலை நாட்டில் சில சந்தர்ப்பங்களில் காண்கிறோம். ஆனால், தற்காலத்திலோ இப்பகுதிகள்

---

[1] வேதங்கள் கரும காண்டம் என்றும், ஞான காண்டம் என்றும் முக்கியமான இரண்டு பெரும்பிரிவுகளாய் இருக்கின்றன. இவற்றைச் செயற்பகுதி, அறிவுப் பகுதி என்றும் சொல்லலாம். புகழ் பெற்ற வேத மந்திரங்களாகிய தோத்திரங்களும் 'பிராம்மணங்கள்' என்ற பகுதிகளில் காணப்படும் சடங்குகளும் கரும காண்டத்தில் அடங்கும். சடங்குகள் அல்லாத ஆன்மிகக் கருத்துகளைப் பற்றிச் சொல்லும் நூல்களை உபநிஷத்துகள் என்று வழங்குகிறார்கள். உபநிஷத்துகள் ஞானகாண்டம் என்னும் அறிவுப் பகுதியைச் சேர்ந்தவை. வேதங்களின் ஒரு தனிப் பகுதியாகவே உபநிஷத்துகள் எழுந்தன என்று நினைத்துவிடக் கூடாது. சடங்குப் பகுதிகளிடையே சில உபநிஷத்துகள் கலந்து காணப்படுகின்றன. சங்கிதையாகிய தோத்திரப் பகுதியில் குறைந்தது ஓர் உபநிஷத்தாவது அடங்கியிருக்கிறது. சில சமயங்களில் பகவத் கீதை போன்ற, வேதங்களில் அடங்காத சில புத்தகங்களையும் உப

கிட்டத்தட்ட பழக்கத்தில் இல்லாதனவாயின்; வேதங்கள் என்ற மொழியால் வேதாந்தத்தைக் குறிப்பதே இந்தியாவில் வழக்கமாயிற்று. விரிவுரையாளர்களெல்லாம் (பாஷ்யகாரர்களெல்லாம்) நமது ஆதி சமய நூல்களிலிருந்து மேற்கோள் காட்ட நேரும்போதெல்லாம் 'வேதாந்தம்' என்னும் உபநிடதங்களிலிருந்து காட்டுவதைத்தான் ரூடியாக (அடிப்படை வழக்கமாக)க் கொண்டிருக்கிறார்கள். இந்த விரிவுரையாளர்கள் வேதாந்தத்தை—உபநிஷத்துகளை—சுருதி[1] என்ற ஒரு தனிப் பெயரால் வழங்குகிறார்கள். வேதாந்தம் என்று வழங்கும் நூல்கள் எல்லாமே வேதத்தின் கரும காண்டப் பகுதிக்குப் பின்னாலேதான் தோன்றின என்று நினைப்பது தக்கதன்று. சான்றாக, யஜுர்வேதத்தின் நாற்பதாவது அத்தியாயமாய் இருக்கும் ஈசா உபநிஷத்தைச் சொல்லலாம்; யஜுர்வேதம் வேதங்களின் மிகப் பழைய பகுதிகளில் ஒன்றாகும். பிராம்மணங்கள் என்னும் சடங்கு சம்பந்தமான வேதப் பகுதிகளின் ஒரு பகுதியாக உள்ள வேறு உபநிஷத்துகளும்[2] இருக்கின்றன. இவையல்லாத மற்ற உபநிஷத்துகள் தனிப்பட்டவை; இன்றுள்ள பிராம்மணங்களிலோ, அல்லது வேதப் பகுதிகளிலோ காணப்படாதவை. இதனாலேயே இவை வேதப் பகுதிகளோடு சம்பந்தமே இல்லாதவை என்று நினைத்துவிடலாகாது. பல வேதப் பகுதிகள் தொலைந்துவிட்டன என்பதும், பிராம்மணங்களில் பலவும் இன்று வழக்

நிஷத்துகள் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. ஆனால், வேதங்களில் பரவிக் கிடக்கும் சமய தத்துவ விளக்கங்களையே உபநிஷத்துகள் என்று சொல்வதுதான் தொன்று தொட்ட முறை. வேதங்களில் பரவிக் கிடக்கும் இத்தகைய சமய தத்துவ விளக்கங்களைத் தொகுத்து, வேதாந்தம் என்று வழங்கி வருகிறார்கள்.

[1] 'காதால் கேட்கப்பட்டு வந்தது' என்ற பொருள்படும் 'சுருதி' என்ற சொல் வேத இலக்கியம் முழுவதையுமே குறிக்குமானாலும், உரைகாரர்கள் உபநிஷத்துகளையே இந்தச் சொல்லால் குறிக்கிறார்கள்.

[2] 108 உபநிஷத்துகள் உண்டு என்று சொல்கிறார்கள். நிச்சயமாக இவற்றின் காலங்களை வரையறுக்க இயலவில்லை; புத்த சமயத் தோற்றத்துக்கு முற்பட்டவை என்பது மட்டும் திண்ணம். அதிகச் சிறப்பில்லாத சில உபநிஷத்துகளில் காணப்படும் சில செய்திகள் பிற்பட்ட காலத்தைக் குறிப்பவைகளாய் இருந்தாலும், அந்த உபநிஷத்துகள் பிற்காலத்தில் எழுந்தவை என்பதை மெய்ப்பிக்கும் ஆதாரங்களாக இவற்றைக் கொள்ள இயலாது. ஏனெனில் மிகப் பெரும்பாலனவான வடமொழி இலக்கியங்களில், தங்கள் கொள்கைகளை உயர்த்திக்காட்ட வேண்டிய சிலர், மிகப் பழைய நூலின் பொருளுக்கும் பிற்கால நிகழ்ச்சிகளின் வண்ணத்தைத் தீட்டுதல் இயல்பாய் இருந்து வருவதை நாம் காண்கிறோம்.

கொழிந்துவிட்டன என்பதும் நமக்கு நன்கு தெரியும். இன்று தனிப்பட்டவைகளாய்த் தோன்றும் உபநிஷத்துகள், படிப்படியாக வழக்கொழிந்து போன பிராம்மணங்களின் பகுதிகளாய் இருந்திருத்தல் கூடும்; பிராம்மணங்கள் மட்டும் அழிந்தொழிய, அவற்றின் பகுதியாய் இருந்த உபநிஷத்துகள் மட்டும் மிஞ்சியிருக்கலாம். இந்த உபநிஷத்துகளை 'ஆரண்யகங்கள்' அதாவது 'வனநூல்கள்' என்று வழங்குவதும் உண்டு.

எனவே, நடைமுறையில் இந்துக்களின் ஆதாரச் சமய நூலாய் இருப்பது வேதாந்தம் அல்லது உபநிஷத்துகளேயாகும். தொன்மையான வைதிக சமயத் தத்துவங்களெல்லாம் வேதாந்தத்தையே அடிப்படையாகக் கொண்டனவாய் இருக்க வேண்டும். தங்களுக்கு இயைந்து இருக்கும் போது வேதாந்தத்தின் ஒரு பகுதியை மேற்கோளாகக் காட்டுவதற்குப் பௌத்த ஜைனர்கள் கூடப் பின் வாங்குவதில்லை. வேதங்களே தங்களுக்கு அடிப்படை என்று உரிமை கொண்டாடும் இந்திய சமயங்களெல்லாங் கூடத் தத்தம் சமய தத்துவ முறைகளுக்கு வெவ்வேறு பெயர் வைத்துக்கொண்டன. இந்தத் தத்துவ முறைகளுள் கடைசியான 'வியாசர் முறை' இதற்கு முன் வழக்கிலிருந்த மற்ற முறைகளை விட மிகுதியாக வேதக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அதோடு இதற்கு முன் எழுந்த தத்துவ முறைகளாகிய சாங்கிய நியாய முறைகள் போன்ற முறைகளை வேதாந்த முறையோடு இணைக்கவும் 'வியாசர் முறை' முயன்றது. எனவே, இந்த வியாசர் முறைதான் இன்று சிறப்பாக 'வேதாந்த தத்துவம்' என்று வழங்கப்படுகிறது. இக்கால இந்தியாவில் வேதாந்த தத்துவத்துக்கு அடிப்படையாய் இருப்பவை வியாசருடைய சூத்திரங்களே. இன்னும், இந்த வியாச சூத்திரங்களை வேறு வேறு உரைகாரர்கள் வேறு வேறு வகையாக விளக்கம் செய்திருக்கிறார்கள். பொதுவாக, இந்தியாவில் மூன்று வகை விரிவுரைகள்[1] (பாஷ்யங்கள்) இருக்கின்றன. இவ்வுரைகள் காரணமாக மூன்று சமயத் தத்துவங்களும் மூன்று சமயங்களும் தோன்றியிருக்கின்றன: ஒன்று, 'இரண்டு' என்று கூறும் துவைதம்; இன்

1 விரிவுரைகள் பல வகைப்படும்: அவை பாஷ்யம், டீகா, டிப்பணி, சூர்ணி முதலியவை. இவற்றுள் பாஷ்யம் அல்லாத மற்றவை மூலத்திற்கோ மூலத்திலுள்ள கடினமான சொற்களுக்கோ விளக்கங்களேயாகும். பாஷ்யத்தை விரிவுரையென்பது சரியன்று; ஆனால், மூலத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு கொள்கையை நிலைநாட்டும் முயற்சியே அது. சொற்களை விளக்குவது இதன் நோக்கமன்று;

ஞென்று, 'இரண்டல்ல' என்பதன் ஒருவகைத் தழுவலும் மறுப்புமான விசிஷ்டாத்துவைதம்; மூன்ருவது, 'இரண்டல்ல' என்னும் அத்துவைதம். இவற்றுள் முன் இரண்டு வகைச் சமயங்களைப் பின்பற்றும் மக்களே இந்தியாவில் அதிகம். அத்துவைதிகள் இவர்களோடு ஒப்பிடும்போது மிகக் குறைவுதான். இந்த மூன்று சமயக் கொள்கைகளின் கருத்துகளையும் சுருக்கமாக உங்களுக்கு விளக்க நான் இப்போது முயல்கிறேன். ஆனுல், இந்த முயற்சியைத் தொடங்குவதற்கு முன் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மூன்று வேதாந்த முறைகளுக்கும் பொதுவான மனநூல் ஒன்று தான்: அதுதான் சாங்கியக் கொள்கையின் மனநூல். சாங்கிய மனநூல், நியாய வைசேஷிகக் கொள்கைகளின் மனநூலையே பெரும்பாலும் ஒத்திருக்கிறது. முக்கியமல்லாத சில அமிசங்களில் மட்டுமே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வேதாந்திகள் எல்லோருமே மூன்று அமிசங்களை ஒப்புக்கொள்கின்றனர்: கடவுளை நம்புகிருர்கள்; வேதங்கள் 'கடவுள்

ஒரு புதுக் கொள்கையை நிலை நாட்டுவதே நோக்கம். எனவே, உரைகாரர் மூலத்தின் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு தம் கொள்கையை விவரிக்கவே முயல்கிருர்.

வேதாந்தத்துக்குப் பல உரைகள் இருக்கின்றன. அதன் கொள்கைகளுக்கு முடிவான உருவம் வியாசரின் வேதாந்த சூத்திரங்களிலே தான் கிடைத்தது. '**உத்தர மீமாம்ஸை**' என்ற இந்த நூலேதான் வேதாந்தக் கொள்கைக்கு எல்லோரும் ஒப்பும் ஆதாரமாய் இருக்கிறது; அது மட்டுமா? இந்து வேதங்களுக்கே அதிகாரபூர்வமான சிறந்த விளக்கமாயும் இது இருக்கிறது. நேருக்கு நேர் முரண்பட்ட சமயவாதிகளுங்கூட வியாசர் சூத்திரங்களின் மூலங்களை எடுத்துக்கொண்டு தங்கள் தத்துவங்களோடு அவற்றின் பொருளை இணைக்கும் கட்டாயத்திற்கு உட்பட்டவர் போலாயினர். மிகு பழங்காலத்திலேயே வேதாந்த தத்துவ உரைகாரர்கள் மிகப் பரந்த மூன்று இந்து சமயவாதிகளாய்ப் பிரிந்து நின்ருர்கள்—துவைதிகள், விசிஷ்டாத்துவைதிகள், அத்துவைதிகள் என. அந்தப் பழைய உரைகள் ஒருவேளை தொலைந்து போயிருக்கலாம். ஆனுல், புத்தர் காலத்துக்குப் பிற்பட்டவர்களாகிய மத்துவர், இராமானுசர், சங்கரர் என்பவர்கள் இதே மூன்று சமய தத்துவபரமான உரைகளைச் செய்திருக்கிருர்கள். அத்துவைதக் கொள்கைக்குச் சங்கரரும், பழைய போதாயனக் கொள்கையான விசிஷ்டாத்துவைதக் கொள்கைக்கு இராமானுசரும், துவைதக் கொள்கைக்கு மத்துவரும் புத்துயிர் கொடுத்தார்கள். இந்தியாவில் இந்த மூன்று சமயங்களுக்கும் சமய தத்துவங்களிலேதான் வேறுபாடு; சமயச் சடங்குகளில் வேறுபாடு மிகவும் குறைவு; இவர்கள் சமயத்துக்கும் சமயத் தத்துவத்துக்கும் அடிப்படை ஒன்ருய் இருப்பதே இந்த வேறுபாட்டுக் குறைவுக்குக் காரணமாகும்.

வாக்கு' என்பதை நம்புகிறார்கள்; பிரளய-படைப்பு வட்டத்தை நம்புகிறார்கள். பிரளய-படைப்பு வட்ட சம்பந்தமான நம்பிக்கை பின் வருமாறு: ஆதார சடப்பொருள் தத்துவமான ஆகாசத்திலிருந்து தோன்றியதுதான் சகல அண்டங்களிலும் காணப்படும் சடப்பொருள். எல்லா வகை இயக்கச்சக்தியும்—கீழ்நோக்கிய இழுப்புச்சக்தி, ஒன்றை ஒன்று இணைக்கும் சக்தி, ஒன்றை ஒன்று விலக்கும் சக்தி—இவை போன்ற எல்லாச் சக்திகளும் உயிர்ச் சக்தியும் பிராணன் என்ற ஓர் ஆதி சக்தியிலிருந்து தோன்றியவைகளே. பிராணன் ஆகாசத்தின் மேல் தொழிற்படுவதாலேதான் படைப்பு, அதாவது உள்ளதன் புதுத்தோற்றம்[1] உலகில் உண்டாகிறது. படைப்பின் தொடக்கத்தில் ஆகாசம் யாதோர் அசைவும் அற்றதாய் எந்த மாறுதலும் அடையாமல் இருந்தது. இத்தகைய சலனமற்ற ஆகாசத்தின்மேல் பிராணன் படிப்படியாக அதிக அளவில் தொழிற்படத் தொடங்கி, செடிகள், பிராணிகள், மக்கள், உடுக்கள் போன்ற, ஒன்றைவிட ஒன்று பருமை மிக்க பொருள்களை ஆகாசத்திலிருந்து படைத்தவண்ணம் இருக்கிறது. நம் சிந்தனைக்கு எட்டாத கால அளவுக்கு இந்த விரிவு அதாவது தோற்றம் நிகழ்கிறது; பிறகு ஒடுக்கம் தொடங்குகிறது. ஒவ்வொன்றும் பருமையினின்றும் படிப்படியாக நுட்பநிலைக்கு மாறி, கடைசியில் ஆதியான ஆகாசமாகவும் பிராணனாகவும் மாறி ஒடுங்கி விடுகின்றது. பிறகு மீண்டும் ஒரு புது வட்டம் தொடங்குகிறது. இந்த ஆகாசத்துக்கும் பிராணனுக்கும் அப்பால் ஏதோ ஒன்று இருக்கிறது. இந்த இரண்டுமே மூன்றாவது பொருளாகிய 'மகத்து' என்பதற்குள் ஒடுக்கமாய் நிற்பது தெரிகிறது. இந்த மகத்து (cosmic mind) என்பதுதான் விசுவ மனம். இந்த விசுவ மனம் ஆகாசத்தையும் பிராணனையும் படைப்பதில்லை; ஆனால், தானே அவைகளாக மாறிவிடுகின்றது.

மனம், ஆன்மா, இறைவன் என்பன பற்றிய நம்பிக்கைகளைப் பற்றி இனிப் பார்க்கலாம். உலகமெல்லாம் ஒப்பும் சாங்

---

1 ஆங்கிலத்தில் காணப்படும் Creation (இல்லாத ஒன்றைப் புதிதாகத் தோற்றுவிப்பது என்பது) வடமொழியில் Projection (முன்னமே உள்ள ஒன்றின் தோற்றம்) என்ற பொருளைக்கொண்ட சொல்லேயாகும். மேலை நாட்டார் நினைப்பது போல, சூனியத்திலிருந்து படைப்பு உண்டானதாக இந்தியாவில் எந்தச் சமயத்தாருமே நினைப்பதில்லை. முன்னமே இருந்த ஒன்றன் புதுத்தோற்றம் என்றே நாம் படைப்பைக் கருதுகிறோம்.

கிய மனநூலின்படி ஒன்றை அறிவது என்ற தொழிலில், உதாரணமாகப் பார்த்து அறிவதை எடுத்துக்கொள்வோம்: முதலில் பார்க்கும் கருவிகள் (கண்கள்) இருக்கின்றன. இந்தக் கருவிகளுக்குப் பின்—கண்களுக்குப் பின்—பார்க்கும் உட்கருவி அதாவது புலன் (பார்வை நரம்புகளும் மையமும்) இருக்கிறது. இவை வெளிக் கருவிகள் அல்ல; ஆனாலும், இவைகளின் உதவியின்றி வெளிக்கண்ணால் பார்க்க இயலாது. பார்வை யறிவுக்கு இந்தப் பொறி, புலன்கள் மட்டும் போதா. மனம் இந்த அகப் புறக் கருவிகளோடு சம்பந்தப்பட வேண்டும். இதற்கும் மேலாக இந்த உணர்ச்சி, புத்தி என்ற மனத்தின் நிர்ணயிக்கும் பகுதிக்குப் போக வேண்டும். புத்திதான் மனத்தின் எதிர்வினை யாற்றும் நிலை. இந்தப் புத்தியினின்றும் எதிர்வினை ஏற்பட்டவுடன் பிரபஞ்சமும் அகங்காரமும் தோற்றுகின்றன. பிறகு சித்தம் (Will) ஏற்படுகிறது; ஆயினும், இன்னும் பார்க்கும் தொழில் முற்றுப் பெறவில்லை. ஒளியின் தொடர்ச்சியான உந்துதல்களால் ஆக்கப்படும் ஒவ்வொரு படமும் இயக்கமற்ற ஒன்றன் மேல் (ஒரு நிலைக்களத்தின்மேல்) இணைந்து நின்றுலே முழுமை பெறும்'; அது போல மனத்தில் எழும் கருத்துகள் எல்லாம், உடலோடும் மனத்தோடும் ஒப்பிடும்போது, நிலை பெற்றது என்று சொல்லக்கூடிய ஒன்றன்மேல் தொகுத்து வீழ்த்தப்பட்டாலொழிய, முழுமையைப் பெற இயலாது—அந்த நிலை பெற்ற ஒன்றுதான் உயிர் (Soul) என்றோ, புருஷன் என்றோ ஆத்துமன் என்றோ உரைக்கப்படும்.

சாங்கிய தரிசனப்படி புத்தி அதாவது தருக்க அறிவு என்று சொல்லப்படும் மனத்தின் எதிர்வினை நிலை, விசுவமனம் (cosmic mind) என்னும் மகத்தின் விளைவோ மாறுதலோ ஒருவகைத் தோற்றமோ ஆம். மகத்தானது அதிரும் எண்ணமாக மாறுகிறது; இந்த எண்ணத்தின் ஒரு பகுதி உறுப்புகளாகவும், மற்றொரு பகுதி சடப்பொருளின் நுண்ணிய கூறுகளாகவும் மாறிவிடுகின்றன. இவை எல்லாவற்றின் சேர்க்கையினாலேயே இப்பிரபஞ்சம் முழுவதும் (Universe) பிறக்கிறது. இந்த மகத்துக்கும் பின்புறத்தில் புலப்படாத (அவ்வியக்தமான) ஒரு நிலை இருக்கிறதென்றும், இங்கே மனத்தின் தோற்றம் இல்லை என்றும், மனம் உருவாவதற்கு வேண்டிய கருவே இருக்கிறதென்றும் சாங்கிய தத்துவம் சாற்றுகிறது. இந்த அவ்வியக்த நிலையைப் 'பிரகிருதி' என்றும் சொல்லுகிறார்கள். இந்தப் பிரகிருதிக்கும் அப்பால், என்றும் இதனோடு சம்பந்தப்படாமல் குணமற்ற, எங்கும்

நிறைந்த புருடன் என்னும் சாங்கியர்களின் உயிர் (Soul) இருக்கிறது. இந்தப் புருடன் எதற்கும் கர்த்தா அன்று; வெறுஞ் சாட்சி மாத்திரமே. புருடனை விளக்குவதற்குப் படிகத்தை உதாரணமாகக் காட்டுவார்கள். புருடன் எந்த நிறமும் அற்ற படிகம் போன்றது. தன்முன் பல நிறப் பொருள்களை வைத்தால், அந்த அந்த நிறமுள்ளது போலப் படிகம் தோன்றுகிறது; ஆனால், உண்மையில் அதற்கு ஒரு நிறமும் இல்லை. சாங்கியர்கள் புருடனையும், இயற்கையையும் பற்றிச் சொல்லும் விளக்கத்தை வேதாந்திகள் ஒப்புக்கொள்வதில்லை. பிரகிருதிக்கும் புருடனுக்கும் இடையே (இணைக்க வேண்டிய) ஒரு பெரும் இடைவெளி இருப்பதாக இவர்கள் சொல்கிறார்கள். சாங்கிய தத்துவம் ஒரு பக்கத்தில் பிரகிருதியைப் பற்றிச் சொல்கிறது. உடனே நேர் எதிர்ப்பக்கமாக உள்ள புருடன் என்னும் ஆன்மாவுக்குத் தாவுகிறது; ஆன்மாவோ பிரகிருதிக்கு முற்றும் வேறுபட்டது. இயல்பாக நிறமற்ற புருடனாகிய படிகத்தின் மேல் பலவகை நிறங்கள்—சாங்கியர்கள் சொல்கிறபடி—எப்படித் தொழிற்பட முடியும்? எனவே, ஆரம்பம் முதலே புருடனும் பிரகிருதியும் ஒன்று[1] என்றே வேதாந்திகள் தீர்மானமாகக் கூறுகிறார்கள். துவைத வேதாந்திகளுங்கூட ஆன்மாவோ இறைவனோ இந்தப் பிரபஞ்சத்துக்கு நிமித்த காரணமாவதோடு முதற் காரணமும் ஆகிறான் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்லால் மட்டும் இவ்வாறு கூறுகிறார்களே ஒழிய, மனத்தால் நம்புவதில்லை. அவர்கள் இந்த முடிவிலிருந்து தப்ப, பின் வருமாறு விளக்கம் கூறுகிறார்கள் :

இந்தப் பிரபஞ்சத்தில் மூன்று பொருள்கள் இருப்பதாக இயம்புகிறார்கள். அவையாவன : இறைவன், ஆன்மா, பிரகிருதி என்பன. பிரகிருதி ஆன்மா என்ற இரண்டும் இறைவனுக்கு

---

[1] வேதாந்த தத்துவத்துக்கும் சாங்கிய தத்துவத்துக்கும் இடையே உள்ள முரண் மிகமிகக் குறைவுதான். சாங்கியர்களின் புருடனிலிருந்து தான் வேதாந்திகளின் பரமாத்துமா உருவாயிற்று. எல்லாச் சமயத் தத்துவங்களும் சாங்கியர்களின் மனத் தத்துவ முறையையே பின்பற்றுகின்றன. சாங்கியர்களும் வேதாந்திகளும் புருடன் அல்லது ஆன்மா ஆதியந்தம் அற்றது என்பதை நம்புகிறார்கள். ஆனால், சாங்கியர்கள் பல ஆன்மாக்கள் உண்டு என்று நம்புகிறார்கள். சாங்கிய தத்துவப்படி உலகப் படைப்புக்கு வெளியிலிருந்து எந்த விளக்கமும் தேவையில்லை. வேதாந்திகள் ஒரே ஆன்மா தான் பலவாகத் தோன்றுகிறது என்கிறார்கள். சாங்கியர்களின் ஆராய்ச்சிதான் நம் கொள்கைக்கு அடிப்படை.

உடல் போன்றவை ; இந்தப் பொருளைக் கொண்டாலும் இறைவனும் பிரபஞ்சமும் ஒன்றே என்னலாம். ஆனால், இந்தப் பிரகிருதியும் இந்தப் பலவகையான ஆன்மாக்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டனவாகவே என்றும் இருக்கின்றன. படைப்பின் தொடக்கத்திலேதான் இவை தோன்றுகின்றன. படைப்பின் முடிவில், அதாவது பிரளயத்துக்குப் பின் இவை தோன்றாத நுட்பநிலையை அடைந்து, அந்த நிலையிலேயே இருக்கின்றன. அத்துவைத வேதாந்திகள்—இரண்டல்ல என்போர்—ஆன்மாவைப் பற்றிய இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்வதில்லை. எல்லா உபநிஷத்துகளின் கொள்கைகளும் இவர்களுக்குச் சாதகமாய் இருப்பதால், இவர்கள் தங்கள் வேதாந்த தத்துவத்துக்கு இந்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொள்கிறார்கள். உபநிஷத்துகளெல்லாம் ஒரே கருத்தைத்தான் விளக்குகின்றன ; ஒரே நோக்கத்தைத்தான் மேற்கொண்டிருக்கின்றன. பின் காணும் கருத்தை விளக்குவதுதான் அந்த நோக்கம் :

"ஒரு கட்டிக் களிமண்ணைப்பற்றி அறிவதால் எப்படிப் பிரபஞ்சத்திலுள்ள எல்லாக் களிமண்ணின் இயல்பும் விளங்கி விடுமோ, அவ்வாறே எந்த ஒன்றை அறிவதால் பிரபஞ்சத்தின் இயல்பெல்லாம் விளங்கிவிடும்?" என்ற பிரச்சினைதான் அது. பிரபஞ்சம் முழுவதற்கும் பொது இயல்பான ஒன்றை—எது உண்மையாகவே பிரபஞ்சம் முழுதும் ஆகுமோ அதை—அறிந்து விளக்குவதே அத்துவைதிகளின் நோக்கமாகும். பிரபஞ்சம் முழுவதும் ஒன்று என்றே அத்துவைதிகள் சாதிக்கிறார்கள் : அதாவது, ஒன்றேதான் இப்படி எல்லா நாம ரூபங்களாகவும் பரிணமிக்கிறது என்று மொழிகிறார்கள். சாங்கியர்கள் சாற்றும் பிரகிருதியாகிய இயற்கை இருப்பதாக இவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், இந்தப் பிரகிருதிதான் இறைவன் என்கிறார்கள். சத்தான இந்த ஒன்றுதான் எல்லாமாக—பிரபஞ்சம், மனிதன், ஆன்மா, உள்ள பொருள்கள் எல்லாமாக—மாறுகிறது என்கிறார்கள் இவர்கள் ; மனம், மகத்து என்னும் இரண்டுமே அந்தச் சத்தான ஒன்றன் பரிணாமந்தான் என்கிறார்கள். 'உலகமே கடவுள் ; எல்லாப் பொருள்களும் கடவுளின் மாறுபட்ட தோற்றங்களே,' என்ற சமய வாதமாக இது ஆகிவிடுமே என்ற நிலை ஏற்படுகிறது. மாறா இயல்புள்ளதாகிய சத்து (மாறா இயல்புள்ளது இது என்பதை அத்துவைதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்) மாறுதலுக்கும் அழிவுக்கும் உட்பட்ட பொருள்களாக எப்படி மாற முடியும்? இந்த இடத்தில் அத்துவைதிகள் 'விவர்த்த

வாதம்' அதாவது 'வெறுந் தோற்றம்' என்ற கொள்கையை இங்கே புகுத்துகிருர்கள். துவைதிகள் கொள்கைப்படியும் சாங்கியர்களின் கொள்கைப்படியும் மூலப் பிரகிருதியின் பரிணமந்தான் இந்தப் பேரண்டம். அத்துவைதிகளுள் சிலரது கொள்கைப்படியும், சில துவைதிகளின் கொள்கைப்படியும் இறைவனின் பரிணமமே இந்தப் பேரண்டம். ஆனல், ஸ்ரீ சங்கரரின் சீடர்களான உண்மை அத்துவைதிகளின் கொள்கைப்படி, இந்தப் பிரபஞ்சம் இறைவனின் பரிணமத் தோற்றமே ஆகும்; உண்மைப் பரிணமம் அன்று. இறைவன் இந்தப் பிரபஞ்சத்தின் முதற் காரணம். ஆனல், உண்மையில் அன்று; தோற்றத்தில் மட்டுமே. இதை விளக்க அவர்கள் சொல்லும் பிரசித்தமான உவமானம் பழுதையில் (கயிற்றில்) தோன்றும் பாம்பேயாகும். பழுதையில் பாம்பு தோன்றுகிறதே ஒழிய, உண்மையில் அது பாம்பன்று. பழுதை பாம்பாக மாறிவிடவில்லை. அதே போல, இன்று நமக்குப் புலப்படும் பிரபஞ்சம் முழுவதும் அந்தச் 'சத்து' தான்; அது மாறவே இல்லை; ஆனல், நாம் அதில் காணும் இந்த மாற்றங்களெல்லாம் வெறுந்தோற்றங்களேயாம். இந்ந மாறுதல்கள் தேசம், காலம், நிமித்தம் இவைகளால் தோன்றுபவை; அன்றேல் இன்னும் உயர்ந்த மனநூற்ப் பொது உரையின்படி, நாம ரூபங்களால் ஆனவை. நாமரூபங்களே ஒரு பொருளை மற்ருென்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. நாம ரூபத்தால் மட்டுமே பேதம் ஏற்படுகிறது. உண்மையில் அவைகள் பேதம் அற்ற ஒரு பொருளே. தோற்றம் உண்மை என்ற இரண்டு நிலைகளே இல்லை என்றுதான் வேதாந்திகள் விளம்புகிருர்கள். பழுதை பாம்பாக மாறுவது வெறுந்தோற்றமாத்திரத்திலேதான். இந்த மயக்கம் மாறியவுடன் பாம்பு மறைந்துவிடுகிறது. ஒருவன் அஞ்ஞானியாய் இருக்கும்போது, ஒருவனை மாயை மூடியிருக்கும் போது, அவன் தோற்றத்தை மட்டுமே காண்கிருன்; இறைவனைக் காண்பதில்லை. ஆனல், அவன் எந்தக் கணத்தில் இறைவனைக் காண்கிருனே, அந்தக்கணமே அவனைப் பொறுத்த வரையில் பிரபஞ்சம் மறைந்துவிடுகிறது. மாயை என்று சொல்லப்படும் அஞ்ஞானந்தான், இந்தத் தோற்றங்களுக்கெல்லாம் அதீதமான மாற ஒண்ணுத ஒன்றை விரிந்த பிரபஞ்சமாகக் கொள்ளும் தோற்றத்துக்குக் காரணம். இந்த மாயை சுத்த சூனியமோ, இல்லாத பொருளோ அன்று. இதை உள்ளது (ஸத்) என்றும் சொல்ல இயலாது; இல்லாதது (அஸத்) என்றும் சொல்ல இயலாது. இது உள்ள பொருள் அன்று; ஏனெனில்,

அதீதமான, மாறுதலில்லாத இறைவனேப்பற்றி மட்டுமே இப் படிச் சொல்ல இயலும்; எனவே, இவ்வாறு நோக்கின மாயை என்பது இல்லாத பொருளேயாம். இதை இல்லாதபொருள் என்றும் உரைக்க இயலாது; இது இல்லாத பொருளானுல், தோற்றத்தை உண்டாக்க இதனுல் இயலாது. எனவே, இது இரண்டும் அல்லாத ஒன்று. வேதாந்த தத்துவத்தில் இதை 'அநிர்வசனீயம்', சொல்ல இயலாதது என்கிருர்கள். இப்படிப் பார்க்கும்போது மாயைதான் இந்தப் பிரபஞ்சத்துக்கு உண்மை யான காரணம். பிரம்மமோ இறைவனே எவற்றின் தோற்றத் துக்கு அடிப்படையான பொருளோ, அவற்றுக்கு நாம ரூபம் தருவது இந்த மாயைதான். இதனுல், இறைவன் பிரபஞ்சமாக மாறிவிட்டது போன்ற தோற்றம் உண்டாகிறது. எனவே, அத் துவைத வேதாந்தத்தில் தனி ஆன்மாவுக்கு இடமில்லே. தனி ஆன்மப் படைப்பு மாயையின் காரியம் என்பது அவர்கள் வாதம். உண்மையில் தனி ஆன்மாக்கள் இருத்தல் இயலாது. இருப்பது சத்தான ஒன்றே என்ருல், நான் ஒன்று, நீ ஒன்று என்று பல எப்படி இருக்க இயலும்? நாம் எல்லோரும் ஒன்று தான்; இரண்டைப் பார்ப்பதுதான் தீமைக்கே காரணம். 'நான் வேறு, பிரபஞ்சம் வேறு,' என்ற எண்ணம் வந்தவுடனே முதலில் அச்சம் தோன்றுகிறது; இதைத் தொடர்ந்து துயரம் தோன்று கிறது. "ஒருவன் மற்ருெருவன் பேச்சைக் கேட்பதும் மற்ருெரு வனேப் பார்ப்பதும் சிறுமை. எப்போது ஒருவன் தன்னேயே எங்கும் காண்கிருனே, கேட்கிருனே, அதுதான் மிகப் பெரிது, அதுவே இறைவன். இந்த மிகப் பெரிய ஒன்றிலேதான் பூரணப் பேரானந்தம் இருக்கிறது. சிறியவற்றில் இது இல்லே."

அத்துவைத வேதாந்தப்படி பிரபஞ்சத்தில் காணும் இந்த வேறுபாடு, இந்தத் தோற்றம் சில காலம் வரை—மாயை வில கும்வரை—மனிதனின் உண்மைத் தன்மையை மறைத்து நிற் கிறது. ஆனுல், இந்தத் தன்மை என்னவோ மாறுவதே இல்லே. மிகத் தாழ்ந்த படைப்பான புழுவிலும் சரி, மிக உயர்ந்த படைப்பான மனிதனிலும் சரி, ஒரே வகையான இறைமைத் தன்மைதான் இருக்கிறது. இறைமைத்தன்மை மாயையால் மிக அதிகமாக மறைக்கப்பட்டுள்ள அமைப்பில் மிகவும் தாழ்ந்த நிலே புழுவாகும். மிகக் குறைவாக மறைக்கப்பட்டுள்ள அமைப்பு மனிதப் படைப்பாகும். ஒவ்வொன்றுக்கும் உள்ளே இறைமைத் தன்மை இருக்கிறது. இதுதான் நீதிக்கும் நேர்மைக்கும் அடிப் படையாகும். யாருக்கும் தீங்கு செய்யாதே. உன்னே நீ நேசிப்பது

போலவே எல்லோரையும் நேசி; பிரபஞ்சம் முழுவதுமே ஒன்றல்லவா? பிறருக்குத் தீங்கு செய்வதால் நமக்கே நாம் தீங்கு செய்து கொள்கிறோம்; பிறரிடம் அன்புகாட்டினால் நமக்கு நாமே அன்பு காட்டிக்கொள்கிறோம். இதிலிருந்துதான் அத்துவைத நீதி தோன்றுகிறது. இதை ஒரே சொல்லில் கூற வேண்டுமானால், 'தன்னல மறுப்பு' என்று உரைத்துவிடலாம். இந்தச் சிறிய உருவில் உள்ள 'நான்' என்ற அகங்காரமே நமது துயருக்கெல்லாம் காரணம் என்று அத்துவைதி சொல்கிறான். இந்தத் தனி ஆன்ம வாதமாகிய அகங்காரம் நம்மைப் பிற பொருள்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது; இந்த வேற்றுமை காரணமாக வெறுப்பும் பொறாமையும் இன்னலும் நம்மைச் சூழ்கின்றன. வேற்றுமையை அடிப்படையாகக்கொண்ட இந்த எண்ணம் என்று ஒழிகிறதோ, அன்றே இந்தப் போராட்டமும் ஒழிந்துவிடும். எனவே, இந்த வேற்றுமையுணர்ச்சியை அறவே நீக்கிவிட வேண்டும். மிகவும் அற்பமான பிராணிகளுக்கு உதவி செய்யக்கூட நாம் நம் உயிரையும் இழக்க என்றும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். எந்த நேரத்தில் ஒரு மனிதன் ஒரு பூச்சிக்காகத் தன் உயிரையே கொடுக்கும் தியாகநிலையை அடைகிறானோ, அந்த நேரத்திலேயே அவன் அத்துவைதிகளின் இலட்சிய நிலையான பூரண நிலையை அடைந்துவிடுகிறான். அதே நேரத்தில் அவனது உண்மையை மறைக்கும் அஞ்ஞானத் திரை கழன்று விழுந்துவிடுகிறது; அவன் தன் உண்மை நிலையை உணர்கிறான்; இந்தப் பிறவியிலேயே அவன், தானும் பிரபஞ்சமும் ஒன்று என்பதை உணர்வான். சிறிது காலத்துக்கு அவனைப் பொறுத்தமட்டும் தோற்றமாகிய இப்பிரபஞ்சம் மறைந்தேவிடும்; அவன், தான் யார் என்பதை அனுபவ பூர்வமாக உணர்வான். ஆயினும், அவனுடைய உடலுக்குக் காரணமான பிராரத்த கருமானுபவம் இருக்கும் வரையில் அவன் இந்த உடலோடு வாழ்ந்துதான் ஆக வேண்டும். மாயை அல்லது அஞ்ஞானம் விலகிய பின்னும் கரும வசமாக உடல் நடமாடிக் கொண்டிருக்கும். இந்த நிலையைத்தான் அத்துவைதிகள் 'ஜீவன் முத்தி' அல்லது 'உடல் இருக்கையிலேயே முத்தி' என்று சொல்கிறார்கள். ஒரு மனிதன் கானல் நீரால் ஏமாற்றமடைந்து நிற்கிறான். திடீரென்று ஒரு நாள் அது கானல் நீர் என்ற உண்மை தெரிந்துவிடுகிறது; நீரும் மறைந்துவிடுகிறது. ஆனால், அது மறுபடியும் மறு நாளோ அல்லது வேறொரு நாளோ அவன் முன் தோன்றினாலும் அவன் அதை உண்மை என்று நினைத்து ஏமாறமாட்டான். முதல் முதலாக

அந்தக் கானல் நீர் மறையும் வரையில் அவனுல் உண்மை எது, பொய் எது என்று பிரித்து அறிய இயலவில்லை. ஆனுல், ஒரு முறை அது மறைந்து, அது பொய் என்ற உண்மை தெரிந்த பிறகும், அவனுக்குக் கண்களும் புலன்களும் வேலை செய்யும் வரையில் அவன் அந்த கானல் நீரைப் பார்ப்பான். ஆனுல், இப்போது அவன் அது உண்மை நீர் என்று ஏமாறவே மாட்டான். பிரபஞ்சத்துக்கும் அதன் தோற்றத்துக்கும் உள்ள வேறுபாடு அவனுக்கு விளங்கிவிட்டபடியால், பிரபஞ்சத் தோற்றம் அவனை இனி ஏமாற்றவே இயலாது. எனவே, வேதாந்தி தன் உண்மைத் தன்மையை அனுபவ பூர்வமாக என்று உணர்கிருனே, அன்றே அவனுக்குப் பிரபஞ்சம் மறைந்துவிடுகிறது. அந்தத் தோற்றம் மறுபடியும்—உடல் உள்ள வரையில்—அவன் முன் நிற்கும். ஆனுல், அது இப்போது துயர் மண்டிக்கிடக்கும் பிரபஞ்சமாய் இராது. துயரச் சிறை இப்போது சத்து-சித்து-ஆனந்தம் என்ற—அழிவற்ற நிலை, குலையாத அறிவு, சிதையாத ஆனந்தம் என்ற—விடுதலையாக மாறிவிட்டது. இந்த நிலையை அடைவதுதான் அத்துவைத வேதாந்தத்தின் இலட்சியமாகும்.

வேதாந்தம் நாகரிகத்தின் ஓர் அமிசம்

[இது இங்கிலாந்து 'ரிட்ஜ்வே கார்டன்ஸ்' என்னும் இடத்தில் உள்ள 'ஏர்லி லாட்ஜ்' என்னும் கட்டடத்தில் செய்த சொற்பொழிவின் ஒரு பகுதி.]

பொருள்களின் பருமையான வெளித்தன்மையை மட்டுமே பார்க்கும் இயல்புள்ள மக்கள், இந்திய நாட்டில், பிறரால் வெல்லப்பட்ட அடிமைகளான துக்கப்படும் மக்களையும், கனவு காண்பவர்களையும், வறட்டு வேதாந்திகளையுமே காண இயலும். ஆன்மிக சாம்ராச்யத்தைப் பொறுத்த வரையில் இந்தியா உலகையே வென்று நிற்கிறது என்பதை உணர இவர்களால் இயலவே இயலாது. மிகவும் சுறுசுறுப்பாக எப்போது வெளி உலக விவகாரங்களிலேயே சுழன்றுகொண்டிருக்கும் மேலை நாட்டாரின் மனத்துக்குக், கீழை நாட்டாரின் பழக்கமான உள் நோக்கத்தாலும் தியானத்தாலும் நன்மையும் இலாபமும் உண்டாகும். அதேபோலக் கீழை நாட்டாரின் மனமும் இன்னும் சற்று அதிகமான, வெளி உலக சம்பந்தமான விவகாரத்தாலும் சுறுசுறுப்பாலும் நன்மை அடையும். பின்வரும் பிரச்சினை நம்முன் நிற்கிறது: பிறரால் துன்புறுத்தப்பட்டுத் துயரில் மூழ்கி நிற்கும் மக்களான இந்துக்களும் யூதர்களுங்கூட (உலகத்தின் பெரிய மதங்களெல்லாம் தோன்றுவதற்குக் காரணமான இரண்டு மக்கள் இனங்கள் இவர்கள்) இன்றும் அழியாமல் இருப்பதற்கும், இடையில் தோன்றிய வேறு பல சமுதாயங்கள் அழிந்து ஒழிந்து போனதற்கும் காரணமான சக்தி எது? இந்தக் காரணம் ஆன்ம சக்தியாகத்தான் இருக்க இயலும். இந்துக்கள் இன்றும் வாழ்கிறார்கள்; யூதர்களோ, விளம்பரம் எதுவும் இல்லாமல் அமைதியாகப் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அந்நாளைவிட இன்று பலராகப் பெருகியிருக்கிறார்கள். நாகரிகம் மிக்க உலகம் முழுவதிலும் இந்திய வேதாந்தம் இன்று உள் நுழைந்து அந்த நாட்டு மக்களின் எண்ணங்களைச் சீர்திருத்திக்கொண்டும், மனத்தின் அடித்தட்டில் புகுந்தும் பரவி வருகிறது. இப்படியே பழங்காலத்திலும், மக்களுக்கு ஐரோப்பா தெரிவதற்கு முன்னமே, இந்திய வியாபாரம் ஆப்பிரிக்கக் கடற்கரைகளிலெல்லாம் பரவியிருந்தது; வேறு நாடுகளோடும் இவர்களுக்குப் போக்குவரத்து இருந்தன. இந்தியர்கள்

தங்கள் நாட்டை விட்டு வெளிச் செல்லவே மாட்டார்கள் என்ற நம்பிக்கையை இந்தச் செயல்கள் பொய்யாக்கிவிட்டன.

அயலார் இந்தியாவை அடக்கி ஆள நேர்ந்தது அந்த அயலார்களின் வரலாற்றில் ஒரு நல்ல திருப்பமாக இருந்தது என்பது வியப்புக்குரியதாகவே இருக்கிறது. அந்த ஆட்சி காரணமாக அவர்களுக்குச் செல்வம், வளம், இராச்சியம் இவைகள் கிடைத்ததோடு ஆன்மிக வளர்ச்சிக்குக் காரணமான பல கருத்துகளும் கிடைத்தன. மேலை நாட்டான், 'எவ்வளவு மிகுதியான பொருள்களைச் சொந்தமாக்கி மனிதனை ஆள முடியும்?' என்பதை அளந்தறிவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறான்; ஆனால், கீழை நாட்டானோ, இதற்கு நேர் மாறான கருத்துள்ளவனாய் இருக்கிறான். 'எவ்வளவு குறைவான உலக போகங்கள் எனக்குப் போதும்?' என்ற ஆராய்ச்சியையே அவன் செய்கிறான். மிகு பழங்காலத்தவரான நம் நாட்டவர் இறைவனை அறிவதற்காகச் செய்த முயற்சிகளைப் பற்றிய செய்திகளை வேதங்களில் நாம் காண்கிறோம். இந்த முயற்சிகளின் பலனாக அவர்கள் பல படிகளை அறிய நேர்ந்தது; இறந்து போன தம் மூதாதையர்களைப் பூசிப்பதில் தொடங்கிய இந்த முயற்சி நெருப்புக்குத் தெய்வமாகிய அக்கினி தேவனையும், இடிக்கும் மழைக்கும் தெய்வமாகிய இந்திர தேவனையும் வணங்கும் முயற்சியாகிப், பின்னர்த் தெய்வங்களுக்கெல்லாம் தலைவனாகிய வருண தேவனைப் பூசிக்கும் அளவுக்கு முன்னேறியது. இவ்வாறு முதலில் பல தெய்வ வழிபாடாகத் தொடங்கிய முயற்சி, முடிவில் ஒரே தெய்வ வழிபாடாய் முடிந்ததை நாம் பல சமயங்களில் காண்கிறோம். இதன் உண்மைப் பொருள் இதுதான்: இந்த ஒரு கடவுளே பல துறைத் தெய்வங்களுக்கும் தலைவர். இவர்தாம் எல்லாவற்றையும் படைக்கின்றார்; ஆள்கின்றார்; எல்லோர் இதயத்துக்கும் உள்ளே இருந்து கருத்துகளை எல்லாம் அறிகின்றார். பல துறைத் தெய்வங்கள் என்ற பண்டைத் தத்துவத்தில் தொடங்கிய ஆராய்ச்சி தான் முடிவில் வளர்ந்து ஒரே தெய்வக் கொள்கையாக மலர்கிறது. தெய்வத்தை மனித உருவுடையதாக நினைக்கும் கொள்கை இந்துக்களுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. தெய்வத் தன்மையைத் தேடிய இவர்களுக்கு, இந்தக் கருத்து மனித நிலைக்கு இறைவனைத் தாழ்த்துவதாகவே தோன்றியது. எனவே, இவர்கள் புலனுலகும் பொருளுலகுமான வெளி யுலகில் இறைவனைத் தேடுவதைவிட்டு, உள் உலகமாகிய மன உலகத்தில்—நுண்ணுலகத்தில்—அவனைத் தேடத் தொடங்கினார்கள்; 'உள் உலகம் என்ற

ஒன்று இருக்கிறதா? அப்படியானால், அது என்ன?' என்ற ஆராய்ச்சியில் இறங்கினார்கள். அதுதான் ஆன்மா; அதுதான் 'நான்' என்னும் தத்துவம்; அந்த ஒன்றைப் பற்றித்தான் ஒருவன் உறுதியாக இருக்க இயலும். ஒருவன் தன்னை உணர்ந்தால்தான் பிரபஞ்சத்தை உணர இயலும்; வேறு வகையில் இயலாது. காலத்தின் தொடக்கத்தில் இருக்கு வேதத்திற்கூட இதே கேள்விதான் எழுந்தது; ஆனால், வேறு உருவத்தில். "முதலில், எல்லாவற்றுக்கும் தொடக்கத்தில், யார் அல்லது எது இருந்தது?" என்னும் கேள்விக்கு விடையை மெதுவாகவும் படிப் படியாகவும் வேதாந்திகள் கண்டு பிடித்தார்கள். முதலில் ஆன்மாவே இருந்தது. அதாவது, நாம் எதைப் பரிபூரணம், பரமான்மா, தான் என்றெல்லாம் சொல்கிறோமோ, அந்தச் சக்தி காரணமாகவே எல்லாமான இந்தப் பிரபஞ்சம் தொடக்கத்தில் இருந்தது; இப்போதும் இருக்கிறது; இனியும் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

வேதாந்திகள் இந்தப் பிரச்சினைக்கு விடை கண்டு பிடித்த பொழுதே மனிதனுடைய ஒழுக்கம் பற்றிய அடிப்படையையும் கண்டு பிடித்துவிட்டார்கள்: எல்லாச் சமயங்களுடேயும் ஒழுக்கம் பற்றிய, பின் வருவன போன்ற விதிகளை உபதேசித்திருப்பது உண்மைதான்: "கொல்லாதே; யாருக்கும் தீங்கு செய்யாதே; மற்றவர்களையும் உன்னைப்போலவே நேசி." என்றாலும், இந்த விதிகளுக்கு அடிப்படைக் காரணம் இன்னது என்பதை அவர்கள் இயம்பவில்லை: "நான் ஏன் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது?" வெறுங் கொள்கைகளால் திருப்தியடையாத இந்துக்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருள்களை ஆராய்ந்து கண்டு பிடிக்கச் சில உண்மைகள் தோன்றுவதற்கு முன் இக் கேள்விக்கு முடிவான, திருப்தியான விடை எதுவுமே கிடைக்கவில்லை. 'இந்த ஆன்மா பரிபூரணமானது; எங்கும் நிறைந்தது; எனவே ஆரம்பமோ முடிவோ இல்லாதது. ஆரம்பமோ, முடிவோ இல்லாத இரண்டு நிறை பொருள்கள் இருப்பது இயலாது. அப்படியானால் ஒன்றும் நிறைவாக இருத்தல் இயலாது. ஒன்றன் இருப்பு மற்றொன்றின் நிறைவைக் குறைத்துவிடும்; அன்றேல் அதற்கு எல்லை கோலிவிடும்; எனவே, இந்தப் பொருள் நிறைவற்றதாய் முடிவுள்ளதாய் விடும். ஒவ்வொரு தனி ஆன்மாவும் பரமான்மாவின் இயல்பை முற்றும் கொண்ட முடிவற்ற, நிறைவுள்ள, ஓர் அமிசமே ஆகும். எனவே, மற்றவருக்குத் தீங்கு செய்வது என்றால், நமக்கு நாமே தீங்கு செய்துகொள்வது என்பதுதான்

பொருள். எல்லா ஒழுக்க விதிகளுக்கும் அடிப்படையான இயற்கைத் தத்துவம் இதுதான். நிறைவை நோக்கி முன்னேறும் ஒருவன், தவறுகளிலிருந்து உண்மைக்கு முன்னேறுகிறுன் என்று மக்கள் நம்புகிருர்கள். எனவே, இந்தப் படிமுறையில் ஒரு கருத்தைக் கடந்து மற்ருெரு கருத்தைப் பெற்ற ஒருவன், முன் கருத்துத் தவறு என்று அதை விலக்கும் அவசியம் நேர்கிறது. எங்காவது தவறு ஒருவனுக்கு உண்மையைக்காட்ட இயலுமா? அல்லது தவற்றின் அடிப்படையில் உண்மை பிறக்க இயலுமா? ஆன்மா நிறைவை நோக்கி முன்னேறும்போது ஓர் உண்மையிலிருந்து மற்ருேர் உண்மைக்கு முன்னேறுகிறது என்று சொல்வதுதான் பொருந்தும்; ஆன்மா தாழ்ந்த உண்மையிலிருந்து உயர்ந்த உண்மைக்கு முன்னேறுகிறது. இதைப் பின் வரும் எடுத்துக்காட்டால் விளக்கலாம்: சூரியனை அறிய வேண்டி அதை நோக்கி முன்னேறும் ஒருவன், தன் பாதையில் அடிக்கு ஒரு புகைப்படம் எடுக்கிருன். முதல் புகைப்படத்திற்கும் இரண்டாவதற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கும்! முதலாவதற்கும் மூன்ருவது நான்காவதற்கும் இன்னும் எவ்வளவு வேறுபாடு இருக்கும்! முதலாவதுக்கும், அவன் கதிரவனை அடைந்த பிறகு எடுத்த கடைசிப் படத்துக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கும்! இவைகள் ஒன்றுக்கு ஒன்று எவ்வளவு வேறுபாடு உடையவைகளாய் இருந்தாலும், எல்லாம் உண்மையாகவே சூரியனின் படங்களேயல்லவா? ஒவ்வொன்றும் வேறுபட்டுத் தோன்றுவதற்குக் காரணம் சூழ்நிலையான காலமும் தேசமுந்தானே? எல்லா மதங்களிலும்—மிகத் தாழ்ந்தது முதல் மிக உயர்ந்தது வரை—உண்மை இருக்கிறது என்பதை இந்துக்கள் ஏற்றுக்கொள்வதற்குக் காரணம் இந்த அறிவுதான். இந்த அறிவுதான் மற்ற மதத்தவர்களைத் துன்புறுத்தாத மக்களாக, இந்து சமயத்தார்கள் மட்டும் தனிப்பெருமை பெற்றிருப்பதற்குக் காரணமாகும். முஸ்லிம்களாலேயே மறந்து கைவிடப்பட்ட முஸ்லிம் ஞானியார் ஒருவரின் சமாதியை இந்துக்கள் வழிபடுவதை நாம் காணலாம்! எம்மதமும் சம்மதம் என்பதே இந்துக்களின் கொள்கை என்பதை விளக்கப் பல சான்றுகள் காட்ட இயலும்.

உலகத்தவர் எல்லோரும் எந்த முடிவைத் தேடுகின்றனரோ, அந்த முடிவாகிய ஒருமையை அனுபவபூர்வமாக அறியும் வரையில் கீழ்த் திசை நாட்டாரின் மனத்துக்கு நிறைவு ஏற்படவே ஏற்படாது. மேலை நாட்டு விஞ்ஞானிகள் அணு அல்லது அணுச் சேர்க்கையில் எல்லாப் பொருள்களும் ஒன்று என்ற பிரபஞ்ச

ஒருமையைத் தேடி நிலைநாட்ட முயல்கிறார்கள். இந்த உண்மையைக் கண்டு நிலைநாட்டிய பின் அந்த விஞ்ஞானிகளின் வேலை முடிந்துவிடுகிறது; மேலே கண்டுபிடிக்க ஒன்றும் இல்லை. அதே போல, ஆன்மா என்று சொல்லும் உட்பொருள் அல்லது 'நான்' என்பதுதான் எங்கும் உள்ள ஒன்று என்ற உண்மை தெரிந்த பிறகு மேலே அறிய வேண்டுவதோ, தேட வேண்டுவதோ ஒன்றும் இல்லை. புலன் உணர்வால் காணும் இந்தப் பிரபஞ்சப் பொருள்களெல்லாம் அந்த ஏகப் பொருளின் தோற்றமே என்பது அப்போது தெளிவாய்விடுகிறது. நீளம் அகலம் என்ற பண்புகளே இல்லாத அணுக்கள் ஒன்றோடொன்று சேரும் போது, நீளம் அகலம் முதலிய பண்புகளுக்குக் காரணம் ஆவதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளும்போது, இயற்கைக்கு அப்பாலான ஒன்று உண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளும் அவசியமும் நேரிட்டுவிடுகிறது. ஓர் அணு மற்றோர் அணு மீது தொழிலாற்றும் போது, ஊடு பொருள் யாதேனும் ஒன்று இன்றியமையாததாகிறது. அந்த ஊடுபொருள் யாது? இது மூன்றாவது அணுவாக இருக்க வேண்டும். இப்போதும் ஓர் அணுவின்மேல் மற்றொன்றைத் தொழிற்படச் செய்யும் சக்தி எது என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. முதல் இரண்டு அணுக்களும் மூன்றாவது அணுமீது தொழிலாற்றுவது எவ்வாறு? எனவே, இது தருக்க முரண் என்பது தேற்றம். இந்தச் சொல்முரண் பௌதிக சாத்திரத்துக்கு அவசியமான எல்லாக் கருதுகோள்களிலும் (Hypothesis) இருக்கிறது. உதாரணமாக, புள்ளிக்குப் பகுதிகளோ பருமனோ இல்லை; ஒரு கோட்டுக்கு நீளம் மட்டும் உண்டு அகலம் இல்லை என்பன. புள்ளி, கோடு போன்றவைகளைப் பார்க்கவோ, கருதவோ இயலாது. ஏன்? இவை புலக் காட்சியின் எல்லைக்குள் வரவில்லை. இவை இயற்கைக்கு அப்பாலான கருத்துகள். எனவே, எல்லாப் புலன் உணர்வுகளுக்கும் உருவம் கொடுப்பது மனந்தான் என்பது நமக்குத் தெரிகிறது. நான் ஒரு நாற்காலியைப் பார்க்கும்போது, என் கண்ணுக்கு வெளியே உள்ள உண்மையான நாற்காலி அன்று நான் பார்ப்பது; வெளியே உள்ள ஏதோ ஒரு பொருளும், அதன் காரணமாக மனத்தில் உருவாகும் ஒரு தோற்றமும் சேர்ந்த கலவையையே காண்கிறேன். எனவே, முடிவில் உலகாயதவாதியும் இயற்கைக்கு அப்பாலுள்ள ஒரு தத்துவத்தை ஒப்புக்கொள்ள வேண்டியவன் ஆகிறான்.

வேதாந்தத்தின் உயிரும் அதன் ஆட்சிச் சக்தியும்

[இது போஸ்டனில் உள்ள இருபதாம் நூற்றுண்டுக் கழகத்தில் ஆற்றப் பட்ட சொற்பொழிவு.]

இன்றைய பிற்பகல் சொற்பொழிவைத் தொடங்குவதற்கு முன், எனக்கு இப்பொழுது இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சில நன்றி உரைகளைக் கூற என்னை அனுமதியுங்கள். நான் உங்களிடையே மூன்ருண்டு காலம் தங்கிப் பழகியிருக்கிறேன். பெரும்பாலும் அமெரிக்க நாடு முழுவதிலும் நான் பிரயாணம் செய்திருக்கிறேன். இனி நான் என் நாட்டுக்குத் திரும்பப் போகிறேன். எனவே, அமெரிக்காவின் ஏதென்ஸ் போன்ற இந்த நகரத்தில் இருந்தபடியே, நான் இந்த நாட்டுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பது தக்க செயலே ஆகும். நான் முதன்முதலில் இந்த நாட்டுக்கு வந்த போது—சில நாள்களுக்குப் பிறகு—இந்த நாட்டையும் மக்களையும் பற்றி ஒரு நூல் எழுத என்னுல் இயலும் என்று நான் எண்ணினேன். ஆனுல், மூன்று ஆண்டுகள் இங்கே தங்கிய பிறகு என்னுல் ஒரு பக்கங் கூட எழுத இயலவில்லை என்பது தெரிகிறது. பல நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து மக்களோடு பழகியதன் பயனுக, உணவிலும் உடையிலும் சில சிறப்பான பழக்க வழக்கங்களிலும் மேற்புறத்தே காணப்படும் சில வேறுபாடுகளுக்கு அடியில், உலகம் முழுவதிலும் மனிதன் மனிதனுகவேதான் இருக்கிருன் என்பது எனக்குத் தெரிகிறது; வியப்பிற்குரிய அதே மனிதப் பண்பைத்தான் நான் எங்கும் காண்கிறேன். என்ருலும், சில தன்மை வேறுபாடுகள் காணப்படுகின்றன; சில சொற்களில் எனக்கு இங்கே கிடைத்த அனுபவத்தைப் பற்றிச் சொல்ல நான் விரும்புகிறேன். அமெரிக்க நாடாகிய இங்கே ஒரு மனிதனிடம் காணப்படும் சில புதுத் தன்மைகளைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. ஒரு மனிதன் மனிதப் பண்பு உள்ளவனுய் இருத்தல் போதும்; இந்த நாட்டு மக்கள் அவனுக்குத் தங்கள் இதயத்தில் ஓர் இடம் கொடுத்துவிடுகிருர்கள். இந்தப் பண்பை நான் உலகத்தின் வேறு எந்த நாட்டிலும் கண்டதே இல்லை.

வேதாந்த தத்துவம் என்று வழங்கும் ஓர் இந்தியச் சமய தத்துவத்தின் பிரதிநிதியாகவே நான் இங்கே வந்தேன். இந்தச் சமய தத்துவம் மிகமிகப் பழமையானது. வேதம் என்ற பெயரால் வழங்கும் மிகப் பெரிய தொகுதியான ஆரியர்களின் இலக்கிய சாரமே இந்தத் தத்துவம். இந்தப் பெருந்தொகுதியான இலக்கியத்தில் காணப்படும் நம்பிக்கைகள், அனுபவங்கள், ஆராய்ச்சிகள் ஆகிய அடிப்படையில் அலர்ந்த மலரே இந்தத் தத்துவம். இது பல நூற்றுண்டுகளாக அவற்றிலிருந்து திரட்டிக் கடைந்தெடுத்த தத்துவமேயாகும். இந்த வேதாந்த தத்துவத்துக்குச் சில தனிப் பண்புகள் உண்டு. முதன் முதலாக இது மனிதச் சார்பற்றது ; எந்த மனிதன் மூலமாகவும் உபதேசிக்கப்பட்டதன்று. யாரோ ஒரு மனிதனை மையமாகக்கொண்டு எழுந்த தத்துவம் அன்று இது. என்ருலும், மனிதர்களை மையமாகக் கொண்டு எழுந்த சமய தத்துவங்களைக் குறை கூறும் பண்பு இந்தத் தத்துவத்துக்கு இல்லை. பிற்காலத்தில் இந்தியாவில் புத்த சமயம் போலவும், இன்று நாம் காணும் பல சமயங்கள் போலவும் மக்களை மையமாகக் கொண்ட சமய தத்துவங்கள் தோன்றின. இத்தகைய சமயம் ஒவ்வொன்றுக்கும்—கிறித்தவ சமயத்துக்கும் முஸ்லிம் சமயத்துக்கும்—இருப்பது போல ஒரு குரு அல்லது ஆசாரியன் உண்டு. இந்த ஆசாரியனைத் தெய்வமாகவே அந்த அந்தச் சமய மக்கள் கருதுவார்கள். வேதாந்த தத்துவமோ, இந்தச் சமயங்களுக்கெல்லாம் அடிப்படையாய் நிற்கிறது. வேதாந்த தத்துவத்துக்கும் உலகத்திலுள்ள வேறு எந்தச் சமயத்துக்கும் இடையில் சண்டையோ பகையோ இல்லவே இல்லை.

வேதாந்தம் ஓர் அடிப்படை உண்மையைச் சொல்கிறது. இந்த உண்மை, 'உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களுக்கும் இது பொது,' என்றும் சொல்கிறது. 'மனிதன் தெய்வத்தன்மை வாய்ந்தவன் ; நாம் நம்மைச் சுற்றிக் காணும் பிரபஞ்சம் முழுவதும் இந்தத் தெய்வத்தன்மை பற்றிய உணர்வின் விளைவாகத் தோன்றுவதுதான்,' என்பதே அந்த உண்மை. மனிதத் தன்மையில் வன்மையுள்ளது, நல்லது, சக்தியுள்ளது ஆகிய எல்லாமே இந்தத் தெய்வ இயல்பின் பலனுக ஏற்பட்டனவே. இந்தத் தெய்வ இயல் பலரிடத்தில் ஒடுங்கியிருந்தாலும், சாராமிசத்தில் மனிதருக்குள் வேறுபாடே இல்லை. எல்லோரும் தெய்வ இயலினரே. ஆதியந்தம் இல்லாத ஒரு பெரிய கடல் நமக்குப் பின்னே இருக்கிறது. இந்த எல்லையற்ற பெருங்கடலின் மேற்பகுதியில்

தோன்றும் அலைகளே நாம். நாம் ஒவ்வொருவருமே இந்தக் கடலின் தன்மையை வெளிக்காட்ட முயன்று வருகிறோம். எனவே, நம் ஒவ்வொருவரிடத்திலும் எல்லையற்ற கடலாகிய சத்து - சித்து - ஆனந்தம் மறைந்து நிற்கின்றது; அது நம் பிறப்புரிமை; நம் உண்மை இயல்பு. இந்தத் தெய்வ இயல் எந்த அளவுக்கு ஒருவனிடம் வெளிப்பட்டு விளங்குகிறதோ, அந்த அளவுக்குச் சிறியவன், பெரியவன் என்னும் வேறுபாடு 'தோன்றுகிறது. எனவே, ஒவ்வொரு மனிதனையும் அவனவன் வெளிப்படுத்தும் அளவைக் கொண்டு மதிப்பிடக்கூடாது; ஆனால், அவனுடைய உண்மை நிலையாகிய தெய்வ இயலாலேயே மதிப்பிடவேண்டும். ஒவ்வொருவனும் இறைவனின் பிரதிநிதியே. எனவே, சமயாசாரியர் ஒவ்வொருவரும் மனிதனுக்குள் மறைந்து நிற்கும் இந்தத் தெய்வத்தன்மை வெளிப்படும் முயற்சிக்கு உதவுமாறு போதிக்க வேண்டுமே ஒழிய, மனிதனைக் குறை கூறுதல் கூடாது.

சமூகத்திலும், ஒவ்வொரு செயல் துறையிலும் விளங்கும் பேரளவான சக்தி, உள்ளேயிருந்து வெளிப்படும் சக்திதான் என்றும் வேதாந்தம் விளம்புகிறது. எனவே, மற்றச் சமயத்தார்கள் உள்ஆவேசம் என்று சொல்லும் ஒன்றை, வேதாந்திகள் வெளித்தோற்றம் என்று பணிவோடு சொல்ல உரிமை கொண்டாடுகிறார்கள். ஆனால், வேதாந்தம் வேறு சமயக் கொள்கைகளோடு போரிடுவதில்லை. மனிதனின் தெய்வத் தன்மையைப் புரிந்து கொள்ளாதவர்களோடும் வேதாந்தம் பகை கொள்வதில்லை. தெரிந்தோ, தெரியாமலோ, ஒவ்வொருவனும் தன்னிடமுள்ள தெய்வத் தன்மையை விரியச் செய்யவே முயல்கிறான்.

ஒரு சிறு பெட்டியில் சுருட்டி வைக்கப்பட்ட அளவிலா விசைக்கம்பி (ஸ்ப்ரிங்) போன்றவன் மனிதன். இந்த விசைக் கம்பிச் சுருள் விரிய முயல்கிறது. விரிவடையும் இந்த முயற்சியின் பலன்தான் நாம் காணும் சமூக முயற்சிகள் அனைத்தும். நம்மைச் சுற்றிலும் நாம் காணும் போட்டி, போர், தீமை இவையெல்லாம் விரிவடையும் இந்த முயற்சியின் காரணங்களும் அல்ல, விளைவுகளும் அல்ல. நம் வேதாந்திகளில் சிறந்த ஒருவர் பின்வரும் உதாரணத்தைக் காட்டுகிறார்: வயலுக்கு நீர் பாய்ச்சும் அமைப்பில் தண்ணீர்க் குளம் மேட்டில் இருக்கிறது; தண்ணீர் வயலுக்குள் பாய முயன்று கொண்டிருக்கிறது; ஆனால், அதை ஒரு கதவு தடுக்கிறது. இந்தக் கதவைத் திறந்தவுடன் தண்ணீர் தன் இயல்பு காரணமாக வயலுக்குள் பாய்கிறது. அது பாயும்

பாதையில் புழுதியோ அழுக்கோ இருந்தால், தண்ணீர் அவற்றின் மேல் உருண்டோடுகிறது. ஆனால், இந்தப் புழுதியும் அழுக்கும் மனிதனிடமுள்ள தெய்வத் தன்மையினது விரிவின் விளைவும் அன்று, காரணமும் அன்று. இவை அந்த முயற்சியோடு அதே சமயத்தில் காணப்படும் சூழ்நிலைகள். எனவே, இவற்றை நீக்க வழி உண்டு.

இந்தியாவிலானாலும் சரி; வெளி நாடுகளிலானாலும் சரி; இந்தக் கருத்து எல்லாச் சமயங்களிலும் இருப்பதாக வேதாந்தம் சொல்லுகிறது. சிலவற்றில் இந்தக் கருத்து புராணக் கதை வாயிலாகவும், வேறு சிலவற்றில் குறியீட்டு முறையாலும் வெளியிடப்படுகிறது. எந்தச் சமய ஆவேசமோ, எந்த தெய்விக மனிதனின் சக்திப்பிரகாசமோ, எவ்வளவு பெருமையோடு கூடியதாயினும், அது மனித இயல்பிலுள்ள அந்த எல்லையில்லாத ஒருமைப்பாட்டின் மலர்ச்சியேயாகும். ஒழுக்கம், நீதி நெறி, புண்ணியம் என்று நாம் சொல்லுவன எல்லாங்கூட இந்த ஒருமைப்பாட்டின் மலர்ச்சியேயாகும். தானும் இந்தப் பிரபஞ்சமும் ஒன்றுதான் என்று ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே உணரும் காலம் எப்போதாவது வருகிறது; அந்தக் கணமே அவன் தன்னை அறிந்தோ, அறியாமலோ, அந்த உணர்ச்சியை வெளிப்படுத்தத் தீவிரமாக முனைகிறான். ஒருமைப்பாட்டுணர்ச்சியின் மலர்ச்சியையே நாம் அன்பு, கருணை என்று சொல்லுகிறோம்; நம்மிடையேயுள்ள ஒழுக்க நெறி, நீதி நெறி இவற்றின் அடிப்படையும் இந்த மலர்ச்சிதான். வேதாந்த தத்துவத்தின் பிரசித்தி பெற்ற சூத்திரமான ‘தத் த்வம் அஸி’ அல்லது ‘நீயே அது’ என்பதில் இந்த உண்மை தொகுத்துரைக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் இந்த உபதேசம் செய்யப்படுகிறது. உலகமெங்கும் நிறைந்த பொருளும் நீயும் ஒன்று. எனவே, ஆன்மாக்களெல்லாம் உன் ஆன்மாவே; உடல்களெல்லாம் உன் உடலே; ஆதலால், நீ யாருக்காவது தீங்கு செய்தால் உனக்கே தீங்கு செய்து கொண்டவனாகிறாய்; யாரிடமாவது அன்பு காட்டினால், உன்னிடமே அன்பு காட்டிக்கொண்டவன் ஆகிறாய். வெறுப்புப் பொறி ஒன்றை நீ வெளியே வீசினால், அது வேறு யாரைச் சுடுமானாலும் நிச்சயம் அது உன்னையும் சுடும். இது போலவே, உன்னிடமிருந்து வெளிப்படும் அன்பும் நிச்சயம் உன்னிடம் திரும்பியே ஆகவேண்டும். இதற்கெல்லாம் காரணம், ‘நானே இந்தப் பிரபஞ்சமெல்லாம்; இந்தப் பிரபஞ்சமே என் உடல்; எல்லையற்றவன்;’ என்பதே. ஆனால், இப்

போது அதை நான் அறியவில்லை. இந்த உணர்வைப் பெறுவதற்காகவே இப்போது நான் தீவிரமாக முயன்றுவருகிறேன். இந்த அறிவு அல்லது ஞானம் என்னுள்ளே மலர்ந்தவுடன் நிறைவு கிட்டிவிடும்.

வேதாந்திகளின் இன்னொரு தனிப்பட்ட கருத்து இது : சமய சம்பந்தமான கருத்துக்களில் எல்லையில்லாத வேறுபாடுகள் இருந்தாலும், எல்லாவற்றையும் அனுமதிக்கவேண்டும். எல்லாரையும் ஒரே அபிப்பிராயத்துக்குக் கொண்டுவர முயலக்கூடாது. அபிப்பிராயம் எப்படியானாலும் முடிவு ஒன்றுதானே? வேதாந்தி கவிதை நயத்தொடு பின் வருமாறு சொல்கிறான் : "பல மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகளும் நேராகவோ பல கோணல்களாக வளைந்தோ ஓடினாலும், கடைசியில் கடலிலேதான் போய்ச் சேருகின்றன. எனவே, பல கொள்கைகளும் மதங்களும் வெவ்வேறு அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு தொடங்கி, நேராகவோ, கோணலாக வளைந்து வளைந்தோ முன்னேறினாலும், முடிவில் உன்னையே அடைகின்றன."

இந்தக் கொள்கை பரவியதன் பயனாக இந்த மிகப் பழைய தத்துவம் தனது செல்வாக்கினால் சமயப் பிரசார நோக்கமுடைய முதல் மதமான புத்த மதத்துக்கே ஞான ஊக்கம் ஊட்டியிருக்கிறது. அலெக்ஸாண்டிரியர்கள், நாத்திகர்கள், இடைக்கால மத்திய ஐரோப்பிய சமய தத்துவ சாத்திரிகள் இவர்கள் மூலமாக இது கிறித்தவ சமயத்தையும் பாதித்திருக்கிறது. பிற்காலத்தில் இது ஜெர்மானியக் கருத்தின்மீதும் ஆட்சி செலுத்தி, சமய தத்துவம் மனத்தத்துவம் ஆகிய சாத்திரங்களில் பெரும் புரட்சியையே உண்டாக்கியிருக்கிறது. என்றாலும், இதனால் உலகுக்கு ஏற்பட்ட இவ்வளவு பலன்களும் வெளிப்படையாக யாருக்கும் தெரியாமலே ஏற்பட்டிருக்கின்றன. இரவு நேரத்தில் வீழும் மென்மையான பனி எப்படித் தாவர வர்க்கங்களெல்லாம் வாழத் துணை செய்கிறதோ, அப்படியே மெதுவாகவும் வெளிப்படையாகத் தெரியாமலும் இந்தத் தெய்விகச் சமய தத்துவம் மக்களின் நன்மைக்காக உலகமெங்கும் பரவி நிற்கிறது. இந்தச் சமயத்தைப் பரப்ப எந்தச் சேனையின் துணையும் தேவைப்படவில்லை. சமயப் பிரசார நோக்கமுள்ள மதங்களுள் மிக்க பழமை வாய்ந்ததான புத்தமத சம்பந்தமாக அசோக சக்கவர்த்தியின் பல சாசனங்களை நாம் இன்றும் காண்கின்றோம் : அலெக்ஸாண்டிரியா, ஆண்டியோக்கு, பாரசீகம், சீனா, அக்கால நாகரிக நாடுகளின் பிரதான நகரங்கள் ஆகிய இங்கெல்லாம் சமயப்

பிரசாரகர்கள் அனுப்பப்பட்டதைப் பற்றிய செய்திகளை இந்தச் சாசனங்களில் காண்கின்றோம். கிறித்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மற்ற மதங்களை இழிவுபடுத்திப் பேசுவது தவறு என்ற உபதேசம் இவர்களுக்குச் செய்யப்பட்டது. "உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி; எல்லா மதங்களின் அடிப்படையும் ஒன்றுதான். உங்களால் இயலும் வரையில் அவைகள் வளர உதவி புரியுங்கள்; உங்களுக்குத் தெரிந்த வரையில் அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள்; ஆனால் அவைகளைக் கெடுக்கமட்டும் முயல வேண்டாம்."

இந்தக் காரணத்தினால் இந்தியாவில் என்றுமே மத வெறுப்போ, அதுகாரணமான துன்புறுத்தல்களோ, இந்துக்களைப் பொறுத்தவரை என்றும் இருந்ததில்லை; உலகச் சமயங்கள் எல்லாவற்றினிடமும் அவர்கள் வியக்கத்தக்க மரியாதையே காட்டி வந்தார்கள். தங்கள் சொந்த நாட்டிலிருந்து துரத்தப் பட்ட ஈபுருக்களுக்கு இந்துக்கள் புகலிடம் தந்தார்கள். இதன் பலனாக இன்று மலையாள யூதர் பலர் இருக்கின்றனர். அநேகமாக அழிக்கப்பட்ட பெர்ஸியர்களில் மிகுந்த சிலரையும் வரவேற்றுப் புகலிடம் தந்தார்கள் இந்துக்கள்; அவர்கள் இன்றும் நம்மிடையே நம்மில் ஒரு பகுதியினராய் நம் அன்புக்கு இலக்காகி, பம்பாய் பார்ஸிகளாய் வாழ்ந்து வருகின்றார்கள். தாம் ஏசுநாதரின் நேர்ச்சீடரான அர்ச்தாமஸ் என்ற ஞானியரோடு இந்தியாவுக்கு வந்ததாகக் கிறித்தவர் பலர் சொல்லிக் கொள்கின்றனர். இவர்களும் இந்தியாவில் குடியேறி வாழ அனுமதிக்கப்பட்டார்கள்; இவர்கள் சமயத்தை இவர்கள் பின்பற்றுவதற்கும் தடை ஒன்றும் இல்லை. இன்று இவர்கள் கூட்டம் ஒன்று இந்தியாவில் வாழ்ந்து வருகிறது. பிற மதங்களை வெறுப்பின்றி ஏற்கும் இந்த மனப்பாங்கு இன்றும் அழியாமல் இருக்கிறது. இது என்றுமே இந்த நாட்டில் அழியாது.

வேதாந்தம் நமக்குக் கற்பிக்கும் சிறந்த பாடங்களுள் பின் வருவதும் ஒன்று: தெரிந்தோ, தெரியாமலோ, ஒரே முடிவை நோக்கி முன்னேற முயன்றுவரும் நமக்குள் பகைமை எதற்கு? ஒருவன் மற்றொருவனைவிட மெதுவாக முன்னேறினால், அதற்காகப் பொறுமையை இழந்து அவனைச் சபிக்கவோ திட்டவோ வேண்டுவதில்லை. நம் அகக்கண்கள் திறந்து இதயமும் பரிசுத்தமடைந்தால், ஒரே தெய்வசக்தி எங்கும் தொழிற்படுவதும், ஒவ்வொரு மனித இதயத்திலிருந்தும் தெய்வ சக்தி மலர்வதும் நன்கு விளங்கும். இந்த அனுபவம் பெற்ற பிறகுதான் உலக

மக்களெல்லாம் சகோதரர்கள் என்று நாம் உரிமை கொண்டாட இயலும்.

எப்பொழுது மனிதன் உயர்ந்த நிலையின் எல்லையை அடைகிருனே, எப்பொழுது அவனுக்கு ஆண் பெண் என்ற பால் வேற்றுமையோ, சமய வேற்றுமையோ, நிற வேற்றுமையோ, பிறப்பு வேற்றுமையோ, வேறு வேற்றுமைகளோ தெரிவதில்லையோ, எப்பொழுது அவன் இவற்றையெல்லாம் கடந்து நிற்கும் தெய்வப் பண்பை ஒவ்வொரு மனித உருவின் உண்மை மையமாகவும் காண்கிருனே, அப்பொழுதுதான் அவனிடத்தில் உலக சகோதரத்துவம் பயன்படுகிறது; அந்த மனிதனே உண்மை வேதாந்தியாவான்.

வேதாந்த தத்துவ சம்பந்தமாக உலக நடையில் காணும் சரித்திர சம்பந்தமான பலன்கள் இவைகளே.

இந்து வேதாந்த தத்துவத்தின் படிகள்

இன்று மேலெழுந்து நிற்கும் சமயக் கருத்துக்களின் முதல் தொகுதி — ஒப்புக்கொள்ளப்பட்ட சமயக் கருத்துகளேயே கருதுகிறேன்; சமயம் என்ற பெயருக்கே தகுதியற்ற தாழ்ந்த கருத்துகளையன்று—ஞான ஆவேசக் கருத்தையும், தெய்வத்தால் வெளியான உபதேச நூல்கள் முதலியவற்றையும் தன் அங்கமாகக் கொண்டிருக்கிறது. இத்தகைய முதல் சமயக் கருத்துத் தொகுதி இறைவன் என்ற கருத்தில் தொடங்குவதேயாகும். பிரபஞ்சம் இதோ இருக்கிறது; இதைப் படைத்த ஒருவர் இருக்கிறுர். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் அவரது படைப்பேயாகும். இந்தக் கருத்துடனேயே, ஆனுல் சற்றுப் பிற்பட்ட காலத்தில், ஆன்மா என்ற கருத்து தோன்றுகிறது. 'இந்த உடம்பு இருக்கிறது; இந்த உடம்புக்குள் உடம்பல்லாத ஏதோ ஒன்று இருக்கிறது,' என்ற கருத்து, நாம் அறிந்த வற்றுளெல்லாம் சமயம் பற்றிய மிக எளிய கருத்து. இந்தக் கருத்தைக் கொண்ட சமயவாதிகளுள் ஒரு சிலரை இன்றும் நாம் இந்தியாவில் காணலாம். ஆனுல், இந்தக் கருத்து நெடுங் காலத்துக்கு முன்னமே மறைந்து விட்டது. இந்திய சமயங்களின் தொடக்கமே விசித்திரமாயிருக்கிறது. கடுமையான ஆராய்ச்சியினுலும், மிகுதியாகக் கணக்குப் போடுவதாலும், ஊகத்தாலும் மட்டுமே இத்தகைய நிலே இந்திய சமயங்களில் இருந்தது என்பதை நாம் சிந்திக்க இயலும். நாம் அவற்றைக் காணும் தூல நிலே அடுத்த படியே ஒழிய, இந்த முதற்படி அன்று. தொடக்கப் படியிலே படைப்பைப் பற்றிய கருத்து மிக விசித்திரமானது. 'இறைவனது விருப்பத்தால் சுத்த சூனியத்திலிருந்து இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டது; முன்பு இது இல்லவே இல்லே; சூனியத்திலிருந்து தான் இவையெல்லாம் பிறந்தன,' என்பதே அக்கருத்து. அடுத்த படியில் இந்த முடிவைப் பற்றிய ஐயம் வந்துவிடுகிறது. சூனியத்திலிருந்து, உள்ள பொருள் எவ்வாறு தோன்ற முடியும்? வேதாந்தத்தின் முதற்படியிலேயே இந்தக் கேள்வி எழுகிறது. இந்தப் பிரபஞ்சத்தின் இருப்பு உண்மையானுல், இது ஏதாவது உள்ள பொருள் ஒன்றிலிருந்துதான் தோன்றியிருக்க இயலும்; சூன்யத்தி

லிருந்து எதுவும் எங்கும் தோன்ற இயலாது என்பது நன்கு தெரிகிறது. மனிதர்கள் செய்யும் எல்லாத் தொழிலுக்கும் பொருள்கள் தேவைப்படுகின்றன. வீடு ஒன்று கட்டப்பட்டால், அதற்கு வேண்டிய துணைக்கரணங்கள் முன்பே இருந்தன; ஒரு படகு கட்டப்பட்டாலும் அப்படியே; ஏதேனும் ஆயுதம் செய்தாலும் அப்படியே. இவ்வாறு ஒரு காரியம் உருவாகிறது. எனவே, சூனியத்திலிருந்து இந்தப் பிரபஞ்சம் படைக்கப் பட்டது என்னும் கொள்கை தள்ளப்பட்டது. இது படைக்கப் படுவதற்குக் காரணமான மூலப்பொருள் ஒன்று தேவைப்பட்டது. சமய வரலாறு முழுதுமே இந்த மூலப்பொருள் பற்றிய ஆராய்ச் சியே ஆகும்.

ஆக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சத்துக்கு மூலப்பொருள் எது? கடவுளே நிமித்த காரணம் என்பதையும் கடவுள் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்பதையும் சற்று விட்டு விடுவோம்; பிரச்சினைகளுள் பெரும்பிரச்சினையாய் இருப்பது இதுதான்: எந்தப் பொருளிலிருந்து கடவுள் இதைப் படைத் தார்? இந்தக் கேள்வியிலே தத்துவமுறைகள் யாவும் வேறு வேருகத் திரும்பி விடுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு ஒரு விடையாவது: பிரகிருதி, இறைவன், ஆன்மா ஆகிய மூன்றும் என்றும் உள்ளவை; மூன்று கோடுகள் சமதூரமாக என்றும் ஓடுவதுபோல அவை. அவற்றுள் கடவுள் எந்தச் சார்பும் அற்ற உண்மையாக, பிரகிருதி ஆன்மா என்னும் மற்ற இரண்டும் கடவுளைச் சார்ந்தவை. ஒவ்வோர் ஆன்மாவும் ஒவ்வொரு சடப் பொருளின் சிறிய கூறு போலவே கடவுளின் சித்தத்தையே முழுச் சார்பாகக் கொண்டது. மற்றப் படிகளைக் கூறு முன் நாம் ஆன்மா என்னும் கருத்தை எடுத்துக்கொள்வோம். இந்த ஆராய்ச்சியில் இறங்கியவுடன் வேதாந்த ஆராய்ச்சி செய்பவர்களுக்கும், மேலை நாட்டுத் தத்துவ சாத்திரிகளுக்கும் இடையே ஒரு மிகப் பெரிய வேற்றுமை நன்கு புலனுகும். வேதாந்திகளின் சமய தத்துவம் எதுவானுலும், அவர்களது மனத் தத்துவ சாத்திரம் ஒன்றுதான்; அது சாங்கியர்களின் மனத் தத்துவ சாத்திரமே. இந்த மனத் தத்துவ முறைப்படி ஒரு பொருளைப் பற்றிய அறிவு ஏற்படுவது இவ்வாறு: வெளிப் பொருளின் அலைகள் வெளிப் பொறிகளை அடைகின்றன. வெளிப் பொறிகளிலிருந்து புலன்கள் ஆகிய உட்கருவிகளுக்கு இவை போகின்றன; இங்கேயிருந்து மனத்தை அடைகின்றன; பிறகு புத்தியை நண்ணுகின்றன. இந்த புத்தியிலிருந்து இவை

எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தும் நிலைக்களமான ஆன்மாவை எய்த, அறிவு முகிழ்க்கிறது. பலவகைப் புலன் உணர்ச்சிகளுக்கும் உரிய மையங்களை இந்நாளைய உடலியல் சாத்திரம் கண்டு பிடித்துள்ளது. முதலில் தாழ்ந்தநிலை மையங்களையும், பிறகு உயர்ந்த நிலை மையங்களையும் கண்டது. இவை புலன்கள் ஆகிய உட்கருவிகளுக்கும் மனத்துக்கும் முற்றும் நேரானவை. ஆனால், மையங்களை எல்லாம் அடக்கியாளும் மூல மையம் ஒன்றை இந்நாளைய உடலியல் சாத்திரம் கண்டு பிடிக்க வில்லை. எனவே, இந்த மையங்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் மூலம் எது என்பதை உடலியல் சாத்திரம் விளக்க இயலாது; இந்த மையங்களெல்லாம் ஒன்றுபடும் இடம் எது? மூளைகளி லுள்ள மையங்களெல்லாம் வெவ்வேறானவை. ஏனைய எல்லா மையங்களையும் அடக்கியாளும் மூல மையம் ஒன்று இல்லை. எனவே, அடக்கியாளும் மூல மையத்தை (ஆன்மாவை)ப் பொறுத்த மட்டில் இந்திய மனத் தத்துவத்திற்கு ஈடாகும் வேறு கொள்கையே இல்லை. பலவகைப் புலன் உணர்ச்சிகளும் பிரதி பலிக்கப்படுதற்கும், முழுமையை அடைதற்கும் அவை ஒன்று படுதல் வேண்டும். ஒன்று படுத்தும் அது இருந்தாலொழிய, நான் உங்களைப் பற்றியோ, ஒரு படத்தைப் பற்றியோ, ஒரு பொருளைப் பற்றியோ அறியவே இயலாது. இந்த ஒன்றுபடுத் தும் நிலைக்களம் இல்லை என்றால், நான் ஒருவரைப் பார்ப்பேன், சற்று கழிந்தபின் மூச்சு விடுவேன், பின் பேச்சைக் கேட்பேன், பிறவும் நிகழும். கேட்கும்போது அவரை நோக்க இயலாது. மையங்கள் அனைத்தும் வெவ்வேறானவை அல்லவா?

சடப்பொருள் என்னும் ஒன்றின் கூறுகளால் ஆனது இந்த உடல். எனவே, இது அசைவில்லாத சடமாய் இருக்கிறது. வேதாந்திகள் சூக்கும உடல் என்று சொல்வதும் இப்படித்தான் இருக்கிறது. அவர்கள் கொள்கைப்படி சூக்கும உடல் சடப் பொருள் ஆனது; ஆனால், கண்ணாடி போல ஒளி ஊடுருவும் தன்மையது. இது நுண்ணிய பொருட்கூறுகளால் ஆனது; இக்கூறுகளைப் பூதக்கண்ணாடியாற்கூடப் பார்க்க இயலாது. இந்தச் சூக்கும உடலால் ஏற்படும் பயன் என்ன? இதுவே நுட்பமான சக்திகளை ஏற்கும் கலமாகிறது. பருவுடல் பருமனான சக்திகளை ஏற்கும் கலமாவது போல, நுண்ணுடல் நுட்பமான சக்திகளை—நினைவு என்பதின் பல வகை விருத்திகளை—ஏற்கும் கலமாய் அமைகிறது. முதலாவது பருப்பொருளால் ஆன, பருமனான சக்திகளுக்கு இருப்பிடமும் ஆன உடல். பருப்

பொருள் இல்லாமல் சக்தி இருக்க இயலாது. சக்தி தங்கி நிற்க ஏதாவது ஒருவகைப் பருப்பொருள் அவசியம். ஆதலால், பருமனான சக்திகள் பருப் பொருளான உடலில் தொழிற்படு கின்றன; இந்த சக்திகளே நுட்ப சக்திகள் ஆகின்றன; பரு உருவில் தொழிற்படும் சக்தியே நுட்பவடிவில் தொழிற் பட்டு நினைவு ஆகின்றது. பருமனான சக்திக்கும் நுட்பமான சக்திக்கும் இடையே வேறுபாடு ஒன்றும் இல்லை; ஒரே பொரு ளின் பருவுருவம் ஒன்று; நுண்ணுருவம் ஒன்று. இதே போலப் பரு உடலுக்கும் நுண்ணுடலுக்கும் இடையேயும் வேறுபாடு ஒன்றும் இல்லை. நுண்ணுடலும் சடப்பொருளால் ஆனதுதான்; ஆனால், இது நுண்பொருள். பருமனான சக்திகளைத் தொழிற் படச் செய்யும் கருவி நுண்ணுடல் ஆகிறது. இந்தச் சக்திகளெல் லாம் எங்கிருந்து வருகின்றன? வேதாந்தத் தத்துவ இயலின் படி பிரகிருதியில் இரண்டு பொருள்கள் இருக்கின்றன: எல்லை யற்ற நுண்மை வாய்ந்த பொருளை ஆகாயம் என்கிறார்கள், சக்தியாகிய மற்றொன்றைப் பிராணன் என்கிறார்கள். கண்டோ, தொட்டோ, கேட்டோ அறியும் காற்று, மண்போன்ற சடப் பொருள்கள், ஆகாயம் காரணமாகத் தோன்றுபவை. பிராண னின் செயலால் இவை மிகமிகப் பருமனாகவே மாறிக்கொண்டே போகின்றன. ஆகாயத்தைப் போலவே பிராணனும் எங்கும் நிறைந்தது; எல்லாப் பொருள்களுக்குள்ளும் இருப்பது. ஆகாயம் தண்ணீர் போன்றது; பிரபஞ்சத்திலுள்ள மற்றவை களெல்லாம் இத் தண்ணீரால் ஆக்கப்பட்டு, இதன் மேல் மிதக் கும் பனிக்கட்டிகள் போன்றவை ஆகும். இப்படி ஆகாயத்தைப் பல உருவங்களாக மாற்றும் சக்தி பிராணனாகும். தசை நார் களின் இயக்கம், நடப்பது, அமர்வது, பேசுவது போன்ற பரு உருவங்களாகப் பிராணன் மாறுவதற்கு நிலைக்களமான பருவுடல் ஆகாயத்திலிருந்து உண்டாக்கப்பட்டதாகும். அதே பிராணன் நுட்ப உருவமான கருத்தாக மாறுபடுவதற்கு ஆதாரமான சூக்கும உடலும் ஆகாயத்தின் சூக்கும உருவத்திலிருந்து ஆக்கப்பட்டதே யாகும். எனவே, முதலில் பருவுடல் இருக்கிறது; இதற்கு அப்பால் நுண்ணுடல் (சூக்கும சரீரம்) இருக்கிறது; இதற்கும் அப்பால் சீவன் அல்லது உண்மை மனிதன் இருக்கிறான். பரு வுடலுக்கும் நுண்ணுடலுக்கும் உள்ள சம்பந்தம் நமது நகத்துக் கும் உடலுக்கும் உள்ள சம்பந்தம் போன்றது. நகங்களை நாம் பல முறை கத்தரித்து எறிய முடியுமானாலும், இவை உடலின் பாகங்களேயாகும். ஒரு மனிதனுக்குச் சூக்கும உடல், பருவுடல்

என்னும் இரண்டு இல்லை; உடம்பு ஒன்றுதான். நெடுநாள் அழியாமல் நிலைத்திருப்பது நுண்ணுடல்; விரைவில் அழிந்து போவது பருவுடல். எப்படி நான் பல தடவை என் நகத்தைக் கத்தரிக்க இயலுமோ, அப்படியே இந்தப் பருவுடலையும் நான் பல இலட்சம் தடவை உதறிவிட முடியும்; ஆனால், நுண்ணுடல் மட்டும் நிலைத்து நிற்கும். துவைதிகளின் கொள்கைப்படி, சீவன் என்னும் உண்மை மனிதன் மிகவும் நுட்பமானவன்; அணுப் பிரமாணமானவன்.

விரைவில் அழியும் பருவுடலை முதலிலும், பல இலட்சம் ஆண்டுகள் அழியாத நுண்ணுடலை அதற்கு அப்பாலும், அதற்கும் அப்பால் சீவனையும் கொண்ட ஒரு பொருளே மனிதன் என்பதை நாம் இதுவரையில் பார்த்தோம். எவ்வாறு இறைவனுக்கு அழிவும் தொடக்கமும் இல்லையோ, அவ்வாறே சீவனுக்கும் இல்லை என்பதுதான் வேதாந்தக் கொள்கை. இது போல்வதுதான் பிரகிருதி என்னும் இயற்கையும்; ஆனால், இது மாறுதலோடு கூடியது. பிரகிருதியின் மூலப் பொருள்களான பிராணனும் ஆகாயமும் என்றும் உள்ளவைகளே. ஆனால், இவை புதுப்புது உருவங்களாக மாறிய வண்ணம் இருக்கின்றன. ஆனால், சீவன் ஆகாயத்தாலோ பிராணனாலோ ஆக்கப்பட்ட பொருள் அன்று. இது பொருளின் தன்மையே இல்லாதது. எனவே, இது என்றும் உள்ளதாகும். பிராணன், ஆகாயம் இவைகளின் சேர்க்கையால் ஆனதன்று சீவன். சேர்க்கையின் விளைவாக ஏற்படாத எந்தப் பொருளுக்கும் அழிவு இல்லை. அழிவு என்பதே மூலப் பொருள்களாகப் பிரிவதுதானே? ஆகாயம், பிராணன் இவைகளின் சேர்க்கையால் ஆன பருவுடல், இந்த மூலப் பொருள்களாகப் பிரிந்துவிடும். நுண்ணுடலும் பல இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாறே பிரிந்துவிடும். ஆனால், எந்தச் சேர்க்கையின் பலனும் அல்லாத தனிப் பொருளான சீவனே, என்றுமே அழியாது. இதே நியாயப்படி சீவன் பிறக்கவும் (உண்டாகவும்) இல்லை. தனிப் பொருளான எதற்கும் பிறப்பு அதாவது உண்டாதல் இல்லை. மேற்சொன்ன அதே நியாயம் இங்கும் பொருந்தும். சேர்க்கையால் உண்டாகும் பொருளுக்குத்தான் பிறப்பு உண்டு. பல பல இலட்சம் சீவன்கள் என்னும் ஆன்மாக்களாலான இந்தப் பிரபஞ்சம் கடவுளின் சித்தத்துக்கு அடங்கியது. கடவுள் எங்கும் நிறைந்தவர் (சர்வ வியாபி); எல்லாம் அறிந்தவர் (சர்வஞ்ஞர்); உருவம் இல்லாதவர் (அரூபி). இவர் பிரகிருதியைக் கருவியாகக் கொண்டு அல்லும் பகலும் இயக்குகிறார். பிரகிருதி முழுவதும்

இவரது ஆட்சிக்கு அடங்கியது. இவரே என்றும் அரசாள்பவர். இப்படித் துவைதிகள் கூறுகிறார்கள். இது உண்மையானல், பின் காணும் பிரச்சினை எழுகிறது; இறைவரே இவ்வுலக அரசரானல், அவர் ஏன் இவ்வளவு தீங்கு நிறைந்த இவ்வுலகைப் படைத்தார்? நாம் ஏன் இவ்வளவு இன்னல்களை அனுபவிக்க வேண்டும்? "அது கடவுளின் குற்றம் அன்று; துன்பப்படுவது நம் குற்றமே," என்று அவர்கள் மொழிகின்றார்கள். "நாம் எதை விதைக்கிறோமோ, அதையே அறுக்கிறோம். நம்மைத் தண்டிப்பதற்காக அவர் ஒன்றும் செய்யவில்லை. மனிதன் ஏழையாகவோ, குருடனாகவோ, வேறு குறையுடையவனாகவோ பிறக்கிறான். இதற்குக் காரணம் என்ன? இவன் இப்படிப் பிறப்பதற்குக் காரணமான ஏதோ ஒன்றை இப்படிப் பிறக்கும் முன் செய்திருக்க வேண்டும். சீவன் படைக்கப்படவில்லை; இது என்றுமே இருந்திருக்கிறது; பலவற்றையும் செய்துகொண்டே இருந்திருக்கிறது. நாம் எதைச் செய்கிறோமோ, அதன் பிரதிபலனை நுகர்ந்தே தீர வேண்டும். நல்லது என்னும் புண்ணியம் செய்தால் அதன் பலனாக இன்ப அனுபவத்தையும், தீயது (பாவம்) செய்தால் அதன் பலனாகத் துன்ப அனுபவத்தையும் பெறுவோம். இப்படியே சீவன் புண்ணிய பாவங்களைப் புரிந்துகொண்டும் இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டும் உழன்றுகொண்டே இருக்கிறது.

சாவுக்குப் பிறகு நேர்வது என்ன? வேதாந்திகள் எல்லோருமே சீவனது இயற்கை தூய்மை உள்ளது என்றும், அஞ்ஞானந்தான் அதன் இயல்பை மறைக்கிறது என்றும் சாற்றுகின்றார்கள். பாவ காரியங்களால் சீவன் தன்னை அஞ்ஞானத்தால் மறைத்துக் கொள்வது போலப் புண்ணிய காரியங்களால் அது மீண்டும் தன் இயல்பை உணரும் ஆற்றலைப் பெறுகிறது. சீவன் அழிவற்றதாவது போலவே இயல்பாகவே தூயதாயும் இருக்கிறது. ஒவ்வொரு பொருளின் தன்மையும் பரிசுத்தமானதுதான்.

புண்ணிய காரியங்களால் பாவங்களும் தவறுகளும் கழுவப்பட்டவுடன் சீவன் மீண்டும் தூயதாந் தன்மையை அடைகிறது. இப்படி இது பரிசுத்தத் தன்மையை அடைந்தவுடன் 'தேவயானம்' என்னும் இடத்துக்குப் போகிறது. இதனுடைய பேச்சுக்கருவி மனத்துக்குள் புகுகிறது. சொற்கள் இல்லாமல் எப்படி நினைக்க இயலும்? சொற்கள் மனத்துக்குள் புகுந்தவுடன் மனம் பிராணனாகவும், பிராணன் சீவனாகவும் மாறி விடுகின்றன. உடனே, சீவன் வெகுவிரைவில் உடலை விட்டு வெளியேறி,

ஞாயிறு உலகத்துக்குப் போகிறது. இந்தப் பிரபஞ்சம் பல மண்டலங்களால் ஆனது. பூமியே ஓர் மண்டலம். இந்த மண்டலத்தில் மதிகளும், ஞாயிறுகளும் விண்மீன்களும் இருக்கின்றன. இதற்கு அப்பால் சூரிய மண்டலமும் அதற்கும் அப்பால் சந்திர மண்டலமும் இருக்கின்றன. அவற்றிற்கும் அப்பால் மின்னல் மண்டலம் என்ற மின்சார மண்டலம் இருக்கிறது. சீவன் அந்த மண்டலத்தை அடைந்தவுடன், முன்னமே பூரணம் பெற்ற மற்ெருரு சீவன் அதை வரவேற்று, பிரம்மலோகம் என்ற மிக உயர்ந்த சுவர்க்கத்துக்கு அதை அழைத்துச் செல்லுகிறது. அங்கே சென்ற சீவன், பிறப்பு இறப்பு ஒன்றும் இல்லாமல், என்றும் நித்தியமாக அங்கேயே நிலைத்துவிடுகிறது. இது எக்காலமும் அங்கே எல்லாவகை ஆனந்த அனுபவங்களையும் சக்திகளையும் பெறுகிறது ; ஆனால், படைப்புச் சக்தியை மட்டும் இது பெறுவதில்லை. இந்தப் பிரபஞ்சத்தை ஆளும் அதிகாரம் ஒருவருக்கு மட்டுமே உண்டு ; அவரே கடவுள். யாரும் கடவுளாக இயலாது. 'நீதான் கடவுள்' என்று சொன்னால், அது தெய்வத் துரோகம் என்று துவைதிகள் உரைக்கின்றனர்கள். படைப்புச் சக்தி நீங்கலான எல்லாச் சக்திகளையும் சீவன் பெறுகிறது. அது உடலை ஏற்றுக்கொண்டு உலகின் பல பகுதிகளில் உழைக்க விரும்பினால், அப்படியே செய்யலாகும். தேவர்களையோ, தென்புலத்தார்களையோ அந்தச் சீவன், தான் நினைத்தபோது தன் முன் வரும்படி செய்ய இயலும். இவ்வளவு சக்தியிருப்பதோடு, அது துன்ப நுகர்வும் சிறிதும் இல்லாமலிருக்கிறது. அது விரும்பினால் என்றென்றும் பிரம்மலோகத்திலேயே வாழலாம். இதுதான் மனிதனின் உயர்ந்த எல்லை : இவன் ஆண்டவன் மீது அன்பைப் பெற்றவன் ; சற்றும் சுயநலம் இல்லாதவன் ; முழுதும் பரிசுத்த மானவன் ; ஆசையற்றவன் ; இறைவரிடம் பக்தி செய்வதையும் அவரை வணங்குவதையும் தவிர, இவன் வேறு எதையுமே விழைவதில்லை.

இவ்வளவு உயர்வடையாத சீவர்களும் இருக்கின்றனர்கள். இவர்கள் புண்ணியங்களைப் புரிகின்றனர்கள் ; ஆனால், ஓரளவு கைம்மாற்றை எதிர்பார்க்கின்றனர்கள். 'நாங்கள் ஏழைகளுக்கு இவ்வளவு கொடுக்கின்றோம். ஆனால், இதன் விளைவாக எங்களுக்குச் சுவர்க்கானுபவம் கிடைக்கவேண்டும்,' என்று இவர்கள் விழைகின்றனர்கள். இவர்கள் இறந்த பின் இவர்களுக்கு என்ன நேரிடுகிறது? சொல் மனத்துக்குள்ளும், மனம் பிராணனுக்குள்ளும், பிராணன் சீவனுக்குள்ளும் புகுகின்றன. பின் சீவன் உடலைவிட்டு வெளியேறிச்

சந்திர மண்டலத்தை அடைகிறது; அங்கே நெடுநாள் வரை அது சுகவாழ்வு வாழ்கிறது. அங்கே அதன் புண்ணியத்தின் பலன் இருக்கும் வரையில் அது சுகத்தை அனுபவிக்கிறது. அந்தப் புண்ணியப் பலன் முடிந்தவுடன் அதுவும் தன் விருப்பங்களுக்கு ஏற்றபடி இந்த உலகுக்கு இறங்கிப் பிறவி எடுக்கிறது. சந்திர மண்டலத்தில் இருக்கும்போது சீவன் நம் கொள்கைப்படி தேவதையாகவும், கிறித்தவர் முகமதியர்களின் கொள்கைப்படி தேவ தூதனாகவும் இருக்கிறது. தேவதைகளின் இந்தப் பெயர்கள் சில பதவிகளின் பெயர்களே ஆகும். சான்றாக, இந்திரன் என்பது ஒரு பதவியின் பெயரே ஆகும். பல்லாயிரம் மனிதர் இந்தப் பதவியைப் பெறுகின்றனர். வேதங்களில் விதிக்கப்பட்ட கடமைகளுள் (யாகங்களுள்) மிக உயர்ந்ததைச் செய்யும் புண்ணியவானான மனிதன், இறந்த பிறகு விண்ணவர் கோனாகிய இந்திரனாகிறான். இதற்குள் முன்பு இந்திர பதவி தாங்கியவனுடைய புண்ணியம் தீர்ந்துபோய், அவன் பூமியில் மனிதனாய்ப் பிறக்கிறான். இந்த உலகத்தில் அரசர்கள் சாவது போலவே, தேவர்களுக்கும் சாவு உண்டு. சுவர்க்கத்திலுள்ள எல்லோருக்கும் சாவு உண்டு. சாவு இல்லாத இடம் பிரம்ம லோகம் ஒன்றுதான். இங்கேதான் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை.

சீவன் சுவர்க்கத்துக்குப் போய் நல்ல போகங்களை அனுபவிக்கிறது. எப்போதாவது அசுரர்களால் தொல்லை ஏற்படும் போது மட்டும் சிறிது துன்பம் உண்டாகும். புராணங்களில் தேவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் அசுரர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. எல்லாப் புராணக் கதைகளிலுமே தேவாசுர யுத்தங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அசுரர்கள் சில முறை தேவர்களை வென்றும் இருக்கிறார்கள். பல தடவைகளில் அசுரர்கள், தேவர்களைப்போல அவ்வளவு தீச்செயல்களை (பாவங்களை)ச் செய்யவில்லை என்றுதான் தோன்றுகிறது. எல்லாப் புராணங்களுமே, தேவர்கள் பெண் விழைவு உள்ளவர்கள் என்றுதான் உரைக்கின்றன. எனவே, தங்கள் புண்ணியம் முடிந்தவுடன் அவர்கள் கீழே பூமிக்கு இறங்கிவிடுகிறார்கள். அவர்கள், மேகம் வழியாக மழைக்கு வந்து, மழை வழியாகப் பூமிக்கு வந்து, ஏதாவது ஒரு தானியம் அல்லது செடியில் புகுந்து, கடைசியில் அந்தத் தானியம் அல்லது செடியை மனிதன் தின்னும் போது மனிதன் உடலுக்குள் புகுந்து விடுகிறார்கள். தமக்குத் தகுந்த உடலைப் பெறுவதற்கு வேண்டிய பொருளைத் தந்தை கொடுக்கிறான். இந்தப் பொருள் அவர்களுக்கு ஏற்றதாகாவிட்டால்,

அவர்களே வேறு உடல்களை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். பல பெரிய கொடுஞ்செயல் புரியும் பாதகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் விலங்குகளாய்ப் பிறக்கிறார்கள். அவர்கள் மிகவும் இழிதொழிலில் ஈடுபடும் கயவர்களாய் இருந்தால், மிகத் தாழ்ந்த விலங்குகளாய்ப் பிறக்கிறார்கள்; அல்லது செடிகளாகவோ கற்களாகவோ பிறக்கிறார்கள்.

தேவர்கள் உருவத்தில் இருக்கும் சீவர்கள் கருமம் எதையும் செய்வதே இல்லை. மனிதன் ஒருவன்தான் கருமத்தைச் செய்ய இயலும். பலனைத் தரும் காரியங்களையே கருமம் என்கிறோம். ஒரு மனிதன் இறந்து தேவனானால், அவனுக்கு அந்தத் தேவ நிலை இருக்கும் வரையில் சுகானுபவந்தான் உண்டு. அந்தக் கால அளவில் அவன் புதுக் கருமம் ஒன்றும் புரிவதில்லை. அவன் அனுபவிப்பது அவன் முன்னைய மனிதப் பிறவியில் செய்த புண்ணியங்களின் பலனே ஆகும். புண்ணிய கரும நுகர்வு முடிந்தவுடன் மற்றக் கருமங்களின் அனுபவம் தொடங்கிவிடுகிறது; எனவே, அவன் பூமிக்கு இறங்குகிறான். அவன் மீண்டும் மனிதனாகிறான். இந்தப் பிறவியில் அவன் சிறந்த நற்காரியங்களை—புண்ணியங்களை—செய்து தூயவன் ஆகிவிட்டால், பிரம்ம லோகத்துக்குப் போய்விடுகிறான்; பிறகு திரும்பி வருவதே இல்லை.

கீழ்நிலை உருவங்களிலிருந்து பரிணாம முறையில் முன்னேறும் சீவர்களின் ஓர் இடைநிலையே விலங்கு நிலை. காலப்போக்கில் விலங்கு நிலையிலுள்ள சீவன் மனிதனாகிவிடுகிறது. மக்களின் தொகை வளர வளர, விலங்கின் தொகை குறைந்து கொண்டே வருவது கவனித்தற்குரிய ஓர் உண்மை. விலங்கின் உயிர்களெல்லாம் மனித சீவர்களாய் மாறுகின்றன. எத்தனையோ வகை விலங்குகள் ஏற்கெனவே மனிதர்கள் ஆகிவிட்டன. இல்லையானால், அவை வேறு எங்கேதான் போயிருக்கும்?

வேதங்களில் நரகத்தைப் பற்றிய பேச்சே இல்லை. ஆனால், பிற்காலத்தில் தோன்றிய சமய இலக்கியங்களாகிய புராணங்கள், நரகத்தின் தொடர்பு இல்லாவிட்டால் சமயத்துக்கு ஒரு நிறைவு ஏற்படாது என்று நினைத்து, பல வகையான நரகங்களைக் கற்பனை செய்தன. இந்த நரகங்கள் சிலவற்றுள் மனிதர்கள் இரண்டாக வாள்களால் அறுக்கப்படுகிறார்கள்; தொடர்ந்து சித்திரவதை செய்யப்படுகிறார்கள்; என்றாலும், சாவதில்லை. இடையீடில்லாமல் அவர்கள் வதைக்கப்படுகிறார்கள்! ஆனால், இது ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் நடைபெறும் என்று அந்தப் புராணங்கள்

கருணையோடு புகல்கின்றன. அவர்கள் செய்த பாவங்களின் பலனை இப்படி நரகத்தில் அனுபவித்த பிறகு, அவர்கள் மீண்டும் பூமிக்கு வருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. இப்படிக் கிடைக்கும் மனித உடலையே 'கரும சரீரம்' என்கிறோம். நமது விதியை வகுத்துக்கொள்ள உதவும் உடலும் இதுவேயாகும். நாம் வட்டமாக ஓடிக்கொண்டேயிருக் கிறோம். அந்த வட்டத்தில் இந்த மனித உடல் என்னும் புள்ளியே நம் எதிர்காலத்தை உருவாக்கும் கருவி. எனவே, சீவன் ஏற்கும் உருவங்களுக்குள் மனித உருவமே மிகச் சிறந்ததாக எண்ணப் படுகிறது. இதனாலேதான் கரும சரீரம் பெற்ற மனிதன், போக சரீரம் பெற்ற தேவர்களினும் உயர்ந்தவனாகிறான்.

இதுவரையிலும் கலப்பற்ற, சிக்கலில்லாத, துவைத தத்து வத்தைப் பார்த்தாயிற்று. வேதாந்த தத்துவம் மேற்சொன்னபடி இருக்க இயலாது என்று கூறுகிறது. கடவுளே இந்த உலகுக்கு மூலப் பொருளாகவும் மூல ஆற்றலாகவும் இருக்கிறார். பரிபூரண ரான—முடிவில்லாத—கடவுள் ஒருவரும், இதே தன்மையுள்ள ஆன்மா ஒன்றும், இதே தன்மையுள்ள பிரகிருதி ஒன்றும் இருப்ப தாகச் சொன்னால், இப்படியே எல்லையில்லாமல் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இது ஒப்பத் தகாத வாதம்; தருக்கத்தையெல்லாம் நொறுக்குகிறாய். எனவே கடவுளே பிர பஞ்சத்துக்கு மூலப் பொருளாகவும் மூலத் திறனாகவும் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. தமக்குள்ளிருந்தே இந்தப் பிரபஞ்சத்தைக் கடவுள் தோற்றுவிக்கிறார். அப்படியானால், கடவுளே எப்படிச் சுவர்களும், மேசைகளும், பன்றிகளும், கொலைகாரர்களும், இன்னும் உலகிலுள்ள கொடிய பொருள்களும் ஆனார்? கடவுள் தூயவர் என்று நாம் சொல்கிறோமே! இப்படித் தூய்மையற்ற பொருள்களாகவெல்லாம் அவர் எப்படி ஆக முடி யும்? விடை இதுதான்: நான் ஓர் ஆன்மா; எனக்கு உடல் இருக்கிறது. ஒரு வகையில் இந்த உடல் என்னில் வேறுபட்ட தன்று. என்றாலும், நான்—உண்மை நான்—இந்த உடம்பன்று. இப்படித்தான் அதுவும். உதாரணமாக, நான் என்னைப் பற்றிப் பேசும்போது, 'நான் ஒரு குழந்தை; ஓர் இளைஞன்; அல்லது கிழவன்,' என்று சொல்லுகிறேன். ஆனால், என் ஆன்மா ஒரு மாறுதலையும் அடையவில்லை. அது ஒரே வண்ணமாகவே இருக் கிறது. இது போலவே, பிரகிருதியாலும், கணக்கில்லாத ஆன் மாக்களாலும் ஆன இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இறைவனது எல்லையில்லாத உடலாகவே இருக்கிறது. இறைவர் எல்லாவற்

றுக்குள்ளும்—அந்தர்யாமியாய்—இருக்கிறர். அவர் ஒருவரே மாறுதவர்; ஆனல், பிரகிருதியும் ஆன்மாக்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. இந்த மாறுதல்களால் இறைவர் பாதிக்கப்படுவதில்லே. பிரகிருதி எந்த வகையில் மாறுகிறது? உருவங்களிலேதான். அது புதுப்புது உருவங்களே எடுத்துக் கொள்கிறது. ஆனல், ஆன்மா இந்த வகையில் மாற இயலாது. ஆன்மா அறிவால் விரிகிறது, அல்லது சுருங்குகிறது. பாவச் செயல்களால் அது சுருங்குகிறது. ஆன்மாவின் இயற்கை பற்றிய அறிவையும் அதன் பரிசுத்தத் தன்மையையும் குறைக் கும் செயல்கள் எவையோ, அவை பாவச் செயல்கள். ஆன்மா வின் இயற்கைப் பெருமையை விளக்கக் காரணமாய் உள்ள செயல்கள் புண்ணியச் செயல்கள். இந்த ஆன்மாக்களெல்லாம் தூயனவாய் இருந்தவைகளே. ஆனல், இவைகள் தீச்செயல் களால் சுருங்கிவிட்டன. இறைவரின் கருணையாலும் புண்ணி யச் செயல்களாலும் இவை விரிவடைந்து தங்கள் பழைய பரிசுத்த நிலையை அடைந்துவிடும். ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்பே கிடைக்கிறது. காலப்போக்கில் ஒவ்வொருவரும் இந்தப் பிரபஞ்ச வட்டத்திலிருந்து விடுதலே பெற்றே தீர வேண் டும். என்றலும், இந்தப் பிரபஞ்சம் முடிவு பெற்றுவிடாது; இது முடிவில்லாதது. இது இரண்டாவது கொள்கை. முதற் கொள்கைக்குத் 'துவைதம்' என்பது பெயர். இந்த இரண்டா வது கொள்கைப்படி இறைவர், ஆன்மா, பிரகிருதி என்னும் மூன்று பொருள்கள் இருக்கின்றன. இவற்றுள் ஆன்மாவும் பிரகிருதியும் சேர்ந்து இறைவருக்கு உடலாய் இருக்கின்றன. எனவே, இந்த மூன்றும் ஒரு தொகுதியாம். இது சமய முன் னேற்றத்தில் அடுத்த படியாகும். இதற்கு விசிட்டாத்துவைதம் அதாவது ஒரு வகை எல்லேக்கு உட்பட்ட அத்துவைதம் என்பது பெயர். துவைதக் கொள்கைப்படி பிரபஞ்சம் கடவுளால் இயக் கப்படும் ஓர் இயந்திரம். விசிட்டாத்துவைதக் கொள்கைப்படி பிரபஞ்சம் இறைவரைத் தனது உட்பொருளாகக்கொண்ட ஓர் உயிர்ப்பொருள்.

கடைசியில் அத்துவைதிகள், இறைவர் இந்தப் பிரபஞ்சத் தின் மூலப் பொருளாகவும் மூல ஆற்றலாகவும் இருக்கத்தானே வேண்டும் என்ற பிரச்சினையை எழுப்புகிறர்கள். இதனல், இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே இறைவர் என்பது ஏற்பட்டுவிடு கிறது. இதற்கு எதிர்ப்பேச்சு இல்லே. 'இறைவரே ஆன்மா; பிரபஞ்சந்தான் உடல்; உடல் மாறிக்கொண்டே இருக்கிறது;

ஆனுல், இறைவர் மாற்றம் இல்லாதவர்,' என்று மற்றவர்கள் சொல்லும்போது அத்துவைதிகள், 'இது பொருளற்ற பிதற்றல்,' என்கிருர்கள். அப்படியானுல், இந்த உலகத்தின் மூலப்பொருள் இறைவரே என்று சொல்வதனுல் பயன் என்ன? மூலப் பொருள் என்பது மூல ஆற்றலாகிய காரணத்தின் தொழில் உருவேயாகும். காரியம் என்பது காரணத்தின் மறு உருவே ஆகும். நாம் ஒரு காரியத்தைப் பார்க்கும்போதெல்லாம் அது காரணத்தின் இன்ஞெரு'வடிவம் என்பதை உணர்கிறேம். இறைவரே பிரபஞ்ச காரணம்; இந்தக் காரணத்தின் காரிய உருவே பிரபஞ்சம் என்ருல், பிரபஞ்சமே இறைவரின் ஒரு தோற்றமாக வேண்டும். 'இந்தப் பிரபஞ்சந்தான் இறைவரது உடல். இந்த உடல் சுருங்கிச் சுருங்கி, பருத் தன்மையிலிருந்து நுட்பத் தன்மை பெற்றுப் பிரபஞ்சத்துக்கு மூல காரணம் ஆகிறது,' என்று பிறர் சொன்ஞல், அத்துவைதிகள், 'இறைவரே இந்தப் பிரபஞ்சமாகிருர்,' என்று சொல்கிருர்கள். இப்போது ஒரு நுட்பமான கேள்வி பிறக்கிறது. இறைவரே பிரபஞ்சம் என்ருல், நாமும் நாம் காணும் எல்லாப் பொருள்களுமே இறைவர் அல்லவா? உண்மை தான். இந்தப் புத்தகமும் இறைவரே; எல்லாம் இறைவரே; என் உடல் இறைவரே; என் மனம் இறைவரே; என் ஆன்மா இறைவரே. அப்படியானுல், பல சீவர்கள் இருப்பானேன்? இறைவரே பல இலட்சம் சீவர்களாய்ப் பிரிந்துவிட்டாரா? அந்த ஒரே கடவுள் இப்படிப் பல இலட்சம் சீவர்களாய் மாறிவிட்டாரா? பிறகு எப்படி இத்தனை சீவர்கள் ஏற்பட்டார்கள்? பரிபூரணமான ஆற்றலும் பொருளும் ஆன அந்த இறைவர்—பிரபஞ்சத்தின் ஒரே பொருளான அவர்—இப்படிப் பலவாகப் பிரிந்தது எப்படி? பரிபூரணத்தைப் பிரிக்கவே இயலாது. பரிசுத்தமான இறைவர் பல குறைகள் உள்ள—கலப்படமான—இந்தப் பிரபஞ்சமாவது எப்படி? அவரே பிரபஞ்சமானுர் என்ருல், அவர் மாறும் இயல்புடையவர் என்பது தெரிகிறது. மாறும் இயல்பு அவருக்கு உண்டு என்ருல், அவர் பிருகிருதியின் ஒரு பகுதியே ஆவர்; பிருகிருதியாகவும் மாறும் இயல்புடையதாகவும் உள்ள பொருளுக்குப் பிறப்பு இறப்பு இரண்டும் உண்டு. நம் இறைவரும் மாறும் இயல்புடையவர் என்ருல், அவர் ஒரு நாள் அழிந்தே தீர வேண்டும். இதை நன்ருகக் கவனியுங்கள். சரி; 'கடவுளின் எவ்வளவு பாகம் இந்தப் பிரபஞ்சமாய்விட்டது?' அது 'ப' என்னும் (மதிப்புத் தெரியாத அளவு) பகுதி என்று வைத்துக் கொண்டால், இப்போது கடவுள் ப என்ற அளவு குறைந்துவிட்

டார் ; இப்போது 'ப' குறைந்த கடவுளே. எனவே, படைப்புக்கு முன்னுல் இருந்த அளவு அல்லது மதிப்பு, படைப்புக்குப் பின் அவருக்கு இருக்க இயலாது ; அவரது ஓர் அளவுதான் பிரபஞ்சம் ஆகிவிட்டதே !

எனவே, அத்துவைதிகள், 'பிரபஞ்சம் என்பதே இல்லை ; இருப்பதாகக் காணப்படுவது வெறும் பொய்த்தோற்றமே,' என்று சொல்லுகிறுர்கள். 'இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே: தேவர்கள், தேவதூதர்கள், இந்த உலகத்தில் பிறந்து சாகும் மற்றப் பொருள்கள், மேலும் கீழுமாகப் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருக்கும் ஆன்மாக்கள், எல்லாமே கனவு,' என்கிறுர்கள் இவர்கள். சீவன் என்பதே இல்லை. எப்படிப் பல சீவர்கள் இருக்க இயலும் ? பரிபூரணமான அந்த ஒன்றேதான் உள்ளது. பல நீர் நிலைகளில் பிரதிபிம்பங்களாய்த் தெரியும் ஒரே கதிரவன், பல சூரியர்களாய்த் தெரிகிறது. பலகோடி நீர்த்துளிகளும் ஒரே வெய்யோனைப் பலகோடி சூரிய பிம்பங்களாகத் தோற்றுவிக்கின்றன ; ஒவ்வொரு துளியிலும் தெரியும் பிம்பமும் கதிரவனின் குறைவற்ற பிம்பமே ஆகும். இப்படிப் பல கோடி சூரியரின் பிம்பங்கள் தோன்றிளுலும், உண்மையில் உள்ளது ஒரு சூரியனே. இப்படியே சீவர்கள் எல்லாம் பல மனங்களில் பிரதிபிம்பிக்கும் ஒரே இறைவரே. பல வகை மனங்களும் பல நீர்த்துளிகளைப் போல இந்த ஒரே பூரணப் பொருளைப் பிரதிபிம்பிக்கின்றன. இந்தப் பலவகைச் சீவர்களுக்குள்ளும் இறைவரே பிரதிபிம்பிக்கிறுர். கனவு என்றுலும், கனவுக்கும் மூலமான ஒக் உண்மைப் பொருள் இருந்தே ஆகவேண்டும். அந்த உண்மைப் பொருளே, என்றும் உள்ள பரிபூரணப் பொருளாகிய இறைவர். உடல், மனம், ஆன்மா என்னும் உட்பகுதிகளெல்லாம் கனவுகள். ஆனுல், உனது உண்மை வடிவம் சத்து, சித்து, ஆனந்தமேயாகும். நீயே இந்தப் பிரபஞ்சத்தின் இறைவன். நீயே இந்தப் பிாபஞ்சத்தையெல்வாம் படைத்து—உன்னிடமிருந்து விரித்து—இதை மறுபடியும் உனக்குள்ளேயே அடக்கிக் கொள்கிருய். அத்துவைதி இப்படித்தான் சொல்கிருன். எனவே, பிறவிகள், மறு பிறவிகள், வருவது, போவது ஆகிய எல்லாமே மாயையின் கற்பனைகளேயாகும். நீ பரிபூரணன். எனவே, நீ எங்கே போக முடியும் ? ஞாயிறு, மதி, இந்தப் பிரபஞ்சம் எல்லாமே பரிபூரணமான, எல்லாவற்றையும் அடக்கிய, உன்னுடைய இயற்கையின் வெறுந்துளிகளேயாகும். நீ பிறப்பதோ சாவதோ எப்படி இயலும் ? நான் என்றும் 'பிறக்கவே இல்லை' பிறக்கவே

மாட்டேன் ; எனக்குத் தாயோ, தந்தையோ, பகைவர்களோ, நண்பர்களோ இல்லை. ஏனென்றால், நான் பரிபூரணமான சத்து-சித்து-ஆனந்தம். நானே அவன். இப்படியானால் இந்தச் சமய தத்துவப்படி ஏற்படும் முடிவு என்ன? அடைய வேண்டுவது யாது? இந்த ஞானம் ஏற்பட்டவன் பிரபஞ்சத்தோடு ஒன்றாய்விடுகிறான். அவனுக்கு எல்லாச் சுவர்க்கங்களும்—பிரம்ம லோகங்கூட—இல்லாமல் போய்விடுகின்றன. கனவு முழுவதுமே மறைந்துவிடுகிறது. அவன் தானே பிரபஞ்சத்தின் இறைவன் என்பதை உணர்கிறான். அவன் தன் இயற்கையாகிய சத்து—சித்து—ஆனந்த நிலையை உணர்ந்து, விடுதலை—கனவிலிருந்து விடுதலை—அதாவது மோட்சம் பெற்று விடுகிறான். சிற்றின்ப அனுபவத்திற்கு இப்போது இடம் இல்லை. இந்தச் சிறு உடலிலும் இந்தச் சிறு தனி உயிரிலும் நான் இன்பானுபவம் பெற்று வருகிறேன். இந்தப் பிரபஞ்சமே உடலானால், எவ்வளவு இன்பானுபவம் கிடைக்கும்! ஓர் உடலாக இருக்கும்போது இன்பம் உண்டானால், எல்லா உடல்களும் என்னுடையனவாகவே இருக்கும்போது எவ்வளவு இன்பம் கிடைக்கும்! இந்த நிலையிலேதான் விடுதலை, அதாவது மோட்சம் கிடைக்கிறது. இவை யெல்லாந்தான் அத்துவைதம் அல்லது இரண்டற்ற வேதாந்த தத்துவம் என்று சொல்லப்படுகிறது.

வேதாந்த தத்துவம் மூன்று படிகள் ஏறியிருக்கிறது. இதற்கு மேல் நாம் போக இயலாது. ஏனென்றால், எல்லாம் ஒன்றே என்ற முடிவுக்குமேற் போவது எப்படி ? எந்தச் சாத்திரமானாலும், அது ஒன்று என்ற முடிவைப் பெற்றுவிட்டால், அதற்குமேற் போகவே இயலாது. பரிபூரணம் என்ற இந்தக் கருத்துக்குமேற் போவது இயலவே இயலாது.

எல்லா மக்களும் இந்த அத்துவைத தத்துவத்தை ஏற்றுப் பின்பற்ற இயலாது ; இது கடினமானது. தொடக்கத்தில் இதை அறிவால் புரிந்துகொள்வதே அரிது. கூர்மையான அறிவும் தைரியமான தெளிவும் இதற்கு அவசியம். இரண்டாவதாக, மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு ஏற்றதாகவும் இது இல்லை. இதனாலேயே துவைதம், விசிட்டாத்துவைதம், அத்துவைதம் என இந்த மூன்று படிகள் இருக்கின்றன. முதற்படியில் சாதனையைத் தொடங்குங்கள். இதில் கருத்தைச் செலுத்தி இதைப் புரிந்துகொண்ட பிறகு இரண்டாம் படிக்குத் தானே வழி திறக்கும். ஓர் இனம் படிப்படியாக முன்னேறுவது போலவே மக்களும் படிப்படியாக ஆன்மிக முன்னேற்றம் அடைய வேண்

டும். சமயக் கருத்தின் உச்ச நிலையை அடைய மனித சமூகம் எந்தப் படிகளைக் கடந்திருக்கிறதோ, அந்தப் படிகளையெல்லாம் தனி மனிதனும் கடந்தால்தான் ஆன்ம இலட்சியத்தை அடைய இயலும். மக்கட்சமூகம் ஒரு படியிலிருந்து இன்னொரு படிக்கு முன்னேறப் பல கோடி ஆண்டுகள் சென்றன. ஆனால், தனி மனிதன் இந்த முன்னேற்றத்தை மிகக் குறைவான கால அளவிலேயே பெற்றுவிடுவான். ஆனால், எல்லோருமே எல்லாப் படிகளையும் முறையாகக் கடந்துதான் ஆக வேண்டும். உங்களுக்குள் இப்போது அத்துவைதிகளாய் இருப்பவர்கள் முன்பு தீவிரத் துவைதிகளாய் இருந்த காலத்தை நினைத்துப் பாருங்கள். உடலும் மனமுமே நீங்கள் என்ற கருத்து இருக்கும் வரையில் இந்தப் பிரபஞ்சக் கனவு இருந்துகொண்டேதான் இருக்கும். நீங்கள் ஒரு பகுதியை ஏற்றால், முழுவதையுமே ஏற்றுத்தான் ஆகவேண்டும். 'உலகம் உண்டு; ஆனால், இஷ்ட தெய்வம் (நாமரூப தெய்வம்) இல்லை,' என்று சொல்கிறவன் அறிவிலி. உலகம் உண்டு என்பது உண்மையானால், இந்த உலகத்துக்கு மூலகாரணமான ஒருவர்—இறைவர்—இருக்கத்தான் வேண்டும். காரியத்தை மட்டும் ஒப்புக்கொண்டு காரணத்தை ஒப்புக்கொள்ளாமல் இருக்க இயலாது. இந்தப் பிரபஞ்சம் கருத்திலிருந்து மறையும் போதுதான் நாம ரூபக் கடவுளும் கருத்திலிருந்து மறைவார். அந்த நிலையில் நீங்களே (ஒவ்வொருவரும்) பரிபூரணப் பரப்பிரம்மம் ஆகிவிடுவீர்கள்; அப்போது உங்களைப் பொறுத்த மட்டும் பிரபஞ்சம் மறைந்துவிடும். நீங்கள் ஓர் உடல் என்ற கனவு இருக்கும் வரையிலும் உங்களுக்குப் பிறப்பு இறப்பு இருப்பதாகவே நீங்கள் உணர்வீர்கள். எந்த நேரத்தில் அந்தக் கனவு மறைகிறதோ, அந்த நேரத்திலேயே உங்களுக்குப் பிறப்பும் இறப்பும் உண்டு என்ற உணர்வும் மறைந்துவிடும்; இதோடு, பிரபஞ்சம் உண்டு என்ற கனவும் மறைந்துவிடும். இப்போது நாம் எதைப் பிரபஞ்சமாகக் காண்கிறோமோ, அதை அப்போது பரிபூரணமான இறைவராகக் காண்போம்; இதுவரையில் நமக்கு வெளியில் இருந்த இறைவரை இப்போது நமக்கு உள்ளே இருப்பவராக நாமே காண்போம்.

மெய்ஞ்ஞானப் படிகள்

[அமெரிக்காவில் ஒரு வகுப்பில் செய்த சொற்பொழிவு.]

ஞான அனுபவம் பெற விரும்பும் ஒருவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளுள் முதலில் அவசியமானவை சமம், தமம் என்னும் இரண்டுமே ஆகும். இவைகளை ஒன்றாகவே கொள்ளலாம். புலன்களைத் தங்கள் எல்லை மீறாமல் வைத்துக்கொள்வதே இவற்றின் நோக்கமாகும். 'புலன்கள்' என்பன யாவை என்பதை முதலில் விளக்கிக் கூறுகிறேன். இதோ கண்கள் இருக்கின்றன. ஆனால், கண்கள் காட்சிப் புலன்கள் அல்ல; ஆனால், காட்சிக் கருவிகளே ஆகும். நமக்குக் கண்கள் இருந்தாற்கூடக் காட்சிப் புலன் இல்லாவிட்டால், நாம் பார்க்க முடியாது. கருவியாகிய பொறி, புலன் இரண்டும் இருந்தாலும், மனம் சம்பந்தப் படாவிட்டால் காட்சி ஏற்படாது. எனவே, புலன் அறிவு ஏற்படுவதற்கு முன்னால் மூன்று விஷயங்கள் இன்றியமையாதவை; ஒன்று, வெளிப்பொறியாகிய கருவி; மற்றொன்று, உட்கருவியாகிய புலன்; மூன்றாவது மனம். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் புலன் அறிவு ஏற்படாது. இப்படி மனம் இரண்டு கருவிகளின் மூலம் தொழிற்படுகிறது: ஒன்று, உட்கருவி; மற்றொன்று, வெளிக்கருவி. நான் பொருள்களைப் பார்க்கும் போது என் மனம் வெளியே சென்று புறத்துள்ளதாகிறது. நான் கண்களை மூடிக்கொண்டு சிந்திப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இப்போது அது வெளியே செல்லவில்லை; உள்ளுக்குள்ளேயே தொழிற்படுகிறது. ஆனால், இரண்டு சமயங்களிலும் கருவிகள் தொழிற்படுகின்றன. நான் உங்களைப் பார்த்துக் கொண்டே உங்களோடு பேசும் போது பொறி, புலன் இரண்டும் தொழிற்படுகின்றன. நான் கண்களை மூடிக்கொண்டு சிந்திக்கும் போதோ, புலன்கள் மட்டும் தொழிற்படுகின்றன; பொறிகள் தொழிற்படுவதில்லை. இந்த அகக் கரணங்கள் தொழிற்படாவிட்டால் நினைவே இராது. ஏதாவது ஒரு சின்னம் இல்லாமல் நீங்கள் நினைக்க இயலாது. குருடன்கூட ஏதாவது ஓர் உருவத்தை ஆதாரமாகக் கொண்டுதான் சிந்திக்க வேண்டும். பொதுவாகக் காட்சிப் புலன்களும் கேள்விப் புலன்களுமே மிகச் சுறுசுறுப்பாய் இருக்கின்றன. புலன் என்னும் சொல் அந்தப் பொறி சம்பந்த

மாக மூளையில் தொழிற்படும் நரம்பு மையத்தையே குறிக்கிறது. கண்களும் காதுகளும் காட்சிக்கும் கேள்விக்கும் வெளிக் கருவிகளே; புலன்கள் உள்ளே இருக்கின்றன. உட்கருவிகள் எந்தக் காரணத்தினாலாவது கேடடைந்துவிட்டால், கண்களும் காதுகளும் இருந்தாலும் நம்மால் பார்க்கவோ கேட்கவோ முடியாது. எனவே, மனத்தை அடக்க வேண்டுமானால், முதலில் புலன்களை அடக்கப் பழக வேண்டும். உள்ளேயோ வெளியேயோ மனம் அலையாமல் இருக்கும்படி அடக்குவதும், புலன்கள் சலிக்காமல் இருக்கச் செய்வதுந்தான் சமம், தமம் என்று சொல்லப் படுகின்றன. மனம் வெளியே அலையாமல் அடக்குவதைச் சமம் என்றும், வெளிப்பொறிகளை அடக்குவதைத் தமம் என்றும் சொல்கிறார்கள்.

புலனுக்கு விஷயமானவைகளைப் பற்றி நினைக்காமல் இருப்பதான உபரதி, இவற்றுக்கு அடுத்த சாதனையாகும். நாம் பார்த்தவை, கேட்டவை, நாம் பார்க்க இருப்பவை, கேட்க இருப்பவை, நாம் தின்றவை, தின்ன இருப்பவை, நாம் உறைந்த இடங்கள் என்று இப்படியே நம் புலன்களுக்கு விஷயமானவற்றை நினைப்பதிலேயே நம் பொழுதிற் பெரும்பகுதி கழிந்துவிடுகிறது. இவற்றைப் பற்றி நினைத்தோ பேசியோ நாம் நம் நேரத்தில் பெரும் பகுதியைக் கழித்துவிடுகிறோம். வேதாந்தியாக விரும்புகிறவன், இந்தப் பழக்கத்தை ஒழித்துவிட வேண்டும்.

அடுத்த சாதனை பின்னால் வருகிறது (வேதாந்தியாவது மிகவும் அரிதான காரியம்!): இதுதான் 'திதீட்சை' என்பது. இது எல்லாச் சாதனைகளையும்விட மிகக் கடினமானது. இதுதான் பொறுமை என்னும் இலட்சியம். 'உனக்கு வரும் கேடுகளை எதிர்க்காதே,' என்பதே இது. இதற்குச் சிறிது விளக்கம் தேவை. நாம் நமக்கு வரும் இன்னல்களை எதிர்த்துப் போராடாமல் இருக்கலாம்; ஆனால், அதே சமயத்தில் நாம் அவற்றால் பெருந்துயரத்துக்கு ஆளாகலாம். ஒருவன் என்னைக் கண்டபடி கடுமையாக ஏசுவதாக வைத்துக்கொள்வோம். நான் வெளிப்படையாக அவனை வெறுக்காமல் இருக்கலாம்; அவனைத் திருப்பி ஏசாமல் இருக்கலாம்; வெளிப்படையாகச் சீற்றம் காட்டாமல் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ளலாம். ஆனால், கோபமும் வெறுப்பும் என் உள்ளத்துக்குள் இருக்கலாம். அவனைப் பற்றி என் மனம் இழிவாக நினைக்கலாம். தீங்கை எதிர்க்காத பண்பு இது அன்று. கோபம் வெறுப்பு என்னும் உணர்ச்சியே மனத்தில் இருத்தல் கூடாது; தீங்கு செய்தாரை எதிர்க்க வேண்டும்

என்னும் எண்ணமே எழக்கூடாது. ஒன்றுமே நடவாவிட்டால் நெஞ்சில் எவ்வளவு அமைதி இருக்குமோ, அவ்வளவு அமைதி அப்போதும் இருக்க வேண்டும். இந்த நிலைக்கு என் மனம் வந்த பிறகுதான் எதிர்க்காத நிலையை (திதீட்சையை) அடைந்தவன் ஆவேன்; இதற்கு முன் ஆகேன். எந்தத் துன்பத்தையும் தீங்கையும் எதிர்க்க வேண்டும் அல்லது ஒழித்துவிட வேண்டும் என்னும் எண்ணமே சிறிதும் இல்லாமல், அதனால் மனத்தில் துக்கமோ, கழிவிரக்கமோ இல்லாமல் துன்பங்களைப் பொறுக்கும் மனநிலைதான் திதீட்சையாகும். நான் ஒரு தீங்கை எதிர்க்க வில்லை என்று வைத்துக்கொள்வோம். அதனால், எனக்குப் பெருங்கேடு விளைகிறது. அப்பொழுதும் 'நான் முன்பே இதை எதிர்க்க வில்லையே!' என்ற பச்சாத்தாபம் நெஞ்சில் தோன்றாமல் இருப்பது தான் திதீட்சை. மனம் இந்த நிலையினைப் பெற்றுவிட்டால், பிறகு அது திதீட்சையில் உறுதிபெற்றதாய் விடுகிறது. இந்தத் திதீட்சையைப் பழகுவதற்காக இந்தியாவிலுள்ள மக்கள் அசாதாரணச் செயல்களையெல்லாம் செய்கிறார்கள்; சற்றும் பொருட்படுத்தாமல் மிகப் பெருவெப்பத்தையும் குளிரையும் பொறுக்கப் பழகுகிறார்கள். தங்கள் உடலின்மேல் பனி பெய்தாலும் பாரார்; காரணம், அவர்கட்கு உடம்பு உள்ளது என்ற நினைவே இருப்பதில்லை. உடல் தமக்கு அன்னியமானது போல, அவர்கள் அதனை அதனிடம் விட்டு விடுகின்றனர்.

பெற வேண்டுவதான அடுத்த தகுதி சிரத்தை, அதாவது நம்பிக்கை. தன் சமயத்திலும் இறைவனிடமும் மிகப்பெரும் நம்பிக்கை ஒருவனுக்கு இருக்க வேண்டும். இத்தகைய நம்பிக்கை இல்லாத எவனும் ஞானியாக இயலாது. இரண்டு கோடி மக்களுள் ஒருவர்கூடக் கடவுளிடம் நம்பிக்கை வைப்பதில்லை என்று ஒரு முறை ஒரு பெரிய இருடி என்னிடம் சொன்னார். "ஏன் அப்படி?" என்று நான் அவரைக் கேட்டேன். "இந்த அறையில் ஒரு திருடன் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த அறையில் நிறையத் தங்கம் இருப்பது அவனுக்குத் தெரிந்துவிடுகிறது. அந்த இரண்டு அறைகளையும் பிரிக்கும் சுவர் குறைந்த கனமுடையது என்பதும் அவனுக்குத் தெரிகிறது. அவன் மனநிலை எப்படி இருக்கும்?" என்று அவர் என்னைக் கேட்டார். "அவனால் தூங்கவே இயலாது. அந்தத் தங்கத்தை அடைவது எப்படி என்றே அவன் மனம் இடையறாது வழி தேடிக் கொண்டிருக்கும். அவனால் வேறு ஒன்றையும் நினைக்கவே இயலாது," என்று நான் விடை அளித்தேன். "அப்படியானால்,

கடவுள் உண்டு என்னும் நம்பிக்கை ஒருவனுக்கு இருக்குமானல், அந்தக் கடவுளை அடைய வேண்டும் என்னும் முயற்சியில் அவன் பைத்தியமாகிவிட மாட்டானு? எல்லையில்லாத, அழிவில்லாத பேரின்பம் தன் கைக்கு எட்டும் நிலையில் இருக்கிறது என்பதை அறிந்த ஒருவன் அதை அடைய வேண்டும் என்னும் முயற்சியில் பித்தனுகிவிட மாட்டானு?'' என்று அவர் என்னைக் கேட்டார். கடவுள் உண்டு என்னும் உறுதியான நம்பிக்கையும் அவரை அடைய வேண்டும் என்னும் பேராவலுந்தான் சிரத்தை.

இதற்கு அடுத்தபடியாக, சமாதானம், அதாவது, மனத்தை இறைவரிடமே நிலை நிறுத்துவதற்கான இடைவிடாத பயிற்சி ஏற்படுகிறது. எதையும் ஒரே நாளில் சாதித்துவிட இயலாது. சமயத்தை ஒரு மாத்திரையாக்கி விழுங்கிவிட இயலாது. கடுமையாகவும் இடைவிடாமலும் முயலுவதனுலேதான் சித்தி பெற இயலும். விரையாமலும் இடைவிடாமலும் செய்யும் பயிற்சியினுலே தான் மனத்தை வெல்ல இயலும்.

அடுத்தபடி அமைவது, முமுட்சுத் தத்துவம், அதாவது விடுதலை பெற வேண்டும் என்னும் தீவிரமான ஆர்வம். எட்வின் ஆர்னல்டு என்பவர் எழுதிய 'ஆசிய ஜோதி' (Light of Asia) என்ற நூலைப் படித்தவர்களுக்கு அவர் மொழி பெயர்ப்பில் வரும் புத்தரின் முதல் உபதேசம் நினைவிருக்கலாம் :

"உங்கள் துன்பத்துக்கு நீங்களே காரணம் ;
யாரும் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை.
நீங்கள் பிறப்பதற்கும் சாவதற்கும்,
சமுசார சக்கரத்தில் சுழல்வதற்கும்,
துக்கமும் துன்பமும் ஆன
அதன் ஆரக்கால்களையும்
அதன் கண்ணீர் என்னும் பட்டையையும் (Tyre)
அதன் சூனியம் ஆகிய குடத்தையும் கட்டியணைத்து
முத்தமிடுதற்கும்
வேறெவரும் உங்களைப் பற்றிப் பிடித்திருக்கவில்லை.''

என்பதுதான் அந்த உபதேசம்.

நாம் நுகரும் துன்பமெல்லாம் நாமே ஆக்கிக்கொண்டவைகளே. இதுதான் நம் இயற்கை. அறுபது ஆண்டு வரையிற் சிறையில் அடைபட்டிருந்த சீனன் ஒருவனை ஒரு புதுச் சக்கரவர்த்தியின் முடிசூட்டு விழாவின் போது விடுதலை செய்தார்களாம். வெளியே வந்தவுடனே அவன், "ஐயோ! என்னல் இந்த ஒளியைத் தாங்கவே இயலாது! இருளும், எலிகளும்,

சுண்டெலிகளும் நிறைந்த பயங்கரமான சிறைக்கு வெளியே என்னால் வாழவே இயலாது! ஒன்று, என்னைக் கொன்றுவிடுங்கள் அல்லது மீண்டும் சிறைக்கு அனுப்பிவிடுங்கள்!'' என்று கதறினானும். அவர்கள் அவனைச் சிறைக்கே அனுப்பிவிட்டார்களாம். இதேதான் எல்லாரது நிலையும். எல்லாவிதத் துன்பங்களையும் பற்றத் தலை தெறிக்க ஓடியே நமக்குப் பழக்கமாய்விடுகிறது. எனவே, அவைகளிலிருந்து விடுதலை பெறுவதே நமக்குத் துன்பமாய் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாம் இன்பத்தை நாடி அலைகிறோம்; ஆனால், அது நமக்குக் கிட்டுவதற்கு முன் மறைந்துவிடுகிறது: நம் கை விரல் இடுக்குகள் வழியாக அது நழுவிவிடுகிறது. என்றாலும், நாம் இந்தப் பைத்தியக்கார ஓட்டத்தை விடுவதில்லை; குருட்டு முட்டாள்களான நாம் அதே வழியில் போய்க்கொண்டேயிருக்கிறோம்.

இந்தியாவில் எண்ணெய் ஆட்டும் செக்குகளில் மாடுகள் சுற்றிச்சுற்றி வந்துகொண்டே இருக்கும். மாடுகளின் கழுத்தில் நுகத்தடி இருக்கிறது. இந்த நுகத்தடியிலிருந்து ஒரு சிறு குச்சி நீட்டிக்கொண்டிருக்கும். அந்தக் குச்சியின் நுனியில் ஒரு பிடி வைக்கோலைக் கட்டியிருப்பார்கள். முன்னால் மட்டுமே பார்வை தெரியும்படி மாடுகளின் கண்களைக் கட்டியிருப்பார்கள். மாடு தன் முன் தெரியும் வைக்கோலைப் பிடிக்கக் கழுத்தை நீட்டி நகர்கிறது. அந்த வைக்கோலும் முன்னே நகர்கிறது. ஆனால், மாடும் தனக்கு எட்டாத அந்த வைக்கோலைப் பிடிக்கும் முயற்சியை விடாமல், நகர்ந்து நகர்ந்து சுற்றிச்சுற்றி வருகிறது. வைக்கோலோ, அதற்குக் கிடைப்பதில்லை. ஆனால், இந்த வீண் முயற்சியால் அது எள்ளை எண்ணெயாக ஆட்டிவிடுகிறது. இயற்கை, செல்வம், சொத்து, மனைவி, மக்கள் ஆகியவற்றின் மேல் பற்றுடைய அடிமைகளாய்ப் பிறந்துள்ள நாம், ஒரு பிடி வைக்கோலை—வெறுங்கானல் நீரை—பின்பற்றி ஓடிக்கொண்டேயிருக்கிறோம். இப்படி ஓடுவதில் நாம் எதைத் தேடுகிறோமோ, அது கிடைக்கப் பெறாமல் பிறப்பு இறப்பு என்னும் முடிவில்லாத வட்டத்தில் சுழன்று கொண்டேயிருக்கிறோம். நாம் காணும் பெரிய கனவு அன்பு; நாம் அன்பு செலுத்தப் போகிறோம்; அன்பைப் பெறப்போகிறோம். நாம் உவகையோடு இருக்கப் போகிறோம்; துன்பமே அடையப்போவதில்லை. ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு நாம் இன்பத்தை நோக்கிப் போகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த இன்பம் நமக்குக் கிட்டாமல் விலகி விலகிப்போகிறது. இப்படியேதான் உலகம் நடைபெறுகிறது;

சமூகம் நடைபெறுகிறது. குருட்டு அடிமைகளான நாம், நம்மை அறியாமலே இந்தப் பயனற்ற சுழற்சிக்கெல்லாம் காரணமாகிறோம். உங்கள் சொந்த வாழ்க்கையை ஒவ்வொருவரும் ஆராய்ந்து பாருங்கள். அப்பொழுது உங்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இன்பத்தின் அளவு எவ்வளவு குறைந்தது என்பதையும், இந்தப் பொருளற்ற கானல் நீர் வேட்டையில் ஒவ்வொருவரும் உண்மையில் பெற்ற இலாபம் எவ்வளவு சிறியது என்பதையும் நீங்கள் நன்கு உணர்வீர்கள்.

'ஸோலனும் கிரீஸஸும்' என்னும் கதை உங்களுக்குத் தெரியுமா? சிறிய ஆசியா இன்பம் நிறைந்த இடம் என்று அரசன் அந்தப் பெரிய முனிவரிடம் மொழிந்தான். "மிக்க மகிழ்ச்சியுடன் இருப்பவன் யார்? அப்படிப்பட்ட யாரையும் நான் பார்க்கவில்லையே!" என்று முனிவர் அரசனைக் கேட்டார். "என்ன உளறுகிறீர்கள்! நானே இந்த உலகத்திலே மகிழ்ச்சியுடன் இருப்பவன்," என்றான் கிரீஸஸ்.

"உங்கள் வாழ்க்கை முடியும் வரையில் பொறுங்கள்; அவசரப் படவேண்டா ஐயா," என்று இயம்பிவிட்டு, அந்த முனிவர் போய் விட்டார். நாளாவட்டத்தில் பாரசீகர்கள் அந்த அரசனைப் போரில் வென்று அவனை உயிரோடேயே எரித்துவிடும்படி உத்தர விட்டார்கள். அவனை எரிப்பதற்குச் சிதை அடுக்கப்பட்டது. பாவம்! கிரீஸஸ் அதைப் பார்த்தவுடன், "ஸோலன்! ஸோலன்!" என்று உரக்கக் கத்தினான். "யாரை நினைத்துக் கத்துகிறாய்?" என்று பாரசீக அரசன் அவனைக் கேட்டபோது, கிரீஸஸ், தனக்கும் ஸோலன் என்ற முனிவருக்கும் நடந்த பழைய உரையாடலைச் சொன்னான். அதைக் கேட்ட பாரசீக அரசன், அவன் மேல் இரக்கம் கொண்டு, அவன் உயிரைக் காப்பாற்றிவிட்டான்.

இதேதான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக் கதையும். இயற்கை நம் மேல் செலுத்தும் மாபெரும் ஆதிக்கம் இதுதான். இயற்கை நம்மை உதைத்துத் தள்ளிக்கொண்டேயிருக்கிறது. ஆயினும், காய்ச்சல் வெறியோடு அதையே பின் பற்றிப் பின் பற்றிப் போகிறோம். நாம் எவ்வளவு ஏமாற்றம் அடைந்தாலும், இன்பம் கிடைக்கும் என்றே நம்புகிறோம். இந்த நம்பிக்கை—இந்தக் கானல் நீர்—நம்மைப் பைத்தியம் பிடித்தவராக்குகிறது. நாம் எப்போதும் இவ்வுலகில் இன்பம் கிடைக்கும் என்றே நம்பி வாழ்கிறோம்.

பழங்கால இந்தியாவில் ஓர் அரசன் இருந்தான். அவனை நான்கு கேள்விகள் கேட்டார்கள்: "இந்த உலகத்தில் மிகவும்

அதிசயமான பொருள் எது?'' என்பது முதற்கேள்வி. "நம்பிக்கை,'' என்று விடை வந்தது. நம்பிக்கைதான் மிகவும் வியக்கத்தக்கது. இரவிலும் பகலிலும் நம்மைச் சுற்றிப் பலர் செத்துக் கொண்டேயிருப்பதை நாம் பார்க்கிறோம்; பார்த்தும், நாம் சாகமாட்டோம் என்று நினைக்கிறோம். நாமும் சாவோம் என்றோ, நமக்கும் துன்பம் அல்லது இடையூறு நேரும் என்றோ, நாம் நினைப்பதில்லை. ஏமாற்றங்களுக்கு எதிராக, தடைகளுக்கு எதிராக, நியாயங்களுக்கு எதிராகத் தனக்கு வெற்றி கிட்டும் என்றே ஒவ்வொருவனும் எண்ணுகிறான். யாருமே உண்மையான இன்பத்தை இவ்வுலகில் நுகர்வதில்லை. ஒரு மனிதனிடம் மிகுந்த சொத்து இருக்கிறது; சாப்பாட்டுக்குக் குறைவேயில்லை; ஆனால், அவனது சீரண சக்தி கெட்டிருக்கிறது; அவனால் ஒன்றையுமே உண்ண இயல்வதில்லை. மற்றொருவனுக்கு நல்ல சீரண சக்தி இருக்கிறது—பகாசுரனைப் போல! ஆனால், தின்பதற்கு அவனுக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. ஒருவன் பணக்காரனாய் இருக்கிறான்; ஆனால், அவனுக்கு மக்கட்பேறு உண்டாவதில்லை. மற்றொருவனுக்குச் சோற்றுக்கே வழியில்லை; அவன் ஏழை; அவனுக்கு ஒரு பட்டாளம் குழந்தைகள் இருக்கின்றன; அவைகளை எப்படிக் காப்பாற்றுவது என்பதே அவனுக்குத் தெரிவதில்லை. ஏன், இப்படியெல்லாம் இருக்கின்றன? இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் முன் பக்கமும் பின் பக்கமும் போன்றவை. எவன் ஒருவன் இன்ப நுகர்ச்சியை அடைகிறானோ, அவன் துன்ப நுகர்ச்சியையும் ஏற்றே ஆகவேண்டும். துன்பம் இல்லாமல் இன்பம் மட்டும் நமக்குக் கிடைக்கும் என்ற மூட எண்ணம் நமக்கெல்லாம் இருக்கிறது. இந்த எண்ணம் நம்மீது செலுத்தும் பெரும் ஆதிக்கம் காரணமாக நாம் புலன்களை அடக்கும் ஆற்றலையே இழந்து விட்டோம்.

நான் பாஸ்டனில் இருந்த போது ஓர் இளைஞர் என்னிடம் வந்து, யாரோ ஒருவர் பெயரும் விலாசமும் எழுதிய ஒரு துண்டுக் கடிதத்தை என்னிடம் கொடுத்தார். அந்தக் கடிதத் துண்டில் பின் வருமாறு எழுதியிருந்தது:

"உனக்கு மட்டும் அடையும் வழி தெரிந்தால், இந்த உலகத்திலுள்ள அவ்வளவு செல்வமும் அவ்வளவு இன்பமும் உன்னுடையவைதான். நீ என்னிடம் வந்தால், அவற்றை அடையும் வழியை நான் சொல்லித் தருவேன். கட்டணம் 5 டாலர்.''

அவர் இதை என்னிடம் கொடுத்துவிட்டு, "இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று என்னைக் கேட்டார். "இளைஞரே, இதை அச்சிட உமக்குப் பணம் கிடைக்கவில்லையா? அதற்கு வேண்டிய பணங்கூட உம்மிடம் இல்லையே!" என்று நான் சொன்னேன். இது அவருக்குப் புரியவில்லை. ஒரு துன்பமும் அடையாமலே தமக்குப் பெருஞ்செல்வமும் இன்பமும் கிடைத்துவிடும் என்ற மயக்கத்தில் அவர் இருந்தார். மனிதர்கள் இரண்டு எல்லை நிலைகளுக்குள் சிக்குகிறார்கள். எல்லாம் மலர்ச்சியாகவும், அழகாகவும், நல்லனவாகவுமே தோன்றும் இன்பக் கொள்கை நிலை ஒன்று; எல்லாம் தங்களுக்கு விரோதமாகவே தோன்றும் துன்பக் கொள்கை நிலை மற்றொன்று. மக்களுள் பெரும்பாலாருக்கு மூளை சரியான வளர்ச்சி பெற்றதாய் இருப்பதில்லை. பத்து லட்சத்தினருள் ஒருவரே சரியான மூளை வளர்ச்சி உடையவரா யிருக்கிறார். மற்றவர்களுக்குச் சில வகைக் கிறுக்குக் குணங்கள் (Idiosyncrasies) இருக்கின்றன; அல்லது ஒரே எண்ண வெறியர்களாய் (Monomaniacs) இருக்கிறார்கள்.

மக்கள் எதிலும் தீவிரவாதிகளாய் இருப்பதே இயற்கை. நாம் நல்ல உடல் நலத்தோடு இளைஞர்களாய் இருக்கும்போது, "உலகச் செல்வம் எல்லாம் நம்முடையதாகும்!" என்று நினைக்கிறோம். பின்னர்ச் சமூகத்தில் காற் பந்துபோல் இங்கும் அங்கும் உதைபட்டு, வயது முதிர்ந்தவர்களாகும்போது நாம் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு முணுமுணுக்கிறோம்; மற்றவர்களின் ஊக்கமாம் தீயில் நீரூற்ற முயல்கிறோம். இன்பமும் துன்பமும் எப்போதும் கலந்தேதான் இருக்கும் என்பது ஒரு சிலருக்கே தெரிகிறது. துன்பம் வெறுப்பைத் தருவது போலவே, இன்பமும் ஒரு நிலையில் வெறுப்பைத் தரும்; இரண்டும் இரட்டைகள். துன்பத்தை நாடுவது மனிதனுடைய பெருமைக்குக் குறைவாவது போலவே, இன்பத்தை நாடுவதும் அவன் பெருமைக்குக் குறைவுதான். யாரிடம் நடுவு நிலைமை இருக்கிறதோ, அவர் இரண்டையுமே நாடமாட்டார். அடிமை நிலையிலிருந்து—ஆட்டிவைக்கப்படும் நிலையிலிருந்து—விடுபட ஏன் மனிதர் முயல்வதில்லை? இப்போது நாம் சாட்டை அடிபடுகிறோம்; நாம் அழத் தொடங்கியவுடன் இயற்கை நமக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறது. நாம் அழுகையை மறக்கிறோம். திரும்பவும் சாட்டையடி விழுகிறது; அழுகிறோம். இயற்கை ஒரு கட்டி வெல்லம் கொடுக்கிறது; திரும்பவும் அழுகையை மறந்து சிரிக்கத் தொடங்குகிறோம்.

ஒரு ஞானி விடுதலையை விரும்புகிறார். சில ஐம்புலப் பொருள்கள் வீண் என்பதும், இன்ப துன்பங்களுக்கு முடிவில்லை என்பதும் அவருக்குத் தெரியும். இந்த உலகத்துச் செல்வருள் எத்தனை பேர் புதுப்புது இன்பங்களைத் தேடித் திரிகின்றனர்! எல்லா இன்பங்களும் பழயவை ஆகிவிடுகின்றன, அவர்களுக்குப் புது இன்பங்கள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் அவர்கள் எவ்வளவு பொருளற்ற இன்பங்களைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? இவைகளெல்லாம் ஒரு கணநேரம் நரம்புகளைத் தட்டி எழுப்பு கின்றன; அவ்வளவுதான்! இந்தக் கணநேர எழுச்சிக்குப்பின் தோன்றும் பிரதிச் செயல் எவ்வளவு துன்பம் தருவது! மக்களில் பெரும்பாலார் ஆட்டுமந்தையைப் போன்றவரேயாவர்! முன்னாற் போகும் ஆடு குழியில் விழுந்தால், பின்னாற்போகும் ஆடுகளும் குழியில் விழுந்து கழுத்தை உடைத்துக்கொள்ளும். அவற்றைப் போலவே மக்களும் சமூகத் தலைவன் என்ன செய்கிறானோ, அதையே பின்பற்றுகிறார்கள்; அது தக்கதா தகாததா என்றே உணர்வதில்லை. உலக விவகாரங்களின் பயனற்ற தன்மை மனி தனுக்குப் புலப்படும்போது, இப்படிப் பிரகிருதியினால் ஆட்டு விக்கப்படவோ, இழுத்துக்கொண்டு போகப்படவோ இடம் தரு வது தவறு என்பதை அவன் உணர்கிறான். இது அடிமை வாழ்வே ஆகும். சில இனிய சொற்களைக் கேட்கும் போது மனிதன் புன்னகை புரிகிறான்; கடுஞ் சொற்களைக் கேட்கும் போது ஓலமிடுகிறான். ஒரு துண்டு ரொட்டிக்கும் (ஒரு வாய்ச் சோற்றுக்கும்), ஒரு மூச்சளவு காற்றுக்கும், ஆடைகளுக்கும், தேசப்பற்றுக்கும், நாட்டுக்கும், பெயருக்கும், புகழுக்கும் மனிதன் அடிமையாகி விடுகிறான். எனவே, மனிதன் அடி மைத்தனத்தின் நடுவே வாழ்கிறான்; அவனது கட்டுப்பட்ட நிலை காரணமாக உண்மை மனிதன் உள்ளே புதைந்து கிடக்கிறான். நீங்கள் மனிதன் என்பது அடிமையேயாகும். இந்த அடிமைத்தனத்தை மனிதன் என்று உணர்கிறானோ, அன்றே இதிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்னும் விருப் பம் அவனுக்குத் தோன்றிவிடுகிறது. இது மிகு தீவிரமான ஆசை. செக்கச் சிவந்த நெருப்புத் தணல் ஒன்றை ஒருவன் தலையில் வைத்தால் அவன் அதைக் கீழே தள்ள எவ்வளவு தீவிர மாகப் போராடுகிறான்! தான் பிரகிருதிக்கு அடிமை என்பதை உண்மையாக உணர்ந்த மனிதனும் விடுதலை பெற அவ்வளவு தீவிரமாகப் போராடுவான்.

முமுட்சுத்துவம் அதாவது விடுதலை பெறும் விருப்பம் என்பது என்ன என்பதை நாம் இப்போது பார்த்தாய்விட்டது. அடுத்த சாதனையும் துன்பமானதுதான். நித்திய அநித்திய விவேகம் (உண்மை எது பொய் எது என்று பிரித்தறியும் அறிவு; அதாவது அழியாதது எது அழிவது எது என்று ஆராய்ந்து அறிவது) என்பதே இந்தச் சாதனை. இறைவர் ஒருவரே அழியாதவர்; மற்றவை எல்லாம் அழிபவைகளே. எல்லாமே அழிகின்றன. தேவர்கள் அழிகிறார்கள்; மக்கள் அழிகிறார்கள்; விலங்குகள் அழிகின்றன. பூமிகள் அழிகின்றன; ஞாயிறு, மதி, விண்மீன்கள் எல்லாமே அழிகின்றன. எல்லாமே இடைவிடாமல் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இன்று மலைகளாய் இருப்பவை நேற்றுக் கடல்களாய் இருந்தன; மீண்டும் நாளைக்குக் கடல்கள் ஆகிவிடும். எல்லாமே மாறும் நிலையிலேதான் இருக்கின்றன. பிரபஞ்சம் முழுவதுமே ஒரே மாற்றப் பிண்டந்தான். ஆனால், மாற்றமே இல்லாத ஒருவர் இருக்கிறார்; அவரே இறைவர். நாம் எவ்வளவுக்கெவ்வளவு அந்த இறைவரை நெருங்குகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் மாறுவதும் குறையும்; பிரகிருதி நம்மைப் பாதிக்கும் அளவும் குறையும். நாம், என்று இறைவரை அடைந்து அவர் முன்னிலையில் நிற்கிறோமோ, அன்றே நாம் பிரகிருதியை—மாற்றத்தை—வென்றுவிடுவோம்; இந்த இயற்கை நிகழ்ச்சிகளை அடக்கியாளும் சத்தி நமக்கு வந்துவிடும், அவை நம்மை பாதியா.

இந்தச் சாதனை மெய்யாகவே நமக்குக் கைகூடிவிட்டால் நாம் இந்த உலகத்தில் பெற வேண்டுவது வேறு ஒன்றுமே இல்லை. எல்லா ஞானமும் நமக்குள்ளேயே இருக்கிறது; எல்லா நிறைவுகளும் நம் ஆன்மாவுக்குள்ளேயே முன்னமே உள்ளன. ஆனால், இந்த நிறைவைப் பிரகிருதி மூடிக்கொண்டிருக்கிறது; ஆன்மாவின் இந்தத் தூய்மையை ஒன்றன்மேல் ஒன்றாகப் பல அடுக்குகள் மூடிக்கொண்டிருக்கின்றன. நாம் என்ன செய்ய வேண்டும்? உண்மையில் நமக்கு ஆன்மிக வளர்ச்சி என்பதே இல்லை. குறைவற்ற ஒன்றை வளர்ப்பது எப்படி? அதை மூடியிருக்கும் திரையை நீக்குகிறோம்; அப்போது ஆன்மா தன் பழைய தூய்மையோடும் அதன் இயல்பான உள்ளமைந்த சுதந்தரத்தோடும் ஒளிரும்.

இப்பொழுதுதான் இந்த விசாரணை தொடங்குகிறது: இவ்வளவு சாதனையும் அவசியந்தானா? சமய சித்தி, காதுகளின் உதவியாலோ கண்களின் உதவியாலோ மூளையின் உதவியாலோ

கிடைப்பதன்று. வேதங்களுங்கூட நமக்கு இந்தச் சித்தியைத் தர இயலா. உலகத்திலுள்ள எல்லா நூல்களையும் நாம் படிக்கலாம், ஆனாலும், நமக்குச் சமயத்தைப் பற்றியும் இறைவரைப் பற்றியும் ஒரு சிறிதும் விளங்கியிராது. நாம் நம் வாழ்க்கை முழுவதும் இறைவரையும் சமயத்தையும் பற்றிப் பேசலாம்; ஆயினும், அந்த வகையில் சிறிதும் முன்னேற்றமே இல்லாமல் இருக்கலாம். நாம் உலகத்திற் சிறந்த அறிஞராய் இருக்கலாம்; ஆயினும், நாம் இறைவரை அடையாமலே இருக்கலாம். சிறந்த அறிவுப் பயிற்சி காரணமாகச் சமயத்தைப் புறக்கணிப்பவர் தோன்றியிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? இப்படி அறிவுப் பயிற்சிக்கு மட்டும் இடம் கொடுத்து, அன்புப் பயிற்சிக்கு இடமே கொடாமல் இருப்பது மேலை நாட்டுக் கல்வி முறையில் உள்ள ஒரு பெருங்குறையாகும். இந்த முறையினால் மனிதன் பத்து மடங்கு சுயநலம் உள்ளவன் ஆகிறான்; இது கடைசியில் அவன் அழிவிலேதான் போய் முடியும். அறிவுக்கும் அன்பிற்கும் போராட்டம் ஏற்படும்போது, அன்பைப் பின்பற்றுங்கள். அறிவு ஒரே நிலையில் மட்டுந்தான்—பகுத்தறிவு என்ற நிலையில் மட்டுந்தான்—வேலை செய்ய இயலும். இந்த எல்லையை மீறிப் போக அதனால் இயலாது. அன்புதான் ஒருவனை உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோக இயலும். அது அறிவையும் தாண்டி அப்பால் போகிறது; ஞான ஆவேசம் என்னும் ஒரு நிலை வரையில் இது போக இயலும். அறிவால் என்றும் ஞான ஆவேசத்தை அடைய இயலாது. அன்புதான் ஒளி பெற்றவுடன் ஞான ஆவேச நிலையை எய்துகிறது. அறிவால் மட்டும் சிறந்து அன்புப் பயிற்சி இல்லாத எந்த மனிதனும் என்றும் ஞான ஆவேசம் பெற்ற மனிதனாகவே இயலாது. அன்புள்ள மனிதனிடமிருந்து பேசுவது இதயந்தான். அறிவினால் பெற முடியாத கருவியாகிய ஞான ஆவேசம் என்னும் கருவி இதயத்துக்குக் கிடைக்கிறது. புலனுணர்விற்குக் கருவியாக அறிவு விளங்குவது போல, ஞான ஆவேசத்தின் கருவியாக இதயம் விளங்குகிறது. தாழ்ந்த நிலையில் உணர்ச்சி, அறிவைவிடத் திறன் குன்றிய கருவியேயாகும். அறிவு குறைந்த ஒருவனுக்குப் பல விஷயங்கள் தெரியா என்றாலும் அவன் இயற்கையாகவே உணர்ச்சி வயப்பட்டவனாய் இருக்கிறான். அவனைப் பேராசிரியர் ஒருவரோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! பேராசிரியருக்கு இருக்கும் திறமை எவ்வளவு ஆச்சரியமானது! ஆனால், பேராசிரியர் தம் அறிவுக்குக் கட்டுப்பட்டவர். அவர் அறிஞராய் இருப்பதோடு அசுரராயும் இருக்கலாம்.

ஆனால், அன்புள்ள மனிதனே, என்றும் அசுரனாக இருக்கவே இயலாது. உணர்ச்சி வயப்பட்ட எவனும் என்றும் அசுரனானதே இல்லை. சரியான முறையில் பழக்கினால், இதயத்தை மாற்றி, அறிவுக்கும் அப்பாற்போக இயலும். அது ஞான ஆவேசமாக மாறிவிடும். முடிவில் மனிதன் அறிவுக்கு அப்பால் போக வேண்டுவது அவசியம். மனிதன் பெற்றுள்ள அறிவுக் களஞ்சியமும், அவனுடைய புலனறிவும், பகுத்தறிவும், இதயமும், பிரபஞ்சம் என்னும் இந்தப் பாலைக் கடைந்த வண்ணமே இருக்கின்றன. பல நாள் கடைவதன் பலனாக வெண்ணெய் கிடைக்கிறது. இந்த வெண்ணெய்தான் இறைவர். அன்பு இதயம் பெற்றவர்க்கு இந்த வெண்ணெய் அகப்படுகிறது ; மிகுந்துள்ள மோர்தான் அறிவு பெற்றவர்களுக்குக் கிடைக்கிறது.

இவையெல்லாம் இதயப் பயிற்சிச் சாதனைகள் ; இதயத்திற்குரிய அன்பையும் தீவிரத் தயையையும் வளர்ப்பதற்கான ஆயத்தங்களே இவைகள். இறைவரை அடைவதற்குக் கல்வியறிவோ, இலக்கிய அறிவோ, அவசியமில்லை. ஒரு முனிவர் ஒரு நாள் என்னிடம், "பிறரைக் கொல்வதற்கு ஒருவனிடம் கத்திகளும் கேடயங்களும் இருக்கவேண்டும் ; ஆனால் தற்கொலை செய்து கொள்ளவோ, ஓர் ஊசி இருந்தலே போதும். அது போலவே, பிறருக்கு உபதேசம் செய்யவேண்டுமானால், பேரறிவும் கல்வியும் அவசியம் ; ஆனால், சுயானுபவம் பெறவோ, அவை அவசியமில்லை," என்று சொன்னார். உங்கள் மனம் தூயதாய் இருக்கிறதா ? அப்படியானால், நீங்கள் இறைவரை அடைவது திண்ணம். "தூய மனம் உடையவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் இறைவரைக் காண்பார்கள் !" உங்களுக்கு உலகத்திலுள்ள விஞ்ஞானம் எல்லாம் தெரிந்திருந்தாலும், மனம் தூய்மை உடையதாய் இல்லாவிட்டால், பயனில்லை. விஞ்ஞான அறிவு மட்டும் இறைவரை அறியப் பயன்படாது. நீங்கள் படிக்கிற புத்தகங்களிலேயே உங்கள் மனம் புதைந்து விடலாம். ஆனாலும், இதனால் பெரும் பயன் ஒன்றும் இல்லை. குறியினைச் சார்வது இதயமே. எனவே, இதயத்தையே பின்பற்றுங்கள்; தூய்மையான இதயம் அறிவுக்கும் அப்பால் காண இயலும். அது ஞான ஆவேசம் பெறுகிறது. அறிவினால் என்றும் அறிய இயலாதவைகளையெல்லாம் இதயம் அறியும். தூய்மையான இதயத்துக்கும் அறிவுக்கும் ஒரு விஷயத்தில் போராட்டம் இருக்குமானால் எப்போதுமே இதயத்தைப் பின் பற்றுங்கள், இதயம் காட்டும் வழி பகுத்தறிவுக்கு

முரணானதாகப் பட்டாலும் சரி. பிறருக்கு நன்மை செய்ய இதயம் விரும்பும்போது அப்படிச் செய்வது நலமற்றது என்று உங்கள் அறிவு சொல்லலாம். ஆயினும், இதயத்தையே பின் பற்றுங்கள். இப்படிச் செய்வதால், அறிவைப் பின் பற்று வதால் ஏற்படும் தவற்றைவிடக் குறைவான தவறுகளே ஏற்படு வதைக் காண்பீர்கள். உண்மையைப் பிரதிபலிக்கும் சிறந்த கண்ணடி தூய்மையான இதயந்தான். எனவே, இந்தச் சாதனை களெல்லாம் சித்த சுத்திக்காகவே அமைந்தவை. எந்த நொடியில் சித்தம் தூய்மை அடைகிறதோ, அந்த நொடியிலே அதில் உண்மைகள் யாவும் பளிச்சென்று பிரதிபலிக்கும். போதிய சித்த சுத்தி உங்களுக்கு இருந்தால், பிரபஞ்சத்தின் உண்மைக ளெல்லாம் அந்த சித்தத்துள் விளங்கும்.

அணுக்கள், நுட்பமான மூலப்பொருள்கள், தனி மனிதர்கள் பெற்ற அரிய காட்சிகள் எல்லாமே, தொலைமானியையோ, பூதக் கண்ணடியையோ, விஞ்ஞானச் சோதனைச் சாலையையோ என்றும் கண்டிராத மனிதர்களால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறியப் பட்டவை. இவைகளைப்பற்றியெல்லாம் அறிய அவர்களால் எப்படி இயன்றது? இதயத்தின் மூலந்தான் இயன் றன; அவர்கள் அதைத் தூய்மைப்படுத்திக் கொண்டார்கள். அந்தப் பாதையை இன்றும் நான் பின்பற்ற இயலும். உலகத்தி லுள்ள துன்பங்களைக் குறைப்பது உண்மையாக இதயப் பயிற்சியே, அறிவுப் பயிற்சியன்று.

அறிவுப் பயிற்சியின் பயனுகப் பல்லாயிரம் விஞ்ஞானத் துறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விளைவாகச் சிலர் பலரை அடிமையாக்கினர் — இதுவே பெற்ற நன்மை யனைத்தும். செயற்கையாகத் தேவைகள் படைக்கப் பட்டுள்ளன. பணம் இருக்கிறதோ இல்லையோ, ஒவ்வோர் ஏழையும் இன்று இத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறுன்; இது முற்றுப் பெருவிட்டால், அதற்காகப் போராடி அந்தப் போராட்டத்திலேயே உயிரையும் விட்டுவிடுகிறுன். இதுதான் பலன்! துன்ப நீக்கம் என்னும் பிரச்சினையை அறிவு தீர்க்காது, இதயமே தாக்கும். (அறிவுப் பயிற்சிக்காகச் செலவான) இப் பெரு முயற்சியெல்லாம் மக்களை முன்னினும் தூயராய், சாந்த ராய், பொறையுடையராய் ஆக்கப் பயன் பட்டிருக்குமானல், நாம் இன்று காண்பதைவிட ஆயிரம் மடங்கு இன்பத்தை உலகம் பெற்றிருக்கும். என்றுமே இதயத்தையே பழக்குங்

கள். இதயத்தின் மூலமாகவே இறைவர் பேசுகிறார், அறிவின் மூலமாக நீங்களே பேசுகிறீர்கள்.

"உன் காலிலிருந்து பாதரட்சையைக் கழற்றிவிடு; நீ நிற்கும் இடம் புண்ணிய பூமியன்றோ?" என மோஸஸுக்குக் கட்டளை பிறந்தமை விவிலியப் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லையா? சமய நூல்களைப் படிக்கும்போது நாம் அவைகளிடம் மிகுந்த மரியாதை வைக்க வேண்டும். தூய்மையான நெஞ்சோடும் வணக்கத்தோடும் கற்க வருவானுக்கு நெஞ்சம் திறக்கப்படும். திரை விலக, அவன் உண்மையைக் காண்பான்.

அறிவை மட்டும் கொண்டு நீங்கள் சமய உண்மையை அறிய விழைந்தால், சிறிது அறிவுச் சிலம்பம் பழகலாம்; சில அறிவுக் கொள்கைகளை உருவாக்கலாம். ஆனால் உண்மையைப் பெற இயலாது. உண்மையின் முகத்தைக்காணும் எவனும் உறுதியுணர்வு பெறுவான்—அத்தகையது அம்முகம். சூரியனைக் காட்டத் தீவர்த்தி தேவையில்லை; அது தன்னொளி உடைய ஒன்று. உண்மைக்குச் சாட்சி தேவையானால், அந்த சாட்சியை எந்தச் சாட்சியால் மெய்ப்பிப்பது? அன்போடும் வணக்கத்தோடும் சமயத்தை அணுகுவோமாயின், நமது இதயமே எழுந்து நின்று, 'இதுதான் உண்மை இதுவன்று' என்று கூறிவிடும்.

சமயம் என்ற பகுதி புலன்களுக்கும் உணவுக்கும் அப்பாற்பட்டது. இறைவரைப் புலனால் அறிய இயலாது. யாரும் கடவுளைத் தம் கண்களால் கண்டதில்லை; யாரும் காணவும் இயலாது. உணர்வாலும் யாரும் இறைவரைக் கண்டதில்லை. நீங்களும் சரி, நானும் சரி, எவரும்இறைவரை உணர்வதில்லை. இறைவர் எங்கே இருக்கிறார்? சமயத்தின் நிலம் எங்கே இருக்கிறது? புலன்களுக்கும் உணர்வுக்கும் அப்பால் இருக்கின்றது. உணர்வு என்பது, நாம் வேலை செய்யும் பல நிலங்களில் ஒன்றேதான். இதையும் கடந்து, புலன்களையும் கடந்து, உங்களுடைய மையத்தை மேலும் மேலும் அணுக வேண்டும். இப்படிச் செய்யச் செய்ய, நீங்கள் இறைவரை மேலும் மேலும் அணுகுவீர்கள். இறைவரின் இருப்புக்கு அத்தாட்சி என்ன? நேர்க் காட்சியே, பிரத்தியட்சமே. இந்தச் சுவரின் இருப்புக்குச் சான்று இதை நான் நேரில் காண்பதே. இப்படி இறைவரைப் பல்லாயிரம் பேர் கண்டிருக்கின்றனர், அவரைக் காண விரும்பும் அனைவராலும் காணப்படுவர். ஆனால், இந்தக் காட்சி புலன் காட்சியே அன்று; புலன்களுக்கு அப்பாற்

பட்டது, உணர்வுக்கும் அப்பாற்பட்டது. நம்மைப் புலன் அறிவுக்கு அப்பால் அழைத்துச் செல்ல இப் பயிற்சி அனைத்தும் அவசியம். கழிந்த காலத்து இயற்றிய பலவகைச் செயல்களாலும் பந்தங்களாலும் நாம் கீழே இழுக்கப்படுகிறோம்; இப் பயிற்சிகள் நம்மைத் தூய்மைப்படுத்தி, நம் பளுவைக்குறைக்கும். தளைகளெல்லாம் தாமே கழன்றுவிடும். நம்மை இழுத்துக் கட்டியிருக்கும் புலக்காட்சி யுலகிற்கு அப்பால் மிதக்கும்படி உந்தப்படுவோம்; அப்பொழுது நாம் சாதாரண நிலைகளாகிய ஜாக்கிரம் (விழிப்பு), சொப்பனம் (கனவு), சுஷுப்தி (உறக்கம்) என்னும் மூன்று நிலைகளில் உள்ள மக்கள் காணாதவற்றையெல்லாம் காண்போம்; கேளாதவற்றையெல்லாம் கேட்போம்; உணராதவற்றையெல்லாம் உணர்வோம். அப்போது நாம் புதுமையான மொழி பேசுவர்போல் ஆவோம். உலகம் அதைப் புரிந்து கொள்ளாது; ஏனெனில், புலன் அறிவைத் தவிர வேறொன்றும் உலக மக்களுக்குத் தெரியாது. உண்மையான சமயம், முற்றும் அதீதமானது. உலகத்தில் உள்ள ஒவ்வோர் உயிரினிடமும்—புழுவினிடமுங்கூட—புலன் அறிவைக் கடந்து செல்லும் ஆற்றல் மறைந்திருக்கிறது. ஒரு நாள் இந்தப் புலனறிவைக் கடந்து சென்று, இறைவரை அடைந்துவிடும். எந்த உயிருக்கும் இந்த முடிவை அடைவதில் தோல்வி இல்லை. தோல்வி என்பதே உலகத்தில் இல்லை. இந்த முயற்சியில் நூறு முறை மனிதன் காயப்படலாம்; ஆயிரம் முறை தடுக்கி விழலாம். ஆயினும், முடிவில் தான் இறைவன் என்பதை அவன் உணர்ந்தே தீர்வான். நேர்க்கோட்டில் முன்னேற்றம் இல்லை என்பது நமக்குத் தெரியும். ஒவ்வோர் ஆன்மாவும் வட்டப்பாதை வழியேதான் இயங்குகிறது. வட்டத்தை முடித்தே தீரவேண்டும். எனவே, ஓர் ஆன்மா எவ்வளவுதான் தாழ்ந்ததாயினும், அதற்கு மேல் நோக்க வேண்டிய ஒரு காலம் வந்தே தீரும். ஒருவரையும் இழக்கவேண்டா. இறைவர் என்ற ஒரே பொது மையத்திலிருந்து வெளித்தோன்றியவரே, நாம் எல்லோரும். இறைவர் இதுவரை தோற்றுவித்த ஒவ்வோர் உயிரும்—மிக உயர்ந்ததோ மிகத் தாழ்ந்ததோ—முடிவில் அனைத்துயிர்க்கும் தந்தையாரான இறைவரை அடைந்துதான் தீர வேண்டும்.

"எவரிடமிருந்து யாவும் தோன்றுகின்றனவோ, எவர்க்குள் யாவும் வாழ்கின்றனவோ, முடிவில் எவரை யாவும் அடைகின்றனவோ, அவரே இறைவர்."

வேதாந்தமும் உரிமையும்

[இது லண்டனில் ஆற்றிய சொற்பொழிவு]

அத்துவைத சமய தத்துவப் பகுதியைப் பற்றி நாம் பார்த்தாய்விட்டது. ஆனல், ஒரு விஷயம் — விளங்குவதற்கு மிகக் கடினமான ஒரு பகுதி — இன்னும் இருக்கிறது. நாம் நம்மைச் சுற்றிப் பார்க்கும் எல்லாம் — உண்மையில் பிரபஞ்சம் முழுவதுமே — பரம்பொருளாகிய (பரப்பிரம்மத்தின்) ஒன்றன் பரிணமமே என்பது அத்துவைத வேதாந்தத்தின் முடிபு என்பதை நாம் இது வரையில் பார்த்தோம். இந்த ஒன்றையே வடமொழியில் 'பிரம்மம்' என்கிருர்கள். இந்தப் பரம்பொருளே முழு இயற்கையாக மாறியிருக்கிறது. இங்கே ஒரு சங்கடம் எழுகிறது: பரமான ஒன்று நிலைமாறுவது எப்படி இயலும்? இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன? இதன் இலட்சணமே மாறுதல் இல்லாமை ஆயிற்றே! மாற்றமே இல்லாத ஒன்று மாறிற்று என்று சொல்வது முரண்பாடன்ரூ? குணமுள்ள தெய்வத்தை நம்புகிறவர்களுக்கும் இதே சங்கடம் எழுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தப் பிரபஞ்சப் படைப்பு எவ்வாறு ஏற்பட்டது? சூனியத்திலிருந்து இது ஏற்பட்டிருக்க இயலாது — இது நியாயத்துக்கு முரண் ஆகும். சூனியத்திலிருந்து ஒரு பொருள் தோன்றுவது என்பது நடவாத ஒன்று. காரியம் என்பது காரணத்தின் மறு உருவம். வித்திலிருந்து பெரிய மரம் உண்டாகிறது. விதையோடு தண்ணீரும் காற்றும் சேர்ந்ததே மரம். மரத்தின் உடலை உண்டாக்க உட்கொண்ட காற்று நீர்களின் அளவைச் சோதித்தறிய வழி யாதேனும் உண்டாயின், அது காரியத்தின் அளவுக்குச் சமானமாக இருப்பதைக் காண்போம். இக்கால விஞ்ஞானம் இதை — காரியம் ,காரணத்தின் மறு உருவம் என்பதை — நன்கு விளக்கி விட்டது. காரணப் பகுதிகளின் சேர்க்கையைச் சரிப் படுத்துவதால், அது மாறிக் காரியமாகிறது. ஆதலால் காரணம் இல்லாமல் பிரபஞ்சம் தோன்றிய இச் சங்கடத்தை நீக்க வேண்டியதாகிறது; இறைவரே பிரபஞ்சமாக மாறினர் என்பதை நாம் ஒப்புக் கொண்டே தீரவேண்டும்.

ஆனால் நாம் ஒரு சங்கடத்தை விலக்கிவிட்டு இன்னொன்றுக்கு வந்து விட்டோம். எந்தக் கொள்கையிலும் சரி; கடவுள் என்னும் எண்ணம் மாறுதல் இன்மை என்னும் கருத்தினின்றே எழுகிறது. இறைவரைத் தேடுங்கால் நம்மனத்தே யாண்டும் கொள்ளும் ஒரே கருத்தாவது, சற்றும் பண்படாத நிலையிலுங்கூட, சுதந்தரமே; சுதந்தரக் கருத்தும் மாறுமைக் கருத்தும் ஒன்றேயாம். எதற்குச் சுதந்தரம் உண்டோ அது மாறுவதில்லை; எது மாறுவதில்லையோ, அதுதான் சுதந்தரமானது. மாறுதல் என்பது ஒரு பொருளுக்குப் புறத்தோ அகத்தோ உள்ள, சூழ்நிலையினும் மிக்க வலிமையுற்ற ஒன்றால் உண்டாக்கப்படுகிறது. மாற்றப்படக்கூடிய ஒவ்வொன்றும், மாற்ற வொண்ணாததாயிருக்க இயலாத ஒன்றோ பலவோ ஆன காரணங்களுக்கு அவசியம் கட்டுப்பட்டே நிற்கிறது. இறைவர் இப்பிரபஞ்சம் ஆகிவிட்டார் என்பதை ஒப்புக்கொண்டால், 'அவர் மாறிவிட்டார்; இங்கே இருக்கிறார்,' என்பதே அதன் பொருள். வரையறையற்ற ஒன்று, வரையறையுள்ள இப்பிரபஞ்சமாய் மாறிவிட்டது என்றால், வரையறையற்றதன்மை அவ்வளவு பகுதி குறைந்துவிட்டது என்பதாகும்; ஆதலால் எல்லையற்ற பொருளிலிருந்து பிரபஞ்சம் நீக்கப்பெற்ற, வரையறையற்ற பொருளே கடவுளாவார். இவ்வாறு மாறும் கடவுள் இறைவர் ஆகார். இறைவரே ஒவ்வொன்றும் என்ற இந்தக் கொள்கையிலிருந்து தப்புவதற்காக வேதாந்தம் மிகவும் துணிச்சலாக ஒரு கொள்கையைச் சொல்கிறது. இதன்படி, இப்பிரபஞ்சம் நாம் அறிகிறவாறோ நினைக்கின்றவாறோ இல்லை; மாறவொண்ணாதது மாற்றமடையவில்லை; இப்பிரபஞ்சம் முழுதும் தோற்றமேயன்றி உண்மையன்று, பகுதிகளும், சிற்றுயிர்களும், வேறுபாடுகளும் இதில் உள்ளன என்னும் கருத்து தோற்றமாத்திரமே, பொருளின் இயல்பன்று. கடவுள் மாற்றமடையவே இல்லை, இப்பிரபஞ்சமாக ஆகவும் இல்லை. கடவுளைப் பிரபஞ்சமாகக் காணுதற்குக் காரணம், தேசம் காலம் நிமித்தம் என்பவற்றின் வழியாக அதை நாம் நோக்க வேண்டியிருத்தலே. இந்த வேறுபாட்டை தோற்றமாகவும், ஆனால் உண்மையற்றதாகவும் செய்வது தேச-கால-நிமித்தமே. இது மெய்யாகவே மிகத்துணிச்சலான கொள்கையாம். பொதுவாக மக்களால் அறியப்படும் பொருளிலே, இலட்சியவாதமும் அன்று அது. இந்தப் பிரபஞ்சம் இல்லையென்று அது சொல்லவில்லை; அது இருக்கிறது, ஆனால் நாம் எப்படி

இருப்பதாக நினைக்கிறோமோ அப்படி இல்லை. இதை விளக்க அத்துவைத வேதாந்தம் காட்டும் உதாரணம் எல்லோருக்கும் தெரிந்ததே ஆகும். இருளடர்ந்த இரவில் மூடநம்பிக்கை நிறைந்த ஒருவன் கண்ணுக்கு ஒரு மரத்தூறு பேயாகத் தோன்றுகிறது; திருடன் கண்ணுக்கு நகர்காவலனாகத் தோன்றுகிறது; நண்பனை எதிர்பார்க்கும் ஒருவனுக்கு அவன் நண்பனாகத் தோன்றுகிறது. மேற்கண்ட எல்லா உதாரணங்களிலும் மரத்தூறில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை; ஆனாலும், பார்ப்பவர் கண்களுக்கு மாறுதல் தெரிகிறது; இந்த மாறுதல்கள் பார்ப்பவர்கள் மனத்தில் உள்ளவைகளே ஆகும். பார்ப்பவர்கள் மனநிலை பற்றிய கருத்தை மனத்தத்துவ சாத்திரத்தின் உதவியால் நாம் அறிந்து கொள்ள இயலும். நமக்கு வெளியே ஏதோ ஒன்று இருக்கிறது; அதன் உண்மைத் தன்மை அறியப்படாதது, அறிய வொண்ணுதது; அதை (x) 'எக்ஸ்' என்றே வைத்துக்கொள்வோம். நமக்கு உள்ளேயும் ஒன்று இருக்கிறது; அது அறியப்படாதது, அறிய வொண்ணுதது; அதை (y) 'ஒய்' என்று வைத்துக் கொள்வோம். எனவே, நமக்குத் தெரியும் காட்சி 'எக்ஸ்', 'ஒய்' ஆகிய இரண்டின் சேர்க்கையே ஆகும்; 'நமக்குத் தெரியும் ஒவ்வொரு பொருளும் இரண்டு பகுதிகளால் ஆனது. வெளிப்பகுதியான எக்ஸ், உட்பகுதியான ஒய்; எக்ஸ், ஒய் இரண்டின் சேர்க்கையே நாம் அறியும் பொருள். ஆதலின் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பொருளிலும் ஒரு பகுதி நமது படைப்பும், மற்றொரு பகுதி வெளியே உள்ள ஏதோ ஒன்றும் ஆகும். வேதாந்தமோ இந்த எக்ஸ், ஒய் இரண்டும் ஒன்றே என்று சொல்கிறது.

ஹெர்பெர்ட்டு ஸ்பென்ஸர் என்ற மேலை நாட்டுத் தத்துவப் பேராசிரியரும் வேறு இக்காலத் தத்துவப் பேராசிரியர்களுங்கூட இதைப் போன்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். 'மலரில் விளங்கும் அதே சக்திதான் என் உள்ளத்துக்குள்ளும் நிறைந்திருக்கிறது,' என்பதன் பொருள் என்ன? வேதாந்திகள் விரிக்க விரும்பும் கருத்துதான் இது: வெளியுலகுக்கு ஆதாரமான உண்மையும், உள் உலகுக்கு ஆதாரமான உண்மையும் ஒன்றேதான். உள் வெளி என்ற கருத்துகளுங் கூட, வேற்றுமையளவிலே மட்டும் இருப்பதன்றிப் பொருள்களில் உள்ளவை அல்ல. உதாரணமாக நமக்கு ஆறுவது இந்திரியம் ஒன்று ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம்., அப்போது உலகம் முழுவதுமே நமக்கு மாறியே தோன்றும்; இதனால், காணும் பொருளை மாற்றுவது காண்பானே என்பது தெளிவா

கிறது. நான் மாறினால் வெளியுலகமும் மாறுகிறது. எனவே, வேதாந்தக் கொள்கையின் முடிவு இதுதான்: நீங்கள், நான், பிரபஞ்சப் பொருள்கள் எல்லாம் நிறைவுள்ள அந்தப் பரம் பொருளேதான்; அதன் பகுதி அல்ல, முழுமையுமே ஆகும். நீங்கள் அந்தப் பரப்பிரம்மத்தின் முழுமையே; இப்படியேதான் பிறர் அனைவரும்; காரணம், பகுதி என்ற கருத்துக்கே இங்கே இடமில்லை. இந்தப் பிரிவுகள், இந்த வரையறைகள் எல்லாமே வெற்று வெளித் தோற்றந்தான்; பொருளில் இல்லை. நான் நிறைவுற்ற முழுப்பொருள்; என்றும் எதனாலும் கட்டுப்பட்டவன் அல்லேன். ''கட்டுப்பட்டவன் (பெத்தன்) என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் கட்டுப்பட்டவர்களாவீர்கள். 'நாம் சுதந்தரர் (முத்தர்)' என்று உணர்ந்தால் நீங்கள் முத்தராகவே இருப்பீர்கள்,'' என்று மிக்க துணிவுடன் வேதாந்தம் அறைகின்றது. எனவே, இத் தத்துவக் கொள்கையின் நோக்கமும் முடிவும் இதுதான்: நாம் என்றும் முத்தராயிருந்தோம், என்றும் முத்தர்களாகவேதான் இருப்போம். நாம் மாறுவதில்லை; சாவதும் இல்லை; என்றும் பிறப்பதும் இல்லை. அப்படியானால், இந்த மாறுதல் எல்லாம் என்ன? தோன்றும் இந்தப் பிரபஞ்சம் என்னவாகிறது? தேச கால நிமித்தங்கட்குக் கட்டுப்பட்ட இந்த உலகம் வெறுந்தோற்றந்தான் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இயற்கையின் பரிணாமமும், பரப்பிரம்மத்தின் வெளித்தோற்றமும் ஆகிய இது வடமொழியாளர் கூறும் விவர்த்த வாதத்தில் போய் முடிகிறது. பரப்பிரம்மம் மாறுவதில்லை; அதாவது, மறுபடி பரிணமிப்பதில்லை. ஒரே சீவ அணுவால் ஆன உயிர் (அமீபா)த் தோற்றத்திலும் பரிபூரணமான பரப்பிரம்மத் தன்மையே மறைந்து நிற்கிறது. மேல் மூடி காரணமாகவே அதை ஒரே சீவ அணு, உயிர் (அமீபா) என்கிறோம். இந்த அமீபாவிலிருந்து பூரண மனித உயிராகும் வரை ஏற்படும் மாறுதல்களெல்லாம் உள்ளேயிருக்கும் பொருளின் மாறுபாடுகள் அல்ல; அது மாறாமல் அப்படியேதான் இருக்கிறது. மாறுதல் மேல் மூடியில் ஏற்படுவதேயாகும்.

இங்கே ஒரு துணித்திரை இருக்கிறது. அழகிய காட்சி ஒன்று வெளியே இருக்கிறது. துணித்திரையில் உள்ள ஒரு சிறு துவாரம் வழியாகமட்டுமே நாம் அந்த அழகிய காட்சியைச் சிறிதளவு காண இயலும். இந்தத் துவாரத்தின் அளவு பெரிதாகிக் கொண்டே வருவதாக வைத்துக்கொள்வோம். காட்சி நமக்குத் தெரியும் அளவும் சிறிது சிறிதாக வளர்ந்துகொண்டே போகும்.

திரையே மறைந்து போகும் நிலை வரும்போது காட்சி முழுவதுமே நம் கண்முன் நிற்கிறது. வெளியே உள்ள காட்சிதான் ஆன்மா. அதற்கும் நமக்கும் இடையே உள்ள திரைதான் மாயை—காலம், இடம், நிமித்தம். இந்தத் திரையில் எங்கோ உள்ள ஒரு சிறு துவாரம் வழியே நாம் அந்தக்காட்சியின் ஒரு சிறு அளவை மட்டும் பார்க்கிறோம். இந்தத் துவாரம் பெரிதாக ஆக, அந்தக் காட்சியில் நமக்குத் தெரியும் அளவும் மிகுதியாகிக் கொண்டே வருகிறது; அந்தத் திரையே மறைந்த பிறகு நாமே ஆன்மா என்னும் உண்மை விளங்குகிறது. எனவே, பிரபஞ்சத்தில் ஏற்படும் மாறுதல்கள், பரப்பிரம்மத்தில் இல்லை; பிரகிருதியில் ஏற்படுபவைகளே ஆகும். பிரம்மத் தோற்றம் விளங்கும் வரையில் பிரகிருதி பரிணமித்துக்கொண்டே போகிறது. எல்லோரிடத்திலும் பரப்பிரம்மம் இருக்கிறது. சிலரிடத்தில் அதிகமாகவும் சிலரிடத்தில் குறைவாகவும் இது வெளிப்படுகிறது. பிரபஞ்சம் முழுவதுமே, உண்மையில் ஒன்றுதான். ஆன்மாவைப் பற்றிப் பேசும் போது ஒன்று மற்றொன்றைவிட உயர்ந்தது என்னும் பேச்சுக்குப் பொருளே இல்லை. ஆன்மாவைப்பற்றிப் பேசும் போது மனிதன் விலங்குகளைவிட உயர்ந்தவன், தாவரங்களைவிட உயர்ந்தவன் என்று சொல்வதில் பொருளே இல்லை. பிரபஞ்சம் முழுவதும் ஒன்றேதான். தாவரங்களில் ஆன்ம விளக்கத்துக்குத் தடை அதிகமாயிருக்கிறது; விலங்குகளில் இது சற்றுக் குறைவாய் இருக்கிறது; மனிதனில் இது இன்னும் குறைவாய் இருக்கிறது; பண்பட்ட, ஞான இச்சையுமுள்ள மனிதர்களிடம் பின்னும் குறைவாய் இருக்கிறது; நிறைவுற்ற மனிதனிடம் இந்தத் தடையே இல்லை. நம்முடைய போராட்டங்கள், முயற்சிகள், துன்பங்கள், இன்பங்கள், கண்ணீர், புன்முறுவல் ஆகிய இவைகளும், நம் எண்ணம் செயல் எல்லாமுமே இந்த முடிவை நோக்கியவைகளே ஆகும். தோற்றத்துக்கும் உண்மைக்கும் இடையே நின்று மறைக்கும் திரையின் துவாரத்தைப் பெரிதாக்குவதும், திரையின் கனத்தைக் குறைத்து வருவதும், இதற்கான முயற்சிகளே ஆகும். எனவே, நமது வேலை ஆன்மாவை விடுதலை பெறச் செய்வது அன்று; தடைகளை (பந்தங்களை) ஒழிப்பதுதான். கதிரவனைப் படலம் படலமாக முகில்கள் மறைக்கின்றன. ஆனால், இவைகளால் சூரியன் பாதிக்கப்படுவதில்லை. காற்றின் வேலை இந்த முகில்களை அகற்றுவதுதான். எவ்வளவுக்கெவ்வளவு மேகம் விலகுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சூரியனின் ஒளி அதிகமாய் வெளிப்படுகிறது. வரையறையற்ற, நிறை

வுற்ற, நித்தியமான உண்மை-அறிவு-இன்ப ஆன்மாவுக்கு ஒரு மாறுதலும் இல்லை. பிறப்போ இறப்போ ஆன்மாவுக்கு இருத்தல் இயலாது. சாவது, பிறப்பது, மறுபிறப்பு, சுவர்க்கத்துக்குப் போவது ஆகிய இவையெல்லாம் ஆன்மாவுக்கு இருக்க இயலா. இவைகள் பலவேறு தோற்றங்கள், பொய்த் தோற்றங்கள், கனவுகள். இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிக் கனவு காணும் ஒருவன், கெட்ட எண்ணங்களையும் செயல்களையும் பற்றிக் கனவு காண்பானுனால், சிறிது காலத்துக்குப் பிறகு அந்தக் கனவின் நினைப்பே அடுத்த கனவைத் தூண்டிவிடும். தான் ஒரு பயங்கரமான இடத்தில் இருப்பதாகவும், சித்திரவதை செய்யப்படுவதாகவும் கனவு காண்பான். நல்ல கருத்துகளையும் செயல்களையும் பற்றிக் கனவு காண்பவன் அந்தக் கனவு முடிந்தவுடன் தான் முன்னினும் நல்ல ஓர் இடத்தில் இருப்பதாகக் கனவு காண்பான். இப்படியேதான் ஒரு கனவிலிருந்து இன்னொரு கனவு அமைவது. ஆனால் கனவுகள் எல்லாமே மறைந்து போகும் காலம் ஒன்று வரும். பிரபஞ்சம் முழுவதுமே ஒரு கனவுதான் என்று உணரும் நிலை எல்லோருக்குமே வந்துதான் தீரும்; அப்போது ஆன்மா அதன் சூழ்நிலையைவிட எல்லையற்ற அளவு மிகச் சிறந்தது என்பதும் நமக்குத் தெளிவாகும். நமது சூழ்நிலை யென்னும் ஒன்றோடு நடத்தும் போராட்டத்தில் ஆன்ம சக்தியோடு ஒப்பிடும் போது இந்தச் சூழ்நிலை கிட்டத்தட்ட சூனியம் என்னும் ஞானம் நமக்கு ஏற்படும். இந்த நிலை வருவது காலத்தைப் பொறுத்தது; அளவுபடாத ஒன்றிலே காலம் சூனியமே ஆகும். இது கடல் நீரில் ஒரு துளி போன்றதாகும். நாம் அமைதியாகக் காத்திருக்க இயலும்.

தெரிந்தோ, தெரியாமலோ, பிரபஞ்சம் முழுவதும் அந்த முடிவை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. மற்ற வானப் பொருள்களின் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு விலகவே மதி போராடிக்கொண்டிருக்கிறது; நெடுங்காலத்திற்குப் பின் அது விடுபட்டே தீரும். ஆனால், தெரிந்து விடுபடப் பாடுபடுபவர்க்குக் காலம் விரைந்து வரும். இக்கொள்கையால் நாம் அனுபவத்திற்காணும் ஒரு நன்மையாவது: உலகம் எங்கும் பெருகும் உண்மையான அன்புக் கருத்து சாத்தியமாவது இவ்வாறு நோக்கும் போதுதான். எல்லோரும் நம்மோடு அந்த ஒரே முடிவை நோக்கிப் பிரயாணம் செய்பவர்களே; சகோதர மனிதன் மட்டும் அன்றி, சகோதர விலங்கு, சகோதரத் தாவரம்,—நல்ல சகோதரன் மட்டும் அன்றிக் கெட்ட சகோதரனுங் கூட—ஆன்

மிக நோக்கமுள்ள சகோதரனும் பாவியான சகோதரனுங்கூட, எல்லோரும் ஒரே முடிவை நோக்கித்தான் போகின்றனர். எல்லோரும் ஒரே ஆற்றிலேதான் மிதந்து போகின்றனர். ஒவ்வொருவரும் முடிவில்லாத அந்த விடுதலையை நோக்கியே விரைகின்றனர். இந்த ஓட்டத்தை நிறுத்த யாராலும் இயலாது; யாரும் எவ்வளவு முயன்றாலும் பின்னோக்கிப் போகவும் இயலாது; முன்னோக்கியேதான் தள்ளப்படுவர்; முடிவில் விடுதலையும் பெற்றே தீருவர். நம் இருப்பின் மையத்திலுள்ள விடுதலையிலிருந்து எறியப்பட்டது போன்ற நிலையிலுள்ள நாம் போராடி மறுபடியும் பழைய நிலையை அடையச் செய்யும் முயற்சிதான் படைப்பு. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் இருப்பதே, நாம் மையத்தை நோக்கி முன்னேறுகிறோம் என்பதைக் காட்டுகிறது; இப்படி மையத்தை நோக்கி நம்மை இழுக்கும் சக்தியின் வெளித் தோற்றத்தையே அன்பு என்கிறோம்.

'இந்தப் பிரபஞ்சம் எதிலிருந்து வருகிறது? எதில் தங்கி நிற்கிறது? முடிவில் எங்கே போகிறது?' என்னும் கேள்விகள் பிறக்கின்றன. 'இது அன்பிலிருந்து வருகிறது; அன்பில் தங்கி நிற்கிறது; முடிவில் அன்புக்கே போகிறது,' என்பதுதான் பதில். ஆக விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், எவரும் பின்னோக்கிப் போக இயலாது என்பது நமக்கு இதனால் தெரிகிறது. எவ்வளவுதான் பின்னோக்கிப் போக ஒருவர் முயன்றாலும், அவர் எப்படியும் மையத்துக்குப் போய்த்தான் தீரவேண்டும். அதை நோக்கிப் போகும் இந்தப் போராட்டம் ஒவ்வொருவரும் அறிந்து தாமாகவே செய்யும் முயற்சியாக இருக்குமானால், வழிப்போக்கு எளிதாக இருக்கும்; இடையில் உள்ள அதிர்ச்சி குறையும்; விரைவாய் அங்கே போய்ச் சேர இயலும். 'எல்லா வகை அறிவும், எல்லாவகைச் சக்திகளும் நமக்கு உள்ளேயே இருக்கின்றன, வெளியிலல்ல' என்னும் இன்னொரு முடிவும் இயற்கையாகவே நமக்குக் கிடைக்கிறது. நாம் இயற்கை என்று சொல்லுவது முகம் பார்க்கும் கண்ணாடிதான்—இதுதான் இயற்கையின் பயன். உள்ளே உள்ளது இந்த இயற்கையாகிய கண்ணாடியில் பிரதிபலிப்பதுதான், அறிவெல்லாம். சக்திகள், இயற்கையின் இரகசியங்கள், விசை ஆகிய எல்லாமே உள்ளே இருப்பவைகளே. வெளியுலகில் இருப்பவை தொடர்ச்சியான மாறுதல்களே. இயற்கையில் அறிவு எதுவும் இல்லை. எல்லா அறிவும் ஆன்மாவிலிருந்து உண்டாவதுதான். ஒழிவில்லாத காலமெல்லாம் முன்னரே உள்ளிருக்கும் அறிவை, மனிதன் வெளிப்படுத்துகிறான்,

தனக்குள்ளேயே கண்டறிகிறுன். ஒவ்வொருவருமே ஞானத்தின் உருவம், ஆனந்தத்தின் உருவம்; நித்திய இருப்பின் வடிவம். எனவே, சமத்துவம் பற்றியவரை, நீதிப் பயன் நாம் முன்னறிந்துள்ளபடி ஒரே மாதிரிதான்.

தனி உரிமை என்பதுதான் மனித வாழ்வைக் கெடுக்கும் நஞ்சு. இரண்டு சக்திகள் வேலை செய்து வருகின்றன; ஒன்று, சாதியை உண்டாக்குகிறது; மற்றென்று, சாதியைத் தகர்க்கிறது. வேறு வகையாகச் சொன்னுல், ஒன்று, உரிமைக்குச் சாதகமானது; மற்றென்று, பாதகமானது. எப்பொழுதெல்லாம் இந்த உரிமை உடைபடுகிறதோ, அப்பொழுதெல்லாம் அந்த இன மக்களுக்கு அதிக ஞானமும் முன்னேற்றமும் ஏற்படுகின்றன. நம்மைச் சுற்றிலும் எங்கும் இந்தப் போராட்டத்தைக் காண்கிறோம். எளியவனை வலியவன் நசுக்கும் விலங்கினமான உரிமை முதலில் நிற்கிறது. அடுத்தபடியானது பணத்திஞல் வரும் உரிமை. பணம் அதிகம் உள்ளவன் பணம் குறைந்தவனைவிடச் சற்று அதிக உரிமையை விரும்புகிறுன். நுட்பமான, ஆனுல் அதிகச் சக்தி வாய்ந்த அறிவு காரணமான உரிமை அடுத்த படியில் நிற்கிறது. ஒருவனைவிடச் சற்று அதிகம் தெரிந்த ஒருவன், தெரியாதவன்மேல் ஆட்சி செலுத்த விரும்புகிறுன். கடைசியானது—ஆனுல் மிகவும் மோசமானது—மிகக் கொடூரமான உரிமை—ஆன்மிக சம்பந்தமானது. ஒருவர் தமக்கு ஞானத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அதிகம் தெரியும் என்று நினைத்தால், அவர் மற்ற எல்லோர் மேலும் ஆதிக்கம் செலுத்த உரிமை கொண்டாடுகிறுர். "பாமர மக்களே, ஆட்டு மந்தைகளே, நீங்கள் வந்து எங்களைப் பூசியுங்கள்; நாங்கள் இறைவரிடமிருந்து செய்தியைக் கொண்டு வருபவர்கள்; நீங்கள் எங்களை வழிபட்டே ஆகவேண்டும்," என்று முழங்குகிறுர்கள். வேதாந்தியாய் இருக்கும் எவரும் எந்த வகையான உரிமைகளையும்—மனம், உடல், ஆன்மா சம்பந்தமான உரிமை எதையும்—ஒப்புக்கொள்ளவேமாட்டார். ஒவ்வொருவரிடத்திலும் உள்ளது ஒரே சக்திதான். ஒருவரிடம் அது மிகுதியாய் ஒளி விடுகின்றது; இன்னொருவரிடம் குறைவாய் இலங்குகின்றது; ஆனுல், உள்ளே அடங்கியிருக்கும் சக்தி ஒன்றுதான். உரிமைக்கு ஆதாரம் என்ன? எல்லா அறிவும் ஒவ்வோர் ஆன்மாவிலும் உறைகின்றது; சிறிதும் ஞானமில்லாத மனிதனது ஆன்மாவிலும் திகழ்கின்றது. அவனிடம் அது விளக்கம் பெறவில்லை; ஒரு வேளை அவனுக்கு வாய்ப்பு இருக்கவில்லை போலும். சூழ்நிலை ஒரு வேளை அனுகூலமாய் இல்லாமல்

இருந்திருக்கலாம். அவனுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்போது அது தானாகவே அவனிடம் விளங்கித் தோன்றும். ஒருவன் மற்றவனைவிட உயர்ந்தவன் என்பதற்கோ, ஒரு நாடு மற்ற நாட்டைவிட உயர்ந்தது என்பதற்கோ வேதாந்தத்தில் இடமே இல்லை. அவற்றை ஒரே சூழ்நிலையில் வையுங்கள்; ஒரே வகையான அறிவு வளர்கிறதா, இல்லையா பாருங்கள். இப்படிச் சோதிப்பதற்கு முன் ஒரு நாடு மற்ற நாட்டைவிட உயர்ந்தது என்று சொல்லும் உரிமை நமக்கு இல்லை. ஆன்மிக விஷயத்திலோ, உரிமை பாராட்ட இடமே இல்லை. சமூக சேவை செய்வதே உரிமையாம்; ஏனெனில் இது இறை வழிபாடே. நம் கண் முன் காணும் எல்லா மனித உருவங்களுக்குள்ளும் ஆன்மாக்களுக்குள்ளும் கடவுள் வீற்றிருக்கிறார். அவர்தாம் மனிதர்களுக்குள் விளங்கும் ஆன்மா. எனவே, மனிதன் என்ன தனி உரிமை பாராட்ட இயலும்? இறைவரின் தனித் தூதர் யாரும் இல்லை; முன்பு இருந்ததும் இல்லை; இனி இருக்கப்போவதும் இல்லை. பெரியதோ, சிறியதோ, எல்லாமே கடவுளின் விளக்கங்களாதலின் சமமே. விளக்கத்தின் அளவிலேதான் வேற்றுமை இருக்கிறது. நித்தியமாகக் கொடுக்கப்பட்டுள்ள அதே நித்தியமான செய்தி சிறிது சிறிதாக அவர்களை வந்தடைகிறது. இந்த நித்தியமான செய்தி எல்லாப் பொருள்களின் இதயத்திலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அங்கே ஏற்கெனவே இருக்கிறது. எல்லோரும் இதை அனுபவத்தில் கொண்டுவந்து வெளிப்படுத்தவே போராடிக்கொண்டிருக்கின்றனர். தகுந்த சந்தர்ப்பங்களில் சிலர் மற்றவர்களைவிடச் சற்றுச் சிறந்த முறையில் அதை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், இந்த அறிவுரையைத் தம்முள் கொண்டிருப்பதில் எல்லோரும் ஒன்றுதான். உயர்வு என்னும் உரிமைக்கு இடம் ஏது? முற்றிலும் அறிவில்லாத ஒருவனும், ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தையுங்கூட முன் தோன்றிய இறைவரின் தூதுவனைப் போன்ற பெருமை உடையவர்களே; இனித் தோன்றப் போகும் தூதுவர்களைப் போன்ற பெருமை உடையவர்களே; எவ்வாறெனில், வரையறையற்ற இந்த உபதேசம் என்றைக்கும் ஒவ்வோருயிரின் உள்ளத்திலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஓர் உயிர் எங்கே இருந்தாலும், அதன் உள்ளத்தில் பரமரின் இந்த வரையறையற்ற உபதேசம் நிலவுகிறது. அது அங்கே இருக்கின்றது. இவ்வுரிமைகளையெல்லாம் உடைத்தெறிவதே அத்துவைதத்தின் பணி. இதுதான் மிகக் கடினமான பணி. இந்தப் பணி, இக்கொள்கை பிறந்த நாட்டிலேதான்—மற்ற நாடுகளை

விட—மிகக் குறைவாக இயற்றப்படுகிறது. உரிமை எந்த நாட்டிலாவது இருக்கிறது என்ருல், அத்துவைதம் என்ற கொள்கை பிறந்த நாட்டிலேதான் இருக்கிறது. இங்கேதான் ஆன்மிகம் காரணமான உரிமையும், பிறப்பு காரணமான உரிமையும் இருக்கின்றன. ஆனுல், பணம் காரணமான உரிமை அவ்வளவு இங்கே இல்லே. (இது ஒரு நன்மை என்றே நான் நினைக்கிறேன்). ஆனுல், பிறப்பு, ஆன்மிகம் பற்றிய உரிமை எங்குமே இருக்கிறது.

வேதாந்த நீதிகளைப் பரப்ப முன்னெருகால் பகீரத முயற்சி நடந்தது. பல நூற்ருண்டுகள் வரை ஓரளவு இதற்குப் பலன் இருந்தது. சரித்திரபூர்வமாகப் பார்க்கும் போது அந்தக் காலமே அந்த நாட்டின் பொற்காலம் என்பது தெரிகிறது. தனி உரிமைகளை உடைத்தெறியப் பௌத்தர்கள் செய்த முயற்சியையே நான் குறிப்பிடுகிறேன். புத்தருடைய துதிப் பாடல்களுக்குப் பயன்பட்ட அழகிய தொடர்களுள் என் நினைப்பில் இருப்பவை பின் வருவனவாகும்: "நீ சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்ப்பவன்; உரிமைகளை அழிப்பவன்; எல்லா மன்னுயிர்களும் சமம் என்று போதிப்பவன்." அவர் சமத்துவம் என்ற இந்தக் கொள்கையைப் புகட்டினர். சிரமணர் சங்கத்தில் இந்தப் போதனையின் சக்தியை ஓரளவு தவருகப் புரிந்துகொண்டனர். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பிரிவினைகளோடு ஒரு சமய சபையை உருவாக்குதற்கு இப்போதனைகளைப் பயன்படுத்த அவர்கள் பல நூறு தடவை முயன்ருர்கள். மக்கள் எல்லோருமே தெய்வங்கள் என்று சொன்ன பிறகு அந்தச் சமூகத்தில் எந்தச் சமய சபையையும் உருவாக்க இயலாது. சமய சம்பந்தமான கொள்கைகளில் ஒவ்வொருவனுக்கும் சுதந்தரம் கிடைத்தது வேதாந்த போதனையின் பலன்களுள் ஒன்ருகும். நாட்டுச் சரிதையில் எல்லாக் காலங்களிலும் இந்தியர் இந்தச் சுதந்தரத்தை அனுபவித்து வருகின்றனர். 'சமயம் காரணமான கொலே, தொல்லே முதலியன இல்லாமல் ஒவ்வொருவனும் தன் விருப்பப்படி சமயக் கொள்கைகளை மேற்கொள்ளும் சுதந்தரம் பெற்ற நாடு இந்தியா ஒன்று தான்,' என்று நாம் பெருமையடைலாம்.

அன்று போலவே இன்றும் வேதாந்த சம்பந்தமான நடைமுறை ஒழுக்கங்கள் அவசியமாய் இருக்கின்றன; இன்று இவற்றின் அவசியம் ஒருகால் அதிகரித்துவிட்டது என்றே சொல்லலாம். அறிவு பெருகியதன் பலனுக இன்று உரிமை பற்றிய கொண்டாட்டம் மிகக் கடுமையாய் இருப்பதைக் காண்கிருேம்.

இறைவர், சாத்தான்; அஹுரமஸ்தா, அஹிர்மன் என்ற கருத்துகளில் கவிதை மிகுதியாய் இருக்கிறது. கடவுளுக்கும் சாத்தானுக்கும் உள்ள வேற்றுமை, சுயநலம் இன்மையும் சுயநலம் உடைமையுமேயாகும். கடவுளுக்குச் சமானமான அறிவு சாத்தானுக்கும் உண்டு; கடவுளுக்குச் சமானமான சக்தியும் அதற்கு உண்டு; ஆனால், புனிதத் தன்மை மட்டும் அதனிடம் இல்லை. இதனாலேதான் அது சாத்தானாகிறது. இதே கருத்தை இக்கால உலகத்தோடு பொருத்திப் பாருங்கள். அறிவும் ஆற்றலும் மிகுந்து, புனிதத்தன்மை இல்லாமையால், மனிதர் சாத்தான்கள் ஆகின்றனர். இயந்திரங்களும் அவை போன்ற சாதனங்களும் செய்யப்படுவதால் அளவில்லாத சக்தி கிடைக்கிறது; எனவே, உலக வரலாற்றிலேயே காணப்படாத அளவுக்கு இன்று உரிமை கொண்டாடுகிறார்கள். வேதாந்தம் இந்த உரிமைக்கு எதிராகப் பிரசாரம் செய்யவும், மக்களின் ஆன்மாக்களின் மேல் ஆட்சி புரியும் இந்தக் கொடுங்கோலைத் தகர்த்தெறியவும் விரும்புகிறது.

கீதையைப் படித்தவர்களுக்குப் பின்வரும் மறக்கவொண்ணுப் பகுதிகள் நினைவில் இருக்கும். "எவனொருவன் கல்வி பெற்ற பிராம்மணனையும் பசுவையும் யானையையும் நாயையும் சண்டாளனையும் சமமாகப் பார்க்கிறானோ, அவனே முனிவன்; அவனே ஞானி." "சமத்துவம் என்ற இந்தக் கருத்து, எவன் உள்ளத்தில் திடமாகப் பதிந்திருக்கிறதோ, அவன் இந்தப் பிறவியை வென்றவனேயாவன்; இறைவர் எல்லோர் பார்வையிலும் ஒருவரே, அவர் தூயவர். எனவே, சம நோக்கோடு தூயவராய் இருப்பவர்கள் இறைவரிடம் வாழ்பவர்கள் எனப்படுவார்கள்." வேதாந்த நீதி நெறியின் சாரம், எல்லோரும் சமம் என்பதே. வெளியுலகை ஆள்வது நமது உள்ளமாகிய உலகுதான் என்பதை நாம் முன்பு கண்டோம். உள்ளம் மாறினால், உலகமும் மாறும்; உங்கள் உள்ளத்தைத் தூயதாக்கின், உலகமும் தூய்மையாக்கப்படும். இவ்வுண்மையை உலகுக்குப் போதிக்க வேண்டிய அவசியம் முன்பு என்றும் இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. நாம் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் விவகாரங்களில் இப்பொழுது அதிக அக்கறை கொள்ளத் தொடங்கிவிட்டோம்; ஆனால், நம்மைப் பற்றிய விவகாரங்களில் சிரத்தை குறைந்துகொண்டே வருகிறது. நாம் மாறினால், உலகமும் மாறும்; நம் உள்ளம் தூய்மையானால், உலகமும் தூய்மையாகும். மற்றவர்களிடம் தீங்கு இருப்பதாக நான் காண்பது எதனால்? என்னிடம் தீங்கு இருந்தாலொழிய நான் தீங்கு காண இயலாது. நான் பலவீனனாய் இருந்தா

லொழியத் துக்கம் நிறைந்தவனுய் இருக்க இயலாது. நான் குழந்தையாய் இருக்கும் பொழுது எனக்குத் துன்பம் தந்தவை இப்போது எனக்குத் துன்பம் தருவதில்லே. என் உள்ளம் இப்போது மாறிவிட்டது; எனவே வெளிப்பொருள்களின் இயல்பும் மாறிவிட்டது. வேதாந்தம் இதைத்தான் சொல்கிறது. தீங்குக்கும் துக்கத்துக்கும் காரணம் ஆய இப்பொருள்களெல்லாம், நாம் சம நோக்காகிய ஒரே நோக்கைப் பெற்ற பிறகு, நமக்கு நகைப்புக்குரிய பொருள்கள் ஆகிவிடும். விடுதலே பெறுவது அல்லது வீடு பெறுவது என்பது இதுதான் என்று வேதாந்தம் உரைக்கின்றது. இந்த ஒரே சமநோக்கினே மேலும் மேலும் பெறுவதே இந்த மோட்சத்தை நெருங்குவதன் அறிகுறி. இன்பத்தையும் துன்பத்தையும், வெற்றியையும் தோல்வியையும் ஒன்ருக நோக்கும் நிலே முதிர முதிர, நம் மனம் முக்தி நிலேயை நெருங்குவதாகும்.

மனத்தை வெல்வது எளிதன்று. ஒவ்வொரு சிறு பொருளும் தன்னே நெருங்கும்போதும், அற்பமான சினமும் அபாயமும் நேரும்போதும், அலே அலேயாகக் கிளம்பும் மனம் எத்தகைய நிலேயில் இருக்க வேண்டும்! மனத்தில் இத்தகைய மாறுதல்கள் ஏற்படும்போது உயர்வைப் பற்றியோ, ஆன்மிகத்தைப் பற்றியோ பேச யாது உள்ளது? மனத்தின் இந்தச் சலன நிலேயை மாற்ற வேண்டும். 'வெளியுலகம் நம்மை எவ்வளவு தூரம் பாதிக்க இயலும்? புறத்தேயுள்ள சக்திகள் அனேத்தும் நம்மைத் தாக்கினும், நம் இடத்திலே அசையாது நிற்க இயலுமோ?' என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும். உலகத்தின் எந்தச் சக்தியும் நம்மை அசைக்க முடியாத நிலேயை நாம் சாதித்துவிட்டால், அப்பொழுதுதான் நாம் விடுதலே பெற்றவர் ஆவோம்; அதற்கு முன்பு ஆகமாட்டோம். இதுதான் முக்தி. இது இங்கேயே கிட்டுவது, வேறெங்குமன்று, இக்கணமே பெறுவது. ஊற்றனேய இக்கருத்திலிருந்துதான்—பல அழகிய கருத்துகளாகிய ஆறுகள் உலகில் பாய்ந்திருக்கின்றன. இவை தம் வெளிப்பாட்டில் பல தவருன கருத்துகளே எழுப்பியிருக்கின்றன, ஒன்றுக்கொன்று முரண் போலவும் தோன்றியிருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திலும் துணிவு மிகுந்த, வியப்பைத் தரும் ஞானியர் பலர் வெளியுலக சம்பந்தத்தை அறுத்து எறிந்துவிட்டுக் காடுகளுக்கும் குகைகளுக்கும் தியானம் செய்யப் போவதைக் காண்கிறேம். இது ஒரு கருத்து. மற்ருெரு புறம் ஒளியும் புகழும் மிக்க சிலர், சமூகத்தில் தோன்றித் தங்கள் சகோதரர்களான

ஏழைகளையும் துன்பப்படுகிறவர்களையும் உயர்த்த முயல்வதையும் காண்கிறும். வெளித் தோற்றத்துக்கு மேற்சொன்ன இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டன போலத் தோன்றுகின்றன. தன் சகோதரர்களை விட்டு விலகிக் குகைகளில் உறையும் மனிதன், தன் சகோதரர்களைச் சீர்திருத்த முயல்பவனைக் கண்டு எள்ளி நகையாடுகின்றுன். "இந்த முயற்சி எவ்வளவு முட்டாள்தன மானது! நமக்கு அங்கே என்ன வேலை இருக்கிறது? மாயை யால் கட்டுப்பட்ட பிரபஞ்சம் மாயைக் கட்டுக்கு எப்போதும் உட் பட்டேதான் இருக்கும். அதை மாற்ற இயலாது," என்று கூறு கின்றுன். இந்தியாவில் உள்ள புரோகிதர் ஒருவரைப் பார்த்து, "வேதாந்தத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?" என்று கேட்டால், "அதுதான் என் மதம்; அதுதான் என் உயிர்; நான் எப்படி அதை நம்பாமல் இருக்க முடியும்!" என்று அவர் சொல் கிறுர். "அப்படியானுல் சரி; 'எல்லா உயிர்களும் சமம்; எல் லாம் ஒன்றே,' என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று கேட்டால், "திண்ணமாக நான் ஒப்புக்கொள்கிறேன்," என்கிறுர் அவர். அடுத்த நொடியிலேயே தாழ்ந்த சாதியான் ஒருவன் அந்தப் புரோகிதரை நெருங்கிவிடுவானுயின் விலகி ஒரு பக்கமாகத் தாவிக் குதிக்கிறுர். "ஏன் அப்படித் தாவிக்குதிக் கிறீர்கள்?" என்றுல், "அவன் தொட்டாலே எனக்குத் தீட்டு வந்துவிடும்," என்கிறுர் அவர். "இப்பொழுதுதானே நாம் எல்லோரும் ஒன்றுதான் என்று சொன்னீர்கள்! ஆன்மாக்களுக் குள் வேறுபாடு இல்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா?" என்று கேட்டால், "அதுவா? இல்லறத்தார் களுக்கு அந்தத் தத்துவம் கொள்கை அளவிலேதான் பொருந் தும். நான் காட்டில் உறையும்போது எல்லோரையும் சமமாகவே பார்ப்பேன்," என்கிறுர். குலப் பிறப்பாலும் செல்வத்தாலும் பெரிய சிறந்த மனிதரான ஆங்கிலேயர் ஒருவரைப் பார்த்து, கிறித்தவரான அவர், மக்கள் சமூகத்தின் சகோதரத்துவத்தை நம்புகிறுரா என்றும், எல்லோரும் இறைவரிடமிருந்து தோன்று பவரல்லவா என்றும் கேட்டுப்பாருங்கள். அவர் 'ஆம்,' என்று தான் பதில் சொல்லுவார். ஆனுல், ஐந்து நிமிடத்துக்குள் அவர் சாதாரண மக்களைப் பற்றி இழிவாகப் பேசுவார். எனவே, இந்த சமத்துவம் பல்லாயிரம் ஆண்டுகளாக வெறுங்கொள்கையளவில் நின்றிருக்கிறதே ஒழிய, நடைமுறைக்கு வரவே இல்லை. எல்லோ ருக்கும் அது விளங்குகிறது, எல்லோரும் அது உண்மை என் பதை ஒப்புக்கொள்கின்றனர்; ஆனுல், அதை நடைமுறையில்

பின்பற்றச் சொன்னுல் மட்டும், "அது நடைமுறைக்கு வரப் பல இலட்சம் ஆண்டுகள் ஆகும்," என்று மொழிகின்ருர்கள்.

அரசன் ஒருவன் இருந்தான். அவன் சபையில் பல வேலையாளர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒவ்வொருவனும் தானே மக்கட்குள் மிக்க உண்மையானவன் என்றும், தான் அரசனுக்காக உயிரை விட ஆயத்தம் என்றும் சொல்லி வந்தான். நாளடைவில் அரச சபைக்கு ஒரு துறவியார் வந்தார். அரசன் அவரைப் பார்த்து, "நம்பிக்கையான இத்தனை வேலையாளர்களைப் பெற்ற அரசன் என்னைப்போல யாரும் இருக்க இயலாது," என்ருன். துறவியார் புன்சிரிப்போடு, "நீ சொல்வதை நான் நம்பவில்லை," என்ருர். "நீங்கள் வேண்டுமானுல் அவர்கள் விசுவாசத்தைச் சோதித்துக்கொள்ளலாம்," என்ருன் அரசன். அவனுடைய ஆட்சி மிக மிக நீடிக்கத் தாம் ஒரு பெரிய வேள்வி செய்யப் போவதாகவும், அதற்கு மிகுதியாகப் பால் பெறுவதற்கு ஒரு சிறு குளம் வெட்டி வைக்கப்படும் என்றும், இரவில் இருளிலே ஒவ்வொரு வேலையாளனும் அதில் ஒரு குடம் பாலை ஊற்ற வேண்டும் என்றும் துறவியார் சொன்னுர். அரசன் புன்முறுவலோடு "இது தானு சோதனை?" என்று கேட்டான். பிறகு அரசன் தன் வேலையாளர்களை அழைத்து நடக்கப்போவதைச் சொன்னுன். எல்லோருமே அந்த யோசனைக்குத் தமது மனமகிழ்ந்த சம்மதத்தைத் தெரிவித்துத் திரும்பிவிட்டனர். நள்ளிரவில் எல்லோரும் அந்தக் குளத்திற்கு வந்து, தம் குடங்களில் இருந்ததை அதற்குள் ஊற்றினர். மறுநாள் காலையில் பார்த்தபோது, குளம் நிறையத் தண்ணீர்தான் இருந்தது. அரசன் வேலையாளர்களை எல்லாம் அழைத்து இதைப்பற்றிக் கேட்டான். அத்தனை குடம் பாலில் தான் ஊற்றும் தண்ணீர் எப்படித் தெரியப்போகிறது என்றே ஒவ்வொருவனும் நினைத்தனன் என்பது விளங்கியது. துரதிருஷ்ட வசமாக நம்முட் பெரும்பாலாருக்கு இதே எண்ணந்தான் இருக்கிறது. கதையில் கண்ட வேலையாளர்கள் புரிந்தது போலவேதான் நாமும் நம் பங்கு வேலையைச் செய்து வருகிறோம்.

'உலகத்தில் சமத்துவம் நிறைந்திருக்கும் போது 'நான் ஒருவன் மட்டும் கொண்டாடும் உரிமை—யாருக்குத் தெரியப் போகிறது?' என்கிருர் புரோகிதர். நம் பணக்காரர்களும் மற்ற நாட்டுக் கொடுங்கோலர்களும் இப்படியே உரைக்கின்ருர்கள். நற்கதி அடைவதற்குக் 'கொடுங்கோலர்களைவிடக் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டவர்களுக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது. கொடுங்கோலர்கள் விடுதலை பெற நெடுங்காலம் ஆகும்; மற்ற

வர்க்குக் குறைந்த காலம் வேண்டியிருக்கும். குள்ள நரியின் கொடுமை சிங்கத்தின் கொடுமையைவிடத் தீவிரமானது. சிங்கம் ஓர் அறை அறைந்துவிட்டுப் பிறகு சற்று நேரம் சும்மா இருக்கிறது. ஆனால், குள்ள நரியோ, தான் கொல்ல விரும்பும் பிராணியை விடாமல் தொடர்ந்து சென்று சமயம் கிடைத்த போதெல்லாம் கொல்ல முயலுகிறது. புரோகிதத் தொழில் இயற்கையாகவே கொடுமையும் இரக்கமற்ற தன்மையும் உள்ள தாகும். புரோகிதர் பலர் தோன்றும் இடத்தில் ஆன்மிகம் குன்றி விடுவதற்கு இதுதான் காரணம். 'உரிமை என்னும் கருத்து ஒழிந்தாற்ருன் சமய உணர்ச்சி தோன்றும்.' என்று வேதாந்தம் ஓதுகின்றது ; அதற்கு முன் சமயமே இல்லை.

இயேசுநாதரின் அறிவுரையை நீங்கள் நம்புகிறீர்களா? "உங்களிடம் உள்ளதை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிடுங்கள்," என்கிருர் அவர். நடை முறையில் காட்டக்கூடிய சமத்துவ போதனை இது. வாக்கியங்களை நலிந்து பொருள் கொள்ள முயல்வது இயலவில்லை. உண்மை உள்ளபடி உரைக்கப்பட்டுள்ளது ; வாக்கியங்களை நலிந்து பொருள் கொள்ள வேண்டா. அந்தப் போதனை இயேசுவுக்குச் செவிசாய்த்த சில யூதர்கட்கே வழங்கப்பட்டது என்று சொல்லக் கேட்டுளேன். மற்றப் பொருள்கட்கும் இதே வழக்கு பயன்படும். வாக்கியங்களைச் சித்திரவதை செய்ய வேண்டா. உண்மையை உள்ளபடி அறிந்து பின்பற்றத் துணியுங்கள். நாம் அவ்வளவு செய்ய முடியாவிட்டாலும் நமது பலவீனத்தை ஒப்புக்கொள்வோம் ; ஆனால், இலட்சியத்தை மட்டும் அழித்துவிடலாகாது. என்ருவது அதை அடைய இயலும் என்ற நம்பிக்கையோடு அதற்காக முயல வேண்டும். உபதேசம் இதோ இருக்கிறது : "உங்களிடம் உள்ளதை எல்லாம் விற்று ஏழைகளுக்கு ஈந்துவிட்டு என் பின் வாருங்கள்." இவ்வாறு ஒவ்வோர் உரிமையையும், உரிமைக்குக் காரணமான ஒவ்வொன்றையும் காலால் மிதித்து நசுக்கி விட்டு, எல்லா மக்களையும் சமமாக நினைக்கும் ஞானத்தைப் பெற முயல்வோமாக. நீங்கள் சிறிது நாகரிகமான மொழி பேசுவதால், தெருவில் போகும் மனிதனைவிட உயர்ந்தவர்கள் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் இப்படி நினைக்கும் போது விடுதலையை நோக்கி முன்னேறுவதில்லை. ஆனால், உங்கள் கால் விலங்குக்கு இன்னொரு வளையத்தைத் தயாரித்துக்கொள்கிறீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, 'ஆன்மிகத்தில் நான் உயர்ந்தவன்,' என்ற அகங்காரம் மட்டும் உங்கள் உள்ளத்தில் புகுந்துவிட்டால், பிறகு உங்

களுக்கு நேர்வது பெருங்கேடுதான். இந்த எண்ணம் மிகக் கடுமையான விலங்காய் முடியும். பணமோ, வேறு வகைப் பற்றோ, இவ்வளவு தூரம் ஆன்மாவைப் பந்தப்படுத்த முடியாது. "நான் மற்றவர்களை விடத் தூய்மையானவன்," என்ற எண்ணம் ஒருவனுக்கு ஏற்படக்கூடிய கொடிய எண்ணங்களுள் எல்லாம் கொடியது. எந்தவிதத்தில் நீங்கள் பரிசுத்தமானவர்கள்? உங்களிடமுள்ள இறைவரே எல்லோருள்ளும் இருக்கிறார். இதை நீங்கள் அறியாவிட்டால், நீங்கள் ஒன்றையும் அறிந்தவர்கள் ஆகமாட்டீர்கள். உயிர்களுக்குள் எப்படிப் பேதம் இருக்க இயலும்? எல்லாம் ஒன்றுதான். ஒவ்வோர் உயிரும் பரமனின் கோவிலே. இது உங்களுக்கு விளங்கினால் சரி; இல்லையானால், இன்னும் ஆன்மிக விழிப்பு உங்களுக்கு உண்டாகவில்லை.

உரிமை

[இது இலண்டனில் சிஸேம் கிளப்பில் ஆற்றிய சொற்பொழிவு.]

பிரகிருதி முழுவதிலும் இரண்டு சக்திகள்—தொழிற்படுவது போலத் தோன்றுகிறது. இவற்றுள் ஒன்று, எப்போதும் பிரித்துக்கொண்டே இருக்கிறது; மற்றொன்று, எப்போதும் ஒன்று சேர்த்துக்கொண்டே இருக்கிறது. ஒன்று, மனிதர்களைத் தனித்தனியாக்க முயல்கிறது; மற்றொன்று, மக்களையெல்லாம் ஒரு திரளாக்கி, வேற்றுமைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமையை வெளிக்கொணர்கிறது. இந்த சக்திகளின் இயக்கம் பிரகிருதியிலும் மனித வாழ்விலும் எல்லாப் பகுதியிலும் தொழிற்படுவதாகத் தெரிகிறது. பௌதிக நிலையில் இந்த இரண்டு சக்திகளின் வேலையும் நன்கு தெரிகிறது. ஒன்று, பொருள்களைத் தனித்தனியாகப் பிரித்து ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக்குகிறது; மற்றொன்று, இப்படிப்பட்ட தனிப்பொருள்களை ஒன்றாக்கி, இனங்களையும் வகுப்புகளையும் உருவாக்கி, குண ஒற்றுமைகளையும் உருவ ஒற்றுமைகளையும் வெளிப்படுத்துகிறது. மனிதனுடைய சமூக வாழ்க்கைக்கும் இது பொருந்தும். சமூக வாழ்வு தொடங்கிய காலத்திலிருந்தே இந்த இரண்டு சக்திகளும் பிரித்தல், சேர்த்தல் ஆகிய தம் வேலைகளைச் செய்து வருகின்றன. இவற்றின் இயக்கம் பல உருவில் வெளிப்படுகிறது; வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் இந்த இயக்கம் வெவ்வேறு பெயரைப் பெறுகிறது. ஆனால், இவற்றின் ஸாரம் எல்லாவற்றிலும் உள்ளது. ஒன்று பிரிக்க, மற்றொன்று ஒன்றாக்குகிறது. ஒன்று சாதியை ஆக்க முயல, மற்றொன்று அதைப் போக்க முயல்கிறது; ஒன்று வகுப்புகளையும் சலுகைகளையும் ஆக்க, மற்றொன்று இவற்றை அழிக்கிறது. இந்தப் பிரபஞ்சமே இந்த இரண்டு சக்திகளின் போர்க்களமாய்த் தோன்றுகிறது. 'ஒன்றுக்கும் இந்தச் சக்தி இருந்தாலும், நாம் இதை முழுப் பலத்தோடும் எதிர்க்க வேண்டும். இந்த ஒற்றுமை சாவுக்கு நம்மைக் கொண்டுபோய் விடும். முழு ஒருமை முழு நாசமே. இந்தப் பிரசஞ்சத்தில் தொழிற்படும், வேறு படுத்தும் சக்தி என்று தொழிற்படாமல் நிற்கிறதோ, அன்றே இந்தப் பிரபஞ்சத்துக்கு

முடிவு ஏற்பட்டுவிடும்,' என்னும் வாதம் ஒருபக்கம் இருக்கிறது. நம் முன்னே தோன்றும் இந்தப் பிரசஞ்சத் தோற்றங்களுக்கெல்லாம் காரணம் இந்தப் பிரிக்கும் சக்தியே ; இணைப்பு இவற்றையெல்லாம் ஒரே தன்மையான உயிரற்ற பொருளாகச் செய்துவிடும். இந்த நிலை வராமல் காக்கவே மனித சமூகம் முயல்கிறது. நம்மைச் சுற்றி இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் உண்மைகளுக்கும் இந்த நியாயமே காட்டப்படுகிறது. பௌதிக உடலிலும் சரி, சமூகப் பிரிவிலும் சரி, பூரண ஒருமை வந்தால், அது இயற்கையின் சாவும் சமூகத்தின் சாவுமாகவே முடியும். கருத்துகளிலும் உணர்ச்சிகளிலும் பூரண ஒருமை நிலை ஏற்பட்டுவிட்டால், மனத்தின் அழிவும் சீரழிவும் உண்டாகும். எனவே, ஒருமை விலக்கப்பட வேண்டும். இதுதான் ஒரு சாரார் வாதம் ; ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு காலங்களில் இது வற்புறுத்தப்பட்டிருக்கிறது ; மொழி மட்டும் வேருகலாம். சாதிகளையும் பிரிவுகளையும் ஆதரிக்க விரும்பும்போதும், சமூகத்தில் ஒரு பிரிவுக்கு மட்டும் உள்ள—மற்றவர்களுக்கு இல்லாத—சலுகைகளை ஆதரிக்க விரும்பும்போதும் பிராமணர்கள் இந்த வழக்கைத்தான் காட்டுகிருர்கள். 'சாதிப் பிரிவினை அழிந்தால் மனித சமூகமே அழிந்துவிடும்,' என்பர். தங்கள் சமூகந்தான் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்ந்து வருகிறது என்பதற்குச் சரித்திரமே சான்று என்று கூறவும் அவர்கள் துணிகின்றனர். ஆக இவ்வழக்கிற்கு வலிமையிருப்பதாகக் காட்டி அதை நாட்டுகிருர்கள். ஒரு தனி மனிதன் நீண்ட நாள் வாழ்வதற்கு எது காரணமாய் இருக்கிறதோ, அது குறுகிய வாழ்வு தருவதை விடச் சிறந்ததாகத் தானே இருக்க வேண்டுமென்று பிரமாணத்தோடேயே அவர்கள் அறைகின்ருர்கள்.

மற்ருெரு பக்கத்தில் எக்காலத்திலுமே ஒருமைக் கருத்தை ஆதரிப்பவர்கள் இருந்துகொண்டேயிருக்கிருர்கள். உபநிடதங்கள், புத்தர்கள், கிறித்துகள் போன்ற சமய குரவர்கள் காலம் முதல், இக்காலம் வரையிலும் புதிய தேசிய ஆசைகளிலும், நசுக்கவும் மிதிக்கவும்படுவோரும் தங்கள் உரிமைகளை இழந்து வரும் கேட்பவற்றிலும், ஒருமையின் வற்புறுத்தல் ஒலித்துக் கொண்டே தான் இருக்கிறது. ஆனுல், மனிதத் தன்மை தன்னை வற்புறுத்தி நிற்கிறது. சில சௌகரியங்களைப் பெற்றவர்கள், அவற்றை விட விரும்புவதில்லை ; எனவே, இதற்குச் சாதகமான வழக்கொன்றைக் கண்டுபிடிப்பரேல், அது எவ்வளவு பட்சபாத

மாகவும் பண்படாததாகவும் இருந்தாலும், அவற்றைப் பற்றுவது கட்டாயமாகும். இது இரண்டு கட்சிகளுக்கும் பொருந்தும்.

தத்துவக் கொள்கையோடு இந்த வழக்கைப் பொருத்திப் பார்த்தால், கேள்விக்கு வேறு உருவம் வந்து விடுகிறது. 'தோன்றும் பொருள்களுக்கிடையே ஒருமையை உண்டு பண்ணும் ஒரு சக்தியை நாம் தேட வேண்டுவதில்லை. இந்த உலகத் தோற்றத்தைக் கொண்டே நாம் திருப்தியடைய வேண்டும். எவ்வளவு துன்பம் நிறைந்ததாகவும் பலவீனமாகவும் தோன்றினாலும் வாழ்க்கையின் தத்துவமே பல வகை வேறுபாடுதான்,' என்று பௌத்தர்கள் சொல்கிறார்கள். 'ஒருமைதான் உள்ளது; பன்மை என்பது வெறுந்தோற்றந்தான்; வெளி வேடந்தான்; நிலையானதன்று,' என்று வேதாந்திகள் சொல்கிறார்கள். 'பன்மையைப் பாராதே; ஒருமையைப் பார்க்க முயல்,' என்று வேதாந்தி சாற்றுகிறான். 'ஒருமையை நாடாதே; அது மயக்கம்; பன்மையையே நாடு'; என்று பௌத்தர்கள் சொல்கிறார்கள். சமயம், தத்துவ ஆராய்ச்சி என்ற இரண்டு துறைகளிலும் கருத்து வேற்றுமை நம் நாள் வரையிலும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. அறிவின் அடிப்படைக் கொள்கைகளின் தொகை மிகச் சிறியது என்பதே இதற்குக் காரணம். தத்துவ ஆராய்ச்சியும் அதனால் வந்த அறிவும், சமயமும் சமய அறிவும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு முடிவைப் பெற்றுவிட்டன. அப்போது கண்ட முடிவுகளையே இன்னும் வேறு வேறு மொழிகளில் நாம் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்; சில சமயங்களில் புதுச் சான்றுகளால் இந்த உண்மைகளுக்கு வளம் அளிக்கிறோம்; அவ்வளவுதான். இன்றுங்கூட வாதப் போர் இதைப் பற்றியேதான். ஒரு கட்சி, வெளித்தோற்றத்தை நாம் பற்ற வேண்டும் என்கிறது; இந்தப் பன்மையெல்லாம் உண்மை என்றே சாதிக்கிறது. 'இந்தப் பன்மை இருந்துதான் ஆக வேண்டும்; அது நீங்கினால் எல்லாமே போய்விடும்,' என்று இது ஆடம்பர வாதம் செய்கிறது. 'நாம் எதை வாழ்வு என்கிறோமோ, அதற்குப் பன்மையே காரணம்,' என்பதே இந்தக் கட்சி. மற்றக் கட்சியோ, துணிவோடு ஒருமையை எடுத்துக் காட்டுகிறது.

நீதி சாத்திரத்துக்கு வந்தால், ஒரு பெரிய வேறுபாடு தெரிகிறது: இந்த விவாதத்திலிருந்து துணிந்து விலகி நிற்பது ஒரு வேளை இந்தச் சாத்திரமே போலும். நீதி என்பது ஒருமையே; இதன் அடிப்படை அன்பு. அது இந்நப் பன்மையைப் பார்ப்ப

தில்லை. நீதி சாத்திரத்தின் ஒரே நோக்கம், இந்த ஒருமையும் ஒரே தன்மையும்தான். மனிதர் இதுவரை கண்டுபிடித்துள்ள மிக உயர்ந்த நீதிமுறைகள் பன்மையை அறியாதனவாம், அதைப்பற்றி ஆராய்வதற்காக நிற்க அவற்றுக்குப் பொழுதில்லை. அவற்றின் ஒரே முடிவு அந்த ஒரே தன்மையை நாடலே. இந்தியரின் மனம்—வேதாந்திகளின் மனம்—தான் செய்த எல்லா ஆராய்ச்சியின் பலனாக இந்த ஒருமையைக் கண்டது; பிறகு அனைத்திற்கும் இந்த ஒருமையையே அடிப்படையாகக் கொள்ள விரும்பியது. ஆனால், இதே தேசத்தில் வேறு வகை மனமுடைய வரும் (பௌத்தர்கள்) இருந்தனர். இவர்களுக்கு எங்குமே ஒருமை புலனாகவில்லை. இவர்களுக்கு உண்மைகள் எல்லாம் பன்மையின் பிண்டந்தான்; ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் சம்பந்தமே இல்லை.

ஒரு பிராமணர் ஏதென்ஸ் நகரிலுள்ள ஸாக்ரட்டீஸைச் சந்தித்த கிரேக்கக் கதை ஒன்றைப் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் தம் புத்தகம் ஒன்றில் குறிப்பிடுகிறார்; இந்தக்கதை எனக்கு நினைவிருக்கிறது: "உயர்வற உயர்ந்த ஞானம் எது?" என்று பிராமணர் கேட்டார். "மனிதனை அறிந்துகொள்வதுதான் எல்லா ஞானத்தின் இலட்சியமும் முடிவும்," என்று பதில் அளித்தார் ஸாக்ரட்டீஸ். "கடவுளை அறியாமல் மனிதனை அறிவது எப்படி?" என்று பிராமணர் கேட்டாராம். ஒருகட்சிக்காரரர், கிரேக்கர்–இக்கால ஐரோப்பியர் அவர்கட்குப் பிரதிநிதிகள்–மனிதனைப் பற்றிய அறிவையே வற்புறுத்தினார்கள். ஆனால், பெரும்பாலும் பழைய உலக மதங்களின் பிரதிநிதியான இந்தியக் கட்சியோ, இறைவனைப்பற்றிய ஞானத்தையே வற்புறுத்தியது. முன்னவர் பிரகிருதியில் இறைவனைப் பார்க்கின்றனர்; பின்னவரோ, இறைவனிடத்தில் பிரகிருதியைப் பார்க்கின்றனர். ஆனால், இப்போது வாழும் நமக்கோ, இந்த இரண்டு கட்சியையும் விட்டு விலகி நின்று நடுவு நிலையை உணரும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பேதம் இருக்கிறது என்பதும், வாழ்க்கை என்பது இருக்க வேண்டுமானால் பேதம் அவசியம் என்பதும் உண்மையே. இந்தப் பேதங்களுக்குள்ளே ஊடுருவும் ஒருமையை இந்தப் பேதங்கள் மூலமாகவே கண்டறியவேண்டும் என்பதும் உண்மை தான். பிரகிருதியில் இறைவரைக் காண்கிறோம் என்பது உண்மை. இறைவருக்குள் பிரகிருதியைக் காண்கிறோம் என்பதும் உண்மைதான். மனிதனை அறியும் ஞானம் உயர்வற உயர்ந்த ஞானந்தான்; மனிதனை அறிவதாலேதான் நாம் இறைவரை

அறிய இயலும். இறைவனை அறியும் ஞானந்தான் உயர்வற உயர்ந்த ஞானம்; இறைவரை அறிவதாலேதான் மனிதனை அறிய இயலும் என்பதும் உண்மைதான். இந்த உண்மைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பது போலத் தோன்றினாலும், மனித இயற்கைக்கு இவை அவசியமேயாகும். பிரபஞ்சம் முழுவதுமே வேற்றுமையில் ஒற்றுமையும் ஒற்றுமையில் வேற்றுமையும் விளங்கும் திருவிளையாடலே யாகும்; வேறுபாடும் ஒருமையும் லீலையேயாகும்; வரையறையற்ற பொருளில் வரையறையுள்ள பொருளின் திருவிளையாடலே ஆகும். ஒன்றை மட்டும் ஒப்புக்கொண்டு மற்றொன்றை மறுக்க இயலாது. ஆனால் இந்த இரண்டும் ஒரே காட்சியில் பெறும் உண்மைகள் என்றோ, ஒரே அனுபூதியிற்கண்ட உண்மைகள் என்றோ கொள்ளவும் இயலாது; என்றும், இவை இப்படியே இருந்துகொண்டுதான் இருக்கும்.

எனவே, இப்போது நாம் நமக்குக் குறிப்பிட்ட பொருளான சமயத்தைப்பற்றி ஆராய்வோம், நீதி நெறியைப்பற்றி ஆராய வேண்டா; உயிர் வாழ்க்கை இருக்கும் வரையில் பேதங்களே இல்லாத ஒரே மாதிரியான உயிரற்ற தன்மை நடக்கக்கூடிய ஒன்றன்று. இந்த நிலை விரும்பத்தக்கதும் அன்று. இதே சமயத்தில் இந்த உண்மையின் மறுபக்கத்தையும் பார்க்கவேண்டும்; ஒற்றுமை ஏற்கெனவே இருக்கும் ஒன்று என்பதுதான் இது. இதுதான் ஒருமை பற்றிய ஆச்சரியமான வாதம்: இந்த ஒருமை புதிதாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றன்று; இது ஏற்கெனவே இருக்கிறது; இந்த ஒருமை உணர்ச்சி இல்லாவிட்டால், பேதங்களையே நாம் பார்க்க இயலாது. கடவுளை நாம் புதுமையாக உண்டாக்க வேண்டுவதில்லை, அவர் என்றுமே இருக்கிறார். எல்லாச் சமயங்களுமே இதை ஒப்புக் கொள்கின்றன. எவன் ஒருவன் வரையறையுள்ள பொருளை அறிந்துவிடுகிறானோ, அவன் வரையறையற்ற பொருளையும் அறிந்தவனாகிறான். சிலர் வரையறையுள்ள பக்கத்தை வற்புறுத்தி, வெளியே இதைத் தாம் கண்டதாகக் கூறினர்; மற்றவர், வரையறையற்ற பக்கத்தை வற்புறுத்தி, தாம் அதை மட்டுமே கண்டதாக உறுதி கூறினர். ஒன்றைக்கண்டு மற்றதைக் காணாமல் இருப்பது என்பது நியாய முரண்பாடு என்பது நமக்குத் தெரியும். எனவே, இந்த சமத்துவம், ஒருமை, பரிபூரணம்—இதை இப்படியும் குறிப்பிடலாகும்—புதுமையாகச் செய்யப்படவேண்டிய ஒன்றன்று; இது ஏற்கெனவே இங்கே இருக்கிறது. இதை உணர்ந்துகொள்ள வேண்

டும், அறியவேண்டும்; அவ்வளவுதான். அதை நாம் அறியினும் அறியாவிட்டாலும், நாம் தெளிவாகச் சொற்களால் விளக்க முடிந்தாலும் முடியாவிட்டாலும், புலனால் அறியும் பொருள் களைப் போன்ற தெளிவும் உறுதியும் இதற்கு இருந்தாலும் இல்லா விட்டாலும், இந்த ஒருமை இருக்கவே இருக்கிறது. நமது மனத் துக்குரிய நியாயம் காரணமாக இதன் உண்மையை நாம் ஒப்புக் கொண்டே தீர வேண்டும்; இல்லையானால், வரையறையுள்ள பொருளை அறிதலே நிகழாது! பொருள்களும் அவற்றின் தன்மைகளும் என்ற பழங் கொள்கையைப் பற்றி நான் இப் போது பேசவில்லை; ஒருமையைப் பற்றியே பேசுகிறேன். இந்த வெளித் தோற்றங்களின் தொகுதிக்கு நடுவே நீங்களும் நானும் வேறு என்ற அறிவின் உண்மையே அதே நிமிடத்தில் நீங்களும் நானும் வேறல்ல என்ற அறிவின் உண்மையைக் கொணர்கிறது. இந்த ஒருமை இல்லை என்றால், ஞானம் என்பதே சாத்தியமில்லாத ஒன்றாகிவிடும். ஒரே தன்மை என்னும் கருத்து இல்லையானால், புலக்காட்சிக்கோ, அறிவுக்கோ இடமே இராது. இரண்டும் ஒன்றுக்கொன்று பக்கத்தே உள்ளன.

ஆதலால் நிலைமைகள் எல்லாம் முற்றிலும் ஒன்றேதான் என்ற நிலை—நீதி நெறியின் இலட்சியம் இதுவானால்—இருக்கவே முடியாத ஒரு நிலையாகும். எவ்வளவுதான் முயன்றாலும், எல்லா மனிதரும் ஒரே வண்ணமாக இருப்பது என்பது இயலாத காரிய மாகும். மனிதர்கள் பல வகைப் பேதத்தோடுதான் பிறப்பார் கள்; சிலருக்கு மற்றவர்களைவிட அதிக ஆற்றல் இருக்கும்; சில ருக்குச் சில இயற்கைத் திறமைகள் இருக்கும்; சிலருக்கு இரா. சிலருக்குப் பூரணமான உடல் இருக்கும்; சிலருக்கு இராது. இதை நாம் தடுத்து நிறுத்த இயலாது. இதே சமயத்தில் நம் காதுகளில் பல குருமார்கள் செய்த உபதேசங்கள் ஒலிக்கின்றன: "ஒரே கடவுள் எல்லா உயிர்களுக்குள்ளும் சமமாக இருப்பதைக் காணும் முனிவர் தம்மைத் தாமே கெடுத்துக் கொள்வதில்லை; இதனால், அவர் உயர்ந்த இலட்சியத்தை அடைகிறார், இந்த ஒருமையில் நிலைத்த மனம் உடையவர் இந்தப் பிறவியிலேயே பிறப்பை வென்றவர் ஆவர். ஏனெனில், கடவுள் தூய்மையான வர்; அவர் எல்லோருக்கும் ஒரே தன்மையர். எனவே, இத் தகையவர் இறைவருக்குள் வாழ்வதாகச் சொல்லப்படுவர்." இது தான் உண்மைக் கருத்து என்பதை நாம் மறுக்க இயலாது.

ஆயினும், வெளி உருவங்களிலும் நிலையிலும் ஒரே தன்மை இருத்தல் ஒரு நாளும் நிகழாது என்ற சங்கடமும் வருகிறது.

ஆனல், உரிமை ஒழிப்பு நாம் அடையக்கூடிய ஒன்றுகும். இந்த உலகத்தார் எல்லோர்க்கும் உரிய முயற்சி உண்மையாக இதுவே. ஒவ்வொரு மனித இனத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் சமூக வாழ்க்கையில் இந்த ஒரே சண்டை இருந்து கொண்டே இருக்கிறது. ஒரு சாரார் மற்றெரு சாராரைவிட இயற்கையிலேயே அறிவு மிக்கவராய் இருக்கின்றனர் என்பதில் சங்கடமில்லை. ஆனல், அதிக அறிவு இருக்கிறது என்ற காரணத்தினல் இக் குழுவினர் அதைப் பெருத மற்றவர்களின் உடற் சுகங்களைக்கூடப் பிடுங்கிக் கொள்வது முறைதானு என்பதுதான் கேள்வி. இந்த உரிமையை ஒழிப்பதற்காகத்தான் போராட்டம் நடைபெறுகிறது. சிலர் மற்றவர்களைவிட உடல் வலிமை பெற்றவராய் இருப்பர்; இவர்கள் பலவீனர்களை அடக்கியாளவோ வெல்லவோ இயலும் என்பது வெளிப்படையான உண்மை. ஆனல், இந்தப் பலம் காரணமாகப் பலம் உள்ளவர்கள் இவ் வாழ்வில் கிடைக்கும் இன்பங்களையெல்லாம் தாங்களே சேகரிப்பது சட்டத்துக்கு ஏற்றதன்று; இதை எதிர்த்துத்தான் போராட்டம் நடைபெறுகிறது. இயற்கையாகவே தமக்கு உள்ள ஆற்றல் காரணமாகச் சிலர் மற்றவர்களைவிட மிகுந்த செல்வம் சேர்த்துக் கொள்ள வல்லாராவது இயற்கை. ஆனல் இந்த ஆற்றல் காரணமாக, பணம் தேட வேண்டி, அவ்வளவு பணம் திரட்ட இயலாத மற்றவர்களைக் காலால் நசுக்குவதோ, அவர்களைக் கொடுமைகளுக்கு உட்படுத்துவதோ சட்ட சம்மதமான செயல் அன்று; இதை எதிர்த்துத்தான் போராட்டம் நடைபெறுகிறது. மற்றவனுக்கு இல்லாத நன்மையை நுகர்வது தான் உரிமை; காலந் தோன்றியது முதலே நீதி நெறியின் இலட்சியம் இதை ஒழிப்பதாகவேதான் இருந்து வருகிறது. இந்த வேலைதான் ஒருமையையும் சமத்துவத்தையும் நோக்கியது; இது பேதத்தையும் அழிப்பதில்லை.

இவ் வேற்றுமைகளெல்லாம் என்றுமே இருக்கட்டும். இவைகளே வாழ்க்கையின் உயிர். நாமும் என்றும் இந்தத் திருவிளையாடலிற் கலந்துகொள்வோம். நீங்கள் செல்வர்களாய் இருப்பீர்கள்; நான் ஏழையாய் இருப்பேன். நீங்கள் பலசாலிகளாய் இருப்பீர்கள்; நான் பலவீனனுய் இருப்பேன். நீங்கள் கற்றவர்களாய் இருப்பீர்கள்; நான் படிப்பில்லாதவனுய் இருப்பேன். நீங்கள் ஆன்மிகத்தில் உயர்ந்த நிலை பெற்றிருப்பீர்கள்; நான்

தாழ்ந்த நிலையில் இருப்பேன். இவற்றால் எல்லாம் கேடு என்ன? நாம் இப்படியே இருப்போம். நீங்கள் உடல் பலமோ அறிவுப் பலமோ அதிகமாகப் பெற்றுள்ள காரணத்தினால் உங்களுக்கு என்னைவிட உரிமை அதிகம் இருக்கக்கூடாது. உங்களுக்குப் பொருள் மிகுதியாய் இருப்பதனால் நீங்கள் என்னைவிடப் பெரியவர்கள் என்ற நினைப்பு வரக்கூடாது. ஏனெனில் இந்தப் பேதங்களை எல்லாம் கடந்து நமக்குள் ஓர் ஒருமை விளங்குகிறது.

பிரபஞ்சப் பொருள்களின் வெளிப் பேதத்தை ஒழிப்பதும், ஒருமை காண்பதும், இதுவரையும் இனியும் நீதி நெறியின் இலட்சியமாய் இருக்க இயலாது, இது இயலாத காரியம். இந்த முயற்சி சாவிலும் அழிவிலுந்தான் கொண்டுபோய் விடும். இந்த வேறுபாடுகளையெல்லாம் மீறி ஒருமை காண்பதும், எல்லாவகைப் பயங்களையும் மீறி இறைவரை நமக்குள்ளே காண்பதும், வெளித் தோற்றமான பலவீனங்களை எல்லாம் மீறி எல்லை யில்லாத பலம் எல்லோருக்கும் உரியது என்பதை அறிந்து ஒப்புக் கொள்வதும், மேலாகத் தெரியும் முரண்பாடுகளை யெல்லாம் கடந்து ஆன்மாவின் நித்தியமான அளவுபடாத சத்துப் பொருளான தூய்மையை அறிந்துகொள்வதுமே நீதி நெறியின் இலட்சியமாக வேண்டும். இதை நாம் உணர வேண்டும். ஒரு கட்சியை மட்டும் பார்ப்பது —நிலைமையில் ஒரு பாதியைமட்டும் ஆராய்வது—ஆபத்தானது; இது சண்டையிலேதான் கொண்டு போய் விடும். எப்படி இருக்கிறதோ, அப்படியே முழுப்பொருளையும் அறிந்துகொண்டு, இதையே அடிப்படையாகக்கொண்டு, இதன் மேல் நின்றபடியே நம் வாழ்க்கையின் ஒவ்வோர் அமிசத்திலும் அதைச் செயலாக்கப் பாடுபட வேண்டும்; தனி மனிதன் என்னும் முறையிலும் சமூகத்தில் ஒருவன் என்னும் முறையிலும் இந்த முயற்சி தொழிற்பட வேண்டும்.

வருங்காலச் சமயம் வேதாந்தமா?

[8-4-1900ல் ஸான் பிரான்ஸிஸ்கோவில் செய்த சொற்பொழிவு.)

சென்ற ஒருமாத காலமாக எனது சொற்பொழிவைச் செவி மடுத்துக்கொண்டிருந்தவர்களுக்கு, இதற்குள் வேதாந்தக் கொள்கை பற்றி ஓரளவு விளங்கியிருக்கும். உலகத்தின் மிகப் பழைய சமயம் வேதாந்தம்; என்றாலும், இன்னும் இது பலர் பின்பற்றும் சமயம் ஆகவில்லை. எனவே, இது 'வருங்காலச் சமயம் ஆகுமா?' என்ற கேள்விக்கு விடை கூறுவது அரிது.

'மக்களுள் மிகப் பலர் பின்பற்றும் சமயமாக இது என்று வது ஆக முடியுமா?' என்பது எனக்குத் தெரியாது என்று தொடக்கத்திலேயே நான் மொழிந்துவிடுகிறேன். அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்ற ஒரு நாட்டினர் எல்லோரையும் என் ருவது இது கவர இயலுமா? ஒருவேளை இயலலாம். ஆயினும் இப்போது நாம் இந்தக் கேள்வியைத்தான் துருவி ஆராயப் போகிறோம்.

எது வேதாந்தக் கொள்கை அன்று என்பதை முதலில் சொல் லத் தொடங்குகிறேன். பிறகு அது என்ன என்பதை உரைக் கிறேன். யாரையும் எதையும் பற்றாத கொள்கையை வேதாந்தம் மிக வற்புறுத்தினாலும், அது வேறு எந்தக் கொள்கைக்கும் பகை அன்று; தான் உண்மை என்றும், முக்கியம் என்றும் கருதும் எந்தக் கொள்கையையும் வேதாந்தம் கைவிடுவதும் இல்லை; அதைப்பற்றி விட்டுக் கொடுப்பதும் இல்லை.

ஒரு சமயத்தை ஆக்கச் சில பொருள்கள் அவசியம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். முதல் முதலாக அவசியமானது ஒரு நூல். ஒரு நூலின் சக்தி மிகவும் வியக்கத்தக்கது! அது எப்படியிருந்தாலும் சரி, மனிதர்களின் நம்பிக்கை குவிவதற்கு மையமாக அது அமைந்துவிடுகிறது. இன்று நடைமுறையில் இருக்கும் எந்தச் சமயத்துக்கும் ஒரு நூல் இருக்கிறது. தருக்க முறையும், விஸ்தாரப் பேச்சும் மக்கள் பேசினாலும் ஒரு நூலி லுள்ள பற்றை விட அவர்களால் இயலுவதில்லை. ஒரு நூல் இல் லாமல் நீங்கள் தொடங்க முயன்ற எந்தச் சமயமும் வெற்றிபெற வில்லை. இந்தியாவில் சமயங்கள் பெரு வெற்றியோடு தொடங் கிச் சில ஆண்டுகள் வாழ்ந்து பிறகு மறைந்துவிடுகின்றன;

இவற்றுக்கு ஆதாரமாக ஒரு நூல் இல்லாததே இதற்குக் காரணம் ஆகும். எல்லா நாட்டுச் சமயங்களுக்கும் இது பொருந்தும்.

உங்கள் நாட்டுச் சிறந்த கருத்துக்கு எடுத்துக்காட்டாகும் யூனிடேரியன் இயக்கத்தின் (Unitarian movement) வளர்ச்சியையும் அழிவையும் ஆராய்ந்து பாருங்கள். மெத்தடிஸ்டு (Methodist), பாப்டிஸ்டு (Baptist) முதலிய கிறித்தவ சமயங்கள் பரவியதுபோல அது ஏன் பரவவில்லை? ஒரு நூல் இல்லாததே காரணம். ஆனால், யூதர்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள், நாடுவிட்டு நாடு துரத்தப்படுகிறவர்கள்; என்றாலும், அவர்கள் ஒற்றுமையாய் இருக்கிறார்கள்; அவர்களுக்கு ஒரு நூல் இருப்பதே இதற்குக் காரணம். பார்ஸிகளைப்பற்றி நினைத்துப் பாருங்கள்: உலகத்தில் உள்ள அவர்கள் எண்ணிக்கை ஒரே லட்சந்தான்! இந்தியாவில் இன்று மிஞ்சி இருக்கும் சமணர்களின் தொகை பத்தே லட்சந்தான். இவ்வளவு குறைவான பார்ஸிகளும் சமணர்களும் இன்று வாழ்ந்து வருவதற்குக் காரணம் அவர்களுக்கு நூல்கள் இருப்பதுதான். இன்று நடைமுறையில் இருக்கும் எல்லாச் சமயங்களுக்கும் நூல்கள் உண்டு.

சமயத்தை ஆக்கத் தேவையான மற்றொரு பொருள், எல்லோரும் மதித்துப் போற்றும் ஒரு மனிதர். இவரை உலக ஈசர் என்றோ, பெரிய ஆசாரிய புருடர் என்றோ மதித்து வழிபடுகிறார்கள். மனிதர்கள் வழிபட அவர்களைப்போன்ற 'உடலோடு கூடிய' ஒரு மனிதர் தேவை. அவதார புருடரோ, ஆசாரிய புருடரோ, தலைவரோ, ஒருவர் வேண்டும். இன்று ஒவ்வொரு சமயத்திலும் இதை நாம் காண்கிறோம். இந்துக்களுக்கும் கிறித்தவர்களுக்கும் அவதார புருடர்கள் இருக்கிறார்கள். பௌத்தர்கள், முஸ்லிம்கள், யூதர்கள் இவர்களுக்கு ஆசாரிய புருடர்கள் இருக்கிறார்கள். எல்லாம் கிட்டத்தட்ட ஒன்றுதான்; மனிதர்களின் வழிபாடு யாராவது ஒரு மனிதரையோ பலரையோ சுற்றியே இருக்க இயலும்.

பலம் உடையதாகவும், தன் கொள்கை சரி என்ற உறுதி உடையதாகவும் இருப்பதற்கு எந்தச் சமயமும், தான் ஒன்றே உண்மை என்று நம்பவேண்டும்; இதுதான் மூன்றாவது தேவை. இந்த நம்பிக்கை இல்லாத எந்தச் சமயமும் மக்களைக் கவர இயலாது.

உதார குணம் வறண்டதாதலால், மக்களது மனத்தில் வெறியை உண்டாக்க இயலாததாதலால், இறக்கிறது. தன்னைத்

தவிர மற்ற அனைத்திலும் பகையை உண்டாக்கும் திறமை இதற்கு இல்லை, இதனால் உதாரம் திரும்பத் திரும்பக் கேட டைகின்றது. இது ஒரு சிலர் மீதுதான் சக்தியைச் செலுத்த இயலும். காரணம் விளங்குவது கடினம் அன்று. உதாரம் நம்மைச் சுயநலம் அற்றவர் ஆக்க முயல்கிறது. ஆனால், சுய நலம் அற்றவராக இருக்க நாம் விரும்பவில்லை; இந்தத் தன்மை யால் கைமேல் கிடைக்கும் இலாபம் எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை. சுயநலத்தால் நமக்கு அதிக இலாபம் கிடைக்கிறது. நாம் ஏழைகளாய் இருக்கும் வரையில், நம்மிடம் அதிகாரம் ஒன்றும் இல்லாத வரையில், நாம் உதாரத்தை ஒப்புக்கொள் கிறோம். எந்தக் கணம் நமக்குப் பணமும் அதிகாரமும் கிடைத்துவிடுகின்றனவோ, அந்தக் கணமே நாம் குறுகிவிடு கிறோம். ஏழை ஒரு குடியரசு வாதி. அவன் பணக்காரன் ஆன வுடனே உயர்குடி அரசு வாதி ஆகிவிடுகிறான். சமயச் சார்பிலும் மனிதத்தன்மை இப்படியே தொழிற்படுகிறது.

ஆசாரியர் ஒருவர் தோன்றுகிறார்; தம்மைப் பின் பற்றுபவர் களுக்கு எல்லா நலனும் உண்டாகும் என்றும், பின்பற்றாதவர் களுக்கு நிலைத்த நியாயமே கிட்டும் என்றும் அவர் பிரசாரம் செய்கிறார். இப்படி அவர் தம் கருத்துகளைப் பரப்புகிறார். பர விக்கொண்டிருக்கும் நடைமுறைச் சமயம் எல்லாமே வெறிமிக் கனவே. எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாக ஒருசமயம் மற்றச் சமயங்களை வெறுக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வெற்றி பெறுகிறது, பலர் அதைப் பின் பற்றுகின்றனர். நான் உலகின் பெரும்பாலான பகுதிகளில் பயணம் செய்திருக்கிறேன்; பல இன மக்களோடு சேர்ந்து வாழ்ந்திருக்கிறேன்; இந்த அனுபவங் களையும் இப்போது உலகெங்கும் நடைமுறையில் இருக்கும் நிலை மைகளைப் பார்க்கும்போது, 'இப்போது எங்கும் முழங்கும் உலக சகோதரத்துவப் பேச்சு இருப்பினும், இப்போதைய நிலைதான் நீடிக்கும்' என்ற முடிவுக்குத் தான் நான் வர நேர்கிறது.

மேற்கண்ட போதனைகளை எல்லாம் வேதாந்தம் நம்புவ தில்லை. முதலாவதாக, நூல் ஒன்றில் அதற்கு நம்பிக்கையில்லை —இதுதான் முதல் சங்கடம். ஒரு நூல் இன்னொன்றைவிட உயர்ந்தது என்பதை அது ஒப்புவதில்லை. இறைவன், ஆன்மா, அறுதியான உண்மை இவற்றைப்பற்றிய எல்லா உண்மைகளும் ஒரே நூலில் அடங்க இயலும் என்பதை அது அழுத்தமாக மறுக்கிறது. உபநிடதங்களைப் படித்தவர்களுக்கு அவற்றின்

பின்வரும் உபதேசம் நினைவிருக்கும்: "நூல்களைப் பயில்வதனால் நாம் ஆன்மாவை உணர இயலாது" என்பது.

இரண்டாவதாக, குறிப்பிட்ட ஒரு மனிதரை வழிபடுதலை அனுமதித்தல் அதற்குப் பெரும்பாடு ஆகிறது. வேதாந்த தரிசனத்தை—அதாவது உபநிடதங்களை—பின்பற்றும் நீங்கள், எந்த மனிதனையும் தனக்கு ஆதாரமாகக் கொள்ளாத சமயம் அது ஒன்றுதான் என்பதை அறிவீர்கள். ஓர் ஆடவனையோ பெண்ணையோ—எவரையும்—வேதாந்திகள், தாங்கள் வழிபடும் பொருளாகக் கொண்டதே இல்லை. அது இயலாத ஒன்று. ஒரு பறவையோ, ஒரு புழுவோ எப்படி வழிபடும் பொருளாக முடியாதோ, அப்படியேதான் மனிதனும். நாம் எல்லோரும் சகோதரர்கள். நம்மிடம் உற்ற வேற்றுமை, தரத்திலேதான் உள்ளது. மிகத் தாழ்ந்த புழுவுக்கும் எனக்கும் வேற்றுமை ஒன்றுமே இல்லை. ஒரு மனிதன் தலைவனாய் நிற்க, பிறர் அவனை வழிபடுவது என்பதோ, ஒருவன் முன்னே நின்று பிறரைத் தன்னோடு இழுத்து உய்ப்பது என்பதோ வேதாந்தம் ஏற்றுக்கொள்ளாத கொள்கை. வேதாந்தத்தில் இதுபோன்ற கொள்கைகளுக்கு இடமே இல்லை. நூலும் இல்லை, வழிபட மனிதனும் இல்லை, ஒன்றுமேயில்லை.

இதனினும் மிக்க சங்கடமாவது இறைவரைப் பற்றியது. உங்கள் நாடாகிய இதில் குடியாட்சியையே விரும்புகிறீர்கள். இத்தகைய குடியாட்சிக் கடவுளைத்தான் வேதாந்தமும் விரும்புகிறது.

உங்களை ஆள அரசாங்கம் ஒன்று இருக்கிறது: ஆனால் அது எந்த மனிதன் கையிலும் இல்லை. ஒருவரது சுய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டதன்று உங்கள் அரசியல்; என்றாலும், உலகில் உள்ள எந்த முடியரசையும்விட வலிமை பெற்றது இது. உண்மையான அதிகாரம், உண்மையான வாழ்வு, உண்மையான சக்தி கண்ணுக்குத் தெரியாத ஒன்றில், உருவம் அற்ற ஒன்றில், யாரும் அல்லாத ஒன்றில் இருக்கிறது என்ற சிந்தனை யாருக்கும் வருவதே இல்லை. மற்றவர்களிடமிருந்து பிரிந்து நீ மட்டும் தனி மனிதனாக நிற்கும்போது நீ ஒன்றுமற்றவன்; ஆனால் உங்களை ஆளும் நாட்டுமக்கள் சமுதாயத்தின் ஓர் அமிசமாக—தனி மனிதத்தன்மை அற்று—நீ நிற்கும்போதோ, நீ மிகப் பெரியோனாகின்றனை. அரசியலில் நீங்கள் எல்லோரும் ஒன்று. நீங்களே மிகப் பெரும் சக்தியுற்றவராகிறீர்கள். ஆனால் இந்தச் சக்தி சரியாய் எங்கே இருக்கிறது? ஒவ்வொருவனும் இந்தச் சக்தியே

ஆவான். அரசன் இல்லை. உங்களுள் ஒவ்வொருவரையும் நான் ஒரே வண்ணமாகத்தான் காண்கிறேன். யாரைக் கண்டும் நான் என் தலையணியைக் கழற்றி உடலை வளைத்து வணங்க வேண்டுவதில்லை. என்றாலும் ஒவ்வொரு மனிதனிடமும் பெருஞ்சக்தி இருக்கிறது.

இதுதான் வேதாந்தம். அரியாதனத்தில் முற்றும் வேறாக அமர்ந்திருக்கும் அரசர் அதன் கடவுள் அல்லர். இப்படியிருக்கும் ஒரு கடவுளை, அஞ்சித் திருப்தி செய்தற்குரிய ஒரு கடவுளை விரும்பும் சமயங்களும் இருக்கின்றன. அத்தெய்வங்களின் முன் விளக்கேற்றி வைத்து, புழுதியில் ஊர்ந்து செல்வர். தங்களை ஓர் அரசன் ஆள்வதில் விருப்பம் ; தங்களை எல்லாம் அடக்கியாளப் பரலோகத்தில் ஓர் அரசன் இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். இந் நாட்டிலிருந்தாவது அரசன் போய்விட்டான் ; பரலோக அரசன் இப்போது எங்கே இருக்கிறான் ? மண்ணுலும் வேந்தன் இருக்கும் இடத்திலேதான் ! இந்த நாட்டில் அரசன் உங்கள் ஒவ்வொருவர்க்குள்ளும் புகுந்துவிட்டான். இந்த நாட்டில் நீங்கள் ஒவ்வொருவருமே இந்நாட்டு மன்னர். வேதாந்த சமயத்தும் அவ்வாறே. நீங்கள் எல்லோரும் கடவுளர்கள். 'ஒரு கடவுள் இருப்பது போதாது. நீவிர் 'ஒவ்வொருவருமே கடவுள்,' என்று சாற்றுகிறது வேதாந்தம்.

இது வேதாந்தத்தை மிகக் கடினமாக்குகிறது. கடவுளைப் பற்றிய பண்டைக் கருத்தை இது போதிப்பதேயில்லை. வானத்தில் மேக மண்டலத்துக்கு மேல் அமர்ந்து, நமது அனுமதியைக் கோராமலே நம் விவகாரங்களை எல்லாம் நடத்திவந்து, தம் விருப்பம் ஒன்றையே காரணமாகக் கொண்டு நம்மையெல்லாம் வெறும் பாழிலிருந்து படைத்தும், தம் விருப்பம் ஒன்றையே காரணமாகக் கொண்டு நம்மையெல்லாம் இடும்பையில் உழலச்செய்த பழங்காலக் கடவுளுக்குப் பதிலாக, எல்லாருள்ளும் இருக்கும் இறைவனை, எல்லாமுமாய் எல்லாருமாய் உள்ளவனை வேதாந்தம் போதிக்கிறது. பெருந்திருவாளனான அரசன், இந்த நாட்டை விட்டே போய்விட்டான் ; விண்ணுடு வேதாந்த சமயத்திலிருந்து போய்விட்டது.

பெருந்திருவாளனான உலக அரசனைக் கைவிட இந்தியாவால் இயலாது. எனவே, வேதாந்தம் இந்திய நாட்டுச் சமயம் ஆக முடியாது. உங்களிடம் குடியரசு இருப்பதால், வேதாந்தம் உங்கள் நாட்டுச் சமயம் ஆக வாய்ப்பு இருக்கிறது. இது உங்கள் சமயம் ஆக வேண்டுமானால், முதலில் இதன் கொள்கைகளை

நீங்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்; நீங்கள் உண்மையான ஆடவரும் பெண்டிரும் ஆகவேண்டும்; மங்கலான கருத்துகளையும் மூடக் கொள்கைகளையும் உங்கள் மூளையிலிருந்து முற்றும் விலக்க வேண்டும்; நீங்கள் உண்மையில் ஆன்மிக வளர்ச்சிபெற விழையவேண்டும். ஆன்மிகம் ஒன்றோடுதான் வேதாந்தம் சம்பந்தமுடையதாகும்.

விண்ணக இறைவன் என்ற கருத்துக்குப் பொருள் என்ன? உலகியல் வாழ்வே. 'நம்முள் ஒவ்வொருவருக்குள்ளும் இறைவர் உறைகிறார்,' என்ற வரையறையற்ற தத்துவந்தான் வேதாந்தத்தின் கொள்கை. மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கும் கடவுளா! இது மிகப் பெரிய கடவுள் நிந்தை அன்றோ! இது முழுதும் உலகியலேயாகும். குழந்தைகள் இப்படி நினைப்பதால் தவறு ஒன்றும் இல்லை; ஆனால், முதியோர்கள் இப்படி போதிக்க முயல்வது மிகவும் அருவருக்கத்தக்க செயலாகும். இதுதான் உண்மை. இது முற்றும் சடப் பொருளைப் பற்றியது; பருமை பற்றியது; புலன்களைப் பற்றியது! இந்தக் கருத்தின் ஒவ்வோர் அமிசமும் வெறுங்களிமண்ணே; வேறொன்றும் அன்று. இதுதானா சமயம்? ஆப்பிரிக்காக் காடுறைவோர்களின் சமயத்தினும் இது அதிகமன்று. இறைவர் ஆன்மா; அவரை ஆன்மாவாகவும் உண்மையாகவும் உணர்ந்து வழிபடவேண்டும். ஆன்மா விண்ணாட்டில் மட்டுந்தானா வாழ்கிறது? ஆன்மா என்பது என்ன? நாம் எல்லோரும் ஆன்மாக்களே. நாம் இதை உணராத காரணம் என்ன? உங்களை என்னினும் வேறாக்குவது யாது? இந்த உடலேதான். உடலை மறந்துவிடுங்கள்; எல்லாம் ஆன்மாவே.

வேதாந்தம் நமக்கொரு நூலை நல்குவதில்லை. ஏனைய மனிதர்களிடமிருந்து பிரிந்து நிற்கும் ஒருவனை இயம்புகிறதில்லை. 'நீங்களே புழுக்கள்; நாங்களே இறைவராகிய கடவுள்' — என்பதில்லை. இவற்றிற்கு வேதாந்தத்தில் இடமே இல்லை. நீ இறைவராகிய கடவுள் என்றால், நானும் இறைவராகிய கடவுளே. எனவே, பாவம் என்பதற்கே வேதாந்தத்தில் இடம் இல்லை. தவறுகள் உள்ளன. ஆனால், பாவம் இல்லை. முடிவில் எல்லாமே நல்லன ஆகிவிடும். சாத்தான் இல்லை; பொருளற்ற அப்பிதற்றல் இல்லை. வேதாந்தம் உலகத்தில் ஒரே ஒரு பாவத்தைத்தான் ஒப்புக்கொள்கிறது. அது இதுதான். ஒருவன் தன்னைப்பாவி என்றோ, மற்றொருவனைப் பாவி என்றோ நினைப்பதுதான் பாவம். இந்த எண்ணந்தான் எல்லாத் தவறு

களுக்கும், அதாவது பாவம் என்று வழங்கும் எல்லாவற்றுக்கும் காரணம். நமது வாழ்க்கையில் பல தவறுகள் நேர்ந்திருக்கின்றன. என்றாலும், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தவறு செய்த புகழ் நமக்குக் கிடைக்கட்டும்! உன்னுடைய கடந்த வாழ்க்கையை நீளப் பார். உனது இக்காலநிலை நல்லதாய் இருந்தால், கடந்த காலத்தில் நீ செய்த தவறுகளும் வெற்றிகளுமே இதற்குக் காரணம். வெற்றிக்கு எல்லாப் பெருமையும் கிடைக்கட்டும்! தவறுகளுக்கும் பெருமை கிடைக்கட்டும்! நடந்தவைகளைத் திரும்பப் பாராதே; முன்னேறிக் கொண்டே இரு.

வேதாந்தத்தில் பாவிக்கோ பாவத்துக்கோ இடம் இல்லை அன்றோ? அச்சப்படுதற்கு உரிய கடவுளும் இதில் இல்லை. நாம் என்றுமே கண்டு அஞ்சாத ஒரே புருடர் இறைவரே, அவர் நமது சொந்த ஆன்மாவே ஆவர். ஆதலால் உனக்கு அச்சமே தோன்ற இயலாத புருடர் உண்டு; அவரே அப்புருடர். எனவே, கடவுளுக்கு அஞ்சுபவனை 'மூடநம்பிக்கைக்காரர்களுள் முதல்வன்,' என்னல் மெய்யன்றோ? தம் நிழலைக் கண்டு அஞ்சுபவர் எவரோ ஒருவர் இருக்கலாம்; ஆனால், அவருமே தம்மிடம் அச்சப்பட மாட்டார். மனிதனது ஆன்மாவே இறைவர். அவரிடந்தான் நீ என்றும் அஞ்ச இயலாது. இறைவரைப்பற்றிய அச்சம் ஒருவன் நெஞ்சில் புகுவது, அவனை நடுங்கச் செய்வது முதலியவை எல்லாம் பொருளற்றவை. நாம் எல்லோரும் பைத்தியக்கார மருத்துவ நிலையத்தில் இல்லாததற்காக இறைவருக்கு நன்றி செலுத்த வேண்டும்! நம்முள் பலர் பைத்தியக்காரர் அல்லரென்றால், 'இறைவரிடம் அச்சம்' என்பது போன்றவற்றை ஏன் கற்பனை செய்கிறோம்? 'மனித இனமே ஏறத்தாழக் கிறுக்கர் கூட்டந்தான்,' என்றார் புத்தர்பிரான். அது முற்றும் உண்மை என்றே தோன்றுகிறது.

நூல் இல்லை; ஆசாரிய புருடர் இல்லை; மனித இயல் கொண்ட தெய்வம் இல்லை. மீண்டும் சொல்கிறேன்; ஐம்புலன் வாழ்வு ஒழியவேண்டும். புலன்களுக்குக் கட்டுப்பட்டவர்களாய் நாம் இருத்தல் கூடாது. இப்போது நாம் இவற்றோடு கட்டுண்டிருக்கிறோம்; பனிமலைகளில் கடுங்குளிரால் மடியும் மனிதர்கள் போல அவர்களுக்குத் தூங்கவேண்டும் என்ற ஆசை தீவிரமாய் இருக்கிறது. "சாவு முன் நிற்கிறது; இந்தத் தூக்கம் அதில் போய் முடியும்," என்று எச்சரித்து, நண்பர்கள் அவர்களை

எழுப்ப முயன்றாலும், அவர்கள், " நான் சாகட்டும் ; என்னைத் தூங்கவிடுங்கள்," என்கிறார்கள். நமக்கு அழிவு வரினும் புலன்கள் சம்பந்தமான அற்பப்பொருளைப் பற்றி நினைக்கிறோம். மிகப் பெரிய பிற பொருள்கள் இருப்பதை நாம் மறந்து விடுகிறோம்.

இறைவர் இவ்வுலகில் ஒருதடவை பன்றியாக அவதரித்தார் என்ற ஒரு புராணக் கதை உண்டு. அவருக்குப் பெண் பன்றி ஒன்று துணையாய் வாய்த்தது. நாளாவட்டத்தில் அவருக்குப் பல பன்றிக்குட்டிகள் பிறந்தன. அவருடைய குடும்பத்தோடு அவர் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தார் ; சேற்று வாழ்க்கையில் இன்பக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தார் ; தமது தெய்விகப் பெருமையும் இறைமையும் அவருக்கு மறந்துபோயின. தேவர் களுக்குக் கவலை மிகுந்துவிட்டது, பன்றி உடலை விட்டு விண்ணுலகுக்குத் திரும்பும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தேவர்கள் மண்ணகத்து வந்தார்கள். ஆனால், இறைவர் அதைச் சற்றும் விரும்பவில்லை ; அவர் தேவர்களைத் துரத்திவிட்டார் ; தாம் மிக்க மகிழ்ச்சியோடு இருப்பதாகவும், தம்மைத் தொந்தரவு செய்ய வேண்டா என்றும் சொல்லிவிட்டார். வேறு வழி அறியாத தேவர்கள், இறைவரின் பன்றி உடலை அழித்து விட்டார்கள். உடனே தம் தெய்விகப் பெருமை அவருக்கு விளங்கியது ; பன்றியாய் இருப்பதில் தாம் எப்படி உவகை காணமுடிந்தது என்பது அவருக்குப் பெருவியப்பாய் இருந்தது.

மக்களும் இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். அருவமான இறைவரைப்பற்றிக் கேட்கும் அவர்கள், " என்னுடைய தனித் தன்மை என்ன ஆவது ? இது போய்விடுமே !" என்கிறார்கள். அடுத்த முறை இந்த எண்ணம் வரும்போது நான் கதையில் சொன்ன பன்றியை நினைத்துக் கொள்ளுங்கள் ; பிறகு உங்கள் ஒவ்வொருவர்க்குள்ளும் புதைந்துகிடக்கும் அளவற்ற இன்பச் சுரங்கத்தை எண்ணிப் பாருங்கள். உங்களுடைய இக்கால நிலையிலேயே நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியைக் காண்கிறீர்கள் ! நீங்கள் யார் என்ற உண்மை உங்களுக்குத் தெரிந்துவிட்டால் புலன்வாழ்க்கையைக் கைவிட இசையாததை எண்ணி வியப்படை வீர்கள். உங்கள் தனித் தன்மையில் என்ன இருக்கிறது ? இது அந்தப் பன்றியின் வாழ்க்கையைவிட எப்படி உயர்ந்தது ? இதையா கைவிட நீங்கள் விரும்பவில்லை ! தெய்வந்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும் !

வேதாந்தம் நமக்கு வழங்கும் அறிவுரை என்ன ? ' உண்

மையை அறிய நீ உனக்கு வெளியே போக வேண்டுவதே இல்லை,' என்பதுதான் அதன் முதல் உபதேசம். கடந்த காலம் எல்லாம், எதிர்காலம் எல்லாம் இங்கேயே — நிகழ்காலத்திலேயே — இருக்கின்றன. யாரும் இறந்த காலத்தைப் பார்த்ததில்லை; உங்களுள் யாராவது பார்த்திருக்கிறீர்களா ? இறந்த காலத்தை நீங்கள் அறிவதாக எண்ணும்போது, நிகழ்காலத்தில் இறந்த காலத்தைக் கற்பனை செய்கிறீர்கள்; அவ்வளவுதான். எதிர்காலத்தைப் பார்க்க வேண்டின், அதையும் நிகழ்காலத்துக்குள் கொண்டு வந்துதான் ஆக வேண்டும். நிகழ்காலம் ஒன்றுதான் உண்மை; மற்றவை வெறுங் கற்பனைகளே. இருப்பதெல்லாம் நிகழ்காலம் ஒன்றுதான். பரம்பொருள் ஒன்றே உள்ளது. உள்ளனவெல்லாம் இங்கேயே இப்போதே சரியாய் இருக்கின்றன. முடிவற்ற இந்தக் காலத்தின் ஒரு விநாடியே மற்ற எல்லா விநாடிகளையும் போன்று முற்றும் முழுமையாயும், அனைத்தையும் உள்ளடக்குவதாயும் இருக்கிறது. இருக்கிறதெல்லாம், இருந்ததெல்லாம், இனி இருக்கப் போவதெல்லாம் நிகழ்காலத்திலேயே இருக்கின்றன. இதற்குப் புறம்பான ஒன்றைக் கற்பனை செய்ய யார் முயன்றாலும் வெற்றி கிடைக்காது.

இம் மண்ணகத்தைப் போன்றதல்லாத விண்ணகத்தைச் சித்திரிக்க எந்த சமயத்தாருக்குத்தான் இயலும் ? இது ஓவியக் கலை. இந்தக் கலை நமக்குப் படிப்படியாகத் தெரிய வருகிறது. ஐம்புலன்களைப் பெற்றுள்ள நாம் இவ்வுலகை நிறம், உருவம், ஒலி முதலிய தன்மைகள் உள்ள பருப் பொருளாகவே காண்கிறோம். எனக்கு மின்புலன் ஒன்று ஏற்பட்டு விடுவதாக வைத்துக் கொள்ளுங்கள்; அப்போது எல்லாமே வேறாகத் தோன்றும். என் புலன்கள் நுட்பத்தன்மை பெறுவதாக வைத்துக் கொள்ளுங்கள்; அப்போது நீங்களெல்லாம் மாறுபட்டே தோன்றுவீர்கள். என்னிடம் மாற்றம் தோன்றினால், உங்களிடமும் மாற்றம் தோன்றுகிறது. நான் புலன்களின் ஆற்றலுக்கு அப்பால் போய்விட்டால், நீங்களெல்லாம் ஆன்மா ஆகவும் இறைவனாகவுமே தோன்றுவீர்கள். பொருள்கள் தோன்றுகிறபடியே இல்லை.

இந்த உண்மையைச் சிறிதுநேரத்தில் அறிவோம், பிறகு காண்போம். சுவர்க்கங்கள் எல்லாம்—எல்லாப் பொருள்களுமே— இப்போது, இங்கேயே இருக்கின்றன. இவைகள் எல்லாம் இறைவரது இருப்பின்மீது காணும் தோற்றங்களே ஒழிய வேறல்ல. இறைவரது இந்த இருப்பு, எல்லா மண்ணுலகங்

களையும் சுவர்க்கங்களையும்விட மிக உயர்ந்தது. இந்த உலகம் கெட்டது என்றும், சுவர்க்கம் வேறு எங்கோ இருப்பதாகவும் மக்கள் நினைக்கிறார்கள். இந்த உலகம் கெட்டது அன்று. உண்மையில் அது இறைவரேதான். இந்த உண்மை அறிவுக்கு எட்டுவது கடினம்; இதை நம்புவது அதைவிட அரிது. நாளைக்குத் தூக்கில் தொங்கப் போகும் கொலையாளியும் இறைவரே, நிறைவுற்ற இறைவரே. இதை உணர்ந்துகொள்வது மிகவும் கடினந்தான்; ஆனால், இதை அறிந்து கொள்ள இயலும்.

எனவே, வேதாந்தம் விவரிக்கும் கொள்கை, உலக சகோதரத்துவம் அன்று; உலக ஒருமைதான். நான், வேறு மனிதன், மிருகம், நல்லது, கெட்டது எல்லாம் ஒன்றே. எங்கும் ஒரே உடல், ஒரே மனம், ஒரே ஆன்மாதான். ஆன்மாவுக்குச் சாவே இல்லை. எங்குமே, சாவு இல்லை; உடலுக்குக் கூடச் சாவு இல்லை; மனத்துக்கும் சாவு இல்லை. உடம்பும் எப்படிச் சாக முடியும்? ஓர் இலை கீழே விழலாம்; ஆனால் மரம் இறந்து விடுகிறதா? இது எப்படித் தொடர்ந்து வாழ்கிறது என்பதைப் பாருங்கள். இந்த பிரபஞ்சமே என் உடம்பு. எல்லா மனமும் என்னுடையவை. எல்லாக் கால்களாலும் நான் நடக்கிறேன். எல்லா வாய்களாலும் நான் பேசுகிறேன். எல்லோருக்குள்ளும் நான் உறைகிறேன்.

ஏன் இதை நான் உணர்வதில்லை? அந்தத் தனித் தன்மை—பன்றித்தன்மைதான்—இதற்குக் காரணம். நீங்கள் மனத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டிருத்தலால் இங்கேதான் நீங்கள் இருக்க இயலும்; அங்கே இருக்கமுடியாது. சாவின்மை என்பது என்ன? 'நமது இந்த வாழ்க்கையே சாவில்லாதது' என்று விடை கூற முன்வருபவர் எவ்வளவு சுருங்கியவர்! 'இந்த உலகம் சாவுக்கு உரியது; இறந்தது; இறைவன் இங்கே இல்லை; பரலோகத்துக்குப் போன பிறகே அமரத்துவம் வரும்,' என்றே பெரும்பாலோர் கருதுகின்றனர். சாவுக்குப் பிறகே கடவுளைப் பார்க்க இயலும் என்பது அவர்கள் கற்பனை. இப்போதே, இங்கேயே அவரைப் பாராதவர்கள், இறந்த பின்னும் அவரைப் பார்க்க மாட்டார்கள். சாவின்மையை எல்லோரும் நம்பினாலும், 'சாவின்மை என்பது, இறந்து பரலோகத்துக்குப் போவதால் வருவதன்று. பன்றித்தனமான இந்தத் தனித்தன்மையை விடுவதாலும், நம்மை ஒரு சிறு உடலோடு சேர்த்துப் பந்தப்படுத்திக்கொள்ளாமையாலும் அது கிடைக்கும்,' என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. 'எல்லாரோடும் நாமும் ஒன்று;

எல்லா உடல்களில் இருப்பதும் நாமே; எல்லா மரங்களின் மூலம் காண்பதும் நாமே,' என்பதை உணர்வதே சாவின்மை ஆகும். இந்த உடம்பின் மூலம் மட்டும் அல்லாமல், எல்லா உடம்புகளின் மூலமாகவுமே நாம் தொட்டு அறிதல் நிகழ்ந்தே தீரும். இரக்கம் என்பது என்ன? இரக்கத்துக்கு— நம் உடலில் தோன்றும் இந்த உணர்வுக்கு — ஏதாவது எல்லை உண்டா? இந்த முழுப் பிரபஞ்சத்தின்மூலமும் நான் உணரும் காலம் விரைவிலே வரக்கூடும்.

இதனுல் வரும் இலாபம் என்ன? இந்தப் பன்றி உடற் சர்ச்சியை, நமது ஒரு சிறு பன்றி உடம்பின் மூலம் கிடைக்கும் சிற்றின்பத்தை விடுவதற்கு நமக்கு மனம் இல்லை. 'இந்த உடற்பற்றை விட்டுவிடு' என்று வேதாந்தம் மொழியவில்லை; 'இந்தப் பற்றுக்கு அப்பாற்போ' என்கிறது. தவம் அவசியம் இல்லை. இரண்டு உடல்களால் கிடைக்கும் இன்பம், ஒன்றுல் கிடைப்பதை விடச் சிறந்ததாகவே இருக்கும்; மூன்று உடல்களால் கிடைப்பது இன்னும் சிறந்ததாக இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட உடல்களுக்குள் உறைதல்! முழுப் பிரபஞ்சத்தின் மூலமும் அனுபவிக்கும் சக்தி எனக்கு வந்துவிட்டால் பிரபஞ்சமே என் உடல் ஆகிவிடுகிறது.

இந்த உபதேசங்களைக் கேட்டு மிகுந்த அச்சம் கொள்கிறவர்களும் உண்டு. அவர்கள் கொடுங்கோலரான ஒரு கடவுளால் படைக்கப்பட்ட சிறு பன்றி உடல்கள் அல்லர் என்பதைக் கேட்கவே விரும்புவதில்லை. "மேலே வாருங்கள்," என்று நான் அவர்களைக் கூப்பிடுகிறேன். "நாங்கள் பாவத்தில் பிறந்தோம். யாராவது ஒருவருடைய கருணையால் அன்றி நாங்கள் மேலே வர இயலாது," என்று அவர்கள் கூறுகிறுர்கள். "நீங்கள் தெய்வ சக்தி உடையவர்கள்," என்கிறேன் நான். "கடவுள் நிந்தை அல்லவா நீ பேசுகிறுய்! உனக்கு இந்தத் துணிச்சல் எப்படி வந்தது! துயரில் உழலும் ஓர் அற்ப சீவன் எப்படி இறைவனுக இயலும்? நாங்கள் பாவிகள்!" என்கிறுர்கள் அவர்கள். இதைக் கேட்டுக் கேட்டு எனக்கு அடிக்கடி அதைரியம் உண்டாய்விடுகிறது. 'நிரயம் என்ற ஒன்று இல்லாவிட்டால், சமயம் எப்படி இருக்க முடியும்?' என்று பலநூறு ஆடவர்களும் பெண்டிர்களும் என்னைக் கேட்டிருக்கிறுர்கள். அவர்கள் தாங்களாகவே விரும்பி நகரத்துக்குப் போனுல், அவர்களைத் தடுக்க யாரால் இயலும்?

நீங்கள் எதைப்பற்றியெல்லாம் கனவு காண்கிறீர்களோ, எதைப்பற்றியெல்லாம் நினைக்கிறீர்களோ, அதை நீங்கள்

படைத்து விடுகிறீர்கள். நீங்கள் நினைப்பதும் கனவு காண்ப
தும் நரகமானால், நீங்கள் இறந்த பின் நரகத்தைக் காண்பீர்கள் ;
தீங்கு ஆனால், சனியைக் காண்பீர்கள் ; பேய் பிசாசுகள் ஆனால்,
பேய் பிசாசுகளைக் காண்பீர்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்
களோ, அப்படியே ஆய்விடுகிறீர்கள். சிந்திக்க வேண்டுமானால்,
நல்ல எண்ணங்களையே, சிறந்த எண்ணங்களையே சிந்தியுங்கள்.
நீங்கள் பலவீனமான சிறு புழுக்கள் என்று எண்ணவேண்டா.
நாம் பலவீனர்கள் என்று நிச்சயப்படுத்திக்கொண்டால், அப்
படியே ஆகிவிடுகிறோம் ; இதனால், நாம் முன்னேறுவது தடை
படுகிறது. விளக்கையும் அணைத்துவிட்டு, பலகணிகளையும்
மூடிவிட்டு, 'அறை இருட்டறை! இருட்டறை!' என்று சொல்வ
தாக வைத்துக்கொள்வோம். இது எவ்வளவு பேதைமை ! 'நான்
பாவி!' என்று சொல்லிக்கொள்வதால், ஏதாவது இலாபம்
உண்டா ? நாம் இருட்டில் இருந்தால், விளக்கை அல்லவா ஏற்
றிக்கொள்ள வேண்டும் ? உடனே இருட்டெல்லாம் போய்விடும்.
என்றாலும், மனித இயல்பு எவ்வளவு வியப்பானது ! தங்கள்
வாழ்க்கையின் பின் அகண்ட மனம் இருப்பது தெரிந்தும்,
மக்கள் சனீசுவரனையும், இருட்டையும், பொய்யையும் பற்றியே
அதிகம் நினைக்கிறார்கள். நாம் உண்மையை உரைத்தாலும்
அவர்கள் அதைப் புரிந்துகொள்வதில்லை; இருட்டையே அவர்கள்
அதிகம் விரும்புகிறார்கள்.

இதுவே வேதாந்தம் கேட்கும் ஒரு பெரிய வினாவாகிறது.
மக்கள் ஏன் இவ்வளவு அச்சப்படுகிறார்கள் ? தங்களை உதவி
யற்றவராகவும் பிறரைச் சார்ந்து வாழ்பவர்களாகவும் செய்து
கொண்டுவிட்டதே இந்த அச்சத்துக்குக் காரணம். நாம் அவ்வ
ளவு சோம்பேறிகளாய் விட்டோம். நமக்கென எதுவும் செய்து
கொள்ள நாம் விரும்புவதே இல்லை. உருக்கொண்ட தெய்வமோ,
ஆசாரிய புருடரோ, மகா புருடரோ தோன்றி நமக்காக எல்லாம்
செய்ய வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். பெரிய பணக்
காரன் நடப்பதே இல்லை ; எப்போதும் வண்டியிலேயே
போகிறான். இப்படிப் பல ஆண்டுகள் கடந்தபிறகு ஒரு நாள்
அவன் தன்னைப் பாரிச வாயு தாக்கியிருப்பதைத் திடீரென்று
உணர்கிறான். தான் வாழ்ந்த முறை சரியன்று என்பதை அவன்
உணரத் தொடங்குகிறான். எனக்காக எவரும் நடக்க இயலாது.
எப்பொழுதெல்லாம் இன்னொருவர் எனக்காக நடந்தார்களோ,
அப்பொழுதெல்லாம் எனக்கு ஒரு கேடு நேர்ந்தது. ஒருவனுக்
காக எல்லாம் இன்னொருவன் செய்து வந்தானானால், அவன் தன்

அவயவங்களைப் பயன்படுத்தும் திறமையை இழந்துவிடுவான். நாமே செய்யும் ஒன்றே நாம் செய்வதாகும். நமக்காக வேறொருவர் செய்யும் எந்தக் காரியமும் நம்மது ஆகாது. என்னுடைய பிரசங்கங்களால் மட்டும் நீங்கள் ஆன்மிக உண்மைகளை அறிந்து கொண்டு விட முடியாது. அப்படி நீங்கள் ஏதாவது அறிந்து கொண்டிருந்தால், நான் உங்கள் உள்ளிருந்த அதனை வெளிக் கொணர, விளங்கச் செய்யக் காரணமான ஒரு தீப்பொறியே ஆவேன். மகான்களும் ஆசாரியர்களும் இதைத்தான் செய்ய இயலும். உதவிக்காகப் பிறரைத் தேடி ஓடுவது முட்டாள்தனம்.

இந்தியாவில் இரட்டைமாட்டு வண்டிகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். இரண்டு மாடுகளை வண்டியில் கட்டுவது வழக்கம். சிலசமயம் நுகத்தடியிலிருந்து ஒரு கற்றை வைக்கோலை மாடுகட்குச் சற்று முன்பு—ஆனால் அவற்றின் வாய்க்கு எட்டாதபடி—தொங்கவிட்டிருப்பார்கள். மாடுகள் அந்த வைக்கோலைத் தின்ன முயன்றபடி இருக்கும்; ஆனால், தின்ன இயலாது. நமக்குப் பிறரால் கிடைக்கும் உதவியும் இதுபோன்றது தான். ஆபத்திலிருந்து விடுதலை, பலம், ஞானம், இன்பம் இவை நமக்கு வெளியிலிருந்து கிடைக்கும் என்று நாம் எண்ணுகிறோம். இப்படி நாம் என்றுமே எதிர்பார்க்கிறோம்; ஆனால், இந்த நம்பிக்கை முற்றுப் பெறுவதே இல்லை. எப்போதுமே எந்தஉதவியும் வெளியிலிருந்து வருவதே இல்லை.

மனிதனுக்கு வெளி உதவி என்பது இல்லவே இல்லை. என்றும் இருந்ததில்லை; இப்போதும் இல்லை; இனியும் இராது. எதற்காக இருக்கவேண்டும்? நீங்கள் ஆடவரும் பெண்டிரும் அல்லவா? உலக நாயகர்களான உங்களுக்குப் பிறர் உதவி எதற்கு? பிறர் உதவியை நினைப்பது உங்களுக்கு வெட்கமாய் இல்லையா? நீங்கள் மண்ணுகை மட்கிப் போகும் நிலை உங்களுக்கு வந்தால், அப்போது உதவி வரும். ஆனால், நீங்கள் ஆன்மாக்கள்; நீங்களே முயன்று உங்களைத் தாக்கும் இடும்பைகளிலிருந்து விடுதலை பெறுங்கள். உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்களுக்கு உதவி செய்ய யாரும் இப்போது இல்லை; யாரும் முன்பும் இருந்ததும் இல்லை. அப்படி ஒருவர் இருப்பதாக நினைப்பது இன்பந் தரும் ஒரு மயக்கமே ஆகும். அதனால் எவ்வித இலாபமும் இல்லை.

கிறித்தவர் ஒருநாள் என்னிடம் வந்து, "நீங்கள் ஒரு பெரும்பாவி!" என்று கூறினர். "சரி; நான் பெரும்பாவி தான். மேலே என்ன? கதையை நடத்துங்கள்," என்றேன்.

அவர் ஒரு கிறித்து மதப் பணியாளர். அவர் எனக்குச் சற்றும் ஓய்வு கொடுக்கவே இல்லை. அவரைப் பார்த்தால் போதும், நான் ஓடிவிடுவேன்! ''உங்களுக்காக வெகு நல்லவற்றையெல்லாம் நான் வைத்திருக்கிறேன்; நீங்கள் பாவி! நரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறீர்கள்!'' என்றார் அவர். ''சரி, மேலே என்ன?'' என்றேன் நான். பிறகு நான் அவரைப் பார்த்து, ''நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டேன். ''நான் சுவர்க்கத்துக்குப் போகிறேன்,'' என்றார் அவர். ''நான் நரகத்துக்கே போகத் தீர்மானித்துவிட்டேன்,'' என்றேன் நான். அன்றுமுதல் அவர் என்னைத் தொல்லைப்படுத்துவது நின்றது.

ஒரு கிறித்தவர் வந்து, ''நீங்கள் நரகத்துக்குப் போகிறீர்கள். இந்தக் கிறித்தவக் கொள்கையை நம்பினால் ஏசுநாதர் உங்களைக் கரையேற்றிவிடுவார்,'' என்று மொழிகிறார். இது உண்மையானால்—இது வெறும் மூட நம்பிக்கையன்றி வேறன்று என்பது வெளிப்படை—கிறித்தவ நாடுகளில் தீமை இருக்கவே கூடாதே! அந்தக் கொள்கையை நாம் நம்பிப் பார்க்கலாம்—நம்புவதால் இழப்பது ஒன்றும் இல்லையே! ஆனால், இந்த நம்பிக்கையால் ஒரு பலனையும் காணவில்லையே! ''ஏன் இவ்வளவு கெட்டவர்கள் இருக்கிறார்கள்?'' என்று நான் அவர்களைக் கேட்டேன். ''நாங்கள் இன்னும் மிகுதியாகப் பிரசாரம் செய்ய வேண்டும்,'' என்று விடை அளிக்கிறார்கள். இறைவரை நம்புங்கள்; ஆனால், வெடிமருந்து ஈரமாகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்! இறைவரைத் தொழுங்கள்; இறைவர் வந்து உங்களுக்கு உதவி செய்யட்டும்! ஆனால், இந்த உலகத்து இடும்பைகளோடு போராடுவது, இறைவரைத் தொழுவது, வழிபடுவது எல்லாம் என் செயல்கள். என் பிரச்சினைகளுக்கு வழி தேட முயல்பவன் நானே. ஆனால், இதற்கெல்லாம் உரிய பெருமை இறைவர்க்கே போய்விடுகிறது. இது சரியன்று. நான் இப்படிச் செய்வதே இல்லை.

ஒரு தடவை என்னை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார்கள். எனக்கு விருந்தளிக்கும் அம்மையார், இறைவணக்கமும் உணவுக்காக இறைவருக்கு நன்றியும் கூறும்படி எனக்குச் சொன்னார். நான், ''உங்களுக்கு நன்றியும் வணக்கமும் கூறுகிறேன். உங்களுக்கே அவை உரியவை,'' என்றேன். நான் வேலை செய்தால் எனக்கு நானே நன்றி நவிலுகின்றேன். பாடுபட்டு உழைத்து, எனக்கு உள்ளதை நான் பெற்றுக்கொண்டதற்காக எனக்கு நானே நன்றி கூறிக்கொள்கிறேன்.

காலமெல்லாம் நீங்கள் உழைத்துவிட்டு, வேறு ஒருவருக்கு நன்றி கூறும்போதெல்லாம்—இது மூடக் கொள்கை—நீங்கள் அஞ்சுகிறீர்கள் என்பது தெரிகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்த இந்த மூடக் கொள்கைகளுக்கு இன்றோடு விடை கூறிவிடுங்கள். ஆன்மிக நோக்கம் உடையவர்கள் ஆக இன்னும் சிறிது பாடுபட்டு உழைக்கவேண்டும். மூடக் கொள்கைகள் வெற்று உலக போகம் பற்றியவை; இவைகளுக்கு ஆதாரம் உடல் பற்றிய உணர்வுந்தான். இதில் ஆன்மாவுக்கு இடமே இல்லை. ஆன்மாவுக்கு மூடக் கொள்கைகளே இல்லை. உடல் சம்பந்தமான வீண் ஆசைகளுக்கு அப்பாற்பட்டது அது.

ஆனால், இங்கும் அங்குமாகச் சில இடங்களில் இந்த வீண் ஆசைகள் ஆவியுலகிலும் வீழ்த்தப்படுகின்றன. நான் ஆவிகளை வரவழைக்கும் பல கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறேன். ஒரு கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் ஓர் அம்மையார். அவர் என்னைப் பார்த்து, "உங்கள் தாயாரும் பாட்டனாரும் வந்து என்னோடு பேசுகிறார்கள்," என்றார். அவர்கள் அந்த அம்மாளுக்கு வந்தனம் கூறி அவரோடு பேசுவதாகச் சொன்னார். ஆனால், என் தாய் இன்னும் உயிரோடிருக்கிறாள்! சாவுக்குப் பிறகும் தங்கள் உறவினர் அதே உடம்போடு தொடர்ந்து வாழ்கிறார்கள் என்று நினைக்கவே மக்கள் விரும்புகிறார்கள். இந்த மூடக் கொள்கையுடையவரை ஆவிகளை வரவழைப்போர் ஏமாற்றுகின்றனர். இறந்த என் தந்தையார் இன்னும் அந்த ஊன் உடலோடு இருக்கிறார் என்று கேட்கவே எனக்கு வருத்தமாய் இருக்கிறது! தங்கள் தந்தைமார் இன்னும் சட உடலில் அடைபட்டிருக்கிறார்கள் என்று கேட்பதில் மக்கள் ஆறுதல் பெறுகிறார்கள். மற்றோர் இடத்தில் ஏசுநாதரையே என்னோடு பேசச் செய்தார்கள். "பிரபுவே, சுகந்தானா?" என்று நான் கேட்டேன். இதனால் அவநம்பிக்கை என்னைப் பீடிக்கிறது. பெரிய ஞானியாரான ஏசுநாதரே இன்னும் பருவுடலோடு இருக்கிறார் என்றால், அற்பர்களாகிய நம் நிலை என்ன? ஆவி வரவழைப்போர் அந்த மனிதர்களில் எவரையும் தொட என்னை அனுமதிக்கவில்லை. இவை உண்மையானாலும், எனக்கு இவை தேவையில்லை. "தாயே! இவர்கள் நாத்திகர்கள்! உண்மையில் மக்களின் நிலை இதுதான்!—இந்த ஐம்புல ஆசைகளில் அவாவே. இங்கே, இவ்வுலகில் அனுபவிப்பது போதாதென்று இறந்த பிறகும் இவற்றை அதிகம் நுகர விரும்புகிறார்களே!" என்று நினைக்கிறேன்.

வேதாந்தம் கூறும் கடவுள் யார்? அவர் ஒரு தத்துவம்; புருடர் அல்லர். நீங்களும் நானும் உருவம் உள்ள தெய்வங்கள். பூரணமான பிரபஞ்ச இறைவர்—ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களுக்கும் தலைவராய் நிற்பவர்—அருவம் ஆன தத்துவமே ஆவார். நீங்கள், நான், பூனை, எலி, பேய் பிசாசு எல்லாமே அந்தத் தத்துவத்தின் உருவத் தோற்றங் களே—உருக்கொண்ட தெய்வங்களே. உருவம் உள்ள தெய்வங் களை வழிபட நீங்கள் விரும்புகிறீர்கள். அது உங்களையே நீங் கள் வழிபடுவதுதான். என் உபதேசத்தை நீங்கள் கேட்ப தானால், நீங்கள் எந்தக் கோவிலுக்குள்ளும் புக மாட்டீர்கள். வெளியே வந்து, போய் அழுக்கைக் கழுவிக்கொள்ளுங்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக உங்களைப் பற்றி நிற்கும் மூடக் கொள்கைகளை எல்லாம் பல முறை கழுவிக் கழுவி ஒழியுங்கள். ஒரு வேளை இவ்வாறு செய்ய நீங்கள் விரும்பாமல் இருக்கலாம். இந்த நாட்டில் நீங்கள் அடிக்கடி குளிப்பதில்லை அல்லவா?— அடிக்கடி குளிப்பதும் முழுகுவதும் இந்தியர்களின் பழக்கம்; உங்கள் சமுதாயப் பழக்கம் அன்று அது.

"நீங்கள் ஏன் அடிக்கடி சிரிக்கிறீர்கள்? நகைச்சுவை தோன்ற ஏன் பேசுகிறீர்கள்?" என்று என்னைப் பலர் பலமுறை கேட்டிருக்கின்றனர். எனக்கு வயிற்று வலி இருக்கும்போது சில சமயம் நான் கடுகடுப்புடையவனாய் மாறிவிடுவது உண்டு! இறைவர் ஆனந்தமே உருவானவர். உள்ள பொருள்களுக்குப் பின்னுள்ள மெய்ப்பொருள் அவர். ஒவ்வொரு பொருளிலும் உள்ள நன்மையும் உண்மையும் அவரே. நீங்கள் எல்லோரும் அவருடைய அவதாரங்கள். அது எவ்வளவு பெருமையானது! நீங்கள் அவரை நெருங்க நெருங்க அழுகைக்கும் கூச்சலுக்கும் சமயம் குறையும். அவரை விட்டு விலகும் அளவிற்கு நமது முகம் தொங்கும். அவரை அறிவதற்கேற்ப துக்கமும் குறையும். இறைவருள் வாழும் ஒருவனையும் துன்பம் பாதிக்கும் என்றால், அவருள் வாழ்வதால் பயன் என்ன? அத்தகைய இறைவராலேதான் பயன் என்ன? அந்தக் கடவுளைப் பசிபிக்கு மகா சமுத்திரத்தில் வீசி எறிந்துவிடுங்கள். நமக்கு அவர் தேவை இல்லை.

இறைவர் முடிவற்றவர்; வடிவம் இல்லாதவர்; என்றும் உள்ளவர்; என்றும் மாறாதவர்; அழிவில்லாதவர்; அச்சம் இல்லாதவர். நீங்கள் எல்லோரும் அவருடைய அவதாரங்கள்; அவரது உருவத் தோற்றங்கள். இதுவே வேதாந்தக் கடவுள்.

அவருடைய பரலோகம் எங்கும் உள்ளது. இந்தப் பரலோகத்திலேதான் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா உருவக் கடவுளரும் இருக்கிறார்கள்—நீங்களும் உட்பட. கோவில்களில் தொழுகையும் மலர் தூவுவதும் வெளியேறுக.

நீங்கள் எதற்காகத் தொழுகிறீர்கள்? பரஉலகத்துக்குப் போகவா? ஏதோ ஒன்றை நீங்கள் அடையவா? வேறு யாரோ ஒருவருக்கு அது கிடைக்காமல் இருக்கவா? "இறைவனே, எனக்கு இன்னும் அதிக உணவு வேண்டும்; வேறு யாராவது பட்டினி கிடக்கட்டும்!" கடவுளைப்பற்றி இப்படியுமா ஒரு கருத்து! உண்மையாய், முடிவற்றவராய், ஆனந்தமே உருவாய், பகுதியோ குறையோ எதுவும் இல்லாதவராய், என்றும் சுதந்தரராய், என்றும் தூயவராய், என்றும் நிறைவுற்றவராய் நிற்கும் இறைவரையா இப்படிக் கருதுவது! நம் மனிதத் தன்மைகள், தொழில்கள், கட்டுப்பாடுகள் இவற்றையெல்லாம் இறைவருக்கு நாம் சூட்டுகிறோம். அவர் நமக்குச் சோறு, துணி எல்லாம் கொண்டுவந்து தரவேண்டும். உண்மை என்ன? இந்தச் செயல்களை எல்லாம் நமக்கு நாமேதான் செய்துகொள்ள வேண்டும்; யாரும் இவற்றை என்றும் நமக்காகச் செய்ததில்லை; இதுதான் கலப்பற்ற உண்மை.

ஆனால், இதைப்பற்றி யார் நினைக்கிறார்கள்? இறைவருக்கு நீங்கள் மிக வேண்டியவர்கள் என்றும், நீங்கள் கேட்பதை எல்லாம் கேட்கும்போது அவர் தருகின்றார் என்றும் நீங்கள் கற்பனை செய்து கொள்கிறீர்கள். நீங்கள் அவரிடம் எல்லா மக்களுக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை வேண்டும் என்று கேட்பதில்லை; உங்களுக்கும், உங்கள் குடும்பத்துக்கும், உங்களுக்கு வேண்டியவர்களுக்குமே நன்மை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறீர்கள். இந்து பட்டினி கிடக்கும் போது நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. கிறித்தவர்களுக்கு யார் இறைவரோ, அவரே இந்துக்களுக்கும் இறைவர் என்பது அப்போது உங்களுக்குத் தோன்றுவதில்லை. கடவுளைப் பற்றிய நம் கருத்து, நமது வணக்கம், நமது வழிபாடு ஆகிய எல்லாமே நம் அஞ்ஞானத்தினால், நம்மை உடலாக எண்ணும் பேதைமையால் கெட்டுவிடுகின்றன. நான் சொல்வது உங்களுக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். இன்று என்னை நீங்கள் சபிக்கலாம்; ஆனால், நாளைக்கே நீங்கள் என்னை வாழ்த்துவீர்கள்.

நாம் சிந்தனையாளர்கள் ஆகவேண்டும். ஒவ்வொரு பிறப்பும் துன்பந்தருவது. நாம் உலகாயதக் கொள்கையிலிருந்து விடுபட

வேண்டும். என் தெய்வத்தாய், நான் அவள் வசமிருந்து விடுபட அனுமதிக்க மாட்டாள். என்றாலும், நாம் முயலவேண்டும். இப் போராட்டந்தான் வழிபாடு, எல்லாம். மற்றவெல்லாம் வெற்று நிழலேதான். நீங்களே உருப்பெற்ற தெய்வங்கள். இதோ இப்போது நான் உங்களை வழிபட்ட வண்ணம் இருக்கிறேன். இதுதான் மிகப் பெரிய வழிபாடு. இந்தப் பொருளில் உலகம் முழுவதையும் வழிபடுங்கள்; அதாவது, உலகுக்குப் பணி புரியுங்கள். ஒரு பெரிய மேடைமேல் நான் நிற்பது வழிபாடு போலத் தோன்றவில்லை. ஆனால், நான் செய்வது பணியானால், அது வழிபாடுதான்.

முடிவற்ற உண்மையை வெளியிலிருந்து பெற இயலாது. அது இங்கேயேதான் இருக்கிறது, இறப்பும் பிறப்பும் அற்ற நிலையில், உலகநாதரான இறைவர் எல்லோருக்குள்ளும் இருக்கின்றார். ஒரே ஒரு கோவிலே உண்டு; அதுதான் உடல். உள்ள கோவில் அது ஒன்றுதான். ஆன்மாக்களுக்கு அதிபதியாகவும், அரசருக்கு அரசராகவும் இருக்கும் இறைவர், அந்த உடலுக்குள்ளே உறைகிறார். இது நமக்குத் தெரிவதில்லை. எனவே, நாம் அவரைப் போலும் கல் உருவங்கள் செய்கிறோம், அவருக்குக் கற்கோயில் கட்டுகிறோம். வேதாந்தம் என்றுமே இந்தியாவில் இருந்திருக்கிறது. என்றாலும், இந்தியா கோவில்கள் நிறைந்த நாடு. கோவில்கள் மட்டும் அன்றி, செதுக்கிய உருவங்கள் நிறைந்த குகைகளும் உண்டு. "கங்கைக்கரையில் வாழும் முட்டாளே குடிதண்ணீருக்காகக் கிணறு வெட்டுவான்." நாமும் அவன் போன்றவர்களே. இறைவருக்கு நடுவிலேயே வாழும் நாம் சோவில் கட்டுகிறோம். உருவ வழிபாட்டில் அவரை வெளியே படைக்கிறோம்; ஆனால், நம் உடலாகிய கோவிலுக்குள், அவர் இருக்கிறார். நாம் பித்தர்கள், இதுதான் பெரும் மயக்கம்.

எல்லாவற்றையுமே இறைவராக எண்ணித் தொழுங்கள், எல்லா உருவமும் அவர்தம் கோவில்களே. மற்றவையெல்லாம் மயக்கம். எப்போதும் உள்ளேயே பாருங்கள்; வெளிப் பார்வையே வேண்டா. வேதாந்தம் ஓதும் தெய்வம் இது; செய்யும் வழிபாடு இது. இயற்கையாகவே வேதாந்தத்தில் சாதி, மதம் என்ற பாகுபாட்டுக்கே இடம் இல்லை. இந்தச் சமயம் எப்படி இந்தியர்களின் சமுதாய சமயமாக இருக்க இயலும்?

பலநூறு சாதிகள் உள்ளன! ஒருவன் மற்றவனுடைய உணவைக் கையால் தொட்டுவிட்டால் போதும்! 'அட, கடவுளே!

தீட்டாகிவிட்டதே!' என்று அவன் கூக்குரல் இடுகிறான். மேலை நாடுகளுக்கு வந்து நான் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்ற போது, நான் மேலை நாட்டாரோடு கலந்து பழகியதையும், வைதிக விதிகளை மீறியதையும் கண்டித்துப் பல வைதிக வெறியர்களான இந்துக்கள் பெரிய கூக்குரல் எழுப்பினார்கள். மேலை நாட்டாருக்கு வேதங்களின் உண்மைகளை நான் எடுத்துச் சொல்வதை அவர்கள் விரும்பவில்லை.

இந்த வேற்றுமைகளுக்கும் பிரிவுகளுக்கும் ஆதாரம் எங்கே? 'நாம் எல்லோரும் அருவ ஆன்மாக்கள்; சமமான தன்மை உடையவர்கள்,' என்றால், பணக்காரன் ஏழையைக் கண்டு அலட்சியம் செய்வதற்கோ, அறிஞன் அறிவிலியைப் புறக்கணிப்பதற்கோ இடம் ஏது? சமூகம் முற்றும் மாறினால் அன்றி, வேதாந்தம் போன்ற மதம் வேரூன்ற வழி ஏது? உண்மையான தருக்கஅறிவு வாய்ந்த மக்கள் உலகில் தோன்ற இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகும். மக்களுக்குப் புதிய பொருள்களைக் காட்டுவதும், சிறந்த கருத்துகளை வழங்குவதும் மிகவும் அரிய செயல்களாகும். பழைய மூடக் கொள்கைகளை ஒழிப்பதோ, இன்னும் கடினமானது; மிகமிகக் கடினமானது! இவை எளிதில் அழிவதில்லை. எவ்வளவு கல்வி இருந்தாலும்—படித்த மனிதரும் இருட்டில் அஞ்சுகிறார்—குழந்தைப் பருவத்தில் கேட்ட கதைகள் நினைவுக்கு வருகின்றன; பேய்களை அவர் காண்கின்றனர்.

வேதாந்தம் என்ற சொல்லின் மூலமான 'வேதம்' என்ற சொல்லுக்கு அறிவு என்பதே பொருள். எல்லா அறிவும் வேதமே, இறைவரைப் போலவே இவைகளும் முடிவற்றவை. யாராலும் என்றேனும் அறிவைப் புதிதாக ஆக்க இயலாது. அறிவு படைக்கப்படுவதை நீங்கள் எப்போதாவது கண்டிருக்கிறீர்களா? மறைக்கப்பட்டதில் மறைப்பு நீங்கிற்று; அதைக் கண்டு பிடிக்கிறார்கள் என்பதே. அது எப்போதும் இங்கே இருக்கிறது, அது கடவுளே ஆவது! கடந்த கால, நிகழ்கால, எதிர்கால அறிவெல்லாம் நம் எல்லோருக்குள்ளும் இருக்கின்றன. நாம் கண்டுபிடிக்கிறோம், அவ்வளவுதான். இந்த அறிவெல்லாம் கடவுளேதான். வேதம் என்பது ஒரு பெரிய வடமொழிநூல். எங்கள் நாட்டில் வேதம் படிப்பவரை மற்றவர்கள் வணங்குவது வழக்கம். ஆனால், பௌதிகம் படிப்பவரை யாரும் பொருட்படுத்துவதில்லை. இது மூட நம்பிக்கை; வேதாந்தம் அன்று. இது முழுக்க முழுக்க உலகாயதம். இறைவரோடு இணைந்த

எல்லா அறிவும் தெய்விகமானதே. அறிவே இறைவர். ஒவ்
வொருவருக்குள்ளும் முடிவற்ற அறிவு முழுவதும் இடம் பெற்
றிருக்கிறது. உண்மையில் நீங்கள் முட்டாள்கள் அல்ல; முட்
டாள்களாகத் தோன்றுகிறீர்கள்; அவ்வளவுதான். நீங்கள்
எல்லோருமே இறைவரின் அவதாரங்கள். சர்வசக்தி மயமான
வரும், எங்கும் நிறைந்தவருமான தெய்வத் தத்துவத்தின் அவ
தாரங்களே நீங்கள். என்னைப் பார்த்து இப்போது நீங்கள்
எள்ளி நகையாடலாம்; ஆனால், இதை நீங்கள் அறிந்துகொள்
ளும் காலம் வரும். நீங்கள் அறிந்துகொண்டுதான் ஆக
வேண்டும். யாருமே இந்த விஷயத்தில் பின் தங்கமாட்டார்.

அடையவேண்டுவது என்ன? இப்போது நான் பேசிய இந்த
வேதாந்தம் ஒன்றும் புதிய சமயம் அன்று. இது மிகத் தொன்மை
யானது; இறைவரது தொன்மை இதற்கும் உண்டு. இது
காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்பட்டதன்று; இது எங்கும்
உள்ளது. எல்லோருக்கும் இந்த உண்மை தெரியும். நாம் எல்
லோருமே இதை அறிந்து கொண்டு வருகிறோம். முழு பிரபஞ்
சத்தின் முடிவும் இதுதான். இது நமக்கு வெளியே உள்ள பிர
கிருதிக்கும் பொருந்தும்; ஒவ்வோர் அணுவும் இந்த முடிவை
நோக்கியேதான் சென்றவண்ணம் இருக்கிறது. முடிவற்ற,
தூய்மையான எந்த ஆன்மாவும் இந்தப் பேருண்மையைப்
பற்றிய அறிவைப் பெறுதவர் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?
எல்லோரிடமும் இந்த உண்மை இருக்கிறது. எல்லோரும் ஒரே
முடிவை நோக்கித்தான் செல்கிறார்கள்—உள்ளேயிருக்கும் தெய்
விகத்தைக் கண்டுபிடித்தலே அது. பித்துப் பிடித்தவன்,
கொலையாளி, மூடக் கொள்கையன்—இந்த நாட்டில் உங்களால்
சடக்கெனத் தூக்கிடப்படுபவனும்—எல்லோரும் ஒரே இலட்சி
யத்தை நோக்கித்தான் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். இப்
போது அறியாமலே நாம் செய்யும் செயல்களை நாம் அறிந்து
செய்யவேண்டும், இன்னும் நன்றாகச் செய்யவேண்டும்;
அவ்வளவுதான்.

இருக்கும் பொருள்களில் எல்லாம் உள்ள ஒருமை உங்களுக்
குள் ஏற்கெனவே இருக்கிறது. அதைப் பெறாது பிறப்பவன்
எவனும் இல்லை. நீங்கள் இதை எவ்வளவு மறுப்பினும், இது
தன் இருப்பை வற்புறுத்திக்கொண்டே இருக்கிறது. மனிதர்
களின் அன்பு என்பது என்ன? ஏறக்குறைய அந்த ஒருமையின்
வற்புறுத்தலேதான். “நானும் நீங்களும், என் மனைவிமக்களும்,
நண்பரும் எல்லோரும் ஒன்றே.” உங்களை அறியாமலே நீங்கள்

இந்த ஒருமையை வற்புறுத்துகிறீர்கள். "எப்பெண்ணும் தன் கணவனிடம் அவன் 'கணவன்' என்பதற்காக அன்பு செலுத்த வில்லை. ஆனால், அவனுக்குள் இருக்கும் ஆன்மாவுக்காகவே அன்பு செலுத்துகிறாள்." இந்த அன்பில் மனைவி ஒருமையைக் காண்கிறாள். இப்படியே கணவனும் தன் மனைவியினிடம் தன்னையே காண்கிறான். இது இயற்கையறிவாகவே நடை பெறுகிறது. ஆனால், அறிந்து அதைச் செய்ய அவனால் இயலாது.

உலகம் முழுவதும் ஒன்றன் இருப்புத்தான். வேறு ஒன்றும் இருக்க இயலாது. பல வகை வேற்றுமைகளிலிருந்து நாம் இந்தப் பிரபஞ்ச ஒருமையை நோக்கியே முன்னேறிக் கொண் டிருக்கிறோம். குடும்பங்கள் குடிகளாகவும், குடிகள் இனங்களாக வும், இனங்கள் சமுதாயங்களாகவும், சமுதாயங்கள் மனிதவர்க்க மாகவும் படிப்படியாக இந்த ஒருமையை நோக்கி முன்னேறிய வண்ணம் இருக்கின்றன. அந்த ஒன்றையே நோக்கி எத்தனை சங்கற்பங்கள் செல்கின்றன! இந்த ஒருமை அனுபூதி முற்றும் அறிவு மயமானது; விஞ்ஞான மயமானது.

ஒருமை ஞானம், பன்மை அஞ்ஞானம். இந்த 'அறிவு' உங்கள் பிறப்புரிமை. நான் இதை உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை. என்றும் உலகில் பல வகைச் சமயங்கள் இருந்ததில்லை. நாம் விரும்புகிறோமோ இல்லையோ, முக்தி நமக்குக் கிடைத்தேதான் தீரும்; முடிவில் நீங்கள் முக்திபெற்றுச் சுதந்தரர்கள் ஆகித்தான் தீரவேண்டும், அதுவே உங்கள் இயற்கையாதலின் நாம் ஏற்கெனவே சுதந்தரமாகத்தான் இருக் கிறோம்; அது நமக்குத் தெரியவில்லை—அவ்வளவுதான்; நாம் என்ன செய்துகொண்டிருந்தோம் என்பதும் நமக்குத் தெரிய வில்லை. எல்லாச் சமயப் பிரிவுகளிலும் இலட்சியங்களிலும் ஒரே ஒரு நீதிதான் இருக்கிறது. ஒரே இலட்சியந்தான் பிரசார மாகிறது; "சுயநலத்தை விடு; பிறரிடம் அன்பாய் இரு," என்பதுதான் அது. "ஜெஹோவா இப்படிக் கட்டளையிட்டார்," என்கிறார் ஒருவர். "அல்லா உரைத்தார்," என்று கூச்சலிட்டார் இன்னொருவர். "ஏசுநாதர்," என்று கத்தினார் மூன்றாமவர். இது உண்மையில் ஜெஹோவாவின் கட்டளையானால், ஜெஹோ வாவையே அறியாதவர்களுக்கு இது எப்படி வந்தது? ஏசு நாதர் மட்டுமே இப்படிக் கட்டளையிட்டார் என்றால், அவரை அறியாத ஒருவருக்கு இது எப்படி வந்தது? இது திருமாலின் கட்டளை என்றால், யூதர்கள் எப்படி அறிந்தார்கள்? இவர்

களுக்குத் திருமாலைத் தெரியவே தெரியாதே! இவைகள் எல்லாவற்றையும்விடப் பெரிய மூலஸ்தானம் ஒன்று இதற்கு இருக்கிறது. அது எங்கே இருக்கிறது? இறைவரின் நித்தியமான கோவிலில்; மிகத் தாழ்ந்த பொருளிலிருந்து மிக உயர்ந்த பொருள்கள் வரை உள்ள எல்லாப் பொருள்களின் ஆன்மாக்களிலும் இது உள்ளது. இந்த முடிவற்ற சுயநலம் இன்மை, முடிவற்ற தியாகம், ஒருமையை நோக்கிச் செல்லும் இந்த முடிவற்ற தூண்டுதல், இவற்றுக்குள் அது இருக்கின்றது.

நாம் பிரிந்து நிற்பதான, கட்டுப்பட்ட நிலை தோற்றமே. நமக்கு அஞ்ஞானத்தினால் அது ஏற்பட்டுவிட்டது. எனவே, நாம் அற்பர்களான ஸ்ரீமதி இன்னார் ஆகவும் ஸ்ரீமான் இன்னார் ஆகவும் மாறிவிட்டோம். ஆனால், பிரகிருதி முழுவதுமே, 'இந்த வேற்றுமை பொய்' என்பதை ஒவ்வொரு நொடியும் காட்டிக் கொண்டிருக்கிறது. மற்றவைகளிலிருந்து வேறுபட்ட சிறு ஆணோ பெண்ணோ அல்லேன் நான். பிரபஞ்சத்தின் ஒரே உயிர் நானே. தன் சொந்தப் பெருமையினாலேயே ஆன்மா, மேல் எழுந்து தன் இயல்பான தெய்வத்தன்மையை ஒவ்வொரு கணமும் கூறிக் கொண்டிருக்கிறது.

இவ்வேதாந்தம் எங்கும் இருக்கிறது; நீங்கள் அதை உணர வேண்டியது ஒன்றே கட்டாயம். அறிவற்ற நம்பிக்கைகள், மூடக் கொள்கைகள் ஆகிய குவியல்கள் நம்மை முன்னேற விடாமல் தடுக்கின்றன. இயலுமானால், நாம் இந்தக் குவியல்களை உதறித் தள்ளிவிட்டு, 'இறைவர் ஆன்மா; அவரை ஆன்மா ஆகவும் உண்மையாகவும் வழிபட வேண்டும்,' என்பதை உணர வேண்டும். இனிமேலாவது உலகாயதர்களாக இல்லாமல் வாழ முயலுங்கள். சடப் பொருள்களை எல்லாம் எறிந்துவிடுங்கள். இறைவரைப்பற்றிய எண்ணம் முற்றும் ஞானமயமாகவே இருக்க வேண்டும். ஏறத்தாழச் சட சம்பந்தம் பெற்ற இறைவரைப் பற்றிய வெவ்வேறான கொள்கை எல்லாம் ஒழியவேண்டும். மனிதன் ஆன்மிக வளர்ச்சியில் முன்னேற முன்னேற, அவன் இந்த உலகாயதக் கொள்கைகளை எல்லாம் எறிந்து பின்னே விட்டுவிட வேண்டும். சடப் பொருளை எறிந்துவிட்டு, ஞான ஒளியில் நின்று, ஆன்மாவான இறைவரை, ஆன்மாவாலேயே வழிபடத் துணிந்த சிலர் எல்லா நாடுகளிலும் எப்போதுமே இருந்திருக்கின்றனர்.

எல்லாம் ஒரே ஆன்மாதான் என அறிந்து பெறும் ஞானம் ஆகிய இந்த வேதாந்த சமயம் பரவினால், மனித குலமே ஞானம்

பெற்றுவிடும். ஆனால், இது நடக்குமா? அது எனக்குத் தெரியாது. பல்லாயிரம் ஆண்டுக்குள் ஆகாது. பழைய மூடக் கொள்கைகள் ஓய வேண்டும், உங்கள் மூட நம்பிக்கைகளை எல்லாம் நிலைத்திருக்கச் செய்வதில் நீங்கள் முனைந்திருக்கிறீர்கள். இதோடு உடன்பிறந்த சகோதரன், சாதிச் சகோதரன், சமுதாயச் சகோதரன் என்ற எண்ணங்கள் வேறு இருக்கின்றன. வேதாந்த சித்திபெற இவைகளெல்லாம் தடைகள் ஆகும். சமயம், ஒரு சிலருக்கே சமயமாய் இருந்திருக்கிறது.

உலகம் முழுவதிலுமே சமயத்துறையில் உழைத்தவருட் பெரும்பாலார் உண்மையில் தேசியவாதிகளே ஆவர். இதுதான் மனித குலத்தின் வரலாறு. 'உண்மைக்கு இயைந்தே சற்றும் விட்டுக் கொடுக்காது அவர்கள் வாழ முயன்றது அரிதேயாயிற்று.' அவர்கள் எப்போதுமே 'சமூகம்' என்ற கடவுளைத்தான் வழி பட்டிருக்கிறார்கள்; பெரும்பான்மையான மக்கள் நம்பும் மூடக் கொள்கைகள், பலவீனங்கள் இவற்றை ஆதரிப்பதிலேயே அவர்கள் என்றும் மிக்க தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் இயற்கையை வெல்ல முயல்வதில்லை; இயற்கைச் சூழ்நிலைக்குள் தங்களை ஏற்ப அமைத்துக் கொள்ளவே முயல்கின்றார்கள், வேறொன்றும் இல்லை. இந்தியாவுக்குப் போய் நீங்கள் ஒரு புதுச் சமயத்தைப் பிரசாரம் செய்தால், இந்திய மக்கள் அதற்குச் செவி சாய்க்கமாட்டார்கள்; ஆனால், "இந்தச் சமயம் வேதத்தில் உள்ளது," என்று சொன்னால், "அப்படியானால் அது நல்லது," என்பார்கள். இங்கே நான் இந்தச் சமயப் பிரசாரம் செய்கிறேன். உங்களில் எத்தனை பேர் நான் சொல்வதை உண்மை என்று நம்புகிறீர்கள்? ஆனால், நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டுவது எனக்குக் கட்டாயம்.

இந்தப் பிரச்சினைக்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது. 'மிக உயர்ந்த, தூய்மையான உண்மையை எல்லோரும் உடனே உணர்வது என்பது முடியாத காரியம்; வழிபாடு, பிரார்த்தனை முதலிய நடைமுறையில் உள்ள சமய சாதனங்களின் மூலம் படிப் படியாக ஒருவரை இதை உணரும் பக்குவத்துக்குக் கொண்டுவர வேண்டும்,' என்று எல்லோரும் கூறுகின்றனர். இது சரியான வழியா அல்லவா என்பது எனக்குத் திண்ணமாகத் தெரியவில்லை. இந்தியாவில் நான் இரண்டு வழிகளிலும் முயல்கிறேன்.

கல்கத்தாவில் நான் உருவங்கள் கோவில்கள் எல்லாவற்றையும் வைத்திருக்கிறேன். வேதங்கள், இறைவர், பைபிள், கிறித்து,

புத்தர் ஆகிய அனைவருடைய பெயராலும் வைத்துளேன். இப்படித்தான் முயன்று பார்ப்போமே! ஆனால், இமய மலையின் உயர்ந்த ஒரு பகுதியில் நான் ஓர் இடம் அமைத்துள்ளேன். இங்கே கலப்பற்ற உண்மையைத் தவிர வேறு எதுவும் புகக் கூடாது என்பது என் தீர்மானம். இன்று உங்களுக்கு உபதேசம் செய்த இந்தத் தனி வேதாந்தக் கொள்கையை அங்கே பழகிப் பார்க்கலாம் என்று இருக்கிறேன். ஓர் ஆங்கிலச் சீமானும் சீமாட்டியும் அதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையை நாடுவார்க்குப் பயிற்சி அளிக்கவும், அச்சமும் மூட நம்பிக்கையும் இல்லாமல் குழந்தைகளை வளர்க்கவும் வேண்டும் என்பது என் நோக்கம். அங்குப் பயில்பவர்கள் காதில் கிறித்துகள், புத்தர்கள், திருமால்கள், சிவன்கள் என்ற பேச்சே விழாது. இவற்றுக்கெல்லாம் அங்கே இடம் இல்லை. தொடக்கத்திலிருந்தே தங்களை மட்டும் நம்பி முன்னேற அவர்கள் கற்றுக் கொள்வார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே, 'இறைவர் ஆன்மா, அவரை ஆன்மாவாகவும் உண்மையாகவுமே வழிபட வேண்டும்,' என்று அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஒவ்வொருவரையும் மற்றவர் ஆன்மாவாகவே காண வேண்டும். இதுதான் இலட்சியம். இதில் வெற்றி எவ்வளவு கிடைக்கும் என்பது எனக்குத் தெரியாது. இன்று நான் விரும்பும் ஒன்றையே நான் பிரசாரம் செய்து வருகிறேன். 'நான் இப்படி ஒருமை இலட்சியத்திலேயே வளர்ந்திருக்கக் கூடாதா? துவைதக் கொள்கைகளையே அறியாமல் இருந்திருக்கக்கூடாதா?' என்று இப்போது கவலைப் படுகிறேன்!

துவைத இலட்சியத்திலும் சிறிது நன்மை இருக்கிறது என்பதை நான் சில சமயம் ஒப்புக்கொள்கிறேன். பலவீனமான பலருக்கு இது துணை புரிகிறது. ஒருவன் உங்களிடம் வந்து, 'துருவ நட்சத்திரத்தைக் காட்டு,' என்றால், நீங்கள் முதலில் அதற்கு அண்மையில் உள்ள ஒளிமிக்க நட்சத்திரத்தைக் காட்டுவீர்கள்; பிறகு அதைவிட ஒளி குறைந்த ஒன்றைக் காட்டுவீர்கள். பிறகு மங்கிய ஒன்றைக் காட்டுவீர்கள்; பிறகு அதை நெருங்கி உள்ள துருவ நட்சத்திரத்தையே காட்டிவிடுவீர்கள். அவன் அதை நோக்க இந்த முறை எளிதாகிறது. பல வகைச் சமயச் சடங்குகளும், பயிற்சிகளும், பைபிள்களும் தெய்வங்களும், சமயத்தின் ஆரம்பப் படிகளே ஆகும்; சமயத்தின் குழந்தை வகுப்புகளேயாம்.

சரி; இப்போது நான் எதிர்க்கட்சியைப்பற்றிச் சிந்தித்துப்

பார்க்கிறேன். மெதுவாக, படிப்படியாக ஏறும் இந்த முறையைப் பின்பற்றினுல், உண்மையை உணர எவ்வளவு காலம் உலகம் காத்திருக்க வேண்டும்? எவ்வளவு காலம்? தெரியத்தக்க அளவுக்கு இந்த முறை வெற்றி தரும் என்பது என்ன நிச்சயம்? இது வரையில் இதனுல் வெற்றி ஏற்பட்டதாகத் தெரியவில்லை. படிப்படியாகப் பலன் தருவதோ திடீர் என்று பலன் தருவதோ, பலவீனமான அறிவு உள்ளவர்களுக்குச் சுலபமானதோ அல்லதோ, எப்படியானுலும், இந்தத் துவைத முறையின் அடிப்படை பொய்யன்ரூே? இப்போது நடைமுறையிலிருக்கும் சமயச் சாதனங்கள் யாவும் அறிவுக்குப் பலவீனம் உண்டாக்கிவிடுவதில்லையா? எனவே, இவை தவறுள்ளன அல்லவா? இவைகளின் அடிப்படைக் கருத்தே தவறு; மனிதனைப்பற்றிய தவருன கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இரண்டு தவறுகள் சேர்ந்து நேரான ஒன்று ஆகிவிட முடியுமா? பொய் மெய்யாகிவிடுமா? இருட்டு ஒளியாகி விடுமா?

உடலை விட்டுவிட்ட ஒருவரின் பணியாள் நான். நான் தூதுவனேதான். நான் சோதனை செய்து பார்க்க விரும்புகிறேன். நான் உங்களுக்கு இப்போது இயம்பிய வேதாந்தக் கொள்கைகளை யாரும் இது வரையில் உண்மையாகச் சோதனை செய்து பார்த்ததில்லை. 'உலகச் சமயத் தத்துவங்களுக்குள்ளேயே மிகப் பழையது வேதாந்தம்,' என்பது உண்மையானுலும், அது எப்பொழுதுமே மூட நம்பிக்கைகளோடும் அவைபோன்ற பிறவற்ரூேடும் கலந்து குழம்பியே இருந்திருக்கிறது.

"நானும் என் தந்தையாரும் ஒருவரே," என்று கிறித்து ஓதினுர். நீங்களும் அதைத் திருப்பிச் சொல்கிறீர்கள். என்ருலும், அந்த அறிவுரை மனிதனது ஆன்மிக முன்னேற்றத்துக்குத் துணை புரியவில்லை. 19 நூற்ருண்டுகளாகியும் இன்னும் மனிதர் அந்த அறிவுரையை உணர்ந்துகொள்வதில்லை. கிறித்துவை அவர்கள் மனித இரட்சகர் ஆக்குகிருர்கள். அவர் இறைவர்; நாமெல்லாம் அவர் முன் ஊரும் புழுக்கள்! இந்தியாவிலும் இப்படித்தான். ஒவ்வொரு நாட்டிலும் இது போன்ற நம்பிக்கைதான் சமயத்துக்குத் தூணுக, முதுகெலும்பாக இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பலகோடி மக்கள், உலக நாயகராகிய ஒருவரைத் தொழவே, அவதார புருடர்களையும், ஆசாரிய புருடர்களையும், இரட்சகர்களையும் தொழவே கற்பிக்கப்பட்டிருக்கிருர்கள். தாங்கள் உதவியற்றவர், துக்கத்தில் உழல்பவர் என்றும், விடுதலைபெற வேறு ஒருவர் அல்லது சிலரின் கருணை அவசியம்

என்றும் கருதவே போதிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய நம்பிக்கைகளில் ஆச்சரியமான பல சாதனைகள் இருப்பதில் ஐயமில்லை. இவை மிகச் சிறந்த முறையில் இருந்த போதிலும், சமயத்தின் குழந்தைப் படிப்புதான்; அவற்றுற் பெற்ற உதவி மிகமிகக் குறைவே. இழிவான தாழ்வை எய்தும் அளவுக்கு மனிதர்கள் இன்னும் மயக்கமுற்றுள்ளனர். என்றாலும், அறிவாற்றல் மிகுந்த சில ஆன்மாக்கள் இந்த மயக்கத்தை வென்று மேற்சென்றுவிடுகின்றன. மகான்கள் தோன்றி, சமயத்தின் குழந்தைப் படிப்பு முறையை ஒதுக்கித் தள்ளி, ஆன்மாவை ஆன்மாவால் வழிபடும் உண்மைச் சமயத்தைத் தெளிவாகவும் சக்தி மிக்கதாகவும் ஆக்கும் காலம் விரைவில் வரப்போகின்றது.

மறைவற்ற மறைபொருள்

(கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஆஞ்சலிஸில் செய்த சொற்பொழிவு)

பொருள்களின் உண்மைத் தன்மையை நாம் ஆராய்ந்து அறிய முயலுங்கால் எப்பக்கம் திரும்பினும், நம் ஆராய்ச்சி போதிய தொலைவு செல்லுமாயின், இறுதியில் ஒரு வியத்தகு நிலையை அடைகிறோம்; வெளிப் பார்வைக்கு அது முரணாய் இருக்கிறது. நம் அறிவுக்குள் அடங்காததாயும், ஆனாலும் உண்மையாகவும் தோன்றுகிறது. ஒரு எல்லையுற்றதென நாம் அறியும் ஒரு பொருளை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்கிறோம். ஆனால், ஆராய்ச்சி தொடங்கியவுடன் அது நமது பகுத்தறிவுக்கு அப்பால் சென்றுவிடுகிறது; அதன் தன்மைகள், அதன் சக்திகள், அதற்கும் மற்றப் பொருள்களுக்கும் உள்ள உறவுகள் இவைகளுக்கு முடிவு இருப்பதாகவே தெரியவில்லை; அந்தப் பொருள் எல்லையற்றதாகிவிடுகின்றது. சாதாரணமான ஒரு மலரை எடுத்துக்கொள்ளுங்கள். இது ஓர் எல்லைக்கு உட்பட்டது; என்றாலும், 'இந்த மலரைப்பற்றிய செய்தி எல்லாம் எனக்குத் தெரியும்,' என்று துணிந்து கூற யாரால் இயலும்? இந்த மலரைப் பொறுத்தமட்டும் யாரும், தமக்கு எல்லாம் தெரியும் என்ற அறிவு நிலையை அடைந்துவிட இயலாது. ஆராய்ச்சியின் தொடக்கத்தில் எல்லை உள்ளதாகத் தோன்றிய மலர், இப்போது எல்லையற்ற பொருள் ஆகிவிட்டது. ஒரே ஒரு மணலை எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள்; அது ஓர் எல்லைக்கு உட்பட்டது என்ற எண்ணத்தில் தொடங்கிய ஆராய்ச்சி அது எல்லையற்றது என்ற முடிவை அடைகிறது. இது எப்படியானாலும், அதை எல்லையுற்றதாக நினைத்தோம்; அது போன்றே எல்லையுற்ற ஒன்றாகவே நினைத்துச் செயல் புரிகிறோம்.

நம் எண்ணங்கள், உடலையும் உள்ளத்தையும் பற்றிய அனுபவங்கள் எல்லாவற்றுக்குமே இது பொருந்தும். நாம் சிறிதளவிலே தொடங்குவதாக எண்ணி, அவற்றைச் சிறிய பொருள்களாகவே காண்கிறோம். ஆனால் விரைவிலேயே அவை நமது அறிவைக் கடந்து சென்று எல்லையற்ற நிலை என்ற அறிய முடியாத ஆழத்திற் புகுந்துவிடுகின்றன: நாம் காணும் மிகப் பெரிய முதற்பொருள் நாமே. வாழ்க்கையைப் பற்றியும் இதே

குழப்பந்தான் நேரிடுகிறது. நாம் இருக்கிறோம்; நமக்கு எல்லை உண்டு என்பது தெரிகிறது. நாம் வாழ்கிறோம்; சாகிறோம். நாம் காணும் எல்லை மிகக் குறுகியது, சுற்றிலும் பிரபஞ்சத்தால் சூழப்பட்ட நாம் நமக்கு ஓர் எல்லை இருப்பதை உணர்கிறோம். ஒரு கணத்தில் இயற்கை நம்மை நசுக்கி ஒழித்துவிட இயலும். ஒரு நொடியில் சிதறும் நிலையில் நம் சிறு உடல்களின் கட்டு இருக்கிறது. இது நமக்குத் தெரியும். செயல் துறையில் நாம் எவ்வளவு பலவீனர்களாய் இருக்கிறோம்! ஒவ்வொரு திருப்பத்திலும் நம் விருப்பத்துக்குத் தடை வந்துகொண்டே இருக்கிறது. நாம் எத்தனையோ செயல்களைச் சாதிக்க விரும்புகிறோம்; ஆனால், சாதிக்கக் கூடியது மிகமிகக் குறைவு. நம் ஆசைக்கு ஓர் அளவு இல்லை. எதையும் செய்யச் சங்கற்பிக்கலாம்; எதையும் பெற விழையலாம்; புனர்வசு நக்ஷத்திரத்துக்குப் போகவும் நாம் ஆர்வம் கொள்ளலாம். ஆனால், நிறைவேறும் ஆசைகளின் எண்ணிக்கை அற்பந்தான், நமது உடல் இவ்வளவையும் பெற இடங்கொடாது. நம் ஆசைகள் எல்லாம் நிறைவேறுவதற்குத் தடையாகப் பிரகிருதி நிற்கிறது. நாம் பலமற்றவர்கள். மலர், ஒற்றை மணல், பஞ்சபூதப் பிரபஞ்சம், எண்ணம் இவற்றுள் ஒவ்வொன்றையும் பற்றிய உண்மை எதுவோ, அதுவே நம்மைப் பொறுத்த மட்டும் நூறு மடங்கு உண்மையாகும். நமது வாழ்க்கையும், ஒரே சமயம் முடிவுள்ளதாயும் முடிவில்லாததாயும் இருக்கும் அதே குழப்பம் நம்மிடம் உண்டு. நாம் கடல் அலைகளைப்போல இருக்கிறோம். அலை, கடலாகவும் இருக்கிறது. கடல் அல்லாததாகவும் இருக்கிறது. அலையின் எந்தப் பகுதியையும், 'இது கடல் அன்று,' என்று இயம்ப இயலாது. 'கடல்' என்ற பெயர் அலைக்கும் அது போலவே கடலின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருந்தும். என்றாலும், அலை கடலினின்று வேறுபட்டதே ஆகும். எனவே, வாழ்க்கைக் கடலில் நாம் சிறு அலைகளே ஆவோம். அதே சமயம் நம்மைப்பற்றி உண்மையாகவே அறிய நாம் விரும்பும்போது அது இயலுவதில்லை; அப்போது நாம் எல்லையற்றவர்கள் ஆகிவிடுகிறோம்.

நாம் கனவில் நடப்பது போலத் தோன்றுகிறது. கனவு மனத்திற்குக் கனவுகள் உண்மைகளே; ஆனால், நாம் அவற்றுள் ஒன்றைப் பற்றிக் கொள்ள முயன்றால், அது மறைந்து விடுகிறது. ஏன் இப்படி? அது பொய்ப் பொருள் என்பதனால் அன்று; அது நம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது; அறிவுச் சக்திக்கு எட்டாதது; எனவே, அதை அறிந்துகொள்ள இயலுவ

தில்லை. வாழ்வில் உள்ள ஒவ்வொன்றும் மிகப் பரந்தது; அத ஞேடு ஒப்பிடும்போது நம் அறிவு மிகச் சுருங்கித் தோன்று கிறது. அறிவின் விதிகளுக்கு உட்பட அது உடன்படுவதில்லை. அறிவு, அதனைச் சுற்றி வளைத்துக் கட்ட நினைப்பதை எண்ணி அது சிரிக்கிறது! ஆன்மாவைப் பொறுத்தமட்டும் இது எவ் வளவு பெரிய அளவில் இயல்பாக வேண்டும்! 'நாமே' உலக விந்தைகளுள் எல்லாம் பெரிய விந்தை ஆவோம்.

ஈதனைத்தும் எவ்வளவு அதிசயமானது! மனிதனுடைய கண்ணைப் பாருங்கள். எவ்வளவு எளிதில் இதை அழித்துவிட முடியும்? என்ருலும், மிகப் பேரிய ஞாயிறுகளும் இருப்பது—இந்தக் கண்கள் அவற்றைப் பார்ப்பதாலேதான்! பிரபஞ்சத் தின் இருப்பும் கண்ணின் அத்தாட்சியைப் பொறுத்ததே ஆகும்! இந்த அதிசயத்தை எண்ணிப் பாருங்கள்! இரங்கத்தக்க இந்த அற்பக் கண்கள்! சக்தி மிகுந்த வெளிச்சமோ, ஒரு குண்டு சியோ போதும் இதனை அழிக்க! என்ருலும், அழிக்கும் கருவி களுள் மிக்க சக்தி வாய்ந்தவை, மிகப் பெரிய பிரளயம்; அதிசய மான வாழ்வுகள், பலகோடிச் சூரியர்கள், நக்ஷத்திரங்கள், சந்திரர் கள், இந்தப் பூமி—எல்லாவற்றின் இருப்புக்கும் ஆதாரமாக இருப்பவையும், எல்லாவற்றின் உண்மைக்கும் அத்தாட்சி தருப வையும் இந்த அற்பப் பொருள்களான இரண்டு கண்களே! இவை, "பிரகிருதியே, நீ உள்ளனை," என்று சொல்கின்றன. அது இருப்பதாக நாமும் நம்புகிருேம். நம் புலன்கள் எல்லா வற்றுக்குமே இது பொருந்தும்.

இது என்ன? பலவீனம் எங்கிருக்கிறது? யார் பலவான்? பெரியது எது? சிறியது எது? ஒன்றை யொன்று சார்ந்து நிற் கும் இந்த ஆச்சரியமுறையில், முழுமையின் இருப்புக்கு ஒரு சிறு அணுவும் அவசியமாக இருக்கும் நிலையில், எது உயர்ந்தது, எது தாழ்ந்தது? பெரியவர் யார், சிறியவர் யார்? இவை நம் அறிவுக்கு அப்பாற்பட்ட பிரச்சினைகள்! 'ஏன் இப்படி?' என வினவினுல், 'யாரும் பெரியவரும் அல்லர், யாரும் சிறியவரும் அல்லர்,' என்பதுதான் விடை. முடிவற்ற அந்தக் கடல் எல் லாப் பொருள்களிலும் உட்புகுந்துள்ளது. இந்த எல்லையில்லாத் தன்மைதான் பொருள்களின் உண்மைப் பண்பு; மேற்பரப்பில் தோன்றுவது முற்றுமே, முடிவற்ற அந்தப் பண்புதான். அந்த மரம் முடிவற்றது; நீங்கள் பார்க்கும், தொடும் எல்லாமே முடி வற்றவை—ஒவ்வொரு மணலும், ஒவ்வோர் எண்ணமும், ஒவ் வோர் ஆன்மாவும், உள்ள ஒவ்வொன்றும் முடிவற்றவையே.

முடிவற்றது, முடிவுற்றதாயிற்று; முடிவுற்றது முடிவற்றதாயிற்று. இதுதான் நம் வாழ்க்கை.

மேற்சொன்னவையெல்லாம் உண்மையாய் இருக்கலாம்; ஆனால், முடிவற்றதைப்பற்றிய எல்லா உணர்ச்சியும் இப்போது பெரும்பாலும் அறியாமலே நிகழ்கின்றது. இதனால் நாம் முடிவில்லாத நம் இயல்பை மறந்துவிட்டோமென்பது பொருளன்று; யாருமே இதை மறக்க இயலாது. தம்மை அழிக்க இயலும் என்று யார்தான் என்றைக்கேனும் நினைக்க முடியும்? தமக்குச் சாவு உண்டு என்று யார் நினைக்க முடியும்? யாராலும் முடியாது. நமக்கும் முடிவற்ற தன்மைக்கும் உள்ள தொடர்பு நம்மை அறியாமலே நம்மிடம் தொழிற்படுகிறது. எனவே, ஒரு வகையில் நம் உண்மை இயல்பை நாம் மறக்கிறோம்; இதுவே நமக்கு ஏற்படும் துக்கங்களுக்கெல்லாம் காரணம்.

அன்றாட நடைமுறை வாழ்க்கையில் சிறு விஷயங்களும் நம்மைத் துன்புறுத்துகின்றன. சிறு பிராணிகளுக்கும் நாம் அடிமைப் படுகிறோம். நாம் வரையற்றவர் என்றும், நாம் சிற்றுயிர்கள் என்றும் நினைப்பதே நம் துக்கத்துக்கெல்லாம் காரணம். என்றாலும், நாம் வரையறையற்றவர் என்று நம்புவது எவ்வளவு அரிதாய் இருக்கிறது! இவ்வளவு துயரம் துன்பம் அனைத்திற்கும் இடையே ஓர் அற்பப் பொருள் என்னைச் சமநிலையிலிருந்து தள்ளிவிடும் நிலையில் உள்ளபோது, நான் வரையறையற்றவன் என்பதை நம்புவதில் சிரத்தை காட்டவேண்டும். உண்மையில் நாம் அத்தகையரே; அறிந்தோ, அறியாமலோ, நாம் அந்த முடிவற்ற தன்மையைத் தேடியே அலைகிறோம்; பந்தமற்ற ஒன்றையே நாம் என்றும் தேடியவண்ணம் இருக்கிறோம்.

சமயம் என்பதே இல்லாமலும், ஏதோ ஒருவகைத் தெய்வத்தையோ தெய்வங்களையோ வணங்காமலும் இருந்த மனித இனமே என்றும் இருந்ததில்லை. இந்தத் தெய்வமோ, தெய்வங்களோ உண்மையில் இருந்தனவா என்பது வேறு கேள்வி. இந்த மனத்தத்துவ நிகழ்ச்சியின் விளக்கம் என்ன? உலக மாந்தர் எல்லோருமே ஏன் ஒரு தெய்வத்தைக் காணவோ ஒரு தெய்வத்தைத் தேடியோ அலைகின்றனர்? நம்மைக் கட்டுப்படுத்தும் அனைத்தும், பிரகிருதியும், நம்மைக் கீழே அழுத்தி நசுக்கும் நியதியின் பெரும் சக்தியும் இருப்பினும்—நாம் எங்கே போனாலும், என்ன செய்ய விரும்பினாலும், எங்கும் உள்ள இந்த நியதி அதை எதிர்த்து நிற்கிறதன்றோ?—மனிதனது ஆன்மா, தன் சுதந்தர இயல்பை என்றும் மறப்பதில்லை. அதையே என்றும்

அது தேடியவண்ணம் இருக்கிறது. விடுதலைத் தேட்டந்தான் எல்லாச் சமயங்களின் தேட்டமும் ஆகும். இது அவர்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், இந்தக் கொள்கையை அவர்களால் வரையறுத்துக்கூற முடிந்தாலும் முடியாவிட்டாலும், இந்தக் கருத்து அங்கே இருந்தே தீர்கிறது. மிகத் தாழ்ந்த மனிதனும் ஒன்றுமே தெரியாதவனுங்கூட இயற்கைச் சட்டத்தை வெல்லும் சக்தியுடைய ஒன்றைத் தேடுகிறுன். அவன் ஒரு பூதத்தையோ, ஒரு பேயையோ, ஒரு தெய்வத்தையோ—பிரகிருதியை அடக்கக்கூடிய, பிரகிருதியால் வெல்ல முடியாத, எந்த நியதிக்கும் கட்டுப்படாத—ஏதோ ஒன்றைப் பார்க்க விரும்புகிறுன். "இந்தப் பிரகிருதி நியதியை உடைத்தெறியும் சக்தி வாய்ந்த ஒருவர் என் கண்ணில் படமாட்டாரா?" என்பதுதான் மனித இதயத்திலிருந்து எழும்பும் குரல். இந்த நியதியை உடைத்தெறியும் சக்திவாய்ந்த ஒருவனையே நாம் என்றும் தேடியவண்ணம் இருக்கிறோம். ரெயில்வே இஞ்சின், தண்டவாளத்தின் மேல் விரைந்து ஓடுகிறது; ஒரு சிறு புழு அவ் வழியைவிட்டு ஊர்ந்து செல்கிறது. அதைப் பார்த்த நாம் உடனே, "இஞ்சின் உயிரற்ற பொருள்; வெற்று யந்திரம்; ஆனால், புழுவோ, உயிருள்ளது," என்கிறோம். புழு, நியதியை மீற முயன்றதே அதற்குக் காரணம். எவ்வளவு பலத்தோடும் சக்தியோடும் கூடியதானாலும், இஞ்சினால் நியதியை மீற என்றும் இயலாது. மனிதன் விரும்பும் எந்தத் திசையிலும் போகும்படி அது அமைந்திருக்கிறது; இதை மீற அதனால் இயலாது. ஆனால், புழுவோ, சிறியதாகவும் அற்ப ஆற்றலுடையதாகவும் இருந்தாலும், நியதியை மீறி ஆபத்திலிருந்து தப்ப முயன்றது. அது நியதியை மீறித் தன் இயல்பை, தன் சுதந்தரத்தை, நிலைநிறுத்த முயன்றது; இந்த முயற்சியே பிற்காலம் கடவுள் அதில் இருப்பதற்கு அடையாளம் ஆகும்.

நாம் இந்த ஆன்ம சுதந்தர வற்புறுத்தலை எங்கும் காண்கிறோம். ஒவ்வொரு சமயத்திலும் கடவுள் அல்லது கடவுளர் என்ற உருவத்தில் இந்தச் சுதந்தரம் பிரதிபலிக்கிறது. என்றாலும், இது இன்னும் வெளி முயற்சியாகவே இருக்கிறது; கடவுளை வெளி உருவமாக மட்டும் பார்ப்பவர்கள் முயற்சி இது. தான் ஒரு பொருளேயல்லன் என்று மனிதன் தீர்மானித்தான். தான் என்றுமே சுதந்தரமாக இருக்க இயலாதோ என்று பயந்தான். எனவே, பிரகிருதிக்கு வெளியே சுதந்தரமாக உள்ள ஒருவரைத் தேட அவன் சென்றான் அவன் சுதந்

தரம் உள்ள பலர் இருப்பதைப்பின் கண்டான். படிப்படியாகப் பின் இவர்களை எல்லாம் ஒன்ருக்கி, தேவ தேவராகவும், பிரபுக் களுக்கெல்லாம் பிரபுவாகவும் ஒருவரை அமைத்துக் கொண் டான்; இதுவும் அவனுக்குத் திருப்தி தரவில்லை. மேலும் ஒரு சிறிது மனிதன் உண்மையை நெருங்கியவண்ணம் இருந்தான். அவன் தான் எதுவாக இருந்தாலும், தேவதேவராகிய இறை வரோடும் ஏதோ ஒரு தொடர்புதான் உற்றிருப்பதைப் படிப் படியாக உணர்ந்தான். தன்னைப் பந்தப்பட்டவன், தாழ்ந்தவன், பலவீனன் என்று எண்ணிக் கொண்டிருந்தாலும், எப்படியோ தனக்கும் இந்தத் தேவதேவருக்கும் தொடர்பு இருப்பது தெரிந் தது. பிறகு அவனுக்கு ஞானம் ஏற்பட்டது; சிந்தனை மேல் நோக்கிற்று; அறிவு பெருகிற்று. அந்த இறைவருக்கு மிக நெருக்கமாகத் தான் வருவதை அவன் உணர்ந்தான். பிறகு தன் இறைவரும், பல தெய்வங்களும், சர்வசக்தி மயமான சுதந்தர ஆன்மா ஒன்றைத் தேடுவதில் ஈடுபட்ட மனப்போக்கு முழுவ தும், தன்னைப் பற்றிய தன் எண்ணத்தின் பிரதிபிம்பமே என் பதை அறிந்துகொண்டான். 'இறைவர் மனிதனைத் தம் உருவம் போலவே படைத்தார்,' என்பது எப்படி உண்மையோ, அப் படியே, 'மனிதன் கடவுளைத் தன் உருவம் போலவே படைத் தான்,' என்பதும் உண்மைதான் என்பதைக் கடைசியாக அவன் கண்டு பிடித்தான். இதன் பலனாகத் தெய்விகச் சுதந்தரம் என்ற எண்ணம் தோன்றியது. இந்தக் கடவுள் என்றுமே மனிதனுக்கு உள்ளேயே இருக்கிறார்; நெருங்கியவற்றுள் எல் லாம் நெருங்கியவர் இவர் என்பதும் தெரிந்தது. எவரை நாம் வெளியில் எல்லாம் தேடி அலைந்தோமோ அவர் இதயத்துக்கு மையமாகவே இருப்பதை இறுதியில் நாம் கண்டோம். தன் இதயத் துடிப்பை வேறு யாரோ கதவைத் தட்டும் சத்தமாக எண்ணி, ஒருவன் சென்று கதவைத் திறந்தானும்; வெளியில் யாரையும் காணுததால், உள்ளே திரும்பிவிட்டானும். இந்தக் கதை உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். மறுபடியும் ஒரு முறை இப்படியே ஏமாந்து போனுன். பிறகுதான் அவ னுக்கு இந்தச் சத்தம், தன் இதயத் துடிப்பினுல் ஏற்பட்டதுதான் என்பதும், யாரோ கதவைத் தட்டும் சத்தம் என்று இதைத் தான் தவருக நினைத்துவிட்டதாகவும் அறிந்தான். இதைப் போலவே, தான் கற்பனையில் வெளிப் பிரகிருதியில் இருப்பதாக எண்ணி, இவ்வளவு நாள் தான் தேடி அலைந்த அந்த முடிவற்ற சுதந்தரம் தன் உள்ளே இருக்கும் ஒன்று என்பதையும், அதுவே

'ஆன்மாவுக்குள் அந்தரான்மா; உண்மைப் பொருள்; நானே அது,' என்பதையும் தேடியபின் கண்டு கொண்டான்.

இறுதியாக இப்படி மனிதன் தன் இருப்பில் ஆச்சரியமான இருமையை அறிகிறான்; தானே முடிவுள்ள பொருளாகவும் முடிவற்ற பொருளாகவும் இருப்பதையும், முடிவுள்ளது என்று கருதும் ஆன்மாவே முடிவற்ற பரம்பொருளாக இருப்பதையும் உணர்கிறான். முடிவற்றதாகிய பரம்பொருள் அறிவாகிய வலையில் சிக்கி, முடிவுள்ள பல பொருள்களாகத் தோன்றுகிறது; ஆனால், அவ்வுண்மையோ ஒரு மாறுதலும் அடையவில்லை.

தம் ஆன்மாவுக்குள் ஆன்மாவாகவும், உண்மைப் பொருளாகவும் நமக்குள் இருக்கும் அதுவே, மாற்றமே இல்லாத, முடிவற்ற, நித்தியமான, என்றும் ஆனந்தமயமான, என்றுமே முக்தியுற்ற பொருள் என்பதுதான் மெய்ஞ்ஞானமாகும்.

இதுதான் எல்லாச் சாவுக்கும் முடிவு; சாவின்மைக்கெல்லாம் வரவுகாலம், துன்பம் எல்லாவற்றுக்கும் முடிவு. எவன் ஒருவன், பன்மைக்குள் அந்த ஒரு பொருளையும், மாறும் பிரபஞ்சத்தில் மாறாத ஒன்றையும் காண்கிறானோ, தன் ஆன்மாவுக்குள் அந்தரான்மாவாக அதைக் காண்கிறானோ, அவனுக்கே நித்தியமான சாந்தி உரியதாகும்; வேறு யாருக்கும் கிட்டாது.

ஆழ்ந்த துன்பம், பெருந்தாழ்வு இவைகளுக்கு இடையே அந்தரான்மாவிலிருந்து ஒரு கிரணம் மனிதனுக்கு ஒளி தருகிறது. இதனால், அவன் விழிப்புற்று தனக்கு உண்மையில் உரியதைத் தன்னால் இழக்க இயலாது எனக் காண்கிறான். நமக்கு உரியதை, நாம் என்றும் இழக்க முடியாதுதான். தன் இருப்பினை இழக்க எவனுக்கு இயலும்? தன்னையே இழக்க எவர்க்கு முடியும்? 'நான் நல்லவன்' எனின், 'நான்' முதலில் இருக்கிறது; பின் அதற்கு நல்லது என்ற வண்ணம் தீட்டப்படுகிறது என்பதுதான் அதன் பொருள். 'நான் தீயவன்' எனின், முதலில் உள்ளவன் 'நான்'; எனக்குத் தீமை என்னும் வண்ணம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். முதலிலும் இறுதியிலும் எப்போதும் அந்த 'இருப்பு' என்பதே இருக்கிறது; அது ஒருபோதும் இழக்கப்படுவதில்லை, என்றும் அது இருக்கிறது.

எனவே, நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. யாருக்கும் 'சாவு' இயலாதது; யாரும் என்றுமே தாழ்ந்தவராக இருக்க இயலாது. வாழ்க்கை என்பது நாம் விளையாடும் இடமே ஆகும்; விளையாட்டு எவ்வளவு இழிவுடையதானாலும் சரி; நாம் எவ்வளவு

அடிகளும் இடிகளும் பட நேர்ந்தாலும் சரி; நமக்குள்ளே ஆன்மா இருக்கிறது; அதை எந்தவிதக் கேடும் பாதிப்பதில்லை. நாமே அந்த முடிவற்ற பொருள்.

"எனக்கு அச்சமோ ஐயமோ என்றுமே ஏற்பட்டதில்லை; சாவே எனக்கு வந்ததில்லை; எனக்கு என்றுமே தாய் தந்தையர் இருந்ததில்லை; நான் என்றும் பிறக்கவே இல்லையே! நானே எல்லாமாக இருக்கும்பொழுது எனக்குப் பகைவர் யார்? நானே அந்த சச்சிதானந்தம். நான் அதுவே; நான் அதுவே. அழுக்காறு அவா வெகுளி என்பவையோ, கெட்ட எண்ணங்களோ, இவையனைத்தும் என்றும் எனக்கு வரவே இல்லை, நானே சத்தாகவும் சித்தாகவும் ஆனந்தமாகவும் இருத்தலின்! 'நான் அதுவே; நானே அதுவே!'" என்று வேதாந்தியார் ஒருவர் இசைத்திருக்கிறார்.

இதுவே எல்லா நோய்க்கும் மருந்து; இதுதான் சாவைப் போக்கும் அமுதம். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் வாழ்கிறோம்; நம் இயல்பு இதை எதிர்க்கிறது. ஆனால், நாம் இவ்வாறு ஓதுவோமாக:

"நான் அதுவே; நான் அதுவே. எனக்கு அச்சமோ ஐயமோ, சாவோ இல்லை. நான் ஆணோ, பெண்ணோ அல்லேன். எனக்குக் கொள்கையோ, வருணமோ இல்லை. எனக்கு என்ன கொள்கை இருக்க முடியும்? நான் எந்த மதப் பிரிவைச் சார்ந்திருக்க இயலும்? எந்தப் பிரிவு என்னை உள்ளடக்க இயலும்? நான் எந்தப் பிரிவிலும் இருக்கிறேன்."

எவ்வளவுதான் உங்கள் உடம்பும் மனமும் இதை எதிர்த்தாலும், மையிருட்டுக்கு இடையிலும், பொறுக்க முடியாத சித்திரவதை படும்போதும், இறையும் செயலற்ற நிலையிலும், இந்த மந்திரத்தைப் பல முறை ஓதுங்கள். ஒளி மெதுவாக, அமைதியாக வரும்; ஆனால், வந்தே தீரும்.

நான் எத்தனையோ முறை முழுப் பட்டினியாய், கால் புண்ணாக, களைப்பு மேலிடப் பன்முறை மரணத்தின் வாயிற் புகுந்திருந்தேன்; பன்னாள் உணவின்றி, பன்முறை நடக்க இயலாதிருந்தேன். நான் ஒரு மரத்தடியில் என் வசமற்றுச் சாய்ந்துவிடுவேன், சிறிது சிறிதாக உயிர் பிரிந்துகொண்டிருப்பது போலத் தோன்றும். என்னால் பேசவோ சிந்திக்கவோ இயலாது; ஆனால் கடைசியில் மனம், இந்த எண்ணத்திற்கே செல்லும்: "எனக்கு அச்சமோ சாவோ இல்லை; எனக்குப் பசியோ தாகமோ இல்லை. நான் அதுவே; நான் அதுவே; பிரகிருதி முழு

வதும் என்னை நசுக்க இயலாது. அது என் ஏவலுக்குட்பட்டது. உன்பலத்தை வற்புறுத்துக, தேவதேவனே, பிரபுவுக்கும் பிரபுவே, இழந்த இராச்சியத்தை மீட்டுக்கொள்! எழுந்து நட! எங்கும் நிற்காதே!'' உடனே ஊக்கம் மீண்டவனாய் நான் எழுந்துவிடுவேன். இதோ பாருங்கள்; இன்னும் நான் உயிரோடிருக்கிறேன். (அஞ்ஞான) இருள் சாரும்போதெல்லாம், உண்மை இயல்பை வற்புறுத்துங்கள். இதற்கு மாறானவை எல்லாம் மறைந்தே தீரும். ஏனெனில், யாது கூறினும் அது வெறுங்கனவே. நம் இடும்பைகள் மலையளவாகத் தோன்றினாலும், எல்லாப் பொருள்களுமே பயங்கரமாகவும் இருட்டாகவும் விரிந்தாலும், இவையெல்லாம் மாயையே. அஞ்சாதீர், அது ஓட்டப்படுகிறது. நசுக்குங்கள், அது மறைகிறது. அதைக் காலால் மிதியுங்கள், அது இறந்து விடுகிறது. அஞ்சாதீர். எத்தனை முறை தோல்வி யெய்துகிறீர் என்பதை நினைக்க வேண்டா, அதைப் பொருட்படுத்தாதீர். காலத்துக்கு எல்லையில்லை. முன்னேறிக்கொண்டே இருங்கள்; திரும்பத் திரும்ப உங்கள் இயல்பை வற்புறுத்துங்கள்; ஞானம் வந்தே தீரும். உங்களுக்கு உதவும்படி உலகில் தோன்றிய ஒவ்வொருவரையும் வேண்டிக்கொண்டாலும், ஒருவரும் உதவிக்கு வர மாட்டார். யாரும் தப்ப முடியாத சாவுக்கு என் செய்வது? உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ள வேண்டும். நண்பரே, வேறு யாரும் உமக்கு உதவி செய்ய முடியாது; ஏனெனில் உமக்குச் சிறந்த நண்பனும் நீரே; கொடிய பகைவரும் நீரே; நும் ஆன்மாவைப் பற்றிக்கொள்க; எழுந்து நில்லும், அஞ்சாதீர்; எல்லாத் துன்பங்களுக்கும் எல்லாப் பலவீனங்களுக்கும் இடையிலும் உங்கள் உண்மைத்தன்மை வெளிவரட்டும். தொடக்கத்தில் அந்த ஒளி மங்கலாகவும், மிகச் சிறியதாகவும் இருப்பினும் சரி, வரவர உமக்குத் தீரம் வளரும். கடைசியில் நீர் சிங்க ஏறுபோல, 'நான் அதுவே! நான் அதுவே!' என்று முழங்குவீர். ''நான் ஆணும் அல்லேன், பெண்ணும் அல்லேன்; தேவனும் அல்லேன், அசுரனும் அல்லேன்; மரம் செடி விலங்குகளுள் ஒன்றும் அல்லேன். நான் ஏழையும் அல்லேன்; செல்வனும் அல்லேன்; கற்றவனும் அல்லேன். என் உண்மைத் தன்மையோடு ஒப்பிட்டால் இவைகளெல்லாம் அற்பமேயாம். நான் அதுவே! நான் அதுவே! சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவற்றைக் கண்ணுறுங்கள். இவைகளில் விளங்கும் ஒளி நானே! செந்தழலின் அழகும் நானே! பிரபஞ்சத்தின் சக்தி நானே! நான் அதுவே! நான் அதுவே!

"நான் அற்பன் என்று நினைப்பார் தவறிழைப்பவர். ஏனெனில் உள்ளவை எல்லாமே ஆன்மாதான். 'அது இருக்கிறது,' என்று நான் சொல்வதாலேயே சூரியன் உள்ளது. பிரபஞ்சமும் அப்படியே. என்னை விட்டு அவைகளுக்கு இருப்பு இல்லை; நான் சச்சிதானந்தமயம், என்றும் இன்பமாகவும், என்றும் தூயவனாகவும் என்றும் அழகனாவும் இருக்கிறேன். ஞாயிறே நம் பார்வைக்கு ஆதாரமானது; என்றாலும், நம் கண்களில் ஏற்படும் கோளாறு எதுவும் அதனை பாதிப்பதில்லை. நானும் அப்படியேதான். எல்லா அவயவங்களின் மூலமும் எல்லாப் பொருள்களின் மூலமும் நானே செயலாற்றுகிறேன். என்றாலும், அச்செயல்களின் நன்மை தீமைகள் என்னைப் பாதிப்பதில்லை. எனக்கென ஒரு நியதியும் இல்லை; செயலும் இல்லை. கரும நியதிகளுக்கு நானே உரியவன். நான் என்றும் இருந்தேன்; என்றும் இருக்கிறேன்.

கணவன், மனைவி, குழந்தைகள், முதலிய உலகப் பொருள்களைப் பொறுத்ததாக என் உண்மை இன்பம் என்றும் இருக்கவில்லை. நான் முடிவற்ற நீலவானம் போன்றவன். பல நிற முகிற்கூட்டங்கள் அதன்மேல் ஒரு கணம் விளையாடுகின்றன; பிறகு சென்று விடுகின்றன; வானத்தின் மாருத நீலநிறமே அங்கு இருக்கிறது. இன்பம் துன்பம், நன்மை தீமை—இவை ஒரு கணம் சூழ்ந்து ஆன்மாவை மறைக்கலாம்; எனினும் 'நான்' அங்கேயே இருக்கிறேன். இவை மாறும் இயல்புடையனவாதலின் சென்று விடுகின்றன; நான் மாறுதல் இல்லாதவன் ஆதலால், ஒளிர்ந்துகொண்டேயிருக்கிறேன். துக்கம் வந்தால், அதற்கு முடிவு உண்டாதலின் அது ஒழியும் என்பதை அறிவேன். தீமைவரின், அதற்கு வரையறை இருப்பதை அறிவேன், அது மறைந்தேதீரும். நானே முடிவற்றவன், என்னை எதுவும் தொட இயலாது. நானே முடிவற்ற, நித்திய, மாறுதலற்ற ஆன்மா!"—இப்படி நம் கவிஞர் ஒருவர் பாடுகிருர்.

அழிவற்றதும் மாருததுமான ஒவ்வொன்றுக்கும் செலுத்தும் இப்பானத்தை நாம் பருகுவோமாக! அஞ்சார்தீர். 'நாம் கெட்டவர்கள், நமக்கு வரையறை உண்டு; நமக்குச் சாவு உண்டு,' என்பவற்றையெல்லாம் நம்பவே வேண்டா. இவை உண்மை அல்ல.

"முதலில் இதனைக் கேட்க வேண்டும்; பிறகு இதைச் சிந்திக்க வேண்டும்; பிறகு இதை தியானிக்க வேண்டும்." கைகள் கருமஞ் செய்யும்போது மனம், 'நான் அதுவே; நான் அதுவே',

என்று ஓதவேண்டும். இந்த எண்ணம் உங்கள் எலும்புக்கு எலும்பாகவும் உங்கள் ஊனுக்கு ஊனுகவும் அமையும் வரை, உங்கள் சிறுமை, பலவீனம், துயரம், தீமை இவை பற்றிய அச்சுறுத்தும் கனவுகள் மறையும் வரை இதையே நினைத்து, இதைப் பற்றியே கனவு காணுங்கள். அப்போது, உண்மை ஒரு நொடி கூட உங்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்க இயலாது.

பேரின்பப் பேற்றுக்கு நெறி

வேதங்களிலிருந்து ஒரு கதையை இன்று உங்களுக்குச் சொல்
வேன்: இந்துக்களின் புனித நூல்கள் வேதங்கள், இவை
இலக்கியப் பெருந்திரட்டு. இதன் இறுதிப் பகுதிக்கு 'வேதாந்
தம்' என்பது பெயர்; அதற்கு 'வேதங்களின் முடிவு' என்பது
பொருள். இந்தப் பகுதி அவற்றில் அடங்கிய கொள்கைகளைப்
பற்றியும், சிறப்பாக இப்போது நம்மொடு தொடர்புற்ற தத்துவ
இயலையும் கூறுகிறது. இது மிகப் பழைய வடமொழியில் எழு
தப்பட்டுள்ளது; இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழு
தப்பட்டது என்பதை நீங்கள் நினைவுறுத்திக்கொள்ள வேண்டும்.
ஒருவன் ஒரு பெரிய வேள்வி செய்ய விரும்பினான். இந்து
மதத்தில் யாகத்துக்கு முக்கியத்துவம் அதிகம். வேள்விகளில்
பலவகை உண்டு. யாக குண்டங்களை அமைத்து, நெருப்பில்
பல பொருள்களை இடுகிறார்கள், பலவகை மந்திரங்களை ஓதுகிறார்
கள். யாகத்தின் முடிவில் அந்தணர்களுக்கும் ஏழைகட்கும்
தானங்களைக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு யாகத்துக்கும் ஒவ்
வொரு வகையான தனித்தானம் உண்டு. ஒரு வகை யாகத்தின்
முடிவில், யாகம் செய்பவன், தன் சொத்து முழுவதையும்,
தானம் செய்துவிட வேண்டும். இம் மனிதனோ, பணக்காரனாய்
இருந்தாலும், உலோபியானான்; மிகக் கடினமான இந்த யாகத்
தைச் செய்து பெரும்புகழை அடைய வேண்டும் என்று விரும்பி
னான். இந்த யாகத்தைச் செய்து முடித்த அவன், தன் சொத்து
களை எல்லாம் தானம் செய்வதற்குப் பதிலாக, குருடும், நொண்டி
யும், கிழடுமாய், இனிமேல் பாலே கொடுக்க இயலாத பசுக்களா
கப் பார்த்துத் தானம் செய்தான், அவனுக்கு நசிகேதன் என்று
ஒரு மைந்தன் இருந்தான். அவன் நல்ல அறிஞன். அவன்
தன் தந்தை ஈந்த மோசமான தானங்களைப்பற்றியும், அவற்றால்
தன் குடும்பத்துக்கே நேரக்கூடிய பாவத்தைப் பற்றியும் சிந்தித்
தான். தன்னையே தானமாக்கிக்கொண்டு இதற்குக் கழுவாய்
தேட முடிவு செய்து கொண்டான். எனவே, அவன் தன் தந்தை
யிடம் சென்று, "என்னை யாருக்குத் தானம் கொடுக்கப் போகி
றீர்கள்?" என்று வினவினான். தந்தை மகனுக்கு விடை அளிக்க்
வில்லை. மகனும் விடவில்லை; திரும்பத் திரும்ப இதே கேள்வி

யைக் கேட்டுக் கொண்டேயிருந்தான். அதனால் பொறுமையை இழந்த தந்தை, "நான் உன்னைக் காலதேவனாகிய யமனுக்குக் கொடுக்கிறேன்," என்று கூறினான். உடனே அந்தப் பையன் நேராக யமலோகத்துக்குப் போய்விட்டான். அப்போது யம தருமர் அங்கு இல்லை; ஆதலால் அங்கேயே காத்திருந்தான். மூன்று நாளைக்குப் பிறகு வீடு திரும்பிய யமதருமர், நசிகேதனைப் பார்த்து, "அந்தணனே, நீ என் அதிதி; மூன்று நாளாக என் வீட்டில் பட்டினியாய் இருந்திருக்கிறாய். நான் உன்னை வணங்கு கிறேன். உன்னைப் பட்டினி போட்ட இந்தத் தவறான செயலுக்கு மாறாக நீ கேட்கும் மூன்று வரங்களை நான் கொடுக்கிறேன்," என்றார்.

"என் தந்தைக்கு என்மேல் உள்ள சீற்றந் தணியவேண்டும்; இதுதான் நான் வேண்டும் முதல் வரம்" என்றான் சிறுவன். இதைப் பெற்றுக்கொண்ட பிறகு ஏதோ ஒரு யாகத்தைப் பற்றித் தனக்குத் தெரிய வேண்டும் என்று இரண்டாவது வரம் கேட்டான். "ஒருவன் இறந்தால் அவனுக்கு என்ன நேர்கிறது? அவன் அழிந்துவிடுவதாகச் சிலரும், அவன் அழிவதே இல்லை என்று சிலரும் மொழிகின்றனர். உண்மை என்ன? விடையை வழங் குங்கள். இதுவே மூன்றாவது வரம்," என்றான்.

"முன் காலத்திலும் தேவர்கள் இந்தப் பிரச்சினைக்கு விடை காண முயன்றார்கள். இது மிக நுட்பமான இரகசியம், இதைப் புரிந்துகொள்வது அரிது. வேறு ஏதாவது வரம் கேள்; இதை மட்டும் கேளாதே. நூறு ஆண்டு முழு ஆயுள் வேண்டும் என்று கேள். ஆடு, மாடு, குதிரைகள், பெரிய இராச்சியம் இவை வேண்டும் என்று கேள். இந்த வினாவிற்கு விடை அளிக்கும்படி மட்டும் என்னை வற்புறுத்தாதே. மனிதன் நுகர்தற்குரிய எந்தப் போகத்தை நீ கேட்டாலும் நான் தருகிறேன். ஆனால், இந்த இரகசியத்தை மட்டும் தெரிந்துகொள்ள விரும்பாதே," என்று விடையளித்தார் யமதருமர்.

"இல்லை; மனிதன் செல்வத்தால் திருப்தி அடைவதில்லை. பணம் வேண்டும் என்றால், உங்கள் தரிசனமே அதைக் கொடுத்து விடும். உங்கள் ஆட்சி நடைபெறும் வரையில் நாங்கள் வாழ்வதும் திண்ணம். மண்ணுலகில் வாழும், அழிவுக்கு உட்பட்ட மனிதன் ஒருவன் மட்டும் ஞானவானாக இருந்துவிட்டால், அவன் அழிவில்லாத சாவில்லாத ஒருவரது இணக்கம் பெற்ற பிறகும் நீண்ட ஆயுளில் மகிழ்வானா? ஆடல் பாடல் முதலியவற்றால் விளையும் இன்பத்தின் இயல்பை உணர்ந்த எவன் அதில் மகிழ்

வான்? எனவே, சாவுக்குப் பின் என்ன என்ற இந்த இரகசியத்தை எனக்கு விவரியுங்கள். மற்றென்றும் வேண்டேன். நசிகேதன் வேண்டுவது இதுதான்—சாவின் இரகசியம்,'' என்ருன் நசிகேதன்.

இதைக் கேட்ட யமதருமருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. சென்ற இரண்டு மூன்று சொற்பொழிவுகளிலும், ஞானம் மனத்தைப் பக்குவம் அடையச் செய்கிறது என்று நான் சொன்னேன். ஞானத்தால் உண்மையை அறிவதற்கு ஏற்படும் முதல் பக்குவம், 'ஒருவன் உண்மையைத் தவிர வேறென்றிலும் ஆசை வைக்கக் கூடாது; உண்மைக்காகவே உண்மையை விரும்ப வேண்டும்,' என்பதுதான். யமதருமர் கொடுப்பதாகச் சொன்ன சொத்து, செல்வம், நீண்ட ஆயுள் முதலியவற்றை அந்தச் சிறுவன் விரும்பாமல் விலக்கியதைப் பாருங்கள். உண்மையை அறிவதற்காக, ஞானத்துக்காக, அவன் இவற்றை எல்லாம் துறக்க ஆயத்தமாய் இருந்தான். அந்நிலையிலேதான் ஞானம் தோன்றும்.

யமதருமர் நசிகேதனிடம் திருப்தியுற்றுக் கூறலானர்: "இரண்டு வழிகள் இருக்கின்றன: ஒன்று சிற்றின்ப நுகர்ச்சி; மற்றென்று பேரின்ப அனுபூதி. இவை இரண்டும் வேறுபட்ட வகையில் மக்களைக் கவர்கின்றன. இந்த இரண்டனுள் பேரின்ப வழியைத் தேர்ந்துகொள்பவனே இருடியாவான். சிற்றின்ப வழியைத் தேர்ந்து கொள்பவனே, இழிவையே தேடிக்கொள்கிருன். நசிகேதா, நான் உன்னைப் பாராட்டுகிறேன்! நீ ஆசைக்குரியதைக் கேட்கவில்லை. நான் பல வகையில் உனக்குப் போகத்தில் ஆசை ஊட்ட முயன்றேன். நீ எல்லாவற்றையும் எதிர்த்து வென்ருய். போக வாழ்வைவிட ஞானமே, உயர்ந்தது என்பது உனக்குத் தெரிந்திருக்கிறது.

"அறியாமையில் வாழ்ந்து இன்பந்துய்ப்பவனுக்கும் விலங்குக்கும் வேற்றுமை இல்லை என்பதை நீ அறிந்திருக்கிருய். பலர், அஞ்ஞானத்தில் அழுந்தியிருந்தாலும்—அகங்காரமாக—தாங்கள் பெரிய இருடிகள் என்ற செருக்கோடு, நேர்மையற்ற நெறிகளிலே போகங்களிலுமே வளையவளைய வருகின்றனர். இது குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போன்றதே ஆகும். இரண்டு மூன்று மண்ணுங்கட்டிகளால் திருப்தி அடைந்துவிடும் பேதைக் குழந்தைகள் போன்றவர்களின் மனத்தில் ஞான ஒளி வீசுவதே இல்லை. அவர்களுக்கு இகமோ பரமோ விளங்குவதில்லை. அவர்கள் இரண்டு உலகங்களையுமே மறுத்து, அதன் விளைவாகத் திரும்பத் திரும்ப என் வசப்படுகிருர்கள். பலருக்கு

இதைக் கேட்கும் வாய்ப்பே இருப்பதில்லை; பலர் கேட்டாலும் அதை அறிந்துகொள்வதில்லை; இதற்குக் காரணம், குருவும் உபதேசம் பெறும் சீடனும் ஆச்சரியமான தகுதி உடையவராய் இல்லாமையேயாகும். உபதேசிக்கும் குரு தெளிந்த ஞானம் உடையவராய் இருந்தால் ஒழிய, அவர் நூறு முறை உபதேசித்தாலும், சீடன் நூறு முறை கேட்டாலும், உண்மையின் ஒளி நெஞ்சில் தோன்றுவதில்லை. நசிகேதா, உன் மனத்தை வெறுந் தருக்க வாதங்களால் குழப்பிக்கொள்ளாதே! தூய்மையான நெஞ்சிலேதான் இந்த ஒளி நன்கு வீசும். எவனொருவனை அரிய பெரிய முயற்சியால் அன்றிக் காண முடியாதோ, எவனொருவன் மறைந்திருக்கிறானோ, எவனொருவன் இதயத்துக்கும் இதயமான குகையில் புகுந்திருக்கிறானோ, அந்தப் பழைய புருடனைப் புறக் கண்களால் காண இயலாது. அவனை ஞானக் கண்ணால் நோக்கும் ஒருவனுக்கு, இன்பம் துன்பம் இரண்டிலும் பற்று அற்று விடுகிறது. இந்த இரகசியத்தைக் கண்டவன் வீண் ஆசைகளிலெல்லாமிருந்து விடுபடுகிறான்; மிக நுட்பமான ஞானக் காட்சியைப் பெறுகிறான்; பேரின்ப நிலையில் என்றும் இருப்பவனாகிறான். நசிகேதா, பேரின்ப வழி இதுதான். இந்த நிலையை அடைந்தவன், பாவம் புண்ணியம், செய்ய வேண்டுவன வேண்டாதன, இம்மை மறுமை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவனாவான். இதை அறிபவனே அறிஞனாவான். எவன் ஒருவனை எல்லா வேதங்களும் தேடுகின்றனவோ, எவனைக் காண வேண்டி மனிதன் பல வகைத் தவத்தை மேற்கொள்கின்றானோ, அவனது பெயரை நான் உனக்குச் சொல்லப் போகிறேன்: அதுதான் 'ஓம்'. நித்தியமான இந்த 'ஓம்' என்பதே பிரம்மம்; அழிவற்ற பொருள். இதன் இரகசியத்தை அறிந்தவன் எதை விரும்பினாலும் அது அவனதாகும். நசிகேதா, நீ எதைப்பற்றி அறிய விரும்புகிறாயோ, அந்த ஆன்மா ஒருபோதும் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. தொடக்கம் இல்லாததாகவும், என்றும் உள்ளதாகவும் உள்ள அந்தப் பழம்பொருள் என்றும் அழிவதில்லை; உடல் அழியும் போதும் அது அழிவதில்லை. கொலையாளி தன்னாற் கொல்ல இயலுமென நினைத்தலும், கொலை உண்டவன் தான் கொல்லப்பட்டதாக நினைத்தலும், இரண்டும் தவறுதான். ஏனெனில், எதையும் கொல்லவோ எதனாலும் கொல்லப்படவோ ஆன்மாவால் இயலாது. அணுவுக்கும் அணுவாகவும் மகத்துக்கும் மகத்தாகவும் உள்ள, எல்லா உயிர்களுக்கும் நாதனான அவன், எல்லாப் பிராணிகளின் இதயக் குகையிலும்

உறைகின்றான். பாவத்திலிருந்து விடுதலை பெற்ற ஒருவன் அவ் வீசனது கருணையால், அவனை அவனது முழு ஒளியோடும் காண்கிறான். (இறையனுபூதிக்கு ஒரு காரணமாவது இறையருளே என்பதைக் காண்கிறோம்.) உட்கார்ந்த நிலையிலே அவன் வெகு தூரம் போகிறான்; படுத்த நிலையிலே அவன் எங்குமே போகிறான். தூய்மை பெற்ற நுட்பமான அறிவுடையவர்களை அன்றி, வேறு யாரும் முரண்பட்ட இயல்புகளுக்குச் சமரச இருப்பான இறைவனை அறியும் தகுதி உடையவர் அல்லர். உடல் அற்றவனாய், ஆயினும் உடலுக்குள் வசிப்பவனாய், தொடப்படாதவனாய், ஆயினும் எல்லாப் பொருள்களோடும் ஒட்டியதுபோலத் தோன்றுபவனாய், எங்கும் நிறைந்தவனாய் உள்ள ஆன்மாவை எவன் இவ்வாறு உணர்கிறானோ அந்த இருடி துன்பத்திலிருந்து விடுதலை பெறுகிறான். வேதம் ஓதுவதனாலோ, உயர்ந்த அறிவினாலோ, பெரும்படிப்பினாலோ ஆன்மாவை அடைந்துவிட இயலாது. எவன் ஒருவனை ஆன்மா தேடுகிறதோ, அவன் ஆன்மாவை அடைகிறான். அவனுக்குத் தன் பெருமையை அது காட்டுகிறது. எவன் ஒருவன் பாவச் செயல்களைச் செய்தவண்ணம் இருக்கிறானோ, எவனுடைய மனம் அமைதி பெறவில்லையோ, எவனால் தியானம் செய்ய முடியாதோ, எவன் மனம் எப்போதும் குழம்பியதாயும் சலனம் உடையதாயும் இருக்கிறதோ, அவன் இதயக் குகையில் புகுந்துள்ள ஆன்மாவை அறிந்து அனுபவிக்க இயலாது. நசிகேதா, இந்த உடலே தேர்; ஐம்பொறிகளே குதிரைகள்; மனமே கடிவாளக் கயிறு; புத்தியே தேரோட்டி; ஆன்மாவே தேர் ஊர்பவன். ஆன்மா தன்னைத் தேர்ப் பாகனாகிய புத்தியோடும், அதன் மூலம் மனமாகிய கடிவாளக் கயிற்றோடும், அதன் மூலமாகப் பொறிகளாம் பரிகளோடும் இணைத்துக்கொள்ளும்பொழுது அவனைப் போகி என்று சொல்வர்; அந்த நிலையில் அவன் காண்கிறான், செயல் புரிகிறான், நடிக்கிறான். எவனுடைய மனம் அவன் வசம் இல்லையோ, எவனுக்கு விவேகம் இல்லையோ, அவனுடைய பொறிகள், பாகனுக்கு வசப்படாத இடக்குக் குதிரைகள்போல, அவனுக்கு வசப்படுவதில்லை. ஆனால், எவனுக்கு விவேகம் இருக்கிறதோ, எவனது மனம் அவனுக்கு வசப்பட்டிருக்கிறதோ, அவனுடைய பொறிகள், பாகனுக்கு வசப்படும் சாதுக் குதிரைகள்போல், அவனுக்கு என்றும் வசமாயுள்ளன. எவன் விவேகம் உற்றவனோ, எவனது மனம் உண்மையை நாடும் நெறியில் செல்கிறதோ, எவன் என்றும் தூய்மை பெற்றிருக்கிறானோ, அவனுக்கு உண்மை விளங்குகிறது; இந்த நிலைபெற்ற

ஒருவனுக்குப் பிறவியே இல்லை. நசிகேதா, இது மிகவும் கடின மானது; இதன் வழி மிக நீண்டது; இதன் முடிவை அடைவது மிகக் கடினமான செயல். மிக நுட்பமான ஞானம் பெற்றவர் கட்கே இந்த முடிவைக் காணவோ அறிந்துகொள்ளவோ இயலும். என்றாலும், நீ அஞ்ச வேண்டா. எழுந்து முயற்சி செய். முடிவு கிட்டும் வரையில் ஓய்ந்து நில்லாதே! இது கத்தி முனையில் நடப் பதுபோன்ற அரிய செயல் என்று இதில் முயன்ற இருடிகள் இயம்புகின்றார்கள். பொறிகளுக்கும், தொட்டு நுகர்தற்கும், உரு வத்துக்கும், சுவைக்கும் அப்பாற்பட்டவன் எவனோ, எவனுக்கு ஒரு மாறுதலும் இல்லையோ, எவன் முடிவற்றவனோ, எவன் அறி வுக்கும் அப்பாற்பட்டவனோ, எவனுக்கு அழிவே இல்லையோ, அவனை அறிவதால் மட்டுமே நாம் சாவின் வாயிலிருந்து தப்ப இயலும்.'' என்றார் யமதருமர்.

இதுவரையிலும் மனிதன் அடையவேண்டிய கதி எது என் பதை யமதருமர் விளக்குகிறார் என்பது தெரிகிறது. பிறப்பு, இறப்பு, துக்கம் முதலியவான, நம்மை உலகில் ஆட்டுவிக்கும் சக்திகளை நாம் வெல்ல வேண்டுமானால், உண்மையானதை அறி வதுதான் அதற்கு வழி என்ற எண்ணம் இப்போது நமக்கு முதலில் வருகிறது. இந்த உண்மையானது எது? என்றும் எந்த வித மாறுதலும் அடையாததும், மனிதனுடைய ஆன்மாவாவதும், இந்தப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக நிற்கும் ஆன்மா ஆவதுமே. இதை அறிவது மிகவும் அரிதானது என்றும் பெரியார் சொல் கிறார்கள். அறிவது என்பது, வெற்றறிவால் மட்டும் அறிவதன்று; அனுபூதியே ஆகும். அந்த மோட்சம் பார்க்கக்கூடியது, உணரக் கூடியது என்று நாம் படிக்கிறோம். ஆனால், இந்தக் ஊனக் கண் களால் அதைக் காண இயலாது; இதற்கான பார்வை மிகு நுட்ப மான பார்வையே ஆகும். சுவர்களையோ, புத்தகங்களையோ பார்க்கப் பயன்படும் பார்வை, தூலப் பார்வையாகும்; ஆனால், உண்மையை நோக்க உதவும் பார்வை மிக நுட்பமானது; இந்தப் பார்வையைப் பெறுவதுதான் ஞானத்தின் முழு இரகசியமும் ஆகும். இதைப் பெற ஒருவர் தூய்மை உடையவராய் இருக்க வேண்டும் என்றும் யமதருமர் சொல்கிறார். பார்வையை மிகவும் நுட்பம் ஆக்கிக்கொள்ளும் வழி இதுதான். பிறகு அவர் நமக்கு வேறு வழிகளையும் சொல்கிறார். தானே நிற்பவரான அவர், இந்திரியங்களுக்கு வெகு அப்பாற்பட்டவர் ஆவர். இந்திரியங் களால் வெளிப் பொருள்களையே பார்க்க இயலும்; ஆனால், தானே இருப்பவரான உண்மைப் பொருளை உள் நோக்காலே

தான் காண இயலும். இதற்கு வேண்டிய தகுதி என்ன என்பதை நாம் மறக்கக்கூடாது. பார்வையை உள்ளே திருப்பி, ஆன்மாவை அடையவேண்டும் என்ற ஆசைதான் இந்தத் தகுதி. பிரபஞ்சத்தில் நாம் காணும் அழகிய பொருள்கள் எல்லாம் மிக நல்லவைகளே; என்றாலும், கடவுளைப் பார்க்க அது வழியன்று. பார்வையை உள்ளே திருப்புவது எப்படி என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வெளியே பார்க்கும் கண்களின் ஆர்வத்தைக் குறைக்கவேண்டும். போக்கு வரவு மிகுந்த தெருவில் போகும் வண்டிகளின் சத்தம் காரணமாக ஒருவரோடு ஒருவர் பேசுவது சரியாகக் காதில் விழுவதில்லை. சத்தம் மிகுந்திருப்பதால், பேச்சுக் கேட்பதில்லை. மனம் வெளியே நோக்குவதால், பக்கத்தில் இருப்பவர் பேசுவதும் கேட்பதில்லை. இதே போல நம்மைச் சூழ்ந்திருக்கும் வையகத்திலும் சத்தம் நிறைந்திருப்பதால், அது மனத்தை வெளியே இழுத்து விடுகிறது. எனவே, நாம் எப்படி ஆன்மாவைப் பார்க்க இயலும்? மனத்தின் இந்த வெளிப் போக்கை நிறுத்த வேண்டும். இதைத்தான் பார்வையை உள்ளே திருப்புவது என்று சொல்கிறோம். இப்படிச் செய்தாற்றான் உள்ளே இருக்கும் இறைவரது பெருமையைக் காண இயலும்.

இந்த ஆன்மா என்பது என்ன? இது அறிவுக்கே எட்டாத ஒன்று என்பதைப் பார்த்தோம். இந்த ஆன்மா, நித்தியமானது, எங்கும் நிறைந்தது என்பதையும், நீங்கள், நான், எல்லோருமே எங்கும் நிறைந்தவர்களே என்பதையும், இந்த ஆன்மா மாற்றமில்லாதது என்பதையும் இந்த உபநிடதத்திலிருந்து நாம் கண்டோம். இப்படி எங்கும் நிறைந்த பொருள் ஒன்றாகவேதான் இருக்க இயலும். ஒரே மாதிரி எங்கும் நிறைந்தவைகளாக இரண்டு பொருள் எப்படி இருக்க இயலும்? இயலாதல்லவா? இது போலவே முடிவற்றனவாகவும் இரண்டு பொருள் இருக்க இயலாது. முடிவு என்ன? உள்ளது ஒரே பொருளான ஆன்மாதான். நீங்கள், நான், இந்தப் பிரபஞ்சம் எல்லாமே பலவாகத் தோன்றும் ஒன்றுதான். "எப்படி ஒன்றாகிய நெருப்பு, உலகில் புகுந்து பல உருவங்களாகக் காட்சி அளிக்கிறதோ, அப்படியே அந்த ஒன்றாகிய ஆன்மாவும்—எல்லோருக்கும் ஆன்மாவாய் இருக்கும் அதுவும்—எல்லா உருவங்களாகவும் காட்சி அளிக்கிறது. 'இந்த ஆன்மா நிறைவுற்றது, தூய்மையானது என்பதும், இதுவே பிரபஞ்சத்தில் உள்ள ஒரே பொருள் என்பதும் உண்மையானால், இது தூய்மையற்ற உடல், பாவ உடல், நல்ல

உடல் முதலியவற்றுள் புகும்போது இதற்கு என்ன நேருகிறது ?" என்ற வினு எழுகிறது. இது எப்படி நிறைவுற்றதாய் இருக்க இயலும் ? " ஒவ்வொரு கண்ணின் பார்க்கும் சக்தியாகவும் இருப்பது சூரியனே. என்ருலும், பார்க்கும் கண்களில் உள்ள குற்றம் அதனை எந்த விதத்திலும் மாசுறச் செய்வதில்லை." ஒரு மனிதனுக்குக் காமாலை இருந்தால், அவன் எல்லாவற்றையும் மஞ்சள் நிறமாகவே காண்கிருன். அவன் பார்வைக்கு ஆதாரம் சூரியன். ஆனுல், இந்தக் குறை சூரியனைப் பாதிப்பதில்லை. இதைப் போலவே இந்த ஒரு பொருள் எல்லாவற்றுக்கும் ஆன்மாவாய் இருந்தாலும், வெளியே உள்ள தூய்மையோ, தூய்மை இன்மையோ இதைப் பாதிப்பதில்லை. " கண நேரமும் நிலையற்ற இந்த பிரபஞ்சத்தில், நிலையான பொருளாய் இருப்பதை, சடப் பொருள்கள் நிறைந்த இவ்வுலகில் உணர்வுக்கு இருப்பிடமாய் இருக்கும் ஒன்றை, பல நிறைந்த பிரபஞ்சத்தில் ஒன்ருக நிற்கும் பொருளை, உண்மையென்று அறிந்து இதை எவஞெருவன், தன் ஆன்மாவுக்குள்ளும் காண்கிருனே, அவனுக்கே பேரின்பம் உரியதாகும்; வேறு யாருக்கும் இது கிட்டாது; கிட்டாது. இங்கே சூரியனே நக்ஷத்திரங்களோ ஒளிர்வதில்லை, மின்னலும் மின்னுவதில்லை, பிறகு நெருப்புக்கு, இடம் எங்கே? அவர் ஒளிர்வதாலே மற்றவையெல்லாம் ஒளிர்கின்றன. அவரது ஒளியால் எல்லாப் பொருள்களும் ஒளி பெறுகின்றன. நெஞ்சை அலைக்கும் ஆசைகளெல்லாம் அடங்கியவுடன், மரிக்கும் இயல்புள்ள மனிதன் அமரன் ஆகிருன், உடனே அவன் பிரம்மத்தை அடைந்துவிடுகிருன். நெஞ்சின் கோணல்கள் எல்லாம் மறைந்தவுடன், நெஞ்சின் முடிச்சுகளெல்லாம் அறுபட்டவுடன், மரிக்கும் இயல்புடையவன் அமரனுகிருன். இதுதான் வழி. இந்த ஆராய்ச்சி நமக்கு இன்பம் தரட்டும். இதுவே நம்மைக் காக்கட்டும். இதுவே நமக்கு ஆற்றலைத் தரட்டும். இதுவே நமக்குள் ஊக்கும் சக்தி ஆகட்டும். நாம் ஒருவரை ஒருவர் பகைக்காமல் இருப்போமாக ! எல்லோருக்கும் அமைதி உண்டாகட்டும் !"

வேதாந்தத் தத்துவ விசாரத்தில் இது போன்ற சிந்தனைகளைத்தான் காணலாம். உலகில் எங்கும் காணப்படும் சிந்தனைகளுக்கு முற்றும் வேறுபட்ட சிந்தனை ஒன்றை நாம் இங்கே காண்கிறோம். வேதத்தின் மிகப் பழைய பகுதிகளிலல்ல உண்மைத்தேட்டம்—மற்றப் புத்தகங்களில் இருப்பதுபோல—வெளியிலேயே இருந்தது. மிகமிகப் பழைய நூல்கள் ஒரு பிரச்சினையை எழுப்பின ; " தொடக்கத்தில் என்ன இருந்தது ? உள்

ளது இல்லது இரண்டும் அற்ற நிலையில், இருட்டை இருட்டு மூடிக்கொண்டிருந்தபோது, என்ன இருந்தது? இவற்றையெல்லாம படைத்தவர் யார்?'' தேட்டம் இப்படித் தொடங்கிற்று. அவை தேவதைகள், தேவர்கள் போன்ற பல பொருள்களைப்பற்றிப் பேசத் தொடங்கின; நாளாக ஆக இந்தப் பேச்சால் பயனில்லை என்று இதை அவை விட்டுவிட்டன. அந்த நாட்களில் தேட்டம் வெளி நோக்கியதாய் இருந்தது; எனவே, அவர்களால் ஒன்றையும் கண்டுபிடிக்க இயலவில்லை. ஆனால், பிற்காலத்தில் அவர்கள் தானகவே உள்ள உண்மையை உள்ளே தேடத் தொடங்கினர்கள்; வேதங்களில் இப்படித்தான் காணப்படுகிறது. 'விண்மீன்கள் புகைமீன்கள் பாலனைய உடுக்கண வீதி ஆகிய இந்த வெளிப் பிரபஞ்சம் முழுவதிலும் தேடினலும் பலன் ஒன்றும் கிடைப்பதில்லை; இதனல், பிறப்பு, சாவு என்ற பிரச்சினைக்குப் பதில் கிடைப்பதில்லை,' என்பதுதான் வேதத்தின் அடிப்படையான ஒரே கொள்கையாகும். நமக்குள்ளே இருக்கும் விந்தையான இயந்திரத்தை ஆராயவேண்டி வந்தது. அதனல் பிரபஞ்ச இரகசியம் விளங்கத் தொடங்கியது. நக்ஷத்திர மண்டல ஆராய்ச்சியோ, சூரிய வட்ட ஆராய்ச்சியோ, இந்தப் பலனை அளிக்க இயலவில்லை. மனிதனைப் பிரித்து ஆராய வேண்டியிருந்தது;—உடலை அன்று, அவனது ஆன்மாவை. ஆன்மாவில் அவர்கள் பிரச்சினைக்கு விடை கிடைத்தது. அவர்கள் கண்ட விடை என்ன? உடலுக்கு உள்ளே, மனத்துக்கும் உள்ளே, தானகவே உள்ள உண்மைப் பொருள் இருக்கிறது. அந்தப் பொருளுக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. தானக உள்ள இது, எங்கும் நிறைந்தது, இதற்கு உருவமே இல்லையாதலின். உருவமோ வடிவமோ அற்றதும், காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்டதும் ஒரே இடத்தில் இருக்க இயலாது. அது எப்படி இயலும்? அது எங்கும் இருக்கிறது; எல்லா இடத்தும் உள்ளது; நம் எல்லாரிடத்தும் சமமாக உள்ளது.

மனித ஆன்மா என்பது என்ன? 'கடவுள் என்ற ஒரு பொருள் உண்டு. இதோடு எண்ணிறந்த ஆன்மாக்களும் உண்டு. தன்மையிலும், உருவிலும், எல்லா விஷயங்களிலுமே கடவுளினின்றும் நித்தியமாக வேறுபட்டவை இவை,' என்று சொல்லும் ஒரு கூட்டத்தார் இருக்கின்றனர். இதைத்தான் 'துவைதம்' என்கிருர்கள். இது மிக மிகப் பழையதான பண்படாத எண்ணம். 'முடிவற்ற தெய்விகமான கடவுளின் ஒரு பகுதியே ஆன்மாக்கள்,' என்று இன்னெரு கூட்டத்தார் இவர்

களுக்கு விடை கூறுகின்றனர். 'இந்த உடம்பு தன்னிலையிலே ஒரு சிறு பிரபஞ்சம்; இதற்குப் பின் மனமோ நனவோ இருக்கிறது; இதற்கும் பின்னே தனி மனிதனின் ஆன்மா உள்ளது; இது போலவே இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே ஓர் உடம்பு; இதற்குப் பின் உலக மனமும், அதற்கும் பின்னே உலக ஆன்மாவும் இருக்கின்றன; எப்படி இந்த மனித உடம்பு உலக உடம்பின் ஒரு பகுதியோ, அப்படியே மனித மனம், உலக மனத்தின் ஒரு பகுதியாம்; மனித ஆன்மா, உலக ஆன்மாவின் ஒரு பகுதியாம்,' என்கிறது விசிட்டாத்துவைதம் என்ற கொள்கை; இது ஒரு வகை 'விசேடணம்' பெற்ற அத்துவைதமே ஆகும். உலக ஆன்மா முடிவற்றது என்பது நமக்குத் தெரியும். முடிவற்ற ஒன்றுக்குப் பல பகுதிகள் எப்படி இருக்க இயலும்? அதை உடைக்கவோ, பகுக்கவோ எவ்வாறு இயலும்? 'முடிவற்ற இறைவனின் ஒரு பொறி நான்' என்று சொல்வது கவிதையாய் இருக்கலாம். ஆனால், சிந்திப்பவர்க்கு அது பொருந்தாத கூற்றும். எல்லையற்ற ஒன்றைப் பகுப்பது என்பதன் பொருள் என்ன? சிறு சிறு துண்டுகளாகப் பகுக்கவோ பிரிக்கவோ இயல்வதற்கு அது ஒரு சடப்பொருளா! முடிவற்றதைப் பகுக்க ஒன்றும் இயலாது. இயலும் என்றால், அப்பொருள் முடிவற்றதாய் இருக்க இயலாது. பின் முடிவு என்ன? 'உலக ஆன்மாவாய் இருப்பது எதுவோ, அது நீதான்; நீ அதன் பகுதியாகாது, முழுமையுமேயாவாய்,' என்பதுதான் முடிபு. அவ்வாறாயின் இத்தனை வகைகள் யாவை? பலகோடி சீவர்களை (ஆன்மாக்களை) நாம் பார்க்கிறோமே! இவைகளெல்லாம் என்ன? பல கோடி நீர்த்துளிகளில் சூரியனின் ஒளி விழுந்தால், ஒவ்வொரு துளியிலும் சூரியனின் முழு உருவமும் தெரிகிறது. ஆனாலும், இவைகளெல்லாம் பிரதிபிம்பங்களே! உண்மைச் சூரியன் ஒன்றேதான். இப்படியே ஒவ்வொரு சீவரிடத்தும் இருப்பதாகத் தோன்றும் ஆன்மா, இறைவனின் பிரதிபிம்பமே ஆகும்; வேறு ஒன்றும் அன்று. அனைத்திற்கும் ஆதாரமான உண்மைப் பொருள் ஒன்றான இறைவனே. ஆங்கே நாம் எல்லோரும் ஒருவரே. ஆன்மா என்ற பொருள் உலகத்தில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதுவே எனக்குள்ளும் இருக்கிறது; உங்களுக்குள்ளும் இருக்கிறது; அது ஒன்றேதான். அந்த ஒன்றேதான் இந்தப் பல வகை உடல்களுக்குள்ளும் பல வேறுபட்ட ஆன்மாக்களாய்ப் பிரதிபலிக்கிறது. இந்த உண்மை நமக்குத் தெரிவதில்லை. நாம் ஒவ்வொருவரும் தனித்தனி என்றும், இறைவனினின்றும் நாம்

ஒவ்வொருவரும் வேறுபட்டவர் என்றும் நினைக்கிறோம். இந்த நினைப்பு இருக்கும் வரை பிரபஞ்சம் துக்கம் நிறைந்ததாகவே இருக்கும். இது வெறும் பிரமை.

துயருக்கு மற்றொரு காரணம் அச்சம். ஒருவன் ஏன் மற்றொருவனுக்குத் தீங்கு செய்கிறான்? தனக்கு வேண்டிய அளவு இன்பம் இல்லாதுபோகும் என்ற அச்சமே அதற்குக் காரணம். தனக்கு வேண்டிய பணம் கிடையாது போகும் என்று ஒருவன் அஞ்சுகிறான்; இந்த அச்சம் காரணமாக, மற்றவர்களைத் துன்புறுத்திக் கொள்ளை அடிக்க அவன் முற்படுகிறான். உள்ளது ஒன்றுதான் என்றால், அச்சத்துக்கு இடம் ஏது? இடி ஒன்று என் தலையில் விழுகிறது என்றால், அந்த இடி நானே தான்; உள்ளது ஒரே ஒரு பொருள்தானே? கொள்ளை நோயும் நானே; புலியும் நானே; சாவும் நானே. சாவும் வாழ்வும் நானே. பிரபஞ்சத்தில் இரண்டு பொருள்கள் உண்டு என்ற நினைப்பால் அச்சம் எழுவதைக் காண்கிறோம், "ஒருவர் மற்றவரிடத்தில் அன்பு காட்டுங்கள்," என்ற உபதேசத்தை நாம் அடிக்கடி கேட்கிறோம். ஏன் இப்படிச் செய்யவேண்டும்? உபதேசித்த அந்தக் கொள்கையின் விளக்கம் வேதாந்தத்தில் இருக்கிறது. நான் ஏன் மற்றவர்களிடம் அன்பு காட்டவேண்டும் என்றால், அவர்களும் நானும் ஒன்றல்லவா? நான் ஏன் சகோதரனிடம் அன்புகாட்டவேண்டும்? நானும் அவனும் ஒன்றாவதாலேதான். இந்த ஒருமை, முழுப் பிரபஞ்சத்தின் ஒன்றான தன்மைதான்—உள்ளது. நம் காலடியில் நெளியும் மிகத் தாழ்ந்த புழுவிலிருந்து, மிக உயர்ந்த உயிர் வரை உள்ள சீவராசிகளுக்கெல்லாம் உடல்கள் பலவானாலும், அவற்றுள் இயங்கும் ஆன்மா ஒன்றேதான். 'எல்லா வாய்களின் மூலமும் அருந்துவதும் நீயே; எல்லாக் கைகளின் மூலமும் உழைப்பது நீயே; எல்லாக் கண்களின் மூலமும் காண்பதும் நீயே. பலகோடி உடல்களின் மூலம் ஆரோக்கிய வாழ்வை அனுபவிப்பதும், பல கோடி உடல்களின்மூலம் நோயால் துன்புறுவதும் நீயேதான்.' இந்த எண்ணம் எழுந்து அனுபவமாகி, இதை நாம் கண்டு உணர்ந்தோமானால், அப்போது துக்கமும் அதோடு அச்சமும் அழிந்துவிடும். நான் சாதல் இயலுமா? எனக்கு அப்பால் வேறு எதுவுமே இல்லையே! பயம் ஒழிகிறது, அப்போதே நிறைவுற்ற இன்பமும் நிறைவுற்ற சாந்தியும் எழுகின்றன. எல்லாவற்றினிடத்திலும் தோன்றும், என்றும் மாறாத இரக்கமும், அன்பும், ஆனந்தமும் மனிதனை எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்திவிடுகின்றன.

இதற்குப் பிரதிச் செயல் இல்லை; எந்தத் துக்கமும் இதைத் தொட இயலாது. ஆனால், இந்தப் பிரபஞ்ச சம்பந்தமான சிறு சிறு உண்டிக்கும் பருகு நீருக்கும் பிரதிச் செயல்கள் எப்போதும் உண்டு. 'நான் பிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டவன்; இறைவனிலிருந்து வேறுபட்டவன்,' என்ற இந்தத் துவைத பாவனையே அனைத்திற்கும் முழுக் காரணமாகும். "நானே அவன்; நானே இந்தப் பிரபஞ்சத்தின் ஆன்மா; நித்திய ஆனந்தமும் சுதந்தரமும் என் இயல்பு," என்ற அனுபவம் உண்டானதும், உண்மை அன்பு தோன்றும்; அச்சம் பறந்து விடும்; துயருக்கெல்லாம் முடிவு வந்துவிடும்.

யாஞ்ஞவல்கியரும் மைத்திரேயியும்

'ஆண்டவனுடைய பெயரைச் கேளாதநாளே கெட்டநாள்; மேக மூட்டம் உள்ள நாள் கெட்டநாளே அன்று,' என்று நாம் சொல்கிறோம். யாஞ்ஞவல்கியர் ஒரு பெரிய முனிவர். 'மூப்பு எய்திய ஒவ்வொருவனும் துறவு பூணவேண்டும்,' என்று இந்திய நாட்டுச் சாத்திரங்கள் வற்புறுத்துகின்றன. எனவே, ஒரு நாள் யாஞ்ஞவல்கியர் தம் மனைவியைப் பார்த்து, "இதோ இருக்கின்றன என் பணம், சொத்து எல்லாம். நான் வெளியேறுகிறேன்," என்று சொன்னார். அதற்கு விடையாக அந்தப் பெண்மணி, "இந்த உலகம் முழுவதையும் நிரப்பும் அளவுக்கு எனக்குச் செல்வம் இருந்தாலும், அதனால் சாவில்லாத நிலை கிடைக்குமா?" என்று கேட்டாள். "கிடைக்காது; நீ பணக்காரியாக இருப்பாய்; அவ்வளவுதான். ஆனால், சாவற்ற நிலையைப் பணம் அளியாது," என்றார் யாஞ்ஞவல்கியர். "நான் சாவற்றவள் ஆக என்ன செய்ய வேண்டும்? இந்த உபாயம் உங்களுக்குத் தெரிந்தால் எனக்கு மொழியுங்கள்," என்றாள் அவள். "நீ என்றுமே என் அன்புக்கு உரியவளாய் இருந்திருக்கிறாய். இந்தக் கேள்வியால் நீ எனக்கு இன்னும் நெருங்கியவள் ஆகிவிட்டாய். இங்கே வந்து என் கண் எதிரே அமர். நான் உனக்கு உரைக்கிறேன். கேட்ட பிறகு அதை நீ நன்கு சிந்திப்பாயாக," என்றார் யாஞ்ஞவல்கியர். பின்னும் தொடர்ந்து கூறுவார்: "மனைவி கணவனிடம் அன்பு செலுத்துவது தன் கணவனுக்காக அன்று, ஆன்மாவுக்காகவே அன்பு செலுத்துகிறாள், ஆன்மாவிடம் அவள் அன்பு செலுத்துவதனால், இதுபோலவே எந்தக் கணவனும் தன் மனைவியினிடம், அவள் தன் மனைவி என்பதற்காக அன்பு செலுத்துவதில்லை. தன் ஆன்மாவினிடம் அவன் அன்பு செலுத்துவதே, மனைவியினிடம் அன்பு செலுத்துவதற்குக் காரணம் ஆகும். எவனும் குழந்தைகளுக்காகக் குழந்தைகளிடம் அன்பு செலுத்துவதில்லை. ஆன்மாவிடம் அன்பு கொள்வதாலே குழந்தைகளிடம் அன்பு செலுத்துகிறான். பணத்திற்காக எவனும் பணத்தை விரும்பவில்லை, ஆன்மாவின் மீதுள்ள அன்பினாலே பணத்தை விரும்புகிறான். பிராமணன் மீது ஒருவன் செலுத்தும் அன்புக்கும் ஆன்மாவில் உள்ள அன்பே காரணம். க்ஷத்திரிய

னுக்காக க்ஷத்திரியனிடம் எவனும் அன்பு செலுத்துவதில்லை; ஆன்மாவினிடம் அன்பு செலுத்துவதனால்தான். உலகத்தை ஒருவன் விரும்புவதும் உலகத்திற்காக அன்று, ஆன்மாவின் மீதுள்ள அன்பினால்தான். அதுபோன்றே தேவர்களுக்காக. எவனும் தேவர்களிடம் அன்பு செலுத்துவதில்லை, ஆன்மாவிடம் அன்பு செலுத்துவதனால்தான். எப்பொருளையும் எவனும் அப்பொருளுக்காக நேசிப்பதில்லை, ஆன்ம நேசத்தாலே தான் அதன்மீது நேசம். ஆதலால் இந்த 'ஆன்மா'வைப்பற்றி நாம் கேட்டலும் ஆராய்தலும் சிந்தித்தலும் வேண்டும். என் மைத்திரேயி, இந்த ஆன்மாவைப் பற்றிக் கேட்டு, பார்த்து, உணர்ந்த பிறகு, அனைத்துப் பொருளும் அறியப்பட்டதாகிறது.'' என்றார் அவர். அப்போது நாம் அடையும் பலன் என்ன? நம் முன்னே காணும் தத்துவ இயல் அதிசயமானது. 'அன்பு என்பதெல்லாம் மிகவும் இழிவான சுயநலம்,' என்ற பேச்சை நாம் அடிக்கடி கேட்கிறோம். என்னிடம் எனக்குள்ள பற்றுத்தான், நான் பிறனிடம் வைக்கும் பற்றுக்குக் காரணம் என்கிறார்கள். இது உண்மையாக இருக்க இயலாது. 'தான்' என்பதே உலகினை இயக்கும் உந்து சக்தி என்று சொல்லும் இக்காலத் தத்துவ ஞானிகளும் இருந்துள்ளனர். கண்டிருக்கிறோம். இது உண்மை, எனினும் தவறு. ஆயினும் இந்த 'நான்' என்பது உள்ளே ஒளிரும் 'நான்' என்ற உண்மைப் பொருளின் நிழலே ஆகும். இது அற்பமாதலின் கெட்டதாகவும், தவறாகவும் தோன்றுகிறது. 'தன்'னிடத்தில் செலுத்தும் எல்லையற்ற அன்பு—தானே பிரபஞ்சமாதலின்—கெட்டதாகவும், சிறுமை உள்ளதாகவும் தோன்றுகிறது, அது ஒரு சிறு பகுதி வழியே தோன்றுவதனால்தான். ஒரு மனைவி, தன் கணவனிடம் அன்பு செலுத்தும்போது — தெரிந்தோ தெரியாமலோ — அவள் அவனிடம் உள்ள 'தன்'னிடமேதான் அன்பு செலுத்துகிறாள், உலகில் தோன்றுகிறபடி இது தன்னலமேயாகிறது; ஆனால், இந்தத் 'தன்னலம்' உண்மையில் அந்தத் 'தான்' என்பதின் ஒரு சிறுபகுதியே ஆகும். ஒருவன் அன்பு செலுத்தும் போதெல்லாம் அந்தத் 'தான்' மூலமாகத் 'தன்'னிடமே அன்பு செலுத்த வேண்டியதாகிறது. இந்தத் 'தன்'னை உணர்ந்தாக வேண்டும். இது எவ்வாறு வேறுபடுகிறது? 'தான்' என்பதன் உண்மைத் தன்மையை அறியாமல் அதனிடம் அன்பு செலுத்துவது 'தன்னலம்' ஆகும். 'தான்' என்பதன் உண்மையை அறிந்து அதனிடம் அன்பு செலுத்துபவர்களின் 'அன்பு'

பந்தமற்றது. அவர்கள் முனிவர்கள். “தன்னுள் அல்லாமல் வேறெங்கேனும் பிராமணனைப் பார்க்கும் ஒருவனைப் பிராமணன் கைவிடுகிறான். தன்னுள் அல்லாமல் வேறெங்கேனும் க்ஷத்திரியனைப் பார்ப்பவனை க்ஷத்திரியன் கைவிடுகிறான். அந்த ஆத்மாவினிடமன்றி வேறெங்கேனும் உலகைப் பார்ப்பவனை உலகம் கைவிடுகிறது. ஆன்மாவிடத்தன்றி வேறெங்கேனும் இருப்பதாக அறிந்து, தேவரிடம் அன்பு பூணும் தேவர்களைக் கைவிடுகின்றனர் கடவுளர். ஆன்மா அல்லாத வேறொன்றாக ஒவ்வொன்றையும் அறிபவனிடமிருந்து ஒவ்வொரு பொருளும் விலகிவிடுகின்றது. இந்தப் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், இந்த உலகம், இந்தத் தேவர்கள், இன்னும் உள்ளன எல்லாமே ஆன்மாதான்.” அன்பு என்பதை இவ்வாறு விளக்குகிறார் யாஞ்ஞவல்கியர்.

ஒவ்வொரு முறையும் நாம் ஒவ்வொரு பொருளைக் குறிப்பிட்டுச் சிறப்பாகப் பேசும்போது அதை நாம் ஆன்மாவிலிருந்து வேறுபடுத்துகிறோம். நான் ஒரு பெண்ணிடம் அன்பு செலுத்த முயல்கிறேன். அந்தப் பெண்ணைக் குறிப்பிட்டுத் தனியாக்கும் போது அவள் ‘ஆன்மா’விலிருந்து விலகிவிடுகிறாள். எனவே, அவளிடம் நான் செலுத்தும் அன்பு நித்தியமாக இராது; அதன் முடிவு துன்பமாகவே இருக்கும். ஆனால், எந்த நொடியில் நான் அவளை ஆன்மாவாகப் பார்க்கிறேனோ, அந்த நிமிடமே அவளிடம் செலுத்தும் அன்பு நிறைவுற்றதாகி விடுகிறது; அது என்றும் துன்பத்துக்குக் காரணமே ஆகாது. இப்படியேதான் எந்தப் பொருளின் விஷயத்திலும். ஒரு பொருளைப் பிரபஞ்சம் என்ற ஒருமையிலிருந்து — ஆன்மாவினின்று — பிரித்து, தனிப்படுத்தி எப்போது அதனிடம் பற்று வைக்கிறோமோ, அப்போதே ஒரு பிரதிச் செயல் உருவாகி விடுகிறது. ஆன்மாவிற்குப் புறத்தே எந்தப் பொருளிடம் அன்பு செலுத்தினாலும், அந்த அன்பின் முடிவு துன்பமும் துக்கமுமாகவே இருக்கும். எதையும் ஆன்மாவாகவும் ஆன்மாவுக்குள்ளும் அனுபவிப்போமேயானால், துக்கமோ, பிரதிச் செயலோ எதற்கும் இடமே இல்லை. இதுதான் நிறைவுற்ற ஆனந்தம் ஆகும். இந்த இலட்சியத்தை அடைவது எப்படி? இந்த நிலையை அடைவதற்கான வழியை யாஞ்ஞவல்கியர் வகுக்கின்றார். பிரபஞ்சம் முடிவற்றது; எனவே, இதில் உள்ள ஒவ்வொரு பொருளையும் தனித்தனியே எடுத்து, ஆன்மாவையே அறியாது, நாம் ஆன்மாவாகப் பார்ப்பது எப்படி?

"நாம் நீண்ட தொலையில் இருக்கும்போது நம்மால் ஒரு பறையின் ஓசையைச் செவ்வகையாக உணரவோ, அதை அடக்கியாளவோ முடியவில்லை. ஆனால், எந்த நிமிடம் நாம் பறையை நெருங்கி, நம் கையை அதன் மேல் வைக்கிறோமோ, அந்த நிமிடம் அந்த ஓசையை வென்று விடுகிறோம். சங்கு ஒன்றை ஊதும் ஒரு விஷயத்திலும், நாம் அணுகிச் சங்கைப் பற்றும் வரையில், நாம் அந்த ஒலியை நன்கு உணரவோ அடக்கியாளவோ இயலாது; ஆனால், அதன்பின் அடக்கியாள இயலும். வீணையை ஒருவர் வாசிக்கும்போது நாம் வீணையை நெருங்கிய பிறகுதான், நாதம் பிறக்கும் மையத்தை அடைகிறோம். ஒருவர் ஈர விறகை எரிக்கும்போது புகையும் பல நெருப்புப் பொறிகளும் அதிலிருந்து கிளம்புகின்றன; இது போலவே இறைவரிடமிருந்தே — அறிவும் — எல்லாமுமே தோன்றியுள்ளன. அவர் மூச்சு வழியே அறிவை வெளியிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். எல்லா நீருக்கும் கதி எப்படிக் கடலோ, தொடு உணர்ச்சி எல்லாவற்றுக்கும் நடுவிடம் எப்படி உடல்தோலோ, எப்படி எல்லா மணத்துக்கும் நடுவிடம் மூக்கோ எப்படி எல்லாச் சுவைக்கும் நடுவிடம் நாக்கோ, உருவக் காட்சிக்கெல்லாம் 'கதி' எப்படிக் கண்களோ ஒலிகளுக்கெல்லாம் கதி எப்படிக் காதுகளோ, சிந்தனைக்கெல்லாம் கதி எப்படி மனமோ, அனுபவத்துக்கெல்லாம் கதி எப்படி நெஞ்சோ, வேலைகளுக்கெல்லாம் கதி எப்படிக் கைகளோ, அப்படியே எல்லாவற்றுக்கும் கதி முடிவற்ற இறைவரேயாவர். ஒரு கவளம் உப்பைக் கடலில் போட்டவுடன் அது எப்படிக் கரைந்து கடல் முழுவதும் பரவி விடுகிறதோ, எப்படி அந்த உப்பைத் திரும்ப அதனின்றும் நாம் பெற முடியாதோ, அப்படியே இந்த எங்கும் பரந்த இறைவர் நித்தியமாக எல்லையற்றவராய் இருக்கிறார். மைத்திரேயி, எல்லா அறிவும் அவ்விறைவரிடத்தே. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அவரிடமிருந்தே தோன்றி, அவரிடமே மீண்டும் மறைகின்றது. இதற்கு அப்பால் அறிவோ, அழிவோ, முடிவே இல்லை." பொறிகள் போல நாம் அவரிடமிருந்து சிதறியுள்ளோம்; அவரை உணர்ந்தவுடன் நாம் அவரிடமே திரும்பி அவரோடு மீண்டும் ஒன்றுகி விடுவோம், என்ற எண்ணம் நமக்கு உண்டாகிறது. நாம் எங்கும் நிறைந்த பொருளே.

மைத்திரேயிக்கு அச்சம் வந்தது, எங்கும் மக்கள் அச்சம் அடைவது போலவே இது. "சுவாமி, இங்கேதான் எனக்கு

மயக்கம் உண்டாகும்படி செய்துவிட்டீர்களே! தெய்வங்களே இல்லை; தனி மனிதத் தன்மையே இல்லை; எந்த உருவமும் இல்லை; அன்பு செலுத்தவோ பகை பாராட்டவோ யாருமே இல்லை, என்று சொல்லி என்னை நீங்கள் அச்சுறுத்திவிட்டீர்கள். இன்னாரென்றறிய ஒருவரும் இரார். அன்பு செய்ய ஒருவரும் இரார். பகைக்கவும் ஒருவரும் இரார். நம் கதி என்ன?'' என்று புலம்பினாள் மைத்திரேயி. "உன்னை மயக்கத்தில் ஆழ்த்துவது, மைத்திரேயி, என் நோக்கம் அன்று. இந்த விஷயம் இத்தோடு நிற்கட்டும். உனக்கு அச்சம் ஏற்பட்டிருக்கலாம். இருவர் இருக்கும்போது ஒருவர் மற்றவரைப் பார்க்கவோ, ஒருவர் மற்றவர் பேச்சைக் கேட்கவோ, ஒருவர் மற்றவருக்கு நல்வரவு கூறவோ, ஒருவர் மற்றவரைப்பற்றி நினைக்கவோ, ஒருவர் மற்றவரை அறியவோ இயலும். ஆனால், எல்லாமே ஆன்மாவாகிய பிறகு யாரை யார் பார்ப்பது? யார் பேச்சை யார் கேட்பது? யாரை யார் வரவேற்பது? யாரை யார் அறிவது?'' என்றார் யாஞ்ஞவல்கியர். இந்தக் கருத்தையே ஷோபனேர் (Schopenhauer) என்ற மேல் நாட்டுத் தத்துவஞானியார் தம் தத்துவக் கொள்கைகளில் சொல்கிறார்: "எவனால் இந்தப் பிரபஞ்சமே நமக்கு விளக்கமாகிறதோ, அவனை எதனால் அறிவது? எல்லாவற்றையும் அறிபவனை எதனால் அறிவது? எல்லாவற்றையும் அறிபவனை அறியும் சாதனம் எது? அப்படி ஒரு சாதனம் எப்படி இருக்க இயலும்? அதனுள்ளும் அதன் மூலமாகவுந்தானே நாம் எல்லாவற்றையும் அறிகிறோம்? அவனை அறியும் சாதனம் எது? சாதனமே இல்லை. அவனே அச்சாதனம்.''

இது வரையிலும் கிடைத்த கருத்து, எல்லாம் முடிவற்ற இறைவரே என்பதுதான். இதுதான் உண்மையான தனித்தன்மை. இங்கே பிரிவினைக்கோ, பகுதிகளுக்கோ இடம் இல்லை. எண்ணங்களெல்லாம் மிகத் தாழ்ந்தவை; வெறும்பிரமை. ஆனால் தனிப் பொருளாகக் காணும் ஒவ்வொன்றின் அணுவிற்குள்ளும், அணுவழியாகவும், முடிவற்ற பரம்பொருள் இலங்குகின்றது. எல்லாமே ஆன்மாவின் வெளித்தோற்றந்தான். ஆன்மா இந்நிலையை அடைவது எப்படி? யாஞ்ஞவல்கியரே சொல்கிறபடி முடிவில், இந்த ஆன்மாவைப்பற்றி, முதலில் கேட்டுத் தெரிந்து கொள்க. முதலில் முடிவை வெளியிட்ட அவர், பிறகு அதைப்பற்றி விவாதித்தார். கடைசியாக, எதை அறிவதன் மூலம் எல்லாவற்றையும் அறியமுடியுமோ, அதை

அறியும் வழியைக் காட்டினர். இறுதியாக அதைப்பற்றியே தியானிக்க வேண்டும் என்ருர். பிறகு அவர் பிண்டம் அண்டம் என்ற முற்றும் முரண்பட்ட இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டு, அவை எப்படிக் குறிப்பிட்ட பாதையில் சுற்றி வருகின்றன என்பதையும், எல்லாமே மிக அழகாய் இருக்கின்றன என்பதையும் காட்டுகிருர். ''இந்த ஞாலம் இன்பம் நிறைந்தது; ஒவ்வோர் உயிருக்கும் உதவி புரிவது; எல்லா உயிர்களும் புவிக்கு உதவியாய் இருக்கின்றன. இவை எல்லாமே தன்னெளி கொண்ட ஆன்மாவின் தோற்றங்களே.'' இன்பம் என்ற எல்லாமே, மிகத் தாழ்ந்த நிலை இன்பமானுலும் சரி, அவருடைய நிழலேதான். எல்லா நல்லனவுமே அவரது பிரதிபிம்பந்தான்; இந்தப் பிரதிபிம்பம் வெற்று நிழலானுல் அதைத் தீங்கு என்கிருேம். இரண்டு தெய்வங்கள் இல்லை. இறைவரது தோற்றத்தில் அவரது ஒளி குறைவானுல், அதையே இருள், தீங்கு என்கிருேம். அவரது தோற்றத்தில் அவரது ஒளி மிகுதியானுல் அதையே ஒளி என்கிருேம். இவ்வளவுதான். நன்மை தீமை அன்பைப் பற்றியவே; வெளிப்படும் ஒளியின் மிகுதியும் குறைவுமே ஆகும். நமது வாழ்க்கையையே சான்ருக எடுத்துக் கொள்வோம். குழந்தைப் பருவத்தில் நாம் நல்லது என்று எண்ணும் எத்தனை பொருள்கள் உண்மையில் தீயவை? தீயவை என்று எண்ணும் எத்தனை பொருள்கள் உண்மையில் நல்லவை? கருத்துகள் மாறும் வகை என்னே! ஒரு கருத்து எப்படிப் படிப்படியாக உயர்ந்துகொண்டே போகிறது! மிக நல்லது என்று நமக்கு ஒரு சமயத்தில் பட்ட பொருள், இப்போது அவ்வளவு நல்லதாகப் படுவதில்லை. ஆதலால் ''நல்லது பொல்லாதது என்பன எல்லாம் வெற்று மூடக் கற்பனைகளே, உண்மையில் இவை இல்லை,'' என்பதுதான். இரண்டுக்கும் உள்ள வேற்றுமை, அளவில்தான்; எல்லாம் ஆன்மாவின் பிரகாசமே. எல்லாப் பொருள்களுள்ளும் அவர் ஒளிர்கிருர். இந்தத் தோற்றம் மிகக் கனத்ததாய் இருந்தால் அதைத் தீங்கு என்றும், மிக மெல்லியதாய் இருந்தால் அதை நன்மை என்றும் சொல்கிருேம். மறைப்பு எல்லாமே அழிவது மிகச் சிறந்த நிலை. எனவே, உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் இதே கருத்தின்படி சிந்தித்தல் வேண்டும்—முழுதும் நன்மையானதாக அதைக் காண இயலும் என்றே; இதுதான் சிறந்தது அன்ருே? நன்மையும் இருக்கிறது; தீமையும் இருக்கிறது. இரண்டிற்கும் உச்சியோ, மையமோ உண்மைப் பொருள் ஆகும். இறைவர் நல்ல

வரும் அல்லர், கெட்டவரும் அல்லர்; உயர்வற உயர்ந்தவர் அவர். நன்மை பலவாகலாம்; தீமையும் பலவாகலாம்; ஆனால், மிகச் சிறந்தது ஒன்றேதான் இருக்க இயலும். நன்மைக்கும் தீமைக்கும் இடையே பலதரப்பட்ட வேற்றுமைக்கு இடம் உண்டு; ஆனால், மிகச் சிறந்தது ஒன்றேதான். மிகச் சிறந்ததான இதை மெல்லிய போர்வை வழியாகப் பார்க்கும்போது பல வகை நன்மைகள் என்று பெயரிடுகிறோம். தடித்த துணிகளின் மூலம் காணும் போது பலவகைத் தீங்குகளென அழைக்கிறோம். நன்மை தீமை இரண்டும் மூடக் கற்பனைகளின் வெவ்வேறு உருவங்களே ஆகும். அவை எல்லா வகையான துவைதப் பிரமைகளுக்கும், பல வகைக் கருத்துகளுக்கும் ஆளாகியுள்ளன; அம்மொழிகள் மனிதர்களின் உள்ளங்களில் பதிந்து விட்டன. இவை ஆடவரையும் மகளிரையும் அச்சுறுத்தி, அவர்களுடைய உள்ளங்களின் மேல் கொடுங்கோல் ஆட்சி புரிகின்றன. இவை நம்மைப் புலிகள் ஆக்குகின்றன. நாம் பிறரிடம் காட்டும் கடுமையான வெறுப்பு முழுதுக்கும் காரணம், நமது குழந்தைப் பருவ முதல் நாம் உட்கொண்டு வந்துள்ள—நன்மை தீமை என்னும்—இப்பேதைமைக் கருத்துகளேயாம். மக்களைப்பற்றிய நமது மதிப்பு முற்றும் தவறுகிறது; அழகான இந்தப் பிரபஞ்சத்தை நரகமாக்கிக்கொள்கிறோம்; ஆனால், நன்மை தீமைகளை நாம் கைவிட்டதும், இப்பிரபஞ்சம் சுவர்க்கம் ஆகிவிடும்.

"இந்தப் பிரபஞ்சம் இனிமை நிறைந்தது, எல்லா உயிர்களுக்கும் அது இனிக்கிறது; எல்லா உயிர்களும் இந்தப் பிரபஞ்சத்துக்கு இனிக்கின்றன? இவை ஒன்றுக்கொன்று உதவியாய் இருக்கின்றன. இந்த இனிப்பெல்லாம் ஆன்மாதான், இந்தப் பிரபஞ்சத்தின் உட்பொருளாய் இருக்கும் ஒளி மிகுந்த அழிவில்லாத ஆன்மாதான்." இந்த இனிமை யாருடையது? அவனன்றி இந்த இனிமை எவ்வாறு இருக்க இயலும்? இந்த ஒரே இனிமைதான் பலவிதங்களாகக் காட்சி அளிக்கின்றது. ஞானியோ பாவியோ, தேவதூதனோ, கொலையாளியோ, எம் மனிதனிடத்தும், உடலிலோ, மனத்திலோ, புலன்களிலோ அன்பு தோன்றினாலும், அது ஆத்மனேதான். உடல் இன்பங்களும் ஆத்மனே; மன இன்பங்களும் ஆத்மனே; ஆன்மிக இன்பங்களும் ஆத்மனே. ஆத்மனன்றி வேறொன்று எப்படி இருக்க இயலும்? ஒருவரோடொருவர் எப்போதும் போராடிக்கொண்டிருக்கும் இருபதினாயிரம் தேவர்களும் அசுரர்களும் எப்படி இருக்க இயலும்? குழந்தைக்குரிய வெறுங்கனுக்களே இவை. மிகவும் தாழ்ந்த உடலின்

பம் எதுவோ, அதுவும் ஆத்மனே; மிகவும் உயர்ந்த ஆன்மிக இன்பமும் ஆத்மனே. ஆத்மனல்லாமல் எந்த இனிமையும் இல்லை. இப்படிச் சொல்கிறார் யாஞ்ஞவல்கியர். நீங்கள் இந்த நிலையை அடைந்து எப்போது எல்லாவற்றிலும் உண்மை ஒன்றையே பார்க்கிறீர்களோ, குடிகாரனின் குடி இன்பத்திலும் அந்த இனிமையையே நீங்கள் என்று காண்கின்றீர்களோ, அன்று தான் நீங்கள் உண்மையை உணர்ந்தவர்கள் ஆவீர்கள்; அன்று தான் ஆனந்தம் இன்னது என்பதும், அமைதி இன்னது என்பதும், அன்பு இன்னது என்பதும் உங்களுக்கு விளங்கும். எது வரையில் நீங்கள் முட்டாள்தனமான, குழந்தையியற்குரிய பேதைமையான மூட நம்பிக்கைகளான இப்பேதங்களுக்கு இடங் கொடுக்கும் வரை எல்லா வகைத் துன்பங்களும் உங்களை வந்தடையும். ஆனால், அழிவற்ற அவன், ஒளி உருவான அவன், பிரபஞ்சத்துக்குள் இருக்கின்றான்; எல்லா இனிமையும் அவனதே; அதே இன்பந்தான் உடலிலும் இருக்கிறது. இந்த உடம்பே பிரபஞ்சம் போலும்! உடம்பின் எல்லாச் சக்திகளிலும், எல்லா இன்பங்களிலும் அவனே இருக்கிறான். கண்கள் பார்க்கின்றன; உடல் தொடுகிறது; இந்த போகங்கள் எல்லாம் என்ன? உடலில் திகழும் தன்னொளி பெற்ற அப்பொருளே இவை எல்லாம்; அது ஆன்மாவே. எல்லா உயிர்களுக்கும் இனிய இப் பிரபஞ்சமும், அதற்கு இனிய எல்லா உயிர்களும், அந்த சுயம் பிரகாசப் பொருளேயாம். அழிவற்ற அப்பொருளே உலகின் ஆனந்தம், நம்மிடத்தும் உள்ள ஆனந்தம், அதுவே பிரம்மம். இந்தக் காற்று எல்லா உயிர்களுக்கும் மிக இனியது, எல்லா உயிர்களும் அதற்கு இனியவை. காற்றிலுள்ள அந்தத் தன்னொளியுள்ள அழிவற்ற பொருளே இவ் வுடலிலும் உள்ளது. அதுவே எல்லாச் சீவர்களின் உயிராகவும் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. கதிரவன் எல்லா உயிர்களுக்கும் இனியவன்; எல்லா உயிர்களும் கதிரவனுக்கு இனியன. சூரியனிடத்திலுள்ள தன்னொளியுள்ள பொருளையே நாம் சிற்றொளியாகப் பிரதிபலிக்கிறோம். அதனுடைய பிரதிபலிப்பல்லாமல் வேறு என்ன இருக்க இயலும்? அதுவே நம் உடலுக்குள் இருக்கிறது. அவனுடைய பிரதிபலிப்பே ஒளியைக் காணும்படி நம்மைச் செய்கிறது. சந்திரன் எல்லா உயிர்களுக்கும் இனியது; அதற்கு எல்லா உயிர்களும் இனியவை. ஆனால், அச்சந்திரனுக்கு உயிராயுள்ள சுயம் பிரகாசமான அழிவற்ற பொருளே நமக்குள் தன்னை மனமாக வெளிப்படுத்தியுள்ளது. மின்னல் மிகுந்த அழகாயிருக்கிறது;

மின்னலுக்கும் ஒவ்வொருவரும் இனியவர். தன்னொளி உடையவனும் அழிவற்றவனுமான பொருளே மின்னலுக்கு உயிராயிருப்பது, நமக்குள்ளும் இருப்பது; எல்லாமே பிரம்மமாதலின் ஆத்மனே எல்லா உயிர்களுக்கும் வேந்தன்! இக் கருத்துகள் மக்களுக்கு மிகப் பயன்படத் தக்கவை; இவை தியானத்திற்கு உரியன. உதாரணமாகப் பூமியைப் பற்றிச் சிந்தியுங்கள்; இதைச் சிந்திக்கும்போது, பூமிக்குள் உள்ள பொருள் நம்முள்ளும் இருக்கிறது என்பதை உணருங்கள்; பூமியும் நாமும் ஒன்றே என்பதையும் உணருங்கள். உடலைப் பூமியோடு ஒன்றுபடுத்துங்கள், உங்கள் ஆன்மாவை அதன் பின்னுள்ள ஆத்மனோடு ஒன்றுபடுத்துங்கள். அதற்குள்ளும் என்னிடத்தும் உள்ள ஆன்மாவோடு ஒன்றுபடுத்துங்கள். இவை எல்லாம் பலவடிவங்களாக வெளிப்பட்டுள்ள ஒரே பொருளாம். எல்லாத் தியானத்துக்கும் முடிவும் நோக்கமும் இந்த ஒருமையை அறிவதுதான். இதைத்தான் யாஞ்ஞவல்கியர், மைத்திரேயிக்கு விளக்க முயன்றுகொண்டிருந்தார்.

ஆன்மா, இயற்கை, இறை

வேதாந்தக் கொள்கைப்படி மனிதன் மூன்று பொருள்களால் ஆனவன்போலும்! வெளியே உள்ளது உடல்; இதுவே மனிதனின் பருமை (gross) வடிவம். இதிலேதான் கண், மூக்கு, காது போன்ற புலன் உணர்ச்சிக் கருவிகள் இருக்கின்றன. கண் காட்சி உறுப்பு அன்று, கருவிதான். இதற்குப் பின்னுலேதான் காட்சியுறுப்பு (organ) இருக்கிறது. இதுபோல் காதுகள் கேள்வி உறுப்புகளல்ல, அவை கருவிகளே; அவற்றுக்குப் பின்னுள்ளது உறுப்பு; இக்கால உடல் நூலார் சொல்லும் நரம்பு மையம் இருக்கிறது. வடமொழியில் உறுப்புகளை 'இந்திரியங்கள்' என்கிருர்கள். கண்களை அடக்கியாளும் 'மைய'த்தை அழித்துவிட்டால், கண்கள் பார்க்கமாட்டா; நம் இந்திரியங்கள் எல்லாம் இப்படித்தான். இன்னும், உறுப்புகள் தாமாகவே உணரா, இவற்ருேடு இன்ஞென்று இணையவேண்டும். இந்த இன்ஞென்றுதான் மனம். பல சமயங்களில் நீங்கள் ஏதோ ஒரு நினைவில் மூழ்கி யிருந்ததையும், கடிகாரம் மணியடித்தது உங்கட்குக் கேளாததையும் கவனித்திருப்பீர்கள். ஏன் இது? காது இருந்தது, ஓசை அலைகள் காதுக்குள் புகுந்து, மூளைக்கும் கொண்டு போகப்பட்டன; என்ருலும், அவ்வோசை உங்களுக்குக் கேட்கவில்லை. மனத்தின் இணைப்பு, உறுப்புக்கு இல்லாததே காரணம். வெளிப்பொருள்களின் பதிவுகள் உறுப்புகளுக்குக்கொண்டு போகப்படும்போது அவற்ருேடு மனம் இணைந்திருந்தால், இந்தப் பதிவுகளை வாங்கி அவற்றுக்கு மனம் ஒரு நிறம் கொடுக்கிறது; இதையே 'அகங்காரம்' என்கிருேம். நான் ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது ஒரு கொசு என் விரலைக் கடிப்பதாக வைத்துக்கொள்வோம். என் மனம் வேறு ஒன்றில் ஈடுபட்டிருப்பதால் அந்தக் கடியை நான் உணருவதில்லை. பின்னுல் புலன்கட்குச் செலுத்தப்பட்ட பதிவோடு, மனம் இணைக்கப்படும்போது, ஒரு பிரதிச் செயல் உண்டாகிறது. அந்தப் பிரதிச் செயலோடு கொசு இருப்பதை நான் உணர்கிறேன். ஆக மனம், உறுப்புகளோடு இணைந்து கொள்வதும் போதாது; சங்கற்பம் (will) என்ற உருவில் இதற்கு ஒரு பிரதிச் செயல் ஏற்பட வேண்டும். இந்தப் பிரதிச் செயல் எந்தத் திறமையிலிருந்து வருகிறதோ, அந்த அறிவுத்திறனை 'புத்தி'

என்கிறோம். முதலில் வெளிக்கருவி இருக்க வேண்டும், பிறகு உறுப்பு, பிறகு மனம் உறுப்போடு இணைய வேண்டும்; பிறகு புத்தியின் பிரதிச்செயல் ஏற்பட வேண்டும். இந்தச் செயல் தொடர் முற்றுப் பெற்றவுடன், 'நானும் வெளிப்பொருளும்' என்ற கருத்து மின்னுகிறது; ஓர் உணர்ச்சி, ஒரு கருத்து, ஓர் அறிவு உண்டாகிறது. கருவி ஆன வெளி உறுப்பு உடலில் இருக்கிறது. இதற்குப் பின் நுட்பமான உள் உறுப்பு இருக்கிறது; பின் மனம்; பின் புத்தி இருக்கிறது; பிறகு அகங்காரம் அமைகிறது. இந்த அகங்காரமே, 'நான் பார்க்கிறேன்; நான் கேட்கிறேன்...' என்று சொல்கிறது. இந்த நிகழ்ச்சி முழுவதும் சில சக்திகளால் நடைபெறுகின்றன. இவற்றை உயிர்ச் சக்திகள் எனலாம்; சம்ஸ்கிருதத்தில் இவற்றைப் 'பிராணன்' என்கிறார்கள். வெளிக் கருவிகளுக்கு இருப்பிடமான மனிதனின் பருப்பகுதியைப் பருவுடல் என்கிறோம். சம்ஸ்கிருதத்தில் இதை 'ஸ்தூல சரீரம்' என்பர். இதற்குப் பின்னுலேதான் உறுப்புகள், மனம், புத்தி, அகங்காரம் என்ற தொடர் அமைகிறது. இவைகளும், உயிர்ச் சக்திகளும் இணைந்த ஒரு கூட்டையே 'நுட்ப உடல்' அல்லது 'சூட்சும சரீரம்' என்கிறோம். இந்தச் சக்திகள் மிக நுட்பமான பொருள்களால் ஆனவையாதலின், உடம்புக்கு ஏற்படும் எத்தகைய தீங்கும் இவற்றை அழிக்க இயலாததாகிறது. இந்த உடம்பு அடையும் எந்த எல்லா அதிர்ச்சிகளுக்கும் தப்பி அவை வாழ்கின்றன. நம் கண்ணுக்குப் புலனாகும் பருவுடல், பருப் பொருளால் ஆனது; ஆனதால்தான் இது எப்போதும் புதுப் பிக்கப்பட்ட வண்ணம், தொடர்ச்சியாக மாறிய வண்ணம் இருக்கிறது. ஆனால், உட்கருவிகள் ஆகிய மனம் புத்தி அகங் காரம் என்பவைகளோ, மிகவும் நுட்பமான பொருளால் ஆக்கப் பட்டிருத்தலால், இவை பல யுகங்களளவும் நிலைத்திருக்கும், எந்தத் தடை வழியாகவும் புகுந்து செல்லக்கூடியவை. இந்தப் பருவுடல் அறிவற்றது. சூக்குமப் பொருளால் அமைந்த சூக்கும உடலும் இத்தகையதே; இந்தச் சூக்கும சரீரத்தின் ஒரு பகுதி மனம்; ஒரு பகுதி புத்தி, ஒரு பகுதி அகங்காரம்; எனினும், இவற்றுள் எந்த ஒன்றும் தனியாக 'அறிபவன்' ஆக முடியாது என்பது நமக்குப் பார்த்தவுடனே தெரிகிறது. இவற்றுள் எதுவுமே 'பார்ப்பவன்' ஆக, சாக்ஷியாக, யாருக்காக அறிவுச் செயல் நடக்கிறதோ அவனாக, செயலைப் பார்ப்பவனாக இயலாது. மனத்திலும் புத்தியிலும் அகங்காரத்திலும் ஏற்படும் இந்த இயக் கங்கள் எல்லாம் வேறு யாருக்காகவோதான் இருக்கவேண்டும்.

இவை நுட்பமான சடப் பொருளால் ஆக்கப்பட்டிருத்தலின் தன்னொளி உடையவையாக இருத்தல் இயலாது. இவற்றினிடம் தோன்றும் ஒளி, இவற்றினிடமே தோன்றியதாக இருக்க இயலாது. எடுத்துக்காட்டாக, இந்த மேசையின் தோற்றம் எந்த சடப் பொருளாலும் உண்டானதாக இருக்க இயலாது. எனவே, இவற்றுக்கெல்லாம் பின்னே யாரோ ஒருவர் இருக்கவேண்டும்; இவரே எல்லாத் தோற்றங்களையும் உண்டுபண்ணுபவர்; உண்மையாகவே எல்லாவற்றையும் காண்பவர்; உண்மையாக எல்லாவற்றையும் அனுபவிப்பவர். இவரையே வடமொழியில் 'ஆத்மன்' மனிதனின் உயிர், (Soul), உண்மையில் மனிதனின் உண்மைப் பொருள் (Self) என்றெல்லாம் சொல்கிறார்கள். உண்மையில் பொருள்களைப் பார்ப்பவர் இவரே. வெளிக் கருவிகளும் உறுப்புகளும் பதிவுகளைப் பெற்று, மனத்துக்கு அனுப்புகின்றன. மனம் புத்திக்கு அனுப்புகிறது; புத்தி இவற்றைக் கண்ணாடிபோலப் பிர்திபலிக்கிறது. இதற்குப் பின்னால் உள்ள 'ஆன்மா' இவற்றைப் பார்த்து, தன் கட்டளைகளையும், செயல் யோசனைகளையும் விடுக்கிறது. இந்தக் கருவிகளை எல்லாம் ஆள்வது ஆன்மாவே, அதுவே வீட்டுக்குத் தலைவன், உடம்புக்குள் சிங்காதனத்து அமரும் அரசன். அகங்காரம் சிந்தனை என்ற திறன்கள், புத்தி உறுப்புகள் கருவிகள் உடல் எல்லாமே ஆன்மாவின் கட்டளைகளுக்கு அடங்கி நடக்கின்றன. இவற்றையெல்லாம் தோற்றுவிப்பதும் அதுவே. அதுதான் மனிதனின் ஆன்மா. இம்மாதிரியே, பிரபஞ்சத்தின் ஒரு சிறு பகுதியில் உள்ளதே இந்த பிரபஞ்சம் முழுவதிலும் உள்ளது ஆகவேண்டும் என்பதை நாம் அறியலாகும். ஒத்திருத்தலே பிரபஞ்ச நியதியாயின், பிரபஞ்சம் முழுவதிலும் காணப்படும் அமைப்பின் மாதிரியே அதன் ஒவ்வொரு பகுதியிலும் காணப்படவேண்டும். எனவே, 'பிரபஞ்சம்' என்று நாம் வழங்கும் இந்தப்பருப்பொருளான அமைப்புக்குப் பின், நுண்பொருளால் ஆன ஒரு பிரபஞ்சம்—நினைவுப்பிரபஞ்சம்—இருக்கவேண்டும் என்றும், இதற்கும் பின்னால், இந்த எல்லா நினைவையும் எழச் செய்வதும், கட்டளையிடுவதும், இப்பிரபஞ்சத்தில் சிம்மாசனத்து அமர்ந்து அரசனாகி ஆள்வதும் ஆன ஓர் ஆன்மா இருக்கவேண்டும் என்று நாம் நினைப்பது இயற்கைதானே? இப்படி ஒவ்வோர் உடலுக்கும் மனத்துக்கும் பின் இருக்கும் ஆன்மாவைப் பிரத்தியகாத்துமன், தனி மனித ஆன்மா என்றும், பிரபஞ்சத்திற்கு பின் அதற்கு

வழிகாட்டியாகி, ஆளுபவனுகி, வேந்தனுகி நிற்கும் ஆன்மா இறைவன் என்றும் பெயரிடப்பெறும்.

'இந்தப் பொருள்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன?' என்பதே கருதவேண்டிய அடுத்த பொருள் ஆகும். இதற்கு விடைகூறுவோம். வருவது என்பதன் பொருள் என்ன? சூனியத்திலிருந்து ஏதாவது ஒன்றை உண்டாக்க இயலும், என்பது இதன் பொருளானுல், இது இயலாத காரியம். இந்தப் படைப்பு தோற்றம் எல்லாவற்றையும் சூனியத்திலிருந்து உண்டாக்க இயலாது. காரணம் இன்றி எதுவும் தோன்ற இயலாது. காரியம் என்பது காரணத்தின் மறு உருவமே ஆகும். இதோ ஒரு கண்ணுடித் துண்டு இருக்கிறது. இதைத் துண்டு துண்டாக உடைத்து, பொடியாக்கி, இரசாயனப் பொருள்களின் உதவியால் முற்றுமே அழித்துவிடுகிருேம் என்று வைத்துக்கொள்ளலாம். இது சூனியத்தில் போய் முடியுமா? திண்ணமாக முடியாது. உருவம் போய்விடும்; ஆனுல் அப்பொருளின் துகள்கள் இருக்கும். இவை இந்திரியங்களுக்குப் புலப்படாது போகும் என்ருலும், இவை இருக்கவே செய்யும். இப்பொருள்களைக் கொண்டு வேருெரு கண்ணுடித் துண்டு செய்யலாம். ஒரு பொருள் பற்றி இது உண்மையானுல், எல்லாப் பொருள்கள் பற்றிய உண்மையும் இதுவேயாகும். சூனியத்திலிருந்து எதையுமே படைக்க இயலாது. உள்ள எதையுமே சூனியம் ஆக்கவும் இயலாது. அது மிகமிக நுட்பமாக மாறலாம்; திரும்பவும் பருப்பொருளாக மாறலாம். கடலிலிருந்து மழைத் துளி நீராவி உருவில் மேலே செல்கிறது; பிறகு அது காற்றின் வழியே மிதந்து மலையை நோக்கிச் செல்கிறது. பிறகு அது திரும்பவும் நீராக மாறிப் பூமிக்கு வந்து, பல நூறு மைல் ஓடிச் சென்று திரும்பவும் தாய்க் கடலை அடைகிறது. விதை, மரத்தை உண்டு பண்ணுகிறது. விதையை மட்டும் விட்டுவிட்டு மரம் அழிகிறது. இந்த விதை இன்னெரு மரமாகிறது; மறுபடியும் விதையுண்டாகிறது; இப்படியே பின்னும். ஒரு பறவையைப் பாருங்கள்: அது முட்டையிலிருந்து தோன்றுகிறது; அழகான பறவை ஆகிறது; வாழ்ந்து தன் ஆயுள் முடிந்த பிறகு வருங்காலப் பறவைகளின் கருவைத் தாங்கும் முட்டைகளை விட்டுவிட்டுச் சாகிறது. விலங்குகளும் இப்படியே; மனிதர்களும் இப்படியே. எல்லாமே சில விதைகள், சில கருக்கள், சில நுட்பமான உருக்கள் இவற்றில் தொடங்கி, படிப்படியாகப் பருமை பெற்று வளர்கின்றன; மறுபடியும் அதே நுண்ணிய வடிவம் அடைந்து

ஒடுங்கி விடுகின்றன. பிரபஞ்சம் முழுவதும் இப்படியே நடை பெறுகிறது. பிரபஞ்சம் முழுவதுமே உருகி, படிப்படியாக நுட் பத்தன்மை பெற்று, முடிவில் முற்றும் மறைந்தே விடுவதுபோலத் தோன்றும் ஒரு காலம் வரும்; ஆனால், அது மிக நுட்பப் பொரு ளாய்த்தான் இருக்கிறது. இந்தப் பூமி குளிர்ந்து கொண்டே வருகிறது. நாளாவட்டத்தில் இது மிகக் குளிர்ந்துவிடும்; பிறகு இது துண்டு துண்டாக உடைந்து, நுட்பமாக மாறித் திரும்பவும் ஆகாசமாகிவிடும் என்பதை தற்கால விஞ்ஞான நூலாலும், வான நூலாலும் நாம் அறிவோம். என்றாலும், நுண்கூறுகள் எல்லாம், மறுபடியும் ஒரு பிரபஞ்சப் படைப்புக்கு மூலப் பொரு ளாக அமைந்து எஞ்சி நிற்கும். மறுபடியும் அது மறையும், இன்னொன்று தோன்றும். ஆக, இப்பிரபஞ்சம் அதற்குரிய காரண நிலைக்கே மீளும்; மறுபடியும் அதன் ஆக்கப் பொருள் கள் ஒன்று சேர்ந்து வடிவங்கொள்ளும்—இது, தாழும் அலை மறு படியும் உயர்ந்து வடிவம் பெறுவது போன்றது. காரண நிலைக்கு மீளலும், மறுபடியும் வெளிவருதலும் உருவம் பெறுதலும் ஆகிய செயல்கள் வடமொழியில் சங்கோசம் விகாசம் அதாவது சுருங்கு தல், விரிதல் எனப்படும். பிரபஞ்சம் முழுவதுமே சுருங்குகிறது; பிறகு பழைய நிலைக்கு விரிகிறது. இக்கால விஞ்ஞான மொழியில் சொன்னால், பிரபஞ்சம் ஒடுங்குகிறது, பிறகு மலர்கிறது. எல்லா வடிவங்களும் தாழ்ந்த வகையிலிருந்து வளர்ந்து படிப்படியாக உயர்வு பெறுவதைப்பற்றி நாம் கேள்விப்படுகிறோம். இது பரி ணாமமுறை, இது மிகவும் உண்மைதான். ஆனால், இத்தகைய விரிவு ஒவ்வொன்றிலும்முன்னரே ஒடுங்குதலும் அடங்கியேஇருக் கிறது. எல்லாச் சமயத்திலும் உலகில் தொழிற்படும் சக்தியின் மொத்த அளவு ஒன்றுதான் என்பதும், எந்தப் பொருளுக்கும் அழிவு என்பதில்லை என்பதும் நமக்குத் தெரியும். பொருளின் ஒரு கூற்றைக்கூட முற்றும் ஒழித்துவிட வழி ஒன்றும் இல்லை. இதேபோல், சக்தியிலும் மிகக் குறைந்த அளவையும் நம்மால் அழிக்கவும் இயலாது, கூட்டவும் இயலாது. எப்போதும் மொத்தம் ஒரே அளவினதாக இருக்கும்; தோற்றம் மட்டுமே மாறு படுவது, ஒடுக்கமும் விரிவும் ஏற்படலால். எனவே, இந்த வட்டம் முன்னைய வட்டத்தில் ஒடுங்கியதன் விரிவே ஆகும். இந்த வட்டமும், திரும்பவும் வரவரமிக நுட்பமாகி ஒடுங்கிவிடும். அதிலிருந்து திரும்பவும் அடுத்த வட்டம் வரும். பிரபஞ்சம் முழுவதுமே இவ்வண்ணம் சென்றுகொண்டிருக்கின்றது. ஆக சூனியத்திலிருந்து ஏதோ ஒன்று உண்டாகிறது என்ற பொரு

ளில் படைப்பு என்பது இல்லை என்பது இதனால் தெரிகிறது. 'படைப்பு' என்ற சொல்லுக்குப் பதிலாக 'வெளிப்படுதல்' என்பதுதான் சிறந்த சொல்லாகும்; இறைவரே இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவர். இந்தப் பிரபஞ்சம் அவரது மூச்சின் வழியே வெளி வருவது போலத் தோன்றுகிறது; திரும்பவும் அது அவருக்குள்ளேயே ஒடுங்கிவிடுகிறது, திரும்ப வும் அவர் அதை வெளிப்படுத்துகிறார். வேதங்களில் இந்த நிகழ்ச்சியை இந்த அழகான உவமையால் விளக்கியிருக்கிறார்கள்: "நித்தியனான இறைவன் பிரபஞ்சத்தை மூச்சாக வெளிவிடு கிறான்; திரும்பவும் மூச்சாக அதை உள்ளே இழுத்துக்கொள் கிறான்," நாம் ஒரு சிறு புழுதிப் பொடியை நம் மூச்சால் உள்ளே இழுத்து வெளியே விடுவது போன்றது இது. இதெல்லாம் முற் றும் சரிதான். ஆனால், "முதல் வட்டத்தில் பிரபஞ்சம் எப்படி இருந்தது?" என்ற கேள்வி எழலாம். பதிலாவது, முதல் வட்டம் என்பதன் பொருள் என்ன? முதல் வட்டம் என்ற ஒன்று இல்லவே இல்லை. காலத்துக்கு ஒரு தொடக்கத்தைக் குறிப்பிட்டு விட்டால், உடனே காலம் என்ற கருத்தே அழிந்துவிடும். காலம் தொடங்கிய எல்லையை நினைக்க முயலும்போது, நாம் அந்த எல்லைக்கு அப்பால் உள்ள காலத்தை நினைத்தே ஆகவேண்டும். இதே போல 'இடம்' தொடங்கிய எல்லையை நினைக்கப் புகுந் தால், அந்த எல்லைக்கும் அப்பால் உள்ள இடத்தை நினைத்தே ஆகவேண்டும். காலமும் இடமும் முடிவற்றவை; எனவே, இவற்றுக்குத் தொடக்கமோ முடிவோ இல்லை. "இறைவன் ஐந்தே நிமிடத்தில் பிரபஞ்ச சிருட்டியை முடித்துவிட்டுப் பிறகு உறங்கப் போய்விட்டான்; அது முதல் உறங்கிக்கொண்டே இருக்கிறான்,"—என்ற கருத்தைவிட இது சிறந்தது. இதற்கு மாறாக, இந்தக் கருத்து, 'இறைவரே நித்தியமான படைப்பாளர்' என்ற கருத்தை நமக்கு அளிக்கிறது. அலை வரிசை ஒன்று கிளம்பித் தணிந்த வண்ணம் இருக்கிறது; இறைவர் நித்திய மான இந்த நிகழ்ச்சியை இயக்கி வருகிறார். எப்படிப் பிரபஞ் சத்துக்குத் தொடக்கமும் முடிவும் இல்லையோ, அப்படியே இறை வருக்கும் அவை இல்லை. இது இப்படித்தான் இருந்தே தீர வேண்டும் என்பதை அறிகிறோம். பருவுருவிலோ, நுண்ணுரு விலோ படைப்பு இல்லாத காலம் ஒன்று உண்டு என்று நாம் சொன்னால், அப்போது கடவுளும் இல்லை என்று ஆகிவிடும். ஏன் என்றால், கடவுளையே நாம் சாட்சி—பிரபஞ்ச சாட்சி—என்று சொல்லுகிறோம். பிரபஞ்சம் இல்லாதபோது இறைவரும் இல்லை;

ஒரு கருத்து மற்றொன்றிலிருந்து தோன்றுகிறது. காரியம் என்ற கருத்திலிருந்துதான் காரணம் என்ற கருத்துத் தோன்றுகிறது; எனவே, காரியம் இல்லை என்றால், காரணமும் இல்லை. ஆதலால் பிரபஞ்சம் எப்படி நித்தியமோ அப்படியே இறைவரும் நித்திய மானவர் என்பது பெறப்படும்.

ஆன்மாவும் நித்தியமானதாகத்தான் இருக்கவேண்டும். ஏன்? ஆன்மா வெறுஞ் சடப்பொருள் அன்று என்பது முதலில் நமக்குத் தெரிகிறது. மனம், கருத்து என்பனபோல அது சூக்கும சரீரம் அன்று, தூல சரீரமும் அன்று. அது பௌதிக உடலும் அன்று; கிறித்தவர் சொல்வது போன்ற ஆவி உடலும் (Spiritual Body) அன்று. பருவுடலும் ஆவியுடலும் மாறுதலுக்கு உட்பட்டவை. பருவுடல் ஒவ்வொரு நிமிடமும் மாறுதலுக்கு உட்படும் இயல்பினது; ஆனால், சூக்கும உடலோ, ஒருவன் விடுதலை பெறும் வரையில் நெடுங்காலம் நீடித்து, பிறகு அழிந்துவிடுகிறது; ஒருவன் விடுதலை பெற்றவுடன் சூக்கும உடல் பிரிந்துவிடுகிறது. மனிதன் சாகுந்தோறும் பருவுடல் பிரிந்து சிதைவடைகிறது. ஆன்மா எந்தக் கூறுகளாலும் ஆக்கப் படாததால், அழிவற்றதாகவே இருக்கவேண்டும். அழிவு என் பதன் பொருள் என்ன? ஒரு பொருள் எதனால் ஆக்கப்பட்டதோ அந்த மூலக்கூறுகளாகப் பிரிந்துவிடுவதே அழிவு ஆகும். இக் கண்ணாடியை நுண்பொடியாக்கினால் அது தன் மூலக் கூறுக ளாகப் பிரிந்துவிடும்; அதுவே கண்ணாடியின் அழிவு ஆகும். மூலக் கூறுகளாகப் பிரிதலே அழிவு என்பதன் பொருளாகும். மூலக் கூறுகளால் அமைக்கப்படாத எந்தப் பொருளுக்கும் அழிவு இல்லை, அதாவது, மூலக் கூறுகளாகப் பிரிவது என்பது அதற்கு இல்லை. ஆன்மா எந்தப் பொருளாலும் ஆனதன்று. அது பிரிக்க முடியாத ஒரே பொருள். எனவே அதற்கு அழிவு அற்ற தாகவேண்டும். இதே காரணத்தால், அதற்குத் தொடக்கமும் இல்லை என்பது பெறப்படும். எனவே, ஆன்மாவுக்குத் தொடக் கமோ முடிவோ இல்லை.

மூன்று பொருள்கள் உள்ளன. முடிவற்றதும் ஆனால் மாறுதலுக்கு உட்பட்டதுமான பிரகிருதி ஒன்று; பிர கிருதி என்ற முழுமைக்குத் தொடக்கம் இல்லை. ஆனால், இதற்குள் பலவகைப்பட்ட மாறுதல்கள் நிகழ்கின்றன. பல்லா யிரம் ஆண்டுகளாகக் கடலை நாடி ஓடும் ஆறு போன்றது இது. எப்போதும் அது, அதே ஆறுதான்; என்றாலும், அது ஒவ் வொரு கணமும் மாறிக்கொண்டே இருக்கிறது; நீர்த்துளிகள்

நொடிக்கு நொடி இடம் மாறியவண்ணம் இருக்கின்றன. அடுத்த பொருளாக, எல்லாவற்றையும் ஆளும், மாறுதல் இல்லாத இறைவர் இருக்கிருர். மூன்ருவதாக, இறைவரைப் போலவே மாறுதல் இல்லாத, நித்தியமான, ஆனல் இறைவருக்கு உட்பட்ட ஆன்மா இருக்கிறது. ஒன்று, ஆண்டான், மற்ருென்று, அடிமை, மூன்ருவது பிரகிருதி.

பிரபஞ்சத்தின் தோற்றம், தொடர்ச்சி, மறைவு மூன்றுக்கும் இறைவரே காரணம். எனவே காரியம் தோன்ற, காரணம் இருந்தே ஆகவேண்டும். இது மட்டும் அன்று; காரணமே காரியம் ஆகிவிடுகிறது. தொழிலாளி பயன்படுத்தும் சில பொருள்களாலும் சில சக்திகளாலும் கண்ணுடி பிறக்கிறது. கண்ணுடியில் இந்தச் சக்திகளும் பொருள்களும் இருக்கின்றன. ஆக்கும்போது தொழிற்பட்ட சக்திகள், அணுக்களை இணைக்கும் சக்தி ஆகிவிட்டன; இந்தச் சக்தி விலகினல், கண்ணுடி பொடியாகிவிடும். பயன்படுத்தப்பட்ட பொருள்களும் கண்ணுடியில் இருக்கின்றன என்பதற்கு ஐயம் இல்லை. அவற்றின் உருவம் மட்டுமே மாறியிருக்கிறது. காரணமே காரியம் ஆகிவிட்டது. எங்கெல்லாம் நாம் காரியத்தைக் கண்டாலும் அதை நாம் காரணங்களாகப் பிரித்துவிட இயலும், காரணமே காரியமாகத் தோற்றம் அளிக்கிறது. எனவே, கடவுள் காரணமாகவும் பிரபஞ்சம் காரியம் ஆகவும் இருந்தால், இறைவரே பிரபஞ்சமாகிவிட்டார் என்பது பெறப்படும். ஆன்மாக்கள் காரியம், இறைவர் காரணம் என்ருல், இறைவரே ஆன்மாக்கள் ஆனர் என்பது தான் முடிவு. எனவே, ஒவ்வோர் ஆன்மாவும் இறைவரின் ஓர் அமிசமே ஆகும். "தீப்பிழம்பு ஒன்றிலிருந்து எண்ணிறந்த நெருப்புப் பொறிகள் சிதறுவதுபோல, நித்தியமான இறைவரிடமிருந்து, இந்த ஆன்மப் பிரபஞ்சமெல்லாம் வந்துள்ளன."

நித்தியமான இறைவரும் நித்தியமான பிரகிருதியும் இருப்பதை நாம் கண்டோம். நித்தியமான ஆன்மாக்களும் கணக்கற்றவை இருக்கின்றன. இதுதான் சமயத்தின் முதற்படி; இதையே 'துவைதம்' என்பர். இந்த நிலையில் மனிதன் தன்னை இறைவரினின்று என்றும் வேறுபட்டவனகவே காண்கிருன்; இறைவர் தனிப் பொருள்; மனிதனும் தனிப் பொருள்; இயற்கையும் தனிப்பொருள். இதுவே 'துவைதம்'. இதன்படி காண்பானும் காணப்படு பொருளும் ஒன்றுக்கொன்று எல்லா வகையாலும் நேர்மாருனவை. மனிதன் பிரகிருதியைப் பார்க்கும்போது மனிதன்காண்பவன், பிரகிருதி காணப்படும் பொருள்.

காண்பான் காணப்படு பொருள் என்ற இரட்டையை அவன் காண்கிறான். மனிதன் கடவுளைக் காணும்போது அவன் தன்னைக் காண்பானாகவும், இறைவரைக் காணப்படு பொருளாகவும் காண்கிறான். இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் முற்றும் வேறுபட்டவர். இறைவருக்கும் மனிதனுக்கும் உள்ள இரட்டை நிலை இதுவே. பொதுவாகச் சமயத்தின் முதற்படி இதுவே ஆகும்.

இதற்கு அடுத்தபடியே நான் சற்றுமுன் உங்களுக்கு விளக்கிக் காட்டியதாகும், 'பிரபஞ்சம் காரியம்; அதற்குக் காரணம் இறைவர்,' என்பதை மனிதன் அறியத் தொடங்கியவுடன் இறைவரே பிரபஞ்சமாகவும் ஆன்மாக்களாகவும் ஆகிறார் என்பதையும், தான் முழுமையான இறைவரின் ஓர் அம்சம் என்பதையும் அவன் அறிகிறான். நாம் மிகச் சிறிய உயிர்கள், அந்தப் பெருநெருப்பின் சிறு பொறிகள், இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே இறைவரின் தோற்றந்தான். இந்த அடுத்தபடியை வடமொழியில் 'விசிஷ்டாத்துவைதம்' என்பர். எனக்கு உடல் இருப்பது போலவும், இந்த உடம்பு ஆன்மாவை மூடியிருப்பது போலவும், ஆன்மா உடலுக்குள்ளும் அதை ஊடுருவியும் இருப்பதுபோலவும், எண்ணற்ற ஆன்மாக்களும், இந்தப் பிரகிருதியும் இறைவருக்கு உடல்போல அமைகின்றன. பிரபஞ்சம் ஒடுங்கும் காலம் வரும்போது அது படிப்படியாக மிக நுண்மையாகிறது; என்றாலும், இது இறைவரது உடலாகிறது. பிரபஞ்சம் தூல (பரு)ப் பிரபஞ்சமாக விரியும்போதும் அது இறைவருக்கு உடலாகவே இருக்கிறது. எப்படி மனித ஆன்மா மனிதனது உடலுக்கும் மனத்திற்கும் ஆன்மா (Soul) ஆகிறதோ, அப்படியே இறைவர் நம் ஆன்மாவுக்கும் ஆன்மாவாய் இருக்கிறார். ஒவ்வொரு சமயத்தாரும், 'நம் ஆன்மாக்களுக்கு ஆன்மா' என்று இயம்புவதை நாம் கேட்டிருக்கிறோம். மேற் சொன்னதுதான் இதன் பொருள். இறைவர் ஆன்மாக்களுக்குள் உறைந்து, அவற்றை இயக்குகிறார், எல்லா ஆன்மாக்களுக்கும் அரசர் ஆகிறார். சமய முதற்படியாகிய துவைதப்படி நாம் ஒவ்வொருவரும் தனிப் பொருள். நாம் என்றும் இறைவர் பிரகிருதி இரண்டினினும் வேறாக நித்தியமாக நிற்பவர் ஆவோம். இரண்டாம் படியில் நாம் தனிப் பொருள்கள் ஆயினும், இறைவரிடமிருந்து வேறாயிருப்பவர்கள் அல்ல. ஒரு தொகுதியில் மிதக்கும் சிறுதுகள்கள் போன்றவர் நாம்; அத்தொகுதியே கடவுள். நாம் ஒவ்வொருவரும் தனியானாலும், இறைவரிடம் ஒன்றுபட்டுள்ளோம். நாம் எல்லோருமே அவருடைய பகுதிகள். ஆதலின், நாம் எல்லோரும் ஒன்றே ஆவோம்.

என்றாலும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலும், மனிதனுக்கும் இறைவருக்கும் இடையேயும் கடுமையான ஒரு தனித்தன்மை இருக்கிறது; அவை வேருயினும், வேருனவையல்ல.

இதற்குப் பிறகு இன்னும் நுட்பமான ஒரு வினு எழுகிறது. 'முடிவற்ற ஒன்றுக்குப் பாகங்கள் உண்டா?' என்பதே அவ் வினு. முடிவற்றதன் பாகங்கள் என்பதன் பொருள் என்ன? விவாதித்துப் பார்த்தால், இது இயலாதது என்பது புலனுகும். முடிவற்றதைப் பிரிக்க இயலாது; அது எப்போதும் முடிவற்றதாகவே இருக்கும். அதைப் பிரிக்க முடியுமானுல், பகுதி ஒவ்வொன்றும் முடிவற்றதாகவே இருக்கும். முடிவற்ற இரண்டு பொருள்கள் இருக்க இயலாது. இரண்டு பொருள்கள் இருந்தால், ஒன்று மற்றென்றுக்கு எல்லே கோலிவிடும்; எனவே, இரண்டும் முடிவுள்ள பொருள்கள் ஆகிவிடும். முடிவற்றது ஒன்றேதான் இருக்க இயலும்; இதைப் பிரிக்கவே இயலாது. இப்போது கிடைக்கும் முடிவு என்ன? முடிவற்ற பொருள் ஒன்றே தான், பல அல்ல; இந்த முடிவற்ற ஒரே ஆன்மா பல்லாயிரம் கண்ணுடிகளில் பிரதிபலிக்கப்படுதலின், பல்வேறு ஆன்மாக்களாகத் தோற்றம் அளிக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தின் ஆதாரமான முடிவற்ற ஓர் ஆன்மாவையே நாம் இறைவர் என்கிறேம். இம் முடிவற்ற ஆன்மாவையே மனித மனத்துக்கு ஆதாரமான, மனித ஆன்மா என்கிறேம்.



சுவாமி விவேகானந்தர்

சுதந்தரமான ஆன்மா

(1896ல் நியூயார்க்கில் செய்த சொற்பொழிவு)

சாங்கியர்களின் ஆராய்ச்சி, இருப்பின் இருமையான இயற்கையோடும் ஆன்மாக்களோடும் நின்று விடுகிறது. எண்ணிறந்த ஆன்மாக்கள் இருக்கின்றன. இவை பிரிக்க இயலாத நிலையில் இருப்பதால், இவற்றுக்கு அழிவு இல்லை. எனவே, இவை பிரகிருதியினின்று வேறு பட்டவைகளாகவே இருக்கவேண்டும். பிரகிருதி தானே பலவிதமாக மாறுதல் அடைந்து உலக நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கிறது; சாங்கியர் கொள்கைப்படி ஆன்மா கிரியையற்ற நிலையில் உள்ள ஒன்று; ஒருதொழிலும் செய்யாதது அது. அது தன் நிலையிலே பிரிக்க முடியாத நிலையில் உள்ள ஒன்று. ஆன்மா விடுதலை பெறுவதற்காகவே பிரகிருதி, இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஆக்குகிறது; 'நான் பிரகிருதி அல்லேன்' என்ற விவேகத்தை ஆன்மா பெறுவதே அதன் விடுதலை ஆகும். ஆன்மா ஒவ்வொன்றும் எங்கும் நிறைந்தது என்பதைச் சாங்கியர்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும் என்பதை நாம் முன்பு கண்டோம். அடிப் பொருளாக இருப்பதால், ஆன்மா வரையறையுற்றதாக இயலாது. எல்லா வரையறைகளும் காலமோ, இடமோ, காரிய காரண நியதியோ மூலமே உண்டாகின்றன. ஆன்மா இவற்றுக்கெல்லாம் முற்றும் அப்பாற்பட்டதாதலின் எவ்வித வரையறையும் அதனிடம் இருக்க இயலாது. வரையுற்று உட்பட ஒரு பொருள், இடத்தில்—அதாவது உடலில்—இருக்க வேண்டும்; உடலாக உள்ள பொருள் இயற்கையில் உள்ளதாகவேண்டும். ஆன்மாவுக்கு வடிவம் உண்டு என்றால், அது பிரகிருதியாகவேதான் இருக்க வேண்டும்; எனவே, ஆன்மா உருவம் இல்லாதது; உருவம் இல்லாத ஒன்றை இங்கோ, அங்கோ, எங்கோ ஓர் இடத்தில் இருப்பதாகச் சொல்ல இயலாது. அது எங்கும் நிறைந்ததாகவே இருக்க வேண்டும். இதற்கு அப்பால் சாங்கிய ஆராய்ச்சி செல்லவில்லை.

'இந்த ஆராய்ச்சி குறைவற்றதன்று,' என்பதே இதற்கு எதிரான வேதாந்திகளின் முதல் வழக்கு ஆகும். அவர்கள் பிரகிருதியும் முடிவற்றது, ஆன்மாவும் முடிவற்றது என்று கூறினால் எனவே, முடிவற்ற பொருள்கள் இரண்டு இருக்க வேண்டும்.

'ஆன்மா எங்கும் நிறைந்தது,' என்று காட்டப் பயன்படும் நியாயங்கள் 'பிரகிருதியும் எங்கும் நிறைந்தது,' என்று காட்டவும் பொருந்தும். எனவே, பிரகிருதியும் காலம், இடம், காரிய-காரண நியதி மூன்றுக்கும் அப்பாற்பட்டதாகவே இருக்க வேண்டும். இப்படியானால், பிரகிருதியினிடம் மாறுதலோ தோற்றங்களோ ஏற்பட இயலாது. இதோடு முடிவற்ற இரண்டு பொருள்களைக் கொள்ளல் என்னும் சங்கடம் உண்டாகிவிடும்—இது இயலாது. இந்தப் பிரச்சினைக்கு வேதாந்தி மொழியும் முடிவு என்ன? பிரகிருதி, ஆன்மா என்பவற்றின் பின்னின்று இவற்றை இயக்கும் அறிவுடைய உயிர் ஒன்று இருக்கவேண்டும்; மனம் நினைக்கும்படியும் பிரகிருதி தொழில் புரியும்படியும் செய்வது இவ்வுயிரே ஆகும். மிகவும் பருப் பொருளான நிலையிலிருந்து மிகவும் நுட்பப் பொருள் நிலையான மகத்து (அறிவு) என்பது வரையில் அடையும் மாறுதல்களெல்லாம் அமைந்த பிரகிருதி அறிவற்றதே ஆகும். சாங்கியர்களும் இவ்வாறே சொல்கிறார்கள். முழுப் பிரபஞ்சத்துக்கும் பின்னிற்கும் இந்த அறிவுற்ற உயிரையே வேதாந்திகள் இறைவர் என்கிறார்கள். ஆதலால் பிரபஞ்சம் என்பதும் இறைவரின் வேறன்று என்பதாகும். அவரே பிரபஞ்சம் ஆகி நிற்கிறார். அவர் பிரபஞ்சத்திற்குத் துணைக் காரணம் மட்டும் அன்றி—முதற் காரணமாகவும் இருக்கிறார். காரணம் என்றும் காரியத்தில் வேறுபட்டதன்று; காரணத்தின் மற்றோர் உருவமே காரியம். ஒவ்வொரு நாளும் இதை நாம் காண்கிறோம். ஆதலால் இப் பரம்பொருளே பிரகிருதிக்குக் காரணம். வேதாந்தத்தில் பல்வேறு வடிவங்களும் பகுதிகளும்—அத்துவிதமோ, விசிஷ்டாத்துவிதமோ, துவைதமோ—முதலில் இந்தக் கொள்கையை ஏற்கின்றன. அதாவது: இறைவர் பிரபஞ்சத்திற்குத் துணைக் கராணம் மட்டும் அன்றி முதற்காரணமும் ஆவார்; இருப்பதெல்லாம் அவரே—(இறைவரே) என்பது. 'ஆன்மாக்களும் அவருடைய அமிசங்களே; முடிவற்ற, குறைவற்ற அந்தப் பெரு நெருப்பின் சிறுபொறிகளே,' என்பது வேதாந்தத்தின் இரண்டாம்படி. ஒரு பெருநெருப்புப் பிழம்பிலிருந்து பல கோடிப் பொறிகள் பறந்து சிதறுவதுபோல் பழம் பொருளான இறைவனிடமிருந்து உண்டாயின, இந்த ஆன்மாக்கள் அனைத்தும். இந்தத் தருக்கம் சரிதான் என்றாலும், இதனால் முழுத் திருப்தியும் உண்டாகவில்லை. 'முடிவற்ற பொருளின் கூறு' என்பதன் பொருள் என்ன? முடிவற்ற பொருள் பகுக்க முடியாத ஒன்று; அதற்குக் கூறுகள் இருக்க இயலாது. பூரணப் பொருளான ஒன்றைப் பகுப்பது

எப்படி? எனவே, 'இந்தப் பொறிகள் அவனிடமிருந்து சிதறியவை' என்பதன் பொருள் என்ன? அத்துவைதி இதற்கு வெகு சுலபமாகப் பதில் கூறிவிடுகிறான். 'கூறு, என்பதே இல்லை. ஆன்மா ஒவ்வொன்றும் பிரம்மத்தின் கூறு அன்று, பிரம்மமே தான்,' என்பதுதான் அவனது முடிபு. அப்படியானால், இத்தனை ஆன்மாக்கள் எப்படி இருக்க இயலும்? பல கோடி நீர்த்துளிகள் பிரதிபிம்பிக்கும் ஒரே சூரியன், தன் சிறுசிறு பிம்பங்களால் பல கோடியாகத் தோன்றுகிறது. இவை தோற்றமே அன்றி, உண்மை அன்று. இது போலவே அந்தப் பல்லாயிரம் ஆன்மாக்களும் இறைவரின் பிரதிபிம்பங்களே; உண்மை அல்ல. இப்பிரபஞ்ச இறைவராகிய, உண்மை இறைவர் ஆகிய உண்மை 'நான்', பாகுபாடற்ற ஏகப்பொருள்—அவை அல்ல. இச் சிறிய வேறுபாடுள்ள பொருள்களான மக்கள், விலங்கு முதலிய எல்லாம் வெறும் பிரதிபிம்பங்களே; உண்மை அல்ல. இவை பிரகிருதியில் தோன்றும் வெற்று மாயா (illusory) பிம்பங்களே. பிரபஞ்சத்தில் எல்லையற்ற தனிப் பொருளாய் நிற்பவர் இறைவரே; அவரே, நீ, நான் என்றெல்லாம் 'தோற்றம்' அளிக்கிறார். ஆனால் இந்த வேறுபாட்டுத் தோற்றம் வெற்று மாயை. இறைவர் பகுபடவில்லை; பகுபட்டது போலத் தோன்றுகிறார்; அவ்வளவுதான். காலம், தேசம், காரண காரிய நியதி என்ற வலைகளின் மூலம் இறைவரைப் பார்ப்பதே இந்தப் பாகுபாட்டு உணர்ச்சி தோன்றக் காரணம் ஆகும். இந்த மூன்றாலாகிய வலை வழியே கடவுளைப் பார்க்கும் போது அவர் இந்த சடப் பிரபஞ்சமாக (Material world)வே தோன்றுகிறார். இன்னும் சற்று உயர்ந்த நிலையில் நின்று இதே வலையின் மூலம் பார்த்தால், விலங்காகவும், அடுத்த மேற்படியில் மனிதனாகவும், அடுத்த படியில் தேவராகவும் அவரே காட்சியளிக்கிறார். எனினும் இப் பிரபஞ்சத்திலுள்ள எல்லையற்ற ஒரே பொருள் இறைவரே ஆவர், அவரே தான் நாம் எல்லாம். நானும் அவரே; நீயும் அவரே. அவருடைய கூறுகள் அல்ல, முழுமையுமே. "எல்லாத் தோற்றத்துக்குப் பின்னிற்கும் நித்தியமான ஞாதா அவரே; இந்தத் தோற்றமே ஆகிறவரும் அவரே." அவரே காண்பவரும் அவரே; காணப்படுபவையும் அவரே. அவரே 'நான்', அவரே 'நீ'. இது எப்படி இயலும்? "காண்பவனையே காண்பது எப்படி?" காண்பவன் தன்னையே காண முடியாதே! நான் மற்றவற்றை எல்லாம் பார்க்க இயலும்; ஆனால், என்னையே எப்படிப் பார்த்துக்கொள்ள இயலும்? ஆன்மா என்பது, காண்பவன் என்பது, எல்லாவற்றுக்கும் இறைவர் என்பது, உண்மைப்

பொருள் என்பது எதுவோ, அதுவே பிரபஞ்சத்தின் காட்சிக் கெல்லாம் காரணம்; ஆனால், அது தன்னையே காணவோ அறியவோ இயலாது, பிரதிபிம்பத்தின் மூலமாகத்தான் இயலும். நீங்கள் உங்கள் முகங்களைக் கண்ணாடியின் மூலமல்லாது காண இயலாது; இதுபோலவே, ஆன்மாவும் தனது பிரதிபிம்பத்தின் மூலமாக அல்லாது தன் சொந்த இயல்பைக் காணமாட்டாது. பிரபஞ்சம் முழுவதுமே, தன்னைத்தானே காண ஆன்மா செய்யும் முயற்சியே ஆகும். இந்தப் பிரதிபிம்பம் முதலில் உயிரணுவி லிருந்து ஏற்பட்டு, படிப்படியாகச் செடிகொடி விலங்கு என்று வளர்ந்துகொண்டே போய், நிறைவுற்ற மனிதன் என்பதிலிருந்து பிரதிபிம்பிக்கும் நிலையை அடைந்து முற்றுப் பெறுகிறது. தன் முகத்தின் பிரதிபிம்பத்தைக் காண விரும்பும் மனிதன், முதலில் கலங்கிய சிறு குட்டை நீரில் தன் முகத்தின் வரை உருவத்தை மட்டும் காண்கிறான்; பிறகு தெளிந்த நீரில் இன்னும் தெளிவாகக் காண்கிறான்; பிறகு பளபளப்பான உலோகத்தின் மேற்பரப்பு ஒன்றில் இன்னும் தெளிவாகக் காண்கிறான்; கடைசியாக முகம் பார்க்கும் கண்ணாடியின்மூலம் உள்ளபடியே தன் முகத்தின் பிரதிபிம்பத்தைக் காண்கிறான்; எனவே, நிறைவுற்ற மனிதனே, காண்பானாகவும் காட்சிப் பொருளாகவும் உள்ள அந்த நிறை பொருளின் மிகஉயர்ந்த பிரதிபிம்பம் ஆவன். மனிதன் தன் இயல்பூக்கத்தால் ஏன் எல்லாப் பொருளையுமே தொழ முயல்கிறான் என்பதும், நிறைவுற்ற மனிதனைப் பிறர் எல்லா நாட்டிலும் தம் இயற்கைத் தூண்டுதலால் ஏன் தெய்வமாகத் தொழுகிறார்கள் என்பதும் இப்போது உங்களுக்கு விளங்கும். நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், நிறைவுற்ற மனிதர்கள் எந்த நாட்டிலும் தெய்வமாகத் தொழப்படுதற்கு உரியவராவார். இயேசுகிறித்து, புத்தர் போன்ற அவதார புருஷர்களை மக்கள் தெய்வமாக வழிபடுவதற்குக் காரணம் இதுதான். நித்தியமான பரமான்மாவின் மிகப் பூரணமான தோற்றங்களே இவர்கள். நீங்களோ, நானோ, கொள்ளக்கூடிய மிக உயர்ந்த கடவுட் கருத்து களைவிட உயர்ந்தவர்கள் இவர்கள். ஒரு பூரண மனிதன் இக் கருத்துகளைவிட மிக உயர்ந்தவன். இத்தகையவர்களிடம் பரிணாம வட்டம் முடிவடைந்து விடுகிறது. காண்பானும் காட்சிப் பொருளும் ஒன்றாகிவிடுகின்றன. இத்தகையவர்களிடமிருந்து மயக்கங்கள் யாவும் மறைந்துவிடுகின்றன. 'நாம் என்றுமே அந்த நிறைவுற்ற இறைவாக... என்ற ... தான் இருந்து வருகிறோம்,' ... ற்பட்டுவிடுகின்றது. ஆனால்,

இந்தப் பந்தம்—எப்படி வந்தது ? குறைவற்ற இறைவர் எவ்வாறு குறைவுள்ள பொருளாக இழிவடைந்தார் ? சுதந்தரமான ஒன்று கட்டுப்பட்ட தெங்ஙனம் ? 'அது கட்டுப்படவே இல்லை ; என்றுமே சுதந்தரமாகத்தான் இருந்து வருகிறது,' என்றே அத்துவைதிகள் கூறுகிறார்கள். பல நிற முகில்கள் பல்வகை வானத்துக்கு முன் வந்து நிற்கின்றன. அவை ஒரு நிமிடம் நின்றபின் போய்விடு கின்றன. ஆனால், என்றும் நிலையாய் உள்ள நீலவானம் அங்கேயே விரிந்த வண்ணம் இருக்கிறது. வானம் என்றும் மாறுவதில்லை ; மாறுவது முகிலே. அது போலவே, நீங்கள் என்றும் குறைவற்றவர்களே, நித்தியமாக நிறைவுற்றவர்களே. உங்களது இயல்பை எதுவும் என்றும் மாற்றுவது இல்லை ; எதனாலும் இனி என்றும் மாற்ற இயலாது, "நான் குறை யுடையவன் ; நான் ஓர் ஆண் ; நான் ஒரு பெண் ; நான் ஒரு பாவி ; நான் மனம் ; எனக்குச் சிந்தனை உண்டு ; நான் சிந்திக்கப் போகிறேன்," என்பனவெல்லாம் வெற்று மன மயக்கங்கள். நீ சிந்திப்பதே இல்லை ; உனக்கு என்றும் உடல் இருந்ததே இல்லை ! நீ என்றும் குறை உடையவனாய் இருந்ததே இல்லை. நீ தான் இந்தப் பிரபஞ்சத்தின் தொழுத கைய இறைவன். இன்று உள்ளவை, இனி உண்டாகவிருப் பவை ஆகிய எல்லாவற்றுக்கும் தனி இறைவன் நீயே. ஞாயிறுகள், திங்கள்கள், விண்மீன்கள், பூமிகள், கிரகங் கள், மற்றும் இப்பிரபஞ்சத்திலுள்ள மிகச் சிறிய பொருள் கள் எல்லாவற்றையும் ஆளும் எல்லாம் வல்ல இறைவன் நீயே ! பரிதி ஒளி வீசுவதற்கும் உடுக்கணங்கள் மின்னுவதற்கும், பூமி வளமும் அழகும் பெற்று விளங்குவதற்கும் காரணம் நீதான். உன்னுடைய அருளினாலேதான் இவை ஒன்றோடொன்று பற்றுக் கொண்டு ஒன்றை ஒன்று கவர்கின்றன. எல்லாவற்றுள்ளும் நீயே இருக்கிறாய்; எல்லாம் நீயே ! யாரை ஒதுக்குவது ? யாரைக் கொள்வது ? எல்லாவற்றிலும் உள்ள எல்லாமும் நீயேதான். இந்த ஞானம் உதித்தவுடன் மாயை தானாகவே விலகிவிடுகிறது.

நான் ஒருமுறை இந்தியப் பாலைவனம் ஒன்றன் ஊடே பிரயா ணம் செய்துகொண்டிருந்தேன். ஒருமாதத்துக்குமேலாகவே நான் அதன் ஊடே பிரயாணம் செய்தேன். எப்போதும் என் கண் முன்னே அழகான இயற்கைக் காட்சிகளையே கண்டேன் ; எவ்வளவு அழகான ஏரிகள், ஆறுகள் முதலியன ! ஒருநாள் எனக்கு மிகுந்த தாகம் ஏற்பட்டது. இந்த ஏரிகளுள் ஒன்றுக்குச் சென்று தண்ணீர் குடிக்க எண்ணினேன். நான் அதை நெருங்கிய

போது அது மறைந்துவிட்டது. உடனே ஓர் அடி கொடுத்தது போல என் மூளையில் ‘ இது ஒரு கானல்; இதைப்பற்றி நாம் படித்திருக்கிறோமே!’ என்ற நினைப்பு வந்தது. இந்த உண்மை விளங்கப்பெற்ற நான், என் முட்டாள் தனத்தை எண்ணிப் புன் முறுவல் பூத்தேன். சென்ற ஒரு மாதமாக நான் கண்ட அழகிய காட்சிகளும் ஏரிகளும் எல்லாம் வெறும் கானல் என்பதை அறிய என்னால் இயலவில்லை. அடுத்த நாட்காலையில் மீண்டும் நான் பிரயாணத்தைக் தொடங்கினேன். அப்போதும் இயற்கைக் காட்சிகளும் ஏரிகளும் இருந்தன. ஆனால், பார்த்ததும், ‘ இது வெறும் கானல்,’ என்ற எண்ணமும் வந்தது. ஒருமுறை உண்மை விளங்கிய பிறகு மயக்கும் சக்தியை அது இழந்து விட்டது. இதுபோலவே, பிரபஞ்சத் தோற்றம் என்ற இந்த மாயையும் ஒருநாள் மறைந்து விடும். இதுதான் ஞானப்பேறு. வேதாந்தம் என்பது வெறுங்கேலிக்கூத்தோ வெட்டிப் பேச்சோ அன்று. அது ஒவ்வொருவரும் அனுபவித்து அறியவேண்டிய ஒன்று. இந்த உடல் மறைந்துவிடும்; இந்தப் பூமியும் பிரபஞ்ச மும் எல்லாம் மறைந்துவிடும். ‘ நான் உடல்; நான் மனம்,’ என்ற எண்ணமும் சில காலம் மறைந்து நிற்கும்; கருமம் முடிந்துவிட்டால், என்றுமே மறைந்துவிடும்; மீண்டு வாராது; ஆனால் கருமம் கொஞ்சம் மிஞ்சியிருந்தால்—குயவன் சக்கரம், சட்டி செய்து முடிந்த பிறகும், முன் சுழற்றிய வேகத்தால் சற்றுநேரம் வெறுமனே சுழல்வது போல—இந்த உட லும் சில சமயம் மாயை மறைந்த பிறகும், சிறிது காலம் சென்று கொண்டிருக்கும். மீண்டும், இந்த உலகமும் ஆடவரும் பெண்டிரும் விலங்குகளும் தோன்றலாகும்—உண்மை விளங்கிய மறுநாளும் பாலைவனத்தில் கானல் தோன்றுவது போல. ஆனால், அதே சக்தி அங்கே இராது. இந்தத் தோற்றத் தோடு கூடவே எனக்கு அப்போது அதன் உண்மையியல்பு தெரியும் என்ற கருத்தும் தோன்றும். இதனால் பந்தமோ துன்பமோ, துக்கமோ, துயரமோ எதுவும் இராது. எப்போது துயரம் தோன்றினாலும், “ நீ பொய்த்தோற்றம் என்பது எனக்குத் தெரியுமே!” என்று சொல்ல மனத்துக்கு இயலும். இந்த நிலை அடைந்த மனிதனையே ‘ஜீவன் முக்தன்’ “ உயிர் உள்ளபோதே முக்தர்” என்கிறோம். ஜீவன் முக்தன் ஆவதே ஞானயோகி யின் நோக்கமும் இலட்சியமும்; பற்றொன்றும் இல்லாமல் உலகில் வாழக்கூடியவனே ஜீவன் முக்தன். இவன் தண்ணீரில் உள்ள தாமரை இலை போன்றவன், இலை நீரினால் நனைவதே இல்லை.

மக்களுக்குள் மிக உயர்ந்தவன் இவன், அம்மட்டோ, எல்லா உயிர்களுக்குள்ளும் உயர்ந்தவன். காரணம், இவன் தானும் பரம் பொருளும் ஒன்று என்பதை உணர்ந்தவன், இறைவனோடுதான் ஒன்றுவதை உணர்பவன். இறைவனுக்கும் உனக்கும் ஒரு துளி வேற்றுமை உண்டு என்று நினைக்கும் வரை, அச்சம் உன்னைப் பற்றிக் கொள்ளும். ஆனால், "நீயே அவன்; உனக்கும் அவனுக்கும் ஒரு வேறுபாடும் இல்லை; வேறுபாடே சற்றும் இல்லை. நீயே அவன், அவனைப்பற்றிய அனைத்தும் முற்றும் அவன்," என்பதை நீ அறிந்தவுடன், பயம் எல்லாம் விலகிவிடுகிறது. "அங்கே எவன் எவனைப் பார்க்கிறான்? எவன் எவனை வழிபடுகிறான்? எவன் எவனோடு பேசுகிறான்? எவன் எவன் பேச்சைக் கேட்கிறான்? பார்ப்பவனும் பார்க்கப்படு பவனும், பேசுபவனும் கேட்பவனும் இருக்கும் நிலை சிறிய நிலை ஆகும். பார்ப்பவன், பார்க்கப்படுபவன், கேட்பவன், பேசுபவன் என்ற வேறுபாடு அற்ற நிலையே உயர்ந்த நிலையின் எல்லை; அதுவே பெரியது, அதுவே பிரம்மம்." இருக்கும் நீ என்றும் அதுவாகவே இருக்கிறாய். அந்த நிலையில் பிரபஞ்சம் என்ன ஆகும்? பிரபஞ்சத்துக்கு என்ன நேரும்? நம்மால் பிரபஞ்சத்துக்கு என்ன நம்மை செய்ய முடியும்? இந்த வினாக்களுக்கெல்லாம் அங்கே இடமே இல்லை. "நான் பெரியவனானால் பிறகு என் மிட்டாய்க்கு என்ன நேரும்?" என்கிறது குழந்தை. "நான் வளர்ந்துவிட்டால் என் கோலிகட்கு யாது நேரும்? எனவே, நான் வளர மாட்டேன்," என்கிறான் பையன். "நான் வளர்ந்து விட்டால் என் பொம்மைகளின் கதி என்ன?" என்கிறது இந்தச் சிறு குழந்தை. இந்தப் பிரபஞ்சம்பற்றிய பிரச்சினையும் இதுதான். முன்போ இன்றோ இனியோ பிரபஞ்சம் என்ற ஒன்றுக்கு இருப்பு இல்லை. உள்ளபடி ஆன்மாவை நாம் அறிந்திருந்தால், ஆன்மாவைத் தவிர வேறொரு பொருளே இல்லை என்ற அறிவு பெற்றிருந்தால், மற்றவை எல்லாம் கனவுகளே என்பதும், உண்மையில் இவற்றுக்கு இருப்பில்லை என்பதும் நமக்கு விளங்கியிருந்தால், அப்போதே வறுமையும், துக்கமும், கொடுமையும், நன்மையும் நிறைந்த இந்தப் பிரபஞ்சம் நமக்குத் தொல்லை தருவது நின்று விடும். அவை இல்லை என்றால், பிறகு யாருக்காக எதற்காக நாம் சிரமப்படப் போகிறோம்? ஞானயோகிகள் கூறுவது இதுதான். எனவே, விடுதலை பெற்றிருக்கத் துணியுங்கள்; உங்கள் நினைவு எவ்வளவு தூரம் போக இயலுமோ, அவ்வளவு தூரமும் போகத் துணியுங்கள்; இந்த நினைவை உங்கள் வாழ்க்கையிற்

செயலாக்கத் துணியுங்கள். ஞானம் பெறுவது மிகக் கடினமான செயல். இது தைரியத்திலும் துணிவிலும் உச்ச நிலையில் நிற்பவர்களுக்கே உரிய ஒன்று; அறிவுலகிலும், இன்னும் ஐம்புல உலகிலும் போற்றும் எல்லா உருவங்களையுமே உடைத் தெறியும் துணிவுள்ளவர்க்கே உரியது. இந்த உடல் 'நான்' அல்லேன்; எனவே இது ஒழிய வேண்டும். இதிலிருந்து பல வகைப்பட்ட விசித்திர நிகழ்ச்சிகளும் நேரலாம். ஒருவர் எழுந்து நின்று, "நான் உடலல்லேன்; எனவே, என் தலைவலி நீங்கவேண்டும்" என்பார். உடல் இல்லை என்றால் தலைவலி எங்கேயுள்ளது? ஆயிரம் தலை வலிகளும் ஆயிரம் உடல்களும் வந்து போகட்டும். அதனால் எனக்கென்ன? எனக்குப் பிறப்போ இறப்போ இல்லை. எனக்கு என்றுமே தாயோ தந்தையோ இருந்ததில்லை. நண்பர்களோ! பகைவர்களோ! எனக்கு இல்லை. ஏனெனில், அன்னார் அனைவரும் நானே. எனக்கு நண்பனும் நானே; பகைவனும் நானே. நானே பூரண சத்து சித்து ஆனந்தம் (இருப்பு, அறிவு, இன்பம்). நானே அவன்! நானே அவன்! ஆயிரம் உடல்களில் நான் காய்ச்சல் முதலிய பல நோய் களால் துன்பப்பட்டால், லட்சக் கணக்கான உடல்களில் நான் நோயின்றி இருக்கிறேன். ஆயிரம் உடல்களில் நான் பட்டினி கிடந்தால், வேறு ஆயிரம் உடல்களில் நான் விருந்து உண்கிறேன். பல்லாயிரம் உடல்களில் நான் துயருற்றால், பல்லாயிரம் உடல்களில் நான் இன்பமாயுள்ளேன். குற்றம் சொல்பவன் யார், இதை ஏற்பவன் யார்? புகழ்பவன் யார், புகழப்படுபவன் யார்? யாரைத் தேடுவது, யாரை விலக்குவது? நான் யாரையும் தேடுவதும் இல்லை; யாரையும் விலக்குவதும் இல்லை. நானே பிரபஞ்சம் எல்லாம். நானே என்னைப் புகழ்ந்துகொள்கிறேன்; நானே என்னைப் பழித்துக்கொள்கிறேன். நானே எனக்காகத் துன்புறுகிறேன்; என் விருப்பப்படியே நான் இன்பமும் அனுபவிக்கிறேன். நான் விடுதலை பெற்றவன் (சுதந்தரன்). இப்படி இருப்பவனே, ஞானி; துணிவும் தைரிய மும் உள்ளவன். பிரபஞ்சமே இடிந்து விழட்டும். அவன் புன்சிரிப்போடு, 'அது என்றும் இருந்ததில்லை. அது பொய்த் தோற்றமே' என்பான். உலகம் இடிந்து விழுவது அவனுக்குத் தெரிகிறது. அது எங்கே இருந்தது? எங்கே போய்விட்டது?

நாம் செயல் முறையைப் பற்றி ஆராய்வதற்கு முன், அறிவு சம்பந்தமான இன்னொரு பிரச்சினையைப் பார்க்கலாம். இது வரையிலும் தருக்கம் மிகமிகக் கடுமையாகவே இருந்தது.

மனிதன் தருக்கம் செய்து பார்ப்பானுனல், அவன் நிற்பதற்குப் பின் கண்டதைத் தவிர வேறு இடமே இல்லை. 'இருப்பது ஒன்றே தான்; மற்றவை ஒன்று மில்லை' என்பதே. நியாய புத்தி உள்ள மக்கள் இந்த முடிவு ஒன்றுக்குத்தான் வர இயலும். ஆனுல், "முடிவற்றதும், என்றும் நிறைவுள்ளதும், என்றும் ஆனந்த மய மானதும், 'சத்து சித்து ஆனந்த'ப் பூரணப் பொருளான ஒன்று எப்படி இம்மயக்கங்கட்கு உட்பட்டது?" என்ற வினு எழுகிறது. இந்த வினு உலகினர் எல்லோரும் கேட்கும் வினு வேயாகும். கீழான முறையில் 'பாவம் இந்த உலகில் எப்படிப் புகுந்தது?' என்பதே இந்தக் கேள்வி ஆகும். இதுவே இந்த வினுவின் மிகக் கீழான ஐம்புலச்சார்புள்ள உருவாகும்; முன் சொன்னது மிக்க தத்துவ பரமான உருவாகும்; என்ருலும், இரண்டுக்கும் விடை ஒன்றுதான். இதே வினு, பல தரத்திலும் பல வகையிலும் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனுல், இது தன் தாழ்ந்த வகைகளிலே விடையற்றதாகிவிடுகிறது. ஆப்பிள் பழம், பாம்பு, பெண்கள் என்ற கதையால் இதற்கு விளக்கம் கிடைப்பதில்லை. இந்த நிலையில் வினு, விடை இரண்டுமே குழந்தைத்தனமாய் உள்ளவை. ஆனுல், இந்த வினுவுக்கு இப்போது உயர்ந்த வடிவம் வந்துவிட்டது. 'இந்த மாயை எப்படி வந்தது?' விடையும் வினுவைப் போலவே நுட்பமான தாகும். 'கேட்கத்தகாத வினுவுக்கு விடையை எதிர்பார்ப்பது இயலாது,' என்பதே இதற்கு விடையாகும். வினுவே சொல்லள வில் எழ ஒண்ணுதது. இந்த வினுவைக் கேட்கும் உரிமையே உமக்கு இல்லை. ஏன்? நிறைவு என்பது என்ன? காலம், இடம், காரண-காரிய முறை என்ற மூன்றுக்கும் அப்பாற்பட்டதே அது. 'இந்த நிறைவு, குறையுடையதானது எப்படி?' என்பதல்லவா கேள்வி? தருக்க ரீதியில் இந்த வினு, பின் காணுமாறு அமையும்: 'காரண காரிய முறைக்கு அப்பாற்பட்ட ஒன்று, இந்த முறைக்கு எப்படி உட்பட்டது?' வினுவே முன்னுக்குப் பின் முரணுனது. அது காரண-காரிய முறைக்கு அப்பாற்பட்டது என்பதை நீர் முதலில் ஒப்புக்கொள்கிறீர்; ஆனுல், பின்பு 'அதற்குக் காரணம் யாது?' என்கிறீர். இந்த வினு 'காரண-காரிய' எல்லைக்குள் தான் ஏழ இயலும். காலம், இடம், காரண காரிய முறை என்ற மூன்றும் உள்ள எல்லை வரைதான் இந்த வினு எழ இயலும். இதற்கு அப்பால் அவ்வாறு கேட்பதே பேதைமையாகும்; ஏனெ னில் வினுவே தருக்கத்திற்குப் பொருந்தாததாகும். இந்த வினுவுக்கு காலம், இடம், காரண-காரிய முறை என்ற மூன்றுக்

குள் ஒரு போதும் விடை அளிப்பது இயலாது. இந்த எல்லை கட்கு அப்பாற்பட்ட இடத்தில் உள்ள விடையை அப்பால் சென்ற பின்னரே அறியலாகும். எனவே, அறிஞர்கள் இந்த வினவை எழுப்பவே மாட்டார்கள். ஒருவனுக்கு நோய் வந்து விட்டால் அவன் அதைப் போக்கிக்கொள்ளவே முயல்கிறான். முதலில் 'இது எப்படி வந்தது என்பது எனக்குத் தெரியவேண்டும்,' என்று அவன் வற்புறுத்தவில்லை.

இதே வினவுக்கு இன்னோர் உருவமும் உண்டு. அது சற்றுத் தாழ்ந்த படியிலுள்ளது, என்றாலும் செயல் முறைக்கு ஏற்றது; நன்கு விளக்கமானது. இந்த மாயையை ஏற்படுத்தியது எது? உண்மை ஒன்றிலிருந்து மாயை தோன்ற இயலுமா? இயலவே இயலாது. ஒரு மாயையே இன்னொரு மாயைக்குக் காரணமாகிறது; அப்படி வரிசையாக வருகிறது என்பது நமக்குத் தெரியும். ஒரு நோய் இன்னொரு நோய்க்குக் காரணமாகிறதே ஒழிய, உடல் நலம் நோய்க்குக் காரணமாவதில்லை. அலையும் நீரும் ஒன்றே, காரியம் காரணத்தின் இன்னொரு வடிவமேயாம். எனவே, காரியம் மாயை என்றால், காரணமும் மாயையாகவேதான் இருக்க வேண்டும். இந்த மாயைக்குக் காரணமானது எது? இன்னொரு மாயைதான். ஆதியின்றி இப்படியே நீள்கிறது. இனிமேல் கேட்கக்கூடிய கேள்வி ஒன்றே ஒன்றுதான். அப்படியானால், "உள்ளது ஒன்றேதான்" என்ற உன் அத்துவிதக் கொள்கையை இது உடைத்தெறியும் அல்லவா? ஏனெனில் உள்ளவை இரண்டு என்றல்லவா ஆகிறது—ஒன்று 'நீ', மற்றொன்று மாயை என? இதற்குப் பதில், 'மாயையை உள்ளது என்று கூற இயலாது', என்பதே. உங்கள் வாழ்க்கையில் பல்லாயிரம் கனவுகள் தோன்றுகின்றன; என்றாலும், அவற்றுக்கு உங்கள் வாழ்க்கையில் சற்றும் இடம் இல்லை. கனவு வரும்; போகும். ஆனால், இவற்றுக்கு இருப்பு இல்லை. மாயையை 'இருப்பது' என்று சொல்வது தவறான வாதம் ஆகும். எனவே, பிரபஞ்சத்தில் இருக்கும் தனிப்பொருள் ஒன்றேதான். இது என்றும் பந்தப்படாதது; என்றும் இன்பம் நிறைந்தது. அதுவே நீ. அத்துவைதிகள் பெறும் கடைசி முடிவு இதுதான்.

அடுத்தபடியாக, இந்த வினா எழலாம்: 'அப்படியானால் பல வகைத் தெய்வ வழிபாடுகளுக்கும் போக்கு என்ன?' என்பது. இவை இருந்தே தீரும். இவை ஒளியைநாட இருட்டில் துழாவும் முயற்சிகள்; இப்படித் துழாவுவதால் அவர்களுக்கு

ஒளி கிடைக்கும். ஆன்மா தன்னைத்தானே காண முடியாது என்பதைப் பார்த்தோம். நமது அறிவு மாயை (உண்மை யற்றது) என்ற வலைக்கு உட்பட்டதே ஆகும்; அதற்கு அப்பாலே தான் விடுதலை இருக்கிறது. இந்த வலைக்குள் இருப்பது அடிமைத்தனம்; இங்கே எல்லாம் நியதிக்குக் கட்டுப்பட்டவை. அதற்கு அப்பால் நியதி ஒன்றுமே இல்லை. பிரபஞ்சத்தைப் பொறுத்த மட்டும் இருப்பு நியதிக்குட்பட்டதே; இதற்கு அப்பால் விடுதலைதான். காலம் இடம் நியதி என்ற வலைக்குள் நீ கட்டுப்பட்டிருக்கும் வரையில், 'நான் சுதந்தரன்,' என்று சொல்லிக்கொள்வது பொருளற்றதாகும். காரணம், இந்த வலைக்குள் எல்லாம் கடுமையான நியதிக்கு உட்பட்டனவே; காரணம் காரிய மயமே. இங்கே உனது ஒவ்வோர் எண்ணத் துக்கும் ஒவ்வோர் உணர்ச்சிக்கும் காரணம் உண்டு. 'சங்கற்பம் சுவாதீனமானது,' என்று சொல்வது பொருளற்ற பேச்சு. இந்த மாயை வலைக்குள் முடிவற்ற இருப்பு புகும்போதுதான் 'சங்கற்பம்' என்ற வடிவை அது பெறுகிறது. அந்த இருப்பின் ஒரு பகுதி மாயை வலைக்குள் சிக்கி நிற்கும்போது சங்கற்பமாம் ஆதலால், 'சுவாதீன சங்கற்பம்' என்பது பொருளற்ற உரை. இதற்குப் பொருள் இல்லை; வெறும் பேதைமை. சுதந்தரம் பற்றிய இப்பேச்சு முழுதும் இப்படிப்பட்டதுதான். மாயைக்குள் சுதந்தரத்துக்கு இடம் இல்லை.

ஒவ்வொருவரும் ஒரு துண்டுக்கல்லோ மேஜையோ போன்றே மனம் வாக்குக் காயங்களால் அதேயளவு பந்தப்பட் டிருக்கிறீர்கள். நான் உங்களிடம் பேசுவது, நீங்கள் அதைக் கேட்பது போன்றே அதேயளவு கடுமையான காரண காரிய நிய திக்கு உட்பட்டதாகும். மாயையைக் கடந்து அப்பால் செல்லும் வரையில் விடுதலை இல்லை. இதுதான் ஆன்மாவின் உண்மை விடுதலை ஆகும். எவ்வளவு கூரிய அறிவு படைத்தவர்களானு லும், இங்கு எதுவும் சுதந்தரமாக இருக்க இயலாது என்ற வாதத்தை நன்கு உணரினும், தாங்கள் சுதந்தர புருடர்கள் என்று நினைக்கும் கட்டாயத்திற்கு உட்பட்டவர்களேயாவர்; அவர்களால் அதைத்தடுக்க இயலாது. நாம் சுதந்தரம் உள்ளவர் கள் என்று சொல்லத் தொடங்கும் வரையில் எந்த வேலையும் நடைபெறுவதில்லை. நாம் வாயளவில் பேசும் இந்தச் சுதந்தரம் முகிலினிடையே தெரியும் நீலவானத்தின் மங்கலான காட்சிதான்; உண்மைச் சுதந்தரம்—நீல வானம்—இதற்குப் பின்னே இருக் கிறது. இந்த மாயையின் இடையே, இந்தப் பொய்த் தோற்றத்

தின் இடையே, பொருளற்ற இந்தப் பிரபஞ்சத்தின் இடையே, புலன் உடல் மனம் என்பவற்ருலான இப்பிரபஞ்சத்தின் இடையே, உண்மைச் சுதந்தரம் இருக்க இயலாது. தொடக்கமும் முடிவும் அற்ற, எதற்கும் அடங்காத, அடக்க முடியாத, சரியானபடி பொருந்தாத, உடைந்துள்ள, இயைபு இல்லாத பல கனவுகளே இந்தப் பிரபஞ்சம் பற்றிய நம் கருத்து ஆகும். கனவில் இருபது தலைகொண்ட ஓர் அரக்கன் உன்னைத் துரத்துவது போலவும் நீ தப்பி ஓடுவது போலவும் தோன்றும்போது, அது பொருத்தமற்றது என்ற நினைப்பு எழுவதில்லை. அது பொருத்தமானது, சரியானது, என்றே தோன்றுகிறது. இந்த நியதியும் இவ்வாறே. நீ சட்டம் என்று சொல்வதெல்லாம் பொருளற்ற வெறுந்தற்செயல் நிகழ்ச்சிகளே ஆகும். கனவு நிலையில் அதை நியதி என்கிருேம். மாயைக்குள், கால தேச நியதி என்ற முறை இருக்கும் வரையில் விடுதலைக்கு இடம் இல்லை; இந்தப் பல வகை வழிபாடுகளும் இந்த மாயைக்கு உட்பட்டவைகளே. இறைவன் என்ற கருத்தும், விலங்கு மக்கள் என்ற கருத்துகளும் மாயைக்கு உட்பட்டவைகளே; ஆதலின் இவை சமஅளவிற்குப் பொய்த் தோற்றங்களே ஆகும். இவைகளெல்லாம் வெறுங் கனவுகளே. ஆனல், இக்காலத்தில் நாம் கேள்விப்படும் சில அசாதாரண மனிதர்களைப்போல வழக்காடாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் இறைவன் என்ற கருத்து பொய்யானது என்றும், ஆனல் பிரபஞ்சம் உண்மை என்றும் சொல்கிருர்கள். உந்த இரண்டு கருத்துகளும் ஒரே தருக்கத்தால் நிற்கவோ ஒழியவோ செய்யும். இந்த உலகம், மறு உலகம் இரண்டும் இல்லை என்பவனே உண்மை நாத்திகனுய் இருக்க உரிமை பெற்றவன். ஆதாரமான தர்க்கம் ஒன்றுதான்! இறைவன் முதல் எறும்பு ஈருக புல்லிலிருந்து பிரமன் வரை விரிவது ஒரே மாயையின் தொகுதியே. அவை ஒரே தருக்கத்தால் நிற்கவோ ஒழியவோ செய்யும். இறைவன் என்ற கருத்திற் பொய்ம்மையைக் காண்பவன், அவன் தன் மனமோ உடலோ அக்கருத்திலும் பொய்ம்மையைக் காணவேண்டும். இறைவன் என்ற கருத்து மறைந்தால், உடல், மனம் என்ற கருத்துகளும் மறையும்; இரண்டும் மறைந்த இடத்திலேதான் உண்மையான இருப்பு நித்தியமாக நிலைத்து நிற்கிறது. “இந்த இடத்தைக் கண்களோ வாக்கோ மனமோ சார இயலாது. நமக்கு இதைப் பார்க்கவோ அறியவோ முடியாது.” பேச்சு, சிந்தனை, அறிவு, புத்தி இவை செல்லும் தொலைவரை எல்லாம்

மாயைக்கு உட்பட்டவைகளே, பந்தத்துக்கு உட்பட்டவைகளே. இவற்றுக்கு அப்பால் நிற்பது மெய்ப்பொருள். அங்கே நினைவோ, மனமோ வாக்கோ செல்லமாட்டாது.

அறிவைப் பொறுத்தமட்டும் இந்தத் தருக்கம் எல்லாம் சரி தான், ஆனால் இது அனுபவம் ஆகவேண்டும். உண்மையான முயற்சிசாதனத்தில் உள்ளது. இந்த ஒருமையை உணர எவையே னும் சாதனைகள் (பயிற்சிகள்) தேவையா? திண்ணமாகத் தேவை தான், நீ பிரம்மன் ஆவதில்லை; முன்பே நீ அதுவாக இருக்கிறாய். நீ இறைவன் ஆகவோ பூரணன் ஆகவோ போகிறாய் என்பது இல்லை. நீ முன்னமே பூரணன். நீ பூரணனல்லன் என நினைப்பதுதான் மாயை. நீ இன்னான், இன்னாள் என்று சொல் லும் பொய்ம்மையை (மாயையை) இன்னொரு பொய்ம்மையினால் ஒழிக்கக்கூடும். இதுதான் சாதனை. நெருப்பு நெருப்பையே தின்றுவிடும்; ஒரு பொய்ம்மையை வெல்ல இன்னொரு பொய்ம் மையைப் பயன்படுத்தல் இயலும். ஒரு மேகம் வந்து இன்னொரு மேகத்தைத் துரத்திவிடும்; பிறகு இரண்டுமே மறைந்துவிடும். இந்தப் பயிற்சிகள் எவை? 'நாம் இனிச் சுதந்தரம் பெறப் போவதில்லை; நாம் என்றுமே சுதந்தரம் உள்ளவர்களே,' என்ற உண்மையை என்றும் நினைவிற் பதிக்க வேண்டும். நாம் பந்தப் பட்டவர்கள் என்ற கருத்து ஒவ்வொன்றும் பொய்ம்மையே. 'நாம் இன்பமோ துன்பமோ அனுபவிக்கிறோம்,' என்ற கருத்து ஒவ் வொன்றும் மாபெரும் பொய்ம்மையே. 'நாம் உழைக்கவும், இறை வனை வழிபடவும், விடுதலைபெறப் போராடவும் வேண்டும்,' என்ற இன்னொரு பொய்ம்மை நம்மைச் சாரும். இது முந்திய பொய்ம்மையைத் துரத்தி விடும்; முடிவில் இரண்டும் மறையும்.

முகமதியர்களும் சரி, இந்துக்களும் சரி, குள்ளநரியைப் பாவ விலங்கு என்றே கருதுகிறார்கள். நாய் ஒன்று உணவுப் பண்டத்தைத் தொட்டுவிட்டாற்கூட அது மனிதன் உண்ணத் தகுதியற்றதாய்விடுகிறது, அதை எறிந்துவிடத்தான் வேண்டும். ஒரு முஸ்லிமின் வீட்டுக்குள் ஒரு நரி நுழைந்து மேஜைமேல் சாப்பிடுவதற்காக வைத்திருந்த உணவில் சிறு பகுதியை உண்டு விட்டு ஓடிவிட்டது. அவன் ஏழை, அவன் அன்று சிரமப்பட்டுத் தான் உண்பதற்காகச் சுவைமிக்க விருந்தொன்று சமைத்திருந் தான்; ஆனால், அசுத்தமான நரி அதைத் தொட்டுவிட்டபடி யால் அதை அவன் உண்ண இயலாமல் போய்விட்டது. எனவே, அவன் புரோகிதர் ஒருவரிடம் போய், "நரி ஒன்று வந்து என் உணவில் ஒரு வாயளவு உண்டுவிட்டுப் போய்விட்டது. நான்

என்ன செய்வது? நான் ஒரு விருந்து தயாரித்திருந்தேன்; சாப்பிட எவ்வளவோ ஆசையாய் இருந்தேன். இந்த நரி வந்து என் காரியம் முழுமையும் பாழாக்கிவிட்டதே!'' என்று சொன்ஞன். முல்லா சற்று யோசித்த பிறகு அவருக்கு ஒரே ஒரு பரிகாரந்தான் தோன்றியது. அதைச் சொன்ஞர்: 'இதற்குப் பரிகாரம் ஒன்றுதான்; ஒரு நாயைப் பிடித்துவந்து உன் உணவின் இன்ஞெரு பகுதியைத் தின்னச் செய்துவிடு. நாயும் நரியும் நித்தியப் பகைவர்கள். இப்போது நரி தின்ற மிச்சமும் உன் வயிற்றுக்குள் போகும்; நாய் தின்ற மிச்சமும் உன் வயிற்றுக்குள் போகும்; இரண்டும் தூய்மை ஆகிவிடும்,' என்ருர். நமது நிலைமையும் இதுதான். நாம் குறையுடையவர்கள் என்பது ஒரு பொய்க் கற்பனே. எனவே, சாதனே செய்துதான் நாம் நிறைவு பெறவேண்டும் என்ற இன்ஞெரு பொய்க் கற்பனேயை நாம் துணைக் கொள்கிருேம். அப்போது, ஒரு கற்பனே மற்றதை அழித்துவிட்டுத் தானும் அழிந்து விடும்; இது ஒரு முள்ளை எடுக்க இன்ஞெரு முள்ளைப் பயன்படுத்தி, முடிவில் இரண்டையும் எறிந்துவிடுவது போன்றதே ஆகும்; பிரபஞ்சம் மறைந்தே விடும். 'நீயே அது' என்ற அறிவுரை கேட்டலே போதும், திடரென சிலர்க்கு உண்மை நிலை ஒளிரும்; ஆனுல், பிறரோ, இந்தப் பந்தத்திலிருந்து விடுதலைபெறக் கடுமையாகப் போரிட வேண்டும்.

முதற்கேள்வி இதுதான்: 'ஞானயோகியாகத் தக்கவர் யார்?' பின்வரும் இயல்புகளைப் பெற்றவர்களே. முதலாவதாக, கரும பலன்களையும் சுகபோகங்களையும் இம்மை மறுமை இரண்டிலும் துறத்தல் வேண்டும். நீதான் பிரபஞ்சத்தை ஆக்கிய தலைவன் என்ருல், உனக்கு வேண்டுவதெல்லாம் கிடைக்கும்; வேண்டுவதை எல்லாம் ஆக்கிக்கொள்ள உன்ஞல் இயலும். எவ்வளவு காலம் வேண்டும் என்பதுதான் பிரச்சினே. சிலருக்கு இது உடனே கைகூடுகிறது. வேறு சிலருக்குப் பழைய சம்ஸ்காரங்கள் (வாசனைகள்) குறுக்கே நின்று இது கைகூடாமல் தடுக்கின்றன. இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி, சுகானுபவத்துக்கே முதல் இடம் கொடுக்கிருேம். வாழ்வு உண்டு என்பதையே மறுங்கள், ஏனெனில் வாழ்வு என்பது சாவு என்பதன் மறு பெயர்தானே! நீங்கள் வாழும் உயிர் என்பதையே மறுங்கள். வாழ்வு யாருக்கு வேண்டும்? வாழ்வு என்பதும் பொய்க் கற்பனைகளுள் ஒன்று; சாவு என்பது இதன் மறு பக்கம். இன்பம் இப்பொய்க் கற்பனைகளுள் ஒரு பகுதியாயின், துன்பம் மற்

ஒரு பகுதியே. இவ்வாறே பிறவும். வாழ்வுக்கோ சாவுக்கோ உமக்கு என்ன சம்பந்தம்? இவைகளெல்லமே மனத்தின் படைப்புகள். இது தான் இம்மை மறுமைகளில் போக இச்சைகளைத் துறத்தல் ஆகும்.

அடுத்தது மன அடக்கம். அது சஞ்சலமடைந்து, அலைபட்டு, பல ஆசைகளுக்கு இடமாகாமல் இருக்கும்படி செய்வது; வெளித்தூண்டுதல்கள் காரணமாகவோ உள் தூண்டுதல் காரணமாகவோ, மனத்தில் அலையெழ இடங்கொடாமல் அதை நிலைநிறுத்தல். சங்கற்ப சக்தியால் மனத்தை இப்படி முற்றும் அடக்கி ஆள வேண்டும். ஞானயோகி உடலோ மனமோ சம்பந்தமான எத்துணையையும் பெறுவதில்லை. தத்துவ வாதம், அறிவு, திடசித்தம் இவைகளே அவனுக்குப் போதும். அவன் நம்பும் கருவிகள் இவைகளே. அடுத்தபடியாக வருவது, திதீட்சை,—பொறுத்தல்; என்ன கஷ்டம் வந்தாலும் முணுமுணுக்காமலும், குறை கூறுமலும் பொறுக்கும் ஆற்றல். உடற்கேடு வந்தால் அதை இலட்சியம் செய்யாதீர்கள். புலி எதிரே வந்தாலும் அசையாமல் அதன்முன் நிற்க. ஓடுபவன் யார்? இந்தத் திதீட்சையைப் பழகி இதில் வெற்றி பெறுவார் உளர். இந்தியாவில் நடுக்கோடை வெயிலிலே கங்கை மணலில் படுத்து உறங்குவார் உளர். குளிர்காலத்தில் கங்கை நீரிலேயே நாள் முழுவதையும் மிதந்து கழிப்பவர்கள் உளர். அவர்கள் ஒன்றையும் பொருட்படுத்துவதில்லை. இமயமலையின் பனிமேல் ஆடையே இல்லாமல் இருப்பவர்களும் உளர். சூடு என்பது என்ன? குளிர் என்பது என்ன? எது வந்தாலும் போனாலும் சரி; அதனால் எனக்கென்ன? நான் உடல் அல்லேன் என்பர். மேல் நாட்டார் இதை நம்புவது கடினம், என்றாலும், இப்படி நடக்கிறது என்பதை அறிதல் நன்றே. பீரங்கி வாயிலோ நடுப்போர்க்களத்திலோ குதிக்கவும் உங்கள் மக்கள் துணிவதுபோல, எங்கள் மக்கள் தங்கள் தத்துவக் கொள்கையைக் கருதவும் செயலாக்கவும் துணிவு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் உயிரையேகூட அதற்காக விட்டுவிடுவார்கள். "நான் சத்து, சித்து, ஆனந்தம். நானே அவன்; நானே அவன்!" என்பர். நடைமுறை வாழ்க்கையில் சுகபோகத்தைப் போற்றுவது எப்படி மேலை நாட்டாரின் இலட்சியமோ, அப்படியே வாழ்க்கை நடைமுறையில் உயர்ந்த ஆன்மிகத்தைப் போற்றுவது எங்கள் நாட்டாரின் இலட்சியம். 'சமயம் என்பது நுரைத்து வரும் வாய்ப் போச்சு மட்டும் அன்று; இந்த வாழ்க்கையிலேயே அதன்

ஒவ்வொரு பகுதியையும் நடைமுறைக்குக் கொண்டுவர இயலும் என்பதைக் காட்டுவதே எங்கள் மக்களின் இலட்சியம். எதையும் பொறுத்தல், எதற்கும் முணுமுணுக்காமல் இருத்தல் ஆகிய இதுதான் திதீட்சை. "நான் ஆன்மா; பிரபஞ்சத்தால் எனக்கு ஆவது என்ன? இன்ப துன்பங்களோ, நன்மை தீமைகளோ, வெப்பம் குளிர்களோ எதுவும் எனக்கு ஒரு பொருளன்று," என்று கூறுபவர்களை நான் கண்டிருக்கிறேன். இதுதான் திதீட்சை: உடல் இன்பத்தைத் தேடி உழல்வதன்று. சமயம் என்பது என்ன? "எனக்கு இது வேண்டும்; அது வேண்டும்," என்று வேண்டுவதுதானா? இது சமயம் பற்றிய அறிவற்ற கருத்து. இதை நம்புகிறவர்களுக்குக் கடவுள் ஆன்மா என்பன பற்றிய உண்மையே தெரியாது. "கழுகு மேலே பறந்து ஒரு புள்ளி அளவாகத் தோன்றும் வரை உயர்கிறது; என்றாலும், அழுகிய ஒரு துண்டு மாமிசத்தின் மீதே எப்போதும் அது கண்ணாயிருக்கும்" என்று என் குரு நாதர் அருளுவர். சமயம் பற்றிய உங்கள் கருத்தின் பலன் என்ன? தெருக்களைப் பெருக்குவதும் நிறைய உணவும் உடையும் பெறுவதுந்தானா? உணவும் உடையும் யாருக்கு வேண்டும்? பல கோடி மக்கள் ஒவ்வொரு விநாடியும் பிறந்து சாகிறார்கள். யாருக்கு இதைப்பற்றிய கவலை? இந்தச் சிறு பிரபஞ்சத்தின் சுக துக்கங்களைப்பற்றி யாருக்குக் கவலை? இவற்றை கடந்து செல்லத் துணியுங்கள்; நியதிக்கு அப்பால் ஏகுங்கள். பிரபஞ்சம் முழுவதும் மறையட்டும், தனியே நில்லுங்கள். 'நான் பூரண சத்து சித்து ஆனந்தம்! நானே அவன்! நானே அவன்!'

உள்ளது ஒன்று பலவாகத் தோன்றுதல்

[1896ல் நியூயார்க்கில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு]

பலவகை யோகங்களிலும் வைராக்கியமே (குறி நோக்கித்) திரும்பும் இடம் ஆகும். கருமம் புரிபவன் தன் கருமத்தின் பலனைத் துறந்துவிடுகிறான். பத்தன் எல்லாம்வல்ல, எங்கும் பரந்த அன்புக்காக மற்றச் சிறுமையன்புகளை எல்லாம் துறந்து விடுகிறான். யோகி தன் அனுபவங்களைத் துறக்கிறான்; ஏனெனில், பிரகிருதி முழுவதும் ஆன்மாவின் அனுபவத்துக்காகவே இருந்தாலும், முடிவில் தான் பிரகிருதியில் இல்லாதவன், என்றென்றும் அதனின்றும் முற்றும் வேறுபட்டவன் என்பதை உணரவே அது பயன்படுகிறது என்பதே அவனது தத்துவக் கொள்கை. இன்னும், ஞானியோ, எல்லாவற்றையும் விட்டு விடுகிறான்; காரணமாவது, அவன் கொள்கைப்படி பிரகிருதி என்ற ஒன்று, முன்பும், இன்றும், இனியும் என்றுமே இல்லை. இந்த உயர்ந்த பொருள்களில் பலன் என்ன என்ற கேள்விக்கே இடம் இல்லை. அதைக்கேட்பது அறியாமையேயாகும். அப்படியே இந்தக் கேள்வி எழுந்தாலும், நன்றாக இதை ஆராய்ந்தபின், பலன் என்ன என்ற வினவில் நாம் காண்பது என்ன? இன்பம் பெறுதல் என்ற இலட்சியம். எது மனிதனுக்கு அதிக இன்பம் தருகிறதோ அதுவே, அவனுடைய உலக நிலைமைகளைச் செம்மையாக்காதனவும், அவ்வளவு மிகுந்த இன்பம் தாராதனவுமான இந்த உயர்ந்த பொருள்களைவிட, மிக்க பயனுடையதாகும். விஞ்ஞானக் கலைத் துறைகளின் நோக்கமெல்லாம் இதுதான்—மக்கள் சமுதாயத்துக்கு இன்பம் தேடித் தருவது. எது அதிக இன்பம் தருகிறதோ, அதைக் கைக்கொண்டு, குறைந்த இன்பம் தருவதை அவன் கைவிட்டுவிடுகிறான். இன்பம் உடலளவாகலாம்; மன அளவாகலாம்; ஆன்மாவின் அளவும் ஆகலாம் என்பதை நாம் கண்டோம். விலங்குகளுக்கும் விலங்கு நிலையில் உள்ள மக்களுக்கும் இன்பம் உடல் சம்பந்தமானதுதான். பசியால் வாடிய ஒரு நாயையோ ஓநாயையோ போல அவ்வளவு இன்பமாகச் சாப்பிட எந்த மனிதனும் இயலாது. எனவே, நாய்க்கும் ஓநாய்க்கும் இன்பம் உடல் அளவானதுதான். மனிதர்களுக்குச் சற்று உயர்ந்த நிலையில்

கருத்தினுல் இன்பம் பெற இயலும். ஞானியினிடம் இன்பத்தின் மிக உயர்ந்த நிலேயாகிய ஆன்ம இன்பம் உள்ளதாகும். ஆதலால், தத்துவ ஆராய்சியாளனுக்கு ஆன்ம ஞானமே கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த இன்பத்தைத் தருவதாதலின் மிக்க பலனுடைய முயற்சியாகும். ஐம்புல இன்பமோ உடல் இன்பமோ அவனுக்கு மிக்க பயன் தருவது ஆகாது; ஏனெனில் ஞானத்தால் கிடைக்கும் இன்பநிறைவு, அவனுக்கு அவற்ருல் கிடைப்பதில்லே. முடிவில் ஞானமே நம் ஒரே இலட்சியமாகும்; நாமறிந்த வரை இதுதான் உயர்வற உயர்ந்த இன்பந்தருவதாகும். அஞ் ஞானத்தோடு உழைப்பவர்களெல்லாம் தேவர்களின் உழவு மாடுகளே ஆவார்கள். தேவன் என்ற சொல்லுக்கு இங்கே ஞானி என்பதே பொருள். இயந்திரங்களேப் போல உழைப்பவர்களெல்லாம் உண்மையாக வாழ்வை அனுபவிப்பதில்லே; இன்பம் பெறுபவன் ஞானியேயாவான். செல்வன் ஒருவன் இலட்சம் டாலர் (5 லட்சம் ரூபாய்) விலே கொடுத்து ஓர் ஓவியம் வாங்குகிருன் என்று வைத்துக்கொள்வோம். ஆனுல், அதன் அழகை அனுபவிப்பவன் கலேயறிவை உடையவனே ஆவான். அந்தச் செல்வனுக்குக் கலேயறிவு இல்லே என்ருல், அதனுல் அவனுக்குப் பயன் ஒன்றும் இல்லே. அவன் படத்துக்குச் சொந்தக்காரன்-அவ்வளவுதான். உலகம் முழுவதிலும் உலக இன்பம் அனுபவிப்பவன் அறிஞனே. முட்டாள் எதையும் நுகர்வதே இல்லே; தன்னே அறியாமலே அவன் பிறருக்காக உழைக்கவேண்டியவனுகிருன்.

இது வரையிலும் அத்துவைதிகளின் கொள்கை என்ன என்பதைப் பார்த்தோம். எப்படி? இருப்பது ஒரே ஆன்மாதான்; இரண்டு இருக்க இயலாது. இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் உள்ள பொருள் ஒன்றுதான் என்பதையும், இந்த ஒன்றேதான் புலன்களின் மூலம் பார்க்கும்போது உலகம் எனப்—பௌதிக உலகம் எனப்—பெயர் பெறுகிறது என்பதையும் கண்டோம். இதையே மனத்தின் மூலம் பார்க்கும்போது நினேவும் கருத்துமான பிரபஞ்சம் எனப்படுகிறது; உள்ளதை உள்ளபடியே காணும்போது அது முடிவற்ற ஓர் உண்மைப் பொருளாகிறது. இதை நீங்கள் நினேவில் வைக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஓர் ஆன்மா உள்ளது என்று எண்ணிவிடக்கூடாது. முதலில் பொருளே விளக்குவதற்காக நான் அதை உண்மையாகக் கொள்ளவேண்டியதாயிற்று என்பதே. இருப்பது ஒன்றுதான், அதுவே ஆன்மா. அதைப் புலன்கள் மூலம், புலன்களின்

கற்பனை மூலம் காணும்போது அது உடல் என்ற பெயரைப் பெறுகிறது. கருத்தின் மூலம் அதைக் காணும்போது அதுவே மனம் என்ற பெயர் பெறுகிறது. அதன் உண்மை இயலின்படி அதைக் காணும்போது அதுவே உள்ளதான ஒரே ஆன்மா ஆகிறது. அதை விளக்கும்போது வசதிக்காக மூன்று பொருள்கள்—உடல், மனம், ஆன்மா—ஒன்ருய் நிற்கின்றன என்று கொண்டாலும், அது எல்லாம் ஒரே ஆன்மாதான்; அதுவே காட்சி 'நிலை' வேறுபாடு காரணமாகச் சில சமயம் உடலாகவும், சில சமயம் மனமாகவும், சில சமயம் ஆன்மாவாகவும் பெயர் பெறுகிறது. இருப்பது ஒன்றுதான்; அதையே அஞ் ஞானிகள் பிரபஞ்சம் என்கிருர்கள். மனிதனது ஞானம் உயர்ந்தால், அவனே அந்தப் பொருளைக் 'கருத்துலகம்' என்கிருன். இன்னும், உண்மை ஞானம் தோன்றியவுடன் பொய்த் தோற்றமெல்லாம் மறைய, இருப்பதெல்லாம் ஆன்மாவன்றி வேறில்லை என்பதை அவன் காண்கிருன். அந்த ஒன்று நான்தான். இது தான் முடிந்த முடிவு. பிரபஞ்சத்தில் மூன்ருே இரண்டோ இல்லை, இருப்பது ஒன்றேதான். இந்த ஒன்றே மாயை காரணமாகப் பலவாகத் தோன்றுகிறது; கயிறு பாம்பாகத் தோன்றுவது போல. பாம்பாகத் தோன்றுவது கயிறேதான். இங்கே பாம்பு, கயிறு என்ற இரண்டு தனிப் பொருள்கள் இல்லை. யாரும் இந்த இரண்டையும் அந்த ஒரு பொருளில் ஒரே சமயத்தில் காண்பதில்லை. துவைதம், அத்துவைதம் (இரண்டு இரண்டற்றது) என்பன மிக நல்ல தத்துவ பதங்கள், ஆனல் உண்மைக் காட்சியில் மெய்யையும் பொய்யையும் ஒரே சமயம் நாம் காண்பதில்லை. நாம் எல்லோருமே பிறவியில் அத்வைதிகளே யாவோம், இதைத் தவிர்க்க முடியாது. எப்போதும் ஒன்றையே காண்கிருேம். கயிற்றைக் காணும் போது பாம்பை நாம் காணுவதில்லை. பாம்பைக் காணும்போது கயிற்றைக் காண்பதில்லை; அது மறைந்துவிடுகிறது. மாயையைக் காணும் போது உண்மையைக் காண்பதில்லை. தெருவில் நெடுந்தூரத்தில் உங்கள் நண்பன் ஒருவன் வருவதாக நினைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு அவனை நன்கு தெரியும். ஆனல், உங்களுக்கு முன் உள்ள மறைப்பாலும் மூடுபனியாலும் நீங்கள் அவனை வேறு யாரோ என்று நினைக்கிறீர்கள். உங்கள் நண்பனை வேறு ஒருவனுக நீங்கள் நினைக்கும்போது உங்கள் நண்பனை நீங்கள் காண்பதேயில்லை; அவன் மறைந்துவிடுகிருன். நீங்கள் ஒருவனைத்தான் காண்கிறீர்கள். 'அ' என்பவன் உங்கள் நண்பன்

என்று கொள்வோம். 'அ' என்பவனை நீங்கள் 'ஆ' என்பவனுகக் காணும்போது 'அ' என்பவன் அங்கே இல்லவே இல்லை. நீங்கள் ஒவ்வொரு நிலையிலும் பார்ப்பது ஒருவனைத்தான். நாம் நம்மை உடலாகக் காணும் போது நாம் உடலேதான், வேறென்றும் அல்லோம்; இப்படித்தான் மக்களுள் மிகு பெரும்பாலோர் காண்கின்றனர். அவர்கள் ஆன்மா என்றும் மனம் என்றும் பிற என்றும் பேசலாம். ஆனால், அவர்கள் காண்பது பருவுருவந்தான்; புலன் விஷயங்களான தொடுதல், பார்வை, சுவை முதலானவைதாம். சிலர் சில உணர்வு நிலைகளில் தம்மைக் கருத்தாகக் காண்கின்றனர். ஹம்பிரி டேவி என்ற விஞ்ஞானியின் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர் சிரிப்பைத் தூண்டும் ஆவி (Laughing gas) யை வைத்துக்கொண்டு, தம் வகுப்பில் சோதனை நடத்தினர். திடீரென்று ஒரு சோதனைக் குழாய் உடைந்து ஆவி வெளிப்பட்டது. அவர் அதை உள்ளிழுத்தார். சிறிது நேரம் அவர் சிலை போல நின்றார். பிறகு அவர் தம் வகுப்பு மாணவர்களைப் பார்த்து, "நான் சிலை நிலையில் இருந்த போது பிரபஞ்சம் முழுவதுமே எனக்குக் கருத்துகளால் ஆனதாகவே தோன்றியது," என்று கூறினர். சிறிது நேரம் அந்த ஆவி அவருக்கு உடல் உணர்ச்சியை மறக்கச் செய்தது. அது வரை உடலாகக் கண்ட பொருளையே அவர் அப்போது கருத்தாகக் காணத் தொடங்கினர். இந்த உணர்வு இன்னும் உயர்ந்தால், இந்த அற்பச் சிற்றறிவு என்றென்றும் மறைந்து விடின், பேரறிவு—ஞானம்—தோன்றினல், எல்லாவற்றுக்கும் அடிப்படையான உண்மை ஒளிரும்; அதை நாம் ஒன்றான சத்து–சித்து–ஆனந்தமாக, ஒரே ஆன்மாவாக, எங்கும் நிறைந்ததாகக் காண்கிறோம். அறிவே உருவமான ஒன்று, ஆனந்தமே உருவமான ஒன்று, ஒப்பற்றது, எல்லை அற்றது, என்றும் சுதந்தரமானது, என்றும் பந்தப்படாதது, வானம்போல முடிவற்றது வானம்போல மாற்றம் இல்லாதது. தியான காலத்தில் இந்தத் தனிப் பொருள் உன் இதயத்தில் தன்னை வெளிப்படுத்தும்.''

பலவகையான சுவர்க்கங்களையும் நரகங்களையும் இது போன்ற பல வேறு செய்திகளையும் எல்லாச் சமயங்களிலும் காண்கிறோமே! இதற்கு அத்துவைதிகள் கூறும் விளக்கம் என்ன? ஒருவன் இறந்தால் அவன் சுவர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போவதாகவும், இங்கோ அங்கோ செல்வதாகவும், அல்லது வேறோர் உடலோடு வேறு பிறவி சுவர்க்கத்திலோ வேறு

உலகத்திலோ எடுப்பதாகவும் சொல்லப்படுகிறதே—இவைகளெல்லாம் வெறும் பொய்க் கற்பனைகளே. உண்மையில் யாரும் பிறப்பதும் இல்லை, சாவதும் இல்லை. சுவர்க்கம், நரகம், பிரபஞ்சம் எதுவுமே இல்லை, இவை உண்மையில் என்றும் இருந்ததே இல்லை. ஒரு சிறுவனுக்குப் பகலெல்லாம் பற்பல பேய் பிசாசுக் கதைகளைச் சொல்லியபின் மாலையில் அவன் தெருவில் செல்லட்டும். அங்கே ஒரு மரத்தின் அடிக் கட்டை உள்ளது. சிறுவன் அதை எதுவாகப் பார்க்கிறான்? கைகளை நீட்டிக்கொண்டு தன்னைப் பிடிக்க வரும் ஒரு பிசாசாகவே பார்க்கிறான். தன் காதலியைச் சந்திப்பதாக ஒருவன் தெரு மூலையிலிருந்து வருவதாக நினையுங்கள்; அவனுக்கு அந்த மரக்கட்டை தன் காதலியாகத் தெரிகிறது. தெரு மூலையிலிருந்து வரும் போலீஸ் சேவகன் கண்ணுக்கு அது ஒரு திருடனாகத் தெரிகிறது. திருடன் கண்ணுக்கு அது ஒரு போலீஸ் சேவகனாகக் காட்சி அளிக்கிறது. ஒரே மரக்கட்டை இப்படிப் பலருக்குப் பல வகையாகத் தோன்றுகிறது. மரக்கட்டைதான் உண்மை. கட்டையின் தோற்றங்கள் பலருடைய மனங்களினின்றும் வெளியில் படைக்கப்பட்டவை. இது போலவே, உள்ளது ஆன்மா ஒன்றுதான். அது வருவதும் இல்லை, போவதும் இல்லை. அஞ்ஞானியான ஒருவன் சுவர்க்கத்துக்கோ வேறோர் லோகத்துக்கோ போக விரும்புகிறான். தன் வாழ்க்கை முழுவதும் அவன் இதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்திருக்கிறான். அவனது பிரபஞ்சக் கனவு மறைந்ததும், அதற்குப் பதிலாகத் தேவர்களும் தேவ தூதர்களும் பறந்து செல்லும் சுவர்க்கமாக இப்பிரபஞ்சத்தைக் காண்கிறான். ஒருவன் தன் மூதாதையர்களைச் சந்திக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தன் வாழ்க்கை முழுவதும் வளர்ந்து வந்தானானால், ஆதாமிலிருந்து எல்லோரையுமே அவன் சந்திப்பான்; இவர்களை அவன் மனமே படைத்துவிடுகிறது! ஒருவன் மிகுந்த அஞ்ஞானியாய் இருந்து, எப்பொழுதும் நரகம் என்றும், பலவகை நரக தண்டனைகள் என்றும் சமய வெறியர்களால் அச்சுறுத்தப்பட்டிருப்பானாயின் அவன் இந்தப் பிரபஞ்சத்தையே நரகமாகக் காண்கிறான். இறப்பு பிறப்பு என்பதன் கருத்தெல்லாம், காட்சி நிகழும் பூமிகளின் பேதங்களே ஆகும். நீங்கள் நகர்வதில்லை; நீங்கள் உங்கள் கற்பனைக் காட்சியை எதன்மேல் செலுத்துகிறீர்களோ, அதுவும் நகர்வதில்லை. நீங்கள் ஒரு மாறுதலும் இல்லாத நிலைத்த பொருள். வருவதும் போவதும் உங்களுக்கு உண்டோ? இது இயலாத செயல், நீங்கள் எங்கும் நிறைந்த பொருள்.

வானம் ஒருபோதும் நகர்வதில்லை; ஆனால், மேகங்கள் அதன் மேற்பரப்பில் நகர்கின்றன; இதைக் கண்ட நாம் வானமே நகர்கிறது என்று எண்ண இடம் உண்டு. நாம் இரயிலில் பிரயாணம் செய்யும்போது நிலம் நகர்வது போலத் தெரிகிறது. ஆனால், அது அவ்வாறன்று; ரயிலே நகர்கிறது. நாம் இருந்தபடி இருந்த இடத்திலேயே இருக்கிறோம். கனவுகளும் பற்பல முகில்களுமே இயங்குகின்றன. ஒரு தொடர்பும் இல்லாமல் ஒரு கனவை மற்றொரு கனவு பின்பற்றுகிறது. இந்தப் பிரபஞ்ச நடப்பில் எந்தவிதமான நியதியோ முன் பின் தொடர்போ இல்லை; ஆனால், பெருந் தொடர்பு இருப்பதாக நாம் எண்ணுகிறோம். 'வியப்புலகில் அலைஸ்' (Alice in Wonderland) என்ற கதையை நீங்கள் படித்திருக்கலாம். இந்த நூற்றாண்டில் எழுதிய இக்கதை, குழந்தைக் கதைகளுள் மிகவும் ஆச்சரியமானது. இதை நான் படித்த போது, யான் களிப்படைந்தேன். அது போன்ற குழந்தைக் கதை எழுத வேண்டும் என்ற எண்ணம் அன்று முதல் என் மனதில் குடி கொண்டது. எனக்கு அதில் மிகவும் பிடித்த கருத்து, ஒன்றுக் கொன்று பொருத்தம் சற்றும் அற்றதென நீங்கள் நினைப்பதே—அதாவது, அதில் தொடர்பு இல்லாமையேயாம். ஒரு கருத்து எழுகின்றது, யாதொரு தொடர்புமின்றி அது இன்னொன்றுக்குத் தாவுகிறது. குழந்தைகளாக இருந்தபோது அதுவே மிக ஆச்சரியமான தொடர்பு என்று நீங்கள் கருதினீர்கள். குழந்தைப் பருவத்தில் முழுத் தொடர்புள்ளவைகளாகத் தோன்றிய குழந்தைப் பருவ நினைவுகளையே மீண்டும் கொணர்ந்து, குழந்தைகளுக்காக இந் நூலை எழுதினார். பெரியவர்களான நிலையில் எழும் தங்கள் கருத்துகளை குழந்தைகள் விழுங்கவேண்டும் என முயன்று எழுதுகிறார்களே, அந்நூல்களெல்லாம் பொருளற்றவை. நாமே வளர்ந்த குழந்தைகள்தான். இந்தப் பிரபஞ்சம், வியப்புலகில் அலைஸ் (Alice in Wonderland) என்ற கதையில் உள்ளது போல யாதொரு தொடர்புமற்ற ஒன்றேதான். முன்னும் பின்னுமாகச் சில காரியங்கள் பல முறை ஒரே மாதிரி நடப்பதைக் காணும் நாம், இதைக் காரண காரியமுறை என்றும், அடுத்த முறையும் அவ்வாறே நடக்கும் என்றும் கூறுகிறோம். இந்தக் கனவு மாறி வேறொரு கனவு எழும்போது அதுவும் முற்றும் தொடர்புற்றதாகவே தோன்றும்; நாம் கனவு காணும்போது பார்ப்பன யாவும் தொடர்புற்றனவாகவே நமக்குத் தோன்றுகின்றன. கனவு நிலையில் அச்செயல்கள் நடக்கக்கூடாதவை

என்பது தோன்றுவதில்லை, விழித்த பிறகுதான் தொடர்பின்மையைக் காண்கிறோம். இது போலவே, பிரபஞ்சம் என்ற இந்தக் கனவினின்றும் விழித்து, உண்மையோடு அதனை ஒப்பிடும் போது, எல்லாம் தொடர்பற்ற பேதைமை என்பதும், எங்கிருந்து எங்கே செல்கின்றது என்று நம்மால் அறிய முடியாதபடி, பொருத்தமற்ற ஒரு தொகுதி நம்முன் செல்கிறது என்பதும் காணப்படுகின்றன. ஆனால், இதற்கு முடிவு உண்டு என்பது மட்டும் நமக்குத் தெரியும். இதையே மாயை என்கிறோம். கணந்தோறும் மாறும் பஞ்சு முகில்களின் தொகுதியைப் போன்றது இது. இந்த முகில்களே மாறும் வாழ்வைக் குறிக்கின்றன, மாறாக கதிரவனே நீங்கள். வெளியில் நின்று மாறாத இந்தப் பொருளை நீங்கள் கண்டால் இதை இறைவன் என்று உரைக்கிறீர்கள்; உள்ளிருந்து இதை நீங்கள் கண்டால், இதுவே நீங்கள் என்பது தெரிகிறது. இரண்டும் ஒன்றே தான்; உங்களில் வேறான இறைவன் இல்லை; உண்மையான 'உங்களை' விட உயர்ந்த இறைவனும் இல்லை. தேவதைகள் எல்லாம் உங்கள் நோக்கில் அற்பமானவர்களே. இறைவனைப்பற்றிய கருத்துகளும், பரலோகத்தில் உள்ள பிதா என்பதும் உங்களுடைய பிரதிபிம்பங்களே ஆகும். இறைவன் என்பதே உங்கள் பிரதிபிம்பந்தான். "இறைவன் மனிதனைத் தன் பிரதிபிம்பமாகவே உண்டாக்கினான்," என்பது சரியன்று; "மனிதனே இறைவனைத் தன் பிரதிபிம்பம் ஆக்கிக் கொண்டான்," என்பதே சரி. பிரபஞ்சம் எங்குமே நம் பிரதிபிம்பமாகவே இறைவர்களை உண்டாக்கி வருகிறோம். நாமே இறைவனை உண்டாக்கி, அவன் காலில் விழுந்து வழிபடுகிறோம். இந்தக் கனவு ஏற்படும் போது அது நமக்கு மிகவும் உவப்பாகிறது.

இந்தச் சொற்பொழிவின் சாரம் இதுதான்—அறிதற்கு முக்கியமானதுதான். இருப்பது ஒன்றேதான், இந்த ஒன்றே பல வகை இயல்புகள் மூலம் உலகமாகவோ, சுவர்க்கமாகவோ, நரகமாகவோ, தேவதைகளாகவோ, பேய்களாகவோ, மனிதர்களாகவோ, அரக்கர்களாகவோ, பிரபஞ்சமாகவோ, இவையெல்லாப் பொருள்களும் ஆகவோ தோன்றுகிறது. ஆனால், இந்தப் பலவற்றுக்குள்ளும், "எவன் ஒருவன் இந்த மரணக் கடலுக்கிடையே அந்த ஒன்றைக் காண்கிறானோ, மிதக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஓர் இருப்பை அறிகிறானோ, என்றும் மாறாத அந்த ஒன்றை உணர்கிறானோ அவனுக்கே நித்திய சாந்தி

உரியதாகும், வேறு எவர்க்கும் அன்று, வேறு எவர்க்கும் அன்று. இருப்பதாகிய இந்த ஒன்றை உணரவேண்டும். 'எப்படி?' என்பதுதான் அடுத்த கேள்வி. பிரபஞ்சமாகிய இந்தக் கனவிலிருந்து விடுபடுவது எப்படி? ''நாம் அற்ப மனிதர்; ஆண் பெண் முதலானவை'' என்பது போன்ற இந்தக் கனவிலிருந்து நாம் விழிப்பது எப்படி? இந்தப் பிரபஞ்சத்தின் எல்லையற்ற பொருள் நாம்; என்ருலும், இந்தச் சிறு பொருள்களாக—ஆண், பெண்களாக—நம்மை உருவாக்கிக் கொண்டுவிட்டோம். நாம் ஒருவனது இன்சொல்லேயோ மற்றவனது சீற்றச் சொல்லேயோ சார்ந்திருப்பதாகவும் கற்பித்துக்கொண்டுவிட்டோம். எவ்வளவு பயங்கரமான சார்பு! எவ்வளவு பயங்கரமான அடிமைத்தனம்! எல்லா இன்ப துன்பங்களுக்கும் அப்பாற்பட்டவனும், எவனுடைய பிரதிபிம்பம் இந்தப் பிரபஞ்சமோ அவனும், எவனுடைய உயிரின் சிறு அமிசங்களே சூரியர்களும், சந்திரர்களும், நக்ஷத்திரங்களுமோ அவனும் ஆகிய நான் பயங்கர அடிமையாகப் பிறர் காலடியில் அடக்கிவைக்கப்பட்டுளேன். என் உடம்பை யாராவது கிள்ளினுல், எனக்கு வலி தெரிகிறது. ஒருவன் என்னிடம் அன்போடு உரையாடினுல் எனக்கு இன்பம் தோன்றுகிறது. என் நிலேயைப் பாருங்கள்; உடலுக்கும் மனத்துக்கும் அடிமை நான்! பிரபஞ்சத்துக்கும் அடிமை! அன்பான மொழிக்கும் தீயச் சொல்லுக்கும் அடிமை! கோபதாபங்களுக்கு அடிமை! இன்பத்துக்கு அடிமை! வாழ்வுக்கு அடிமை! சாவுக்கு அடிமை! எல்லாவற்றுக்கும் அடிமை! இந்த அடிமைத் தளேயை உடைத்தெறிய வேண்டும். எப்படி? ''இந்த ஆன்மாவைப்பற்றி முதலில் கேட்க வேண்டும்; பிறகு சிந்திக்கவேண்டும்; பிறகு தியானிக்க வேண்டும்.'' அத்துவைத ஞானியின் வழி இதுதான். உண்மையைக் கேட்டு, பிறகு சிந்தித்து, பிறகு அதையே தியானித்து அடிக்கடி வற்புறுத்தி வரவேண்டும். எப்போதும், ''நான் பிரம்மன்'' என்றே தியானியுங்கள். மற்ற எண்ணமெல்லாம் பலவீனத்தைத் தரும் என்று விலக்கப்பட வேண்டும். நீங்கள் ஆண்கள் பெண்கள் என்ற நினைவைத் தரும் எண்ணங்களே எல்லாம் ஒழித்துவிடுங்கள். உடல், மனம், தேவதைகள், பேய் பிசாசுகள் பற்றிய எண்ணங்கள் எல்லாம் ஒழித்துவிடுங்கள். உள்ளதாகிய ஒன்றைத் தவிர மற்ற எதுவும் ஒழியட்டும். ''ஒருவன் பேச்சு மற்றவனுக்குக் கேட்கும் நிலேயும், ஒருவனே மற்றவன் பார்க்கும் நிலேயும் சிறியவை; ஒருவன் பேச்சு மற்றவனுக்குக் கேட்கா நிலேயும், ஒருவனே மற்றவன் காணு நிலேயுமே

முடிவற்ற நிலை.'' காண்பவனும் காட்சிப் பொருளும் ஒன்ருகும் நிலையே மிக உயர்ந்த நிலை. பேசுபவனும் கேட்பவனும் நாளுக வும், ஆசிரியனும் மாணவனும் நாளுகவும், ஆக்குபவனும் ஆக்கப் படும் பொருளும் நாளுகவும் ஆகும் நிலையிலேதான் பயநீக்கம் ஏற்படுகிறது. நம்மைப் பயப்படுத்த அந்த நிலையில் அப்போது யாரும் இல்லை. என்னைத் தவிர வேருென்றும் இல்லை; எது எனக்குப் பயம் விளைக்கக்கூடும்? இதைத் தினமும் காதால் கேட்கவேண்டும். மற்ற எண்ணங்களையெல்லாம் அகற்றுங்கள். மற்றவை எல்லாம் ஒதுக்கிவிட வேண்டும். கீதையை சதா ஓதிக் கொண்டிருக்க வேண்டும், காது வழியே இந்த உண்மையை ஊற்றி, அது நெஞ்சிற் புகவேண்டும். ஒவ்வொரு நரம்பிலும், தசையிலும், இரத்தத் துளியிலுமிருந்து 'நானே அவன்; நானே அவன்,' என்ற நாதம் ஓயாமல் எழவேண்டும். சாவின் வாயில் இருக்கும்போதும், 'நானே அவன்,' என்னல் வேண்டும். இந்தி யாவில் ஒரு துறவியார் இருந்தார். அவர் எப்போதும். 'சிவோ ஹம்—நானே நித்தியமான ஆனந்தம்' என்று சொல்லிக் கொண்டே இருப்பார். ஒரு புலி ஒரு நாள் அவர்மேல் பாய்ந்து அவரை இழுத்துச் சென்று கொன்றுவிட்டது. ஆனுல், அவர் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் 'சிவோஹம்' என்றே ஒலி அவர் வாயிலிருந்து வந்த வண்ணம் இருந்தது. சாவின் வாயி லிலும், பேராபத்திலும், கடுமையான போர்முனையிலும், கடலின் அடியிலும், மிக உயர்ந்த மலைச் சிகரத்திலும், அடர்ந்த காட்டின் நடுவிலும் 'நானே அவன்; நானே அவன்,' என்று உங்கட்குச் சொல்லிக் கொள்ளுங்கள். இரவிலும் சரி, பகலிலும் சரி, 'நானே அவன்' என்று சொல்லுங்கள். இதுதான் மிக்க பலம், இதுதான் சமய ஞானம். ''பலவீனர்களால் என்றும் ஆன்மானுபவம் பெற இயலாது.'' 'இறைவனே, நான் ஒரு கொடும்பாவி!' என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். யார் உங்களுக்கு உதவுவார்கள்! நீங்களே பிரபஞ்சத்துக்குத் துணைவர்கள். பிரபஞ்சத்தில் எது உங்களுக்கு உதவ முடியும்? உங்களுக்கு உதவக்கூடிய மனிதனே, தெய்வமோ, அசுரனே எங்கிருக்கிருன்? உங்களை வெல்லவல்லது எது? நீங்களே பிரபஞ்சத்துக்கு இறைவர்கள்! நீங்கள் யாரிடம் உதவி நாட முடியும்? உங்களிடமிருந்தல்லாமல் எங்கிருந்தேனும் உதவி வர இயலாது. நீங்கள் செய்த பிரார்த்தனை ஒவ்வொன்றும் நிறைவேறிய போது, ஏதோ ஒரு கடவுளால் நிறைவேற்றியதாக உங்கள் அஞ்ஞானம் காரணமாக நீங்கள் எண்ணினீர்கள்; ஆனுல், உங்களுக்குத் தெரியாமல் அவற்றை எல்லாம் நிறைவேற்

றியவர்கள் நீங்களே. உங்களிடமிருந்தே உங்களுக்கு உதவி வந்தது. ஆனால், நீங்களே அறிவின்றி வேறு யாரோ உதவுவதாகக் கற்பனை செய்துகொண்டீர்கள். உங்களுக்கு வெளியே இருந்து உதவுபவர் யாருமே இல்லை. பிரபஞ்சத்தைப் படைப்பவர்கள் நீங்களே. பட்டுப்பூச்சியைப்போல நீங்களே உங்களைச் சுற்றி ஒரு கூட்டுச் சிறையை ஆக்கிக்கொண்டிருக்கிறீர்கள். யார் உங்களைக் காக்க இயலும்? உங்களுடைய கூட்டை நீங்களே உடைத்துக்கொண்டு, அழகான பட்டுப்பூச்சியாக, சுதந்தர ஆன்மாவாக வெளியே வாருங்கள். அப்போதுதான் உண்மை உங்களுக்கு விளங்கும். எப்போதும், 'நானே அவன்,' என்று உங்களுக்கே கூறிக்கொள்ளுங்கள். இந்தச் சொற்கள் உங்கள் நெஞ்சில் உள்ள குப்பையை எரித்துவிடும். உங்களுக்குள் முன்னமே அடங்கிக் கிடக்கும் மாபெருஞ் சக்தியை, உங்கள் நெஞ்சிலே உறங்கும் அளவற்ற சக்தியை வெளியே கொண்டுவாரும். எப்போதும் உண்மையைப் பற்றிக் கேட்பதாலேயே இது வெளிப்படுத்தப்படும். வேறு வழி இல்லை. எங்கெல்லாம் பலவீனம் என்ற நினைவு இருக்கிறதோ, அங்கெல்லாம் போக வேண்டா. நீங்கள் ஞானிகளாக வேண்டுமானால், பலவீனத்தை முற்றும் விலக்குங்கள்.

இந்தப் பயிற்சியில் இறங்கும் முன் உங்கள் மனத்தைவிட்டு எல்லா ஐயங்களையும் ஒழித்துவிடுக. போராடுக; தருக்கம் செய்க; வழக்காடுக. இதற்குப் பிறகு இதுவே உண்மை; இது ஒன்றே உண்மை, வேறு இல்லை என்ற உறுதியை மனத்தே ஏற்படுத்தியபின், பிறகு வாதம் செய்யாதே; வாயை மூடிக்கொள். வாதத்தைக் கேளாதே, நீயும் வாதாடாதே. இன்னும் வழக்குகளாற் பயன் என்? திருப்தி ஏற்பட்டுவிட்டது; பிரச்சினையைத் தீர்த்துவிட்டனை. இன்னும் என்ன உள்ளது? இந்த உண்மையை இனி அனுபவமாக்கவேண்டும்; ஆதலால், பயனுடைய காலத்தை வீண் வாதங்களில் செலவிடுவானேன்? உண்மையை இப்போது மனனம் செய்ய வேண்டும், உனக்குப் பலத்தை ஊட்டும் கருத்து ஒவ்வொன்றையும் கைக்கொள்ள வேண்டும். உன்னைப் பலவீனப்படுத்தும் ஒவ்வொரு நினைவையும் தள்ளிவிட வேண்டும். பக்தன் நாமரூபங்களையும், அவையனைய அனைத்தையும், இறைவனையும் தியானிக்கிறான்; இதுதான் இயற்கை வழி; ஆனால், மெதுவாகச் செல்லும் வழி. யோகியோ, தன் உடம்பில் உள்ள பற்பல ஆதாரங்களைத் தியானித்து, தன் மனத்துள்ள சக்திகளை வெளிப்படுத்துகிறான். ஞானியோ, 'மனமும் இல்லை! உடலும் இல்லை' என்கிறான். உடலையும், மனத்தையும் பற்றிய இக்கருத்து ஒழிய

வேண்டும்; இவற்றை விரட்டியடிக்க வேண்டும்; ஆதலால், இவற்றை நினைப்பதும் மடத்தனமே. இது ஒரு நோயைக் போக்க இன்னொரு நோயை மேற்கொள்ளுதலைப் போன்றது ஆகும். இதனுல், ஞானியின் தியானம் மிகவும் கடினமானது; எதிர்மறையானது; அவன் எதையும் இல்லை என்கிறுன், ஆன்மாவே மிஞ்சுகிறது. இதுதான் மிகச் சிறந்த பகுமுறை ஆராய்ச்சி நெறி. விசாரணையின் பலம் ஒன்றினுலேயே ஆன்மாவினின்றும் பிரபஞ்சத்தைப் பிய்த்தெறிய முயல்கிறுன் ஞானி. 'நான் ஞானி,' என்று சொல்வது மிக எளிது. ஆனுல், உண்மை ஞானியாவது மிகவும் அரிது. "வழி நீண்டது; இது நாவிதனது கத்தியின் கூரிய முனையின்மேல் நடப்பது போன்றது ஆகும்; என்றுலும், நம்பிக்கையை விட்டுவிட வேண்டா. விழிமின், எழுமின், குறிசாரும்வரை நில்லாது செல்லுமின்" என்கிறது வேதம்.

ஆக, ஞானி செய்யும் தியானம் என்ன? உடல், மனம் என்ற கருத்துகளுக்கெல்லாம் அப்பால் போகவும், தான் உடல் என்ற எண்ணத்தை விரட்டவும் அவன் விரும்புகிறுன். உதாரணமாக, 'சுவாமியாகிய நான்' என்று நான் சொன்னதும் உடனே உடல் என்ற நினைவு எழுந்துவிடுகிறது. அப்படியானுல், நான் என்ன செய்யவேண்டும்? என் மனத்துக்குச் சரியான அடி கொடுத்து, "நான் உடல் அல்லேன்; ஆன்மா," என்று கூறவேண்டும். நோயோ மரணமோ பேரளவு அச்சுறுத்தும் முறையில் வந்தால் தான் என்ன? நான் உடல் அல்லேன், உடலை அழகுபடுத்துவானேன்? திரும்பவும் மாயையை அனுபவிக்கவா? இந்த அடிமை வாழ்வை நிலையாக்கவா? உடல் அழியட்டும்; நான் உடல் அல்லேன்—இதுதான் ஞானியின் வழி. "வாழ்க்கை என்ற கடலை அபாயமின்றிக் கடத்தற்காகவே இறைவன் எனக்கு இவ்வுடலை அருளியிருக்கிறுன். அந்தப் பிரயாணம் முடியும்வரை நான் இந்த உடலைப் போற்ற வேண்டும்," என்கிறுன் பக்தன். "நான் உடலைக் கவனமாகப் போற்ற வேண்டும். என் பயிற்சி முற்றுப் பெற்று விடுதலை கிடைக்கும் வரை உடல் வேண்டும்," என்கிறுன் யோகி. ஞானி தான் ஒரு கணங்கூடக் காத்திருக்க இயலாது என்றும், இக்கணமே விடுதலை பெற வேண்டும் என்றும், நன்கு உணர்கிறுன். "நான் என்றும் சுதந்தரன். நான் என்றும் பந்தப்படவே இல்லை; நானே என்றும் பிரபஞ்சநாதனுன இறைவன். என்னை நிறைவுள்ளவனுகச் செய்பவர் யார்? நான் ஏற்கெனவே நிறைவுள்ளவன்," என்கிறுன் ஞானி. ஒருவன் நிறைவு பெற்றுவிட்டால், அவன் பிறரிடம் நிறைவையே காண்கிறுன். அவன்

குறை கண்டால், தன் மனம் தன்னையே வெளியிற் படைத்த லாகும் அது. தன்னிடம் குறை இல்லாத ஒருவன், குறையை எப்படிக் காண இயலும்? ஞானிக்கு நிறைவைப்பற்றியோ, குறை வைப்பற்றியோ, கவலை இல்லை. அவன் அளவில் ஒன்றுமே இல்லை. அவன் விடுதலை பெற்றவுடன் நன்மை தீமை இரண்டை யுமே காண்பதில்லை. நன்மை தீமைகளைக் காண்பவர் யார்? எவ ரிடம் இவை இடம் பெறுகின்றனவோ, அவரே. உடலைக் காண் பவன் எவன்? தான் உடல் என்று நினைப்பவனே. நீ உடல் என்ற எண்ணம் ஒழியும் கணமே, பிரபஞ்சம் சற்றும் உனக்குத் தோன்ருது போகும். பிறகு என்றுமே அது மறைந்துவிடும். அறிவின் உறுதியால் பிரபஞ்சக் கட்டை அறுத்தெறிந்து விடுதலை பெறமுயல்பவனே ஞானி. இது எதிர்மறை வழி—''இது நான் அல்லேன்; இது நான் அல்லேன் (நேதி, நேதி)'' என்னும் முறை.

ஆன்மாவின் இயல்பும் அதன் குறிக்கோளும்

மனிதன், சாவோடு முற்றும் அழிந்துவிடுவதில்லை என்பதே மிகு பழங்கொள்கை. மனிதன் இறந்த பிறகுங்கூட ஏதோ ஒன்று வாழ்கிறது, வாழ்ந்து கொண்டேயிருக்கிறது. மிகப் பழமையான நாட்டார்கள் ஆகிய எகிப்தியர், பாபிலோனியர், பண்டைய இந்துக்கள் மூவரையும் ஒப்பிட்டுப் பார்த்து, அம்மூவ ரிடமிருந்தும் இக்கருத்தைப் பெறுதல் ஒருவேளை சிறந்ததாகும். எகிப்தியர்களும் பாபிலோனியர்களும் ஒரு வகை ஆன்மக் கருத் தைப் பெற்றிருந்தார்கள்: அது உடலுக்கு மறு பகுதியான ஒன்று என்பது. இந்த உடலுக்குள் இருக்கும் வேறோர் உடல் இங்கே இயங்கித் தொழில் புரிகிறது என்பது அவர்கள் கருத்து. இந்த வெளி உடல் இறக்கும்போது அந்த மறு பகுதி வெளிப் பட்டுச் சிறிது காலம் வாழ்கிறது; ஆனால், அதன் வாழ்வு வெளி உடலைக் காப்பாற்றி வைப்பதற்கே கட்டுப்பட்டுள்ளது. மறு பகுதியைவிட்டுப் பிரிந்த உடலின் ஒரு பகுதிக்கு ஊறு நேரின் அம்மறு பகுதிக்கும் ஊறு அவ்விடத்தே நேரும். இக்காரணம் பற்றியே இறந்து போனவனது உடலை மருந்தெண்ணெய் தடவிக் காக்கும் முறையாலும், அதன்மீது கோபுரம் கட்டும் முறையாலும் காப்பாற்றுவதில் பழங்கால எகிப்தியர் அவ்வளவு பரிவுகொள்ளக் காண்கிறோம். பழங்காலப் பாபிலோனியரும் எகிப்தியரும் கொண்ட கொள்கைப்படி, மறு பகுதி என்றும் வாழ இயலாது; அது குறிப்பிட்ட ஒரு கால எல்லை வரைதான் வாழும்—அதாவது, அது விட்டு வந்த உடல் அழியாது காக்கப்படும் வரைதான்.

இன்னொரு விசித்திரம் யாதெனில், இந்த மறு பகுதியோடு அச்சம் சம்பந்தப்பட்டிருப்பதே ஆகும். இது எப்போதும் துயர மும் துன்பமும் உற்றதாகவே இருக்கும். இதன் வாழ்வு கடுந் துன்ப நிலையினதாகும். இது மீண்டும் மீண்டும் உயிரோடிருப் பவரிடம் ஏகி, தனக்குப் பெறமுடியாத உணவு பான போகங் களைக் கேட்டுக்கொண்டிருக்கும். நைல் ஆற்றின் நீரைப் பருக இதற்கு ஆசை, ஆனால் அந்த நல்ல நீரைக் குடிக்க இப்போது இதற்கு இயலாது. இது இங்கே வாழ்ந்தபோது அனுபவித்த உணவுகளை மீண்டும் நுகர விரும்புகிறது; இவற்றை இது இப்போது நுகர இயலாது என்பது தெரிந்தவுடன் மூர்க்க வெறி

பிடித்து, அவ்வுணவை இதற்குத் தரவில்லையானால், வாழ்பவர்களுக்குச் சாவும் துன்பமும் உண்டாக்கிவிடுவதாக இது அச்சுறுத்துகிறது.

இதைப்பற்றிய ஆரியரின் கருத்தில் மிகப் பெரிய வேறுபாடு தெரிகிறது. இங்கும் மறுபகுதிக் கருத்துள்ளது; ஆனால் அது ஒருவகை ஞான உடல் ஆகிவிட்டது. ஆனால், ஒரு வேறுபாடு யாதெனில், இந்த ஞான உடலோ, ஆன்மாவோ வேறு எப்பெயர் கொண்டழைத்தாலும் சரி, இதன் வாழ்வு, தான் விட்டுவந்த உடலினால் கட்டுப்படாதது என்பது. அம்மட்டோ! அதற்கு மாறாக, அந்த உடலிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது. இது பற்றியே இறந்தாரை எரிக்கும் ஆரியர்களின் தனிப் பழக்கம் ஏற்பட்டது. மனிதன் விட்டுவிட்டு வந்த உடலை ஒழிக்க அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் எகிப்தியரோ, இதைப் புதைப்பதாலும் மருந்தெண்ணெய் பூசுவதாலும், இதன்மேல் கோபுரம் கட்டுவதாலும் இதை அழியாமல் காக்க அவாவுகிறார்கள். ஆரம்ப நிலையிலிருக்கும் மனிதன் இறந்தவர் உடலை அழிப்பது ஒருபுறம் இருக்கட்டும்; ஓரளவு முன்னேறிய நாட்டினர்க்குள் இறந்தாரது உடலைத் தீர்க்கும் முறை ஆன்மாவைப் பற்றிய அவரது கருத்திற்குப் பெரும் அறிகுறியாகிறது. உடலைப் பிரிந்த ஆன்மா, இறந்த உடல்—இவ்விரு கருத்துகட்கும் நெருங்கிய தொடர்பு இருக்கக் காணுந்தோறும், உடலை அழியாமல் காக்கும் இயல்பும், ஏதாவது ஒரு வகையில் புதைக்கும் வழக்கமும் என்றும் காணப்படுகின்றன. இதற்கு மாறாக உடலினின்றும் ஆன்மா வேறுபட்ட ஒன்று என்ற கருத்தும், இறந்த உடலுக்கு அழிவு நேர்வதால் ஆன்மாவுக்குப் பாதகம் நேராது என்ற கருத்தும் எந்த மக்களிடம் வளர்ச்சி பெற்றிருக்குமோ, அவர்கள் உடலை எரிக்கும் வழக்கத்தையே மேற்கொண்டிருப்பார்கள். ஆக மிகப் பழைய ஆரிய இன மக்கள் எல்லோரிடமும் உடலை எரிக்கும் வழக்கத்தையே காண்கிறோம்; பார்ஸிகள் மட்டும் ஒரு கோபுரத்தின் மேல் உடலைப் போட்டுவிடுகிறார்கள். ஆனால் இங்கும் கோபுரத்தைக் குறிக்கும் சொல்லின் பொருள் மயானம் என்பது தான்; இவர்களும் பழங்காலத்தில் உடலை எரித்து வந்தார்கள் என்பதையே இது காட்டுகிறது. ஆரியர்களிடம் இந்த மறுபகுதிகளைப் பற்றிய அச்சம் சற்றும் இல்லாததுதான் மற்றொரு விசித்திரம். உணவோ, உதவியோ கேட்க இவை கீழே வருவதில்லை; இந்த உதவிபுரிய மறுத்தபோதும், அவை மூர்க்கம் கொள்வதில்லை; உயிரோடிருப்பாரை அழிக்கவும் இவை முயல்

வதும் இல்லை. அவை மகிழ்கின்றன; விடுதலை பெற்றதுபற்றி இன்பம் அடைகின்றன. உடல் பிரிந்து சிதைவதற்குச் சிதையின் தீ அறிகுறியே ஆகும். உடலைப் பிரிந்த ஆன்மாவைச் சாந்தமாக மேலே கொண்டுபோய் மூதாதையார் வாழும் உலகிலே, துயரற்றதும் என்றும் இன்பமுற்றதும் ஆன அவ்வுலகிலே சேர்க்குமாறு அத்தீயை வேண்டிக்கொள்ளுகின்றனர்.

இந்த இரண்டு கருத்துகளும் ஒரேவண்ணமானவை என்பது தெரிகிறது.—ஒன்று நல்லதை எதிர்பார்க்க, மற்றொன்று ஆரம்பக் கருத்தாதலின் துன்பத்தை எதிர்பார்க்கிறது, முன்னது பின் கண்ட கொள்கையின் மலர்ச்சியே ஆகும். ஆரியர்களும் மிகு பழங்காலத்தில் எகிப்தியர்களைப் போன்று அதே கருத்துக்களைக் கொண்டிருத்தல் இயலும், அன்றேல் கொண்டிருந்திருக்கலாம். ஆரியர்களின் மிகப் பழைய வரலாறுகளை ஆராயும்போது, இக்கருத்தே இருந்திருக்கக் கூடும் என்பது அறியக் கிடக்கிறது. ஆனால், ஆன்மா ஒளிமிக்க ஒன்று. ஒருவன் இறந்தால், அவனது ஆன்மா, முன்னோர்களோடு வாழச் சென்று அங்கே அவர்களுடைய இன்பத்தை அனுபவிக்கிறது. அங்குள்ள முன்னோர் அதனை மிக்க அன்போடு வரவேற்கின்றனர். இந்தியாவில் உள்ளவரின் ஆன்மாவைப் பற்றிய மிகப் பழைய கருத்து இதுதான். பின்னாளில் மென்மேலும் இந்தக் கருத்து உயர்ந்துகொண்டே வந்தது. தாம் அதுவரை ஆன்மா என்று நினைத்து வந்தது உண்மையில் ஆன்மா அன்று என்பது பின்பு தெரிந்தது. இந்த ஒளியுடல், நுட்ப உடல்—எவ்வளவு நுட்பமாய் இருந்தாலும் சரி—ஓர் உடலேதான்; உடல்கள் அனைத்தும் பருப்பொருளாலோ, நுண்பொருளாலோ ஆனவையே. எவற்றிற்கெல்லாம் வடிவும் உருவும் உண்டோ, அவையெல்லாம் கட்டுப்பட்டவையே; நித்தியமாயிருக்க இயலாதவை. வடிவு ஒவ்வொன்றிலும் மாறுதல் அடங்கியுள்ளது. மாறுதலுக்கு உட்பட்ட ஒன்று எப்படி அழிவற்றதாய் இருக்க இயலும்? எனவே, இந்த ஒளியுடலுக்கும் ஆதாரமான மனித ஆன்மா என்ற ஒன்றைக் கண்டார்கள். இதையே 'ஆத்துமன்' என்றும் 'தான்' என்றும் சொன்னார்கள். அப்போது இந்த 'ஆன்ம'க் கருத்துத் தொடங்கியது. இந்தக் கருத்தும் பலவகை மாறுதல்களை அடையவேண்டியிருந்தது. இந்த ஆன்மா நித்தியமானது, மிக நுட்பமானது, அணுவினும் நுட்பமானது என்றும், இது உடலின் ஏதோ ஒரு பகுதியை இடமாகக் கொண்டு வாழ்ந்தது என்றும், ஒருவர் இறந்தால் இந்த ஆன்மா பருஉடலை விட்டு ஒளியுடலை ஆதார

மாகக்கொண்டு வெளியே போய்விடும் என்றும் சிலர் கருதினர் கள். ஒளியுடலே ஆன்மா என்ற கருத்தை மறுத்த அதே காரணத்தைக் கொண்டே, ஆன்மா அணுப்போன்றது என்ற கருத்தையும் வேறு சிலர் மறுத்தனர்.

பலவகையான இந்த அபிப்பிராயங்களை எல்லாம் அடிப்படை யாகக்கொண்டுதான் சாங்கிய வேதாந்தம் தோன்றியது; இதில் பலவகை வேற்றுமைகளைக் காண்கிறோம். அவற்றின் கருத்து இதுதான்; முதலில் மனிதனுக்குப் பருவுடல் இருக்கிறது; அதற் குப் பின் நுண்ணுடல் இருக்கிறது; இதுதான் மனத்துக்குக் கருவி போன்றது; இதற்கும் பின் இருப்பதுதான் ஆன்மா, எனப்படுவது; அதுவே, சாங்கியர்கள் கூறுவது போன்று, மனத்தைக் காண்பவன் என்பது; இது எங்கும் பரந்த ஒன்று. அதாவது, உங்கள் ஆன்மா, என் ஆன்மா, எல்லோருடைய ஆன்மாக்களும் ஒரே சமயத்தில் எங்கும் உள்ளன. அவற்றிற்கு உருவம் இல்லை என்றால், அவற்றால் எப்படி இடத்தை அடைத்துக் கொள்ள இயலும்? இடத்தை அடைத்துக்கொள்ளும் எல்லாப் பொருளுக்கும் உருவம் உண்டு. அருவப் பொருளே முடிவற்ற தாக இருக்க இயலும். எனவே ஒவ்வோர் ஆன்மாவும் எங்கும் உள்ளதாய் இருக்கிறது. இவர்கள் சொல்லும் இரண்டாவது கொள்கை நமக்கு இதினின்றும் மிக்க திகிலை உண்டாக்கும். மனிதர்கள் பெரும்பாலாராயினும் முன்னேறிவருவதைப் பழைய மக்கள் எல்லோரும் கண்டார்கள்; அவர்கள் தூய்மையிலும் திறமையிலும் அறிவிலும் வளர்ச்சி பெற்றார்கள். "மனிதர்க ளிடம் விரிந்து தோன்றிய இந்தத் தூய்மை, அறிவு, ஆற்றல், என்னும் சக்தி இவை எங்கிருந்தன?" என்ற வினா எழுந்தது. எவ்வறிவும் இல்லாத குழந்தை ஒன்று இருக்கிறது. இது வளர்ந்து பலமும், திறமையும், அறிவும் மிகுந்த மனிதன் ஆகி விடுகிறது. இந்த அறிவுச் செல்வத்தையும் திறமைச் செல்வத் தையும் குழந்தை எங்கிருந்து பெற்றது? 'இவை ஆன்மாவில் இருந்தன,' என்பதுதான் பதில். தொடக்கத்திலிருந்தே இந்த அறிவும் திறமையும் அதன் ஆன்மாவில் இருந்தன. இந்த ஆற்றலும், தூய்மையும், பலமும் ஆன்மாவில் ஒடுங்கி யிருந்தன. இப்போது அவை வெளிப்பட்டன; அவ்வளவுதான். இப்படி விரிதல், ஒடுங்குதல் என்பதன் பொருள் என்ன? ஒவ்வோர் ஆன்மாவும் தூய்மையாகவும், நிறைவுற்றதாகவும், எல்லாச் சக்தி யும் எல்லா அறிவும் உள்ளதாகவும் இருக்கிறது என்பதுதான்; சாங்கிய சமயம் இப்படித்தான் சொல்கிறது. ஆனால், அது

பெற்றுள்ள மனத்தின் தகுதிக்கு ஏற்றபடிதான் இந்தச் சக்திகளின் விரிவு தோன்றும். மனம் ஆன்மாவைப் பிரதிபலிக்கும் கண்ணுடி போன்றது. என் ஆன்மசக்தியை ஓரளவுக்கு என் மனம் பிரதிபலிக்கிறது; இப்படியேதான் ஒவ்வொருவர் ஆன்மாவும் மனமும் செய்கின்றன. தெளிவு மிகுந்தால் கண்ணுடி ஆன்மாவை மிக நன்கு பிரதிபலிக்கும். எனவே, அவரவர் மனத்தின் தன்மைக்கு ஏற்றபடி இந்த விரிவு வேறுபடுகிறது. ஆனுல், எல்லா ஆன்மாக்களும் இயல்பாகவே தூயவை, நிறைவுற்றவை.

இப்படி இருக்க இயலாது என்று எண்ணிய இன்னொரு தத்துவவாதமும் இருந்தது. இயல்பாகவே ஆன்மாக்கள் தூய்மையும் நிறைவும் உற்றனவாயினும், இவை சில வேளைகளில் சுருங்கியும் சில வேளைகளில் விரிந்தும் காணப்படுகின்றன என்பது இவர்கள் கொள்கை. சில செயல்களும் சில கருத்துகளும் ஆன்ம இயல்பைச் சுருங்கச் செய்கின்றன என்னலாம்; வேறுவகை எண்ணங்களும் செயல்களும் அதன் இயல்பை வெளிக் கொணர்வன, விரியும்படி செய்கின்றன என்பர் அவர். இதற்கும் விளக்கம் சொல்கிருர்கள். ஆன்மாவின் சக்தியையும் தூய்மையையும் சுருங்கச் செய்யும் எண்ணங்களும் செயல்களும், கெட்ட செயல்களும் கெட்ட எண்ணங்களும் ஆம். ஆன்மாவின் இயல்பை விரிவடையச் செய்யும் எண்ணங்களும் செயல்களும் நல்ல நீதியான செயல்களாம். இந்த இரண்டு கொள்கைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு மிகச் சிறியது. ஏறக்குறைய இது, சுருக்கம் பெருக்கம் என்ற வார்த்தைகளைக் கொண்டு செய்யும் விளையாட்டே ஆகும். ஆன்மா பெற்றுள்ள மனத்தினைச் சார்ந்தது என்ற விளக்கந்தான் சிறந்தது என்பதில் ஐயமில்லை; சுருக்கமும், விரிவுமாகிய கொள்கை இந்த இரண்டு சொற்களிடம் சரணமடைய விரும்புகிறது. ஆன்மாவிற்குச் சுருக்கம் பெருக்கம் என்பதன் பொருள் யாது என்று இவர்களைக் கேட்கவேண்டும். ஆன்மா என்பது அருவப் பொருள். சடப் பொருளைப் பொறுத்த மட்டும், சுருக்கம் விரிவு என்ற சொற்களுக்குப் பொருள் உண்டு; இது தூலப் பொருளான சடப் பொருள்களுக்கும் நுண்பொருளான மனம்போன்றதற்கும் பொருந்தும்; ஆனுல் இதற்கு அப்பால் பொருளல்லாத ஒன்றைப்பற்றி—காலம், இடம் இவற்றுக்குக் கட்டுப்படாத ஒன்றைப்பற்றி—சுருக்கம் விரிவு என்ற சொற்களுக்கு என்ன பொருள் கொள்ள இயலும்? எனவே, ஆன்மா என்றும் தூயதும் குறைவற்றதும்; ஆனுல் மனத்தின் இயல்புக்கு ஏற்றபடி இந்தத் தன்மைகள் சிலவற்றுள் அதிகமாக

வும் சிலவற்றில் குறைவாகவும் பிரதிபலிக்கின்றன என்னும் கொள்கையே சிறந்தது. மனமானது மாற மாற அதன் இயல்பு மேலும் மேலும் தெளிவுபெற்று, ஆன்மாவை மிகுதியாகப் பிரதிபலிக்கிறது. இவ்வாறே நிகழ்ந்துவர ஆன்மாவின் தன்மை முழுவதையும் பிரதிபலிக்கும் அளவுக்கு மனம் தூய்மையடைகிறது; இந்த நிலையிலே ஆன்மா விடுதலை பெறுகிறது.

இதுதான் ஆன்மாவின் இயற்கை. குறிக்கோள் என்ன? இந்தியாவில் உள்ள பலவகைச் சமயத்திலும் ஆன்மாவுக்குரிய குறிக்கோள் ஒன்ருகவே இருப்பதாகத் தோன்றுகிறது. அனைவர்க்கும் ஒரு கருத்தே, அது விடுதலையே. மனிதன் எல்லையற்றவன்; இப்போதைய நிலையிலுள்ளதான எல்லை அவனது இயல்பன்று. ஆனல், இந்தக் கட்டுப்பாடுகளுக்குள் இருந்துகொண்டே அவன் போராடி மேல்நோக்கியும் முன்நோக்கியும் சென்று, எல்லையற்றதும் முடிவற்றதும் ஆன அதன் இயல்பை, தன் பிறப்புரிமையை அடைகிருன். நம்மைச் சுற்றிலும் நாம் காணும் இந்தச் சேர்க்கைகளும், மறு சேர்க்கைகளும் புறத் தோற்றங்களும் நமது நோக்கமோ குறிக்கோளோ அல்ல, நாம் செல்லும் வழியில் உள்ளவையேயாம். புவிகள், ஞாயிறுகள், மதிகள், விண்மீன்கள், சரி தவறு, நல்லது கெட்டது, சிரிப்பு கண்ணீர், இன்பம் துன்பம் என்ற இந்தச்சேர்க்கைகள், நமது ஆன்மா தன் நிறைவுற்ற இயல்பை வெளிப்படுத்தி, வரையறையை அறுக்க வழியான அனுபவங்களைப் பெறும் திறமையளித்தற்கேயாம். ஆதலால் இந்த ஆன்மா உள்ளியல்பு பற்றியோ வெளியில்பு பற்றியோ எழும் எவ்வகை நியதிகளுக்கும் பின்னர் கட்டுப்பட்டதன்று. இது எல்லா நியதிகளுக்கும், எல்லாக் கட்டுப்பாடுகளுக்கும் எல்லா இயற்கைக்கும் அப்பாற் சென்றுவிட்டது. பிரகிருதிதான் ஆன்மாவின் ஆட்சியில் வந்துள்ளதே ஒழிய, ஆன்மா, தான் இப்போது நினைப்பதுபோல, பிரகிருதியின் ஆட்சியில் இருப்பதில்லை; ஆன்மாவின் குறிக்கோள் இதுவே; அவ்விடுதலைக் குறிக்கோளையடையும் பொருட்டு இது பலபடிகள் வழியாகப் பல வகையாய் விரிந்து தோன்றிய முறைகளும், அதற்குத் தொடர்ந்து நிகழ்ந்த அனுபவங்களும், அனைத்தும் அதன் பிறவிகள் எனக் கருதப்படுகின்றன. ஆன்மா தாழ்ந்த ஓர் உடலை ஏற்று, அது வழியாகத் தன் இயல்பை வெளிப்படுத்த முயல்வதுபோலத் தோன்றுகிறது. அனுபவத்தில் இந்த உடல் அதற்குப் போதாது என்று கண்டு, அதை உதறிவிட்டு, இன்னும் உயர்ந்த ஒன்றை எடுத்துக்கொள்கிறது. இதன் மூலமாகத் தன்

இயல்பை வெளிப்படுத்த முயல்கிறது. இதுவும் தக்கதன்று என்று கண்ட ஆன்மா, இதையும் உதறிவிட்டு இன்னும் உயர்ந்த உடல் ஒன்றை மேற்கொள்கிறது. இப்படியே முன்னேறும் ஆன்மா, கடைசியில் ஒன்றில் உயர்வற உயர்ந்த நல்விருப்பங்களை நிறைவேற்றி விடுகிறது, அப்போது இது விடுதலை பெற்று விடுகிறது.

இப்போது எழும் வினா இதுதான் : ஆன்மா எல்லையற்றதும், எங்கும் நிறைந்ததும் எனின், அது அருவம் எனின், அப்படியே தானே இருக்கவேண்டும்?—அது பல உடல்களை எடுத்து ஒவ்வொன்றின் வழியாகச் செல்வதில் அடங்கிய கருத்து யாது என்பதே. அது யாதெனில், ஆன்மா வருவதும் போவதும் இல்லை, பிறப்பதும் சாவதும் இல்லை என்பதே. எங்கும் உள்ள ஒன்று பிறப்பது என்பதன் பொருள் என்ன? ஆன்மா உடலில் வாழ்வது என்பது பொருளற்ற பிதற்றல். எல்லையற்ற ஒன்று எல்லையுற்ற இடத்தினுள் நிற்பது எப்படி இயலும்? கையில் புத்தகம் வைத்துக்கொண்டிருக்கும் ஒருவன் ஒரு பக்கத்தைப் படித்துவிட்டுத் தாளைப் புரட்டி அடுத்த பக்கம் சென்று அதைப் படிக்கிறன்; மறுபடியும் தாளைப் புரட்டி இவ்வாறே மேற்செல்கிறன். புத்தகம் திருப்பப்படுகிறது. மாறுவன இதழ்களே, மனிதனுக்கு மாறுதல் இல்லை; அவன் இருந்த இடத்திலேயே இருக்கிறன். இது போன்றே ஆன்மாவின் தன்மையும். இந்தப் பிரகிருதி முழுவதுமே ஆன்மா படிக்கும் ஒரு புத்தகம் ஆகும். ஒவ்வொரு பிறவியும் இந்தப் புத்தகத்தின் ஒரு பக்கம் ஆகும். இதைப் படித்து முடித்தவுடன் திருப்பிவிட்டு இன்னொரு பக்கத்துக்குப் போகிறது; இப்படியே புத்தகம் முடியும் வரையில் நடக்கிறது. பிரகிருதி அனுபவங்கள் எல்லாவற்றையும் இப்போது பெற்றுவிட்டமையால், ஆன்மா நிறைவை அடைகிறது. ஆனால், இந்த ஆன்மா, என்றும் நிலையைவிட்டு நகரவில்லை; எங்கும் வரவும் போகவும் இல்லை, அது அனுபவங்களைப் பெற்று வந்ததேதான். ஆனால், நகர்வதுபோல நமக்குத் தோன்றுகிறது. பூமி நகர்கிறது; ஆனால், அதற்குப் பதில் கதிரவனே நகர்கின்றது என்று நாம் எண்ணுகிறேம். இது தவறு, புலன்களின் மயக்கம் என்பது நமக்குத் தெரியும். நாம் பிறக்கிறேம், சாகிறேம், வருகிறேம், போகிறேம் என்ற மயக்கமும் இதுபோன்றதுதான். நாம் வருவதும் போவதும் இல்லை, நாம் என்றும் பிறக்கவும் இல்லை. ஆன்மா எங்கே போக இயலும்? அது போவதற்கு இடம் ஏது? அது முன்னமே இல்லாத இடம் எது?

ஆக, 'பிரகிருதியின் பரிணாமமும் ஆன்மாவின் விரிவும்' என்ற கொள்கை உண்டாகிறது. இந்தப் பரிணாம முறைகளும், மேலும் மேலும் உயர்ந்த சேர்க்கைகளைப் பெறுதலும், ஆன்மாவில் இல்லை, ஆன்மா உள்ளபடியே இருக்கிறது. இந்த மாறுதல்கள் எல்லாம் பிரகிருதியில் இருக்கின்றன. பிரகிருதி, புதுப்புது உயர்ந்த இணைப்புகளால் முன்னேறிக்கொண்டு போகப்போக, ஆன்மாவின் காம்பீரியம் மேலும் மேலும் வெளித்தோன்றிக் கொண்டே போகிறது. இங்கே ஒரு திரை இருப்பதாகவும், அதற்குப் பின் ஆச்சரியமான ஒரு காட்சி இருப்பதாகவும் கருதுவோம். இந்தத் திரையில் உள்ள ஒரே ஒரு சிறு துவாரத்தின் வழியே பின்னே உள்ள காட்சியின் ஒரு சிறு பகுதியை மட்டுமே நாம் காண இயல்கிறது. இந்தத் துவாரம் பெரிதாவதாகக் கருதுவோம். துவாரம் பெரிதாக ஆக, காட்சியின் பகுதி தெரிவதும் அதிகம் ஆகிறது; திரை முழுவதுமே மறைந்துவிட்டால், நமக்கும் காட்சிக்கும் இடையே தடை ஒன்றும் இல்லை, காட்சி முழுவதையும் காண்கிறோம். இந்தத் திரைதான் மனிதனுடைய மனம். இதற்குப் பின் ஆன்மாவின் மேன்மை, தூய்மை, முடிவற்ற சக்தி இவை நிற்கின்றன. மனம் தெளிவு பெறப்பெற, தூய்மை பெறப்பெற, ஆன்மாவின் மேன்மை அதிகமாகப் புலப்படுகிறது; இங்கே ஆன்மா மாறுகின்றது என்பதன்று; மாறுவது திரைதான். ஆன்மா மாற்றம் இல்லாத ஒன்று, நித்தியமான, தூய, என்றும் ஆனந்தம் நிறைந்த ஒன்றும்.

முடிவான ஆன்மக் கொள்கை இதுதான்: உயர்ந்த உயிர்களிலிருந்து தாழ்ந்த மிகக் கெட்ட உயிர்கள் வரை, மிகச் சிறந்த மனிதர்கள் இடையேயும், நம் காலடியில் நெளியும் மிகத் தாழ்ந்த புழுக்கள் இடையேயும், ஆன்மா தூய்மையும், நிறைவும், எல்லையற்ற தன்மையும், ஆனந்த நிறைவும் பெற்றதாக இருக்கிறது. புழுவினிடம் அந்த ஆன்மா தன் உண்மை, ஆற்றல், தூய்மை இவற்றுள் அணுவளைய ஒரு சிறு பகுதியைத்தான் வெளிக்காட்டுகிறது; மனிதர்களுக்குள் சிறந்தவனிடத்திலோ அது பெரும் பகுதியை வெளிப்படுத்துகின்றது. வெளிப்படும் தன்மையின் இயல்பில் வேறுபாடு இல்லை, அளவிலேதான் வேறுபாடுள்ளது. எல்லா உயிர்களிலும் இருப்பது ஒன்றே ஆன தூய, நிறைவுற்ற ஆன்மாதான்.

சுவர்க்கங்களையும் பிற உலகங்களையும் பற்றிய கருத்துகளும் இருக்கின்றன; ஆனால், இவை இரண்டாம் பட்சம் என்றே எண்ணுகிறார்கள். சுவர்க்கம் என்ற கருத்தினை இழிவான

தென்றே கருதுகிறார்கள். இன்பம் துய்க்கும் இடம் ஒன்று வேண்டும் என்ற ஆசையிலிருந்தே அது கிளம்புகிறது. நமக்கு இப்போது கிடைக்கும் அனுபவத்தின் அளவுக்குள்ளேயே பிரபஞ்சம் முழுவதையும் நாம் அடக்கிவிட விரும்புகிறோம். பிரபஞ்சத்தில் குழந்தைகளே நிறைந்திருப்பதாகக் குழந்தைகள் எண்ணுகிறார்கள். பைத்தியக்காரர்கள், உலகத்தை ஒரு பைத்தியக்கார மருத்துவசாலை என்றே எண்ணுகிறார்கள், இப்படியேதான் ஒவ்வொருவரும். எவருக்கு உலகம் வெறும் புலன் இன்ப அனுபவமாகவே இருக்கிறதோ, எவருடைய வாழ்க்கை உண்பதும் உறங்குவதுமாகவே கழிகிறதோ, விலங்குகளின் வாழ்க்கைக்கும் அவ்வாழ்க்கைக்கும் வேறுபாடு மிகச் சிறிதோ, அவர்களே—இவ்வாழ்வு குறுகியதாதலின்—இத்தகைய இன்பங்கள் இன்னும் அதிகமாகக் கிடைக்கும் இடங்களைப்பற்றி எண்ணுகிறார்கள். முடியாதவற்றை அங்கே நீடித்து அனுபவிக்கலாம் என்பது அவர்கள் எண்ணம். சிற்றின்பம் அனுபவிக்கும் அவர்களது ஆசைக்கு அளவில்லையாதலின், தடையில்லாமல் இந்த இன்பங்களை நுகரக்கூடிய இடங்களைப்பற்றி அவர்கள் நினைப்பது இயல்பு. இத்தகைய இடங்களுக்குப் போக விரும்புபவர்கள் அங்கே போகத்தான் வேண்டும் என்பதையும் நாம் பின் காண்கிறோம். அவர்கள் கனவு காண்பார்கள்; இந்தக் கனவு முடிந்தவுடன் மிகுதியாக இந்த இன்பம் கிடைப்பது போன்ற இன்னொரு கனவு தொடரும். இந்தக் கனவும் வந்து மறைந்துவிட்டால் பிறகு வேறு எதையாவது பற்றி எண்ணவேண்டும். இப்படியே இவர்கள் கனவுக்குக் கனவு தாவிய வண்ணம் இருப்பார்கள்.

இப்போது முடிவான கொள்கை ஆன்மாவைப்பற்றிய வேறு ஒரு கருத்தும் எழுகிறது. தன் இயல்பிலும், சாரத்திலும் ஆன்மா தூயது, நிறைவுற்றது என்றால், ஒவ்வோர் ஆன்மாவும் முடிவற்றது, எங்கும் நிறைந்தது என்றால், பல ஆன்மாக்கள் இருப்பது எப்படி இயலும்? முடிவற்ற பொருள்கள் பல இருப்பது இயலாதே! பல என்ற பேச்சை விடுவோம், இரண்டுகூட இருக்க இயலாதே! முடிவற்ற இரண்டு பொருள்கள் இருப்பின், ஒன்று மற்றொன்றை எல்லைக்குட்படுத்தும்; எனவே, இரண்டும் எல்லைக்கு உட்பட்டவை ஆகிவிடும். எனவே, முடிவற்ற பொருள் ஒன்றுதான் இருக்க இயலும்; எனவே, துணிகரமாக இந்தக் கடைசி முடிவுக்கு வருகிறோம். இருப்பது ஒன்றுதான், இரண்டல்ல என்பதே இந்த முடிவு.

இரண்டு பறவைகள் ஒரே மரத்தில், ஒன்று மேற்கிளையிலும்

மற்றென்று அடிக்கிளையிலுமாக உட்கார்ந்திருக்கின்றன ; இரண்டும் அழகு மிக்க சிறகுடையவை. ஒன்று பழங்களை அருந்துகிறது ; மற்றென்றோ அமைதியாகவும் பெருந்தன்மையாகவும் தன் சொந்தப் பெருமையில் மனங்குவிந்தபடியே இருக்கிறது. கீழ்ப்பறவை நல்லது கெட்டது ஆகிய பழங்களைத் தின்கிறது, புலன் இன்பங்களை அனுபவிக்கிறது. அது எப்போதாவது ஒரு கசப்புப் பழத்தை உண்ண நேர்ந்தவுடன் அது சற்று உயரப் போகிறது. அங்கிருந்து மேலே பார்த்து, அந்தப் பறவை நல்ல பழம் கெட்ட பழம் எதையும் பொருட்படுத்தாமல் தனக்குள்ளேயே இன்பம் கண்டு, தனக்கு வெளியில் எந்த இன்பத்தையும் நாடாமல் அமைதியாகவும் பெருந்தன்மையோடும் இருப்பதைக் காண்கிறது. அதற்கு அதுவே இன்பம். அதற்குமேலே தேட என்ன இருக்கிறது? கீழ்ப்பறவை மேற்பறவையைப் பார்த்து அதை அணுக விரும்புகிறது. அது இன்னும் சற்று உயரச் செல்கிறது. ஆனல், பழைய வாசனைகள் அதைத் தாக்குகின்றன ; அதனல், அது அதே பழங்களைத் தின்னத் தொடங்குகிறது. மறுபடியும் அருங்கசப்பான ஒரு பழத்தைத் தின்ன நேருகிறது. ஓர் அதிர்ச்சி ஏற்பட்டு, மறுபடியும் மேலே பார்க்கிறது. அங்கே முன்போலவே அமைதியாகவும் பெருந்தன்மையோடும் இருக்கிறது அந்தப் பறவை. கீழ்ப்பறவை அதன் பக்கத்துக்குப் போகிறது, திரும்பவும் பழைய வாசனை அதைக் கீழே இழுக்கிறது. திரும்வும் தித்திப்புப் பழங்களையும் கசப்புப் பழங்களையும் தின்னத் தொடங்குகிறது. திரும்பவும் அருங் கசப்பான பழம் கிடைக்கிறது ; பறவை மேலே பார்த்து, இன்னும் நெருங்குகிறது. இப்படியே இது பக்கத்தில் போகப் போக, மேற்பறவையின் ஒளி இதன்மேற்பட்டுப் பிரதிபலிக்கிறது. இதனுடைய இறக்கை, மறையத் தொடங்குகின்றது. இது மேலுள்ள பறவையைப் போதியவாறு நெருங்கிவிட்ட உடனே, காட்சியே மாறிவிடுகிறது. கீழ்ப்பறவை என்றும் இருக்கவில்லை ; எப்போதும் இருந்தது மேல் பறவை ஒன்றுதான். கீழ்ப்பறவை என அது கருதியது, மேற் பறவையின் பிரதிபிம்பமே ஆகும்.

ஆன்மாவின் இயல்பு இதுதான். இந்த மனித ஆன்மா புல இன்பங்களையும், உலகப் பெருமைகளையும் நாடிச் செல்கிறது. விலங்குகளைப்போல இது புல இன்பங்களிலேயே வாழ்கிறது ; நரம்புத் தூண்டுதலால் ஏற்படும் கணச் சிற்றின்பங்களிலேயே திளைக்கிறது. இந்த வாழ்க்கையில் ஓர் அடி விழுந்தால், ஒரு

நொடிநேரம் தலை கிறுகிறுக்கிறது; எல்லாமே மறைந்துவிடத் தொடங்குகிறது. உலகம், தான் நினைத்தபடி இல்லை என்பதை யும், வாழ்க்கை அவ்வளவு சுகமானதன்று என்பதையும் உணர் கிறது. மேலே தன் பார்வையைச் செலுத்தி, ஒரு நொடிநேரம் எல்லையற்ற இறைவனைப் பார்க்கிறது; கம்பீரமான ஈசனது காட்சி தோன்றி மறைகிறது; சற்று அவனை நோக்கி நெருங்கு கிறது, ஆனால், பழைய வாசனைகள் அதைப் பின்னே இழுக்கின் றன. மற்றும் ஓர் அடி விழுகிறது; மறுபடியும் அது இறைவனை நோக்கித் திரும்பிவரச் செய்கிறது. எல்லையிலாத இறைவனது இருப்பை மீண்டும் ஒரு கணம் காண்கிறது, நெருங்குகிறது. மேலும் மேலும் அணுக, தன் தனி இருப்பு—தன் தாழ்ந்த சாதா ரணமான, தீவிர சுயநலம் உள்ள இருப்பு—அழிவதைக் காணத் தொடங்குகிறது. சிறியதான தனக்கு இன்பம் தேட உலகத் தையே தியாகம் செய்யும் ஆசை அழிகிறது. இன்னும் நெருங்க நெருங்கப் பிரகிருதியே கரைய ஆரம்பிக்கிறது. போதிய அளவு நெருங்கியதும் காட்சியே முற்றும் மாறிவிடுகிறது; தானே அந்த மற்றொரு பறவை என்பதும், நெடுந்தூரத்திலிருந்து தான் கண்ட இந்த முடிவற்ற பொருள் தானே என்பதும், தான் ஒரு கணம் கண்ட வியப்புமிக்க பெருமையும் அழகும் தானே என் பதும், தானே அந்த உண்மை என்பதும் விளங்குகின்றன. எல்லாப் பொருள்களிலும் உள்ள உண்மையை ஆன்மா அப் போது காண்கிறது. எது ஒவ்வோர் அணுவிலும் இருக்கிறதோ, எங்கும் இருக்கிறதோ, எல்லாவற்றுக்கும் சத்துப் பொருளாய் இருக்கிறதோ, இந்தப் பிரபஞ்சத்தின் முதற்பொருளாகுமோ, அதுவே நீங்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்; நீங்கள் சுதந்தரர்கள் என்பதை அறியுங்கள்.

ஆன்மாவுக்கு அழிவில்லையா ?

['நியூயார்க் காலை விளம்பரக்காரன்' என்னும் பத்திரிகையில் நடைபெற்று வந்த, இதே பொருளைப்பற்றிய வழக்குரைக்குச் சுவாமிகள் எழுதியளித்தது.]

"மாறுதல் இல்லாத ஒன்றை அழிக்கும் சக்தி யாருக்கும் இல்லை."

—பகவத்கீதை.

மஹாபாரதம் என்ற வடமொழிப் பெருங்காப்பியத்லே ஒரு கதை கூறப்படுகிறது. உதிட்டிரரைத் தருமதேவதை பின் வரும் கேள்வியைக் கேட்டது : "உலகத்தில் உள்ள எல்லாவற்றுள்ளும் வியப்பைத் தருவது எது ?" "தம் வாழ்வில் ஏறக்குறைய ஒவ்வொரு நொடியிலும் தம்மைச் சுற்றிலும் சாவை மக்கள் கண்டுகொண்டிருந்தாலும், தங்களுக்கு அழிவில்லை என்ற உறுதியான நம்பிக்கையை அவர்கள் விடாமல் பிடித்துக்கொண்டிருப்பதே மிக்க வியப்பைத் தருவது," என்று விடை கூறினர் அவர். உண்மையிலேயே மனித வாழ்வில் மிகவும் வியப்பைத் தருவது இதுதான். பல வேறு கொள்கை உடையவர்கள் பல வேறு சமயங்களில் இதற்கு மாருக வழக்குகளை எடுத்துரைத்திருந்த போதிலும், ஐம்புல வுலகம், புலனுக்கு எட்டாத உலகம் இவற்றுக்கு இடையே தொங்கும் இரகசியத் திரையைப் பகுத்தறிவால் துளைத்து உட்புக முடியாவிட்டாலும், தனக்குச் சாவே இல்லை என்ற உறுதியை அவன் முழுதும் பற்றி நிற்கிருன்.

நாம் வாழ்க்கை முழுவதும் ஆராய்ந்தாலும், வாழ்வும் சாவும் என்ற பிரச்சினையைத் தருக்கத்தால் உண்டு என்ருே இல்லை என்ருே நிரூபிக்கும் நிலைக்குக் கொண்டுவர நமக்கு இயலுவதில்லை. மனித இருப்பின் நிலையான தன்மையோ நிலையற்ற தன்மையோ, அதைத் தாங்கியோ எதிர்த்தோ நாம் எழுதலாம், பேசலாம், பிரசாரஞ் செய்யலாம், கற்பிக்கலாம். நாம் இந்த இரண்டு கட்சிகளில் ஒன்றின் தீவிரவாதிகளாகவும் மாறலாம்; நாம் நம் கொள்கைக்கு நூற்றுக்கணக்கான புதுப் பெயர்களைப் பின்னது முன்னதைவிடக் கடினமாயிருக்கும்படி அமைக்கலாம். இப்படியெல்லாம் செய்தபிறகு, இந்தப் பிரச்சினைக்கு முடிவான தீர்ப்பைக் கண்டு விட்டதாக மயங்கிச் சற்று நேரம் அமைதி பெற்றதாக எண்ணலாம். விசித்திர சில மூடச் சமயக்

கொள்கைகளையோ, மிக்க எதிர்ப்புக்குரிய மூட விஞ்ஞானக் கொள்கைகளையோ நம்முழுத் திறமையோடு பற்றி நிற்கலாம். ஆனாலும், முடிவிலே தருக்க அறிவாம் பௌல்ஸ் விளையாட்டில் அறிவுக் குச்சிகளை மீண்டும் மீண்டும் அடித்துத் தள்ளுவதற்கென்றே அவற்றை ஒவ்வொன்ருய் நிறுத்திக்கொண்டே போய், ஒழிவில் காலமெல்லாம் விளையாட்டயர்வதையே பார்க்கின்ருேம். இந்த மனப் போராட்டம் சித்திரவதை அனைத்துக்கும் பின்னால்—இவற்ருல் வெறும் விளையாட்டினும் மிக அபாயகரமான விளைவுகளும் ஏற்படுகின்றன—எதிர்க்கப்படாததும், முடியாத எதிர்க்க ஒண்ணுததும் ஆன ஓர் உண்மை நிற்கிறது. மஹாபாரதம் காட்டும் அந்த ஆச்சரியம், நமக்கு அழிவுண்டு என்பதை நம்மனம் நம்ப இயலாமையே. என் அழிவை நான் கற்பனை செய்துகொள்வதற்கும் நான் அருகிருந்து ஒரு சாக்ஷியாகப் பார்த்து நிற்கவேண்டும்.

விசித்திரமான இந்த நிகழ்ச்சியை அறிந்துகொள்ள முயலு முன், பிரபஞ்சம் முழுவதும் இந்த ஒரே உண்மையை ஆதாரமாகக்கொண்டு நிற்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். வெளியுலகத்தின் நிலையாமை, உள்ளுலகின் நிலையுடைமையோடு தடுக்க முடியாதபடி இணைந்துள்ளது. இந்த இரண்டில் ஒன்று நிலையுற்றது; மற்ருென்று நிலையாதது என்று வாதாடும் பிரபஞ்சக் கொள்கை சரியானதுபோலத் தோன்றலாம். ஆனால், உள்ளுலகும் வெளி யுலகும் நிலையுற்றவை என்பது, செயலை எழச் செய்யும் காரணத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்ருக ஆகாதபோது, மனிதனது கருவியில் அறிந்து செய்யும் ஒரு செயலும் நடைபெற இயலாது என்பதை இந்தக் கொள்கைவாதியே கண்டு கொள்வான். மனிதனுடைய மனம், கட்டுப்பாட்டை மீறி அப்பால் சென்றவுடன், முன் கண்ட இரண்டும் மாறிப் பகுபடாத ஒன்றையே காண்கிறது என்பது முற்றும் உண்மை; ஆனாலும், வரையறையற்ற உலகின் இப்புறத்தில், காணப்படும் பிரபஞ்ச முழுவதும்—அதாவது நாம் அறிந்த உலகம்—காண்பானுக்காகவே இருப்பதாக நமக்குத் தெரிகிறது, அவ்வாறு தான் தெரியவும் இயலும். ஆதலால் காண்பவனின் அழிவைக் கருத இயலுமுன், காணப்படும் பொருளின் அழிவைப்பற்றிக் கருதியே தீர வேண்டும்.

இதுவரையில் தெளிவாகவே இருக்கிறது; இனிமேலே தான் சிரமம் இருக்கிறது. சாதாரணமாக நான் என்னைப்பற்றி

உடலல்லாத வேறெதாகவும் நினைக்க இயலாதவனாகிறேன். எனது நிலையுடைமையைப் பற்றிய என்கருத்து என்னை உடலாக எண்ணும் கருத்தை உள்ளடக்கியதாகிறது. ஆனால், உடலோ நிலையற்றது என்பது வெளிப்படை, இயற்கை முழுதும் நிலையற்றது போலே, சதா மறைந்து வரும் ஒரு ராசிபோலே.

அப்படியானால், நிலையுடைமை எங்கே இருக்கிறது? நமது வாழ்வோடு தொடர்புள்ள மற்றோர் அரிய நிகழ்ச்சியும் இருக்கிறது. அதுதான் சுதந்தரம் என்ற எண்ணம்—அந்த எண்ணம் இல்லாவிட்டால், யாரால் வாழ இயலும்? யாரால் வாழ்வை ஒரு நொடி நேரம் அனுபவிக்க இயலும்?

இந்தக் கருத்தே அடியெடுத்து வைக்குந்தோறும் நம்மை வழி நடத்தி வருகிறது? நமக்கு இயக்கங்கள் இயலுமாறு செய்கிறது. நம்முள் ஒருவருக்கொருவர் கொள்ளும் உறவுகளை நிர்ணயிக்கிறது; அம்மட்டோ மனித வாழ்வு என்ற துணியின் ஊடும் பாவுமாய் நிற்பதும் இதுதான். தருக்க அறிவு இதை அங்குலம் அங்குலமாகத் தன்னிடத்தைவிட்டுத் துரத்த முயல்கிறது; தன் ஆட்சிக்கு உட்பட்ட எல்லையிலிருந்து ஒவ்வோர் இடமாகப் பறித்துக்கொள்கிறது; ஒவ்வோர் அடி வைக்கும் போதும், காரண காரியம் என்ற இரும்புத் தண்டவாளத்தால் அதை இறுகப்பிணைத்து விடுகிறது. ஆனால், அந்த முயற்சிகளைக் கண்டு அது சிரிக்கிறது! மூச்சைப் பிடித்துக் கொல்ல முயன்று நாம் சுமத்திய காரண காரியப் பெருங்குவியல்களுக்கெல்லாம் அப்பால் நிற்கிறது அது. அது வேறு வகையாக எப்படி இருக்க இயலும்? எல்லைக்கு உட்பட்ட பொருளுக்குத் தன்னை விளக்கிக்கொள்ள, எல்லைக்கு உட்படாத பொருளைப் பற்றிய ஓர் உயர்ந்த பொது உரை தேவைப்படுகிறது. கட்டுற்றதைக் கட்டற்ற ஒன்றுலுமே, உண்டாக்கப்பட்ட ஒன்றை உண்டாக்கப்படாத ஒன்றுலுமே விளக்க இயலும். ஆனால், இங்கும் அதே சங்கடம் இருக்கிறது. சுதந்தரமானது எது? உடலா, உள்ளமேதானு? இந்த இரண்டுமே பிரபஞ்சத்தின் மற்ற எப்பொருள்களைப்போலவே அதேயளவு நியதிக்குக் கட்டுப்பட்டவை என்பது அனைவர்க்கும் தேற்றம்.

இந்த பிரச்சினை இப்போது இந்த இடர்ப்பாட்டின் நிலையாக மாறிவிடுகிறது; ஒன்று, இந்தப் பிரபஞ்சம் முழுவதும், என்றும் ஓயாமல் நடைபெறும் மாறுதலுக்கு உட்பட்ட ஒரு தொகுதியளவே; காரண காரிய நியதிக்கு மீளா அடிமைப்பட்டது; இதன் ஒரு கூறும் தனக்கென ஒருமையற்றது, எனினும், நிலை

யுடைமையும் சுதந்தரமும் என்ற மயக்கத்தை ஒழிக்க முடியாத வாறு வியப்புற உண்டாக்கிக்கொண்டே இருக்கிறது எனல் வேண்டும், அன்றேல், நமக்குள்ளும் பிரபஞ்சத்துக்குள்ளும் நிலையானதும் சுதந்தரமானதுமான ஏதோ ஒன்று உள்ளது, மனித மனத்தின் அடிப்படையான, அமைப்பிலுள்ள நம்பிக்கை மயக்கமன்று எனல் வேண்டும். உண்மைகளை ஓர் உயர்ந்த பொது உரைக்கு உள்ளடக்கி விளக்குவது விஞ்ஞானத்தின் கடமை. விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்ட பொருளின் ஒரு பகுதியையே முதலில் அழித்து, மிஞ்சிய பகுதியொடு அதைப் பொருத்த விரும்பும் எவ்விளக்கமும் விஞ்ஞான முறைக்கு ஏற்றதாகாது, வேறு எதுவாயிருப்பினும் இருக்கட்டும்.

ஆக பிடிவாதமாயுள்ளதும் முழுதும் அவசியமும் ஆன இச் சுதந்தரக் கருத்தைப் புறக்கணிக்க விரும்பும் எவ் விளக்கமும், உண்மையின் ஒரு பகுதியை மறுத்து மிஞ்சியதை விவரிக்கும் முற்கூறிய தவற்றை இழைக்கின்றது; ஆதலின் அது பிழையாம். அவ்வாறுயின் இயன்ற ஒரே வேறு வழியாவது : சுதந்தரமான, நிலையான யாதோ ஒன்று நம்மிடம் உள்ளது என்பதை, நமது இயல்புக்கு இயைய ஒப்புக்கொள்வதேயாகும்.

ஆனால், இது உடல் அன்று; மனமும் அன்று. உடல் ஒவ்வொரு நிமிடமும் அழிந்த வண்ணம் இருக்கிறது. மனமோ ஓயாது மாறியவண்ணம் இருக்கிறது. உடல் ஒரு சேர்க்கை; மனமும் அப்படிப்பட்டதே; எனவே, மாறுதல்களுக்கு அப்பாற்பட்ட நிலையை இவை அடைய இயலாது. ஆனால், பருப்பொருளான இந்த நிலையற்ற உறைக்கு அப்பால், நுட்பமான மனம் என்ற உறைக்கும் அப்பால் இருக்கிறது ஆன்மா; இதுவே மனிதனது நிலையான, என்றும் சுதந்தரமான உண்மைத் தத்துவம். இதன் சுதந்தரமே நினைவாலும் பருப் பொருளாலும் ஆக்கப்பட்ட அடுக்குகளின் வழியாகக் கசிந்துவருகின்றது; நாம ரூபம் என்னும் வண்ணங்கள் இருப்பினும், தனது கட்டுருத இருப்பினை எப்போதும் வற்புறுத்திக் கொண்டே இருக்கின்றது. மிகவும் தடித்த அஞ்ஞான அடுக்குகளையும் ஊடுருவி இந்த ஆன்மாவின் அழிவின்மையும், ஆனந்தமும், அமைதியும், தெய்விகமுமே பிரகாசித்து, நாம் இவற்றை உணரும்படி செய்கின்றன. ஆன்மாதான் உண்மை மனிதன், பயமும் அழிவும் பந்தமும் அற்றவன்.

வெளிச் சக்தி எதுவும் பாதிக்க முடியாத போதும், எந்த மாறுதலையும் உண்டாக்க இயலாதபோதும்தான், 'சுதந்தரம்'

இருக்க இயலும். கட்டுப்பாடுகள் எல்லாவற்றுக்கும், எல்லா நியதிகளுக்கும், காரண காரியத் தளைகள் அனைத்துக்கும் அப்பால் நிற்கும்போதுதான் சுதந்தரம் அடைதல் இயலும். வேறு வகையாகக் கூறின், மாற இயலாத ஒன்றே சுதந்தரமாகவும், அதனால் அழிவற்றதாகவும் இருக்க இயலும். உள்ளதான இந்த ஆன்மா, மனிதனது இவ்வுண்மைத் தத்துவம், சுதந்தரமான மாற இயலாத இது கட்டுகளுக்கு அப்பாலானது; ஆதலால் இதற்குப் பிறப்பும் இறப்பும் இல்லை.

"பிறப்பு இறப்பு அற்றதாய், நித்தியமானதாய், என்றும் உள்ளதாய் இருப்பது இம் மனித ஆன்மா".

மறு பிறவி

[1895 மார்ச்சில் நியூயார்க் மெட்டபிஸிகல் மாகஸீனுக்கு (ஆன்மிகப் பத்திரிகைக்கு) எழுதிய கட்டுரை]

"நீயும் நானும் எத்தனையோ பிறவிகளை எடுத்திருக்கிறோம். அவற்றை நீ அறியாய், ஆனால், அவையனைத்தையும் நான் அறிவேன்.'' — பகவத்கீதை.

எல்லா நாடுகளிலும் காலங்களிலும் மனிதனின் அறிவைக் குழப்பி வந்திருக்கும் பல புதிர்களுள் மிகவும் சிக்கலானது அவனையேபற்றியதுதான். புரியாத பல்லாயிரம் புதிர்கள் முடிவு காணும்படி வரலாற்றுக் காலத் தொடக்கம் முதல் மனிதனது திறமைகளைத் தூண்டியிருக்கின்றன; இவற்றுள் மிகவும் சிக்கலான புதிர், அவனது இயல்பைற்பற்றியதே ஆகும். இது பெரிதும் முடிவு காணமுடியாத புதிர்; பிரச்சினைகளுள் எல்லாம் கடினமான பிரச்சினை. நாம் அறிவது, உணர்வது, செய்வது இவற்றுக்கெல்லாம் தொடக்கமாகவும், இவற்றின் களஞ்சியமாகவும் உள்ள நிலையிலே, மனிதனுடைய இயல்பு அவனது மிகச்சிறந்த பெருங்கவனத்தையும் கவராத காலம் ஒன்று என்றும் இருந்ததும் இல்லை; இனியும் இராது.

தன் இருப்போடு மற்றவற்றையெல்லாம்விட மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கும் 'உண்மையை அறியவேண்டும் என்ற பசி காரணமாகவும், வெளிப் பிரபஞ்சத்தை அளந்தறிய உள் அளவு ஒன்றைக் காணவேண்டும் என்ற, அனைத்தையும் விழுங்கும் பேராவல் காரணமாகவும், மாறிக்கொண்டே இருக்கும் பிரபஞ்சத்தில் நிலையான ஒரு புள்ளியைக் கண்டுபிடிக்க உள்ளிருந்தெழும் முழு அவசியம் காரணமாகவும், மனிதன் கையில் சில வேளைகளில் பொன்னுக்குப் பதிலாக ஒருபிடி புழுதியைப் பற்றியுள்ளான் என்றாலும், தருக்க அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியினால் தூண்டப்பட்டபோதும், மனிதன் தனக்குள் இருக்கும் தெய்விகத்தை உணரப் பலமுறை தவறியிருப்பினும், இந்தத் தேட்டம் தொடங்கியது முதல் இது வரையிலும் ஏதாவது ஓர் இனத்தாரோ, சில தனி மனிதர்களோ, உண்மைச் சுடர் விளக்கை உயர்த்திப் பிடியாத காலம் ஒன்று இருந்ததே இல்லை.

சுற்றுப்புறத்தையும் முக்கியமல்லாத விவரங்களையும் பற்றி ஏற்பட்ட ஒரு சார்பான, மேல்நோக்கான, ஆராயாது கொண்ட முற்கருத்தான அபிப்பிராயம் காரணமாகவும், பலவகைச் சமயங்கள், சமயப் பிரிவுகள் இவை போதிக்கும் கொள்கைகளின் உறுதியற்ற தன்மையைக் கண்டு ஏற்பட்ட வெறுப்புக் காரணமாகவும், ஓர் ஒழுங்கமைப்புற்ற புரோகிதக் குழுவின் தீவிர மூட நம்பிக்கைகளால் எதிர் கோடிக்குத் துரத்தப்பட்டும், பலர்—சிறப்பாக அறிஞருள்ளும் பலர்—இக்காலத்திலும் சரி, முற்காலத்திலும் சரி, இந்தத் தேட்டத்தைச் செயலற்ற நிலையிற் கைவிட்டதுமன்றி, அது பயனற்றது, வீணானது என்றும் கூறியிருக்கின்றார்கள். தத்துவ ஆராய்ச்சியாளர் எவ்வளவுதான் துடிதுடித்தாலும், எவ்வளவுதான் கேலி செய்தாலும், பூசாரிகள் கத்தி முனையால் அச்சுறுத்தித் தங்கள் தொழிலை நடத்தி வந்தாலும், உண்மை அதன் கோவிலில் தனக்காகவே பயம் இன்றியும் இலாபம் கருதாமலும் வழிபடுபவரையே வந்தடையும்.

தனி மனிதருக்கு ஞானவொளி அவரவர் தெரிந்து செய்யும் அறிவு முயற்சியாலேயே ஏற்படுகிறது; ஆனால், ஓர் இனம் முழுவதற்கும் அது மெதுவாகவும், அறியாது நிகழும் கசிவளவாகவுமே புகுகிறது. அவ்வப்போது தோன்றியுள்ள தத்துவ ஞானிகள் பேருள்ளங்களின் திண்ணிய முயற்சிகளுக்குச் சான்றாகிறார்கள். மக்கள் சமுதாயத்தில் உண்மை அரவமின்றிக் கசியும் முறையால் உட்கொள்ளப்படுவதை வரலாற்று நூல் வெளியிடுகின்றது.

தன்னைப்பற்றி மனிதன் கொண்டுள்ள கொள்கைகள் அனைத்திலும், உடம்புக்கு வேறான அழிவற்ற ஓர் ஆன்மப் பொருளே தான் என்ற கொள்கைதான் மிகப் பரவிநிற்பது. இத்தகைய ஆன்மா ஒன்றை நம்பியவர்களுள் சிந்தனையாளரான பெரும்பாலோர் அதற்கு முன் இருப்பு உண்டு என்பதையும் எப்போதும் நம்பியே வந்திருக்கின்றனர்.

இப்போதும், ஒழுங்கான அமைப்புடைய சமயங்களைப் பின்பற்றுபவர்களுள் பெரும்பாலோர் அதனை நம்புகின்றனர். ஆன்மாவின் 'முன் இருப்பு'ப் பற்றிய ஒவ்வொரு கருத்தையும் உறுதியொடு மறுக்கும் சமயங்களில் வளர்ந்து வந்தவர்களாயினும் நலம்மிக்க நாடுகளைச் சார்ந்த சிறந்த சிந்தனையாளர் பலரும் இந்த 'முன் இருப்புக்' கொள்கையை ஆதரித்துள்ளனர். இந்து மதத்துக்கும் புத்த மதத்துக்கும் அடிப்படைக் கொள்கையே

இதுதான். பழங்கால எகிப்தியர்களுள் படிப்பாளரான வகுப்பினர்களும் இதை நம்பினார்கள். தொன்மையான பாரசீகர்களும் இதே முடிவுக்கு வந்தார்கள். கிரேக்க தத்துவ விற்பன்னர்கள் தங்கள் தத்துவத்திற்கு ஆதாரமாகவே இதைக் கொண்டார்கள். ஹீப்ருக்களுக்கு உள் இனத்தவரான பாரசீகர்கள் இதை ஒப்புக்கொண்டார்கள். முஸ்லிம்களுக்குள்ளே ஸுபிகளில் கிட்டத்தட்ட அனைவரும் இதன் உண்மையை ஒப்புக் கொண்டனர்.

நாட்டு மக்களிடையே சிலவகையான நம்பிக்கைகளை உண்டுபண்ணவும் வளர்க்கவும் சிறப்பான சூழ்நிலைகள் இருக்க வேண்டும். உடம்பிலேனும் ஒருபகுதி சாவுக்குப்பின் இருக்கும். என்ற கருத்து ஏற்படுவதற்குக்கூடப் பழங்கால மக்களுக்குப் பல்லாயிர ஆண்டு அனுபவம் தேவைப்பட்டது. உடலுக்கு வேருக நின்று வாழும் இந்த ஏதோ ஒன்றைப்பற்றித் தருக்க பூர்வமான ஒரு கருத்து உருவாவதற்கு இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டன. உடம்போடு குறிப்பிட்ட ஒரு கால அளவுக்கு மட்டுமே தொடர்புகொள்ளும் ஒன்று உண்டு என்ற திண்ணமான அறிவு ஏற்பட்ட பிறகே இத்தகைய முடிவைப் பெற்ற நாட்டு மக்களிடையே மட்டும் விலக்க முடியாதபடி "எவ்விடத்திற்கு? எங்கிருந்து?" என்ற வினு எழுந்தது.

பழமையான ஹீப்ருக்கள் ஆன்மாவைப் பற்றிய கேள்விகளைத் தம்மிடம் எழுப்பித் தங்கள் மன அமைதியைக் கெடுத்துக் கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்த மட்டும் சாவே எல்லாவற்றுக்கும் முடிவு. "பைபிளின் பழைய ஏற்பாட்டில் (Old Testament) நாடு கடத்தப்படுவதற்கு (Exile) முந்திய பகுதியில் ஹீப்ருக்கள், உடலினின்றும் வேறுபட்ட உயிர்ச்சக்தி ஒன்றைப் பற்றிப் பேசுகிருர்கள் என்பதென்னவோ உண்மைதான்; இதை 'நெபேஷ்' (Nephesh) என்றும், 'ரூக்' என்றும் (Ruakh) என்றும், 'நெஷாமா' (Neshama) என்றும் வழங்குகிருர்கள். என்ருலும், இந்தச் சொற்கள் எல்லாம் 'மூச்சு' என்ற கருத்துக்குப் பொருத்தம் உள்ளனவாகத் தோன்றுகின்றனவே அன்றி, 'உயிர்ச்சத்து, ஆன்மா' என்ற கருத்துக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. நாடு கடத்தலுக்கு அப்பால் உள்ள பகுதியில் பாலஸ்தீன யூதர்கள் எழுதியுள்ளதிலும், தனிப்பட்ட அழியாத ஆன்மாவைப்பற்றியபேச்சையே காணவில்லை; ஆனல், இறைவரிடமிருந்து வந்த 'உயிர் மூச்சை'ப்பற்றிய பேச்சைத் தான் எப்போதும் காண்கிருேம். உடல் அழிந்தவுடன் இது தெய்

விக ரூக் (Ruakh) என்பதில் மீண்டும் கலந்துவிடுகிறது,'' என்று கார்ல் ஹெக்கல் (Karl Heckel) என்பவர் நியாயமாகச் சொல்கிறார்.

பழங்கால எகிப்தியர்களிடையேயும் சால்டியர்களிடையேயும் ஆன்மாவைப்பற்றிய விசித்திரமான சில சொந்தக் கொள்கைகள் இருந்தன. இறந்தபின் வாழும்பகுதியைப்பற்றிய அவர்களுடைய கருத்துகளை இந்துக்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், இவர்கள் போன்ற வேறு ஆரிய இனத்தாரின் கருத்துகளோடு தொடர்பு படுத்தி மனம் குழம்பக் கூடாது. ஆன்மாவைப்பற்றிய கருத்தில் ஆரியர்களுக்கும் வடமொழி பேசாத மிலேச்சர்களுக்கும் இடையே மிக பழங்கால முதலே ஒரு பெரிய வேற்றுமை இருந்தது. ஒவ்வோர் இனத்தாரும் தமக்குள் இறந்தவர்களின் உடம்புகளை என்னசெய்தார்கள் என்பது இந்தக்கருத்துக்கு வெளி விளக்கமாய் இருந்தது. மிலேச்சர்கள் இறந்த உடம்புகளைக் கவனமாகப் புதைப்பதாலோ, மருந்து எண்ணெய்ப் பூச்சுபோன்ற சிரமமான முறையாலோ அழியாமல் காக்க முயன்றுர்கள்; ஆரியர்களோ, பொதுவாக உடல்களை எரித்துவிட்டார்கள்.

இங்கேதான் ஒரு பெரிய இரகசியத்தை அறிய வழி இருக்கிறது. எகிப்தியர், அஸ்ஸிரியர், பாபிலோனியர் என்ற மிலேச்ச இனத்தார் எவருக்கும், உடலைச் சாராது வாழக்கூடிய தனிப் பொருளே ஆன்மா என்ற கருத்து, ஆரியர்களின்—முக்கியமாக ஹிந்துக்களின் — உதவியின்றி ஏற்படவில்லை என்பதே அது. ஹெரடோட்டஸ் (Herodotus) என்ற பெரியார், ஆன்மாவின் அழிவற்ற தன்மையை முதல் முதல் கருதியவர்கள் எகிப்தியர்களே என்கிறார். ''உடம்பு அழிந்த பின் இந்த ஆன்மா பிறக்கும் உயிர் ஒன்றின் உடம்பில் திரும்பத் திரும்பப் புகுகிறது; இப்படியே இது இவ்வுலகப் பிராணிகள், நீர்ப்பிராணிகள், பறவைகள் முதலிய எல்லா உடல்களுக்குள்ளும் புகுந்து அலைந்து முடிவாக மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்குப்பின் திரும்பவும் மனிதஉடலை அடைகிறது,'' என்பது எகிப்தியர்களின் கொள்கை என்றும் இவர் இயம்புகின்றார். என்றாலும், எகிப்திய நூல்களையும் கொள்கைகளையும் ஆராய்ந்த நவீன ஆராய்ச்சியாளரோ, ''எங்கும் வழங்கிவரும் எகிப்திய சமயத்தில் மறுபிறவிக் கருத்தின் சுவடும் காணப்படவில்லை,'' என்கின்றனர். மாஸ்பரோ-ஏ-எர்மன் (Maspero-A-Erman) என்பவரும் வேறு திறமை மிக்க எகிப்திய இலக்கிய ஆராய்ச்சியாளர்களும் மிகச் சமீபகாலத்திற் செய்த

ஆராய்ச்சியும் 'எகிப்தியர்களிடையே மறு பிறப்புக் கொள்கை வழங்கவில்லை,' என்ற உண்மையை வற்புறுத்த முயலுகிறது.

பழைய எகிப்தியர் கொள்கைப்படி ஆன்மா மறுபகுதிதான், அதற்குத் தனி இருப்பு ஒன்றும் இல்லை; வெளி உடலின் தொடர்பிலிருந்து விடுபட இதனுல் என்றைக்கும் இயலாது. உடல் எவ்வளவு காலம் நிலைத்திருக்குமோ, அவ்வளவு காலந்தான் அது நிலைத்திருக்கும். தற்செயலாக இறந்த உடல் அழிய நேர்ந்தால் வெளியேறிய ஆவி திரும்பவும் இறந்து அழிந்தே தீரும். இறந்தபின் ஆவி உலகம் முழுதும் சுதந்தரமாகச் சுற்ற அனுமதிக்கப்பட்டது; ஆனுல் இரவில் இறந்த உடல் இருக்கும் இடத்துக்கு எப்போதும் வந்துவிட வேண்டும்; இது என்றும் துக்கத்தோடும், பசியோடும், தாகத்தோடும் துன்புறுகிறது, இது திரும்பவும் வாழ்க்கையைச் சுவைக்க என்றும் மிகுந்த பேராவல் உள்ளதாய் இருக்கிறது; ஆனுல், இந்த ஆவல் ஒருபோதும் நிறைவேறுவதே இல்லை. பழைய உடலின் எந்தப் பாகத்துக்குக் கேடு நேரிட்டாலும், ஆவிக்கும் அதே பகுதியில் கேடு நேரிடும். பழங்கால எகிப்தியர்கள் இறந்தவரது உடலை அழியாமல் பாதுகாத்ததற்குப் பட்ட கவலையையெல்லாம் விளக்குவது இந்தக் கருத்தே. முதலில் அவர்கள் உடலைப் புதைக்கப் பாலைவனத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஏனெனில் அங்குள்ள வறண்ட காற்று உடல் விரைவில் அழிய இடங்கொண்டது. இதனுல், வெளிச் சென்ற ஆவிக்கு நெடுங்கால வாழ்வு கிடைத்தது. நாளாவட்டத்தில் உடலைச் சில மருந்துச் சரக்குகளால் பதப்படுத்தி வைக்கும் முறையை ஒரு தேவதை கண்டுபிடித்தது. இந்த முறைப்படி சமய பத்தர்கள் இறந்த தம்முன்னேர் உடல்களைக் கிட்டத்தட்ட அளவற்ற காலம் காப்பாற்றலாம் என நம்பினர். இதனுல், உடலை விட்டு விலகிய ஆவி எவ்வளவோ துயருற்றதாயினும் அழிவின்மையைப் பெறலாயிற்று.

தான் இனி சிரத்தைகொள்ள முடியாத உலகத்தைப் பற்றிய நித்திய ஏக்கம் இறந்தவனைச் சித்திரவதை செய்வது ஒருபோதும் நின்றதில்லை. "சகோதரரே, உங்கட்கு வேண்டாம் என்று, உணவையும் பானத்தையும்; குடியையும் காதலையும் எல்லா இன்பங்களையும் அல்லும் பகலும் உங்கள் ஆசையை நிறைவேற்றுவதையும் நிறுத்தி விடாதீர். நெஞ்சில் துக்கத்துக்கு இடமே கொடுக்கவேண்டா. உலகில்மனிதன் வாழ்வது எத்தனை ஆண்டுகள்? மேற்குநாடு தூக்கமும் கறுத்த நிழல்களும் நிறைந்தது. இங்கே குடியிருப்போர் ஒரு முறைஇங்கே அமர்த்

தப்பட்டால், மருந்து பூசிய உருவங்களில் தூங்கிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் தங்கள் சகோதரர்களைப் பார்க்க மறுபடி என்றும் எழுந்திரார். திரும்பவும் அவர்கள் தங்கள் தாய் தந்தையரைக் கண்டுகொள்ள மாட்டார்; அவர்கள், நெஞ்சம் தங்கள் மனைவி மக்களை முற்றும் மறந்துவிடும். பூமியில் வாழும் எல்லா மக்களுக்கும் அளிக்கும் ஓடும் தண்ணீர் என்னைப் பொறுத்தமட்டும் தேங்கி நிற்கிறது, செத்துள்ளது. பூமியில் வாழ்பவர்களுக்கெல்லாம் அந்த நீர் ஓடுகிறது; ஆனால், எனக்கோ, அது அழுகிக் கெட்ட நீராகிறது; எனக்குச் சொந்தமான நீர் அதே. இச் சவக்காட்டுக்கு நான் வந்த பிறகு நான் எங்கேயிருக்கிறேன் என்பதும், நான் என்ன என்பதுமே எனக்குத்தெரியவில்லை. குடிக்க எனக்கு ஓடும் நீரைக்கொடுங்கள். நீரின் ஓரத்தில் என்முகம் வடக்கு நோக்கி இருக்கும்படி என்னை அமர்த்துங்கள். மென்காற்று என் முகத்தை வருடட்டும்; என் நெஞ்சு துக்கந்தீர்ந்து புதுப்பிக்கப்படட்டும்,'' என்று உடலைப் பிரிந்தவன் புலம்புகிறுன்.

இறந்தபின் ஆவியின் நிலையைப் பற்றிச் சால்டியர்கள் எந்தவிதமான ஒரு கொள்கையையும் எகிப்தியர் செய்த அளவுக்கு ஏற்படுத்தவில்லை. என்றாலும், அவர்கள் கொள்கைப் படியும் ஆவி என்பது மறுபகுதிதான்; கல்லறையோடு கட்டுப் பட்டதுதான். இந்த ஊன் உடம்பற்ற ஓர் இருப்பை அவர் களாலும் நினைக்க இயயவில்லை. பிணம் திரும்ப உயிர் பெற்றெழும் என்று அவர்கள் நம்பினுர்கள். அவர்களின் பெண் தெய்வமான இஷ்டார் எத்தனையோ அபாயங்களுக்கும் வீரச் செயல்கட்கும் பின்னர் ஈயாவுக்கும் டாம்கினுவுக்கும் மகனும், இடையனுமான தன் கணவன் தூமிழியை உயிர் பெறச் செய்தாள். ஆனால், ''மிகச் சிறந்த பக்தர் பலர் கோயில் கோயிலாகச் சென்று தம் நண்பர்களைப் பிழைக்கும்படி வேண்டியது பயனற்றதாயிற்று.''

ஆக, பழங்கால எகிப்தியர்களோ சால்டியர்களோ தங்களது ஆவிக் கருத்தை இறந்தவர்களின் உடலினின்றும் கல்லறையி னின்றும் முழுதும் விடுவிக்க ஒரு நாளும் இயலாதவராயினர் என்பது காணப்படுகிறது. உலக வாழ்வுதான் எப்படியும் சிறந்த வாழ்வு. அதைத் திரும்பவும் அடையும் வாய்ப்பைப் பெறத்தான் இறந்தவர்கள் சதா ஏங்குகிறுர்கள். இந்த ஏக்கத்தால் இடை யருது துயருறும் மறு பகுதிக்குத் தங்களாலான உதவியை எல்லாம் செய்து அதன் ஆயுளை நீடிக்கச் செய்வதற்கு உதவ உயி ரோடிருப்பவர்கள் நெஞ்சார ஆசைப்படுகிறுர்கள்.

இத்தகைய நிலத்திலே ஆன்மாவைப் பற்றி உயர்ந்த கொள்கை ஒன்றும் உண்டாகாது. முதலாவதாக, இது முற்றும் இலௌகிகமானது; அந்நிலையிலும், பயமும் துயரமுமே உள்ளதாகிறது. கிட்டத்தட்டக் கணக்கற்ற தீய சக்திகளாலும், காரணமாக, அவற்றை விலக்கும் பொருட்டு இயற்றும் முயற்சிகள் வெற்றிபெற வகையின்றித் துயரம் விளைத்தலாலும் பயமுறுத்தப்பட்டு—இறந்தவர்களின் ஆன்மாக்களைப் பற்றிய தங்கள் கருத்துகளைப் போலவே, உயிரோடு வாழ்பவர்களின் ஆன்மாக்களும் உலகம் முழுவதையும் சுற்றிய வண்ணம் இருக்கின்றன; எனினும், இவர்களால் சமாதிக்கும், அழியும் பிணத்துக்கும் அப்பால் போக ஒருபோதும் இயலுவதில்லை.

ஆன்மாவைப் பற்றிய உயர்ந்த கருத்துகளின் உற்பத்திக்கு நாம் வேறு இன மக்களைப் பார்க்க வேண்டும். இவர்களின் இறைவர், கருணை நிறைந்தவர், எங்கும் பரந்தவர், ஒளிமிகுந்த, நல்லவர்களான மக்களுக்கு உதவும் பல தேவதைகளின் வழியாகத் தோற்றம் அளிப்பவர்; இவர்களே இறைவரைத் 'தந்தையே' என்று அழைத்த முதல் மக்கள் இனத்தவர்கள் ஆவார்கள்; "தந்தை ஒருவன் தன் மகனது கையைப் பிடித்து அழைத்துச் செல்வதைப் போல என்னையும் நீ வழிகாட்டி அழைத்துச் செல்லுக," என்பது இவர்கள் வேண்டுகோள்; இவர்கள் கொள்கைப்படி மனித வாழ்க்கையில் நம்பிக்கைக்கு இடமுண்டு, செயலற்ற நிலைக்கு அன்று; வாழ்க்கை வெறியுள்ள பரபரப்பு வாழ்க்கையில் இடையிடையே வெந்துயருழக்கும் மனிதனது வாயினின்றும் விட்டுவிட்டு எழும் துன்ப முணுமுணுப்பு அன்று, இவர்கள் மதம்; வயல்கள், காடுகள் இவற்றின் நறுமணங்கமழ இவர்களின் கருத்துகள் நம்மை அடைகின்றன; இவர்களுடைய துதிப்பாடல்கள்—பகலவன் வீசும் முதற்கதிர்களால் ஒளிபெறும் அழகிய இவ்வுலகைப் பறவைகள் வரவேற்கும்போது, அவற்றின் தொண்டைகளினின்றும் வெடித்தெழும் பாடல்களைப் போல—தாமாகவே, சுதந்தரமாக இன்ப நிறைவோடு எழுந்தனவாகி, எண்ணாயிரம் ஆண்டுகளின் தொகுதிக்கு ஊடேயும் புகுந்து புதியனவாக இறை உலகத்திலிருந்து வரும் பாடல்களைப் போலவே, இன்றைக்கும் வந்தடைகின்றன. இந்த மனித இனந்தான் பழங்கால ஆரியர் இனம்.

"சாவும் அழிவும் இல்லாத, பரஉலக ஒளியும் நித்திய சோதியும் வீசுகின்ற அந்த உலகத்தில் என்னைவிட்டுச் செல்லுங்கள்."

"அரசனாகிய விவஸ்வானின் மகன் வாழும் உலகிலே, இறைவனது

மறைவான கோயிலுள்ள உலகிலே, என்னை அமரனுக்குங்கள்'' ''விருப்பப்படியே அவர்கள் செல்லும் உலகத்தில் என்னை அமரனுக்குங்கள்.'' ''இறை உலகின் உட்பகுதியின் மூன்றும் மண்டலத்திலே, ஒளி நிரம்பிய உலகங்கள் உள்ள அவ்விடத்தே, அப்பேரின்ப உலகிலே என்னை அமரனுக்குங்கள்.''—இவைகளே ஆரியர்களின் மிகமிகப் பழைய நூலாகிய இருக்கு வேத சங்கிதையிற் காணப்படும் பிரார்த்தனைகள்.

மிலேச்சர்களின் இலட்சியங்கட்கும் ஆரியர்களின் இலட்சியங்கட்கும் இடையே உள்ள வேற்றுமை ஞாலம் முழுதும் போன்று பெரிதாய் இருப்பது இப்போது தெரிகிறது. முன்னவர்க்கு (மிலேச்சர்) இந்த உலகமும் இந்த உடலுமே எல்லா உண்மையும், விரும்பத்தக்கவை யாவும். சாகும் சமயம் உடலைவிட்டுப் பறந்து போகும், ஒரு சிறிது உயிர்ச்சத்து ஐம்புல இன்ப நுகர்ச்சியை இழந்து அல்லலும் ஆரிடரும் உழக்கும் அது, பிணத்தை அழியாமல் காப்பாற்றினுல் அதனிடம் மீளும் எனப் பேதைமையொடு அவர்கள் நம்புகிருர்கள். அதனுல் உயிருள்ள மனிதனினும் பிணமே அதிக கவனத்திற்கு உரிய பொருளாயிற்று. பின்னவரான ஆரியரோ உடம்பைவிட்டுச் சென்றது எதுவோ, அதுவே உண்மை மனிதன் என்றும், உடலில் இருக்கும்போது அனுபவித்த இன்பத்தைவிடப் பலமடங்கு உயர்ந்த இன்பம் அதற்கு உடலை விட்டபின் கிடைக்கிறது என்றும் ஆரியர்கள் கண்டார்கள். எனவே, அழுகும் பிணத்தை எரித்து அழிக்க அவர்கள் விரைந்தார்கள்.

இதிலேதான் ஆன்மாவைப் பற்றிய உண்மைக் கருத்து எழுவதற்கு வேண்டிய கருவைக் காண்கிறேும். உண்மை மனிதன், உடல் அல்லன். ஆன்மாவே என்றும் உண்மை மனிதனுக்கும் உடலுக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத தொடர்பைப் பற்றிய கருத்துகள் யாவும் இல்லை என்றும் கண்ட இடத்தில்தான் ஆன்மாவின் சுதந்தரம் பற்றிய மேன்மையான கருத்து கிளம்ப இயலும். ஆரியர்கள் இறந்த ஆவியை மூடிய உடல் என்றும் ஒளிரும் ஆடையை ஊடுருவி அப்பாற் சென்று உருவமற்ற, தனியான ஆன்மாவை மூலப் பொருளாம் அதன் மெய்யான இயல்பைக் கண்டபோதே, 'இது எங்கிருந்து வந்தது?' என்ற வினு தடுக்க முடியாதவாறு எழுந்தது.

ஆன்மாவின் முன் இருப்பு, அழிவின்மை, தனித்தன்மை என்னும் கொள்கைகள் முதன்முதலாகத் தோன்றியது இந்தியாவில் ஆரியர்களிடந்தான். இவ்வுலக வாழ்வெனும் பகுதிக்கு முன்

னும் பின்னும் உள்ள ஒரு சுதந்தரமான ஆன்மாவினைப் பற்றிய கொள்கைகளின் சுவடே எகிப்தில் தென்படவில்லை என்பது புது ஆராய்ச்சியாளரின் முடிவாகும். அந்நாட்டு இரகசியசமயக்கிரியை களில் சிலவற்றில் இந்த ஆன்மக் கருத்து இருந்தது என்பது உண்மை; ஆனால், அது இந்தியாவிலிருந்தே அங்கே சென்றது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"நாம் எகிப்திய மத ஆராய்ச்சியில் ஆழமாகச் செல்லும் அளவுக்கு ஏற்ப, பலர்க்குள்ளும் பரவியிருந்த எகிப்திய சமயத் திற்கு மறுபிறப்புக் கொள்கை முற்றிலும் அன்னியமானது என்பதும், தனி இரகசியக் கிரியைகளிற் காணும் அதுவும் ஆஸிரிஸ் என்பாரின் போதனைகளில் அடங்கியதாகாது, இந்து சமய நூல்களை மூலமாக உடையது என்பதும் அதிகமாகத் தெளி வாகிறது என்பது உறுதி'' என்று கார்ல் ஹெக்கல் என்ற அறிஞர் கூறுகிறார்.

பிற்காலத்தில் அலெக்ஸாந்திரியா நாட்டு யூதர்களிடம் தனித் தன்மை வாய்ந்த ஆன்மாவைப் பற்றிய கொள்கை இருந்தது; இயேசுநாதர் காலத்துப் பாரிஸிகளும் முற்கூறியவாறே, தனித் தன்மை வாய்த்த ஆன்மா ஒன்று உண்டு என்று நம்பியதோடல்லா மல், அது பல உடல்களுக்குள் புகுந்துபுகுந்து பிரயாணம் செய் கிறது என்பதையும் நம்பினார்கள்; ஆகவே, கிறிஸ்து நாதர் முன்னைய தீர்க்கதரிசி ஒருவரின் மறுபிறப்புஎன ஒப்புக்கொள்ளப் பட்டதும், 'எலியாஸ் என்ற தீர்க்கதரிசியேதான் மறுபிறவியில் ஜான் என்ற பேப்டிஸ்டு' ஆனார் என்று இயேசுநாதரே நேராகச் சொன்னதும் எளிதாயின எனக் காண்கிறோம். "நான் சொல்வதை ஏற்றுக்கொள்வீரேல், வருவதாக எதிர்பார்த்த எலியா என்பவர் இவரே'' (மத்தேயு, XI : 14)

ஆன்மாவையும் அதன் தனித்தன்மையையும் பற்றிய கருத்துகள் ஹீப்ரூக்களுக்கு வந்தது, எகிப்தியரின் உயர்ந்த அனு மதி பற்றிய உபதேசங்கள் மூலம் என்பது வெளிப்படை; இந்த எகிப்தியர்களுக்கு இந்தக் கருத்து இந்தியாவிலிருந்து கிடைத் தது. இந்தக் கருத்து அலெக்ஸாண்டிரியா வழியாக எகிப்தை அடைந்தது என்பது கவனத்திற்குரியது; காரணம் யாதெனின், அலெக்ஸாண்டிரியாவிலும், ஆசியா மைனரிலும் பௌத்தமதப் பிரசாரம் இருந்தது என்பதற்குப் பௌத்த நூல்களில் தெளிவான சான்று இருக்கிறது.

ஹெல்லெனிஸ் என்பவர்களுக்கு மறுபிறப்புக் கொள்கையைப் பற்றி முதல் முதல் போதித்தவர் பைதகோரஸ் (Pythagoras)

என்ற கிரேக்கர் என்று சொல்கிறார்கள். பிணங்களை எரிக்கும் பழக்கமும், தனித்தன்மை உள்ள ஆன்மாவில் நம்பிக்கையும் உள்ள ஆரிய இனத்தவராகிய கிரேக்கர்களுக்கு, பைதகோரஸ் உபதேசித்த மறுபிறப்புக் கொள்கையை ஒப்புக்கொள்வது எளிதாயிற்று. இந்தியாவுக்குச் சென்ற பைதகோரஸ் அந்தணர்களிடமிருந்து இப்போதனையைப் பெற்றார் என்று அபூலியஸ் (Apuleius) என்பவர் சொல்லுகிறார்.

இதுவரை நாம் அறிந்து கொண்டவை யாவன: எங்கெல்லாம், ஆன்மாதான் தனிப்பட்ட உண்மை மனிதன் என்றும், உடம்புக்கு உயிரளிக்கும் பகுதி மட்டும் அன்று என்றும் கருதப்பட்டதோ, அங்கெல்லாம், அதன் முன் வாழ்வைப்பற்றிய கொள்கையும் தடுக்க முடியாதவாறு பரவியே இருந்தது. ஆன்மாவின் சுதந்தரமான தனித் தன்மையையும் இருப்பையும் நம்பி வந்த மக்கள் இறந்தவரின் உடல்களை எரிப்பதால் கிட்டத்தட்ட எப்போதும் தம் கொள்கையை வெளிக்காட்டினார்கள். ஆனால், பழைய ஆரிய இனத்தாரின் ஒரு பகுதியினரான பாரசீகர்கள் மட்டும் நெடுங்காலத்துக்கு முன்னமே ஸெமிட்டிக் இனத்தாரது ஆட்சிக்கு உட்படாமலே, மரித்தவரின் உடல்களை ஒழிப்பதற்கான ஒரு புது முறையைக் கண்டுபிடித்திருந்தனர். அவர்கள் "மௌன கோபுரங்கள்" (Towers of silence) என்பதன் பாரசீகப் பெயர் தக (Daha)—எரிப்பது—என்ற மூலத்திலிருந்து தோன்றியதே ஆகும்.

சுருங்கச் சொல்லின் தம் சொந்த இயல்பைப் பகுத்தறிவதில் பெருங் கவனம் செலுத்தாத மக்கள் இனத்தார், பௌதிக உடலே தமது எல்லாமும் என்ற கருத்திற்கு அப்பால் ஒருபோதும் சென்றறியார்; சற்று உயர்ந்த அறிவொளியால் உந்தப்பட்டுத் துளைத்து அப்பால் சென்றவர்களும், எப்படியோ, நீண்ட காலத்திற்குப் பிறகு என்றோ ஒரு நாள், இந்த உடலே அழியா நிலையைப் பெற்றுவிடும் என்ற முடிவுக்கே வந்தார்கள்.

இதற்கு மாறாக, மனிதன் சிந்திக்கும் உயிரான நிலையிலே, அவனது இயல்பைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே தம் சக்தியின் மிகச் சிறந்த பகுதியைச் செலுத்திய இந்தோ-ஆரிய இனத்தார், இந்த உடலுக்கு அப்பால், தங்கள் முன்னோர்கள் பெற விரும்பிய ஒளிமிக்க உடலுக்கும் அப்பால், உண்மை மனிதன் ஆகிய தத்துவம்—இந்த உடலைச் சில காலம் ஆடையாகக் கொண்டு இது சிதைந்தபின் இதை உதறிவிட்டுச் செல்லும் ஒன்று—இருப்பதை

விரைவில் கண்டனர். இந்தத் தத்துவம் படைக்கப்பட்டது தானு? சூனியத்திலிருந்து ஏதோ ஒன்று தோன்றுவதுதான் படைப்பு எனின், இல்லை என்பதே அவ்வினுவுக்கு அவரது அழுத்தமான விடை. இந்த ஆன்மாவுக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை; இது சேர்க்கையோ, கூட்டோ அல்லாத, சுதந்தரத் தனிப் பொருள் ஆதலின், இதைப் படைக்கவோ, அழிக்கவோ இயலாது. இது பல நிலைகள் வழியாகச் செல்கிறது என்பதே.

"இவ்வளவு காலமாக இது எங்கிருந்தது?" என்ற கேள்வி இங்கு இயல்பாக எழுகின்றது; இதற்கு இந்தியத் தத்துவ அறிஞர்கள், "பௌதிக நிலையிற் பார்த்தால் அது பல உடல்கள் வழியாகச் சென்று கொண்டிருந்தது, உண்மையைத் தத்துவ நூல் முறையிற் சொல்வோமாயின் அது பல்வேறு மன உலகங்கள் வழியாகச் சென்று கொண்டிருந்தது" என்று விடை கூறுவர்.

வேத அறிவுரைகள் அல்லாத வேறு ஆதாரங்கள், இந்து தத்துவ அறிஞர்களின் மறுபிறப்புக் கொள்கைக்கு உண்டா? உள்ளன; உலகம் முழுவதும் ஒப்புக்கொண்ட வேறு கொள்கைக்கும் உள்ளது போன்று அவ்வளவு நியாயமான ஏதுக்கள் இதற்கும் உண்டு என்பதைப் பின்னுல் காட்டுவோம். இக்கால ஐரோப்பியச் சிந்தனையாளர்களுள் மிகச் சிறந்த சிலர் மறுபிறப்பைப் பற்றி என்ன சொல்லியிருக்கின்றனர் என்பதை முதலில் பார்ப்போம்:

ஆன்மாவின் அழியாத் தன்மையைப் பற்றிப் பேசும்போது ஐ. எச். பிக்டே (I. H. Fichte) என்பவர் பின்வருமாறு சொல்கிருர்.

"அதன் தொடர்ந்த வாழ்விற்கு மறுப்பாக இயற்கையில் ஓர் உபமானம் காட்டலாம் என்பது உண்மையே. ஒரு காலத்தில் தொடக்கமுள்ள எதற்கும் பின் ஒரு காலத்தில் முடிவு உண்டு என்பது எல்லோரும் அறிந்த நியாயம். இதனுல், ஆன்மா கழிந்த காலத்தில் இருந்ததை ஒப்புக்கொள்வது, அதன் முன்னைய இருப்பை அவசியம் ஒப்புக்கொள்வதாகிறது. இது நியாயமான முடிபே; ஆனுல், இது ஆன்மாவின் தொடர்ந்த இருப்புக்கு மறுப்பாகாது, இன்னெரு வழக்காவது என்றே சொல்லவேண்டும். உண்மையில் எதனையும் ஆக்கவோ அழிக்கவோ இயலாது என்னும் தத்துவ இயல்—உடலியல் பற்றிய தெற்றுண்மையின் முழுப் பொருள் மட்டும் ஒருவர் அறிவாராயின் ஆன்மா பௌதிக

உடலில் வெளிப்படுவதற்கு முன்பே இருந்திருத்தல் கட்டாயம் என்பது அவர்க்கு விளங்கும்.''

ஷோப்பனேர் (Schopenhauer) என்பவர் தாம் எழுதிய ''டை வெல்டு அல்ஸ் வில்லே உண்டு வோர்ஸ்டெலங்க'' (Die welt als wille und Vorstellung) என்ற நூலில் மறு பிறவியைப்பற்றிப் பேசும்போது சொல்வதாவது: ''ஒரு மனிதனுக்குத் தூக்கம் எப்படியோ, அப்படியேதான் சங்கற்பத்துக்குச் சாவு. அதற்கு நினைப்பும் தனித்தன்மையும் இருக்குமானால், கணக்கற்ற காலம் ஒரே மாதிரியான செயல்களையும் துக்கங்களையும் தொடர்ந்து ஏற்றுவருதல், எந்த இலாபமும் பெருமல், பொறுக்க இயலாது. எனவே, அது அவற்றை எல்லாம் உதறிவிடுகிறது; இதுதான் பெருந்தூக்கம். சாவாகிய இந்த உறக்கத்தின் வாயிலாக இது இன்னொரு அறிவு பெற்றுப் புது உயிராய் மீண்டும் தோன்றுகிறது; புதிய நாள் வரின் புதிய இடங்களுக்குச் செல்ல ஆசை எழுகிறது. ஆதலால் அடிக்கடி நிகழும் இந்தப் புதுப் பிறவிகளே சங்கற்பத்தின் தொடர்ச்சியான வாழ்க்கைக் கனவுகள் ஆகும்; ஆனால், இது பலமுறை உருவில் கிடைக்கும் அவ்வளவு அத்தகைய வேறுபட்ட தொடர்ச்சியான அறிவுபெற்று முன்னேறி முன்னேறித் தன்னைத்தானே ஒழித்து அழிக்கும்வரை இந்தச் சங்கற்பம் தானாகவே அழியும் இயல்புள்ளதன்று. இதுபோன்ற மறு பிறவி நிகழ்ச்சிக்கு உலகானுபவமே ஆதரவளிக்கிறது என்பதை அலட்சியம் செய்யக்கூடாது. உண்மையாகவே, புது உயிர்களின் பிறப்பிற்கும் தேய்ந்துபோன உயிர்களின் சாவுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. பலரை ஒரே சமயத்தில் அழிக்கும் கொள்ளை நோய்களின் பலனாக மனித இனத்தில் பெரு விருத்தி உண்டாவதை நாம் காண்கிறோம். 14ஆம் நூற்றாண்டில் 'கருஞ்சாவு' (Black Death) என்ற கொடிய பிளேகு நோய் 'பழைய உலகின் பல பகுதிகளில் மக்களே இல்லாமல் அழித்து ஒழித்துவிட்டது; அப்போது இதைத் தொடர்ந்து மனித இனத்தில் முற்றிலும் அசாதாரணமான பெருக்கம் காணப்பட்டது: இரட்டைக் குழந்தைகள் அடிக்கடி பிறந்தன. இந்தச் சமயத்தில் பிறந்த எந்தக் குழந்தைக்கும் எல்லாப் பற்களும் முளைக்கவில்லை என்பதும் ஒரு வியப்பான நிகழ்ச்சியே. ஆக இயற்கை, தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தினாலும், சிறு விஷயங்களில் உலோபம் செய்துவிட்டது. எப். ஸ்குனேரர். (F. Schnurrer) என்பவர் 1825-ல் தாம் எழுதிய 'க்ரானிக் டெர் ஸியூசென்'

('Chronik der Seuchen') என்ற நூலில் இப்படிச் சொல்கிருர். காஸ்பர் (Casper) என்பவரும் தாம் 1835-ல் எழுதிய 'உபர் டி வார்ஸ்ச்செனலிச்சி லெபனஸ்டார் டெஸ் மென்ஸ்சென் ('Ueber die Wahrscheinliche Lebensdauer des Menschen') என்ற நூலில் இவ்வுண்மையைப் பின்வருமாறு ஆமோதிக்கிருர் : 'மக்கள் சமுதாயம் ஒன்றில் குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஏற்படும் பிறப்பின் தொகையினுல் மக்கள் ஆயுளும் சாவின் அளவும் நிச்சயமாகப் பாதிக்கப்படும்; பிறப்பு எப்போதும் சாவின் அளவைப் பொறுத்தே நிகழ்கிறது,' என்பது இவர் கருத்து. எனவே, எப்பொழுதும் எங்கும் சாவுகளும் பிறப்புகளும் ஒரே விகிதத்தில் இறங்கவும் ஏறவும் செய்கின்றன. பல நாடுகளிலும் பல்வேறு மாகாணங்களிலும் இருந்து சேகரித்த சான்றின் மிகுதியால் சந்தேகமில்லாமல் இந்த உண்மையை இவர் மெய்ப்பித்திருக்கிருர். நான் இளமையில் சாவதற்கும், எனக்கு ஒரு வதைத் தொடர்பும் இல்லாத ஒரு மணத்தின் குலவிருத்தி தரும் இயல்புக்குமோ, தலைமாறிய உண்மைக்கோ உடலையொட்டிய காரண காரியத் தொடர்பு இருப்பது முடியாத காரியம். ஆக இதிலே உடலையொட்டிய ஒன்றுக்கு, நேர்முகமான அடிப்படையாகத் தத்துவ ரீதியான ஒன்று பேரளவிற்கு மறுக்கமுடியாதபடி இருப்பதாகத் தோன்றுகிறது. புதிதாகப் பிறந்த ஒவ்வோர் உயிரும் புதிதாகவும் களிப்போடும் புது வாழ்வுக்கு வருகிறது. இந்தப் புதுப் பிறவியை அது இலவசமான ஒரு கொடை (gift)யாகவே ஏற்று அனுபவிக்கிறது; ஆனுல், பிரபஞ்சத்தில் இலவசமாகக் கொடுபடுகிற, கொடுபடக் கூடிய பொருள் எதுவுமே இல்லை. தேய்ந்து மாய்ந்து அழிந்து போன பழைய ஓர் இருப்பின் மூப்பும் சாவும், அதன் புது வரம் பிற்கு விலையாகின்றன. ஆனுல் அழிந்துபோன அந்தப் பழைய வாழ்வில் இந்தப் புது வாழ்வு உண்டாவதற்குரிய அழியாத விதை ஒன்று இருந்தது ; அவை இரண்டும் ஒன்றே ஆகும்."

ஹ்யூம் (Hume) என்ற பெரியாரான ஆங்கிலத் தத்துவ அறிஞர், நாத்திகவாதியானுலுங்கூட அமர நிலையைப் பற்றிய ஐயவாதக் கட்டுரையில் இவ்வாறு கூறுகிருர் : "மறு பிறப்பு என்ற ஒரு வகைக் கொள்கைக்கு மட்டுமே தத்துவஞானம் செவி சாய்க்க இயலும்." லெஸ்ஸிங் என்ற தத்துவஞானியார் கவிஞனது உள்நோக்கோடு இவ்வாறு வினவுகிருர் : "இந்தக் கோட்பாடு மிகப் பழையது என்ற காரணத்தால் மட்டுமே, மனிதனது அறிவுத் திறன் பலவகைத் தவருன வாதியரின் கொள்கைகளால்

சிதறிப் பலவீனப்பட்டுப் போகுமுன், அக்கோட்பாட்டை உடனே கண்டது என்பதனாலே, இது அத்துணை நகைப்பிற்கு உரிய தாமோ ?...புது அறிவும் புது அனுபவமும் பெறும் திறமை என்னி டம் இருக்கும் வரையில் திரும்பத் திரும்ப நான் ஏன் பிறக்கக் கூடாது ? ஒரு முறையிலேயே—பிறவியிலேயே—நான் பேரறி வும் அனுபவமும் பெற்றுவிடுகிறேனா ? திரும்பப் பிறக்கும் துன்பத்துக்குக் பதிலாகப் பின்னால் ஒன்றுமே பெறமுடி யாதபடி யான் ஒரு பிறவியிலிருந்தே அவ்வளவையும் பெற்று விடுகிறேனா ?''

முன்னுள்ள ஓர் ஆன்மா பல பிறவிகளை எடுத்தல் என்ற கொள்கைக்கு ஆதரவாகவும் மறுப்பாகவும் எழுந்த வாதங்கள் பல ; எல்லாக் காலங்களிலும் தோன்றிய மாபெருஞ் சிந்தனை யாளரிற் சிலர் அதற்கு ஆதரவாகப் பேசுமாறு வாதப்போர்க்கும் இணங்கியுள்ளனர். நமது அறிவால் ஆராய்ந்தாலுங்கூட, தனித் தன்மையோடு கூடிய ஓர் ஆன்மா உண்டு என்றால், அதற்கு முன்னிருப்பு மறுக்க இயலாத உண்மையாகவே தோன்றுகிறது. ஆன்மா தனிப் பொருள் ஆகாத பல ஸ்கந்தங்களின் (கருத்துகளின்) கூட்டுப் பொருளே, என்று பௌத்தர்களில் ஒரு பகுதியாரான மாத்தியமிகர்கள் வற்புறுத்திக் கூறுவதை ஒப்புக் கொண்டாலும், அவர்களுக்கும் தங்கள் நிலையை விளக்க, ஆன்மாவின் முன் இருப்புக் கொள்கை தேவைப்படுகிறது.

காலத்தில் தொடக்கம் உள்ள ஒன்று முடிவற்றதாக இருப் பது இயலவே இயலாது என்ற நியாயத்துக்கு மறுப்பே இல்லை ; எனினும் இதை மறுப்பவர்கள், ''சர்வ சக்தி மயனான இறைவ னால் இயலாதது ஒன்றுமே இல்லை.'' என்று இதமாகச் சொல்லி, வழக்கை விலக்க முயன்றுள்ளனர் ; எந்த நியாய அறிவுக்கும் அது மாறாயிருப்பதையும் கருதார். இந்த மிகத் தவறான வழக்கு கள் மிகப் பெரிய சிந்தனையாளர் சிலரிடமிருந்தும் கிளம்புவதைக் கண்டு வருந்துகிறோம்.

முதலாவதாக, இறைவன் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் விலக் கின்றிப் பொருந்தும் பொதுக் காரணமாதலின், மனித ஆன்மா வின் சில நிகழ்ச்சிகளுக்கு இயற்கைக் காரணங்கள் இன்னவை என்பதைக் கண்டு பிடிப்பதே பிரச்சினை. எனவே, 'இறை வனது தலையீடு' (Deus ex Machina) என்ற கொள்கை சற்றும் பொருந்தாது. அது தெரியாமையையே ஒப்புக்கொள்வதைத் தவிர வேறில்லை. மனித அறிவு பற்றிய எல்லாத் துறைகளிலும்

கிளம்பும் எல்லா வினுக்களுக்குமே இந்த விடையைக் கூறி, ஆராய்ச்சியையும், அதன் பயனுக அறிவு வளர்ச்சியையும் நிறுத்திவிட இயலும்.

இரண்டாவதாக, இறைவனது எல்லாம் வல்ல தன்மையை எதற்கும் பொறுப்பாக்குவது வெறுஞ் சொற்புதிராகும். ஒரு காரணத்தைக் காரியத்திற்கு வேண்டிய அளவிற்கே காரணமாக நாம் அறிகிருேம் ; அறிய இயலும் ; இதற்குமேல் தேவையில்லை. எனவே, எல்லாம் வல்ல காரணம் கருதுதற்கு அரியதாவது போன்றே, முடிவில்லாத ஒரு காரியத்தைப் பற்றியும் நம்மாற் கருத இயலாது. இதுவேயன்றி, இறைவனைப் பற்றிய நம் கருத்துகளெல்லாம் எல்லைக்கு உட்பட்டனவே ஆகும். காரணம் என்ற கருத்தே இறைவனைப் பற்றிய நமது கருத்திற்கு ஓர் எல்லையை அமைத்துவிடுகிறது. மூன்ருவதாக. அது அப்படியே என்று வைத்துக்கொண்டாலும், மேலான விளக்கந் தர நமக்கு இயலும்வரை 'சூனியத்திலிருந்து ஏதாவதொன்று தோன்றியது.' என்பதையோ, 'முடிவற்ற ஒன்று ஒரு காலத்தில் தொடங்கியது,' என்பதையோ போன்ற கொள்கைகளை, நாம் ஒப்புக்கொள்ள வேண்டுவதில்லை.

முன் இருப்புக்கு மறுப்பாகப் பெரிய காரணம் என்ற பெயரிட்டுச் சிலர் சொல்வதாவது, மனிதருள் பெரும்பாலாருக்கு அதைப்பற்றிய நினைப்பு இல்லையே என்பது. இந்த வழக்கின் பொருத்தத்தை எடுத்துக்காட்ட வேண்டுமானுல், மனித ஆன்மா முழுவதும் நினைவு என்ற மனத்திறனிலே அடங்கி இருக்கிறது என்பதை நிலைநாட்ட வேண்டும். இருப்புக்கு ஆதாரம் நினைவு தான் என்ருல், இப்போது நம் நினைவில் இல்லாத நம் வாழ்க்கைப் பகுதியெல்லாம் இல்லாதன வாதல்வேண்டும். இயற்கையாக வாராத பேருறக்க நிலையிலும் (coma) வேறு வகை நோயினும் 'நினைவை' இழப்பவர்கள் எல்லாம் அப்போது இல்லாதவர்கள் ஆய்விடுவார்கள்.

இந்து தத்துவ ஞானிகள் முன் இருப்பு உண்டு என்ற ஊகத்திற்கு ஆதாரமான முன்னுரைகள் உள ; அவை செயல்கள் எழும் நனவு நிலைக்குரியவை.

ஒன்று, பிரபஞ்சத்தில் காணும் இவ்வளவு வேறுபாடுகளுக்கும் விளக்கம் கூற வேறென்ன வழி? நீதியும் கருணையும் வாய்ந்த இறைவனது நாட்டிலே ஒரு குழந்தை மனித இனத்துக்குப் பயன்படும் நற்குணசாலியாக வளர்வதற்கு வேண்டிய சூழ்நிலையில் பிறக்கிறது ; அதே நொடியில் அதே நகரில் இன்ெனாரு

குழந்தை நல்லதே ஆக முடியாத சூழ்நிலையில் பிறக்கிறது! ஆயுள் முழுவதுமே துன்பப்படுவதற்கெனப் பிறக்கும் குழந்தைகளை நாம் காண்கிறோம். அதற்கு அவை செய்த தவறு எதுவும் இல்லை. ஏன் இப்படி நேர வேண்டும்? இதற்குக் காரணம் என்ன? யாருடைய அறியாமையின் பயன் இது? குழந்தையினது அன்றேல், குழந்தை செய்த குற்றம் ஒன்றும் இல்லை என்றால், அதன் தாய் தந்தையரின் செயல்களுக்காக அது ஏன் துன்புறவேண்டும்?

விடை தெரியவில்லை என்று நம் அறியாமையை ஒப்புக் கொள்வதே மேல். இதை விட்டுவிட்டு, இங்கே படும் துன்பத்தின் விகிதப்படி மறுமையில் சுகானுபவ வாய்ப்புக் கிடைக்கும் என்றோ, இரகசியங்கள் என்று கூறியோ இந்தப் பிரச்சினையைத் தட்டிக் கழிக்கப் பார்ப்பது சரியன்று. எவராயினும் நம்மீது ஏதுவின்றி இன்னல்களைச் சுமத்துவது அநீதி மட்டும் அன்று; அக்கிரமமுமாம். பிற்காலம் அதற்கு ஈடு உண்டு என்ற கொள்கைக்கும் நிலை ஒன்றும் இல்லை.

இப்படித் துன்பப்படும் சூழ்நிலையில் பிறந்தவர்களுள் எத்தனை பேர் உயர் வாழ்வை நோக்கி முன்னேற முயல்கின்றனர்? எத்தனை பேர் இதிலேயே சிக்கி வெளிவர முடியாமல் அமிழ்ந்து போகின்றனர்? கெட்ட, சூழ்நிலையில் பிறக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டமையால் மென்மேலும் கெட்டவர்களாவார்க்கு அவர்களது தீய வாழ்விற்காக எதிர்காலத்தில் பரிசு வழங்கவேண்டுமா? அவ்வாறாயின் இவ்வுலகில் ஒருவன் தீயோனாகும் அளவிற்கு அவனுக்குப் பின்னால் நலம் பெருகும் என்பதாகும்.

மனித ஆன்மாவின் பெருமையையும் சுதந்தரத்தையும் நிலைநாட்டவும், இந்த உலகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் பயங்கரமான செயல்களுக்கும் சமாதானம் கூறவும் வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு; இதன் பொறுப்பை எல்லாம் நியாயமான காரணத்தின் மேல் போட்டுவிட வேண்டும்; அக்காரணம் நாமே சுதந்திரமாகச் செய்த செயல்களே, அதாவது வினையே (கர்மாவே) ஆகும். இது மட்டும் அன்று; ஆன்மா சூனியத்திலிருந்து ஆக்கப்பட்டது என்று சொல்லும் ஒவ்வொரு கொள்கையும் 'விதி' என்ற முடிவிலும், 'முன்னமே தீர்மானிக்கப்பட்டது,' என்ற முடிவிலுந்தான் கொண்டு போய் விடுகிறது; எனவே, நம்முன் கருணைமிக்க தந்தையான இறைவனுக்கு மாறாக, பயங்கரமான, இரக்கமற்ற, எப்போதும்

சிற்றம் மிக்க ஒன்றையே இறைவராக நாம் வணங்கவேண்டிய தாகும். சமயம் மக்களை நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ செய்யும் திறமையுற்றது என்ற அளவில், ஆக்கப்பட்ட ஆன்மா என்ற கொள்கை 'விதி' 'முன் ஏற்பாடு,' என்ற துணை முடிவு களையே கருதுகின்றன; ஆதலின் கிறிஸ்தவர்களுக்குள்ளும் மகமதியர்களுக்குள்ளும் வழங்கிவரும் பயங்கரமான கருத்துக் கும்—அதாவது, தம் மதத்தை நம்பாதவர்களைத் தம் வாளுக்கு இரையாக்குவது நியாயம் என்ற கருத்துக்கும்—அதைப் பின் பற்றி விளைந்துள்ளனவும், இன்னும் விளைந்து வருவனவும் ஆன பயங்கரச் செயல்கள் அனைத்திற்கும் அக் கொள்கையே பொறுப்பாகும்.

நியாய தரிசனத்தைச் சார்ந்த தத்துவ அறிஞர் மறு பிறப் பைப் பற்றிய ஒரு வாதத்தை எப்போதும் சொல்லிவருகிறார்கள்; அதுவே முடிந்த முடிபாக எனக்கும் தோன்றுகிறது. அது யாதெனில் "நம் அனுபவங்களை நாசம் செய்து ஒழித்துவிட இயலாது," என்பதே. நமது செயல்கள் (வினை—கருமம்) மறைந்துவிட்டது போலத் தோன்றினாலும், கண்ணுக்குத் தெரியாமல் (அதிருஷ்டம்) இருக்கின்றன; இவை இயல்புகள் (பிரவிருத்திகள்) என்ற காரிய வடிவில் மீண்டும் வெளிப்படுகின் றன. சிறு குழந்தைகள்கூடச் சில இயல்புகளோடு (Tendencies) பிறக்கின்றன. சாவுக்குப் பயம் என்பது இதற்கு ஓர் உதாரணம்.

திரும்பத் திரும்பச் செய்த செயல்களின் பயனே இந்த இயல்பு என்றால், அதே ஆதாரத்தைக் கொண்டு, பிறப்பிலே நம்மிடம் அமையும் இயல்புகளையும் விளக்கவேண்டும். அவற்றை இந்த வாழ்வில் நாம் பெற்றிருக்க இயலாது என்பது வெளிப் படை. எனவே, இவை தோன்றிய காரணத்தைக் கழிந்த காலத் திலேதான் தேடவேண்டும். நமது இயல்புகளும் சில மனித னுக்கே சிறப்பான, அறிந்து செய்யும் செயல்களின் பலனே என் பது நமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது; இத்தகைய இயல்பு களோடு நாம் பிறந்திருப்பது உண்மையானால், இவைகளுக்குக் காரணங்கள் முன்பு அறிவோடு நிகழ்ந்த செயல்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது உறுதி. அதாவது, இப்பிறவிக்கு முன் மனித நிலை என்னும் இதே மன நிலையிலேதான் இருந் திருக்க வேண்டும்.

இப்பிறப்பின் இயல்புகள் பழைய புத்தி பூர்வமான செயல் களின் பயன் என்று விளக்கும் அளவுக்கு இந்திய மறு பிறப்பு

வாதிகளும் சமீபகாலப் பரிணாமவாதிகளும் ஒரே கருத்து உடைய வர்களாவார்; வேறுபாடு இதுதான். ஆன்மிகக் கொள்கை கொண்ட இந்துக்கள் அதைத் தனித்தனி ஆன்மாக்களின் புத்தி பூர்வமான செயலாக விளக்குவார்கள். உலோகாயத சார்புடைய பரிணாம வாதிகளோ, பெற்றோரிடமிருந்து உடல்வாயிலாகப் பெற்றது என்பார்கள். சூனியத்திலிருந்து படைப்பு என்னும் கொள்கைக்காரர்களுக்கு இடமே இல்லை.

இப்போது வாதப்போர் நிகழ வேண்டியது மறுபிறப்பு வாதி களுக்கும் உலோகாயதர்களுக்குமே தான்; மறுபிறப்பு வாதிகள் கூறுவதாவது: அனுபவங்கள் அனைத்தும் அவற்றைப் பெறுபவ னாகிய தனி ஆன்மாவிடம் தொகுக்கப்பட்டு, தொடர்பு அறாத அத் தனிப் பொருளால் செலுத்தப்படுகின்றன என்பதே. உலோகாய தர்களோ, மூளையே எல்லாச் செயல்களுக்கும் கருத்தா என்றும், இயல்புகள் உயிரணுக்கள் மூலம் செலுத்தப் படுகின்றன என்றும் கருதுகின்றனர்.

இந்த நிலையிலேதான் மறபிறவிக் கொள்கை நமக்கு அளவு படாத முக்கியத்தன்மை வாய்ந்தது ஆகிறது. மறுபிறப்பு, உயி ரணு மூலம் செலுத்துதல் என்ற இரண்டு கொள்கைகளுக்கும் உள்ள போராட்டந்தான் ஆன்மிகத்திற்கும் உலோகாயதத்துக்கும் உள்ள போராட்டம். உயிரணுக்கள் மூலம் செலுத்துதல் முற்றும் போதிய விளக்கமாயின், உலோகாயதம் தடுக்கவொண்ணாத தாகும், ஆன்மாவைப் பற்றிய கொள்கைக்கு அவசியம் இல்லை. இது போதிய விளக்கம் அன்று என்றால், தனிப்பட்ட ஆன்மா ஒன்று பழங்கால அனுபவங்கள் எல்லாம் தன்னோடு இப்பிற விக்குக் கொண்டுவருவது முற்றும் உண்மையாக இருக்க வேண்டும். மறுபிறவி, உலோகாயதம் இவ்விரண்டில் ஒன்றைத் தப்ப வழியில்லை. எதை நாம் ஒப்புக்கொள்வது?

வேதாந்தத் தத்துவமும் கிறித்தவ மதமும்

[காலிபோர்னியா ஒக்லந்தில் யூனிட்டேரியன் சர்ச்சில், 1900-ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள், 28ஆம் நாள் ஆற்றிய சொற்பொழிவின் குறிப்புகள்.]

உலகத்தின் பல பெரிய சமயங்களுக்கும் இடையே பல அமிசங்களில் ஒப்புமை இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் இந்த ஒப்புமை வியப்பூட்டும் வகையில் இருப்பதைப் பார்த்தால் பல்வேறு மதங்களும் பல விவரங்களில் ஒன்றைப் பார்த்து ஒன்று தம் கொள்கைகளை அமைத்துக்கொண்டனவோ என்று கருத இடம் உண்டாகிறது.

இப்படி ஒன்றை ஒன்று பார்த்து அமைத்ததைப் பல்வேறு மதங்களுக்கு ஏற்றியிருக்கிறுர்கள். ஆனுல் இது மேல் நோக்காகச் சொல்லும் குற்றம் என்பது பின் வரும் செய்திகளால் விளங்கும்.

மதம் என்பது மனிதவர்க்கத்தின் ஆன்மாவிலேயே அடிப்படையாக அமைந்தது. உள்ளே இருக்கும் ஒன்றன் பரிணுமமே (விரிவே) வாழ்வு முழுவதும் ஆதலின், அது—தன்னைப் பல்வேறு மக்கள் மூலமாகவும் பல்வேறு நாடுகள் மூலமாகவும் வெளிப்படுத்திக்கொள்வது அவசியம் ஆகிறது.

ஆன்மாவின் மொழி ஒன்றேதான்; ஆனுல் நாடுகளின் மொழிகளோ, பல. பல்வேறு நாட்டு மக்களின் பழக்கங்களும் வாழும் வகைகளும் பெரிதும் வேறுபடுகின்றன. சமயம் ஆன்மாவுக்கே உரியது; பல்வேறு நாட்டு மக்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள் மூலமாகவும் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. எனவே உலக சமயங்களுக்குள் காணப்படும் வேறுபாடு, வெளிப்படும் முறையில் அன்றி, அடிப்படையில் அன்று. அவற்றுள் காணப்படும் ஒப்புமைகளும் ஒருமையும் ஆன்மாவைச் சார்ந்தவை, அதன் இயல்பில் அடங்கியவை. எந்தச் சூழ்நிலையில் எந்த மக்களிடையே ஆன்மா தன்னை வெளிப்படுத்திக்கொண்டாலும், அதன் மொழி ஒன்ருவது போன்றே. பலவேறுபட்ட இசைக் கருவிகளில் இனிய கூட்டிசை இருப்பதுபோல, அங்கும் அதே இனிமை ஒலிக்கின்றது.

உலகப் பெரிய மதங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான முதற் பொருள் உண்மையான நூலைப் பெற்றிருத்தலே. சமயங்கள்

இத்தகைய நூலைப் பெறுதுபோனபோது, அவை இல்லாமல் அழிந்தே போய்விட்டன. எகிப்திய நாட்டுச் சமயங்களின் கதி இதுவே. ஒவ்வொரு பெரும் சமயத்துக்கும் உண்மை நூல் அடுப் பங்கரைதான் எனல்வேண்டும்; இதைச் சுற்றி அம்மதச் சீடர்கள் கூடிப் பேசுகிருர்கள். இதினின்றே சமயத்தின் சக்தியும் உயிரும் வீசுகின்றன.

இன்னும் ஒவ்வொரு சமயத்தாரும் தத்தம் நூலே இறைவனின் ஒரே மெய்யான வாக்கு என்றும், மற்றப் புனித நூல்களெல்லாம் பொய் என்றும், நம்பும் இயல்புடைய ஏழை மனிதரை ஏமாற்றும் முயற்சிகள் என்றும், மற்ருெரு சமயத்தைப் பின்பற்றுவது அறிவீனமும் என்றும் ஆன்மிகக் குருட்டுத்தனமும் என்றும் உரிமை கொண்டாடுகின்றனர்.

இத்தகைய மூடப் பிடிவாதம் எல்லாச் சமயங்களிலும் மரபைப் பின்பற்றுவோரது சிறப்பியல்பாகக் காணப்படுகிறது. வேதங்களைப் பின்பற்றும் வைதிகமரபினர், வேதங்களே உலகத்தில் இறைவன் திருவாக்கு என்றும், இறைவன் வேதங்களின் மூலமே உலகோடு பேசியிருக்கிருன் என்றும், அம் மட்டோ, உலகத்தின் இருப்புக்கே வேத மொழி தான் காரணம் என்றும் வாதாடுகின்றனர். உலகம் தோன்றுவதற்கு முன்னமே வேதங்கள் இருந்தன. பிரபஞ்சமும் பிரபஞ்சப் பொருள்களும் இருப்பதற்குக் காரணம், அவற்றைப் பற்றிய பேச்சு வேதத்தில் வருவதுதான். ஒரு பசு இருப்பதற்குக் காரணம், பசு என்ற சொல் வேதத்தில் இருப்பதுதான்; அதாவது, பசு என்று நாம் அறியும் விலங்கைப் பற்றி வேதம் பேசுவதுதான். வேதங்களின் மொழிதான் இறைவனது ஆதிமொழி; மற்ற மொழிகளெல்லாம் இதிலிருந்து தோன்றிய கிளை மொழிகளே; இறைவனிடமிருந்து நேரே எழுந்தவை அல்ல. வேதத்தில் ஒவ்வொரு சொல்லும் அசையும் (Syllable) சரியாக உரிய சுரத்தோடு உச்சரிக்கப்பட வேண்டும். இக் கடுமையான முறையினின்றும் சிறிது விலகினுலும், அது மன்னிக்க முடியாத பெரும் பாவம்— இவ்வாறு அன்னர் பேசுகின்றனர்.

இதுபோன்ற மூடப் பிடிவாதம் எல்லாச் சமயங்களிலும் வைதிகநெறிப் பகுதியினரிடம் காணப்படுகிறது. ஆனுல், இப்படி எழுத்தைப் பற்றிப் போராடும் மடமை அஞ்ஞானிகளிடமும் ஆன்மிகக் குருடர்களிடமே காணப்படுகிறது. உண்மையில் ஓரளவாவது ஆன்மிக அனுபவம் பெற்றிருப்பவராகிய அனைவருமோ பல்வேறு சமயங்களும் வெளியிடப்பட்டுள்ள வடிவ

மானமொழிகளைப்பற்றிச் சண்டை இடுவதில்லை. எல்லாச் சமயங்களின் உயிர் நாடியும் ஒன்றேதான் என்பதை அவர்கள் அறிவார். அதனுல், தம் மொழியைப் பேசாமல் வேறு மொழி பேசும் எவரிடமும் அவர்களுக்குச் சண்டை இல்லை.

வேதங்கள் உலகப் புனித நூல்களுக்குள் மிகப் பழையவை என்பது உண்மைதான். இவை எப்போது எவரால் எழுதப்பட்டன என்பது யாருக்கும் தெரியாது. இவை பல தொகுதிகளாய் இருக்கின்றன, எந்த ஒருவனும் இவற்றை எல்லாம் படித்திருக்கிருஞ என்பதைப்பற்றி எனக்கு ஐயந்நான்.

வேதங்களில் கூறப்படும் சமயந்தான் இந்துக்களின் சமயம். இதுதான் கீழை நாட்டுச் சமயங்களுக்கெல்லாம் அடிப்படை. அதாவது, பிற கீழைநாட்டுச் சமயங்கள் எல்லாம் வேதங்களின் கிளைகளே ஆகும். கீழை நாட்டுச் சமயக் கொள்கைகளுக்கெல்லாம் வேதங்களே பிரமாண நூல்.

இயேசுநாதர் உபதேசங்களில் நம்பிக்கை கொண்டு, அதே சமயத்தில், அவற்றின் பெரும்பாலன இக்காலத்துக்குப் பொருந்தா என்பது நியாயத்திற்கு முரண்பாடானது. தம் உபதேசங்களை நம்பிப் பின்பற்றுபவர்களுக்குக் கிடைக்கும் என்று இயேசுநாதர் சொன்ன சக்திகள் அவ்வாறு பின்பற்றுபவர்களுக்குக் கிடையாமற் போகும் காரணம், அவர்கட்குப் போதிய நம்பிக்கை இல்லை என்பதே—இப்படிச் சொல்லுவது முற்றும் சரி. ஆனுல், அந்த உபதேசங்கள் இக்காலத்துக்குப் பொருந்தா என்று சொல்வது கேலிக்குரியது ஆகும்.

குறைந்த பக்ஷம் எனக்குச் சமமாகவாவது இல்லாத மனிதனை நான் பார்த்ததில்லை. நான் உலகம் முழுவதையும் சுற்றியிருக்கிறேன். நான் மிக இழிவான மக்களுக்கு இடையிலும்—மனிதர்களைத் தின்பவர்கள் மத்தியிலும்—அவர்கட்குள்ளும் எனக்குச் சமானமாகவாவது இல்லாத மனிதனை நான் பார்த்ததில்லை. நான் ஒரு மூடனுய் இருந்த போது, நானும் அவர்கள் செய்வது போலவே செய்தேன். அப்போது எனக்கு அதைவிட நல்லது எது என்பது தெரியாது, இப்போது தெரியும். இப்போது அவர்களுக்கு மேலானது எது என்று தெரியாது; ஆனுல், இனித் தெரிந்துகொள்வார்கள். ஒவ்வொருவரும் தத்தம் இயல்புக்குத் தக்கபடி நடக்கின்றனர். நாம் எல்லோரும் வளர்ந்துகொண்டேயிருக்கிருேம். இந்த நிலையினின்று பார்த்தால், எவனும் மற்றவனைவிடச் சிறந்தவன் அல்லன்.

பிரபஞ்ச சாத்திரம்

உட்பொருளும் வெளிப்பொருளும் மாய, 'மிகச் சிறிய பிண்டம்', 'மிகப் பெரிய அண்டம்' என்னும் இரண்டு சொற்றொடர்கள் உள்ளன. நம் அனுபவம் காரணமாக இந்த இரு பொருள்கள் வழியாகவும் நாம் பல உண்மைகளை அறிகிறோம். உள் அனுபவத்திலிருந்து சேகரித்த உண்மைகளே மன நூல் தத்துவ ஆராய்ச்சி இயல், சமயம் என்பவை; வெளி அனுபவத்திலிருந்து பெற்றவை பௌதிக இயல் நூல்கள். இந்த இரண்டு உலக அனுபவங்களோடும் ஒத்து நிற்பது எதுவோ, அதுவே நிறைவுற்ற உண்மையாய் இருக்க வேண்டும். பிண்டம் அண்டத்தை மெய்ப்பிக்கச்சான்று தர வேண்டும்; அண்டம் பிண்டத்தை மெய்ப்பிக்கச்சான்று நல்க வேண்டும். பௌதிக உண்மைக்கு மறுவடிவம் மனவுலகில் இருக்க வேண்டும்; இது போலவே உள் உலக உண்மைகளுக்கு நிரூபணம் வெளி உலகில் இருக்க வேண்டும். ஆனால், இந்த உண்மைகளிற் பல முரண்படுவதையே விதியாக நாம் காண்கிறோம். உலக வரலாற்றின் ஒரு காலத்தில் உள் உண்மைகள் உயர்பதவி பெற்று, வெளி உண்மைகளோடு போராடத் தொடங்குகின்றன. இப்போது வெளி உண்மைகளைப் பெற்ற பௌதிக நூலினர் அதிகாரம் பெற்று, மனநூலினர் தத்துவ ஆராய்ச்சியாளர் ஆகிய இருவகையினரின் வாதங்களையும் அடக்கி வந்துள்ளனர். யான் அறிந்தவரை இக்காலப் பௌதிக உண்மைகளின் முக்கியப் பகுதிகளும் மன நூலின் முக்கிய பகுதிகளும் முற்றிலும் ஒற்றுமை உடையவையாகின்றன. எல்லா அமிசங்களிலும் பெரியவனாய் இருக்கும் தன்மை ஒரு தனி மனிதன் பெறுவதில்லை; ஒரு தனிநாடோ மக்கள் இனமோ எல்லா அறிவுத் துறைகளிலும் சமமான ஆராய்ச்சித்திறன் பெற்றிருக்கவில்லை. இக்கால ஐரோப்பிய நாடுகள் வெளி உலகப் பௌதிக அறிவிலும் ஆராய்ச்சியிலும் மிக்க திறமை உள்ளவைகளாய் இருக்கின்றன; ஆனால் மனிதனுடைய உள்ளியல்பு பற்றிய ஆராய்ச்சியில் அவ்வளவு திறமை இவற்றுக்கு இல்லை. இதற்கு மாருக, கிழக்கு நாட்டவர்களோ வெளியிலுள்ள பௌதிக உலக ஆராய்ச்சியில் திறன் மிக்க

வராகாது, உள்ளுலக ஆராய்ச்சியில் மிக்க திறமை பெற்றுள்ள னர். இது பற்றியே, கீழை நாட்டுப் பௌதிகம் முதலான சாத்திரங்களுக்கும் மேலை நாட்டு விஞ்ஞானக் கலைகளுக்கும் ஒற்றுமையின்மையைக் காண்கிறோம். மேலை நாட்டு மனநூல் கீழை நாட்டு மன நூலோடு மாறுபடுவதற்கும் இதுவே காரணம். மேலை நாட்டு விஞ்ஞானிகள் கீழை நாட்டுப் பௌதிக நூலாரைத் தோற்றுப் பின்னிடச் செய்துவிட்டனர். அதேசமயம் இருதிறத்தாரும் உண்மையே தமது அடிப்படை என்றுதான் இயம்புகின்றனர். நான் ஆரம்பத்தில் சொன்னபடி எந்தக் கலையறிவுத் துறையிலும் உண்மை அறிவு தன்னொடு முரண்படாது. உள் உண்மைகள் புற உண்மைகளுக்கு இசைந்தே இருப்பனவாம்.

பிரபஞ்சத்தைப் பற்றிய கொள்கைகளை இக்கால வான நூல் அறிஞர், பௌதிக நூல் அறிஞர் கூறுகிறபடி நாம் அறிவோம். இக் கொள்கைகள் எவ்வளவு மோசமாக ஐரோப்பியச் சமயக் கொள்கையை அழிக்கின்றன என்பதும், புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் விஞ்ஞான உண்மைகள் சமயக் கோட்டைகளின் மீது எறியப்படும் வெடிகுண்டுகளைப் போல அமைவன என்பதும் இந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பலவந்தமாக அடக்கச் சமயவாதிகள் எக்காலத்தும் முயன்றதும் நமக்குத் தெரியும்.

பிரபஞ்ச இயலையும் அது சம்பந்தமான அனைத்தையும் பற்றிக் கீழை நாட்டு மக்களின் மனநூலுக்கு இசைந்த கொள்கைகளை இப்போது கூற எனக்கு விருப்பம்; அவை தற்கால விஞ்ஞான நூலார் மிகச் சமீப காலத்துக் கண்டுபிடித்த உண்மைகளுக்குப் பொருத்தமாயிருக்கும் ஆச்சரியத்தையும், பொருந்தாத இடத்துத் தற்கால விஞ்ஞானமே குறைவுற்றிருப்பதையும், அவற்றில் குறையின்மையையும் நீங்கள் காண்பீர்கள். 'இயற்கை' என்ற சொல்லை நாமெல்லோரும் பயன்படுத்துகிறோம். பழைய சாங்கியச் சமயவாதிகள் இதைக் குறிக்க இரண்டு சொற்களை வழங்குகிறார்கள்; இயற்கை என்னும் சொல்லாற் பெரும்பாலும் குறிக்கப்படும் 'பிரகிருதி' என்பது ஒன்று; அதனினும் விஞ்ஞான முறைக்கு இசைவான பெயரான 'அவ்யக்தம்' என்பது மற்றொன்று. வேறுபாடு அற்றதும், மூல அணுக்கள், மூலக் கூறுகள், சக்திகள், மனம், எண்ணம், அறிவு போன்ற அனைத்துக்கும் மூலமாவதும் அவ்யக்தம். மனம் ஒரு சடப் பொருள் என்பதைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியத் தத்துவ வாதிகளும் மனநூலாரும் உரைத்திருப்பதைக் காணும் போது நமக்குப் பெரு வியப்பு உண்டாகிறது. நம்மிடையே

இன்றுள்ள உலோகாயதவாதிகள் (Materialists) உடலைப் போலவே மனமும் இயற்கையினின்றும் உண்டானது என்பதைத் தானே மெய்ப்பிக்க முயலுகின்றனர். எண்ணமும் அப்படியே; அறிவும் அத்தகையது என்பதைப் பின்னர் காண்போம்; இவை எல்லாமே 'அவ்யக்தம்' என்னும் வேறுபாடற்ற மூலக்கூறு இயற்கையிலிருந்து தோன்றியவைகளே ஆகும். இது தாமசம், ராஜசம், சத்துவம் ஆகிய மூன்று சக்திகளின் சமநிலை என்று சாங்கியர்கள் சொல்லுகிறார்கள். தாழ்ந்த சக்தியாகிய 'தமஸ்' இழுக்கும் சக்தி; சற்று உயர்ந்த 'ரஜஸ்' விலக்கும் சக்தி; மிக உயர்ந்த சக்தியாகிய சத்துவம் முன் இரண்டையும் சமநிலையில் வைக்கும் சக்தியாகும். இழுப்புச் சக்தி, விலக்குச் சக்தி ஆகிய இரண்டும் சத்துவச் சக்தியால் முழுதும் அடக்கப்படும்போது உலகத்தில் படைப்போ இயக்கமோ இல்லாமல் போய்விடுகிறது. இந்தச் சமநிலை தவறியவுடன் அசைவின்மை குலைகின்றது. இரு சக்திகளில் ஒன்று மற்றொன்றைவிடப் பலம் மிகுகிறது; உடனே இயக்கமும் பிரபஞ்சப் படைப்பும் தொடங்குகின்றன. காரியங்களின் இந்நிலை ஒரு வட்டமாகக் காலச் சக்கரமாக நடைபெறுகின்றது. அதாவது, இந்தச் சமனிலை குலையும் காலம் வருகிறது; அப்போது சக்திகள் ஒன்றோடொன்று கலக்கவும் மறுபடி இணையவும் தொடங்குகின்றன; பொருள்கள் புறத்தே தோன்றுகின்றன. இதே சமயத்தில், ஆதிச் சமனிலைக்கு மீளும் இயல்பும் எல்லாப் பொருள்களினிடத்தும் இருந்துகொண்டே இருக்கிறது. தோன்றிய பொருளெல்லாம் முற்றும் அழியும் காலம் வந்தடைகிறது. திரும்பவும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் எல்லாம் குலைகின்றன; வெளியே தோற்றம் தொடங்குகிறது; திரும்பவும் இது அலைகள் போல மெல்ல அடங்கி விடுகிறது. இயக்கம் எல்லாமே, பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றும், ஒன்றன்பின் ஒன்றாக மேலே கிளம்பித் தாழும் அலைகள் போன்றனவே ஆகும். பிரபஞ்சம் முழுவதுமே ஒரு குறிப்பிட்ட காலம் வரை இயக்கமின்றி நிற்கிறது என்பது சில தத்துவவாதிகளின் கொள்கையாகும். வேறுசிலர், இந்த ஒடுக்கம் பிரபஞ்சத்தின் தொகுதிகளுக்கே பொருந்தும் என்பர்; இச்சூரிய மண்டலம் ஒடுங்கி வேறுபாடற்ற நிலைக்கு மீளும் போது, பல கோடி வேறு மண்டலங்கள் இதற்கு மாறாக வெளியே தோற்றமடையும் என்பர். எனக்கு இரண்டாம் கொள்கையே தக்கது என்று தோன்றுகிறது; அதாவது பிரபஞ்சம் முழுதும் ஒரே சமயம் ஒடுங்காது, வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு

செயல்கள் நிகழ்கின்றன என்பதே. ஆனாலும் நாம் பார்ப்பதெல் லாம்—இயற்கையே—எழுதலும் விழுதலும் மாறி மாறித் தொடர்ந்து வரும் முறையில் முன் சென்று வருகின்றன என்ற ஒழுங்கு மாறுவதில்லை. விழும் நிலையை, அதாவது பழைய முற்றுச் சமநிலைக்கு மீளலைப் ‘பிரளயம்’ என்னும் ஒரு பிரபஞ்ச வட்ட (cycle)த்தின் முடிவு என்கிறோம். பிரபஞ்சத்தின் சிருஷ்டி பிரளயங்களை இறைவனது வெளிமூச்சுக்கும் உள்மூச் சுக்கும் ஒப்பிட்டுள்ளனர், இந்தியக் கடவுள் வாதியர் சிலர். இறைவன் பிரபஞ்சத்தை மூச்சாக வெளிவிடுகிறான்; திரும்பவும் அதை உள்மூச்சாக இழுத்து ஒடுக்கிக்கொள்கிறான். ஒடுங்கும் போது பிரபஞ்சம் என்ன ஆகிறது? அது அப்போது சூக்கும உருவாய் காரண உருவாய் இருக்கிறது என்கின்றனர் சாங்கிய வாதிகள். காரணகாரிய நியதியும், இடமும், காலமும் அதை விட்டு விலகுவதில்லை; ஆனால், இவை மிக நுட்பமான சிறிய உருவில் இருக்கின்றன என்பதே. பிரபஞ்சம் முழுவதுமே ஒடுங்கத் தொடங்குவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள், நாம் ஒவ்வொருவருமே ஒவ்வோர் மூலக்கூறு (Molecule) ஆகும்வரை. அப்போது, இந்த மாற்றத்தை நாம் உணரமாட்டோம்; ஏனெனில், நம் அமிசம் ஒவ்வொன்றும் ஒரே காலத்தில் ஒரே அளவில் சுருங்குமன்றோ? பிரபஞ்சம் முழுவதுமே ஒடுங்குகிறது; திரும்பவும் விரிகிறது; காரணம் விரிந்து, காரியத்தை ஆக்குகிறது; இப்படியே செல்கிறது.

இக்காலத்துப் பொருள் (Matter) எனப்படுவதைப் பழங் கால மனநூல் அறிஞர்கள் ‘பூதங்கள்’, அதாவது வெளி மூலங் கள் என்றார்கள். அவர்கள் கொள்கைப்படி நித்தியமான ஒரு மூலப்பொருள் உண்டு; இதிலிருந்து மற்ற மூலப்பொருள்களெல் லாம் தோன்றுகின்றன. இதையே ‘ஆகாசம்’ என்பர். இக் காலத்தாரது ‘ஈதர்’ (Ether) என்ற கருத்தைப் போன்றது இது எனலாம்; ஆனால், முற்றும் ஒரே மாதிரி அன்று. இந்தப் பொருள் (matter) மூலத்தோடு மூலச்சக்தி (Energy) யான ‘பிராணனும்’ இருக்கிறது. பிராணனும் ஆகாசமும் கலந்து, மீண்டும் இணைந்து, பூதங்களை ஆக்குகின்றன. கல்பமுடிவில் எல்லாம் ஒடுங்கிப் பழைய பிராணனாகவும் ஆகாசமாகவும் மாறி விடுகின்றன. மனிதனது ஆதி நூல் என்று எல்லோருமே ஒப்புக்கொள்ளும் இருக்கு வேதத்தில் வெகு அழகான கவிதை வடிவமான வர்ணனை படைப்பைப் பற்றி உள்ளது. “இருப்பு, இன்மை (Aught, Nought) ஆகிய இரண்டும் அற்ற நிலையில்,

இருட்டின்மேல் இருட்டுப் புரண்டுகொண்டிருந்தபோது இருந்தது எது?'' இதற்கு விடை பின் வருவதாகும். ''எந்த வகை இயக்கமும் இன்றி இருந்தது அது.'' அப்போது பிராணன் இருந்தது; ஆனால் அதற்கு இயக்கம் இல்லை. 'ஆனிதாவாதம்' (Anita vata) என்ற வடமொழிச் சொல்லுக்கு அதிர்வு இல்லாமல் இருந்தது என்பதே பொருள்: அதிர்வு நின்றுவிட்டது. பிறகு பல கோடி ஆண்டுகளுக்குப்பின் புதுக்கல்பம் தொடங்கும்போது அதிர்வற்ற இந்த அணுவில் அதிர்வு தோன்றுகிறது; பிராணன் ஆகாயத்துக்கு அடிமேல் அடி கொடுக்கத் தொடங்குகிறது. அணுக்கள் செறிவுறுகின்றன; செறிவுறும்போது பல்வேறு மூலப்பொருள்கள் தோன்றுகின்றன. இந்தப் பகுதிகளை எல்லாம் விநோதமான முறையில் மொழிபெயர்த்திருப்பதை நாம் காண்கிறோம்; அந்தச் சமயவாதிகளிடமோ உரையாசிரியர்கள் (பாஷ்ய கருத்தாக்கள்) இடமோ சென்று பொருளை உணர்ந்து மொழிபெயர்ப்பதில்லை; தாங்களாக அறிந்துகொள்ளவும் போதிய அறிவு இவர்களுக்கு இல்லை. ஓர் அறிவிலி மூன்று வடமொழி எழுத்துகளைக் கற்றவுடன் முழு நூலையே மொழி பெயர்த்துவிடுகிறான்! பூதங்களைக் காற்று, நெருப்பு என்றெல்லாம் மொழி பெயர்க்கிறார்கள். உரையாசியர்களிடம் சென்று கேட்டால் இவற்றுக்கு இந்தப் பொருள்கள் இல்லை என்பது தெரிய வரும்.

பிராணனால் திரும்பத் திரும்பக் கொடுக்கப்படும் அடிகளின் பலனாக ஆகாசம் வாயுவை, அதாவது அதிர்வுகளை உண்டாக்குகிறது. வாயு அதிர, அதிர்வுகள் மென்மேலும் விரைவாக, உராய்வு காரணமாகத் தோன்றுவதே வெப்பம் 'தேஜஸ்'. இந்த வெப்பம் நெகிழ்பொருளாக்குவதில் முடிகிறது; இதுவே 'அப்பு', நீர். இந்த நெகிழ்பொருள் பின் திண் பொருளாகிறது. ஆகாசமும் அசைவும் இருந்தன, பின் வந்தது வெப்பம்; அது நெகிழ்பொருளாயிற்று, பின் பருப்பொருளாக உறைந்தது; தலைகீழாக அதே முறைப்படி பழைய நிலைக்கு மீளுகிறது. திண் பொருள் நெகிழும், பின் அனலாக மாறும்; அது மெல்ல இயக்கம் ஆகும்; முடிவில் இந்த இயக்கமும் நின்றுவிடும். இக்கல்பம் அழியும். பின் மீண்டும் அது பழைய நிலையை அடைந்து மறுபடியும் ஆகாசத்தில் கரையும், ஒடுங்கிய வண்ணம் இருக்கும். ஆகாசத்தின் துணை இல்லாமல் பிராணன் தனியாக ஒன்றும் செய்ய இயலாது. இயக்கம், அதிர்வு, எண்ணம் என்று நாம் அறிவதெல்லாம் பிராணனுடைய மாற்றமே ஆகும்; பொருளாக நாம் அறியும் ஒவ்வொன்றும், வடிவாகவோ எதிர்ப்பு (Resistance) ஆகவோ இருப்பினும்

ஆகாசத்தின் மாற்றமேயாகும். பிராணன் தனியாக வாழவோ ஊடு பொருளின்றித் தொழிற்படவோ இயலாது; அது சுத்தப் பிராணனய் இருக்கும்போது அது ஆகாசத்தையே இருப்பிடமாகக் கொள்கிறது; அது இயற்கைச் சக்திகளாக—புவியீர்ப்புச் சக்தி, மைய நோக்குச் சக்திகளாக—மாறும்போது அதற்கு ஆதாரமாகப் பொருள் தேவைப்படுகிறது. சக்தி இல்லா பொருளேயோ, பொருள் இல்லாத சக்தியையோ நாம் காணவே இயலாது. சக்தி, பொருள் என்று நாம் சொல்லுபவை, மிக நுட்பமான நிலையிலே 'பிராணன், ஆகாசம்' என்பவைகளின் பரு உருவத் தோற்றங்களே ஆகும். பிராணனை ஆங்கிலத்தில் 'உயிர்' (Life) எனலாம்; ஆனல், இதை மனித உயிர் என்ற எல்லைக்குக் குறுக்கக் கூடாது; அதேசமயம், ஆன்மா என்பதோடும் ஒன்றுபடுத்தக் கூடாது. இப்படியே இது செல்கிறது, படைப்புக்கு ஆதியோ அந்தமோ இருக்க இயலாது. இது முடிவற்ற முன் செல்லலாகும்.

இப் பழைய மன நூலாரது வேருெரு கொள்கையைக் கூறுவோம்; பருப் பொருள்கள் யாவும் நுண்பொருள்களினின்றும் உண்டானவை என்பது அது. பருவுருப் பெற்ற ஒவ்வொன்றும் நுண்ணணுக்களால் ஆனதே—இந்த நுண்ணணுக்களேயே தன்மாத்திரைகள் என்கிருர்கள் அவர்கள். நான் ஒரு பூவை மோந்து பார்க்கிறேன். மோக்க வேண்டுமானல், ஏதோ ஒன்று என் மூக்கைத் தொடவேண்டும். மலர் அங்கே இருக்கிறது; ஆனல், அது என்னை நோக்கி நகர்வதை யான் காணவில்லை. எனினும், மலரிலிருந்து வந்து என் மூக்கைத் தொடுவன, மலரின் நுண்ணணுக்களாகிய தன்மாத்திரைகளே. வெப்பம், ஒளி முதலிய எல்லாவற்றிலும் நிகழ்வது இதுதான். இந்தத் தன்மாத்திரைகளை இன்னும் நுட்பமான சிற்றணுக்களாகப் பகுக்க இயலும். வேறு வேறு தத்துவ வாதிகள் வேறு வேறு கொள்கைகளை உடையவர்களாய் இருக்கிருர்கள்; ஆனல், இவை வெறுங் கொள்கைகளே (Theories). பருவுருப் பெற்ற எதுவுமே மிகச் சிறிய நுண்ணணுக்களால் ஆக்கப்பட்டதே என்பதை அறிவது நம் காரியத்துக்குப் போதும். நாம் வெளியே தொட்டு உணரும் பருப்பொருள் மூலங்களை முதலிற் பெறுகிருேம். பிறகு கண், காது, மூக்கு இவற்றைத் தொடும் நுண்மூலங்கள் வருகின்றன. ஆகாய அலைகள் என் கண்களைத் தொடுகின்றன; ஆனல், அவற்றைப் பார்க்க எனக்கு இயலாது; என்ருலும், நான் ஒளி

யைப் பார்ப்பதற்கு முன் அந்த அலைகள் என் கண்களைத் தொட வேண்டும் என்பது எனக்குத் தெரியும்.

கண்கள் இருக்கின்றன; ஆனால், அவை பார்ப்பதில்லை. பார்க்கும் தானமாகிய மூளை மையத்தை நீக்கிவிடுங்கள்; அப்போதும் கண்கள் இருக்கும். வெளி உலகப் பொருள்களின் படம் கண்ணின் திரையில் விழும்; என்றாலும், கண் பாராது. எனவே, கண் என்ற வெளியுறுப்பு, துணைக்கருவியே ஒழிய, பார்வைக் கருவி அன்று. மூளையில் உள்ள நரம்பு மையமே பார்வைக்கு கருவியாகும். இது போன்றேதான் மூக்கும் கருவியே ஆகும்; அதன் பின் உறுப்பு உள்ளது. பொறிகள் வெற்று வெளிக் கருவிகளே ஆகும். இந்த வெவ்வேறான உறுப்புகள்—வட மொழியில் இந்திரியங்கள் எனப்படுவன—உணர்சிக்குரிய உண்மையான இடங்கள் என்னலாம்.

மனம்பொறிகளோடு இணைந்திருத்தல் உணர்ச்சிக்கு அவசியமாகும். நாம் படிப்பில் ஆழ்ந்திருக்கும்போது கடிகாரம் மணி அடிப்பது நமக்குக் கேட்பதில்லை; இது சாதாரண அனுபவம். ஏன்? காது அங்கே இருந்தது. ஒலி அதன் வழியாக மூளைக்குச் சென்றது; எனினும் மனம் செவிப் பொறியோடு இணையாததால் ஒலி கேட்கப்படவில்லை.

வேறான பொறி ஒவ்வொன்றுக்கும் வேறாக ஒரு இந்திரியத் தானம் உண்டு. அனைத்திற்கும் ஒன்றே இருப்பின், இதனோடு மனம் இணைந்து நிற்கும்போது எல்லாப் புலன்களும் ஒரே சமயத்தில் சமமாக வேலை செய்யும். ஆனால், இப்படி நடப்பதில்லை என்பதைக் கடிகார மணி அடிப்பது நமக்குக் காட்டிவிட்டது. எல்லாப் பொறிகட்கும் இந்திரியம் ஒன்றே இருப்பின், மனம் ஒரே சமயம் காணவும் கேட்கவும் முகரவும் செய்யும்; ஒரே சமயம் இவையனைத்தையும் செய்யாதிருத்தல் அதற்கு இயலாததாகும். எனவே, ஒவ்வொரு பொறிக்கும் தனியான ஒரு புலன் இருக்க வேண்டுவது இன்றியமையாததாகும். இக்கால உடலியல் நூலும் இதையே வற்புறுத்துகிறது. பார்த்தல் கேட்டல் இரண்டும் நம்மிடம் ஒரே சமயத்தில் நடைபெற இயலும்; மனம் இரண்டு புலன்களிலும் ஓரளவு இணைந்திருப்பதே இதற்குக் காரணம்.

பொறிகள் எதனால் ஆனவை? கண், காது, மூக்கு இவை பருப் பொருள்களால் ஆனவை என்பது தெரிகிறது. புலன்களும் பொருள்களால் ஆனவைகளே. உடல் பருப் பொருளால் ஆக்கப் பட்டுப் பிராணனைப் பல்வேறு தூல சக்திகளாக மாற்றுவது போன்றே, புலன்களும் ஆகாசம், வாயு, தேயுபோன்ற நுண்

பொருள்களால் ஆக்கப்பட்டு, பிராணனை உணர்ச்சிக்குரிய நுண் பொருள்களாக மாற்றி அமைக்கின்றன. பொறிகள், பிராணனின் தொழில்கள், மனம், புத்தி இவற்றின் இணைப்பையே மனிதனது லிங்கம் அல்லது சூட்சும சரீரம் என்கிறோம். லிங்க சரீரத்துக்கு உண்மையான உருவம் உண்டு; பொருளாலான எதற்கும் உருவம் இருந்து தீரவேண்டும் ஆதலால். மனம் என்பதே மனஸ், விருத்திநிலையில் உள்ள, அதிரும் அமைதியற்ற சித்தம். நாம் ஓர் ஏரியில் கல் ஒன்றை வீசி எறிந்தால், முதலில் இயக்கம் ஏற்படும்; பிறகு அதற்கு எதிர்ப்பு ஏற்படும். ஒரு நொடி நீர் அலையாய் இயங்கிப் பிறகு கல்லை எதிர்த்து மோதும். இது போலவே சித்தத்தில் ஒரு பதிவு (Impression) வரும்போது அது முதலில் சற்று இயங்குகிறது; இது மனம் என்ற நிலை. மனம் இந்தப் பதிவை இன்னும் அப்பாற் கொண்டு போய்ப் புத்தி என்ற தீர்ப்பளிக்கும் சக்திமையத்தை அடைவிக்கிறது. இங்கே எதிர்த்தாக்கு உண்டாகிறது. புத்திக்குப் பின்னணியாக 'அகங்காரம்' அல்லது 'நான் உளேன்' என்ற உணர்வு இருக்கிறது. அகங்காரத்துக்குப் பின்னால் 'மகத்து' அல்லது அறிவு இருக்கிறது; இதுவே பிரகிருதியின் மிக உயர்ந்த பொருள். ஒவ்வொன்றும் தனக்கு முன்னுள்ள பொருளின் காரியம் ஆகும். ஏரி நீருக்கு விழும் அடி ஒவ்வொன்றும் வெளி உலகிலிருந்து வருகிறது. ஆனால், மனத்துக்கு ஏற்படும் தாக்குதல்களோ, வெளியுலகிலிருந்தோ உள்ளுலகிலிருந்தோ வரலாம். அறிவுக்குப் பின் உண்மை மனிதனாக 'புருஷன்' அதாவது ஆன்மா இருக்கிறது; இது தூயது, நிறைவுற்றது; இதுவே எல்லாவற்றையும் காண்பதும், அனுபவிப்பதும் ஆகும்; இதற்காகவே இந்தப் பிரபஞ்ச மாறுதல்களெல்லாம் ஏற்படுகின்றன.

மனிதன் இந்த மாறுதல்களை எல்லாம் காண்கிறான். அவன் எப்போதும் தூய்மைநிலை தவறுவதே இல்லை. ஆனால், வேதாந்திகள் சொல்லும் 'அத்தியாஸம்' என்பதால்—பிரதிபலிப்பாலும் கட்டுறுவதாலும்—அவன் தூய்மையற்றவனாய்த் தோன்றுகிறான். பளிங்கு தன் முன் உள்ள சிவப்பு அல்லது நீல நிறம் பெறுவதாகத் தோன்றுவதுபோல இது ஆகும். ஆனால் பளிங்கோ தன்னியல்பால் நிறமற்ற பொருள். பல ஆன்மாக்கள் இருப்பதாகவும், ஒவ்வொன்றும் தூயதும் நிறைவுற்றதும் என்றும் வைத்துக் கொள்வோம். பல வகைப் பருப் பொருள்களும் நுண் பொருள்களும் ஆன்மாவின் மீது எறியப்பட்டு அதனைப் பல நிறம் கொண்டதுபோலத் தோன்றச் செய்கின்றன. பிரகிருதி இப்படி

எல்லாம் செய்யக் காரணம் என்ன ? ஆன்மாவின் முன்னேற்றத்துக்காகவே பிரகிருதி இந்த மாறுதல்களை எல்லாம் அடைகிறது, ஆன்மா விடுதலையைப் பெற வேண்டும் என்பதற்காகவே. பிரபஞ்சம் என்று வழங்கும் இந்த மகத்தான புத்தகம் மனிதன் முன்னே விரிந்து கிடப்பது அவன் படிப்பதற்காகவே. இறுதியில் அவன், தான் முற்றறிவும் ஸர்வ சக்தியும் பெற்றவன் என்பதைக் கண்டறிகிறன். நம்மவரான சிறந்த மன நூல் அறிஞருட் சிலர், நீங்கள் கடவுளை நம்பும் கருத்தின்படி கடவுளை நம்புவதில்லை. நமது மன நூலை ஆக்கிய தந்தை கபிலர், கடவுள் உண்டு என்பதையே மறுக்கிறர். ஸகுண தெய்வம் என்ற ஒன்று அவசியமே இல்லை என்பது அவர் கருத்து; படைப்பு முழுவதையும் ஆக்கப் பிரகிருதியே போதும் என்கிறர் அவர். இறைவன் சங்கற்பமே (Design) படைப்புக்குக் காரணம் என்ற கொள்கையை அவர் ஒரேயடியாகத் தலையில் அடித்து விட்டார். அதனினும் மிக்க குழந்தைத்தனமான ஒரு கொள்கையை இதுவரை எவரும் கூறியதே இல்லை என்றும் சொல்லிவிட்டார். ஆனுல், அவர் ஒரு விசித்திரமான இறைவனை ஒப்புக்கொள்கிறர். நாம் எல்லோரும் விடுதலை பெறப் போராடுவதாகவும், விடுதலை கிடைத்தவுடன் நாம் பிரகிருதியோடு இரண்டறக் கலந்துவிடுவோம் என்றும், அடுத்த கல்பத்தின் தொடக்கத்தில் நாம் பிரகிருதிக்கு அரசனுகக் கிளம்புவோம் என்றும் சொல்கிறர் ; அப்போது எல்லா வல்லமையும் முற்றறிவும் கொண்டவராக நாம் வருகிறோம். அப்பொருளில் நாம் ஒவ்வொருவரும் இறைவனுகி விடுகிறோம். நீங்களும் நானும், மிகத் தாழ்ந்த உயிர்களுங்கூட, வெவ்வேறு கல்பங்களில் இறைவனுகியே தீருவோம். இத்தகைய இறைவன் கால எல்லைக்கு உட்பட்டவன் ; ஆனுல், என்றும் உள்ள, என்றும் எல்லாம் வல்ல ஓர் இறைவன் இருக்கவே இயலாது என்று கூறுகிறர் அவர். அப்படி ஒருவர் இருந்தால், ஒரு தொல்லை ஏற்படுகிறது ; ஒன்று, அவர் கட்டுப்பட்ட ஆன்மாவாக வேண்டும் ; அல்லது, விடுதலை பெற்ற ஆன்மா ஆக வேண்டும். முற்றும் விடுதலை பெற்ற இறைவரால் படைப்பு நிகழாது ; அதற்கு அவசியமே இல்லை. கட்டுப்பட்ட ஆன்மா என்றல் அவராலும் படைப்பு நடைபெருது ; ஏனெனில், அவரால் படைக்க இயலாது ; அவருக்கு அந்த ஆற்றல் இல்லை. இரண்டு வகையிலும் என்றும் உள்ள, எல்லாம் அறிந்தவரும், எல்லாம் வல்லவருமான இறைவர் ஒருவர் இருக்க இயலாது. நம் வேத சாத்திரங்களில் ‘ இறை

வன்' என்ற பெயர் எங்கே வந்தாலும் அதன் பொருள், 'விடுதலை பெற்ற மனிதரே' தான் என்கிறார் அவர்.

ஆன்மாக்களெல்லாம் ஒன்று என்பதையும் கபிலர் நம்புவதில்லை. அவருடைய ஆராய்ச்சி—அது செல்லும் அளவுக்கு—வியப்புக்கு உரியதுதான். இந்தியச் சிந்தனையாளர்களின் தந்தையார் அவரே. புத்த சமயம் முதலிய பல சமயங்கள் அவர் செய்த சிந்தனையின் விளைவுகளே.

அவரது மன நூலின்படி எல்லா ஆன்மாக்களும் தங்கள் விடுதலையையும் தங்களுக்கு இயற்கையான உரிமைகளாகிய எல்லா வல்லமையையும் எல்லா அறிவையும் பெற முடியும். இப்போது எழும் வினா இதுதான்: இந்தக் கட்டு எங்கிருந்து வந்தது? இதற்குத் தொடக்கம் இல்லை என்கிறார் கபிலர். தொடக்கம் இல்லை என்றால், முடிவும் இருக்க இயலாது. அப்படியானால், நாம் விடுதலை பெறவே முடியாது. இந்த பந்தத்துக்குத் தொடக்கம் இல்லை என்றாலும், அது ஆன்மாவைப் போல மாறாத ஒரே நிலையில் இருப்பதன்று என்கிறார் கபிலர். அதாவது, பிரகிருதிக்கு (பந்தத்தின் மூலத்திற்கு) தொடக்கமும் முடிவும் இல்லை என்றாலும், இது ஆன்மாவுக்கு உள்ளது போன்றதன்று; பிரகிருதிக்குத் தனி இருப்பு (Individuality) இல்லை. அது ஆறு போன்றது, ஆறு ஒவ்வொரு நொடியும் புதுப் புது நீராலாய உடலைப் பெறுவது போன்றது இது. நீராலான இவ்வுடல்களின் கூட்டுத் தொகையே ஆறு என்கிறோம். ஆனால் ஆறு மாறாத பொருள் அன்று. பிரகிருதியில் உள்ள ஒவ்வொன்றும் ஓயாது மாறியபடியே இருக்கிறது. ஆனால், ஆன்மா மாறுவதில்லை; ஆக பிரகிருதி இப்படி மாறிய வண்ணம் இருப்பதால், ஆன்மா இதன் கட்டிலிருந்து விடுபட்டு வெளி வர இயலும்.

பிரபஞ்ச முழுவதன் திட்டமும் அதன் ஒரு பகுதியின் திட்டம் போன்றதே. எனக்கு ஒரு மனம் இருப்பது போலவே பிரபஞ்சத்துக்கும் ஒரு மனம் உண்டு. தனி மனிதனிடம் உள்ளவாறே பிரபஞ்சத்திலும் உண்டு. பிரபஞ்சப் பருவுடல் உண்டு; இதற்குப் பின் பிரபஞ்ச நுண்ணுடம்பு உண்டு; இதற்குப் பின் பிரபஞ்ச மனம் உண்டு; இதற்குப் பின் பிரபஞ்ச அகங்காரம் உண்டு; இதற்குப் பின் பிரபஞ்ச அறிவு இருக்கின்றது. இவைகளெல்லாம் பிரகிருதிக்குள்—பிரகிருதியின் விரிவில்—இருக்கின்றன; இதற்கு வெளியில் இல்லை.

நம் பருவுடலும் நம் உணர்வும் நம் தாய் தந்தையரிடமிருந்து பெற்றவை. கண்டிப்பான பாரம்பரிய முறை சொல்லு

கிறபடி, நமது உடல் நம் தாய் தந்தையரின் உடல்களின் பகுதியே ஆகும். எனது உணர்வும், அகங்காரமும் அவர்களுடையவற்றின் பகுதியே ஆகும். நம் தாய் தந்தையரிடமிருந்து பிறவியாற்பெற்ற சிறு பகுதியோடு பிரபஞ்ச உணர்விலிருந்து பெற்றவற்றையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். முடிவற்ற அறிவுக்களஞ்சியம் ஒன்று நம்மைச் சுற்றிலும் இருக்கிறது. இதிலிருந்து நமக்கு வேண்டுவதை நாம் பெற்றுக்கொள்கிறோம். பிரபஞ்சத்தில், முடிவற்ற மனச்சக்திக் களஞ்சியம் ஒன்று இருக்கிறது; இதிலிருந்து நாம் ஓய்வில்லாமல் எடுத்த வண்ணம் இருக்கிறோம். ஆனால், இதற்கு வித்து பெற்றோரிடமிருந்தே கிடைக்க வேண்டும். மறுபிறவியோடு இணைந்த பாரம்பரிய முறையே நம் கொள்கை ஆகும். குல முறைக் கொள்கைப்படி மறு பிறவி யெடுக்கும் ஆன்மாவுக்கு ஒரு மனிதனை ஆக்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் எல்லாம் அவன் பெற்றோர்களிடமிருந்தே கிடைக்கின்றன.

ஐரோப்பியத் தத்துவ சாத்திரிகள் சிலர் 'எனது இருப்பே, பிரபஞ்சத்தின் இருப்புக்குக் காரணம்,' என்றும், நான் இல்லை என்றால், பிரபஞ்சமும் இருக்க இயலாது என்றும் வற்புறுத்தியிருக்கிறார்கள். 'உலக மக்கள் எல்லாரும் இறந்துவிட நேர்ந்து, மனிதப் பூண்டே அற்றுப்போய், புலனறிவும் பகுத்தறிவும் பெற்ற மற்றப் பிராணிகளும் அழிந்து போகுமானால், பிரகிருதியின் தோற்றங்கள் அனைத்தும் மறைந்துவிடும்,' என்று இதையே வேறுவிதமாகச் சிலர் சொல்கின்றனர். ஆனால், இந்த ஐரோப்பியத் தத்துவ சாத்திரிகளுக்கு இதன் மன நூல் தத்துவம் தெரியாது; இதன் ஒழுங்கு (Principle) தெரியும்; இக்காலத் தத்துவ சாத்திரமும் இதைப்பற்றி மிகவும் சிறிதளவே அறிந்திருக்கிறது. சாங்கியர் கொள்கைப்படி என் மனத்தின் ஏதேனும் ஒரு பகுதியையாவது பொருளாகக் கொள்ளாத எதுவும் இருக்க இயலாது. இந்த மேஜையை உள்ளபடியே அறிய என்றால் இயலாது. இதைப்பற்றிய ஒரு பதிவு (Impression) என் கண்களுக்கு (பொறி) வருகிறது; இந்திரியத்துக்குப் போகிறது. பிறகு மனத்துக்குப்போகிறது. மனம் எதிர் வினை (Reaction) புரிகிறது. இந்த எதிர்வினையே நான் 'மேஜை' என்று சொல்லும் பொருள் ஆகும். இது ஏரியில் கல்லை வீசுவதுபோன்றுதான்; ஏரி கல்லை நோக்கி ஓர் அலையை வீசுகிறது; இந்த அலைதான் நமக்குத் தெரிவதாகும். வெளியே என்ன இருக்கிறது என்பதை யாருமே தெரிந்துகொள்ள இயலாது. அதை அறிய

நான் முயலும்போது, என் மனத்திலிருந்து நான் கொடுக்கும் பொருளாகவே அது எனக்குப் புலனாகிறது. நானே என் மனத்தால், என் கண்களுக்கு வேண்டிய பொருளை அளித்திருக்கிறேன். வெளியே, ஏதோ ஒன்று இருக்கிறது. அது சந்தர்ப்பமே, ஒரு தூண்டுதலே (suggestion); இந்தத் தூண்டுதலின் மேல் நான் என் மனத்தைச் செலுத்துகிறேன். அது நான் பார்க்கும் உருவத்தை அடைகிறது. அப்படியானால், நாம் எல்லோரும் ஒரே மாதிரியாகப் பொருள்களைக் காண்பது எப்படி? நம் எல்லோரிடமும் பிரபஞ்ச மனத்தின் ஒரே மாதிரிப் பகுதிகள் இருப்பதுதான் இதற்குக் காரணம். ஒரே மாதிரி மனத்தைக் கொண்டவர்கள் ஒரே மாதிரிப் பொருள்களையே பார்ப்பார்கள்; அவ்வாறு கொள்ளாதவர்கள் ஒன்றாகவே பார்க்கமாட்டார்கள்.

சாங்கியத் தத்துவத்தைப்பற்றிய ஓர் ஆராய்ச்சி

பிரகிருதி பாகுபடற்றது என்கிறார்கள் சாங்கிய சமய வாதிகள்; அதனிடம் உள்ள பொருள்களின் பூரண சமநிலையே பிரகிருதி என்று வரையறுக்கிறார்கள். பூரண சமநிலையில் எந்த இயக்கமும் இருக்க இயலாது என்பது இயல்பாகவே அதனின்றும் பெறப்படுகிறது. தொடக்கநிலையில், பொருள் வெளிப்படு முன், இயக்கமே இல்லாமல் பூரண சமநிலை இருந்தபோது, பிரகிருதிக்கு அழிவே இல்லை; ஏனெனில், சமநிலை இன்மையோ மாறுதலோ என்பதினின்றே சிதைவோ சாவோ உண்டாகிறது. இன்னும், சாங்கியர்களின் கொள்கைப்படி அணுக்கள் தொடக்கநிலை அன்று. அணுக்களிலிருந்து இப்பிரபஞ்சம் தோன்றவில்லை; அணுக்கள் இரண்டாவதோ மூன்றாவதோ ஆன நிலையாக இருக்கலாம். ஆதிப்பொருள் அணுக்களாகமாறி, பருப்பொருளாகவும் பெரும் பொருள்களாகவும் விரியலாம்; இக்கால ஆராய்ச்சியும் அம்முடிவையே சார்வதாகத் தெரிகிறது. உதாரணமாக, ஆகாசம் (Ether) பற்றிய இக்காலக் கொள்கைப் படி ஆகாசம் அணுக்களால் ஆனது என்பதால் ஒன்றும் தீர்மான மாகாது. இதைத் தெளிவுபடுத்துவோம். காற்று அணுக்களால் ஆனது என்போம். ஆகாயம் எங்கும் உள்ளது, எல்லாப் பொருள்களுக்குள்ளும் புகுந்துள்ளது, எங்கும் பரந்துள்ளது. இந்தக் காற்றணுக்கள் இந்த ஆகாயத்தில் மிதப்பது போலத் தோன்றுகின்றன என்போம். ஆகாயம் அணுக்களால் ஆனது என்று கூறுவோமானால், இரண்டு அணுக்களுக்கிடையில் இடம் இருக்குமே—இந்த இடத்தை அடைப்பது யாது? இதனினும் நுட்பமான ஆகாயம் ஒன்று இதை அடைந்திருக்கிறது என்றால், 'இந்த நுட்பமான ஆகாயத்தின் அணுக்களின் இடை வெளியை எது நிரப்புகிறது?' என்ற வினா எழும். இந்த வாதத்துக்கு முடிவே இல்லை. சாங்கியர் கூறும் காரணம் சூனியத்தில் முடிவடைகிறது என்பதேயாம். எனவே, அணுக்கொள்கை முடிவானதாகாது. சாங்கியர் கொள்கைப்படி பிரகிருதி எங்கும் நிறைந்தது; எங்கும் நிறைந்த இவ்வியற்கைப் பிழம்பில் உலகப் பொருள்களின் காரணங்களெல்லாம் இருக்கின்றன. காரணம் என்பது என்ன? நமக்குத்தோன்றும் பருநிலையின் நுட்ப

நிலேயே காரணம்; விரியும் பொருளின் ஒடுக்கமான நிலேயே காரணம். அழிவு என்பது என்ன? காரண நிலேக்குமீளுதலே. உங்களிடம் ஒரு சட்டி இருப்பதாகக் கருதிக்கொள்ளுங்கள். தடியால் அதை ஓர் அடியடித்தால் அது உடைந்து போகின்றது. இதன் பொருள் என்ன? காரியங்கள் தமது சொந்தமான நிலேக்கு மீளுகின்றன என்பதே; சட்டியைப் படைப்பதற்கு வேண்டியிருந்த பொருள்கள் தமது தொடக்க நிலேக்கு மீண்டும் செல்லுகின்றன. இந்த அழிவுக்கருத்தை விட்டு, முழு நாசம் என்ற கருத்து தோற்றத்திலே பொருளற்றதாம். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கபிலர் கூறிய இந்தச் சாங்கிய உண்மையை—காரியம் காரணமாவதே அழிவு, என்ற உண்மையை—இக்கால பௌதிக விஞ்ஞான முறைப்படி மெய்பித்துக்காட்ட இயலும். நுண்ணிய நிலேக்கு மீண்டும் செல்லுதல் என்பதே நாசம் என்பதெல்லாம். பொருளுக்கு அழிவில்லே என்பதை ஆராய்ச்சிச்சாலேயில் எப்படிச் சோதித்துக் காட்டுவது என்பது நமக்குத் தெரியும். இக்காலத்து நமது அறிவு நிலேயில் எவனுவது ஒருவன் எழுந்துநின்று, 'பொருளோ ஆன்மாவோ முற்றும் அழிந்து சூனியமாகிவிடும்,' என்று உரைத்தால், அவன் பேச்சு கேலிக்குக்குத்தான் இடமாகும். படிப்பில்லாத அறிவிலிகளே இப்படி ஒரு கொள்கையை வெளியிடுவார்கள். அந்தப் பழங்காலத் தத்துவவாதிகள் போதித் ததும், இக்கால விஞ்ஞானிகளின் கொள்கையும் ஒன்ருய் இருப்பது வியப்பைத் தருகிறது. இப்படி இருந்து தீரவேண்டும்; இதுதான் அது உண்மை என்பதை மெய்ப்பிப்பதாகும். மனத்தை ஆதாரமாகக் கொண்டு முன்னவர் ஆராய்ந்தனர். இந்தப் பிரபஞ்சத்தின் மனப்பகுதியைத் துருவி ஆராய்ந்து அவர்கள்சில முடிவுகளேக்கண்டார்கள். நாம் பௌதிகப் பகுதியை ஆராய்ந்தாலும், இதே முடிவுக்குத்தான் வரவேண்டும்; இரண்டும் ஒரு மையத்திலேதானே முடியவேண்டும்.

பிரபஞ்சத்திலே உள்ள பிரகிருதியின் முதல் தோற்றத்தைச் சாங்கியர்கள் 'மகத்து' என்ற சொல்லால் வழங்குகிருர்கள் என்பதை நீங்கள் நினேவு கூரவேண்டும். இதை அறிவு எனலாம். மிகப் பெரிய தத்துவம் என்பது அதன் பதப்பொருள். பிரகிருதி யில் ஏற்படும் முதல் மாற்றம் இந்த அறிவுதான். இதைத் தன்னுணர்வு என்று மொழி பெயர்க்க மாட்டேன்; ஏனெனின் அப்படிச் சொல்வது தவருகும். உணர்வு (Consciousness) என்பது இந்த அறிவின் ஒரு பகுதிதான். மகத்து என்பது

எங்கும் உள்ளது. உணர்வு நிலை, உணர்வு கரந்த நிலை, உணர்வு கடந்த நிலை ஆகிய எல்லாவற்றையும் அடக்கி நிற்பதுதான் மகத்து; ஆகவே, உணர்வின் ஒரு பகுதிக் குரிய பெயரால் மகத்தைச் சுட்டுவது பொருந்தாது. உதாரணமாகப் பிரகிருதியில் உங்கள் கண்முன் நடக்கும் சில மாறுதல்களைக் கண்டு தெரிந்துகொள்கிறீர்கள். ஆனால் வேறு சில மாறுதல்கள் மனிதக்காட்சிக்குப் புலனாகாத அளவிற்கு நுண்ணியன ஆகின்றன. இவை இரண்டுக்கும் காரணம் ஒன்றுதான். இம்மாறுதல்களை உண்டுபண்ணுவது அதே மகத்து. மகத்தினிடமிருந்துதான் பிரபஞ்ச அகங்காரம் தோன்றுகிறது. 'இவையெல்லாம் பொருளே. பொருளுக்கும் மனத்துக்கும் தரத்தில் அல்லாது வேறுபாடு இல்லை. பருநிலை யிலோ நுண்ணிலையிலோ பொருள் ஒன்றேயாம். ஒன்றே மற்றொன்றாக மாறுகிறது. இதுவும், இக்கால உடலியல் ஆராய்ச்சி முடிவும் ஒன்றாகவே இருக்கின்றன. 'மனம் மூளையி லிருந்து வேறுபட்டதன்று,' என்று நம்புவதனால் மிக்க போராட் டங்களிலும் குழப்பங்களிலுமிருந்து நாம் தப்பலாம். அகங் காரமும் இரண்டு வகையாக மாறுகிறது. ஒரு வகையில் அது உறுப்புக்களாக மாறுகிறது; உணர்ச்சியுறுப்புகள் எதிர்வினை உறுப்புகள் என உறுப்புகள் இரண்டு வகைப்படும். கண், காது என்ற பொறிகளாகிய இவை வெளி உறுப்புகள் அல்ல; அவற்றுக்குப் பின்னால் உள்ள நரம்பு மையங்களோ மூளை மையங்களோ இவை. இந்த அகங்காரம் என்ற பொருள் மாறுபடுகிறது; அந்தப் பொருளால் இந்த மையங்கள் ஆக்கப்படுகின்றன. இதே பொருளினாலேதான் ஆக்கப் படுவன, மற்றொரு வகையான 'தன்மாத்திரைகள்' அதாவது நம் பொறிகளைத் தாக்கி உணர்ச்சியை விளக்கும் நுட்ப மான பொருள் அணுக்கள். இவற்றை நாம் உணர இயலாது; ஆனால், இவை அங்கே உள்ளன என்பதை மட்டும் தெரிந்து கொள்ளலாம். தன்மாத்திரைகளினின்றே, நாம் காணவும் உணரவும் செய்யும் பருப் பொருள்களான நிலம் நீர் போன்ற அனைத்தும் ஏற்படுகின்றன. இது உங்கள் மனத்தில் நன்கு பதியவேண்டும். இதைப் புரிந்து கொள்வது கடினம்; மேலை நாடுகளில் மனத்தையும் பொருளையும் பற்றிய கருத்துகள் வேடிக் கையானவை. இப்பதிவுகளை நம் மூளையிலிருந்து விலக்குவது அரிதாகும். இளமையில் மேலைநாட்டுத் தத்துவ சாத்திரம் படித்த எனக்கே பெரும்பாடு வேண்டியிருந்தது. இவையெல்லாம்

பிரபஞ்சப் பொருள்கள். எங்கும் நிறைந்த இப்பொருட் பரப்பை, உடைபடாத, வேறுபடாத, பிரபஞ்சப் பொருள்களுக்கெல்லாம் ஆதி நிலையாய் உள்ள ஒரே பொருளை, பால் தயிராவது போல மாறுபடத் தொடங்கும் இதை நினைத்துப் பாருங்கள். இதன் முதல் மாற்றமே 'மகத்து' ஆகும். இந்த மகத்து, இன்னும் பருப்பொருளான அகங்காரமாக மாறுகிறது. மூன்றும் மாற்றத்தால் தோன்றுவன, பிரபஞ்ச இந்திரியங்களும் பிரபஞ்ச நுண் அணுக்களுமே. இறுதி நுண்ணணுக்களே பிறகு இணைந்து நாம் கண் காது மூக்கு முதலிய பொறிகளால் கண்டு கேட்டு முகரும் இப்பருப்பொருட் பிரபஞ்சமாகின்றன. பிரபஞ்ச விரிவின் திட்டம் சாங்கியர் கொள்கைப்படி இதுதான்; அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் இருந்தே தீரவேண்டும். ஒரு தனி மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனிடம் முதலில் எந்த வேறுபாடும் இல்லாத மூலப் பிரகிருதிக்கூறு ஒன்று அடிப்படையாய் இருக்கிறது. இந்த மூலப்பிரகிருதி மகத்தாக மாறுகிறது; இது பிரபஞ்ச அறிவின் ஒரு சில அணுவாகும். இந்த அறிவின் சிற்றணுவே அகங்காரமாக மாறுகிறது; பிறகு புலன் பொறிகளாகவும் தன் மாத்திரைகளாகவும் மாறி, இந்தத் தன்மாத்திரைகளின் பல வகைச் சேர்க்கையால் உடலை ஆக்குகிறது. இது உங்கட்குத் தெளிவாயிருக்க வேண்டும். சாங்கிய வேதாந்தத்தின் அடிப்படி இதுதான். நீங்கள் இதை நன்கு அறிந்துகொள்வது முற்றும் அவசியம். உலகம் முழுவதையும் பற்றிய தத்துவத்தின் அடிப்படை இதுதான். கபிலரது சாங்கியத் தத்துவத்திற்குக் கடமைப்பட்டிராத எந்தத் தத்துவ சாத்திரமும் உலகில் இல்லை. பைதாகோரஸ் என்ற கிரேக்க அறிஞர் இந்தியாவுக்கு வந்து இந்தத் தத்துவ நூலைக் கற்றுச் சென்றார்; இதுதான் கிரேக்க தத்துவ இயலின் ஆரம்பம். பிறகு இது அலெக்ஸாண்டிரியத் தத்துவ இயலாகி, பின்னர் ஞேய தத்துவ இயல் (Gnostic) ஆயிற்று. சாங்கியத் தத்துவம் இரண்டாகப் பிரிந்தது; ஒன்று ஐரோப்பாவுக்கும் அலெக்ஸாண்டிரியாவுக்கும் சென்றது; மற்றது இந்தியாவிலேயே நின்றது. இதிலிருந்துதான் வியாச வேதாந்தம் கிளம்பியது. உலகத்தில் முதல் முதல் தோன்றிய, நியாய அறிவுக்குப் பொருந்திய வாதம் கபிலரது சாங்கியத் தத்துவ இயலே. தத்துவ ஆராய்ச்சி செய்யும் ஒவ்வொருவனும் இவரை ஆதி குருவாகவே வணங்கவேண்டும். தத்துவ இயலின் பெருந்தந்தையார் என்ற நிலையிலே இவர்க்கு நாம் செவிசாய்த்தே

தீரவேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். இந்த ஆச்சரிய மனிதரை, தத்துவவாதிகளுக்குள் முதல்வரைப் பற்றிய பேச்சைச் சுருதிகளிலும் காண்கிறோம்: "கபிலன் என்ற முனிவனை முதலில் தோற்றுவித்த இறைவனே!" என்கிறது சுருதி. இவரது அறிவு எவ்வளவு வியப்புக்கு உரியது! யோகிகளின் அசாதாரணமான திறனுக்குச் சான்று வேண்டுமானால், கபிலர் போன்றவர்களே சான்று. இவர்களிடம் அணுத்தரிசினியோ, தொலை நோக்கியோ இல்லை என்றாலும் இவர்கள் எத்தகைய நுண்ணுணர்வினரானார்! இவர்கள் பொருள்களை ஆராய்ந்த திறன் எவ்வளவு நிறைவுற்றது. வியப்புக்கு உரியது!

ஷோபனேரின் தத்துவ இயலுக்கும் இந்திய தத்துவ இயலுக்கும் உள்ள வேற்றுமையை இங்கே காட்டுகிறேன். ஆசையோ சங்கற்பமோ எல்லாவற்றுக்கும் காரணம் என்கிறார் ஷோபனேர். 'வாழ வேண்டும்' என்ற சங்கற்பந்தான் நாம் விரிவதற்குக் காரணமாய் இருக்கிறது. ஆனால், நாம் இதை ஒப்புக்கொள்வதில்லை. இந்தச் சங்கற்பமும் கட்டளை நரம்புகளும் (Motor nerves) ஒன்றே ஆகும். நாம் ஒரு பொருளைக் காணும்போது சங்கற்பம் இல்லை. ஆனால், அதைப் பற்றிய உணர்ச்சிகள் மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன் எதிர்வினை ஏற்படுகிறது,—'இதைச் செய், இதைச் செய்யாதே' என்ற கட்டளையைப் பிறப்பிக்கிறது; அகங்காரப் பொருளின் இந்நிலையைச் சங்கற்பம் (Will) என்கிறோம். சங்கற்பத்தின் ஓர் அணுகூட எதிர்வினை அல்லாததாக இருக்க இயலாது சங்கற்பத்திற்கு முன் பல செயல்கள் நடைபெறுகின்றன. அகங்காரத்திலிருந்து உண்டாக்கப்பட்ட ஒன்றுதான் சங்கற்பம்; இன்னும் நுட்பமான மகத்து என்பதிலிருந்து ஆக்கப்பட்டதுதான் அகங்காரம். இதுவும் பாகுபாடற்ற மூலப் பிரகிருதியிலிருந்து ஆக்கப்பட்டதே ஆகும். 'நாம் காண்பதெல்லாம் சங்கற்பம்,' என்பது பௌத்தர்களின் கருத்து. மனநூலின்படி இது முற்றும் தவறு; சங்கற்பத்தைக் கட்டளை நரம்புகளோடுதான் இணைத்துக் கூற இயலும். ஆதலின், கட்டளை நரம்புகளை எடுத்துவிடின், மனிதனுக்குச் சங்கற்பம் என்பதே இல்லாமற் போய்விடும். உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கக்கூடிய இந்த உண்மை, தாழ்ந்த நிலை விலங்குகள் சம்பந்தமான நீண்ட தொடர்ந்த சோதனைகளுக்குப் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினையை இப்போது எடுத்துக்கொள்ளலாம்.

மனிதனுக்குள் இருக்கும் மகத்து, ஆகிய அறிவுப் பெருந்தத்துவத்தைப் பற்றித் தெரிந்துகொள்வது அவசியம். இந்த அறிவுதான் நாம் 'அகங்காரம்' என்று சொல்லும் பொருளாக மாறுகிறது. உடம்பில் உள்ள எல்லா வகைச் சக்திகளுக்கும் காரணமாவது இந்த அறிவுதான். உணர்வு கரந்தநிலை, உணர்வுநிலை, உணர்வு கடந்தநிலை ஆகிய யாவுமாய் நிற்பது இதுதான். இந்த மூன்று நிலைகளும் என்ன? உணர்வு கரந்தநிலையை நாம் விலங்குகளிடம் காண்கிறோம்; இதையே இயல்பூக்கம் (Instinct) என்கிறோம். இது கிட்டத்தட்டத் தவற இயலாதது; மிகச் சுருங்கிய எல்லையுடையது. ஏதாவது ஒரு புதுப்பொருள் வந்ததும், அது குருடாகிவிடுகிறது. அது ஓர் இயந்திரம் போலத் தொழிற்படுகிறது. இதற்குப் பிறகு அதனினும் உயர்ந்த உணர்வுநிலை வருகிறது. இது தவறக்கூடியது; அடிக்கடி தவறு செய்கிறது. ஆனால், இதன் தொழிற்களம் விரிந்தது; இதன் முடிவுகள் தாமதமாக ஏற்படும்; இதையே நியாய அறிவு என்கிறோம். இது இயல்பூக்கத்தினும் மிகப் பெரிது, ஆனால் இயல்பூக்கம் நியாய அறிவினும் உறுதிமிக்கது. இயல்பூக்கத்தினும் பார்க்க நியாய அறிவுக்குத் தவறுகள் செய்ய அதிக வாய்ப்பு உண்டு. மனத்திற்கு இதனினும் உயர்ந்த நிலையும் உண்டு. இது உணர்வு கடந்தநிலை (Super-consciousness), இது பயிற்சி பெற்றுள்ள யோகிகளுக்கே உரியது. இது தவறற்றது, நியாய அறிவினும் மிக விரிந்த பரப்பில் இது தொழிற்படும். இதுவே உணர்வுநிலைகளில் மிக உயர்ந்ததாகும். ஆக, இங்கே இருப்பதற்கெல்லாம் மெய்யான காரணமானது 'மகத்து'தான் என்பதையும், இது பல வகையாக விரிகிறது என்பதையும், உணர்வுக்குரிய மூன்று நிலைகளாகிய உணர்வு கரந்தநிலை, உணர்வுநிலை, உணர்வு கடந்தநிலை எல்லாவற்றையும் அடக்கியுள்ளது என்பதையும் நாம் நினைவுறுத்திக் கொள்ளவேண்டும்.

அடிக்கடி கேட்கப்படும் நுட்பமான வினா ஒன்று இப்போது எழுகிறது. 'பிரபஞ்சத்தை ஆக்கிய இறைவன் நிறைவுற்றவன் என்றால், பிரபஞ்சத்தில் குறைகள் காணப்படுவானேன்?' என்பதுதான் இந்தக் கேள்வி. நாம் பிரபஞ்சம் என்று சொல்வது நாம் காண்பதையே; அது, நம் புலன் உணர்வும் (consciousness), நியாய அறிவும் நிகழும் இச்சிறிய நிலமேயாகும்; இதற்கு அப்பால் நாம் காண்பதில்லை. இப்போது இந்தக் கேள்விக்கே இடம் இல்லை. ஒரு பொருளின் பிழம்பிலிருந்து ஒரு சிறு பகுதியை மட்டும் எடுத்து, அதை ஆராய்ந்தால், அது பொருத்தம் அற்ற

தாகத் (inharmonious) தோன்றுகிறது. இது இயற்கைதானே? பிரபஞ்சமும் பொருத்தமற்றதாகத் தோன்றுவதற்குக் காரணம் நாம் அதை அவ்வாறு ஆக்குவதே. இது எப்படி? நியாய அறிவு என்பது என்ன? அறிவு என்பது யாது? பொருளுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடிப்பதே அறிவு. நீர் தெருவில் சென்று ஒரு மனிதனைப் பார்த்து, "இவன் ஒரு மனிதன் என்பது தெரியும்," என்று சொல்கிறீர். இதற்குக் காரணம் நீர் உமது மனத்திலுள்ள பதிவுகளை, சித்தத்திலுள்ள சுவடுகளை நினைவுறுதலேயாம். நீர் பல மனிதர்களைப் பார்த்தீர்; ஒவ்வொருவரைப் பார்த்தபோதும் ஒரு வகைப் பதிவு மனத்தில் பதிந்திருந்தது. நீர் இந்த மனிதனைப் பார்த்தவுடன் இதை உமது களஞ்சியத்திலுள்ளதோடு ஒப்பிட்டு, இதேபோன்ற பல படங்கள் அங்கே இருப்பதைக் காண்கிறீர். இவற்றைக் கண்டவுடன் நீர் திருப்தியடைகிறீர்; இப்புதியதை மற்றவையோடு சேர்த்துவிடுகிறீர். புதுப் பதிவு ஒன்று தோன்றி, இதோடு தொடர்புற்றவை நம் மனத்தில் ஏற்கெனவே இருந்தால், நமக்கு திருப்தி வந்துவிடுகிறது; இப்படித் தொடர்பு கொள்ளும் நிலையே அறிவு எனப்படும். ஆதலால் முன்னமே நம் மனத்தில் உள்ள அனுபவக் களஞ்சியத்திலே ஒரு புது அனுபவத்தை உரிய பொந்தில் சேர்ப்பதே, அறிவு எனப்படும்; ஏற்கெனவே நும் மனத்தில் களஞ்சியம் ஒன்று இருந்தால் ஒழியப் புது அறிவுபெற இயலாது என்பதற்கு இது ஒரு தக்க எடுத்துக்காட்டு ஆகும். நுமக்கு அனுபவம் ஒன்றுமே இல்லாமல் நும் மனம் தொடக்கத்தில் வெற்றுப் பலகையாய் இருந்தால்—சில மேலநாட்டுத் தத்துவ சாத்திரிகள் இப்படிச் சாற்றுகின்றுர்கள்—நுமக்குப் புது அறிவு ஒன்றுமே பெற இயலாது. காரணமாவது: மனத்தில் முன்னமே நிறைந்திருக்கும் தொடர்புகளைக் கொண்டு புதியதை இன்னதென அறிந்து கொள்வதே அறிவு என்பது. ஒரு புதுப் பதிவை ஒப்பிட்டுப் பார்க்க அருகே களஞ்சியம் ஒன்று இருக்கவேண்டும். இத்தகைய களஞ்சியம் ஒன்று மனத்தில் இல்லாமல் குழந்தை ஒன்று பிறப்பதாக வைத்துக்கொண்டால், அது எவ்வித அறிவையும் பெற இயலாது. ஆதலால், குழந்தை முன்னமே ஓர் அறிவுக் களஞ்சியம் பெற்ற நிலையில் இருந்திருக்க வேண்டும்; அதனுல் அறிவு நித்தியமாகப் பெருகிக்கொண்டே போகின்றது. இந்த வாதம் தவறு என்று காட்ட ஒரு வழி சொல்லுங்கள், பார்க்கலாம். இது ஒரு கணக்குக்கலை உண்மை. 'பழைய அறிவுக்களஞ்சியம் இல்லாத இடத்தில் புது அறிவு சாத்தியமே இல்லை,' என்பதைச்

சில மேலைநாட்டுத் தத்துவக் கலைஞரும் ஒப்புக்கொள்கின்றனர். குழந்தை அறிவுக் களஞ்சியத்தோடு பிறக்கிறது என்பதையும் அவர்கள் உருவாக்கியுள்ளனர். ஆனால், குழந்தை உலகிற் பிறக்கும்போது கொணரும் பதிவுகளுக்குக் காரணம் குழந்தையின் முன்னைய முயற்சி அன்று; அதன் முன்னோர்களின் அனுபவமே; இது குலமுறைத் தொடர்பே ஆகும் என்பது அந்த மேலைநாட்டார்களின் கூற்றாகும். இந்தக் கருத்து முற்றும் தவறு என்பதை அவர்கள் விரைவில் உணர்வார்கள். பாரம்பரியம் என்ற இந்தக் கருத்துகளை இப்போது கடினமாகத் தாக்கி வருகின்றனர், ஜெர்மானியத் தத்துவ அறிஞர் சிலர். பாரம்பரியம் என்பது மிகவும் சரியே; ஆனால், இது குறைவுடையது; இது உடலியற் பகுதிக்கே விளக்கமாகும். நம்மைப் பாதிக்கும் சூழ்நிலைகளை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்? பல காரணங்கள் சேர்ந்து ஒரு காரியத்தை ஆக்குகின்றன. நம்மைப் பாதிக்கும் விளைவுகளுள் சூழ்நிலையும் ஒன்று. நமது சூழ்நிலையை நாமே ஆக்கிக்கொள்கிறோம்; நம் கழிந்த காலத்தைப் பொறுத்து நமது நிகழ்காலச் சூழ்நிலை அமைகிறது. குடிகாரன் ஒருவன் நகரத்தின் மிக மோசமான சேரியை நோக்கியே இழுக்கப்படுகிறான்.

அறிவு இன்னது என்பது இப்போது விளங்குகிறதல்லவா? அறிவு என்பது பழைய பதிவுகளோடு புதியதைத் தக்க பொந்தில் அடைப்பதே; புதியதை இன்னதெனக் காணலே. 'இன்னதெனக் காணல்' என்பதன் பொருள் என்ன? ஏற்கெனவே உள்ள, அது போன்ற பதிவுகளோடு ஒப்பிட்டுத் தொடர்புகளைக் காண்பதே இது. அறிவுக்குப் பொருள் இதற்கு அப்பால் இல்லை. அறிவு என்பது தொடர்புகளை ஏற்படுத்தல் என்றால், ஒன்றை அறிய வேண்டுமானால் அதே போன்ற பதிவுத் தொடர் முழுவதையும் நாம் கண்டாகவேண்டும் என்பதுதான் பொருள்; அற்றன்றோ? ஒரு கூழாங்கல்லை எடுத்துக்கொள்வோம்; அதன் தொடர்பைக் காணவேண்டின், இது போன்ற கூழாங்கற்களின் தொடர் முழுவதையும் நீர் பார்த்தாக வேண்டும். ஆனால், பிரபஞ்சத்தை முழுமையாகக் காணும் காட்சி சம்பந்தமாக இது இயலாது. நம் மனத்தின் பொந்தில் காட்சியின் ஒரே ஒரு பதிவுதான் இருக்கிறது; இதே போன்ற, இதே இனத்தைச் சேர்ந்த வேறு பதிவு ஒன்றுமே இல்லை. இதை வேறு எதனோடும் ஒப்பிட இயலாது. இதை இது போன்றவற்றின் தொடரோடு ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. எனவே, பிரபஞ்சத்தின் இந்தத் துண்டு, நம் உணர்வால் பிரிக்கப்பட்டு

நிற்கும் இது, வியப்பைத்தரும் ஒரு புதுப் பொருள்; இதன் தொடர்புகளைக் காண நமக்கு இயலவில்லை. இதுபற்றியே நாம் இதை அறிந்துகொள்ளப் போராடுகிறோம், அது பயங்கரமானது, கெட்டது, தீயது என்று கருதுகிறோம்; சில சமயம் அது நல்லது என்றும் நாம் நினைக்கலாம்; ஆனால், என்றும், அது குறை யுடையது என்றேதான் கருதுகிறோம். பிரபஞ்சத்திற்குரிய தொடர்புகளைக் காணும் போதுதான் அதனை அறியலாகும். பிர பஞ்சத்தையும் உணர்வையும் தாண்டி அப்பால் செல்லும்போது நாம் அதை இன்னதென அறிய இயலும்; அப்போதுதான் பிர பஞ்சத்தின் விளக்கம் தோன்றும். அவ்வாறு செய்யும் வரை, எத்தனை முறைதான் தலையைச் சுவரில் மோதிக்கொண்டாலும் பிரபஞ்சம் நமக்கு ஒருபோதும் விளங்காது; ஏனெனில், அறிவு என்பது ஒத்த பொருள்களைக் கண்டுபிடித்தலேயாம். நமது உணர்விற்கு விளங்கும் நிலத்தில் ஒரேயொரு காட்சியையே அதைப்பற்றி நாம் பெறுகிறோம். இறைவனைப் பற்றிய நம் கருத்தும் இப்படித்தான். கடவுளைப்பற்றி நாம் காண்பதெல்லாம் ஒரே ஒரு பகுதிதான்; பிரபஞ்சத்தின் ஒரே ஒரு பகுதியைக் காண்பதுபோல; மிகுந்ததெல்லாம் மனித அறிவுக்கு அப்பாற் பட்டது. "நானே எல்லாம்! இந்தப் பிரபஞ்சமே எனது ஒரு கூறு என்று சொல்லும்படி நான் அவ்வளவு பெரியவன்." இத னாலேதான் நாம் இறைவனைக் குறை உடையவனாகக் காண் கிறோம்; அவனை உணர்ந்துகொள்ள முடியவில்லை. தருக்க அறி விற்கும் உணர்விற்கும் அப்பால் போவது ஒன்றுதான் இறைவனை யும் பிரபஞ்சத்தையும் அறியும் வழி ஆகும். "எப்போது நீ கேட்கப்படுவது, கேட்டல் இரண்டிற்கும் கருதப்படுவது, கருதல் இரண்டிற்கும் அப்பால் போகிறாயோ, அப்போதுதான் உனக்கு உண்மை விளங்கும்." "நீ வேதங்களையும் கடந்து செல்; அவை பிரகிருதி வரையிலுமே, முக்குணம் வரையிலுமே செல் கின்றன." இவற்றைக் கடந்த பிறகுதான் நாம் பொருத்தத்தைக் காண்கிறோம்; முன்பன்று.

பிண்டமும் அண்டமும் சரியான அதே முறைப்படிதான் அமைந்திருக்கிறது; பிண்டத்தில் நமக்கு நடுப்பகுதியான ஒரு பகுதி மட்டும் தெரியும். உணர்வு கரந்தநிலையும் உணர்வு கடந்த நிலையும் தெரியாது; இடையிலுள்ள உணர்வுநிலை மட்டுமே நமக்கு தெரியும். ஒருவன் எழுந்து நின்று, "நான் பாவி," என்று சொன்னால் அவன் சொல்லுவது உண்மை அன்று. காரணம், அவன் இன்னான் என்பது அவனுக்குத் தெரியாது. மக்களுக்குள்

மிகவும் ,பெரிய பேதை அவன். தன்னைப்பற்றியும் அவனுக்கு ஒரு பகுதியே தெரியும்; அவனுடைய அறிவு அவன் நிற்கும் இடத்தின் ஒரு பகுதியை மட்டும் பற்றியதே ஆகும். அவ்வாறே, இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும்'ஒரு பகுதியைத்தான் அறிவால் நாம் அறிய இயலும்; முழுவதையும் அறிய இயலாது. காரணம்: உணர்வு கரந்தது, உணர்வு நிகழ்வது, உணர்வு கடந்தது எனும் மூன்றும், தனி மனிதனது மகத்தும், பிரபஞ்சத்தின் மகத்தும், பின் தோன்றும் மாற்றங்கள் எல்லாமும் சேர்ந்ததே பிரபஞ்சம்.

பிரகிருதியை மாற்றமடையச் செய்வது எது? பிரகிருதி முழுவதுமே, ஒவ்வொன்றுமே 'ஜடம்', அறிவற்றது என்பதை நாம் இதுவரை கண்டோம். அது பலவற்றின் சேர்க்கையும் அறிவற்றதும் ஆகும். எங்கெல்லாம் நியதி இருக்கிறதோ அங் கெல்லாம் அதன் ஆட்சிக்கு உட்பட்ட மண்டலம் அறிவற்றது என்பது மெய்பிக்கப்படுகிறது. மனம், அறிவு, சங்கற்பம் முதலிய எல்லாமே அறிவற்றவை. ஆனால், அவை எல்லாமே எவரோ ஒருவரது 'சித்'தைப் பிரதிபலிக்கின்றன; சாங்கியர்கள் சொல்லும் எல்லாவற்றுக்கும் அப்பால் உள்ள புருடரே அவர். பிரபஞ்சத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கெல்லாம் தம்மை அறி யாதே காரணமாய் இருப்பவர் இந்தப் புருடரே. அதாவது, இந்தப் புருடரே—பிரபஞ்ச ரீதியில்—பிரபஞ்சத்துக்கு இறைவர் ஆவார். இறைவனது சங்கற்பமே பிரபஞ்சப் படைப்புக்குக் காரணம் என்கிறார்கள். சாதாரணப் பேச்சுக்கு இப்படிச் சொல் வது சரி; ஆனால், இது உண்மையாய் இருக்க இயலாது என்பது தெரிகிறது. படைப்பது சங்கற்பமாக எப்படி இருக்க இயலும்? பிரகிருதியின் மூன்றாவது நான்காவது பரிணாமமே சங்கற்பம்? இதற்கு முன்னால் பல பொருள்கள் இருக்கின்றன. இவற்றை ஆக்கியது எது? சங்கற்பம் என்பது கூட்டுப் பொருள். கூட்டுப் பொருள் எதுவும் பிரகிருதியின் படைப்பே ஆகும். எனவே, இந்தச் சங்கற்பம் பிரகிருதியைப் படைத்தது என்பது பொருந் தாது. எனவே, இறைவனது சங்கற்பம் பிரபஞ்சத்தைப் படைத் தது என்பது பொருந்தாது. நமது சங்கற்பம் நம் உணர்ச்சி யின் ஒரு சிறு பகுதியிலேயே பரவி நின்று நமது மூளையை இயக்குகிறது. நமது உடலையோ பிரபஞ்சத்தையோ நமது சங் கற்பம் இயக்குவதில்லை. இந்த உடலை இயக்கும் சக்தியின் ஓர் அமிசந்தான் நமது சங்கற்பம். இப்படியே பிரபஞ்சத்திலும் சங் கற்பம் இருக்கிறது; ஆனால், அது பிரபஞ்சத்தின் ஒரு பகுதியே ஆகும். பிரபஞ்சம் முழுவதையும் இயக்குவது சங்கற்பம் அன்று.

எனவே, சங்கற்பம் என்ற கொள்கையால் பிரபஞ்சத்தை விளக்க இயலாது. சங்கற்பந்தான் உடலை இயக்குகிறது என்ற கொள்கையை நான் ஒப்புக் கொள்வதாக வைத்துக்கொண்டால் எப்போதாவது சங்கற்பத்திற்கு உடல் அடங்காத நிலை ஏற்பட்டால் அப்போது எனக்குக் கோபம் பெருகி வரும். இது என் தவறு. சங்கற்பம்தான் உடலை இயக்கும் சக்தி என்று நீ நினைப்பதற்கு உனக்கு உரிமை ஏது? இப்படியே பிரபஞ்சத்தையும் சங்கற்பமே இயக்குவதாகக் கொண்டு இந்தக் கொள்கை பொருந்தவில்லை என்று கண்டால், அது என் தவறுதான். எனவே புருடன் என்பது சங்கற்பம் அன்று. அது அறிவாகவும் இருக்க இயலாது; அறிவும் ஒரு கூட்டுப்பொருள். மூளையோடு தொடர்புள்ள ஒரு வகைச் சடப்பொருளோடு சம்பந்தப்படாத அறிவு இருக்க இயலாது. அறிவு இருக்கிறது என்னும் போதெல்லாம் நாம் மூளை என்று சொல்லும் ஒரு வகைப் பொருளோடு தொடர்புள்ள ஒன்று இருந்தே தீர வேண்டும். இது குறிப்பிட்ட ஓர் உருவத்தை எடுத்துக்கொண்டு மூளையாக வேலை செய்கிறது. அறிவு இருக்கும் இடத்தில் எல்லாம், இந்த மூளை எனப்படும் பொருளைப் போன்ற ஏதாவது ஒன்று இருந்தே தீர வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட வடிவாகத் திரண்டு, மூளையின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். அறிவுஉள்ள இடமெல்லாம் அப்பொருள் ஏதோ ஒரு வடிவில் இருந்து தீரவேண்டும். ஆனால் அறிவே ஒரு கூட்டுப்பொருள். சரி; புருடன் என்பது என்ன? இது அறிவும் அன்று, சங்கற்பமும் அன்று; ஆனால், இவற்றுக்கெல்லாம் மூல காரணம் ஆனது. இது இருப்பதாலேதான் இவை இயங்கிப் பல வகையில் இணைந்து பல பொருள்களாகப் பரிணமிக்கின்றன. இந்தப் புருடன் பிரகிருதியோடு கலப்பதில்லை; இது அறிவும் அன்று, மகத்தும் அன்று. ஆனால், தூய்மையான ஆன்மாவாகிய புருடனே. "நான் சாட்சி; என் முன்னிலையில் பிரகிருதி அறிவுள்ளவற்றையும் அறிவில்லாதவற்றையும் படைக்கிறது."

பிரகிருதியில் உள்ள இந்த அறிவுணர்ச்சி என்பது என்ன? அறிவுதான் 'சித்து' என்று சொல்லப்படும் இந்த அறிவுணர்ச்சி. அறிவுணர்ச்சியின் அடிப்படை புருடனிடத்தில் இருக்கிறது; புருடனது இயல்பு இதுதான். இது விளக்க முடியாத ஒன்று. நாம் அறிவு என்று சொல்லும் எல்லாவற்றுக்கும் காரணமாவது இதுதான். புருடன் என்பது உணர்வு (consciousness) அன்று; உணர்வு ஒரு கூட்டுப்பொருள். ஆனால், உணர்வினுள் ஒளி

யாகவும் நல்லதாகவும் இருப்பதெல்லாம் புருடனுக்கு உரியதே ஆகும். புருடனிடம் உணர்வுச் சக்தியில்லை; அறிவிலுள்ள ஒளியெல்லாம் புருடனுக்கு உரியது. உணர்வு புருடனிடம் உள்ளது. ஆனால் புருடன் அறிவுடையவனல்லன், அறிபவனல்லன். புருடனிடத்திலுள்ள சைதன்யமும் பிரகிருதியும் சேர்ந்ததையே நாம் எங்கும் காண்கிறோம். பிரபஞ்சத்தில் எது சுகமோ, ஆனந்தமோ, ஒளியோ அது புருடனுக்கு உரியது; ஆனால், அது ஒரு கூட்டுப்பொருள், அது புருடன் பிரகிருதி இரண்டின் சேர்க்கையாதலின். "இன்பம் எங்கிருக்கிறதோ, அங்கெல்லாம் இறைவனாகிய அழியாத சக்தியின் ஒரு பொறி இருக்கிறது." "பிரபஞ்சத்திலுள்ள பெருங் கவர்ச்சி புருடனே ஆகும். இது பிரபஞ்சத்தோடு தொடர்பற்றது, அதோடு ஒட்டாதது. என்றாலும், பிரபஞ்சம் முழுவதையும் இது கவர்கிறது." பொன்னைத் தேடும் ஒரு மனிதனை நீங்கள் காண்கிறீர்கள்; இதற்குக் காரணம், அதற்குப் பின்னே புருடனது ஒரு பொறி இருப்பதே; ஆனால், அது ஏராளமான அழுக்கோடு கலந்திருக்கிறது. ஒருவன் தன் மகனிடமும், ஒரு பெண் தன் கணவனிடமும் அன்பு வைக்கும்போது கவர்ச்சிச் சக்தி யாது? இவற்றுக்குப்பின் புருடனது ஒரு பொறி இருப்பதுதான். அது அங்கே இருக்கிறது, ஆனால், நிறைய அழுக்கோடு கலந்திருக்கிறது. புருடன் அல்லாத எதற்கும் கவரும் சக்தி இல்லை. "அறிவுணர்ச்சியற்ற இந்த உலகில் புருடன் ஒன்றே அறிவுள்ளது." சாங்கியத்தில் கூறப்படும் புருடன் இதுவே. ஆதலால் புருடன் எங்கும் நிறைந்தது என்பது இதனால் கட்டாயமாகப் பெறப்படுகின்றது. எங்கும் நிறைந்திராத பொருள் எல்லைக்கு உட்பட்டே இருக்க வேண்டும். எல்லைகள் (அனைத்தும்) ஆக்கப்படுபவை. ஆக்கப்படுவதற்குத் தொடக்கமும் முடிவும் இருந்தே தீரவேண்டும். புருடன் எல்லைக்கு உட்பட்டது என்றால், அது சாகவேண்டும்; அதற்குச் சுதந்திரம் இராது: அதுவே முடிபாய் இராது; அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். எனவே, அது எங்கும் நிறைந்தது தான். கபிலர் கொள்கைப்படி, புருடன் பல; கணக்கற்றது. உங்களிடமும் எங்களிடமும் ஒவ்வொருவரிடமும் ஒரு புருடன் இருக்கிறது. எண்ணிக்கையில் அடங்காத வட்டங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் எல்லைக்கு உட்படாதது, அவை பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்திருக்கின்றன. புருடன் மனமும் அன்று, பொருளும் அன்று; அதன் எதிர்வினையே நாம் அறிவதெல்லாம். அது எங்கும் நிறைந்தது என்றால், அதற்குச்சாவோ பிறப்போ

இல்லை. பிரகிருதி தன் நிழலாகிய பிறப்பு இறப்புக்களை அதன் மேல் வீழ்த்துகின்றது. ஆனால், தன் இயல்பில் அது தூய்மை யானது. இது வரையில் சாங்கியத்தத்துவம் எவ்வளவு வியப் புக்கு உரியது என்பதைக் கண்டோம்.

இனி அதற்கு எதிரான சில சான்றுகளைப் பார்ப்போம்: நாம் கண்டவரையில் ஆராய்ச்சி பூரணமாயுள்ளது. மன நூல் முறையும் மறுக்கவொண்ணாததே. இந்திரியங்களைப் புலன்கள் என்றும் கருவிகள் என்றும் பிரித்திருப்பதாலேயே, அவை மூலப் பொருள்களல்ல, கூட்டுப் பொருள்களே என்பது தெரிகிறது. அகங்காரத்தை, உணர்ச்சி சடப் பொருள் என்று பிரிப்பதாலும், இதுவும் சடம் என்பது விளங்குகிறது. மகத்து என்பதும் பொருளின் ஒரு நிலைதான். முடிவில் நிற்பதுதான் புருடன். இது வரையிலும் மறுப்பு ஒன்றும் இல்லை. 'பிரகிருதியைப் படைத்தவர் யார்?' என்று சாங்கியரைக் கேட்டால், 'புருடனும் பிரகிருதியும் ஆக்கப்படாதவை, எங்கும் நிறைந்தவை, புருடன் கணக்கற்ற பல' என்கிறார்கள். இந்தக் கொள்கைகளை மறுத்து, சிறந்த ஒரு முடிபைக் காணவேண்டும். இப்படிச் செய்யும் போதுதான் அத்துவைதத் தத்துவம் மலர்கின்றது. எல்லையற்ற இரண்டு பொருள்கள் எப்படி இருக்க இயலும்? எனவே, சாங்கி யரது முடிபு நிறைவற்ற பொதுவுரை அன்று; பூரண முடிவு அதிற் காணப்படவில்லை என்பது நமது எதிர் வழக்கு. வேதாந்தி கள் இந்தத் தொல்லைகளிலிருந்து தட்டித் தடவி எப்படியோ விடுபட்டு, நிறைவுற்ற ஒரு முடிபை அடைகிறார்கள் என்பதைக் காண்போம். எனினும் உண்மையாக எல்லாப் பெருமையும் சாங்கியர்களையே சாரும். ஒரு கட்டடம் கட்டி முடிந்த பிறகு அதனை முடிவாக அழகுபடுத்துவது மிகவும் எளிது.

சாங்கியமும் வேதாந்தமும்

நாம் இதுவரையில் பார்த்துவந்த சாங்கியத் தத்துவ இயலை இப்போது சுருக்கிச் சொல்கிறேன். இந்தச் சொற்பொழிவில், 'சாங்கியத்தின் குறைகள் என்ன ? வேதாந்தம் எப்படி இதன் குறைகளை நிரப்புகிறது !' என்பவற்றை நோக்க வேண்டும். நாம், 'நினைவு, அறிவு, நியாய உணர்வு, அன்பு, வெறுப்பு, தொடு உணர்ச்சி, சுவை, பொருள்' என்று சொல்லும் எல்லாப் பரிணாமங்களுக்குமே சாங்கியத் தத்துவப்படி பிரகிருதியே காரணம். சத்துவம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்று அமிசங்களைக் கொண்டது பிரகிருதி. இவை பண்புகள் அல்ல; இந்தப் பிரபஞ்சம் முழுவதும் தோன்றுவதற்குக் காரணமான மூலப் பொருள்கள். ஒரு படைப்பு வட்டத் தொடக்கத்தில் இவை சம நிலையில் (equilibrium) இருக்கின்றன. படைப்பு தொடங்கும் போது இவை பல வகையில் கலந்து மீண்டும் இணைந்து பிரபஞ்சமாக விரிகின்றன. இவற்றின் முதல் விரிவையே சாங்கியர்கள் 'மகத்து' அல்லது அறிவு என்பர். இதிலிருந்தே உணர்வு (consciousness) பிறக்கிறது. சாங்கியர்களின் கொள்கைப்படி இது ஒரு தத்துவமே (element) ஆகும். உணர்விலிருந்துதான் மனமும் பொறிகளும் தன்மாத்திரைகளும் (ஒலி, தொடு உணர்ச்சி முதலியவற்றின் அணுக்கள்) தோன்றுகின்றன. நுண்ணிய கூறுகள் எல்லாம் அகங்காரத்திலிருந்தே எழுகின்றன. இந்த நுண்ணிய கூறுகளிலிருந்தே நாம் சடப் பொருள் என்று சொல்லும் பரு அமிசங்கள் பிறக்கின்றன. தன்மாத்திரைகளை உணர இயலாது. இவைகளே பரு அணுக்களாக மாறியபின் இவற்றை நாம் உணரவும் புலன்களால் அறியவும் இயலும்.

சித்தமே அகங்காரம், புத்தி, மனம் என்பவற்றின் மூன்று வகைத் தொழில்களை இயற்றிப் பிராணன் என்ற சக்திகளை ஆக்குகிறது ; பிராணன் என்பது மூச்சு என்னும் கருத்தை இங்கே மறந்துவிடவேண்டும். பிராணனின் ஒரு விளைவு மூச்சு. உடல் முழுவதையும் ஆண்டு இயக்கும் நரம்புச் சக்திகளே பிராணன். இதுவே நினைவாகவும் பரிணமிக்கிறது. மூச்சு இயக்கந்தான் பிராணனின் முக்கியமான, எல்லோரும் நன்கு அறியக்கூடிய

தொழில். பிராணன் காற்றை இயக்குகிறதே ஒழிய, காற்ருல் பிராணன் இயங்கவில்லை. மூச்சியக்கத்தை அடக்கி ஆளும் கலையே 'பிராணுயாமம்' ஆகும். மூச்சியக்கத்தை அடக்கி யாளும் திறம் பெறவே பிராணுயாமம் பழகுகிருேம். இந்தச் சாதனத்தின் முடிவு மூச்சை அடக்கி ஆள்வதோ, சுவாச கோசத்தைப் பலப்படுத்துவதோ அன்று. இது வெற்று உடற் பயிற்சியே, பிராணுயாமம் அன்று. உடல் முழுவதையும் இயக்கும் உயிர்ச் சக்திகளே பிராணன்; இவற்றை உடம்பில் உள்ள வேறு கரணங்கள் இயக்குகின்றன; இவற்றையே மனம் என்கிருேம். இது வரையில் சரி. மன இயல் தெளிவாகவும் கணக்காகவும் இருக்கிறது. எனினும், இது உலகத்திலேயே மிகப் பழைய தருக்க அறிவுக்கொத்த வாதம்! எங்கெல்லாம் தத்துவ இயலோ தருக்க வாதமோ இருக்கிறதோ, அங்கெல்லாம் கபிலரிடமிருந்து யாதேனும் பெற்றிருப்பதாகும். பைத்தாகொராஸ் இதை இந்தியாவிலிருந்து கற்று கிரேக்க நாட்டாருக்குப் போதித்தார். பிறகு பிளேட்டோவுக்கு இதைப்பற்றிய அறிவு சிறிது ஏற்பட்டது. இதற்குப் பிறகு ஆதிக் கிறித்தவர்கள் (gnostics) இந்தக் கருத்தை அலெக்ஸாண்டிரியாவுக்குக் கொண்டு சென்ருர்கள். அங்கிருந்து இது ஐரோப்பாவுக்கு வந்தது. எங்கெல்லாம் மனஇயற் கலை, தத்துவ இயல் பற்றிய முயற்சி காணப்பட்டாலும், இவற்றுக்குத் தந்தையார் கபிலரேயாவர். இவ்வளவு தூரம் அவர் மனத் தத்துவ வாதம் வியப்புக்கு உரியதாய் இருப்பது தெரிகிறது. என்ருலும், போகப்போகச் சில அமிசங்களில் அவர் கொள்கைகளிலிருந்து நாம் வேறுபட நேருகிறது. பரிணுமத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் கபிலரின் தத்துவம். ஒன்றை மற்ருென்றின் பரிணுமமாகவே அவர் சொல்லுகிருர். காரண காரிய நியதிக்கு இலக்கணமே அவர் கொள்கைப்படி, 'காரணமே வேறு உரு எடுப்பது'தான். பிரபஞ்சம் முழுவதுமே படிப்படியாகப் பரிணும முறையில் முன்னேறுவதுபோல நமக்குத் தோன்றுவதும், இந்த முடிவுக்குக் காரணம் ஆகும். நாம் களிமண்ணைக் காண்கிருேம்; இதையே வேறு உருவத்தில் நாம் 'குடம்' என்கிருேம். மண் காரணம்; குடம் காரியம். இதற்கு மேல் காரண காரிய நியதி செல்லாது. எனவே, இந்தப் பிரபஞ்சம் முழுவதும் மூலப் பொருளாகிய பிரகிருதியின் பரிணுமந்தான், விரிவுதான். எனவே, காரியமாகிய பிரபஞ்சம் காரணமாகிய பிரகிருதியிலிருந்து அடிப்படையில் வேறுபட்டதாய் இருக்க இயலாது. கபிலரது கொள்கைப்படி, வேறுபாடற்ற பிரகிருதியி

லிருந்து நினைவோ அறிவோ வரை உள்ள அமிசங்களுள் எதை யும் அவர் 'அனுபவிப்பவன்' என்றோ 'அறிவூட்டுபவன்' என்றோ சொல்லுவதில்லை. களிமண் கட்டி எப்படியோ, அப் படியேதான் மனமாகிய கட்டியும். தன் இயல்பில் மனத்துக்கு ஒளி இல்லை ; ஆனால், அதற்கு நியாய அறிவு இருப்பது தெரிகிறது. எனவே, பின்னின்று இதை இயக்குவது ஒன்று இருக்கவேண்டும். மகத்து, உணர்வு, பின்வரும் மாறுதல்கள் எல்லாவற்றின் வழியாகவும் இதன் ஒளியே கசிகிறது ; இதையே 'புருடன்' என்கிறார் கபிலர், இதையே ஆன்மா என்பர் வேதாந்திகள். கபிலரின் கொள்கைப்படி புருடன் ஒரு மூலப் பொருள் ; கூட்டுப் பொருள் அன்று ; அது ஒன்றே பொருளின் தன்மை அற்றது ; இந்தப் பரிணாமங்கள் எல்லாம் பொருளின் தன்மை பெற்றவை. நாம் ஒரு கரும்பலகையைப் பார்க்கிறோம். பொறிகள் முதலில் இந்த உணர்ச்சியை நரம்பு மையத்துக்குக் கொண்டுவரும் ; கபிலர் சொற்படி இந்திரியத்திற்குக் கொண்டு வரும். இந்த நரம்பு மையத்திலிருந்து அது மனத்தை அடைந்து அங்கே ஒரு பதிவை (impression) உண்டாக்கும். மனம் அதைப் புத்தியின் முன் நிறுத்தும். ஆனால், புத்தியால் தானாக இயங்க இயலாது. இதற்குப் பின்னால் இருக்கும் புருடனிடமிருந்தே செயல் வரு கிறது. இவை எல்லாம் புருடனின் ஏவலாளர் போல்வன ; உணர்ச்சிகளை அதனிடம் கொண்டு வருகின்றன ; உத்தரவு கொடுப்பவன் புருடனே. அவனே எதிர்வினை புரிகிறான் ; நுகர் கிறான் ; அறிகிறான் ; உண்மைப்பொருள், அரியணையில் இருக்கும் அரசன் சடப்பொருளில்லாத மனித ஆன்மா. எப்போது அவனுக்குப் பொருள்தன்மை இல்லையோ, அப்போது அவன் வரையறையற்றவன் என்பது திண்ணம். அவனுக்கு எல்லை இருக்க இயலாது. ஒவ்வொரு புருடனும் எங்கும் நிறைந்த வன் ; நாம் ஒவ்வொருவரும் எங்கும் நிறைந்துள்ளோம் ; ஆனால், லிங்க சரீரம் அல்லது சூக்கும சரீரம் மூலமாகவே நமக்குத் தொழில் செய்ய இயலும். மனம், அகங்காரம் (Self-consciousness), அந்தக்கரணங்கள், உயிர்ச்சக்திகள் எல்லாம் சேர்ந்ததே நுண்ணுடல், உறை ஆகின்றன. இதையே கிறித்த வத் தத்துவ இயலில் மனிதனது ஆவியுடல் என்கிறார்கள் ! 'முக்தி' பெறுவதும், தண்டனை யடைவதும், சுவர்க்கம் பெறு வதும், மாறிமாறிப் பிறப்பதும் இந்த உடலேதான். புருடன் அல்லது ஆன்மாவுக்குப் போக்கும் வரவும் இயலாதன என்பதை முதலிலேயே நாம் கண்டோம். இயக்கம் என்பது போக்கு

வரவைக் குறிக்கும்; ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போய் வருவது எங்கும் நிறைந்ததாய் இருக்க இயலாது. கபில ரது மனஇயல் முறைப்படி இதுவரையில் ஆன்மா முடிவற்றது என்பதையும், பிரகிருதியால் ஆகாத ஒரே பொருள் ஆன்மா என் பதையும் தெரிந்தோம். பிரகிருதிக்கு வெளியே இருப்பவன் ஆன்மா ஒருவனே; ஆனால், அவன் இயற்கையால் வெளிப் பார்வைக்குக் கட்டுப்பட்டுளான். இயற்கை அவனைச் சுற்றி நிற் கிறது, அவன் தன்னை அதாகவே எண்ணிவிட்டான். 'நான் லிங்க சரீரம்,' 'நான் பருப்பொருள், பருவுடல்,' என்று நினைக் கிறான்; அதனால் இன்ப துன்ப அனுபவங்களைப் பெறுகிறான்; ஆனால் இந்த அனுபவங்கள் உண்மையாக அவனுக்குச் சொந்தமல்ல, இவை சூக்கும சரீரத்திற்கே உரியன.

தியான (சமாதி) நிலையையே, யோகி உயர்ந்த நிலையாக எப் போதும் எண்ணுகிறான்; இது சட நிலையும் அன்று; சுறுசுறுப் புற்ற நிலையும் அன்று. இந் நிலையில் நாம் புருடனை மிக மிக நெருங்குகிறோம். ஆன்மாவுக்கு இன்பமோ துன்பமோ இல்லை; எல்லாவற்றுக்கும் சான்றாய் நிற்பது, எல்லாச் செயலுக் கும் என்றும் சாட்சியாய் நிற்பது, ஆனால், இது எந்தச் செயலின் பயனையும் துய்ப்பதில்லை. சூரியனே ஒவ்வொரு கண்ணின் பார் வைக்கும் காரணம்; ஆனால், கண்ணின் குறை எதனாலும் பாதிக் கப்படுவதில்லை. ஒரு பளிங்கின்முன் சிவப்போ நீலமோ ஆன மலர்களை வைத்தால், பளிங்கு சிவப்பாகவோ நீலமாகவோ தோன்றுகிறது; என்றாலும், எந்த வண்ணமும் அதற்கில்லை. இதுபோலவே, சடத்தன்மை சுறுசுறுப்பு எதுவுமே ஆன்மாவுக்கு இல்லை, இரண்டுக்கும் அப்பாற்பட்டது அது. ஆன்மாவின் இந்த நிலையைக் கிட்டத்தட்ட சரியாகக் கூறும் முறை தியானம் என்பது. இதுதான் சாங்கியத் தத்துவ இயல்.

பிரகிருதியின் விரிவு ஆன்மாவுக்காகவே தான் என்பது சாங்கியரின் அடுத்தபடியான கூற்று. எல்லா இணைப்புகளும் எவனோ ஒரு மூன்றாம் மனிதனுக்காகவே. நாம் பிரகிருதி என்று சொல்லும் இந்தச் சேர்க்கைகள், சதா நிகழும் இம் மாறுதல்கள் ஆன்மாவின் நுகர்ச்சிக்காகவே, அதன் விடுதலைக்காகவே, மிகத் தாழ்ந்தவற்றிலிருந்து மிக உயர்ந்ததுவரை உள்ள அனுபவங்களை அது பெறுவதற்காகவே அமைந்தன. இந்த அனுபவம் பெற்ற பின் ஆன்மா, தான் என்றும் பிரகிருதிக்குள் இருக்கவில்லை யென்றும், தான் பிரகிருதியினின்று முற்றும் வேறுபட்டவன் என்றும், தனக்கு அழிவில்லை என்றும், தனக்குப் போக்கு வரவு

இல்லை என்றும் அறிகிறது. சுவர்க்கத்துக்குப் போவதும் மீண்டும் பூமியில் பிறப்பதும் பிரகிருதியில் நடப்பவை, ஆன்மாவில் நிகழ்பவை யல்ல. இவ்வாறு ஆன்மா விடுதலை பெறுகிறது. ஆன்மாவின் அனுபவத்திற்கும் நுகர்ச்சிக்குமே பிரகிருதி முழுவதும் இயங்குகிறது. தன் இலட்சியமாகிய விடுதலையை அடைவதற்காகவே ஆன்மா இந்த அனுபவத்தைப் பெறுகிறது. ஆனல், சாங்கியத் தத்துவ இயலின்படி ஆன்மாக்கள் பல. இவற்றின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. பிரபஞ்சத்தை ஆக்குபவனுக இறைவன் ஒருவனும் இல்லை என்பது, கபிலரின் மற்ருெரு முடிபு. எல்லாவற்றுக்கும் காரணம் காட்டப் பிரகிருதியே போதும், இறைவன் தேவை இல்லை என்பர் சாங்கியர்.

வேதாந்தமோ, ஆன்மாவின் இயற்கையே நிறைவுற்ற சத்து, சித்து, ஆனந்தம், என்கிறது. இவை ஆன்மாவின் குணங்கள் அல்ல, இவை மூன்றல்ல ஒன்றே, ஆன்மாவின் சத்து அது. அறிவு பிரகிருதி வாயிலாக வருதலின், பிரகிருதிக்கே உரியது என்ற சாங்கிய வாதத்தை வேதாந்தம் ஏற்றுக்கொள்கிறது. அறிவு என்பது ஒரு கூட்டுப் பொருள் என்பதையும் வேதாந்தம் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக நம் புலன் காட்சிகளை (Perceptions) ஆராய்வோம்: நாம் ஒரு கரும்பலகையைப் பார்க்கிருேம். இது பற்றிய அறிவு எப்படி ஏற்படுகிறது? கரும்பலகையின் 'உண்மைப் பொருள்' (The thing in itself)—ஜெர்மன் தத்துவ ஞானிகள் சொற்படி—நம்மால் அறியப்படுவதில்லை. நாம் அறியவே இயலாது. இதை 'உ' என்று கொள்வோம். 'உ' என்ற இந்தக் கரும்பலகை என் மனத்தின் மீது தாக்குகிறது; மனமும் எதிர்வினை புரிகிறது. மனம் ஓர் ஏரி போன்றது. ஒரு கல்லை ஏரியில் எறிந்தால் இதற்கு எதிர்வினையான அலை ஒன்று கல்லை நோக்கி எழுகிறது. இந்த அலை கல்லைப் போன்றது அன்று; இது அலையே. கல்லைப்போலக் கரும்பலகை 'உ' நம் மனத்தைத் தாக்குகிறது; மனம் எதிர்வினையாக அதை நோக்கி ஓர் அலையை வீசுகிறது; இந்த அலையைத்தான் நாம் கரும்பலகை என்கிருேம். நான் உன்னைப் பார்க்கிறேன். உண்மையான நீ அறியப்படாதது, அறிய இயலாதது. நீ 'உ', நீ என் மனத்தைத் தாக்க, மனம் தாக்க வரும் திசையிலே ஓர் அலையை வீசுகிறது. அந்த அலையைத்தான் நான் இன்னுர் என்று சொல்கிறேன். புலன் காட்சியில் இரண்டு அமிசங்கள் உண்டு; ஒன்று வெளியே இருந்து வருவது; மற்ருென்று உள்ளிருந்து வருவது. இந்த இரண்டின் கூட்டுத்

தொகையே (உ+மனம்) நாம் காணும் வெளி உலகம். எல்லாம் எதிர்வினையால் விளைவது. திமிங்கிலத்தின் வாலில் அடி விழுந்த எவ்வளவு நேரத்துக்குப் பிறகு, அதன் மனத்தில் எதிர் வினை நிகழ்கிறது என்பதும், அது எப்பொழுது வலியை உணர் கிறது என்பதும் ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உட்காட்சியும் இது போன்றதே ஆகும். எனக்குள்ளே இருக்கும் உண்மை மனிதன் அறியப்படாததும், அறிய இயலாததும்; அது அறிய முடியாதது. இதை 'இ' என்போம். நான் இன்னார் என்று அறியும்போது, அது இ+மனம் என்பதே ஆகும். இந்த 'இ' மனத்தைத் தாக்குகிறது; எனவே, நமது முழுப் பிரபஞ்ச மும், உ+மனம் என்பதும், இ+மனம் என்பதும். இதில் உ இ என்ற இரண்டும் முறையே வெளியுலகிலும் உள் உலகிலும் நிற்கும் உண்மைப் பொருள்களைக் குறிப்பனவாம்.

வேதாந்தக் கொள்கைப்படி நனவின் மூன்று அடிப்படைப் பகுதிகளாவன: நான் இருக்கிறேன், நான் அறிகிறேன், நான் இன்பம் நிறைந்தவன் என்பவைகளே. எனக்குத் தேவை ஒன் றுமே இல்லை, நான் செயலற்றவன், அமைதி யுற்றவன், என்னை எதுவும் அசைக்க இயலாது என்று இடையிடையே தோன்றும் கருத்து நம் இருப்பின் மைய உண்மை. நம் வாழ்வின் அடிப் படைத் தத்துவம். இது எல்லைக்கு உட்பட்டு, கூட்டுப் பொருள் ஆகும்போது, இதுவே தோற்றமான இருப்பாகவும், தோற்றமான அறிவாகவும், அன்பாகவும் விரிகிறது. ஒவ்வொரு மனிதனும் இருக்கிறான்; ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டும்; ஒவ் வொரு மனிதனும் அன்புக்கு வெறியனாய் இருக்கிறான். அன்பு செய்யாமல் இருக்க அவனுக்கு இயலாது. தாழ்ந்த உயிரிலிருந்து உயர்ந்த உயிர் வரை எல்லா வகை இருப்பிலும் எல்லோரும் அன்புள்ளவராக வேண்டும். 'இ' என்னும் உள்ளத்து உண்மைப்பொருள், மனத்தோடு சேர்ந்து, இருப்பு அறிவு அன்பு இவற்றை ஆக்குகிறது—அதையே வேதாந்திகள் இயல் பான சச்சிதானந்தம் என்பார்கள். உண்மையான இருப்பு எதுவோ, எல்லையற்றது, கலப்பற்றது, கூட்டு ஆகாதது, மாறு பாடற்றது—அதுவே சுதந்தரமான ஆன்மா; அது மனத்தோடு கலந்து கலங்கிப் போகும்போது அதையே நாம் தனி மனிதனின் இருப்பு என்கிறோம். அதுதான் மனித வாழ்வு, தாவர வாழ்வு, விலங்கு வாழ்வு; எல்லையில்லாத இடம் அறையிலும், ஜாடியிலும் அடைபட்டிருப்பதுபோல. இந்த உண்மை அறிவு நமது அறி வன்று; உட் காட்சியோ, பகுத்தறிவோ, இயல்பூக்கமோ அன்று.

இந்த உண்மை யறிவு தன் நிலைகெட்டுக் குழம்பியிருக்கும்போது, இதை உட்காட்சி என்கிறோம்; இன்னும் தாழ்ந்த நிலையை அடையும்போது பகுத்தறிவு என்கிறோம்; இன்னும் தாழ்ந்த நிலையை அடையும்போது இயல்பூக்கம் என்கிறோம். அந்த உண்மை யறிவான விஞ்ஞானம் உட்காட்சியோ பகுத்தறிவோ இயல்பூக்கமோ அன்று. இந்த உண்மை நிலையைக் கிட்டத்தட்டக் குறிக்கும் மொழி சர்வஞ்ஞத்துவம் என்பதே. இது எல்லையற்றது; கூட்டும் இல்லை. அந்த ஆனந்தம் மறைபடும்போது, அதை அன்பு, பருப்பொருள்களோ நுண்பொருள்களோ கருத்துகளோ இவற்றில் எழும் கவர்ச்சி என்கிறோம். ஆனந்த நிறைவின் திருகிய தோற்றமே இந்த அன்பு. இயல்பான சத்து, சித்து, ஆனந்தம் என்பன ஆன்மாவின் குணங்கள் அல்ல; ஆன்மாவின் ஸாரமே; அவற்றுக்கும், ஆன்மாவுக்கும் வேறுபாடு இல்லை. இம் மூன்றும் ஒன்றே, ஒன்றையே நாம் மூன்று வகையாகப் பார்க்கிறோம். இவை வியாவகாரிக அறிவுக்கு (Relative knowledge) எல்லாம் அப்பாற்பட்டவை. ஆன்மாவின் இந்த நித்திய அறிவு மனித மூளை வாயிலாகக் கசிவதே, அவனுடைய உட்காட்சி பகுத்தறிவு இயல்பூக்கம் முதலியனவாக உருப்பெறுகிறது. இது எது வழியே ஒளிர்கிறதோ, அதற்குத் தக்கபடி இதன் வெளித்தோற்றம் மாறுபடுகிறது. ஆன்மா என்ற அளவில் மனிதனுக்கும் மிகத் தாழ்ந்த உயிருக்கும் வேறுபாடு ஒன்றும் இல்லை; பின்னதின் மூளைக்கு வளர்ச்சி குறைவு; அது 'வழியே வெளிவரும் மிக மங்கலான தோற்றம் 'இயல்பூக்கம்' என்ற பெயரைப் பெறுகிறது. மனிதனது மூளை மிகச் செம்மையானது ஆதலால், இதன் வழியே தோன்றுவது மிகத் தெளிவாய் இருக்கிறது; மிக உயர்ந்த மனிதனிடம் இது முற்றும் தெளிவு பெற்றுவிடுகிறது. இருப்பும் இப்படியே. நாம் அறியும் இந்த எல்லைக்கு உட்பட்ட இருப்பு, ஆன்மாவின் இயல்பான உண்மை இருப்பின் பிரதிபிம்பமே ஆகும். ஆனந்தமும் இப்படியே. அன்பு கவர்ச்சி என்று நாம் சொல்வதெல்லாம் ஆன்மாவின் அழிவற்ற ஆனந்தத்தின் பிரதிபிம்பமே ஆகும். பரிணமத்தோடு எல்லையும் வந்து விடுகிறது. ஆனால் பரிணமம் பெருத ஆன்மாவின் ஸாரமான இயல்பு எல்லையற்றதாகும்; இந்த ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. ஆனால், அன்புக்கு எல்லை உண்டு. நான் இன்று உன்னிடம் அன்பு காட்டுகிறேன்; நாளை உன்னை வெறுக்கிறேன். என் அன்பு ஒரு நாள் அதிகரிக்கிறது,

மறுநாள் குறைகிறது. இது பரிணாமமாக இருப்பதே இந்த மாறு பாட்டுக்குக் காரணம்.

கபிலரோடு நாம் வாதாடும் முதற்பொருள் இறைவனைப் பற்றியதாகும். தனி மனித அறிவில் தொடங்கித் தனிமனித உடலில் முடியும் பிரகிருதியின் வரிசைக்கிரமமான மாறுதல்களைப் பின்னின்று நடத்த ஒரு 'புருடன்' அரசனாகவும் ஆளுபவனாகவும் தேவைப்படுவதுபோல, அண்டத்திலும் அகண்டமான பிரபஞ்ச நுண்பொருள் பருப்பொருள் இவற்றுக்கும் ஓர் அரசனும் ஆளுபவனும் அவசியமாகும். இந்தப் பிரபஞ்ச வரிசைக் கிரமம் முற்றுப்பெற வேண்டுமானால், இவற்றுக்குப் பின் பிரபஞ்சத்திற்கு ஓர் அரசனும் ஆளுபவனும் இருந்துதானே தீரவேண்டும்? பிரபஞ்ச வரிசைக்குப் பின்னால் நிற்கும் பிரபஞ்ச புருடன் இல்லை என்று நீங்கள் மறுத்தால், தனி மனிதன் சம்பந்தமான வரிசைக்குப் பின்னால் நிற்கும் உங்கள் புருடனும் இல்லை என்று நாங்கள் மறுக்கிறோம். படிப்படியான, விரிந்த மாறுபாடுகளின் வரிசைக்குப் பின் இவற்றுக்கு அப்பாற்பட்ட, பொருளால் ஆக்கப்படாத புருடன் ஒருவன் உண்டு என்றால், இதே நியாயப்படி பிரபஞ்ச புருடன் உண்டு என்பதும் மெய்ப்பிக்கப்படுகிறதே! பிரகிருதியின் பிரபஞ்ச மாறுதல்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட பிரபஞ்ச ஆன்மாவையே 'ஈசுவரன்', 'இறைவன்', 'கடவுள்' என்கிறோம்.

முக்கியமான வேறுபாடு இங்கேதான் வருகிறது; ஒரு புருடனுக்கு மேல் இருக்க இயலுமா? புருடன் எங்கும் நிறைந்தவன், எல்லை இல்லாதவன் என்பதைக் கண்டோம். எங்கும் நிறைந்ததும் எல்லை இல்லாததும் ஆன இரண்டு பொருள்கள் இருப்பது இயலாது; முடிவற்ற பொருள்கள் 'அ, ஆ' என்று இரண்டு இருப்பதாகக் கொண்டால், அ என்ற முடிவற்ற பொருள், 'ஆ' என்ற முடிவற்ற பொருளுக்கு எல்லை வகுத்துவிடும். முடிவற்ற ஆ, முடிவற்ற அ அன்றே? இரண்டும் ஒன்றல்ல என்றால், விலக்கு நேருகிறது; விலக்கு என்பது எல்லைக்கு உட்படுவது தானே? எனவே, ஒன்றுக்கு ஒன்று எல்லையாகும். ஒன்றுக்கு ஒன்று எல்லை வகுக்கும் அ, ஆ இரண்டுமே முடிவற்றவை என்ற தன்மையை இழந்துவிடுகிறன. எனவே, முடிவற்ற பொருள் ஒன்றுதான் இருக்க இயலும்; அதாவது, ஒரே புருடனே இருக்க இயலும்.

இப்போது நாம் 'உ', 'அ' இரண்டையும் எடுத்துக் கொண்டு, இவை இரண்டல்ல ஒன்றே என்று காட்டலாம்.

'வெளியுலகம்' என்பது 'உ+மனம்' எனக் கண்டோம்; உள்ளுலகம் 'இ+மனம்' என்பதையும் கண்டோம்; உ, இ இரண்டும் அறியப்படாத, அறிய இயலாத பொருள்கள். எல்லா வேற்றுமைகளுக்கும் காரணம், கால தேச காரணகாரிய நியதி ஆகிய இவைகளே. இவைகளே மனத்தின் அடிப்படை மூலங்கள். இந்த மூன்றும் இல்லாத மனநிலை இல்லை. காலமின்றி உன்னால் ஒருபோதும் நினைக்க முடியாது; இடமின்றி எதையும் ஒருபோதும் கற்பனை செய்ய முடியாது, காரணகாரிய நியதியின்றி எதையும் ஒருபோதும் நீ பெற முடியாது. இவை மனத்தின் பல வடிவங்கள். இவற்றை எடுத்துவிடின், மனமே இராது. எனவே, வேற்றுமைக்கெல்லாம் காரணம் மனமே தான். வேதாந்தத் தத்துவப்படி மனமும் அதன் உருவங்களுமே உ, இ இரண்டையும் வெளிப்பார்வைக்குக் கட்டுப்படுத்தி, வெளிப் பிரபஞ்சமாகவும் உட்பிரபஞ்சமாகவும் தோன்றும்படி செய்கின்றன. ஆனால், உ, அ இரண்டும் மனத்துக்கு அப்பாற்பட்டு நிற்பதால் வேற்றுமை அற்றவை; ஆதலால் ஒன்றே. இவற்றுக்கு ஒரு குணத்தையும் ஏற்ற இயலாது, குணங்கள் மனத்தால் பிறந்தவை. ஆதலின் குணமற்றது ஒன்றாகத் தான் இருக்க இயலும். உ குணமற்றது, மனத்தின் குணங்களை ஏற்பது; இ யும் இப்படியே. ஆக, உ, இ இரண்டும் ஒன்றே. பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே. பிரபஞ்சத்தில் ஆன்மா ஒன்றே, இருப்பு ஒன்றே; இந்த ஒரே இருப்பு, காலதேச நியதி என்பவற்றின் வழியே வெளிவரும்போது பல்வேறு பெயர்களால் புத்தி, நுண்பொருள், பருப்பொருள், எல்லாவகை மன பௌதிக உருவங்கள் எனப் பெயர் பெறுகிறது. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் பல வடிவங்களாக உள்ள அப்பரம்பொருளே. அந்த ஒன்றின் ஒரு சிறு பகுதி, காலம் இடம் நியதி என்ற இந்த வலைக்குள் புகுந்தவுடன், அது பல உருவங்களைப் பெறுகிறது. இந்த வலையை எடுத்துவிட்டால், எல்லாம் ஒன்றுதான். எனவே, வேதாந்தத் தத்துவப்படி பிரம்மன் என்று சொல்லப்படும் (பரம) ஆன்மாவில் (லயப்பட்டு நிற்கும்) இப் பிரபஞ்ச முழுவதும் ஒன்றேதான். இந்தப் (பரம) ஆன்மா, அண்டத்துக்குப் பின்னால் தோன்றும்போது இறைவன் எனப்படுகிறது. இதே ஆன்மா, பிண்டமாகிய இந்த உடலுக்குப் பின்னால் தோன்றும் போது ஜீவன் ஆகிறது. எனவே, இந்த ஆன்மாவே மனிதனிடம் உள்ள பரமான்மா. புருடன் ஒன்றே; அதுவே வேதாந்தம் கூறும் பிரம்மம், ஈசுவரன், மனிதன் இரண்டுமே ஆராய்ந்

தால் அதில் ஒன்ருகிவிடுகின்றன. நீயேதான் பிரபஞ்சம், உடைபடாத நீயே; உலகமெங்கும் நீயே ஊடுருவி நிற்கிருய். "எல்லாக் கைகளாலும் நீ உழைக்கிருய்; எல்லா வாய்களாலும் நீ உண்கிருய்; எல்லா மூக்குகளாலும் நீ மோக்கிருய்; எல்லா மனங்களாலும் நீ சிந்திக்கிருய்." பிரபஞ்ழம் முழுவதும் நீயே! பிரபஞ்சமே உன் உடல்; படைக்கப்பட்டன படைக்கப் படாதன எல்லாப் பிரபஞ்சமும் நீயே. நீயேதான் பிரபஞ் சத்தின் ஆன்மா; பிரபஞ்சத்தின் உடலும் நீ. இறைவன் நீயே; தேவதை நீயே; மனிதன் நீயே; விலங்கு நீயே; தாவரம் நீயே; கனிப்பொருள் நீயே; எல்லாம் நீயே; எல்லாத் தோற்றங்களும் நீயே; இருப்பதெல்லாம் நீயே முடிவற்றவன் நீ. முடிவற்றதைப் பகுக்க இயலாது. அதற்குப் பாகங்கள் இருக்க முடியாது ஏனெனில் ஒவ்வொரு பாகமும் அப்போது முடிவற்றதாகவே இருக்கும்; அவ்வாருயின், பகுதி யும் முழுமையும் ஒன்றே ஆகும் இது பொருந்தாதது. எனவே, நீ இன்னுர் என்பது ஒருபோதும் உண்மையாக இருக்க இயலாது. இது வெறும் பகற்கனவு. இதை நன்கு உணர்ந்து கொண்டு, முத்தனுய் இரு. இதுதான் அத்துவைத முடிவு. "நான் உடலும் அல்லேன்; உறுப்புகளும் அல்லேன்; மனமும் அல்லேன். நான் அதீத சத்து சித்து ஆனந்தம். நானே அவன்."—இதுதான் உண்மை ஞானம். மற்ற பகுத்தறிவும், அறிவும் எல்லாமே அறியாமைதான். எனக்கு ஞானம் வருவ தாவது! நானே ஞானம். எனக்கு உயிர் ஏது? நானே உயிர்! நான் இருப்பது திண்ணம்; நானே வாழ்வு, உள்ள அந்த ஒரு பொருள் நானே. எதுவும் என்னுலும், என்னுள்ளும், நானுகவே அன்றி இருப்பதில்லை. பஞ்ச பூதங்களாக நானே பரிணமித்திருக்கிறேன்; ஆனுல், நான் விடுபட்டவன். விடுதலை தேடுபவர் யார்? யாரும் இல்லை. நீ கட்டுப்பட்டிருப்ப தாக எண்ணினுல், கட்டுப்பட்டே இருப்பாய்; உனக்கு விலங்கை நீயே பூட்டிக்கொள்கிருய். நீ முக்தனுனவன் என் பதை உணர்ந்தால் இப்போதே நீ முக்தன். இதுதான் ஞானம், விடுதலை பற்றிய ஞானம். பிரகிருதியின் இலட்சியமே விடுதலைதான்.

கீதை—I

[1900-ஆம் ஆண்டு, மேத் திங்கள், 26-ஆந் தேதி ஸான்பிரான்ஸிஸ்கோவில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

கீதையை அறிந்துகொள்வதற்கு அதன் வரலாற்றுச் சூழ்நிலை தேவை. உபநிடதங்களுக்கு ஒரு விரிவுரையாகக் கீதை இலங்குகின்றது. உபநிடதங்கள் இந்தியாவின் சிறந்த சமய நூல் (பைபிள்). புதிய ஏற்பாட்டின் (New Testament) இடத்தில் அவை விளங்குகின்றன. உபநிடதங்களில் அடங்கியவை நூற்றுக்கும் மேலான சிறு நூல்கள்; அவற்றுள் சில மிகவும் சிறியவை; சில பெரியவை. ஒவ்வொன்றும் தனித்தனி விமரிசனம். உபநிடதங்கள் எந்த ஆசானுடைய வாழ்க்கையையும் வெளியிடாமல், தத்துவங்களை மட்டும் புகட்டுகின்றன. பொதுவாக அரச சபைகளில் (ஞானியர் கூட்டங்களில்) நிகழ்ந்த ஆராய்ச்சி உரைகளின் சுருக்கெழுத்துக் குறிப்புகள் போல அவை இருக்கின்றன. 'உபநிடதம்' எனும் சொல் 'அமர்ந்திருத்தல்' (அல்லது ஓர் ஆசான் அருகில் உட்கார்ந்திருத்தல்) எனப்பொருள்படும். உங்களில் உபநிடதங்களிற் சிலவற்றைப் படித்திருக்கக் கூடியவர்களுக்கு அவை எங்ஙனம் திரட்டிவைத்த சுருக்கெழுத்துக் குறிப்புகளைப் போல இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள இயலும். நெடிய ஆராய்ச்சிவாதங்களுக்குப் பின் அவை நினைவிலிருந்து குறித்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். இதில் உள்ள குறைபாடு என்னவென்றால், அவற்றின் சூழ்நிலையைப்பற்றி உங்களுக்குக் கிடைப்பது மிகக் குறைவாயிருப்பதேயாம். ஒளி மிகுந்த குறிப்புகளே அங்குப் பதியப் பெறுகின்றன. பண்டைக்கால ஸம்ஸ்கிருதத்தின் ஊற்று, கி. மு. 5000த்தில் உள்ளது. உபநிடதங்கள் அதற்கும் (குறைந்தது) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவை எவ்வளவு தொன்மை வாய்ந்தவை என்பது (உள்ளபடி) எவர்க்குந் தெரியாது. கீதை உபநிடதங்களின் கருத்துகளையும் சிலவிடங்களில் சொற்களையும் அப்படியே எடுத்துக்கொள்ளுகிறது. அவ்வாறு தொகுப்பதன் நோக்கம், உபநிடதங்கள் விளக்கும் முழுப் பொருளையும் அப்படியே சுருக்கமாக, அடக்கமாக, ஒழுங்காகக் கொண்டு வரவேண்டும் என்பதே.

இந்துக்கள் மூலமதநூல்களை 'வேதம்' என்கின்றனர்கள். அவை—அந்நூல்களின் தொகை—எவ்வளவு விரிவென்றால், அவற்றிலுள்ள மூலங்களை மட்டும் இங்குக் கொண்டு வந்தால், இவ்வறைக்குள் அவை அடங்கமாட்டா. அவற்றில் பல காணமற் போய்விட்டன. அவை சாகைகளாக—கிளைகளாக—பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு சாகையும், வைதிகர் சிலருடைய நினைவுச் சக்தியால் காக்கப்பட்டு வந்துள்ளது. அப்படிப்பட்ட மனிதர் கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் வேதத்தில் புத்தகத்துக் குப் பின் புத்தகமாக ஓர் ஒலிகூடத் தப்பாமல் ஒப்பிப்பார்கள். வேதங்களின் பெரும் பகுதி மறைந்துபோய்விட்டது. மிகுதி யுள்ள சிறு பகுதி மட்டுமே தனியாக ஒரு நூல் நிலையமாகும். இவற்றுள் மிகப் பண்டைய பகுதியில் இருக்கு வேத மந்திரங்கள் அடங்கியுள்ளன. இக்கால ஆராய்ச்சிக்காரர்களின் நோக்கம், வேத மந்திரங்களில் எது முந்தியது எது பிந்தியது என்று ஒழுங்குபடுத்துவதாம். புராதன நம்பிக்கைக்காரர்களின் நோக் கம், பைபிளைப் பற்றி உங்கள் நம்பிக்கைக்காரர்களின் நோக்கத் தைப் போன்றதே. அது நவீன ஆராச்சிக்காரர்களின் நோக் கத்தினின்று முற்றும் வேறானது. வேதங்கள் இரண்டு பாகங்களா கப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று, உபநிடதங்கள் அல்லது ஞான காண்டம்; மற்றொன்று, கருமகாண்டம்.

கரும காண்டத்தைப் பற்றிய கருத்தைச் சிறிது விளக்க முயல்வோம். அதில் அடங்கியவை கருமங்களும் துதிப்பாடல் களுமாம்; அவை பல தேவதைகளைக் குறித்துச் செய்த பல வகையான துதிகள். கருமப் பகுதியில் அடங்கியவை சடங்கு கள். அவற்றுட் சில மிக விரிவானவை. பல புரோகிதர்கள் தேவை. சடங்குகளின் விரிவால் புரோகிதத் தொழிலே தனி யொரு சாத்திரமாயிற்று. படிப்படியாக இத்துதிகளிலும் சடங்கு களிலும் பொதுமக்களுக்கு மதிப்பு வளர்ந்து வந்தது. தேவதை கள் கூட மறைந்து போய், அவர்களுடைய இடத்தில் சடங்கு கள் எஞ்சி நிற்கலாயின. இது இந்தியாவில் ஏற்பட்ட அதிசய மான நிகழ்ச்சி. இந்துக்களில் மீமாம்ஸகர் என்போர், தேவதை களை நம்புவதில்லை; ஏனையோர் நம்புகின்றனர். வேதங்களில் தேவதைகளைப் பற்றிய கருத்து என்னவென்று விளக்கும்படி இன்று ஒரு வைதிகரைக் கேட்டால், அவர் திருப்திகரமான விடை அளிக்கத் திறனற்றவராயிருப்பார். புரோகிதர்கள் இத்துதிகளைப் பாடித் தீயில் அவி சொரிந்து ஓமம் செய்வார்கள். இதற்கென்ன கருத்து என்று வைதிகர்களை நீங்கள் கேட்டால்,

மந்திரங்களிலுள்ள சொற்களுக்கே பற்பல பயன்களை அளிக்கும் சக்தியுண்டு என்று கூறுவார்கள், அவ்வளவுதான். இயற்கைக்கு உட்பட்டவையும் இயற்கையை மீறியவையுமான என்னென்ன சக்திகள் எவ்வெப்போது இருந்திருக்கின்றனவோ, அவையெல்லாம் அங்கு இருக்கின்றன. வேதங்கள் வெற்று ஒலிவடிவங்கள்; அவற்றைச் சரியான முறையில் உச்சரித்தால் காரியங்களைக் கூட்டிவைக்கும் ஓர் அபூர்வ சக்தி அவற்றிடம் இருக்கின்றது. ஓர் உச்சரிப்புத் தவறினாலும் பயனுண்டாகாது, ஒவ்வொன்றும் செம்மையாக இருக்கவேண்டும். ஆகவே, மற்ற மதங்களில் எது தெய்வத்திற்கு வழிபாடு எனப்படுகிறதோ, அது மறைந்து, வேதங்களே தெய்வங்களாகிவிட்டன. அதனால், வேதங்களில் சொற்களுக்கு எவ்வளவு உயர்வான இடம் அளிக்கப்பட்டதென் பதை நீங்கள் காண்பீர்கள். அனாதியான இடம் அளிக்கப்பட்ட தென்பதை நீங்கள் காண்பீர்கள். அனாதியான இச் சொற்களி னின்றே உலகம் முழுவதும் ஆக்கப்பட்டுள்ளது. சொல்லின்றி எண்ணம் இருக்க இயலாது. உலகில் என்னென்ன உள்ள னவோ அவை எல்லாம் எண்ணத்தின் பரிணாமமே; எண் ணமோ, சொற்களின் மூலந்தான் விளக்கத்தையடையும். ஆதியில் மறைந்திருந்த எண்ணம் எவற்றால் உலகமாக விளக்கம் பெறுகிறதோ, அச்சொற்களின் தொகுதியே வேதம் எனப்படு வது. வெளியுலகிலுள்ள ஒவ்வொரு பொருளின் இருப்பும் அதைக் குறிக்கும் சொல் இல்லாமல் இருக்க இயலாது. 'குதிரை,' என்ற ஒரு சொல் இல்லையேல், குதிரையைப்பற்றி எவரும் எண்ண இயலாது. ஆகையால், நினைவுக்கும் சொல்லுக்கும் புறப்பொருளுக்கும் நெருங்கிய உறவு இருக்கவேண்டும். இச் சொற்கள் (உண்மையில்) எவை? வேதங்கள். அவற்றின் மொழி ஸம்ஸ்கிருதம் (வடமொழி) என்றுகூட இயம்புவதற்கில்லை. தேவமொழி வேதமொழி. அதன் சிதைவு 'ஸம்ஸ்கிருதம்.' அவ்வாறே மற்றமொழிகளும்; வேதமொழியைவிடப் பழைய மொழி இல்லை. வேதங்களை எழுதினவர் யார் என்று நீங்கள் கேட்கலாம். அவை எழுதப்படவில்லை. சொல்வடிவே வேதம். அச்சொல்லை நான் பிழையின்றி உச்சரித்தால் அதுவே வேதம். அது உடனே கோரிய பயனை அளிக்கும்.

இப்படிப்பட்ட,வேதத்தொகுதி அனாதியாயிருக்கிறது. உலக மெல்லாம் அச்சொற்றொகுதியின் விரிதலே. ஒரு கற்பம் முடிந் தால், பொருள் வடிவில் வெளிப்பட்ட சக்தி வரவரச் சூக்கும நிலையை யடைந்து சொல் வடிவையும், பின்பு நினைவின் வடிவை

யும் அடைந்துவிடுகிறது. அடுத்த கற்பத்தில் மறுபடி நினைவுகள் சொல் வடிவு கொண்டு, பின்பு அச்சொற்களினின்று உலகம் முழுதும் பிறக்கிறது. இங்கு வேதங்களிலடங்காத எதுவோ ஒன்று இருக்கக்கூடும் என்று நீங்கள் நினைத்தால், அது உங்கள் மதி மயக்கம். அப்படியொன்றும் இருத்தல் இயலாது.

இப்பொருளைப் பற்றிய நூல்கள், வேதம் அனாதி என்பதை நிலை நிறுத்துகின்றன. அக்கொள்கையை ஆதரிப்பவர்களிடம் வேதங்கள் முதன்முதலில் யாராலாவது சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று நீங்கள் கூறினால், அவர்கள் சிரிப்பார்கள். முதன் முதலாக வேதத்தை வெளியிட்ட மனிதர் எவரைப் பற்றியும் கேள்விப்பட்டதே இல்லை. புத்தர் மொழிகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் முன் பல பிறவிகளில் பல தடவை அதே மொழிகளைக் கூறியுள்ளார் என்ற நம்பிக்கை உளது. கிறித்தவன் ஒருவன் எழுந்து நின்று, "எங்கள் மதம் சரித்திரத்தின் ஆதரவு பெற்ற மதம்; ஆகையால், எங்கள் மதந்தான் உண்மையானது; உங்களுடையது தவறானது,' என்று கூறினால், ஓர் இந்து, 'உன்னுடையது சரித்திரத் தொடர்புடையது; ஒரு மனிதர் அதை ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்டாக்கினர் என்பதை நீயே ஒப்புக்கொள்ளுகிறாய். ஆனால் எது உண்மையானதோ, அது அளவு கடந்ததாகவும், என்றும் உள்ளதாகவும் இருக்க வேண்டும். அதுதான் உண்மைக்கு ஒரு சோதனை. அது எப்போதும் அழியாமல் என்றும் ஒரே வண்ணம் இருக்கும். உன் சமயம் யாரோ ஒரு குறிப்பிட்ட மனிதரால் படைக்கப்பட்டதென்பதை நீயே ஒப்புக்கொள்ளுகிறாய். வேதங்கள் அப்படி ஒரு தீர்க்கதரிசியாலோ வேறு வகையாலோ உண்டாக்கப்படவில்லை. அளவில் அடங்காத வார்த்தைகள்; இயற்கையாகவே அளவு கடந்தவை; அவற்றினின்றே உலகம் முழுவதும் வந்து வந்து போகின்றன," என்பான். பொதுவாக நோக்குமிடத்து அது முழுதும் சரியே. ஒலிதான் படைப்பின் ஆதியாயிருக்கவேண்டும். உடலுக்கு மூல உயிரணுக்கள் அவசியமாவது போல, உலகிற்கும் மூல ஒலிகள் அவசியந்தான். சொற்களின்றி எண்ணங்கள் இருத்தல் இயலாது. எங்கெங்கே உணர்ச்சிகளும் எண்ணங்களும் இருக்கின்றனவோ, அங்கங்கே சொற்களும் இருக்கவேண்டும். ஆனால், சிக்கல் எங்கே என்றால், "இந் நான்கு புத்தகங்களே வேதம்; வேறெதுவுமன்று," என்பதிலே தான். ஒரு பௌத்தன் எழுந்து நின்று, "எங்களுடையவையும் வேதங்களே; அவை பிற்காலத்தில் எங்களுக்கு விளக்கஞ்

செய்யப்பட்டன,'' என்று கூறலாம். அங்ஙனம் இருக்க இயலாது. இயற்கை அவ்வாறு நடைபெறவில்லை. இயற்கை தன் நியதிகளைச் சிறுகச் சிறுக வெளிப்படுத்துவதில்லை—இன்று ஓர் அங்குலம் ஈர்க்கும் சக்தி, நாளை இன்னோர் அங்குலம் என்று. ஒவ்வோர் இயற்கை நியதியும் ஏற்கெனவே பூரணத்துவம் அடைந்துள்ளது. நியதி சிறுகச் சிறுக வளர்வதென்பது இல்லை. அது ஒரே தடவையாகக் காலம் முழுவதற்கும் உண்டான ஏற்பாடு. 'புதுமதம், புதிய ஆதேசம்' என்பனவெல்லாம் பொருத்தமற்ற பேச்சு; அர்த்தமில்லாத வார்த்தை. நூறுயிரம் நியதிகளோ விதிகளோ இருக்கலாம். மனிதன் அவற்றில் சிலவற்றையே இன்று அறியலாம்; நாம் அவற்றை மறைத்துக்கொண்டிருக்கும் திரைகளை நீக்குகிறோம்; அவ்வளவுதான். பழைய காலத்துப் புரோகிதர்கள் வேதத்தின் பலத்தால் தெய்வங்களை அரியாசனங்களினின்றும் இறக்கிவிட்டு, அத்தெய்வங்களின் இடங்களில் தாங்களே அமர்ந்துகொண்டார்கள்; ''உங்களுக்குச் சொற்களின் சக்தி தெரியாது; அவற்றை எப்படி வழங்குவதென்பது எங்களுக்குத் தெரியும். நாங்களே உலகின் நடமாடுந் தெய்வங்கள். எங்களுக்குப் பணம் கொடுங்கள். நாங்கள் வேதச் சொற்களைப் பயன்படுத்தி உங்களுக்குத் தேவையானதைக் கிடைக்கும்படி செய்வோம். இச்சொற்களை நீங்களே உச்சரிக்க இயலுமா? இயலாது. ஏனென்றால், ஒரு சிறு தவறு நிகழ்ந்துவிட்டாலும், எதிரிடையான பயனை உண்டாக்கிவிடும். நீங்கள் செல்வம் படைத்தவராகவோ, நீண்ட ஆயுள் படைத்தவராகவோ, நல்ல கணவன்மார்களை உடையவர்களாகவோ இருக்க விரும்பக்கூடும். அப்படியானால், புரோகிதர்களுக்குப் பணம் கொடுத்துவிட வேண்டும். சும்மா இருக்கவேண்டும்,'' என்றார்கள்.

இதற்கு இன்னொரு பக்கமும் உண்டு. வேதங்களில் முதற் பகுதி பின் பகுதியாகிய உபநிடதங்களினின்று முற்றும் வேறுபட்டது. முதற்பகுதியின் நோக்கம் உலகிலுள்ள மற்ற மதங்களின் நோக்கத்தைப் போலத்தான் உள்ளது; வேதாந்தத்தில் உள்ளது போலில்லை; இகத்திலும் பரத்திலும் போகந்தான் நோக்கம்—கணவன், மனைவி, மக்கள். பணம் கொடுத்தால் புரோகிதர் உங்களுக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் அளிப்பார்; அப்புறம் சுவர்க்கத்தில் நீங்கள் இன்பவாழ்வு வாழலாம். உங்கள் சுற்றத்தாரையெல்லாம் அங்குக் காணலாம். இந்த மகிழ்ச்சியாம் ராட்டினம் முடிவில்லாமல் சுழன்றுகொண்டே இருக்கும். கண்ணீர் இல்லை; அழுகை இல்லை; எல்லாம் சிரிப்புத்தான். வயிற்று

நோய் இல்லாமல் அருந்திக்கொண்டே இருக்கலாம்; தலைவலி இல்லாமல் கூத்தும் கேளிக்கையும் நுகரலாம். அதுதான் மனிதனுடைய உன்னதமான குறிக்கோள் என்று புரோகிதர்கள் கருதினார்கள்.

இந்த மாதிரித் தத்துவத்தில், உங்கள் நவீனக்கொள்கைகளுக்கு ஒத்து வரும் இன்னொரு கருத்தும் உண்டு. மனிதன் இயற்கைக்கு அடிமை; என்றும் அடிமையாகவே இருக்கவேண்டும். அதைக் கரும நியதி என்கிறோம். கரும நியதி என்பது இயற்கைச் சட்டம்; அது எங்கும் செல்லும். எல்லாம் கருமத்தில் கட்டுண்டவை. 'தப்பித்துக்கொள்ள வழி இல்லையா?'—''இல்லை. அடிமைகளாகவே இருங்கள், ஆயுள் முழுதும் சிறந்த அடிமைகளாயிருங்கள். நாங்கள் சொற்களை வழங்கி உங்களுக்கு நல்லதே வருமாறும் கெட்டது வாராதிருக்குமாறும் செய்வோம். நீங்கள் போதிய அளவு எங்களுக்குப் பணம் மட்டும் கொடுங்கள்,'' என்பதுதான் (மீமாம்ஸகர்களின்) கொள்கை. இந்தக் குறிக்கோளே எல்லாக் காலங்களிலும் பொதுமக்களுடைய ஆதரவைப் பெற்று வந்திருக்கிறது. மக்களிற்பெரும்பாலார் சிந்திப்பவர் அல்லர். சிந்தனை செய்யத் தொடங்கினாலும், மூடநம்பிக்கைகளின் பெருங்கூட்டம் அவர்களைப் படுத்தும்பாடு பயங்கரமானது. அவர்கள் சற்றுப் பலமிழந்தால் வருகிறது அடி; முதுகெலும்பு இருபது சுக்கலாக உடைந்து போகிறது. அவர்களை ஆசை காட்டியும் அச்சுறுத்தியுந்தான் நகரச் செய்யலாம்; அவர்களாகவே நகரமாட்டார்கள். அவர்களை மிரட்டவேண்டும்; பயமுறுத்தவேண்டும்; திகிலடையச் செய்யவேண்டும்; பின்பு அவர்கள் என்றென்றும் உங்கள் அடிமைகளாயிருப்பார்கள். அவர்கள் வேறொன்றும் செய்ய வேண்டுவதில்லை—பணம் கொடுக்கவேண்டும்; கீழ்ப்படிய வேண்டும். மற்றவையெல்லாம் புரோகிதரால் செய்யப்படும். மதம் எவ்வளவு எளிதாகிவிடுகிறது பாருங்கள்! நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை. வீட்டுக்குப் போய் சும்மா அமர்ந்திருங்கள். யாரோ ஒருவர் உங்களுக்காக எல்லாவற்றையும் செய்கிறார். அந்தோ! பாவம்! பாவம்! பிராணிகள்!

இதன் பக்கத்திலேயே இன்னொரு முறை: உபநிடதங்கள் கூறும் முடிவுகள் எல்லாம் நேர் எதிரிடையானவை. முதலாவதாக, உபநிடதங்கள் உலகைப் படைப்பவரும் அடக்கி ஆள்பவருமான இறைவரை நம்புகின்றன. பின்னர் இதற்கும் மேலான, அன்பே வடிவமான கடவுளிடம் நம்பிக்கை காணப்படுகிறது. இப்போதும் நாம் புரோகிதரைப் பற்றிக் கேள்விப்படுகிறோமென்

ருலும், குறிக்கோள் மிகவும் சூக்குமத் தன்மையடைகிறது. பல தெய்வங்களுக்குப் பதிலாக 'ஒருவனே தேவன்,' என்ற கருத்து எழுகிறது.

இரண்டாவதாக, நீங்களெல்லோரும் கரும விதியில் கட்டுப் பட்டவர்கள் என்பதை உபநிடதங்கள் ஒப்புக்கொண்டாலும், அவை அதினின்று தப்புவதற்கு வழியையும் காட்டுகின்றன. மனிதனுடைய குறிக்கோள் விதியைக் கடந்துசெல்வது. போகமே குறியாக எப்போதும் இருக்க இயலாது. ஏனென்ருல், போகம் இயற்கைக்கு உட்பட்டுத்தான் இயங்கும்.

மூன்ருவதாக, உபநிடதங்கள் யாகங்களைக் கண்டித்து அவற்றை வெறுக்கின்றன. யாகம் உங்களுக்கு வேண்டுவதை யெல்லாம் கொடுக்கலாம்; ஆனால், அது நல்லதன்று; ஏனென் ருல், உங்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் கிடைக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு தேவையும் அதிகரிக்கிறது. நீங்கள் ஒரு வட்டத்தைச் சுற்றிச் சுற்றி முடிவில்லாமல் சிரித்துக்கொண்டும், அழுது கொண்டும் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள். முடிவில்லாத இன்பம் எங்குங் கிடைக்காது. அது குழந்தையின் கனவுதான். ஒரே சக்திதான் இன்பமாகவும் துன்பமாகவும் மாறி மாறி வருகிறது.

இன்று நான் உளநூல் தத்துவத்தைப்பற்றி எனது எண்ணத் தைச் சிறிதளவு மாற்றிக்கொண்டிருக்கிறேன். உங்கள் மனத்தில் ஓர் எண்ணம் எழுகிறது; அதை நீங்கள் விரும்பவில்லை; வேறு ஒன்றைப்பற்றி எண்ணுகிறீர்கள்; வேண்டாத எண்ணம் முழுதும் மறைந்துபோய்விடுகிறது. அது என்னவாயிற்று? பதினைந்து நிமிடங்களில் மீண்டும் வெளி வருவதை நான் கண்டேன். அது வெளிவந்து என்னை ஆச்சரியத்தில் முழுகச்செய்தது. அது மிக்க ஆற்றல் பொருந்தியதாக, விரைவுடன், பயங்கரமாக எழவே, இங்கே ஒரு பைத்தியக்காரன் இருக்கிருன் என்று எண்ணினேன். அது முடிவுற்ற போது, முன் எழுந்த உணர்ச்சியின் வேகம் அடக்கப்பட்டதெனக் கண்டேன். எழுந்தது எது? என்னுடைய தீய நினைவுப்பதிவு. அது செயல் புரிய வேண்டி இருந்தது. "இயற்கை தன் வழியிலேதான் செல்லும். அடக்குதல் என்ன செய்யும்?" கீதையில்[1] அது ஒரு பயங்கரமான மொழி. போராட் டம் முடிவில் ஒரு பயனையும் அளியாமற் போகலாம். உங்களிடம் ஒரே காலத்தில் நூறுயிரம் ஆசையள் போட்டி போட்டுக்கொண்

[1] கீதை 3-33

டிருக்கலாம். நீங்கள் அவற்றை அடக்கலாம்; ஆனால், வளைந்த வில் நிமிர்கின்றது, மீண்டும் அவை யனைத்தும் அங்கே வந்து நிற்கும்.

எனினும், நம்பிக்கையை இழக்க வேண்டா. நீங்கள் போதுமான ஆற்றலுடையவர்களானால், உங்கள் உணர்வை நீங்கள் இருபது பகுதிகளாக ஒரே காலத்தில் பிரித்துக்கொள்ளலாம். என் மனநிலை மாற்றிக் கொள்கிறேன். மனம் வளர்கிறது. அது தான் யோகிகள் இயம்புவது. ஓர் உணர்ச்சி மேலோங்குகிறது; பின்பு அது இன்னொன்றைக் கிளப்புகிறது; முதலாவது இறந்து போகிறது. நீங்கள் சீற்றமுறுகின்றீர்கள்; பின்பு மகிழ்ச்சியடைகிறீர்கள், சீற்றம் போய்விடுகிறது. அந்தக் கோபத்திலிருந்து தான் நீங்கள் அடுத்த நிலையைப் படைத்துக்கொள்ளுகிறீர்கள். இந்நிலைகளுள் ஒன்றையொன்றாக மாற்றிக்கொள்ளலாம். முடிவில்லாத இன்பமோ துன்பமோ குழந்தைகளின் கனவு. மனிதனுடைய குறிக்கோள் சுகமுமன்று, துக்கமுமன்று. இவை எதினின்று எழுகின்றனவோ, அதை நாம் அடக்கியாள்பவர்களாக வேண்டும். அதாவது, அவற்றின் வேர் எங்கே உளதோ, அங்கேயே அவற்றை நாம் அடக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இன்னொரு வேறுபாடுண்டு: உபநிடதங்கள் எல்லாச் சடங்குகளையும், முக்கியமாகப் பிராணி வதையை உட்கொண்டவற்றைப் பழிக்கின்றன, அவையெல்லாம் மதியீனம் என்கின்றன. ஒரு சாரார் இந்த விலங்கைக் கொன்றால் இந்தப் பயன் கிடைக்கும் என்கின்றனர். 'பிராணியைக் கொன்ற பாவம் ஏற்படுகிறதே, அதற்காக நீங்கள் துன்பம் அனுபவிக்க வேண்டும்,' என்று நீங்கள் மொழியலாம். அவர்கள் அந்த மாதிரி எண்ணமெல்லாம் தவறு என்பார்கள். உங்களுக்கு எது சரி, எது தப்பு என்பது எப்படித் தெரியும்? உங்கள் மனம் அவ்வாறு கூறுகிறதா? உங்கள் மனம் கூறுவதைப் பற்றி யாருக்குக் கவலை! என்ன மதிகெட்ட பேச்சுப் பேசுகிறீர்கள்? உங்கள் மனத்தைச் சாத்திரத்திற்கு எதிராக நீங்கள் வைத்திருக்கிறீர்கள். உங்கள் மனம் ஒன்று சொல்லி, வேதங்கள் வேறொன்றைச் சொன்னால், உங்கள் மனத்தை யடக்கி வேதங்களை நம்புங்கள். ஒரு மனிதனைக் கொல்வது சரி என்று அவை கூறினால் அதுதான் சரி. 'என் மனச்சாட்சி வேறுவிதமாய் உரைக்கிறது,' என்று நீங்கள் கூறினால், அது ஒவ்வாது. எப்போது நீங்கள் ஏதோ ஒரு புத்தகத்தை, என்றென்றும் உண்மையான சொல்லடங்கியது, புனித

மானது என்று நம்புகிறீர்களோ, அப்போது நீங்கள் எதிர்த்துக் கேட்கக்கூடாது. நீங்கள் உங்கள் பைபிளில் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். 'ஆகா! எவ்வளவு அதிசயமான வார்த்தைகள்! எவ்வளவு உண்மையானவை! நன்மை பயப்பவை!' என்கிறீர்கள். பைபிள் கடவுளின் சொல் என்று நம்பினால், பிறகு அதைச் சீர்தூக்கித் தீர்ப்புக் கூற உங்களுக்கு அதிகாரம் இல்லை. எப்போது நீங்கள் சீர்தூக்கிப் பார்க்கிறீர்களோ, அப்போது நீங்கள் பைபிளைவிட உயர்ந்தவர்களாகி விட்டீர்கள். அப்போது பைபிளால் உங்களுக்கு என்ன பயன்? புரோகிதர்கள் பின்வருமாறு கூறுவார்கள் "உங்கள் பைபிளாகட்டும், வேறு ஒன்றாகட்டும், எதனோடும் நாங்கள் வேதத்தை ஒப்பிடச் சம்மதியோம்." ஒப்பிடுவதில் பயனில்லை; ஏனென்றால், எது பிரமாணம்? அதுதான் முடிவு. ஏதோ ஒன்று சரியாக இல்லை என்று நீங்கள் எண்ணினால், வேதங்களின்படி அதைச் சரிப்படுத்திக்கொள்ளுங்கள். உபநிடதங்கள் இதை நம்புகின்றன. என்றாலும், அவற்றின் குறிக்கோள் அதற்கும் மேற்பட்டது. வேதங்களைப் புறக்கணிப்பது அவற்றின் நோக்கமன்று என்பது ஒருபக்கமிருக்க, பிராணிகளைக் கொண்டு வேள்வி செய்வதையும், எல்லோருடைய பணத்தையும் புரோகிதர்கள் கொள்ளையடிப்பதையும் அவை விரும்பவில்லை. மனநூல் சாத்திரம் இரண்டும் ஒன்றுதான்; மாறுபாடெல்லாம் ஆன்ம தத்துவத்திலேதான். ஆன்மாவுக்கு உடலும் மனமும் உண்டா? கருமேந்திரிய ஞானேந்திரியங்கள் இயங்கும் நாடிகளின் கூட்டந்தானா மனம்? மனநூல் பூரணமான சாத்திரம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அதில் மாறுபாடு இருக்க இயலாது. ஆன்ம தத்துவத்தைப் பற்றியும் பிரம்ம தத்துவத்தைப் பற்றியுந்தான் சச்சரவெல்லாம்."

புரோகிதர்களுக்கும் உபநிடதங்களுக்கும் இன்னொரு வேறுபாடுண்டு: உபநிடதங்கள் துறக்கச் சொல்கின்றன. அதுதான் எல்லாவற்றிற்கும் சோதனை. அனைத்தையும் துறந்துவிடு. சித்தத்தின் படைப்புச் சக்திதான், நமக்கு இந்தத் தளையையெல்லாம் கொண்டு வருகிறது. மனத்தின் உண்மையான வடிவம் சாந்தமானது. நீங்கள் அதைச் சாந்தமாக்கினால், அந்நொடியிலேயே நீங்கள் உண்மையை அறிவீர்கள். மனத்தை எது சுழலச் செய்கிறது? கற்பனை, படைப்புச் சக்தி. இப் படைத்தலை நிறுத்திவிடு; அப்போது உடனே உண்மை உங்களுக்கு விளங்கும்.

புரோகிதர்கள் படைப்பைத்தான் ஆதரிக்கிறார்கள். படைப்புத் தொழிலே இல்லாத ஒரு பிராணி யினத்தை உன்னிப்பாருங்

கள். அதை உன்ன இயலாது. ஒரு நிலையான சமூகத்தை வளர்க்க மக்களுக்கு ஒரு திட்டம் வேண்டியிருந்தது; கட்டுப் பாடாகத் தேர்ந்தெடுக்கும் ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டார் கள். 'சான்ருக, குருடர்களும் முடவர்களும் மணம் செய்து கொள்ளக்கூடாது; அதனுல் மற்ற நாடுகளிலிருப்பதைவிட இந்தியாவில் அங்கவீனர்கள் குறைவு. காக்கை வலிப்புடையவர் களும் பைத்தியக்காரர்களும் அங்கே மிகக் குறைவு. இது தேர்ந் தெடுக்கும் கட்டுப்பாட்டினுல் ஏற்படுகிறது. அவர்கள் (அங்க வீனர்கள்) துறவிகளாய்ப் போகட்டும் என்று புரோகிதர்கள் கூறு கிருர்கள். ஆனுல், உபநிடதங்களோ, 'அது கூடாது. உலகிற் காணும் சிறந்த புத்தம் புதுப் பூக்களே வழிபடும் பீடத்தில் சமர்ப் பிக்கப்பட வேண்டும். நலமுற்ற அறிவும், நலமுற்ற உடலும் உள்ள ஆற்றல் மிக்கார், இளைஞர்கள்—இவர்களே உண்மைக் காகப் பாடுபடவேண்டும்,' எனக் கூறுகின்றன.

இத்தகைய கருத்து வேற்றுமைகளால் அவர்கள் ஏற்கெனவே தனியொரு சாதியாராகிவிட்டார்கள் என்பதைக் கூறியிருக் கிறேன். இரண்டாவது, அரசர்கள் சாதி. உபநிடதங்களிலுள்ள தத்துவங்களெல்லாம் அரசர்களுடைய மூளைகளில் அரும்பியவை; புரோகிதர்களிடமிருந்து பிறக்கவில்லை. ஒவ்வொரு மதப் போராட்டத்தின் பின்னும் ஒரு பொருளாதாரப் போராட்டம் உண்டு. மனிதன் எனப்படும் பிராணிக்கு மத உணர்ச்சி சிறிது உண்டெனினும், பொருளாதாரந்தான் வழிகாட்டி. தனி மனிதன் ஏதோ ஒரு நோக்கத்தால் இயக்கப்படினும், மனித சமூகம் பொரு ளாதார நோக்கமில்லாமல் அசைந்ததில்லை. நீங்கள் போதிக்கும் மதம் ஒவ்வொரு பகுதியிலும் பூரணத்தைப் பெறுததாய் இருக் கலாம்; ஆனுல், அதற்குப் பொருளாதாரக் கொள்கையின் அடிப் படை இருந்தால் அதைப் பிரசாரஞ் செய்வோர் ஆர்வம் மிகுந் தவர்களாயிருந்தால், ஒரு நாடு முழுவதும் உறுதியாக ஒப்புக் கொள்ளுமாறு செய்துவிடலாம்.

ஒரு மதம் வெற்றி பெறும்போதெல்லாம், அதற்குப் பொருளா தார மதிப்பு இருக்கவேண்டும். அது போன்ற ஆயிரக்கணக்கான மதப்பிரிவுகள் ஆதிக்கத்திற்குப் பாடு பட்டுக்கொண்டிருக்கலாம். ஆனுல், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பவைகளே ஆதிக்கத்தை அடைவனவாம். மனிதனுக்கு வயிறுதான் வழி காட்டி. அவன் நடக்கும்போது வயிறு முன்னே போகிறது, தலை பின்னேதான் வருகிறது. அதை நீங்கள் கவனித்த தில்லையா? தலை முன்னே போகப் பல கற்பகங்கள் ஆக

வேண்டும். மனிதனுக்கு அறுபது வயதாகும்போது அவன் உலகிலிருந்து வெளியே வரும்படி அழைக்கப்படுகிறுன். வாழ்க்கை முழுவதும் ஒரு மாயை; உள்ளதை உள்ளபடி காணத் தொடங்கும் அந்த சமயத்தில், நீங்கள் கவர்ந்து செல்லப்படு கிறீர்கள். வயிறு முன்னே செல்லும் வரை எல்லாம் ஒழுங்காகச் சென்றது. ஆனல், குழந்தைக் கனவுகள் மறையத் தொடங்கி நீங்கள் உள்ளதை உள்ளபடி காணத் தொடங்குகையில் தலை போய்விடுகிறது. தலை முன்னே செல்ல ஆரம்பிக்கும் அதே சமயத்தில் நீங்கள் வெளியே போய்விடுகிறீர்கள்.

உபநிடத மதத்தை மக்களிடையே பரப்புவது மிகு அரிது. அதில் பொருளாதார உணர்ச்சி மிகக் குறைவு; பிறர் நலக் கருத்து மிகுதி.

உபநிடத உண்மைகள் அரசாட்சிச் செல்வாக்கையெல்லாம் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டிருந்த அரசர்களால் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும், அவற்றுக்கும் அரசுரிமைக்கும் நெடுந் தூரம். ஆகையால், போராட்டம் கடுமையாயிற்று. சிக்கலான நிலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்டது. அப்போது தான் புத்தமதம் தோன்றியது. புத்தமதத்தின் வித்து இதுதான்—அரசர்களுக்கும் புரோகிதர்களுக்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவில் மதம் சீர்குலைந்தது. ஒரு சாரார் வேள்விகளையும் வேதத்தில் மொழிந்துள்ள தெய்வங்களையும் இறுகப் பிடித்துக்கொண்டனர். மறு சாரார் இவற்றை எதிர்த்தனர். புத்த மதம் பொதுமக்களின் தளைகளைக் களைந்தது. எல்லாச் சாதிகளும் நம்பிக்கைகளும் ஒரு நிமிடத்தில் சமமாயின. உன்னதமான மதக் கருத்துகள் இந்தியாவில் இருக்கின்றன; ஆனல், அவைகள் இனிமேலேதான் முழக்கஞ் செய்யப்பட வேண்டும், அல்லாவிடில் அவற்ருல் பயனில்லை.

ஒவ்வொரு நாட்டிலும் புரோகிதர்களே மாறுதல்களை எதிர்ப்ப வர்கள். அதற்குக் காரணங்கள் இரண்டு: ஒன்று, அவர் களுடைய பிழைப்பு; மற்ருென்று, அவர்கள் மக்கள் போகும் வழியிலேதான் போகவேண்டும். எல்லாப் புரோகிதர்களும் வல்லவர்களல்லர். 'இரண்டாயிரம் தெய்வங்களைக் கற்பியுங்கள்,' என்று மக்கள் கூறினுல், புரோகிதர்கள் அப்படியே செய்வார்கள். எந்தச் சமூகம் அவர்களுக்குப் பணம் கொடுக்கிறதோ, அந்தக் கூட்டத்திற்கு அவர்கள் ஊழியர்கள். இறைவர் அவர்களுக்குப் பணம் கொடுப்பதில்லை. ஆகையால், நீங்கள் புரோகிதர்களைக் குறை கூறுவதற்கு முன் உங்களையே குறை கூறிக் கொள்ளுங்

கள். உங்கள் தகுதி எத்தகையதோ, அத்தகைய அரசாட்சியும் மதமும் புரோகிதமுமே உங்களுக்குக்கிடைக்கின்றன ; மேலானது கிடைக்காது.

இவ்வாறு பெரும் போராட்டம் இந்தியாவில் தொடங்கியது, கீதையில் ஓர் உச்சநிலையை அடைகிறது. இந்தியா முழுவதும் இவ்விரு சாரர்களிடையே பிளவுப்பட்டுப் போகும் என்ற அச்சம் தோன்றிய போது, கண்ணபிரானுர் என்பவர் தோன்றினுர். கீதையில் அவர் புரோகிதர்களுக்கும் மக்களுக்கும் இடையில், கருமத்துக்கும் ஞானத்துக்கும் இடையில், சமாதானத்தை உண்டாக்க முயல்கின்ருர். நீங்கள் கிறித்துவை நேசித்துப் பூசிப்பது போலவே கண்ணபிரானுரும் நேசித்துப் பூசிக்கப்படுகிருர். காலத்திலேதான் வேற்றுமை. நீங்கள் கிறித்துவின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது போல இந்துக்கள் கண்ணபிரானுடைய பிறந்த தினத்தைக் கொண்டாடுகிருர்கள். கண்ணபிரானுர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தார். அவருடைய வாழ்க்கை பெருவியப்பு வாய்ந்தது. சில நிகழ்ச்சிகள் கிறித்துவின் வாழ்க்கையுடன் ஒத்தாற்போலிருக்கின்றன. குழந்தை பிறந்தது சிறையில் ; தந்தை குழந்தையை எடுத்துப்போய் இடையர் குலத்தில் விடுகிருர். அவ்வாண்டு பிறந்த குழந்தைகளெல்லாம் கொல்லப்பட்டன. அவரும் முடிவில் கொல்லப்பட்டார். அது அவருடைய நியதி.

கண்ணபிரானுர் மணம் செய்து கொண்டவர். அவரைப்பற்றி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றில் எனக்கு அவ்வளவு அக்கறையில்லை. இந்துக்கள் கதை சொல்வதில் திறமை வாய்ந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். கிறித்துவப் பாதிரிகள் தங்கள் பைபிளிலிருந்து ஒரு கதை சொன்னுல், இந்துக்கள் இருபது கதை சொல்லுவார்கள். திமிங்கிலம் ஜோனுவை விழுங்கிற்று என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஒருவன் யானையை விழுங்கினுன் என்று இந்துக்கள் இயம்புவார்கள். குழவிப் பருவத்திலிருந்தே நான் கண்ணபிரான் சரித்திரத்தைக் கேட்டிருக்கிறேன். கண்ணபிரான் என்ற மனிதர் இருந்திருக்கவேண்டும் என்பதை மெய்பிக்க வேண்டிய அவசியமில்லாமல் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அதிசயமான ஒரு புத்தகத்தை அவர் செய்து வைத்துப் போயிருப்பது அவருடைய கீதையால் தெரிகிறது. ஒரு மனிதருடைய குணத்தை அறிய நாம் அவரைப்பற்றிய கட்டுக்கதைகளை ஆரோய்வோம் என்று உங்கட்குக் கூறினேன். கட்டுக்கதைகள்

அணிகலன்கள் போன்றவை. அவையெல்லாம் மெருகிட்டுச் சீர்படுத்தப்பட்டுக் குணங்களுடன் ஒத்து வரும்படி செய்யப்பட்டிருப்பதை நீங்கள் காணவேண்டும். எடுத்துக்காட்டாக, புத்தரைப்பாருங்கள், சிறப்பான கருத்து, 'தியாகம். அவரைப்பற்றி ஆயிரக்கணக்கான கதைகள் இருக்கின்றன; ஒவ்வொன்றிலும் அவருடைய தியாகத்தைக் கூறுவதுதான் முக்கியம். லிங்கனைப் பற்றி ஆயிரக்கணக்கான கதைகள் உண்டு. ஒவ்வொன்றும் அப் பெரியாருடைய சீரிய குணங்களுக்குள் ஒன்றைப்பற்றியே உரைக்கும். நீங்கள் எல்லாக் கதைகளையும் படித்து அவற்றினிடையே ஊடுருவி நிற்கும் பொதுக் கருத்தைக் கண்டுபிடித்தால் அதுதான் அம்மனிதருடைய முக்கிய குணமாயிருக்கும். பற்றின்மை தான் கண்ணபிரானிடம் காணும் முக்கியக் கருத்து. அவருக்கு எதுவுந் தேவையில்லை. அவர் எதையும் வேண்டுவதில்லை. அவர் பணி புரிவது பணி புரிவதற்காகவே. பணிக்காகவே பணிசெய்; பூசைக்காகவே பூசை செய்; நலம் புரிவது நலமாதலால், நலத்தைச்செய்; மேலே ஒன்றும் கேளாதே. அதுதான் அம் மனிதருடைய கோட்பாடு. இல்லையேல், கட்டுக் கதைகளெல்லாம் இந்தப் பற்றின்மை என்ற கருத்தையே கூறுவனவாயிருக்க மாட்டா. கீதையொன்றுதான் அவருடைய உபதேசம் என்பதில்லை.

எனக்குத் தெரிந்த மனிதர்களுள் எல்லாவகையிலும் பூரணத்துவமெய்தியவர் அவர்; மூளையும், இதயமும், கையும் வியக்கத் தக்க முறையில் அவரிடம் சமமாக அமைக்கப்பட்டிருந்தன. அவருடைய வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்திலும், சான்றோராகவோ, கல்வியிற்சிறந்தவராகவோ, வேறுமாதிரியாகவோ அவர் செயலாற்றும் சிறப்புக் காணப்படுகிறது. அவர் மக்களில் உயர்ந்தோராகவும், கல்விமானாகவும், கவிஞராகவும் பெருமை மிக்கவர். இந்த அதிசயமான பலவகைப்பட்ட செயற்றிறமையும் மூளையும் இதயமும் சேர்ந்து செல்லும் பண்பும், நீங்கள் கீதையில் காண்பதை வெறெந்த நூலிலும் காணமாட்டீர்கள். ஒப்புயர்வற்ற அதிசயமான இதயம், அழகுமிக்க சொல்: அதற்குப் பக்கத்தில் வேறெதுவும் அணுகமுடியாது. அம் மனிதரின் எல்லை கடந்த செயல்திறனின் பதிவு இன்னும் இருக்கிறது. ஐயாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவர் கோடிக்கணக்கான மக்களை மாற்றியிருக்கிறார். உங்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அம்மனிதருடைய ஆதிக்கம் உலகம் முழுவதிலும் எவ்வளவு பரவியிருக்கிறதென்பதைச்சற்றுச்

சிந்தித்துப் பாருங்கள். பரிபூரணமாய்த் தெளிந்த அவருடைய புத்திக்கு எனது வணக்கம் உரியது. அந்த மூளையில் 'ஒட்டடை' மண்டிக்கிடக்கவில்லை; மூட நம்பிக்கையில்லை. ஒவ்வொன்றினுடைய பயனும் அவருக்குத் தெரியும்; ஒவ்வொன்றுக்கும் உரிய இடத்தை அளிக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது அவர் வருகிறார். பேச்சுப் பேசுபவர்கள், எங்கும் செல்கிறவர், வேதங்களின் மறை பொருள்கள் முதலியவற்றைப்பற்றிக் கேள்வி கேட்பவர்—இத்தகையார் உண்மையை அறியமாட்டார்கள். அவர்கள் மோசடிக்காரர்களைக் காட்டிலும் எவ்வகையிலும் சிறந்தவர்களல்லர். வேதங்களில் மூடநம்பிக்கைக்கும் அறியாமைக்குங்கூட இடமுண்டு. முழு ரகசியம் என்னவென்றால், ஒவ்வொன்றுக்கும் தகுதியான ஓர் இடம் காணவேண்டும் என்பதேயாம்.

பிறகு அந்தப் புத்தருக்கும் நெடுங்காலத்துக்கு முன்பே மதத்தின் வாயிலை ஒவ்வொரு சாதிக்கும் திறந்து வைத்த முதல் மனிதர் அவர்தான். அந்த எல்லையற்ற மனம்! அந்தப் பேருழைப்பு நிறைந்த வாழ்க்கை! புத்தருடைய முயற்சி போதனை என்ற ஒரே நிலத்தில் அமைந்தன. அவர் தம் மனைவியையும் குழந்தையையும் வைத்துக்கொண்டு அதே சமயம் ஆசானாக இயலவில்லை. கண்ணபிரானார் போர்க்களத்தின் நடுவில் உபதேசம் செய்தார். "எவனொருவன் தீவிர உழைப்பின் நடுவிலும் உன்னதமான சாந்தியில் தான் இருப்பதாகக் காண்கிறானோ, உன்னதமான சாந்தியிலும் தீவிர உழைப்பைக் காண்கிறானோ, அவனே யோகியும் புத்திமானும் ஆவான்"[1] அத்திரங்கள் தம்மைச் சுற்றிலும் பாய்ந்து செல்வது அம்மனிதருக்கு ஒரு பொருளன்று. சாந்தமாகவும் அமைதியாகவும் அவர் வாழ்வையும் சாவையும் பற்றிய பிரச்சினைகளை அலசுகிறார். ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அவரவருடைய உபதேசத்திற்குத் தாமே சிறந்த விரிவுரை. புதிய ஏற்பாட்டின் (New Testament) கோட்டுபாடு என்னவென்று நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் ஏதோ ஒரு பெயர் கொண்டவரிடம் போகிறீர்கள். ஆனால், செய்ய வேண்டுவதோ, திருப்பித் திருப்பி நாலு சுவிசேடங்களையும் (Gospels) வாசித்து அவற்றின் கருத்தை அங்குப் படம் பிடித்துச் சித்திரிக்கும் இயேசுவின் வாழ்க்கை ஒளியில் அறிந்துகொள்ள முயல்வதேயாம். பெரியோர்

[1] கீதை IV 18

கள் எண்ணுகிறார்கள்; நீங்களும் நானும் எண்ணுகிறோம்; ஆனால் ஒரு வேற்றுமை உண்டு. நாம் எண்ணுகிறோம்; நமது உடல் அதை பின்பற்றுவதில்லை. நம் செயல்கள் எண்ணங்களுடன் சமரசப்படுவதில்லை. நம் சொற்கள் வேதங்களின் சொற்களைப் போலசக்தி வாய்ந்தனவாயில்லை. அவர்கள் எது எண்ணினாலும் அது செயலாக நிறைவேறும். 'இதை நான் செய்வேன்' என்று அவர்கள் கூறினால், உடல் அப்படியே செய்கிறது. அதுவே பரிபூரணமான கீழ்ப்படிதல். அதுதான் முடிவு. நீங்களே கடவுள் என ஒரு நொடியில் நினைத்து விடலாம்; ஆனால், அப்படியே கடவுளாகி விடுவதில்லை. அதுதான் அரிது. அவர்கள் நினைத்தபடி ஆகிவிடுகிறார்கள், நாம் படிப்படியாகத்தான் ஆவோம். இதுவரை கூறியது கண்ணபிரானாரையும் அவர் காலத்தையும் பற்றியது. அடுத்த பேச்சில் அவருடைய நூலைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்வோம்.

கீதை—II

[1900-ஆம் ஆண்டு, மேத் திங்கள் 28-ஆந்தேதி ஸான்பிரான்ஸிஸ் கோவில் நிகழ்த்திய உரை.)

கீதைக்குச் சிறிது முகவுரை தேவை. குருக்ஷேத்திரப் போர்க் களத்தில் காட்சி நிகழ்கிறது. ஒரு வமிசத்தின் இரண்டு கிளைகள், இந்திய சாம்ராச்சியத்திற்காக ஐயாயிரம் ஆண்டு களுக்கு முன் போர் புரிந்தன. பாண்டவர் பக்கம் உரிமை இருந்தது. கௌரவர் பக்கம் வலிமை இருந்தது. பாண்டவ உடன் பிறந்தோர் ஐந்துபேர்; அவர்கள் காட்டில் உறைந்து வந்தார்கள். கௌரவர்கள் ஊசி குத்துங் இடங்கூட அவர் களுக்குக் கொடுக்க மறுத்தார்கள்.

போர்க்களத்தில் காட்சி தொடங்குகிறது. இரு திறத்தினரும் இரு கட்சிகளிலும் தங்கள் தங்கள் உறவினர்களையும் நண்பர்களை யுங் காண்கின்றனர்—ஒரு சகோதரன் ஒரு பக்கம், மற்றவன் மறுபக்கம்; பாட்டன் ஒரு பக்கம், பேரன் மறுபக்கம். அருச்சுனன் தன்னுடைய நண்பர்களையும் உறவினர்களையும் எதிர்ப்பக்கம் கண்ணுற்றுத் தான் அவர்களைக் கொல்ல வேண்டி வரும் என்று எண்ணியபோது அவனுடைய இதயம் இளகிவிடு கிறது அவன் போர் புரிய மறுக்கிறான். இப்படிக் கீதை தொடங்குகிறது.

நம்மெல்லோருக்கும் வாழ்க்கை ஒரு தொடர்பான போர். நம்முடைய பலவீனத்தையும் கோழைத்தனத்தையும் நாம் பொறுமையென்றும் தியாகமென்றும் கூறிக்கொள்ள விரும்பும் சந்தர்ப்பங்கள் எத்தனையோ வருகின்றன. பிச்சைக்காரனுடைய தியாகத்தில் புண்ணியம் யாதுமில்லை. திருப்பியடிக்கும் வலிமை யுள்ள ஒருவன் பொறுத்துக்கொண்டால் அதில் புண்ணியமுண்டு. நமது வாழ்க்கையில் எத்தனை தடவை சோம்பலாலும் கோழைத் தனத்தாலும் நாம் போரினின்று விலகிக்கொண்டு, நாம் தைரிய சாலிகள் என்று நம்முடைய மனத்தையே ஏமாற்றிக்கொள்கிறோம் என்பது நமக்குத் தெரியும்.

கீதை கருத்து நிறைந்த இந்தச் சுலோகத்தில் தொடங்கு கிறது. "அரசே, எழுந்திரு! இந்த இதயத் தளர்ச்சியை,

இந்தப் பலவீனத்தை ஒழி. எழுந்து நின்று போர் புரி!''[1]
பிறகு அருச்சுனன் கண்ணபிரானரிடம் இவ்விஷயத்தைப் பற்றி வாதிக்க முயல்கிறுன்; எதிர்ப்பைவிட இன்னுசெய்யாமை சிறந்த தென்றும், இன்னும் பல உயர்நீதிகளையும் உரைக்கிறுன். எனினும், கண்ணபிரானுரை ஏமாற்ற முடியாது. கண்ணபிரானுர் பரமான்மாவான பகவான். அவர் அருச்சுனனுடைய வாதத்தி லுள்ள தவறுதலை உடனே கண்டுகொள்ளுகிறுர். இங்கு எழுந் துள்ளது கோழைத்தனம். அருச்சுனன் தனக்குச் சொந்தமான வர்களைக் காண்கிறுன்; அவர்களைக் கொல்ல மனம் இடந் தரவில்லை.

அருச்சுனனுடைய இதயத்தில் அவனுடைய கடமைக்கும் உணர்ச்சிப் பெருக்குக்கும் போர் நிகழ்கிறது. நாம் எவ்வளவுக் கெவ்வளவு விலங்கு பறவைகளுடைய நிலையை அணுகுகிறுேமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் உணர்ச்சியாம் நிரயத்தில் இடர்ப்படு கிறுேம். அதை அன்பு என்று வழங்குகின்றுேம். அது தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வதுதான். விலங்குகளைப் போல நாம் நம் உணர்ச்சிகளுக்கு வசமாகிறுேம். ஒரு பசு தனது கன்றுக் காக உயிரைத் துறக்கவும் விரும்பும். ஒவ்வொரு விலங்கும் அங் ஙனம் செய்யக்கூடும். அதனுல் என்ன? பறவையினம் போலக் குருட்டுத்தனமாக உணர்ச்சி வயப்பட்டு இயங்குதல் பூரணத்து வத்துக்கு நம்மைக் கூட்டிச் செல்லாது. பூரண அறிவே மனித னுடைய குறிக்கோள். அங்கே உணர்ச்சிப் பெருக்குக்கு இட மில்லை. அங்கே உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்கும் இந்திரிய வயப்பட்ட எந்தச் செயலுக்கும் இடமில்லை. அங்கே உள்ளது அறிவொளி மட்டுந்தான். அங்கே மனிதன் ஆன்மாவாய் விளங்குகிறுன்.

இப்போது அருச்சுனன் உணர்ச்சி வயப்பட்டுள்ளான். அவன் எப்படியிருக்க வேண்டுமோ, அப்படியில்லை. தன்னை யடக்கி, ஞான ஒளி மிகுந்து, அழிவற்ற அறிவாற்றலின் மூலம் இயங்கும் பெரிய சான்றுேனுய் இருக்க வேண்டிய அவன், ஒரு விலங்கைப் போல, ஒரு குழந்தையைப் போல, தனது மூளையைத் தனது இதயம் கவரும்படி விட்டுவிட்டுத் தன்னை ஓர் அறிவிலி யாகச் செய்துகொண்டு, தனது கோழைத்தனத்தை 'அன்பு' முதலிய மலரனைய சொற்களால் மறைக்கப் பார்க்கிறுன். கண்ண பிரானுர் அதைக்கண்டு கொள்ளுகிறுர். அற்பக் கல்விபெற்ற

---

[1] கீதை, II. 3.

வனைப் போல அருச்சுனன் பேசுகிறான்; பல காரணங்களை எடுத்துரைக்கிறான். ஆனால், அதே சமயம் அவன் அறிவிலாப் பேச்சும் பேசுகிறான்.

"ஞானியானவன் உயிருடனிருப்பவரைப் பற்றியோ, இறந்து போவாரைப் பற்றியோ வருந்துவதில்லை."[1] கண்ணபிரானர் கூறுகிறார்; "நீயும் இறந்து போக முடியாது; நானும் இறந்துபோக முடியாது. நாம் இல்லாமலிருந்த காலம் எப்போதுமே இருக்கவில்லை. நாம் இல்லாமல் போகும் காலமும் ஒரு போதும் வரப்போவதில்லை. இவ்வாழ்க்கையில் ஒரு மனிதன் குழந்தைப் பருவத்தில் தொடங்கி, காளைப்பருவம், மூப்பு முதலியவற்றைக் கடந்து செல்லுவதுபோல, சாவையுங் கடந்து இன்னோர் உடலில் புகுகிறான். அறிஞன் ஏன் வருந்தவேண்டும்?[2] உன்னைப் பீடிக்கும் உணர்ச்சிப் பெருக்கிற்கு மூலம் எங்கே உளது? அது ஐம்புலன்களில் உளது. புலன்களின் சம்பந்தத்தால் இவ் வாழ்விலுள்ள பின் வரும் தன்மைகள் உண்டாகின்றன. குளிர், வெப்பம், இன்பம் துன்பம் என்பன; இவை வருவதும் போவதுமாயிருக்கின்றன."[3] மனிதன் இந்த நிமிடம் துன்புறுகிறான். அடுத்த நிமிடம் இன்புறுகிறான். ஆகவே, அவன் ஆன்மாவின் நிலையை அனுபவிக்க இயலுவதில்லை.

"உள்ளது ஒருபோதும் இல்லாமற் போகாது; இல்லாதது ஒருபோதும் உள்ளதாகாது. ஆகையால், இவ்வுலகமெல்லாம் பரவியுள்ள ஒன்று தொடக்கமும் முடிவும் இல்லாததென்பதை அறிவாயாக. அது மாறுபடாதது. மாறுபாடில்லாத ஒன்றை மாற்றக் கூடியது இவ்வுலகில் எதுவும் இல்லை. இவ்வுடலுக்குத் தொடக்கமும் முடிவும் உண்டெனினும், உடலில் உறைபவன் அளவு கடந்தவன்; முடிவில்லாதவன்."[4] இதையறிந்து எழுந்து நின்று போர் புரிக! ஓர் அடிகூடப் பின்வாங்கக்கூடாது. அது தான் கருத்து. எது வந்தாலும் சரி; போரைப் புரிந்து தீர்த்து விடுக. விண்மீன்களே கோணங்களினின்று நிலைபெயரட்டும்; உலகம் முழுதும் நம்மை எதிர்த்து நிற்கட்டும்! சாவென்றால் உடை மாறுதல் என்பதுதான் பொருள். அதனாலென்ன? ஆகவே, போர் புரியுங்கள். கோழைகளாவதால் நீங்கள் ஒரு பயனையும் அடைய இயலாது. ஓர் அடி பின் வாங்குவதால் நீங்கள் கேட்டைக் கடந்துவிடுவதில்லை. நீங்கள் உலகிலுள்ள

[1] கீதை, II. 11. [2] II. 12-13. [3] II. 14. [4] II. 16-18.

தெய்வங்களையெல்லாம் நோக்கிக் கதறியாயிற்றே, துன்பம் தீர்ந்துவிட்டதா? இந்திய மக்கள் ஆறுகோடித் தெய்வங்களை நோக்கிக் கதறுகின்றார்கள்; என்றாலும், நாய்களைப் போல மடிகின்றார்கள். இந்தத் தெய்வங்கள் எங்கே இருக்கின்றன? நீங்கள் வெற்றி பெற்ற பின் தெய்வங்கள் உங்களுக்கு உதவி புரிய வருகின்றன. அதனால் என்ன பயன்? வீரத்தோடு உயிர் விடுங்கள். மூடநம்பிக்கைகளுக்கு முழந்தாளிடுவதும், உங்கள் மனத்திற்கே உங்களை விற்றுவிடுவதுமாகிய இது எனது ஆன்மாவாகிய உங்களுக்குத் தகாது. நீங்கள் அளவு கடந்தவர்கள்; இறப்பில்லாதவர்கள்; பிறப்பில்லாதவர்கள். நீங்கள் அளவு கடந்த ஆன்மாவாதலால், அடிமையாயிருப்பது உங்களுக்குப் பொருந்தாது. எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்; எழுந்து நின்று போர் புரியுங்கள். சாவு வந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு உதவி புரிய ஒருவருமில்லை. நீங்களே உலகனைத்தும். யாரால் உங்களுக்கு உதவி புரிய இயலும்?''

''எந்தப் பிராணியும் பிறப்புக்கு முன்னும் இறப்புக்குப் பின்னும் நமது மானிட ஐம்புலன்களால் அறியப்படுவதில்லை. இடை நடுவில் மட்டுந்தான் வெளிப்படையாய்க் காணப்படுகிறது. இரங்கி ஓலமிடுதல் எதற்காக?''[1]

''சிலர் அதை (ஆன்மாவை) வியப்பே போலப் பார்க்கின்றனர். சிலர் வியப்பே போலப் பேசுகின்றனர். பிறர் வியப்பே போலக் கேட்கின்றனர். கேட்டும் உணர்வதில்லை.''[2]

''ஆனால், இவர்களையெல்லாம் கொல்வது பாவம் என்று நீ கூறினால் உன்னுடைய குலதரும நிலையினின்று ஆராய்ந்து பார். இன்ப துன்பங்களையும் வெற்றி தோல்விகளையும் சமமாகக் கொண்டு எழுந்து நின்று போர் புரி.''[3]

இது கீதையில் தனிச் சிறப்புடன் விளங்கும் இன்னொரு கொள்கையின் தொடக்கம்; பற்றின்மை என்னும் கொள்கை; அதாவது, நாம் செய்யும் செயல்களில் நாம் பற்றுக்கொள்வதால் அவற்றின் பயன்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுவதாகின்றது...''எது கடமை என்று கடமைக்காகவே செய்யப்படுகிறதோ, அதுவே கருமத் தளையைப் போக்கும்.''[4]

அதில் அளவு மீறிவிடுவோம் என்ற அச்சமில்லை. ''சிறிது செய்தாலும் இந்த யோகம் கொடிய பிறப்பிறப்புச் சுழலினின்று காப்பாற்றும்.''[5]

---

[1] கீதை, II. 28. [2] III. 29. [3] III. 38. [4] III. 39. [5] II. 40.

"அருச்சுனு, எந்த மனம் ஒருமைப்பாடுடையதோ, அந்த மனந்தான் வெற்றி காணும். இரண்டாயிரம் பொருள்களில் சிதறிப்போன மனம் தனது சக்தியை இழந்துவிடுகிறது. சிலர் மலரனைய மொழிகள் பேசி வேதங்களுக்கப்பால் ஒன்றுமில்லை என்று எண்ணலாம். அவர்களுக்குச் சுவர்க்கம் போகப் பேரவா; வேதங்களின் சக்தியால் உலகிலுள்ள இன்பப் பொருள்களை அடைய ஆசை; அதற்காக வேள்விகளைச் செய்வார்.[1] அப்படிப் பட்டவர்கள் இவ்வித உலகியல் எண்ணங்களைக் கைவிடாத வரை ஆன்ம வாழ்க்கையில் ஒருபோதும் ஒரு வெற்றியுங் காணமாட்டார்கள்."[2]

இது ஒரு முக்கியமான பாடம். இன்பம் துய்க்கலாம். விருப்பங்கள் விடாத வரை ஆன்ம வாழ்வு எய்த இயலாது. இந்திரியங்களில் என்ன இருக்கிறது? இந்திரியங்கள் எல்லாம் மதிமயக்கம். இறந்து போன பின்னும் மக்கள் சுவர்க்கத்தில் கண்ணையும் மூக்கையும் விடாமல் வைத்துக்கொள்ள விழைகின்றார்கள். சிலர் அங்கே தங்களுக்கு இங்குள்ளதைவிட மிகுதியான இந்திரியங்கள் இருக்கும் என்று எண்ணுகின்றனர். அரியாதனத்தில் வீற்றிருப்பவனை இறைவனை—இறைவனுடைய உடலை—என்றும் கண்டு கொண்டிருக்க அவர்கள் அவாவுகின்றார்கள். அப்படிப்பட்ட மனிதர்களுடைய ஆசைகளெல்லாம் உடலைப்பற்றியவையே; உண்டி, நீர், இன்பம் இவற்றிற்காக இந்த உடல் வாழ்க்கையை நீடிக்க விருப்பம் உண்டாகிறது. மனிதன் இந்த வாழ்வுக்கப்பால் எந்த ஒன்றையும் நினைக்க முடிவதில்லை. இந்த வாழ்க்கையெல்லாம் உடலுக்குத்தான். "மனம் குவிந்த எந்த நிலை விடுதலைக்கு அழைத்துச் செல்லுமோ, அந்த நிலைக்கு இப்படிப்பட்ட மனிதன் ஒருபோதும் வரமாட்டான்."[3]

"வேதங்கள் சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்று மூன்று குணங்களையுடைய பொருள்களைப்பற்றியே பேசுகின்றன."[4] வேதங்கள் இயற்கையிலுள்ள பொருள்களைப்பற்றி இயம்புகின்றன. ஞாலத்தில் தாங்கள் காணுத எதைப்பற்றியும் மக்கள் எண்ண இயலாது. சுவர்க்கத்தைப்பற்றிப் பேசினுல், சிங்காதனத்தின்மேல் வீற்றிருக்கும் ஓர் அரசனையும் அவன் முன் தூபமிடும் மக்களையும் அவர்கள் எண்ணிக்கொள்ளுகிருர்கள். எல்லாம் இயற்கை. இயற்கையைக் கடந்து எதுவுமில்லை. ஆகையால், வேதங்கள் இயற்கையைப்பற்றியல்லாது வேருென்றையும்

---

[1] கீதை, II. 41, 43. [2] II. 44. [3] II. 44. [4] II. 45.

விரிக்கவில்லை. "எதற்கும் கவலை கொள்ளாமல், நன்மை தீமைகளையும் பொருட்படுத்தாமல், இயற்கையைக் கடந்து, வாழ்க்கையின் இரட்டைகளைக் கடந்து, உனது சொந்த உணர்வையுங் கடந்து செல்வாயாக."[1] நாம் நமது உடலுடன் நம்மை ஐக்கியப் படுத்திக்கொண்டுவிட்டோம். நாம் உடலை உடையவர்களாயில்லாமல் உடலே ஆகிவிட்டோம். என்னைக் கிள்ளினால், நான் கதறுகிறேன். நான் ஆன்மாவாதலால் இதெல்லாம் அறிவீனம். இந்தத் துன்பச் சங்கிலி, மனோராச்சியம், பிராணிகள், தேவர்கள் அசுரர்கள், உலகம் ஆகிய—எல்லாமே நம்மை உடலுடன் ஐக்கியப் படுத்திக்கொண்டதன் விளைவு. நான் ஆன்மா. நீங்கள் கிள்ளினால் நான் ஏன் குதிக்கவேண்டும்? அந்த அடிமைத்தனத்தைக் கவனியுங்கள். உங்களுக்கு வெட்கமில்லையா? நாம் மத நம்பிக்கை கொண்டவர்கள்! நாம் வேதாந்திகள்! நாம் சான்றோர்கள்! ஆண்டவன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்! நாம் என்னவாயிருக்கிறோம்? நடமாடும் நரகங்கள். ஆம், அப்படித்தான் நாம் இருக்கிறோம். பைத்தியக்காரர்கள்; அப்படித்தான் நாம் இருக்கிறோம்?

உடல் என்ற எண்ணத்தை நாம் விட இயலவில்லை. நாம் இம்மண்ணோடு பிணைக்கப்பட்டிருக்கிறோம். நம் எண்ணங்கள் சுடுகாடுகள். நாம் உடலை விடும்போது அவ்வெண்ணங்களின் அமிசங்கள் ஆயிரக்கணக்காக வந்து நம்மைக் கட்டுகின்றன. பற்றில்லாமல் யார் வேலை செய்ய இயலும்? இதுதான் முக்கியமான கேள்வி. அப்படிப்பட்ட மனிதன், தன்னுடைய வேலை வெற்றியடைந்தாலும், தோல்வியடைந்தாலும், சம நிலையிலிருப்பான். அவனுடைய வாழ்க்கைப் பணி முழுதும் ஒரு நொடியில் சாம்பலாக எரிந்து போனாலும், அவனுடைய இதயம் ஒரு பொய்த் துடிப்புக்கூடத் துடிப்பதில்லை. "அவன் தான் பயனைக் கருதாது பணிக்காகவே பணிபுரியும் ஞானி. அவ்வாற்றால் அவன் பிறப்பிறப்புத் துன்பத்திற்கப்பால் செல்லுகிறான்; விடுதலை எய்துகிறான்."[2] "இந்தப் பற்றெல்லாம் மாயை என்பதை அவன் காண்கிறான். ஆன்மா ஒருபோதும் பற்றுக்கொள்ள இயலாது. அப்படிப்பட்டவன் சாத்திரங்களுக்கும் வேதாந்தங்களுக்கும் அப்பாலுள்ள நிலைக்குச் செல்லுகிறான்."[3] மனம் மயக்கத்தையடைந்து புத்தகங்களாலும் சாத்திரங்களாலும் சுழலில் கவரப்படுமானால், புத்தகங்களாலும் சாத்திரங்களாலும் என்ன நலம்? ஒன்று இப்

[1] கீதை. II. 45. [2] II. 51. [3] கீதை, II. 52.

படிச் சொல்லுகிறது; மற்றென்று அப்படிச் சொல்லுகிறது. எந்தப் புத்தகம் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்வது? தனித்து நில்லுங்கள். உங்கள் ஆன்மாவின் பெருமையைக் காணுங்கள். நீங்களே உழைக்க வேண்டுமென்பதைக் காணுங்கள்; அப்போது புத்தி நிலைத்தவர்களாவீர்கள்.[1] அருச்சுனன், "எவன் புத்தி நிலை பெற்றவன் (ஸ்திதப்பிரஞ்ஞன்)?"[2] என்று கேட்கிறான். கண்ண பிரானுர் பின் வருமாறு மொழிகின்றார்: "எல்லா ஆசைகளையுந் துறந்தவன், எதையும் வேண்டாதவன், இவ்வாழ்க்கையையோ முக்தியையோ தெய்வங்களையோ தொழிலையோ வேண்டாதவன்; தன்னிடத்தில் தானே பூரணத் திருப்தியடைந்தவனுகிய அவ னுக்கு ஓர் அவாவும் இல்லை."[3] அவன் ஆன்மாவின் பெருமை யைக் கண்டுகொண்டவன்; உலகமும், தெய்வங்களும், சுவர்க்க மும் தனக்குள்ளேயே இருப்பதை உணர்ந்துகொண்டவன். அப் போது தெய்வங்கள் தெய்வங்களாய் இல்லை; சாவு சாவாய் இல்லை; வாழ்வு வாழ்வாய் இல்லை; எல்லாம் மாறி விட்டன. "ஒருவனுடைய மனம் துயரில் கலங்காததாயும், இன்பத்தைத் தேடாததாயும் பற்றுகள் அனைத்தும் நீங்கியதாயும் அச்சமும் சீற்றமும் இல்லாததாயும் நிலை பெறுமாயின், அவனுடைய அறிவு நிலைபெற்றதாம்."[4]

"ஆமையானது தன் உறுப்பை உள்ளே இழுத்துக்கொள்வது போலவும், நீங்கள் அடித்தாலும் ஓர் உறுப்பும் வெளியே வாராதது போலவும், ஞானியால் தன் இந்திரியங்களையெல்லாம் உள்ளே இழுத்துக்கொள்ள இயலும். எதுவும் அவற்றை வெளியே இழுக்க இயலாது."[5] எந்த விருப்பமும் எதுவும் அவனை அசைக் காது. வையகமே இடிந்து விழட்டும்; அவன் மனத்தில் அது ஒரு சிறு அலையைக்கூட எழுப்பாது.

இனி ஒரு முக்கியமான பிரச்சினை பிறக்கின்றது. சில சம யங்களில் மக்கள் பல நாள்வரை பட்டினியிருக்கின்றார்கள். மிகக் கொடிய மனிதனும் இருபது நாள் பட்டினி கிடந்துவிட்டால், மிக வும் சாந்தமாகிவிடுகிறான். பட்டினி கிடப்பதும் உடலை வருத்துவ தும் மக்களால் உலகெங்கும் கையாளப்பட்டிருக்கின்றன. கண்ண பிரானரது கருத்தோ, இவை எல்லாம் பொருளற்ற செயல்கள் என்பதே. உடலை வருத்தும் மனிதனிடமிருந்து அப்போதைக்கு இந்திரியங்கள் சற்றுப் பின் வாங்கும்; ஆனால், இருபது மடங்கு சக்தியுடன் திரும்பி வரும். நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

[1] II. 53. [2] II. 54. [3] II. 55. [4] II. 56. [5] II. 58

இயற்கையாய் இருங்கள்; உடலை வறுத்த வேண்டா; வேலை செய்துகொண்டே போங்கள்; பற்று மட்டும் இல்லாதிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள். பற்றின்மையின் இரகசியத்தை அறிந்து பின்பற்றாத மனிதனது அறிவு ஒருபோதும் திடமாக நிலைபெறாது.

நான் வெளியே சென்று கண்ணைத் திறக்கிறேன். அங்கே ஏதோ ஒன்று இருந்தால், நான் அதைப் பார்த்தாக வேண்டும். பாராமலிருக்க இயலாது. மனம் இந்திரியங்களைப் பின் பற்றி ஓடுகிறது. ஆகையால், இந்திரியங்கள் இயற்கையைப் பொருட் படுத்தாமலிருக்க வேண்டும்.

"இந்திரியங்களின் வயப்பட்ட உலகோர்க்கு எங்கு இருள் சூழ்ந்த இரவோ, அங்கு இந்திரியங்களை அடக்கியவன் விழிப்புட னிருக்கிறான்; அது அவனுக்குப் பகல் வெளிச்சம். எதில் உலகம் விழித்திருக்கிறதோ, அதில் ஞானி உறங்குகிறான்."[1] உலகு எதில் விழித்துக்கொண்டிருக்கிறது? இந்திரியங்களில், உண்ண வும், பருகவும், குழந்தைகளைப் பெறவும் மக்கள் விரும்புகின்றார் கள்; பின்பு நாயைப்போல் மரிக்கின்றார்கள். அவர்கள் எப் போதும் இந்திரியங்களுக்காக விழிப்புடனிருக்கின்றார்கள். அவர் கள் மதங்கூட அதற்காகத்தான் உள்ளது. அவர்கள் தங்க ளுக்கு உதவி புரிய ஒரு கடவுளைப் படைத்துக்கொள்கின்றார்கள். மங்கையர் பலர், மிகுதியான செல்வம், மிகுதியான குழந்தைகள் தேவை. மிகுதியான தெய்விகத் தன்மையைப் பெறுவதற்கு ஒரு கடவுள் தேவையில்லை! "எதில் உலகம் முழுதும் விழித்துக் கொண்டிருக்கிறதோ, அதில் ஞானி உறங்குகிறான். ஆனால், அஞ்ஞானிகள் எதில் உறங்குகிறார்களோ, அதில் ஞானி விழிப் புடனிருக்கிறான்."[1] மனிதன் தன்னை விலங்கைப்போலவும் பற வையைப் போலவும் உடலென மதிக்காமல், அளவு கடந்ததும், சாவற்றதும் எல்லை கடந்ததுமான ஆன்மாவாகக் காணும் ஒளி யுலகில் ஞானி விழித்திருக்கிறான். எதில் அஞ்ஞானிகள் உறக் கத்திலாழ்ந்து, உண்மையை உணர்ந்துகொள்ளக் காலமும் புத்தி யும் சக்தியும் இல்லாதவர்களாயிருக்கிறார்களோ, அதில் ஞானி விழித்திருக்கிறான். அது அவனுக்குப் பகல் வெளிச்சம் போன் றுள்ளது.

"உலகத்திலுள்ள ஆறுகளெல்லாம் இடையறாது தங்கள் நீர்ப்பெருக்கைக் கடலில் மடுத்த போதிலும், பெருமையும் கம்பீர

---

[1] கீதை, II. 69.

மும் வாய்ந்த கடலின் இயற்கை எவ்வாறு நிலைகுலையாது, மாறு படாது இருக்கின்றதோ, அவ்வாறே ஞானியின் கடல் போன்ற இதயமும் குலைவையோ அச்சத்தையோ 'உணர்வதில்லை.'"[1] கோடி ஆறுகளில் துன்பங்கள் வரட்டும்; நூற்றுக்கணக்கான ஆறுகளில் இன்பங்கள் வரட்டும்; நான் துன்பத்திற்கும் அடிமை யல்லேன்; இன்பத்திற்கும் அடிமையல்லேன்!

[1] கீதை, II. 70.

கீதை—III

[1900-ஆம் ஆண்டு, மேத்திங்கள் 29-ஆம் நாள், ஸான்பிரான்ஸிஸ் கோவில் நிகழ்த்திய உரை]

அருச்சுனன் கண்ணபிரானுரை நோக்கி, "இப்போதுதான் கருமம் செய்யும்படி அறிவுரை அருளினுய். எனினும், பிரம்மஞானமே வாழ்வின் மிக உயர்ந்த வடிவம் என்றும் சிறப்பித்துக் கூறுகிருய். கண்ணு, கருமத்தைவிட ஞானம் சிறந்ததென்பது உன் கருத்தானுல், என்னை ஏன் கருமத்தில் ஏவுகிருய்?" என்ருன்.[1]

கண்ணபிரானுர் காலத்திலிருந்து இந்த இரண்டு நெறிகளும் நமக்கு வந்திருக்கின்றன. சாங்கியர்கள் ஞான மார்க்கத்தை உயர்த்திப் பேசுகின்ருர்கள். யோகிகள் கரும நெறியை உயர்த்தி உரைக்கின்ருர்கள். ஆனுல், எவரும் கருமங்களைத் துறந்துவிட்டதால் சாந்தி எய்த இயலாது. எவரும் இவ்வாழ்க்கையில் ஒரு நொடிகூடச் செயலற்று இருக்க இயலாது. இயற்கையின் குணங்கள் அவரைச் செயலில் இறங்கத் தூண்டும். "எவன் தன் செயல்களை நிறுத்திவிட்டு, அதே சமயத்தில் அவற்றைப் பற்றி மேலும் நினைத்துக்கொண்டே இருப்பானே, அவன் எதையும் அடையமாட்டான்; அவன் பொய்யொழுக்கமுடையவன். ஆனுல், எவன் தனது மனச் சக்தியால் படிப்படியாகத் தன் இந்திரியங்களைச் செயலிற் பயன்படுத்தித் தன் வசமாக்கிக் கொள்ளுகிருனே, அவனே சிறந்தவன்."[2] ஆகையால், நீங்கள் கருமஞ் செய்யுங்கள்.

"உனக்குக் கடமை என்று ஒன்று இல்லை. நீ கட்டுப்பட்டவனல்லன் என்ற இரகசியத்தைத் தெரிந்துகொண்டாலும், நீ பிறருடைய நன்மையைக் கருதித் தொழில் புரியவே வேண்டும். ஏனென்ருல், ஓர் உயர்ந்த மனிதன் எதை எதைச் செய்கிருனே அதை அதையே சாதாரண மக்களும் செய்வார்கள்."[3] "மன அமைதியும் சுதந்தரமும் எய்திய ஓர் உயர்ந்த மனிதன் கருமம் செய்யாவிட்டால், அந்த ஞானமும் அமைதியும் இல்லாத மற்ற எல்லோரும் அவனைப் பின்பற்ற முயல்வார்கள். அதனுல் குழப்பம் பிறக்கும்."[4]

---

[1] கீதை, III. 1. [2] III. 2-8. [3] III. 20-21. [4] III. 22-24.

"அருச்சுனு, நான் அடையாதது ஒன்றுமில்லை; நான் அடைய விரும்புவதும் ஒன்றுமில்லை. என்றாலும், நான் தொடர்ந்து கருமம் செய்துகொண்டேயிருக்கிறேன். நான் ஒரு நொடி கருமம் செய்யாவிட்டால், உலகம் முழுதும் அழிந்து போகும்.[1] "அஞ்ஞானிகள் பயனிலும் இலாபத்திலும் பேரவாக் கொண்டு எங்ஙனம் செயல் புரிகின்றார்களோ, அங்ஙனம் ஞானி கள் பற்றில்லாமலும் பயனிலும் இலாபத்திலும் ஆசையில்லா மலும் செயல் புரியட்டும்."[2]

"நீங்கள் ஞானம் பெற்றவர்களாயினும், அஞ்ஞானிகள் குழந்தைகளைப்போலக் கொண்டுள்ள நம்பிக்கையைக் கலைக்கா தீர்கள். அதற்கு மாறாக, நீங்கள் அவர்களுடைய நிலைக்கு இறங் கிச் சென்று படிப்படியாக அவர்களை மேலே கொண்டுவாருங் கள்."[3] இஃது ஒரு சக்தி வாய்ந்த கருத்து; இதுதான் இந்தியா வில் போற்றப்படும் இலட்சியம். அதனாலேதான் உயர்ந்த நிலையிலுள்ள வேதாந்தியும் கோயிலுக்குச் சென்று உருவங்களை வழிபடுவதை நீங்கள் காண நேர்கிறது. அது பாசாங்கு அன்று.

"மற்றத் தேவதைகளைப் பூசிப்பவர்களுங்கூட உண்மையில் என்னைத்தான் பூசிக்கிறார்கள்,"[4] என்று மேலே கண்ணபிரானார் கூறுவதைப் படிக்கிறோம். உருக்கொண்ட கடவுளை மனிதன் வழுத்துகிறான். நீங்கள் கடவுளைத் தவறான பெயரால் வழங்கி னால், அவர் சீற்றங்கொள்வாரா? அப்படியானால், அவர் கடவுளா கார். ஒருவன் கல்லைத் தொழுதாலும், எந்த வடிவைத் தன் இத யத்தில் கொள்ளுகின்றானே, அது கடவுள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள இயலாதா? எப்படி வழிபட்டாலென்ன?

சமயம் என்பது கொள்கை என்ற கருத்தை நாம் அகற்றி விட்டால், உண்மையை இன்னுந் தெளிவாகக் காண இயலும். ஆதாம் ஆப்பிளை அருந்தியதால் உலகமெல்லாம் பிறந்தன; தப்பித்துக்கொள்ள வழி இல்லை என்ற ஒரு கொள்கை (கிறித்தவ) மதத்தில் உள்ளது. இயேசு கிறித்துவை நம்புங்கள்—அதாவது, 'ஒரு மனிதனுடைய மரணத்தால் நமது விடுதலை,' என்று. ஆனால், இந்தியாவில் முற்றும் மாறுபாடான எண்ணம் உள்ளது. அங்கே மதம் என்பது உண்மையனுபவம்; வேறன்று. 'ஒருவன் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு எப்படிப் போகிறான்? நாலு குதிரைகள் பூட்டிய வண்டியிலா, மின்சார வண்டியிலா, தரையில்

---

[1] கீதை, III. 22, 24. [2] III. 25. [3] III. 26, 29. [4] IX. 23.

உருண்டுகொண்டா?' என்பது முக்கியமன்று. இலட்சியம் ஒன்றுதான். கடுமையான கடவுளின் சீற்றத்தினின்று எப்படித் தப்பித்துக் கொள்வது என்பது (கிறித்தவர்களின்) பிரச்சினை. 'நம்முடைய உண்மை நிலை எதுவோ, அதை எப்படி அடைவது? இழந்துவிட்ட ஆன்ம நிலையை எப்படி மீண்டும் பெறுவது?' என்பது இந்தியர்களின் பிரச்சினை.

நீங்கள் ஆன்மா என்பதை உணர்ந்துகொண்டீர்களா? நீங்கள், "நான் செய்கிறேன்," என்னும்போது அதற்கு என்ன கருத்து? உடல் என்னும் தசைப்பிண்டமா, அல்லது அளவு கடந்த ஆனந்த வடிவமான தன்னொளி கொண்ட அழிவற்ற ஆன்மாவா? நீங்கள் மிகப்பெரிய வேதாந்தியாயிருக்கலாம்; ஆனால், நீங்கள் உடல் என்ற கருத்தைக் கொண்டுள்ள வரை, உங்கள் அடிக்கீழ் நெளியும் சிறு புழுவைவிட நீங்கள் ஒரு வகையிலும் சிறந்தவர்களாக மாட்டீர்கள்! நீங்கள் அக்குற்றத்தினின்று விலக இயலாது. வேதாந்தத்தையெல்லாம் தெரிந்துகொண்டும், அதே சமயத்தில் நீங்கள் உடல் என்று எண்ணுவது உங்களுக்கு அவ் வளவுக்கவ்வளவு குறைவு. 'உடலே தெய்வம்; அதுதான் நீங்கள்,' என்பதா மதம்?

சமயம் என்பது ஆன்மாவை ஆன்மாவாக உணர்வது. நாம் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறோம்? நேர்மாறாக, ஆன்மாவை அசேதனப் பொருளாக உணர்கிறோம். அழிவற்ற கடவுளைக்கொண்டு நாம் அழிவையும், அறிவற்ற பொருளையும் ஆக்குகிறோம்; அழியும் அறிவற்ற பொருளிலிருந்து ஆன்மாவை ஆக்குகிறோம்.

நீங்கள் தலை கீழாக நிற்பதாலோ, ஒற்றைக்காலால் நிற்ப தாலோ, அல்லது மூன்று தலைகளுடன் கூடிய ஐயாயிரம் தெய் வங்களை வழுத்துவதாலோ பிரம்மத்தை நேரில் காண்பதானால், உங்களுக்கு ஆசி கூறுகின்றேன்! எந்த வழியிலாவது அதைச் செய்யுங்கள். அதைப்பற்றி எதுவும் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. உங்களுடைய வழி சிறந்ததாகவும் உயர்ந்ததாகவும் இருந்தாலும், மற்றொருவனுடையது எவ்வளவு கொடியதென்று நீங்கள் எண்ணினாலும், அது கெட்டதென்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்று கண்ணபிரானார் மொழிகிறார்.

மேலும் சமயம் வளரும் இயல்புடையது என்பதை உணர வேண்டும்; அது மதிகெட்ட சொல்லின் மயமானதன்று. இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு மனிதன் கடவுளைக் கண் டான். மோசஸ் தீப்பிடித்த புதரில் கடவுளைக் கண்டார்.

மோசஸ் கடவுளைக் கண்டபோது என்ன செய்தாரோ, அது உங்களைக் காப்பாற்றுமா? ஒரு மனிதன் கடவுளைக் காண்பது உங்களையும் உற்சாகப்படுத்தி அவ்வாறு செய்யும்படி தூண்டுவதற்கு மேலாக, ஒரு சிறிதளவும் அது உங்களுக்கு உதவிபுரியாது. எடுத்துக்காட்டாக அமைந்த முன்னோர்களின் செயல்களின் முழுப்பயனும் அவ்வளவுதான். அதற்குமேல் ஒன்றுமில்லை. வழியிலுள்ள கைகாட்டிக் கம்பங்களே அவை. ஒரு மனிதன் உண்பது மற்றொருவனுடைய பசிப்பிணியைப் போக்காது. ஒரு மனிதன் கடவுளைக் காண்பது மற்றொரு மனிதனைக் காப்பாற்ற இயலாது. உங்களுக்காக நீங்களே கடவுளைக் காண வேண்டும். இந்த மக்களெல்லாம் கடவுளுடைய இயற்கையைப் பற்றி—அவருக்கு ஓர் உடலில் மூன்று தலைகளா அல்லது ஆறு உடல்களில் ஐந்து தலைகளா—என்று சண்டையிடுவதா? நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா? இல்லை. ஒரு போதாவது காணக்கூடும் என்றும் நம்புவதில்லை. இந்த மனிதர்கள் எவ்வளவு மதியீனர்கள்! இவர்கள் நிச்சயம் பைத்தியக்காரர்களே.

கடவுள் ஒருவர் உண்டானால், அவர் உங்கள் கடவுளாகவும், என் கடவுளாகவும் இருக்க வேண்டும் என்பது இந்தியாவில் தோன்றி தொட்டு வந்த நம்பிக்கை. ஞாயிறு யாருக்குச் சொந்தம்? உங்கள் அரசாங்க மாமா எல்லோருக்கும் மாமா என்று நீங்கள் கூறுகிறீர்கள். கடவுள் ஒருவர் உண்டென்றால், நீங்கள் அவரைப் பார்க்க வேண்டும். இல்லையேல், அவர் எப்படியாவது போகட்டும்.

ஒவ்வொருவனும் தன் வழிதான் சிறந்ததென்று கருதுகிறான். மிகவும் நல்லது! அது உங்களுக்கும் நல்லதாயிருக்கலாம் என்பது ஞாபகமிருக்கட்டும். ஒருவனுக்குச் சிறிதும் செரியாத உணவு மற்றொருவனுக்கு நன்றாகச் செரிக்கக் கூடியதாயிருக்கலாம். உங்களுக்கு நல்லதாயிருப்பதாலேயே எல்லோருக்கும் அதுவே வழி—சாத்தனுக்குப் பொருத்தமான சட்டை கொற்றனுக்கும் பெண்ணுக்கும் பொருந்தவேண்டும் என்ற முடிவுக்குத் தாவிவிடாதீர்கள். படிப்பும் பண்பும் சிந்தனையுமில்லாத ஆடவரும் பெண்டிரும் அந்தமாதிரிக் குறுகலான சட்டைக்குள் புகுத்தப்பட்டிருக்கின்றனர். உங்களுக்குள் நீங்களே எண்ணிப் பாருங்கள்; நிரீச்சுவர வாதிகளாகுங்கள். உலகாயதர்களாகுங்கள்; அதுகூடச் சிறந்ததாயிருக்கும். சிந்தனை செய்ய வேண்டும்! 'இந்த மனிதனுடைய வழி தவறு,' என்று சொல்ல உங்களுக்கு என்ன உரிமை? அது உங்களுக்குத் தவறாயிருக்கலாம்.

அதாவது, நீங்கள் அவ்வழிச் சென்ருல், இழிவுறலாம். ஆனல், அதனல் அவன் இழிவுறுவான் என்பது அர்த்தமன்று. ஆகையால், உங்களுக்கு ஞானம் இருந்து, மற்றெருருவன் பலவீனனய் இருப்பதைப் பார்த்தால், அவனை இழிவுபடுத்தாதீர்கள் என்று கண்ணபிரானர் கூறுகிருர். அவனுடைய நிலைக்குச் சென்று உங்களால் கூடுமானல் அவனுக்கு உதவி செய்யுங்கள். அவனக வளரவேண்டும். அவன் தலைக்குள் நான் ஐந்து மணியில் ஐந்து வாளி அறிவைத் திணிக்கலாம். ஆனல், அது என்ன நன்மை செய்யும்? அவன் முன்னிருந்ததைவிடச் சற்று இழிந்தவனகத் தான் இருப்பான். கருமத் தளை எனும் இது எங்கிருந்து வருகிறது? நாம் ஆன்மாவைக் கருமத்தால் பிணிப்பதால் வருகிறது. எங்களுடைய இந்திய நம்பிக்கைப்படி இரண்டுவிதமான இருப்புகள் இருக்கின்றன: ஒரு பக்கம், பிரகிருதி அல்லது இயற்கை; மறு பக்கம் 'தான்' அல்லது ஆன்மா. பிரகிருதி என்பது, இந்த வெளியுலகனைத்தும் மட்டுமன்று; நம் உடல்களும், மனமும், புத்தியும், 'நான்' என்னும் அகங்காரமும் பிரகிருதியே. இவற்றுக்கெல்லாம் அப்பாலுள்ளது அளவு கடந்த ஒளி மயமான ஆன்ம வாழ்வு. இந்த வேதாந்தத்தின்படி ஆன்மா பிரகிருதியினின்று முற்றும் வேருனது; இதுவரை எப்போதும் அப்படித்தான் இருந்துள்ளது; இனியும், எப்போதும் அப்படித்தானிருக்கும். ஆன்மாவை மனத்துடன் ஒன்ருகக் கருதக்கூடிய காலங்கூட எப்போதும் இருந்ததில்லை.

நீங்கள் உண்ணும் உணவே மனத்தை எல்லாக் காலத்திலும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறதென்பது தானே விளங்கும். அது அசேதனப்பிரகிருதி. ஆன்மா அன்னத்துடன் சம்பந்தப்படாமல் மேலே உள்ளது. நீங்கள உணவு உண்டாலும் உண்ணுவிட்டாலும் அக்கறையில்லை. அது அளவு கடந்த பேரொளி. அதனுடைய ஒளி எப்போதும் ஒரே மாதிரியானது. ஒரு விளக்கின் முன் நீங்கள் நீலக்கண்ணுடியையோ பச்சைக் கண்ணுடியையோ வைத்தால் அதனல் விளக்குக்கு என்ன? அதன் ஒளி மாருது. மனந்தான் மாறிமாறி வெவ்வேறு எண்ணங்களைத் தருகிறது. எந்த நொடியில் ஆன்மா உடலை விடுகிறதோ, அப்போது உடல் முழுதும் சின்னபின்னப் படுகிறது. இயற்கையினிடையே உண்மையாய் உள்ளது ஆன்மா. அவ்வுண்மைப்பொருள்—அவ்வான்ம ஒளி—இயங்குவதும், பேசுவதும் ஆகிய எல்லாத் தொழில்களையும் (உடல் மூலமாகவும் மனத்தின் மூலமாகவும்) செய்கிறது. உயிர்க்குயிராயிருக்கும் ஆன்மாவின் சக்தியை அடிப்படையாகக்

கொண்டுதான் பல வகைகளில் பிரகிருதி தொழிலாற்றுகிறது. ஆன்மாதான் நமது எண்ணங்களனைத்திற்கும், உடலின் செயலிற்கும், மற்றெல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பது. ஆனால், அது ஒவ்வொன்றிற்கும் தனது ஒளியைத் தருவதாயினும், நன்மை தீமைகளாலோ, இன்ப துன்பங்களாலோ, தட்ப வெப்பங்களாலோ, இயற்கையின் மற்றெவ்விதமான இரட்டைகளாலோ பாதிக்கப்படுவதில்லை.

"ஆகையால், அர்ச்சுனா, இச்செயல்களெல்லாம் பிரகிருதியில் நிகழ்கின்றன. பிரகிருதி தன் நியதிகளைக்கொண்டு நம் உடல்களிலும் உள்ளங்களிலும் செயலாற்றுகின்றது. நாம் பிரகிருதியுடன் நம்மை ஒன்றுபடுத்திக்கொண்டு 'நான் இதைச் செய்கிறேன்,' என்கிறோம். இவ்வழியாக மயக்கம் நம்மைக் கவ்விக் கொள்ளுகிறது."[1]

நாம் எப்போதும் ஏதோ ஒரு கட்டாயத்திற்குட்பட்டே தொழில் புரிகிறோம். பசி கட்டாயப்படுத்தும் போது, நான் உண்கிறேன். துன்புறுதல் அதினும் கொடிய அடிமைத்தனம். உண்மையான 'நான்' ஒருபோதும் கட்டுப்படாதது. ஒன்றைச் செய்யும்படி அதை எதுதான் கட்டாயப்படுத்த இயலும்? துன்புறுபவன் பிரகிருதியிலிருப்பவன். நாம் உடலுடன் நம்மை ஒன்றுபடுத்திக்கொள்ளும் போதுதான் 'நான் துன்புறுகிறேன்; நான் இன்ன பெயருடையவன்,' என்ற இம்மாதிரி பொருளற்ற மொழிகளையெல்லாம் உரைக்கிறோம். ஆனால், உண்மையுணர்ந்த ஞானி தான் தானாகத் தனித்திருப்பான். அவனுடைய உடல் எதைச் செய்தாலும், அவனுடைய மனம் எதைச் செய்தாலும், அவனுக்கு அக்கறையில்லை. ஆனால், மக்கட்சமுதாயத்தின் பெரும்பகுதி இந்த மாயைக்கு உட்பட்டிருக்கிறதென்பதை மறக்கக்கூடாது. அவர்கள் ஏதாவது நன்மை செய்தால், அதற்குத் தாங்களே செயலாளர்கள் என்று அவர்கள் கருதுவார்கள். உயர்ந்த தத்துவத்தை அவர்களால் இன்னும் அறிந்துகொள்ள இயலவில்லை. அவர்களுடைய நம்பிக்கையைக் கெடுக்கவேண்டா. அவர்கள் தீமையை விலக்கி நன்மையைச் செய்கிறார்கள். அதுவே பெரிது. அது அவர்களிடமிருக்கட்டும். அவர்கள் நன்மைக்காகச் செயல் புரிபவர்கள். படிப்படியாக அவர்கள் சிந்தித்துப் பார்த்து, இவ்வாறு நன்மை புரிவதினும் சிறந்த பெருவாழ்வு ஒன்று உளது என்பதை உணர்ந்துகொள்வார்கள். அவர்கள்

[1] கீதை, III. 27.

சாட்சியாயிருத்தலே போதும்; செயல்கள் தாமே நிகழும். நாளடைவில் அவர்கள் இதை அறிவார்கள். தீமைகளையெல்லாம் விலக்கி நன்மைகளையெல்லாம் செய்த பிறகு, தாங்கள் பிரகிருதிக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதை அவர்கள் கண்டுகொள்ளத் தொடங்குவார்கள். அவர்கள் செயல் புரிபவர்களல்லர். அவர்கள் தனித்து நிற்பவர்கள். அவர்கள் சாட்சிகள். அவர்கள் நின்று பார்த்துக்கொண்டிருப்பவர்கள். பிரகிருதிதான் உலகனைத்தையும் உண்டாக்குகிறது. அவர்கள் பிரகிருதியினின்று திரும்பிவிட்டவர்கள். "அன்பனே, ஆதியில் சத்தாகிய ஒன்றே இருந்தது. வேறு ஒன்றும் இருக்கவில்லை. அது (அனைத்தும் உண்டாகவேண்டும் என்று) எண்ணவே, மற்ற அனைத்தும் உண்டாயின."[1] "மார்க்க தரிசிகளான ஞானிகளுங்கூடத் தங்கள் பிரகிருதியினால் தூண்டப்பட்டுச் செயல் புரிகின்றார்கள். ஒவ்வொருவனும் அவனவனுடைய பிரகிருதிக்கு ஒத்த வகையிலேயே செயல் புரிகிறான். அவன் அதை மீற இயலாது. அணுவானது இயற்கை விதியை மீற இயலாது. மனோமய அணுவோ, பொருள் மய அணுவோ, எதுவாயினும், அது விதிக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். வெளியிலிருந்து அடக்கும் முயற்சியால் என்ன பயன்."[2]

வாழ்க்கையில் ஒரு பொருளுக்கு மதிப்பு எதனால் ஏற்படுகிறது? உடைமையாலன்று; இன்ப நுகர்ச்சியாலன்று. அனைத்தையும் அலசிப்பாருங்கள். அனுபவத்திலும் அதன் மூலம் கிடைக்கும் படிப்பினையிலுமேயல்லாமல் வேறு எதிலும் மதிப்பு இல்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். பல இடங்களில் நமக்கேற்படும் இன்னல்களே, இன்ப நுகர்ச்சிகளைக்காட்டிலும் சிறந்த அனுபவத்தை அளிக்கின்றன. இயற்கையின் இனிய அணைப்பைக் காட்டிலும் அடிகளே நமக்குப் பல முறையும் சிறந்த பாடத்தைக் கற்பிக்கின்றன. பஞ்சத்திற்குக்கூட ஓர் இடமும் மதிப்பும் உண்டு.

கண்ணபிரானார் கூறியுள்ளபடி நாம் இப்போதுதான் புதுப் பிறவியெடுத்தவர்களல்லோம். நம் மனங்கள் புதிய மனங்களாய் இல்லை. ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும்போது மனித இனத்தின் சென்றகாலம் முழுவதையும் தன்னுடன் கொண்டு வருவதல்லாமல், தாவரங்களின் சென்ற காலத்தையுங்கூடக் கொண்டு வருகிறதென்பதை இக்காலத்தில் நாம் அறிகிறோம். பழைய

---

[1] சாந்தோக்கிய உப. VI. ii. 2-3. [2] கீதை, III. 33.

அத்தியாயங்கள் அனைத்தும், நிகழ்கின்ற இந்த அத்தியாயமும் இருப்பதுடன் அக்குழந்தைக்குமுன் எதிர்கால அத்தியாயங்களின் சாரிகளும் இருக்கின்றன. ஒவ்வொருவனும் செல்ல வழி, படம் வரைந்து, அடையாளமிட்டு, அவன் முன்னே திட்டமிட்டு வைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு இருள் இருந்தபோதிலும், ஒரு நிகழ்ச்சியும், ஒரு சூழ்நிலையும், எதுவுமே காரணமின்றி நிகழ இயலாது. நம்மிடந்தான் அறியாமை உளது. முடிவுகாண இயலாத காரிய காரணச் சங்கிலி வளையம் வளையமாக ஒன்றோடொன்றும் மூலப் பிரகிருதியோடும் இணைக்கப்பட்டுள்ளது. உலகம் முழுதும் அத்தகைய சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது. எங்கும் பரந்துள்ள அந்தக் காரண காரியச் சங்கிலியின் ஒரு வளையத்தை, ஒரு பகுதியை நீங்கள் பெறுகிறீர்கள்; இன்னொரு பகுதியை நான் பெறுகிறேன். அந்தப் பகுதிதான் நமது இயற்கை எனப்படுவது. அடுத்தபடியாகக் கண்ணபிரானுர் கூறுகிருர். "மற்ருருவர் நெறியில் முயல்வதைத் காட்டிலும் உங்களுடைய நெறியையே பின்பற்றி உயிர் விடுதலுஞ் சிறந்தது."[1] இது என் நெறி. நான் இங்கே கீழே இருக்கிறேன். நீங்கள் அங்கே மேலே இருக்கிறீர்கள். அங்கே வந்து உங்களுடன் இருக்க எண்ணி, நான் என்னுடைய பாதையை விட்டுவிட விரும்புகிறேன். அப்படிச் செல்வேனுனல், நான் இங்குமில்லாதவன், அங்கு மில்லாதவனுவேன். இந்தக் கொள்கையை நாம் மறந்துவிடக் கூடாது. எதுவும் தானுக வளரவேண்டும். விரையாமல் வளர்ந்தால் நீங்கள் அனைத்தையும் அடையலாம். அதில்லாவிட்டால் ஆன்ம வாழ்க்கைக்குப் பெரிய இன்னல் விளையும். சமய போதனையில் இது அடிப்படையான ஓர் இரகசியம்.

மக்களைப் பாவத்தினின்று இரட்சித்தல், எல்லோரும் ஒரே கொள்கையை நம்புதல் ஆகிய இவற்ருல் நீங்கள் நாடுவது என்ன? அது ஒவ்வாத எண்ணம். பொதுவான சில கருத்துகளையே எல்லா மனிதர்களுக்கும் புகட்டலாம். உண்மையான குரு உங்களுக்குச் சொந்தமான இயற்கை என்னவென்பதைக் கண்டுகொள்வார். உங்களுக்கு அது தெரியாமலிருக்கலாம். உங்களுடைய இயற்கை இன்னதென்று நீங்கள் எண்ணுவது முழுவதும் தவருயிருக்கலாம். அது நீங்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் வளர்ச்சி யடையாமலிருக்கலாம். குருவே அதை அறியக்கூடியவர். அவர் உங்கள் முகத்தை ஒரு முறை உற்று நோக்கி

[1] கீதை, III. 35.

ஞல், அதைக் கண்டுகொண்டு உங்கள் மார்க்கத்தை உங்களுக்குக் காட்டுவார். நாம் தட்டுத்தடுமாறிக் கொண்டு இங்குமங்கும் அலே பவர்களாய், எது எதையோ செய்துகொண்டு, மேலேருமல் இருக் கையில், உரியகாலம் வந்ததும் வாழ்க்கையாற்றில் நாம் மிதந்து செல்லத் தொடங்குகிறோம். நாம் ஆற்றில் இறங்கினதும் மிதக்க ஆரம்பித்தால், அதுதான் நல்ல அடையாளம்; பிறகு போராட் டமே இல்லே. இதையே கண்டுபிடிக்க வேண்டும். பிறகு இதை விட வேண்டுவதில்லே; வேறு நெறியைத் தேட வேண்டுவதில்லே; இதிலேயே உயிரையும் விடலாம்.

இதற்கு மாருக நாம் ஒரு புதிய சமயத்தைத் தொடங்கிப் புதிய கொள்கைகளே நிறுவி, எல்லோரும் ஒரே இயற்கையுடைய வர்கள் என்ற நம்பிக்கையில் மனித இனத்தின் இலட்சியத்தையே பறிகொடுத்துவிடுகிறோம். ஒரே மாதிரியான உள்ளமும் ஒரே மாதிரியான உடலும் படைத்த இருவர் இவ்வுலகில் இல்லே. ஒரே மதமுடைய இருவர் இல்லே.

நீங்கள் ஆன்ம வாழ்க்கையை விரும்பினுல், கட்டுக்கோப் பாக இருக்கும் மதங்களின் வாயிலில் புகவேண்டா. அம்மதங்கள் ஒவ்வொருவரது தனி வளர்ச்சியையும் தடைப்படுத்துவதால், நன்மை செய்வதைவிட நூறு மடங்கு அதிகமான தீமையைச் செய்துவிடுகின்றன. எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள். ஆனுல், உங்கள் சொந்த இடத்தில் உறுதியாய் இருங்கள். நீங்கள் என் மொழியைக் கேட்பதனுல் உங்கள் கழுத்தை வலேக்குள் சிக்க வைத்துவிடாதீர்கள். உங்கள்மேல் பாசக்கயிற்றை எந்த நிமிடத் தில் வீசத்தொடங்குகிருர்களோ, அப்போது தலேயை வெளியே எடுத்துக்கொண்டு, வேறு எங்கேயாவது போய்விடுங்கள். பல பூக்களினின்று தேனேச் சேகரிக்கும் தேனீ, ஒரு பூவிலும் கட்டுப் படாமல் விருப்பப்படி செல்லுவதுபோல, நீங்கள் கட்டுக்கு அகப் படாமல் இருங்கள். கட்டுக்கோப்பான எந்த மதத்தின் வாயிலி லும் நுழைய வேண்டா. ஆன்ம வாழ்க்கையானது உங்களுக்கும் உங்கள் இறைவருக்கும் இடையில் நிகழ்வது. 'மூன்ரும் மனிதன் குறுக்கிடலாகாது. கட்டுக்கோப்பாக உள்ள மதங்களெல்லாம் என்னென்னவெல்லாம் செய்திருக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். மத நம்பிக்கையின் பேரால் அவை செய்துள்ள கொடுமைகளேக் காட்டிலும் எந்த நெப்போலியன் அதிகமான கொடுமைகளேச் செய்திருக்கிருன்? நீங்களும் நானும் கூடிக் கட்டுப்பாடுகளேச் செய்யத் தொடங்கினுல், உடனே ஒவ்வொரு மனிதனேயும் பகைக்கத் தொடங்குகிறோம். ஒன்றை நேசிப்பதற்

குப் பிறவற்றைப் பகைப்பதென்பது கருத்தானல், நேசிக்காம லிருப்பதே நலம். அது நேசமன்று; அது நரகம். உங்கள் சமூகத்தை நேசிப்பது மற்றெல்லோரையும் பகைப்பதானல், அது சுயநலம், விலங்கியல்பு ஆகிய இரண்டினுடைய சாரமாகும். அது முடிவில் உங்களை விலங்குகளாக்கிவிடும். "இன்னெருவருடைய இயற்கைக்குப் பொருந்திய வாழ்க்கை எவ்வளவு உயர்ந்ததாக உங்களுக்குத் தோன்றினும், அதைப் பின்பற்ருமல் உங்களுடைய இயற்கைக்குப் பொருத்தமான ஆன்ம வாழ்க்கையை நடத்துவதிலேயே நீங்கள் உயிர் துறப்பது நல்லது."[1]

"அருச்சுன, எச்சரிக்கையாயிரு. காமமும் கோபமும் கொடிய பகைகள். அவற்றை அடக்கவேண்டும். ஞானிகளுடைய அறிவைக்கூட அவை மறைத்துவிடுகின்றன. காமத்தீயை அழித்தல் இயலாது. இந்திரியங்களும் மனமும் அதற்கு இருப்பிடம். ஆன்மா எதையும் விரும்பாமல் அனைத்திற்கும் அப்பால் உள்ளது."[2]

"இந்த யோகத்தை நான் பண்டைக் காலத்தில் விவசுவானுக்கு அருளினேன். விவசுவான் மனுவுக்கு அளித்தான். அப்படியே இந்த ஞானம் ஓர் அரசனிடமிருந்து இன்னெருவனுக்குக் குலமுறையாக இறங்கி வந்தது. ஆனல், நாளடைவில் இச்சிறந்த யோகம் அழிந்து போயிற்று. ஆகையால், இதை மீண்டும் நான் இன்று உனக்குக் கூறுகிறேன்."[3]

பின்பு அருச்சுனன் கேட்கிருன்: "நீ என்ன இப்படிப் பேசுகிருய்? நீ பிறந்தது இந்த நாள்; விவசுவான் உனக்கு நெடுங் காலத்திற்கு முன் பிறந்தவர். நீ அவருக்கு உபதேசித்ததாய்க் கூறுவதன் கருத்தென்ன?"[4]

கண்ணபிரானர் உரைக்கின்ருர் "அருச்சுன, நீயும் நானும் பிறப்பிறப்புச் சக்கரத்தில் பல முறை சுழன்று வந்திருக்கிருேம். ஆனல், அவை எல்லாம் உனக்கு நினைப்பில்லை. நான் ஆதியில்லாதவன்; பிறப்பில்லாதவன்; படைப்பனைத்திற்கும் ஈசுவரன்; என்னுடைய பிரகிருதியை வசப்படுத்திக்கொண்டு நான் உருவெடுக்கிறேன். எவ்வெப்போது அறம் தாழ்ந்து, மறம் தலையெடுக்கிறதோ, அவ்வப்போது மக்கட் சமூகத்திற்கு உதவ நான் வருகிறேன். நல்லோரைக் கைதூக்கி விடுவதற்கும், தீயோரை அழித்தற்கும், அறத்தை நிலை நாட்டுவதற்கும் நான் அவ்வப் போது வருகிறேன். எவரெவர் எந்தெந்த வழியில் என்னையடைய

[1] கீதை, III. 35. [2] III. 37-40. [3] IV. 1-3. [4] IV. 4.

விரும்பினாலும், அவரவரை நான் அந்தந்த வழியிற் சென்று சந்திக்கிறேன். ஆனால், அருச்சுனா, என் வழியை விட்டு எவரும் விலகிச் சென்றுவிட இயலாதென்பதை அறிந்து கொள்.''[1] எவரும் எப்போதும் சென்றதில்லை. எப்படி நாம் விலகிச் செல்ல இயலும்? எவரும் அவர் வழியிலிருந்து தவற இயலாது.

மக்கட்சமூகங்களெல்லாம் தவறான பொதுக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பொதுக்கொள்கை பரிபூரண மானதாயிருந்தாற்றான் அதிலிருந்து நியதி தோன்றும். பழமொழி என்ன? 'ஒவ்வொரு நியதிக்கும் விலக்கு உண்டு.' அது நியதியானால் அதை மீற இயலாது. எவரும் மீற இயலாது மரத்திலிருந்து விழும் பழம் புவிஈர்ப்புச் சக்தியின் நியதியை மீறு கிறதா? எந்த நொடியில் ஒரு நியதி மீறப்படுகிறதோ, அந்த நொடியில் உலகம் இல்லாது போகும். நீங்கள் நியதியை மீறும் காலம் வரும். அப்போது உங்கள் உணர்ச்சி, உள்ளம், உடல் எல்லாம் கரைந்துபோம்.

ஒரு மனிதன் திருடுகிறான். ஏன் திருடுகிறான்? நீங்கள் அவனைத் தண்டிக்கிறீர்கள். நீங்கள் ஏன் அவனுக்குரிய இடம் கொடுத்து அவனுடைய சக்தியைப் பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? நீங்கள் அவனைப் பார்த்து, 'நீ பாவி,' என்கிறீர்கள். அவன் சட்டத்தை மீறினவன் என்று பலர் கூறுவர். இந்த மக்கட் சமூகமாகிய மந்தை ஒரே மாதிரியான கட்டுப் பாட்டிற்கு அடங்கி நடக்கும்படி கட்டாயப்படுத்தப் படுகிறது. அதனாலேதான் எல்லா இன்னல்களும், பாவமும், பலவீனமும் எழுகின்றன. உலகம் நீங்கள் எண்ணுவது போல அவ்வளவு கொடியதன்று. அறிவிலிகளாகிய நாமே அதைக் கொடியதாகச் செய்துவிட்டோம். நாமே பேய் பிசாசுகளைப் படைத்துக்கொள்கிறோம்; பிறகு அவற்றை ஓட்ட நம்மால் இயலுவதில்லை. கையால் கண்ணை மூடிக்கொண்டு, "யாராவது ஒளியை நல்குங்கள்!" என்று கதறுகிறோம். அறிவிலிகாள்! உங்கள் கண்களை விட்டுக் கைகளை எடுங்கள். அவ்வளவு தான் செய்ய வேண்டுவது. நாம் நம்மைக் காப்பாற்று வதற்குக் கடவுளைக் கூப்பிடுகிறோம். ஒருவனும் தன்னிடமுள்ள குறையைக் காண்பதில்லை. அதுதான் இரங்குதற்குரியது. சமூகத் தில் ஏன் இவ்வளவு ஊழல் இருக்கிறது? என்ன காரணம்

[1] கீதை, IV. 5-8, 11.

கூறுகிறீர்கள்? ஊனும், சாத்தானும் பெண்ணும் என்கிறீர்கள். ஏன் இவற்றைக் கூட்டி வைக்கிறீர்கள்? உங்களை ஒருவரும் கூட்டிவைக்கச் சொல்லவில்லை. "அருச்சுனா, என் வழியிலிருந்து எவரும் விலக இயலாது."[1] நாம் மதியீனர்கள்; நம்முடைய வழிகளும் மதி கெட்டவைகளாயிருக்கின்றன. நாம் இந்த மாயையின் வழிச் செல்ல வேண்டியிருக்கிறது. கடவுள் சுவர்க்கத்தைப் படைத்தார், மனிதன் தனக்குத் தானே நரகத்தைப் படைத்துக் கொண்டான்.

"ஒரு கருமமும் என்னைத் தொடாது. எனக்குக் கருமப் பலனில் விருப்பமில்லை. என்னை எவர்கள் இவ்வாறு அறிகின்றார்களோ, அவர்கள் இரகசியத்தை அறிந்தவர்கள். அவர்கள் கருமத்தில் கட்டுப்படமாட்டார்கள். முன் காலத்து இருடிகள் இந்த இரசியத்தையறிந்து ஆபத்தின்றிக் கருமம் புரிந்தார்கள். நீயும் அதே மாதிரி கருமம் செய்."[2]

"எவனொருவன் மிகுதியாகக் கருமம் செய்கையிலும் மிகுதியான அமைதியைக் காண்கிறானோ, மிகுந்த அமைதியிலும் மிகுந்த கருமம் செய்பவனாகின்றானோ, அவனே அறிஞன்."[3] ஒவ்வோர் இந்திரியமும் ஒவ்வோர் அங்கமும் செயலாற்றும் போதும் உன்னை எதுவும் கலக்க முடியாதபடி உனக்கு அந்த அமைதியிருக்கிறதா? இதுதான் வினா. கடை வீதியில் வண்டிக்காகக் காத்துக் கொண்டிருக்கையில் உன்னைச் சுற்றிலும் எல்லாம் பரபரப்பாயிருக்கும்போது, நீ அமைதியாகவும், சாந்தமாகவும், தியானத்திலிருக்கிறாயா? ஒரு குகையில் உன்னைச் சுற்றி எல்லாம் அசைவற்றிருக்கும்போது நீ மிகுதியும் செயலாற்றுபவனாகின்றாயா? அப்படியிருந்தால், நீ ஒரு யோகி; அன்றேல், நீ யோகி அல்ல.

"எவனுடைய ஒவ்வொரு முயற்சியும் விளைவில் விருப்பமில்லாமல், சுய நலத்தில் நாட்டமில்லாமல், பற்றற்றதாயிருக்கிறதோ, அவனை அறிஞன் எனப் பெரியோர் கூறுகின்றனர்."[4] நாம் சுய நலத்திலேயே நாட்டமுள்ளவர்களாயிருக்கும் வரை, உண்மையறிவு நமக்கு ஒரு போதும் வாராது. நாம் ஒவ்வொன்றிற்கும் நம்முடைய சாயத்தைப் பூசிவிடுகிறோம். பொருள்கள் தத்தம் சுய வடிவில் நம்மிடம் வருகின்றன. அவை தம்மை மறைத்துக் கொள்ளவில்லை. நாம் அவற்றை மறைக்கிறோம். நம்மிடம் சாயக்குச்சி இருக்கிறது. ஒரு பொருள் வந்ததும் அது நமக்குப்

---

[1] கீதை, IV. 11 [2] IV. 14, 15. [3] IV. 18. [4] IV. 19.

பிடிக்காவிட்டால் அதற்குச் சிறிது சாயம் பூசிவிட்டுப் பிறகு பார்க்கிறோம். நாம் எதையும் உள்ளபடி அறிந்து கொள்ள விரும்புவதில்லை. நாம் ஒவ்வொன்றின் மேலும் நமது அகந்தையைப் பூசுகிறோம். எல்லாக் காரியங்கட்கும் தூண்டுதலாயிருப்பது சுயநலம். ஒவ்வொன்றும் நம்முடைய அகத்தால் மறைக்கப்படுகிறது. ஒரு பட்டுப்புழு தன் உடலிலிருந்தே நூலை நூற்று, அதனுல் கூண்டைச் செய்து, அதில் தன்னையே அடைத்துக் கொள்வது போல, நாமுமிருக்கிறோம். தன் செயலாலேயே தன்னை அது சிறைப்படுத்திக் கொள்ளுகிறது. நாமும் அதைத்தான் செய்கிறோம். 'என்னை' என்று நான் சொன்னுல், அந்த நொடியில் நூல் ஒரு சுற்றுச் சுற்றுகிறது; 'நான், என்னுடைய' என்றுல், இன்னொரு சுற்றுச் சுற்றுகிறது. அப்படியே சுற்றிக்கொண்டு போகிறது.

நாம் செயலின்றி ஒரு நொடி நேரங்கூட இருக்க இயலாது. செயல் புரியுங்கள்! உங்களை அண்டை வீட்டுக்காரர், "சற்று வந்து எனக்கு உதவி செய்யுங்கள்," என்று கேட்டால், எப்படிச் செய்வீர்களோ, அம்மாதிரி, நோக்கத்துடனேயே உங்களுக்கும் உதவிசெய்து கொள்ளுங்கள். அவ்வளவுதான். இன்னெருவனுகிய சாத்தானுடைய உடலுக்கு நீங்கள் செய்வதைவிட அதிகமாக எதுவும் உங்களுடைய உடலுக்குச் செய்யாதீர்கள். அதுதான் ஆன்ம வாழ்க்கை.

"எவனுடைய முயற்சி அனைத்தும் ஆசையும் சுயநலமும் அற்றதோ, அவன் கருமத்தளையை ஞானத்தீயால் எரித்துவிட்டவன். அவனே அறிவுள்ளவன்."[1] நூல்களை ஓதுவதால் அது கிட்டாது. ஒரு கழுதையின்மேல் ஒரு புத்தகசாலையையே சுமத்திவிடலாம். அது அக்கழுதையைக் கல்வி பெற்றதாக்கிவிடாது. பல நூல்களைப் படிப்பதால் என்ன பயன்? "பயனில் பற்றை விட்டு, எப்போதும் திருப்தியுள்ள மனத்தினனுய், இலாபத்தில் ஆசை கொள்ளாமல் கருமம் செய்யும் ஞானி கருமத்தைக் கடந்தவன்."[2]

என் தாய் வயிற்றிலிருந்து நான் நிருவாணமாய் வந்தேன்; நிருவாணமாய்ப் போகிறேன்; அனுதையாய் வந்தேன்; அனுதையாய்ப் போகிறேன்; இப்போதும் அனுதைதான். சேருமிடம் தெரியவில்லை. அதைப்பற்றி நினைக்கவே அச்சமாயிருக்கிறது. பைத்தியக்கார எண்ணங்களெல்லாம் தோன்று

---

[1] கீதை, IV. 19. [2] IV. 20.

கின்றன. ஆவியோடு பேசக் கருவியாக நிற்கும் ஒருவரிடம் (medium) போய் இறந்தவருடைய ஆவி நமக்கு உதவி புரியுமா என்று பார்க்கிறோம். அந்த பலவீனத்தைக் கவனியுங்கள். ஆவிகள், பேய்கள், தேவதைகள், — எல்லாப் புரோகிதர்களும் எல்லாச் சூழ்ச்சிக் காரர்களும், யாராலும், சரி, வாருங்கள். நாம் பலவீனமாயிருக்கும் அதுதான் சமயம், அவர்கள் நம்மைப் பிடித்துக்கொள்வதற்கு. பிறகு அவர்கள் எல்லாத் தெய்வங்களையும் கொண்டுவந்து விடுவார்கள்.

எங்கள் நாட்டில் ஒரு மனிதன் படித்துப் பலவானாகும் போது அவன் வேதாந்தியாகி, “இந்தப் பிரார்த்தனையும் தீர்த்தங்களில் முழுகுவதும் மதீயீனம்,” என்பான். ஒருவனுடைய தந்தையார் இறக்கிறார். தாய் இறக்கிறாள். அஃது ஓர் இந்துவுக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தரும்- நிகழ்ச்சி. அப்போது அவன் ஒவ்வோர் அழுக்குக் குட்டையிலும் குளிப்பதையும், கோவிலுக்குள் சென்று புழுதியைக் கவ்வுவதையும் காண்பீர்கள். யாராவது உதவுங்கள்! ஆனால், நமக்கு உதவி இல்லை. எவரிடமிருந்தும் உதவியில்லை. அதுதான் உண்மை. மனிதர்களைவிடத் தெய்வங்களின் எண்ணிக்கை மிகுதி என்றாலும், உதவி கிட்டாது. நாம் நாய்களைப் போலச் சாகிறோம்—உதவி கிடைப்பதில்லை. எங்குப் பார்த்தாலும் மிருகத் தன்மை, பஞ்சம், நோய், துன்பம், தீமை! எல்லோரும் உதவிக்காக ஓலமிடுகின்றனர். ஆனால், உதவி இல்லை. என்றாலும் ஆசையைக் கைவிடாமல், நாம் உதவிக்காகக் கதறுகிறோம். எவ்வளவு இரங்குதற்குரிய நிலை! எத்துணை அச்சுறுத்தும் காட்சி! உங்கள் உள்ளத்தை உற்று நோக்குங்கள்! பாதி இன்னல்களுக்கு நாம் பொறுப்பாளிகளாக மாட்டோம்; நம்முடைய பெற்றோர்கள் பொறுப்பாளிகள். இந்த பலவீனத்துடன் பிறந்தோம். மேலும் மேலும் இது நமது தலையில் புகுத்தப்பட்டது. மெள்ள மெள்ளத் தான் இதைக் கடந்தாக வேண்டும்.

‘உதவி இல்லையே! என்ன செய்வோம்!’ என்று ஏங்குதல் மிகப்பெரிய தவறு. எவரிடமிருந்தும் உதவியைக் கோராதீர்கள். நாமே நமக்கு நல்லுதவி. நமக்கு நாமே உதவி செய்துகொள்ள முடியாவிட்டால், நமக்கு உதவி செய்வார் எவருமில்லை.... “உனக்கு நீ ஒருவனே நண்பன்; உனக்கு நீ ஒருவனே பகைவன். எனக்கு என்னுடைய இந்த அகத்தைத் தவிர வேறு பகையில்லை. என்னைத் தவிர வேறு நட்பும் இல்லை.”[1] இதுதான்

[1] கீதை, VI. 5.

முடிவான சிறந்த பாடம். இதைக் கற்றுக் கொள்ள, அந்தோ! எவ்வளவு காலம் ஆகிறது! இது கைக்குக் கிட்டிவிட்டதாக எண்ணுகிறோம். அடுத்த நொடியில் பழைய அலை மோதுகிறது; முதுகெலும்பு உடைகிறது. நாம் பலமிழந்து மறுபடியும் மூட நம்பிக்கைக்கும் உதவிக்கும் கை நீட்டுகிறோம். அந்தப் பெருந் துன்பக் குவியலைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். எல்லாம் உதவி நாட்டமாகிய இந்தத் தவறான எண்ணத்தின் விளைவே.

புரோகிதர் வழக்கமான தம் மந்திரங்களை ஓதிவிட்டுத் தக்கிணையை எதிர்பார்க்கிறார். அறுபதினாயிரம் பேர்கள் வானத்தை நோக்கிப் பிரார்த்தனை செய்து புரோகிதருக்குத் தக்கிணை தருகிறார்கள். திங்கள்தோறும் அவர்கள் அவ்வாறே நோக்கித் தக்கிணை கொடுத்து வேண்டுகின்றார்கள். அதை எண்ணிப் பாருங்கள்! அது பைத்தியக் காரத்தனமானதல்லவா? வேறு என்ன அது? இதற்கு யார் காரணம்? நீங்கள் சமயப் பிரசாரம் செய்யலாம். ஆனால், அது வளர்ச்சியடையாத குழந்தைகளின் மனத்தைக் கிளறிவிடுகிறது! நீங்கள் அதற்காகத் துயரத்தை அனுபவிக்க வேண்டிவரும். உள்ளத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் யார்? எவருடைய தலையிலாயினும் சரி, பலவீனத்தை உண்டாக்கும் ஒவ்வோர் எண்ணத்தையும் புகுத்தியதற்காக நீங்கள் வட்டிக்கு வட்டி கூட்டி அனுபவிக்க வேண்டிவரும். கரும நியதி உங்கள் ஊனையே கூலியாகக் கேட்கும்.

ஒரே ஒரு பாவந்தான் உண்டு. அதுவே பலவீனம். நான் சிறுவனாயிருந்த போது மில்டன் எழுதிய 'இழந்த சுவர்க்கம்' என்ற கவிதையைப் படித்தேன். அதில் நல்லவனாகிய சாத்தான் ஒருவனிடந்தான் எனக்கு மதிப்பு ஏற்பட்டது. எவன் பலவீனமடையாமல், எல்லாவற்றையும் எதிர்த்து நின்று சாவதற்கு ஆயத்தமாயிருப்பவனோ, அவனே ஒரு சான்றோனாவன்.

எழுந்து நின்று தைரியமாய் உயிரைக் கொடுங்கள்! எந்தத் தீமை வரக் காத்துக்கொண்டிருக்கிறதோ, அதனுடன் உங்கள் பலவீனத்தையும் சேர்க்காதீர்கள். உலகிற்கு நான் சொல்ல வேண்டுவதெல்லாம் அவ்வளவுதான். வீரர்களாயிருங்கள்! நீங்கள் ஆவிகளைப்பற்றியும் பேய்களைப்பற்றியும் பேசுகிறீர்கள். உயிருடன் உலாவும் பேய்கள் நாமே. பலமும் வளர்ச்சியுமே உயிருக்கு அடையாளம். பலவீனந்தான் சாவுக்கு அடையாளம். எது பலவீனமானதோ, அதனின்று விலகிக்கொள்ளுங்கள். அது சாவு. பலமுள்ளதானால், நரகத்திற்குக் கீழே செல்ல வேண்டி வந்தாலும், அதை இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள்.

வீரர்களுக்கு மட்டுந்தான் முக்தியுண்டு. வீரமற்ற எவர்க்கும் அழகிற்சிறந்ததை அடைய உரிமையில்லை. தைரியத்தின் உச்சியை அடையாத எவர்க்கும் முக்திக்கு உரிமை இல்லை. நரகமா? யாருக்கு? சித்திரவதை யாருக்கு? பாவம் யாருக்கு? பலவீனம் யாருக்கு? சாவு யாருக்கு? நோய் யாருக்கு?

நீங்கள் தெய்வத்தை நம்புகிறீர்கள். அப்படியானால், உண்மையான தெய்வத்தை நம்புங்கள். "நீயே ஆடவன்; நீயே பெண்; நீயே பலசாலியாக நடக்கும் இளைஞன். நீயே தடியூன்றித் தள்ளாடும் கிழவன்.[1]" "பலவீனம் நீயே; அச்சம் நீயே; சுவர்க்கம் நீயே; நரகமும் நீயே. கடிக்கும் பாம்பும் நீயே. அச்சமாக நீ வா! சாவாக நீவா! துன்பமாக நீ வா!.."

பலவீனமனைத்தும் தளைகளனைத்தும் கற்பனை. அவற்றைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னால், அவை மறைந்து ஒழிய வேண்டும். பலவீனமடையாதீர்கள். தப்புவதற்கு வேறு வழியில்லை. வீரர்களாய் எழுந்து நில்லுங்கள். அச்சம் வேண்டா. மூட நம்பிக்கை வேண்டா. உண்மையைக் கண்டு அஞ்ச வேண்டா. சாவு வந்தால்—அதுதான் நம்முடைய மிகக் கொடிய துன்பம்—வரட்டும்! நாம் இன்பமாக உயிரைவிடத் துணிந்துள்ளோம். எனக்குத் தெரிந்த மதமெல்லாம் அவ்வளவு தான். நான் இன்னும் அதை அடையவில்லை. ஆனால், அதற் காகப் போராடிக்கொண்டிருக்கிறேன். நான் அடையாமற் போகலாம்; ஆனால், நீங்கள் அடையலாம், முன்னேறுங்கள்.

"எங்கே ஒருவன் மற்றொன்றைக் காண்கிறானோ, மற்றொன் றைக் கேட்கிறானோ, எதுவரை, இரண்டு உண்டோ, அது வரை அச்சம் இருந்தே தீரும்; அச்சமே எல்லாத் துன்பங்களுக்கும் பிறப்பிடம். எங்கே ஒருவன் மற்றொன்றைக் காணவில்லையோ, எங்கே எல்லாம் ஒன்றேயாய் உள்ளதோ, அங்கே துயரத்திற் காளாக எவருமில்லை. துன்புறுவதற்கு எவருமில்லை."[2] இரண் டற்ற ஒன்றேதான் உளது. ஆகையால், அஞ்சாதீர்கள். விழித்துக்கொள்ளுங்கள்; எழுந்திருங்கள்; இலட்சியத்தை யடையும் வரை நிற்காதீர்கள்!

---

[1] சுவேதாசுவதர உபநிடதம், IV. 3. [2] சாந்தோக்கியோபநிடதம், VII. 23,24.

கீதையைப்பற்றிய நினைவுகள்

[1897-இல் சுவாமி விவேகானந்தர் கல்கத்தாவில் இருந்த போது, ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தின் மூலஸ்தானமான மடத்திலேதான் பெரும்பாலும் தங்கினார். அப்போது மடம் ஆலம்பசாரில் இருந்தது. சுவாமிகள் அச்சமயம் பல இளைஞர்களுக்குப் பிரம்மசரிய தீட்சையும் சந்நியாஸ ஆச்சிரமமும் வழங்கினார். இவர்கள் இதற்குச் சிறிது காலம் முன்பு தொடங்கியே தங்களை இம்மாதிரி வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்து இப்போது சுவாமிகளை அணுகியவர்கள். எதிர் காலப் பணிக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் சுவாமிகள் இவர்களுக்குத் தியானம் பழகும் முறையைக் கற்பித்து, கீதையிலும் வேதாந்தத்திலும் வகுப்புகளும் நடத்தினார்; ஒரு நாள் வகுப்பில் வங்க மொழியில் ஆர்வத்துடன் கீதையைப்பற்றிப் பேசினார். மடத்தின் தினசரிக் குறிப்பில் அந்தப் பிரசங்கம் சுருக்கமாக எழுதிவைக்கப்பட்டிருந்தது. கீழே வருவது அதன் மொழிபெயர்ப்பு.]

கீதை என்னும் புகழ் வாய்ந்த நூல் மகாபாரதத்தில் அடங்கியது. கீதையைச் சரியாக அறிந்துகொள்வதற்குப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுவது முக்கியம். முதலாவது, அது மகாபாரதத்தில் அடங்கியதுதானா? அதாவது, அதை ஆக்கியவர் வேதவியாசர் என்பது உண்மையா, அல்லது அப்பெரிய இதிகாசத்தினுள் அது திணிக்கப்பட்டதா?' என்பது. இரண்டாவது, 'கண்ணபிரானார் என்று சரித்திர முறைப்படி ஒருவர் இருந்திருக்கிறாரா?' என்பது. மூன்றாவது, 'கீதையில் கூறப்பட்டுள்ள வண்ணம் குருக்ஷேத்திரத்தில் அப்பெரிய போர் உண்மையில் நிகழ்ந்ததா?' என்பது. நான்காவது, 'அருச்சுனனும் ஏனையோரும் சரித்திரம் ஒப்புக்கொள்ளக்கூடிய மனிதர்களா?' என்பது.

முதன்முதலாக இம்மாதிரி ஆராய்ச்சிக்கு ஆதாரங்களைக் கவனிப்போம். வேதவியாசர் எனப் பெயர் கொண்டவர் பலர் இருந்திருக்கின்றனர் என்பது நமக்குத் தெரியும். அவர்களுள் எவர் உண்மையில் கீதையை ஆக்கியவர்?—பாதராயண வியாசரா, துவைபாயன வியாசரா? 'வியாசர்' என்பது ஒரு பட்டப் பெயர். புதிதாக ஒரு புராணத்தை ஒருவர் எழுதினால், அவரை வியாசர் என்பது வழக்கம். அதே மாதிரிதான் விக்கிரமாதித்தியன் என்பதும் ஒரு பொதுப் பெயராய் இருந்திருக்கிறது.

மற்றொரு விஷயம் என்னவென்றால், கீதை எனும் இந்நூல், சங்கராச்சாரியார் இதற்குத் தம்முடைய விரிவுரையை எழுதிப் பிரசித்தியாக்குவதற்கு முன் பொதுவாக மக்களுக்கு அதிகமாய்த் தெரியாமலிருந்தது.

அதற்கு நீண்ட காலத்திற்குமுன் போதாயனர் எழுதிய விரிவுரை ஒன்று வழக்கிலிருந்ததாகப் பலர் கூறுகின்றனர். இதை மெய்ப்பிக்க முடியுமானால், கீதையின் பழைமையையும் அது வியாசர் ஆக்கியதென்பதையும் நிலைநாட்ட அது பெரிதும் உதவு மென்பதில் ஐயமில்லை. வேதாந்த சூத்திரங்களுக்குப் போதா யனர் எழுதியுள்ள விரிவுரையைப் பின்பற்றி இராமானுசர் ஸ்ரீ பாஷ்யம் எழுதியிருக்கிறார். போதாயனர் விரிவுரையைப் பற்றிச் சங்கராசாரியார் குறிப்பிட்டு இங்குமங்கும் தமது பாஷ் யத்தில் அதிலிருந்து மேற்கோள்களும் காட்டுகிறார். அதைப் பற்றி, சுவாமி தயானந்தர் பெரிதும் ஆராய்ச்சிசெய்கிறார். ஆனால் இந்தியா முழுவதும் யாத்திரை செய்கையில், நான் ஓர் இடத்தி லாவது அந்நூலின் ஒரு பிரதியைக் கூடக் காண இயலவில்லை. இராமானுசர் தமக்குக் கிடைத்த ஒரு செல்லரித்த சுவடியிலிருந்து தமது பாஷ்யத்தைத் தொகுத்ததாகக் கூறுகிறார்கள். போதா யனர் எழுதிய இப்பெரிய வேதாந்த சூத்திர பாஷ்யமே இவ்வளவு ஐயப்பாட்டிருளால் மூடப்பட்டிருக்கையில், அவருடைய கீதா பாஷ்யத்தின் இருப்பைப்பற்றித் தீர்மானிக்க முயல்வது வீணாகும். சங்கராசாரியாரே கீதையை ஆக்கியவர் என்றும், அவரே அதை மகாபாரதத்தில் ஏற்றிவிட்டவர் என்றும் மொழி வாருமுண்டு.

இரண்டாவது விஷயத்தைக் கவனிக்குமிடத்துக் கண்ண பிரானுடைய வரலாற்றைப்பற்றி மிகுந்த ஐயம் இருக்கிறது. சாந்தோக்கிய உபநிடதத்தில் ஓர் இடத்தில் கோரர் என்ற யோகி யிடமிருந்து தேவகி புத்திரரான கண்ணபிரானார் ஞானோப தேசம் பெற்றார் என்பது குறிப்பிடப்படுகிறது. மகாபாரதத்தில் கண்ணபிரானார் துவாரகையின் அரசர். விஷ்ணுபுராணத்தில் கண்ணபிரானார் கோபிகைகளுடன் விளையாடினது சித்திரிக்கப் படுவதைக் காண்கிறோம். மீண்டும் பாகவதத்தில் 'ராஸலீலை' விரிவாக வருணிக்கப்படுகிறது. மிகு தொன்மை வாய்ந்த காலத் தில் நமது நாட்டில் 'மதனோற்சவம்' (காமன் பண்டிகை) என்ற ஒரு விழா நடைமுறையிலிருந்தது. அதுவே கண்ணபிரானா ருடைய தோள்மேல் சுமத்தப்பட்டுத் 'தோலோத்ஸவமாயிற்று'! அவரைப்பற்றிக் கூறப்படும் ராஸலீலையும் மற்றவைகளும்

அவ்வாறே அவர்மேல் திணிக்கப்பட்டவையல்ல என்று எவர் தான் நிச்சயமாகக் கூற முடியும்? பண்டைக் காலத்தில் வரலாற்று ஆராய்ச்சியால் உண்மைகளைக் கண்டுபிடிக்கும் இயல்பு நமது நாட்டில் மிகக் குறைவாயிருந்தது. ஆகையால், எவராயினும் சரி, நிகழ்ச்சிகளுக்கு ஆதாரம் காட்டாமலே, தாம் எது சிறந்ததென்று கருதினாலும் அதைக் கூறிவிடக்கூடும். இன்னொன்று: அந்தப் பண்டைக் காலங்களில் மனிதரிடம் பேருக்கும் புகழுக்கும் ஆவல் குறைவு. ஆகையால், ஒருவர் ஒரு நூலை எழுதி அதைத் தம் குருவின் பெயராலோ, வேறொருவர் பெயராலோ உலகில் உலவ விடுவதும் அடிக்கடி நிகழ்ந்து வந்தது. அம்மாதிரி இடங்களில் வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய் பவர் உண்மையைக் கண்டுபிடித்தல் மிகவும் அரிதே. பண்டைக் காலத்தில் பூகோள அறிவு சிறிதுகூட அவர்களுக்கு இருக்க வில்லை. கற்பனை கட்டுக்கடங்காமலிருந்தது. ஆகவே, இனிப் புக் கடல், பாற்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல் என்றெல்லாம் ஒவ்வாத கற்பனைப் படைப்புகளை நாம் காண்கிறோம்! ஆனால், வேதங்கள் शतायुर्वै पुरुषः மனிதன் நூறாண்டு வாழ்பவன்—என்றே முழங்குகின்றன. நாம் இங்கு எதைப் பின்பற்றுவது? ஆகவே, கண்ணபிரானைப்பற்றித் தக்க முடிவை அடைவது பெரும்பாலும் இயலாத காரியம்.

ஒரு சான்றோனுடைய உண்மையான இயல்பைச் சுற்றிப் பல வகைப்பட்ட மனித அறிவு எல்லை கடந்த கற்பனைகளைப் புனைவது மனித இயற்கை. கண்ணபிரானுரைப் பற்றியும் அதுவேதான் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால், அவர் ஓர் அரசராய் இருந்திருக்க வேண்டும் என்பது மட்டும் பொருத்த மாகத் தோன்றுகிறது. பொருத்தம் என்கிறேன்; ஏனென்றால், பண்டைக் காலத்தில் நமது நாட்டில், பிரம்ம ஞானத்தைப் பரப்புவதில் வேந்தர்களே பெரிதும் முயன்றார்கள்.

இன்னொரு கருத்தும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். கீதையை ஆக்கியவர் யாராயிருந்தபோதிலும், அதிலுள்ள படிப் பினைகள் மகாபாரதம் முழுவதிலும் உள்ள படிப்பினையாகவே இருப்பதை நாம் உணருகிறோம். இதிலிருந்து நாம் அச்சமின்றி ஊகிக்கக்கூடியது என்னவென்றால், மகாபாரத காலத்தில் ஒரு சான்றோர்தோன்றி, அக்காலத்தில் சமூகத்திற்காக இந்தப் புதிய உடையில் பிரம்ம ஞானத்தை உபதேசித்தார் என்பதேயாம். மற்றொரு கருத்தும் நம்முன் வருகிறது. அதாவது, பண்டை நாட்களில் ஒரு வகுப்புக்குப்பின் ஒரு வகுப்பாகக் கிளம்பிய

போது அவர்களிடையே வழங்குவதற்கு ஒன்றன்பின்னொன்றாகப் புது மத நூல்களுந் தோன்றலாயின. நாளடைவில் அவ்வகுப்புகளும் மத நூல்களும் ஆகிய இரண்டுமே அழிந்து போயின; அல்லது, வகுப்பு மறைந்துபோய் மத நூல் மட்டும் எஞ்சி நின்றது. அவ்வாறு கீதையும் ஒரு வகுப்பாரின் மத நூலாய் இருந்திருக்கலாம் என்பதும் பொருத்தமே; அவர்கள் தங்களுடைய உயர்ந்ததும் சிறந்ததுமான எண்ணங்களை இந்தப் புனித நூலில் சேமித்து வைத்திருக்கக்கூடும்.

இனி, மூன்றாவது கருத்தாகிய குருக்ஷேத்திரப் போரைக் கவனித்தால், அதற்காதாரமாக ஒருவிதமான அத்தாட்சியும் காணப்படவில்லை. ஆனால், குரு நாட்டாருக்கும் பாஞ்சால நாட்டாருக்குமிடையே ஒரு போர் நிகழ்ந்ததென்பதில் ஐயமில்லை. மற்றொரு கருத்து ஞானத்தைப்பற்றியும், பக்தியைப்பற்றியும், யோகத்தைப்பற்றியும், போர்க்களத்தில் இரு பெருஞ்சேனைகள் அணிவகுத்துப் போர்தொடங்க ஆயத்தமாகிக் கடைசி உத்தரவிற்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்நிலையில் எங்ஙனம் அவ்வளவு பெரிய உரையாடல் நிகழ்ந்திருக்க முடியும்? போர்க் கலவரத்திலும் சந்தடியிலும் கண்ணபிரானுக்கும் அருச்சுனனுக்குமிடையே நிகழ்ந்த அந்த உரையாடலின் ஒவ்வொரு சொல்லையும் எழுதி வைத்துக்கொள்ள அங்கு யாராவது சுருக்கெழுத்து வல்லார் இருந்தாரா? இந்தக் குருக்ஷேத்திரப் போர் என்பது ஏதோ ஓர் உட்கருத்தை விளக்க வந்த கட்டுக்கதை என்பது சிலருடைய உட்கருத்தாகும். அவ்வுட் கருத்தைச் சுருங்கக்கூறுமிடத்து, அது மனிதனுக்குள்ளேயிருக்கும் நல்ல இயல்புகளுக்கும், தீய இயல்புகளுக்கும் இடைவிடாது நிகழும் போராட்டமாகும். இக்கருத்து அறிவிற்கு ஒவ்வாததன்று.

நாலாவதாக, அருச்சுனனும் மற்றவர்களும் சரித்திரப்படி உலகில் வாழ்ந்தவர்களா என்று ஐயங் கொள்ளவும் இடமிருக்கிறது. சதபதப்பிராம்மணம் என்பது ஒரு புராதன வேத பாகம். அதில் ஓர் இடத்தில் அசுவமேதயாகம் செய்தவர்கள் எல்லோருடைய பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கு அருச்சுனனுடைய பேரனும் பரீட்சித்துவின் மைந்தனுமான ஜனமேஜயனைப்பற்றிக் குறிப்பிட்டிருந்த போதிலும், அருச்சுனனைப் பற்றியோ, பிறரைப்பற்றியோ பேச்சே இல்லை. என்றாலும், மகாபாரதத்திலும் மற்றப் புத்தகங்களிலும் உதிட்டிரரும் அருச்சுனனும் பிறரும் அசுவமேதயாகம் செய்தார்கள் என்பது கூறப்பட்டுள்ளது.

இங்கு ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, நம்முடைய உண்மையான நோக்கத்திற்கும் இந்த வரலாற்று ஆராய்ச்சிக்கும் ஒரு வகையான தொடர்புமில்லை. நமது நோக்கம் தருமத்திற்கு வழி காட்டும் ஞானம். இவை அனைத்தும் வரலாற்று ஆதாரம் சிறிதும் இல்லாதவை என்பது இன்று மெய்ப்பிக்கப்பட்டாலும், அதனால் நாம் சிறிதேனும் எதையும் இழந்துவிடமாட்டோம். 'அப்படியானால், இவ்வளவு வரலாற்று ஆராய்ச்சியால் என்ன பயன்?' என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பயனுண்டு; எப்படியென்றால், நாம் உண்மையைக் கண்டுபிடித்தாக வேண்டும்; அறியாமையால் ஏற்பட்ட தவறான கருத்துகளில் கட்டுண்டிருப்பது நமக்குத் தகாது. இந்நாட்டில் அத்தகைய ஆராய்ச்சிகளை மக்கள் மதிப்ப தில்லை. பலருக்குப் பயன்படக்கூடிய ஒரு நல்ல செய்தியைக் கற்பிப்பதற்கு உதவக்கூடியதாயிருந்தால், ஒரு பொய் சொல் வதனால் தவறில்லை என்று பல வகுப்பினர் எண்ணுகின்றனர். அதாவது, வேறு முறையாகக் கூறினால், நோக்கம் நல்லதா யிருந்துவிட்டால், அதற்கு வழி எதுவாயிருந்தாலும் அது நியாயமே என்கின்றனர். ஆகவே, நம் தந்திரங்களில் பல, 'மகாதேவன் பார்வதிக்குச் சொன்னது' எனத் தொடங்குகின் றன. ஆனால், உண்மை இன்னதென்பதைத் தெளிவாக உணர வேண்டுவது நமது கடமை; உண்மையை மட்டும் நம்ப வேண்டுவது. உண்மையை ஆராயாத பழைய வழக்கத்திலுள்ள நம்பிக்கைக்கும் மூடநம்பிக்கைக்கும், மனிதர்களைக் கையையுங் காலையுங் கட்டித், தளைப்படுத்தக்கூடிய அளவு சக்தி உண்டு; அதனாலேதான் இயேசு கிறித்துவும், முகம்மதுவும், மற்ற மகான் களுங்கூட அம்மாதிரி பல மூட நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றைஉதறித் தள்ளமுடியாமலிருந்தார்கள். நீங்கள் உண்மை யின் மேலேயே உங்கள் பார்வையை எப்போதும் நிலையாக வைத்து மூட நம்பிக்கைகளை முழுதும் விலக்க வேண்டும்.

இனி, கீதையில் என்ன இருக்கிறதென்பதை நாம் நோக்க வேண்டும். நாம் உபநிடதங்களைப் படித்தால் அவற்றில் பொருத்தமற்ற பல விஷயங்களைப் பற்றிய விவாதங்களிடையில் திடீரென ஒரு பெரிய உண்மையைப் பற்றின பேச்சுத் தொடங்கப் படுகிறது. அது ஒரு பெரிய காட்டில் ஒரு வழிப்போக்கன் அழகு மிக்க ஒரு ரோஜா மலரை இலைகளாலும் முட்களாலும் வேர்களா லும் மூடப்பட்ட சில இடங்களில் காண்பது போன்றதாகும். அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கீதையானது ஓர் அழகிய

மாலையைப் போலவோ, சிறந்த மலர்களாலான பூச்செண்டைப் போலவோ விளங்குகிறதெனக் கூறலாம். உண்மைகள் அவ்வளவு கவின் பெற அங்குத் தொடுத்து வைக்கப்பட்டுள்ளன. உபநிடதங்கள் விரிவாகப் பலவிடங்களில் சிரத்தையைப்பற்றிக் கூறுகின்றன; ஆனால், பக்தியைப்பற்றி மிகுதியாகக் கூறவில்லை. கீதையில் இதற்கு மாறாக, பக்தியென்ற செய்தி மீண்டும் மீண்டும் விளக்கப்படுவது மட்டுமன்றி, பக்தியின் தத்துவம் அங்கு உச்ச நிலையை எய்துகிறது.

இப்போது கீதையில் விளக்கப்படும் சில சிறந்த கருத்துகளைக் கவனிப்போம்: இதற்கு முன்னுள்ள சமய நூல்களைவிடச் சிறந்ததாகக் கருதப்படும் கீதையின் புதுமை எதில் உளது? அது இதுதான்: அது தோன்றுவதற்கு முன் யோகம் ஞானம் பக்தி முதலியவற்றுள் ஒவ்வொன்றிலும் ஆழ்ந்த பற்றுள்ளவர்கள் இருந்தார்களென்றும், அவர்கள் ஒருவரோடொருவர் சொற்போர் புரிந்து கொண்டு ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான நெறியே சிறந்ததெனக் கூறிவந்தனர் என்றும் அறிகின்றோம். இந்நெறிகளைச் சமரசப்படுத்த எவரும் முயலவில்லை. கீதாசாரியரே முதன் முதலாக இவற்றைச் சமரசப்படுத்த முயன்றார். அக்காலத்திலிருந்த ஒவ்வொரு வகுப்பினரும் கொடுக்கக்கூடியதில் சிறந்த பகுதிகளை எடுத்துக் கீதையில் அவர் தொடுத்தார். எதிர் வழக்கிடும் சமயங்களைக் கண்ணபிரானார் கூட முழுதும் சமன் வயப்படுத்தாமல் விடுத்த இடங்களில் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பத்தொன்பதாவது நூற்றாண்டில் அதை நிறைவேற்றினார்.

அடுத்தபடி, நிஷ்காம கருமம் (பயன் கருதாப் பணி). இக்காலத்தில் இதன் கருத்து என்னவென்பதை மக்கள் பலவகையாக உணர்கின்றார்கள். பற்றின்மை என்பது குறிக்கோளின்மை எனச் சிலர் கருதுகின்றனர். அதன் கருத்து அப்படியிருந்தால், இதயம் பண்படாத விலங்குகளும் சுவர்களுங்கூட நிஷ்காம கருமம் புரிதற்கு உதாரணமாயிருக்கலாம். வேறு பலர் ஜனகரை எடுத்துக் காட்டாகக் கூறித் தங்களை நிஷ்காம கர்மானுஷ்டானத்தில் கைதேர்ந்தவர்களென்று பிறர் ஏற்க வேண்டுமென விரும்புகின்றனர். ஜனகர் குழந்தைகளைப் பெற்று அந்த நிலையை அடையவில்லை; ஆனால், இவர்கள் பல குழந்தைகளைப் பெற்றவர்களாயிருப்பதொன்றையே தகுதியுடையதாகக் கொண்டு ஜனகர்களாகிவிட விழைகின்றார்கள். உண்மையான நிஷ்காம கர்மி (ஆசையின்றிச் செயல்புரிபவன்) விலங்கைப்போலவும் இருக்க

மாட்டான்; உயிரற்றதைப் போலவும் இலங்கமாட்டான்; உள்ளத்தில் ஈரமில்லாமல் திகழ மாட்டான். அவன் தாமச குணம் படைத்தவனல்லன்; சுத்த சத்துவ குணம் படைத்தவன். உலகனைத்தையும் தனது அன்பில் தழுவக்கூடிய அவ்வளவு அன்பு அவனுடைய இதயத்தில் நிரம்பியுள்ளது. அனைத்தையும் தழுவும் அவனுடைய அன்பையும் கருணையையும், விரிந்த உலகம் எளிதில் அறியமாட்டாது.

அறத்தின் வேறுபட்ட வழிகளைச் சமரசப்படுத்துவதும், பற்றின்றிப் பணி புரிவதுமாகிய இவ்விரண்டுமே கீதையின் முக்கியமான பண்புகள்:

இப்போது இரண்டாவது அத்தியாயத்தில் சிறிதளவு வாசிப்போம்:

संजय उवाच ॥

तं तथा कृपयाविष्ट मश्रुपूर्णाकुलेक्षणम् ।
विषीदन्त मिदं वाक्यमुवाच मधुसूदनः ॥ १ ॥

श्री भगवानुवाच ॥

कुतस्त्वा कश्मल मिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्ट मस्वर्ग्य मकीर्तिकर मर्जुन ॥ २ ॥
क्लैब्यं मास्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदय दौर्बल्यं त्यक्त्वोत्तिष्ट परंतप ॥ ३ ॥

ஸஞ்சயர் கூறியது.—அவ்வாறு இரக்கத்தால் மனங் கரைந்தவனும் கண்ணீரால் மறைந்த பார்வையுடையவனும், துயருகின்றவனுமான அந்த அருச்சுனனை நோக்கி இந்த மொழியை மதுசூதனர் உரைத்தார்: ஸ்ரீ பகவான் பகர்ந்தது—"அருச்சுனா, இந்தச் சிக்கலான நிலையில், மேன்மக்களுக்கொவ்வாததும், வானவர் நாட்டின் வழியை யடைப்பதும், பழிக்கிடமானதுமாகிய மனக்குழப்பம் எங்கிருந்து வந்து உன்னை அடைந்தது?

"எதிரிகளை எரிப்பவனாகிய அருச்சுனா, பேடித்தனத்தை அடையாதே. இது உன்னிடத்தில் சிறிதும் பொருந்தாதது. அற்பமான மனத் தளர்ச்சியை ஒழித்து எழுந்திரு."

तं तथा कृपयाविष्ट (தம் ததா க்ருபயாவிஷ்டம்) எனத் தொடங்கும் சுலோகங்களில் எவ்வளவு கவித் திறனுடன் எவ்வளவு அழகாக அருச்சுனனுடைய உண்மையான நிலை சித்திரிக்கப்படுகிறது!

பிறகு கண்ணபிரானர் அருச்சுனனுக்கு அறிவுரை வழங்குகின்ருர். க்லைப்யம் மாஸ்ம கம: பார்த்த (க்லைப்யம் மாஸ்ம கம : பார்த்த) என்ற சொற்களில் அவர் ஏன் அருச்சுனனைப் போர் புரிய ஏவுகிருர்? அருச்சுனன் போர் புரிய விரும்பாதது சத்துவ குணத்தின் எழுச்சியாலன்று ; அவ்விருப்பமின்மை தமோ குணத்தின் செயல். சத்துவ குணம் படைத்த மனிதனுடைய இயல்பு, வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும்—பெருக்கத்திலும், சுருக்கத்திலும்—ஒரேவண்ணமாக அமைதியாயிருப்பது. ஆனல், அருச்சுனன் அச்சமடைந்தான் ; இரக்கத்தால் அவனுடைய இயல்பு கவரப்பட்டது. போர் புரியும் இயல்பும் விருப்பமும் அவனுக்கு இருந்தன என்பது அவன் போர்க்களத்திற்கு அந்த நோக்கத்துடனேயே வந்தான் என்ற ஒரு காரணத்தாலேயே மெய்ப்பிக்கப்படுகிறது. அடிக்கடி நமது வாழ்க்கையிலும் இம் மாதிரிச் செயல்கள் நிகழ்கின்றன. பலர் தாம் சத்துவ குணம் படைத்தவரென எண்ணிக்கொள்ளுகின்றனர் ; ஆனல், உண்மையில் அவர்கள் தமோ குணம் மிக்கவர்களே. தூய்மையற்றவராய் வாழும் பலர், தாம் பரமஹம்ஸர்களாகிவிட்டதாய் எண்ணிக் கொள்ளுகின்றனர். ஏன் ? பரமஹம்ஸர்கள் பித்தனைப்போலவும், பேயனைப் போலவும், உயிரற்றதைப் போலவும் இருப்பார்கள் என்று சாத்திரம் கூறுகிறதன்ரு ! பரமஹம்ஸரை ஒரு குழவிக்கு ஒப்பிடுவார்கள். ஆனல், அங்ஙனம் ஒப்பிடுதல் ஒரு வகையிலே தான் பொருத்தும். பரமஹம்ஸரும் பாலகனும் சிறிதும் மாறுபாடின்றி ஒரே மாதிரியானவர்களல்லர். அவர்கள் ஒரே மாதிரியாகப் பார்வைக்குத் தோன்றுகிருர்கள்—இருவரும் இரு கோடிகளில் இருப்பதால். ஒருவர் ஞானத்தைக் கடந்து சென்றுவிட்டார் ; மற்றவனுக்கோ ஞானம் சிறிதும் அரும்பவில்லை.

ஓர் அளவுக்கு மீறின ஒளியும், ஓர் அளவுக்குக் குறைந்த ஒளியும் கண்களுக்குப் புலனுகா. அப்படிப்பட்டவைகளே சத்துவ குணமும் தமோ குணமும். சில வகைகளில் அவை ஒன்று போலத் தோன்றுகின்றன. ஆனல், அவைகளிடையே வேற்றுமை உலகத்தைப் போலப் பெரிது. சத்துவ குணத்தைப்போல வேடம் பூண்டுகொள்ளத் தமோ குணத்திற்கு விருப்பம் அதிகம். இங்கே சிறந்த போர் வீரனன அருச்சுனனிடம் அது தயையின் போலி வேடத்தில் வந்துள்ளது.

அருச்சுனனைக் கவ்விக்கொண்ட இந்த மயக்கத்தை அகற்றப் பகவான் என்ன அறிவுரை வழங்கினர் ? ஒருவனைப் பாவி என்று சொல்லி இழிவு படுத்தாமல் அவனிடமுள்ள முழுச் சக்தியையும்

நினைவூட்டவேண்டும் என்று நான் அடிக்கடி கூறுவது போலப் பகவானும் அருச்சுனனிடம் नैतत्त्वय्युपपद्यते (நைதத் த்வய்யுபபத்யதே) 'இது உனக்குத் தகாது' என்கிறார். 'நீ தீமைகளைக் கடந்து அழிவில்லாமலிருக்கும் ஆன்மா. உண்மை இயல்பை மறந்து, உன்னைப் பாவியென எண்ணிக்கொண்டு, உடல் நோயாலும், மனத்தின் இடும்பையாலும், ஒருவன் வருந்துவதுபோல, நீ உன்னை இப்படிச் செய்து கொண்டுள்ளாய். இது உனக்குத் தகாது,' என்கிறார். क्लैब्यं मास्म गमः पार्थ (க்லைப்யம் மாஸ்ம கம: பார்த்த) 'பேடித் தனத்திற்கு இடம் தாராதே. பிருதையின் மைந்தனே, உலகில் பாவமும் இல்லை, துன்பமும் இல்லை; நோயும் இல்லை; துயரும் இல்லை. உலகில் பாவம் என்று சொல்லக்கூடிய ஏதாவதொன்று இருக்குமானால், அது தான் இந்த 'அச்சம்'. உன்னிடம் மறைந்துறையும் சக்தியை எந்தக் காரியம் வெளிப்படுத்துமோ, அதுவே புண்ணியம் என்பதை உணரவேண்டும். எது உடலையும் மனத்தையும் பலவீனப் படுத்துவதோ, அதுதான் உண்மையில் பாவம். அதுதான் 'அச்சம்'. இந்தப் பலவீனத்தை, இதயத் துர்ப்பலத்தை, உதறித் தள்ளு. நீ ஒரு வீரன். இந்த இதயத் துர்ப்பலம் உனக்குச் சிறிதும் பொருந்தாது'' என்கிறார்.

என் மைந்தர்களாகிய நீங்கள் இந்த அறிவுரையை क्लैब्यं मास्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते உலகிற்கு முழக்கஞ் செய்தால் எல்லா நோய்களும், துன்பங்களும், பாவங்களும், துயர்களும் இவ்வையகத்தின் வதனத்தினின்று மூன்று நாட்களில் மறைந்து போம். இந்தப் பலவீன எண்ணங்களெல்லாம் ஓரிடத்திலும் இருக்கமாட்டா. இப்போது இவை—அச்சத்தின் சலனமும் வேகமும்—எங்கும் இருக்கின்றன. இந்த விரைவின் போக்கைத் திருப்புங்கள். எதிர் முகமான சலனத்தைப் படைப்பீர்களாக. பிறகு ஏற்படும் மாறுதலின் மந்திர சக்தியைப் பாருங்கள்! நீ எல்லா ஆற்றல்களையும் வாய்ந்தவன், பெற்றவன்—போ, பீரங்கி வாயினுள்ளும் போ! அஞ்சாதே! மிகவும் இழிவான பாவியையும் பகைக்காதே, அவனுடைய வெளிப்புறத்தைப் பார்க்காதே! உனது பார்வையை உள்ளே செலுத்து. அங்கே பரமான்மா உறைகிறார். உன்னிடம் பாவமில்லை. உன்னிடம் துன்பமில்லை. நீ சக்திக்கெல்லாம் உறைவிடம். எழுந்திரு. விழித்துக்கொள். உன்னிடமுள்ள தெய்வத் தன்மையை வெளியே கொண்டு வா,''

என்று கம்பீரமான (பேரிடிக்) குரலில் உலகிற்கெல்லாம் பறை யறைவீர்களாக.

ஒருவன் இந்த ஒரு சுலோகத்தை.

" क्लैब्यं मास्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप ॥ "

ஓதினால் அவன் கீதை முழுவதையும் படித்த பயனைப் பெறு வான்; ஏனென்றால், இந்த ஒரு சுலோகத்தில் கீதையின் முழு இரகசியமும் ஆழ்ந்து அடங்கியுள்ளது.

இலட்சியம்

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 27-ஆம் நாள் ஸான்பிரான் ஸிஸ்கோவில் செய்த சொற்பொழிவு.]

தன்னைவிட உயர்ந்த ஏதோ ஒன்று, தன்னைச் சூழ்ந்திருப்ப தாக மனிதன் உணர்கிறான்; இதன் பொருளை அறிய அவன் பலவகையில் முயல்கிறான். மனிதன் எப்போதுமே உயர்வற உயர்ந்த இலட்சியத்தையே நாடுவான். அது உள்ளது என்பதை யும், அந்த உயர்வற உயர்ந்த இலக்ஷியத்தைத் தேடுதலே சமயம் என்பதையும் அவன் அறிகிறான். தொடக்கத்தில் இந்தத் தேட்டம் எல்லாம் மனிதனுக்கு வெளியிலே நிகழ்ந்தன—சுவர்க் கத்திலும் வேறு பல இடங்களிலும் மனிதனது முழு இயல்பை அறிந்ததற்கேற்ப அமைந்தன.

நாளடைவில் மனிதன் தன்னைப்பற்றிச் சற்றே நெருங்கி ஆராயத் தொடங்கினான்; 'உண்மையான நான்' என்பது சாதாரணமாக நினைக்கும் 'நான்' அன்று என்பதை அறியத் தொடங்கினான். புலன்களுக்குத் தென்படும் 'நான்', உண்மை யான 'நான்' அன்று. மனிதன் தனக்குள்ளேயே தேடத் தொடங்கினான்; தான் வெளியே தேடிய இலட்சியம் தனக்கு உள்ளேயே எப்போதும் இருப்பதைக் கண்டான்; தனக்கு வெளியே அவன் வழிபட்டு வந்தது அவனது உண்மையான உள்ளியல்பு என்பதை அறிந்தான். அத்துவைதம், துவைதம் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை இதுதான்; இலட்சியத்தைத் தனக்கு வெளியே வைப்பது துவைதம்; இறைவனைத் தனக் குள்ளே காண்பது அத்துவைதம்.

தொடக்கத்தில் அதே பழைய வினா எழுகிறது: 'ஏன்? எத னால்?' என்று. மனிதன் எல்லைக்கு உட்பட்டது எப்படி? எல்லை யில்லாத ஒன்று எல்லைக்கு'உட்பட்டது எதனால்? தூய்மையான ஒன்று, தூய்மையை இழந்தது எதனால்? இந்த வினாவுக்குப் பதில் சொல்வது 'இரண்டு' என்றகொள்கையின் அடிப்படை யில் இயலவே இயலாது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

இறைவர் தூய்மை அற்ற உலகை எதற்காகப் படைத்தார்? நிறைவுற்ற, எல்லையற்ற கருணை மிக்க தந்தையாரால் படைக்கப்

பட்ட மனிதன், இவ்வளவு துக்கம் மிக்கவனாய் இருப்பானேன்? எவற்றைக் கண்டு நமக்கு 'நியதி' என்ற கருத்து ஏற்படுகிறதோ, அந்தச் சுவர்க்கமும் பூமியும் எதற்கு? காணாத ஒன்றைக் கற்பனை செய்துகொள்ள யாராலும் இயலாது.

நாம் இந்த வாழ்வில் அனுபவிக்கும் சித்திரவதைகளை எல்லாம் திரட்டி ஓர் இடத்தில் வைத்து, அதையே 'நரகம்' என்கிறோம்.

எல்லையற்ற இறைவர் இந்த உலகை ஏன் படைத்தார்? 'குயவன் பானை செய்வதுபோல' என்கிறான் துவைதி. இறைவரே குயவன்; நாமே சட்டி பானைகள். இதையே தத்துவ இயல் மொழியிற் சொன்னால், வினா இதுதான்: 'மனிதனது உண்மை இயல்பு தூயது, நிறைவுற்றது, முடிவற்றது' என்பதை நாமாகக் கொள்வது எப்படி? ஒன்று என்று சொல்லும் எந்தச் சித்தாந்தத்திலும் காணும் சிரமம் இது ஒன்றுதான். மற்றவை எல்லாம் குற்றமற்றன. தெளிவாய் உள்ளன. இந்த வினாவுக்கு மறுமாற்றம் தர இயலாது. 'இந்த வினாவே முன்னுக்குப் பின் முரணானது,' என்பர் அத்துவைதிகள்.

துவைத சித்தாந்தத்தைப் பார்ப்போம். 'இறைவர் ஏன் உலகைப் படைத்தார்?' என்னும் வினா எழுகிறது. இது முரணானது. ஏன்? இறைவர் என்ற கருத்தின் பொருள் என்ன? வெளிப்பொருள் எதனாலும் பாதிக்கப்படாதவரே இறைவர்.

நீங்களும் நானும் சுதந்தரர்கள் அல்லோம். எனக்குத் தாகம் எடுக்கிறது. என்னால் அடக்க முடியாத தாகம் என்ற ஒன்று இருக்கிறது. தண்ணீர் குடிக்கும்படி அது என்னைக் கட்டாயப்படுத்துகிறது. இவ்வாறே என் உடம்பின் ஒவ்வோர் அசைவும், என் மனத்தின் ஒவ்வொரு கருத்தும் என்னிடமிருந்து வலுவில் வெளியேற்றப்படுகின்றன...நான் ஒன்றைச் செய்தே தீரவேண்டும்; நான் ஒன்றை அடைந்தே தீரவேண்டும்; இப்படியே தான்....' ஏன்? எப்படி?' என்பவற்றின் பொருள் என்ன? (வெளிச் சக்திகளுக்குட்பட்டிருப்பதனால்தான்....) நாம் ஏன் தண்ணீர் குடிக்கிறோம்? தாகம் நம்மைக் கட்டாயப்படுத்துவதாலேதான். 'நாம்' அடிமைகள்; நாம் நம் விருப்பப்படி ஒன்றும் செய்வதில்லை, செய்யும்படி வற்புறுத்தப்படுதலினால். நாம் செயல் புரிவதற்குக் காரணம் ஏதோ ஒரு சக்தியே ஆகும்....

பூமியை ஏதோ ஒன்று பலவந்தப் படுத்தாவிட்டால் அது தானாகவே இயங்காது. விளக்கு ஏன் எரிகிறது? யாராவது ஒரு தீக்குச்சியைக் கொளுத்திப் பொருத்தாவிட்டால் விளக்கு

எரியாது. பிரகிருதி முழுவதிலும் ஒவ்வொரு பொருளும் கட்டுப் பட்டே இருக்கிறது. அடிமைத்தனம்; அடிமைத்தனம்! பிரகிருதி யோடு இணைந்து நடப்பதே அடிமைத்தனந்தான். பிரகிருதிக்கு அடிமையாகிப் பொற்கூண்டில் வாழ்வதில் என்ன பெருமை இருக்கிறது? மனிதனது சாராமிசமான 'சுதந்தரம், தெய்விகம்' என்ற அறிவிலேதான் மிகப் பெரிய சட்டமும் ஒழுங்கும் அடங்கி யிருக்கின்றன. 'ஏன்! எப்படி?' என்ற வினாக்களை அஞ்ஞானி களே கேட்பார்கள் என்பது இப்போது விளங்குகிறது. என்னை ஒன்றைச் செய்யும்படி வற்புறுத்த, இன்னொரு சக்தி தேவை.

'இறைவர் சுதந்தரர்,' என்று சொல்லுகிறீர்கள். அடுத்த படியாகவே, 'இறைவர் உலகை ஏன் படைத்தார்?' என்றும் கேட் கிறீர்கள். இவை ஒன்றுக்கொன்று முரண். இறைவர் என்பதன் பொருள் முற்றும் சுதந்தரமான சித்தமே. தர்க்க ரீதியாக இந்த வினாவை அமைத்தால், 'எவராலும் என்றும் கட்டாயப்படுத்த இயலாத இறைவரைப் படைக்கும்படி கட்டாயப்படுத்தியது எது?' என்றுதான் அமையும். அக்கேள்வியில் நீங்களே, 'அவரைக் கட்டாயப்படுத்தியது எது?' என்கிறீர்கள். இந்த வினா, பொருள் அற்றது. இறைவரது இயல்பே எல்லையில்லாதது. அவர் சுதந்தரர். தர்க்க ரீதியாக உங்கள் வினாக்கள் அமைந்தாற் ருன் பதில் சொல்ல இயலும். இருப்பது ஒரே உண்மைப் பொருள்தான், வேறு இல்லை என்று நியாய அறிவு சொல் கிறது. துவைதம் எங்கெல்லாம் ஏற்பட்டதோ, அங்கெல்லாம் அத்துவைதம் தோன்றி அதை விரட்டிவிட்டது.

இதை அறிந்துகொள்வதில் ஒரே ஓர் இன்னலே இருக்கிறது. சமயம் என்பது சாதாரண யுக்திக்கு உட்பட்ட ஓர் அன்ருட நிகழ்ச்சி. தெருவில் நிற்கும் ஒருவனுக்கு விளங்கும் மொழியில் சொன்னால், அவனுற்கூடச் சமயம் என்பதைப் புரிந்துகொள்ள இயலும், தத்துவ அறிஞரது மொழிதான் விளங்காது. தன்னைப் புறத்தே படைப்பதே மனித இயற்கை. குழந்தை மீது உங்கட்கு எழும் உணர்ச்சியை கவனியுங்கள். அப்போது நீங்கள் உங் களைக் குழந்தையோடு ஒன்ருக்குகிறீர்கள். உங்களுக்கு அப் போது இரண்டு உடல்கள் ஏற்பட்டுவிடுகின்றன. இப்படியே நீங்கள் உங்கள் கணவரது மனத்தின் வாயிலாக உணரக்கூடிய வர்கள்; அதாவது, உங்கள் கணவர் உங்களுக்குள் தம்மையே காண்கிருர். இதற்கு முடிவு எங்கே? எல்லையற்ற உடல்கள் வாயி லாகவும் நீங்கள் உணரவல்லீர்கள்.

ஒவ்வொரு நாளும் பிரகிருதியை மனிதன் வென்று வரு

கிறான். மனிதன் தன் இனத்துக்குரிய சக்தியை வெளிப்படுத்தி வருகிறான். மனிதனிடம் உள்ள இந்தச் சக்திக்கு ஓர் எல்லை கோலுவதாகக் கற்பனை செய்து பாருங்கள். மனித இனத்துக்கு எல்லையற்ற சக்தியும் முடிவற்ற உடலும் உண்டு என்பதை நீ ஒப்புக் கொள்கிறாய். 'நீ யார்?' என்பதுதான் கேள்வி ஆகும். 'நீ' என்பது மனித இனமா? அல்லது ஒரே தனி மனிதனா? நீங்கள் உங்களை மனித இனத்திலிருந்து தனிப்படுத்திக் கொள்ளும் அக்கணமே ஒவ்வொன்றும் உங்களுக்குத் தீங்கு செய்கிறது. நீங்கள் விரிந்து, பிறரின் சுக துக்கங்களை ஏற்றுக் கொள்ளும் அக்கணமே உங்களுக்கு உதவி வருகிறது. தன்னலங் கருதுபவனே உலகில் மிகவும் துன்பம் நிறைந்தவன் ஆவான். சுயநலம் சற்றும் இல்லாதவனே இன்பம் நிறைந்தவன். அவன் எல்லாப் படைப்பும் ஆகிவிடுகிறான், மனித இனமே ஆகிவிடுகிறான்; இறைவர் அவனுக்குள் இருக்கிறார்.... துவைதம், கிறித்தவ மதம், இந்து மதம், மற்ற எல்லா மதங்களிலுமே நீதி நெறியாவது சுய நலம் இன்றி இரு என்பதே. சுய நலம் பாராட்டாதே; பிறர்க்கெனக் காரியஞ் செய்க! விரிவடைக!!

கல்லாதவர்களையும் இதை எளிதில் புரிந்துகொள்ளும்படி செய்ய இயலும்; கற்றவர்களையோ இதை இன்னும் எளிதில் புரிந்து கொள்ளச் செய்ய இயலும். ஆனால், இம்மியே கற்றவனை இறைவர்கூடப் புரியவைக்க இயலாது. நீ உலகத்தினின்றும் வேறாயிருப்பவன் அல்லை என்பதே உண்மை; உன் ஆன்மா (Spirit) உன் மற்றப் பகுதியிலிருந்து வேறாகாததுபோல. இது இப்படி இல்லையானால் நீ எதையும் பார்க்க இயலாது; எதையும் உணர இயலாது. பொருட்கடலில் தோன்றும் சிறு நீர்ச்சுழிகளே நம் உடல்கள். வாழ்க்கை ஒரு திரும்பு திரும்பி வேறு ஓர் உருவில் முன்னேறிக்கொண்டே இருக்கிறது. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், நீங்கள், நான் ஆகிய எல்லாமே நீர்ச்சுழிகளே. குறிப்பிட்ட ஒரு மனத்தை என்னுடையதாக நான் தேர்ந்து கொண்ட காரணம் என்ன? மனக்கடலில் இது ஒரு மனச்சுழியே ஆகும்.

என் அதிர்வுகள் உங்களை இப்போது அடைவது வேறு எப்படி இயலும்? நீ ஒரு கல்லை ஏரியில் போட்டால், அது ஓர் அதிர்ச்சியை உண்டாக்குகிறது, அந்த அதிர்ச்சி நீரை அதிரச் செய்கிறது. நான் என் மனத்தை இன்ப நிலையில் அமைத்துக் கொள்கிறேன் ... இது தூண்டுகோல் ... இன்பம் உண்டாக ... தடவைகளில் உங்களுக்

குத் தோன்றிய கருத்துகள் நீங்கள் உரையாமலே அதே சமயத்தில் பிறருக்கும் தோன்றி உள்ளன. எங்கும் நாம் எல்லோரும் ஒன்றுதான்....இதைத்தான் நாம் என்றுமே அறிந்துகொள்வதில்லை. உலகம் முழுவதுமே காலம், தேசம், நியதி இவற்றால் ஆனதுதான். இறைவரே உலகமாகத் தோன்றுகிறார். பிரகிருதி தொடங்கியது எப்போது? நீங்கள் உங்களது உண்மை இயல்பை மறந்து கால, தேச, நியதிகளுக்குக் கட்டுப்பட்ட அப்போதுதான்.

இதுவே நும் உடலின் சக்கரம்; என்றாலும், இதுவே நும் முடிவற்ற இயல்புங்கூட. கால, தேச, நியதியே பிரகிருதி என்பது திண்ணம். பிரகிருதி என்பதன் பொருள் இதுவேதான். நும் நெஞ்சில் எண்ணம் தோன்றத் தொடங்கியபோது, காலமும் தொடங்கியது. நுமக்கு உடம்பு கிடைத்த போது தேசம் (இடம்) தொடங்கியது; உடல் இல்லை என்றால் தேசமும் (இடமும்) இல்லை. நுமக்கு எல்லை தோன்றியவுடன் நியதி தோன்றியது. ஏதாவது ஒரு விடை நமது வினாவுக்குக் கிடைத்தே தீர வேண்டும். இதுதான் விடை: நாம் எல்லைக்கு உட்பட்டிருப்பது ஒரு விளையாட்டு—அதனால் கிடைக்கும் இன்பத்துக்காக—அவ்வளவுதான். நம்மை எதுவும் கட்டுப்படுத்தவில்லை; எதுவும் கட்டாயப்படுத்தவில்லை. நாம் என்றும் கட்டுப்படவே இல்லை. நாமே கண்டுபிடித்த இந்த விளையாட்டில் நாம் எல்லோரும் நம் பாகத்தை நடிக்கிறோம்.

நமது தனித்தன்மை பற்றிய இன்னொரு வினாவையும் இங்கே பார்க்கலாம். நமது தனித் தன்மையை இழக்கச் சிலர் மிகவும் அஞ்சுகின்றனர். பன்றி இறைவராக இயலுமானால் 'பன்றி' என்ற தனித் தன்மையை இழப்பது அதற்கு நல்லதுதானே? நல்லதுதான். ஆனால், பாவம்! அந்தப் பன்றிக்கு அப்போது இப்படித் தோன்றுவதில்லை. எனது தனித் தன்மை என்பது எந்த நிலை? நான் சிறு குழந்தையாக, விரலைச் சூப்பியபடி தரையில் உருண்டு கொண்டிருந்த நிலையா? இந்தத் தனித் தன்மையையா நான் இழக்க வருந்தினேன்? நாம் இப்போது நம் குழந்தை நிலையை எண்ணிச் சிரிப்பதுபோல, இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் இப்போதைய நிலையையும் எண்ணிச் சிரிப்போம். இந்தத் தனித் தன்மைகளுள் எதை நான் வைத்திருப்பது?...

இந்தத் தனித் தன்மை இன்னது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்....இது சம்பந்தமாக இரண்டு முரணான

தூண்டுதல்கள் இருக்கின்றன : ஒன்று, தனித் தன்மையைக் காத்தல் ; மற்றது, தனித் தன்மையைத் தியாகம் செய்யும் பேரவா....குழந்தையின் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தாய் தன் சுகம் எல்லாவற்றையும் தியாகம் செய்கிருள்....அவள் கையில் குழந்தை இருக்கும்போது அவளது தனித் தன்மை தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுவதில்லை. அவள் மோசமான உணவை உண்டாலும், குழந்தைகளுக்குச் சிறந்த உணவைத் தருவாள். இப்படியே நாம் அன்பு செலுத்தும் மக்களுக்காக நாம் உயிரை இழக்கவும் ஆயத்தமாய் இருக்கிருேம்.

ஒரு பக்கம் நாம் இந்தத் தனித்தன்மையைக் காக்கத் தீவிரமாகப் போராடிக்கொண்டிருக்கிருேம் ; மற்ருெரு பக்கம் இதைக் கொல்லப் போராடுகிருேம். பலன் என்ன? சாத்தன் என்பவன் தீவிரமாகப் போராடலாம். அவன் தன் தனித்தன்மைக்காகப் போராடுகிருன். சாத்தன் சாகிருன், பிறகு அவனுக்காக ஒரு சிற்றலை கூடப் பின்னுல் உலகில் இல்லை. ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு யூதர் பிறந்தார்; அவர் தனித் தன்மையைக் காப்பாற்றும் முயற்சியில், ஒரு விரலைக்கூட அசைக்கவில்லை....இதை எண்ணிப் பாருங்கள்! அந்த யூதர் தம் தனித்தன்மையைக் காக்கப் போராடவே இல்லை. அவர் உலகிலேயே மிகப் பெரியவராய் ஆனதற்கு ,இதுவே காரணம். இதுதான் உலகத்துக்குத் தெரிவதில்லை.

காலத்தில் நாம் தனித்தன்மை பெறவேண்டியவர்களே. ஆனுல், என்ன பொருளில்? மனிதனது தனித்தன்மை என்பது என்ன? சாத்தன் என்பதன்று, மனிதனுக்குள் இருக்கும் இறைவனே. இதுவே அவனது உண்மையான தனித் தன்மை. மனிதன் அந்தத் தனித்தன்மையை அணுகும் அளவிற்கு அவன் தன் பொய்யான தனித்தன்மையை விட்டு வருகிருன். அவன் எல்லாவற்றையும் திரட்டி, இலாபம் அடைய முயலும் அளவுக்கு அவனது தனித்தன்மை குறைகிறது. ஒருவன் குறைவாகத் தன்னைப்பற்றி நினைக்கும் அளவுக்கு, தன் வாழ்நாளில் தனது தனித் தன்மை முழுவதையும் தியாகம் செய்தவன் ஆகிருன்....அதாவது, அவன் தனித் தன்மையை அதிகம் பெறுகிருன். இந்த இரகசியத்தை உலகம் அறிவதில்லை.

தனித்தன்மை இன்னது என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ளவேண்டும் ; இலட்சியத்தை அடைவதுதான் அது. இப்போது நீர் ஓர் ஆண் அல்லது பெண். நீர் காலமெல்லாம்

மாறிக்கொண்டே இருக்கிறீர். இதை நிறுத்த இயலுமா? நும் மனங்களை இப்போது உள்ளபடியே வைத்துக்கொள்ளத்தான் நீர் விரும்புகிறீரா?—கோபங்கள், தாபங்கள், பொருமைகள், சண்டைகள் போன்ற ஆயிரம் தீங்குகளும் மனத்தில் இருக்கத் தான் வேண்டுமா? நுமக்கு முழு வெற்றி கிடைக்கும் வரையில், நீர் தூயராய் நிறைவுற்றவராய் ஆகும் வரையில், இடையில் எங்கும் நிற்கவே இயலாது.

நீர் முற்றும் அன்பு, ஆனந்தம், முடிவற்ற தன்மை வடிவாய் இருக்கும்போது சீற்றத்திற்கு இடம் ஏது?...நீர் எடுத்த உடல்களில் எதை வைத்துக் கொள்வீர்? முடிவற்ற வாழ்க்கையை அடையும் வரை எங்கும் உங்களால் நிற்கவே இயலாது. எல்லையற்ற வாழ்வு! இது வந்தவுடன் நின்றுவிடுவீர். இப்போது நும்மிடம் ஒரு சிறிது அறிவே இருக்கிறது; அதிக அறிவு பெற எப்போதும் முயன்றுகொண்டே இருக்கிறீர். எங்கே நிற்பீர்? நீர் வாழ்வோடு ஒன்ருகும் வரையில் எங்குமே நிற்கமாட்டீர்.

பலருக்கு உடல் (புலன்) இன்பமே இலட்சியமாய் இருக்கிறது. அந்த இன்பத்திற்காக அவர்கள் ஐம்புல விஷயங்களைத் தேடி அலைகிருர்கள். இன்னும் உயர்ந்த நிலைகளில் இன்னும் நிறைய இன்பம் தேடவேண்டும்; பின்னர் ஆன்மிக நிலையில். பிறகு தனக்குள்ளேயே, தனக்குள் இருக்கும் இறைவரிடமே. தனக்கு வெளியே இன்பம் தேடும் மனிதன் அந்த வெளிப் பொருள் மறைந்தவுடன் துன்பத்துக்கு ஆளாகிருன். இந்த உலகத்தில் உள்ள எந்தப் பொருளினிடமும் இந்த இன்பத்திற்காகச் சார்ந்திருக்கக்கூடாது. என்னுடைய இன்பங்களெல்லாம் எனக்குள்ளேயே இருந்தால் என்றுமே இந்த இன்பம் எனக்கு இருக்க வேண்டும்; என்னையே நான் இழக்க இயலாதல்லவா?...தாய், தந்தை, மக்கள், மனைவி, உடல், செல்வம் ஆகிய எல்லாம் என்னை விட்டுப் போய்விடும்; ஆனுல், என்னை—ஆன்மானந்தத்தை—நான் இழக்க இயலாது...எல்லா ஆசைக்கும் இருப்பிடம் ஆன்மாதான். இதுதான் என்றும் மாருத தனித் தன்மை. இதுவே நிறைவுற்றது.

இதை அடைவது எப்படி? உலக மகாத்துமாக்களான ஆடவர் பெண்டிர் அனைவரும், தொடர்ந்த விவேக விசாரத்தால் கண்டதையே அவர்களும் கண்டுபிடித்தார்கள். துவைதக் கொள்கைகளான, இருபது முப்பது கடவுளரைப் பற்றி என்ன சொல்வது? அதைப்பற்றிக் கவலை இல்லை. எல்லாரும் இந்த ஓர் உண்மையை ஒப்புக்கொண்டார்கள். இந்தத் தவருன தனித்தன்மை

ஒழிந்து தீர வேண்டும் என்பதை...அகந்தை ஒழிய வேண்டும்; இது குறையும் அளவுக்கு நாம் நம் உண்மை நிலையை அணுகுகிறோம், அதாவது, பிரபஞ்சமே உடலான நிலையை. நாம் நம் தனி மனத்தைப்பற்றி எண்ணுவது குறையும் அளவுக்கு பிரபஞ்ச மனத்தை நெருங்குகிறோம். நமது தனி ஆன்மாவைப் பற்றி நினைப்பது குறையும் அளவுக்கு நாம் பிரபஞ்ச ஆன்மாவை அணுகுகிறோம்.

நாம் ஒரே உடலுக்குள் இருக்கிறோம். நாம் சிறிதளவு இன்பத்தையும் சிறிதளவு துன்பத்தையும் பெறுகிறோம். இந்த உடலில் வாழ்வதால் நாம் பெறும் அற்ப இன்பத்துக்காக, நம்மைக் காத்துக்கொள்ள உலகத்திலுள்ள எல்லாவற்றையுமே அழிக்க நாம் சித்தமாய் இருக்கிறோம். நமக்கு இரண்டு உடல்கள் இருந்தால், மிக நன்றன்றோ? இப்படியே மேலும் மேலும் ஆனந்த நிலைவரை. (உலகத்தில் உள்ள) எல்லாக் கைகளாலும் நான் வேலை செய்கிறேன், எல்லாக் கால்களாலும் நான் நடக்கிறேன். ஒவ்வொரு வாயின் மூலமும் நானே பேசுகிறேன். ஒவ்வோர் உடலிலும் நானே வசிக்கிறேன். என் உடல்கள் அனந்தம், மனங்கள் அனந்தம். நாசரத்தில் பிறந்த இயேசுநாதரிடத்தும் புத்தரிடத்தும் முகம்மதுவினிடத்தும், பழங்கால இக்கால மகான்கள் அனைவரிடத்தும் வாழ்பவன் நானே. இனித் தோன்றப் போகும் எல்லா மகான்களிடத்தும் நானே வாழப் போகிறேன். இது கொள்கையோ? அன்று; உண்மையே.

இது அனுபூதிக்கு வந்தால் நமக்கு எவ்வளவு இன்பம் கிடைக்கும்! எத்துணை ஆனந்த பரவசம்! எந்த ஓர் உடல் நாம் அதை விரும்பும் அளவுக்கு மிகப் பெரியது?...மற்றவர்களின் உடல்களில் எல்லாம் வசித்த பிறகு, உலகிலுள்ள எல்லா உடல்களையும் நுகர்ந்த பிறகு, நமக்கு என்ன நேர்கிறது? நாம் இறைவரோடு இரண்டறக் கலந்துவிடுகிறோம்; அதுதான் நம் இலட்சியம்-முடிவு. இது ஒன்றேதான் அதற்கு வழி. "உண்மையை நான் உணர்ந்தால் வெண்ணெய் போல நான் உருகிவிடுவேன்," என்கிறார் ஒருவர். மக்கள் அவ்வாறு ஆகவேண்டுமே என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால், அவர்கள் விரைவில் உருக இயலாதபடி மிகக் கடினமாய் இருக்கிறார்களே!

விடுதலை பெற நாம் என்ன செய்யவேண்டும்? நீர் விடுதலை பெற்றே இருக்கிறீர்...சுதந்தரமானவர் என்றேனும் கட்டுப்படுவது எப்படி? அது பொய். நீர் என்றும் கட்டுப்படவே இல்லை. எல்லையற்ற ஒன்று எப்படி எல்லைக்கு உட்பட இயலும்? எல்லை

யற்ற ஒன்றை, எல்லையற்ற ஒன்றால் வகுத்தாலும் பெருக்கினு லும், எல்லையற்ற ஒன்றைக் கூட்டினுலும் கழித்தாலும், அது எல்லையற்றதாகவே இருக்கும். நீர் எல்லையற்றவர், இறைவரும் எல்லையற்றவர்; நீர் எல்லோருமே எல்லையற்றவர். இப்படி இருப்பு இரண்டு இருக்க இயலாது; இருப்பது ஒன்றேதான். எல்லையற்ற ஒன்றை எல்லைக்கு உட்படுத்த இயலாது. நீர் என் றுமே கட்டுப்படவில்லை. அவ்வளவே......நீர் சுதந்தரமாகவே இருக்கிறீர். அடைய வேண்டிய எல்லாவற்றையும், இலக்ஷியத்தை யும் அடைந்து விட்டீர். இலக்ஷியத்தை அடையவில்லை என்று நினைக்க மனத்திற்கு என்றுமே இடங்கொடாதீர்...

நாம் எதை நினைக்கிறேமோ, அதுவே ஆகிவிடுகிறேம். நீர் பாவிகள் இரங்கத்தக்கவர்கள் என்று நினைத்தால், நீர் உம்மை மயக்கிக் கொள்கிறீர். 'நான் துன்பம் மிகுந்த ஒரு சிறு புழு,' என்று எண்ணி அப்படியே ஆகிறீர். நரகத்தை நம்புவோர் இறந்தவுடன் நரகத்துக்கேதான் போவார்கள். சுவர்க்கத்திற்கே போவோம் என்பவர்கள் சுவர்க்கத்துக்கே செல்வார்கள்.

எல்லாம் விளையாட்டே...'' நாம் எதையாவது செய்யவேண் டும்; நல்லதையே புரிவோம்,'' என்று நீர் சொல்லலாம். ஆனுல் நல்லதைப்பற்றியோ கெட்டதைப் பற்றியோ யாருக்குக் கவலை? இறைவர் திருவிளையாடல் புரிகிறுர்; அவ்வளவுதான்...நீரேதான் திருவிளையாடல் புரியும் எல்லாம்வல்ல இறைவர். நீரே நாடகத்தில் ஒரு சிறிய நடிகனுகி ஏழையின் வேடத்தை எடுத்துக் கொண் டால், இதற்காக வேறுயாரையும் குற்றம் சொல்லக் கூடாது. நீர் பிச்சைக்காரனுய் இருப்பதிலேயே இன்பம் காண்கிறீர். நுமக்குத் தெய்விகமான நுமது உண்மையியல்பு தெரியும். அரசராகிய நீர் ஆண்டியாக நடிக்கிறீர்...இதெல்லாம் ஒரு விளையாட்டு. இதை அறிந்துகொண்டு நடியும். இதில் இருப்பது யாவும் அவ் வளவேதான். இதைப் பழகும். உலகம் முழுவதுமே பெரிய நாடகந்தான். எல்லாம் விளையாட்டாகையால் நல்லனவே. இந்த நக்ஷத்திரம் வந்து நம் புவியோடு மோத நாம் அனைவரும் மரித்த வராகிறேம். இதுவும் விளையாட்டே. புலன்களுக்கு இன்பம் தரும் சிறிய செயல்களையே நீர் விளையாட்டு என்று கருதுகிறீர்.

இங்கே ஒரு நல்ல கடவுளும் அங்கே ஒரு கெட்ட கடவுளும் இருந்துகொண்டு, தவறு செய்தவுடன் என்னைப்பிடித்துக்கொள்வ தாக எப்போதும் கவனித்தபடியே இருப்பதாக நாம் கேள்விப் பட்டிருக்கிறேம்...இறைவர் எல்லாவற்றையும் கவனிக்கிறுர் என்று நான் குழந்தையாய் இருக்கும்போது, யாரோ சொன்னுர்கள்.

நான் படுத்த பிறகு மேலே பார்த்தேன், அறையின் உச்சி திறந்துவிடும் என எதிர்பார்த்தேன். இறைவர் அங்கே தென்படுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், ஒன்றும் நடைபெறவில்லை. நம்மைத் தவிர வேறு யாருமே நம்மைக் கவனிப்பதில்லை. நம் ஆன்மாவைத் தவிர வேறு இறைவர் யாருமில்லை. நாம் உணர்வதைத் தவிரப் பிரகிருதி வேறொன் றும் இல்லை. பழக்கம் இரண்டாவது இயல்பு; முதல் இயல்புங் கூட. இதுவே இயற்கையைப் பற்றியதெல்லாம். ஏதாவது ஒன்றை நான் இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பச் சொன் னால், பிறகு அதுவே என் இயல்பாகிவிடுகிறது. துக்கப்பட வேண்டா; பச்சாத்தாபப்படவும் வேண்டா. செய்தது செய்தது தான். நீங்கள் நெருப்பில் சுட்டுக்கொண்டால் அதன் பலனை அனுபவியுங்கள்.

புத்திசாலியாய் இருங்கள். நாம் தவறு செய்கிறோம்; அதனால் என்ன? எல்லாம் விளையாட்டு. தாம் செய்த பாவங்களை எண்ணிச் சிலருக்குப் பித்தமே பிடித்துவிட, அவர்கள் எப்போ தும் புலம்பி அழுதவண்ணமாய் இருக்கின்றனர். கழிவிரக்கம் (பச்சாத்தாபம்) வேண்டா. ஒரு வேலையைச் செய்து முடித்த பிறகு, அதைப்பற்றி 'நினைக்காதீர்கள். முன் செல்லுங்கள். நில்லாதீர்கள்! திரும்பிப் பார்க்கவேண்டா. திரும்பிப் பார்ப்ப தால் என்ன இலாபம்? உங்களுக்கு இலாபமும் இல்லை, நட்ட மும் இல்லை. நீங்கள் வெண்ணெய் போல உருகிவிடப் போவ தில்லை. சுவர்க்கங்கள் நரகங்கள், பிறவிகள் எல்லாம் பிதற்றலே!

பிறப்பவர் யார்? இறப்பவர் யார்? உலகத்தோடு விளையாடிக் கொண்டு வேடிக்கை முதலியன காட்டுகிறீர்கள்; அவ்வளவு தான். நீர் இவ் வுடம்பை விரும்பிய காலம் வைத்துக்கொள்ளு கிறீர். இவ்வுடல் பிடிக்கவில்லை என்றால், இதை வைத்துக் கொள்ள வேண்டா. எல்லையற்றதுதான் உண்மை; எல்லை உள்ள இது வெற்று விளையாட்டு. ஒருங்கே எல்லையற்ற உடலும் எல்லையுற்ற உடலும் நீரே. இதையறிந்து கொள்ளும். ஆனால் அறிவினால் மட்டும் மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடாது; பிறகும் நாடகம் நடந்துகொண்டுதான் இருக்கும்...உடல் ஆன்மா என்ற இரண்டு சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன. குறையுற்ற ஞானமே இதற்குக் காரணம். நீர் என்றும் சுதந்தரரே என்பதை அறியும் ஞானத் தீ எல்லா மாசுகளையும் கட்டுப்பாடுகளையும் எரித்து விடுகிறது. நானே அந்த முடிவற்ற பொருள்...

தொடக்கத்தில் இருந்தபடியே, இப்போது உள்ளபடியே,

இனி என்றும் இருப்பதுபோலச் சுதந்தரர் தான் சுதந்தரன் என அறிபவன் சுந்தரனே. தான் கட்டுப்பட்டவன் என அறிபவன் கட்டுப்பட்டவனே.

இறைவர் வழிபாடு முதலியன என்ன ஆகும்? அவற்றுக்கும் இடம் உண்டு. நான் என்னை இறைவர், நான் என்று இரண்டாகப் பகுத்துக் கொண்டிருக்கிறேன்; நானே பூசிக்கப்படுபவனாகவும் பூசிப்பவனாகவும் இருக்கிறேன். ஏன் இப்படி இருக்கக் கூடாது? நானே இறைவர். என் ஆன்மாவையே நான் ஏன் வழி படக்கூடாது? எங்குமுள்ள இறைவரும் என் ஆன்மாவே தான். எல்லாம் திருவிளையாடல்; வேறு நோக்கம் ஒன்றும் இல்லை.

வாழ்க்கையின் நோக்கம் என்ன? ஒன்றுமே இல்லை; நான் முடிவற்றவன் என்பது எனக்குத் தெரியுமாதலின். நீர் பிச்சைக் காரராயின் நுமக்கு நோக்கங்கள் இருக்கும். எனக்குக் குறியோ தேவையோ நோக்கமோ ஒன்றும் இல்லை. நான் உங்கள் நாட்டுக்கு வந்து சொற்பொழிவாற்றுவதும் வேடிக்கைக்காகவே; வேறு பொருள் இல்லை. என்ன பொருள் இருக்க இயலும்? அடிமைகளே பிறருக்காகத் தொழில் புரிகிறார்கள். நீர் வேறு யாருக்காகவும் உழைப்பதில்லை. உமக்கு விருப்பமானால் நீர் இறைவழிபாடு செய்கிறீர். இந்த வழிபாட்டை நீர் கிறிஸ்தவர், மகம்மதியர், ஜப்பானியர் எவரோடும் சேர்ந்து செய்யலாம். இது வரையில் தோன்றியுள்ள தெய்வங்களையும் இனித் தோன்றப்போகும் தெய்வங்களையும் நீர் வழிபடலாகும்.

நானே சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் எல்லாவற்றிலும் இருக்கிறேன். நான் இறைவரோடும், எல்லாத் தேவதைகளுக்குள்ளும் இருக்கிறேன். நான் என் ஆன்மாவையே வழிபடுகிறேன்.

இதற்கு இன்னொரு கட்சியும் இருக்கிறது. இது வரையிலும் இதை நிறுத்தி வைத்திருந்தேன். தூக்கிலிடப்பட நிற்பவன் நானே. எல்லாத் தீயோரும் நானே. நான் நரகங்களில் தண்டிக்கப்படுகிறேன். இதுவும் விளையாட்டே. தத்துவத்தின் இலட்சியம் இதுதான்—நான் வரையறை யற்றவன் என்பதை உணர்தலே. இலட்சியங்கள், தூண்டுதல்கள், நோக்கங்கள், கடமைகள் எல்லாம் பின்னணியில் இருப்பன.

உண்மையைப்பற்றி முதலில் கேட்கவேண்டும்; பிறகு சிந்திக்கவேண்டும். தருக்க அறிவினால் எல்லா வழியாலும் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள். ஞானிகளுக்கும் இதற்குமேல்

ஒன்றும் தெரியாது. நீரே எல்லாவற்றிலும் இருக்கிறீர் என்பதைத் திண்மையாக அறியும். நீங்கள் யாருக்கும் தீங்கிழைக்கலாகாது என்பதற்கு இதுதான் காரணம்; அவர்களுக்குத் தீங்கிழைப்பதால் உமக்கே தீங்கிழைத்துக் கொள்கிறீர். கடைசியாக இதைத் தியானிக்க வேண்டும்—இதைச் சிந்தியும். எல்லாம் மண்ணோடு மண்ணாக, நீர் மட்டும் தனியே நிற்கும் காலம் ஒன்று வரும் என்பதை நீர் உணர இயலுமா? அக்கணம் பெறும் ஆனந்த பரவசம் உம்மை விட்டு ஒரு போதும் நீங்காது. நீர் உடல் அற்றவர் என்பதை அனுபவத்தால் உண்மையாக உணருவீர். நுமக்கு என்றுமே உடல் இருந்ததில்லை.

நான் ஒருவனே, தனியே, ஒழிவில் காலமெல்லாம் உள்ளேன். நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? இருப்பதெல்லாம் நான் தானே? இதைத்தான் விடாமல் தியானிக்க வேண்டும். அச்செயலால் உண்மை அனுபூதி வந்துவிடும். அனுபூதிக்குப் பின்னரே நீர் மற்றவர்களுக்கு ஒரு பாக்கியம் ஆவீர்.

"உன் முகம் இறைவனைக் கண்டவன் முகம் போல் ஒளி வீசுகிறது." *இதுதான் இலட்சியம். நான் இப்போது செய்வது போலப் பிரசாரம் செய்வதற்கு இது உரியதன்று. "ஒரு மரத்தின் அடியில் பதினாறு வயதான ஆசாரியார் ஒருவரை நான் கண்டேன். சீடரோ, எண்பது வயதுக் கிழவர். ஆசாரியர் மௌனோபதேசம் செய்தார். சீடரின் ஐயம் பறந்துவிட்டது"[1]. பேசுபவர் யார்? கதிரவனைப் பார்க்க விளக்கேற்றுவார் யார்? உண்மை உதயமாகும்போது சாட்சி ஒன்றும் தேவை இல்லை. நீர் அதை அறிவீர். நாம் செய்யப் போவது அதுதான்—உண்மையை அனுபூதியாக்கும். முதலில் அதைச் சிந்தியும்; பிறகு அதைப்பற்றி நியாயவாதம் செய்யும். புதுமைபற்றிய உமது ஆவலைத் தீர்த்துக்கொள்ளும். பிறகு வேறு ஒன்றையும் நினைக்கவே வேண்டா. 'நாம் வேறு ஒன்றையும் என்றும் படித்திராமல் இருக்கக்கூடாதா?' என்று நான் அவாவுகிறேன். நமக்கு இறைவரே துணை புரிவாராக! படித்தவன் என்ன ஆகிறான் என்று பாரும்!

"இங்கே இப்படிச் சொல்லியிருக்கிறது; அங்கே அப்படிச் சொல்லி இருக்கிறது."

"அது சரி; நண்பரே! நீர் என்ன சொல்கிறீர்?"

"நான் சொல்வது ஒன்றுமில்லை."

---

* சாந்தோக்கியம் 4-9-2 [1] தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம், 12

கற்றவன் மற்றவர்கள் சொல்வதை எல்லாம் உரைக்கிறான். ஆனால், அவனுக ஒன்றிலும் சிந்திப்பதில்லை. இதைக் கல்வி என்றால், பிறகு பைத்தியம் என்பது எது? நூல்கள் எழுதியிருப்பவர்களையெல்லாம் பாருங்கள் ,...இக்கால ஆசிரியர்களின் இரண்டு வாக்கியங்கள்கூட அவர்கள் சொந்த வாக்கியங்கள் அல்ல. எல்லாம் பிறரின் மேற்கோள்கள் !

புத்தகப் படிப்பினால் மிகுதியான மதிப்பு ஒன்றும் இல்லை. பிறர் கூறியதைக் கூறும் சமயத்தாலும் பயன் ஒன்றுமில்லை. அது உண்பதுபோல. உங்கள் சமயம் எனக்கு மனநிறைவைத் தராது. இயேசுநாதரும் கௌதம புத்தரும் இறைவரைக் கண்டார்கள். இறைவரைப் பார்க்காவிடில் நீரும் நாத்திகவாதியைவிட எவ்விதத்திலும் சிறந்தவர் அல்லர். (இறைவரைக்) கண்டவர் மௌனமாய் இருப்பர் ; ஆனால், நீரோ, நிறையப் பேசி, உமது பேச்சால் உலகைத் தொல்லைக்கு உள்ளாக்குவீர். நூல்களாலோ, பைபிள்களாலோ, வேதங்களாலோ பலன் ஒன்றும் இல்லை. நான் சிறு பையனாய் இருந்தபோது ஒரு கிழவரைச் சந்தித்தேன். அவர் எந்த வேதமும் படிக்கவில்லை. ஆனால், அவர் என்னை ஒருமுறை தொட்டு இறை உணர்வை என் நெஞ்சிற் புகுத்திவிட்டார்.

உலகச் சமயகுரவர்களே, மோனமாயிருங்கள். சமய நூல்களே, பேசாதிருங்கள். இறைவனே நீ மட்டும் பேசு ; உன் அடிமையான நான் கேட்கிறேன்...உண்மை இங்கே இல்லை என்றால், இந்த வாழ்க்கையால் பயன் என்ன? நாம் எல்லோருமே, அதைப் பற்றிவிடுவோம் என்று எண்ணுகிறோம்; ஆனால், பற்றுவதில்லை. நம்முட் பலர் கையில் தூசியே கிடைக்கிறது. இறைவர் அதற்குள் இல்லை. இறைவர் இலையெனில், வாழ்க்கையால் பயன் என்ன? இந்த உலகத்தில் ஓய்வுபெற இடம் உண்டா? நாமே தேடி அதைக் கண்டுபிடிக்க வேண்டும்; நாம் ஆர்வத்தோடு அதைத் தேடுவதில்லை. ஓடும் நீரில் மிதந்து செல்லும் சிறு வைக்கோலைப் போன்றவர் நாம்.

உண்மை இருந்தால், இறைவர் இருந்தால், நமக்குள்ளே தான் இருக்கவேண்டும். 'நான் என் கண்களால் இறைவரைப் கண்டிருக்கிறேன்,' என்று சொல்ல என்னால் இயலவேண்டும். இல்லையானால், என்னிடம் சமயம் (மதம்) ஒன்றும் இல்லை. நம்பிக்கைகளோ, கொள்கைகளோ, அறிவுரைகளோ சமயம் ஆகா. இறை அனுபவம், கடவுளைக் காணல்—இதுதான் சமயம். உலகம் போற்றும் இந்த மகான்களின் பெருமை எங்கே இருக்கிறது? இவர்கள் விஷயத்தில் 'இறைவன்' ஒரு கொள்கை அன்று.

இவர்கள் பாட்டனுர் நம்பியதால் இவர்களும் நம்பினுர்களா? இல்லை. தங்கள் உடல், மனம் எல்லாவற்றிற்கும் மேலான முடிவற்ற இறைவரை இவர்கள் கண்டு அனுபவித்தார்கள். இந்த இறைவரது பிரதிபிம்பத்தில் ஒரு சிறு பகுதி பெற்றிருப்பதாலேதான் உலகம் உண்மையாகிறது. நல்லவனிடம் நாம் அன்பு செலுத்தக் காரணம், அவன் முகத்தில் இந்த இறை ஒளி இன்னும் சற்று மிகுதியாக வீசுவதுதான். இந்த ஒளியை நாமே பெறவேண்டும். அனுபவத்துக்கு வேறு வழியே இல்லை.

இதுதான் நமது இலட்சியம். இதை அடையப் போராடுங்கள். நீங்களே சொந்தமாக ஒரு பைபிளை ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்குச் சொந்தமான கிறிஸ்துவைப் பெறுங்கள். இல்லையானல், நீங்கள் சமய வாழ்வற்றவர்கள். சமயத்தைப் பற்றிப் பேசவேண்டா. மனிதர்கள் ஓயாமல் பேசுகிருர்கள். "இவர்களுட் சிலர் அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்தாலும், நெஞ்சிலுள்ள அகந்தையின் காரணமாகத் தாம் ஞான ஒளியைக் கண்டுவிட்டதாக எண்ணுகின்றனர். இதுமட்டும் அன்று; மற்றவர்களையும் தோளில் தூக்கிச் செல்ல முன் வருகிருர்கள்; முடிவில் இருவரும் குழியில் விழுகின்றனர்."[1]

எந்தக் கோவிலும் தானுக யாரையும் என்றும் கரையேற்றவில்லை. கோவிலிற் பிறப்பது நன்று; ஆனுல், இந்து கோயிலிலோ, கிறிஸ்தவக் கோயிலிலோ இறப்பவனுக்குத் துயரமே வாய்க்கும். அதை விட்டு வெளியேறுங்கள்...தொடக்கத்தில் அது நன்றுதான்; ஆனுல் பின்னர் அதை விட்டுவிடுங்கள்; குழந்தைப் பருவப் பள்ளி;...அது இருக்கட்டும். நேரே இறைவரிடம் ஏகுங்கள். சித்தாந்தங்களோ கொள்கைகளோ வேண்டா. அப்போதே எல்லா ஐயங்களும் மறையும். அப்போதுதான் கோணல்கள் எல்லாம் நிமிரும்.

பலவற்றுள் ஒன்றையும், இந்த முடிவற்ற சாவில் அந்த ஒரு வாழ்வையும், இந்தப் பன்மையில் மாருத ஒன்றைத் தன் ஆன்மாவிலும் காண்பவனுக்கே அழிவற்ற சாந்தி உரியதாகும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

---

[1] கட 1-2-5

சுவாமி விவேகானந்தர்

கரும யோகம்

முதலாம் அதிகாரம்

கருமம் குணத்தினைக் காரியப்படுத்தும்

'கர்மா' என்னும் சொல்லானது, க்ரு என்னும் வடமொழித் தாதுவினின்று பிறந்தது. க்ரு என்பதற்குச் செய் என்பது பொருள். ஆகவே, செய்கையனைத்தும் கருமமாம். நூல் வழக்கில் இச்சொல் வினையால் ஆகிய பயனையும் குறிக்கும். தத்துவ நூலிலே, இம்மொழி, முன்னுட் செய்த வினையாகிய காரணத்தினுலே எய்திய வினைப்பயனுகிய காரியத்தைக் குறிக்க, ஒரே வழி உபயோகிக்கப்படுவதுண்டு. கருமயோகமாகிய இந்நூலிலே, இம்மொழி செய்கை என்னும் பொருளினதாகவே ஆளப்படும்.

மானிட வாழ்க்கையின் நோக்கம் ஞானத்தைப் பெறுதலே. இவ்வுண்மையை நம் ஞான சாத்திரங்கள் நமக்கு வலியுறுத்திக் கூறுகின்றன. அடைய வேண்டிய பொருள் புலன் இன்பமன்று; ஞானமே. புலன் நுகர்ச்சிகள் ஒழிந்து போகும் இயல்பின. இவற்றினை முடிவாகக் கொள்வது தவருகும்; சிற்றின்பத்தைப் பொருளாகக் கொண்டமையானன்றே உலகத்தில் பலவகைத் துன்பங்களும் நிறைந்திருக்கின்றன? நாளடைவிலே அனுபவமடைந்த மனிதன், தான் நாடிச் சென்றது இன்பமன்று, ஞானமேயென்பதை உணர்ந்துகொள்கிருன். அங்ஙனம் உணர்ந்தவனுக்கு இன்ப துன்பங்கள் இரண்டும் நல்லறிவுணர்த்தும் ஆசிரியனைப் போன்று உதவுகின்றன. அவன் நன்மையிலிருந்து எவ்வளவு தேர்ச்சியையடைகிருனே, அவ்வளவு தேர்ச்சியைத் தீமையிலிருந்தும் அடைகிருன்.

இன்ப துன்பங்கள் ஆன்மாவின் முன்னிலையிலே பல வேருகிய உணர்வுருவங்களைப் பதியவைத்துச் செல்கின்றன. இவற்றின் தொகுதியே 'குணம்' எனப்படுவது. ஒருவனுடைய குணத்தினையாராய்ந்து பார்ப்போமாயின், அது அவனுடைய உளச்சார்பு அனைத்தும் ஒருங்கு திரண்டு ஆயினதென்பதை உணர்ந்துகொள்வோம். இவ்வகத்தன்மையைச் செயற்படுத்தியதில் இன்பமுந் துன்பமும் சேர்ந்திருக்கின்றன என்பதும், இன்பத்தினும் துன்பமே பெரிதும் பயன்பட்டதென்பதும் நமக்குப்

புலப்படுவனவாம். பூவுலகிலே தோன்றிய பெரியோருடைய சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்போமாயின், பெரும்பாலும் அவரது ஆன்ம சக்தியை வெளியே விளங்கச் செய்தது இன்பத்தினும் துன்பமேயெனவும் செல்வத்தினும் வறுமையேயெனவும், புகழினும் இகழ்வேயெனவும் நாம் அறிந்துகொள்வோம்.

இனி, ஞானமும் மனிதனிடத்தில் இயல்பாக அமைந்திருப்பது. அது புறத்தேயிருந்து வருவதொன்றன்று; அகத்தே அமைந்திருப்பது. 'அறிகிருன்' என்கிறோம். மன நூலுக்கியைந்த தக்க மொழியினுற் சொல்லின், 'காண்கிருன்', 'அறியாமைத் திரையை நீக்குகிருன்' என்று சொல்லுதல் வேண்டும். ஆராய்ந்து பார்க்குமிடத்து, அளவு கடந்த அறிவினுக்கு உறைவிடமாயிருக்கின்ற ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே 'கற்றல்' என்பதன் பொருளாகும். தத்துவ சாத்திரியாராகிய நியூட்டனுர் உலகின் ஈர்ப்புச் சக்தியைக் கண்டு பிடித்தாரென்கிறோம். அது அவர் வருவாரெனக் காத்துக்கொண்டு புறத்தே ஓரிடத்தே ஒதுங்கி இருந்ததோவென்ருல், அன்று; அது அவர் உள்ளத்தேயிருந்தது; காலம் வருதலும், அவர் அதைக் கண்டு புறத்தே தோற்றுவித்தார். உலகு இதுகாறும் பெற்ற அறிவு முழுவதும் மனத்திலிருந்தே வந்தது; சராசரத்திலுள்ள அறிவு அனைத்தும் பொதிந்த எல்லையற்ற நூற்களஞ்சியம் நம் உள்ளத்தே இருக்கிறது. ஆதலின், நம்மாற் காக்கப்படும் பொருள் நமது உள்ளமே; புறத்திலுள்ள பிரபஞ்சமானது, நாம் நமது உள்ளத்தையாராய ஓர் ஏதுவாகவும் குறிப்பாகவும் இருக்கிறது. பழம் விழுந்த குறிப்பினைக் கண்ட நியூட்டனுர், அதன் காரணத்தையாராயத் தமது உள்ளத்தை நோக்கினுர்; அங்கு முன்பு கண்டு பிடித்த முடிபுகளோடு இயைபுடைத்தாகிய ஒரு புது முடிபு புலப்பட்டது; அங்ஙனம் அவர் கண்ட முடிபினை நாம் 'நிலக்கவர்ச்சி விதி' எனக் கொள்கிறோம். அஃதன்றி, அவ்விதப் பழத்திலாவது பூமியின் நடுவிலாவது அது இருந்ததில்லை. உலக அறிவும், அறிவினையறிதற்கேதுவாகிய அறிவும் உள்ளத்தேதானிருக்கின்றன. இவை மூடுண்டு கிடக்கின்றன. இவற்றை மூடியிருக்கும் திரையை அகற்றுதலே கல்வி கற்றலாகும். யாவனொருவனுடைய உள்ளத்தினின்று இத்திரை பெரிதும் அகன்றுவிட்டதோ, அவன் பேரறிஞனுகிருன்; அகலப் பெருதவன், பேதையாகிருன்; முற்றும் அகலப் பெற்றவன், முற்றறிஞனெனப்படுவான். முன்னுளில் முற்றறிஞர் பலர் இருந்திருக்கின்றனர்; மேல்வருங் காலங்களிற் கோடிக்கணக்காய் இருப்பர். சிக்கிமுக்கிக் கல்லி

னுள்ளே தீயிருப்பதுபோல, உள்ளத்தினுள் அறிவு அமைந்திருக்கிறது; புறத்தெழுந்த குறிப்பாகிய தாக்கலினாலே அது வெளியே தோன்றுகிறது. நமது மனத்தை ஆறுதலாக ஆராய்ந்து பார்ப்போமாயின், கண்ணீர், புன்னகை, இன்பம் துன்பம், அவலம் நகைப்பு, ஆசி சாபம், இகழ் புகழ் முதலாகிய அனைத்து உணர்வுகளும் தொழில்களும் உள்ளத்தினுள்ளேயிருந்து பலவாகிய தாக்கல்களினாலே புறத்தே தோன்றினவென்பதை உணர்ந்துகொள்வோம். இவற்றினாலாயது நமது இக்கால நிலைமை; அந்நிலைமைக்கேதுவாயிருந்த தாக்கல்களின் கூட்டத்தைக் 'கருமம்' என்போம்.

உள்ளத்திற்பட்டு அதனது வலிமையும், அறிவையும் தோற்றுவிப்பனவாய், உள்ளிருந்த தீயைப் புறப்படுத்தும் நீர்மையவாயிருக்கும் மானச உடல் தாக்கல்களனைத்தையும் கருமம் என்னும் சொல்லின் பொருளினுள் அடக்கலாம். ஆகவே, நாம் கணந்தோறும் கருமஞ்செய்துகொண்டே யிருக்கிறோம். நான் உங்களோடு உரையாடுகிறேன். அது கருமம். நாம் மூச்சு விடுகிறோம்; அது கருமம். நடக்கிறோம்; அது கருமம். மனத்தினாலோ உடலினாலோ செய்வதெல்லாம் கருமம். இவ்வாறு செய்யும் கருமம் அனைத்தும் தமது அடையாளத்தைப் பதியவைத்து அகல்கின்றன.

பலவாகிய சிறு தொழில்களின் சேர்க்கையினாலாகிய பெருந்தொழில்கள் சில உள்ளன. கடற்கரையில் நிற்கும்போது, கரையிலே திரை மோதுதலினாலே உண்டாகிய பேரொலி செவிக்குப் புலப்படுகிறது. ஆராய்ந்து பார்க்கின், இப்பேரொலி கோடிக்கணக்கான சிற்றலைகளிலிருந்தெழுந்த சிற்றொலிகளின் சேர்க்கையினாலானது; தனிச் சிற்றொலி காதுக்குப் புலப்படவில்லை; ஒருங்கு திரண்ட பேரொலி புலப்படுகின்றது. அது போல, இதயத்தின் துடிப்பும் செயலாயினும், ஒரு சில செயல்களே உணருந்தன்மையன ஆகின்றன; இவை சிறு தொழில் பலவற்றின் சேர்கையாலாகிய பெருந்தொழில்களாம். ஒருவனது உண்மைத் தன்மையை ஆராய வேண்டின், அவனது பெருஞ்செயல்களைப் பார்க்க வேண்டா; சமயம் வாய்த்தபோது பேதையும் வீரனாதலுண்டு. சாதாரண செயல்களைச் செய்யும்போது குறிப்பாக, இவையே ஒருவனுடைய உண்மைத் தன்மையைக் காட்டுவன. மிகச் சிறந்த தருணங்களிற் கடையராயினார் கூடப் பெருமையடைவதுண்டு. எந்த நிலைமையிலும் பெருந்தன்மையாக நடப்பவனே உண்மையிற் பெரியோனாவான்.

கருமம் மனத்தின் தன்மையைக் காரியப்படுத்துமளவில் எல்லையற்ற ஆற்றல் உடையது. மனிதனுனவன், சராசரத்தி லுள்ள வலிமைகள் அனைத்தையுந் தன்பாற்கவர்ந்து ஒருங்கு திரட்ட, ஒருவழிச் செலுத்துகிற நிலையம்போன்றிருக்கிறுன். முற்றறிஞனுய் எல்லாம் வல்லோனுய் இருக்கிற உண்மை மனிதன், இத்தகைய பெருநிலையம்; பிரபஞ்சத்திலுள்ள நன்மையும் தீமையும், இன்ப துன்பங்களும் இவன்பாற்சென்று இவனடியைப் பற்றுகின்றன. இவன் இவற்றை ஒருங்குசேர்த்துத் தன்றன்மை பொருந்தச் செய்து மடை திறந்தோடி வரும் ஆற்றைப் போல ஒருவழிச் செலுத்துகிறுன். கவர்ந்துகொள்ளும் வலிமையைப் போலப் புறஞ்செலுத்தும் வலிமையும் இவனுக்கு உண்டு.

நம்மைச் சூழ உலகத்தில் நாம் காண்கிற தொழில்கள் அனைத்தும், மக்கட் சமூகத்திலுள்ள மாறுதல்கள் யாவும், மனத்தில் விளையாட்டாகவும், சித்தவலிமையின் புறத் தோற்றமாகவும் கருதப்படத் தக்கன. இயந்திரம், கருவி, நகரம், மரக்கலம், போர்க்கப்பல் ஆகிய அனைத்தும் சித்த வன்மையின் பரிணுமத் தோற்றங்களாம். இந்தச் சித்த வன்மை அகத்தன்மையாகிய ஒழுக்க நிலையினுற் செயற்படுகின்றது. இவ்வொழுக்க நிலையும் கருமத்தினுலாகின்றது. கருமம் எத்தன்மையதோ, அத்தன்மையதே சித்தவலிமைத் தோற்றமும். இவ்வுலகத்திற் சித்த வலிமையால் மேம்பாடுற்று விளங்கிய பெரியோரனைவருஞ் செயற்கருங்காரியங்களைச் செய்து முடித்தோராவர்; உலகத்தையுங் கவிழ்த்துவிடக்கூடிய மனவலிமை அவர்களிடமிருந்தது. இத்தன்மையாகிய பெருவலிமையை விடா முயற்சியினுல் பல்லாயிரம் ஆண்டுகளாக முயன்று பல பிறவிகளில் அவர்கள் திரட்டியிருத்தல் வேண்டும்.

கௌதமபுத்தர், ஏசு கிறித்து என்னும் இவர்கள் காட்டிய மனவலிமை ஒரு பிறவியிற்பெற்றதன்று; இனி அது சந்ததி வழியாக வந்ததுமன்று. இவர்கள் தந்தையர்களைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேம்; அன்னுர் உலக நன்மைக்காக ஒரு சொற்கூட சொன்னதாகவும் நாம் அறியோம். யோசேப்பைப் போன்ற தச்சர்கள் கோடிக்கணக்காய் இருந்திருக்கிறுர்கள்; இப்பொழுதும் இருக்கிறுர்கள். புத்தருடைய தந்தையாரைப் போன்ற சிற்றரசர்கள் எத்தனையோ கோடி இருந்திருக்கிறுர்கள். இந்தச் சிற்றரசர் தம் வேலைக்காரரையும் அடக்கியாள இயலாதவராயிருந்திருக்கலாம்; புதல்வரையோ என்றுல், உலகிலுள்ள மக்களிற் பாதிப்பேர் ஏத்தி வணங்குகின்றனர். இனித் தச்சராகிய

யோசேப்புக்கும் உலகத்திற் பலகோடி மக்களால் வணங்கப்படுகிற அவர் புதல்வருக்கும் உள்ள மாறுபாட்டை என்ன காரணங் காட்டித் தெளிவாக்கலாம்? ஆதலாற் சந்ததி வழியென்று கூறுவது ஒருபோதுந் தகாது. பின்னர்ப் புத்தரும் ஏசுவுங் காட்டிய அளவிடற்கரிய வலிமை எங்கிருந்து வந்ததென்றால், அது அவர்கள் பல பிறவியிற்செய்த கருமத்தின் பயனாக ஊழிதோறும் பெருகி, ஈற்றில் மடை திறந்த வெள்ளம் போலப் பரவி உலகிலே இன்றும் நின்று நிலவுகின்றது.

சித்தசக்தி முதலிய அனைத்தும் கருமத்தினால் நிச்சயிக்கப் படுகின்றன. முயன்று உழைத்தாலன்றி, ஒன்றையும் பெறுதல் இயலாது. இது நித்தியமான விதி. இந்த உண்மையை நாம் மறுத்துரைக்க நினைப்போமாயினும், ஈற்றில் ஒத்துக்கொள்ள வேண்டியவர்களாவோம். ஒருவன் வாழ்நாள் முழுவதும் செல்வத்தை நினைத்து துயர் உறுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவன் ஆயிரம் பேரை ஏமாற்றியிருத்தல் கூடும்; அவனது கருமப்பயன் அவனுக்கு வறுமையை நிச்சயித்திருக்குமாகில், ஈற்றில் அவன், தான் செல்வம் படைத்தவனாவதற்குத் தகாதவனெனஉணர்ந்துகொள்வான்; அன்று முதல் வாழ்க்கையே அவனுக்கு இன்னல் நிரம்பியதாகத் தோன்றும். விஷய சுகத்தை விரும்பி ஒருவன் பொருள் தேடிக் குவித்தாலும், அனுபவிக்கத் தகுதியுள்ள அளவுதான் அனுபவிப்பான். அறிவிலி ஒருவன் உலகிலுள்ள புத்தகங்களையெல்லாம் வாங்கிக் குவித்து வைத்தாலும், படிக்கத் தகுதியுள்ளவற்றைத்தான் படித்தல் கூடும்; இந்தத் தகுதி கருமத்தினாலேற்படுகிறது. 'எதற்குத் தகுதியுடையோம்? எதனை அனுபவிப்போம்?' என்னும் இவை கருமத்தின் பயனாக ஏற்படுகின்றன. நமது நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகளாவோம். எந்த நிலையை அடைய வேண்டுமோ, அதனை அடைவதற்கு வேண்டிய சக்தி நம்மிடத்திலிருக்கிறது. முன்னாட்செய்த கருமத்தின் பயனாக இப்பொழுதுள்ள நிலைமையை அடைந்தோமெனில், இப்பொழுது செய்கிற கருமத்தின் பயனாக இனிமேல் வரும் நிலைமையை அடைவோமன்றோ? ஆதலால், செய்வதிதுவென அறிந்து செய்தல் வேண்டும். 'செய்வதிதுவென அறிய வேண்டுவது எதற்கு? எப்படியாவது ஒரு செயலைச் செய்துகொண்டுதானே இருக்கிறோம்?' என்று சொல்வது பொருந்தாது. செய்யுந் தொழிலைத் தக்கவாறு செய்யாததனால் நமது சக்தியை வீணிற் சிதறிவிடுவதுமுண்டு. கீதையில் கரும யோகத்தைப்பற்றிய அத்தியாயத்தில், எந்தத்

தொழிலையுஞ் செய்யுமிடத்து அதனைச் சாதுரியமாகவும் முறைப் படியும் செய்ய வேண்டுமென்பது சொல்லப்பட்டிருக்கிறது. முறை அறிந்து செய்பவன்றான் பெரிதாகிய பயனடைவான். ஆன்ம சக்தியை எழுப்பி மனத்தின் வலிமையைப் பெருக்குவதே கருமத்தின் நோக்கம் என்பதை மறந்துபோதல் கூடாது. வலிமையும் ஞானமும் எல்லோரிடத்திலும் நிறைந்திருக்கின்றன. கருமமானது செயற்கருஞ்செய்கைகளைச் செய்யக்கூடிய வலிமை, ஞானமாகிய வீரரை எழுப்பிவிடத் தக்க அடிகள் போன்றுதவு கிறது.

மனிதன் பலவாகிய ஏதுக்களை முன்னிட்டு முயல்கின்றான்; காரணமின்றித் தொழில் செய்வாரெவருமிலர். சிலர் புகழை விரும்புகின்றனர்; புகழுக்காகக் கருமம் புரிகின்றனர். சிலர் பொருளை விரும்பிப் பொருளுக்காகக் கருமம் ஆற்றுகின்றனர்; பின்னுஞ்சிலர் செல்வாக்கை விரும்பிச் செல்வாக்குக்காகக் கருமத்தில் ஈடுபடுகின்றனர்; சுவர்க்கத்தை விரும்பியவர்கள் அதனைப் பெறுவதற்காகக் கருமத்தில் இறங்குகின்றார்கள். சீன தேசத்தாரைப்போல ஒரு சிலர் இறந்த பின்னர்க் கீர்த்தியடைய வேண்டி முயல்கின்றார்கள். அந்த நாட்டிலே கௌரவப் பட்டங் கள் ஒருவனுக்கு அவன் இறந்த பின்புதான் வழங்கப்படுகின் றன; அது நமக்குள் வழங்கும் முறையினும் நல்லது போலத் தோன்றுகிறது. சீன தேசத்தில் ஒருவன் கணிக்கத்தக்க பெரிய காரியங்களைச் செய்வானாகில், அவனுடைய இறந்து போன தந்தைக்கோ, பேரனுக்கோ, ஒரு கௌரவப் பட்டம் வழங்கப் படும். முகம்மதியருட் சிலர் தாம் இறந்த பின்னர்த் தமது உடலைச் சேமித்த இடத்திற் பெரிய சமாதிக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று அதற்காக வாழ்நாள் முழுவதும் முயலுவார்கள். சமாதிக் கட்டடம் எவ்வளவு பெரியதோ, அவ்வளவாக மதிப்பும் ஏற்படுமாதலினாலே, அதனைக் கட்டுவதையே வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொண்ட அவர்கள் ஒரு குழந்தை பிறந்தவுடனே அதனுடைய சமாதிக்காக வேண்டிய முயற்சிகள் செய்யத் தொடங்குவார்கள். வேறு சிலர், பாவத்தைப் போக்குவதற் காகக் கருமஞ் செய்வர். பாவத் தொழில்கள் பலவற்றைச் செய்துவிட்டு ஒரு கோயிலைக் கட்டியோ, புரோகிதர்களுக்குச் சிறிது பொருள் கொடுத்தோ, சுவர்க்கத்துக்குப் போகச் சீட்டுப் பெற்றுவிடலாமென்று நினைக்கிறார்கள். இவ்வாறு கருமஞ் செய்வாரது நோக்கங்களும் பலவாம்.

பயனொன்றுங் கருதாது 'நிஷ்காமியமாகக்' கருமஞ் செய்

வதே தகுதியாகும். பேரோ, புகழோ, சுவர்க்கமோ இவற்றுள் ஒன்றையுங் கருதாது நன்முயற்சியாயிருப்பது பற்றி அதனைச் செய்பவர்கள் எல்லா நாட்டிலும் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் வாழும் மக்களின் நடுவே பயன் கருதாது நறுமணத்தைக் கமழ்ந்து கொண்டிருக்கும் மலர்களைப் போன்றிருக்கிறார்கள். இவர்கள் நன்மை செய்வதில் விருப்புடையவர்களாகி, அன்பே கராரணமாக வறியவர்க்கு உதவி செய்வார்கள். பெயரையும் புகழையுங் கருதிக் கருமஞ்செய்யின், அதனால் வருகிற பயன் உடனே கிடைப்பதருமை; வயது முதிர்ந்து பின்னிட்ட காலத்திற்றான் கிடைக்கும். 'பயன் கருதாது செய்கிற முயற்சியினால் நலமுண்டாகுமா?' என்று கேட்பாருக்கு மிகப் பெரியதாகிய நலமுண்டென்று மறுமொழி பகர்வோம். சுயநலங் கருதாமையே பெருநலத்தைத் தருவது. மக்கள் பொறுமையுடனிதனைப் பயிலாதபடியால் இவ்வுண்மையை அறிந்துகொள்வதில்லை. அன்பு, சத்தியம், நிஷ்காமிய கர்மம் என்பன வெறுஞ் சொற்களல்ல; இவை மிகவும் மேலான உண்மைகள். இவற்றினுள்ளே அளவு கடந்த வலிமை தங்கியிருக்கிறது. ஒரு மனிதன் ஐந்து நாளைக்காவது, ஐந்து நிமிஷத்துக்காவது ஒரு பயனுங் கருதாது—சுவர்க்கத்தையோ, நரகத்தையோ மறுமைப் பயனையோ, பிறிதெதனையோ நினையாது—சற்கருமஞ் செய்வானாயின், அவன் மேலான மனவலிமையை அடையத் தகுதியுள்ளவன் என்பதை நாம் உணர்ந்துகொள்ளலாம். இவ்வாறு பயன் கருதாது கருமஞ்செய்வது மிகக் கடினமான காரியம்; ஏனெனில், ஈற்றில் அது மிகுந்த பயனைத் தருமென்பதை நாம் நமது உள்ளத்தில் உணர்வோமாதலின், அவ்வித எண்ணங்களையும் அகற்றி மனத்தினை அடக்கிப் பிடித்தலே சித்தவலிமையாகும். நாலு குதிரைகள் பூட்டிய வண்டி செங்குத்தான இடத்திற் கீழ்நோக்கி ஓடி வருகிறதென்று வைத்துக்கொள்வோம். குதிரைக்காரன் கடிவாளத்தை இழுத்துக் குதிரைகளை நிறுத்துகின்றான். ஓடவிடுவதா, அன்றேல் அடக்கி நிறுத்துவதா—எது பெரிது? ஒரு பீரங்கிக் குண்டு விண்ணில் செல்கிறதென்று வைத்துக்கொள்வோம். அது நீண்ட தூரம் போய் வலியிழந்து விழுகின்றது. மற்றொன்று, சுவரினால் தடைப்படுகிறதென்போம்; அது தன் வலியை வெளிப்படுத்தி மிகுந்த வெப்பத்தை உண்டாக்குகிறது. மன அடக்கமே சித்த வலிமையைத் தோற்றுவிப்பது; புத்தர் கிறித்து இவர்கள் போன்ற வல்லமையுள்ளவர்களை உண்டாக்குவது. மூடர் இந்த இரகசியத்தை அறியார்.

உலகத்தையாள விரும்புபவர் முயன்று காத்திருந்தால், ஆட்சி பெறலாம். ஆனுல், முதற்கண் ஆள வேண்டுமென்னும் எண்ணம் முற்றிலும் அகல வேண்டும். அதன்பின் ஆளுந்தன்மை தானுக வந்தெய்தும். பிராணிகளுட்சில, இரண்டு மூன்று அடித் தூரத்துக்கப்பாலுள்ள பொருள்களைக் காணுமலிருக்குமியல்பின ; அது போல, மனிதருட் பெரும்பாலார் சில ஆண்டுகளுக்குப் பின்பு வரக்கூடிய நிகழ்ச்சிகளை உய்த்துணர அறியாதவரா யிருக்கின்றனர். பொறுமையோடு மேல் நடப்பனவற்றை ஆராயாமையினுற் கயமை உண்டாகின்றது. இது சித்த சக்திக் குறைவாகிய பலவீனமாம்.

சிறிய கருமத்தையும் நிந்தித்தலாகாது. மேலான உண்மையை அறியாதவன் பெயரும் புகழும் கருதி முயலுதல் இயல்பு; அதனை அறிந்தவனே, பயனைப்பற்றிச் சிந்தியாது, "செய்யும் பணியே எமக்குரித்து ; செய்வினையால் எய்தும் பயன் எமக்கின்று," என்று செய்யவேண்டுவனவற்றைச் செய்து முடிப்பான். பயனைப்பற்றி ஏன் சிந்திப்பான்? ஒருவனுக்கு உதவி செய்ய விரும்பினுல், அவன் அதற்குக் கைம்மாருக யாது செய்வான் என்பதைப்பற்றி ஒருபோதுஞ் சிந்திக்க வேண்டுவதில்லை. பெரிய வேலையையோ, நன்மையாகிய வேலையையோ செய்யப் புகுமிடத்து அதனுல் விளையும் பயனைப்பற்றி நாம் எதற்காகச் சிந்திக்க வேண்டும்?

இவ்வாறு கருமஞ் செய்யுமிடத்து ஓர் ஆட்சேபணை உண்டாகிறது. இடைவிடாது முயற்சி செய்தல் அவசியம். ஒருகணமேனும் தொழிலின்றியிருத்தல் கூடாது ; அங்ஙனமாயின், சாந்த நிலை எவ்வாறுகும்? ஒரு புறம் பார்க்கின், விரைந்து சுழல்கின்ற சக்கரத்தைப்போலக் கருமநிலை இருக்கிறது ; மறு புறத்தில் அமைதியான துறவு நிலை இருக்கிறது. அது மலர்களும் மலைகளும் காட்டு விலங்குகளும் பொருந்திச் சத்தஞ் சந்தடியில்லாத அடவி நடுவே சாந்த நிலையாய்த் தோற்றுகிறது. இரண்டும் முற்றுப்பெற்ற நிலைகளல்ல. ஆழ்ந்த கடலிலிருந்த மீன் கரைக்குக் கொண்டு வரப் பெறின், பொருமல் உயிரிழக்கும்! அது போலத் தனித்து வனத்திலிருந்தவன் நாட்டினுள் வருங்காலத்தில் சகிக்கொணு நிலையை அடைவான். அது போல உலக முயற்சியில் ஈடுபட்டிருந்தவனும், தனியிடத்தில் உறைய விரும்புவானுயின், அந்நிலையைச் சகிக்கமாட்டாதவனுய், மதியிழந்து வருந்துவான். பெரியோன் என்று மதிக்கத்தக்க மனிதன் எவனெனில், அமைதியான தனியிடத்திலே விடா

முயற்சியையும், கடுமுயற்சியின் மத்தியிலே வனாந்தரத்திலுள்ளது போன்ற அமைதி நிலையையும் அடைந்து அனுபவிக்கத் தக்கவனே. அவன் தன்னடக்கத்தின் இரகசியத்தை அறிந்தவன். நகரத்தின் தெரு நடுவிலே போகும்போது அவனுடைய மனம் காட்டிலுள்ள குகையிலிருக்கும்போது அடைகிற அமைதி நிலையை அடையும். இதனை அறிந்தவனே சரியான முறையாகக் கருமஞ் செய்பவன். இதுவே கரும யோகத்தின் இரகசியம்.

தொடக்கம் தொட்டு, வருகிற வேலையைச் செய்து, சுயநலங் கருதாமையை வளரச் செய்துகொண்டு வருதல் வேண்டும். கருமத்தைச் செய்யும்போது, எதற்காகச் செய்கிறோம் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்; முதலிலே சில காலம் தன்னல விருப்பே காரணமாயிருப்பதைக் காண்போம். கடைப்பிடியாக முயன்றால், தன்னலங் கருதாது முயற்சி செய்கிற நிலைமை வந்தெய்தும். வாழ்வில் சென்றுகொண்டிருக்கும்போதே சிறிதேனும் பயன் கருதாது தொழில் புரிகிற நிலைமை ஒரு நாளைக்கு வந்தெய்தும். அந்நிலைமை எய்தவே, நம்முடைய சித்த சக்தி ஒரு வழிப்பட, உள்ளே அடங்கியிருந்த ஞானம் புறந்தோற்றும்.

'கருமம்' செயலெனுங் கருத்தின திம்மொழி
வினைப்பய னெனும்பொருள் மேவியும் வருமே. 1

இன்பம் பொருளன் றறிவுபொரு ளென்ப. 2

செய்தொழில் சிந்தையைச் சென்று தாக்க
உளச்சார் புருப்படும்: ஆங்கவ் வுளச்சார்பு
ஒருங்கு திரண்ட துளத்தின் றன்மை. 3

உளத்திடைச் செயல்சென் றுற்றுழி யறிவு
கல்லினுள் ளிருந்த தீயென வெளிவரும். 4

கருமந் தானே செய்தொழி லனைத்தும். 5

சிறுவினை திரளிற் பெரும்பயன் விளைக்கும். 6

கருமங் குணத்தினைக் காரியப் படுத்தும்;
குணத்தின் பால துளத்தெழு நினைவு;
நினைவி னிச்சயத் தாலுரு வாயின
எந்திர நகர மிருங்கல முதலாக்
காணப் படும்பொரு ளாதலிற் கருமம்
நினைப்பரு வன்மை சால நின்றது. 7

கௌதமர் கிறித்தவர் காட்டிய வலிமை
ஒருபிறப் புழைப்பன் றோங்குபல் பிறவியிற்
றிரட்டிய கருமச் செழும்பய னாகும். 8

முன்னாள் வினைப்பயன் இந்நாள் நுகர்ச்சி ;
இந்நாட் செய்வன இனிப்பயன் றருவ ;
வேண்டிய வேண்டியாங் கெய்துவர் வினைத்திறன்
ஆய்ந்தறி மரபி னறிஞர் தாமே. 9

சிறுமதி யாளர் பயனுக் குழைப்பர். 10

பயன்கரு தாத பான்மையர் தாமே
சித்த சுத்தியொடு செய்தொழில் வன்மை
யாகிய பெரும்பய னடைகுவர் அதனாற்
றன்னலங் கருதாத் தன்மையி னாய்ந்து
செய்வன செய்தல் சீரியோர் கடனே. 11

அமைதி நிலையி லருந்தொழில் புரிவர்,
நகரும் வனமும் நாடினொன் றாக்குவர்,
சித்த வலிமையர் செய்தொழிற் பயனை
விழையார் இவர்பால் மெய்யுணர் வெய்தும். 12

இரண்டாம் அதிகாரம்

தத்தம் நிலையில் தாம் பெரியவரே

சாங்கிய நூலின்படி, இயற்கைப் பொருள்களிலே சாத்துவிக மாகிய அடக்கநிலை, இராஜசமாகிய இயக்கநிலை, தாமச மாகிய மூடநிலை என மூன்று நிலைகள் உள்ளன. இவற்றுள் மூடநிலை இருள், தொழிலின்மையாகவும்; இயக்கநிலை கவர்தல், அகற்றல் முதலிய தொழில்களாகவும்; அடக்கநிலை இவ் விரண்டையும் நிலைப்படுத்திய சாந்த நிலையாகவும் உலகில் தோன்றுவன.

இவை மனிதனிடத்து முக்குணங்களாய் அமைந்திருக்கின் றன. மனிதனானவன் மூடநிலையடைந்திருக்கும்போது சோம்ப லுற்றுத் தொழிலின்மேல் மனஞ்செல்லாது மனத்திற்படிந்த சில எண்ணங்களாற் கட்டுண்டு செயலற்றுக் கிடப்பான். வேறு சில சமயங்களில், இயக்கநிலை ஏற்படும்; ஒழிந்த அடக்கநிலையும் ஏற் படும். இனி வேறு வேறு மனிதரில் இந்தநிலையில் யாதாவதொன்று மிகுந்து நிற்கும். சோம்பல், தொழில் செய்யாமை, மறதி, மூடம் முதலியன ஒருவனிடத்துத் தோற்ற, மற்றொருவனிடத்து முயற்சி, வலிமை, ஊக்கம் முதலியன நிலைபெற்றிருக்கின்றன. பின்னும் ஒருவனிடத்து இனிமை, சாந்தம், பொறுமை முதலியன தோற்றித் தொழில் செய்யும் நிலைமையும், செய்யா நிலைமையையும் ஒருங்கு காட்டுகின்றன. ஏனைய பிராணி களிலும் தாவரங்களிலும் இக்குணங்கள் அமைந்திருக்கக் காண் கிறோம்.

இக்குணங்கள் மூன்றையும் பற்றிய விசேட அறிவு கரும யோக ஆராய்ச்சிக்கு வேண்டுவது. இவை இத்தன்மைய என்றும், இவற்றைப் பயன்படுத்தும் விதம் இத்தன்மைத்து என்றும் அறிவும் அறிவால் நாம் செய்யும் கருமத்தைச் சிறப்புறச் செய்யத் தக்கவர்களாவோம். மக்கட் சமூகம் பலபடியாய் அமைந்திருக் கிறது. ஒழுக்க நெறியைப்பற்றி நாம் அனைவரும் அறிவோம்; கடமையைப் பற்றியும் அறிவோம்; ஆயினும், வேறு வேறு நாடுகளிலே ஒழுக்கத்தைப்பற்றிய கருத்து பெரிதும் வேறு பட்டிருக்கக் காண்கிறோம். ஒரு தேசத்தில் ஒழுக்க நிலை யென்று கருதப்படுவது, மற்றொரு தேசத்தில் ஒழுக்கத்துக்கு

மாறுபட்ட நிலையாக எண்ணப்படும். சான்ருக, ஒரு தேசத்தில் அத்தை மகளை மணஞ்செய்வது தக்கதென்று கருதப்பட, மற்ருெரு தேசத்தில் அது பிழையாக மதிக்கப்படும். மனைவியின் சகோதரியை மணந்துகொள்வது தகுதியென்று ஒரு தேசத்தார் சொல்ல, அது தகாத செயல் என்று மற்ருெரு தேசத்தார் கழறுவர். இங்ஙனே ஏனைய விஷயங்களும் மாறுபட்டிருக்கும். ஆயினும், ஒழுக்க நிலை எவ்விடத்தும் ஒரே வண்ணமாக இருத்தல் வேண்டுமென்று நாம் நினைக்கிருேம்; கடமையென்பதும் அவ்வாறே. ஒரு தேசத்தில் கடமையென்று கருதப்படுகிற செயல்கள், மற்ருெரு தேசத்தில் கடமைக்கு மாருனவையென மதிக்கப்படுவதுண்டு. ஆயினும், உலகமெங்கணும் கடமையைப்பற்றி வேறுபாடற்ற எண்ணம் நிலத்திருக்க வேண்டுமென்று கருதவும் இடமுண்டு. ஒரு சாரார் கடமையென மதிக்கிற செயல்கள், மற்ருெரு சாராருக்கு வெறுப்பைத் தருவன. இவ்வண்ணம் மாறுபாடற்ற கொள்கைகளிடையே ஒப்பு நோக்கி நடப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, 'நான் பிடித்ததே சரி; மற்றதெல்லாம் பிழை,' என்று சொல்லுகிற மூடவழி; மற்றையது, மன நிலைக்கும், காலதேச வாழ்க்கை நிலைக்கும் இயையக் கடமை ஒழுக்க நிலையாகிய கொள்கைகள் வேறுபடலாமெனத் துணிகிற அறிவு நெறி. விசேஷமாக அறிந்துகொள்ள வேண்டுவது என்னவென்ருல், கடமை ஒழுக்கநிலை முதலியன படிப்படியாக உயர்ந்துகொண்டு போகுமியல்பின; ஆதலினல், ஒரு சாராருக்கு உரியனவாயிருந்த கொள்கைகள் மற்ருெரு சாராருக்கு உரியனவாகா என்பதாம்.

எடுத்துக்காட்டாக மதாசாரியர் அனைவரும், "தீமை செய்பவனையும் எதிர்க்கவேண்டா," என்று சாத்துவிகச் சகிப்பை மேலான ஒழுக்கநிலையாகச் சொல்லுவர். ஆயினும், இக்கொள்கையை நம்முட்சிலர் மேற்கொண்டு நடப்பின், மக்கட் சமூகக் கட்டுப்பாடே உடைந்து சிதறுண்டு போம். தீயவர்கள் நமது பொருளையும் உயிரையுங் கொள்ளை கொண்டு நம்மைப் படாத பாடுபடுத்திவிடுவார்கள். ஒரு நாளைக்கு இந்தச் சாத்துவிக எதிர்ப்பைச் செய்யினும், துன்பம் வந்தடையும். உள்ளத்து உணர்வில் இது மேலானக் கொள்கை என்பதை அறிவோம். ஆயினும், இதனை எல்லாரும் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்வது மனிதருட் பெரும்பாலாரை நிந்திப்பதாக முடியும். அஃதன்றியும், தக்க கொள்கைக்கு மாருக நடக்கிருேமே என்னும்

எண்ணம் உண்டாகி மனவலியை அழிக்கும்; சரியென ஒரு கொள்கையைக் கொண்டு அதன்படி நடவாத மனிதன், தன்னைத் தானே வெறுப்பவனுகிருன். அப்படிச் செய்கிற சாதியாரும் தன்மைத்தாமே வெறுப்பவராவார்.

நம்மை நாமே வெறுக்காமலிருப்பது நமது முதற்கடமை யாகும். முன்னேற்ற மடைவதற்கு முதலிற் சுய நம்பிக்கையும், இரண்டாவதாக இறைவன் மேல் நம்பிக்கையும் வேண்டும். சுய நம்பிக்கை இல்லாதவன் கடவுள்மேல் நம்பிக்கை வைக்க மாட்டான். ஆராய்ந்து முடிவு செய்யின், கடமை, ஒழுக்கநிலை என்பன கால தேச வர்த்தமானங்களுக்கு இயைய மாறுபடத் தக்கன என்றும், தீமையை எதிர்ப்பது தன்னளவிற் பிழை யில்லாத செய்கையென்றும், எதிர்க்க வேண்டிய இடத்து எதிர்ப்பதே கடமையாமென்றும் நாம் அறிவோம்.

போர்க்களத்தில் அருச்சுனன் தனது சுவதர்மத்தை மறந்து, எதிரியாயிருப்பவர்கள் தன் உற்றுரும் நண்பருமாதலால், 'அவர்களொடு மாறுபட்டுப் போர் புரியேன்,' என்று அன்பு, சாத்துவிகச் சகிப்பு என்னும் இவற்றைச் சாட்டாகச் சொல்ல, ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவனை நோக்கி, "போலி வேடத்தையும் கோழைத்தனத்தையும் விட்டுவிடுவாயாக," என்று சொன்ன வாக்கியத்தின் உண்மையைக் கீதையை வாசிக்கும் மேலை நாட்டார் விளங்கிக்கொள்ளாது ஐயப்படுதல் கூடும். இதனுள் ஒரு பெரிய படிப்பினை இருக்கிறது. எந்த விஷயத்திலும் மிக உயர்ந்த நிலையும் அறத்தாழ்ந்த நிலையும் ஒருதன்மையவாகத் தோன்றுவன. ஒளியின் அலையசைவுகள் குறித்த ஓர் எல்லையின் மேற்பட்டுவரினும் குறைந்துவரினும் அவை கண்ணுக்குப் புலனுகா. ஓசையும் அத்தன்மையதே. இசை, சுரத்தின் எண் வரம்பிற் குறைந்துவரினும் மேற்பட்டுவரினும் செவிக்குப் புல னுகாதொழியும்.[1] இவ்வண்ணமே கடுஞ்செயலின்மையும் ஒரு

[1] பௌதிக தத்துவ ஆராய்ச்சியின் முடிபுகள் சில கொண்டு சுவாமிகள் ஒளி, ஓசையைப் பற்றிச் சொல்லியிருக்கிற விஷயங்களை கூடியவரை தெளி வாக்குவோம். ஒளி நூலார் வானவில்லிற்ருேற்றுகிற சிவப்பு, காவி, மஞ்சள், பச்சை, நீலம், பூநீலம், ஊதா ஆகிய ஏழு வண்ணங்களையும் அடுக்கு வரிக் கண்ணுடி (Diffraction Grating) கொண்டு ஆராய்ந்து 'அவை தன்மை (Quality)யால் வேறுபட்டனவல்ல; அளவு (Quantity) மாத்திரையினுல் வேறுபட்டன,' எனக் கண்டுபிடித்தனர். அங்ஙனமே ஓசை நூலார் சரிகமபதநி ஆகிய ஏழு சுரங்களும் தன்மையால் ஒன்ருகி அளவு மாத்திரையான் விகற்பப்படு கின்றன என்பர். அனல், ஒளி, ஓசை, மின்சத்து, காந்தசக்தி இவற்றின் இயல்பை

தன்மையவாகத் தோன்றுவன ; எதிர்ப்பும் சகிப்பும் பேதமின்றித் தோன்றுவன ; பலவீனனும் சோம்பேறியுமானவன் பகைவர்களை எதிர்க்க இயலாமையால் எதிர்க்காதிருப்பான். வலியவன் மாற்றானை அடிக்கத் தக்கவனாயிருந்தும், பெருந்தன்மையினால் அடிக்காது ஆசி கூறிச் செல்வான். பலவீனத்தினால் எதிர்க்காதிருப்பவன் பாவத்தை இழைக்கிறான் ; அவனுடைய சகிப்பினாற் பயனொன்றுமில்லை. ஆற்றல் படைத்த வீரன் சகிக்காதிருப்பானாயின், பாவஞ் செய்தவனாவான். கௌதம புத்தர் அரசுரிமையை வேண்டாவென்று விட்டுத் துறவு பூண்டார். அது உண்மைத்துறவு. ஒன்றுக்கும் பற்றாத வறியவனுடைய துறவு துறவாகாது. ஆதலால், சாத்துவிகச் சகிப்பு, அன்பு என்னும் மொழிகளை வழங்கும்போது அவற்றின் பொருளை ஆராய்ந்து வழங்குதல் வேண்டும் ; எதிர்க்கக் கூடிய வலிமை நம்மிடம் இருக்கிறதா என்று அறியவேண்டும். வலிமையிருந்தும் அதனை அடக்கி எதிர்க்காதிருப்போமாயின், அன்பு நிலை உடையவர்களாவோம். எதிர்க்க வலியில்லாதிருக்க உள் வஞ்சனையினால் அன்பு காட்டுவது போல நடித்து எதிர்க்காதிருப்போமாயின், பாவிகளாவோம். அருச்சுனன் தன்முன் நின்ற பெரும்படையைக் கண்டு அஞ்சினான் ; அதனால் மனத்திற் பொய்யுருக்கமுண்டாகத் தனது நாட்டுக்கும் தன் அரசனுக்கும் செய்ய வேண்டிய கடமையை மறந்தான். இதனை அறிந்த கண்ணபிரானார் "அருச்சுனா, போலி வேடம் போடாதே ; ஞானிப் போல பேசுகிறாய் ; ஆனால், உன் தொழில்களே, நீ ஏழை மனத்தையுடையவ

ஆராயுமிடத்து இவை யாவும் அலையியக்கத்தினாற் (Wave motion) பரவுகின்றன என்பதை அறிவோம். வீணை நரம்பானது விரைவின் அசைய, அவ்வசைவானது சூழவிருக்கும் பவனத்தைப் பற்றிக் காதினுட் பொருந்திய சவ்வு முரசத்தைச் (Tympanum) சென்று தாக்குகிறது. இத்தாக்குகள் ஒலிநாடிகள் வழியாக மூளையையடைய, நாம் ஒளிக் குறிப்பை உணருகிறோம். ஒரு விநாடிப் பொழுதின் இருபத்து நாலில் ஒரு பங்காகிய ஒரு செக்கண்டில் இருநூற்றைம்பத்தாறு அலைகளினா (Vibration) லெழுந்த சுரம் மத்திய "ச" எனப்படும் ; இதற்கடுத்த "ரி" இருநூற்றெண்பத்தெட்டு என்னும் அளவினது. ஒரு செகண்டுக்கு நாற்பது அலையினைக் கொண்ட சுரம் செவிக்குப் புலப்படும் ; இது சிற்றெல்லை. பேரெல்லை முப்பத்தீராயிரம். இவ்வெல்லைகளுக்கு உட்படாமல், சிற்றெல்லையிற் குறைந்தாவது பேரெல்லையின் மேம்பட்டாவது வருகிற சுரம் செவிக்குப் புலப்படாது. இனி ஒளியலைகளுட் சிற்றெல்லை சிவப்புக்குரியது ; பேரெல்லை ஊதாவுக் குரியது. சிவப்புக்குரிய அளவினிற் குறைந்த எண்ணினை (Frequency) யுடைய (Infra-red waves) அலைகளும் ஊதாவுக்கு உரிய எண்ணின் மேம்பட்ட (Ultra-violet waves) அலைகளும் கண்ணுக்குப் புலனாகா.

னென்பதைக் காட்டுகின்றன; எழுந்து நின்று போர் புரி,'' என்று வற்புறுத்திக் கூறினர்.

நாம் ஆராய்ந்து முடிவு செய்த இதுவே கரும யோகத்தின் உட்கிடக்கை. சாத்துவிகச் சகிப்பே மேலானதென்றும் அதுவே உண்மையாகிய வலிமையை ஆதாரமாகக் கொண்டதென்றும் கருமயோகி அறிவான். ஆயினும், இந்த மேலான நிலையை அடைவதற்கு முதற்படியாகத் தீங்கு செய்வோரை எதிர்த்து வெல்லவேண்டுவது கடமையென்பதையும் கருமயோகி அறிவான். முயன்று போரிட்டு அடிக்குப் பதிலடி கொடுத்து எதிர்க்கக் கூடிய வலிமையை விருத்தி செய்தபின் சாத்துவிக சகிப்புச் சரியானதாகும். ஒருநாள் நான் ஒரு மூடனைச் சந்தித்தேன்; அவன் மிகு மந்தத்தனமுள்ளவனாகவும் அறிவின்மேல் மனஞ்செல்லாதவனாகவும் இருந்தான். கடவுளையறிந்து முக்தியடையும் வழி எதுவெனஅவன் என்னைக் கேட்டான். நான் அவனை நோக்கி, ''உனக்குப்பொய் சொல்லத்தெரியுமா?'' என்றேன். 'தெரியாது' என்றான். ''சரி, முதலாவதாகப் பொய் சொல்லக் கற்றுக்கொள். செயலற்றுக் கட்டை போலவும் வாய் பேசா விலங்கு போலவும் இருப்பதினும் தீமையான தொழிலாயினும் ஒன்று செய்து கொண்டிருப்பது நல்லது; செயலும் கடந்த அமைதி நிலையை அடைவதற்குச் செயல் செய்து முடிக்க வேண்டும்; நீயோ என்றால், ஒரு தீய தொழிலும் செய்தற்கு இயலாத மந்தனாயிருக்கிறாய்,'' என்றேன். நான் அவனுடனே நகைச்சுவை ததும்பப் பேசினேன். எனினும், இதனுள் ஒரு மேலான உண்மையிருக்கிறது. செயல் கடந்த சாராத நிலையை அடைவதற்கு முன் செயல் செய்தே தீரவேண்டும்.

தொழில் செய்யாதிருக்கும் மூட நிலையை எவ்வழியாயினும் அகற்ற வேண்டும். தொழில் செய்தல், ஆராய்ந்து பார்க்குமிடத்து, எதிர்த்தலாகும். மனத்திலோ, சடப்பொருளிலோ இருந்து எழுகின்ற தீமைகளெல்லாவற்றையும் எதிர்த்து வென்றபின் அடக்கநிலை தானாக வந்தடையும். ''ஒருவரையும் பகைக்காதே. தீமை செய்வோரையும் எதிர்க்காதே,'' என்று வாயாற் சொல்லுவது எளிது; செய்வது அரிது. பிறர் நம்மைப் பார்க்கின்றார்களே என்னும் நினைவால் சகிப்பது போலக் காட்டினும், மனமானது எரிந்து கொண்டிருக்குமாயின், நாம் கொண்ட பொய்த் தோற்றம் உண்மைப் பொறுமையாகாது. இந்த நிலையில் மனத்தில் அமைதி இல்லாதிருப்பதை நாம் உணருகிறோம்; எதிர்ப்பது நல்லதென நமக்குத் தோன்றுகிறது. பொருளை

விரும்புகிருயென்று வைத்துக்கொள்வோம். பொருள்மேல் மனஞ் செல்பவன் தீயவன் என உலகத்தார் கொள்ளுகின்ருராதலினுல், மனத்தில் அல்லும் பகலும் பொருளாசையிருப்பினும், அதைப் புறத்தே காட்டாது அடக்கிக் கொண்டிருக்கின்ருய். இது வெற்று வேடம். இதனுல் உறுபயன் ஒன்றும் இல்லை. உலக ஆசைகளினுட்புகுந்து இன்பத்தையுந் துன்பத்தையும் அனுபவித்து முடிந்தபின் துறவும் மன அடக்கமும் உண்டாகும். செல்வம், செல்வாக்கு, அதிகாரம் முதலியவற்றை விரும்பினுல் இவற்றையெல்லாம் முயன்று பெற்று அனுபவித்துத் தீர்க்க வேண்டும். அதன் பின்னரே இவை எல்லாம் அற்பப் பொருள் கள் என்னும் எண்ணம் உண்டாகும்; நுகர்ந்து தீர்த்தாலொழிய அமைதி, அடக்கம், தன்னலங் கருதாமை ஆகிய நிலைமைகள் உண்டாகா. சாந்தநிலை, துறவு நிலைகளைப்பற்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பலரும் சொற்பொழிவு ஆற்றியிருக்கிருர்கள். நாமும் இளம்பருவம் முதலாகக் கேள்வியுற்றிருக்கிருேம்; ஆயினும், உலகில் அந்நிலை அடைந்தவர் ஒரு சிலரைத்தான் காண்கிருேம். நான் பல நாடுகளுக்கும் சென்றிருக்கிறேன்; பூமண்டலத்திற் சரி பாதிக்குமேல் அறிவேன். உண்மையான சாந்த நிலையை அடைந்தவர் இருபது பேரையேனும் கண்டிருக் கிறேன் என்று சொல்வதற்கிடமில்லை.

ஒவ்வொருவனும் தன்னுல் இயலும் ஒரு கொள்கையை மேற்கொண்டு அதனைச் செய்து முடிக்கவேண்டும். தன்னுல் ஒரு போதும் செய்து முடிக்க இயலாத கொள்கையைப் பிறர் சொல்வத ஞல் கைக்கொள்ளின் அது முன்னேற்றத்துக்கு இடமாகாது. ஒரு குழந்தையைப் பார்த்து இருபது மைல் நடக்கும்படி சொன்னுல், அது வழியில் இறந்துவிடும்; ஆயிரத்திலொரு குழந்தை தப்பி இருபது மைலை நகர்ந்து செல்லினும் முடிவில் இளைத்துக் குற்றுயி ராய்விடும். இதை ஆராயாமல் நாம் உலகத்தாருக்கு அறிவுரை வழங்க முன் வரின், பிழையுண்டாகும். மனிதரெல்லோரும் ஒரே தன்மையினரல்லர். அவரது தகுதியும் வலிமையும் ஒரே தன்மை யன அல்ல; ஆதலால், கொள்கைகளும் மாறுபட்டிருத்தல் வேண் டும்; எவருடைய கொள்கையையும் குறை கூறுதல் தகுதியாகாது. ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவரை முயல்வாராக. இனி ஒருவ ரது நிலையைக் கொண்டு மற்றவரை ஆராய்தலும் தகுதியாகாது. இலந்தை மரத்தின் நிலையை நோக்கிப் பாலை மரத்தைத் தீர்ப்பிடு வதும், பாலை மரத்தின் நிலையை நோக்கி இலந்தை மரத்தைத்

தீர்ப்பிடுவதும் சரியல்ல. இலந்தைக்கு இலந்தையும், பாலைக்குப் பாலையுமே தகுதியுள்ளவை.

உலகத் தோற்றத்தை ஆராய்வோமாயின், வேறுபாட்டினிடையே ஒற்றுமையைக் காண்போம். ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாரும் தத்தமக்குள்ளே வேறுபாடுற்றவராயினும், ஆதார நிலையை ஆராயுமிடத்து, ஒற்றுமை புலப்படும். ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையே இருக்கிற சிறப்பியல்புகளும், ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரின் மாறுபட்டுத் தோன்றுவதும் இயற்கையமைப்பின் வேறுபாடுகளேயாம். ஆதலால், ஒரே அளவினால் எல்லாரையும் நிதானிப்பதும், ஒரே கொள்கையை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டுமென்பதும் சரியல்ல. இது இயற்கை மாறுபாடுற்று இன்னலையுண்டாக்கித் தன்னைத் தானே வெறுக்கும்படி செய்து, அறநெறியிலும் நற்றொழிலிலும் செல்வதைத் தடைப்படுத்தும். நமது கடமை எதுவெனில், ஒவ்வொருவரையும் தத்தம் கொள்கைகளைப் பின்பற்றியொழுகுமாறு ஊக்கப்படுத்தி அக்கொள்கைகளைப் படிப்படியாக உண்மை நிலைக்கு அருகில் வரும்படி செய்தலேயாம்.

இக்கொள்கை நமது சநாதன தர்ம நூல்களிலே முன்னாள் தொட்டே கையாளப்பட்டு வந்திருக்கிறது. நமது சுருதி ஸ்மிருதிகளிலும் ஒழுக்க நூல்களிலும் இல்வாழ்வான், சந்நியாசி, பிரமசாரி ஆகிய வேறுபட்ட ஆசிரமத்தினருக்கு வேறுபட்ட விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக எல்லோரும் செய்யவேண்டிய கடமைகளோடு ஒவ்வொருவருக்குஞ் சிறப்பாகவுள்ள கடமைகள் சிலவுள. முதலிலே பிரமசரியம், பின்னர் மனைவியோடு கூடி நடத்தும் இல்லறம், அதன் பின்னர் வானப்பிரத்தம், ஈற்றில் உலக இன்ப துன்பங்கள் அனைத்தையும் விட்டுத்துறந்த சந்நியாசம் ஆகிய ஒவ்வொரு நிலைக்கும் சிறப்பாக உரிய கடமைகள் உள. இந்த நான்கு நிலைகளில் ஒன்று மற்றொன்றின் மேப்பட்டதன்று. துறவுபூண்டு உள்ளொளியை விரியச்செய்யும் சந்நியாசினுடைய நிலையைப் போலவே மனைவியொடு கூடி இல்லறம் நடத்துகின்ற இல்வாழ்வானுடைய நிலையும் சிறந்தது. தெருவிற் குப்பை கூட்டுகிறவன் சிங்காதனத்திலிருந்து அரசு புரிகின்ற அரசனையொத்த பெருமையும் மகிமையுமுடையவன். அரசனைச் சிங்காதனத்திலிருந்து இறக்கி, விளக்குமாற்றைக் கையிற்கொடுத்தால், அவனது வலியின்மை புலப்படும். அங்ஙனமே குப்பை கூட்டுகிறவனது கையிற் செங்கோலைக் கொடுத்தால், அவனது வலியின்மை புலப்படும். உலக

வாழ்க்கையிலிருப்பவனிலும் துறவு பூண்டோன் பெரியவனென்று சொல்லுவது பேதைமையாகும். உலகைத் துறந்து கட்டற்ற வாழ்க்கை நடத்துவதினும் உலகிலிருந்துகொண்டு கடவுளைத் தொழுவது அரிய செயலாகும். மேற்கூறிய நான்கு நிலைகளும் இக்காலத்தில் நமது நாட்டில் இரண்டு நிலைகளாயின. இவை களே இல்வாழ்க்கை சந்நியாசம் என்பன. இல்வாழ்வான் மணம் செய்து உலக வாழ்க்கைக்குரிய கடமைகளை மேற்கொண்டு ஒழுகு கிறான். துறவி கடவுளிடம் மனத்தைச் செலுத்தி அவரைத் துதிப்பதும் அவருடைய பெருமையை விளக்குவதும் தனக்குரிய கடமையாகக் கொள்கிறான்.

மகா நிர்வாண தந்திரம் என்னும் நூலிலிருந்து சில பகுதி களைத் தருகிறேன். இல்வாழ்வான் தன் கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்பது எவ்வளவு கடினமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள் :

இல்வாழ்வான் கடவுளிடத்துப் பக்தி செலுத்த வேண்டும். உண்மை ஞானத்தை அடைதலையே அவன் தனது வாழ்க்கைக் குரிய நோக்கமாகக் கொள்ளவேண்டும் ; ஆயினும், அவன் விடா முயற்சியோடு தன் கடமைகளைச் செய்யவேண்டும் ; அவற்றால் எய்தும் பயனை ஈசுவரார்ப்பணம் செய்யவேண்டும்.

பயன் கருதாது கடமை செய்வது மிகவும் கடினமான காரி யம். கைம்மாறு கருதாது பிறருக்கு உதவி புரிவதும், பேரும் புகழும் கருதாது நன்மை செய்வதும் எளியனவல்ல. உலகம் புகழ்தலை நோக்கிக் கோழை நெஞ்சனும் வீரச் செயல் செய்வ துண்டு. புகழ்ச்சி இகழ்ச்சி முதலியவற்றைக் கருதாது, 'நன்மை கடைப்பிடி' என்னும் உண்மையை மேற்கொண்டு முயலுகிற தியாகமே எல்லாத் தியாகங்களினும் சிறந்தது. இல்வாழ்வான் வயிறு வளர்த்தற் பொருட்டுப் பொருள் ஈட்ட வேண்டும். அங் ஙனம் பொருளீட்டுமிடத்துப் பொய், வஞ்சனை, களவு முதலிய வற்றை முற்றிலும் விட்டுப் பொருளீட்டல் வேண்டும். தான் உயிர் வாழ்வது தனக்காகவன்று ; இறைவனுக்குத் தொண்டு புரிவதற்கும் வறியவர்களுக்கு உதவி புரிவதற்குமேயாம் என்னும் உண்மையினை இல்வாழ்வான் மறந்துபோதல் கூடாது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' என்பதை அறிந்து பெற்றோரை எப்பொழுதும் எல்லா வகையாலும் மகிழ்ச்சியுறச் செய்ய முயலவேண்டும். ஒருவன் தன் நன்னடை யால் தாய் தந்தையரை இன்புறச் செய்வானாயின், அவன்

கடவுளை மகிழச்செய்தவனாவான்; தாய் தந்தையரை எதிர்த்துப் பேசாத பிள்ளையே நல்லபிள்ளை.

தாய் தந்தையர் முன்னிலையில் பரிகாச வார்த்தை பேசுதலும், படபடப்புறுதலும், வெகுளி முதலியவற்றைக் காட்டுதலும் சரியல்ல. தாய் தந்தையரைப் பணிந்தெழுந்து, அவர்கள் முன்னிலையில் நின்று, அவர்கள் இரு என்று சொன்ன பின்பு இருத்தல்வேண்டும்.

தன் தாய் தந்தையர், மனைவி மக்கள், வறியவர் என்றின்னோருடைய குறையை நிறைவேற்றாது தன் உணவையும் உடையையும் பற்றி நினைக்கிற இல்வாழ்வான் பாவத் தொழில் புரிபவனாவான். இந்த உடல் நமக்குக் கிடைத்தது நம் தாய் தந்தையரால்; ஆதலால், ஆயிரம் இன்னல்களுக்கு ஆளாயினும் அவர்களுக்கு வேண்டுவன செய்வதே நமது கடமையாகும்.

இல்வாழ்வான் தன் மனைவியை அன்போடு நடத்த வேண்டும். மனைவியைக் கோபித்துத் திட்டுதல் தகாத காரியம். மைந்தனின் அன்னையாகிய தன் மனைவியைத் தன் சொந்தத் தாய்போலப் பாவித்து அன்போடு நடத்த வேண்டும். எவ்வளவு துன்பங்கள் நேரிடினும் மனைவி மீது சீற்றங்கொள்ளலாகாது.

ஒருவன் தன் மனைவியைத் தவிர வேறு பெண்ணைக் காமுற்றுக் கையிற்றொடுவானெனினும், அவன் மிகவும் கீழான நரகத்தில் புகுவான். பெண்பாலாரது முன்னிலையில் தகாத வார்த்தை பேசலாகாது; தான் பல விஷயங்களிலும் வல்லவன் எனத் தற்புகழ்ச்சி செய்யலாகாது.

இல்வாழ்வான் தன் மனைவிக்குப் பொருள், ஆடை, அன்பு, விசுவாசம், தேனினுமினிய வார்த்தை முதலியவற்றையுதவி, அவளைச் சந்தோஷப்படுத்த வேண்டும். ஒருவிதத்தாலும் அவளைத் துன்புறுத்தல் கூடாது. கற்புடைய மனைவியின் அன்பைப்பெற்ற கணவனுக்கு அறநெறியும் நல்லொழுக்கமும் தாமே வந்தடைவனவாகும்.

மைந்தர் பால் செலுத்த வேண்டிய கடமைகள் :

நான்கு வயதாமளவும் மைந்தனை அன்போடு வளர்க்க வேண்டும்; பதினாறும் வயதாம் வரையும் கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்; இருபதாம் பிராயத்தில் ஒரு தொழிலில் நிலைப்படுத்தித் தந்தை தன் மகனை அன்போடு சமமாக நடத்த வேண்டும்; இவ்வண்ணமே பெண் குழந்தையையும் வளர்த்துக் கவனமாகக்

கல்வி பயிற்றுவித்து, உரிய காலத்திற் பொன்னணி, பொருள் இவற்றைக் கொடுத்து மணஞ்செய்து வைக்கவேண்டும்.

பின்னும் இல்வாழ்வான் தன் சகோதரர், சகோதரிகள், அவர்களுடைய பிள்ளைகள், வறுமையுற்ற சுற்றத்தார், நண்பர், வேலைக்காரர் என்றின்னோர்பால் செலுத்தவேண்டிய கடமைகளும் உள. தன் கிராமத்தார், வறியவர், உதவி கேட்டு வருபவர்களாகிய இவர்களுக்கு உதவ வேண்டுவது இல்வாழ்வானது கடமையாகும். பொருளிருந்தும் சுற்றத்தாருக்கும் வறியவருக்கும் உதவாதவன், மனிதனல்லன்; விலங்கு என்று கருதப்படுவான்.

இல்வாழ்வான் தனது உள்ளத்தையும் உடலையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும், உணவிலும் உடலிலும் அளவு கடந்த பற்று வைத்தலும், மேனி மினுக்குதலும் அதிக கவனத்தொடு தலைசீவிக்கொள்ளுதலும் தகுதியல்ல.

இல்வாழ்வான் தன் பகைவரை வீரத்தோடு எதிர்க்க வேண்டும். இது அவனுக்குரிய கடமை. அப்படிச் செய்வதை விட்டு மூலையிலிருந்து கண்ணீர் சொரிந்து, சாத்துவிகச் சகிப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது சரியாகாது. வீரவானாக எதிர்த்து நின்று தன் பகைவரைத் தாக்காத இல்வாழ்வான், தனது கடமையில் தவறியவனுவான். பகைவரைச் சிங்க ஏறு போலெதிர்த்து, உறவினர் நண்பர் இவர்களுடைய முன்னிலையில் ஆட்டுக்குட்டிபோலடங்கி நடக்கவேண்டும்.

இல்வாழ்வான் தீயவர்களுக்குப் பணிந்து நடத்தல் கூடாது; அங்ஙனம் பணிந்து நடத்தல் தீமையை வளர்த்தலாக முடியும். மரியாதை பெற வேண்டிய நல்லவர்களுக்கு மரியாதை காட்ட வேண்டும். வரம்பு கடந்து கண்டவர்களையெல்லாம் நட்புக் கொள்ளுதல் கூடாது. தான் சினேகிக்க விரும்புகிறவர்கள் பிறரிடத்து எவ்வாறு நடந்துகொள்கிருர்களென்று ஆராய்ந்து அறிந்து, அதன் பின் சினேகிக்க வேண்டும்.

தன் கீர்த்தியைப் பற்றிப் பிறரிடம் தானே வியந்து கொள்ளுதலும், தன் பெயரையும் தன் வலிமையையும் தானே போற்றிக் கொள்ளுதலும், தன் செல்வத்தைப் பிறரிடம் சொல்லுதலும், பிறரொருவர் தன்னிடம் சொன்ன இரகசியங்களை வெளிப்படுத்திக் கூறுதலும் தகாத செயல்களாகும்.

தான் வறியவனென்று சொல்லுதலும், செல்வம் படைத்தவன் என்று தன் செல்வத்தைப்பற்றிப் புகழ்தலும் சரியல்ல. தன் புத்தியைத் தன்னளவில் வைத்துக்கொள்ள வேண்டும்; இதுவே

அறநெறி; இது உலக அறிவு மாத்திரமன்று; இங்ஙனம் செய்யாதவன் ஒழுக்கவீனனாகவும் கருதப்படுவான்.

இல்வாழ்வான் முயச்சியாற் பொருள் திரட்டுபவனாய் அனைவருக்கும் துணையாயிருத்தலினாலே, மக்கட்சமூகத்துக்குத் துணைவனாய்க் கருதப்படுவான். வறியவர், நோயாளர், சிறுவர், பெண்டிர் இவர்களெல்லாம் தமது வாழ்விற்கு இல்வாழ்வானையே சார்ந்திருக்கிறார்கள். ஆதலால், இல்வாழ்வான் செய்யவேண்டிய கடமைகள் சிலவுள; அக்கடமைகளை உறுதியோடு செய்யவேண்டும். தனது நிலைமைக்குக் குறைந்த தொழில்களைச் செய்வதாக ஒருபோதும் நினைத்தல் கூடாது. ஏதாவது தவறு செய்துவிட்டால், அதைப் புலப்படுத்துதல் கூடாது; ஏதாவது தொழிற்றுறையிலிறங்கி அதனால் இழுக்கு வருகிறதென்று கண்டால், அதைப் பிறருக்குச் சொல்லுதல் கூடாது. குற்றங்களை வெளியிட்டுச் சொல்வது நல்லதன்று. அப்படிச் செய்பவன் வலி குன்றித் தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத்தகாதவனாவான். இல்வாழ்வான் வருந்தி முயன்று, அறிவையும் பொருளையுஞ் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். இது அவனுடைய கடமை; இக்கடமையைச் செய்யாதவன் பதராக மதிக்கப்படுவான். வருந்திப் பொருள் தேடாத இல்வாழ்வான், தன் கடமையில் தவறியவனாவான். அவன் மூலமாகத் தமது வாழ்வைப் பெறுவோர் பலராதலினால், அவன் சோம்பலாய் இருத்தல் கூடாது; அவன் பொருள் ஈட்டினால், நூற்றுக் கணக்கான பேர் நன்மை பெறுவார்களன்றோ? இந்த நகரத்தில் நூற்றுக்கணக்கானவர் முயன்று பொருள் தேடியிராவிட்டால், நாகரிகமும், வறியவர்க்கு உணவளிக்கும் பெரிய தரும விடுதிகளும் எங்கிருந்து வருதல் கூடும்?

அறநெறியில் செலவிடுவதற்காகப் பொருள் தேடுவது ஒருபோதும் தவறாகாது. இல்வாழ்வானே மக்கட்சமூகத்தின் உயிர்நிலையமாயிருக்கிறான். நல்ல வழியிற் பொருள் சம்பாதித்து நல்ல வழியிற்செலவிடுதலே அவனுக்கு உகந்த சாதனமாகும். குகையிலிருந்து தவம் புரிகிற சந்நியாசியும், நற்கருமத்தில் செலவிடுவதற்காகப் பொருளீட்டுகிற இல்வாழ்வானும் செய்கிற தொழில்கள் ஒரு தன்மையனவே. இவ்விருபாலாரும் கடவுளுக்கும் அவருடைய தொண்டருக்கும் பணிவிடை செய்தலை மேற்கொண்டு, தமது இன்பத்தை வெறுத்துத் தம்மையே மறந்திருக்கிற நிலைமையினராவர்.

இல்வாழ்வான் எல்லா வகையாலும் நல்ல பெயரைப் பெற முயலவேண்டும். சூதாடுதல், தீயாரோடு பழகுதல், பொய்

சொல்லுதல், பிறருக்கு இன்னல் விளைவித்தல் என்னும் இவற்றை முற்றிலுந் தவிர்க்க வேண்டும்.

தம்மாற் செய்து முடிக்கக் கூடாத காரியங்களில் சிலர் தலையிடுதலுண்டு. இப்படிச் செய்யும்போது சுய நன்மை கருதிப் பிறரை வஞ்சிக்க நேரிடுமாதலால், செய்யவேண்டுவது இதுவென ஆராய்ந்து செய்யவேண்டும். காலமறிந்தும் நடக்க வேண்டும்; ஒரு காலத்திற் சித்தியடையக் கூடிய கருமம், பின்னெரு காலத்தில் அனுகூலப்படாது போதலுமுண்டு.

கிணறு குளந்தோண்டி, மனிதர் செல்லும் பாதையில் நிழல் மரம் நட்டு, மக்களும் விலங்குகளும் ஆறியிருத்தற்கு வேண்டிய சாலைகளையமைத்து, பாதை பாலம் முதலியவற்றைப் புதுக்கி வைக்கிற இல்வாழ்வான், யோகி செல்லுகிற நெறியிற் செல்பவனுவான்.

இவ்வாறெல்லாம் முயற்சி செய்வது இல்வாழ்வானுடைய கடமையெனக் கருமயோகம் கூறுகிறது; பின்னுமோர் இடத்தில் தன்னுடைய தேசத்துக்காவது சமயத்துக்காவது போர்க்களத்தில் முனைந்து நின்று உயிர் துறக்கிற வீரன், தியான மார்க்கத்தினுல் யோகியடைகிற நிலையையடைகிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல், ஓர் ஆச்சிரமத்துக்குரிய கடமை மற்ருேர் ஆச்சிரமத்துக்குரிய கடமை அன்று என்பதும், ஆயினும் இவற்றினிடையே ஏற்றத்தாழ்ச்சியில்லை என்பதும் நன்கு புலப்படுகின்றன.

மேற்சொல்லிய குறிப்புகள் எல்லாவற்றிலும், பலவீனத்தையும் சோம்பலையும் விட்டொழிக்க வேண்டும் என்னும் உண்மை புலப்படுகின்றது. நம்முடைய தத்துவ நூல்களில் உரைக்கப்பட்டிருக்கிற இவ்வுண்மையை அனைவருங் கொண்டொழுக வேண்டும் என்பது எனது விருப்பம். வேதத்தை ஓதும்பொழுது அங்கும் 'அச்சமின்மை' என்னும் மந்திரத்தைக் காண்கிருேம். ஒன்றுக்கும் அஞ்சாதிருத்தல் வேண்டும். அச்சம் பலமின்மைக்கு அடையாளம்; உலகம் நகைக்குமே என்று நினைக்காமல், ஒவ்வொருவனும் தன் கடமையைச் செய்வதிற் கண்ணுயிருக்க வேண்டும்.

உலகைத் துறந்து கடவுளைத் தியானித்துக்கொண்டிருப்பவன், அங்ஙனம் துறவாது உலகத்திலிருந்து உலகத்துக்கு நன்மை செய்து கொண்டிருப்போர் கடவுளைத் தியானிக்கவில்லையென்று கருதுதல் கூடாது. இனி உலகில் மனைவி மக்களோடு கூடிவாழும் மாந்தர், துறவு பூண்டோர் பயனற்றவர்களென்று

நினைப்பதுங் கூடாது. தத்தம் நிலையில் தாம் தாம் பெரியவரே. இதனை ஒரு கதையினால் விளக்குவோம்.

ஓர் ஊரிலே அரசன் ஒருவன் இருந்தான். அவன் தனது நாட்டுக்கு வருகிற சந்நியாசிகளைப் பார்த்து, 'உலகத்தைத் துறந்த சந்நியாசியா, உலகிலிருந்துகொண்டு இல்லறம் நடத்துகிற இல்வாழ்வானா பெரியவன்?'' என்று கேட்பது வழக்கம். சந்நியாசிதான் பெரியவனென்று சிலர் சொன்னார்கள். அவர்களை அரசன் பார்த்துக் காரணமென்னவென்று கேட்க, அவர்கள் தக்க காரணஞ் சொல்லவில்லை. அது பற்றி அரசன் அவர்களை மணம் முடித்துக் கொண்டு வாழும்படி கட்டளையிட்டான். வேறு சில சந்நியாசிகள் இல்வாழ்க்கையே பெரிது என்று இசைந்தார்கள். அவர்களையும் அரசன் காரணங் கேட்டான்; தக்க மறுமொழி சொல்லாமையால் அவர்களையும் மணம் முடித்துக் கொண்டு வாழும்படி கட்டளையிட்டான். ஈற்றில் ஒரு பால சந்நியாசி வந்தார். அவர் அரசனுடைய கேள்விக்கு மறுமொழியாக, "அரசரே, தத்தம் நிலையில் தாம் தாம் பெரியவரே," என்றனர். அதற்கு அரசன், "அங்ஙனமாயின், நீர் காரணங் காட்டி அக்கொள்கையை நிறுவுதல் கூடுமா?" என்றான். "ஆம், நீர் என்னோடு சில நாள் இருப்பீராயின், நான் தக்க காரணங் காட்டி விளக்குவேன்," என்று சந்நியாசி விடை பகர்ந்தார். அரசனும் அதற்கிணங்கிச் சந்நியாசியைப் பின்றொடர்ந்து தனது நாட்டினை விட்டுச் செல்வானாயினான். இருவரும் பல தேசங்களையும் கடந்து ஒரு பெரிய நாட்டின் எல்லையுட்புகுந்தனர். அவர்கள் சென்ற நாளில் இராசமா நகரிலே ஒரு பெரிய ஆடம்பரம் நடந்துகொண்டிருந்தது. அரசனும் சந்நியாசியும் மேள வாத்தியங்களின் ஓசையையும் முரசுகளின் பேரொலியையுங் கேட்டு உட்சென்று, என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டு நின்றனர். மக்கள் அழகிய ஆடைகள் அணிந்து தெருவிற்சென்று கொண்டிருந்தார்கள். அந்நகரத்து அரசனுடைய மகள் சபையிற் குழுமியிருக்கிற ஆடவர்களுள் ஒருவனை மணவாளனாகத் தெரிந்துகொள்ளப் போவதாகக் கட்டியக்காரன் உரத்துக் கூறிக்கொண்டிருந்தான்.

அரசிளங்குமரிகள் தங்கள் நாயகரைத் தாங்களே வரித்துக் கொள்ளுகிற வழக்கம் முற்காலத்தில் நமக்குள் இருந்தது. சிலர் அழகனை விரும்புவர். சிலர் கல்விமான்மேற் காதல்கொள்ளுவர். பின்னும் ஒரு சிலர் பணக்காரன்பாற் பற்று வைப்பார். இவ்வாறு ஒவ்வோர் அரச குமாரியும் தன்னுடைய கணவன் இத்தன்மை

யனாக இருக்கவேண்டும் என்று மனத்திற் குறிப்பு வைத்திருப்பாள். அயல் நாடுகளிலிருக்கிற அரசிளங்குமரர் எல்லோரும் அழகிய ஆடைகளை உடுத்து, அவையில் அரசகுமாரியின் முன்னிலையில் வந்திருப்பர். சிலர் தமது புகழின் மாட்சியை எடுத்துச் சொல்லுவதற்கும், இன்ன இன்ன காரணங்களால் அரசகுமாரி தம்மை விரும்ப வேண்டும் என்பதை வெளிப்படுத்திச் சொல்லுவதற்கும் தம் கட்டியக்காரர்களை உடன்கொண்டு வந்திருப்பார்கள். இராச குமாரத்தி சிறந்த ஆடை அணிகலன்கள் பூண்டு பல்லக்கில் வருவாள். அவள் கண்டுங் கேட்டும் உணர்ந்தவற்றால், தன் முன்னிருக்கும் அரசகுமாரன்மேல் மனஞ் செல்லாவிடில், பல்லக்குச் சுமப்போரைப் பார்த்து அப்பால் நடந்து செல்லும்படி கட்டளையிடுவாள். இங்ஙனம் கழிக்கப்பட்டவனைப் பின்னர்க் கருதுவதில்லை. யாவனொருவன்மீது அரசகுமாரியின் உள்ளஞ் செல்லுகிறதோ, அவன் கழுத்தில் ஒரு பூமாலையைச் சூட்டி அவனை நாயகனாகக் கொள்வாள்.

நம் அரசனும் சந்நியாசியும் போயிருந்த நாட்டின் அரசகுமாரிக்கு இவ்வாறு ஆடம்பரங்களோடு சுயம்வரம் நடந்து கொண்டிருந்தது. அவள் பூமண்டலத்திலுள்ள ஏனைய அரசகுமாரிகளினும் அழகில் சிறந்தவள்; தந்தையாகிய அரசனிறந்த பின்பு இராச்சியம் அவள் மணவாளனுக்கு உரியதாகும். இராசகுமாரிக்குக் கண்ணுக்கினிய காதலனைத் தெரிந்துகொள்வது விருப்பம். ஆனால், தக்க வரன் கிட்டவில்லை. இக்காரணங்களால் முன்பு பலமுறை இவ்வாறே கூட்டங்கள் கூடியும் காரியம் நடந்தேறவில்லை. முன்னடந்த கூட்டங்களினும் இம்முறை நடந்த கூட்டத்திற்கு பற்பலர் வந்திருந்தனர். அரசகுமாரியோ, அவையிலிருந்தவருள் ஒருவரையும் பொருட்படுத்தியதாகத் தோற்றவில்லை. அவையோரனைவரும் வாடிய தோற்றத்தோடிருந்தனர். அத்தருணத்தில் வானுலகத்தில் செல்லும் இளங்கதிர்ச் செல்வன் மண்ணிலிழிந்து வந்தது போலப் பேரழகு வாய்ந்த இளஞ்சந்நியாசி ஒருவர் வந்து கூட்டத்தில் ஒரு பக்கம் ஒதுங்கி நின்றார். பல்லக்கு அவரண்டை வருதலும், அரசகுமாரி மாலையையெடுத்து அவருடைய கழுத்திற் சூட்டினாள். அவர் அம்மாலையை வீசியெறிந்து, "என்ன பேதைமை; நான் சந்நியாசி; எனக்கு மணம் எதற்கு?" என்று சொல்லி நின்றார். அரசன் பார்த்து, "வறுமை காரணமாக இவ்விளைஞர் மணவினையை மறுக்கிறார் போலும்!" என்றெண்ணி, "என்னுடைய மகளோடு எனது நாட்டிற்பாதியை இப்போதே தருகிறேன்;

எனக்குப் பின் நாடு முழுவதும் உமக்கு உரிமையாகும்,'' என்று சொல்லி மாலையை மீட்டும் அணிந்தான். இளைஞர் பின்னும் அதை வீசி யெறிந்து, "வீண் வார்த்தை பேசாதீர்கள்; எனக்கு மணம் வேண்டா,'' என்று சொல்லி அவையை விட்டு விரைவாக நடந்து சென்றார்.

அரசகுமாரியோ மிகவுங்காதல் கொண்டவளாய், "இந்த அழகனை மணப்பேன்; அல்லாவிடின் இறப்பேன்,'' என்று சபதம் செய்துகொண்டு, பின் தொடர்ந்தாள். அப்பொழுது நம் முந்திய சந்நியாசியார் அரசனைப் பார்த்து, "வாரும், நாம் இவ் விளைஞர் இருவரையும் தொடர்ந்து செல்வோம்,'' என்று அரசனுடன் சற்றுத் தூரத்திற் பின்றொடர்ந்தனர். அரச குமாரியை மணம் முடிப்பதற்கு மறுத்த சந்நியாசி, விரைவாக நெடுந்தூரம் நடந்து, நாட்டினைக் கடந்து, காட்டினுட்புகுந்தார். மன்னன் மகளும் அருகில் தொடர்ந்தாள். மற்றையோரிருவரும் சிறிது தூரத்திற் பின் சென்றனர். முன் சென்ற இளஞ்சந்நியாசி அக் காட்டினை நன்றாக அறிந்தவராதலால், ஒற்றையடிப் பாதை வழியே உட்புகுந்து மறைந்து விட்டார்; இராசகுமாரி அவரைக் காணாது தயங்கி நின்றாள்; நெடுநேரம் தேடியும் காணாதவளாய், ஒரு மரத்தின் கீழ், கண்ணீர் சொரித்துகொண்டிருந்தாள்; வெளி வருவதற்கும் வழி தெரியாது மயங்கினாள். நம் சந்நியாசியாரும் அரசனும் அவளண்டை வந்து, "அழாதே; வனத்திற்கு வெளியே செல்லும் வழியை நாங்கள் காட்டுகிறோம்; இப்பொழுது இருள் மிகுந்திருக்கிறது; இதோ ஒரு பெரிய மரம் இருக்கிறது. இதன் கீழ் இளைப்பாறியிருந்து இராப்பொழுதைக் கழிக்க லாம்; அதிகாலையில் வழியைக் காட்டுகிறோம்.'' என்று சொன்னார்கள்.

குறித்த மரத்தின் கிளையிலுள்ள ஒரு கூட்டிலே ஒரு சிறு பறவையும், அதன் பேடும் மூன்று குஞ்சுகளும் வசித்து வந்தன. பறவை மரத்தின் கீழிருக்கிற மூவரையுங்கண்டு தன் பேட்டை நோக்கி, "என் பிரியமே, நாம் யாது செய்வோம்? நமது வீட்டுக்கு விருந்தினர் மூவர் வந்திருக்கின்றனர். காலமோ, மழைக் காலம்; அவர்கள் குளிர் காய்வதற்குத் தீயுமில்லையே!'' என்று சொல்லிப் பறந்து போய் எரிந்துகொண்டிருந்த ஒரு விறகுத் துண்டைக் கொண்டு வந்து மரத்தின் கீழிருந்தோர் முன்னிலையிற்போட்டது. அவர்கள் அதனோடு சுள்ளிகளையும் விறகுத் துண்டுகளையுஞ் சேர்த்து வைக்க, விரைவில் சுடர்விட்டெழும் நெருப்புண்டாயிற்று. பறவை பின்னும் தன் பேட்டை நோக்கி,

"அன்புக்குரியாய், நாம் யாது செய்யலாம்? இவர்கள் பசித்திருக்கிறார்கள்; உண்ணும்பொருட்டுக் கொடுப்பதற்கு நம்மிடம் உணவுப் பொருள் ஒன்றுமில்லையே! வீட்டுக்கு வந்தவர்களுக்கு விருந்தளிப்பது இல்வாழ்கின்ற நமக்குரிய கடமையல்லவா? இயன்றதைச் செய்ய வேண்டும்; நான் என் உடலை இவர்களுக்குக் கொடுக்கப் போகிறேன்," என்று சொல்லிக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த தீயில் விழுந்து இறந்தது. அங்கிருந்த மூவரும் அதனைத் தீயினின்றுத் தப்புவிக்க முயன்றும் முடியவில்லை.

தனது சேவல் இறந்ததைக் கண்ட பெண் பறவை, "வந்திருக்கிற விருந்தினரோ மூவர்; ஒரு சிறு பறவையின் ஊன் அவர்களுக்குப் போதுமோ? போதாது. பின்னும் என் நாயகன் செய்கிற நற்கருமங்களுக்குத் துணையாக நிற்பது மனைவியாகிய எனக்கு உரிய கடமை. ஆதலினால், எனது உடலையும் இவர்களுக்குக் கொடுப்பேன்!" என்று தனக்குள்ளே ஆலோசித்துத் தீயில் விழுந்து மாண்டது. தந்தையும் தாயும் இறந்ததைக் கண்ட குஞ்சுகள், "பெற்றோர் செய்த நற்கருமங்களை நிறைவேற்றுவது பிள்ளைகளுடைய கடமையன்றோ?" என்று தாமும் தீயில் விழுந்து இறந்தன.

மரத்தின்கீழிருந்த மூவரும் அப்பறவைகளின் அருஞ்செயலைக் கண்டு, மனம்நொந்து, உணவு கொள்ளாமல் இராப்பொழுது முழுதினையுங் கழித்தனர். காலையில் எழுந்து இராச குமாரியை அவள் தந்தையினிடம் கொண்டுபோய் விட்டு நம் சந்நியாசியாரும் அரசனும் வழி செல்வாராயினர்.

அப்பொழுது சந்நியாசியார் அரசனை நோக்கி, "அரசரே, பார்த்தீரா! தத்தம் நிலையில் தாம் தாம் பெரியவரே. இல்வாழ்க்கையிலிருப்பதாயின், அந்தப் பறவைகளைப் போலப் பிறர் நலங்கருதித் தமது உயிரையுங் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். உலகத்தைத் துறப்பதாயின், அழகிய கன்னிகையையும் பெரிய இராச்சியத்தையும் ஒரு பொருளாகக் கருதாத அந்தப் பால சந்நியாசியைப்போல இருக்க வேண்டும். இல்வாழ்வான் தனது பொருளை மாத்திரமன்றி, உயிரையும் பிறருடைய நன்மைக்காகக் கொடுப்பதற்குச் சித்தமாயிருத்தல் வேண்டும். துறவியானவன், அழகிய நங்கையரையும் செல்வம் செல்வாக்குகளையும் மறந்துங் கருதலாகாது. தத்தம் நிலையில் தாம் தாம் பெரியவரே ஒரு நிலைக்குரிய கடமைகள் மற்றொரு நிலைக்குரிய கடமைகளாகா," என்று கூறினார்.

அமரருள் உய்க்கும் அடக்கம் நிலையும்
வினைபுரி இயக்கமும் வினையொழிந் தயர்ந்த
மூடமு மாகிய முத்திற நிலையும்
யாங்கணு முளவெனுஞ் சாங்கிய நூலே. 1

நிலவே றுதலி னீள்புவி யிடையே
பலவே றகிய வொழுக்கம் பயிலும். 2

சத்துவ குணஞ்சார் சகிப்புமே லெனினும்
அத்திற மிலாதார்க் கதுவின் றாதே. 3

ஆற்ற லுடையான் அடங்குத லினிதே;
சீற்றங் கொண்ட திறனிலா னடக்கம்
வஞ்சப் பொய்யென மதித்தன ருரவோர். 4

துய்ப்பன துய்த்தோன் துறத்த லியல்பே. 5

ஈங்கிவர்க் கிதுதக வெனவா ராய்ந்தோர்
ஆங்கவர்க் கதனை யமைப்பது மரபே;
செங்கோல் செலுத்தலுந் தெருவினிற் குப்பை
தங்கா தகற்றலுந் தம்முளொப் பனவே. 6

ஈன்றோர்ப் பேணி, இனியன புரிந்து,
வான்றோய் கடவுள் மலரடி நினைந்து,
வாழ்க்கைத் துணைவி மகிழ்ச்சிமீ தூரப்
பொன்போற் புதல்வரைப் போற்றி, அன்பாற்
சுற்றந் தழீஇ, உற்றநட் பாளர்
வறியோர்க் குதவி மாண்பொரு ளீட்டி,
ஆதுலர் சாலை யாதிய அறங்கள்
தீதில நிறுவிச் செறுநர்த் தடிந்து,
நல்லோர்ப் பரவும் நலத்தினன்; அல்லோர்
தம்வயிற் சாரான்; தன்புக ழுரையான்;
தொல்லியல் வழாஅத் தூயோ னவனே,
இவ்வாழ் வானென இசைத்தனர் நூலோர். 7

அச்சம் பொச்சாப் பகற்றுதல் கடனே. 8

ஓடும் பொன்னு மொப்ப நோக்கி,
மாதரைத் தாயென மதிக்குந் துறவும்,
பிறர்க்கிதம் புரியத் தம்முயிர் வழங்கும்
அறத்திற மறிந்தோர் அகத்துறை வாழ்க்கையும்,
தம்மி லொக்குந் தகைமைய வாதலின்
இல்வாழ் வாரிவர், துறவோ ரிவரென,
ஏற்றத் தாழ்ச்சி யியம்புதல் வேண்டா;
தத்தம் நிலையிற் றம்பெரி யவரே. 9

மூன்றும் அதிகாரம்

கருமசாதனை இரகசியம்

பிறருக்கு உதவி செய்யுமிடத்து உடலுக்கு வருகிற துன்பங்களைக் களைதல் சிறந்த உதவியாகும்; அவ்வுதவியும் அளவுக்கும் எல்லைக்குந் தக்கபடி பெரிதாக மதிக்கப்படும். ஒரு நாழிகைப் பொழுதுக்கு ஒருவருடைய துன்பத்தைக் களைதல் உதவிதான்; ஓர் ஆண்டிற்குக் களைதல் பேருதவியாகும்; தலையெடுக்காமல் களைந்துவிடுதல் அளவு கடந்த உதவியாகுமல்லவா? துன்பங்களை முற்றிலும் ஒழித்துவிடும் ஆற்றலுடையது மெய்ஞ்ஞான அறிவு. ஏனைய கலைநூலறிவு கால வரையறைப்பட்ட இன்பத்தைத் தருவது. மெய்ஞ்ஞான அறிவுகொண்டு துன்பத்துக்கெல்லாம் காரணமாயிருக்கிற ஆசையை வேரோடு அறுத்துவிடலாமாதலால், அத்தகைய பெருமை வாய்ந்த மெய்ஞ்ஞான அறிவைக் கொடுப்பதே எல்லாவற்றினும் மேலான கொடையாகும். ஆதலால், ஞானாசிரியனே உலகத்திற்குப் பேருதவி புரிவோனுவன். ஆன்ம ஞானத்தைத் தந்துதவுபவர்களே உலகத்தில் மிகுந்த வலிமைபடைத்துச் செல்வாக்குள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில், ஆன்மஞானமே செய்தொழில் அனைத்தினுக்கும் ஆதாரமாயிருக்கிறது. ஆன்மஞான வலிமை பெற்றவன் விரும்பினுல், மற்றெல்லா இன்பங்களையும் பெறுதல் கூடும். மேலாகிய அவ்வலிமையைப்பெறும் வரையும் உடலுக்குள்ள குறையையும் நிறைவு செய்தல் கூடாது. கல்வியறிவினை உதவுதல் ஆன்ம ஞானக் கொடைக்கு அடுத்தபடியாக எண்ணப்படும்; என்றும் உணவும் உடையும் கொடுப்பதைப்பார்க்கிலும் அது எத்தனையோ மடங்கு உயர்ந்தது. ஆராய்ந்து பார்க்குமிடத்துக் கல்வியே உயிர்; அறியாமையே மரணம். மேலும், கலையறிவு இல்லாதவன் இருளடைந்த வழியில் திகைப்பவன் போலப் பேதைமையாலும் துன்பத்தினுலும் மூடுண்டு, இன்னலுற்ற வாழ்வு நடத்துகிறுனதலால், உயிர் கொடுப்பதினும் கல்வியையளிப்பதே மேலான கொடையாகும். உடலுக்கு உதவி புரிதல் கல்வியறிவைஅளிப்பதற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்படும். ஆதலால், பிறருக்கு உதவி புரிய நினைக்குமிடத்து உடல் உதவியே புரியத் தக்கது என்று எண்ணுதல் தவறு. அது

கடையாய உதவி ; ஏனெனில், அது நிரம்பிய இன்பத்தைத் தாராதாதலின். பசி வரும்போது உண்டாகிற துன்பம் உணவு உட்கொண்டவுடனே நீங்குகிறது. ஆனால், சிறிது நேரத்திலே திரும்பவும் அந்தத் துன்பம் உண்டாகிறது : ஆதலால், துன்பத்தை ஒழிப்பதற்குக் குறைவு ஒரு போதும் நேரிடாத நிலையை அடையவேண்டும். அந்த நிலையை அடைந்த பின் பசி நம்மைத் துன்புறுத்தாது ; ஒரு வகை இன்னலும் நம்மை அசைக்க மாட்டாது. ஆதலால், ஆன்ம சக்தியை உண்டாக்கும் உதவி தலையாயதாகவும், கல்வியறிவைத் தருதல் இடையாயதாகவும், உடல் உதவி கடையாயதாகவும் கருதப்படும்.

மனிதனுடைய உள்ளத்தன்மையாகிய குணம் தூய்மையடையும் வரையும், குறைவும் அதனால் காரியப்பட்ட துன்பமும் மாறாமல் வந்துகொண்டேயிருக்கும் ; ஆதலால், உடலுக்கு மாத்திரம் உதவி புரிவதனால் உலகத்திலுள்ள துன்பங்களை அகற்றுதல் இயலாது. மனித இனத்தினரை உள்ளும் புறமும் தூய்மையுள்ளவர் ஆக்குதலே துன்ப நீக்கத்துக்கு உரிய வழியாகும். தீமைக்கும் : துன்பத்துக்கும் அறியாமையே பிறப்பிடமாவது. ஆதலால், அறிவொளியைப் பரவச் செய்வோம் ; மனித இனத்தினரைப் புனிதராகவும் கல்விமான்களாகவும் ஆன்ம சக்தி வாய்ந்தவர்களாகவும் செய்துவைப்போம். அப்பொழுது தான் உலகிலுள்ள துன்பம் நீங்கும் ; அதற்கு முன் நீங்காது. நாட்டிலுள்ள வீடுகளையெல்லாம் அறக் கூழ்ச் சாலையாக்கி, பார்த்தவிடமெங்கும் மருந்துச் சாலையைக் கட்டிவைத்தாலும், மனிதனுடைய குணம் நல்வழிப்படும் வரையும் துன்பம் நீங்காது.

ஸ்ரீ பகவற்கீதையிற் பலவிடங்களில், இடைவிடாது கருமஞ் செய்துகொண்டிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இனிக் கருமமும் நன்மையும் தீமையும் ஒருங்கு கலக்கப்பெற்றது. யாதேனும் ஓரிடத்துச் சிறிதாவது நன்மை பயவாத கருமம் இல்லை ; அவ்வாறே யாதேனும் ஓரிடத்துச் சிறிதாவது தீமை பயவாத கருமமுமில்லை ; ஆகவே, நன்மை தீமையாகிய இரண்டும் கலப்புறாத கருமம் இல்லையாகிறது. இடைவிடாது கருமஞ்செய்துகொண்டிருக்க வேண்டுமென்பது கீதையின் கட்டளை. நற்கருமத்தினால் நன்மை உண்டாகிறது ; தீக்கருமத்தினால் தீமையுண்டாகிறது. நன்மை தீமையாகிய இரண்டும் ஆன்மாவைக் கட்டுப்படுத்துகின்றன. இவ்வகை எழுந்த பந்தம் ஆன்மாவைப் பற்றாது தப்புவதற்கு உரிய இரகசியத்தை

யும் கீதை வெளியிடுகின்றது. பயன் நோக்காக் கருமஞ் செய்வதே இந்த இரகசியம். செய்கிற கருமத்திற் பற்று வையாது செய்வோமாயின், அதனால் எய்துகிற பயன் நம்மைப் பற்ற மாட்டாது. கீதையின் பெரும்போதனையாகிய இந்த 'நிஷ்காமிய' முறையின் இயல்பைப்பற்றி மேலும் ஆராய்வோம்.

'சம்ஸ்காரம்' என்னும் மொழியின் பொருளை 'அபேத மாகிய உள்ளச்சார்பு' என ஒருவாறு குறிக்கலாம். மனமாகிய குளத்தில் கருமமாகிய கல் விழ எழுந்த சிற்றலைகள் முற்றிலும் அழிந்து போகாமல், தாம் திரும்பி வருவதற்கு அறிகுறியாக அடையாளங்களை விட்டுச் செல்கின்றன. இவ்வடையாளங் களே சம்ஸ்காரங்களாவன. நாம் செய்கிற ஒவ்வொரு தொழிலும், உடலின் ஒவ்வோர் அசைவும், நினைக்கிற ஒவ்வொரு நினைவும் மனத்தில் சம்ஸ்காரங்களைப் பதியச் செய்கின்றன. இவை புறத்தே தோற்றுவதற்குத் தக்க வலிமையில்லாதிருப்பினும், அடங்கியிருந்து தொழில் செய்யும் இயல்பின. இந்த நிமிஷத் தில் நான் இருக்கும் நிலைமை இதற்கு முன்பாக நான் செய்து கொண்ட சம்ஸ்காரங்கள் அனைத்தினாலுங் காரியப்பட்டது. இவ்வாறு காரியப்பட்ட நிலைமையே எனது தன்மை எனப்படும். ஒவ்வொருவனது தன்மையும் அவனவன் செய்துகொண்ட சம்ஸ் காரங்களின் பயனாக ஏற்பட்டது. நல்ல சம்ஸ்காரங்கள் கூடி யிருப்பவன் நல்லவனாவான்; தீய சம்ஸ்காரங்கள் கூடியிருப்ப வன் தீயவனாவான். தீய சொற்களைப் பேசித் தீய எண்ணங்களை எண்ணித் தீய செயல்களைப் புரிகிற மனிதனுடைய உள்ளம் தீய சம்ஸ்காரங்களால் நிறைந்திருக்கும். இவ்வாறு உண்டாகிய தீய சம்ஸ்காரங்கள் அவனை அறியாமலே, அவனது நினைவையுந் தொழிலையும் தம் வயப்படுத்தும் ஆற்றலுடையன. இவை இடைவிடாது தொழில் செய்து கொண்டிருக்கின்றன. இவற்றி னால் விளைவது தீமையேயன்றி, நன்மையாகாது. அந்த மனித னும் தீயவனாவான். மனத்தில் நிறைந்திருக்கிற தீய சம்ஸ் காரம் தீமைக்கே இழுத்துச் செல்லும்; இதைத் தடுக்க அவனால் இயலாது. தனது தீய சம்ஸ்காரங்களின் தொகுதியினாலே உந்தப்பட்டு, செல்லும் வழி செல்லுகிற இயந்திரம் போலத் தன்னாற்றலின்றித் தீய தொழில்களைச் செய்துகொண்டிருப்பான். இவ்வாறே, ஒருவன் நல்ல எண்ணங்களை எண்ணி நற்றொழிலைப் புரிவானாயின், நல்ல சம்ஸ்காரங்கள் தோன்றும். இவற்றின் பயனாக அம்மனிதனும், தன்னையறியாமல் நற்றொழிலிலே ஈடுபட் டுக்கொண்டிருப்பான். ஒருவன் பல காலமாக நற்றொழிலே

செய்து, நல்லெண்ணங்களையே மனத்திற் கொண்டிருப்பானு யின், பின்னொரு காலம் அவன் தீமை செய்ய முயன்றாலும், அவன் உள்ளத்தில் அமைந்திருக்கிற நல்ல சம்ஸ்காரங்கள் அவனைத் தீய வழியிற் போக விடா. அவன் எப்போதும் நல்லவனாகவேயிருப்பான். இந்த நிலையையடைந்த மனிதனை நன்மையில் நிலைப்பட்டவனென்னலாம்.

ஆமையானது தன் கால்களையுந் தலையையும் உள்ளிழுத்த பின், அதனைக் கொன்றாலும், அதனுடைய ஓட்டைச் சுக்கல் சுக்கலாக உடைத்தாலும், வெளிப்படாதிருப்பது போலத் தனது மனத்தையும் புலன்களையும் அடக்கிய மனிதனுடைய தன்மை யானது மாறாது நிலைபெற்று நிற்கும். அவன் தனது உள்ளிந் திரியங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவனாதலால், அவனு டைய சித்தமின்றி அவனை அசைக்க முடியாது. நல்ல நினைவு கள் நற்செய்கைகளை விளைக்க, நல்ல சம்ஸ்காரங்களுண்டாகி நன்மை செய்வதற்கு விரும்பி நிற்கிற நிலையில், மனம் வலி யடைந்து, புலன் அடக்கம் செய்யும் ஆற்றல் உடையதாகிறது. இவ்வாறு நன்மைத் தன்மையில் வேரூன்றிய மனிதன் உண் மையை அடைகிறான். அவனை யாருடைய கூட்டுறவில் வைத் தாலும் அவனுக்குத் தீங்கு நேரிடுவதில்லை. இந்த நன்மை நிலையிலும் மேலான நிலையொன்றுண்டு. அது முக்தியை விரும் பும் இச்சையாகிய முமுக்ஷுத்துவம். முத்தியே யோகத்தினால் எய்தும் பயன் என்பதை மறந்து போதல் கூடாது. யோகங்கள் அனைத்தும் தனித்தனி இந்த முடிபையே கருதிச்செல்கின்றன. கௌதம புத்தர் தியானத்தினாலும் கிறித்து பக்தியினாலும் அடைந்த நிலையைக் கரும யோகத்தினாலே மனிதன் அடைதல் கூடும். ஆனால், முக்தியென்பது நன்மை தீமையாகிய இரு வகைத் தளைகளினின்றும் விடுதலையடைதல். இரும்புச் சங் கிலியைப் போலவே, பொற்சங்கிலியும் தடுக்கும் ஆற்றலுடை யது. விரலில் ஒரு முள் தைத்திருக்குமாயின், நான் அதனை மற்றொரு முள்ளால் எடுத்துப் பின்னர் இரண்டு முட்களையும் தூர எறிந்துவிடுகிறேன். எடுத்த முள்ளும் எடுபட்ட முள்ளைப் போன்ற முள்ளே. ஆதலால், அதனையும் வேண்டேன். தீமைப் பதிவுகளை நன்மைப் பதிவுகளால் மேற்கொண்டு, தீமையினா லுண்டாகிய களங்கங்களை நன்மையினால் ஒழித்து, தீமை அகன்ற பின், அல்லது முற்றாகக் கட்டுப்பட்ட பின், நன்மையை யும் வெல்ல வேண்டும். இதனால் 'பற்றுவைத்திருந்தமை' நீங்கிப் 'பற்றறுதல்' உண்டாகிறது. தொழில் செய்; ஆனால்,

அது மனத்தைத் திரியச் செய்யா வண்ணம் பார்த்துக்கொள் சிற்றலைகள் எழுந்து மடியுங்கால் பெருஞ்செயல்களை நமது கையுங் மூளையும் செய்வனவாக ; அவற்ருலாகிய சம்ஸ்காரங்கள் மனத்தைப் பற்ரு வண்ணம் விழிப்பாக இருப்போமாக.

இதனை எங்ஙனம் செய்து முடித்தல் கூடும் ? ஆராய்ந்து பார்ப்போமாயின், நாம் எவ்வெச் செயல்களிற் பற்று வைக்கிருேமோ அவ்வச்செயல்களாலாகிய சம்ஸ்காரம் நமது மனத்திற் பதிந்து கிடக்கிறது எனக் காண்போம். இன்றைப் பகலில் நூறு பேரை நான் சந்தித்திருத்தல் கூடும் ; அவருள் ஒருவன் எனது அன்புக் குரியவன். இரவில் தனித்திருக்கும்போது, பகற்பொழுதிற் கண்ட முகங்களை யெல்லாம் மனம் நினைவுக்குக் கொண்டுவர முயல, என் அன்பனுடைய முகமே தோன்றுகின் றது ; ஏனைய முகங்களெல்லாம் மறைந்து போகின்றன. அன்பனுடைய முகத்தை ஒரு கணப்பொழுதுதான் கண்டிருத்தல் கூடும் ; ஆயினும், அவன்மேற் கொண்ட பற்றுக் காரணமாக, மற்றைய முகங்களினும் அவனுடைய முகவடிவம் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது ; உடல் தத்துவப்படி ஏனைய முகங்களும் கண்ணின் கருவிழியில் பட்டு ஒளிநாடி வழியாக மூளையை அடைந்து மனத்திற்பதிந்தன. ஆயினும், அவற்ருல் உண்டாகிய பதிவு அவ்வளவு வலிமை பெறவில்லை. நான் பார்த்த முகங்களுட் பல, முன்னெரு போதும் நினைத்திராத புதிய முகங்கள் ; இந்த ஒருமுகமோ, பல முறை பயின்ற முகம். பல ஆண்டுகளாக என் அன்பனை நினைத்து அவனைப் பற்றிப் பல விஷயங்கள் அறிந்திருந்தேனுதலால், இப்பொழுது கண்ட காட்சி மனத்தில் மறைந்து கிடந்த நூற்றுக் கணக்கான நினைவுகளைத் தட்டி எழுப்பிவிட்டது. மற்றைய முகங்கள் அனைத்தையுந் திரட்டிய கூட்டுத் தொகையைப்போல நூறு மடங்கு சம்ஸ்காரங்கள் இந்த ஒரு முகத்தினுல் ஆயினமையால், இது மனத்திற் பதித்திருக்கும் பதிவும் பெரிதாயிற்று.

ஆதலினுல், ' பற்று நீக்கத் ' தோடு கருமஞ் செய்ய வேண்டும். இடைவிடாது முயற்சி நடந்துகொண்டிருக்கட்டும். மூளை நரம்புகள் தொழில் செய்யட்டும். ஆனுல், தொழிலினுல் ஏற்படுகிற சம்ஸ்காரம் மனத்தை வெல்லாமற் பார்த்துக்கொள்வோம். இவ்வுலகத்துக்கு நீ அயலான் ; யாத்திரை செய்துவிட்டுப் போக வந்தவன் என்ற நினைவினேடு செய்யுந் தொழில்களையெல்லாஞ் செய் ; இடைவிடாது வேலை செய் ; ஆனுல், உன்னை நீயே கட்டுப்படுத்திக்கொள்ளாதே ; கட்டுப்பாடு கொடியது. இந்த

உலகம் நமக்கு நிலையான வாழ்விடம் அன்று; இது நாம் கடக்க வேண்டிய பல படிகளுள் ஒன்று. ‘பிரகிருதி முழுவதும் ஆன்மாவுக்காக ஏற்பட்டது. ஆன்மா பிரகிருதிக்காக ஏற்படவில்லை,’ என்று சாங்கியர் கூறுகிற பெரு மொழியை மறந்து போகாதே. பிரகிருதியினுல் ஆகிய உலகம் ஆன்ம முன்னேற்றத்திற்காக ஏற்பட்டிருக்கிறது; வேருென்றிற்காக அன்று. பிரகிருதியோடு சம்பந்தப்படுவதனுல், ஆன்மா அறிவினைப் பெற்று, அவ்வறிவினுல் மோக்ஷத்தையடைகிறது. இதனை நாம் என்றும் நினைத்திருப்போமாயின், பற்று வைக்கமாட்டோம். பிரகிருதி முழுவதும் படிப்பதற்குப் பயன்படக்கூடிய ஒரு நூல் போல இருக்கின்றது; படிப்பு முடிந்த பின் நூலினுல் பயனென்ன ?

இப்படி இருந்தும், நாம் தவருக நம்மைப் பிரகிருதிக்கு உரியவர்களாக மதித்தும், ஆன்மா பிரகிருதிக்காக ஏற்பட்டது என்றெண்ணியும், உயிர் வாழ்வது உடலுக்காகவென நினைத்தும், மனிதன் உயிர் வாழ்வதற்கு உண்ணுகிருன் என்பதை மறந்து, உண்ணுதற்கு உயிர் வாழ்கிருன் என்று எண்ணியும் அலைகிருேம். இந்தப் பிழை யெண்ணத்தினுல் நாம் பிரகிருதியின் வேறல்ல எனக் கொண்டு உலகப் பொருள்களில் பற்று வைக்கிருேம்; அதனுல், உள்ளத்திற் சம்ஸ்காரங்கள் தோன்றி, நம்மைக் கட்டுப்படுத்துகின்றன. அதனுல், சுய ஆற்றலை இழந்து அடிமைகளைப் போலத் தொழில் செய்கிருேம்.

இந்தப் போதனையினுல் பெறப்படுகிற பொருள் என்னவென்ருல், நாம் அடிமைகளாக அன்றி எஜமானர்களாகத் தொழில் செய்ய வேண்டுமென்பது. இடைவிடாது முயலவேண்டும்; ஆனுல், அடிமைத் தொழில் புரிதலாகாது. நம்மைச் சுற்றிப் பார்க்கும்பொழுது எல்லோரும் முயற்சி செய்வதைக் காண்கிருேம். ஒருவரும் முற்றிலும் வாளா இருப்பதைக் காணேம். மனித இனத்தினருள் நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது வீதத்தினர், அடிமைத் தொழில் செய்துகொண்டிருக்கின்றனர்; இதனுல் விளைவது துன்பம். ஏனெனில், அடிமைத்தனத்திற்குச் செய்யும் வேலை சுயநலங் கருதியது. சுதந்திரத்தோடு கருமஞ் செய்ய வேண்டும். அன்பினுற் கருமஞ் செய்ய வேண்டும். ‘அன்பு’ என்னும் மொழியின் பொருளை அறிந்து கொள்வது அரிது. சுதந்தரம் இல்லாத வழி அன்பு உண்டாகாது. அடிமைத்தனத்தில் அன்பு பிறவாது. ஓர் அடிமையை விலை கொடுத்து வாங்கிக் காலொன்றில் சங்கிலியை மாட்டி வேலை செய்

யும்படி கட்டளையிட்டால், அவன் வேலை செய்து கொண்டிருப்பான்; ஆயினும், அன்பினோடு செய்யமாட்டான். அதுபோல, உலகத்துப் பொருளுக்காக அடிமைகள்போல நாம் வேலை செய்யும்போது, நம்முடைய மனத்தில் அன்பு அரும்பாது. நாம் செய்கிற வேலையும் உண்மைக் கருமம் ஆகாது. உற்றார், நண்பருக்குச் செய்கிற வேலைக்கும், நமக்காகச் செய்கிற வேலைக்கும் இஃதொக்கும். சுயநலங் கருதிச் செய்யும் வேலை அடிமையின் வேலை. அதனைப் பரிசோதித்தறிவதற்கு ஒரு பரிசோதனை சொல்லுவோம். அன்போடு செய்கிற வேலை மனத்திற்கு இன்பத்தைத் தரும். சாந்தம் மகிழ்ச்சி இவற்றைப் பயனாகத் தாராத முயற்சி அன்போடு செய்த முயற்சியாகாது. உண்மை வாழ்வு உண்மையுணர்வு உண்மையன்பு ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புள்ளன. இவற்றினுள் ஒன்று இருக்கிற இடத்தில் ஏனைய இரண்டும் இருத்தல் வேண்டும். ஏனெனில், இவை தன்னையன்றிப் பிறிதொன்றில்லாத தனிப் பரம்பொருளாகிய சச்சிதானந்தத்தைச் சார்ந்த மூவகை இயல்புகளாம். (சத் - உண்மை - உள்ளது; சித் - அறிவு; ஆனந்தம் - இன்பம்.) உள்ளதாகிய ஒரு பொருளே மாறுபட்டு உலகத் தோற்றமாகின்றது. உண்மை அறிவே வேறுபட்டு உலக அறிவு ஆகின்றது. உண்மையின்பமே மனிதனுடைய இதயத்தில் நிலைத்திருக்கிற உண்மையன்பு அனைத்திற்குங் காரணம் ஆகிறது. ஆதலால், உண்மையன்பு அன்பு செய்பவனுக்காவது, அன்பு செய்யப்படும் பொருளுக்காவது, துன்பத்தை விளையாது. ஒரு மனிதன் ஒரு பெண்மேற் காதல்கொள்ளுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவளை முற்றிலும் தனக்குரியவளாக்கிக் கொள்ள விரும்பி, அவளைப் பிறர் யாராவது இச்சித்து விடுகிறார்களோ என்ற எண்ணத்தினால் மனத்தில் எரிச்சலுற்று, அவள் செல்லுகிற இடமெல்லாம் பார்த்த வண்ணமாய் இருக்கிறான்; அவள் தன்னருகில் இருக்க வேண்டுமென்றும், அண்மையில் நிற்க வேண்டுமென்றும், தனது கட்டளைப்படி உண்பதும் வெளிச் செல்வதும் செய்ய வேண்டுமென்றும் விரும்புகிறான்; தான் அவளுக்கு அடிமையாகித் தனக்கு அவளை அடிமையாக்க விழைகிறான். இஃது அன்பன்று. அடிமையின் உள்ளத்திலுண்டாகிற கீழ்மையாகிய விருப்பம், அன்புபோல வெளியே தோற்றுவது. இது அன்பாய் இருத்தல் இயலாது; ஏனெனில், துன்பத்தைத் தரவல்லது; அந்தப் பெண் இவன் விரும்பியபடி செய்யாவிடின், வருத்தப்படுகிறான். உண்மையன்பு இருக்குமிடத்து இத்தகைய சிந்தை நோய் உண்டாகாது;

உண்டாயின், அஃது அன்பன்று; வேறொரு பொருளை அன்பென்று நினைத்த நினைவாக முடியும். துன்பம், எரிச்சல் இவை நேரிடாத மேலான அன்பினோடும் சுயநலங்கருதாது, மனைவி, மக்கள், உலகம், மன்னுயிர் அனைத்தினையும் நேசித்தல், பற்றறுத்தலாகிய நிலையை அடையலாம்.

கண்ணபிரானுர் அருச்சுனனைப் பார்த்துக் சொல்லுகிறுர்: "அருச்சுனு, என்னைப் பார். நான் கணப்பொழுதாவது வேலையின்றி ஓய்ந்திருப்பேனுயின், பிரபஞ்சம் அனைத்தும் மடிந்துபோம். வேலை செய்கிறதனுல் நான் பெறப்போகிற பயனென்றுமில்லை. என்னைக் கேட்போன் ஒருவனுமில்லை. பின்னர் நான் எதற்காகக் கருமஞ் செய்யவேண்டும்? பிரபஞ்சத்தை நேசிக்கிறேனுதலால், கருமஞ்செய்ய வேண்டும்.'' கடவுள் அன்பு பாராட்டுகிருராதலால் பற்றற்றிருக்கிருர்; உண்மையன்பு பற்றற்றது. உலகத்துப் பொருள்களைப் பற்றுகிற குணம் எங்கிருக்கிறதோ, அங்குத் தோற்றுகிற பற்று, சடப் பொருள் சம்பந்தமாகப் பிறந்ததென்று அறிதல் வேண்டும். இவ்வகைப் பற்று பக்கத்தில் இருக்கிற பொருளை மிக நெருங்கக் கொண்டுவர நினைக்கும்; நெருங்காதபோது, துன்பத்தை விளைக்கும். உண்மை அன்பு இருக்கும் வழிச் சடப்பற்று இல்லை. அன்பர் இருவர் ஆயிர மைல் தூரம் நீங்கியிருப்பினும், அவரது அன்பு ஒருபோதுங் குறையாது; அழிந்து போகாது; துன்பத்தை வருவியாது.

இவ்வகையைப் பற்றும் நிலைமையை அடைவதற்கு ஏறக்குறைய வாழ்நாள் முழுமையும் உழைக்க வேண்டியும் நேரிடும். ஆயினுமென்ன? அதனை அடைந்தவுடனே நாம் அன்பின் நிலைக்களத்தை அடைந்தவர்களாவோம்; விடுதலை அடைவோம்; பிரகிருதியின் கட்டு நம்மை விட்டு அகலும்; மாயையினியல்பை உள்ளவாறு உணர்வோம்; அவள் நம்மைப் பிணிப்பதற்குச் சங்கிலி செய்யுந்தொழிலை நிறுத்திவிடுவாள்; பந்தமற்று நின்று கருமத்தினுல் வருகிற பயனைப்பற்றி நினைக்கமாட்டோம். என்ன பயன் வந்தாலும் நமக்கு என்ன?

உங்கள் குழந்தைகளைப் போற்றி வளர்க்க ஏதாவது கைம்மாறு தரும்படி கேட்கிறீர்களா? அவர்களுக்காகப் பாடுபடுவது உங்களுடைய கடமை; அவ்வளவோடு காரியம் முடிகிறது. யாவனொருவனுக்கோ, ஒரு நகரத்திற்கோ, ஒரு தேசத்திற்கோ உதவி செய்யும்போது, உங்கள் குழந்தைகளைக் காப்பாற்றுவது போலப் பயன் நோக்காது உதவி செய்யுங்கள். எப்பொழுதும் கொடுக்குந் தொழிலை உடையராயிருத்தல் வேண்டும். ஒரு வகை

யான பிரதிபலனையுங் கருதாது உலகிற்கு நன்மை புரிவதையே தொழிலாகக் கொண்டிருக்க வேண்டும். செய்யுந்தொழிலில் பற்று வைத்தல் கூடாது. பயனைக் கருதும்போதுதான் பற்றுண்டாகும்.

அடிமை நிலைமையிற் கருமஞ் செய்வதனால் சுயநல விருப்பும் பற்றுமுண்டாகும்; தலைவர்களாக நின்று தொழில் புரிவதனாற் பற்றில்லாமையால் வருகிற இன்பம் உண்டாகும். உரிமை, நீதி என்பவற்றைப் பற்றிப் பேசிக்கொள்கிறோம்; ஆயினும், உலகத்தில் இம்மொழிகள் சிறுபிள்ளைப் பேச்சாய் இருக்கின்றன. உலகத்தாருடைய ஒழுக்கத்தையும் நடையையும் வழிப்படுத்துகிற மொழிகள் உரிமையும் நீதியும் அல்ல; வலிமையும் இரக்கமுமாகும். சுயநலங்கருதினோர் தமது வலிமையை வழங்கப் பின்னடையார்; செல்வாக்கோ, வலிமையோ, விரும்பின் அதனைப் பயன்படுத்திப் பெறக்கூடிய அனைத்தையும் பெற விரும்புவது ஆடவர் பெண்டிர் ஆகிய இரு பாலார்க்கும் இயற்கை. இரக்கம் மோட்சத்தை ஒத்தது; நல்லவர்களாயிருப்பதற்கு நாமெல்லாம் இரக்கமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். நீதியும் உரிமையும் இரக்கத்திற்குத் தடையாக நிற்றல் கூடாது; செய்யும் நற்கருமத்திற்குப் பயனை விரும்பி நிற்பது நமது ஆன்ம முன்னேற்றத்துக்குத் தடையாகும்; அஃதன்றி, முடிவில் துன்பத்தையுந் தரும். இரக்கம், தன்னலங்கருதாத அறநெறி ஆகிய இவற்றைச் செயல் முறைக்குக் கொண்டுவருவதற்குப் பின்னுமொரு வழியுமுண்டு. இஷ்டமூர்த்தியாகிய ஒரு தெய்வத்தை வழிபடுபவர் நாம் செய்யும் கருமத்தையெல்லாம் அந்தத் தெய்வத்துக்குச் செய்கிற பூசனையாகப் பாவித்து, அவற்றால் எய்தும் பயனை ஆண்டவனுக்கே அர்ப்பணஞ் செய்யவேண்டும். இப்படிச் செய்தாற் பிறர்க்கு நாம் செய்கிற உதவிக்குப் பயனை எதிர் பார்க்கமாட்டோம். கடவுள் பற்றில்லாமல் இடைவிடாது கருமஞ்செய்துகொண்டிருக்கிறாரல்லவா? தாமரை இலையிற்பட்ட தண்ணீர் அதனை நனையாதது போலச் சுயநலங்கருதாதவனைக் கரும பந்தம் பற்றாது. அத்தகையோன் குடிமக்கள் நெருங்கியதும் தீத்தொழில் மிகுந்ததுமான நகரத்தின் நடுவே இருந்தாலும் அவனைப் பாவந் தீண்டாது.

முழுத் தன்னல மறுப்பின் நிலையைப் பின்வருங் கதையினால் உணர்ந்துகொள்ளலாம்: குருக்ஷேத்திரத்திலே மகாபாரத யுத்தம் முடிந்த பின் பஞ்ச பாண்டவர்கள் பெரிய வேள்வியொன்று செய்து வறியவர்களுக்கு வேண்டிய பொருள் உதவினார்கள்.

மக்கள் எல்லோரும் வேள்வியின் பெருமையையும் செல்வப் பெருக்கையும் கண்டு வியப்புற்று, முன்னொரு போதும் இத் தகைய யாகம் உலகத்தில் நடந்ததில்லை என்று பேசிக்கொண் டார்கள். அத்தருணத்திலே, உடலின் ஒரு பாதி பொன்னிறமும் மற்றொரு பாதி கபில நிறமும் கொண்ட கீரிப்பிள்ளையொன்று யாக மண்டபத்தினுள் வந்து, நிலத்திற் புரண்டெழுந்து, சூழ இருப்பவர்களைப் பார்த்து, "நீங்கள் பேசுவது பொய். இந்த வேள்வியும் ஒரு வேள்வியாமோ?" என்றது. அதற்குள் அவையி லிருப்பவர்கள், "என்ன பேசுகிறாய்! பொன்னும் மணியும் வறி யவர்களுக்கு ஏராளமாகக் கொடுக்கப்பட்டமையால், அவர்களெல் லாம் வறுமையொழிந்து செல்வர்களாய் இன்புற்றிருக்கிறார்களல் லவா? இதைப்போல வியப்புக்குரிய வேள்வியை வேறு யார்தான் செய்திருக்கின்றனர்?" என்றார்கள். இதைக் கேட்ட கீரிப்பிள்ளை, "முன்னொரு காலத்திலே, ஒரு சிற்றூரிலே ஓர் ஏழைப் பிராமண னும், அவனுடைய மனைவியும், மைந்தனும், மைந்தன் மனைவி யும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மிகவும் வறியவர்கள். புரோகிதத்தினாலும் பாடஞ் சொல்வதனாலும் பெற்ற சிறு பொருளைக்கொண்டு வாழ்வு நடத்தி வந்தார்கள். அந்த நாட்டில் மூன்று ஆண்டு கொடும்பஞ்சம் ஏற்பட்டது. அதனால் அந்த ஏழைக் குடும்பம் மிகவும் வருந்த வேண்டி நேர்ந்தது. பல நாள் உணவின்றிக் கழிந்த பின், ஒரு நாள் தந்தையாகிய அந்தணன் ஏதோ புண்ணிய வசத்தினால் அகப்பட்ட சிறிதளவு கோதுமை மாவைக் கொண்டுவந்து கொடுத்தான். அதனை உணவாக்கி நால்வரும் பங்கிட்டு உண்ணப் போகிற தருணத்திலே, கதவை யாரோ தட்டிய சத்தங் கேட்டது. கதவைத் திறக்க, விருந்தினர் ஒருவர் உட்புகுந்தார். நம் நாட்டினர் விருந்தினர்களைத் தெய்வம் போலப் பாவித்து நடத்துபவர்களல்லவா? ஏழை அந்தணனும் வந்த விருந்தினரைப் பார்த்து, 'ஐயா, வருக! வருக! உங்கள் வரவு நல்வரவாகுக! என்று இனியசொற்கூறி உபசரித்துத் தனது உணவுப் பங்கை அவர் முன் வைத்தான். அதனை அந்த விருந்தினர் மிக விரைவில் உட்கொண்டு, 'ஐயா, நீர் என்னைக் கொன்றுவிட்டீர் போலிருக்கிறதே! நான் பத்து நாளாகப் பசித் திருக்கிறேன்; இந்தச் சிறிதளவு உணவு எனது பசியை மிகுதிப் படுத்திவிட்டதே!' என்றார். இதனைக்கேட்ட அந்தணன் மனைவி தனது பங்கையும் கொடுக்கும்படி கணவனுக்குச் சொன்னாள்; அதை அவன் மறுத்துக் கூறினான். அப்பொழுது மனைவி, 'இந்த ஏழை விருந்தினர் பசியினால் வருந்துதலொழிய உணவுகொடுத்து

உதவ வேண்டுவது இல்வாழ்வாராகிய நமது கடமையல்லவா? அஃதன்றியும், உங்கள் வசம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லாமலிருக்கும் பொழுது, எனது பங்கை கொடுப்பது மனைவியாகிய நான் செய்யவேண்டிய கருமமல்லவா?' என்று சொல்லித் தனது பங்கை ஈந்தனள். அதனை உண்ட விருந்தினர், 'இன்னும் பசி தீரவில்லையே!' என்று வருந்தினர். அப்பொழுது அந்தணன் மைந்தன், 'தந்தை தொடங்கிய நற்கருமத்தை நிறைவேற்றுவது மைந்தனது கடமையாகும்,' என்று தனது பங்கையும் நல்கினன். அதனையும் உண்டு பசி தீராத விருந்தினருக்கு மைந்தனுடைய மனைவி தனது பங்கையும் கொடுத்தாள். உண்டு களைப்பாறிய விருந்தினர் அவர்களுக்கு ஆசி கூறிச் சென்றார். அன்றிரவு அந்த நால்வரும் பசியினால் வருந்தி இறந்தனர். அந்தக் கோதுமைமாவின் ஒரு சிறுபகுதி நிலத்திற் சிந்திக் கிடந்தது. அதன்மேல் எனது உடல் பட்டதும், ஒரு பாதி பொன் நிறமாயிற்று. அன்று முதல் இன்றளவும் மற்றப் பாதியையும் பொன்னிறமாக்க விரும்பி, யாகம் புரிகிற இடமெல்லாம் போய் வருகிறேன்; எனது எண்ணம் நிறைவேறவில்லை; ஆதலாலேதான், இது வேள்வியன்று என்றேன்,'' என்று சொல்லி முடித்தது.

தருமஞ்செய்கிற குணம் நமது நாட்டில் குறைந்து வருகின்றது. பெரிய மனிதர் வரவரக் குறைகின்றனர். நான் ஆங்கிலம் கற்கும் பொழுது ஓர் ஆங்கிலப் புத்தகத்திலே ஒரு சிறுவன் தொழில் செய்து கொஞ்சம் பணம் ஈட்டினனென்றும், அதில் ஒரு பகுதியை வயது சென்ற தன் தாயாருக்குக் கொடுத்தானென்றுஞ் சொல்லி, அதை மூன்று நான்கு பக்கங்களிற் புகழ்ந்து எழுதியிருந்தது. இதில் என்ன இருக்கிறது? இந்தியச் சிறுவனுக்கு இந்தக் கதையின் பொருள் விளங்காது. மேலை நாட்டுக்குப் போன பின்பு, அங்கு ஒவ்வொருவனும் தன் காரியத்தை மாத்திரமே பார்ப்பதைக் கண்ட பின்புதான் எனக்கு இந்தக் கதை விளக்கமாயிற்று. சிலர் தாய், தந்தை, மனைவி, மக்கள் இவர்களைப் பற்றிச் சிறிதுஞ் சிந்தியாது, தம்முடைய கருமத்தை மாத்திரமே நினைக்கின்றனர். இது இல்வாழ்வாருக்கு உரிய தருமமன்று.

இப்பொழுது கரும யோகம் இன்னதென்பது தெளிவாகின்றது. மரணம் வரினும், மற்றொரு கேள்வியும் கேளாது பிறர்க்குதவி புரிவதே அது. இலட்சம் முறை ஏமாற்றப்பட்டாலும் பொருட்படுத்தாது, செய்வது இதுவென்று சிந்தியாது, உதவி செய்தல் வேண்டும். வறியவர்களுக்குக் கொடுத்த கொடை

யைப்பற்றிப் பிறர்க்கு கூறக்கூடாது. அவர்கள் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று நினைப்பது தவறு. நாம் தருமம் செய்வதற்கு அவர்கள் காரணர்களாயிருந்தபடியினுல், நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இதனுல், உண்மையான இல்லறம் நடத்துதல் உண்மையான துறவறம் நடத்துதலினும் அரியது என்பதும், துறவியல் எவ்வளவு அருமை வாய்ந்ததோ, அவ்வளவு கருமயோகமும் அருமை வாய்ந்தது என்பதும் புலப்படும்.

இம்பர் ஞாலத் தின்னுயிர்க் குணவுடை
தந்துதுய ராற்றல் சாலவும் நன்றே ;
அதனினும் பெரிதே கலையுண வளித்தல் ;
அதனினும் பெரிதே அழியா இன்பம்
பெருக்குநல் லறிவை விருப்புட னளித்தல் ;
அதனுல்,
ஞானு சிரியன் சாலவு முயர்ந்தனன். 1

ஐம்புல னடைத்தோன் அசைவுரு நிலையோன்,
நல்லன நினைந்து, நல்லன மொழிந்து,
நல்லன புரிவோன் நல்லோ னுவன் ;
தீயன நினைந்து, தீயன மொழிந்து,
தீயன புரிவோன் தீயோ னுவன். 2

முள்ளினை முள்ளாற் களைவது போல,
நற்றெழில் தன்னுல் தீத்தொழில் களைந்தபின்,
பற்றறுத் தமர்தல் மெய்த்தவர் நெறியே. 3

பற்றெடு செயல்செயின் உற்றிடும் பந்தம். 4

உண்மை யன்புடன் உறுதொழில் புரியின்
தோல்வி வரினும் சோர்வெய் தாதே ;
அதனுல்,
பற்றறுத் திடுமின் ; பற்றறுத் திடுமின்,
அடிமை அகற்றித் தலைவ ராகுமின். 5

பயன்கரு தாத பான்மையி னுலே,
மாயா பந்த வன்மையை யழிமின். 6

மரணம் வரினும் வருக ; பிறர்நமக்
கின்னு செய்யினுஞ் செய்க ; யாமவர்க்
கின்பம் தருசெயல் என்றும் புரிவோம் ;
வஞ்சம் நேரினும் வழிபடல் குறையோம் ;
ஆற்றல் சான்ற அறநெறி யாகிய
கரும சாதனை இரகசியம் இதுவே. 7

நாலாம் அதிகாரம்

கடப்பாடறிந்து கருமம் புரிதல்

கரும யோகத்தைக் கைக்கொண்டொழுகுவதற்கு கடமை என்பது என்னவென்று அறிந்துகொள்வது இன்றியமையாதது. ஏதாவது செய்ய வேண்டியிருப்பின், முதலில் அது எனது கடமையென்று அறிவேனுயின், யான் அதனைச் செய்து முடிப்பேன். முகம்மதியர் தமது புத்தகமாகிய குர்ஆனில் எழுதியிருப்பதே பின்பற்றி ஒழுக வேண்டிய கடமையென்பர்; இந்துக்கள் வேதங்களிற் கூறியிருப்பதே கடமை என்று மொழிவார்கள்; கிறித்தவர் விவிலிய நூலிற் சொல்லியிருப்பதே கடமை என்று உரைப்பார்கள். இவ்வாறு கடமைபற்றிய எண்ணம் வேறுபட்டிருக்கக் காண்கிறேம். அது வாழ்க்கை நிலைக்கும் கால தேச நிலைமைகளுக்கும் ஏற்ப வேறுபடுகின்றது. கடமை என்னும் மொழிக்கு வரைவிலக்கணங்கூறுதல் கூடாது; மனத் தன்மைகளைக் குறிக்கும் ஏனைய பொது மொழிகளைப்போல இதனுலெய்தும் வாழ்க்கைப் பயனைக் கொண்டு இதன் பொருளை ஒருவாறு உய்த்துணரலாம். சில விஷயங்கள் நம் முன்னர் நிகழும்போது, இயற்கையாகவோ, பயிற்சியினுலோ இன்னவிதமாகத்தான் நாம் நடந்துகொள்ளவேண்டுமென்று நமக்கு மனத்திற் படுகிறது. வேறு சில வேளைகளில் முந்திய விஷயங்களே நிகழினும் வேறு விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று படுகிறது. இயற்கையில் நல்லவனுன மனிதன், தனது மனச்சாட்சிக்கு ஒப்ப நடந்து கொள்ளுதலே கடமைக்கேற்ப நடந்துகொள்ளுதலாகும். ஒரு கிறித்தவனது முன்னிலையில் ஒரு மாட்டிறைச்சித் துண்டு இருக்குமாயின், அவன் அதைத் தன் பசிக்கு உண்ணுவிடின், அல்லது பசியினுல் வருந்துகிற பிறனொருவனுக்குக் கொடுத்து உயிரைக் காப்பாற்ருவிடின், தான் தனது கடமையில் தவறிவிட்டதாக நினைப்பான். ஓர் இந்து சமயி தனது முன்னிலையிற் கிடக்கும் மாட்டிறைச்சியைத் தான் உண்டால், அல்லது பிறர்க்குக் கொடுத்தால், தான் செய்யவேண்டிய கடமையில் தவறிவிட்டதாக நினைப்பான். இந்து சமயியினது பயிற்சியுங் கல்வியும் அவனை அவ்வண்ணம் நினைக்கச் செய்கின்றன. சென்ற நூற்ருண்டிலே நமது நாட்டின் 'தக்கர்கள்' என்னும் பெயரையுடைய பேர்

போன ஒரு தீவட்டிக் கொள்ளைக்காரர் கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டத்திற் சேர்ந்திருந்தோர் மனிதரைக் கொன்று அவர்களுடைய பொருளைக் கைப்பற்றுவது தமது கடமையென்று நினைத்திருந்தனர். கொல்லப்பட்டோர் தொகை எவ்வளவு கூடுகிறதோ, அவ்வளவுக்கு நன்மையுண்டாகுமென்பது அன்னாருடைய எண்ணம். தெருவிற்போகும் போது ஒரு மனிதன் தற்செயலாகக் கைதவறிப் பிறனொருவனைச் சுட்டுக் கொன்றுவிட்டால், தான் செய்தது பிழையென்றுணர்ந்து அதற்காக வருத்தப்படுவான். அம்மனிதன் தானே போர்க்களத்தில் இருபது பேரைச் சுட்டு வீழ்த்தினனெனில், தான் செய்த செய்கைக்காக மிகவும் மகிழ்ச்சியுற்றுத் தனது கடமையைச் செய்து முடித்ததாக நினைப்பான். ஆதலினாலே, கடமையென்பது செயலைக் கொண்டு வரையறுக்கப்படுவதொன்றன்று. கடமையென்னும் மொழிக்குப் புறச்சார்பாகிய வரைவிலக்கணங் கூறுதல் இயலாததாகும்; ஆயினும், அகச்சார்பு நோக்கி வரையறுத்துக் கூறலாம். எந்தத் தொழில் நம்மைக் கடவுளிடம் செலுத்துகிறதோ, அது நல்ல தொழிலாகும். அதனைச் செய்து முடிப்பது நமது கடமை. எது நம்மைக் கீழே இழுத்துச் செல்கிறதோ, அது தீய தொழில். அதனைச் செய்வது நமது கடமையாகாது. அகச்சார்பு நோக்கிப் பார்க்கும் பொழுது, சில செய்கைகள் உள்ளத்திற்கு உவகையைத் தந்து நம்மை உயர்த்தி மேன்மைப்படுத்துவனவாகத் தோற்றுகின்றன. வேறு சில செய்கைகள் நம்மைக் கீழ் இழுத்து விலங்கியல்பை உண்டாக்குகின்றன. பல நிலையுள்ள பலருடைய உள்ளத்திலே குறிக்கப்பட்ட சில செயல்கள் எவ்வகையான சார்பினை உண்டாக்குவன என்பதை நாம் தெரிந்து சொல்லுதல் இயலாத காரியமாகும். ஆயினும், கடமையைப்பற்றி மனித இனத்தினர் அனைவராலும் எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் எல்லாச் சமயக் கொள்கைகளுக்கும் ஒப்பச் சரியெனக் கைக்கொண்ட முடிபு ஒன்று இருக்கின்றது. அஃதாவது, "ஓர் உயிருக்கும் துன்பம் விளைக்காதே; உயிருக்கு நலஞ் செய்தல் புண்ணியம்; துன்பம் விளைத்தல் பாவம்," என்பது.

ஸ்ரீமத் பகவற்கீதையில் பிறப்புக்கும் நிலைக்கும் ஏற்பக் கடமை வேறுபடும் என்பது பலவிடங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய பிறப்பு, ஆச்சிரம நிலை, மக்கட்கூட்டத்தில் பெறுகிற மதிப்பு, இவற்றுக்குச் சார்பாக அவனது மன நிலையும், தொழில் செய்யும் முறைமையும், பிறரிடம் நடந்து கொள்ளுகிற தன்மையும் உருப்படும். ஆதலினாலே, நமது பிறப்பு

நிலைமைக்கேற்ப நமக்கு உயர்வையும் மேன்மையையுந் தரத்தக்க செயல்களையும் கொள்கைகளையும் மேற்கொண்டொழுகுவது நமது கடமையாகும். கொள்கையுஞ்செயலும் எல்லாத் தேசத்திலும் எல்லாச் சாதியினருள்ளும் ஒரு தன்மையாக இருப்பன வல்ல; அவை தம்முள்ளே மாறுபட்டிருப்பன என்னும் உண்மையை நாம் ஒருபோதும் மறந்துபோதல் கூடாது. இதனை அறியாமையினாலன்றோ உலகத்திலுள்ள பல சாதியாருள்ளும் பொறாமை என்னும் தீமை நிலை பெற்றிருக்கிறது? அமெரிக்கனானவன் தனது நாடாகிய அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கிற பழக்க வழக்கங்களே சிறந்தன என்றும், அவற்றைக் கைக்கொண்டொழுகாதவன் கீழ் மகன் என்றும், தனக்குள்ளே நினைத்துக்கொள்ளுகிறான். அவ்வாறே இந்தியனும் தனது தேசப் பழக்க வழக்கங்களே உலகில் மிகச் சிறந்தனவென்றும், அவற்றைப் பின்பற்றாதவன் கொடும்பாவி யென்றும் நினைக்கிறான். இந்தப் பிழை எண்ணம் எல்லோருடைய மனத்திலும் முளைப்பது இயற்கைதான். ஆயினும், இத்தகைய தப்பெண்ணத்தினால் பெருந்தீங்கு உண்டாகிறது. உலகத்திலுள்ள தரும சிந்தனைக் குறைவில் அரைவாசி பிழைபட்ட இந்த எண்ணத்தினால் உண்டானது. அமெரிக்காவுக்கு நான் முதன்முதல் வந்து சிக்காகோ நகர வீதியிற்செல்லும் போது, பின்புறமாக ஒரு மனிதன் எனது தலைப்பாகையைப் பற்றி இழுத்தான். திரும்பிப் பார்த்தேன்; அவன் நல்ல உடை தரித்த ஒரு பெரிய மனிதன் போலக் காணப்பட்டான். அவனோடு பேசினேன்; எனக்கு ஆங்கிலம் தெரியுமென்று கண்டதும் அவன் மிகவும் நாணினான். பின்னும் ஒரு முறை அதே கூட்டத்திலே, வேறொரு மனிதன் எனக்குப் பக்கத்தில் இடித்துக்கொண்டு சென்றான். காரணமென்ன என்று கேட்டேன். அவன் தடுமாற்றமுற்று, ‘நீர் ஏன் இந்த வகையான உடை உடுத்துகிறீர்?’ என்று கேட்டான். இவர்களுடைய இரக்கத்தின் எல்லை, தங்களைப்போல உடையணிந்து கொள்பவர்கள், தங்களது மொழியைப் பேசுபவர்கள் அளவில் வரையறைப்பட்டது. பெரிதும் இத்தகைய முரட்டு நியாயங் காரணமாகவே வலிமை வாய்ந்த சாதியார்கள் பலமில்லாதவர்களைத் துன்புறுத்துகிறார்கள். இது காரணமாகவே அவர்கள் தங்களைப் போன்ற மனிதரிடம் செலுத்தவேண்டிய அன்பின் ஊற்று வற்றிப் போகின்றது. நான் தன்னைப்போல உடை உடுத்தாததனால் எனக்குத் தொந்தரையை உண்டாக்க நினைத்த அந்த மனிதன் நல்லவனாயிருத்தல் கூடும்; அவன் தன் குழந்தைகளுக்கு நல்ல தந்தையாக

வும், தனது நாட்டிற்கு நல்ல தொண்டனுகவும் இருத்தல் கூடும்; ஆயினும், உடை வேறுபாட்டினைக் கண்ட மாத்திரத்தே அவனுடைய அன்பின் தன்மை அழிந்து போயிற்று. எல்லா நாட்டிலும் அயலார் வஞ்சிக்கப்படுவது வழக்கம். ஏனெனில், தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள அவர்களறியார்கள்; தமது நாட்டுக்குத் திரும்பிப் போகும்போது தாம் கண்ட அயல்நாட்டு மக்களைப் பற்றிப் பிழையான எண்ணத்தோடு போகிருர்கள். கப்பற்காரரும், போர்வீரரும், வியாபாரிகளும் தங்கள் நாட்டிற் கனவிலும் நினையாத வண்ணம் பிற நாட்டில் நடந்துகொள்கிருர்கள். இதனுலேதான் சீன தேசத்தார் ஐரோப்பியரையும் அமெரிக்கரையும் அயல் நாட்டுப் பேய்கள் என்று சொல்கின்றனர்; மேலை நாட்டினரின் நன்மைப் பகுதியைக் கண்டிருந்தால் இப்படிச் சொல்லார்.

ஆதலினுல், நாம் என்றும் மறந்துபோகாமலிருக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அஃதென்னவெனில், மற்றவர்களுடைய பழக்க வழக்கங்களை நமது நிலையை நோக்கித் தீர்மானித்தல் கூடாது; அவர்களுடைய பார்வை கொண்டே கண்டறிதல் வேண்டும். 'பிரபஞ்சத்துக்கு நான் ஓர் எடுத்துக்காட்டு,' என்று நினைத்தல் தவறு. உலகத்தோடொப்ப நாம் ஒழுகுதல் வேண்டும். உலகம் நமக்கு ஒப்ப நடக்கவேண்டும் என்று எண்ணுவது கூடாது. சூழவிருக்கும் பொருள்கள் நமது கடமை இத்தன்மையதாகவிருக்க வேண்டுமென்று வரையறைப்படுத்துகின்றன; ஆதலினுல், எவ்வெக்காலங்களில் என்ன என்ன கடமைகள் நமக்கு உரியனவாய் இருக்கின்றனவோ, அவற்றை இயன்றவரையில் செவ்வனே செய்து முடிப்பதே உலகில் நாம் செய்யத் தக்கது. பிறப்பினுல் நமக்கு உரியதாயிருக்கிற கடமையை முதலிற்செய்வோம். பின்பு உலக வாழ்க்கையில் மக்கட்கூட்டத்திலும் நமக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைக்குத் தகுந்ததாகிய கடமையைச் செய்து முடிப்போம். மனிதன் தன்னைத்தானே ஆராயுமிடத்துத் தக்க மதிப்பிடுவதில்லை; இது மனித இயற்கையிலே அமைந்த பெரும் பிழை. 'சிங்காதனத்திலேற்றிவிட்டால் அரசு புரிந்துவிடுவேன்,' என்று நினைப்பது மனிதனுக்கு இயல்பு. அப்படி அரசு புரியக் கூடிய வன்மையிருந்தாலும் சொந்த நிலைமைக்குரிய கடமையைச் செய்து, தன்னிடத்திலிருக்கும் வலிமையைக் காட்டுதல்வேண்டும்; இங்ஙனஞ்செய்யின், உயர்வான கடமைகள் தாமே வந்தடையும். உண்மைச் சிரத்தையோடு நாம் உலகில் ஒரு தொழிலைச் செய்யத் தொடங்கும் பொழுது, எப்பக்கத்திலுமிருந்து உண்டாகிற இடைஞ்சல்கள் நமக்கு நமது நிலைமையை உணர்த்துவனவாம்.

தனக்குத் தகுதியில்லாத தொழிலை ஒருவன் நீண்ட காலம் வகித் திருத்தல் இயலாது. இயற்கையில் அமைந்திருக்கும் அமைவைப் பார்த்துக் குறை கூறுவதிற் பயனென்றுமில்லை. கீழான தொழிலைச் செய்பவன் அது பற்றிக் கீழான மனிதனாகான். ஒருவன் செய்கிற தொழிலைக்கொண்டு அவனை ஆராய்தல் கூடாது; செயல் வன்மையையும் மனப்பாங்கையும் பார்த்து ஆராயவேண்டும்.

பின்னர்க் கடமையைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணமே மாறுதலடையக் காண்போம்; சுயநல விருப்பமில்லாமற் செய்யும் தொழிலே உயர்வான தொழில் என நமக்குத் தோன்றும். ஆயினும், கடமை கருதிக் கருமஞ் செய்தலிலேதான், கடமைக் கும் உயர்வான கருமஞ் செய்யும் சிறப்புண்டாகும்; அப்பொழுது செய்யுந் தொழிலெல்லாம் தெய்வந்தொழுதலாகும்—அதனினும் உயர்வுமாகும். அப்பொழுது பயன் கருதாக் கருமஞ் செய்யும் நிலைமை எய்தும்.

ஏனைய யோகங்களின் முடிபும் 'ஒழுக்க முறையாகவேனும் அன்பு முறையாகவேனும் கொள்ளப்படுகிற கடமை பற்றிய சித்தாந்தமும் ஒன்றே. உயர்நிலையில் 'நான்' எனப்படுகிற ஆன்மா பிரகாசிக்குமாறு கீழ்நிலையில் 'நான்' எனப்படுகிற அரசாங்கத்தின் வலியைக் குறைத்தலும், உடல் மனச்சக்திகளைக் கீழ்நிலையில் வீணே அழித்துவிடாது அடக்கி, உயர்நிலையில் ஆன்மா தோற்றும்படி செய்தலுமே இந்த முடிபாம்; கடமைக்கு அமைந்து கீழான இச்சைகளை இடைவிடாது வெறுத்தலினாலே உயர்நிலையை அடையலாம். செய்கை அனுபவம் ஆகிய இரண் டிலும் அறிந்தோ அறியாமலோ சுயநல விருப்பை மட்டுப்படுத்து தலினாற்றான் மக்கட்சமூகங்கள் உண்டாகி வளர்கின்றன. பின்னும் சுயநல விருப்பை ஒழிப்பதனாலேதான் நமது உண்மையான இயற்கை விரிவதாகத் தோற்றும்.

கடமை பெரும்பாலும் இனிமையைத் தாராது. அன்பு என்னும் தைலம் பூசப்பட்டாலன்றிக் கடமையென்னும் இயந் திரத்தின் சில்லுகள் சிக்கலின்றி இலகுவாகச் சுழலா. அன்பு இல்லாவிடின், தாய் தந்தையர் தம் மைந்தரைப் பரிபாலிப்பதும், கணவன் மனைவியாகிய இருவரும் ஒருவரையொருவர் பரிபாலிப் பதும் எங்ஙனம் ஆகும்? வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் தடை களையுந் தொந்தரவுகளையும் காண்கிறோமல்லவா? கடமையானது அன்பினாலே இனிமையாகின்றது. அன்பும் பந்தமின்மையால் ஏற்படுகின்றது. மேலும் வாழ்வில் மாறுது நிகழ்கின்ற சீற்றம்,

பொறுமை புலனுகர்ச்சி முதலியவற்றிற்கு அடிமையாதல் பந்தமின்மையெனப்படாது. இவ்வாறு வாழ்வில் ஏற்படுகிற இன்னல்களைப் பொறுத்துக்கொள்வதிலே மேலான தளையின்மை வெளியாகும்.' தமது வெகுளிக்கும் எரிச்சலுக்கும் அடிமையாகிய பெண்பாலார், நாயகர்மேல் குற்றங்கூறி அவமதிப்பதனுல் தமது சுயேச்சையைக் காட்டுவதாக நினைக்கின்றனர். அதனுல், அவர்கள் தங்கள் அடிமைத்தனத்தையே வெளிப்படுத்துகிருர்கள். தம் மனைவிமார் மீது என்றுங் குற்றஞ் சுமத்திக்கொண்டிருக்கிற ஆடவர் தன்மையும் இதுவே.

கற்பொழுக்கமானது பெண்டிர், ஆடவர் ஆகிய இரு பாலாராலும் முதலாவது மதிக்கத்தக்க பொருள். ஆடவனெருவன் எவ்வளவு நெறி தவறினவனுயிருப்பினும், மெல்லெனப் பேசும் அன்புள்ள கற்புடைய மனைவியினுல் நன்னெறிக்குக் கொண்டு வரத் தகாதவனுக மாட்டான். உலகம் அவ்வளவு பிழைபட்டுப் போகவில்லை. நெறி தவறி விலங்கியல் மேம்பட்ட கணவர் பலருண்டு என்று கேள்விப்படுகிருேம்; ஆராய்ந்து பார்த்தால், மனைவியருள்ளும் நெறி தவறி மிருகத் தன்மை மேம்பட்டவர் பலரிருக்கக் காண்போம். பெண்பாலார் சொல்லிக்கொள்வதற்கு இயைய, உலகிலுள்ள பெண்களெல்லாம் நல்லவர்களாகவும் பரிசுத்தர்களாகவுமிருப்பின், ஓர் ஆடவனும் நெறி தவறிப் போக மாட்டான் என்பதை நான் உறுதியாக உரைப்பேன். 'பரிசுத்தத்தினுலும், கற்பினுலும் வெல்ல முடியா மிருகத்தன்மை இருக்கிறதோ?' என்றுல், இல்லை. நல்ல கற்புள்ள பெண்ணுனவள் தன்னுடைய நாயகனல்லாத மற்ற ஆடவர்களை யெல்லாம் தன் மக்களாகக் கருதுகிருள். ஆதலினுல், அவள் மனித இனத்தினர் அனைவருக்கும் தாயாக எண்ணப்படுகிருள். அத்தகைய பெண்ணினது பரிசுத்தத்தின் வலிமையினுலேயே அவளுடைய முன்னிலையில் வருகிற ஆடவன் எவ்வளவு தீயவனுயினும் பரிசுத்தனுகிவிடுகிருன். இனி, ஆடவர்களும் தங்கள் மனைவியாரல்லாத மற்றைய பெண்ணைத் தாயாகவாவது, மகளாகவாவது உடன் பிறந்தாளாகவாவது பாவித்து நடத்த வேண்டும்.

இவ்வுலகிலே தாயாய் இருக்கிற நிலைமையே எல்லாவற்றினும் உயர்ந்தது. ஏனெனில், அதுவே தன்னல மறுப்பை அறிவதற்கும் பயிலுவதற்கும் உரிய நிலைமை. இறைவனுடைய அன்பு மாத்திரமே தாயினுடைய அன்பினுஞ் சிறந்தது; ஏனைய அன்புகளெல்லாம் தாயினுடைய அன்பிற் கீழ்ப்பட்டனவேயாம். தன்னுடைய குழந்தைகளைப்பற்றி நினைத்து, ஆகவேண்டுவதைச்

செய்த பின்பு, தன்னைப்பற்றி நினைப்பது தாய்க்குரிய கடமை. அப்படிச் செய்யாமல், பெற்றோர் தங்களைப் பற்றி நினைப்பதையே பெரிதாகக் கொள்ளுவார்களாயின், பிள்ளைகளும் கூடுவிட்டுப் பறந்ததன் பின் ஈன்றவற்றைப் பற்றி நினையாத பறவைகளைப் போலாய்விடுவார்கள்; பெண்பாலாரை உலக அன்னையாகிய சக்தியின் வடிவமாகப் பார்க்கிற மனிதன், ஆசீர்வதிக்கப்பட்டவன். ஆடவரை உலகத்திற்குத் தந்தையாகிய கடவுள் உருவமாகப் பார்க்கத் தக்க பெண் ஆசீர்வதிக்கப்பட்டவள். தாய் தந்தையரைத் தெய்வ சொரூபமாகக் காண்கிற பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

நாம் இப்போது செய்ய வேண்டிய கடமையைச் செய்து, அது வழியாகப் பலத்தினைப்பெற்று வர வர உயர்ந்த கடமையைச் செய்துகொண்டு போய், ஈற்றில் மேலான கடமையைச் செய்வதே தக்க வழியாகும்.

ஒரு பால சந்நியாசியார் காட்டுக்குப் போய் நெடுங்காலம் தியானம்செய்து கடவுளைத் தொழுது யோகம் பயின்று வந்தார்; பல ஆண்டுகள் கடுமையாக முயன்று பயின்ற பின், ஒரு நாள் ஒரு மரத்தின் கீழிருக்கும் பொழுது அவர் தலையில் காய்ந்த சருகுகள் விழுந்தன. அண்ணாந்து பார்த்தார்; மரத்தில் ஒரு கொக்கும் காகமும் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. "ஹா! அத்தனை துணிவாக என்னுடைய தலையிற் சருகுகளைப் போட்டீர்களா?" என்று சொல்லிப் பறவைகளைப் பார்த்தார். அந்த யோகியார் வெகுளியினால் பார்த்த உடனே அவருடைய சிரத்தினின்றும் ஒரு தீச்சுடர் எழுந்துபோய்ப் பறவைகளைச் சாம்பராக்கிவிட்டது. அவரும் உவகையுற்று, ஒரு பார்வையினாலே கொக்கையுங் காகத்தையும் எரித்துவிட்ட தம் வலிமையை நினைத்து அளவிறந்த மகிழ்ச்சி அடைந்தார். சில நாட்களின் பின், அவர் அடுத்த ஊருக்குப்போய், பிக்ஷை வாங்குவதற்காக ஒரு வீட்டு வாயிலில் நின்று, "அம்மா, அன்னங்கொடு" என்றார். "மகனே, சற்றுப்பொறு," என்று உள்ளிருந்து மறுமொழி வந்தது. இதனைக் கேட்ட பால சந்நியாசியார், "அறிவு கெட்ட பெண்ணே, துணிவோடு என்னைக் காத்திருக்கும்படி சொன்னாய்! எனது வலிமையை நீ இன்னும் அறியாய் போலும்!" என்று தம் மனத்திலே நினைத்துக்கொண்டு நின்றார். "சிறுவனே, உன்னைப்பற்றி அதிகம் நினைக்க வேண்டாம்; இங்கே கொக்காவது காகமாவது இல்லை" என்று உள்ளிருந்து பின்னும் ஒரு மறுமொழி வந்தது. இதனைக் கேட்ட சந்நியாசியார் வியப்

புற்றுக் காத்திருந்தார். சிறிது நேரத்துக்குப் பின், அந்தப் பெண் வெளியே வந்தனள். வருதலும் சந்நியாசி அவள் காலில் விழுந்து, "அம்மா, இந்த விஷயத்தை நீங்கள் எங்ஙனம் அறிந்துகொண்டீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த அம்மாள், "என் மகனே, நான் உன் யோகத்தையும் அறியேன்; சாதனையையும் அறியேன். நான் எல்லாரையும் போல் ஒரு பெண். வாழ் நாள் முழுமையும் என்னுடைய கடமையை நன்ருகச் செய்ய முயன்றேன். மணமாகாத முன் என் தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்துகொண்டு வந்தேன்; மணந்த பின் என் கணவருக்குப் பணிவிடை செய்துகொண்டு வருகிறேன்; இவ்வளவுதான் நான் அறிந்த யோகம். என்னுடைய கடமையை நான் தக்கபடி செய்துகொண்டு வந்தமையால், எனக்கு அறிவு விளக்கம் உண்டாயிற்று. அதனுற்ருன் உன் மனத்திற்ருேன்றிய எண்ணங்களையும், காட்டில் நீ பெற்ற சித்தியையும் அறிந்துகொண்டேன். இன்னும் விளக்கமாக அறிந்துகொள்ள விரும்பினுல் அடுத்த பட்டணத்துக்குப்போ; அங்குக் கடைத்தெருவில் ஒரு கசாப்புக்காரனைக் காண்பாய்; அந்தச் சான்ருேனிடமிருந்து நீ அறிய விரும்பிய சில உண்மைகளை அறிந்துகொள்வாய்," என்ருள். இதனைக் கேட்ட சந்நியாசியார், "எதற்காக நான் அடுத்த பட்டணத்துக்கு அவனிடம் போக வேண்டும்?" என்று நினைத்தாராயினும், தாம் கண்ட அதிசயித்திஞல் மனம் சற்று விரிந்ததால், சரியென்று குறிக்கப்பட்ட நகருக்குப் போய்க் கடை வீதியை அணுகும் போதே தாம் கருதி வந்த மனிதரைக் கண்டார்; பருத்துக்கொழுத்த மனிதனுகிய அவன், பெரிய கத்தியினுலே இறைச்சித் துண்டங்களை வெட்டி வாங்க வருவாரோடு உரையாடி வியாபாரம் செய்து கொண்டிருக்கக் கண்டார்; கண்டதும், "ஆ! தெய்வமே, இந்த மனிதனிடமா நான் உண்மை உணரப்போகிறேன்? இவனைப் பார்த்தால் மாபெரும் பேயின் தோற்றமாயிருக்கிறதே!" என்று சந்நியாசியார் தமக்குள்ளே நினைத்தார். அப்பொழுது அந்தக் கசாப்புக்காரன் சந்நியாசியாரைப் பார்த்து, "சுவாமி, இங்கே வாருங்கள்; அடுத்த சிற்றூரிலுள்ள அந்த அம்மாள்தானே உங்களை அனுப்பியவர்? சற்று இந்த ஆசனத்தில் அமர்ந்திருங்கள்; நான் என்னுடைய வேலையை முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்," என்ருன். சந்நியாசியார் இதனைக்கேட்டு, "இது என்ன விந்தை!" என்று நினைத்துக்கொண்டிருந்தார். சற்று நேரஞ் சென்றதும் வேலையை முடித்துப் பணத்தைக் கையிலெடுத்துக்

கொண்டு சந்நியாசியைப் பார்த்து, "வாரும் ஐயா, வீட்டுக்குப் போவோம்," என்று அழைத்துப் போய் அவருக்கு ஆசன மளித்து, இருக்கும்படி சொல்லிவிட்டு, உள்ளே நுழைந்து, தாய் தந்தையரிருவரையும் நீராட்டி, உண்டி முதலியன கொடுத்து மகிழ்ச்சியுறும்படி செய்தபின், வெளியே வந்து சந்நியாசியாரைப் பார்த்து, "ஐயா, நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்கள்; என்னால் ஆகவேண்டுவதென்ன?" என்றான். சந்நியாசியார் கடவுளைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டார். அவற்றிற்கு அந்த மனிதன் அளித்த விடையே மகா பாரதத்தில் 'வியாத கீதை' என்னும் பகுதியாயிருக்கிறது. அது உயர்ந்த வேதாந்த உண்மைகள் அடங்கியது. போதனை முடிந்ததும் சந்நியாசியார், "ஐயா, நீங்கள் இவ்வளவு ஞானம் நிறைந்திருக்கப் பெற்றும், இந்த வியாத உடலில் இருப்பானேன்? இந்த அருவருப்பான கீழ்ப்பட்ட தொழிலைச் செய்வானேன்?" என்றார். அதற்கு அந்த வியாத குலத்தவன் மறு மொழியாக, "என் மைந்தரே, செய்தொழில் ஒன்றும் அநாகரிக மானதும் அன்று, அசுத்தமானதும் அன்று. என் பிறப்பு என்னை இந்நிலைமையிற் கூட்டி வைத்தது; பிள்ளைப் பருவத்தி லேயே இந்தத் தொழிலைப் பயின்றேன்; பற்றற்றிருக்கிறேன்; என் கடமையை நன்றாகச் செய்ய முயல்கிறேன்; இல்லறத்தில் நான் செய்ய வேண்டிய கடமைகளை முயன்று செய்து வரு கிறேன்; என் தாய் தந்தையருக்குச் செய்யவேண்டிய பணி விடையைக் குறைவுபட விடாமற் பார்த்துக்கொள்வதனால், அவர் களை இன்புறும்படி செய்து வருகிறேன். நான் உங்கள் யோகத் தையுமறியேன்; சந்நியாசியானதுமில்லை; துறவு பூண்டு காட் டுக்குப் போகவுமில்லை. ஆயினும், நான் தெரிவித்த விஷயங்களை யெல்லாம் என்னுடைய கடமைகளைப் பற்றின்றிச் செய்துகொண் டிருந்த ஒரே காரணத்தால் அறிந்துகொண்டேன்," என்று கூறினான்.

நான் ஒரு முனிவரை அறிவேன்; அவர் பெரிய யோகியார்; நான் கண்ட மனிதர்களுள் மிகவும் சிறந்தவர். அவரிடம் ஒரு வருக்கும் ஒரு போதனையுஞ் செய்யாத ஒரு வகைக் குணம் அமைந்திருந்தது. கேள்வி கேட்டால், மறுமொழி சொல்ல மாட்டார். குருவின் நிலைமையை வகிப்பது சரியன்று என்பது அவருடைய எண்ணம். கேள்வியைக் கேட்ட பின் சிலநாள் காத்திருந்தால், ஒரு நாளைக்கு உரையாடிக்கொண்டிருக்கும் போது கதை நடுவில் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவார்.

இம்முறையினுல் குறித்த அப்பொருள் விளக்கமாகும். அவர் எனக்கு ஒருநாள் கருமசாதனை இரகசியத்தைப்பற்றிச் சொன்ஞர்; "முடியும் முடிபையும், செல்லும் வழியையும் ஒருங்கு நோக்க வேண்டும்," என்ருர். ஏதாவது ஒரு தொழிலைச் செய்து கொண்டிருக்கும்போது பிறிதொன்றைப் பற்றியும் நினைத்தல் கூடாது. அதனை வழிபாடாகக் கொள்க. அதுவே உயர்ந்த தியானம். உயிராற்றல் முழுவதும் அந்த வேளையில் அந்தத் தொழிலிலேயே செலுத்தப்படுவதாக. நான் சொன்ன கதையில், அந்த வியாதனும் அந்தப் பெண்ணும் தங்களுடைய கடமையை மகிழ்வோடும் முழு மனத்தோடும் செய்தார்கள்; அதன் பயனுக அறிவு விளக்கத்தை அடைந்தார்கள். ஆதலால், வாழ்வில் எந்த நிலைமையில் இருக்கின்ருேமோ, அதற்குரிய கடமைகளைப் பயன் கருதாது செய்வதனுல் மேலான அறிவுப் பெருக்கமும் ஆன்ம பூரணத்துவமும் உண்டாகும்.

பயன் கருதி வேலை செய்கிற தொழிலாளியானவன் தனக்கு ஏற்பட்ட கடமை தகாததென முணுமுணுப்பான். பயன் கருதாத தொழிலாளிக்கு எல்லா வேலைகளும் நல்ல தொழிலாகும். ஏனெனில், அவற்றைக் கருவியாகக் கொண்டு, சுயநல விருப்பு, புலனுகர்ச்சிப் பிரியம் முதலியவற்றை அழித்து வீடுபெறலாம் என்பதை அவன் அறிவான். நாம் நம்மைப்பற்றிச் சற்று உயர்வாக நினைத்துக்கொள்ளுதல் கூடும். ஆனுல், நமது பிரியத்தின் படியன்றி, நமது தகுதிக்கேற்றபடியே நமக்குரிய கடமை உறுதிப்படும். மற்றவரினும் சிறக்கவேண்டும் என்னும் எண்ணம் எரிச்சலையுண்டாக்குகிறது. அதனுல், மனத்திலுள்ள அன்பு அழிந்து போகிறது. முணுமுணுத்துக்கொண்டிருப்பவனுக்கு எல்லாக் கடமைகளும் வெறுப்பைத் தருவன; ஒன்றும் விருப்பைத் தாராது. அவனுடைய வாழ்வு அனுகூலமில்லாத வாழ்வாய் முடியும். ஆதலால், எது நமது கடமையாக நேருகிறதோ, அதனைச் செய்துகொண்டிருப்போம்; எதுவும் செய்ய ஆயத்தமுள்ளவராய், இடை விடாமல் முயன்றுகொண்டிருப்போம். அப்படிச் செய்வோமாயின், நிச்சயமாக அறிவு விளக்கத்தைப் பெறுவோம்.

மன்னு வுலகத்து மன்னிய வொழுக்கம்
பல்வே ருகிய பான்மைய தெனினும்,
எல்லோர்க்கு மொப்ப முடிந்ததொன் றிசைப்பின்,
உயிர்க்கிதம் புரிதல் புண்ணிய மாகும்;
செயிர்த்தழித் திடுதல் தீமை யாகும். 1

பிறர்நல முணராச் சிறுமியை யகற்றி 2
ஒப்புர வொழுகல் தக்கவர் நெறியே.

கடப்பா டறிந்து கருமம் புரிவோன்
இடர்ப்பா டின்றி, இச்சையை யினீங்கி, 3
ஆன்ம விளக்க மடையப் பெறுமே.

அன்பகத் தில்லா ஆடவர் மடவார்
துன்புற லியல்பே; தூயசிந் தையராய்க்
கணவர்த் தொழுதெழுங் கற்புடை மடவார் 4
எல்லோர் தம்மையும் நல்லோ ராக்குவர்.

அலகில் சீர்சால் அன்னையி னன்பு
தலைசிறந் ததுவே; தாய்தந் தையரைத்
தெய்வ மென்னத் தெளிந்தனர் மேலோர்;
ஆண்பெண் அரனுமை யாமென வுணரும் 5
மகளிரும் மைந்தரும் மாட்சிமிக் கனரே.

கணவற் றொழுத கற்புடை நங்கையும்
ஈன்றோர்ப் பேணி யினியன புரிந்த
சான்றோ னுய தரும வியாதனும், 6
உண்மை யுரைக்கு முரவோ ராயினர்.

ஒல்லும் வகையால் ஒன்றிய முடிவையும் 7
செல்லும் வழியை தேர்ந்திடல் மரபே.

ஐந்தாம் அதிகாரம்

நாம் செய்யுமுதவி நமக்கேயன்றி, உலகிற்கன்று

செய்ய வேண்டிய கடமையை ஆர்வத்தோடு செய்வதனாலே ஆன்ம முன்னேற்றமுண்டாகும் என்பதைப் பற்றி விவரித்துப் பேசு முன்னர்க் கருமத்தைப்பற்றி நமது நாட்டிலுள்ள பின்னுமொரு கொள்கையைச் சுருக்கமாய் உங்களுக்குச் சொல்லுவேன். ஒவ்வொரு மதத்திலும் மூன்று பகுதிகளிருக்கின்றன; அவை சித்தாந்தம், புராணம், கருமானுஷ்டானம் என்பவை; இவற்றுள் சித்தாந்தம் இன்றியமையாததாய்ச் சமயத்தின் சாரமாயுள்ளது. புராணம், உண்மையாகவோ, புனைந்துரையாகவோ பெரியோருடைய சரித்திரங்களையும், வியப்புக்குரிய விருத்தாந்தங்களையும், கட்டுக்கதைகளையும் கட்டுரைப்பது; இந்நெறியினால் சித்தாந்த முடிபுகளை எவரும் தெளிவாக விளங்கிக் கொள்ளும்படி செய்வது. செயல் முறையாவது நுண்பொருளாகிய உண்மையை அனைவரும் அறிந்துகொள்ளும்படி பருப்பொருட்படுத்திக் காட்டுவது. இக்கருமானுஷ்டானம் கருமத்தில் உள்ளது; ஒவ்வொரு சமய நெறியிலும் இன்றியமையாததாக வேண்டப்படுவது. ஏனெனில், பெரும்பாலார், அனுபவ முதிர்ச்சி பெறுமுன், நுண் பொருள் உண்மைகளை உணர்ந்துகொள்ள மாட்டார். 'எல்லாவற்றையும் யாம் அறிந்துகொள்ளுவோம்,' என நினைப்பது எளிது; அங்ஙனம் செய்யப் புகுந்த பின் அதனது அருமை புலப்படும். ஆதலால், உருவங்களும் அடையாளங்களும் உண்மையை உணர்ந்துகொள்ளப் பெரிதும் உதவியாயிருக்கின்றன. இவற்றை நாம் அகற்றிவிடுதல் கூடாது. பண்டைக் காலந்தொட்டு எல்லாச் சமயக் கொள்கைகளிலும் உருவ அடையாளங்கள் பயன்பட்டு வருகின்றன. சொற்களும் நினைவுக்குரிய அடையாளங்களாமாதலினாலே, அடையாளங்களில்லாத வழிச் சிந்தித்தலே இயலாத செயலாகிறது. பின்னுமொரு விதமாகப் பார்க்கும் பொழுது, பிரபஞ்சத்திலுள்ள பொருள் அனைத்துமே அடையாளமாக மதிக்கப்படத்தக்கன. பிரபஞ்சம் முழுவதும் ஓர் இலிங்கமாக, இறைவன் இவ்விலிங்கத்தினால் குறிக்கப்படுகிற இலிங்கி ஆகிறான். இனிச் சமயக் கொள்கைகளிலேயுள்ள அடையாளங்களும் மனிதரால் ஆக்கப்பட்டன அல்ல; ஒரு சமயத்துக்

குரிய வாதியர் சிலர் ஒருங்கு சேர்ந்திருந்து, இன்ன இன்ன பொருளைக் குறிப்பதற்கு இன்ன இன்ன அடையாளங்களை ஏற்படுத்திக் கொள்வோம் என்று ஏற்படுத்தினவுமல்ல. சமயக் கொள்கையிலுள்ள அறிகுறிகள் இயற்கையாய் உண்டாகி வளர்ச்சி எய்தின. அல்லாவிடின், குறித்த சில எண்ணங்களுக்கு உரியனவாகக் குறித்த சில அடையாளங்கள் எல்லோருடைய மனத்திலும் தோற்றுவதற்குக் காரணமென்ன? சில அடையாளங்கள் எங்கும் பரந்திருக்கின்றன. சிலுவை அடையாளம் கிறித்தவ சமயத்தோடு உற்பத்தியாயினதென்று பலர் நினைத்தல் கூடும். ஆராய்ந்து பார்க்குமிடத்து, அது கிறித்துப் பிறப்பதற்கு எவ்வளவோ முன்பு—மோஸஸ் என்பவருடைய காலத்துக்கு முன்னுசு—ஆரிய மறைகள் வெளியான காலத்துக்கும் அப்பாலாய், மனித இனத்தினர் தம் எண்ணங்களை எழுதத் தொடங்கிய காலத்தினும் பழமையாகிய காலத்திலே உண்டாகியதென்பதை நாம் அறிந்துகொள்வோம். சிலுவை அடையாளம் அஸ்ரெக்கியர், பினிசியர் என்னும் இவர்களால் வழங்கப்பட்டது; பல சாதியாருள்ளும் இது இருந்ததாகத் தெரிய வருகிறது. இனிச் சிலுவையில் ஒரு புருடர் அறையப்பட்ட அடையாளமும் எல்லாச் சாதியாருள்ளும் இருந்ததாகத் தெரிய வருகிறது. வட்டாகாரமாகிய சக்கர அடையாளமும் உலக முற்றிலும் இருந்ததாகக் காணப்படுகிறது. எல்லாத் தேசங்களிலும் பரவியிருந்த சுவஸ்திகா அடையாளம், புத்த மதத்தாரால் உலகிற் பரப்பப்பட்டதென ஒரு காலத்தில் எண்ணப்பட்டது; அது புத்த மதந் தோன்றுவதற்குப் பல நூற்றுண்டுகளின் முன்னமே எங்கும் பரவியிருந்ததென்பது இக்கால ஆராய்ச்சி முடிபாகும். அவ்வடையாளம் பண்டைக்காலப் பாபிலோனியா, எகிப்து முதலிய இடங்களிலும் காணப்பட்டது. இதனுற் பெறப்படுவதென்ன? 'இவ்வடையாளங்கள் யாவும் காரணமில்லாத வெற்றுக்கொள்கையல்ல; இவை நியாயத்தோடு தோன்றின இலச்சினைகள்; இவற்றுக்கும் மானிடருடைய உள்ளத்துக்கும் தொடர்பு உண்டு,' என்பதாம். செயற்கையினுல் ஆனதன்று மொழி; மக்கள் ஒருங்கு சேர்ந்து, இன்ன இன்ன எண்ணங்களை இன்ன இன்ன சொற்களால் குறிப்பிடுவோம் எனக் கலந்து தீர்மானிக்கவுமில்லை. சொல்லின்றி எண்ணம் இல்லை; இனி எண்ணத்தைக் குறிப்பிடாத சொல்லும் இல்லை: சொல்லும் அதன் பொருளாகிய எண்ணமும் பகுக்கொணு இயல்பினவாய் நிலைபெறுகின்றன. எண்ணங்களைக் குறிப்பிடுகிற அடையாளங்களாகவாவது ஒளி

அடையாளங்களாகவாவது இருத்தல்வேண்டும். செவிடர் ஒலி யடையாளங்களை உணர்ந்துகொள்ளமாட்டார்; பிற அடை யாளங்களையே வேண்டுவர். ஒவ்வோர் எண்ணத்திற்கும் உறுப் பாக மனத்தில் ஒவ்வோர் உருவம் தோற்றும்; இதனையே ஞான சாத்திரங்கள் 'நாம ரூபம்' எனப் புகலும்: புதியதாக ஒரு மொழியைப் படைத்துக்கொள்ளுதல் எவ்வளவு அரிதோ அவ் வளவு அரிதாகும் கருமானுஷ்டான அடையாள முறையைப் படைத்துக்கொள்ளுதலும். ஏனெனில், இவ்வடையாளங்கள் சமய உண்மைகளின் பருப்பொருள் தோற்றங்களாகும். ஆலய சேவை முதலிய கிரியைகளாற் பயனில்லை என்று சொல்வது மிகவும் எளிது; இக்காலத்து இளைஞரும் அவ்வாறு சொல்லுகின் றனர். ஆனால், ஆலயத்தினுட் சென்று தொழுபவர்கள் அங்ஙன மஞ் செய்யாதவரினின்றும் பல மரபுகளில் வேறுபட்டவர்களென் பதும் வெளிப்படை. பல வேறு வகைப்பட்ட மதங்களுக்குச் சார்பாகிய கோயில்களும், கருமானுஷ்டானங்களும்; பிறவும் அவ்வம்மதத்தினருக்கும் தத்தமக்குரிய'சமய.எண்ணங்களை உண் டாக்குகின்றனவாதலால், அனுஷ்டான அடையாளங்களை முற்றி லும் விலக்குதல் அறிவாகாது. இவற்றைப் பற்றி அறிவதும் பயில்வதும் கருமயோகத்தின் பாலனவாம்.

கருமயோக நூலின் துறைகள் இன்னும் பல இருக்கின்றன. சொல்லின் வலிமையினாற் செய்து முடிக்கக்கூடிய செயல்கள் இவையென்று அறியும்பொருட்டுச் சொல்லுக்கும் பொருளுக் கும் உள்ள தொடர்பை உணர்ந்துகொள்வது அத்துறைகளில் ஒன்று. எல்லாச் சமயங்களும் சொல்லின் வலிமையை உணர்த்து கின்றன. 'உலகத்தோற்றமே சொல்லினால் ஆயிற்று,' என்பது ஒரு முடிபு. இறைவனுடைய எண்ணத்தின் புறத் தோற்றம் 'சொல்'லாகும். படைப்புக் கடவுள் உண்ணிச் சிந்தித்துப் படைத்தாராதலினால், படைக்கப்பட்ட பிரபஞ்சம் சொல்லி லிருந்துண்டாயிற்று. உலக வாழ்க்கையிலுள்ள இன்னலினாலும் அலைச்சலினாலும் மனத்தின் கூர்மை மழுங்கி, ஆண்டு பலவாகக் கழிய, நுணுக ஆராயும் வலியினை இழந்ததனாலே, நம்மைச் சூழப் பலப்பல முறை தெள்ளத் தெளிவாக நடக்குங் கருமங்களை ஆராயாது விடுவது நமக்கு இயல்பாயிற்று. அங்ஙனமாயினும், மானிடவியற்கை மாறாது தோற்றுவதாதலினால், சில வேளைகளிற் சாதாரண விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கவும் அதிசயிக்கவும் நேரிடும்; இந்த அதிசயம் மெய்யறிவடைதற்கு முதற்படியாகும்; தத்துவஞான சமயசாத்திர ஆராய்ச்சி ஒருபுறமிருக்க, சாதாரண

உலக வாழ்வில் சொல்லுக்குள்ள வலிமை மிகப்பெரியது என நாம் காணுதல் கூடும். நான் உங்களோடு உரையாடுகிறேன். நான் உங்களைத் தொடவில்லையாயினும், என்னுடைய வாக்குச் சூழவிருக்கும் மண்டலத்திலுண்டாகும் ஒலியலைகள் உங்களுடைய செவிப்படுகின்றன. அங்கிருந்து ஒலி நாடி மூலமாகச் சென்று உங்களுடைய மனத்தில் வேறுபட்ட எண்ணங்களை உண்டாக்குகின்றன. இதனை உங்களால் தடுத்தல் இயலாது. சிந்தித்துப் பார்க்குமிடத்து, இது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "மூடா" என்று சொல்லுகிறான் என வைத்துக்கொள்ளுவோம். அதனைக் கேட்டதும், இகழப்பட்டவன் கையை மூடி இகழ்ந்தவன் தாடையிலே இடிக்கிறான்! சொல்லின் வலிமையைப் பாருங்கள்! ஒருத்தி அழுது ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாளென்று வைத்துக்கொள்வோம். அவ்வழியே வந்த மற்றொருத்தி, அழுகிறவளைப் பார்த்துச் சில அன்பான சொற்களை வழங்குகின்றாள். அவற்றைக் கேட்டதும், அழுதவள் அழுகையை நிறுத்தி, நிமிர்ந்திருந்து, புன்னகை கொள்ளுகிறாள்! சொற்களின் வலிமையைப் பார்த்தீர்களா! உயர்ந்த உண்மை ஞானத்திலும், உலக வாழ்க்கையிலும், சொற்கள் மிகுந்த வலிமையை உடையனவாம். அப்படியிருந்தும், அல்லும் பகலும் ஆராய்ச்சியின்றி நாம் இந்த மேலான வலிமையைப் பயன்படுத்துகிறோம். இந்த வலிமையின் இயற்கையை அறிந்து இதனைத் தக்கவாறு உபயோகிப்பது கரும யோகத்தைப் பொறுத்தது.

பிறர்க்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் நமது கடமையாகும். நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? ஆராயாது சொல்வோமாயின், உலக நன்மைக்காக என்போம். நுணுகி ஆராய்ந்து பார்க்கின், நம்முடைய நன்மைக்காகவே உலகிற்கு நன்மை செய்கிறோமென்பது புலப்படும். எப்பொழுதும் உலகிற்கு நன்மை புரிவதை மேலான கொள்கையாகக் கொள்ளுதல் வேண்டும்; அப்படியிருந்தும், ஊன்றிச் சிந்திப்போமாயின், உலகம் நம்முடைய உதவிக்குக் காத்திருக்கவில்லை என்பதை அறிவோம். நாம் வருவோம், உதவி செய்வோம் என்று எண்ணியா இவ்வுலகம் உண்டாக்கப்பட்டது! நான் சில நாளுக்கு முன்பு ஒரு சொற்பொழிவைப் படித்துப் பார்த்தேன். "நாம் உதவி புரிவதற்குக் காலம், இடம் முதலிய வசதிகளோடு கூடியிருத்தலினாலே, இவ்வுலகம் அழகியது!" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. இவை கேட்க இனிய சொற்களே; ஆயி

னும், இவ்வுலகம் நமது உதவியை வேண்டி நிற்கிறதென்பது தேவ நிந்தனையாகுமல்லவா ? உலகில் துன்பமிருக்கிறதென்பதை நான் மறுத்துரைக்கவில்லை ; ஆதலினாலே, வெளி வந்து மற்றவர்களுக்கு உதவி புரிவதே நமது கடமை. ஆயினும், ஈற்றில் மற்றவர்களுக்கு உதவி புரிவது நமக்கு உதவி புரிவதேயாகும். நான் சிறுவனாயிருந்தபோது சில வெள்ளெலிக்குஞ்சுகளை வளர்த்தேன். அவை ஒரு சிறு பெட்டியினுள் விடப்பட்டிருந்தன. அந்தப் பெட்டியுள் அமைந்திருந்த சில்லுகளைப் பற்றி அவ்வெலிக் குஞ்சுகள் ஏற முயலச் சில்லுகள் சுழன்று முன்னிலைக்கு வந்துவிடுவதனால், எலிக் குஞ்சுகள் இருந்த விடத்திலேயே இருந்தன. உலகுக்கு உதவி செய்ய முயல்வதும் இத்தன்மையதே. சுயச்சீர்திருத்தமே இம் முயற்சியாலடையும் பயனாகும். இவ்வுலகம் நல்லதுமன்று, தீயதுமன்று. ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஓர் உலகத்தைப் படைத்துக்கொள்கிறான். குருடனொருவன் உலகத்தைப் பற்றி நினைக்கும்போது, மென்மை, வன்மை, சூடு, குளிர் என்ற இத்தகைய தன்மைகளோடு பொருந்தியதாக நினைப்பான். நாம் இன்ப உருவாயிருத்தலுங் கூடும், துன்ப உருவாயிருத்தலுங் கூடும். இந்த உண்மையை வாழ்வில் பல முறையுங் கண்டிருப்போம். பொதுவாக, இளைஞர்கள், நடப்பனவெல்லாம் நன்மையெனக் காண்பார்கள். வயதின் முதிர்ந்தோர், எல்லாம் தீமையெனக் காண்பார். இளைஞர்கள், வாழுங்காலம் இருக்கிறதென்ற எண்ணமுடையவர்கள் ; மூப்பெய்தியவர், காலங் கழிந்துவிட்டதே என்று வருந்துகின்றனர். அனுபவித்து முடிக்கக்கூடாத நூற்றுக்கணக்கான ஆசைகள் உள்ளத்திற்கிடந்து அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றன. இருபாலாரும் அறிவிலிகளே. மனநிலைக்கேற்றவாறு வாழ்வு நல்லதாகவுங் கொள்ளப்படும், தீயதாகவுங் கொள்ளப்படும் ; தன்னளவில் அது நல்லது மன்று, தீயதுமன்று. நெருப்புத் தன்னளவில் நன்மையானதோ, தீமையானதோ! குளிரைப் போக்கி அனலைக் கொடுக்கும் பொழுது, 'நெருப்பு எவ்வளவு அழகியது! எவ்வளவு இன்பத்தைக் கொடுப்பது!' என்கிறோம். அந்த நெருப்பே விரலைச் சுடும் பொழுது, அதன்மேல்குறை கூறுகின்றோம். தன்னளவில் நெருப்பு நல்லதுமன்று, தீயதுமன்று ; வேறுபாட்டிற்கேற்ப நன்மை தீமையாகிய உணர்ச்சிகளை உண்டாக்குகிறது ; உலகத்துக்கும் இஃதொக்கும். தன்னளவில் உலகம் ஒரு குறையுமில்லாதது ; நம்முடைய உதவியில்லாமலே அது நடந்துகொண்டு

போகும்; அதற்கு உதவி செய்ய நாம் தலைப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆயினும், நாம் நன்மை செய்ய வேண்டும்; நன்மை செய்ய விரும்பும் விருப்பம் சிறந்த வலிமையைத் தருவது. பிறர்க்கு நன்மை செய்வது நமக்குக் கிடைத்த பெரும்பேறு என்பதை நாம் என்றும் மறவாது நினைத்திருக்க வேண்டும். உயர்ந்த பீடத்திலிருந்துகொண்டு கையில் ஐந்து பைசாவை எடுத்து, "ஏ, பிச்சைக்காரா, இதை வாங்கிக்கொள்," என்று கொடுப்பதனுற் பயனில்லை. நீங்கள் கொடுக்கிற கொடையைப் பெற்றுக் கொள்வதனுல், உங்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையைத் தரப் பிச்சைக்காரன் ஏற்பட்டிருக்கிறுனே என்று அவனுக்கு நன்றி கூறுவது உமது கடன். வாங்குபவனன்றி, கொடுப்பவனே ஆசீர்வதிக்கப்பட்டவன். உலகில் நன்மையும் இரக்கத்தையும் பயில்வதற்கு இடங் கிடைத்ததே என்று இன்புற வேண்டும். ஏனெனில், இவ்விதப் பயிற்சியினுல் மாத்திரமே நீங்கள் தூய நிறைவுள்ளவர்களாவீர்கள். நற்செயல்களெல்லாம் நம்மைப் பரிசுத்தரும் பூரணத்துவ முள்ளவருமாக்குவன. நாம் மிக முயன்றுலுஞ் செய்யக் கூடிய தென்ன? ஒரு மருத்துவச் சாலையையோ, சில பாதைகளையோ, அன்ன சத்திரங்களையோ செய்து முடித்தல் கூடும். தரும நிதியொன்றை ஏற்படுத்தி இரண்டு மூன்று கோடி ரூபாயைச் சேர்த்து, ஒரு கோடியை ஒரு மருத்துவச்சாலை கட்டுவதிற்செலவிட்டு, மற்றெரு கோடியைக் குடி வகையிலுங் கூத்திலும் விருந்திலும் செலவிட்டு, எஞ்சிய ஒரு கோடியில் அரை வாசியைச் செயலாளர்களுக்கும் அரைவாசியை ஏழைகளுக்கும் போம்படி செய்கிருேமென்று வைத்துக்கொள்ளுவோம்; இவற்ருல் ஆவதென்ன? உரத்த புயற் காற்று வீசுமெனில், ஐந்து நிமிஷத்திலே, கட்டடமனைத்துந் தகர்ந்துபோம்; பின்னர் என்ன செய்வோம்? ஒரு பூகம்பம் வந்தால், பாதைகள், மருத்துவச் சாலைகள், பட்டினங்கள், கட்டடங்களெல்லாம் பறந்துபோம். உலகத்துக்கு நன்மை செய்ய முற்படுகிருேம் என்ற மூட வார்த்தையை விட்டுவிடுவோம். அது நம் உதவிக்காகக் காத்துக்கொண்டிருக்கவில்லை. ஆயினும், இடைவிடாமல் முயன்று, அதனுல் நமக்கு வரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; பூரணத்துவத்தை அடைவதற்கு இதுவே வழியாகும். நாம் ஒரு வறியவனுக்கு எத்துணை உதவி செய்தாலும், அவன் நமக்குக் கடமைப்பட்டவனல்லன்; அவன் நமக்குத் தரும சிந்தையைத் தந்தானுதலின், நாமே அவனுக்குக்

கடமைப்பட்டவராவோம். ‘ நாம் உலகிற்கு நன்மை செய்தோம், செய்யவல்லோம்,’ என்று நினைப்பதும், இன்னுர் இன்னுருக்கு உதவி செய்தோமென்று நினைப்பதுந் தவருகும் ; அது பேதைமையான எண்ணம். பேதைமையான எண்ணங்களெல்லாம் துன்பத்தைத் தருகின்றன. ஒருவனுக்கு நாம் நன்மை செய்ததாக எண்ணுகிருேம். அப்படி எண்ணும் பொழுது, அவன் நமக்கு நன்றியறிதலுள்ளவனுக இருக்க வேண்டுமென்ற நினைப்பு உண்டாகிறது. அவன் நன்றியறிதல் காட்டாதபோது துன்பமுண்டாகிறது. நாம் செய்த நன்மைக்குக் கைம்மாறு கிடைக்க வேண்டுமென்று காத்திருப்பது எதற்காக ? உமது உதவியைப் பெறுபவனுக்குக் கடமைப்பட்டவராயிரும் ; அவனைத் தெய்வமாக நினைக. மனிதருக்கு உதவி செய்யும் நெறியினுலே கடவுளைத் தொழும் பெரும் பேறு கிடைத்ததன்ருே ? பற்றற்றிருக்கும் நிலையில், பலனைக் கருதுவதனுல் வரும் துன்பத்தினின்று விடுபட்டு, மிகுந்த உவகையினேடும் நற்கருமம் செய்யலாம். பற்றின்றிச் செய்யுங் கருமத்தினுல் உவகைக் குறைவுந் துன்பமும் ஒரு போதும் நேரிடா. உலகம் இன்பதுன்பங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்பது திண்ணம்.

பொருள் சிறிது பெற விரும்பிய ஏழையொருவனிருந்தான் ; எவ்வழியாகவாவது முயன்று ஒரு பூதத்தை அடிமையாக்கிக்கொண்டாற் பொருளோ, விரும்பியது வேறெதுவோ பெற்றுக்கொள்ளலாமென்பதை அறிந்து, பூதம் ஒன்றைப் பற்றிக் கொள்வதற்குப் பெரிதும் விருப்பமுடையவனுய்த் திரிந்தான். ‘ பூதத்தைத் தரக்கூடியவர் யார் ?’ என்று தேடிக்கொண்டு திரியும் பொழுது, பெரிய சக்திகள் வாய்ந்த ஒரு தபோதனரைக் கண்டு, அவருடைய உதவியை வேண்டி நின்ருன். தபோதனர் அவனைப் பார்த்து, “ பூதம் உனக்கு எதற்காக வேண்டும் ?” என்று வினவினுர். அவன், “ எனக்குப் பணிவிடை செய்வதற்கு ஒரு பூதம் வேண்டும், ஐயா ; நான் அதனைப் பெரிதும் விரும்புகிறேன் ; எவ்விதத்தால் ஒரு பூதத்தைப்பெற்றுக் கொள்ளலாமென்று எனக்குக் கற்பித்தருளுவீர்,” என்ருன். தபோதனர் அவனைப் பார்த்து, “ வீணில் அலையாமல் வீட்டுக்குப்போ,” என்ருர். அடுத்த நாளும் அந்த மனிதன் தபோதனரிடஞ் சென்று, அழுது வணங்கி, “ ஐயா, ஒரு பூதத்தைத் தந்தருளுவீர் ; எனக்கு உதவி செய்ய ஒரு பூதம் அவசியம் வேண்டும்,” என்ருன். ஈற்றில் தபோதனரும் வெறுப்புற்றவராய், அவனைப் பார்த்து, “ இதோ, இந்த எழுத்தைப் படி ;

நான் சொல்லும் மந்திரத்தைச் செபித்துக்கொண்டிரு; விரைவில் ஒரு பூதந்தோன்றி, நீ இடுகிற கட்டளைகளையெல்லாஞ் செய்துகொண்டிருக்கும்; ஆனால், கவனி; இந்த பூதங்கள் மிகவுங் கெட்ட குணமுடையன. உன் முன் தோன்றிய பூதத்திற்கு இடைவிடாமல் வேலை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும்; தவறினாலோ, உயிரை வாங்கிவிடும்,'' என்றார். ''அது மிக எளிதான காரியம்; நான் பூதத்துக்கு ஓயாது வேலை கொடுத்துக்கொண்டிருப்பேன்,'' என்று சொல்லிவிட்டு, அந்த மனிதன் காட்டினுள்ளே நுழைந்து, மந்திரத்தை உச்சரித்தான். அப்போது ஒரு பெரிய பூதந்தோன்றி, ''நான் ஒரு பூதம்; உன்னுடைய மந்திரவலிமையினால் நீ என்னை வென்றுவிட்டாய்; நீ எனக்கு ஓயாது வேலை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும். தவறினாலோ, அந்த நிமிஷமே உன்னைக் கொன்றுவிடுவேன்!'' என்றது. அப்பொழுது அந்த மனிதன், ''சரி; எனக்கு ஒரு மாளிகை கட்டு,'' என்றான். பூதம், ''ஆயிற்று; அதோ பார் மாளிகை!'' என்று காட்டியது. பின்னர் அம்மனிதன், ''திரளான பணங்கொண்டுவா,'' என்றான். பூதம், ''இதோ பணம்,'' என்றது. ''இந்தக் காட்டினை வெட்டி இவ்விடத்தில் அழகிய ஒரு நகரம் அமைப்பாய்'' என்றான். ''ஆயிற்று; வேறென்ன வேலையுண்டு?'' என்றது பூதம். '''கணப்பொழுதிலே சொல்வன எல்லாவற்றையுஞ் செய்துவிடுகிறதே! நான் என்ன செய்வேன்!'' என்று எண்ணினவனாய் மனிதன் பயந்துகொண்டு நின்றான். அப்பொழுது பூதம் அவனைப் பார்த்து, ''அடே, வேலைகொடு; அல்லது உன்னை விழுங்கி விடுவேன்!'' என்றது. அம்மனிதன் இன்னது செய்யலாம் என்று அறியாதவனாய், ஓடோடியும் வந்து தபோதனருடைய காலில் விழுந்து, ''ஐயா! என் உயிரைக் காத்தருள்வீர்!'' என்றான். தபோதனர் காரணம் என்ன என்று விசாரிக்க, ''ஐயா; பூதத்துக்கு என்ன வேலை கொடுக்கலாமென்பது தெரியவில்லை. அது சொல்வதையெல்லாங் கணப்பொழுதிற் செய்து முடித்துவிடுகிறது. 'வேலை கொடாவிடின் விழுங்குவேன்!' என்கிறது'' என்றான். அக்கணமே பூதமும் வந்து, ''அடே, உன்னை விழுங்கிவிடுகிறேன்!'' என்று ஆரவாரம் செய்தது. மனிதன் அச்சத்தினால் நடுங்கித் தபோதனரைப் பணிந்து நின்றான். தபோதனர் அவனைப் பார்த்து, ''ஒரு வழி சொல்லுகிறேன், கேள்; அதோ ஒரு நாய் நிற்கிறது பார்; சீக்கிரமாக உன் வாளையுருவி நாயினது சுருண்ட வாலை வெட்டிப்

பூதத்தினிடங் கொடுத்து நிமிர்த்தும்படி சொல்,'' என்றார். மனிதனும் அவ்வண்ணமே செய்து பூதத்தினிடம் வாலைக் கொடுத்து, "இதை நிமிர்த்து,'' என்றான். பூதம் அதனை வாங்கி அமைதியாக நிமிர்த்திற்று. நிமிர்த்திக் கையை எடுத்தவுடனே வால் மறுபடியும் சுருண்டு போயிற்று. பின்னும் ஒரு முறை சாவதானமாக நிமிர்த்திற்று. வால் மறுபடியும் சுருண்டு போனது. இப்படிப் பலநாள் கழிந்தது. பூதம் இளைத்துப் போய், "இத்தகைய இன்னல் எனக்கு ஒரு போதும் நேர்ந்ததில்லை. நானோ, வயதில் முதிர்ந்தவன். முன்னொரு போதும் இத்தகைய தொந்தரவு பட்டதில்லை; நான் உன்னோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்கிறேன்; என்னைப் போக விடு; நான் தந்த பொருள்களையெல்லாம் நீ வைத்துக்கொள்; நான் உனக்கு ஒரு போதுந் தீங்கு செய்யேனென்று உறுதியாக வாக்குறுதி செய்கிறேன்!'' என்றது. மனிதனும் மகிழ்ச்சியோடு அவ்வுடன்படிக்கைக்கு ஒருப்பட்டுப் பூதத்தைப் போகவிடுத்தான்.

இவ்வுலகம் அந்த நாயின் வாலைப்போலக் கோணலாயிருக்கிறது. பல நூறு ஆண்டுகளாகப் பலரும் அதனை நிமிர்த்த முயலுகின்றனர். அது மீட்டும் மீட்டுஞ் சுருண்டு போகிறது. வேறு எப்படியாகும்? பற்றில்லாமல் வேலை செய்யுஞ் சூழ்ச்சியை அறிந்தவன் வெறி பிடித்தவனாகான். உலகில் வெறி—அதாவது தான் கொண்டதே சரி; மற்றவர்கள் கொண்டது பிழையென்று நினைக்கிற ஒரு வகைப் பயித்தியம்—இல்லாவிட்டால், இப்பொழுதுள்ள நிலையினும் உலகம் விரைவாக முன்னேற்றமடைந்து கொண்டு போம். வெறிபிடித்தலைவதால் மனிதர் திருத்தமடைவார் என்று நினைப்பது தவறு. பொறாமையையுஞ் சீற்றத்தையும் உண்டாக்கி மனிதர்களை ஒருவரோடொருவர் சண்டையிடும்படி செய்து இரக்க உணர்ச்சியை அழிய விடுவதனாலே வெறி முன்னேற்றத்தைத் தடுக்குமியல்பினது. நாம் செய்யுஞ் செய்கையும் வைத்திருக்கும் பொருளும் உலகத்தில் மிகச் சிறந்தனவென்று எண்ணுகிறோம்; 'எம்மிடம் இல்லாதன மதிப்பற்றன,' என்னும் எண்ணமும் இதனோடு உண்டாகிறது; இது பெரும்பித்தம். இந்தக்குணம் மனத்தில் உதிக்கும்போது, 'நாயின்வால் என்றுங் கோணலானது,' என்பதை நினைத்தல் வேண்டும். உலகத்தைப் பற்றிச் சிந்தித்து, உறக்கமின்றி நீங்கள் அலைய வேண்டுவதில்லை; உங்கள் உதவியில்லாமலே உலகம் நடந்துகொண்டு போகும். பயித்தியத்தைத் தவிர்த்த பின்பே கருமஞ்செய்யத் தக்கவர்களாவீர். பதறாத நிலையும் சாந்தமு முடையவனாய்,

ஆராய்ந்து துணியும் அறிவும் குளிர்ந்த சிந்தையுங் கூடியவனு யிருக்கும் மனிதனே, இரக்கத்தினேடும் அன்பினேடும் நற்கரு மஞ் செய்து, தனக்கும் நன்மையை விளைத்துக்கொள்ளுகிருன். பயித்தியக்காரன், ஓர் அறிவிலி ; இரக்கமில்லாதவன் ; அவன் உலகத்தை நிமிர்த்தவும் மாட்டான் ; பரிசுத்த நிலையையும் பூரணத்துவத்தையும் அடையவும் மாட்டான். இந்தச் சொற் பொழிவில் விரித்துரைத்த பொருளைச் சுருக்கமாகச் சொல்லி முடிப்போம் :

முதலாவதாக—' உலகத்துக்கு நாம், கடனாளிகளேயன்றி, உலகம் நமக்குக் கடனாளியன்று ' என்பதை மறவாதிருத்தல் வேண்டும். உலகத்துக்கு உதவி செய்யும்படி கிடைத்தது நமக்குப் பெரும்பேருகும். அவ்வகை உதவி செய்ததனுல் உலகத்துக்கன்றி, நமக்கே பெருநன்மையை விளைத்துக்கொள் கிருேம்.

இரண்டாவதாக—இவ்வுலகத்தைக் காப்பதற்கு ஒரு கடவுள் இருக்கிருர். ஆதலால், உலகம் அலையுற்று உங்கள் உதவியையாவது என்னுடைய உதவியையாவது வேண்டி நிற்க வில்லை. கடவுள் உலகத்தில் எப்பொழுதும் நம்மோடு இருக் கிருர். அவர் நித்தியர் ; என்றும் தொழில் புரிபவர் ; எப்பொழு தும் விழித்திருப்பவர். உலகனைத்தும் துயிலும் சமயத்தில் அவர் விழித்திருக்கிருர் ; இடைவிடாமற் கருமஞ் செய்கிருர். உலகில் உண்டாகிற தோற்றங்கள் மாற்றங்கள் அனைத்தும் அவரால் நடப்பன.

மூன்ருவதாக—நாம் ஒருவர் மேலும் அழுக்காறு கொள்ளு தல் கூடாது. உலகம் எப்பொழுதும் நன்மையுந் தீமையுங் கலந்ததாகவே இருக்கும். பலமற்றவருக்கு இரங்குவதும், பிழை செய்தவருக்கு அன்பு காட்டுவதும் நமது கடமையாகும். இவ்வுலகம் நல்லொழுக்கத்தை வளர்ப்பதற்கேற்ற ஒரு பயிற்சிச் சாலையாய் இருக்கிறது. பயிற்சி வலிமையினுலே உயர்ந்த ஆன் மிக சத்தியை அடைவோம்.

நான்காவதாக—நாம் ஒரு வகையான வெறியினுலும் பற் றப்பட்டிருத்தல் கூடாது ; ஏனெனில், வெறி அன்புக்கு மாரு னது. "பாவியைப் பகைக்கவில்லை ; பாவத்தைப் பகைக்கின் ேறும்," என்று சில வெறி பிடித்தவர் சொல்வதுண்டு. பாவத் துக்கும் பாவிக்கும் பேதங்கண்டு பாவத்தைப் பகைத்து, பாவியை நேசிக்கிற மனிதனைக் காணும்பொருட்டு எத்தனை தூரமாவது போகச் சித்தமாயிருக்கிறேன். சொல்வது எளிது ;

செய்வது அரிது. பொருளுக்கும் தன்மைக்கும் வேறுபாடறியக் கூடியவன் பூரணத்துவத்தை அடைந்தவன். ஆதலால், செய்கையில் இதனைக் காட்டுவது எளிதன்று. மேலும், நாம் எவ்வளவு அமைதியாய் இருக்கிறோமோ, உள்ளங் களைப்புறுமலிருக்கிறோமோ, அதற்குத் தக்கபடி நாம் செய்கிற கருமம் மேலான நன்மையைப் பயக்கும்.

பல்வகைச் சமயப் பான்மையா ராயின்
சொல்லிய முடிபுந் தொன்மைக் கதையும்
கருமப் பகுதியுங் கலந்து தோன்றும் :
உருவங் குறியீ டொன்றிய கருமம்
உண்மை யடைதற் குறுதுணை யாகும். 1

சொல்லி னுற்றல் சொல்லிடிற் பெரிதே. 2

நாம்செய் யுதவி நமக்கே யன்றி
உலகிற் கல்ல ; இவ் வுலகினைப் புரக்க
ஈச னுளன் ;அவற் கிரும்பணி புரியும்
பேறு நமதெனப் பேணுதல் வேண்டும் ;
பண்பா ரன்பின் பயிற்சிச் சாலை
மண்சா ருலகென மதித்தல் வேண்டும். 3

மேவிய நிலையினை மீட்டுமெய் துதலால்
நாய்வா லொக்குமிஞ் ஞால மென்ப. 4

ஆரும் அதிகாரம்

பூரணமாகிய தன்னல மறுப்பே பற்றின்மை

நாம் செய்யும் கருமத்தின் விளைவாகிய எதிர்ச் செயல் நம்மை வந்தடைதல் போலவே, நமது கருமத்தின் பிரதி கருமம் பிறரையும், பிறருடைய கருமத்தின் பிரதி கருமம் நம்மையும் தாக்குதல் கூடும். தீமை செய்வோர் மேலும்மேலுந் தீமை செய்யுமியல்பினராயிருத்தலையும், அன்னுரே நன்மை செய்யத் தொடங்கினுல் மேலும் மேலும் நன்மை செய்துகொண்டு போவதையும் நீங்கள் எல்லோருங் கவனித்திருப்பீர்கள். இவ்வாறு மனப்பான்மை வளர்ச்சியடைவதற்குக் காரணம் எதுவென்று ஆராய்வோமாயின் கருமமும் பிரதி கருமமும் ஒன்றையொன்று தாக்குமியல்பின என்னும் ஆதாரத்தினுலன்றிப் பிறிதெந்த வழியினுலும் அதனை விளக்குதல் இயலாது என்பதை அறிந்துகொள்வோம். பௌதிக சாத்திர முடிபொன்றினைச் சான்ருகக் கொள்வோம்: நான் ஒரு கருமஞ் செய்யும்போது என் மனம் ஒருவகை இயக்க விகற்பத்தை அடைகிறது. அதே வகையான விகற்ப நிலையையுடைய ஏனைய மனங்களனைத்தும் என் மனத்தினுல் தாக்கப்படுந்தன்மையவை; பண்ணொத்த நீர்மையவாகிய பல இசைக் கருவிகள் ஓர் அறையினுள்ளிருந்தால், அவற்றினுள் ஒன்றிலிருந்தெழுஞ் சுரம் மற்றக் கருவிகளையுந் தாக்கிக் குறித்த சுரத்தினை அவற்றினின்றும் எழும்படி செய்கின்றது. மனத்தினின்று எழுகிற எண்ணங்களும் அவ்வாறே ஏனைய மனங்களைத் தாக்குகின்றன. தாக்கலின் அளவு, தூரம் முதலிய காரணங்களால் வேறுபடுமெனினும், ஒரு மனம் மற்ருெரு மனத்தினைத் தாக்குமென்பது வெளிப்படை. நான் ஒரு தீய தொழிலைச் செய்யும்போது என் மனம் ஒரு வகை இயக்க நிலையை அடைகின்றது. அந்நிலையில், பிரபஞ்சத்தில் அந்த நிலையிலே இருக்கிற ஏனைய மனங்களை என்னுடைய மனம் தாக்கும். அங்ஙனமே நான் ஒரு நற்ருெழில் செய்யும் போது என் மனம் வேருேர் இயக்க நிலையை அடைகின்றது. அந்நிலையையுடைய ஏனைய மனங்கள் என் மனத்திலே தாக்கப்படும் இயல்பின. பின்னும் இங்ஙனம் மனத்தை மனம்

தாக்குஞ் சக்தி இயக்க வன்மைக் கேற்பக் குறைந்துங் கூடியு மிருக்கும்.

ஒளியலையானது, பல நூற்றுண்டுகளாக வெட்டவெளியிற் சென்று, ஈற்றில் ஒரு பொருளிற் படுதல் போல, மனத்திலிருந்து எழுந்த எண்ணங்களாகிய அலைகளும் நூற்றுக்கணக்கான வருடங்கள் கழிந்த பின் தனது நிலைமைக்கேற்ற பிறிதொரு மனத்தைப் பற்றுதல் கூடும். ஆதலால், நம்மைச் சுற்றியிருக்கும் வானிலே நன்மையுந் தீமையுமாகிய பல வகை எண்ணங்கள் நிறைந்திருத்தல் கூடும். மனத்திலிருந்தெழுந்த ஒவ்வோர் எண்ணமும் அழிந்து போகாது தன்னைப் பற்றுதற்கேற்ற ஒருபொருள் கிட்டும் வரையும் அசைவற்று நிற்கும். பற்றுதற்கு ஏற்ற மனம் ஏற்பட்டதும் பற்றுக்கோடு இல்லாதிருந்த எண்ணங்கள் அம் மனத்தினை உடனே சென்று பற்றும். ஒரு மனிதன் தீமையான தொழில் செய்யும்போது அவனுடைய மனநிலைக்கேற்றனவாய் அவனைச் சூழ வானிலிருந்த எண்ணங்கள் அவனுடைய மனத்தினுட்புகும். ஆதலாலேதான் தீமை செய்பவன் மேலும் மேலும் தீமை செய்துகொண்டே போகிறுன். அவனுடைய தீமையும் வளர்கிறது. நன்மை செய்வோனுடைய நிலையும் அத் தகையதே. ஆகாயத்திலுள்ள நல்ல எண்ணங்களையெல்லாம் அவன் பெறுதற்குத் தகுதி பெறுகின்றுன். அவனுடைய நன்மைத் தன்மை வளர்ச்சி அடைகிறது. ஆதலினுலே, நாம் தீமை செய்யும் போது இரண்டு வகையான அபாயத்தை வருவித்துக் கொள்ளுகிறேம். முதலாவது, நம்மைச் சூழவிருக்குந் தீமைக் கெல்லாம் இருப்பிடமாகிறேம்; இரண்டாவது, பிறரைச் சென்று தாக்கக் கூடிய தீமையலைகளைப் படைத்துவிடுகிறேம். நம்முடைய தீமையெண்ணங்கள் நமக்கு ஒரு நூற்றுண்டுக்குப் பின்பு வருகிறவர்களையும் சென்று தாக்குதல் கூடும். ஆகவே, தீமை செய்வதனுல் நமக்கும் பிறருக்கும் தீங்கினை விளைவித்துக் கொள்கிறேம். நன்மை செய்வதனுல் நமக்கும்பிறருக்கும் நலத்தை விளைவித்து கொள்கிறேம். மனிதனிடத்துள்ள ஏனைய சக்திகளைப் போல நன்மை தீமை செய்கிற சக்தியும் புறத்தேயிருந்து வலிமையை உட்கொள்ளும் ஆற்றலுடையது.

கரும யோகத்தின்படி ஒருவன் செய்த கருமம் பயனைத்தரும் வரையும் அழிந்து போகாது. கருமத்தினுல் அடையும் பயனை விட்டு விலகுவதற்குப் பிரபஞ்சத்தில் ஒருவழியுமில்லை. தீமை செய்தால் துன்பப்பட்டுத் தீரவேண்டுவது அவசியம். அதனை

நிறுத்தவோ, அழிக்கவோ, கூடிய சக்தி எந்த உலகத்திலுமில்லை. அவ்வண்ணமே நன்மை செய்தால், அந்த நன்மைப் பயனைப் பெறுதபடி தடுப்பதற்கேற்ற சக்தி எந்த உலகத்திலுமில்லை. காரணத்தினுற் காரியமுண்டாகும்; இதைத் தடுக்க யாரால் இயலும்? இனிக் கருமயோக ஆராய்ச்சியில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமுண்டு: அஃதாவது, எந்தக் கருமத்திலும் நன்மையுந் தீமையும் கலந்திருக்குந் தன்மையன; 'இது நன்மை; இது தீமை,' என்று நாம் ஒரு கோடு இழுத்து வரையறைப்படுத்துதல் இயலாத காரியமாகும். ஒரு காலத்தில் நன்மைப் பயனையுந் தீமைப் பயனையும் ஒருங்கு தாராத கருமம் இல்லை. சான்ருக, நான் உங்களோடு கடவுளைப் பற்றியுஞ் சமயத்தைப் பற்றியும் உரையாடுகின்றேன். நான் கலப்பில்லாத நற்ருெழில் புரிந்துகொண்டிருக்கிறேனென்று உங்களுட் சிலர் நினைத்தல் கூடும். ஆனுல், நான் பேசும் பொழுது எனது வாயிலிருந்தெழும் வெப்பம் பட்டு என்னைச் சூழ வாயு மண்டலத்திலிருக்கும் ஆயிரக்கணக்கான கிருமிகள் நாசமாதல் கூடும்; அவற்றிற்கு நான் தீமை விளைவிக்கிறேன். முழு நன்மை பயக்கிற—அல்லது பூரணமான தீமையைத் தருகிற—கருமம் ஒன்றுமில்லை; கருமம் அருகிலிருக்கும்போது நம்மையறிந்தோருக்கு அது நன்மையை உண்டாக்குமாயின், அந்தக் கருமத்தை நாம் 'நற்கருமம்' என்கின்ருேம். நாம் முன்பு காட்டிய உதாரணத்தின்படி நான் உங்களோடு உரையாடுவதை நீங்கள் நற்கருமமாகக் கொள்கிறீர்கள்; கிருமிகள் தீக்கருமமாகக் கொள்ளுகின்றன. கிருமிகளை நீங்கள் கண்டுகொள்ளவில்லை; உங்களைக் காண்கிறீர்கள். நான் பேசுந்தொழில் உங்களுக்கு விளைக்கிற பயன் வெளிப்படையாகத் தோற்றமாகிறது; கிருமிகளுடைய நிலை வெளிப்படையாகத் தோன்றவில்லை. ஆகவே, நாம் செய்யும் தீய தொழிலைப் பாகுபாடு செய்து பார்ப்போமாயின், அஃது எங்கேயோ ஓரிடத்து அற்பமாகிய நன்மையையாவது உண்டாக்குகிறதென்பதை அறிந்து கொள்ளுவோம். நற்கருமத்தியுள்ள தீமைத் தன்மையைக் காண்பவனும், தீக்கருமத்திலுள்ள நன்மைத் தன்மையைக் காண்பவனும் கருமயோக ரகசியத்தை அறிந்தவனுவான்.

இதனுல் என்ன பெறப்படுகிறது? நாம் எவ்வளவு முயன்ருலும் முற்றிலும் மாசற்றதாகவோ, அதாவது தீமையைத் தாராததாகவோ, அன்றேல் முற்றிலும் மாசுள்ளதாகவோ, அதாவது தீங்கு மாத்திரமே விளைப்பதாகவோ உள்ள கருமத்தைச் செய்தல்

இயலாததாகும். பிறருக்குத் தீங்கு விளையாதவண்ணம் உயிர் வாழ்தலாவது மூச்சுவிடுதலாவது இயலாது. நாம் உண்ணுகிற உணவின் கவளம் ஒவ்வொன்றும் பிறர்வாயிலிருந்து கவர்ந்தெடுக்கப்பட்டது. நான் வசிப்பதனுல் மற்ற மனிதருக்கோ, விலங்குகளுக்கோ, பிராணிகளுக்கோ இடந்தராது அவற்றை ஒதுக்கித் தள்ளுகிறேன். இஃதிவ்வண்ணமிருத்தலால், முற்றிலும் தீமையினின்று அகன்ற தொழில் செய்தல் இயலாத காரியமாகிறது. நாம் நித்தியமாக முயன்றாலும், இந்த வலையிலிருந்து தப்புதல் இயலாது. மேன்மேலுங் கருமஞ் செய்துகொண்டே போகலாம்; கருமப்பயனில் நன்மையோடு தீமையுங் கலந்திருப்பதை மாற்றுதல் நம்மால் இயலாது.

அப்படியாயின், கருமஞ்செய்வதன் முடிவென்ன என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. உலகம் பரிபூரண நிலையையடையுமென்றும், நோய், துன்பம், மரணம், தீமை இவை முற்றிலும் அகன்று போகிற ஒரு காலம் வருமென்றும் நினைக்கிற மனிதர் ஒவ்வொரு தேசத்திலும் உண்டு. இப்படி நினைப்பது நல்லெண்ணந்தான். இதனுல் அறியாமையிற்கிடந்து வருந்துபவர்களைக் கைதூக்கி விடத்தக்க சக்தியுண்டாகும். ஆயினும், சிறிது சிந்தித்துப் பார்ப்போமாயின், இத்தகைய நிலை ஒருபோதும் வாராதென்பதை உணர்வோம். நன்மையும் தீமையும் ஒன்றினையொன்று ஒத்தவை. 'அப்படியாயின், பூரணத்துவம் என்பதென் பொருளென்ன?' எனின், பூரணமான வாழ்வு என்னுஞ் சொற்றொடர் பொருட்பொருத்தமில்லாதது என்போம். வாழ்க்கை என்பது நமக்கும் புறத்தேயுள்ள பொருள்களுக்கும் மாறுமல் நடந்துகொண்டிருக்கும் போர் ஆகும். நாம் கணந்தோறும் புறத்தேயுள்ள பிரபஞ்சத்தோடு சண்டையிட்டுக்கொண்டிருக்கிறோம்; தோற்றால் உயிர் போய்விடும். உண்ணும் உணவோடுஞ் சுவாசிக்குங் காற்றோடும் சண்டையிட வேண்டியிருக்கிறது. உணவோ, காற்றோ கிடையாவிடின் மரணம் வந்துவிடுகிறது. வாழ்க்கையானது எளிதாகவும் மெதுவாகவுங் கழிவதொன்றன்று. அது தொடர்பில்லாத பல பொருள்களின் சேர்க்கையாலானது. உள்ளிருக்கும் பொருளுக்கும் புறத்தே அமைந்த பிரபஞ்சத்திற்கும் ஓயாது நடந்து கொண்டிருக்கும் போரே வாழ்க்கை எனப்படுகிறது. சண்டை ஓய்ந்துவிடின், உயிர் வாழ்க்கையும் ஓய்ந்துவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், ஓய்வடைந்த பின்புதான் பூரண இன்பம் உண்டாகும்; உயிர் வாழ்க்கையும் கழிந்துவிடும். அதற்கு மேலான இன்பத்தின்

ஆயிரத்தில் ஒரு பங்கை மக்களடைவதற்கு முன் உலகம் குளிர்ந்துவிடும். நம்முடைய காலமும் கடந்து போம். ஆதலால், இந்த ஆனந்த நிலைமை வேறெவ்விடத்திலாவது இருப்பின் இருக்கலாம் ; உலகத்தில் இருக்கப் போவதில்லை. அப்படியாயின், கருமத்தின் முடிவென்ன ? நாம் முன்னமே அறிந்து கொண்டவண்ணம் உலகத்துக்கு உதவி செய்வதனுல் நமக்கு நாமே உதவி செய்து கொள்ளுகிறோம். பிறர்க்காகச் செய்கிற உதவியினுல் ஏற்படுகிற பெரும்பயன் நம்மைத் தூய்மையாக்கிக் கொள்வது. இடைவிடாமல் பிறருக்காக முயல்வதனுல் நம்மை மறந்துவிடுகிறோம். இந்த ' நம்மை மறந்துவிடும் நிலை 'யே நாம் வாழ்வில் விசேஷமாகக் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம். மனிதன் அறியாமையினுல் தனக்கு வேண்டிய உவகையைத் தனக்கென்று செய்கிற முயற்சியினுற் பெற்றுக்கொள்ளலாமென்று நினைத்துப் பாடுபடுகிறான். சுயநலங் கருதிய தன்மையை முற்றிலும் அழித்த பின்புதான், உண்மையான ஆனந்தம் பிறக்கும் ; அந்த நிலையில் தனக்கு உதவி தானே என்பதும் விளங்கும். செய்கிற அறச் செயல்களும், இரக்கமுற்று எண்ணுகிற எண்ணங்களும் உதவி புரியுந்தொழில் ஒவ்வொன்றும், நற்செய்கைகளனைத்தும், ' நாம் பெரியோம்,' என்னும் அகந்தையை அழித்து, அகங்காரத்தை நீக்கி, தாழ்வையையும் நற்குணத்தையும் தருதலால், அவையெல்லாம் நற்செய்கைகளாம். ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கரும மார்க்கம் அனைத்தும் இந்த முடிபையே காட்டுகின்றன. நித்தியமும் பூரணமுமான தன்னல மறுப்பே மேலானது. அந்த இடத்திலே, ' நான் ' என்பதில்லை ; எல்லாம் ' நீ ' ஆய்விடுகின்றது. அறிந்து செல்லினும், அறியாது செல்லினும், கரும யோகம் ஒருவனை அந்த நிலைக்குக் கொண்டுவந்துவிடுகிறது. சமயவாதி யொருவன் நிர்க்குணமான கடவுளைப் பற்றிச் சிந்திக்க அஞ்சுதல்கூடும். கடவுள் உருவுடைய மூர்த்தியாயிருக்க வேண்டுமென்றும், தானும் தனக்குரியதென்று நினைக்கிற குணங்களோடு கூடிப் பிறிதொன்ருகத் தனித்திருக்க வேண்டுமென்றும் விரும்புதல் கூடும். ஆயினும், நல்லொழுக்கத்தைப்பற்றி அவனுடைய எண்ணம் என்னவென்று விசாரித்தால், அவன் மேலான தன்னல மறுப்பை ஆதாரமாகச் சொல்லுவானேயன்றிப் பிறிதொன்று சொல்லான். சுயநல மறுப்பே நல்லொழுக்கம் அனைத்தினுக்கும் ஆதாரமானது. விலங்கினம், மனிதர், வித்தியாதரர், தேவர் ஆகிய

அனைவரையும் தன்னல மறுப்பாகிய கோல் கொண்டளந்து விடுதல் கூடும்.

இவ்விதம் அளக்கும் போது உலகத்திற் பல வகையான மனிதரிருக்கக் காண்போம். முதலாமவராக எண்ணத்தக்கவர் யாரோவெனின், பிறரது நன்மைக்காகத் தம் உயிரையுங் கொடுக்கச் சித்தமாயிருக்கும் தெய்வத்தன்மை பொருந்திய மனிதரேயாவர். இவர்களே மனிதருள் மேம்பட்டவர்கள். இத்தகையினர் நூறு பேர் ஒரு நாட்டிலிருந்தால், அந்த நாடு தளர வேண்டுவதில்லை. தமக்குத் தீங்கு வாராமற் பார்த்துக்கொண்டு பிறருக்கு நன்மை புரிகிற நன்மனிதர், இரண்டாம் வகுப்பினராவர். மூன்றும் வகுப்பினர், தம்முடைய நம்மைக்காகப் பிறருக்குத் துன்பம் விளைக்கிற பைசாச குணமுள்ள கொடியவர். இனி வடமொழிக் கவிஞரொருவர் சொன்னது போலப் பேர் சொல்லத் தகாத கொடியவரான ஒரு நான்காம் வகுப்பினருமுண்டு. காரணமொன்றுமில்லாமற் பிறருக்குத் தேடித் தீங்கு விளைக்கிற இந்த வகுப்பினர், என்றும் நன்மையே செய்கிற முதலாம் வகுப்பினருக்கு நேர் விரோதமானவர். தீமை செய்வதனுல் தமக்கு ஒரு நன்மையும் வாராவிட்டாலும், தேடித் தீமை செய்வது இவர்களது இயற்கை.

புறம் நோக்கிச் செல்லுதல் என்னும் பொருள் படும் 'பிரவிருத்தி' உள்நோக்கிச் செல்லுதல் என்னும் பொருள்படும் 'நிவிருத்தி' ஆகிய இரண்டு வடமொழிச் சொற்களின் கருத்தை ஆராய்வோம்; பிரவிருத்தி உலக நெறியாகும். 'நான், எனது' என்னும் எண்ணத்தை நிலையாகக் கொண்டு, செல்வம் செல்வாக்கு, பெயர் புகழ் என்ற இப்படிப்பட்டவற்றையெல்லாம் அந்த நிலையத்தைச் சுற்றித் தேடிக் குவித்து வைக்க விரும்பும் இயற்கையே பிரவிருத்தியாகும். அறநெறி ஒழுக்கநெறி என்னும் இவற்றைச் சிந்தித்து, அந்த நிலயத்தை விட்டகன்று போவதே நிவிருத்தி மார்க்கமாகும். பிரவிருத்தியும் நிவிருத்தியும் தொழிலாகுந் தன்மையன. முன்னையது தீமையான தொழில்; பின்னையது நற்றொழில். நிவிருத்தி மார்க்கமே எல்லா ஒழுக்கநெறிக்கும் பல்வேறு வகைப்பட்ட சமய நெறிகளுக்கும் ஆதாரமாவது. அதன் பூரணத்துவமே பிற உயிரின் நன்மைக்காகத் தனது உயிரையுங் கொடுக்கச் சித்தமாயிருக்கும் முழுத்தன்னல மறுப்பு. இந்த நிலையை அடைந்தவன், கருமயோகத்தின் முடிபை அடைந்தவனுவன். இதுவே நற்றொழில் செய்வதனுல் விளைகின்ற பயனுகும். ஒருவன் ஞான சாத்திரப் பயிற்சியில்லாதவனுயிருப்

பினும், கடவுளில் நம்பிக்கை இல்லாதவனுயிருப்பினும், அவன் தனது வாழ்வில் ஒரு முறையாவது கடவுளை நோக்கி வணங்கா விட்டாலும், நற்கருமத்தின் வலியினுலே மற்றவர்களுக்காகத் தன்னுயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிற நிலையை அடைந்து விட்டானெனில், அத்தகைய மனிதனுனவன், பக்திமான் பக்தியினுலும், ஞானவான் ஞானத்தினுலும் அடைந்த நிலையை அடைந்தவனுவன். ஆகவே, ஞானவான், கரும யோகி, பக்திமான் ஆகிய அனைவரும் முழுத் தன்னல மறுப்பு ஆகிய நிலையில் ஒன்றுபட்டவரே. தாம் கைக்கொண்டொழுகுங் கொள்கைக்கு மாறுபட்ட சமயக்கொள்கை, தத்துவக் கொள்கைகளையுடையவனுயிருப்பினும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளனைக் கண்ட மாத்திரத்தே, உலகத்தார் அன்பினேடும் ஆர்வத்தினேடும் அவனைப் பணிந்து நிற்பர். இந்த நிலையிற் சமய வேறுபாடும் கொள்கை வேறுபாடுங் கருதப்படுவதில்லை. சமயக் கொள்கைக்கு முற்றும் முரண்பாடான மனிதரும் பூரணத் தன்னல மறுப்பைக் கண்ட மாத்திரத்தே கை தொழுது நிற்பர். புத்த தேவர் கடவுளைப் பற்றிப் பிரசங்கம் செய்யவில்லை. ஆயினும், பூரணத் தன்னல மறுப்பின் உருவமாய் இருந்தார். அதனுலேதான் அவருடைய சரித்திரத்தைக் கூறுவதும், எட்வின் ஆர்னுல்டு என்னும் ஆங்கிலக் கவிஞர் செய்ததுமான 'ஆசியாவின் பேரொளி விளக்கம்' என்னும் நூலைப் படிக்கிற ஒருவன் கடுங்கிறித்தவனுயிருப்பினும், 'புத்த தேவரை உள்ளத்திற்ருெழுகிருன். வேறுபட்ட சமய வாதிகள் தாமெல்லாங் கருதிச் செல்லுகிற முடிபு ஒன்றே என்பதை அறியார்கள். பக்தி மார்க்கத்திற் செல்பவன், எப்போதுங் கடவுளைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதனுலும், நம்மையினுற் சூழப்பட்டிருப்பதனுலும், ஈற்றிலே தனக்கென ஒன்று உண்டு என்னும் எண்ணத்தையொழித்து, "ஆண்டவரே உம்முடைய சித்தப்படியே ஆகுக!" என்று சொல்லுகிருன். இதுவே பூரணத்தன்னல மறுப்பு. ஞானவானும் தன்னுடைய ஞானசாத்திர ஆராய்ச்சியினுல், 'நான்' என்று எண்ணுகிற எண்ணம் மயக்கத்தினுலேற்பட்டதென்பதை அறிந்து, இதனை ஒழித்துவிடுகிருன். இதுவும் முழுத் தன்னல மறுப்பே ஆகும். கருமம், பக்தி, ஞானம் ஆகிய அனைத்துஞ் சந்திக்குமிடம் இந்த முடிபே ஆகும். முற்காலத்திலிருந்த ஆசாரியர்கள் இறைவன் பிரபஞ்சத்துக்குட்பட்டவனல்லன் என்று சொன்னதன் பொருள் இதுவேயாகும். இறைவனேடு சம்பந்தப்பட்டு வாழ்கிற வாழ்க்கையொன்று; உல

கத்தில் வாழும் வாழ்க்கை இதினின்றும் முற்றும் வேறுபட்ட மற்ரென்று. சுயநலங் கருதுதல் உலக இயற்கை; தன்னலமறுப்புத் தெய்வ இயற்கை. பொற்சிம்மாசனத்தில் வீற்றிருப்பவனும் பூரணத் தன்னலமற்றவனாக இருத்தல்கூடும். அந்த நிலையில் அவன் கடவுளுக்கு உவந்தவன்; தெய்வத் தன்மையில் வசிப்பவன். மற்றொருவன், குடிசை வாழ்க்கையுங் கந்தைத் துணியுமுடையவனாய் வறியவனாய் வாழ்ந்தாலும், சுயநல விருப்பு உடையவனாயிருந்தால் உலகத்தில் அமிழ்ந்தவனாவான்.

நம்முடைய ஆதாரக் குறிப்புகளிலொன்றைப் பின்னும் ஆய்வோம். தீமை சேராத நன்மையில்லையென்றும், நன்மை சேராத தீமையில்லையென்றும் ஏற்கெனவே அறிந்துகொண்டோம். இதனை அறிந்துகொண்டு எங்ஙனம் கருமம் செய்தல் கூடும்? உலகத்தில் சில மதங்கள் இந்தக் கேள்விக்கு மாறுத்தரமாக ஒருவன் தன்னைத்தானே சிறிது சிறிதாக நாசமாக்கிக்கொள்ளுதல் வேண்டும் என்னும் அதிசயமான விடையை அளிக்கின்றன. மனிதன் உயிர் வாழ்வதற்குப் பிராணிகளையோ, செடி கொடிகளையோ, பிறவற்றையோ கொல்ல வேண்டியிருக்கிறது. ஆதலால் அவற்றுக்குத் தீங்கு செய்யாமல் விட்டுவிட்டுத் தன்னைத் தானே அழித்துக்கொள்ளுதல் தகுதியென்பது இம்மதத்தாருடைய கொள்கை. ஜைன மதத்தவர்கள் இந்தக் கொள்கையை மேலாகக் கைக்கொண்டார்கள். இந்தக் கொள்கை மாறுபட்டதாகத் தோன்றினாலும், ஒருவழி நியாயத்துக்கு ஒருப்பட்டதென்பது புலப்படுகின்றது. அங்ஙனமாயினும், நமது கேள்விக்கு உண்மையான பதிலை ஸ்ரீமத் பகவத்கீதையிற் காணலாகும். பற்றில்லாமல் முயற்சி செய்தலே அந்த உண்மை நெறியாகும். உலகத்தில் இருக்கும் பொழுதும், நீ உலகத்துக்கு வேறானவனென்று அறிந்துகொள். செய்யுந்தொழிலிற் பற்று வைக்காதே. உனக்கென்று செய்கிற தொழில் உன்னைக் கட்டுப்படுத்தும். நற்கருமமாயின், நற்பயனைத் தரும்; தீக்கருமமாயின், தீய பயனைத் தரும். பற்றில்லாத வழி, நீ செய்கிற கருமம் உன்னைப் பந்திக்க மாட்டாது. நமது ஞான சாத்திரத்தில் இந்த உண்மையைத் தெளிவாகச் சொல்லுகிற வாக்கியமொன்றுண்டு. அது வருமாறு: "செய்யுந் தொழில் தன்னுடையதன்று என்பதை முழுதும் உணர்ந்தவன், பிரபஞ்சம் அனைத்தினையுங் கொன்றாலும், தான் கொல்லப்பட்டாலும், கொன்றவனுமாகான்; கொல்லப்பட்டவனுமாகான்." ஆதலால், கரும யோகம் உலகத்தைத் துறக்க வேண்டுமென்று சொல்லவில்லை. உலகத்திலிருந்துகொண்டு அது

தருகிற அறிவு அனைத்தையுங் கிரகித்துக்கொள்ளலாம். வாழ்க்கையின் நோக்கம் இன்ப நுகர்ச்சி என்னும் எண்ணத்தையொழித்துத் தனக்கென்று ஒரு தொழிலுஞ் செய்யாதிருக்க வேண்டும். முதலில் 'நான்' என்பதைக் கொன்றுவிடு. கிறித்தவர்கள் சொல்லுவது போலப் பழைய மனிதன் இறந்துவிட வேண்டும். அதன் பின்பு உலகம் அனைத்தையும் உனதாக்கிக்கொள்ளலாம். உலகம் தன்னுடைய இன்ப நுகர்ச்சிக்கே ஏற்பட்டதென்று எண்ணும் எண்ணமே அந்தப் பழைய மனிதன். "ஆண்டவரே, சூரியனையுஞ் சந்திரனையும் எனக்காகப் படைத்தீர்," என்று பிரார்த்தனை பண்ணும்படி சில மூடப் பெற்றோர் தங்களுடைய குழந்தைகளுக்குச் சொல்வதுண்டு. குழந்தைகளுக்கு வேண்டிய பொருளைப் படைத்துக் கொண்டிருப்பதைத் தவிரக் கடவுளுக்கு வேறே தொழிலில்லையா? உங்களுடைய குழந்தைகளுக்கு இந்த மூட வார்த்தைகளைச் சொல்லி வைக்காதீர்கள்; பின்னும் ஒரு சாரார் விலங்குகளை யெல்லாம் கடவுள் படைத்தது தமக்காக என்றும், தாம் அவற்றைக் கொன்று தின்று நுகர்வதற்காகவே பிரபஞ்சம் ஏற்பட்டிருக்கிறதென்றுஞ் சொல்லுகின்றனர். இது முழு மதியின்மை. அப்படியாயின், புலியானது தனக்கு உணவாகக் கடவுள் மனிதரைப் படைத்தார் என்று சொல்லிக் கடவுளைப் பார்த்து, "ஆண்டவரே, இந்த மனிதர் எவ்வளவு கயவர்! எனக்கு உணவாகும்படி என் முன் வரவில்லை. இவர்கள் பிரமாணத்துக்கு விரோதமாய் நடக்கிறார்கள்," என்று சொல்லும். உலகம் நமக்காகப் படைக்கப்பட்டது என்று கொள்வோமாயின், நாமும் உலகத்துக்காகப் படைக்கப்பட்டவர்கள் என்று கொள்ள வேண்டுவ தவசியமாகும். உலகம் நமக்காகப் படைக்கப்பட்டதென்னும் எண்ணம் நம்மைக் கீழ்நோக்கி இழுத்துச் செல்லும் ஒரு தீய எண்ணமாகும். ஆ! உலகம் நமக்காக அமைந்ததன்று; ஆண்டு தோறும் கோடிக் கணக்கான பேர்கள் இறக்கிறார்கள்; பின்னுங் கோடிக் கணக்கான பேர்கள் பிறக்கிறார்கள். உலகம் நமக்காக எவ்வளவு அமைந்திருக்கிறதோ, நாமும் உலகத்துக்காக அவ்வளவு அமைந்திருக்கிறோம்.

தக்க முறையிற் கருமஞ் செய்வதற்குப் பற்றுள்ள எண்ணத்தை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும். இரண்டாவதாகச் சந்தடியிற்கலந்து நிற்கும் பொழுதும், கருமபந்தத்திற்படாமற் சாட்சி மாத்திரமாய் நிற்கவேண்டும். "தாதியானவள் எசமான் வீட்டுக் குழந்தைகளிடம் எங்ஙனம் அன்பு வைக்கிறாளோ, அங்ஙனமே நீங்களும் உங்கள் குழந்தைகள்மேல் அன்பு வையுங்கள்,"

என்று என்னுடைய குருநாதர் சொல்வதுண்டு. தாதி குழந்தையைத் தூக்கி அணைத்துக் கொஞ்சி விளையாடி அன்பு காட்டுகிறாள்; தன்னுடைய பிள்ளை போலக் கருதுகிறாள்; வீட்டை விட்டுப் போகும்படி நீ கட்டளையிட்டவுடனே, துணி மணிகளை எடுத்துக்கொண்டு வெளியே போய்விடுகிறாள். குழந்தையினிடமிருந்த அன்பனைத்தும் மறந்துவிடப்பட்டதாகிறது. குழந்தையின் மீது தான் வைத்திருந்த பற்று அனைத்தையும் அவள் மறந்துவிடுகிறாள். உன்னுடைய குழந்தையைச் சிறிதும் மன வருத்தமின்றி விட்டுப் போய்ப் பிறரொருவருடைய குழந்தையை எடுத்துக்கொள்ளுகிறாள். உன்னுடையவை என்று நினைக்கிற பொருள்களின்மீது உனக்கிருக்கிற பற்றும் இவ்வண்ணமாயிருத்தல் வேண்டும். கடவுளில் நம்பிக்கை வைப்பாயானால், அவரே உடையவர். உனக்குரியனவென்று நினைக்கிற பொருளனைத்தும் உண்மையில் அவர்க்குரியன என்பதை உணர்ந்து கொள்வாய்; நீ தாதிபோன்றிருக்கிறாய். ஏழைமைக்குணம் பெருநன்மை போலவும் வலிமை போலவும் தோன்றுவதுண்டு. மற்றவர்கள் நம்மை ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்களென்று நினைப்பதும், நாம் பிறருக்கு நன்மை செய்ய வல்லோம் என்று நினைப்பதும், இத்தகையதோர் அறியாமைக் குணமாம். வீண் பெருமையினாற் பற்றுண்டாகிறது; பற்றினால் துன்பமுண்டாகிறது. பிரபஞ்சத்தில் ஒருவரும் நமது உதவிக்குக் காத்திருக்கவில்லையென்னும் எண்ணத்தை மனத்தில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் தருமம் செய்வோம், உதவி செய்வோம் என்று காத்துக் கொண்டிருக்கிற வறியவன், ஒருவனும் இலன். நமது உதவியை வேண்டி நிற்கும் உயிர்ப் பிராணி ஒன்றுமில்லை. எல்லாப் பிராணிகட்கும் பிரபஞ்சமே உதவியா யிருக்கிறது. நாம் கோடிப் பேர் இங்கில்லாதிருப்பினும், அவ்வுதவி நடந்துகொண்டே யிருக்கும்; நீயும் நானும் இல்லாவிடின், உலகம் நின்றுபோகப் போகிறதா? பிறர்க்குதவி செய்து நம்மைப் பரிசுத்தராக்கிக்கொள்ளக் கிடைத்திருப்பது பெறற்கரும்பேருகும். இதுவே வாழ்வில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பெரும்பாடம். இதனைக் கற்றுக்கொள்வோமாயின், ஒரு போதுந் துன்புறேம். இவ்வுண்மையை உணர்ந்த பின்னர் நாம் எந்தச் சமூகத்திலுங் கலந்து கொள்ளலாம்; தீங்கு நேரிடாது. மனைவி, மக்கள், வேலைக்காரர், அரசுரிமை இவற்றோடு கூடியிருப்பினும், உலகம் உன்னை வேண்டி நிற்கவில்லை என்னும் உண்மையைக் கடைப்பிடித்தொழுகுவாயெனின், உனக்கு ஒருவகைத் துன்பமும் நேரிடாது. உன்னுடைய நண்பர்

சிலர் இந்த ஆண்டில் இறந்திருத்தல் கூடும். அவர்கள் வரும் வரையும் அசையமாட்டேனென்று உலகம் நின்றவிடத்திலே நின்றுவிட்டதா? இல்லை. அது இன்னும் போய்கொண்டேயிருக்கிறது. உலகத்திற்கு ஏதோ செய்து முடிக்க வேண்டுமென்னும் எண்ணத்தையே மனத்தினின்று அகற்றிவிடு. உலகத்துக்கு உனது தேவையே இல்லை. எவனொருவன் தான் உலகத்துக்கு ஏதோ செய்வதற்குப் பிறந்திருக்கிறதாக எண்ணுகிறானோ, அவன் ஓர் அறிவிலி. அவ்வாறெண்ணுவது வீண் பெருமையாகும்; அறநெறிபோல மறைந்து தோன்றுகிற அகங்காரமாகும். உன்னிலாவது, மற்றெவரிலாவது, உலகந் தங்கி நிற்கவில்லை என்னும் எண்ணம் உள்ளத்திலும் உடலிலுஞ் செறிந்திருக்குமாயின், எவ்வகைக் கருமஞ்செய்யினும் துன்பம் நிகழாது. ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுக்கும்போது கைம்மாறு கருதாதே—அவன் நன்றியறிதல் உடையவனாயிருக்க வேண்டுமென்று நினைக்காதே. அங்ஙனஞ் செய்யின், அவன் நன்றி மறப்பினும், உனக்குத் துன்பமுண்டாகாது. ஏனெனில், அவன் உனக்கு நன்மை செய்ய வேண்டுமென்றெண்ணும் உரிமையே உனக்கில்லையாகும். அவன் எதற்கு உரிமையுள்ளவனோ, அதையே நீ அவனுக்குக் கொடுத்தாய். உன்னுடைய கருமப் பயன் கொடுப்பது; அவனுடைய கருமப் பயன் பெற்றுக்கொள்வது. கொண்டுபோய்க் கொடுக்கும் உரிமையே உன்னுடையது. ஆதலால், கொடுப்பதற்கு ஒரு கூலியாளாக ஏற்பட்டவன் நீ. அவன் தன்னுடைய கருமப் பலனைப் பெறுகிறான். நீ எதற்காகப் பெருமையுற வேண்டும்? பற்றற்றிருக்குந் தன்மையை அடைந்தாயாயின், உலகத்துக்குக் கொடுக்கத்தகாத பெரிய பொருள் இல்லையென்பதை அறிவாய். அந்த நிலையில் உனக்கு நன்மையுமில்லை, தீமையுமில்லை. சுயநல விருப்பே நன்மை தீமையைப் பகுத்துணர்தற்குக் காரணமாவது. நீ விரும்பியழைத்தாலன்றி, உன்னைப் பற்றுதற்குப் பிரபஞ்சத்திலுள்ள ஒரு பொருளுக்கும் சக்தியில்லை என்பதை நாளடைவில் உணர்ந்துகொள்வாய். ஆன்மா பிறிதோராதாரமும் வேண்டாது தானாய்நிற்பது. அதனை மேற்கொள்ளக்கூடிய சக்தி பிறிதொன்றில்லை. இவ்வுண்மையை மறந்து, மயக்கத்துக்குள்ளானமையினாலன்றோ, தன் வயமின்மை வந்தெய்திற்று? இந்த மயக்கத்தை வெல்லுதற்கும், உன்னை மேற்கொள்ளக்கூடிய சக்தி பிறிதொன்றில்லை என்பதை நிலைநிறுத்துதற்கும் பற்றறுத்தலே தக்க நெறியாகும். 'நான் சம்மதித்தாலன்றி, என்னை வெல்லக்கூடிய சக்தியொன்றில்லை,' என்று சொல்வது எளிது; அதனை வாழ்வில் பயி

லுவது அரிது. பிறிதொன்றுந் தன்னைத் தாக்க விடாதவனுய்ப் புறத்தேயுள்ள உலகத்தினுல் இன்பமோ துன்பமோ அடையாத வனுயிருக்கிற மனிதனை அறிந்து கொள்ளுதற்குரிய ஒரு சோதனையை எல்லோரும் நினைத்திருப்பது நன்று. இந்தச் சோதனை என்னவென்ருல், சமத்துவ புத்தியுடைய மனிதன் மலையிடிந்து விழுந்து தன்னைத் துகளாக்கும் பொழுதும், மிகுந்த இன்பமான செய்திகள் வரும்பொழுதும் ஒரே நிலையா இருப்பான். செல்வத்திலும் வறுமையிலும் ஒரே தன்மையனுய் இருப்பான். இதனை ஒரு புராண சரித்திரத்தினுல் விளக்குவோம் :

பரத கண்டத்தில் வியாசர் என்னும் பெயருடைய ஒரு பெரிய முனிவரிருந்தார். இந்தப் பெரியவரே வேதாந்த சூத்திரங்களை அருளிச் செய்தவரென்பதை யாவருமறிவர். இவருடைய தந்தையும் தந்தையின் தந்தையும் பூரணத்துவத்தையடைய முயன்றும், அவர்களுக்குக் கைக்கூடவில்லை. இவரும் முயன்ருர், முற்றிலும் அனுகூலம் பெறவில்லை. இவர் புதல்வராகிய சுகர் என்பவர், பிறக்கும்பொழுதே பூரணத்துவத்தோடு பிறந்தார். வியாசர் தம் புதல்வருக்கு உண்மை ஞானத்தைத் தாமறிந்த வரையிற்கற்பித்து, மேலுமறிந்து கொள்ளும் பொருட்டு ஜனக ராஜருடைய சமுகத்துக்கு அனுப்பினுர். இவ்வரசர் கோமகனுர் பெரிய யோகியார் ; ஜனக விதேகரென்னும் பெயரையுடையவர். அரசராயிருந்தும், தமக்கு உடலிருக்கிறதென்பதை மறந்து, சித்துப் பொருளாகிய ஆன்மாவே தான் என்னும் எண்ணமுடையவராயிருந்தார். வியாசர் மைந்தர் தம்மிடம் ஞானங்கற்க வருகிருரென்பதை ஜனகராஜர் யோக தரிசனத்தினுல் முன்னமே அறிந்திருந்தார். சுகர் அரண்மனை வாயிலுக்கு வந்ததும், அரசருடைய வாயிற் காப்பாளர் அரச கட்டளைப்படி ஓர் ஆசனம் மாத்திரங் கொடுத்துவிட்டு, வேருென்றும் பேசாதிருந்துவிட்டனர். சுகர் வெளி வாயிலிலேயே மூன்று பகலும் மூன்று இரவும் இருக்க நேர்ந்தது. "எங்கிருந்து, எதற்காக வந்தீர் ?" என்று ஒருவரும் விசாரிக்கவில்லை. அவர் தந்தையார் நாடு முழுவதும் பிரசித்தி பெற்ற பெரிய முனிவர் ; அவரும் மதிக்கப்படத் தக்கவர் ; அப்படியிருந்தும் ஒருவரும் ஏனென்றுகூட விசாரிக்கவில்லை. மூன்றிரவும் மூன்று பகலும் இவ்வண்ணமே கழிந்தன. ஈற்றில் மந்திரி பிரதானிகளும் பெரிய உத்தியோகஸ்தரும் வந்து மிகுந்த உபசாரங்களோடு அழைத்துச் சென்றனர். மாளிகையினுட்புகுந்ததும், சிறந்த சயனக் கிருகம், நறுமணம் பொருந்திய புனல் நிறைந்த நீராடும் சாலைகள், அழகிய உடைகள் இவற்றைக் கொடுத்துப் பல

வகைச் சுகங்களையுங் காட்டினார்கள். இவ்வண்ணம் எட்டு நாட்கள் கழிந்தன. சுகதேவருடைய சாந்த முகமானது சிறிதும் வேறுபாடடையவில்லை. அனைத்துச் சுகங்களினிடையிலிருக்கும் பொழுதும், வெளி வாயிலில் காத்திருக்கும் பொழுதும் அவருடைய முகம் ஒரே தன்மையாய் விளங்கிற்று. பின்பு அவர் அரச சமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அரசர் சிங்காதனத்திலிருந்தனர்; பல வகை வாத்தியங்களும் நடனங்களும் சுற்றிலும் நடந்துகொண்டிருந்தன. அரசர் அவரை அழைத்துக் கையில் ஒரு பால் நிறைந்த கிண்ணத்தைக் கொடுத்துப் பாலைச் சிந்த விடாமல் மண்டபத்தை ஏழுமுறை சுற்றி வரும்படி சொன்னார். சுகரும் கிண்ணத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, தம்மைச் சூழ நடக்கிற காட்சி, இசை முதலியவற்றைப் பாராதவராய், அழகிய முகங்களாற் சிறிதுங் கவரப்படாதவராய், கையிலேந்திய கிண்ணத்திலிருந்து ஒரு துளிப் பாலையுஞ் சிந்தவிடாதவராய், மண்டபத்தை ஏழு முறை வலம்வந்து அரசர் முன்னிலையில் நின்றார். விரும்பி ஒருப்பட்டாலன்றிப் பிரபஞ்சத்திலுள்ள எந்தப் பொருளும் பற்றக்கூடாத தன்மையினதாயிருந்தது, அந்தச் சிறுவருடைய மனம். ஜனகராஜர் மனமகிழ்ச்சியடைந்து சுகரைப் பார்த்து, "உம் தந்தையார் உமக்கெந்த உண்மையைச் சொன்னாரோ, உம்முடைய சொந்த முயற்சியினாலேயே எந்த உண்மையை உணர்ந்துகொண்டீரோ, அதனையே நானும் உமக்குச் சொல்லுகிறேன்; அப்பொருளே மெய்ப்பொருள்; நீர் அந்தப் பொருளை அறிந்து அதில் நிலைத்துப் பூரணத்துவத்தை அடைந்திருக்கிறீர்," என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பினார்.

தன்னைத் தானே அடக்கப் பழகியவனைப் புறத்திலுள்ள ஒரு பொருளும் கட்டுப்படுத்தாது; அவனுக்கு அடிமைத் தன்மையில்லை. அவனுடையமனம் பந்தமின்மையாகிய நிலையையடைந்து விட்டதாதலினால், அவன் உலகத்தால் தாக்கப்படாது வாழத் தகுதியானவன். சாதாரணமாக மனிதர் உலகத்தைப் பற்றி இரு வேறு வகைப்பட்ட கொள்கையுடையவர். அளவிறந்த துன்பமும் தீமையும் நிறைந்த இடம் உலகம் என்று ஒரு சாரார் சொல்லுவார். மற்றொரு சாரார், 'இவ்வுலகம் எவ்வளவு அழகியது! வியப்புறத் தக்கது!' என்பார். தமது மனத்தையடக்கப் பழகாதவர்களுக்கு இவ்வுலகம் தீயதாக அல்லது தீமையும் நன்மையுங் கலந்ததாகத் தோற்றும். நாம் நம்முடைய மனத்தின் மீது ஆட்சி புரிகின்றபொழுதுதான் இவ்வுலகம் அழகியதாகத் தோற்றும்; அப்பொழுது நமக்கு நன்மையுந்

தீமையும் நேரிடா; எப்பொருளுந் தமக்குரிய இடத்திலே பொருத்தமாகவும் இயைபாகவும் இருப்பதாகத் தோற்றும். தொடக்கத்தில் உலகம் நரகம் என்று சொன்னோமாயினும், பூரணத் தன்னடக்கம் பெற்ற பின்னர் இவ்வுலகமே தேவலோக மென்று சொல்லுவோம். நாம் பூரணத்துவத்தையடைய விரும்பி உண்மையான கரும யோக மார்க்கத்தைப் பயின்று வருவோமாயின், தொடக்கத்தில் எவ்வண்ணமிருப்பினும், ஈற்றில் முழுத் தன்னல மறுப்பினை அடைவோம். மயக்கத்தைத் தரும் அகங்காரங்கழிந்த பின்பு, தீமை நிறைந்திருப்பதாகத் தோற்றிய உலகம் எல்லா வகையான நன்மைகளும் நிறைந்த தேவலோகமாகும். அதைச் சூழவிருக்கும் ஆகாயமும், பரிசுத்தமானதாகவும் தோற்றும்; மனிதரனைவரும் நல்லவர்களாய்த் தோற்றுவார்கள். கரும மார்க்கத்தின் இலக்கும் முடிவும் இதுவேயாகும்; அம்மார்க்கத்தினால் வாழ்வில் அடைகிற பூரணத்துவம் இத் தன்மையதே. பலவாகிய யோக மார்க்கங்கள் ஒன்றோடொன்று முரணுவதில்லை. அவை யாவும் ஒரே முடிவினையுடையன. 'அனுகூலமடைய விரும்பினால், விடா முயற்சியான பயிற்சி வேண்டும். உண்மை நெறியைக் கேட்டு, சிந்தித்து, பயில வேண்டும்,' என்று உபநிடதம் கூறுகிறது; ஏனைய யோகங்களுக்கும் இது பொருந்தும். முதலில் உண்மைப் பொருளைக் கேட்க வேண்டும். அதன் பின்னர்ப் பொருளை உணரவேண்டும். ஆரம்பத்தில் விளங்காதனவும் பலமுறை கேட்டுச் சிந்திப்பதனால் தெளிவாகும். அனைத்துப் பொருளின் விளக்கமும் நம்முள்ளே அமைந்திருக்கிறது. ஒவ்வொருவனும் தனக்குத்தானே பாடஞ்சொல்லி வைக்க வேண்டும். புறத்தேயுள்ள ஆசிரியன் சொல்லுகிற குறிப்புகளைப் பெற்று உள்ளேயுள்ள ஆசிரியன் முயன்று விஷயங்களை விளக்கமாக்குகிறான். நம்முடைய காட்சியினாலும் எண்ணத்தினாலுமே எல்லாந் தெளிவாகின்றன; பின்னர் அவை சித்தத்திற் படிகின்றன. இதிலிருந்து மேலான சித்த சக்தியுண்டாகிறது. முதலில் உணர்ச்சி வேண்டும்; இவ்வுணர்ச்சியே சித்த சக்தியாய், நாடி நரம்பு தசையெங்குஞ் செறிந்து நிற்கும் மேலான வலிமையாய் மாறுபட்டு, உடலைச் சுயநல விருப்பற்ற முயற்சி செய்யும் கரும யோகக் கருவி ஆக்கி வைக்கும். முழுத் தன்னல மறுப்பைப் பெற்றுப் பூரணத்துவத்தை அடைவதற்கு இதுவே மார்க்கம். இது சமயக்கொள்கை, சமய வாதம், மூட நம்பிக்கை இவற்றை ஆதாரமாகக் கொண்டதன்று. கிறித்தவர், யூதர், இந்துக்களனை

வருக்கும் இது ஒன்ருகும். தன்னல விருப்பற்றிருக்கும் தன்மையே வேண்டப்படுவது. நீ அத்தன்மையை அடைந்திருப்பாயாயின், ஞான சாத்திரங் கல்லாதிருப்பினும், ஆலயத்திற்குச் செல்லாதிருப்பினும், பூரணத்துவத்தை அடைவாய். எல்லா யோகங்களும் தனித்தனியாக, ஒன்று பிறிதொன்றினுதவியைப் பெருது, பூரணத்துவத்தைத் தரத்தக்கன. அவை எல்லாவற்றிற்கும் முடிந்த முடிபு ஒன்றே. கரும மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் ஆகிய இவை தனித்தனியாக முக்தி நிலையைத் தரும் ஆற்றலுடையன. அதனாலன்ருே, "கரும மார்க்கமும் ஞான மார்க்கமும் வேறென்று மூடர் சொல்லுவார்; கற்ருேரங்ஙனஞ் சொல்லார்," என்று ஸ்ரீமத் பகவத்கீதை வற்புறுத்துகிறது? புறத்தே வேறுபட்டவனுய்த் தோற்றினும், இவ்விரண்டு யோகங்களும் சாதகர்களை ஈற்றிற் பூரணத்துவமெனும் ஒரே முடிபிற் சேர்ப்பனவாம்.

நல்லோ ரளித்த நல்லெண் ணங்கள்
நல்லோன் பாலுற நன்மை வளரும்;
தீயோ ரளித்த தீயவெண் ணங்கள் 1
தீயோன் பாலுறத் தீமை வளரும்.

நன்மையி லுள்ள தீமைப் பான்மையுந்
தீமையி லுள்ள நன்மைப் பான்மையுங்
கண்டு தெளிந்தோன் கரும யோகி;
தன்னல மறுப்பாற் றன்னை மறந்தோன் 2
இன்னலி னீங்கி யுண்மையி னிலைப்பான்.

உய்க பிறரென வுயிரையும் வழங்குந்
தெய்வத் தன்மை சேர்ந்தவர் மேலோர்;
தந்நலம் பேணிப் பிறர்நலம் புரக்கும்
நன்மை யாளர் நடுத்தர மனிதர்;
பிறர்துய ருறுதல் கருதா ராகித்
தந்நலம் பேணுந் தகையர்பை சாசர்;
வேண்டித் தீமை விளைக்குங் கொடியோர், 3
கடையரிற் கடையராக் கருதப் படுவார்.

நானென தென்னு நசையின் நீங்கி
நிவர்த்தி வழியி னிற்கு நிலையே
கருமமும் ஞானமும் பக்தியு மொன்று 4
கூடிய நிலையெனக் குறிக்க வேண்டும்.

தலைவன் வீட்டுத் தனையரைப் பேணும்
தாதி போலத் தம்பொரு ளென்ப
இறைபொரு ளாமென இதயத் தெண்ணி
மலையசை வுறினு நிலைகலங் காது
சுகமுனி போன்று துளங்கமற் றிருக்கும்
பூரண மாகிய தன்னல மறுப்பே
பற்றின்மை யாமெனப் பகர்ந்தனர் மேலோர்.

ஏழாம் அதிகாரம்

அற்றது பற்றெனில் உற்றது வீடு

கருமம் என்னும் பதமானது செயல் என்னும் பொருளைப் பெறுவதோடு மன நூல் வழக்கிலே காரண காரிய சம்பந்தம் என்னும் பொருளையும் பெறுமென்று முன்னமே சொன்னோம். காரியத்தை விளைப்பதற்குக் காரணமாயிருக்கிற செயல், எண்ணம், செய்தி யாவுங் கருமமாம். காரணமும் காரியமும் ஒன்றையொன்று தொடர்ந்து வருகிற சம்பந்தமாகிய நியதியே கரும நியதி என்பது. காரணமுள்ளவிடத்திற் காரியமுண்டாதல் வேண்டும். இதனைத் தடுத்தல் கூடாது. ஆதலால், நமது தத்துவ சாத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறபடி, கருமநியதி பிரபஞ்சம் அனைத்தினும் நிலை பெற்றது. காட்சி, உணர்ச்சி, செயல் ஆக ஏற்படுவன அனைத்தும் முன்னுளிற் கழிந்து போன கருமங் காரணமாகக் காரியப்பட்டு, இனிமேல் வருங் கருமத்துக்குக் காரணமாய் நிற்பன. நியதி என்பதன் பொருளின்னதென ஆராய்வோம். மன நூலின்படி, ஒன்றையொன்று பற்றி வருங் கருமத் தொடர்ச்சி மாற்றமின்றிப் பலமுறையுந் தோன்றும் வண்ணம் அவற்றிற்கிடையே அமைந்து கிடக்கும் தன்மையே நியதியாவது. ஒரு கருமத்தின் பின்னரோ, ஏககாலத்திலோ மற்றொரு கருமம் தோற்றுகிறது. இவ்வாறு தோற்றும் இரண்டு கருமங்களுக்குமிடையே தொடர்பான நியதியிருப்பின், இவை எப்பொழுதும் தொடர்ந்து தோற்றல் வேண்டும். நையாயிகர் இதனை 'வியாப்தி' என்பர். அவர்களுடைய கொள்கைப்படி மேற்காட்டிய கருமத் தொடர்பாகிய சம்பந்தமே நியதியாவது, ஒரு தொடராகிய தோற்றங்கள் முன்னமே மனத்திற்பதிந்து கிடந்த மற்றொரு தொடராகிய தோற்றங்களோடு மாற்றமின்றிச் சம்பந்தப்படுகின்றன. ஐல்புலன்களுக்கும் புலப்படுகிற பொருள் எதனையும் மனம் உடனே தன்னிடத்து முன்னமே அமைந்திருக்கிற எண்ணங்களோடு பொருத்திப் பார்க்கிறது. ஆகவே, உள்ளத்தில் எழுகிற ஓர் எண்ணம் பல சித்த விருத்திகளுக்கு இடமாகும். இவ்வாறு மன எண்ணங்களுக்கிடையேயுள்ள தொடர்பே வியாப்தி எனப்படுவது. இதன் ஒரு கூறே நியதியென்பது. அகமாகிய உலகத்தில் தோற்றுகிற நியதியே புறத்தே

யுள்ள உலகத்திலும் நியதியாகத் தோற்றுவது ; அங்கும் ஒன்றை யொன்று மாறுது தொடர்ந்துவரும் செயல்களனைத்தும் நியதியுட் பட்டன. அஃதன்றி, உண்மையில் ஆராய்ந்து பார்க்கும்போது இந்த நியதி புறத்தேயுள்ள பிரபஞ்சத்தில் இல்லை. உலகுக் கவர்ச்சி விதி புறத்தே பூமியிலிருக்கிறதென்ருவது வேறெந்த விதியோ புறத்தேயுள்ள பிரபஞ்சத்திலிருக்கிறதென்ருவது சொல் வது தவறு.[1] நமது உள்ளமானது யாதேனுமொரு தோற்றத் தொடர்பைப் பற்றுகிற முறையே நியதி என்பது. சில தோற் றங்கள் ஒன்றன்பின் ஒன்ருகவோ, அல்லது ஒரே காலத்திலோ, மாருமல் தோற்றி வருதல் கண்டு அத்தகைய தொடர்ச்சி ஒன் றும் உள்ளதென்று மனம் உணர்ந்துகொள்ளுதலே நியதியென்று ஒருவாருகச் சொல்லுதல் கூடும்.

இனிப் பிரபஞ்சமனைத்திலும் கரும நியதியிருக்கிறதென் னும் உண்மையினை ஆராய்வோம். தேசம் (space), காலம் (time), நிமித்தம் (causation) என்று மனநூலார் சொல்லுகிற மூன்றினுலும் ஏற்பட்டது தோற்றப் பிரபஞ்சம். அகண்டமா யிருக்கிற பொருளில் தேச கால நிமித்தத்துக்குட்பட்ட பாகமே தோற்றப் பிரபஞ்சமாவது. இவ்வாறு நிலைப்பட்ட பிரபஞ்சத் துக்கப்பால் நியதியுண்டென்று சொல்வது கூடாது. ஆதலால், நாம் பிரபஞ்சம் என்று சொல்வது, கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் உணர்தற்கேதுவாய் நிற்பதும், மனத்தினுல் எல்லைப்பட்டதுமான பொருளே. இந்தப் பிரபஞ் சமே நியதியுட்பட்டது. மனத்திற்கப்பால் நிமித்தமில்லாமை யினுலே அவ்வெல்லை கடந்திருக்கிற பொருளுக்கு ஒரு வகை நியதியுமில்லை. புலன்களுக்கும் மனத்துக்கும் அப்பாலிருக்கிற பொருளுக்கு நிமித்தமில்லை ; காரண காரிய சம்பந்தமுமில்லை ; ஆதலால், நியதியுமில்லை. நிமித்தம் ஆதாரமாக நியதி தோற்று வதால், நாம ரூபத்துக்குட்பட்ட பொருள்களே நியதியோடு கூடின. ஆதலால், கட்டற்ற சித்தம் என்பது பிழையான சொற் ருெடராகும். ஏனெனில், இன்னது செய்வேனென்று சிந்தித்தல், அறிவினுட்பட்டதாகித் தேசகால நிமித்தத்தால் வரையறைப் பட்டது. இங்ஙனம் வரையறைப்பட்டமையால், நியதியோடு கூடியது பந்தமற்றதாயிருத்தல் இயலாது. அது பிற காரணங்

[1] சுவாமிகளுடைய வாக்கிலிருந்து தோற்றிய இவ்வுண்மை பின்னுளில் மேலை நாட்டுப் பௌதிக சாத்திர பண்டிதராகிய ஈன்ஸ்டீன் (Einstein) கண்டுபிடித்த அரிய விதியோடு பொருந்தியிருப்பது நோக்கற்பாலது.

ளாற்காரியப்பட்டு மேல்வருங் காரியங்களுக்குத்தான் காரண மாய் நிற்பது. ஆயினும், தேச கால நிமித்தத்துக்கு அப்பாலா யிருந்து அவ்வெல்லையுட்பட்ட பின் சித்தமாக மாறியபொருள், மீண்டு அவ்வெல்லையைக் கடக்கும் பொழுது பந்தத்தினின்று நீங்கியதாகும். பந்தம் நீங்கிய நிலையிலிருந்து வந்து, பந்தத் தைப் பற்றியதாதலின், மறுபடியும் பந்தம் நீங்கிய நிலையை அடையும் ஆற்றலும் அதற்குண்டு.

உபநிடதங்களில், 'எதிலிருந்து இப்பிரபஞ்சந் தோற்று கிறது? எதனை ஆதாரமாகக் கொண்டு நிற்கிறது? எதனுள் ஒடுங்குகிறது?' என்னும் வினுக்களுக்கு முறையே 'தளை நீங்கிய நிலையிலிருந்து தோற்றுகிறது; பந்தத்தில் நிலைபெற்று நிற்கிறது; மீண்டும் பந்தம் நீங்கிய நிலையை அடைகிறது,' என்னும் விடைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 'மனிதன் நித்தியமாகிய அகண்ட வஸ்துவின் தோற்றமென்று சொல்லும் பொழுது உடலைக் கருதுகிருேமா?' என்ருல், இல்லை. உடலும் மனமும் மனிதனுடைய உண்மை இயற்கையாகிய அகண்ட நிலை யோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அணு மாத்திரமாய் மறைவன. பரிபூரணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இப்பிரபஞ்சம் முழுவதும் ஒரு சிறு துகள் போன்றது. இந்தச் சிறு துகளினுள்ளேதான் நியதி, பந்தம், இன்ப துன்பம், சுகத் தைத் தருவன, காதலிப்பன, முன்னேற்றம், பின் வாங்கல் ஆகிய அனைத்தும் அடங்கியிருக்கின்றன. ஆதலால், இப்பிர பஞ்சம் தொடர்ச்சியாக நிலைக்கவேண்டுமென்று நினைப்பது எவ்வளவு அறியாமை! அது மனத்தின் செயலினுலாகிய தோற்ற மாகுமன்றிப் பிறிதொன்ருகுமோ? சுவர்க்க லோகங்களைக் காதலிப்பதும் அறியாமையே; அவையும் இப்பிரபஞ்சத்தைப் போன்றவை. அகண்டாகாரமாயிருக்கும் பொருளை வரம்புக்குட் பட்டதாகிய நமது மனத்தினுல் வரையறைப்படுத்த நினைப்பது பிள்ளைத்தனமாகுமல்லவா? ஆதலால், ஒரு மனிதன் இப் பொழுது தனக்கு உரியவாயிருக்கிற பொருள்களும் நிலையுமே மீட்டும் மீட்டும் வரவேண்டும் என்று நினைப்பதும், அங்ஙனம் வருவதற்கு அமைந்ததொரு வசதியான சமய நெறியைத் தேடி நிற்பதும் அவனுடைய இழிந்த நிலையைக் காட்டுகின்றன. எல்லையற்ற பூரணமாகிய தனது சொந்த நிலையை மறந்து, இப்பொழுதுள்ள அற்பமாகிய இன்பதுன்பங்களும் எரிச்சலும் சமமென்றெண்ணி, நியதியுட்பட்ட இப்பிரபஞ்சத்தை அகண்ட மென்று நினைத்து, அது மாத்திரமன்றி, இந்த அறிவின்மையை

விடமாட்டேனென்று பற்றிக்கொண்டு நிற்பது மிக இழிவாகுமல்லவா? சாதாரண மனிதன் இந்த எல்லைப்பட்ட நிலையாகிய திருஷ்ண நிலை ,புத்தர் சொல்லுகிறபடி தந்ஹ திரிச நிலைக்கு, விடாயுற்று அதனைப்பற்றி நிற்கிறான். மதியிலிகள் மயக்கத்தினால் இவ்வண்ணம் நிற்பினும், அறிஞர், பலதிறப்பட்ட இன்பம், நியதி, தோற்றம், நிமித்தம் அடங்கிய இந்த அற்பப் பிரபஞ்சம் தனது உண்மை இயற்கையாகிய அகண்டாகாரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அணுவளவாகும் என்பதனைக் கணப்பொழுதும் மறவார்.

பற்று நீங்கிய நிலையை அடைதற்கு இப்பிரபஞ்சத்தின் எல்லைக்கப்பாற் போக வேண்டும். கிறித்தவர் சொல்லுகிற 'எண்ணத்தினெல்லையும் கடந்த பூரண சாந்த நிலை' இப்பிரபஞ்சத்திலாவது, நம் மனமும், புலனும், எண்ணங்களும், கற்பனைகளும் செல்லத்தக்க சுவர்க்கத்திலாவது, காணப்படுவதன்று. அத்தகைய இடங்களனைத்தும் காலதேச நிமித்தம் எல்லைக்குட்பட்டனவாகையால், அவற்றினிடையே பந்தநீக்கத்தையடைதல் இயலாது. இப்பிரபஞ்சத்தினும் நுண்ணிய பொருளினுலேற்பட்டு மேலான இன்பத்தைத் தரக்கூடிய இடங்களும் எல்லைக்குட்பட்டனவாயின், நியதியுட்பட்டனவேயாகும். நாம் இப்பொழுது அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களோடும் வரம்பினுட்பட்ட நிலையினேடுங் கூடிய இவ்வற்பப் பிரபஞ்சம் மடிந்துபோக, உண்மையின் தோற்றம் வெளியாகும். அப்பொழுதுதான் நாம் சமயானுஷ்டானத்தை ஆரம்பித்தவர்களாவோம். இப்பொழுதுள்ள அற்ப சீவியத்தின்மேல் ஏற்பட்டிருக்கிற பற்றும் விடாயுந் தீர்ந்தாலன்றி, வரம்புகடந்த பரிபூரணத்துவம் தோற்றமாக மாட்டாது. மனித வாழ்வின் மேலான இலக்காகிய பற்று நீங்கிய (முக்தி) நிலையை அடைவதற்கு ஒரேயொரு மார்க்கமுண்டு என்பது தெளிவாகிறது. அந்த ஒரு மார்க்கமெதுவென்றால், அந்த அற்ப வாழ்வின் மேலும், அற்பப் பிரபஞ்சத்தின் மேலும், மண்ணுலகம், வானுலகம், உடலம், உள்ளம் முதலாக எல்லைப்பட்ட நிலையைத் தரும் பொருள்கள் மேலுமுள்ள பற்றினை முற்றுங் களைந்துவிடுதலே. ஐம்புலன்கள், மனம் என்னும் ஆறு வாயில்களால் உணரப்படும் பிரபஞ்சத்திலுள்ள பற்று நீங்கிய அந்தக் கணமே நாம் முக்தி நிலையை அடைந்தவர்களாவோம். அற்றது பற்றெனில் உற்றது வீடு. நியதி நிமித்தம் இவற்றிற்கு அப்பாலிருக்கிற நிலையையடைந்தாலன்றிப் பந்தமின்மை ஏற்படாது.

அங்ஙனமாயினும், பிரபஞ்சப் பற்றை அகற்றிவிடுதல் மிகவும் கடினமாகும். அதனைச் செய்யக்கூடியவர் மிகச் சிலரே. நம்முடைய ஞான சாத்திரங்கள் இதற்குரிய இரண்டு வழிகளைக் கூறுகின்றன. ஒன்று, "இதுவன்று, இதுவன்று," (நேதி, நேதி) என்று சொல்லுகிற வழி; மற்றது, "இது, இது" (இதி, இதி) என்று சொல்லுகிற வழி. முந்தியது எதிர்மறை மார்க்கம்; பிந்தியது உடன்பாட்டு மார்க்கம். இரண்டினும் எதிர்மறை மார்க்கங் கடினமானது. கூர்ந்த புத்தியும் அளவிறந்த சித்த சக்தியுமுள்ள மனிதன் மாத்திரமே, "இது வேண்டேன்" என்று சொன்ன சொல்லோடு உள்ளத்தையும் உடலத்தையுந் தனது ஆணைக்குட்படுத்தி அனுகூலமடைகிறான். மானிடருக்குள் அத்தகையினர் அரியர். மற்ற வழி எதுவென்றால், உலகிலிருந்து பந்தங்களின் மூலமாகவே பந்தங்களைக் களைந்துவிடுதல்; இதுவும் பற்று நீக்கமாய்ப் படிப்படியாகச் செல்லுகிற மார்க்கமாகும். பொருள்களை உணர்ந்து அனுபவிப்பதனால், அவற்றினது வரம்பினுட்பட்ட நிலையாமையை உணரும் அறிவு உண்டாகிறது. உண்டாகவே, மனம் அப்பொருள்களின் மேலுள்ள பற்றினைக் களைந்துவிடுகிறது. "நேதி, நேதி" என்னும் நெறி அறிவு பெறுதலே பற்றறுக்கிற மார்க்கமாகும். மற்றையது, செயல் அனுபவங் காரணமாகப் பற்றறுப்பது. முந்தியது, ஞானயோக முறை; செயல் வேண்டாத முறை. பிந்தியது, இடை விடாது கருமஞ் செய்துகொண்டிருக்கிற கரும யோக முறை. நாமனைவரும் தொழில் செய்ய வேண்டியவர். தானான தன்மயத்தில் திருப்தியுற்றவராக, நிராசையுடையவராக, உண்மையிலே ஐக்கியப்பட்டு நிற்பதன்றி, அலைவுறாத சிந்தையராக, எல்லாச் செல்வமும் தமது உண்மை நிலையே என்பதை அறிந்தவராய் இருப்பவரே தொழிலின்றி இருத்தற்குரியர்—ஏனையரெல்லாருந் தொழில் செய்யவேண்டும். ஓடிவருகிற நீரருவி ஒரு சிறிய சுழியினுட்பட்டதும், சுற்றுநேரஞ்சுழித்து நின்று, மீட்டுந் தடையின்றி ஓடுகிறது—மானிட வாழ்வும் இத்தன்மையது; கால தேச நிமித்தத்துக்குட்பட்ட பிரபஞ்சத்திற் சிறிது காலம் தாய், தந்தை, உடன்பிறந்தார், பெயர், புகழ் ஆகிய சுழியினுட்பட்டு நின்று மீட்டும் தளையினின்று நீங்கித் தான் செல்லும் வழியிலே செல்கின்றது. பிரபஞ்சம் அனைத்தும் இத்தன்மையதே. அறிந்தும் அறியாமலும் நாம் செய்கிற தொழிலனைத்தும் உலகமாகிய கனவினின்று நீங்குவதற்காகவே செய்யப்படுகின்றன. சுழியி

னின்று நீங்குவதற்காகவே எல்லாக் கருமங்களும் செய்யப்படுவனவாகும்.

இனிக் கரும யோகம் என்பது யாது? முறையறிந்து கருமஞ் செய்யும் இரகசியமே கரும யோகமாகும். பிரபஞ்சம் அனைத்தும் ஓயாமல் தொழில் செய்து கொண்டிருக்கின்றது. எதற்காகக் கருமஞ் செய்துகொண்டிருக்கின்றதெனின், விடுதலை அடைவதற்காக என்போம். அறிந்தோ, அறியாமலோ, அணு முதல் தேவர் வரையிலுமுள்ள அனைத்துயிர்களும் இந்த நோக்கத்திற்காகவே முயல்கின்றன. உடல், உள்ளம், ஆன்மா என்னும் இவை சுதந்தரம் பெற்றிருக்க வேண்டுமென்னும் ஒரே குறியை நோக்கி முயன்றுகொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லுமிடத்து, மன்னுயிர் அனைத்தும் எல்லையுட்பட்ட வாழ்வினது தளையை ஒழித்து விடுதலை பெற்றிருப்பதற்கு முயல்கின்றன. சூரியன், சந்திரன், பூவுலகம், ஏனைய உலகங்கள் ஆகிய எல்லாம் பந்தத்தினின்று விடுதலையடைய முயல்கின்றன. இயற்கைப் பொருள்களிலே வெளிச் செலுத்தும் சக்தி (Centrifugal force), உள் வாங்குஞ் சக்தி (Centripetal force), ஆகிய இரண்டும் அமைந்திருப்பது இதற்கு உதாரணமாகும். பிரபஞ்சத்தில் அலைவுற்று, மோதுண்டு, தத்தளித்துத் தடுமாறித் தாமதமுற்று, ஈற்றில் உண்மையுணர்ந்து கொள்ளும் வழியைத் தவிர்த்து, முறையறிந்து முயற்சி செய்து எளிதில் உண்மையை அறிந்துகொள்ளும் நெறியைக் கரும யோகம் உணர்த்தும். பயன்படுத்தத் தெரியாத காரணத்தினால் தேக மனோசக்திகள் வீணாக அழிந்து போதல் கூடும். கருமயோகம் தொழிலின்முறைச் சாத்திரமாயிருத்தலினாலே, செய்யுந்தொழிலைப் பயன்படுமாறு செய்வதற்கு உரிய வழியைச் சொல்லும். ஓயாமல் தொழில் செய்துகொண்டிருக்க வேண்டுமாதலினாலே, செய்யுந் தொழிலினால் மேலான நன்மையும் பயனும் வருமாறு முயலுவதே தகுதியாகும். உலகம் சிற்றலையுள் அழிந்து போகிற நிலையில்லாப் பொருளெனினும், முக்திக்கரை சேர்வதற்கு நாம் அவ்வழி செல்ல வேண்டியவர்களென்பதையும், உலகப் பந்தத்தைச் சிறிது சிறிதாக அகற்றிவிடுதற்கு உரிய வழிகள் இவையாமென்பதையுங் கரும யோகஞ் சொல்லுகிறது. பாம்பு சட்டையைக் கழற்றிவிட்டு வெளிச் செல்வது போல, நினைத்த மாத்திரத்தே உலக பந்தத்தினின்று விடுதலையடையத்தக்க தீரர்களிருக்கின்றார்கள். ஆயினும், சாதாரண மனிதர்கள் கருமஞ் செய்வதனால் சிறிது சிறிதாகப் பந்த நீக்கஞ் செய்ய வேண்டியவர்கள். அவர்களுக்குத் தொழில் செய்

யும் முறையின் இரகசியத்தை விளக்குகிற கரும யோகம் இன்றி யமையாதது.

கரும யோகம் என்ன சொல்லுகிறது? 'ஓயாமல் வேலை செய்துகொண்டிருக்க வேண்டும்; ஆனால், பந்தத்தினுள் புகுதல் கூடாது; மனத்தைப் பற்றுநீங்கிய நிலையில் வைத்திருக்கவேண்டும்,' என்கிறது; துன்பங்களையும் வாழ்வில் நேருகிற இன்னல் களையும் உலகியல் என்று அறிந்து பொறுத்துக்கொள்ளவும், 'வறுமையுஞ் செல்வமும் கணத்திலழிந்து போவன; இவை நமது உண்மை நிலைக்கு உரியனவல்ல,' என்று அறிந்துகொள்ள வும் செய்கிறது; நம்முடைய உண்மை நிலையானது இன்ப துன் பங்களுக்கும், புலனுகர்ச்சிப் பொருள்களுக்கும் அப்பால் மனத் தினாலும் நினைக்கவொண்ணாததென்று அறிவிக்கின்றது; இந்த நிலையை அடைதற்கு இடைவிடாது முயற்சி செய்யவேண்டு மென்று மொழிகின்றது; துன்பமானது செய்யும் தொழிலினா லன்றி, அத்தொழிலின்மேற் பற்று வைப்பதனாலுண்டாகிற தென்று சொல்லுகிறது. பிறனொருவனுக்குரிய அழகிய படம் ஒன்று எரிந்து போனால், மனிதனொருவன் துன்பப்படாமலிருப் பதும், தனக்குரிய படமொன்றால் துன்பப்படுவதும் எதனால் ஏற் படுகின்றன? இரண்டும் ஒரே வகையான பொருளாக இருப்பி னும், "நான், என்னுடையது" என்று சொல்லுகிற பொருளில் துன்பம் பிறக்கின்றது. தான் என்கிற அகங்காரம், தனதென் கிற மமகாரம் இவற்றால் துன்பமுண்டாகிறது. தன்னலவிருப் போடு கூடியசெயலும் எண்ணமும் நம்மை அடிமையாக்குகின் றன. சித்தத்திலிருந்து, 'நான், எனது' என்று எழுகிற ஒவ் வோர் அலையும் நமது கழுத்தைச் சுற்றி ஒரு சங்கிலியைமாட்டி, நம்மை அடிமையாக்குகின்றது. 'நான், எனது' என்று பல முறை சொல்லிக்கொண்டு போக, அடிமைத்தனமும் துன்பமும் வளர்கின்றன. உலகத்தில் எல்லாப் பொருள்களிலுமுள்ள அழ கினைக் கண்டு இன்புறலாம். ஆயினும், அவற்றிற்கு நாம் புறம் பானவர்களென்பதை மறந்துபோதல் கூடாது என்று கரும யோகஞ் சொல்லுகிறது. "என்னுடையது" என்று ஒரு பொருளையுஞ் சொல்லாதே; ஏனெனில், சொன்ன அந்தக் கணமே துன்பம் வந்தெய்தும். "என்னுடைய குழந்தை" என்ற வார்த்தையைக்கூட மனத்தில் நினையாதே. உனக்குக் குழந்தை யிருந்தால் இருக்கட்டும்; உன்னுடையது என்ற எண்ணத்தை விட்டொழி. "எனது மனை", "எனது உடல்" என்று சொல் வதிலேதான் எல்லாத் துன்பங்களும் நிறைந்திருக்கின்றன. உடல்

உன்னுடையதுமன்று; என்னுடையதுமன்று; பிறருடையது மன்று. இயற்கையிலுள்ள பிரமாணங்களுக்கமைய இவ்வுடலங்கள் வருவதும், நிற்பதும், போவதுமாயிருக்கின்றன. நாம் நித்தியமாய்ப் பந்தத்தினின்று நீங்கியவர்களாய்ச் சாட்சிமாத்திரமாய் நிற்கிறோம். சுவரைப் போலவும் சித்திரத்தைப் போலவும் அமைந்தது இவ்வுடலம். படமெழுத விரும்பினுல், எழுதிவிட்டுப் போவதன்றி, எழுதிய படத்தின்மேல் ஆசை வைப்பதெதற்கு? வருவதெல்லாம் வந்து, போவதெல்லாம் போகட்டும்; ஆசை என்னும் கரங்களை நீட்டி அவற்றைப்பற்ற நினையாதே. ஏனெனில், அங்ஙனம் நினைத்த மாத்திரத்தே துன்பம் வந்து சேரும்.

ஆசைக்கரத்தை நீட்டுதல் கூடாதென்றும், அங்ஙனம் தடுத்த பின்னர் மனத்தையும் அவ்வழிச் செல்ல விடுதல் கூடாதென்றுங் கரும யோகஞ் சொல்லுகிறது. இங்ஙனம் செய்த பின்னர், உலகத்தினுட்புகுந்து செய்ய விரும்பிய வேலையைச் செய்து கொண்டிருக்கலாம். எங்குச் செல்லினும், என்ன தொழில் செய்யினும், அவற்றுலெழுந் தீமை உன்னை மாசு படுத்தாது. தாமரையிலை தண்ணீரில் உள்ளது; ஆயினும், தண்ணீர் அதனை நனைப்பதில்லை. அவ்வண்ணமே நீயும் உலகத்தில் வாழ வேண்டும். இந்த நிலையே, முற்றும் பற்று நீங்கிய நிலையாகிய பூரண வைராக்கிய நிலையென்பது. பற்று நீங்கிய நிலை கரும யோக சாதனைக்குமாத்திரமன்றி, ஏனைய யோக சாதனைக்கும் வேண்டுவது. வீடு, அழகிய உடை, நல்ல உணவு இவற்றைத் துறந்து வனாந்தரத்துக்குப் போகும் மனிதன் மிகுந்த பற்றுள்ளவனாயிருத்தல் கூடும். வேறு பொருளில்லாவிடினும்; அவனுடைய உடலே அவனுக்குப் பொருளாக அவன் அதனைப் பேணுவதிலேயே கருத்து வைத்து நிற்றல் கூடும். உடலுக்கும் பிற பொருளுக்குமுள்ள பற்றை ஒழிப்பது, தன்னளவிற்பற்று நீக்கமாகாது. 'நான், எனது' என்னுங் கட்டு மனத்திலிருப்பதால் மனத்துக்கும் புலனுகர்ச்சிப் பொருள்களுக்குமுள்ள சம்பந்தத்தை அகற்றிவிடுவோமாயின், இந்தக் கணமே பற்று நீங்கியவர்களாவோம். சிங்காசனத்திலிருப்பவன் பற்று நீங்கியவனாகவும், கந்தைத் துணியோடிருப்பவன் பற்றுள்ளவனாகவுமிருத்தல் கூடும். ஆதலால், மனத்துறவு அடைந்து, அதன் பின்னர் இடைவிடா முயற்சி செய்து கொண்டிருக்கவேண்டும். கருமயோக நூல் மனத்துறவை அடைதற்குரிய வழிகளை நமக்குச் சொல்லுகிறது.

கரும யோகத்தின்படி, அனைத்துப்பற்றையும் அறுப்பதற்கு

இரண்டு மார்க்கங்கள் உள்ளன. ஒன்று புறத்தேயிருந்து வருகிற உதவியிலுங் கடவுளிலும் நம்பிக்கை வைக்காதவர்களுக்கு உரியது. அவர்கள் பற்றற்றிருக்க வேண்டுமென்னும் உறுதியான அறிவோடு கருமஞ்செய்ய வேண்டுபவர்கள். செய்கின்ற கருமமும் விவேகத்தோடு கூடியதாயிருக்க வேண்டும். கடவுளில் நம்பிக்கை வைப்பவர்களுக்கு எளிதான மற்றொரு வழியிருக்கிறது. அது, பயன்மீது பற்று வைக்காமல், செய்யுந்தொழிலின் பயனையெல்லாம் ஆண்டவனுக்கு அர்ப்பணம் பண்ணுவது. இவ்வாறு செய்பவர், பார்ப்பதும், உணர்வதும், கேட்பதும், செய்வதும், அவனுக்கேயென்று, அனைத்துப் பயனையும் ஈசுவரார்ப்பணம் பண்ணுவர். ஆதலால், நாம் என்ன நற்கருமம் செய்யினும், அதற்காக நம்மை வியந்து கொள்வதும், பயனை விரும்புவதுங் கூடா. நாம் நமது வாழ்விற் செய்து முடித்தது மிகப் பெரிய வேலையாயிருப்பினும், அதனாலேற்படும் பயன் நமக்குரியதன்று; செய்யுந்தொழிலெல்லாம் அவனுக்குரியன. எசமானனும் இறைவனுமாயிருக்கிற அவனிடமிருந்து கணந்தோறும் வந்துகொண்டிருக்கிற கட்டளைகளை நிறைவேற்றும் அடிமைகளே நாம். காண்பது, செய்வது தொழுவதாகிய அனைத்தினையும் அவனுக்கு அர்ப்பணம் பண்ணுவோமாக; நமது உடல், மனம் ஆகிய அனைத்தையும் கடவுளுக்குப் பலியாகச் செலுத்தி விட்டுச் சாந்தத்தோடிருப்போமாக. பண்டைக் காலத்தில் வேள்வித்தீயில் நெய்யை விட்டு ஆகுதி கொடுத்தது போல, நம்மை நாமே தியாகஞ் செய்கிற பூரணாகுதியைத் தினமும் செய்வோமாக. "இவ்வுலகிற் பொருளை நாடிச் சென்றேன்; பெருமானாகிய நீயே பெரும் பொருள் எனக் கண்டடைந்தேன்? நான் உன்னடிக்கு அடைக்கலம். காதலனை நாடிச் சென்றேன்; இறைவனாகிய நீயே ஒப்பற்ற காதலனெனக் கண்டடைந்தேன்; உன்னடிக்கு அடைக்கலம்," என அல்லும் பகலுந் தியானம் செய்வோமாக. "எனக்குரியது ஒன்றுமில்லை; நன்மையோ தீமையோ அனைத்தையும் உனக்கே தத்தம் பண்ணுகிறேன்," என்ற இத்தகைய உள்ளத் துறவு நம்முடைய நாடி, நரம்பு, மூளை அனைத்திலுஞ்சென்று சேர்வதாக. உடல் முழுவதும் துறவுக்குரியதாக மாறிவிட்ட பின்னர், போர்க்களத்திலேயே பீரங்கி மத்தியிலே நின்றாலும் சித்த சமாதானந் தளராது.

சாதாரணமாகக் கடமையென்று சொல்லப்படுவது கீழான வாழ்வின் எல்லையுட்பட்டது எனக் கரும யோகஞ் சொல்லுகிறது. அங்ஙனமாயினும், நாமெல்லாம் அந்தக் கடமைக்கு

அமைந்து நடக்க வேண்டியவர்களாகிறோம். கீழான வாழ்வி னுட்பட்ட கடமைக்கு அமைந்து நடப்பதனால் பல முறையும் துன்பமுண்டாகிறது. கடமையென்னும் நோய் நம்மைப் பிடித் துப் படிப்படியாகக் கீழிழுத்துச் சென்று, முடிவில் வாழ்வு முழு மையையுமே துன்பத்துக்குரியதாகச் செய்து விடுகிறது. இந்தக் கீழான வாழ்வில் காணப்படுகிற கடமை, நண்பகற்காலத்துச் சூரியனைப்போல மனிதருடைய உள்மனத்தை உலர்த்திவிடு கிறது. "கடமை செய்துகொண்டிருக்கிறோம்," என்று அலைகிற சாதாரண மனிதருடைய அடிமைத்தனத்தை ஆராய்ந்து பாருங் கள். கடவுளைத் துதிப்பதற்கும், நீராடுவதற்குங்கூட நேரமில்லா மல், கடமை அவர்களைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டது. வெளியே தொழில் செய்யப் போகும்பொழுது கடமை அவர் களுக்குப் பின் நிற்கிறது. வேலையொழிந்து வந்து வீட்டிலிருக் கும் பொழுது, நாளைக்குச் செய்ய வேண்டிய வேலையை நினைக்கப் பண்ணிக் கடமையுங்கூட உட்கார்ந்துகொள்ளுகிறது. மாறுமல் கடமையினால் பற்றப்பட்டு, ஓடும்போது, சேணத்தோடு விழுந் திறக்கிற குதிரையைப்போல இறந்துவிடுகிறார்கள். சாதாரண மான மனிதன் கடமையைப்பற்றிக்கொள்ளும் எண்ணம் இத்தன் மையது. உண்மையாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது, செய் தற்குரிய கடமையொன்று மாத்திரமிருக்கிறது. பற்று நீங்கிச் செய்யுந் தொழிலைக் கடவுளுக்கு அர்ப்பணஞ்செய்வதே நமது கடமை. நம் கடமைகளெல்லாம் அவனுடைய கடமை. நாம் இவ்வுலகத்தில் வருவதற்கும், அவனுடைய கட்டளைகளைச் செய்து கொண்டிருத்தற்கும் பேற்றைப் பெற்றவர்கள். பற்று நீங்கி நிற்கும் நிலையில், நன்றாகச் செய்வதனால் நமக்கு வருகிற பயனு மில்லை; பிழையாய்ச் செய்வதனால் வருகிற துன்பமுமில்லை. ஆத லால், பற்று நீங்கிச் சாந்தமாயிரு; சுயேச்சையோடு கருமம் செய். இவ்வாறு பற்று நீக்கத்தோடு தொழில் செய்தல் அடைவ தற்கரிய நிலையாயிருக்கலாம். என்றாலும், அடிமை நிலையைக் கடமை என்று கொள்ளாதே. உலகத்துப் பொருள்களிலோ, பணத்திலோ, பற்று வைத்த மனிதர், அவற்றுக்காக ஒருவரோ டொருவர் சண்டையிடுகின்றனர். 'ஏன் சண்டையிடுகிறீர்கள்?' என்று கேட்டால், 'அது எங்களுடைய கடமை,' என்கிறார்கள். பொன்னுக்கும் பொருளுக்கும் உள்ள கீழான அவாவை மலர் கொண்டு மறைக்கப் பார்க்கிறார்கள்.

இவர்கள் கடமையென்று சொல்வதுதானென்ன? பிற உடல் களோடே, தமது உடலுக்கிருக்கும் பற்று நிலைப்பட்டதெனின்,

அதனைக் கடமையென்கிருர்கள். சான்ருக மன ஒழுக்கம் இல்லாத நாடுகளில் கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட கடமையென்பதில்லை. ஒருத்தியும் ஒருவனுங்கூடி வாழும் மண ஒழுக்கம் ஏற்பட்ட பின்னர், அவர்களுக்கிடையில் சில வகைப் பற்றுகள் உண்டாகின்றன. இவை சந்ததி முறை சில கழிய, கடமையென்னும் பெயரோடு நிலைபெறுகின்றன. இப்பற்றுக் கூர்மையாகுமிடத்து இதனை நோய் என்கிரும்; தடிப்பேறி நிலைத்துவிடின், கடமை என்கிருேம். எவ்வகையாலும் அது நோயேயாகும். பற்றுத் தடித்துவிடின், கடமையென்னும் பெரும் பேரிட்டு வழங்குகிருேம். அது மாத்திரமன்றி, மலர் சொரிந்து, மங்கல வாத்தியம் முழங்கி, வேத மந்திரம் ஓதி, கடமையை ஆசனத்திருத்தி, கடமையின் பேரால் ஒருவரோடொருவர் சண்டையிடுவதும், ஒருவர் பொருளையொருவர் திருடுவதுமாக இருக்கிருேம். கடமையைப் பற்றிய இந்தக்கொள்கையும் ஓர் அளவுக்கு நல்லது; ஏனெனில், விலங்கியல்பிலிருந்து இது நம்மைக் கைதூக்கி விடுமாதலின். வேருேர் உயர்வான கொள்கையையும் கொள்ளக்கூடாத சாதாரண மனிதருக்கு இக்கொள்கை நல்லது. கரும யோகியானவன் இதனை எறிந்துவிட்டு, உயர்வான கொள்கையைக் கொள்ளவேண்டியவன். நமக்குக் கடமையென்று ஏற்பட்டது ஒன்றுமில்லை. உலகத்திற்குச் செய்யக்கூடியதை யெல்லாஞ் செய்வோம். ஆனால், கடமையென்ற எண்ணத்தை விட்டுவிடுவோம். சுயேச்சையின்றி நெருக்கடிக்கு அமைந்து செய்கிற வேலைகள் யாவும் பற்றினை உண்டாக்குவன என்பதை அறிந்துகொள்வாயாக. கடமையைப்பற்றி எண்ணுவானேன்? எல்லாவற்றையும் கடவுளுக்கு விட்டுவிடு. யாரையுஞ் சுட்டெரிக்கும் கடமையாகிய தீச்சூளையினுள், இந்த அமுதத்தை அருந்தி இன்புற்றிரு. நாமெல்லாம் அவனுடைய சித்தத்திற்கமைந்து முயலுகிருேம் என்பதை அறிந்துகொள். நமக்கு உபகாரமும் வேண்டா; தண்டனையும் வேண்டா. உபகாரத்தைக் கருதினல் தண்டனையைப் பெறுதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டும். துன்பத்தினின்று நீங்க விரும்பினல், இன்பத்தின் எண்ணத்தையும் விட்டுவிட வேண்டும். ஏனெனில், இன்ப துன்பங்களிரண்டும் ஒன்றேடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கமின்பம், மறுபக்கந் துன்பம். ஒரு பக்கம் உயிர் வாழ்க்கை, மறுபக்கம் மரணம். மரணத்தினின்று தப்புதற்கு வழி, உயிர் வாழ்தலின்மேலுள்ள பற்றினை நீக்குதலே. ஆராய்ந்து பார்க்குமிடத்து, உயிர்வாழ்தலும் மரணமும் இரண்

டிடத்திலிருந்து நோக்கப்பட்ட ஒரே பொருளாக முடியும். துன்பமில்லாத இன்பம், மரணமில்லாத வாழ்வு என்பன பொருந்தாத மொழிகள்; இவை பள்ளிக்கூடச் சிறுவருக்குச் சொல்லற்பாலன. ஞானிகள் இதனையுணர்ந்து, இரண்டினின்றும் நீங்குவர். செய்யுந்தொழிலினுல் ஏற்படுகிற சிறுமையும் வேண்டா; பெருமையும் வேண்டா. உலகப்பாதையில் யாதேனுமொரு நற்கருமத்தைச் செய்தவர்கள் இதனுல்வரும் புகழைப்பெற விரும்புகிருர்கள்; தருமத்துக்குப் பொருள் கொடுத்தால், பெயர் பத்திரிகையில் வர வேண்டுமென்று விரும்புகிருர்கள். இவ்வித விருப்பமிருந்தால், துன்பம் வந்தே தீரும். உலகத்திலுள்ள மிகப் பெரிய மனிதர், ஒருவராலுமறியப்படாமல் தம்முடைய வாணுட்களைக் கழித்துக் கொண்டு போய்விட்டனர். உலகம் அவர்களை அறியவில்லை. அப்பெரியாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கிறித்து, புத்தர் ஆகியோர் இரண்டாம் படியில் வைக்கப்பட வேண்டியோராவர். ஒருவராலும் அறியப்படாத இவ்வீரர்கள் ஒவ்வொரு தேசத்திலும் நூற்றுக்கணக்காய் இருந்து இறந்திருக்கிருர்கள்; மௌனமாய் வாழ்ந்து, மௌனமாய்க் கழிந்து போகிருர்கள். இவர்களுடைய எண்ணங்கள் புத்தர், கிறித்து ஆகியோர் மூலமாக வெளிப்படுகின்றன. உயர்வு படைத்த இப்பெரியோர்கள் தங்கள் அறிவு காரணமாகப் பெயரையும் புகழையும் விரும்புவதில்லை. இவர்கள் தமக்கென்று தனித்த மதங்களை ஏற்படுத்திக்கொள்வதில்லை; தங்களுடைய எண்ணங்களை உலகிற்குக் கொடுத்துவிட்டுப் போகிருர்கள். பூரணச் சாத்துவிகம் பொருந்திய இம்மகான்கள் அன்பினுல் உருகுபவர்கள்; கலகஞ் செய்யாதவர்கள். இத்தகைய ஒரு யோகியாரை யான் கண்டேன். அவர் ஒரு குகையில் வசித்து வந்தார். அவர் மிகவுஞ் சிறந்தவர்; தான் என்பதை அறவே மறந்தவர்; தெய்வத்தன்மை பொருந்தியவர். ஒரு கையை ஒரு பிராணி கடிக்குமாயின், இறைவனுடைய சித்தம் என்று மற்றக் கையையுங் கொடுப்பவர்; வருவது முழுதும் இறைவனிடத்திருந்து வருகிறதென்னுங் கொள்கையுடையவர். அவர் மனிதர் முன்னிலையில் வருவதுகூட இல்லை. ஆயினும், அவர் அன்பும், உண்மையும், இனிமையும் நிறைந்த களஞ்சியம் போன்றவர்.

முதல் தர வீரர்களாகிய இவர்களுக்கு அடுத்த படியிலுள்ளவர்கள் ரஜோ குணம் மேற்பட்டவர்கள்; முந்தின வகுப்பினருடைய எண்ணங்களை உலகத்துக்குப் போதிப்பவர்கள். உயர்வுடைய பெரியோர் மௌனத்திலிருந்து உண்மையை உணர்

வார். புத்தர், கிறித்துப் போன்றவர்கள் இடந்தோறும் சென்று அவ்வெண்ணங்களைப் போதிக்க முயல்வார்கள். தாம் இருபத்தைந்தாவது புத்தரெனக் கௌதம புத்தர் பல முறையும் சொல்லியிருக்கிறார். இவருக்கு முன் சென்ற இருபத்து நான்கு புத்தர்களையும் உலகம் அறியாதெனினும், கௌதமர் அவர்களிட்ட அஸ்திவாரத்தின்மீது தமது கொள்கையை எழுப்பினரென்பதற்கு ஐயமில்லை. உயர்ந்தோராஞேர் சாந்தம் மௌனம் ஆகியவற்றை மேற்கொண்டிருப்பதனுல் உலகு அவர்களை அறியாது. ஆயினும், அவர்களே சித்தவலிமையை அறிந்தவர்கள். தாம் குகையினுள் இருந்து வாழ்நாளைக்கழித்து ஒன்றுஞ் செய்யாமற் போய்விட்டாலும், ஐந்து உண்மைகளை மாத்திரமே நினைத்து விட்டுப் போய்விடினும், அவ்வுண்மைகள் நித்தியமாக நிலைத்து, மலையையுங் கடலையுங் கடந்து, மனிதருடைய உள்ளத்தினுள்ளும் மூளையினுள்ளும் புகுந்து, உலக வாழ்வைச் செவ்வனே நடத்தும்படி எப்பாலாருக்கும் உதவி புரிவன என்பதை அவர்களறிவார்கள். சாத்துவிக புருஷராகிய பெரியோர் கடவுளுக்கு மிகவும் சமீபத்திலிருப்பவராதலினுல், சண்டையிடுவதும், துன்பப்படுவதும், போதிப்பதும், நாம் சொல்லுகிற விதமாக உலகினருக்கு உதவி புரிவதும், அவர்களுக்கு இயல்பல்ல. முயற்சி புரிபவர்கள் எவ்வளவு நல்லர்களாயிருப்பினும், சிறிதளவு அறியாமை மிஞ்சி யிருப்பார்கள். சிறிதாவது பற்றும், ஏதாவது ஒரு வகைக் காரணமும் தூண்டினலன்றி முயற்சி நடந்தேருது. அங்ஙனமாயினும், அடைக்கலான் குருவியினது விழுகையையும் கவனித்துக் கொண்டிருக்கிற தேவன் முன்னிலையில் மனிதனெருவன் தான் செய்கிற வேலை தன்னுடையதென்று எங்ஙனம் சொல்லுதல் கூடும்? அற்ப விஷயங்களையும் நோக்கிக் கொண்டிருக்கிற கடவுள் சந்நிதியில் இங்ஙனம் சொல்வது அறியாமையும் தேவநிந்தையுமாகுமன்ருே? இறைவன் திருமுன்பு, அன்பிஞேடும் அடக்கத்திஞேடும் நின்று, "அண்ணலே, உன் சித்தத்தின்படியாகுக!" என்று நாம் சொல்லவேண்டும். மிக உயர்ந்த படியையடைந்தவர்கள், பூரணப்பற்று நீக்கத்தோடு கூடியிருப்பதனுல், ஒரு தொழிலுஞ்செய்யார்கள். இந்த விஷயமாக ஸ்ரீமத் பகவத்கீதை சொல்லுகிற உண்மையைச் சிந்திப்போம்: "யாவனெருவனுடைய உள்ளம் முற்றும் கடவுள் பால் சென்றுவிட்டதோ, யாவனெருவனுடைய ஆசையானது முற்றிலும் கடவுள்பால் நிலைபெற்றுவிட்டதோ, யாவனெருவன் கடவுளோடு பூரண ஐக்கியம் பெற்றிருக்கிருனே, அவனுக்குத் தொழிலென்பதில்லை." இத்

தகையினர் மனித இனத்தில் மிக உயர்ந்த படியிலுள்ளவர்கள் ; இவர்களொழிந்த ஏனையோரனைவரும் முயற்சி செய்யவேண்டு பவர்கள். அங்ஙனம் தொழில் செய்வதனால், உலகத்துக்கு அரும் பளவாவது உதவி செய்கிறோமென்று நினைத்தல் கூடாது. அது நம்மாலாகாத காரியம். உலகமாகிய பயிற்சிச் சாலையில், நாம் நம்மைத் தூயவராக்கிக்கொள்ளுகிறோம். இந்த எண்ணத்தோடு முயற்சி செய்வோமாயின், பற்றுக்கு இடங்கொடுக்க மாட்டோம் ; பிறர்க்காகப் பாடுபட நமக்குக் கிடைத்திருப்பது பெரும்பேறு என்பதை மறக்க மாட்டோம். நம்மைப்போல் கோடி பேர் தாம் பெரியவரென்றும் உயர்ந்தவரென்றும் எண்ணிக்கொண்டிருக்கின் றனர். எல்லாரும் இறக்க வேண்டும். ஐந்து நிமிஷத்தில் உலகம் நம்மை மறந்துவிடும். இறைவர் மாத்திரம் என்றுமுள்ளவர். "இறைவருடைய கருணையில்லாவிடில் ஒரு கணப் பொழுதும் உயிர் வாழவாவது, மூச்சு விடவாவது யாரால் இயலும் ?" அவரே எத்தொழிலும் புரிபவர். எல்லா வல்லமையும் அவருடையதே ; அவருடைய கட்டளையால் காற்று வீசுகிறது ; சூரியன் பிரகாசிக் கிறான் ; உலகம் உயிர் வாழ்கிறது ; மரணம் உலகத்தில் திரிகிறது. அவரே பிரபஞ்சமாகி, அதற்கப்பாலுமானவர். நாம் அவரைத் தொழுதல் மாத்திரமே இயலும். செய்யும் தொழிலையெல்லாம் அவருடைய சேவையாகச் செய்து, பயனை அவருக்கு அர்ப் பணம் பண்ணுவோம். இவ்வழியினாலேதான் பூரணத்துவத்தை யும், பற்று நீக்கத்தையும் அடைவோம். அப்பொழுதுதான் நம் உள்ளத்தைப் பந்தித்திருக்கும் கட்டுகள் அற்று, பூரணப்பற்று நீங்கிய (முக்தி) நிலையை அடைவோம். இதுவே கருமயோக சாதனையின் முடிபாகும்.

காரண காரியத் தொடர்பு வியாப்தி ; 1
இதனொரு கூறே நியதி யாகும். 2

நியதி கடந்தது பந்தநீங் கியநிலை.

ஆங்கவ் வுண்மை நிலைநின் றளப்பின் 3
ஈங்குள சகஞ்சிறு துகளாய் மறையும். 4

அற்றது பற்றெனி லுற்றது வீடு.

செற்றமும் அவாவுஞ் சேராச் சிந்தை
பெற்றிட அரிதெனும் பெற்றிறை அறிந்தோர் 5
கரும யோகப் பெருமையை உணர்வார்.

முறையறிந் தியற்றும் முயற்சியி னாலே
சிறிதுசிறி தாகச் செம்மை மேவி 6
அறிவு நிலையை அடைந்திடல் மரபே.

மாடத் தெழுதிய சித்திரம் இதுவென
உடலப் பற்றினை ஒழித்தல் வேண்டும்;
தாமரை யிலையிடைத் தண்ணீ ரென்ன 7
உலக மயலுரு துறைதல் வேண்டும்.

எரியிடை நெய்சொரி இயல்பிற் றமதெனும்
உடலமும் மனமும் உண்மைத் தீயிடை
ஆவுதி யாக, அமலனை நாடிக்
"காதலன் நீயே; காண்பொருள் நீயே;
கடமை யென்னுங் கடுங்கதிர் உளத்தைச்
சுடுமென அறிந்தோம்; தூயோய்! அதனால்
இன்பந் துறந்தோம்; துன்பமும் அகன்றது;
வாழ்க்கையை வென்றேம்; மரணம்நீங் கியது;
நின்பணி புரிதல் என்கட னென்னக்
கண்டோம் ஐய! கணப்பொழு தேனும்
நின்னரு ளின்றி யாவும் நிகழா.
புவியிடை வாழ்க்கை பொருந்தலும், மரணம்
எங்கணு முலாவு மியல்பும், செங்கதிர்ப்
பரிதி எரித்தலும், வளிவீ சுதலும்,
நின்பே ராணையின் நிகழுவ; அதனால்
நின்னடி யடைந்தனம் யாம்," எனக் கூறி
மோனத் திருந்தார் முதற்றர வீரர்;
இவருளத் துதித்த அமிழ்தவெண் ணத்தைத் 8
திசைதிசை தோறுஞ் சென்று பரப்பும்
வினைவலர் கண்டீர் கிறித்துவும் புத்தரும்.

எட்டாம் அதிகாரம்

கரும யோகத்தின் உயர்தனிக் கொள்கை

ஒரே முடிபைப் பல வழிகளாலும் சென்று சேரலாமென்பது வேதாந்த மதத்திலுள்ள மிகவுயர்ந்த கொள்கை. பல்வேறு வகைப்பட்ட மார்க்கங்களையும் கரும மார்க்கம், பக்தி மார்க்கம், யோக மார்க்கம், ஞான மார்க்கம் என நான்காக வகுக்கலாம். இவ்வாறு வகுக்கப்பட்ட நான்கு பிரிவும் முற்றிலும் தனித்து நிற்பனவல்ல; ஒன்ருேடு பிறவுங் கலந்து நிற்பன; கலந்து நிற்பினும், சிறப்பு நோக்கி அவ்வப்பெயரால் வழங்கப்படுவன. தனித்துக் கருமம் மாத்திரஞ் செய்கிற மனிதரையாவது, தெய்வந் தொழுதல் மாத்திரமே செய்பவரையாவது, ஞானநிலையில் மாத்திரம் தனித்து நிற்பவரையாவது காண்பதரிது. எந்த நிலை மிகுந்து நிற்கிறதோ, அந்த நிலை நோக்கியே இன்ன வகுப்பு என்பது தெளியப்படும். ஈற்றில் நான்கு மார்க்கங்களும் ஒன்று சேர்வன; எல்லாச் சமயங்களும், கருமம், கடவுள் வழிபாடு ஆகிய அனைத்தும் ஒரே முடிபை நோக்குவன.

அந்த முடிபை இந்நூலுள் முந்தின அதிகாரங்களிற் காட்டியிருக்கிறேன். பற்று நீங்கிய முக்தி நிலையே அந்த முடிபு. நம்மைச் சூழ நாம் காண்கிற அனைத்தும் முழு விடுதலையை அடைய முயல்கின்றன. அணு முதல் மனிதன் வரையும் அஃதாவது உயிரில்லாத சடப்பொருள் முதல் சிறப்புடைய உயிராகிய மனிதவுயிர் வரையும், அனைத்தும் வீடு பேற்றினையடைய முயல்கின்றன. வீடுபேற்றினை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சிக்காகவே பிரபஞ்சமனைத்தும் உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று ஒருவாறு சொல்லலாம். கூட்டமாயிருக்கிற அணுக்களில், ஒவ்வொன்றும் தனித்துத் தன் கதியிற்செல்ல முயல்வதையும், ஏனைய அணுக்கள் கவர்ந்து நிறுத்துவதற்கு முயல்வதையும் காண்கிறோம். பூமி சூரியனுடைய கவர்ச்சியிலிருந்து விலகிச் செல்ல முயல்கிறது; அங்ஙனமே சந்திரன் பாரின் கவர்ச்சியிலிருந்து விலகிச் செல்ல முயலுகிறது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் எல்லை கடந்து விலகிச் செல்ல விரும்புகின்றன. பக்திமான் கடவுளை வணங்குவதும் இதனாலேதான்; சோரன் களவாடுவதும் இதனாலேதான். ஒரே தன்மையான எண்ணத்தினால் ஏற்பட்ட

தொழில் தகாததாயிருக்கும் பொழுது, அதனைத் தீய தொழில் என்கிறோம். தக்கதாயிருக்கும் பொழுது, நல்ல தொழில் என்கிறோம். அங்ஙனமாயினும், நன்மை ஒன்றுதான். இரு வேறு வகைப்பட்ட தொழிலும் பற்று நீக்கத்தைக் கருதியனவே. அறிஞன் தன்னுடைய பாசபந்த நிலையை உணர்ந்து வருந்தி, அதனை நீக்கும் வண்ணம் கடவுளை நோக்கி இறைஞ்சுகின்றான். கள்வன் தனக்குச் சில பொருளில்லாத குறையை உணர்ந்து வருந்தி அவ்வருத்த நீக்கத்துக்காகக் களவு செய்கிறான். தத்தம் குறையை நிறைவேற்றுவதற்காக இரு பாலாரும் கொண்ட முறையே வேறாயிற்று. அறிஞன் கொண்ட முறையினால் அவனுக்கு அளவிறந்த ஆனந்தமும், சொல்லுதற்கரிய உவகையும் ஏற்படுகின்றன. கள்வனுடைய முறை அவனது ஆன்மாவைப் பிணிக்கப் புதிதாக ஏற்பட்ட பாசமாயிருக்கிறது. ஆயினும், இரு பாலரும் குறை நீக்கத்தையே தேடுகின்றனர் என்பது வெளிப்படை. அறிந்தும் அறியாமலும், அறிவுப் பொருள்களாலும், அறிவில் பொருள்களாலும் தேடப்படும் முடிபு வீடு பேறேயாகும்.

இனி, வீடு பேற்றின் மேலுள்ள விசாரமே அனைத்துச் சமயானுஷ்டானங்களுக்கும் ஒழுக்க முறைக்கும் ஆதாரமாய் நிற்பது. இவ்விசாரத்தினாலே, மனிதன் தன்னல மறுப்பும் பூரணத்துவமும் அடைந்தவனாய்த் தேகமே தானென்று நினைத்திருந்த பேதமையினின்று நீங்குகிறான். யாவனொருவன் நற்கருமஞ் செய்து பிறர்க்குதவி புரிகிறானோ, அவன், ‘நான் எனது’ என்னுஞ் சிற்றெல்லையினின்று அகலுதற்கு முயல்கிறானென்று அறிதல் வேண்டும். தன்னல மறுப்பிற்கு வரம்பில்லை. பூரணத் தன்னல மறுப்பே மனிதன் அடைய வேண்டிய இலட்சியம் என ஒழுக்கமுறை நூல்கள் அனைத்துங் கூறுகின்றன. மேன்மை பொருந்திய பூரணத் தன்னல மறுப்பையுடையவன், தானுந் தன்மை அழிந்து, அகண்டமாகிறான். நாமரூபத்தோடு கூடிய சிறிய நானென்பது முற்றும் அழிந்து போவதனாற் பரிபூரணத்துவம் ஏற்படுகின்றது. இவ்வகையாகப் பரிபூரணத்துவத்தை அடைவதே சமய சாத்திர ஞான சாத்திரங்களனைத்தும் போதிக்கிற முடிபு. தாமிருக்கும் நிலையிலே எப்போதும் இருக்கவேண்டுமென்று வாதிப்பார் ஒரு சாரார். இவ்வுண்மையைத் தத்துவ நூன்முறையாகக் கேட்கும்பொழுது அச்சமடைகின்றனர். என்றாலும், ஒழுக்க முறையைக் கைக்கொள்ளுவதனால் அவர்களும் இந்த உண்மையைக் கடைப்பிடித்தவர்களாகின்றார்கள். தன்னல மறுப்பு வரம்பு கடந்த பூரணமான பின்பு, நானென்பதெங்கே?

எனக்கென்று ஒரு தொழில் செய்வது யாங்ஙனமாகும்? நான் என்ற எண்ணமே போய்விடுகிறது. நினைப்பதும் பிறரையே; தொழில் புரிவதும் பிறருக்காகவே. இந்த நிலையை அடைந்த மனிதன், நானென்பது அற்றுப் பிரபஞ்சத்தோடு ஒன்றுகிறான். இந்த நிலையை அடைவதே எல்லாச் சமய நூலுக்கும் ஒழுக்க நூலுக்கும் ஒன்றாய் நிற்கும் முடிபு. 'நித்தியமாக நாமரூபத்தோடு கூடியிருப்பேன்,' என்று சொல்லுகிற சமயவாதி, அச்சத்தினால் அங்ஙனஞ்சொல்லுகிறான்; தான் கொண்டுள்ள ஒழுக்கமுறையின் முடிபைத் தைரியத்தோடு ஆராய்வானாயின், அங்ஙனஞ் சொல்லான். மானிட சரீரத்தின் பயனாயுள்ள வீட்டின்பத்தை அடையும் மார்க்கத்தைக் கரும யோக நூல் முறையாகச் சொல்லுகிறது. சுய நல விருப்போடு செய்யுங் கருமங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கின்றன என்றும், சுயநல விருப்பற்ற கருமங்கள் முன்னேற்றத்தைத் தருகின்றன என்றுங் கரும யோக நூல் கூறுகின்றது. நல்லொழுக்கத்திற்குந் தீயவொழுக்கத்திற்கும் வரைவிலக்கணங் கூற வேண்டுமெனின், தன்னல வெறுப்பே நன்மையெனப்படுவது எனவும், தன்னல விருப்பே தீமையெனப்படுவது எனவுஞ் சொல்லுவோம். (இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்.) சுருக்கமாக நோக்கும் போது இது எளிதில் விளங்கத்தக்கதாய் இருக்கிறது.

ஆயினும், விரிவாகப் பார்க்கும் பொழுது இவ்வுண்மையை அறிந்துகொள்வது அவ்வளவு எளிதன்று. ஒரு வகைத் தேசகால நிலைமையில் தன்னல மறுப்பென்று தோன்றுகிற கருமம், மற்றொரு தேசகால நிலைமையில் தன்னல விருப்போடு கூடியிருத்தல் கூடும். ஆதலால், கடமை ஒழுக்கநிலை என்னும் இவற்றைப்பற்றிப் பொதுவான ஒரு வரைவிலக்கணத்தைக் கைக்கொண்டு, செய்ய வேண்டிய கருமங்களை அவற்றிற்குரிய தேசகால நிலைமைக்கேற்ப ஆராய்ந்து செய்தலே மரபாகும். இவ்வகைப் பேதமேற்பட்டிருப்பதனாற்றான், ஒரு தேசத்தில் நல்லொழுக்கத்திற்குரியதெனக் கொள்ளப்பட்ட ஒரு கருமம், மற்றொரு தேசத்தில் தீயவொழுக்கத்துக்கு உரியதாகக் கொள்ளப்படுகின்றது. அங்ஙனமாயினும், அடைய வேண்டிய முடிபு வீடுபேறு ஆதலாலும், பூரணத் தன்னலமறுப்பே இவ்வீடு பேற்றிற்கு வழியாதலாலும், எந்தக் கருமம் தன்னல மறுப்போடு கூடியிருக்கிறதோ, அந்தக் கருமம் நற்கருமமாக எண்ணப்படும். இந்த வரைவிலக்கணம் பல்வேறு வகைப்பட்ட சமய நெறிகளுக்கும் ஒழுக்க நெறிகளுக்கும் ஒத்தது. ஒரு சில சமயவாதிகள் கடவு

ளுடைய கட்டளைப்படி நடப்பது ஒழுக்க நெறி என்பார்கள். ஆராய்ந்து பார்த்தால், 'தான்' என்ற எண்ணத்தையொழிப்பதற்கு உரிய தன்னல விருப்பற்ற கருமங்களே நற்கருமங்களென்று அங்குங் காணலாம்.

ஆதலால், கரும யோகமென்பது, தன்னல விருப்பற்றுப் பிறர் நலங்கருதிச் செய்கிற நற்கருமங்களால் ஒழுக்க நெறி நின்று, நான் என்பது அழியப்பெற்று, பற்று நீங்கிய முக்தி நிலையை அடைவதற்குரிய வழியினை முறைப்படி சொல்லும் ஒரு சாத்திரமாகும். கரும யோகியானவன் மதக் கொள்கையொன்றையும் மதக் கொள்கையென்று கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை; கடவுள், ஆன்மா இவற்றில் நம்பிக்கை வைக்கவேண்டுவதுமில்லை; தத்துவ ஆராய்ச்சி செய்ய வேண்டுவதுமில்லை; பூரணத்தன்னல மறுப்பை அடைவதே அவனது உயர்ந்த கொள்கை. இக்கொள்கையை அனுட்டிப்பதற்கு உரிய நெறிகளை அறிந்து செய்வதே அவன் கைக்கொள்ள வேண்டிய வாழ்வின் வழி. ஒவ்வொரு நிமிஷத்திலும் அவன் உண்மை விளக்கத்தை அடைய வேண்டுபவன். ஞானி அறிவு மார்க்கத்திலுைம், பக்திமான் அன்பினுலும் பெறுகிற முடிபைக் கரும யோகி யாதொரு சமயக்கொள்கை ஆதாரமுமின்றிப் பற்றற்ற கருமஞ்செய்வதனுல் அடைந்துவிடுகிருன்.

இனி இன்னுமொரு வினு எழுகின்றது. உலகத்திற்கு நன்மை செய்வதென்பது என்ன? நாம் உலகத்திற்கு நன்மை செய்யத் தக்கவர்களா என்று கேட்டால் முற்றும் நோக்குமிடத்து 'இல்லை' என்போம்; ஒரு சாராக நோக்குமிடத்து, 'ஆம்' என்போம். உலகத்துக்கு நிலையான நன்மை செய்தல் இயலாது. இயலுமெனில், உலகம் உலகமாயிராது. நாம் ஒருவருடைய பசியை ஒரு பொழுதுக்கு அகற்றுதல் கூடும்; ஆயினும், அவருக்குப் பசி பிறகும் வந்துவிடும். நாம் ஒரு மனிதனுக்கு விளைக்கக்கூடிய எவ்வகை மகிழ்ச்சியும் கணப்பொழுதிற்ருேன்றி மறைவதாகும். மாருமல் தொடர்ந்து வருகிற இத்துன்பக் காய்ச்சலை அகற்ற ஒருவராலும் முடியாது. ஆதலால், உலகிற்கு நிலையான ஆனந்தத்தைக் கொடுக்க ஒருவராலும் இயலாது. கடலில் ஓரிடத்தில் அலை எழுவதாயின், மற்ருேரிடத்திலுள்ள நீர் பதிய வேண்டியிருக்கிறது. மனிதனுடைய தேவைக்கும் ஆசைக்கும் வேண்டுவனவாக உலகத்தில் அமைந்திருக்கும் நல்ல பொருள்கள் எப்பொழுதும் எல்லையுட்பட்டனவாய் இருக்கின்றன. இவை கூடுவதுமில்லை; குறைவதுமில்லை. உலக வரலாற்றை ஆராய்ந்து

பார்ப்போம். முன்னுளிலிருந்த இன்ப துன்பங்களும், ஏற்றத் தாழ்ச்சிகளும் இந்நாளும் இருக்கக் காண்கிறோம். செல்வர், வறியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பிணி வாய்ப்பட்டோர், நோயற்றவர் என்ற இன்னுரெல்லாம் முற்காலத்தில் எகிப்தியர், கிரேக்கர், ரோமருக்குள் இருந்ததுபோலவே இன்றுமிருக்கிறார் கள். சரித்திர எல்லைக்குட்பட்ட காலங்களனைத்திலும் இவ்வாறே இருந்தது. இன்ப துன்ப பேதம் என்றும் இருந்து வருவது போல, அப்பேதத்தை அகற்றுதற்குரிய முயற்சியும் என்றும் இருந்து வருகிறது. மற்றையோருடைய துன்பங்களை நீக்குவ தற்காக மிகவும் முயன்று பாடுபட்ட ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் எக்காலத்திலும் இருந்திருக்கின்றனர். அவர்கள் செய்து முடித்ததென்ன? ஒன்றுமில்லை. பூரணத் துன்ப நீக் கத்தை உலகம் ஒருபோதும் பெறாது. பந்து ஒன்றினை ஓர் இடத்திலிருந்து அடித்தால், அது மற்றோர் இடத்திற்போய் நிற் கிறது. உடல் நிலையில் உள்ள துன்பத்தை நீக்க, மனநிலையில் துன்பம் வந்தடைகின்றது. இத்தாலித் தேசத்துக் கவி சிரேஷ்ட ராகிய தாந்தே என்பார் எழுதிய நூலிலே நரகத்தில் பொருட் பிணியாளர் கையிற் பெரிய பொற்பந்து கொடுக்கப்பட்டு, அதனை மலையின்மீது அவர்கள் மேல் நோக்கி உருட்ட அது எப்பொழு தும் கீழ் நோக்கி வருகிற தோற்றம் போலிருக்கிறது உலக நட வடிக்கை. பூரண ஆனந்தமுள்ள காலம் உலகத்திற்கு வரு மென்று சொல்வது பள்ளிக்கூடச் சிறுவர் பேச்சாக முடியும். பூரணுனந்த காலத்தைப்பற்றி நினைக்கிற அனைவரும் அவ்வானந் தத்தின் பெரும்பாகம் தத்தமக்கே உரியதாகுமென்று நினைத்தலும் வியப்புக்குரியதே!

உலகத்தின் இன்பத்திற்கு நாம் சிறிதளவாவது கூட்ட வல்லோமல்லோம். அங்ஙனமே துன்பத்தையும் மிகுதிப்படுத்த வல்லோமல்லோம். இன்ப துன்பங்களுக்குரிய சக்தி உலகில் நிலைப்பட்ட ஓர் அளவாய் அமைந்திருக்கிறது. பின்னர் நாம் செய்வதென்ன எனில், ஒரு பாகத்திலுள்ளதை மற்றொரு பாகத் துக்கு மாற்றுவதுதான். உயர்ச்சியும் தாழ்வும் உலகிற்கு இயற்கை. எங்கு வாழ்க்கையுண்டோ, அங்கு மரணமும் உண்டு. இன்பமென்னும் எண்ணத்தோடு, துன்பமென்னும் எண்ணமும் சம்பந்தப்பட்டு நிற்கிறது. தீபம் இடைவிடாமல் எரிந்து கொண்டே போகிறது; அதுவே அதற்குரிய இயல்பு. உயிர் வாழ வேண்டுமெனில், கணந்தோறும் மரணமடையவேண்டும். உயிர் வாழ்க்கையும் மரணமென்பதும் இரு வேறிடங்களிலிருந்து

நோக்கிய ஒரு பொருளேயாம். கடலின் அலேபோல வாழ்க்கையானது எழுவதும் விழுவதுமாயிருக்கிறது. விழுகிற பக்கத்தைக் கண்டவன் தீமை என்பான்; எழுகிற பக்கத்தைக் கண்டவன் நன்மை என்பான். சிறுவன் ஒருவன் பள்ளிக்கூடத்துக்குப் போகிற வயதில், அவனுக்கு வேண்டுவனவெல்லாம் தாய் தந்தையரால் உதவப்படுவதால் எல்லாம் நன்மையாகத் தோற்றுகின்றன. வயதின் முதிர்ந்து அனுபவமும் அமைதியும் அடைந்தவனுக்கு ஆர்வம் குறைந்துவிடுகிறது. நீண்ட காலம் உலகில் வாழ்ந்து காலங்கண்ட சாதியார் புதுச் சாதியாருக்குரிய ஆர்வம் இல்லாதிருப்பதும் இயற்கை. "ஆயிரமாண்டுக்கு நாடு, ஆயிரமாண்டுக்குக் காடு" என்பது பழமொழி. இங்ஙனம் நாடுங் காடுமாக மாறிமாறி வருவது எங்கும் நடந்துகொண்டிருக்கிறது. இதனால், மக்கள் இன்பவாதிகளுந் துன்பவாதிகளுமாகிறார்கள்.

இனிச் சமத்துவம் என்னுங் கொள்கையைப் பற்றி ஆராய்வோம். முழு இன்பக் காலம் வரும் என்னும் எண்ணமானது முயற்சி செய்வதற்கொரு தூண்டுகோலாயிருக்கிறது. கடவுள் வந்து ஒரு காலம் உலகிற்கு அரசராயிருப்பாரென்றும், அக்காலத்தில் மனிதனுக்கும் மனிதனுக்கும் பேதமிராதென்றுஞ் சொல்கிற கொள்கை பல்வேறு சமயங்களிலுமிருக்கிறது. இக்கொள்கையைப் பரப்புவோரை மதோன்மத்தரென்போம். மதோன்மத்தர் மிகுந்த உண்மையுறுதி உடையவர். கிறித்தவ சமயம் பூர்வத்திற் கிரேக்க ரோமானிய அடிமைகளிடையே போதிக்கப்படும் பொழுது இந்த மதோன்மத்தத்தையே ஆதாரமாகக் கொண்டு போதிக்கப்பட்டது. பூரணனந்த சமத்துவநிலே உலகில் வருமென்றும், அடிமை நீக்கமும், உண்டி உடை நிறைவும் ஏற்படுமென்றும் போதிக்கப்பட்டமையால், அடிமைகளாயிருந்தோர், விருப்பத்தோடு மதப் பிரவேசஞ் செய்தனர். போதித்த போதகர் மூடத்தனம் நிறைந்த மதோன்மத்தர்; ஆயினும், உண்மையுறுதி நிறைந்தோர். இந்நாட்களிற் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் இவற்றைப் போதிக்கிற மதோன்மத்தம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையை ஆராயும் பொழுது, மனிதர்க்கிடையிற் சமத்துவமிருந்ததுமில்லே; இருக்கப்போவதுமில்லே. எல்லோரும் எங்ஙனம் சமமாக இருத்தல் இயலும்? அத்தகைய சமத்துவம் மரணத்தைத் தரும் அல்லவா? உலகத்தை உலகமாக்கி வைத்திருப்பது எது? சமத்துவக் குறைவு. படைப்புக்கு முன்னிருந்த காலத்திற் சமத்துவமிருந்தது. ஏற்றத்தாழ்வு, எதிர்ப்பு இவற்றாலாகியது பிரபஞ்சம். சடப்பொருள் அணுக்கள் யாவும் தத்தம்

நிலையில் அசையாது நின்றுவிடின், பிரபஞ்சத் தோற்றமும் நின்றுவிடும். இங்ஙனம் வாராதென்பதை நாம் பௌதிக சாத்திர மூலமாக அறிவோம். தண்ணீரைக் கலக்கிவிட, நீரணு ஒவ்வொன்றும் முன்னிருந்த நிலையை அடைதற்கு முயல்வதைக் காண்கிறோம். பிரபஞ்சமென்றும் பொருள் என்றும் சொல்லுகிற அனைத்தும் தாந்தாம் முன்னிருந்த நிலையை அடைவதற்கு முயல்கின்றன. சாந்த நிலையை அடைந்தபின் பின்னுமொரு கலக்கம் வரப் படைப்பு ஆரம்பமாகிறது. சமத்துவமின்மையே படைப்புக்கு ஆதாரமாவது. இனிச் சாந்த நிலையை அழித்துவிட்ட சக்திகளைப்போலவே, 'மீட்டும் அந்நிலைக்குக் கொண்டு வருகிற சக்திகளும் இன்றியமையாதனவாம்.

ஆதலால், முழுச் சமத்துவம், அதாவது ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்திகளெல்லாம் அடங்கி நிற்றல், இவ்வுலகத்தில் முடியவே முடியாத காரியம். அங்ஙனம் ஏற்படுமாயின், உலகம் உயிர்கள் உறைவதற்குத் தகுதியற்ற இடமாய்விடும். ஆதலால், முழுச் சமத்துவத்தைப் பெறலாமென்று முயல்கிற முயற்சியே அழிவினை வருவிக்கும் முயற்சியாகும். இந்நாளில் மனிதனுக்கும்மனிதனுக்குமிடையிலுள்ள பேதம் எதனால் ஏற்படுகிறது? மூளை வன்மையினது ஏற்றத் தாழ்ச்சியினால். உலகிற்பிறப்போரெல்லாம் ஒரே மூளை வன்மையோடு பிறக்கிறார்களோ என்றால், இல்லை. பிறக்கும் பொழுதே ஏற்பட்ட ஏற்றத் தாழ்வினை யாரால் மாற்ற முடியும்? சிவப்பிந்தியர் என்னுஞ் சாதியார், முற்காலத்தில் அமெரிக்காவில் இருந்தனர். அவர்கள் ஆயிரக்கணக்கான வருடம் இருந்தும் தேசத்தில் எவ்வகைத் திருத்தங்களுஞ் செய்யவில்லை; நாடு நகரங்களை உண்டாக்கவில்லை. இக்காலத்துள்ள அமெரிக்கரின் முன் பிதாக்கள் ஒரு சிறு தொகையினர் வந்து காடு கெடுத்து நாடாக்கினர். இதற்குக் காரணம் என்னவென்றால், சீர்திருந்திய மனிதர் தம் மனத்திற் பதிந்திருந்த எண்ணங்களைப் புறத்தே தோற்றுவித்தமையாம். பூரண பேதமின்மை மரணமாய் முடியும். உலகம் இருக்கும் வரையும் பேதமிருந்தே தீரும். ஊழி முடிவிற்றான் பூரண சமத்துவம் ஏற்படும். அதற்கு முன் பூரண சமத்துவம் இருத்தல் இயலாது. அங்ஙனமாயினும், பூரணானந்த நிலை வரவேண்டுமென்னும் எண்ணம், கருமஞ் செய்ய முயல்வதற்கொரு தூண்டுகோலாகும். சமத்துவமின்மையைப் போலச் சமத்துவத்தை அடைய வேண்டுமென்னும் விருப்பமும் உலகப் படைப்புக்கு இன்றியமையாதது. பற்று நீங்கி முக்தி நிலையில் முயன்று கடவுளை அடையவேண்டுமென்றும்

எண்ணம் இல்லாத வழி, பிரபஞ்சப் படைப்புப் பயனற்றதாகும். கருமஞ் செய்ய விரும்புகிற விருப்பமும் இரு வகைப்படும் : ஒருவகை, பந்தத்தைத் தருவது ; ஒருவகை பந்தமின்மையைத் தருவது. இவை இரண்டும் மனிதர்க்கிடையேயுள்ள பேதங்களை மெய்ப்பிக்கின்றன.

சில்லினுட் சில்லுச் சுழல்வதாயுள்ள இவ்வுலகம் அச்சுறுத்தும் யந்திரம். இதனுட் கைவைத்தவர் பிடிபட்டவராவார். சில தொழில்களைச் செய்து நிறைவேற்றிய பின் ஆறுதலாயிருப்போமென்று செய்கிறோம் ; அவை முடிவதற்கு முன் வேறு சில தொழில்கள் நம்மைப் பற்றுகின்றன. இங்ஙனமாக, உலக இயந்திரம் நம்மைக் கவர்ந்துகொண்டு செல்லுகிறது. இதனுள்ளிருந்து வெளி வர இரண்டு வழியுண்டு. ஒன்று, உலகிற்கும் நமக்கும் ஒரு தொடர்பில்லையென்று ஆசையறுத்து வெளியே நிற்றல். இங்ஙனம் சொல்வது எளிதாயிருப்பினும், செய்வது மிகவும் கடினமான காரியம். இரண்டு கோடி மனிதரில் ஒரு மனிதனேனும் இங்ஙனம் செய்ய வல்லவனல்லன். மற்றொரு வழி, கரும யோக இரகசியத்தை உணர்ந்துகொண்டு, உலகினுட்புகுந்து கருமஞ் செய்து உலக யந்திரத்தைக்கொண்டே அதினின்றும் வெளியேறுதல்.

கருமம் இன்னதென்பதை அறிந்துகொண்டோம். அஃது இயற்கைப் பிரபஞ்சத்திற்கு ஆதாரமாய் நிலைத்து நிற்பது. உண்மை வாதிகள் இதனை நன்றுயுணர்வர் ; ஏனெனில், தம்முடைய உதவி கடவுளுக்கு வேண்டுவதில்லையென்பது இவர்களுக்குத் தெரியும். பிரபஞ்சம் இப்பொழுதுள்ள விதமாகவே நடந்து கொண்டிருக்கும் ; பின்னர் நாம் வேண்டுவதெதுவெனில், பற்று நீங்கிய கருமஞ்செய்வதனால் ஏற்படும் முக்திநிலை. கரும யோகத்தின்படி இந்த நிலையைக் கரும மார்க்கத்தால் அடைதல் கூடும். உலகத்திற் பூரணனந்த நிலையை வருவிக்க விரும்பும் மதோன்மத்தம் நன்மையையுந் தீமையையும் பயக்கும் என்பதனையும் அறிவோம். கருமயோக நூலின்படி கருமத்துக்கு காரணம், உள்ளத்தெழும் அன்பும், முக்தியை விரும்பும் இச்சையுமாய் இருப்பதன்றி, உலக அவாவாயிருத்தல் கூடாது. தொழில் செய்வதற்கு உரிமையுடையோமேயன்றி, அதனால் ஏற்படும் பயனுக்கு உரிமையுடையோமல்லோம் என்னும் உண்மையை உணர்ந்த கருமயோகி, அதனை மாறுது பயில்வான் ; நன்மை புரிவது இயல்பாயினபின், புறத்தே ஒருவகைப் பயனையும் விரும்பி நில்லான். நன்மை புரிவது நன்று ; ஆதலினாலே,

நன்மை புரிவோமாக. சுவர்க்கத்தை விரும்பும் இச்சை கூடப் பந்தத்தைத் தருவது ; சிறிதாவது சுயநல விருப்புக் கலந்திருக்கு மாயின், நாம் செய்கிற கருமம் நமது காலுக்கே விலங்கு பூட்டும் என்று கரும யோகம் உரைக்கின்றது.

ஆதலால், நாம் கைக்கொண்டொழுக வேண்டிய வழி எது வெனில், செய்கிற கருமங்களுக்குரிய பயனைத் துறந்து பற்று நீங்கியிருத்தலே. உலகம் நமக்குரியதன்று என்பதையும், நாம் உலகத்துக்குரியோமல்லோம் என்பதையும், நாம் உடலமல்ல என்பதையும், உண்மையில் நாம் ஒரு தொழிலுஞ் செய்வதில்லை என்பதையும் மறந்து போதல் கூடாது. நித்தியமாகச் சாந்தத் திலும் ஆனந்தத்திலும் நிலைபெற்றிருக்கிற ஆன்மாவே நாம். எதுவும் நம்மைப் பிணிக்க வேண்டிய அவசரமென்ன ? அழமாட்டோம்—இரக்கத்தினுற்கூட அழமாட்டோம். ஏனெனில், அழுகை ஆன்மாவுக்கு உரியதன்று ; அழுகையை விரும்புகிற நாம், கடவுளும் வானுலகிற் சிங்காசனத்திலிருந்துகொண்டு உலகத்து மக்களைப் பார்த்து அழுதுகொண்டிருக்கிருரென்று நினைக்கிருேம் ; உண்மையில் அப்படியிருந்தால், அப்படிப்பட்ட கடவுளை அடைவதிற்பயனில்லை. கடவுள் எதற்காக அழ வேண்டும் ? அழுதல் பந்தத்தினுலும் பலவீனத்தினுலும் ஏற்பட்டதன்ருே ? இனி, முற்ருகப் பற்றற்றிருக்கிருேமென்று சொல்வது எளிது. செய்கையில் இதனை எங்ஙனம் காட்டலாம்? தன்னலங்கருதாது செய்கிற முயற்சி ஒவ்வொன்றும் நம்மைப் பந்தித்திருக்கிற விலங்குகளில் ஒவ்வொன்றை வெட்டிவிடும். உலக நன்மைக்காக நாம் வெளியே செலுத்துகிற ஒவ்வொரு நல்லெண்ணமும் நன்மைக்களஞ்சியத்திற் சேர்த்துவைக்கப் படுவதுமன்றி நம்மைப் படிப்படியாகப் பரிசுத்தருமாக்கிவிடும். ஈற்றில் நாம் மேலான பரிசுத்த நிலையை அடைவோம். இதனை அடைதற்கரிய நிலையென்றும், ஞான சாத்திரங்களில் மாத்திரம் பேசப்படுவதென்றும், பழக்கத்திற்குக் கொண்டுவரத் தகாத தென்றும் நினைத்தல் கூடாது. இது அனுட்டிக்கக் கூடிய உண்மை. "சுயநல நோக்கமின்றிக் கருமஞ் செய்தல் வேண்டு மெனக் கீதையிற் கூறுவது இயலாத விஷயம்," என்று வாதிக்கும் ஒரு சாரார், உண்மையான தன்னல மறுப்போடு கருமஞ் செய்பவரைக் காணுதவர் ஆவார்.

ஈற்றிலே கரும யோகத்தை முற்றும் பயின்ற ஒரு மனிதரைப் பற்றிச் சொல்லி முடிக்கிறேன். இந்த மனிதர் யாரெனில், புத்த தேவர் என்போம். புத்தர் பூரணத் தன்னல மறுப்பை முற்றும்

பயின்றவர். அவரையொழிந்த ஏனைய தீர்க்கதரிசிகள் சுயநல விருப்பற்ற செயல் செய்யும்போது, பிற நியாயங்கள் பற்றிச் செய்தார்கள். ஏனெனில், புத்தரொருவரைத் தவிர்த்த ஏனைய தீர்க்கதரிசிகள் இருவகையினர். ஒரு வகையோர், கடவுளின் அவதாரமாய் உள்ளவர் ; மற்ற வகையோர், கடவுளிடத்திருந்து வந்த தூதுவர். இவர்கள் உயர்வான உண்மைகளைப் போதித்த போதும், தேவத்துவமும், தேவனிடமிருந்து நன்மை அடைவதுங் காரணமாக முயன்ருர்கள். புத்தர் கடவுளைப்பற்றி விசாரணையே செய்யவில்லை ; ஆன்மாவைப் பற்றி நுணுகி ஆராய்ந்துகொண்டி ருக்கவுமில்லை. "நல்லவர்களாயிருந்து நன்மை செய்யுங்கள் : இது உங்களை உண்மையை அடையும்படி செய்யும்," என்று போதித்தார். அது மாத்திரமோ ? அவர் அங்ஙனமே நடந்தார். உயர்வான ஞானசாத்திர உணர்வும், ஒப்பற்ற இரக்கமும் ஒருங்கு பொருந்தியவராய்ப் புத்தர் ஒருவரையே உலகம் கண்டது. உயர்வான உண்மைகளை விளக்கும் அறிவுடையோ ராகிய அப்பெரியார், விலங்குகளின் மேலும் அன்புள்ளவர் ; தாம் செய்த செயல் ஒன்றையுந் தமக்கென்று கொள்ளாதவர். கரும யோகத்தைப் பயின்றவர்களுள் அவரே சிறந்தவர். உலக வரலாற்றைப் படிப்போமாயின், மக்களுள் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்பதை உணர்ந்துகொள்வோம். அறிவும் இரக்கமும் ஒருங்கு சேரப்பெற்று, ஆற்றலோடு தோற்றிய மகான் அவரே. உலகத்தில் மேலான திருத்தத்தைக் கொண்டு வந்த மகா புருஷரும் இவரே. "சில பழைய நூல்களில் எழுதி யிருக்கிறதென்று ஒரு கொள்கையைக் கொள்ளவேண்டா. தாதை மூதாதைக்குரியதாய் இளமை தொட்டு நீ பயின்று வந்தாயென் னும் காரணத்தினுல் ஒரு கொள்கையின் மீது நம்பிக்கை வைக் காதே ; ஆராய்ந்து, ஓர்ந்துணர்ந்து, நல்லதெனக் கண்ட கொள்கையைப் பயின்று அதனை மற்றவர்களும் பயில உதவி செய்," என்று முதன் முதல் சொன்னவர் அவரே. பொருளையும் பெயரையும் கருதாது நற்ருெழிலை நற்ருெழில் என்று செய்கிற மனிதன் மேலானவன். அங்ஙனம் செய்கிற மனிதன் புத்த தேவரைப் போன்றவனுவன். அவனது முயற்சி உலகத்தை நல்வழிப்படுத்தும். கருமயோகத்தின் மேலான கொள்கையை அவன் பின்பற்றினவனுவான்.

அணுமுத லனைத்தும் வீடுபே றடைய
முயலு மென்ப ; ஆங்கம் முயற்சி
நானென தென்னு நவையினை யகற்றும். 1

பிறர்நலங்கருதித் தன்னல மறுத்தல்
கரும யோகத் துயர்தனிக் கொள்கை. 2

இன்பமுந் துன்பமு மென்று முளவே ;
வாழ்க்கையு மரணமு மாருதியலுவ. 3

பூரண சமத்துவம் பொருந்தா தெனினும்
வேறுபா டகற்ற விழைவது மரபே. 4

உளத்தெழு மன்புந் துறக்க விழைவுங்
காரண மாகக் கருமம் புரிவோன்
வானவர் நாட்டினை மதியான் ; அவனே
உலகப் பொறியி னுருநீர் மையனே. 5

‘ யானிவ் வுலகிற் குரியே னல்லேன் ;
உலகென தன்றெ’னு முண்மையை மருவி
ஆற்றும் வினையினை யாற்றிய வுரவோன்
ஈற்றி லுயர்நிலை யெய்துத லியல்பே. 6

‘ நல்லோ ராகி நற்செயல் புரிமின் ;
அல்லவை கடிமின் ’ எனவன் றுரைத்த
புத்த தேவரைப் போன்றிருப் பதுவே
மெய்த்தவர் நெறியென விளம்பினர் மேலோர். 7

யோகங்கள் (சுருக்கம்)

நால்வகை யோக நெறிகள்

நமக்குள்ள சிறப்பான பிரச்சினையாவது விடுதலை அடைவதே. நம்மை நாம் பிரம்மம் என உணரும் வரை நாம் முக்தி நிலையை அடைய இயலாது. ஆனாலும், இம்மெய்ஞ்ஞான நிலையை அடையப் பல நெறிகள் உள்ளன. இந்நெறிகட்கு 'யோகம்' என்னும் பொதுப் பெயர் உண்டு. யோகம்-சேர்த்தல்; (நம்மை நம்மிடத்துள்ள உண்மைப் பொருளோடு சேர்த்தல்.) இந்நெறிகள் பற்பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பினும், சிறப்பாக நான்கு வகைகளாக இவற்றைப் பாகுபாடு செய்யலாம்; இவற்றுள் ஒவ்வொன்றும் பிரம்ம ஞானத்தைச் சுற்று வழியிலே பெறுதற்குரிய ஒரு நெறியே யாதலின், இவை வெவ்வேறுயுள்ள இயல்புகட்கு ஏற்றன ஆகும். ஆனால், ஒன்றை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அது யாதெனில், தான் இருப்பதாகப் பாவித்துக்கொள்ளும் மனிதன் உண்மை மனிதனாகிய பிரம்மமாகிறான் என்பதில்லை என்பதே. பரப்பிரம்மத்திடம் ஆகுதல் என்பது இல்லை. அது எப்போதும் விடுபட்டதாய், எப்போதும் பூரணமாய் இருக்கிறது; ஆனால், சிறிது காலத்திற்கு அதன் இயல்பை மறைத்துள்ள அஞ்ஞானம் நீக்கப்பட வேண்டுவதாகிறது.

யோக முறைகள் எல்லாவற்றிற்கும் உள்ள முழு நோக்கம்—ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு முறையைக் குறிப்பதும்—இந்த அஞ்ஞானத்தை நீக்கி, ஆன்மா தனது சொந்த இயல்பை மீண்டும் பெற இடம் கொடுத்தலேயாம். இம்மாதிரி விடுதலை அடைதற்குச் சிறந்த துணைகளாவன, பயிற்சியும் வைராக்கியமுமேயாகும். வைராக்கியம் என்பது வாழ்க்கையில் பற்றற்ற தன்மை—இன்பத்தை நுகரும் சங்கற்பமே அதன் விளைவாக இப்பந்தத்தை எல்லாம் கொணர்கின்றதாதலின். அப்பியாசம் என்பது யோகங்களில் யாதேனும் ஒன்றை இடைவிடாது பழகுதலேயாம்.

கரும யோகம்: கரும யோகமாவது, கருமத்தைத் துணைக் கொண்டு மனத்தைத் தூயதாக்கல். யாதேனும் ஒரு கருமம்—

சுவாமி விவேகானந்தர்

நன்றோ தீதோ—புரியின், அதன் காரியமாக நன்றோ தீதோ ஒரு பயன் விளைய வேண்டுமன்றோ! ஆதலால், நல்ல கருமம் நல்ல வினையையும், தீய கருமம் தீய வினையையும் உண்டாக்குதலின் ஆன்மா எப்போதும் கட்டுக்குள் இருந்துகொண்டேயிருக்கும்; என்றேனும் விடுதலையடையலாகும் என்ற நம்பிக்கைக்கும் அப்போது ஏதுவில்லை. ஆனால், வினை என்பது உடலுக்கோ மனத்துக்கோ அல்லாது, ஒருகாலும் ஆன்மாவுக்கு இல்லை. ஆன்மாவுக்கு முன்பே ஒரு மறைப்பை மட்டும் உண்டுபண்ண அதற்கு இயலும். தீய வினையால் விளைக்கப்படும் மறைப்பு, அறியாமை என்பதே. நல்வினை ஒழுக்கச் சக்திகளை வலியுறுத்தும் திறமையுடையது ஆதலின், அது பற்றற்ற தன்மையை உண்டாக்குகிறது. அது தீவினையை நோக்கிச் செல்லும் தன்மையை அழிக்கிறது; அது வழியாக மனத்தைத் தூயதாக்குகிறது; ஆனால், ஒரு செயல் சிற்றின்பம் நுகரும் கருத்தோடு இயற்றப்படின், அது அந்த இன்பத்தை மட்டும் விளைக்கிறது; சித்தத்தை அது தூயதாக்குவதில்லை. இன்மையிலோ மறுமையிலோ இன்பம் நுகரும் எல்லா அவாவையும் எல்லா அச்சத்தையும் கருமயோகி விலக்கிவிட வேண்டும். மேலும், பயனைக் கருதாத இக்கருமம் எல்லாக் கட்டுக்கும் வேரான தன்னலத்தை அழித்து விடும்.

கரும யோகியின் கொள்கையாவது ‘நானல்லேன்; நீயே,’ என்றிருப்பதே; தன்னல மறுப்பு எவ்வளவினதாயினும், அவனுக்கு இது அளவுக்கு மிஞ்சியதாகாது. ஆனால், இதை இயற்றும்போதும் சுவர்க்கத்துக்குச் செல்லும் விருப்பமோ, பேரும் புகழும் நாடும் இச்சையோ, இவ்வுலகில் வேறெந்த நன்மையைத் தேடும் எண்ணமோ அவனிடம் இருப்பதில்லை. இத்தன்னலமற்ற கருமத்தின் விவரணமும் நியாயமும் ஞானயோகத்திலே தான் காணப்படும் எனினும், மனிதனிடம் உள்ள இயல்பான தெய்வத் தன்மையினால் அவன் எக்கொள்கையையும் கருத்தையும் கொண்டவனாயினும், பிறரது நலங்கருதியும், வேறொரு முடிவான நோக்கத்தைக் கொள்ளாமலும் முழுத் தியாகத்தையும் விரும்புவான். இன்னும் பலர்க்குப் பணத்தால் விளையும் பந்தனை மிகப் பெரியதாகும்; அவர்களது பொருள் நசையை ஒட்டித் தொற்றிக்கொண்டுள்ள அனைத்தையும் உடைத்தெறிவதற்குக் கரும யோகம் அவர்களுக்கு முற்றிலும் இன்றியமையாததாகும்.

அடுத்தது, பக்தி யோகம்: பக்தியோ, பூசையோ, ஏதேனும் ஒரு வழியில் அன்பு செய்தலோ, மனிதனுக்கு மிக

எளிய, மிக இனிய, அனைத்தினும் மிக இயல்பான முறையாகும். இப்பிரபஞ்சத்திற்குரிய இயல்பான நிலை கவர்ச்சியே; உறுதியாக அதற்குப் பின் நிகழ்வது, பிரிந்துபோதலே. அது போன்றே, மனிதனது நெஞ்சில் ஐக்கியத்தை நோக்கித்தள்ளும் இயல்பான சக்தியாவது அன்பேயாம். அது தன்னளவில் துயரத்திற்குப் பெரிதும் ஏதுவாகும் எனினும், விடுதலை அளிப்பதாகும். பக்தியைப் பெறுபவர் இறைவரே. அன்பு செய்வோரும் அன்பை ஏற்போரும் இன்றி, அன்பு உண்டாதல் இயலாது. இன்னும் நமது அன்பை ஏற்போர் முதலில் அந்த அன்பிற்குப் பதிலாக நம்மீது அன்பைச் செலுத்துவோராதல் வேண்டும். ஆதலால், அன்புத் தெய்வம் ஒரு வகையில் மனிதத் தன்மையுடைய தெய்வமாதல் வேண்டும்; அவர் அன்புத் தெய்வமாதல் வேண்டும். அத்தகைய தெய்வம் உள்ளதோ இல்லதோ என்ற வினவை ஒதுக்கிவிட்டாலும், நெஞ்சிலே அன்புள்ளவருக்கு, பிரம்மம் அன்புத் தெய்வமாக—சகுணப் பிரம்மமாக—வடிவு கொள்கின்றது என்பது உண்மையே.

இறைவரை நீதியாளராகவோ, ஒறுப்பவராகவோ, அச்சத்தால் மக்கள் கீழ்ப்படிதற்குரிய ஒருவராகவோ கருதி வணங்குவனவாகிய பூசை முறைகள் தாழ்ந்தவைகளே; அவைகள் வர வர விரிந்து உயர்ந்த முறைகளாகுமெனினும், அன்பு என்னும் பெயருக்குரிய தகுதி வாய்ந்தன ஆகா.

இனி, நாம் அன்பைப் பற்றியே கருதத் தொடங்குவோம்; அன்பை ஒரு முக்கோணமாக விளக்குவோம்; இம்முக்கோணத்தின் அடியுள்ள முதற்கோணம், அச்சமின்மையே. அச்சம் உள்ளவரையும் அது அன்பாகாது. அன்பு அச்சத்தையெல்லாம் ஓட்டிவிடும். குழந்தையை ஏந்திய ஒரு தாய், அதைக் காப்பாற்றுவதற்காகப் புலியையும் எதிர்த்து நிற்பாள். இரண்டாவது கோணமாவது, அன்பு ஒருக்காலும் வேண்டாதது; கெஞ்சாதது. மூன்ருவதாகிய உச்சிக் கோணமாவது, அன்பொன்றிற்காகவே அன்பு செய்யும். அன்பைப் பெறுபவரைப் பற்றிய எண்ணமும் மறைந்துவிடும். அன்பு செய்யவேண்டின், அன்பே அதற்கு ஒரே வகையாகும். இது மிக உயர்ந்த தனித்தத்துவமாகும்; பரம்பொருளும் இதுவும் ஒன்றேயாகும்.

அடுத்தது ராஜயோகம்: இந்த யோகம் மற்ற யோகங்களுள் ஒவ்வொன்ருேடும் பொருந்துவதாகும். ஏதேனும் நம்பிக்கை உள்ளவரோ, அற்றவரோ எவ்வகையினரான விசாரணை உடையோருக்கும் இது பொருந்தும். ஒவ்வொரு

சாத்திரத்துக்கும் அதற்கெனத் தனிப்பட்ட ஓர் ஆராய்ச்சி முறை உள்ளது போல, இந்த ராஜயோகமும் சமய சாத்திரத் திற்கே உரிய ஒரு முறையாகும். இந்தச் சாத்திரமும் பற்பல இயல்புகட்கு ஏற்றவாறு பல வகையான பிரயோக முறைகளை உடையதாகும். இதன் முக்கியப் பகுதிகளாவன : பிராணுயாமம், மன ஒடுக்கம் (மனத்தை ஒரு நிலைப்படுத்தல்), தியானம் என்பன. கடவுளிடத்து நம்பிக்கை உடையாருக்கு 'ஓம்' என்பதோ, வேறு புனித மொழியோ போன்ற ஒரு குறியீட்டு மொழியைக் குருவினிடமிருந்து பெறுதல் பெருந்துணையாகும். 'ஓம்' என்பது அனைத்தினும் உயர்ந்தது ; அதன் பொருள் பரப் பிரம்மமே. இத்தூய மொழிகளை ஓதிவரும்போதே இவற்றின் பொருளையும் தியானித்தலே முக்கிய பயிற்சியாகும்.

அடுத்தது ஞானயோகம் : இதில் மூன்று பகுதிகள் உள் ளன. முதலாவது, உண்மையைக் கேட்டல்—அதாவது ஆன்மா ஒன்றே மெய்ப்பொருள், மற்றவை யாவும் மாயை (வியாவ காரியம்) என்பதைக் கேட்டறிதல். இரண்டாவது, எல்லா வகை யாலும் இந்தத் தத்துவத்தை நியாய முறைப்படி ஆராய்வது. மூன்ருவது, பின்னர் வழக்காடுவதை முற்றும் நிறுத்திவிட்டு, உண்மையை அனுபூதியாற் பெறுவது. இந்தக் காட்சிக்கு வேண்டுவனவாகிய நான்கு, (1) பிரம்மமே சத்தியம், மற்றவை யாவும் மித்தை என்ற உறுதி ; (2) சிற்றின்ப நுகர்ச்சியிலுள்ள ஆசையை முற்றும் விடுதல் ; (3) ஐம்புலன்களையும் மனத்தை யும் அடக்கல் ; (4) விடுதலை அடைவதில் பேரவா என்பன.

எப்போதும் உண்மைப் பொருளையே தியானித்தலும், ஆன்மாவுக்கு அதன் உண்மையான இயல்பை நினைவூட்டலும் ஆகிய இவ்விரண்டுமே இந்த யோகத்திற்காணும் வழிகளாம், இது அனைத்தினும் உயர்ந்த நெறி ; ஆனால், அனைத்திலும் மிக்க வருத்தம் தருவதுமாகும். இதனை அறிவால் நன்கு அறிபவர் பலரே ; ஆனால், அனுபூதியைப் பெறுபவர் ஒரு சிலரே.

கருமமும் அதன் மருமமும்

[1900-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், நான்காம் நாள், காலிபோர்னியாவில் லாஸ் ஆஞ்சலஸில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

என் வாழ்க்கையில் யான் கற்றுள்ள மிக உயர்ந்த பாடங்களில் ஒன்றுவது, கருமத்தின் பயனிற் கருத்தைச் செலுத்தும் அளவிற்கு அதை இயற்றும் நெறியிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதே. யான் இப்பாடத்தைக் கற்றது ஒரு பெரியாரிடமிருந்தே; அவரது சொந்த வாழ்வே இப்பெருங்கொள்கையைச் செயலளவாக மெய்ப்பித்துக் காட்டுவதாயிற்று. 'அவ்வொரு' கொள்கையினின்றும் பெரும் பாடங்களை யான் எப்போதும் கற்றுக்கொண்டு வந்துள்ளேன்; பயனிற் போன்று நெறியிலும் அதே அளவு கவனஞ் செலுத்தல் வேண்டும் என்னும் அக் கொள்கையிலே வெற்றிக்குரிய இரகசியம் முழுவதும் அமைந்துள்ளது என்பது எனக்குத் தோன்றுகிறது.

வாழ்வில் நாம் இயற்றும் பெருந்தவறு யாதெனில், நம்மைப் பேரளவிற்குக் கவர்கின்றது குறிக்கோளே; குறியாகக் கொள்ளும் பயன் மிகுதியாக நம்மை மயக்குவதாலும், பேரளவிற்கு அதனுல் நம் உள்ளம் பறிபோவதாலும், அதுவே நமது மனமெனும் அடிவானத்தே மிகப் பெரிதாகத் தோன்றுவதாலும், விவரங்களை நாம் முற்றும் காணுதொழிகிருேம்.

ஆனல், தோல்வி எய்தும்போதெல்லாம், அதனைச் சீர்தூக்கி ஆராய்வோமாயின், நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது நிகழ்ச்சிகளில் அதற்குக் காரணம் நெறியிற்கவனத்தைச் செலுத்தாமையே என்பதைக் காண்போம். நெறியை முற்றுப்பெறச் செய்வதிலும் பலப்படுத்துவதிலும் ஒழுங்காகக் கவனஞ்செலுத்தலே நமக்கு வேண்டுவதாகும். நெறி முழுவதும் தக்கதாயிருக்குமாயின், பயன் வந்தே தீரும். காரணமே காரியத்தை உண்டு பண்ணுகிறது என்பதை நாம் மறத்துவிடுகிருேம்; காரியம் தானுகவே வந்துவிட இயலாது; காரணங்கள் சரியாய் ஒழுங்காய் வலிமையுற்றனவாய் இருந்தாலன்றி, காரியம் உண்டாக இயலாது. ஒரு முறை குறிக்கோளைத் தெரிந்தெடுத்து, அதை எய்துதற்குரிய நெறியையும் தீர்மானித்துவிட்டால், நாம் கிட்டத்தட்டக் குறிக்கோளை விட்டுவிடலாம். ஏனெனில், நெறி பூரண

மாக்கப்படும்போது, அது அங்கே யிருக்கும் என்பது நமக்கு உறுதியே. காரணம் உள்ள போது, காரியத்தைப் பற்றிய சங்கடம் இல்லை; பயன் வந்தே தீரும். காரணத்தை நாம் பாதுகாத்துக்கொள்வோமாயின், காரியம் தன்னைத்தானே பாது காத்துக்கொள்ளும். குறிக்கோளை உணர்தல் காரியம்; நெறியே காரணம்; ஆதலால், நெறியிற் கருத்தூன்றியிருத்தலே வாழ்க்கையின் பரம இரகசியம். இதையே நாம் கீதையிலும் காண்கிறோம்; நமது முழுச் சக்தியோடும் ஓயாது கருமம் புரிய வேண்டும் என்றும், கருமம் எதுவாயினும் நமது முழு மனத்தை யும் செய்யும் கருமத்திற் செலுத்த வேண்டும் என்றும், கீதையில் நாம் கற்றுக்கொள்கிறோம். அதே சமயம் நாம் பற்றுக்கு ஆளா தல் கூடாது. அதாவது வேறெதனுலும் நமது மனம் கருமத்தி னின்றும் விலக இடங்கொடுக்கக் கூடாது. ஆனாலும், நாம் விரும்பும்போதெல்லாம் கருமத்தை விட்டுவிடும் திறமை பெற் றிருக்க வேண்டும்.

நமது சொந்த வாழ்வுகளையே ஆராய்ந்து பார்ப்போமாயின், நம் துயரத்திற்கு மாபெருங்காரணம் இதுவேயென்பதையும் நாம் காண்போம். நாம் யாதேனும் ஒன்றைக் கைக்கொண்டு, அதில் நம் முழுச் சக்தியையும் பெய்கிறோம்—ஒரு வேளை அது தவறி விடுகிறது; எனினும், அதனைக் கைவிட முடியாதவராகிறோம். அது நம்மைப் புண்படுத்துகிறது என்பதையும், பின்னும் அதனையே மேலும் பற்றிக்கொண்டிருத்தலால் நமக்குத் துயரமே விளைகின்றது என்பதையும் நாம் அறிகிறோம்; எனினும், அதினின்றும் நம்மை விலக்கிக்கொள்ள இயலாதவராகிறோம். வண்டு மதுவருந்த வந்தது; ஆனால், அதன் கால்கள் தேன் கிண்ணத்தில் ஒட்டிக்கொண்டன; அதை விட்டு வெளியேற அதற்கு இயலவில்லை. மீண்டும் மீண்டும் நாம் இந்நிலையில் இருப்பதைக் காண்கிறோம். இதுவே வாழ்வின் முழு இரகசியமும். நாம் இங்கிருப்பதேன்? நாம் தேனைக் குடிக்க இங்கே வந்தோம். நம் கைகளும் கால்களும் இதில் ஒட்டிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். நாம் பிடிக்க வந்தோமெனினும், பிடிபட்டுவிட் டோம். நாம் நுகர வந்தோம்; நுகரப்பட்டவரானோம். நாம் ஆளவந்தோம்; ஆளப்படுகிறோம். நாம் வேலைசெய்ய வந்தோம்; வேலை வாங்கப்படுபவரானோம். எல்லாக் காலங்களிலும் இதையே காண்கிறோம். இது நம் வாழ்க்கையில் ஒவ்வொரு விவரத்திலும் புகுகிறது. பிற மனங்கள் நம்மை வேலை வாங்கு கின்றன; நாமும் பிற மனங்களை வேலை வாங்க எப்போதும் பாடு

படுகிறோம். வாழ்க்கையின் இன்பங்களைத் துய்க்க விழைகின்றோம்; அவை நம் உயிர்க்கு இன்றியமையாத உறுப்புகளையே உண்கின்றன. இயற்கையினின்றும் ஒவ்வொன்றையும் பெற நாம் விரும்புகிறோம். ஆனால், நாளடைவில் இயற்கை நம்மிடமிருந்து ஒவ்வொன்றையும் பறித்துக்கொள்வதையும், நம்மை வெறுமையாக்கி ஒரு பக்கமாக எறிந்துவிடுவதையும் காண்கிறோம்.

இது இல்லாதிருப்பின், வாழ்வு முழுவதும் இன்பமாயிருந்திருக்கும். இதை ஒருபோதும் பொருட்படுத்த வேண்டா! தோல்விகளும் வெற்றிகளும், இன்பங்களும் துன்பங்களும் அனைத்தும் இருப்பினும், நாம் மட்டும் சிக்கிக்கொள்ளாமலிருப்பின், வாழ்வு ஒரே இன்பத்தின் தொடர்ச்சியாகவே அமைதலும் கூடும்.

துயரத்திற்கு ஒரு காரணம் இதுவே; நாம் பற்றுக்கு ஆளாகிறோம்; சிக்கிக்கொள்கிறோம். இக்காரணம் பற்றியே கீதை போதிப்பதாவது: ஓயாது கருமம் புரி; கருமஞ் செய்; ஆனால், பற்றுக்கு உள்ளாகாதே! சிக்கிக்கொள்ளாதே. எத்துணைப் பிரியமுள்ளதாயினும், அதற்காக உன் மனம் எவ்வளவோ ஏங்குமாயினும், அதை விடப் போவதால் உனக்கு நேரும் கூரிய துன்பம் எவ்வளவு பெரிதாயினும், உன்னை ஒவ்வொன்றினின்றும் பிரித்துக்கொள்ளும் திறமையை உன்னிடம் வைத்துக்கொள். வேண்டும்போது அதனை விட்டு நீங்கும் திறனைக் கைக்கொள். திறனற்றூர்க்கு இம்மையிலோ மறுமையிலோ இங்கு இடமில்லை. பலவீனம் அடிமைத்தனத்திற்கொண்டு சேர்க்கும். பலவீனத்தால் உடலையும் மனத்தையும் பற்றிய பல்வகைத் துயரமும் விளையும். பலவீனமே மரணம். நம்மைச் சுற்றிலும் இலட்சக்கணக்கான நுண்ணுயிர்கள் உள்ளன; ஆனால், நாம் பலவீனமுற்றாலன்றி, உடல் அவற்றை ஏற்க ஆயத்தமாயும் முற் சார்புடையதாயும் இருப்பினன்றி, அவை நம்மைப் பீடிக்கமாட்டாதனவாம். நம்மைச் சுற்றித் துயரந் தரும் நுண்ணுயிர்கள் பத்து இலட்சம் மிதந்துகொண்டிருப்பினும் என்? அவற்றைப் பொருட்படுத்த வேண்டா. மனம் பலவீனத்தை அடைந்தாலன்றி, அவை நம்மை அணுகத் துணிய மாட்டா; நம்மைப் பற்றிக்கொள்ளும் திறமையற்றனவாகும். இதுவே பேருண்மை; பலமே வாழ்வு; பலவீனமே மரணம். பலமே இன்பமாம்; நித்திய அமர வாழ்வாம். பலவீனமே ஓயாத சோர்வும் துயரமுமாம்; பலவீனமே மரணம்.

இச்சமயம், பற்றே நம் சுகங்கள் அனைத்திற்கும் மூலமாகிறது. நாம் நம் நண்பர்மீதும் உறவினர் மீதும் பற்றுடையராகிறோம்; நம் அறிவாற்றலாலும் ஞான ஆற்றலாலும் இயற்றும் தொழில்களிற் பற்றுடையராகிறோம்; புறப்பொருள்களினின்றும் இன்பம் பெரும்பொருட்டு அவற்றிற்பற்றுடையராகிறோம். இப்பற்றேயன்றி, வேறு எதுதான் துயரத்தைத் தருகிறது? பேரின்பம் பெற வேண்டின், நாம் நம்மைப் பிரித்துக்கொண்டு ஒட்டாதிருக்கவேண்டும். நினைத்தபோது பற்றற்று நிற்கும் திறமை நம்மிடத்திருக்குமாயின், எத்துயரமும் இராது. ஒரு பொருளின் மீது முழுச் சக்தியோடு பற்று வைக்கும் திறமையுள்ளபோதே, வேண்டுங்கால் தன்னைப் பற்றற விலக்கிக் கொள்ளும் திறனுடையவனே இயற்கையினின்றும் மிகச் சிறந்ததைப் பெற வல்லவனாவான். பற்றும் திறமை, பற்றற்று நிற்கும் திறமையின் அளவுக்கு இருத்தல் வேண்டும். இதுவே சங்கடம். எதனால் ஒருபோதும் கவரப்படாத மனிதர் உளர். அவர் ஒருபோதும் அன்பு செய்ய இயலாதவர்; கடின நெஞ்சுடையவர்; எதிலும் விருப்பு வெறுப்பு அற்றவராயிருப்பர். வாழ்க்கையின் துயரங்களிற் பெரும் பகுதியினின்றும் தப்பித்துக்கொள்வர். ஆனால், சுவரும் ஒருபோதும் துயருறுவதில்லை; ஒருபோதும் அன்பு செய்வதில்லை; ஒருபோதும் புண்படுவதுமில்லை; ஆனால், அத்தனையும் இருந்தும் அது சுவரேதான். சுவராய் இருப்பதிலும், பற்றுக்கு உட்பட்டுச் சிக்கிக் கொள்வது மேல் என்பது உறுதி. ஆதலால், ஒருபோதும் அன்பு செய்யாதவனாகி, இளகாத கல்நெஞ்சுடையவனாகி, வாழ்க்கைத் துயரங்களிற் பெரும்பகுதியினின்றும் உய்வடைந்தவன், அதன் இன்பங்களினின்றும் உய்வு பெற்றவனாவான். நாம் அதை வேண்டுவதில்லை. அது பலவீனம்; அது மரணம். ஒருபோதும் பலவீனத்தை உணராததும், ஒருபோதும் துயரப்படாததும் ஆன உயிர் எதுவோ, அது விழிப்படையப் பெறுததே. அது உணர்ச்சியற்ற நிலையே. அது நமக்கு வேண்டுவதில்லை.

அதேசமயம், அன்பின் மாபெருஞ்சக்தியாகிய இது, பாசத்தின் வலிய சக்தியாகிய இது, முழு உயிரையும் ஒரே பொருளிற் செலுத்திப் பிறர்க்காக நம்மை மறந்து நம்மை இல்லையென்னலாம்படி செய்துகொள்ளும் இச்சக்தி, தெய்வங்களின் சக்தியேயாகும். இச்சக்தி மட்டும் நமக்கு வேண்டியது என்பதன்று. ஏனெனில், தெய்வங்களினும் உயர்ந்த நிலையினை எய்த நாம் விரும்புவோம். பூரண மனிதன் தன் முழு உயிரையும் அன்

பெனும் ஒரே புள்ளியின்மீது செலுத்துவான்; ஆயினும், பற்றற்றிருப்பான். இது எவ்வாறு இயலுகின்றது? இங்கே இன்னோர் இரகசியம் கற்க வேண்டுவதாகிறது.

பிச்சைக்காரன் ஒருபோதும் உவகையை உணரான். பிச்சைக்காரர்க்குக் கிடைப்பது ஒரு சிறிது கூழே. அதுவும் இரக்கமும் இகழ்ச்சியும் பின்தொடர வரும்; பிச்சைக்காரன் ஓர் இழிவான பொருள் என்ற எண்ணமாவது பின் தொடரும். அவன் தான் பெறுவதை ஒரு நாளும் உண்மையாக நுகர்வதில்லை.

நாம் அனைவரும் பிச்சைக்காரரே. நாம் யாது செய்யினும், கைம்மாற்றை எதிர்பார்க்கிறோம். நாம் அனைவரும் வணிகர்களே. வாழ்விலே நாம் வணிகர்கள்; அறத்திலும் வணிகர்கள்; சமயத்திலும் வணிகர்கள். அந்தோ! அன்பிலும் நாம் வணிகர்களே.

நீர் வியாபாரம் செய்ய வந்தீராயின், அது கொடுக்கலும் வாங்கலும் பற்றியதாயின், விற்றலும் வாங்கலும் உமது கருத்தாயின், விற்றல் வாங்கலுக்குரிய விதிகளைப் பின்பற்றுவீராக. நல்ல காலம் உண்டு, கெட்ட காலமும் உண்டு; விலை உயர்வதும் தணிவதும் உண்டு. எப்போதும் இன்னல் வருவதை நீர் எதிர்பாரும். அது கண்ணாடியில் உமது முகத்தைப் பார்ப்பது போன்றது. உமது முகமே பிரதிபலிக்கப்படுகிறது; நீர் முகத்தைக் கோணலாக்கிக் கொள்ளின்—கண்ணாடியிலும் அதுவே காணும். நீர் சிரிப்பீராயின், கண்ணாடியிலும் சிரிப்பே. இதுதான் வாங்கலும் விற்றலும், கொடுத்தலும் கொள்ளலும்.

நாம் சிக்கிக்கொள்கிறோம். எவ்வாறு? நாம் கொடுப்பதாலன்று; ஆனால், நாம் எதிர்பார்ப்பதனாலே சிக்கிவிடுகிறோம். நமது அன்பிற்கு மாறாகத் துயரத்தைப் பெறுகிறோம். அது நாம் அன்பு செய்கிறோம் என்பதனாலன்று. ஆனால், பதிலன்பை எதிர்பார்க்கிறோம் என்பதனாலேதான். குறையில்லாதவிடத்துத் துயர் இல்லை. ஆசை, குறை—இதுவே எல்லாத் துயருக்கும் தந்தை. ஆசைகள் வெற்றி தோல்விகட்குரிய நியதிகட்குக் கட்டுப்பட்டவை. ஆசைகள் துயரத்தை விளைத்தே தீரும்.

ஆதலால், உண்மையான வெற்றிக்கும், உண்மையான ஆனந்தத்திற்கும் உரிய பெரிய இரகசியமாவது இதுவே. கைம்மாறு எதுவும் வேண்டாதவன், முற்றும் தன்னலமற்றவன், அனைத்தினும் மிக்க வெற்றியடைவான். இது ஒரு முரண்பாடாகத் தோன்றுகிறது. வாழ்க்கையிலே சுயநலமற்றவன் ஒவ்வொரு

வனும் ஏமாற்றமடைகிருன், மனம் புண்படுகிருன் என்பதை நாம் அறியோமா? வெளிப்பார்வையில் ஆம் என்பதே விடை. "கிறித்து தந்நல மற்றவராஞர்; எனினும், அவர் சிலுவையில் இறந்தார்." உண்மையே; ஆனுல், அவரது சுயநலமின்மையே ஒரு பெருவெற்றிக்குக் காரணமாயிற்று என்பதை நாம் அறிவோம்; அவ்வெற்றியாவது, உண்மையான வெற்றி ஆசி முடியை இலட்சக் கணக்கான வாழ்க்கைகளுக்குச் சூட்டியதே.

ஒன்றையும் வேண்டாதீர்கள்; கைம்மாருக எதனையும் வேண்டாதீர்கள்; அது உமக்கே மீளும்—ஆனுல், அதைப்பற்றி இப்போது நினையாதீர்கள்; அது ஆயிரம் மடங்காகப் பெருக்கப்பட்டு மீளும்—ஆனுல், கவனத்தை அதன்மீது செலுத்துதல் கூடாது. எனினும், கொடுக்கும் திறன் பெற்றிருங்கள்; கொடுங்கள்; அதோடு அது முடிவாகட்டும். வாழ்க்கை முழுவதும் கொடுத்தல் மயமாம் என்பதையும், இயற்கை உம்மைக் கொடுக்கும்படி வற்புறுத்தும் என்பதையும் கற்றுக்கொள்க. ஆதலால், நெஞ்சாரக் கொடுங்கள். சுருங்கிய காலத்திலோ நீண்ட காலத்திலோ நீங்கள் விட்டுத்தான் தீரவேண்டும். நீங்கள் வாழ்க்கையிற்புகுவது திரட்டுதற்கே. கைகளை இறுக மூடிக் கொண்டே நீங்கள் எடுக்க விரும்புகிறீர்கள். ஆனுல், இயற்கை உங்கள் தொண்டையைக் கையாற் பிடித்துக்கொண்டு, உங்கள் கைகளை விரியச் செய்கிறது. உமக்கு விருப்பம் இருப்பினும் இல்லாவிடினும், நீங்கள் கொடுத்தேயாகவேண்டும். "யான் கொடேன்" என்று நீங்கள் சொல்லும் அக்கணமே உதை விழுகிறது; நீங்கள் காயமடைகின்றீர்கள். ஒவ்வொன்றையும் விடும்படி, நீண்ட காலத்திற்குள்ளாவது, கட்டாயப்படுத்தப் பெருத மனிதன் எவனும் இல்லை. இவ்விதியை மீறப் போராடும் அளவிற்கு, ஒருவன் மிகுதியான துயரத்தை அறிகிருன். நாம் கொடுக்கத் துணியாததனுல், இயற்கையின் இச்சிறப்புற்ற தேவைக்கு இணங்கும் அளவிற்குப் போதியவாறு நம்மை ஒப்படைத்துவிடாமையால், நாம் துயருறுகிருேம். காடு போயாயிற்று; ஆனுல் அதற்குப் பதிலாக வெம்மையைப் பெறுகிருேம். கதிரவன் கடலினின்றும் நீரை முகந்துகொள்வது, அதனை மழையாகத் திரும்ப அளித்தற்கேயாம். கொள்ளவும் கொடுக்கவும் நீங்கள் ஒரு யந்திரமேயாவீர்கள்; நீங்கள் கொள்வது, கொடுப்பதற்கே. ஆதலால், கைம்மாருக எதனையும் வேண்டாதீர்கள்; ஆனுல், நீர் கொடுக்கும் அளவு மிகமிக, உமக்கு வருவதும் அதிகமாகும். காற்றை இவ்வறையினின்றும் வெளியேற்றும் விரைவுக்குத் தக்க

படி, புறத்துள்ள காற்றால் இது விரைவாக நிரப்பப்படும்; கதவுகளனைத்தையும், ஒவ்வொரு துவாரத்தையும் மூடுவீரானால், உள்ளேயிருப்பது இருந்தேதீரும். ஆனால், வெளியே யுள்ளது ஒருபோதும் உள்ளே புகாது; உள்ளேயிருப்பது தேங்கி நின்று, சீர் கெட்டு, நஞ்சு நிறைந்ததாகும். ஓர் ஆறு ஓயாது கடலிற்குள் பாய்ந்துகொண்டேயுள்ளது; ஓயாது மீண்டும் நிரம்பிக்கொண்டும் உள்ளது. கடலிற்குட்புகுவதைத் தடை செய்யாதீர்கள்; அங்ஙனம் செய்யும் அக்கணமே மரணம் உம்மைப் பற்றிக்கொள்கிறது.

ஆதலால், பிச்சைக்காரராய் இராதீர்; பற்றற்றிருங்கள். இது வாழ்விலே அனைத்திலும் அக்சுறுத்தும் முயற்சியாம்! நெறியிதே யுள்ள அபாயங்களைப்பற்றிக் கணக்கிடாதீர்கள். அறிவால் இடும்பைகளை உணர்பவரானாலும், நம்மை அவை உறுத்தும் வரை நாம் உண்மையாக அவற்றைத் தெரிந்துகொள்வதில்லை. தொலையிலிருந்து ஒரு பூங்காவைப் பொதுப்பட நோக்கலாம்; சரி, அதனாற் பெறுவது என்ன? நாம் அதனுள் இருக்கும்போதே அதை நாம் உணர்கிறோம்; உண்மையாக அறிகிறோம். நமது முயற்சி ஒவ்வொன்றிலும் தோல்வி எய்தினும், குருதி பெருகப் பிய்த்தெறியப்படினும், இவையனைத்தின் நடுவிலும் நாம் நமது நெஞ்சைப் பாதுகாக்க வேணடும்; அந்த இன்னல்கள் அத்தனைக்கு நடுவிலும் நமது தெய்வத் தன்மையை வற்புறுத்த வேண்டும். இயற்கையோ, நம்மை எதிர் வினையை இயற்றுமாறு வேண்டுகிறது; அடிக்கு மாறாக அடியையும், ஏமாற்றுதலுக்கு மாறாக ஏமாற்றுதலையும், பொய்க்குப் பதில் பொய்யையும் திரும்ப அளிக்குமாறும், முழுப் பலத்தோடும் எதிர்த்து அடிக்குமாறும் விரும்புகிறது. எதிர்த்து அடியாமலிருக்கவும், அடக்கத்தைக் கொள்ளவும், பற்றற்றிருக்கவும் அப்போதும் தெய்வ இயலுக்கும் மேலான சக்தி வேண்டுவதாகிறது.

ஒவ்வொரு நாளும், பற்றற்றிருக்க வேண்டும் என்னும் நமது தீர்மானத்தைப் புதுப்பித்துக்கொள்கிறோம். கழிந்த காலத்தை நாம் கண்ணால் நோக்கி, நமது அன்புக்கும் பற்றுக்கும் பண்டு நிலைக்களமாயிருந்த பொருள்களைப் பார்க்கிறோம். அவற்றில் ஒவ்வொன்றும் நம்மைத் துயருக்கு உள்ளாக்கினதை உணர்கிறோம். நமது 'அன்பி'ன் பயனாகச் சோகத்துள் அழுந்திக் கிடந்தோம்! பிறர்க்குக் கீழ் வெற்று அடிமைகள் ஆனதை நாம் கண்டோம்! கீழ் நோக்கி மேலும் மேலும் இழுக்கப்பட்டோம்! "இனி யானே எனக்கு அதிபன் ஆவேன்; இனி என்னையே

அடக்கிக் கொள்வேன்,'' என்று நாம் தீர்மானத்தைப் புதுப்பித்துக்கொள்கிறோம். ஆனால், சமயம் நேரும்போது மீண்டும் பழங்கதைதான்! மறுபடியும் நாம் அகப்பட்டுக்கொள்கிறோம்; வெளியேற இயலாதவராகிறோம். பறவை ஒரு வலையில் சிக்கி, வெளி வர முயன்றுகொண்டும் சிறகடித்துக்கொண்டும் உள்ளது. இதுவே நமது வாழ்வு.

இன்னல்களை யான் அறிவேன். பேரளவின அவை; நம்முள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தைரியங்குன்றித் துணிவை இழந்துவிடுகிறோம்; நாம் பல முறையும் 'எல்லாம் கேட்டுக்கே,' என்பவராகிறோம்; நேர்மையிலும், அன்பிலும், கம்பீரமாயும் மேன்மையாயும் உள்ள அனைத்திலும் நம்பிக்கையற்றவராகிறோம். ஆக, வாழ்வைப் புதிதாகத் தொடங்கும்போது மன்னிப்பவராய், அன்புடையராய், எளிமையுடையவராய், சூது அற்றவராய் இருந்த மக்கள் முதிர் வயதில் பொய்ம்மையே பூண்ட போலி மனிதராகி விடுவதைக் காண்கிறோம். அவர்களுடைய உள்ளங்கள் சிக்கலின் பிண்டமாகின்றன. புறத்தே தந்திரத்தை ஏராளமாகக் கையாளக்கூடும். அவர்கள் சீற்றங்கொள்வதில்லை; அவர்கள் ஒன்றும் பேசார்; ஆனால், அவ்வாறு செய்தல் அவர்களுக்கு மிக நன்று; அவர்களுடைய நெஞ்சங்கள் இறந்தே போய்விட்டன; அக்காரணத்தால் அவர்கள் பேசுவதில்லை; அவர்கள் சபிப்பதில்லை; சினங்கொள்வதில்லை; ஆனால், கோபங்கொள்ள வல்லராயிருத்தல் அவர்களுக்கு நன்றாகும். சபிக்கும் திறமை பெற்றிருத்தல் ஓர் ஆயிரந்தடவை நன்றாகும். நெஞ்சிலே மரணம் உள்ளது; ஏனெனில், குளிர்ச்சியே அதிற் குடிகொண்டுவிட்டது; சாபம் இடவோ, கடுமொழி புகலவோ அது இனித் தொழிற்படாது.

இவற்றையெல்லாம் நாம் ஒழிக்க வேண்டும்; ஆதலால், தெய்வ இயலுக்கும் மேலான சக்தி நமக்குத் தேவை. மனித இயலை விஞ்சிய சக்தி, போதிய வலிமையுடையதாகாது. தெய்வ இயலை விஞ்சிய சக்தியொன்றே வழி; வெளியேற ஒரே வழி; அது வாயிலாகத்தான் இச்சிக்கல்கள் அனைத்தும் வழியாகவும், இத்துயர மழைகள் வழியாகவும் ஊறுபடாது செல்லவேண்டும். நம்மைத் துண்டுத்துண்டாக வெட்டலாம்; பிய்த்தெறியலாம்; எனினும், நமது நெஞ்சம் எப்போதும் மேலும்மேலும் மேம்பட வேண்டுவது கட்டாயம்.

இது மிக அரிதான செயல்; ஆனால், இடையறாத பழக்கத்தால் இன்னலை வெல்லலாகும். ஒரு நிகழ்ச்சியை ஏற்கும்

முறையில் நம்மை நாம் அமைத்துக்கொண்டாலன்றி எதுவும் நமக்கு நிகழா என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உடல் தயாராகும் வரை எந்நோயும் எனக்கு வர இயலாது என்று சற்று முன்பு யான் கூறினேன்; நோய்க் கிருமிகளை மட்டும் அது பொறுத்ததன்று; உடலிலே அதற்கு முன்னரேயுள்ள ஒருவகை அனுகூல நிலையினையே பொறுத்தது. நமது தகுதிக்கு ஏற்ற ஒன்றையே நாம் பெறுகிறோம். நமது அகந்தையைத் துறந்து விட்டு, துயரம் ஒரு நாளும் தகாததாவதில்லை என்பதை அறிந்து கொள்வோம். தகாத போது ஒரு வருத்தமும் எந்நாளும் சார்ந்த தில்லை; என் கையாலேயே வழி கோலாது ஒருபோதும் எனக்கு ஒரு தீங்கும் நேர்ந்ததில்லை. நாம் இதை அறிந்துகொள்ள வேண்டும். உங்களையே ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் பெற்றுள்ள ஒவ்வொரு துன்பமும் உங்களைச் சார்ந்ததன் காரணம், அதற்காக உங்களை ஆயத்தமாக்கிக் கொண்டதேயாகும். நீங்கள் ஒரு பாதி இயற்றினீர்கள்; புற உலகம் மறு பாதியை இயற்றியது; இவ்வாறே துயரம் வந்தது. அது நம்மைச் சாந்தப்படுத்தும். அதே சமயம் இந்த ஆராய்ச்சியொன்றிலிருந்தே நம்பிக்கையின் ஒலி ஒன்று கிளம்பும்; இவ்வொலியாவது, “என்னால் புறவுலகை அடக்க இயலாது; ஆனால், என்னுள்ளும் என்னருகேயும் உள்ள என் சிறு உலகம் என் அடக்கத்திற்கு உட்பட்டதே. ஒரு தவறுதலுக்கு இரண்டும் சேர்ந்து வேண்டப்படுமாயின், எனக்கொரு துயரத்தை அளிக்க இரண்டும் ஒருங்கே வேண்டுவனவாயின், என் வசமுள்ள ஒன்றை யான் கொடாதிருப்பேன்; அப்போது துயரம் எவ்வாறு வர இயலும்? என்னை யான் உண்மையாக அடக்கிக்கொள்ளின், துயரம் ஒருபோதும் வாராது,” என்பதே.

நமது குழந்தைப் பருவ முதலே, காலமெல்லாம், நமக்கு வெளியேயுள்ள யாதோ ஒன்றின்மீது நாம் பழி சுமத்த முயன்று வருகிறோம். பிறரைத் திருத்தும்பொருட்டு நாம் எப்போதும் நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கிறோம்; நம்மையே திருத்துவதில்லை. நாம் துயரடைவோமாயின், “ஆ! இவ்வுலகம் ஓர் அரக்கனது உலகம்!” என்கிறோம்; நாம் பிறரைச் சபிக்கிறோம்; “எத்துணை மோகமுற்ற மூடர்கள்!” என்கிறோம். நாம் உண்மையிலே அவ்வளவு நல்லவராயின், அத்தகைய உலகில் நாம் இருக்க வேண்டுவது ஏன்? இது ஓர் அரக்கனது உலகம் எனின், நாம் அரக்கராயிருத்தல் வேண்டும்; இல்லையேல், நாம் இங்கே இருக்கவேண்டுவது எதற்காக? “ஆ! இவ்வுலக மக்கள்

எவ்வளவு சுயநலமுள்ளவர்கள்!'' வேண்டும் அளவு உண்மை தான் இது; நாம் அவரினும் நல்லோராயின், அவர்களது கூட்டத்தே நாம் காணப்படவேண்டுவது ஏன்? இதைச் சற்றே நினைப்பீர்களாக.

நமக்குத் தகுதி எதுவோ, அதையே நாம் பெறுகிறோம். 'உலகம் கெட்டது; நாம் நல்லோர்' என்று சொல்லின், அது பொய்யே. அது அவ்வாறு ஒருபோதும் இருக்க முடியாது. நமக்கே நாம் சொல்லிக்கொள்வது ஒரு பெரும்பொய்யே.

கற்றுக்கொள்ள வேண்டிய முதற்பாடம் இதுவே; வெளியிலுள்ள எதனையும் சபியாமலும், வெளியிலுள்ள எவர்மீதும் பழி சுமத்தாமலும் இருக்கத் தீர்மானங் கொள்க; ஆனால், மனித இயல்புடையவராயிருங்கள்; எழுந்து நில்லுங்கள்; உன் மீதே பழியைச் சுமத்திக் கொள்க. எப்போதும் அதுவே உண்மை என்பதைக் காண்பீர்கள். உங்களையே கைப்பற்றிக் கொள்க.

ஒரு கணம் நமது மனிதத் தன்மையைப் பற்றியும், நாம் தெய்வங்களாதலைப் பற்றியும் நாம் எல்லாம் அறிவோம் என்றும், நாம் அனைத்தையும் செய்யவல்லோம் என்றும், நாம் குற்றமற்றவர், மாசற்றவர், உலகிலே தன்னலமின்மையில் அனைவரையும் விஞ்சினவர் என்றும், அவ்வளவு பேசிக்கொள்கிறோம்; மறு கணம் ஒரு சிறு கல் நம்மைப் புண்படுத்துகிறது; ஒரு சிறிய சாத்தானது அற்பக் கோபம் நம் மனத்தைப் புண்ணுக்குகிறது; தெருவிலுள்ள எந்த முட்டாளும் 'இத் தெய்வங்களை'த் துயருறச் செய்கின்றான்—இது வெட்கக் கேடு அல்லவா? நாம் அத்தகைய தெய்வங்களாயின், இது இவ்வாறு இருக்க வேண்டுமா? உலகமே பழி சுமக்க வேண்டும் என்பது உண்மையா? ஆன்மாக்கள் அனைத்தினும் தூய்மை மிக்காரும், மேன்மை மிக்காரும் ஆன கடவுளரை நம்தந்திரங்களில் ஏதேனும் ஒன்றினால் துயருறச் செய்தல் இயலுமா? நீர் அத்துணை தன்னலமற்றவராயின், நீர் ஆண்டவரைப் போன்றவர். எந்த உலகம் உமக்குத் தீங்கிழைக்கக்கூடும்? ஏழாவது நரகம் வழியாகவும், ஊறுறுமலும் ஒருவரும் தொடாமலும் நீர் செல்லலாகும். ஆனால், முறையிடுவதும், புறவுலகின்மீது குற்றஞ் சுமத்த விரும்புதலும் ஆகிய உண்மை ஒன்றே, புற உலகம் உம்மை உறுத்துவதைக் காட்டுகிறது; அவ்வாறு உறுத்தும் உண்மையே, நீர் உரிமை பாராட்டிக் கொள்ளுகிறபடி நீர் இல்லையென்பதைக் காட்டுகிறது. துயரத்தை ஒன்றுக்கு மேல் ஒன்றாகக் குவித்துக்கொண்டு போவதாலும், புறவுலகம் உம்மைப் புண்படுத்துவதாகப் பாவித்துக்

கொள்வதாலும், "ஆ! இது அரக்கனது உலகமே! இம்மனிதன் எனகுத் தீங்கிழைக்கிருன்; அம்மனிதன் எனக்குத் தீங்கிழைக்கிருன்!" என்பது முதலானவற்றை உரக்க முழங்குவதாலும், உமது குற்றத்தை முன்னினும் அதிகமாகவே செய்கின்றீர். அது துயரத்தோடு பொய்யையும் சேர்த்தலாகும்.

நாம் நம்மையே பாதுகாத்துக் கொள்ளவேண்டும்—அவ்வளவு நம்மாற்செய்ய இயலும்—சிறிது காலம் பிறரைப் பற்றிக் கவனிப்பதை விட்டுவிட வேண்டும். நெறியைப் பூரணமாக்குவோம்; குறி தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும். ஏனெனில், நம் வாழ்வுகள் நல்லனவாயும் தூயனவாயும் இருந்தாற்றான், உலகம் நல்லதாயும் தூயதாயும் இருக்க இயலும். அது ஒரு பயன்; நாம் உபாயம். ஆதலால், நம்மை நாம் தூய்மையாக்கிக் கொள்வோம். நம்மை நாம் பூரணமாக்கிக்கொள்வோம்.

பக்தி நெறி

ஒரு சில சமயங்கள் விலக்காக, கிட்டத்தட்ட ஒவ்வொரு சமயத்தும் (சகுணப் பிரம்மத்தை) குணக் கடவுளைப்பற்றிய கருத்து வழங்கி வந்துள்ளது. புத்த சமண மதங்கள் நீங்கலாக, உலகிலுள்ள ஏனைய மதங்கள் அனைத்தும் ஒரு வேளை குணக் கடவுள் ஒருவரைப் பற்றிய கருத்தைப் பெற்றுள்ளனபோலும்! அதோடு இறை அன்பும் வழிபாடும் பற்றிய கருத்தும் எழுகின்றது. பௌத்தரும் சமணரும், குணக்கடவுளைப் பற்றிய கருத்தைப் பெறுதவராயினும், ஏனையோர் குணக் கடவுளை வணங்குவது போன்றே, சற்றும் வழுவாது அதே முறையிலே தம் சமயங்களை நிறுவிய குரவர்களையும் வழிபடுகின்றனர். மனிதனிடமிருந்து தம்மைச் சாரும் அன்பை அவனுக்குத் திருப்பிச் செலுத்த வல்ல உயர்தரப் புருடர் ஒருவர்மீது அன்பையும் வணக்கத்தையும் செலுத்துதலாகிய கருத்து உலகப் பொதுவானதே. பற்பல மதங்களில் இவ்வன்பும் பக்தியும் வெவ்வேறு படிகளில் பல வகை அளவுகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. மிகத் தணிந்தது 'கிரியை' எனும் படி; அந்நிலையில் பண்புகளைப் பற்றிய கருத்துகள் கிட்டத்தட்ட எழவொண்ணுதனவாகின்றன. மிகத் தாழ்ந்த நிலத்தை நோக்கி அவை கீழே இழுக்கப்பட்டுப் பருப்பொருளாக்கப் பெறுகின்றன. வடிவங்களும் அவற்றோடு பல வகைக் குறிகளும் வேலை செய்கின்றன. பண்புக் கருத்துகளை நினைவு வடிவங்கள் வாயிலாகவோ, குறிகள் வாயிலாகவோ பற்ற மனிதன் முயலுவதை உலக வரலாறு முழுவதிலும் காண்கிறோம். சமயத்தின் புறத்தோற்றங்கள் யாவும்—மணிகள், இசை, கிரியைகள், நூல்கள், சிலைகள் என்பன—இத்தலைப்பின்கீழ் அமைகின்றன. புறக்கரணங்களைத் தூண்டும் எதுவும், பண்பைப் பற்றிய பருமை வடிவினை உண்டாக்க மனிதனுக்குத் துணை செய்யும் எதுவும் கைப்பற்றப்படுகிறது, வணக்கமும் பெறுகின்றது.

எல்லாக் குறிகளையும் கிரியைகளையும் எதிர்த்துப் போர் புரிந்துள்ளோர் ஆகிய சீர்திருத்தக்காரர் ஒவ்வொரு சமயத்திலும் இடையிடையே இருந்து வந்துள்ளனர். ஆனால், அவர்களது எதிர்ப்பு வீணேயாயிற்று; ஏனெனில், மனிதன் இப்போதைய நிலையில் இருக்குமளவும், மிகு பெரும்பாலார்க்கு, பற்றி நிற்ப

தற்கென யாதேனும் ஒரு பருப்பொருள், தமக்குத் தம் கருத்துகளைச் சுற்றிலும் வைத்தற்கென நடுவே அமைவது போன்ற யாதேனும் ஒரு பொருள், தமது மனத்தில் உள்ள நினைவு—வடிவங்கள் அனைத்திற்கும் மையமாய் அமரும் யாதோ ஒன்று, யாண்டும் வேண்டுவதாகவே இருக்கும். மகம்மதியரும் கிறித்தவ மதச் சீர்திருத்தப் பிரிவினரும் இயற்றிய பெருமுயற்சிகள் எல்லாக் கிரியைகளையும் ஒழித்தலாகிய ஒரே முடிவை நோக்கிச் செலுத்தப்பட்டிருப்பினும், அவர்களுக்குள்ளும் கிரியைகள் உட்புகுந்திருப்பதைக் காண்கிறோம். அவற்றை வெளியேற்றல் இயலாது; நீண்ட காலம் பாடுபட்ட பின் பொதுமக்கள் ஒரு குறியை மாற்றி வேறொன்றைப் பற்றுகின்றார்கள். மகம்மதியன் அல்லாதவனால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு கிரியையோ, ஒவ்வொரு வடிவமோ, சிலையோ, சடங்கோ பாவமாகும் என்று நினைக்கும் மகம்மதியன், 'காபா' என்னும் தன் சொந்தக் கோயிலுக்கு வரும்போது அவ்வாறு நினைப்பதில்லை. ஒவ்வொரு வைதிக மகம்மதியனும், எங்கே பிரார்த்தனை புரியினும், தான் காபாவுக்கு முன் நிற்பதாகப் பாவிக்க வேண்டும். யாத்திரையாக அங்கே செல்லும்போது கோயிலின் சுவரில் உள்ள கருங்கல்லை அவன் முத்தமிடல் வேண்டும். இலட்சக் கணக்கான யாத்திரிகர்களால் அக்கல்லின்மீது பதிக்கப்பட்டுள்ள முத்தங்கள் அனைத்தும், தீர்ப்புக் கூறும் இறுதி நாளன்று, நம்பிக்கையுள்ளோரின் நலனுக்காக எழுந்து நின்று சான்று பகரும். இன்னும் 'சிம் சிம்' என்னும் கிணறு ஒன்று உள்ளது. அக்கிணற்றினின்றும் ஒரு சிறிது நீரை இறைப்பவன் எவனும், தன் பாவங்களை மன்னிக்கப் பெறுவான்; அவன் கல்லறையினின்றும் உயிர்த்தெழும் நாளைக்குப் பின்பு ஒரு புதிய உடல்பெற்று நித்திய வாழ்வை எய்துவான். ஏனைய சமயங்களிலோ, குறிகளைக் கையாளும் முறை கட்டடங்கள் வடிவிலே புகுகின்றது. கிறித்தவக் கோயில்கள் ஏனைய இடங்களிலும் மிகப் புனிதமாவன எனக் கருதுகின்றனர் கிறித்தவ மதச் சீர்திருத்தப் பிரிவினர். கிறித்தவக் கோயில், அது நிற்கும் நிலையிலே, ஒரு குறியின் இடத்தைப் பெறுகிறது. அன்றேல், 'நூல்' என்பது உள்ளது. அவர்கட்கு 'நூல்' என்னும் கருத்து வேறு எக்குறியினும் மிகப் புனிதமானதே.

குறிகளைக் கையாளுவதற்கு எதிர்ப் பிரசாரஞ் செய்தல் வீணே; அவற்றுக்கு எதிர்ப்பிரசாரம் எதற்கோ! மனிதர் குறிகளைப் பயன்படுத்தல் கூடாது என்பதற்கு யாதொரு காரணமும்

இல்லை. அவர்கள் குறிகளை வைத்திருப்பதன் காரணம், அவற்றுக்குப் பின் வெளிப்பட நிற்கும் கருத்துகளைக் குறிப்பதே. இப்பிரபஞ்சமே ஒரு குறியாகும்; அதற்குப் பின்னும் அப்பாலும் உள்ள அதனுற் குறிக்கப்படும் பொருளைப்பற்ற அதற்குள்ளும் அது வாயிலாகவும் நாம் முயன்றுகொண்டிருக்கிறோம். ஆன்மாவே முடிவான இடம்; சடப்பொருளன்று. உருவங்கள், சிலைகள், மணிகள், வர்த்திகள், நூல்கள், கோயில்கள், புனிதக் குறிகள் அனைத்தும் வளரும் ஞானச் செடிக்கு மிக நன்றே; பெருந்துணையாவனவே; ஆனுல், அம்மட்டுமேயன்றி அப்பாலில்லை. மிகு பெரும்பாலாரிடம் அச்செடி வளராதிருப்பதையே காண்கிறோம். ஒரு கோயிலிலே பிறத்தல் மிக நன்று; எனினும், அங்கே இறத்தல் மிகக் கெட்டதே. ஞானமெனும் இளஞ்செடிக்குத் துணைபுரியும் சில வடிவங்களின் எல்லைக்குட் பிறத்தல் மிக நன்றே; ஆயினும், இவ்வடிவச் சிறைக்குள் ஒருவன் இறப்பானுயின், அவன் வளரவில்லையென்பதையும் ஆன்ம முதிர்ச்சி எய்தவில்லை என்பதையுமே அது காட்டுகிறது.

ஆதலால், குறிகளும், கிரியைகளும், வடிவங்களும் என்றைக்கும் போற்றப்பட வேண்டும் என யாரேனும் இயம்புவராயின், அது தவறேயாகும்; ஆனுல், இக்குறிகளும் கிரியைகளும், ஆன்மாவின் தாழ்ந்த முதிராத நிலையிலே அதன் வளர்ச்சிக்குத் துணையாவன என்று அவர் உரைப்பாராயின், அது சரியேயாகும். ஆனுல், இவ்வான்ம வளர்ச்சியை அறிவு சம்பந்தமான யாதோ ஒன்ருகப் பொருள்படுத்தும் பிழைக்கு நீர் ஆளாகக் கூடாது. ஒரு மனிதன் மிகுபேரறிவாற்றலுடையவனுதல் இயலும். ஆயினும், ஞான நிலையில் அவன் ஒரு குழந்தையாயிருக்கலாம். இதை நீவிர் இக்கணமே மெய்ப்பிக்கலாகும். 'அங்கிங்கெனுதபடி எங்கும் பரந்துள்ளான் இறைவன்,' என்பதை நம்புமாறு நீவிர் அனைவீரும் போதிக்கப் பட்டுள்ளீர். அதைப்பற்றி நினைக்க முயலுவீராக. எங்கும் பரந்துள்ள தன்மை என்பதன் பொருளைப்பற்றி எவ்விதக் கருத்தையேனும் உடையார் உங்களுள் எவர்? நீவிர் அரும்பாடு படினும் கடலையோ, வானத்தையோ, பெரும்பரப்புடைய பசும்புல்தரையையோ, பாலை வனத்தையோ பற்றிய கருத்துப் போன்ற ஏதோ ஒன்றையே பெறுவீர். இவையனைத்தும் தூலமான சித்திரங்களே யாகும்; பண்பினைப் பண்பாகவும், குறிக்கோளைக் குறிக்கோளாகவும், உம்மாற்கருத இயலாதவரை, இவ்வடிவங்களையும், இத்தூலமான சித்திரங்களையும் நீவிர் துணையாகப் பயன்படுத்த வேண்டு

பவராவீர். இச்சித்திரங்கள் மனத்துக்கு உள்ளிருப்பனவோ, புறத்தே யிருப்பனவோ, வேறுபாடு பெரிதன்று. நாம் அனை வரும் பிறவி தொட்டே உருவத்தை வழிபடுபவராவோம். உருவ வழிபாடும் நன்றே. அது மனித இயல்பினில் உள்ளதாதலின், அதற்கு அப்பாற்செல்ல யார்க்கு இயலும்? பூரண மனிதர் ஒரு வர்க்கே, தெய்வத் தன்மை பெற்ற மனிதர்க்கே இயலும். ஏனை யோர் அனைவரும் உருவ வழிபாடு இயற்றுவோரே. வடிவங்களும் உருவங்களும் நிரம்பிய இப்பிரபஞ்சத்தை நாம் நம்முன் காணு மளவும், நாம் அனைவரும் உருவ வழிபாடு உடையவரே. இப்பிர பஞ்சமே நாம் வழிபட்டு வரும் ஒரு மாபெருங்குறியாம். தன்னை உடலெனக் கூறுவோன் எவனும் பிறவியிலே உருவத்தை வழிபடு பவனே. நாம் ஆன்மா; உருவமோ வடிவமோ அற்ற ஆன்மாவே; அகண்ட ஆன்மாவே; சடப்பொருளல்லோம். ஆதலால், பண்பை மனத்தாற் பற்ற இயலாதவன், சடப்பொருளுக்குள்ளும் அது வாயிலாகவும் உடலாகவன்றித் தன்னை உள்ளவாறு கருத முடியா தவன், உருவ வழிபாடு செய்பவனே. இங்ஙனமாகவும் மக்கள் ஒருவரையொருவர் உருவத்தை வழிபடுவோரென வழங்கித் தமக் குள்ளே போராடுவதை என் என்பது! வேறு வகையாக இதனைக் கூறுவோமாயின், ஒவ்வொருவரும் தமது உருவம் சரியான தென்றும் பிறரது உருவம் தவறானதென்றும் உரைப்பவரேயாவர்.

ஆதலால், இக்குழந்தைக் கருத்துகளை நாம் களைதல் வேண்டும். சமயம் என்பது நுரையனைய மொழிகளின் வெறுந் தொகுதி யென்றோ, கொள்கைகளின் அமைப்பே என்றோ கருது வார், சமயம் என்பது ஒரு சிறிதளவு அறிவால் ஒன்றை ஒப்புக் கொள்ளுதலோ மறுத்தலோ மட்டும் என்பார், சமயம் என்பது தம் சொந்தக் குருமார் தமக்குக் கூறும் சில மொழிகளில் நம் பிக்கை வைப்பதே என்று இயம்புவார், சமயம் என்பது தம் முன்னோர் நம்பிய யாதோ ஒன்றே என்பார், தமது தேசத்திற் குரியவை எனும் காரணத்தால் தாம் பற்றி நிற்கும் ஒரு வகை யான மூடக்கொள்கைகளும் கருத்துகளுமே சமயம் என்பார்— ஆகிய இத்தகைய மக்களின் பிதற்றலுக்கு அப்பால் நாம் செல்ல வேண்டும். இவை அனைத்தையும் கடந்து சென்று, மனித இனத்தை மெல்ல மெல்ல ஒளியை நோக்கிச் செல்லும் பரந்த தோர் உயிர் எனவும், கடவுள் என்னும் வியத்தகு மெய்ப்பொருளை நாட மெல்ல முதிர்ந்து வரும் ஓர் ஆச்சரியமான செடி எனவும் கருத வேண்டும்; இதற்காக நேரும் முதற்சுழற்சிகளும், முதல்

இயக்கங்களும் எப்போதும் சடப்பொருள் வாயிலாகவும் கிரியைகள் வாயிலாகவும் நிகழ்வனவாம்.

இக்கிரியைகளுள் அனைத்திற்கும் அகவாயிலே ஏனைய கருத்துகள் யாவினும் தலையெடுத்து நிற்பது, நாமவழிபாடே. கிறித்தவ மதத்தின் பழைய வடிவங்களை உங்களுக்குள்ளே ஆராய்ந்திருப்பவரும், உங்களுக்குள்ளே ஏனைய உலக மதங்களைக் கற்றிருப்பவரும் நாம வழிபாடு எனும் இக்கருத்து அவர்களிடத்தெல்லாம் வழங்கி வருவதை ஒருகால் கவனித்திருக்கலாம். நாமம் மிகப் புனிதமான தெனப்படும். 'பைபிள்' எனும் நூலிலே, இறைவனது நாமம் இணையற்ற புனிதத் தன்மை வாய்ந்ததாகவும், அனைத்தினும் மிக்க தூய்மையுற்றதாகவும் கருதப்பட்டு வந்ததை நாம் வாசிக்கிறோம். எல்லா நாமங்களினும் மிகப் புனிதமானது அதுவே; இந்த 'வாக்கே' இறைவன் என்றும் கருதப்பட்டது. இது முற்றிலும் உண்மையே. இப்பிரபஞ்சமே நாமமும் உருவமும் அன்றி வேறு யாது? சொற்களின்றி நினைக்க உமக்கு இயலுமா? சொல்லும் பொருளும் பிரிக்க இயலாதன. உங்களில் யாரேனும் அவற்றைப் பிரிக்கக் கூடுமாயின், முயன்று பாருங்கள். நீங்கள் நினைக்குந்தோறும் சொற்களாகிய வடிவங்கள் வாயிலாகவே அங்ஙனம் செய்கின்றீர்கள். ஒன்று மற்றொன்றைக் கொணர்கிறது; நினைவு சொல்லைக் கொணர்கிறது; சொல் நினைவைக் கொணர்கிறது. ஆகவே, பிரபஞ்ச முழுவதும் இறைவனது புறச்சின்னம் போலும். அதன் பின் இறைவனது விழுமிய நாமமும் நிற்கின்றது. ஒவ்வொரு குறிப்பிட்ட உடலும் ஒரு வடிவமே; அக்குறிப்பிட்ட உடலுக்குப் பின் அதன் நாமம் உள்ளது. நம் நண்பர் இன்னின்னாரை நினைத்ததும், அவரது உடலைப் பற்றிய கருத்து எழுகிறது; உம் நண்பரின் உடலை நினைத்ததும், உமக்கு அவரது பெயரைப் பற்றிய கருத்து எழுகின்றது. இது மனிதனது அமைப்பில் உள்ளது. அதாவது, மனநூல் முறைப்படி, மனிதனது சித்தத்திலே வடிவத்தைப் பற்றிய கருத்தின்றி நாமத்தைப் பற்றிய கருத்து எழ இயலாது. நாமத்தைப் பற்றிய கருத்து இல்லாது வடிவத்தைப்பற்றிய கருத்து உதியாது. அவை பிரிக்க முடியாதன. அவை ஒரே அலையின் உள்ளும் புறமும் ஆவன. இங்ஙனம் இருத்தலின், நாமங்கள் உயர்வாக்கப்பட்டன; உலகெங்கும் வணங்கப்பட்டன. அறிந்தோ, அறியாமலோ, மனிதன் நாமங்களின் மகிமையைக் காணலானான்.

இன்னும் வெவ்வேறு பல சமயங்களில் புனிதர் பலர் வணங்

கப்பட்டு வந்துள்ளனர். பலர் கண்ணபிரானை வழிபடுகின்றனர்; புத்தரை வழிபடுகின்றனர்; இயேசுவை வழிபடுகின்றனர்; இவ்வாறே பிறரையும் வழிபடுகின்றனர். அன்றியும், ஞானியர் வழிபாடும் உள்ளது; உலகெங்கும் இவர்களில் நூற்றுக்கணக்கானோர் வணக்கம் பெற்றுள்ளனர்; ஏன் பெறக் கூடாது? ஒளியின் அதிர்வு எங்கணும் உள்ளது. ஆந்தை இருளிலும் அதனைக் காண்கிறது. அதனால், மனிதனுக்கு அதனைக் காணல் இயலாதேனும், அதன் இருப்புப் பெறப்படுகிறது. மனிதனுக்கு அந்த அதிர்வு விளக்கிலும், ஞாயிற்றிலும், மதியிலும் பிறவற்றிலும் மட்டும் புலனாகிறது. இறைவர் எங்கும் உள்ளவர். ஒவ்வோர் உயிரிலும் தம்மைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்; ஆனால், மனிதர்க்கோ, இறைவர் புலப்படுவதும் அறியப்படுவதும் மனிதனிடத்தேதான். மனித முகம் வாயிலாக இறைவரது ஒளியும், இருப்பும், ஆவியும், ஒளிரும்போதே—அப்போதே, அப்போது மட்டுமே—மனிதன் அவரை அறியலாகும். ஆகவே, மனிதன் இறைவரை மனிதர் வாயிலாகவே எக்காலமும் வணங்கி வந்துள்ளான்; அவன் மனிதனாயுள்ள வரையில் அவ்வாறே செய்து தீர வேண்டும். அவன் அதனை எதிர்த்துக் கத்தலாம்; அதனை எதிர்க்கப் பாடுபடலாம்; ஆனால், அவன் இறைவரை உணர்தற்கு முயலத் தொடங்கியதும், இறைவரை மனிதராக நினைக்கும் அவசியம் அமைப்பிலே உறைவதைக் காண்பான்.

ஆகவே, கிட்டத்தட்ட ஒவ்வொரு சமயத்தும் இறை வழிபாட்டிற்காணும் முக்கியப் பகுதிகள் இம்மூன்றே; உருவங்கள் அல்லது குறிகள், நாமங்கள், தெய்விக மனிதர் என்பன. எல்லாச் சமயங்களிலும் இவையுள; எனினும், இவை ஒன்றோடொன்று போராட விரும்புவதை நீங்கள் காண்பீர்கள். ஒன்று, "எனது நாமமே ஒரே நாமம்; எனது உருவமே ஒரே உருவம்; என் தெய்விக மனிதரே உலகிற்குத் தெய்விக மனிதராவர்; உம்மவர் வெறும் கதையளவே யாவர்," என்று இயம்பும். இக்காலத்தே, கிறித்தவ பாதிரிமார் முன்னிலும் ஒரு சிறிது அன்பு மிகுந்துள்ளனர்; பழைய சமயங்களின் பலப்பல வணக்க வகைகள் கிறித்தவ மதத்தின் முன்னறிகுறிகளே என்பதை ஒப்புக்கொள்கின்றனர்; கிறித்தவ மதம் ஒன்றே உண்மையானது என்று அவர்கள் கருதுகின்றார்கள். பழங்காலங்களில் கடவுள் தம்மையே சோதித்துக் கொண்டார். இவற்றுக்கு ஒரு வடிவம் அளிப்பதால் தம் ஆற்றல்களையே சோதித்துக்கொண்டார்; அவ்வாறு வடிவம் அளித்ததன் முடிவு கிறித்தவ மதமே. மிகக் குறைந்த அளவே கூறுவதானா

லும் இது ஒரு பெரு முன்னேற்றமே. ஐம்பதாண்டுகட்கு முன் அவ்வளவுகூட அவர்கள் கூறியிருக்கமாட்டார்கள்; தங்கள் சமயம் ஒழிந்த வேறெதுவும் உண்மையன்று என்று கூறியிருப்பார்கள். யாரேனும் ஒருவர் சமயமோ, நாடோ, மக்களின் பிரிவோ என்ற எல்லைக்குள் மட்டும் இக்கருத்து வழங்கி வருகிறது என்பதன்று; மக்கள் எப்போதும் 'பிறராற்செய்தற்குரிய சரியான ஒரே செயல் நாம் செய்துவருவதேயாம்,'' என்பார்கள். இங்கேதான் பற்பல மதங்களை ஆராய்தல் நமக்குத் துணை புரிகின்றது. நம்மவையென்றும், நமக்கு மட்டும் உரியவையென்றும் நாம் வழங்கி வந்துள்ள அதே கருத்துகள் நூற்றுக் கணக்கான ஆண்டுகட்கு முன்பே பிறரிடத்தும் தோன்றி யிருந்தன; சில சமயம் நம்மதினும் மிகச் சிறந்த முறையிலே வெளியிடப்பட்டிருந்தன.

இவை பக்தியின் புற வடிவங்கள். இவை வாயிலாக மனிதன் செல்லத்தான் வேண்டும்; ஆனால், அவன் சிரத்தையுடையனுயின், மெய்ப்பொருளைச் சார உண்மையான விழைவுடையனுயின், இவற்றினும் மிக உயர்ந்ததாயுள்ள ஒரே இடத்திற்கு வடிவங்கள் ஒரு பொருளுமாகாத நிலத்திற்கு அவன் செல்லுகிறான். இந்து கோயில்களோ, கிறித்தவக் கோயில்களோ, நூல்களோ, வடிவங்களோ, சமயங் கற்போர்க்கு ஆரம்ப வகுப்புகளாவன. அவை ஞானச் சார்புடைய குழந்தை உயர்ந்த படிகளில் ஏறுதற்குப் போதிய வலிமையை ஊட்டப் பெறுதற்கேயாம். அவனுக்குச் சமயம் வேண்டுமாயின், இம்முதற்படிகள் அவசியமேயாம். இறைவரைத் தாகத்தொடு நாடுவார்க்கு, இறைவரைக் காணப் பேரவா உடையார்க்கு மெய்யன்பு உதிக்கும்;—அதுவே உண்மையான பக்தி எனப்படும். இந்த அவாவினையுடையார் யார்? இதுவே கேள்வி. சமயம் என்பது கொள்கைகளிலோ, சித்தாந்தங்களிலோ, அறிவால் தருக்கம் செய்தலிலோ இல்லை; அது இருத்தலும் ஆதலும் அன்று; அது அனுபூதியே. இறைவரைப் பற்றியும், ஆன்மாவைப்பற்றியும், பிரபஞ்சத்திலுள்ள அறிவரிய பொருள்களைப் பற்றியும் எத்தனையோ பேர் பேசுவதைக் கேட்கிறோம்; அவர்களுள் ஒவ்வொருவரையும் அழைத்து, அவர்களிடம், "நீர் இறைவரைக் கண்டுளீரோ? உமது ஆன்மாவைக் கண்டுளீரோ?'' என்று கேட்பீராயின், அவர்களுள் எத்தனை பேர் 'கண்டுளோம்' என்று கூற வல்லார்? எனினும், அவர்கள் அனைவரும் ஒருவரோடொருவர் போராடிக்கொண்டுள்ளனர். இந்தியாவிலே, ஒரு காலத்திலே, பற்பல மதப் பிரிவுகளின் பிரதி

நிதிகள் ஒன்றுகக் கூடி வழக்காடத் தொடங்கினார்கள். 'சிவனே தெய்வம்' என்றனர் ஒருவர்; இன்னொருவர், 'திருமாலே தெய்வம்' என்றனர்; இவ்வாறே பிறரும் கூறினர்; அவர்களது வழக்கு முடிவற்றதாயிற்று. ஓர் இருடியர் அவ்வழியே சென்று கொண்டிருந்தனர். வாதாடுவோர் வழக்கைத் தீர்க்குமாறு அவரை அழைத்தனர். அவர் முதலில் சிவனே உயர்வற உயர்ந்த தெய்வம், என உரிமை பாராட்டுவாரை நோக்கி, "நீர் சிவனைக் கண்டுளீரோ; அவரோடு பழகியுள்ளீரோ? இல்லையெனின், அவரே உயர்வற்ற உயர்ந்த தெய்வம் என்பதை நீர் எவ்வாறு அறிந்தீர்?" என்று வினவினர். பிறகு திருமாலை வழிபடுவோரை நோக்கி, "நீர் திருமாலைக் கண்டுளீரோ?" என்று கேட்டனர். இக்கேள்வியையே அனைவரையும் கேட்டபின், அவர்களும் ஒருவரும் கடவுளைப்பற்றி யாதும் அறிந்தவரல்லர் என்பதைக் கண்டனர். அவர்கள் அவ்வளவு வாதாடியதற்கு அதுவே காரணம்; எவ்வாறெனில், அவர்கள் உண்மையிலே அறிந்தவர்களாயின், வழக்காடியிருக்கவேமாட்டார்கள். ஒரு ஜாடியை நீரால் நிரப்பும் போது, அது ஒலிக்கின்றது; ஆனால் அது நிரம்பியதும் ஒலி இல்லை. அது போன்றே சமயப் பிரிவுகளுள் இம்மாதிரி வழக்குகளும் போராட்டங்களும் இருப்பதே, அவர்கள் சமயத்தைப் பற்றி ஒன்றும் அறியார் என்பதைக் காட்டுகிறது. அவர்களுக்குச் சமயம் என்பது நூல்களில் எழுதி வைத்தற்குரிய நுரையனைய (உள்ளீடற்ற) மொழிகளின் தொகுதியேயாம். ஒவ்வொருவனும் ஒவ்வொரு பெருநூல் எழுத விழைகிறான்; தன் கைக்குக் கிட்டும் ஒவ்வொரு நூலினின்றும் தனக்கு வேண்டிய பொருள்களைக் கவர்ந்து கொண்டு, அதனை இயன்ற மட்டும் பெரிதாக்குகிறான்; எனினும், தான் பிறர்க்குக் கடன்பட்டிருப்பதை ஒருகாலும் ஒப்புக்கொள்வதில்லை. பின்னர் அந்நூலை உலகிலே தள்ளி, முன்னமே, அங்குள்ள குழப்பத்தை மிகச் செய்கிறான்.

மக்களின் மிகு பெரும்பாலார் நாத்திகரே. இக்காலத்திலே மேற்றிசையுலகிலே இன்னொரு வகை நாத்திகர் தோன்றியிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். யான் குறிப்பிடுவது உலகாயதர்களையே. அன்னார் மனமார்ந்த நாத்திகரே. சமயத்துறை நாத்திகர் உள்ளும் புறமும் ஒவ்வாதவராகி, சமயத்திற்காகச் சண்டையிடுபவராய் அதைப்பற்றிப் பேசுபவராய் இருந்து, அதனை வேண்டாதவராய், அதனை உணர ஒரு போதும் முயலாதவராய், அதனை அறிய ஒருபோதும் முயலாதவராய் உள்ளனர். இவர்களினும் அவர்கள் மேலோர்களே. கிறித்துவின் மொழிகளை

நினைவுறுக : "கேள், உனக்கு அளிக்கப்படும் ; நாடு, அதனை நீ காண்பாய் ; தட்டு, உனக்குத் திறக்கப்படும்" இம்மொழிகள் சாதாரணமாகப் பொருள்படும் முறையிலே உண்மையாம். இவற்றில் அணியோ கதையோ இல்லை. நம்மவரது உலகிலே இதுகாறும் உதித்துள்ள ஈசரின் மிகப் பெருங்குமரருள் ஒருவரது நெஞ்சக் குருதியின் வெளிப் பெருக்கமே இவை ; ஈசரைக் கண்டு உணர்ந்துள்ள ஒருவரிடமிருந்து மெய்ப்பொருட்காட்சியின் பயனாக வெளிவந்த மொழிகளே இவை ; நீங்களோ நானோ இக்கட்டடத்தைக் காண்பதினும் நூறு மடங்கு மிகத் தீவிரமாக ஈசரோடு பேசியும், ஈசரோடு வாழ்ந்தும் வந்த ஒருவரிடமிருந்து உதித்தவை இவை. ஈசரை வேண்டுவார் யாரே? இதுவே கேள்வி. இவ்வுலகிலுள்ள இம்மக்கள் எல்லாம் ஈசரை வேண்டியும், அவரைப் பெற மாட்டாதவராயினர் என நினைக்கின்றீரா? அது ஒண்ணாததே. புறத்தே ஒரு பொருளில்லாத போது அதைப் பற்றிய குறை (அகத்தே) உண்டோ? மனிதன் சுவாசித்தலை வேண்டுகிறான் ; அவனுக்குச் சுவாசிக்கக் காற்று உள்ளது. உண்ணலை வேண்டுகிறான் ; உண்ண உணவுள்ளது. இவ்வாசைகளைப் படைப்பது யாது? புறவுலகிலே பொருள்களின் இருப்பே. ஒளியே கண்களை உண்டாக்கிற்று ; ஒலியே செவிகளைப் படைத்தது ; ஆதலால், மனிதரிடமுள்ள ஒவ்வோர் ஆசையையும் படைத்துள்ளது, புறத்து முன்னரே இருந்த ஏதோ ஒன்றே. நிறைவுத் தன்மையை அடையும் இவ்விச்சை, குறியினை அடைந்து, இயற்கைக்கு அப்பாற்செல்லும் இவ்விச்சை, யாதேனும் ஒன்று அதனைப் படைத்து, மனிதனின் ஆன்மாவிற்குள் அதனைப் பயிற்சியாற் புகுத்தி, அதனை அங்கே வாழும்படி செய்யும் வரை, எவ்வாறு இருக்கக்கூடும்? ஆதலால், எவனிடம் இவ்விச்சை விழித்தெழுமோ, அவனே குறியைச் சார்வான். இறைவர் ஒழிந்த ஒவ்வொன்றையும் நாம் விரும்புகிறோம். உம்மைச் சுற்றிலும் நீர் காண்பது சமயமன்று. என் மனைவி தனது கூடத்திலே உலக முழுவதிலுமிருந்து சாமான்களை வரவழைத்து வைத்திருக்கிறாள் ; இன்றைய நாகரிகம், ஜப்பானியப் பொருள் ஒன்றையும் வைத்தலே ; ஆதலால், அவள் அலங்காரக் கலம் ஒன்றை வாங்கித் தன் அறையில் வைக்கிறாள். மிகவும் பெரும்பாலர்க்குச் சமயமும் அத்தகையதே ; துய்த்தற்கு வேண்டிய எல்லா வகைப் பொருள்களும் அவர்களிடம் உள்ளன ; சமயத்தின் மணத்தை ஒரு சிறிது சேர்த்தாலன்றி வாழ்வு முற்றும் சரியாகாது. ஏனெனில், சமூகம் அவர்களை அதற்காகக் குறை கூறும். சமூகம் அதனை எதிர் பார்க்

கிறது ; ஆதலின், ஒரு சிறிது சமயம் அவர்கள் பெற்றுத் தீர வேண்டும். உலகிலே இக்காலத்தின் சமய நிலை இதுவே.

ஒரு சீடன் தன் குருவிடம் சென்று, "ஐயன்மீர், எனக்குச் சமயம் வேண்டும்," என்றனன். குரு அவ்விளைஞனை நோக்கினர் ; பேசாது புன்முறுவல் மட்டும் பூத்தார். இளைஞன் ஒவ்வொரு நாளும் வந்தனன் ; தனக்குச் சமயம் வேண்டும் என வற்புறுத்தினன். ஆனல், இளைஞனிலும் முதியவர் அறிவு மிக்கவர். ஒரு நாள் வெயில் கடுமையாயிருந்தபோது, அவர் இளைஞனைத் தம்மோடு ஆற்றுக்குச் சென்று மூழ்க வேண்டினர். இளைஞன் நீர்க்குள் மூழ்கினதும், முதியவர் அவனைப் பின் தொடர்ந்து சென்று, இளைஞனைப் பலவந்தமாக நீர்க்குள் அமிழ்த்தி வைத்தார். இளைஞன் சிறிது நேரம் போராடிய பின், அவர் அவனை விட்டுவிட்டு, நீரின் கீழ் இருந்தபோது அவனுக்கு மிகுதியாக வேண்டியிருந்தது யாது என்று வினவினர். "மூச்சுக் காற்றே," எனச் சீடன் மறுமொழி கூறினன். "அவ்வாறு ஈசனை நீ வேண்டுகின்றனையா? வேண்டுவையாயின், ஒரு கணத்துள் அவனைப் பெறுவாய்," என்றனர் குரு. அந்தத் தாகம், அந்த ஆசை உம்மிடம் எழும் வரை, உமது அறிவாலோ, நூல்களாலே, வடிவங்களாலோ, எவ்வளவு பாடுபடினும், சமயத்தைப் பெறல் ஒண்ணுதாகும். அத்தாகம் உம்மிடம் எழும்வரை, நீவிர் நாத்திகனினும் மேலானவர் அல்லீர் ; ஆனல், நாத்திகன் நெஞ்சார ஒழுகுபவன் ; நீவிரோ, அத்தகையராகீர்.

ஒரு பெருமுனிவர் பின்வருமாறு கூறுவதுண்டு : "ஓர் அறையில் ஒரு கள்வன் இருப்பதாக வைத்துக்கொள்வோம் ; அடுத்த அறையில் ஒரு பெரும்பொற்குவியல் இருப்பதாகவும், இரண்டு அறைகட்கும் இடையே ஒரு மெல்லிய இடைச்சுவர் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம் ; அக்கள்வனது நிலை எவ்வாறிருக்கும் ? அவன் உறங்கான் ; உண்ணவோ, வேறென்றைச் செய்யவோ, இயலாதவனுவான். அவனது மனம் முழுதும் பொன்னைப் பெறுவதிலேயே ஊன்றியிருக்கும். ஆனந்தத்திற்கும் மங்களத்திற்கும் மகிமைக்கும் உறைவிடமாம் தெய்விகச் சுரங்கம் இங்குள்ளதென இம்மாந்தர் அனைவரும் உண்மையாக நம்புவராயின், இறைவரையடைய முயலாமல் இவ்வுலகில் இருப்பது போல இருப்பர் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா ? இறைவர் ஒருவர் உளர் என்று மனிதன் நம்பத் தொடங்கியதும், அவரைச் சாரும் பேரவாவினல் பித்தனுவான். பிறர் தமது வழியே செல்வர் ; ஆனல், ஒருவன் இங்கே வாழ்ந்து வரும் வாழ்வினும் மிக

உயர்ந்த வாழ்வொன்று உள்ளது என்ற உறுதியைப் பெற்றதும், 'புலன்களே யாவுமாகா ; இவ்வரையறையுற்ற உடல் அழிவற்ற நித்திய இறவாத ஆன்ம இன்பத்தோடு ஒப்பிடுங்கால் ஏதேனு மாகாது,' என்ற உறுதியுணர்வு எழப்பெற்றதும், அவன் பேரின்பத்தைத் தானே சுவைக்கும்வரை, பித்தனுவான், இப்பைத்தியம், இத்தாகம், இப்பேரவா—இதுவே சமயத்துறை யில் 'விழிப்பு' எனப்படுவது. இது நிகழ்ந்ததும், ஒருவன் சம யச் சார்புடையவனுகத் தொடங்குகிருன். ஆனுல், அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். இம்முறைகளும் சடங்குகளும், இப்பிரார்த்தனைகளும் யாத்திரைகளும், இந்நூல்களும், மணி களும், மெழுகுவர்த்திகளும், பூசாரிகளும் அனைத்தும் ஆயத்தங் களேயாம் ; இவை ஆன்மாவின் அழுக்குகளை நீக்குகின்றன. ஆன்மா தூய்மையடைந்ததும், தூய்மையனைத்திற்கும் சுரங்க மாம் இறைவரையே நாட இயல்பாக விழைகின்றது. பல நூற்ருண்டுகளாகப் படிந்த தூசு மூடிய ஓர் இரும்புத் துண்டு, காலமெல்லாம் ஒரு காந்தத்தின் அருகே கிடக்கலாம் எனினும், அதனுற் கவரப்படாதொழியலாம் ; ஆனுல், தூசு போக்கப் பட்டதும், இரும்பு காந்தத்தால் ஈர்க்கப்படுகிறது. அதுபோல ஊழியெல்லாம் படிந்த தூசும்மாசும் தீமையும்பாவமும் மூடியுள்ள மனித ஆன்மா, இம்முறைகளாலும் சடங்குகளாலும், பிறர்க்கு நன்மை செய்தலாலும், பிற உயிர்கள் மீது அன்பு செய்தலாலும், பல பிறவிகட்குப்பின் போதிய அளவு தூயதாகும் போது, அதற்கு இயல்பாயுள்ள ஞானக் கவர்ச்சி எழுகின்றது. அது விழிப்படைகிறது. இறைவரை நோக்கிச் செல்லப் பாடு படு கின்றது.

எனினும், இம்முறைகளும் குறிகளும் வெறுந்தொடக்கமே ; ஈசர்மீது செலுத்தும் மெய்யன்பாகா. எங்கணும் அன்பைப் பற்றிப் பேசுவதைக் கேட்டுளோம். ஒவ்வொருவனும் "ஈசனிடம் அன்பு செலுத்து," என்கிருன். அன்பு செய்தலை இன்னதென அறியார் மக்கள் ; அறிவரேல், அத்துணை எளிதாக அதைப் பற்றிப் பேசார். ஒவ்வொருவனும் தன்னுல் அன்பு செய்ய இயலும் என்கிருன் ; பின்னர், தன்னியல்பே அன்பு இல்லை யென்பதை நொடியிற் கண்டு கொள்கிருன். ஒவ்வொரு மாதும் தன்னுல் அன்பு செய்ய முடியும் என்கிருள். விரைவில் அன்பு செய்ய இயலாததைக் கண்டுகொள்கிருள். அன்பைப் பற்றிய பேச்சு உலகிலே நிறைந்துள்ளது ; ஆனுல் அன்பு செய்தல் அரிதேயாம். அன்பு எங்கே உள்ளது? அன்பு

உள்ளதென எவ்வாறு அறிவீர்? அன்பின் முதற்சோதனையாவது, அது ஒப்பந்தம் பண்ணுதலை அறியாது என்பதே. ஒருவனிட மிருந்து யாதேனும் ஒன்றைப் பெறுவதற்கெனவே அவன் மீது இன்னொருவன் அன்பு செய்வதைக் காணும்வரை அது அன்பன்று என்பதை அறிக ; அது வாணிபமேயாம். வாங்கலும் விற்றலும் பற்றிய பேச்சுச் சற்றேனும் எங்கெல்லாம் நடையாடுமோ, அங்கே அது அன்பன்று. ஆதலால், ஒருவன் இறைவரிடம், “எனக்கு இதைக் கொடு ; அதைக் கொடு,” என்று வேண்டும் வரை அது அன்பாகாது. அது எங்ஙனம் அன்பாதல் இயலும்? யான் உம்மிடம் ஒன்றை வேண்டுகிறேன். நீர் அதற்கு யாதோ ஒன்றைக் கைம்மாருக அளிக்கின்றீர் ; அது வெறுங் கடை வைத்தலேயாம்.

பெருமன்னர் ஒருவர் ஒரு காட்டிலே வேட்டையாடச் சென்ருர். அங்கே அவர் ஒரு முனிவரைக் காண நேர்ந்தது. மன்னர் அவரோடு சிறிது நேரம் உரையாடிப் பெரு மகிழ்ச்சி யுற்று, தம்மிடமிருந்து யாதேனும் நன்கொடையொன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அவரை வேண்டினர். முனிவரோ, “அது வேண்டா ; என் நிலைமையில் யான் மனத்திருத்தியை முற்றும் பெற்றுளேன் ; இம்மரங்கள் எனக்கு உண்ணப் போதிய கனிகளை நல்குகின்றன ; இவ்வெழிலார்ந்த தூய நீரோடைகள் எனக்கு வேண்டிய நீரையெல்லாம் தருகின்றன ; இக்குகையிலே யான் உறங்குகிறேன். நீர் ஒரு மன்னுதி மன்னராயினும், உம் நன்கொடைகளை யான் பொருட்படுத்துவது எற்றுக்கு?” என்று மொழிந்தனர். பேரரசர், “என்னைத் தூயனுக்கவும் மகிழ்விக்கவுமே, ஏதேனும் ஒன்றை நன்கொடையாகப் பெறுக ; நகர்க்குள் என்னோடு எழுந்தருள்க,” என்று வேண்டினர். இறுதியில் முனிவர் பேரரசரோடு செல்ல இசைந்தனர். அவரை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல அங்கே பொன்னும், அணியும், பளிங்கும், மற்றும் வியத்தகு பொருள் களும் இருந்தன. செல்வமும் அதிகாரமும் எங்கும் விளங்கின. அரசரோ முனிவரை ஒரு நிமிடம் காத்திருக்க வேண்டி, தாம் பிரார்த்தனையை இயற்றினர் ; அரசர் ஒரு மூலைக்குச் சென்று, “நாதரே, இன்னும் மிக்க செல்வமும் மக்களும் நாடும் எனக்கு அருள்க,” என்று வேண்டத் தொடங்கினர். இதற்கிடையே இருடியர் எழுந்து வெளியேகத் தொடங்கினர். அவர் செல்வதைக் கண்ட பேரரசர் அவரைப் பின் தொடர்ந்து, “ஐயன்மீர், நில்லுங்கள். நீங்கள் எனது நன்கொடையைப் பெருது செல்கின்

நீர்களே !'' என்றனர். இருடியர் அவரை நோக்கி, “ இரவலரே, இரவலரிடம் யான் இரப்பதில்லை. உம்மால் யாது கொடுக்க இயலும் ? நீரே பொழுதெல்லாம் பிச்சை கேட்டுக்கொண் டிருந்தீர்,'' என்று கூறினர். அது அன்பினில் விளைந்த மொழியன்று. இறைவரிடம், “ இது தாரும் ; அது தாரும் '' என நீர் வேண்டுவீராயின், அன்பிற்கும் கடை வியாபாரத்திற்கும் வேறுபாடு யாது ? அன்பின் முதற்சோதனையாவது, அதிலே ஒப்பந்தம் ஒன்றும் இல்லாமை. அன்பு எப்போதும் கொடுப்ப தன்றிக் கொள்ளலை அறியாது. ஈசரின் புதல்வர், “ இறைவர்க்கு விருப்பமாயின், என்னிடமுள்ள ஒவ்வொன்றையும் அவர்க்கு அளிப்பேன் ; ஆனால், அவரிடமிருந்து ஒன்றையும் வேண்டேன் ; இப்பிரபஞ்சத்தில் யான் ஒன்றையும் வேண்டேன். அவர் மீது அன்பு செலுத்தும் விருப்பத்தாலேயே அவரை யான் நேசிக்கின்றேன் ; கைம்மாருக யான் ஒன்றையும் விரும்பேன் ; கடவுள் எல்லாம் வல்லவரா அல்லரா என்பதை யார் பொருட் படுத்துகிறர் ? அவரிடமிருந்து எச்சக்தியையும் பெற விரும்பேன்; அவரது சக்தியின் வெளித்தோற்றமாம் எதனையும் விரும்பேன். அவர் அன்புத் தெய்வம் ஆவதே எனக்குப் போதும். வேறு கேள்வி எதனையும் கேளேன்,'' என்று கூறுவர்.

இரண்டாவது சோதனை யாதெனின், ‘ அன்பு அச்சமறி யாதது,' என்பதே. ஈசரை மேக மண்டலத்திற்கும் அப்பால் ஒரு கையிற் பரிசுகளும், மற்றென்றில் தண்டனைகளும் கொண்டு அமர்ந்துள்ள ஒரு புருடராக மனிதன் நினைக்கும் வரை, அன்பு என்பது எழ இயலாது. பயமுறுத்தி ஒருவரிடம் அன்பை எழுப்பல் ஒண்ணுமா ! ஆடு சிங்கத்தின் மீது அன்பு செலுத்துமா ? சுண்டெலி பூனையை நேசிக்குமா ? அடிமைக்கு ஆண்டானிடம் அன்பு உண்டோ ? அடிமைகள் அன்பு செய்வ தாகச் சில சமயம் நடிப்பார்கள். ஆனால், அது அன்பாகுமா ? அச்சத்திலே அன்பை என்றேனும் காண்பீரோ ? அது யாண்டும் பொய்யே. அன்புடன் ஒருகாலும் அச்சக் கருத்துத்தோன்ருது. வீதியிலே நிற்கும் ஓர் இள அன்னையை நினைக—ஒரு நாய் அவளைப் பார்த்துக் குறைக்குமாயின், அனைத்தினும் அணித்தான ஓர் இல்லத்திற்கு அவள் ஓடுவாள். மறுநாள் குழந்தையோடு அவள் வீதியில் நிற்கிருள். ஒரு சிங்கம் குழந்தையின் மீது பாயு மாயின், அவளுக்கு இடம் எங்கே? தன் சேயினைக் காத்துச் சிங் கத்தின் வாயிலன்றே இடம் பெறுவாள் ? அன்பு அவளது அச்ச மனைத்தையும் வென்றது. அத்தகையதே, ஈசர் மீதுள்ள அன்பும்.

ஈசர் பரிசளிப்பவரா தண்டனை தருபவரா என்பதைப் பற்றிக் கவனிப்பார் யார்? அன்பரின் நினைவு அதுவாகாது. நீதிபதி ஒருவர் இல்லத்திற்கு மீள்வதாக நினையும். அவர் மனைவி அவரிடம் காண்பது எதனை? நீதிமானையன்று; பரிசளிப்பவரையோ தண்டனை கொடுப்பவரையோ அன்று; காண்பது தன் கணவரையே; தனது அன்பையே. அவருடைய குழந்தைகள் அவரிடம் காண்பதும் யாது? தம் அன்புடைய தந்தையாரையே; ஒறுப்பவரையோ கொடையளிப்பவரையோ அன்று. அது போன்றே, ஈசரின் புதல்வரும் அவர்பால் தண்டிப்பவரையோ பரிசளிப்பவரையோ ஒருபோதும் காணுர். அன்பை ஒரு நாளும் சுவைத்திராத மக்களே அஞ்சிநடுங்குபவர்கள். ஈசரைத் தண்டனை தருபவரென்றே பரிசளிப்பவரென்றே நினைக்கும் இப்பயங்கரமான கடவுட்கருத்துக்கள் பண்படாத மனங்கட்குப் பயன்படலாம் எனினும் அச்சம் யாவையும் களைந்தெறிக. அறிவு மிகமிகப் படைத்தவரேனும் சிலர் ஞானத்துறையிற் பண்படாதவரேயாவர். இக்கருத்துகள் அன்னூர்க்குத் துணையாகலாம். ஆனுல், ஞானியார்க்கோ, சமயத்தை அணுகுபவர்க்கோ, ஞான உள் நாட்டம் திறந்தவருக்கோ, அத்தகைய கருத்துகள் வெறும் பிள்ளைமைத்தனமே; வெறும் பேதமையே. அத்தகையார் அச்சத்தைப் பற்றிய கருத்துகள் அனைத்தையும் தள்ளிவிடுவார்.

மூன்ருவதாக, இன்னும் உயர்ந்த ஒரு சோதனை உள்ளது. அன்பே எப்போதும் உயர்வற உயர்ந்த இலட்சியமாம்; முதலிரண்டு நிலைகளை ஒருவன் கடந்து சென்ற பின், வாணிபத் தொழிலையும் அச்சத்தையும் முற்றும் ஒழித்த பின், அன்பே ஒப்பு உயர்வற்ற இலட்சியமாக யாண்டும் உள்ளது என்பதை அப்போது அவன் உணரத் தொடங்குகிருன். அழகியொருத்தி அழகற்ற ஒரு புருடனைக் காதலிப்பதை யாம் கண்டதும் எத்தனை முறை என்பது! ஒரு சுதந்தர புருடன் அழகற்ற ஒரு மங்கையைக் காதலிப்பதை யாம் கண்டதும் எத்தனை முறை என்பது! கவர்ச்சி யாது? புறத்திருந்து நோக்குவார் அழகற்ற புருடனையோ அந்தக் கேடு உற்ற மங்கையோ மட்டும் காண்கின்றனர்; காதலர் அவ்வாறு நோக்குவதில்லை. காதலர்க்குக் காதலிக்கப்பட்டார் உலகிலுள்ளார் அனைவரினும் உயர்ந்த அழகு படைத்தவரே ஆகின்றனர். அது எவ்வாறு நிகழ்கின்றது? அழகற்ற புருடனைக் காதலிக்கும் மங்கை, தன் சொந்த உள்ளத்தில் இருக்கும் அழகுக் குறிக்கோளை வெளியிலே எடுத்து, அந்த அழகற்ற புருடன் மீது ஏறிடுவது போலச் செய்கிருள்; அவள்

வழிபடுவதும் காதலிப்பதும் அழகற்ற புருடனையல்ல; தனது சொந்தக் குறிக்கோளையே. அம்மனிதன் ஒரு தூண்டுதலே யாகிறான். அத்தூண்டுதலின் மீது அவள் தனது சொந்தக் குறிக்கோளை எறிந்து, அதை மூடிவிடுகிறாள்; அது அவளது வழிபாட்டிற்குரிய பொருளாகிறது.

பின்னணியிலுள்ள தத்துவம் யாதெனில், ஒவ்வொருவனும் தனது சொந்த இலட்சியத்தை ஏறிட்டு, அதனை வணங்குகிறான் என்பதே. இப்புறவுலகம் தூண்டுதலைத் தரும் உலகமே. நாம் காண்பனவெல்லாம் நம் சொந்த உள்ளங்களினின்றும் வெளிக் கொணர்ந்து ஏறிடப் பெற்றவைகளேயாம். நுண்மணலொன்று ஒரு சிப்பிப் புழுவின் கூட்டிற்குள் ஒதுக்கப்படுகிறது; அதை உறுத்துகிறது. இவ்வுறுத்தலின் விளைவாகச் சிப்பியில் ஒரு நீர் சுரக்கின்றது. அது அந்நுண்மணலை மூடிவிடுகிறது; அதன் முடிபே அவ்வழகியமுத்து. இதுபோன்றே, புறவுலகப்பொருள்கள் நமக்குத் தூண்டுதல்களைத் தருகின்றன; அவற்றின்மீது நமது சொந்த இலட்சியங்களை ஏறிட்டு, நம் பொருள்களை உண்டாக்கிக் கொள்கிறோம். தீயார் உலகை ஒரு முழு நரகமாகவும், நல்லார் அதனைப் பூரண சுவர்க்கமாகவும் காண்கின்றனர். காதலர் இவ்வுலகைக் காதல் நிரம்பியதாகவும், வெறுப்புடையோர் வெறுப்பு நிரம்பியதாகவும் காண்பர்; போர் புரிவோர் போரன்றி வேறெதையும் காணார். சாந்த மக்கள் சாந்தியேயன்றி வேறெதையும் காணார். பூரண மனிதன் இறைவனையன்றி மற்றொன்றைக் காணான். ஆதலால், நமது உயர்வற உயர்ந்த இலட்சியத்தின்மீது இலட்சியத்திற்காகவே அன்பு செய்யும் நிலையை நாம் அடைந்ததும், வழக்குகளும் ஐயங்களும் அனைத்தும் மீளாதழியும். இறைவரை மெய்ப்பித்தல் ஒண்ணுமோ, ஒண்ணாதோ என்பதைப் பொருட் படுத்துவார் யார். இலட்சியம் ஒரு நாளும் என்னை விட்டுப்போகாது; ஏனெனில், அது எனது சொந்த இயல்பின் ஒரு பகுதியே. எனது இருப்பினைப் பற்றி ஐயம் எழும்போதே இலட்சியத்தினைப்பற்றிய ஐயமும் எழுவதாகும்; அதைப்பற்றி ஐயப்படாதபோது இதைப்பற்றியும் ஐயப்பட வழியில்லை. இறைவர் எல்லாம் வல்லாராய், அதே சமயம் கருணை வடிவினராய் இருத்தல் கூடுமோ என்பதைக் கருதுவார் எவர்? மன்னுயிர்க்குப் பரிசளிப்பவர்க்கா, நம்மைக் கொடுங்கோல் மன்னரது கண்கொண்டு நோக்குபவர்க்கா, செங்கோல் வேந்தரது கண்கொண்டு நோக்குபவர்க்கா—இதைப் பற்றிய கவலை எவர்க்குள்ளது?

பரிசுகளுக்கும் தண்டனைகளுக்கும் அப்பால், அச்சங்களுக்கும் ஐயங்களுக்கும் அப்பால், விஞ்ஞான நூலின் முறைப்படியோ வேறு முறைப்படியோ மெய்ப்பித்ததற்கும் அப்பால்—இவையனைத்திற்கும் அப்பால்—அன்பன் சென்றுவிடுகின்றான். அன்பின் குறிக்கோள் ஒன்றே அவனுக்குப்போதும். இப்பிரபஞ்சம் அந்த அன்பின் வெளித்தோற்றமே என்பது தேற்றமன்றோ? அணுக்களை அணுக்களோடும், நுண்கூறுகளை நுண்கூறுகளோடும் இயைவிப்பதும், கோள்களை ஒன்றை நோக்கி மற்றொன்று பாயச் செய்வதும் யாது? மனிதனை மனிதன்பால் ஈர்ப்பதும், ஆணைப் பெண்ணின்பால் ஈர்ப்பதும், பெண்ணை ஆணின்பால் ஈர்ப்பதும், விலங்குகளை விலங்குகளின்பால் ஈர்ப்பதும், பிரபஞ்ச முழுவதையும் ஒரு மையத்தை நோக்கி ஈர்ப்பது போல உள்ளதும் யாது? அதுவே அன்பெனப்படுவது. அனைத்தினும் தாழ்ந்த அணுமுதல் உயர்வற உயர்ந்த உயிர் வரை யாவற்றிலும் அது வெளித்தோன்றுகிறது. எல்லாம் வல்லதும் எங்கும் பரந்ததும் ஆகும் இந்த அன்பு. எவ்வுயிரிலும் எப்பொருளிலும், சிறப்பானவற்றிலும் பொதுவானவற்றிலும் கவர்ச்சி வடிவிலே, தன்னை வெளிப்படுத்திவிடுவது இறையன்பே. பிரபஞ்சத்திலுள்ள ஆட்டுவிக்கும் சக்தி அதுவே. அந்த அன்பின் தாக்குதலுக்கு வசப்பட்டே, கிறித்து தமது உயிரை மன்னுயிர்க்கும், புத்தர் ஒரு விலங்கிற்கும், தாய் தனது சேய்க்கும், கொழுநன் தன் மனைவிக்கும் ஈந்துவிடுகின்றனர். அதே அன்பின் தாக்கிற்கு உட்பட்டே, மக்கள் தம்முயிர்களைத் தம் நாட்டிற்காகத் துறக்க ஆயத்தமாகின்றனர்; அதே அன்பின் தாக்குதலுக்கு உட்பட்டே கள்வன் திருடவும், கொலைகாரன் உயிரை மாய்க்கவும் செய்கிறான் என்பதும் விந்தையே! இச்செயல்களிலும் சத்து ஒன்றே. ஆனால், அதன் வெளித்தோற்றம் வேறு வேறாகிறது. பிரபுஞ்சத்திற்காணும், ஆட்டுவிக்கும் சக்தி இதுவொன்றே. கள்வன் பொன்னிலே அன்பு வைப்பவன்; அங்கே அன்பு உள்ளது எனினும், அது தவறான நெறியிற் செல்வது. ஆதலால், தீச்செயல்கள் அத்தனையிலும், நற்செயல்கள் அத்தனையிலும், பின்னணியில் நிற்பது அந்த அழியா அன்பே. நியூயார்க்கு நகரிலுள்ள ஏழை மக்களுக்காக ஆயிரம் 'டாலர்'க்கு ஓர் உண்டியற்சீட்டு எழுதுகிறான் ஒருவன் என்றும், அதே சமயம் அதே அறையில் இன்னொருவன் நண்பனின் கைச்சாத்தைப் பொய்யாக இடுகிறான் என்றும் வைத்துக்கொள்வோம். இருவருக்கும் எழுத உதவும் ஒளி ஒன்றே; எனினும், ஒவ்வொரு

வனும் அவனவன் அதனைப் பயன்படுத்தும் வகைக்கேற்பப் பொறுப்பை ஏற்பவன் ஆவன். புகழுக்கோ இகழ்வுக்கோ உரியது ஒளியன்று; பற்றற்றதும், எனினும் ஒவ்வொன்றிலும் ஒளிர்வதும் அன்பே; பிரபஞ்சத்தை ஆட்டுவிக்கும் சக்தி அதுவே; அஃதில்லாவிடின் பிரபஞ்சம் ஒரு கணத்திற் பொடியாய்விடும். இந்த அன்பே இறைவர்.

"அன்பிற்கினியாய், கணவன்பால் எவளும் அன்பு செய்வது கணவற்காக அன்று; கணவனிடத்திலுள்ள ஆன்மாவிற்காகவே; அன்பிற்கினியாய், மனைவியிடம் எவனும் அன்பு வைப்பது மனைவிக்காக அன்று; மனைவியிடம் உள்ள ஆன்மாவிற்காகவே. ஒருவர் வேறெதனிடத்தும் அன்பு வைப்பது ஆன்மாவிற்காகவேயன்றி மற்றென்றிற்காகவன்று." பேரளவிற்கு இகழப்படும் இத்தன்னலம் என்பதும் அதே அன்பின் வெளித்தோற்றமேயாம். இவ்விளையாட்டினின்றும் விலகி நில்லுங்கள்; இதோடு கலந்துகொள்ளாதீர்கள், ஆனால், இந்த வியக்கத்தக்க தொடர்காட்சி, பெருஞ்சிறப்புற்ற இந்நாடகம், ஒவ்வொரு காட்சியாக நடிக்கப்படுவதைக் காணுங்கள். அனைத்தும் ஒத்து இசைக்கும் இந்த விசித்திரமான இனிமையினைக் கேளுங்கள்; யாவும் ஒரே அன்பின் வெளித்தோற்றங்களே. தன்னலத்திலும் அந்த ஆன்மா பெருகி, மேன்மேலும் வளரும். அந்த ஒரே ஆன்மா, அந்த ஒரே மனிதன், மணம் புரிந்துகொள்ளும்போது இரு ஆன்மாக்களாகிறான்; குழந்தைகளைப் பெறும்போது பலராகிறான்; இவ்வாறு வளர்ச்சியடைந்து, உலக முழுவதையும் தனது ஆன்மாவாகவும், பிரபஞ்ச முழுவதையும் தனது ஆன்மாவாகவும் உணர்கிறான். அவன் எங்கும் பரந்த அளவற்ற அன்பின் ஒரே பிழம்பாக விரிகிறான். இந்த அன்பே பரம்பொருள்.

இவ்வண்ணம் பரபக்தியென்பதை, வடிவங்களும் குறிகளும் உதிர்ந்துவிடும் நிலையை நாம் அடைகிறோம். அந்நிலையை அடைந்தவன் எச்சமயப் பிரிவுக்கும் உரிமையாக இயலாதவனுவன். ஏனெனில், எல்லாச் சமயப் பிரிவுகளும், அவனிடம் உள்ளன அல்லவா! அவன் எதற்கு உரியவனுவான்? எல்லாக் கிறித்துக் கோயில்களும் இந்து கோயில்களும் அவனிடமே உள்ளன. அவனுக்கு ஏற்றவாறு போதிய அளவு பெரிய கிறித்துக் கோவில் எங்கு உள்ளது! அத்தகைய மனிதன் சில வரையறையுற்ற வடிவங்களுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள மாட்டாதவனுவன். அவன் எல்லையற்ற அன்போடு

ஒன்றுயபோது, அந்த அன்புக்கு எல்லை ஏது? அன்பிற்குரிய இக்குறிக்கோளைக் கைக்கொண்டுள்ள மதங்களில் எல்லாம், இதை உரையால் வெளிப்படுத்தும் முயற்சியையும் காண்கிறோம். இந்த அன்பின் பொருளை நாம் அறிவோம். விருப்பங்களும் கவர்ச்சிகளும் ஆர்ந்த இவ்வுலகில் ஒவ்வொன்றும் அந்த அகண்ட அன்பின் வெளித்தோற்றமே; ஆதலால், அந்த 'அன்பினை மொழியால் வருணிக்கப் பலப்பல நாடுகளிலுள்ள முனிவரும் ஞானியரும் முயன்று வந்துள்ளனர். எனினும், மொழியின் திறன் அனைத்தையும் 'பயன்படுத்துவதையும், மிகத் தீவிரமான காமப் பேச்சையும் தெய்விக வடிவமாக்குவதையும் காண்கிறோம்.

இவ்வாறு கீதம் இசைக்கிறார், ஹீப்ரு இருடி மன்னர்; இவ் வண்ணமே இந்தியாவில் உள்ளாரும். "காதலி, நின் இதழ் களின் முத்தம் ஒன்றே! நின் ஒரு முத்தம் நேர்ந்தபின், நினைச் சாரும் விடாய் பெருகும் யாண்டும்! துயரெலாம் தீரும். இறப்பு நிகழ்வு எதிர்வு ஆகிய காலம் மூன்றையும் மறந்து, நின் நினை வாயே இருப்பேன்." ஆசைகள் யாவும் மறைந்த பின், அன்பன் மாலாகி நிற்பது இவ்வண்ணம். அன்பன், "மோட்சத்தைப் பொருட்படுத்துவார் யார்? உய்வடைதலைக் கவனிப்பார் யார்! நிறைவுத் தன்மையை அடையவும் கருதுவார் யார்? சுதந் தரத்தையும் மதிப்பார் யார்? பொருள் வேண்டேன்; உடல் நலமும் வேண்டேன்; அழகை யான் வேண்டேன்; அறிவும் வேண்டேன்; இவ்வுலகிலே மலியும் தீமைகள் அனைத்திற்கும் நடுவே மீண்டும் மீண்டும் பிறப்பினும், முறையீடு செய்யேன்; உன்பால் அன்பிற்காகவே அன்பு செய்தலே வேண்டுவேன்," என்று சாற்றுவான்.

இத்தகைய அன்பின் பித்தே இப்பாடல்களில் உருவெடுப் பது. மனித அன்பில் உயர்வற உயர்ந்ததும், பெரிதும் வெளிப்படு வதும், மிகு வலிமை படைத்ததும், கழிபெருங்கவர்ச்சியுற்றதும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே எழும் அன்பே. இக் காரணம் பற்றியே மிக ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்தற்கு இந்த அன்பிற்குரிய மொழியையே பயன்படுத்தினர். இம்மனித அன்பின் பித்தே, அடியார்களது அன்புப் பித்தின் மிக மங்கிய எதிரொலியாம். இறைவரின் மெய்யன்பர்கள் பித்தராகவும், இறைவர்பால் வெறிகொள்ளவும், 'தெய்வ வெறிகொண்ட மாந்தர்' ஆகவும் விழைகின்றனர். ஒவ்வொரு மதத்தையும் சார்ந்த அன்பரும் ஞானியரும் ஆக்கி அளித்துத் தம் நெஞ்சக் குருதியைப் பெய்து வைத்திருக்கும் அன்புக்கிண்ணமொன்று

உண்டு ; பயன் விழையாது இறைவரை நேசிப்பவரும், அன்பிற்காகவே அன்பை விரும்பினவரும் எதிர் பார்த்தவையனைத்தும் குவிந்துள்ளதும் அதிலேதான் ; அந்த அன்புக் கிண்ணத்தினின்றும் பருக மெய்யன்பர் விரும்புகின்றனர். அன்பிற்குரிய பரிசு அன்பே ; அப்பரிசினை என்னென்பது ! நம் துயரங்கள் அனைத்தையும் ஒழிக்கும் ஒரே பொருள் அதுவே. இப்பிறவிப் பிணியைத் தீர்த்தற்கெனப் பருகுதற்குரியதும் அதுவே. மனிதன் தெய்வப்பித்துக் கொள்கிறான் ; தான் மனிதன் என்பதையும் மறக்கிறான்.

இறுதியாக யாம் காண்பதொன்று உள்ளது; பல்வகைப்பட்ட இச்சமய நெறிகள் யாவும் முழு ஐக்கியம் எனும் அந்த ஒரே புள்ளியிலே முடிவடைகின்றன. நாம் எப்போதும் தொடங்குவது துவைதத்திலே. இறைவர் ஒரு தனியான மெய்ப்பொருள் ; தானும் வேறான பொருள். இருவர்க்கும் இடையே அன்பு அரும்புகின்றது. மனிதன் இறைவரை அணுகத் தொடங்குகிறான் ; இறைவரும் மனிதனை அணுகத் தொடங்குகிறார் போலும் ! மனிதன் வாழ்க்கைக்குரிய பல்வகை உறவு முறைகள் யாவற்றையும்—தந்தை தாய் தோழன் காதலன் போன்ற முறைகளுள் எதனையும்—கைக்கொள்ளுகிறான் ; வழிபடு பொருளொடு ஒன்றும்போது முடிவிடம் எய்தப்படுகின்றது. “ நான் நீயே ; நீ நானே ; நின்னை வழிபடுங்கால் என்னையே வழிபடுகிறேன் ; என்னை வழிபடுங்கால் நின்னையே வழிபடுவோன் ஆவேன்.” மனிதன் முன் தொடங்கிய ஒன்றின் மிகவுயர்ந்த முடிவை அங்கே நாம் காண்கிறோம். தொடக்கத்தில் அன்பு செய்வது தனக்கே ; ஆனால், சிறிய தற்போதத்தின் உரிமைகளால் அன்பு தன்னலமுள்ளதாக்கப்பட்டது. முடிவிலே ஒளி முழுக் காந்தியுடன் தோன்றியபோது அத்தற்போதம் அகண்ட போதமாயிற்று. முதலில் எங்கேயோ ஒரு மெய்ப்பொருளாயிருந்த அவ்விறைவர், அகண்ட அன்பாகக் கரைந்துவிட்டவர் போல ஆனார். மனிதனும் மாற்றத்தை அடைந்தான். அவன் இறைவரை அணுகிவந்தான் ; முன்பு தன்பால் நிறைந்திருந்த வீண் ஆசைகள் அனைத்தையும் புறத்தே எறிந்துவந்தான். ஆசைகளோடு தன்னலம் மறைந்தது ; உச்சியிலே அன்பும் அன்பனும் அன்பு செய்யப்படுவோனும் ஒன்றுவதைக் கண்டான்.

புற வழிபாடு

[1900-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள், 10-ஆம் நாள் சான்பிரான்ஸிஸ்கோவில் நிகழ்த்திய சொற்பொழிவு]

நீங்கள் எல்லோரும் விவிலிய நூலைப் படிப்பவர்கள்...யூத வரலாறும், யூதக் கருத்துகளும் யாரால் உருவாக்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். மதக் குருக்கள், தீர்க்கதரிசிகள் ஆகிய இரண்டு வகை ஆசிரியர்களால் அவை உருவாகியுள்ளன.

இவர்களில் மதக்குருக்கள் பழமையைப் பாதுகாக்கும் சக்தியின் பிரதிநிதிகளாகவும், தீர்க்கதரிசிகள் முன்னேற்றச் சக்தியின் பிரதிநிதிகளாகவும் விளங்குகின்றார்கள். உண்மை என்னவெனில், விவரிக்க இயலாத சடங்கு முறைகள் எப்படியோ நுழைந்துவிடுகின்றன. ஒவ்வொன்றிலும் மரபு புகுந்துவிடுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மதத்திலும் இது உண்மைதான். இதன் பின்னர்ப் புதுக் கருத்துகள் உள்ள புதுத் தீர்க்கதரிசிகள் சிலர் தோன்றுகிறார்கள். இவர்கள் புதுக் குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் பிரசாரம் செய்கிறார்கள்; சமூகத்திற்கு ஒரு புது உந்துதலை அளிக்கிறார்கள். சில சந்ததிகளான பின்பு இவர்களைப் பின்பற்றுபவர்கள் இவர்களுடைய கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கை யுள்ளவர்களாகி விடுகிறார்கள். இதனால், மற்ற எந்தக் கொள்கையையுமே அவர்களால் அறிந்துகொள்ள இயலவில்லை. இந்தச் சகாப்தத்தில், மிகுந்த முன்னேற்றமான பரந்த நோக்கம் கொண்ட பிரசாரகர் என்று கூறப்படுவோர், சில ஆண்டுகள் கழிந்த பின்னர், பழமைப்போக்குடைய மதக்குருக்கள் ஆகிவிடுகின்றார்கள். முன்னேற்றமான சிந்தனையாளர்கள் கூடத் தங்களைக் காட்டிலும் சற்று மிகுதியாக முற்போக்கான கருத்து உள்ளவர்களுக்கு முட்டுக்கட்டையிடுவார்கள். தாங்கள் அடைந்துள்ள நிலையைக் காட்டிலும், யாரும் முன்னேறிச் செல்வதை அவர்கள் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இருக்கும் நிலைமையுடன் அவர்கள் திருப்தியடைகிறார்கள்.

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மதத்திலும் சில அடிப்படையான கொள்கைகள் இருக்கின்றன. இந்த அடிப்படையான கொள்கைகளை வகுத்த சக்திகளே அந்தந்த மதங்களின் வெளித்

தோற்றத்திலும், அமைப்பிலும் பிரதிபலிக்கின்றன. கோட்பாடு களும் நூல்களும், சில விதிகளும் அனுட்டானங்களும்—எழுந் திருப்பது உட்காருவது போன்றவை—எல்லாமே வழிபாட்டு முறைகளே. பெரும்பான்மை மனித இனம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்காக, ஆன்மிக உபாசனை உலகியலுக்கு ஏற்ற வழிபாடாக மாறுகிறது. எந்த நாட்டிலுமே மக்களுட் பெரும் பாலார் பரம்பொருளை, அருவத்தத்துவமாக வணங்க இயலாது. இதுவரை அது சாத்தியமாகவில்லை. அவர்கள் இவ்வாறு வணங் கக் கூடிய ஒரு காலமும் வருமா என்றுகூட நான் ஐயுறுகிறேன். இந்த நகரத்தில் உள்ளவர்களில் எத்தனை ஆயிரம்பேர் ஆண்ட வரைப் பரமாத்துமாவாக எண்ணி வணங்க ஆயத்தமாயிருக்கின் றனர்? ஒரு சிலரே; பெரும்பாலாரால் இது செய்ய இயலாது. ஏனெனில், அவர்கள் புலன்களுக்கு அடிமைப்பட்டு வாழ்பவர்கள். அவர்களுக்குத் திட்டவட்டமான கருத்துகளை நீங்கள் கூற வேண்டும். உடலால் செய்யக்கூடிய சில செயல்களை அவர் களுக்கு உரையுங்கள். 'இருபது முறை எழுந்து நிற்கவேண்டும்; இருபது முறை உட்கார வேண்டும்,' என்பன போன்றவைகளைப் பகருங்கள். அவற்றை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

'ஒரு நாசி வழியாக மூச்சை இழுத்து மற்றொரு நாசி வழி யாக வெளியே விடவேண்டும்,' என்று மொழியுங்கள். அதை அவர்கள் தெரிந்துகொள்வார்கள். பரமான்மாவைப் பற்றிய உயர்ந்த கருத்துகளையெல்லாம் அவர்கள் ஏற்க இயலாது. இது அவர்கள் குற்றமன்று.........கடவுளைத் தத்துவமாக வழிபடக் கூடிய சக்தி உங்களுக்கு இருக்கிறதென்றால், நல்லது. ஆனால், அது உங்களால் சாத்தியமாகாத ஒரு காலம் இருந்தது. மக்கள் பண்படாதவர்களாய் இருந்தால், சமய உணர்வுகளும், மதக் கோட்பாடுகளும் பண்படாதவைகளாகவே இருக்கின்றன. வழி பாட்டு முறைகளும் தூலமானவைகளாகவும், விகாரமானவை களாகவும் இருக்கின்றன. மக்கள் பண்பட்டவர்களாகவும் நாக ரிகமுள்ளவர்களாகவும் இருந்தால், இந்த முறைகள் அழகு நிறைந்தவைகளாயிருக்கின்றன. வழிபாட்டுச் சடங்குகள் என்றும் இருக்கும். ஆனால், அவை, காலத்திற்கு ஏற்றவாறு மாறும்; அவ்வளவுதான்.

மகம்மதிய மதத்தைக்காட்டிலும் உருவ வழிபாட்டை எதிர்த்த ஒரு மதம், உலகில் எக்காலத்திலுமே தோன்றியதில்லை. இது ஒரு வியப்பான நிகழ்ச்சி! மகம்மதிய மதத்தில் சித்திரத்துக்கோ, கற்சிலைக்கோ, இசைக்கோ இடமில்லை. இவை உருவ வழிபாடு

களில் கொண்டுபோய் விட்டுவிடும் என்று அம்மதத்தினர் கருதினர்.

மதக்குரு கூட்டத்தினரைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. அவர் அவ்வாறு செய்தால் அது அவரை மட்டும் வேறுபடுத்தியதாகிவிடுமே! ஆகவே, எல்லோரும் ஒரே முகமாகத் திரும்பியிருந்தால், அதில் வேறுபாடு இல்லை. இவ்வாறெல்லாம் அவர்களுடைய முறை இருக்கிறது. ஆனால், நபி இறந்து இரண்டு நூற்றாண்டுகள் முடிவதற்குள்ளாகவே அங்கு அடியார்களின் வழிபாடு தொடக்கமாகிவிட்டது. ‘இங்கேதான்......அடியாரின் கால் விரல் இருக்கிறது; இங்கேதான்......அவரது உடலின் தோல் இருக்கிறது,’ என இவ்வாறெல்லாம் கூறி வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். ஆகவே, (சகுண உபாசனை) உருவ வழிபாட்டு முறை—என்பது நாம் கடக்க வேண்டிய நிலைகளுள் ஒன்றாகும்.

சகுண உபாசனை முறையை எதிர்த்துப் போர் புரிவதற்குப் பதிலாக, அவ்வழிபாட்டு முறையில் இருக்கும் ,சிறந்த அமிசங்களை எடுத்துக்கொள்வோம். அதன் அடிப்படையான கொள்கைகளைப் பற்றி ஆராய்வோம் :

மர வழிபாடு, கல் வழிபாடு என்று கூறப்படுவனவே, மிகவும் கீழான வழிபாட்டு முறையாகும். பண்படாத, நாகரிகமற்ற ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒன்றை எடுத்து வைத்து, அதில் தனது சொந்தக் கருத்தைப் புகுத்திக்கொள்வான். அது அவனுக்கு உதவி புரியும். ஒரு சிறு எலும்புத்துண்டு, அல்லது கல், அல்லது ஏதாவது ஒன்றை அவன் வழிபடலாம். இந்தப் பண்படாத வழிபாட்டு முறைகளிலெல்லாம், மனிதன் ஒருபோதும் கல்லைக் கல்லாகவோ, மரத்தை மரமாகவோ வழிபட்டதில்லை. சாதாரணப் பகுத்தறிவிலிருந்து இதை நீங்கள் அறியலாம். கற்களையும் மரங்களையும் மனிதன் வழிபட்டான் என்று சில சமயம் கற்றவர்கள் கூறுகிறார்கள். இது பொய். மரவழிபாடு என்பது, மனித இனம் கடந்து சென்ற நிலைகளுள் ஒன்றாகும். பரமான்மாவைத் தவிர வேறு எதையுமே மனிதன் ஒருபோதும் வழிபட்டதில்லை. அவனே ஆன்மாதான். ஆன்மாவைத் தவிர வேறு எதையுமே அவனால் உணர இயலாது. ஆன்மாவை சடப்பொருளாக வழிபடக்கூடிய அவ்வளவு பெருந்தவற்றை, தெய்விகமான மனம் செய்ய இயலாது. இந்த வழிபாட்டு முறையில், மனிதன் கல்லை

மாகவே வழிபட்டான். ஆண்டவரின்

கல் அல்லது மரத்தில் இருக்

கிறது. அந்தக்கல் அல்லது மரத்திற்கும் ஆன்மா இருக்கிறது என்றுதான் அவன் எண்ணினான்.

மரவழிபாடும் பாம்பு வழிபாடும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்து வந்திருக்கின்றன. அறிவுமரம் இருக்கிறது. எப்போதும் மரம் இருந்துகொண்டேதானிருக்கும். எப்படியோ மரத்துக்கும் பாம்புக்கும் தொடர்பு இருக்கிறது. இவைகளே மிகமிகப் புராதனமான வழிபாடுகள். இவற்றிற்கூடச் சில குறிப்பிட்ட மரங்களும் சில குறிப்பிட்ட கற்களுந்தான் ஆராதிக்கப்படுகின்றன. உலகத்திலுள்ள எல்லாவகை மரங்களையும் கற்களையும் மனிதர்கள் வழிபடவில்லை.

உருவ வழிபாட்டில் இதைக்காட்டிலும் உயர்ந்த நிலை, முன்னோர்களின் உருவங்களையும், தெய்வங்களின் உருவங்களையும் வழிபடுவதாகும். மக்கள், இறந்தவர்களின் உருவங்களை சமைக்கின்றார்கள்; தெய்வங்களின் கற்பனை உருவங்களைச் அமைக்கின்றார்கள்; பின்னர் அந்த உருவங்களையே வழிபடுகிறார்கள்.

இறந்த நல்ல ஆடவர்களையும் பெண்களையும் முனிவர்களையும் வழிபடுவது இதைக்காட்டிலும் உயர்ந்த வழிபாடாகும். அவர்களுடைய நினைவை உண்டாக்கக்கூடிய பொருள்களை மனிதர்கள் வழிபடுகிறார்கள். இந்தப் பொருள்களில் ஞானிகள் எப்படியோ இருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்களுக்கு உதவுவோர்கள் என்றும் வழிபடுபவர்கள் எண்ணுகிறார்கள். ஒரு ஞானியின் எலும்பைத் தொட்டுவிட்டால் நோயிலிருந்து குணமடைந்துவிடலாம் என நம்புகிறார்கள். அந்த எலும்பே நோயைத் துடைக்கிறது என்னும் கருத்தாலன்று; அந்த எலும்பிலிருக்கும் ஞானியே குணப்படுத்துகிறார் என்று நம்புகிறார்கள்.

இவைகளெல்லாம் கீழான வழிபாட்டு முறைகளே; என்றாலும், வழிபாட்டு முறைகளேயாகும். நாமெல்லோரும் இவற்றைக் கடந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. பகுத்தறிவைக் கொண்டு பார்க்கும் போதுதான் இவை சரியாய் இருப்பதில்லை. ஆனால், நம்முடைய இதயங்களிலிருந்து இவைகளை அகற்ற இயலாது. ஒரு மனிதனிடமிருந்து அவன் வணங்கும் முனிவர்கள், அல்லது மற்றவர்களின் உருவங்கள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்திவிடுங்கள். கோவிலுக்குப் போவதற்கு அவனை அனுமதியாதீர்கள். அப்புறமும் அவன் எல்லாத் தெய்வங்களையும் மனத்தில் கற்பனை செய்துகொள்ளத்தான் செய்வான். அவன் அவ்வாறு கற்பனை செய்துதான் ஆகவேண்டியிருக்கிறது. வானத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும் நீண்ட தாடியுள்ள ஒரு கிழவ

ராகத்தான் தம்மால் கடவுளைக் கற்பனை செய்ய இயல்கிறதென்றும், வேறு முறையில் எண்ணிப்பார்க்க இயலவில்லை என்றும் எண்பது வயதான கிழவர் ஒருவர் என்னிடம் கூறினர். இது எதைக் காட்டுகிறது? அவருடைய படிப்புப் போதாது என்பதைத்தான் காட்டுகிறது. அவர் ஆன்மீக போதனை எதையும் பெறவில்லை. மனிதராகத் தவிர வேறு எவ்வகையிலும் ஆண்டவரை அவரால் கற்பனை செய்ய இயலவில்லை.

இதைக்காட்டிலும் உயர்ந்த உருவ வழிபாடு ஒன்றும் இருக்கிறது. அதுதான் மதச் சின்னங்களை வழிபடுவது. உருவங்களும் அங்கு இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவை மரங்களோ கற்களோ அல்ல; பொம்மையோ படங்களோ அல்ல; அடியார்களின் எஞ்சிய அடையாளங்களுமல்ல. ஆனால், அவை சில குறியீடுகள். உலக முழுவதிலும் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வகையாக எத்தனையோ சின்னங்கள் இருக்கின்றன. நித்தியம் என்பதன் மாபெருஞ்சின்னம் ஒரு வட்டமாகும்...... சதுரக்குறி இருக்கிறது. எல்லோரும் நன்கு அறிந்த சிலுவைக் குறி இருக்கிறது. S. Z. போன்ற வளைந்த இரண்டு கைவிரல்கள் ஒன்றுக்கொன்று குறுக்கேயிருக்கும் சின்னம் இருக்கிறது.

இவ்விதச் சின்னங்களுக்கு எந்த விதமான பொருளும் இல்லை என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால், மற்றும் சிலருக்கோ, எல்லாவிதமான நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மந்திரங்கள் வேண்டும். தெளிவான, சாதாரண உண்மைகளை நீங்கள் கூறினுற்கூட அவர்கள் அதை ஏற்க மாட்டார்கள் ..... மனித இயற்கை இப்போது உள்ள அளவில், எவ்வளவு குறைவாக மனிதர்கள் புரிந்து கொள்கிறுர்களோ, அவ்வளவு நல்லது. அப்போதுதான் நீங்கள் பெரியவர்கள் என்று அவர்கள் எண்ணுகிறுர்கள். ஒவ்வொரு நாட்டிலும் எல்லாக்காலங்களிலும், இப்படிப்பட்ட வழிபாடு செய்பவர்கள் சில படங்களினுலும் சின்னங்களினுலும் ஏமாற்றப் பட்டிருக்கிறுர்கள். இடக் கணிதம் மிகப் பெரிய விஞ்ஞானமாய் இருந்திருக்கிறது. மிகப் பெரும்பான்மையான மனிதர்களுக்கு அதில் எதுவுமே தெரியாது. ஓர் இடக் கணித சாத்திரி ஒரு சதுரத்தை வரைந்து, அதன் நான்கு மூலைகளிலும் "சூ மந்திரக்காளி!" என்று சொல்வானுகில், இந்த உலகமே சுற்றும்; சுவர்க்கம் வழி விடும்; கடவுள் தாவிக் கீழே வந்து நம்முடைய அடிமையாக இருப்பார் என்றெல்லாம் அவர்கள் எண்ணினுர்கள். இன்றுகூட அல்லும் பகலும் இதைப் பற்றியே ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் மிகுதியான பைத்

தியக்காரர்கள் உண்டு. இவையாவும் ஒருவகை வியாதியே யாகும்; சித்தர்கள் தீர்த்தற்குரிய நோயல்ல; வைத்தியன் போக்க வேண்டிய நோய்.

நான் கிண்டல் செய்கிறேன்—உண்மைதான்; ஆனால், நான் அதற்காக வருந்தவும் வருந்துகிறேன். இந்தப் பிரச்சினை இந்தியாவில் மிக ஆழமானதாய் இருக்கிறது. அந்த இனம் எவ்வாறு சீர்கெட்டுப் போகிறது, எவ்வாறு தாழ்வை நோக்கிச் செல்கிறது. எவ்வாறு தனக்குத்தானே விலங்கிட்டுக்கொள்கிறது என்பவற்றுக்கெல்லாம் இவை அறிகுறிகளாகும்; வலிமை, வாழ்வு, நம்பிக்கை, உடல்நலம் ஆகியவைகளுக்கான அறிகுறி, எவை நல்லனவோ அவை எல்லாவற்றிற்குமான அறிகுறி பலமேயாகும். இந்த உடல் உயிருடன் இருக்கும் வரை நமது உடலிலும், மனத்திலும் ஆற்றல் இருக்கவேண்டும். கையில் பலம் இருக்கவேண்டும். இந்த மாதிரி மந்திரங்களின் மூலம் ஆன்மிக சக்தியைப் பெறவேண்டுமென்று நினைப்பதில், பயந்தான்—வாழ்க்கையைப் பற்றிய பயந்தான்—அடிப்படையாய் இருக்கிறது. அப்படிப்பட்ட சின்னங்களை நான் விரும்பவில்லை.

ஆனால், மதச் சின்னங்களில் ஓரளவு உண்மை இருக்கிறது. பின்னணியில் உண்மை எதுவுமில்லாமல் பொய்யே இல்லை. ஏதாவது ஒன்று உண்மையாய் இல்லாமல் அதன் போலி இருக்க இயலாது.

எல்லா மதங்களிலும், மதச் சின்னங்கள் வாயிலாக நடைபெறும் வழிபாட்டுமுறை இருக்கிறது. புத்தம்புதிய, வலிமை வாய்ந்த, கவிதை நயம் பொருந்திய நல்ல சின்னங்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கான மக்களிடம் சிலுவை என்னும் சின்னத்துக்கு இருந்து வந்திருக்கிற அற்புதச் சக்தியை எண்ணிப் பாருங்கள். பிறைச் சின்னத்தை நினைத்துப் பாருங்கள். இந்த ஒரு சின்னத்தின் கவர்ச்சியைச் சிந்தித்துப்பாருங்கள். இந்த உலகில் ஒவ்வொரு பகுதியிலும் நல்ல, மகத்தான சின்னங்கள் இருக்கின்றன. அவை ஆன்மாவுக்கு விளக்கமளித்து, மனத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. பொதுவாக அவை அளவற்ற நம்பிக்கையையும் அன்பையும் உண்டாக்குவதை நாம் காண்கிறோம்.

புராட்டெஸ்டென்டு மதத்தைக் கத்தோலிக்க மதத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கடந்த நான்கு நூற்றாண்டுகளில் அந்த இரு மதப் பிரிவுகளுமே இருந்திருக்கின்றன. ஆனால், எந்த மதப் பிரிவானது அதிக அடியார்களை, அதிக உயிர்த்தியாகிகளை

இக் காலத்தில் உண்டாக்கியிருக்கிறது? கத்தோலிக்க மதச் சடங்குகள், அதன் சின்னங்கள்—விளக்கு, சூடம், மெழுகுவர்த்தி பாதிரிமார்களின் சிவப்பு நாடாப் போன்றவைகளுக்கு மிகப் பெரிய சக்தி இருந்திருக்கிறது. பிராட்டெஸ்டென்டு மதமானது கண்டிப்பானதாகவும் கவிதை நயமற்றதாகவும் இருக்கிறது. புராட்டெஸ்டென்டுகள் பல காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். சில அமிசங்களில் கத்தோலிக்கர்களைக் காட்டிலும் அதிகச் சுதந்தரம் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கத்தோலிக்கர்களைக் காட்டிலும் தெளிவான, தனிப்பட்ட கண்ணோட்டம் இருக்கிறது. இவைகளெல்லாம் நல்லனவே. ஆனால், அவர்கள் பலவற்றை இழந்துவிட்டார்களே!......திருக்கோயில்களிலுள்ள வண்ணச் சித்திரங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவை ஒரு வகைக் கவிதையாகும். கவிதைப்பசி நமக்கு இருக்கும்போது, நாம் அவற்றை வைத்துக்கொண்டாலென்ன? ஆன்மா எதை விரும்புகிறதோ, அதை அதற்கு அளித்தாலென்ன? நமக்கு இசை வேண்டுமென்றிருக்கிறது. ஆனால், பிரெஸ்பிடீரியர்கள் இசையைக்கூட எதிர்த்தார்கள். "முகம்மதியர்களே, கவிதை ஒழிக! சடங்குகளெல்லாம் ஒழிக!" என்று முழக்கமிட்டார்கள். இப்போது இவர்கள் இசை பாடுகிறார்கள். அது புலன்களைக் கவர்கிறது. ஆலயச் சுவிசேஷ மேடையிலிருந்து வரும் ஒளிக்கதிர்க்காக இவர்கள் எவ்வாறு கூட்டமாகத் திரள்கிறார்கள் என்பதை நான் கண்டிருக்கிறேன்.

புறத்தில் உள்ள மதானுட்டானங்களும் கவிதையும் ஆன்மாவில் நிறைந்து வழியட்டும். அவை ஏன் கூடாது?... சகுண உபாசனை முறையை நீங்கள் எதிர்த்துப் போராட இயலாது. அது மீண்டும் மீண்டும் வெற்றியடைந்து மேலே வந்துவிடும். கத்தோலிக்கர்கள் செய்வது உங்களுக்குப் பிடிக்காவிட்டால், அவர்களைக்காட்டிலும் சிறந்த காரியங்களைச் செய்யுங்கள். ஆனால், நாம் அவர்களைக் காட்டிலும் நல்லதும் செய்ய மாட்டோம்; ஏற்கெனவே உள்ள கவிதையும் நமக்குப் பிடிக்காது. இது பயங்கரமான நிலைதான். கவிதை இன்றியமையாதது. நீங்கள் உலகிலேயே மிகப் பெரிய தத்துவ சாத்திரிகளாய் இருக்கலாம். ஆனால், தத்துவ சாத்திரம் என்பதும் மிக உயர்ந்த கவிதையே. அது வெற்று வறட்டு வாதமன்று. எல்லா விஷயங்களின் தீஞ்சுவை அதுவே. இரு பொருளாகக் காண்பதைக்காட்டிலும் ஒரே மெய்ப்பொருள் அதிகக் கவிதை நயம் வாய்ந்தது.

எழுத்துப் படிப்புக்கு மதத்திலே இடமேயில்லை; பெரும்பாலாருக்கு இந்த எழுத்துப் படிப்பு ஒரு தடங்கலாகவே இருக்கிறது...உலகிலுள்ள நூல் நிலையங்களின் நூல்களையெல்லாம் ஒருவன் படித்திருக்கலாம். ஆனால், அவன் மதவாதியாய் இல்லாமலும் இருக்கலாம். அதே சமயம், தமது பெயரையே எழுதத் தெரியாத ஒருவர் மதத்தை உணர்ந்து அனுபவிப்பவராய் இருக்கலாம். மதம் முழுவதுமே நம்முடைய சொந்த உள் ஒளிர்வுதான். "மனிதனை உருவாக்கும் சமயம்" என்று நான் கூறும்போது, நூல்கள் தத்துவங்கள் கொள்கைகள் ஆகியவற்றை நான் கூறவில்லை. எல்லையற்ற பரம்பொருளைத் தனது சொந்த இதயத்தில் பூரணமாகக் கண்டு உணர்ந்த மனிதனையே கூறுகிறேன்.

என்னுடைய வாழ்நாள் முழுதும் யாருடைய காலடியின் கீழ் நான் உட்கார்ந்திருந்தேனோ, அந்த மனிதருக்குத் தமது பெயரையே சரியாக எழுதத் தெரியாது. ஆனால், அவருடைய கருத்துகளில் ஒரு சிலவற்றைத்தான் நான் இப்போது போதிப்பதில் முனைந்துள்ளேன். அப்படிப்பட்ட ஒருவரை எனது வாழ்நாளிலேயே பார்த்ததில்லை. நானும் விரிந்த பார்முழுதும் சுற்றியிருக்கிறேன். அந்த மனிதரை எண்ணும்போது, எனது அறிவின் குறைவை உணர்கிறேன். ஏனெனில், நான் நூல்களைப் படிக்க விரும்புகிறேன். ஆனால், அவர் அவ்வாறு ஒருபோதும் படித்ததில்லை. மற்றவர்கள் அருந்திவிட்டுச் சென்ற வட்டில்களில் உள்ள மிச்சிலை நக்கிப் பார்க்க அவர் விரும்பவில்லை. அதனாலேதான் அவரே அவருடைய நூலாய் விளங்கினார். கறுப்பனும் சுப்பனும் என்ன சொன்னார்கள் என்பதையே எனது வாழ்நாள் முழுதும் நான் திருப்பித் திருப்பிச்சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான் எதையும் சொந்தமாகச் சொல்வதில்லை. கறுப்பன் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்போ, சுப்பன் ஐந்து ஆண்டுகளுக்கு முன்போ சொன்னதை நீங்கள் அறிவதில் உங்களுக்கு என்னதான் பெருமை வந்துவிடுகிறது? நீங்கள் என்ன இயம்ப வேண்டுமோ அதைக் கூறுங்கள்.

படிப்பில் மதிப்பு எதுவும் இல்லை என்பது கவனத்தில் இருக்கட்டும். படிப்பு என்ன என்பதை நீங்கள் தவருகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அறிவின் ஒரே நன்மை, மனத்தை உறுதிப்படுத்தி அதை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதுதான். நூல்களிலுள்ளவற்றை நாம் இடைவிடாது விழுங்கிக் கொண்டிருக்கிறோமே! நமக்கெல்லாம் வயிற்று வலி வாராதது

விந்தைதான்! நாம் இதை நிறுத்துவோம். நூல்களையெல்லாம் ஒழிப்போம். நம்மை நாமே தூண்டிச் சிந்தித்துப் பார்ப்போம். உங்களுடைய தனித் தன்மை போய்விடுகிறதோ என்பதைப் பற்றி நீங்களெல்லாம் பேசுகிறீர்கள்; மனக் கலக்கம் அடைகிறீர்கள். ஆனால், இவ்வாறு ஓயாது நூல்களை விழுங்குவதன் மூலம், ஒவ்வொரு நொடியும் உங்களுடைய தனித்தன்மையை இழந்து கொண்டிருக்கிறீர்கள். நான் போதிப்பதை உங்களில் யாராவது அப்படியே நம்பிவிட்டால் நான் வருத்தமடைவேன். நீங்களே உங்களுக்குள் சிந்தித்துப் பார்க்கும் சக்தியைத் தூண்ட இயலுமானால் நான் மகிழ்ச்சியடைவேன். ஆடவர்களாகவும் பெண்டிராகவும் இருப்பவர்களுடன் பேசவேண்டுமென்பதுதான் எனது ஆசை; ஆடுகளுடன் பேசவேண்டும் என்பதன்று. ஆடவர், பெண்டிர் என்றால், அவர்கள் தனித்தன்மை படைத்தவர்கள். தெருக்களில் உள்ள அழுக்குக் கந்தல்களைப் பொறுக்கி எடுத்து, அவற்றை ஒரு பொம்மையாகச் சுற்றிக் கட்டுவதற்கு நீங்கள் குழந்தைகளல்ல.

"இது கல்வி கற்கும் இடம்; அந்த மனிதர் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்! பிளாங்கு சொன்னவையெல்லாம் அவருக்குத் தலைகீழ்ப் பாடம்!" என்று சொல்வார்கள். ஆனால், பிளாங்கு எதைத்தான் சொல்லிவிட்டார்? ஒன்றுமே இல்லையே! எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால், "இங்கிருந்து வெளியேறுங்கள்; உங்களுக்கு ஒன்றும் தெரியாது," என்று அந்தப் பேராசிரியரிடம் கூறுவேன். என்னதான் வந்தாலும் சரி; இந்தத் தனித்தன்மையை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தவறாக வேண்டுமானாலும் சிந்தியுங்கள். உண்மையை நீங்கள் அறியமுடிகிறதோ, இல்லையோ, அதைப்பற்றிக் கவலையில்லை. மனத்தை ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டுவதுதான் சிறந்தது. மற்றவர்களிடமிருந்து வாங்கி 'விழுங்குகிறீர்களே!' அது உங்களுடைய கருத்தாய் இராது. என்னுடைய வாயிலிருந்து நீங்கள் உண்மையைப் போதிக்க இயலாது. அதே போல, என்னுடைய வாயிலிருந்து நீங்கள் உண்மையை அறிந்துகொள்ளவும் இயலாது. யாரும் மற்றொருவருக்குக் கற்றுக்கொடுக்க இயலாது. நீங்கள் மெய்ப்பொருளை உணரவேண்டும். உங்களுடைய இயற்கைக்கு ஏற்ற முறையில் உங்களுக்கு அதை நீங்கள் வகுத்துக் கொள்ள வேண்டும். எல்லோரும் தனித் தன்மையுள்ளவர்களாய் விளங்க முயலவேண்டும். பலம் வாய்ந்தவர்களாக, சொந்த ஆற்றல் உள்ளவர்களாக, தாங்களே சிந்திக்கக் கூடியவர்களாக,

தங்களுடைய ஆன்மாவை அறிந்தவர்களாக விளங்க முயல வேண்டும். மற்றவர்கள் அளிக்கும் தத்துவங்களை மனனம் செய்வதால், சிறையில் இருக்கும் படை வீரர்களைப் போல, ஒன்றாக எழுந்து ஒன்றாக உட்காருவதால், எல்லோரும் ஒரே சமயத்தில் ஒரே உணவை உண்பதால் ஒரு பயனும் இல்லை. மாறுதல்களே உயிரோட்டத்தின் அறிகுறி. மாறுதல்கள் இல்லாதிருப்பது மரணத்தின் அடையாளமாகும்.

ஒரு நாள் நான் இந்திய நகரமொன்றில் இருந்தேன். அப்போது ஒரு கிழவர் என்னிடம் வந்தார்; "சுவாமி, எனக்கு வழியைக் காட்டுங்கள்," என்று கேட்டார். என் முன்னால் இருக்கும் இந்த மேசையைப் போன்றே அவர் ஜீவனற்று இருப்பதை நான் கண்டேன். மனோரீதியாக, ஆன்மிக ரீதியாக அவர் ஏற்கெனவே செத்துவிட்டார். "நான் சொல்வதை நீங்கள் செய்வீர்களா? உங்களால் திருட இயலுமா? உங்களால் மது அருந்த இயலுமா? உங்களால் புலால் உண்ண இயலுமா?" என்று நான் வினவினேன்.

"என்ன போதிக்கிறீர்கள்!" என்று அவர் வியப்புடன் என்னைக் கேட்டார்.

நான், "இந்தச் சுவர் என்றாவது திருடியிருக்கிறதா? இந்தச் சுவர் எப்போதாவது மது அருந்தியிருக்கிறதா?" என்றேன்.

"இல்லை, ஐயா," என்றார் அவர்.

"மனிதன் திருடுகிறான்; மது அருந்துகிறான்; ஆண்டவனாகவும் மாறுகிறான். நீங்கள் இந்தச் சுவரல்ல என்பதை நான் அறிகிறேன். அன்பரே, ஏதாவது செய்யுங்கள்; ஏதாவது செய்யுங்கள்," என்று நான் அவருக்குக் கூறினேன். அவர் திருடினால், அவருடைய ஆன்மா அருட்பேறு அடையும் வழியை நோக்கிச் செல்லும் என்பதை நான் உணர்ந்தேன்.

நீங்களெல்லோரும் தனித்தன்மை படைத்தவர்கள் என்பதை எவ்வாறு அறிவது; எல்லோரும் ஒன்றைத்தான் கூறுகிறீர்கள். எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்து உட்காருகிறீர்கள். இது மரணத்தின் வழி. உங்களுடைய ஆன்மாக்களுக்காக நீங்கள் ஏதாவது செய்யுங்கள்; தவறாவது செய்யுங்கள். ஏதாவது செய்ய வேண்டும். இப்போது என்னைப் புரிந்துகொள்ளாவிட்டால், நாளடைவில் கொஞ்சங்கொஞ்சமாக என்னைப் புரிந்துகொள்வீர்கள். ஆன்மா கிழமாகிவிட்டதைப் போன்றிருக்கிறது. அதில் துருப்பிடித்திருப்பதைப் போக்கிவிட்டு நாம் முன்னேறுவோம். உலகில் ஏன் தீமையிருக்கிறது என்பதை இப்போது நீங்கள்

புரிந்துகொண்டிருப்பீர்கள். வீட்டுக்குப்போய் அதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். துருப்பிடித்திருப்பதை அகற்றுவதற்காகவாகிலும் சிந்தியுங்கள்.

உலகாயதப் பொருள்களுக்காக நாம் பிரார்த்தனை செய்கிறோம். ஏதாவது ஒரு காரியத்தை நோக்கமாகக் கொண்டு, கடவுளை நாம் பிரார்த்திக்கிறோம். கடை வியாபாரம் போன்ற வழிபாடு இது. உணவுக்காகவும் உடைக்காகவும் போய்ப் பிரார்த்தனை செய்யுங்கள். பிரார்த்தனை நல்லதுதான். பிரார்த்தனையே செய்யாமல் இருப்பதைக்காட்டிலும், ஏதாவது ஒரு வகையில் பிரார்த்தனை செய்வது நல்லதுதான். சிற்றப்பனே இல்லாதிருப்பதைக்காட்டிலும், ஒரு குருட்டுச் சிற்றப்பன் இருப்பது நல்லது அல்லவா? செல்வம்படைத்த ஓர் இளைஞர் நோய்வாய்ப்படுகிறார்; தம்முடைய நோயிலிருந்து குணமடைவதற்காகத் தானம் வழங்கத் தொடங்குகிறார். அது நல்லதுதான். ஆனால், அதுவும் மதமன்று; திண்ணமாக ஆன்மிகச் சமயமன்று. இவைகளெல்லாம் உலகாயத நிலையில் உள்ளவை. எது உலகாயதமானது, எது உலகாயதமற்றது? உலகந்தான் இலட்சியம்; அதை அடைவதற்குக் கடவுள் ஒரு சாதனந்தான் என்று கருதுவது இருக்கிறதே, அதுதான் உலகாயதம். கடவுள் இலட்சியமாயிருந்து அதை அடைவதற்கு உலகம் ஒரு சாதனமாய் மட்டும் கருதப்படும்போது, ஆன்மிகம் தொடங்கிவிட்டது.

ஆகவே, இந்த உலகாயத வாழ்வே போதும் என்ற எண்ணம் உள்ளவனுக்குச் சுவர்க்கம் கிடைத்தாலும், அது அவனுடைய இந்த வாழ்வின் தொடர்ச்சியாகவே இருக்கும். இறந்தவர்களையெல்லாம் பார்க்கவும், மீண்டும் அவர்களுடன் அளவளாவி மகிழ்ச்சியுடன் இருக்கவும் அவன் விரும்புவான்.

இறந்தவர்களின் ஆவியை நம்மிடம் கூட்டிவரும் நடுவாளராக ஒரு மாதரார் இருந்தார். அவர் உடல் பருத்தவரே. ஆனால், அவரை 'மீடியம்' (ஆங்கிலத்தில் 'மீடியம்' என்பதற்கு 'ஆவியோடு பேசும் கருவி' என்பது பொருள்) என்று வழங்கினார்கள்! நல்லது! அந்த மாதரார் என்னிடம் அதிக விருப்பம் வைத்திருந்தார்; தமது இருப்பிடத்துக்கு வருமாறு என்னை அழைத்தார். ஆவிகளெல்லாம் என்னிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொண்டன. அங்கு எனக்கு ஒரு விநோதமான அனுபவம் ஏற்பட்டது. அப்போது நள்ளிரவு என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த மாதரார் "இங்கே ஒரு பூதம் நின்றுகொண்டிருக்கிறது. 'அந்தப் பலகையின்மீது ஓர்

இந்து கனவான் அமர்ந்திருக்கிருர்,' என்று அந்தப் பூதம் என்னிடம் கூறுகிறது,'' என்று கூறினுர். ''இதைச் சொல்வதற்கு ஒரு பூதம் தேவையில்லை,'' என்று கூறி நான் எழுந்தேன்.

அங்கு ஓர் இளைஞரும் இருந்தார். அவர் திருமணமானவர்; புத்திசாலி; நன்கு படித்தவர். தம் தாயாரைப் பார்ப்பதற்காக அவர் அங்கு வந்திருந்தார். ''இன்னுருடைய தாயார் இங்கு இருக்கிருர்,'' என்று அந்த நடுவாளர் கூறினுர். அந்த இளைஞர் தம் தாயாரைப் பற்றி என்னிடம் முதலில் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் மரணமடைந்தபோது மிகவும் ஒல்லியாய் இருந்திருக்கிருர். ஆனுல் அந்தத் திரையிலிருந்து வெளியே வந்ததும்!...அவரை நீங்கள் நேரில் பார்த்திருக்கவேண்டும்! அந்த இளைஞர் என்ன செய்வார் என்பதைப் பார்க்க நான் விரும்பினேன். எனக்கு ஆச்சரியம் விளைக்கக்கூடிய முறையில், அவர் தமது இருப்பிடத்தை விட்டுத் தாவி எழுந்தார். அந்த 'ஆவி' யைக் கட்டித் தழுவிக்கொண்டே ''என் தாயே, ஆவி உலகத்தில் நீ எவ்வளவு அழகாகப் பருத்திருக்கிருய்!'' என்று கூறினுர்! ''நல்ல வேளையாக நான் இங்கு இருக்கிறேன். மனித இயல்பைப் பற்றி ஊடுருவி நன்கு தெரிந்துகொள்வதற்கு இது உதவுகிறது,'' என்று எனக்குள்ளே நான் சொல்லிக்கோண்டேன்.

சகுண உபாசனைக்கு நாம் மீண்டும் செல்வோம்......இந்த வாழ்வையும், உலகத்தையும் இலட்சியமாகக் கொண்டு அதற்குக் கடவுளை ஒரு சாதனமாகக் கருதி வணங்குவது கீழான வழிபாட்டு முறையாகும். இந்த ஊன் பிண்டத்திற்கும் உலக இன்பங்களுக்கும் மேலான எதைப்பற்றியும், பெரும்பாலார் ஒருபோதும் அறிந்ததில்லை. இந்த வாழ்க்கையிற்கூட, இந்த ஏழைச் சீவன்கள் காணும் இன்பங்களெல்லாம் விலங்குகள் காணும் இன்பங்களே......இவர்கள் விலங்குகளை உண்கிருர்கள். தங்கள் குழந்தைகளை நேசிக்கிருர்கள். இதுதான் மனிதரின் மகத்தான பெருமையா? அதே சமயம் எல்லாம் வல்ல இறைவரை நாம் பிரார்த்திக்கிருேம்; எதற்காக? இந்த உலகாயதப் பொருள்களை நமக்குத் தருவதற்காகவும். இவைகளைப் பாதுகாத்துக் கொடுப்பதற்காகவும்...விலங்குகள், பறவைகள் நிலைக்கு அப்பால் நாம் கடந்து செல்லவில்லையென்பதையே இது காட்டுகிறது. நாம் அவற்றைக் காட்டிலும் உயர்ந்தவர்களல்ல. அவை அறிந்திருப்பதைக்காட்டிலும் நமக்குத் தெரியாது. கடவுள் நம்மைக் காப்பாற்றுவாராக! நாம் இதைக் காட்டிலும் உயர்ந்ததைத் தெரிந்துகொள்ளவேண்டும். நம்மைப்போன்று விலங்குகளுக்கு ஒரு கடவுள் இல்லை

என்பதுதான் ஒரே வேறுபாடு! விலங்குகளைப் போன்றே நமக்கும் ஐம்புலன்கள் இருக்கின்றன. அவற்றின் ஐம்புலன்கள் நம்முடையவற்றைக் காட்டிலும் சிறந்தவை. நாய் ஓர் எலும்பை எவ்வளவு சுவையுடன் கடிக்கிறதோ அந்தச் சுவையோடு நாம் ஒரு கவள உணவை உட்கொள்ள இயலாது. வாழ்க்கையில் நம்மைக்காட்டிலும் அவற்றுக்கு அதிக இன்பம் இருக்கிறது; ஆகையால், விலங்குகளைக்காட்டிலும் நாம் ஓரளவு தாழ்ந்தவர்களே.

இயற்கையில் உள்ள ஏதாவதொரு சக்தி உங்களைக்காட்டிலும் நன்ருகச் செய்யக் கூடிய ஒரு காரியத்தை, நீங்களும் ஏன் செய்ய விரும்புகிறீர்கள்? நீங்கள் சிந்திக்க வேண்டிய முக்கியமான பிரச்சினை இது. உங்களுக்கு என்னதான் வேண்டும்? இந்த வாழ்க்கையா, இந்தப் புலன்களா, இந்த உடலா? அல்லது, இவைகளைக் காட்டிலும் எல்லையற்று உயர்ந்த ஒன்று வேண்டுமா? எதிலிருந்து உங்களுக்கு வீழ்ச்சியில்லையோ, எதை அடைந்தால் அப்புறம் மாறுதல் இல்லையோ அது வேண்டுமா?

அதாவது, இதன் பொருளென்ன? "எந்தையீர், எனக்கு வேண்டிய உணவை எனக்குக் கொடுங்கள்; எனக்கு வேண்டிய பணத்தைக் கொடுங்கள்; என்னுடைய நோய்களைக் குணப்படுத்துங்கள்; இதைச் செய்யுங்கள்; அதைச் செய்யுங்கள்," என்று கூறுகிறீர்கள். ஒவ்வொரு தடவையும் இவ்வாறு நீங்கள் கூறும் போது, "நான் பௌதிகப் பொருள். இந்த பௌதிகப் பொருளே எனது இலட்சியம்," என்ற எண்ணத்தில் உங்களையே ஏமாற்றிக் கொள்கிறீர்கள். உலகாயத ஆசை ஒன்றை நிறைவேற்ற நீங்கள் முயற்சி செய்யும்போதெல்லாம், "நான் இந்த உடம்புதான்; ஆன்மாவல்லேன்," என்று உங்களுக்குள்ளேயே எண்ணிக் கொள்கிறீர்கள்......

இது ஒரு கனவாய் இருக்கிறதே, அதற்காக ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்! இது மறைந்து போகும் என்பதற்காக இறைவருக்கு நன்றி கூறுவோம்! சாவு—அந்த மகத்தான சாவு இருக்கிறதே—அதற்காக கடவுளுக்கு நன்றி கூறுவோம்! ஏனெனில், சாவுதான் இந்த மயக்கத்திற்கு, கனவிற்கு, உடற்பற்றுக்கு, கடுந்துயருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறது. எந்தக் கனவும் நிலையானதாய் இருக்க இயலாது; எப்போதாவது அது கலைந்துதான் ஆகவேண்டும். தமது கனவு கலையாமல் நிரந்தரமாக வைத்திருக்கக் கூடியவர் உலகில் யாரும் இல்லை. இவ்வாறிருக்கிறதே என்பதற்காக நான் இறைவருக்கு நன்றி செலுத்துகிறேன். ஆயினும், இந்த வழிபாட்டு முறை சரியானதுதான். தொடர்ந்து

நடத்துங்கள். ஒன்றும் செய்யாமலிருப்பதைவிட, ஏதாவது ஒன்றுக்காகப் பிரார்த்தனே செய்வது சிறந்ததே. நாம் கடந்து செல்ல வேண்டிய நிலேகளே இவையெல்லாம். இவையெல்லாம் சிறுவர் பாடங்கள். படிப்படியாக, இந்தப் புலன்களேக் காட்டிலும் உயர்ந்த ஒன்றை, இந்த உடலேயும் உலக இன்பங்களேக் காட்டிலும் உயர்ந்த ஒன்றை, மனம் சிந்திக்க ஆரம்பிக்கிறது.

இதை மனிதன் எவ்வாறு செய்கிருன்? முதலில் அவன் ஒரு சிந்தனேயாளனுகிருன். நீங்கள் ஒரு விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, அங்குப் புலன் இன்பம் எதுவும் இல்லே. அதற்குப் பதிலாகச் சிந்தனேயால் விளேயும் உன்னதமான மகிழ்ச்சி இருக்கிறது. அதுதான் மனிதனே உருவாக்குகிறது. ஒரு பெரிய கருத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது ஆழமாக ஆக, தியான நிலே (ஒருமுகப்பட்ட சிந்தனே) வருகிறது. அப்புறம் உங்கள் உடல் உணர்வு உங்களுக்கு இருப்பதில்லே. உங்களுடைய புலன்களெல்லாம் நின்றுவிடுகின்றன. உங்களுடைய புலன்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட மேலான நிலேக்கு நீங்கள் வந்துவிடுகிறீர்கள். புலன்கள் வழியாக வெளியான எல்லாமே, இப்போது அந்த ஒரே கருத்தில் ஒருமித்துக் கிடக்கின்றன. அந்த நொடியில் நீங்கள் மிருகத்தைக்காட்டிலும் உயர்ந்தவர்களாகிறீர்கள். வேறு யாரும் உங்களிடமிருந்து பறித்து எடுத்துக்கொள்ள முடியாத ஒரு காட்சியை நீங்கள் அடைகிறீர்கள்—உடலேக்காட்டிலும் உயர்ந்த ஒன்றை நீங்கள் நேரடியாக உணர்கிறீர்கள். அதிலேதான் மனத்தின் குறிக்கோள் இருக்கிறது; புலன்களின் தளத்தில் நிற்கும்போது இல்லே.

இவ்வாறு, புலன்களின் மூலமாகப் பாடுபட்டு, நீங்கள் படிப்படியாக உயர்ந்த நிலேயை அடைகிறீர்கள். உலக பந்தம் படிப்படியாக நீங்குகிறது. ஆன்மாவின் ஒரு தோற்றத்தை நீங்கள் காண்கிறீர்கள். அப்புறம் உங்களுடைய புலன்கள், புலன் இன்பங்கள், உடல் மீது நீங்கள் வைத்துள்ள பற்று ஆகிய எல்லாமே உங்களிடமிருந்து உருகி ஓடிவிடும். ஆன்மிக உலகில் ஒவ்வொரு தோற்றமாக உங்களுக்குத் தெரியும். நீங்கள் யோக நிலேயை அடைவீர்கள். ஆன்மா, ஆன்மாவாகவே உங்களுக்குத் தெரியும். அப்புறம் நீங்கள் கடவுளே ஆன்மாவாக வழிபடத் தொடங்குவீர்கள்; வழிபாடு என்பது ஏதாவதொரு நலத்தை அடைவதற்காகச் செய்யப்படுவதன்று என்பதையும் புரிந்துகொள்வீர்கள். எல்லேக்கு உட்பட்டதாகவும், எல்லேக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கிறதே அன்பு, அதுதான் நமதுமனப்பூர்வமாகச் செய்யப்

படும் வழிபாடு ஆகும். அன்புதான் ஆண்டவரின் கமலபாதங்களில் ஆன்மா களிக்கும் நிரந்தர பலியாகும். நீங்கள் அப்போது, "நீதான் எல்லாம். நான் என்பதுமடிந்துவிட்டது. நீ இருக்கிறுய். நான் இல்லே. எனக்குச் சொத்து வேண்டா; அழகு வேண்டா; படிப்புக்கூட வேண்டா; முக்தியும் எனக்குத் தேவையில்லே. உனது விருப்பம் அதுவானுல், இரண்டு கோடி நரகங்களில் வாழவும் நான் தயார். ஆனுல், எனக்கு வேண்டுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நீ என் அன்பனுய் இரு," என்று கூறுவீர்கள்.

மானதமோ ஞானமோ பற்றிய ஆராய்ச்சிக்கு அடிப்படை

சுவாமி விவேகானந்தர் மேலை நாட்டில் எழுந்தருளியிருந்த காலை பன்முறை வாதங்களிற் கலந்துகொள்ள நேர்ந்தது. இலண்டனில் அவ்வாறு செய்த ஒரு சமயமாவது, "மானத சக்தி பற்றிய நிகழ்ச்சிகளை விஞ்ஞான அடிப்படையிலே மெய்ப்பித்தல் இயலுமோ ?" என்ற சொற்பொழிவைப்பற்றி வாதம் நிகழ்ந்த போதே, இந்த வாதத்தின் இடையிலே அவரது காதிலே வீழ்ந்த ஒரு கருத்தைக் குறித்து—மேலை நாட்டிலே அதனைக் கேட்டது முதல் முறையுமன்று—அவர் கூறியதாவது :

ஒரு பொருள் பற்றி எனது கருத்தைக் கூற விழைந்தேன். நமக்குக் கூறப்பட்டுள்ள தவறான ஓர் உரையாவது : மாதர்க்கு ஆன்மாக்கள் உண்டென்று மகம்மதியர் நம்புவரல்லர் என்பது. கிறித்தவ மக்களுள் வழங்கி வரும் பழமையான தவறே அது என்று கூறப் பெரிதும் வருந்துகிறேன்! அவர்களும் அத் தவற்றை விரும்புபவர் போலத் தோன்றுகின்றார்கள். மக்கள் தாம் விரும்பாதவரைப் பற்றி மிகத் தீயதான யாதேனும் ஒன்றைச் சொல்ல விழைவது, மனித இயல்பில் அமைந்துள்ள ஒரு விசித்திரமாகும். இடையில் ஒன்று உரைக்கின்றேன்—யான் மகம்மதியனல்லேன் என்பதை நீவிர் அறிவீர் ; ஆயினும், இம் மதத்தைக் கற்க வாய்ப்புகளைப் பெற்றுள்ளேன் ; மாதர்க்கு ஆன்மாக்கள் இல்லை என்று உரைக்கும் மொழியொன்றேனும் குர்ஆனில் இல்லை ; அதற்கு மாறாக அது அவர்கட்கு உண்டு என்றே அது சாற்றுகிறது.

ஆராய்ச்சிக்குரிய பொருளாயிருந்துள்ள மானத சக்திகளைப் பற்றி இங்கு யான் சொல்வது மிகச் சுருக்கமானதே ; ஏனெனில் முதலிலே எழும் வினாவாவது, மானத சக்தி பற்றிய பொருள்கள் விஞ்ஞான முறையிலே மெய்ப்பிக்கப்படக்கூடியனவா என்பதே. முதன்முதலாக, அகத்ததும் புறத்ததுமாகிய இரண்டும் இன்றியமையாதனவாம். இயைபு நூலும் (இரசாயன நூலும்) பௌதிக நூலும் நமக்கு மிக்க பழக்கமுள்ளனவும், நாம் எவ்வளவோ கற்றிருப்பனவும் ஆதலின், அவற்றையே எடுத்துக் கொள்வோம். இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவனும் அத்துறையினும் மிகமிக எளிய

பொருள்களையேனும் மெய்ப்பித்தலை அறியவல்லானுதல் உண்மையா? சற்றும் பண்பாடற்ற எவனிடமேனும் உங்கள் சோதனைகளில் ஒன்றைக் காட்டுங்கள்—அதைப்பற்றி அவன் அறிவது யாது? ஒன்றுமேயில்லை. ஒரு சோதனையை அறியும் அளவிற்குக் கொண்டுவரப்பட, முன்னரே பேரளவிற்குப் பயிற்சி தேவையாகின்றது. அதற்குமுன் அவனால் அதனை அறிதலே ஒண்ணததாகும். வழியிற்பெருந்துயரம் உள்ளது. விஞ்ஞான முறைப்படி மெப்பித்தல் என்பது, மனிதர் அனைவர்க்கும் பொதுவாகவும், எல்லா மனிதரது அறிவிற்கும் எட்டுவதாகவும் உள்ள ஒரு நிலைக்குச் சில உண்மைகளைக் கீழிறக்கிக் கொணர்தலே எனப் பொருள்படுமாயின், இவ்வுலகிலே எப்பொருளுக்கேனும் அத்தகைய எந்த மெய்ப்பித்தலும் இருத்தல் இயலும் என்பதை யான் மறுக்கிறேன். அவ்வாறிருத்தல் கூடுமேல், நம் பல்கலைக்கழகங்களும் கல்வியும் அனைத்தும் வறிதேயாகிவிடும். பிறப்பிலே நாம் விஞ்ஞானம்பற்றிய அனைத்தையும் அறிய வல்லோமாயின், நாம் கல்வி பயின்றது ஏன்? அத்துணைக் கல்வி எற்றுக்கு? அதனால் இம்மியும் பயனில்லை. ஆகவே, விஞ்ஞான முறைப்படி மெய்ப்பித்தல் என்பதற்கு இதுவே பொருளாயின், அதாவது, சிக்கலான உண்மைகளை நாம் இப்போதுள்ள நிலைக்குக் கீழிறக்கிக் கொணர்தலே என்பதாயின், அது பொருந்தாக் கூற்று என்பது தேற்றம். ஒருகால் அடுத்த பொருளொன்று பொருத்தமாகலாம்—அதாவது, மிகச் சிக்கலான உண்மைகளை மெய்ப்பித்தற்பொருட்டு எளிய உண்மைகள் சிலவற்றைச் சான்றாக எடுத்துக்காட்டல் வேண்டும். குழப்பம் மிக்க, சிக்கலான உண்மைகள் சில உள; அவற்றைத் தெளிவாக்கக் குறைந்த சிக்கலுள்ளவற்றை எடுத்துரைத்து, அவ்வாறு ஒருகால் அணுகுகிறோம்; இம்முறையிலே அவற்றை நமக்கு இப்போதுள்ள எளிய அறிவு நிலைக்கு வரவரக் கீழிறக்கிக் கொணர்கிறோம். ஆனால், இதுவும் பெரிதும் மனத்தைக் குழப்பும்; மிக்க துயர் தரும்; ஒரு பயிற்சியையும், பேரளவற்ற கல்வியையும் குறிக்கும். ஆதலால், யான் கூறவேண்டிய அனைத்தும் இதுவே. மானத சக்தி பற்றிய நிகழ்ச்சிகளுக்கு விஞ்ஞான முறைப்படி விளக்கம் கூறும் பொருட்டு, நிகழ்ச்சிகளையே பற்றிய வரை பூரணமான சான்று நமக்கு வேண்டும்; அம்மட்டோ? அவற்றைக் காண விரும்புவாரிடத்தும் கழிபெரும்பயிற்சி தேவையாகும். இவையனைத்தையும் பெறின், நம் முன் நிகழும் எந்நிகழ்ச்சியையும் மெய்ப்பித்ததையோ மெய்ப்பியாததையோ பற்றி, ஆம் என்றோ அன்று என்றோ

கூறும் தரமுடையராவோம். ஆனால், அதற்கு முன்னரோ, மனித சமுதாயத்தில் நேர்ந்துள்ள சிறப்புற்ற நிகழ்ச்சிகளும், மிகமிகப் பன்முறை குறித்து வைக்கப்பெற்றுள்ள நிகழ்ச்சிகளும் சிந்தனையின்றி மெய்ப்பித்தற்கு மெய்யாகவே சால அரியனவாம் என்பதே எனது கருத்து.

அடுத்து, சமயங்கள் கனவுகளின் விளைவுகளே என்று ஓராது உரைக்கும் விளக்கங்களைப் பற்றிப் பேசுவோமாயின், அவற்றைப் பற்றிச் சிறப்பாக ஆராய்ச்சி செய்தவ்ளோர் அவற்றை உறுதி யற்ற வீண் ஊகங்களே என்று கருதுவர். அத்துணை எளிதாக விளக்கங்கூறியுள்ளபடி, சமயங்கள் கனவுகளினின்றும் விளைந் தவை யென்று கருத யாதொரு காரணமும் இல்லை. அஞ்ஞேய வாதத்தைக் கைக்கொள்ளலும் உண்மையாகவே மிக எளிதாகும்; ஆனாலும், பொருளை அவ்வளவு எளிதாக விளக்க இயலாது போதற்கு நமது பேறின்மையே (துர்பாக்கியமே) காரணமாம். இந்நிகழ்காலத்தும் ஏனைய பலப்பல நிகழ்ச்சிகளும் நேர்ந்து வருகின்றன; இவையனைத்தையும் ஆராய்ச்சி செய்ய வேண்டுவ தாகிறது; வேண்டுவது என்பது மட்டுமன்று; இவை இத்துணைக் காலம் ஆராயப்பட்டு வரும் நிலையிலுமுள்ளன. பரிதி இல்லை யெனக் கண்ணிலான் கழறுகிறான்; அதனால் பரிதியில்லையென் பது மெய்ப்பிக்கப்படவில்லை. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே இந்நிகழ்ச்சிகளைத் துருவி ஆய்ந்துள்ளனர். மக்களுள் சில இனத்தார்களுள் அனைவருமே நரம்புகளில் நிகழும் நுண் ணிய இயக்கங்களைக் கண்டறிவதற்குத் தம்மைத் தக்க கருவிக ளாக்கிக்கொள்ளும் பொருட்டு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தம்மைப் பயிற்றி வந்துள்ளனர்; அவர்கள் குறித்து வைத்தவை பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிடப்பட்டுள்ளன. இப் பொருள்களைக் கற்பதற்கென கல்லூரிகள் தொடங்கப்பட்டுள் ளன; இந்நிகழ்ச்சிகளுக்கு உயிருள்ள சான்றுகளாக வாழும் ஆடவரும் மகளிரும் இன்று உளர். முழுமையாகப் பார்க்கின், இதில் ஏராளமாக ஏமாற்றம் உண்டு என்பதையும், தவறானவை யும் பொய்யானவையும் பேரளவிற்கு உள என்பதையும் நானே ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், எதிலேதான் இத்தகையது இல்லை யென்பது? எளிதான விஞ்ஞான நிகழ்ச்சி எதனையும் எடுத்துக் கொள்ளுங்கள்; விஞ்ஞானிகளோ, சாதாரண மக்களோ, தனி உண்மைகளெனக் கருதக்கூடிய இரண்டோ மூன்றோ இதில் உள் ளன; ஆனால், ஏனையவை வெற்று நுரையனைய நம்பிக்கைகளே யாம். இனி அஞ்ஞேயவாதி தான் நம்ப விரும்பாததற்குப் பயன்

படுத்தும் அதே சோதனையைத் தனது சொந்த விஞ்ஞான சாத்திரத்திற்கும் கையாளட்டும். அதிற்பாதி உடனே ஆதாரம்வரை அசைவுறுவதாகும். நாம் நம்பிக்கைகளைச் சார்ந்து வாழக் கடமைப்பட்டுள்ளோம். நாம் இருக்கும் இடத்தே மனத்திருப்தியோடு வாழ நமக்கு இயலாது; மனித ஆன்மாவின் இயல்பான வளர்ச்சி முறையும் அதுவே. ஒரு புறம் அஞ்ஞேய வாதியாய் இருந்துகொண்டு, அதே சமயம் ஈண்டு எதனையும் தேடிக் கொண்டே திரிதலும் இயலாது; இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். இக்காரணத்தால், நமக்குரிய வரையறைகளைக் கடந்து சென்று, அறியவொண்ணாததாகத் தோன்றுவதை அறியப் பாடு படல் வேண்டும்; இப்பாடு தொடர்ந்து நிகழ வேண்டும்.

ஆதலால், எனது கருத்துப்படி யான் சொற்பொழிவாளரைக் காட்டிலும் ஓர் அடி உண்மையாகவே முன் சென்று பின் வருங் கருத்தை வெளியிடுகிறேன். மானத சக்தியால் நிகழ்வனவற்றுட் பெரும்பாலன-சிறு குழந்தையின் விளையாட்டேயாகும். ஆவிகளின் தட்டுதல், மேசைகளைத் தட்டுதல் போன்ற அற்பப் பொருள்கள் மட்டுமன்றி, சிறுவரும் செய்யக் காணும் தொலைப் பேச்சு முதலிய அற்பப் பொருள்கள் மட்டுமன்றி—உயர்தர மறைபொருட்காட்சி யென்று இறுதிச் சொற்பொழிவாளர் குறித்த மானத சக்தி நிகழ்ச்சிகளிற் பெரும்பாலன, மனத்தின் உணர்வு கடந்த நிலையிற் பெறும் அனுபூதிகளென யான் குறிப்பிட விரும்புவன—இவை உண்மையான மன நூலாராய்ச்சிக்குப் படிகளாவன. மனம் அந்நிலையை அடைய இயலுமா இயலாதா என்பதை முதன்முதலில் அறிய வேண்டும். எனது விளக்கம் அவரது விளக்கத்தினின்றும் சிறிது வேறுபடுவதேயாகும். ஆனல், மொழிகளின் பொருள்களை விளக்கும்போது நாம் ஒருகால் ஒரே கருத்துடையவராவோம். இப்போதுள்ள உணர்வு மரணத்திற்குப் பின்னும் தொடர்கின்றதா அன்ரு என்ற கேள்வியைச் சார்ந்திருப்பது மிகுதியானதன்று; ஏனெனில், இப்பிரபஞ்சம் இப்போதுள்ள நிலையில் இவ்வுணர்வு நிலைக்குக் கட்டுப்பட்டிருப்பதன்று. உணர்வும் இருப்பும் ஒரே காலத்து உள்ளனவாகா. எனது உடலிலும், நம் உடல்கள் அனைத்திலும், நமது உணர்வுக்கு எட்டுவது மிகச் சிறியதே என்பதையும், அதிற் பெரும்பகுதியை நாம் உணர்வதில்லை என்பதையும், நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும், அது உள்ளதேயாகும்.

சான்ருக, எவனும் தனது மூளையை என்றும் உணர்பவனல்
லன் ; என் மூளையை என்றும் யான் கண்டதில்லை ; ஒருபோதும்
அது என் உணர்விற்கு வருவதும் இல்லை ; ஆயினும், அது
உள்ளது என்பதை அறிவேன். ஆதலின், நமக்கு வேண்டுவது
உணர்வன்று ; இத்தூலப் பொருள் அல்லாத ஒன்றின் இருப்பே
யாம் ; அந்த அறிவை இப்பிறப்பிலே பெறுதல் இயலும் ; அவ்
வறிவு பெறப்பட்டுள்ளது என்பதும், மெய்ப்பிக்கப்பட்டு உள்
ளது என்பதும், எந்த விஞ்ஞான சாத்திரமும் மெய்ப்பிக்கப்பட்
டிருக்கும் அளவிற்கு உண்மையேயாம். இப்பொருள்களை நாம்
ஆராய வேண்டும் ; இங்குள்ளார்க்குப் பிறிதொரு பொருளையும்
வற்புறுத்தி நினைவூட்டுவேன். இது பற்றிப் பலப்பல முறை
நாம் மயக்கமடைந்துள்ளோம் என்பதை நினைவுறுத்திக்கொள்
ளல் நன்று. ஞான இயல்பிற்கு எளிதாயிராத ஓர் உண்மை
மெய்ப்பிக்கப்படுவதைச் சிலர் நம் முன் காட்டுகின்றனர் ; அதை
உண்மையெனக் காண இயலவில்லை என்று நாம் கூறுவதால்
அதைத் தள்ளிவிடுகிறோம். பல சமயங்களில் அவ்வுண்மை
சரியல்லாததாகவும் ; ஆனால், பல சமயங்களில், மெய்ப்பித்தலை
ஏற்கும் தகுதி நம்மிடம் உண்டோ இல்லையோ என்பதையும்,
அப்பொருள்களைக் கண்டறிவதற்கு உடல்களையும் மனங்களையும்
தக்க கருவிகளாக்க இடங்கொடுத்துள்ளோமா என்பதையும்,
கருத நாம் மறந்துவிடுகிறோம்.

அறிக்கைகள்

சமயப் பொறைக்கென ஒரு வேண்டுகோள்

[இது 1894-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 17 ஆம் நாள் "மெம்பிஸ்கம்மர்ஷியல்" ((Memphis Commercial) என்னும் செய்தித் தாளில் வெளி வந்த ஓர் அறிக்கை.]

இந்து சமயத்தைப்பற்றி உரை வழங்க வந்தவரும், பெரும் புகழ் பெற்றவரும், துறவறம் பூண்டவருமான சுவாமி விவேகானந்தரை வரவேற்கச் சொற்பொழிவுக் கூடத்தில் போதுமான ஓர் அவை நேற்று மாலை கூடிற்று.

சுருக்கமாயிருந்தாலும், பொருட்செறிவு கொண்ட ஒரு முன்னுரை வாயிலாக நீதி மன்றத்துத் தலைவரான ஆர். ஜே. மார்கன் என்பவரால் அவையோர்களுக்குச் சுவாமிகள் அறிமுகப்படுத்தப் பட்டார். மிக்க பெருமை வாய்ந்த ஆரியர் இனத்தின் வளர்ச்சியைச் சுவாமி சித்திரித்தார். இவ்வளர்ச்சித் தொட்டிலிலேதான் ஐரோப்பியர்களும் இந்துக்களும் ஒருங்கே தாலாட்டப்பட்டவர்களென்றும், இன்று அமெரிக்க மக்கள் முன்னிலையில் பேசப் போகும் அவருக்கும் அவர்களுக்கும் ஓர் இனத் தொடர்பு இருக்கிறதென்றும் கூறிச் சுவாமி தமது சிற்றுரையை முடித்தார். பெருஞ்சிறப்பு வாய்ந்த இந்தக் கீழ்த்திசை நாட்டு அறிஞரைக் கைகொட்டி ஆர்த்து அவையோர்கள் வரவேற்று, முழுதும் இவருக்குச் செவி சாய்த்து ஆர்வத்துடன் இவர் வழங்கும் பேச்சை உற்றுக்கேட்டார்கள். இவர் வனப்பு வாய்ந்த தோற்றப் பொலிவுள்ளவர். இவருடைய வெண்கல வண்ண அவயவங்களில் ஓர் ஒழுங்கு காணப்பட்டது; இவர், வடிவமோ, தக்க முறையில் ஒரு சீரில் அமைந்து, பெரிதும் கவினுற்றுத் திகழ்ந்தது. இவர் செம்பட்டு ஆடை ஒன்றை அணிந்திருந்தார். இந்த ஆடைக்குமேல் இடுப்பில் மை நிறமான ஒரு வார் முடியப்பட்டிருந்தது. இவர் அணிந்த காற்சட்டைகள் கறுப்பே. இவருடைய சென்னியில் இந்திய நாட்டு மஞ்சட்பட்டால் புனையப்பட்ட ஒரு பாகை அழகுடன் மிளிர்ந்தது. சொற்பொழிவு வழங்கும் இவர் முறை மிகவும் சிறப்புற்றிருந்தது. தேர்ந்த சொற்களை அமைப்

பதிலும், இலக்கண வழுவில்லாமல் சொற்றொடர்களை உருவாக்கு வதிலும் இவருடைய ஆங்கில மொழி ஆட்சி பழுதிலா முதிர்ச்சி எய்தியிருந்தது. மொழிப் பகுதியைத் தக்க இடத்தில் அழுத்தி உச்சரிக்கச் சில சமயங்களில் தவறியது ஒன்றே இவர் புரிந்த பிழையாகும். எனினும் இவர் உரையைச் செவிமடுத்துப் பருகும் அவையோர்கள் இவர் கூறிய சொற்களுள் எதையும் இழந்ததாகத் தெரியவில்லை. இவர் பேருரையைக் கேட்டவர்கள் மிகுந்த நற்பயனை அடைந்தார்கள். இது வரையில் சிந்திக்கப்படாத புதிய கருத்தும், பொருளும், விரிந்த ஞானமும் சுவாமிகளின் உரையில் ஒளிவிட்டன. இச்சொற்பொழிவைச் சர்வ சமயப் பொறைக்கென அமைந்த ஒரு பரிவுரையெனக் கூறுவது மிகப் பொருத்தமாகும். இந்து சமயம் பற்றிய கூற்றுகளைக்கொண்டு இவர் இதற்கு விளக்கம் தந்துள்ளார். இம் மனப்பாங்கு—சமயப் பொறையும் அன்பும் கலந்த இம்மனப்பாங்கு—நாம் பாராட்டக் கூடிய எல்லாச் சமயங்களையும் தூண்டும் ஒரு நடுவு நிலையான முக்கியத் தெய்வ ஆவேசமாய் இலங்குகின்றது. எந்தச் சமய மும் அடையக்கூடிய முடிபு இதுவேயாகும்.

இந்து சமயத்தைப்பற்றிய இவர் பேச்சு முழுதும் சூழ் நிலையை ஒட்டி எழுந்ததன்று. அதன் பண்பைத் துருவி ஆராய்வதே இவர் கொண்ட முயற்சியாகும்; அதைக் காட்ட எழுந்த புராணங்களைப்பற்றிய வரலாற்றை வரைவதோ, அதன் வழிபாட்டின் முறைகளைச் சித்திரிப்பதோ, இவருடைய முக்கிய நோக்கமன்று. அதன் சிறப்பு வாய்ந்த சொற்களுள் சிலவற் றைப்பற்றியும், அதற்குரிய சடங்குகளைப்பற்றியும் விரிவாக மொழிந்தார்; இவற்றைத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் கொண்டே போனார். இந்து சமயத்தின் அனுபூதிக் கூறுகளை எடுத்துக் காட்ட இவர் கூறிய வரலாறு ஒளி மிக்கதாய்த் திகழ்ந்தது.

அடிக்கடி தவறாகக் கொள்ளப்பட்ட மறு பிறவிக் கொள்கை இவற்றினின்று பிறந்து வளர்ந்தது என்று உரைக்கலாம். கால மாறுபாடுகளை எப்படித் தம் சமயம் புறக்கணிக்கின்றது என் பதை இவர் விளக்கினார். ஆன்மாவின் நிகழ் காலத்தையும் வருங்காலத்தையும் எப்படி மக்கள் நம்புகின்றார்களோ, அப் படியே பிரம்மத்தை அடிப்படையாகக் கொண்ட சமயம் அதன் கழிந்த காலத்தையும் நம்புகின்றது. 'மூலப் பாவச்கொள்கை' யில் தம் சமயம் நம்பிக்கை வைக்கவில்லை என்பதை இவர் நன்கு புலப்படுத்திவிட்டார். மன்னுயிர் அனைத்தும் பூரணத்தை

அடையும் என்ற நம்பிக்கைமீது தான் மனிதனின் எல்லா முயற்சிகளும் பேரார்வமும் நிறுவப்பட்டிருக்கின்றன என்று நவின்ருர். முன்னேறுவதும் மனமாசைக் கழுவுவதும் ஓர் அழியா நம்பிக்கையையே தாங்கும் அடிப்பாறையாகக் கொண்டவை என்று வாதாடினர். மனிதனுடைய முதிர்ச்சி தன்னுடைய ஆதி பூரண நிலைக்குத் திரும்புவதே. புனித வாழ்வைக் கடைப்பிடிப்பதாலும், அன்பு நெறியைப் பின்பற்றுவதாலும் இந்தப் பூரண நிலை வரவேண்டும். எப்படித் தம் நாட்டு மக்கள் இத்தகைய உயர்ந்த குணங்களைப் பயின்ருர்களென்றும், எப்படித் தம் (தாய்) நாடான இந்தியா, நலிவுற்றுத் துன்பம் அடைந்தோர்க்கு ஓர் அடைக்கலமாய்த் திகழ்ந்ததென்றும் மொழிந்தார். டைட்டஸ் என்பார் செருசலத்தைச் சூறையாடிக் கோயிலையும் இடித்துத் தகர்த்துத் தள்ளுங்காலை (வெளியேறின) யூதர்களுக்கு இந்துக்கள் நல்வரவு கூறின நிகழ்ச்சியையும் ஒரு 'சான்ருகக் கூறினர்.

இறை வழிபாட்டு முறைகளின்பால் இந்துக்கள் மிகுதியான கவனம் செலுத்துகிறதில்லை என்பதை நன்கு சித்திரித்துக் காட்டினர். ஒரே குடும்பத்தைச் சார்ந்த ஒருவன் தான் கொண்ட சமய இனத்தைப் பற்றுகிற முறையில் தன் குடும்பத்து மற்றவர்களோடு சில சமயங்களில் மாறுபடக்கூடும்; ஆனல், ஆண்டவர்க்கு இதயமாயுள்ள அன்பை வழிபடுவதால் அனைவரும் ஆண்டவரை வழுத்துகின்றவர்களாய்த் திகழ்வார்கள். எல்லாச் சமயங்களிலும் ஒரு நலம் சுடர்விடத்தான் செய்கிறது என்றும், தூய்மையை நாடத் தூண்டும் தெய்வ ஆவேசத்தின் வடிவங்களே அவைகளென்று இந்துக்கள் கருதுகின்ருர்கள் என்றும் இவர் இயம்பினர். அக்காரணத்தால் அவையனைத்தும் போற்றிப் பாராட்டுதற்குரியவையே. வேதத்திலிருந்து ஒரு மேற்கோள் காட்டி இதற்கு விளக்கம் தந்தார். பல்வேறு சமயங்களனைத்தும் பல வண்ணக் கலங்களாக அதில் உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரே ஊற்றிற்கே பற்பல மனிதர்கள் பாத்திரங்களைக்கொண்டு நீரைக் கொணரச் சென்ருர்கள். பாத்திரங்களின் வடிவங்களோ, பற்பல; ஆனல், பாத்திரங்களை நிரப்புவதற்காக அனைவரும் தேடுவதோ, உண்மையாம் தீஞ்சுவைத் தண்ணீரே. எல்லாச் சமயங்களின் முறையீடுகளையும் ஆண்டவர் தெரிந்துகொள்வார் என்று இவர் (சுவாமிகள்) நினைக்கின்ருர். எப்படி அவரை அழைத்தாலும் தம் பெயரை அவர் உணர்வார்; எம்முறையில் அவருக்குக் காணிக்கை செலுத்தின போதிலும், அதையும் அவர் அறியாமற் போவரோ ?

மீண்டும் அவர் பேசலுற்றார். கிறித்தவர்கள் தொழுகின்ற கடவுளைத்தான் இந்துக்களும் வழிபடுகின்றார்கள். பிரமன், விஷ்ணு, சிவன் (அயன், அரி, அரன்) இத்திருமூர்த்திகளும், ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையுடைய ஒரே கடவுளின் உருவங்களேயாவார்கள். சாதாரண மக்கள் இனத்திற்கு ஒழுக்க இயல் கட்புலனாகவேண்டுமன்றோ? அதைக் கருதியே மூன்றையும் தனித்தனியாகப் பாகுபடுத்திக் கூறினர் கள். எல்லாம் ஒன்றே என்ற கருத்தை இது ஓரளவு மாசுறச் செய்யும் என்பது உண்மையே. இவ்வண்ணமே இந்துக்களின் கடவுளின் உருவங்கள் கூடத் தெய்வ குணங்களைச் சுட்டக்கூடிய சின்னங்களே தவிர வேறல்ல.

இந்துக்களின் மறுபிறவிக் கொள்கையை விளக்கிக்கொண் டிருக்கும்பொழுது கண்ணபிரானின் பிறவி புனித கருக்கொளல் முறையில் வந்தது என்றும், அவர் சரிதம் இயேசு நாதரின் சரிதத்தை மிகவும் ஒத்திருக்கிறதென்றும் உரைத்தார். அன்பிற் காகவே அன்பு என்பதுதான் கண்ணபிரானின் அறிவுரை என்று உரிமை பாராட்டினர்; இதைப் பின்வரும் சொற்களைக் கொண்டு கூறினர்: "அச்சந்தான் சமயத்தின் தொடக்க மென்றாலும், கடவுளின்பால் வைக்கும் அன்புதான் அதன் முடிவாகும்."

இவருடைய பேருரையை இங்கே முழுதும் குறிக்க இயலாது; உடன் பிறந்தார்கள் போல அன்பு பாராட்டுங்கள் என்பதைத் தூண்டக்கூடிய ஒரு மிகச் சிறந்த வேண்டுகோளாய் அது விளங் கிற்று. ஓர் அழகு வாய்ந்த சமயத்திற்குச் சொல்வன்மை கொண்டு ஓர் அரண்மனை செய்யும் வண்ணமாயும் அது திகழ்ந் தது. முடிவுரை தனிப்படக் குறிப்பிடும் வகையில் சிறப்பா யிருந்தது. அதில் இயேசு நாதரைத் தட்டுத் தடங்கலின்றித் தாம் ஏற்க ஆயத்தமாயிருக்கும் தன்மையை ஒப்புக்கொண்டார். அம்முறையே புத்தர்பிரானுக்கும் கண்ணபிரானுக்கும் தாம் வணக்கம் செய்யவேண்டுமென்றும் மொழிந்தார். நாகரிகம் இழைத்த கொடுமையை இவர் நன்கு சித்திரித்த போதிலும் வாழ்வின் முன்னேற்றப் பாதையில் விளைந்த தீமைகளுக்கு இயேசு நாதரே பொறுப்பாளர் என்பதை மறுத்தார்.

இந்திய நாட்டுப் பழக்க வழக்கங்கள்

[" அப்பீல் அவலாஞ்சு " என்னும் பத்திரிகை, 1894 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், 21ஆம் நாள்]

நேற்றுப் பின் மாலைப் பொழுதில் மெம்பிஸ் என்ற இடத்திலுள்ள லா சாலட்டு என்ற கழகத்தில் இந்துத் துறவியான விவேகானந்தர் ஒரு சொற்பொழிவு ஆற்றினர். கொட்டிய மழை காரணமாக மிகச் சிறிய அவைதான் கூடிற்று.

அங்கு ஆய்ந்த பொருள் " இந்திய நாட்டுப் பழக்க வழக்கங்கள் " என்பதே.

சமயக் கருத்துப் பற்றிய கொள்கைகளை இவர் விரித்துக் கொண்டே போனார். இந்நகரிலுள்ள மிக உயர்ந்த சிந்தனையாளர் சிலருடைய உள்ளங்களிலும் அமெரிக்க நாட்டு வேறு நகரங்களிலுள்ள அறிஞர்கள் மனங்களிலும் சிக்கென அவை வேரூன்றின.

கிறித்தவ சமயப் பணியாளர்கள் போதிக்கும் பரம்பரைக் கொள்கைக்குச் சுவாமிகள் கொண்ட கொள்கை ஒரு கூற்றம் போன்றிருந்தது. உண்மை ஒளி காணாது அஞ்ஞானமுகில் மூடிக் கிடக்கும் இந்து மக்களுக்கு அறிவுச் சுடர் வழங்குவதாகக் கருதும் அமெரிக்க நாட்டுப் பாதிரிகளின் முயற்சி மாபெரு முயற்சியே. ஆனால், விவேகானந்தர் பரப்பிவரும் கீழ்த்திசைச் சமயப் பேரொளிமுன், பெற்றோர்கள் எங்களுக்கு நல்கிவரும் பண்டைய கிறித்தவ சமயத்தின் வனப்பு முற்றும் மங்கி மறைந்து போயிற்று. சாதாரண மக்களைக் காட்டிலும் சற்று உயர்ந்த அமெரிக்கப் பெரியார் பலருடைய இதயங்களில் தழைக்கச் செழுமை மிக்க ஒரு செய்தியாக இது இலங்கும். தாம் தாம் கொண்ட 'கருத்துப் பித்து' உலவும் காலம் இது. நீண்டநாள் குறை ஒன்றை நிரப்புவது போலச் சுவாமி விவேகானந்தர் விளங்கினர். தம் நாட்டு மிகக் கற்றோர்களுள் இவரும் ஒருவர் போலும்! வடிவழகால் ஈர்க்கும் காந்த சக்தியை இவர் பெற்றிருந்தார்; இவருக்குச் செவி சாய்ப்போர் இவரது நாவன்மையால் மயங்கிப் போயினர். விரிந்த கருத்துகள் கொண்ட மனப்பண்பாடு உடையவரேனும் பரம்பரைக் கிறித்தவ சமயத்தில் தாம் வியப்பதற்குரிய எதையும் கண்டிலர். இந்நகரத்திற்கு விசயஞ் செய்த எந்தச் சொற்பொழிவாளருக்கும், எந்த பாதிரிக்கும்,

இவருக்குத் தனிப்பட வழங்கப்பட்ட கவனமும் மரியாதையும் வழங்கப்படவில்லை.

இந்தியநாட்டிற்குச் செல்லும் கிறித்தவ சமயப் பணியாளன் இந்த இந்தியத் துறவியாரை இங்கு ஆதரித்த வண்ணம், அங்கு வரவேற்கப்படுவானாயின், கிறித்தவ சமய ஒளி பெறாத நாடுகளில் இயேசுநாதரின் நற்செய்தி நன்கு பரவக்கூடும். நேற்று மாலை இவர் நிகழ்த்திய பேச்சு, சரித்திரக் கோணத்தினின்று பார்க்குமிடத்துச் சுவை மிக்கதாய் மிளிர்ந்தது. கழிபெருந்தொன்மை வாய்ந்த காலத்தினின்று இந்தக் காலம் வரையிலுமுள்ள தம் நாட்டு வரலாற்றிலும் மரபுகளிலும் இவர் நன்கு ஊன்றியவர். இக்காரணத்தால் பல்வேறு இடங்களையும், அவாவைத் தூண்டும் பொருள்களையும் பெரிதும் கவின் பெற எளிதில் சித்திரிக்க இவரால் இயலும்.

அவையில் கூடியிருக்கும் மங்கையர்களால் எழுப்பப்பட்ட வினாக்களினால், இவருடைய சொற்பொழிவு அடிக்கடி தடையுற்றது; ஆனால், சிறிதும் தயக்கமின்றி எல்லா வினாக்களுக்கும் விடையளித்தார். சமய ஆராய்ச்சிக்கு இவரை இழுக்கும் நோக்கம் கொண்டு ஒரு வினாவைக் கிளப்பிய நங்கைக்கு விடையளிக்கவில்லை. தம் சொற்பொழிவுக்காகத் தாம் வகுத்துக்கொண்ட பொருளினின்று விலக மறுத்தார். மற்றொரு தருணம் உயிர் உடல் விட்டு உடல் புகும் தத்துவத்தைப் பற்றியும், இன்னும் வேறு விஷயங்களைப்பற்றியும் தாம் கொண்ட கருத்துகளை கூறுவதாக வினா எழுப்பிய அந்த காரிகைக்குக் கூறினார்.

தம் கூற்றுகளை விரித்துக் கூறுமிடத்துத் தம் பாட்டனார் மூன்று வயதில் மணம் புரிந்துகொண்டாரென்றும், தம் தந்தையாருக்குப் பதினெட்டாம் பிராயத்தில் திருமணம் நிகழ்ந்ததென்றும், தாம் மணமே செய்து கொள்ளவில்லை என்றும் மொழிந்தார். ஒரு துறவியின் மணம் தடுக்கப்படுவதில்லை; ஆனால், அவர் மணச் சடங்கு ஆற்றுவாராயின், அவருடைய மனைவி சந்நியாஸினியாகத் திகழ்ந்து, துறவிக்குரிய ஆற்றல்களையும் உரிமைகளையும் பெறுவாள். தன் கணவருக்குச் சமூகத்தில் எந்த இடம் அளிக்கப்படுமோ, அந்த இடமே அளிக்கப் பெற்று அவள் இலங்குவாள்.*

* அவர் மீது சாற்றப்பட்ட இந்த மாற்றம் அவரால் கூறப்பட்டிருக்க இயலாது; இக் குறிப்போ உண்மைப் பாதையிலிருந்து இழிந்த அறிக்கையாளரின் பிழையேயாகும். ஒரு சந்தியாசி மணம் புரிவானேயாகில், இந்து சமூகம் அவனை ஓர் இழிமகனாகக் கருதி, அவனைத் தன் எல்லையிலிருந்து விரட்டிவிடும் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

எந்தக் காரணம் கொண்டாவது, இந்தியாவில் மனைவிமாரைத் தள்ளி வைக்கும் முறைகளில்லை என்றும், ஆனால் பதினான்கு ஆண்டுகள் மனை வாழ்க்கை நடத்தியும், இல்லத்தில் மக்கட்பேறு இல்லாத இடத்துத் தம் மனைவியின் இசைவுடன் மற்றொரு மங்கையை மணக்கலாம் என்றும், அவள் மறுப்பாளேயாகில் கணவன் மறுமணம் புரிய இயலாதென்றும், எழுப்பப்பட்ட ஒரு வினாவிற்கு விடையாகச் சுவாமிகள் மொழிந்தார். பண்டைய கோரிகள் கல்லறைகளைப்பற்றியும் கோவில்களைப்பற்றியும் இவர் தந்த சொல்லோவியம் ஒப்புயர்வற்றதாய் திகழ்ந்தது. மேலும், இக்காலத்துச் சிற்பிகளையும் தச்சர்களையுங்காட்டிலும் பண்டைய நாட்டுக் கட்டடத் தொழிலாளர்கள் (படைக்கும் ஆற்றலால்) மிகுதியான விஞ்ஞான நுட்ப அறிவு பெற்றவர்களென்ற உண்மையை இது உணர்த்துகின்றது.

இந்நகரிலுள்ள ஒய். எம். ஹெச். ஏ. கூடத்தில் இன்று இரவு சுவாமிகள் தோன்றுவதுதான் அவருடைய இறுதிக் காட்சியாகும். சிக்காகோவில் திகழும் சிலேடன் லிசியம் பீரோவுடன் இவர் ஒப்பந்தஞ் செய்திருக்கிறார். இந்த நாட்டில் இவர் நிறைவேற்றுதற்காக இசைந்த ஒப்பந்தம் மூன்று ஆண்டுகள் கொண்ட ஒப்பந்தமாகும். 25-ஆம் நாள் இரவு அங்குக் காத்திருக்கும் அலுவல் காரணமாக இவர் சிக்காகோ நகருக்கு நாளை புறப்படப் போகிறார்.

[டெட்ராயிட் “ டிரிப்யூன் ” 1894-ஆம்ஆண்டு, பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாள்]

‘யூனிட்டி கிளப்பின்’ சார்பில் ‘யூனிடேரியன் சர்ச்சின்’கண் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த பெரும்புகழ் வாய்ந்த இந்து துறவியாரான சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருக்கும்போது, நேற்று மாலை கூடியிருந்த ஒரு பேரவை அவரைச் கண்ணுறவும், அவர் வழங்கும் பேச்சைச் செவிமடுக்கவும் ஓர் உரிமையைப் பெற்றது. அவர் தம் நாட்டு உடையில் விளங்கினார். வனப்பு வாய்ந்த தமது முகத்தாலும், ஆற்றல் மிக்க உடல் அமைப்பாலும், அவர் நிமிர்ந்த கம்பீரமான காட்சி அளித்தார். அவருடைய சொல்லின் செல்வம் அவையோர்களை மெய்ம்மறந்து நின்று கேட்கும் நிலையில் ஆழ்த்திவிட்டதோடு நில்லாமல், பெரு மகிழ்ச்சியால், கைதட்டி அடிக்கடி ஆரவாரம் செய்யவுந் தூண்டிற்று. இந்திய நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றி அவர் பேசினார்: தாம் வகுத்துக் கொண்ட பொருளைப் பழுதிலாப் பழுத்த ஆங்கில மொழியாட்சி கொண்டு விரித்துரைத்

தார். தமது நாட்டை இந்தியா என்றும், தங்களை இந்துக்களென்றும் அவர்கள் வழங்கவில்லை; 'இந்துஸ்தான்' என்பதே நாட்டின் பெயராகும்; அவர்கள் அந்தணர்களே. பண்டைக் காலங்களில் வடமொழியிலேதான் அவர்கள் உரையாடினார்கள். சொல் பிறந்த காரணத்தையும் அதன் பொருளையும் வடமொழி கொண்டேதான் விளக்கி மிகவுந் தெளிவுபடுத்தினார்கள்; இப்பொழுது எல்லாம் மறைந்து போய்விட்டன. 'ஜுப்பிட்டர்' என்ற சொல்லிற்கு வடமொழியில் 'விண்ணுறை தந்தையார்' என்பதுதான் பொருளாகும். வடநாட்டு மொழிகளனைத்தும் செயல் முறையில் பெரிதும் ஒன்றாய் இலங்குகின்றன; ஆனால், அந்நாட்டின் தென்னாட்டுப் பகுதிக்கு ஒருவன் செல்வானாகில், அப்பகுதி மக்களோடு அவனால் உரையாட இயலாது. தந்தை, அன்னை, உடன் பிறந்தவள், உடன் பிறந்தவன் என்னும் இத்தகைய பொருள் கொண்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய வட மொழிப் பதங்கள் முறையே அவற்றின் உச்சரிப்பையே ஒத்திருக்கின்றன. இதுவும் இது போன்ற உரைகளும் நாம் அனைவரும் ஆரிய இனத்தினின்றே தோன்றினோம் என்று தம்மைக் கருதும்படி செய்கின்றன என்று இயம்பினார். கிட்டதட்ட இந்த இனத்தைச் சார்ந்த எல்லாக் கிளைகளும் தங்கட்கு அறிகுறியான சிறப்பியல்பை இழந்து விட்டன.

அந்தணர், அரசர், வணிகர், தொழிலாளர் என்ற நான்கு வருணத்தினர் உண்டு. முதல் மூன்று வருணத்தார்களைச் சார்ந்த பத்து, பன்னிரண்டு, பதின்மூன்று பிராயங்கொண்ட சிறுவர்கள் ஆச்சிரமங்களில் (பல்கலைக் கழகங்களில்) திகழ்கின்ற பேராசிரியர்களிடம் (அறிவு மிக்க முனிவர்கள்) ஒப்படைக்கப் படுவார்கள். அவர்கள் முறையே, முப்பது, இருபத்தைந்து, இருபது வயது எய்துகிறவரையில் அவர்களோடேயே உறைவார்கள்.....பண்டைக் காலங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் கல்வி பயின்றார்கள்; இப்பொழுது அத்தகைய சலுகை சிறுவர்களுக்கே காண்பிக்கப்படுகின்றது. எனினும் நீண்ட காலமாய் இருந்து வந்த பிழையை அகற்றுவதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. நாகரிகமற்றவர்கள் நாட்டை ஆள்வதற்குமுன், பெரும்பாலான தத்துவ சாத்திரமும், நாட்டுக்குரிய சட்ட திட்டங்களைப்பற்றிய நூல்களும் பண்டைக்காலத்து மங்கையர்களின் படைப்புகளாகவே இருந்தன. ஒவ்வொரு மங்கைக்கும் உரிமைகளுண்டு என்று ஓர் இந்து நோக்குகின்றான். அவளும் தன்

உரிமைகளை நிலை நாட்டி நிற்கின்றாள். சட்டமும் அவளுக்கு துணை புரிகின்றது.

மாணவன் படிப்பு முடிந்து, கல்வி சாலையிலிருந்து வீடு திரும்பியதும் மணம் புரிய அனுமதி பெற்று இல்லறம் நடத்தலாம். இல்லறப் பொறையைக் கணவனும் மனைவியும் சேர்ந்தே தாங்கவேண்டும் ; இவ்விருவர்க்கும் உரிமைகளுண்டு. வேந்தர் மரபில் பெரும்பாலும் மங்கையரே தம் கணவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதைத் தவிர, மற்றைய இடங்களில் எல்லாவகையான ஏற்பாடுகளையும் பெற்றோர்களே புரிகின்றார்கள். குழந்தைகள் மணத்தைத் தடுக்க இடையறாத முயற்சியும் செய்யப்பட்டு வருகின்றது. திருமணச் சடங்கு வனப்புமிக்க சடங்காகும் ; ஒருவர் மற்றொருவர் இதயத்தைத் தொட்டுக் கொண்டே ஆண்டவர் முன்னிலையிலும், கூடியிருக்கும் அவையோர்கள் முன்னிலையிலும், 'ஒருவர்க்கொருவர் கற்பு நிலை பிறழாது நிற்கப் போகின்றோம்,' என்று வாக்குறுதி செய்வார்கள்.

மணம் புரியாதவன் புரோகிதனாய் இருக்க இயலாது. பலர் அறியச் செய்யும் இறை வழிபாட்டில் கணவனைத் தொடர்ந்தே மனைவியும் இலங்குகின்றாள். தன் வழிபாட்டில் ஓர் ஐந்து வகையான வேள்விகளைச் செய்கின்றான். இறை வழிபாடு, தென் புலத்தார்களுக்கு ஆற்றும் கடமை, ஏழை மக்கட்குச் செய்ய வேண்டிய உதவி, உயிரோம்புதல், கற்றறிந்த முனிவர் களுக்குப் புரிதற்குரிய வணக்கம்—இவை யாவும் அவனுக்குற்ற செயல்களாகும்.

ஓர் இந்துவின் இல்லத்தில் யாதேனும் ஒன்று இருக்கும் வரையில் விருந்தினருக்கு யாதொரு குறையுமிருப்பதில்லை. வந்த விருந்தினர் திருப்தியடைந்த பின்னரே, இல்லத்திலுள்ள சிறுவர்களும், தந்தையும் தாயும் உணவு அருந்துவார்கள். எல்லா நாடுகளைக் காட்டிலும் அது மிகவும் வறுமையுற்ற நாடாயிருந்த போதிலும் அங்குப் பசிப்பிணியால் மாண்டவர் எவரும் இல்லை. நாகரிகமென்பது மிகப்பெரிய ஓர் அருஞ் செயலாகும். ஆங்கில நாட்டையும் இந்திய நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் முறையில், ஆங்கில நாட்டில் நானூறு பெயர்களுள் ஒருவன் கட்குடியனாய்க் காட்சி அளிக்கின்றான். இந்தியாவிலோ, பத்து லட்சத்தில் ஒருவனே தோன்றுகின்றான் என்ற கூற்றை நாம் கூற வேண்டியிருக்கிறது. இறந்தோருக்குத் தீமூட்டுதலான சடங்கைப் பற்றிய ஒரு சொல்லோவியம் அளிக்கப்பட்டிருக்கிறது. யாராவது

சிறந்த பிரபுவுக்குத் தவிர மாண்ட பிறர் எவருக்கும் யாதொரு விளம்பரமும் செய்யப்படுகிறதில்லை. பதினைந்து நாள் உண்ணு நோன்பிற்குப் பிறகு ஏழை மக்களுக்கோ, அல்லது ஏதாவது அறச்சாலை நிறுவுவதற்கோ மாண்டோர்களுக்காக அவர்கள் உறவினர்களால் தானங்கள் வழங்கப்படும். ஒழுக்க நெறியில் அந்நாட்டவர்கள் மற்றைய நாட்டினர்களைக் காட்டிலும் மிகமிக உயர்ந்து நிற்கின்றார்கள்.

இந்து மெய்ஞ்ஞான சாத்திரம்

[டெட்ராயிட்டு, ''பிரீபிரஸ்'' 1894-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 16ஆம் நாள்.]

யூனிட்டேரியன் சர்ச்சில், அவையினருக்கு நேற்று மாலை, இந்து துறவியாரான சுவாமி விவேகானந்தரால் நன்கு மிக விரிந்ததாயும் சுவைக்கக் கூடியதாயுமுள்ள இரண்டாம் சொற்பொழிவு வழங்கப்பட்டது. சொற்பொழிவின் பொருள் 'இந்து மெய்ஞ்ஞான சாத்திரம்' என்று குறிப்பிடப்பட்டிருந்தபடியால், சொற்பொழிவாளர் அப்பொருளைப்பற்றி நல்லறிவுச் சுடர் கொளுத்துவர் என்று மிகவும் எதிர்பார்த்த அவையினருக்கு ஓரளவுதான் திருப்தி ஏற்பட்டது. அவர் ஆங்காங்குப் புத்த மெய்யுணர்வைப்பற்றிச் சுட்டிக் காட்டி, உலகத்தில் முதன்முதலாக ஞானப் பணியாற்றின சமயம் புத்தனுர் சமயமென்றும், சிறிதும் குருதியைச் சிந்தாவண்ணம் அந்தச் சமயத்தைத் தழுவிய மக்கள் தொகுதியோ, மிகமிக விரிந்ததென்றும் சுவாமிகள் சாற்றும்பொழுதெல்லாம் மகிழ்ச்சி மீதூரக் கைகொட்டி அவையோர் ஆரவாரம் செய்தனர். ஆனுல், புத்தபிரானின் சமயத்தைப்பற்றியோ, அவர் கண்ட மெய்ஞ்ஞான சாத்திரத்தைப் பற்றியோ அவையோர்க்கு அவர் எடுத்து ஓதினுரில்லை; கிறித்தவ சமயத்தைக் கூர்மையாகப் பல தடவை தாக்கியே பேசினுர். கிறித்தவ சமயம் நடமாடாத நாடுகளில் அதைப் புகுத்துவதால் ஏற்பட்ட இன்னலைப்பற்றியும் துயரைப்பற்றியும் குறிப்பிட்டார். தாம் பார்த்துப் பேசுகின்ற மக்களின் சமுதாய நிலையையும் தம் நாட்டின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் முறையை மிக்க அறிவுத் திறன் கொண்டு விளக்கியே பேசினுர். பொதுவாகவே இந்து தத்துவ ஆராய்ச்சியாளர்கள் தாழ்ந்த உண்மைப் படியிலிருந்து உயர்ந்த படிக்குப் போகும் நெறியைக் கற்பித்தார்கள். ஆனுல், கிறித்தவ சமயத்தைப் புதிதாகத் தழுவுகின்றவன், தான் முன்பு கொண்ட அத்தனை கொள்கைகளையும் எறிந்துவிட்டுப் புதியதை முழுதும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படித்தான் அந்தச் சமயம் வற்புறுத்துகின்றது; அதைத்தான் அது அவனிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

"எல்லோரும் ஒரே வண்ணமான சமயக் கொள்கைகளைப் பெறுவது என்பது வீணான ஒரு பகற்கனவேயாகும்," என்றார். "மனக் கரைமீது மோதிப் போராடுகின்ற அமிசங்கள் இல்லாமற் போகுமாயின், ஒருவித உணர்ச்சியும் பிறவாது. மாற்றத்தால் எழும் அருவருப்பு, புதிய அறிவொளி, புதியதைப் பண்டையதன் முன் வைத்து நோக்கல்—இவைதாம் புதிய உணர்வை எழுப்புகின்றன," என்று இயம்பினர்.

[முதற் சொற்பொழிவு சிலரைப் பகைக்கும்படி செய்துவிட்டபடியால், "பிரீபிரஸ்" நிருபர் மிகவும் நிதானமாகவும் விழிப்பாகவும் நடந்துகொண்டார். ஆனால், நற்பேராக டெட்ராயிட்டு "டிரிப்யூன்" சுவாமியை ஒருமுகமாக ஆதரித்தே பேசி வந்தது; பிப்ரவரித் திங்கள் 16-ஆம் நாள் வெளிவந்த அறிக்கை வாயிலாகச் சுவாமிகள் பேசிய இந்து மெய்ஞ்ஞான சாத்திரத்தைப்பற்றி ஓரளவு கருத்து எங்கட்கு ஏற்பட்டது. "டிரிப்யூன்" என்னும் பத்திரிகை நிருபர் தந்த குறிப்புகள் சற்றுத் தூலமாய் இருந்தன.]

[டெட்ராயிட்டு "டிரிப்யூன்" 1894-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 16 ஆம் நாள்.]

யூனிட்டேரியன் சர்ச்சில் நேற்று மாலை அந்தணத் துறவியான சுவாமி விவேகானந்தர் மீண்டும் சொற்பொழிவு ஆற்றினர். அவர் வகுத்துக்கொண்ட பொருள் 'இந்து மெய்ஞ்ஞான சாத்திரம்' என்பதே. சிறிது நேரம் மெய்யுணர்வு சாத்திரத்தைப் பற்றியும் புலன் கடந்த தத்துவ ஆராய்ச்சியைப்பற்றியும் பேருரை வழங்கினர். பிறகு சமயத்தின்பால் தம் சொற்பொழிவைத் திருப்புவதாகவுங் கூறினர். ஆன்மா உண்டு என்பதில் நம்பிக்கை வைக்கும் சமய இனம் இருக்கிறது; ஆனால் அதைச் சார்ந்தவர் கடவுள் சம்பந்தப்பட்டவரையில், அஞ்ஞேயவாதிகளாய் இருக்கின்றனர். புத்த சமயம் ஒழுக்க நெறியைப் போதிக்கும் சமயமாகும். ஆனால், ஒரு கடவுள்பால் நம்பிக்கை வைக்காமல் அவர்கள் உயிர் வாழ இயலாது. 'ஜெயின்ஸ்' என்ற சொல்லை 'ஜயன்ட்ஸ்' என்று நிருபர் மொழிகின்றார். ஜைனர்கள் ஆன்மா உண்டு என்று நம்புகின்றார்கள். ஆனால், ஒரு நாட்டு அரசியலின் ஒழுக்க இயலில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இந்தியாவில் இந்தச் சமய இனத்தைச் சார்ந்த மக்கள் இலட்சக் கணக்கில் இருந்தார்கள். அவர்களுடைய புரோகிதர்களும் துறவிகளும் தங்கள் முகங்களைக் கைத்துணிகளால் மூடிக்கொள்ளுகின்றார்கள். தங்களின் வெப்ப மூச்சு மனிதர் மீதும் அல்லது

விலங்கினத்தின் மீதும் வீசுமானல் மரணம் நிகழுமோ என்று அவர்கள் அஞ்சுகின்றுர்கள் போலும்!

வைதிகப் பரம்பரையைச் சார்ந்தவர் அனைவரும் அருளொளியை—ஆப்த வாக்கியத்தை—நம்புகிறுர்கள். மறையில் (பைபிளில்) திகழ்கின்ற ஒவ்வொரு வாக்கியமும் ஆண்டவனிடமிருந்து நேர்முகமாக வருகின்றது என்று சிலர் நினைக்கின்றனர். பெரும்பாலான சமயங்களைப் பொறுத்தவரையில் கூறப்பட்ட ஒரு சொல்லின் பொருளை (சந்தர்ப்பத்திற்கேற்றவாறு) பெருக்கிக் கொள்ள இடமுண்டு. இந்துக்கள் வடமொழியை அல்லவோ வழங்குகின்றுர்கள்? அம்மொழியில் ஒவ்வொரு சொல்லும் பூரணமான பொருளையே எஞ்ஞான்றும் உணர்த்துகின்றது; அந்தச் சொல் வந்த காரணத்தையும் அது நல்குகின்றது.

புகழ் வாய்ந்த இந்தக் கீழ்த்திசைச் சான்றேர் நாம் பெற்றிருக்கும் ஐம்புல அறிவைக்காட்டிலும் சிறந்ததான ஓர் ஆறும் அறிவு மக்கட்கு இருக்கிறது என்று கருதுகின்றுர். அதுதான் அருட்பிரகாச உண்மை ஒளி—ஆப்தவாக்கியமாகும். இவ்வையகத்தின்கண் உள்ள சமய நூல்களனைத்தையும் ஒருவன் பயிலலாம். ஆனல், நாட்டில் அவனைவிட இழிவான கயவனைப் பார்க்க இயலாதபடி அவன் நடந்துகொள்ளக்கூடும். ஆப்தவாக்கியங்கள் என்பவை மெய்ஞ்ஞானிகள் நேரில் கண்ட உண்மையைப் பற்றிய அறிக்கைகளேயாகும்.

இரண்டாவதாக, சுவாமிகள் வகுத்துக்கொண்ட பொருள், ‘படைப்பு, தொடக்கமும் முடிவுமற்றது என்று ஏன் சிலர் கருதுகின்றனர்?’ என்பதே. ஏதோ ஒரு காலத்தில் உலகம் இல்லை என்று வைத்துக்கொள்ளுவோம்; அப்பொழுது கடவுள் எச் செயலை ஆற்றிக்கொண்டிருந்தார்? இந்துக்களுக்குப் படைப்பு என்பது உருவமெடுப்பதேயாகும். ஒருவன் உடல் நலம் உள்ளவனுய்ப் பிறக்கிருன், நற்குடி மகனுய்த் தோன்றிக் கடவுட்பக்தியுள்ளவனுய்த் திகழ்கின்ருன்; மற்ருெருவனே, முடவனுய்க் கூனிக் குறுகியவடிவோடு காட்சி அளிக்கின்ருன், பிறகு ஒரு கயவனுய் வளர்ந்தும் விடுகிருன். புரிந்த தீச்செயல்களுக்குற்ற தண்டனையையும் அவன் பெறுகின்ருன்.

அறத்தில் கோடாது ஊன்றி நிற்கின்ற தூய்மைவாய்ந்த ஒரு கடவுள் எல்லா நலன்களையும் ஒருவனுக்கு நல்கி, மற்ருெருவனுக்கு இடையூறுகளையும் அளிப்பானேன்? இந்நிலையில் மனிதன் தானே ஒன்றை வகுத்துக்கொள்ளும் ஆற்றலற்றவனுகின்ருன். தீமை செய்தவன் மனத்தை அவன் தீச்செயலே உறுத்துகின்றது.

அறத்திற்கும் மறத்திற்கும் உள்ள மாறுபாடு எடுத்து விளக்கப்பட்டது. எல்லாவற்றையும் கடவுளே சங்கற்பித்துவிட்டால், எல்லாச் சாத்திரங்களுக்கும் முடிவு வந்துவிடும். எவ்வளவு தூரம் மனிதன் ஓர் இழிவான நிலைக்கு இறங்க முடியும்? விலங்கின் வாழ்விற்கு மீண்டும் அவன் போகக்கூடுமா? தாம் ஓர் இந்துவாய் இருந்ததுபற்றி விவேகானந்தனர் மிகவும் மகிழ்ச்சி உற்றார். ரோமர்களால் செரூசலம் அழிவுற்ற போது, பல்லாயிரக் கணக்கானவர்கள் (யூதர்கள்) இந்தியாவில் வந்து தங்கினார்கள். பாரசீகர்கள், அரேபியர்களால் தம் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டபோது அவ்வண்ணமே அதே நாட்டில் தஞ்சம் புகுந்தார்கள்; அங்கே ஒருவரும் துன்புறுத்தப்படவில்லை. எல்லாச் சமயங்களும் உண்மை வாய்ந்தவை என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள்; ஆனால், தங்களுடைய சமயந்தான் எல்லாவற்றிற்கு முன்பே திகழ்ந்திருந்தது என்பார்கள். ஞானப்பணி ஆற்றும் பாதிரிமார்களை இந்துக்கள் வருத்தவில்லை. முதன்முதலாக விஜயம் செய்த ஆங்கிலேயப் பாதிரிகளை அந்நாட்டில் புகா வண்ணம் ஆங்கிலேயர்களே தடுத்தார்கள்; ஆனால், ஓர் இந்தியரே அவர்களுக்காகப் பரிந்து அவர்களை வரவேற்றனர். எல்லாச் சமயங்களையும் நம்புகின்ற சமயமே சமயமாகும். சமயம், யானையைக் கண்ட குருடர்களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. யானையின் ஒவ்வோர் அங்கத்தையே தொட்டுப் பார்த்து அதுதான் யானை என்னும் முடிவுக்கு ஒவ்வொருவரும் வந்தனர். தம்மளவில் ஒவ்வொருவரும் கண்டது உண்மையே; ஆனால், முழு உண்மை காண்பதற்கு எல்லா அவயவங்களும் அறியப்பட வேண்டுமல்லவா? நாம் கீழ்ப்படி உண்மையிலிருந்து மேற்படி உண்மைக்குப் போகின்றோம் என்று இந்து தத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஒரு காலத்தில் எல்லோரும் ஒரே வண்ணமாய்ச் சிந்திப்பது என்பது மனப்பால் குடிப்பதை ஒக்கும். அந்நிலையில் சமயமே மாண்டுவிடும். ஒவ்வொரு சமயமும் பல சிற்றினங்களாகச் சிதறிப்போய், ஒவ்வொன்றும் தான் கண்டதுதான் உண்மை என்று உரிமை பாராட்டி, மற்றவர்கள் காண்பனவெல்லாம் பிழை மண்டிக் கிடக்கின்றன என்று இயம்புகின்றது. மதத்தின் சார்பாகப் பிறரை வாட்டி வதைப்பது என்பது புத்த சமயத்தில் இல்லை. பௌத்தர்களே முதன் முதலாக ஞானப் பணியாளர்களை அனுப்பினவர்கள்.

‘ஒரு சொட்டுக் குருதியும் சிந்தாது பல்லாயிரக் கணக்கான மக்களை எங்கள் மதத்தைத் தழுவச் செய்தோம்,’ என்று கூறிக்

கொள்ளக் கூடியவர்கள் அவர்களேயாவார்கள். இந்துக்கள் எத்தனையோ பிழைகளும் மூட நம்பிக்கைகளும் மலிந்தவர்களாய் இருந்த போதிலும் சமயக் கொடுமை புரிந்தார்களில்லை. வெளியே மற்றைய கிறித்தவ நாடுகளில் காணக்கூடிய நியாயமற்ற செயல்களை ஏன் கிறித்தவர்கள் அனுமதித்தார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அவாவுடையவராகச் சொற்பொழிவாளர் இருந்தார்.

அற்புதங்கள்

[''ஈவினிங் நியூஸ்'' 1894-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 16 ஆம் நாள்.]

விவேகானந்தர் தமது சமயத்தை மெய்ப்பிப்பதற்கு ஓர் அற்புதம் செய்துகாட்ட வேண்டுமென்று விரும்பிய நியூஸ் பத்திரிகைக்குத் தாம் இணங்கப் போவதில்லை என்று அதன் நிருபருக்கு உரைத்தார். நியூஸின் தலையங்கம் 'அற்புதங்கள்' என்று இருந்தபோதிலும் அதை அவர் ஏற்கவில்லை.

''முதன் முதலாக நான் ஒரு செப்படி வித்தைக்காரனல்லேன்; மேலும், நான் தழுவி நிற்கின்ற உண்மையான இந்து சமயம் அற்புதங்களின்மீது நிறுவப்படவில்லை; அஃது அற்புதம் என்ற ஒன்றை ஒப்புக்கொள்ளுகிறதுமில்லை. ஐம்புலன்களைக் கடந்த அற்புதங்கள் உண்டு; ஆனால், அவைகளும் ஒரு நியதியை ஒட்டி இயங்குகின்றன. அவற்றோடு எங்கள் சமயம் உறவாடுகிறதில்லை. எங்கள் நாட்டில் புரியப்பட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகளில் இடம் பெறுகின்ற அற்புதச் செயல்கள் கைத்திற ஜாலங்கள்; அல்லது மயக்கத்தை உண்டுபண்ணுவதால் எழும் பொய்த் தோற்றங்களேயாகும். அவை ஞானிகள் ஆற்றுகின்ற செயல்களல்ல. ஊர் ஊராய்த் திரிந்து சந்தைகூடுமிடத்தில் காசுக்காக அற்புதங்கள் செய்யும் இனத்தாரை அவர்கள் சார்ந்தவர்களல்லர்; உண்மையை நாடி அதை உணர்ந்துகொள்ள வேண்டுமென்ற அவா உடையவர்களே. அவர்களை கண்டறிந்துகொள்ளக் கூடும்; அவர்களை உந்துவது புதுமை காண அவாவும் குழந்தையின் உணர்ச்சியன்று.

மனிதனது தெய்வ இயல்பு

[டெட்ராயிட்டு, 'பிரீபிரஸ்', 1894ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள், 18 ஆம் நாள்]

இந்து தத்துவ ஆசிரியரும் ஞானப்பணி ஆற்றுகிறவருமான சுவாமி விவேகானந்தர் நேற்று மாலை 'யூனிட்டேரியன் சர்ச்சில்' தொடர்ந்து நிகழ்த்தி வந்த சொற்பொழிவுகளை—அறிவுரைகளை—முடித்தார்; இறுதியாக இறைவனது இயல்பை*ப் பற்றிப் பேசினார்.

மிகவும் மப்பும் மழையுமாயிருந்தபோதிலும், கீழை நாட்டுச் சோதரர் (தம்மைச் சுவாமிகள் இப்படி வழங்கிக்கொள்வது வழக்கம்) வந்து சேர்வதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பே, 'சர்ச்சின்' வாயில் வரையில் கூட்டம் நிரம்பிவிட்டது. சொற்பொழிவைச் செவிமடுக்கும் அவையில் பல்வேறு தொழில்களையும் வாணிபங்களையும் சுட்டும் அங்கத்தினர்கள் இலங்கினார்கள். வழக்கறிஞர்கள், நீதிமன்றத் தலைவர்கள், கிறித்தவ சமய ஞானப் பணி ஆற்றுபவர்கள், வாணிபம் செய்பவர்கள், ஒரு யூத சமய குரு ஆகிய அனைவரும் அங்குக் குழுமியிருந்தனர். அந்தக் கூட்டத்தில் திகழ்ந்த பல மங்கையர்களைப்பற்றி கூற வேண்டுவதில்லை. அவர்கள் அடிக்கடி வந்து மீண்டும் மீண்டும் சொற்பொழிவுகளை ஆழ்ந்து செவிமடுப்பது, கரிய செம்மலான விருந்தினர் மீது - விவேகானந்தர் மீது - அவர்கள் புகழ் மலர் மாரி பொழிவதற்குரிய தீவிரமான ஊக்கம் கொண்டதை நன்கு புலப்படுத்திற்று. அவர் தனித்த சிற்றறையில் எப்படி மிகுதியான கவனத்தைக் கொள்ளும் ஆற்றல் பெற்றாரோ அப்படியே சொற்பொழிவு மேடை மீதும் பெருந்திறன் படைத்திருந்தார்.

முன்பு நிகழ்த்திய சொற்பொழிவைக்காட்டிலும் நேற்றிரவு நடத்திய இச்சொற்பொழிவு சொல்லோவிய இயல்பில் சற்றுக் குறைவாகத்தான் இருந்தது; ஆனால், கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் மனித - தெய்வம் என்னும் பொருளைப்பற்றிப் புலன் கடந்த ஆராய்ச்சிச் சாத்திரமாம் தம் தறியில் ஓர் அழகான நுண் துகிலை நெய்துவிட்டார்.

---

*உண்மையை உரைக்குமிடத்து, சுவாமிகள் எடுத்துக்கொண்ட பொருள் 'மனிதனது தெய்வ இயல்பு' என்பதே.

அவர் அருளிய பேச்சோ, தருக்க நெறியினை மிகவும் தழுவியிருந்தபடியால், நுண்ணிய தத்துவ சாத்திரமும் பொது அறிவினைப்போல மிளிர்ந்தது. அந்தப் பேச்சாகிய துகில் ஒழுங்கான தருக்க முறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஒளி மிகுந்த பல வண்ணங்கள் அதில் திகழ்ந்தன. அது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது; இன்பத்தைத் தந்தது. அதைச் சிந்திக்குங்கால், அது பல வண்ணங்கள் கொண்டதும் மனத்தை ஈர்க்கும் கீழைநாட்டு மணம் ஊட்டப்பட்டதுமான ஒரு துகிலைப் போலவே, கண் முன் விரியும் ஓவியப் புலவன் வண்ணங்கள் குழைப்பது போல, அந்தக்கரிய செம்மல் கவிதை மணம் கமழும் உருவங்களில் திளைத்தார். எந்த எந்த இடங்களில் வண்ணங்கள் தீட்டப்பட வேண்டுமோ, அந்த இடங்களில் அவை சுடர்விட்டன. பல வண்ணக் கலவை போலப் பேச்சு நடை இருந்தாலும், அதில் ஒரு தனிப்பட்ட கவர்ச்சி விளங்கிற்று. பல வண்ணங்களையும் உருவங்களையும் விரைவில் காட்டும் கண்ணாடி போல அவருடைய தருக்க முடிபுகள் திகழ்ந்தன. திறமையுடன் சித்தரித்துக் காட்டும் அவருடைய முயற்சிகளுக்குப் பரிசாக ஆர்வமிக்க கைதட்டு முழக்கங்கள் எழுந்தன.

அவர் இவ்விரிவுரை நிகழ்த்து முன் முன்னுரையாகத் தம்மை அன்பர் பலர் பல கேள்விகள் கேட்டுள்ளரெனக் கூறிக்கொண்டார். அவற்றில் பலவற்றையும் தனித்த முறையில் தெளிவுபடுத்துவதாக இசைத்துவிட்டு, மூன்று வினாக்களை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அவற்றிற்கு மட்டும் தக்க காரணம் இருப்பதால் மேடை மீதிருந்தே விடை கூறுவதாகத் தெரிவித்தார். அவை யாவன :

(1) "இந்திய மக்கள் முதலைகளின் வாய்க்குத் தங்கள் குழந்தைகளை இரையாக்குவதுண்டா?"

(2) "ஜகந்நாதத்தில் பலர் தேர்க்காலின் கீழே வீழ்ந்து தம் உயிர்களை மாய்த்துக்கொள்வதுண்டா?"

(3) "இறந்துபட்ட கணவர்களுடன் அவர்களுடைய மனைவியரையும் தீயிலிட்டுப் பொசுக்குவதுண்டா?"

நியூயார்க்கு மாநகரிலுள்ள தெருக்களில் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் செவ்விந்தியர்களைப் பற்றிய வினாக்களுக்கு வெளியூரில் சென்றுகொண்டிருக்கும் ஓர் அமெரிக்கர் என்ன விடை அளிப்பாரோ, அந்த முறையிலேயே அவர் பேசி முடித்தார். இத்தகைய கட்டுக்கதைகள் பலவும் ஐரோப்பாக் கண்டத்தில் பரவி வருகின்றன அல்லவா? இன்னும் இவை நம்பவும்படுகின்றன. இத்

தகைய வினுக்கள் நகைப்பிற்கு இடமாயிருப்பனவேயன்றி, விடை பெறத் தக்கனவல்ல. அறியாமையால் அல்லது நல்ல எண்ணத்தால் கேட்ட கேள்விகளுக்கு வஞ்சப் புகழ்ச்சி முறையிலேதான் விடை கூற வேண்டுவதாயிற்று. கேள்வி யாதெனில், 'பெண் குழந்தைகளை மட்டும் அவ்வாறு ஏன் இரையாக்குகிருர்கள் ?' என்பது. அவர் மொழிந்த வேடிக்கையான விடையைப் பாருங்கள் ! ஒருகால் பெண் இனத்தின் தசை மென்மையுடைய தாகையாலும், இளமையோடிருப்பதாலும், அது நீர் வாழ் உயிர்களுக்கு மிகவும் எளிதில் மென்று சீரணிக்க இயலுமன்ருே ? அந்நாடு இருளடைந்த நாடன்ருே? ஜகந்நாதத்தைச் சுற்றிப் புனையப்பட்டிருக்கும் கதையைப்பற்றிக் கழறுங்கால் அந்நகரிலுள்ள பழைமை மிக்க பழக்கத்தைக் குறிப்பிட்டுவிட்டு, யாத்திரிகர் சிலர் தேர் வடத்தைப் பிடித்திழுத்துப் புண்ணியம் தேடிக்கொள்ளும் முயற்சியில் தவறித் தேரடியில் விழுந்து மாண்டிருக்க வேண்டுமென்று மொழிந்தார். மிகைப்படுத்திக் கூறும் இத்தகைய செய்திகளைப் பிற நாட்டின் நன்மக்கள் நம்பிக் கலங்கிப் பேரதிர்ச்சி அடைந்துவிட்டார்கள் போலும்! கைம்பெண்களைத் தீயிலிடுவதில்லை என்று மறுத்துக் கூறினர். ஆனல், கைம்பெண்டிர் சிலர் கொழுந்தீயில் தாமே விழுந்து தம்மை எரித்துக் கொண்டது உண்மைதான் என உரைத்தார். இப்படி நடந்துள்ள சிற்சில நிகழ்ச்சிகள் புண்ணியரான சான்ருேர் சிலரால் தடுக்கப்பட்டும் வந்தன. இத்தகைய தற்கொலையாம் கொடுமைக்கு எதிர்ப்பிரசாரம் செய்யப்பட்டும் வந்தது என்பதும் திண்ணம்.

எனினும் பெண்டிர் தம் கணவரைப் பின்பற்ற வேண்டுமென்று தம் கருத்தை வெளிப்படுத்தி அந்தக் கொடுமையான சோதனைக்குத் தாமே தம்மை உட்படுத்திக்கொள்ளும் விருப்பம் கொண்டதாகக் கூறும் போது எவராலேதான் அவர்களைத் தடுக்க இயலும் ? அதிலும் அவர்கள் தங்கள் கைகளை முதலில் தீயிலிட்டு அவை எரிந்துபோம் வரை பொறுமை காட்டினலன்றி, உடன்கட்டையேற அனுமதிக்கப்படவில்லை; அவர்களுக்கு விருப்பமின்றி வற்புறுத்தப்படவில்லை. மேலும் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது இந்தியாவில் மட்டுமன்று. அன்புள்ள மகளிர் தம் நாயகர்களின் பிரிவுக்கு ஆற்ருது உடனே அவர்கள் சென்றுள்ள அமரநாட்டுக்குத் தாமும் விரைந்தேக வேண்டுமென்ற அவாவினைத் தீர்த்துக்கொள்ள முன் வந்துள்ளார்கள். இம்முறையான தற்கொலைகள் ஒவ்வொரு நாட்டிலும் நடந்திருக்கின்றன.

இது எந்நாட்டிலும் காணக்கூடிய தனிப்பட்ட வெறியே. ஆனால், இந்நாடுகளிற்போலவே இந்தியாவிலும் இவ்வெறி இயல்பான தன்று. மக்கள் இந்தியாவில் பெண்களை எரிக்கிறதில்லை. மற்றும் அவர்கள் என்றும் சூனியக்காரிகளை—மாயம் வல்லவரெனக் கருதப்பட்டவரை—எரித்ததே இல்லை, இல்லை, இல்லை!*

தனித் தொகுதி என்று தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்குத் தம் கவனத்தைச் செலுத்துகிற போது, அவர் உடல், மனம் ஆன்மா - இவற்றைத் தொடர்பாகக் கொண்ட வாழ்வின் இயல்பு களைத் துருவி ஆராயத் தொடங்கினர். உடல் என்பது ஒரு வெற்றேடே. கண நேரம் விசித்திரமாக இயங்கியாடுவதுதான் மனமாகும்; ஆன்மாவோ, தான் தனிப்பட்ட வடிவைப்பெற்றுத் திகழ்கின்றது. ஆன்மாவின் அகண்டாகாரத்தை உணர்வது தான் விடுதலையாகும். இந்த விடுதலையைத்தான் இந்துக்கள் 'முக்தி!' என்று இயம்புகின்றனர்கள். நன்றாக உணர்த்துகிற முறையில் தருக்கித்து ஒவ்வோர் ஆன்மாவும் எதையும் சாராத தனிப்பட்ட ஒன்று என்பதை விளக்கிவிட்டார்; அது ஒன்றைச் சார்ந்து நிற்குமாயின், அது அழியாமையை எய்துதல் இயலாத தாகும். தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த ஆன்ம மெய்யுணர்வு எப்படி வருகிறதென்பதைத் தம் நாட்டுப் புராணங் களில் அமைந்திருக்கும் ஒரு கதையைக் கொண்டு அறிவுறுத்தி னர். சூல்கொண்ட ஒரு சிங்கம் ஓர் ஆட்டின்மீது பாய்கின்ற போது ஒரு குட்டியை ஈன்றது. ஆனால், அக்கணமே சிங்கம் மாண்டது. அங்குள்ள ஆடுகள் அந்தச் சிங்கக் குட்டிக்குப் பால் கொடுத்து வளர்த்து வந்தன. பல ஆண்டுகளாக அச் சிங்கம் தன்னை ஓர் ஆடாகவே நினைத்து, அதைப்போலவே நடந்தும் வந்தது. ஆனால், ஒருநாள் ஒரு சிங்கம் அங்குத் தோன்றி, அந்தச் சிங்கத்தை ஓர் ஏரிக்கு அழைத்துச் சென்றது. அது அந்த ஏரியில் தனது வடிவமும் அந்தச் சிங்கத்தின் வடிவ மும் ஒத்திருப்பதைக் கண்டுகொண்டது. அப்படி உணர்ந்த அப்பொழுதே அது பெருமுழக்கஞ்செய்து தனது முழு மாட்சி மையைத் தெரிந்துகொண்டது. ஆட்டியல்பு கொண்டு ஒரு மூலையில் பதுங்கிக் கிடக்கும் சிங்கம்போன்ற மனிதர் பலர் இருக் கின்றனர். அவர்கள் தங்களைப் பாவிகளென்று கருதி எந்த எந்த விதமாகக் கற்பனை செய்து நடந்துகொள்ள முடியுமோ

* இதுவும் அடுத்து நான்கு பத்திகளும் 'இந்தியா இருளடைந்த நாடா ?' என்ற கட்டுரையில் வருகின்றன.

அப்படியெல்லாம் நடந்துகொள்கின்றார்கள். அவர்கள் தங்களிடத்தில் மறைந்துள்ள பூரணத்தையும் தெய்வத் தன்மையையும் அறியவில்லை. ஒவ்வொரு மனிதனுடைய அகமும், ஒவ்வொரு மங்கையின் அகமும் முறையே அவனது அல்லது அவளது ஆன்மாவாகும். ஆன்மா தனிப்பட்ட ஒரு பொருள். ஆகவே, அகண்ட பூரணத்திலிருந்து எப்படி அது தனித்து நிற்க இயலும்? ஓர் ஏரியின்மீது விரிகதிர் பரப்பும் மாபெருவெய்யோன் ஒளி படரும்போது, அதன் விளைவாகப் பல நிழல்கள்—பிரதிபிம்பங்கள்—எழுகின்றன. அந்தப் பிரதிபிம்பம் போல ஆன்மா தனித்து நிற்கின்றது. அதன் மூலத்தைக் கண்டு நாம் நன்கு உணர்கின்றோம். ஆன்மா பால் வேறுபாடற்றது. அது தன்னுடைய கலப்பற்ற விடுதலையை உணர்ந்த பின் உடல் சம்பந்தமான பால் வேறுபாட்டுக்கும் அதற்கும் என்ன தொடர்பு இருத்தல் கூடும்?

இந்தச் சந்தர்ப்பத்தில் சொற்பொழிவாளர் ஸ்வீடன்பர்கு என்பாரின் தத்துவ ஆராய்ச்சிக் கடலிலும் சமயத்திலும் ஆழ்ந்து குடைந்து திளைத்தார். இந்துக்கள் கொண்ட சமயக் கொள்கைகளுக்கும், நவீனகாலத்துத் தூய சான்றோன் கண்கூடாகக் கண்ட ஆன்ம தரிசனத்திற்கும் உள்ள தொடர்பு நன்கு புலனாயிற்று. பண்டைய இந்து மரபில் வந்த ஐரோப்பாக் கண்டத்து ஞானியார் போன்று ஸ்வீடன்பர்கு விளங்கினார். பழைய கொள்கை நவீன மொழியாகிய ஆடைபோர்த்து விளங்கியது போலும்! பிரான்ஸ் நாட்டு மிகச் சிறந்த ஞானிகளுள் ஒருவரும் நாவலாசிரியருமான பால்சாக்கு என்பார் பூரண ஆன்மா என்னும் மனப்பண்பினை உயர்த்தும் ஒரு சிறந்த கதையில் இதே கருத்து உருக் கொள்ளுதற்குரியது என்பதை உணர்ந்தார். ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனிடமும் இந்தப் பூரணத்துவம் சுடர்விடுகின்றது. இருளடைந்த உடலாகிய ஆழ்ந்த குகைக்குள் இது இலங்குகின்றது. தம் பூரணத்தின் ஒரு பாகத்தை ஆண்டவர் மனிதனுக்கு அளித்ததனாலேதான் மனிதன் நல்லவனாய்த் திகழ்கின்றான் என்று இயம்புவோமாயின், தெய்வ வடிவாயுள்ள கடவுளை, உலகத்தில் அவர் அளித்த பூரணம் நீங்கலாக ஒன்று என்று கருத இடம் ஏற்பட்டுவிடும். தவிர்க்க முடியாத பௌதிக விஞ்ஞான நியதி, ஆன்மாவானது தனிப்பட்ட ஒன்று என்றும், அதனிடத்தில் பூரணம் ஒளி விட்டே தீரவேண்டுமென்றும் மெய்ப்பிக்கின்றது; அதை அடைவதுதான் விடுதலை என்கிறது. அது முக்தி அன்று; தனித்த மனிதனின் அகண்டாகார நிலையை

எய்துவதேயாகும். இயற்கை, கடவுள், சமயம் என்னும் இவை யாவும் ஒன்றே.

எல்லாச் சமயங்களும் நல்லனவே. நீர் நிறைந்த ஒரு கண்ணாடிக் குழாயில் குமிழ் விடும் காற்று வெளியிலுள்ள காற்றின் தொகுதியோடு கலக்க முயல்கின்றது. எண்ணெயும் காடியும் போன்ற பலவகையான அழுத்தங்கொண்ட பொருள்களுக்கேற்றவாறு காற்றின் ஓட்டம் தடையுறும்! இதைப்போல ஆன்மாவும் பல வண்ணமான வாய்க்கால்கள் வழியாகத் தன்னுடைய தனித்த அகண்டாகார நிலையை அடைய முயல்கின்றது. வாழ்க்கையின் பழக்க வழக்கங்களாலும் சேர்க்கைத் தொடர்பாலும், பரம்பரையாய் வருகின்ற இயல்புகளாலும் தட்பவெப்பச் சூழ்நிலையின் ஆதிக்கத்தாலும் ஒரு விதமான சமயம் ஒருதரப்பட்ட மக்களுக்கு மிகவும் உவந்ததாயிருக்கும். இக்காரணங்களைக் கொண்டே மற்றோர் இன மக்களுக்கு இன்னொரு சமயம் தக்கதாய்த் திகழலாம். எது எது சிறந்ததாக விளங்குகின்றதோ, அது அதுவே சிறந்ததாய்க் காட்சி அளிக்கின்றது என்று கூறுகின்ற உண்மைதான் சொற்பொழிவாளரின் முடிவான கருத்தாகும். ஒரு நாட்டின் சமயத்தைத் திடீரென மாற்றுவது ஆல்ப்ஸ் மலையிலிருந்து ஓர் ஆறு பெருகி ஓடுவதை ஒரு மனிதன் காண்பதை ஒக்கும். இப்படிப் பெருகி ஓடும் சமயத்தைக் குறை கூறுகின்றான் ஒருவன். இமயமலையிலிருந்து இழிந்து வருகின்ற மாபேராறு—பல தலைமுறைகளாக, பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெருகி வருகின்ற ஆறு—ஏன் நீளக் குறைவானதும் மிகவும் தக்கதுமான பாதை வழியாக வரக்கூடாது என்று வினவுகின்றான். விண்ணில் எங்கேயோ நம்மைப்போல் ஒருவன் வீற்றிருந்து நம்மை ஆள்கின்றான் என்றுதான் கடவுளைச் சித்திரிக்கிறார்கள் கிறித்தவர்கள். பொன் மயமான வீதிகளின் ஓரங்களிலிருந்து மற்ற இடங்களை அடிக்கடி நோக்கி இவற்றிற்குள்ள மாறுபாடுகளை அறியாமற் போனால், கிறித்தவர்கள் சுவர்க்கத்தில் இன்பம் அடைய முடியாதென்று நினைக்கிறார்கள். இந்தப் பொன் மய நியதியை ஏற்காமல், 'அகந்தையற்ற எதுவும் நல்லதே; அகந்தை தீயதே,' என்ற கொள்கையில் வேரூன்றியவன் ஓர் இந்து என்றும், இந்த நம்பிக்கை வாயிலாக ஆன்மா அகண்டாகார நிலையை அடையக் கூடும் என்றும், ஆன்மாவின் விடுதலை உரிய காலத்தில் நிறைவேறும் என்றும் அவர் மொழிந்தார். இந்தப் 'பொன் மயக் கொள்கை' எவ்வளவு அநாகரிகமானது என்பதை உணர்வீர்கள். 'அகம், அகம், 'அகம்,' என்பதே கிறித்தவக் கொள்கை

யாகும். 'உன்னிடம் பிறர் எப்படி நடந்துகொள்ளவேண்டு மென்று நீ விரும்புகிருயோ, அவ்வண்ணமே பிறரிடம் நீ நடந்து கொள்வாயாக.' அது பயங்கரமான, நாகரிகமற்ற காட்டில் வாழ் கின்றவருடைய கொள்கைதான்; ஆனுல், அக்கிறித்தவ சமயக் கொள்கையைக் குறைகூற அவர் விரும்பவில்லே. யார் அதைக் கொண்டு திருப்தியுறுகின்ருர்களோ, அவர்களுக்கே அது தக்க தாகும். அந்தப் பேராறு இடையருது பெருகி ஓடிக்கொண்டிருக் கட்டும். அதன் ஓட்டத்தைத் தடை செய்கின்றவன் ஓர் அறிவிலி தான். இயற்கையே விடுதலேயைக் கொணர்ந்துவிடும். விதியின் நியதியை நம்புகிறவரும், ஆன்மவாதியருமான விவேகானந்தர் (ஆவியில் நம்புகிறவர் என்ற சொல்லே நல்ல பொருளில் ஏற்றுக் கொள்ள வேண்டும்) எல்லாம் ஒழுங்காய்த்தான் இயங்கி வருகின் றன என்றும், கிறித்தவர்கள் தம் சமயத்தைத் தழுவும்படி விரும்பவில்லே என்றும் கூறினுர். அவர்கள் கிறித்தவர்கள்; அது நன்றே. அவர் ஓர் இந்து; அதுவும் தக்கதே. படிப்படி யான அறிவுடைய மக்களின் தேவைகளுக் கேற்றவாறு பல வகையான கொள்கைகள் தம் நாட்டில் வகுக்கப்பட்டுள்ளன என்று அவர் மொழிந்தார். ஆன்ம விரிவுப்பாதையின் முன்னேற் றத்திற்கு இவையாவும் துணே புரிகின்றன. இந்து சமயம் அகந் தையைப் பற்றியதன்று; எந்நாளும் அகந்தையை வளர்க்கும் பேராவல்கள் கொண்டதன்று. பெரும்பரிசு காத்துக்கொண் டிருக்கிறது, என்னும் ஆசை மொழிகளே இது கூறுது; பெருந் தண்டனே உண்டு என்று அச்சுறுத்தவும் செய்யாது; அகந் தையை அழிப்பதால் ஒருவன் அகண்டாகாரத்தை அடைய இய லும் என்பதைச் சுட்டுகின்றது. சிலருக்கே கடவுள் தம்மை வெளிப்படுத்திக்கொண்டாரென்றும்; கிறித்தவ சமயம் கடவுளிட மிருந்தே பிறந்ததென்றும் கூறி இலஞ்சம் கொடுத்து வஞ்சிப்பது போல அமைக்கப்படும் ஒரு திட்டம் மிகவுந் தீயதே. அது அச்சுறுத்தும் எல்லே வரையில் மிகவும் இழிவுற்றுக் கிடக் கின்றது. அந்தச் சமயத்தை மொழிந்தபடியே ஏற்றுக்கொண் டால், அதைத் தழுவிய சமய வெறியர்களின் ஒழுக்க இயல்பினே நாணத்தக்க ஒருவகையில் குலேத்துவிடும். அம்மட்டோ! ஆன்மா அகண்டத்தை அடையக் கூடிய நலத்தையும் அது தாழ்த்திவிடும்.

* * * *

[ஜெயின்ஸ், (Jaini) என்ற சொல்லே 'ஜெயன்ட்ஸ்' (giants) என்று கேட்ட டிரிப்யூன் பத்திரிகை நிருபர் இவ்வமயம் பர்ன் (Burn)

என்று கேட்பதற்கு மாருகப் பரி (Bury) என்று செவி மடுத்தார். இந்தக் குற்றத்தைத் தவிரவும் பொன்மய நியதியைப் பற்றிய உரைகளைத் தவிரவும் சுவாமிகள் பேசியவற்றைப் பொதுவாக வழுவின்றியே தெரிவித்திருக்கிருர்.

[டெட்ராயிட்டு “டிரிப்யூன்” 1894 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 18ஆம் நாள்.]

சமய நெறி வாயிலாகவோ அல்லது சட்ட நெறியைக் கொண்டோ உயிரோடு கைப்பெண்கள் புதைக்கப்படவில்லை (எரிக்கப்படவில்லை) என்று யூனிட்டேரியன் சர்ச்சில் சுவாமி விவேகானந்தர் நேற்றிரவு சாற்றினுர்; இத்தகைய நிகழ்ச்சிகள் கைம்பெண்களால் மனம் உவந்து ஆற்றப்பட்ட நிகழ்ச்சிகளே தவிர வேறல்ல என்றும் மொழிந்தார்.

இந்தப் பழக்கம் மன்னர்க்கு மன்னரான ஒருவரால் தடுக்கப்பட்டது; ஆனுல், இது மீண்டும் வளரத் தொடங்கிற்று. இறுதியில் ஆங்கில அரசாங்கத்தார் இதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். கிறித்து சமயமாயிருக்கட்டும், அல்லது இந்து மதமாயிருக்கட்டும், எல்லாச் சமயங்களிலும்சில கருத்து வெறியர்களை நாம் காண்கிருேம். இந்தியாவில் கருத்து வெறியர்கள் தங்கள் தலைமீது தங்கள் கைகளைக் கூப்பித் தவம் புரிவார்கள். நீண்ட காலம் அவர்கள் அதே நிலையில் நிற்கின்ற காரணத்தால், கை வர வர மரத்து அப்படியே அசைவற்று நின்றுவிடும். ஒரே நிலையில் நிற்பதற்காகச் சிலர் நோன்பு நோற்கின்றனர். இதனுல் அடி அவயவங்களின்மீது அவர்கட்கு இருக்கும் சுவாதீனம் முற்றிலும் போய்விடும். கடைசியாக அவர்களால் நடக்கவும் இயலாது. எல்லாச் சமயங்களும் உண்மையானவைகளே; ஒழுக்க இயலை அவர்கள் பயிலுவது ஒரு தெய்வ ஆணையின் பொருட்டன்று; அதன்கண் ஒரு நலத்தைக் கண்ட காரணத்தாலேதான். இந்துக்கள் பிறர் மதந்தழுவுதலில் நம்பிக்கை அற்றவர்கள். அது தழுவுதல் அன்று; அதன் உண்மையின் இயல்பைத் திரித்ததாகும். சேர்க்கைகள், சூழ்நிலைகள், கல்வி முறைகள் இவைகளே மிகுதியான பற்பல சமயத் தொகுதிக்குக் காரணங்களாய் இருக்கின்றன. தன்னுடைய சமயக் கொள்கையை விரிப்பவன், மற்றவனுடைய கொள்கை தவறு என்று கூறுவது எவ்வளவு அறிவின்மை தெரியுமா! இது ஆசியாக் கண்டத்திலுள்ள ஒருவன் அமெரிக்காவுக்கு வந்து, மிசிசிப்பி ஆற்றின் ஓட்டத்தை நோக்கி, “ஆறே, நீ பெருகுகிற முறை தவறு,” என்று சொல்வதை ஒக்கும். அது பிறக்கும் இடத்திற்

குச் சென்று அதைப் பற்றிய ஆராய்ச்சியை இவன் தொடங்க வேண்டுமன்றோ ? அமெரிக்க நாட்டு மனிதன் ஒருவன் ஆல்ப்ஸ் மலையைக் கண்ட பிறகு அதிலிருந்து பிறக்கும் ஆற்றின் ஓட்டத்தைத் தொடர்ந்து அது ஜெர்மன் கடலில் கலக்கும் வரையிற் சென்று, ''இது சுற்றிச் சுற்றி ஓடுகின்றது. இதன் குற்றத்தை அகற்றுவதற்கு நான் வகுத்தபடி செய்ய வேண்டும்,'' என்று கூறல் எவ்வளவு அறிவீனமோ, அவ்வளவு அறிவீனமாகும் இதுவும். பொன்மய நியதி இவ்வையகத்தைப் போன்றே மிகு தொன்மை வாய்ந்தது என்றார் விவேகானந்தர். எல்லா ஒழுக்க இயல்பின் சட்ட திட்டங்களும் இதன் அடிப்படையில் தோன்றியவைகளே. மனிதன் ஒரு பிண்டம் என்று கூறலாம். 'நரகக் கொழுங்கனலில் நம்பிக்கை வைப்பது வெறும்பிதற்றல்,' என்று அவர் மொழிந்தார். ஞாலத்தில் துயர் மண்டிக் கிடக்கிறவரையில் கலப்பற்ற இன்பம் விளங்க இயலாது என்று அவர் உரைத்தார் ; இறைவரை இறைஞ்சுகிறபொழுது சில சமயத்தவர்கள் பின்பற்றும் முறையை எள்ளி நகையாடினார் ; இந்துக்கள் கண்ணை மூடி அகவுயிரோடு இணைந்திருந்தார்களென்றும், கடவுள் விண்ணில் ஓர் சிங்காதனத்தில் வீற்றிருப்பதாக ஒரு முறையை நோக்கி நிற்கும் கிறித்தவர் சிலரைத் தாம் கண்டதாகவும் கழறினார். சமயங்களில் இரண்டு இறுதி எல்லைகளுண்டு : ஒன்று, சமய வெறியர்கள் நிற்கும் இடம் ; மற்றொன்று, நாத்திகர்கள் வீற்றிருக்கும் வட்டம். நாத்திகனிடமும் ஒரு வகையான நலம் இருக்கிறது ; ஆனால், கொள்கை வெறியனே, தன்னுடைய அகந்தைக்காகவே உலகத்தில் வாழ்கிறான். இன்னாரென்று அறியலாகாத ஒருவர் தமக்கு இயேசுநாதரின் இதய ஓவியத்தை அனுப்பினதற்காக விவேகானந்தர் அவருக்கு நன்றி கூறினார்.

இதுதான் கருத்து வெறியினுடைய இயல்பின் வெளிப்பாடு என்று கருதினார். கொள்கை வெறியர் எந்தச் சமயத்தையும் சார்ந்தவரல்லர். அவர்கள் தனிப்பட்ட தோற்றங்களே.

பொருட் குறிப்பகராதி

அ

(அ) - உள்ளுலகம், 244 - 45
அகங்காரம், 138, 219, 227, 236, 394
அகந்தை, 426
அங்கவீனர்கள், 256
அசுவமேதயாகம், 290
அசோக சக்கரவர்த்தி, 22
அச்சமின்மை, 416
அஞ்ஞேயவாதி, 466
அடிமைகள், கிரேக்க ரோமானிய, 408
அடிமைத்தளை, 170
அடிமைத்தனம், 394
அடைக்கலம், 396
அணுக்கள், 224, 403
அண்டம், பிண்டம், 212
அதிசயமான பொருள், 45, 46
அத்தியாஸம், 219
அத்துவைதம், 4, 11, 13; இதன் விளக்கம், 37-39
அத்துவைதம், துவைதம், (வேற்றுமை), 297
அத்துவைதிகள், 9, 156, 298
அநிர்வசனீயம், 10
அந்தரான்மா, 111
அபூலியஸ், 200
அப்பியாசம், 414
அமரத்துவம் (சாவின்மை), 88
அரக்கன், 428
அரசனும் அலுவலர்களும் (சன்னியாசிகளும் கதை), 333-7
அரசனும் துறவியும் (கதை), 68
அருச்சுனன், 247-8, 287
அருவமான ஆன்மா, 100 102
அருவமான இறைவர், 86, 100, 102
அருவமான பிரம்மம், 104
அரேபியர்கள், 481
அலெக்ஸான்டிரியர்கள், 22
அலெக்ஸான்டிரியா, 22
அவதார புருடர், 80, 150
அவ்யக்தம், 214
அறியாமை, 415
அறிவு விளக்கம், 359
அற்புதங்கள், 483
அஸ்ரெக்கியர், 362
அஸ்ஸீரியர், 194
அஹுரெமஸ்தா, அஹ்ரிமன், 65
அனுபூதி, 417
அன்பின் சோதனைகள், 441-42
அன்பு (பக்தி) ஒரு சக்தி, 61
அன்புத் தெய்வம், 416
அன்பு முக்கோணம், 416
அன்றாட நடைமுறை வாழ்க்கை, 108

ஆ

ஆகாயம், 224
ஆகுதி, 396
ஆங்கிலச் சீமானும் சீமாட்டியும், 102
ஆங்கிலேயர்கள், 481
ஆசார விதிகள், வெறியர், 96
ஆசாரிய புருடர், 80
ஆசாரியர், 81
ஆசிய ஜோதி, 43
ஆசியாவின் பேரொளி விளக்கம், 378
ஆசையென்னுங் கரங்கள், 395

ஆச்சிரமங்கள், 505
ஆடுகள் நிலே, 48
ஆண்டவர், 427
ஆண்டியோக், 22
ஆதாரம், 272
ஆதாரயோகி, 172
'ஆத்துமன்' ('தான்'), 139, 178
ஆரண்யங்கள் (வனநூல்கள்), 3
ஆராய்ச்சி, 105-6
ஆரியர்கள், 194-198
ஆர்வம், 408
ஆலய சேவை, 363
ஆவிகளின் தட்டுதல், 466
ஆருவது இந்திரியம், 57
ஆனந்தம், உண்மையான, 422
ஆனந்தம், எல்லேயற்றது, 243
ஆனந்தம், நிலேயான, 406
ஆன்மசக்தி, 84, 339, 453
ஆன்மா, 194-5; (இனிப்புக்கு, இன்பத்திற்கு, காரணம்), 134-5
ஆன்மாவின் இயற்கை, 241
ஆன்மாவின் தூய்மை, 78
ஆன்மிக உண்மைகள், 91; உபாசனே, 449; வளர்ச்சி, 100, 104, 431; வாழ்வு, 93, 275, 279-80; விழிப்பு, 70
ஆன்மிகக் கூட்டம், 93
ஆன்மிகம் தொடங்கல், 458
ஆஸிரிஸ், 199

இ

ஈ - உள்ளுலகம், 242
இடக் கணிதம், 452
இதயத் துடிப்பு (கதை), 110
'இதி' 'இதி', 422
இந்தியரின் மனம், 74
இந்திரியங்கள், 137
இந்தோ-ஆரியர், 200
இமயமலே, 102
இயல்பூக்கம், 229
இயேசுநாதர்: 'ஏசுநாதர்' கீழ் பார்க்க
இயைபு நூல், 463
இரசாயன நூல், 463
இரட்டை மாட்டு வண்டி, 91
இரண்டு பறவைகள்: உபநிடதக் கதை, 184, விளக்கம், 185
இராமானுஜர், 4, 288
இருக்கு வேதம், 215
இலௌகிகம், 208-9
இலேச்சினேகள், 362
இல்வாழ்வான் கடமைகள், 328-32
"இழந்த சுவர்க்கம்", 284
இறையன்பு, 444
இறைவா, 78, 416; (இவருக்கு இலக்கணம்) 59, 74-75
இறைவர், சாத்தான் (வேற்றுமை), 65
இறைவரைக் கண்டவர்கள், 309
இறை வழிபாட்டின் மூன்று பகுதிகள், 434
இறைவன் (விஷேணக), 84
இறைவனது சர்வ சக்தி, 204
இறைவனும் பிரபஞ்சமும், 142-3
இஷ்டார் (தேவி), 196
இன்ப துன்ப பேதம், 407
இன்பத்தின் தொடர்ச்சி, 420
இன்பவாதிகள், 408
இன்னல்கள், 425

ஈ

ஈச உபநிடதம், 2
ஈபுருக்கள், 23

உ

உ - வெளியுலகம், 241-42, 244-5
உடல் ஒரு புணே, 173
உடல் ஒரே கோயில், 96, 97
'உடலே தேர்' உவமை, 120-1
உடற்பற்று, 89

உடன்பாட்டு மார்க்கம், 392
உணர்ச்சி, பகுத்தறிவினின்று மாறுபாடு, 50, 51, 52
உண்ணு நோன்பு, 477
உண்மை இயல்பு, 241
உண்மைத் தேட்டம், 123
உண்மையான தருக்க அறிவு, 97
உத்தர மீமாம்சை, 4
உபநிடதக் கூற்று, 385
உபநிடதங்கள், 1-3, 8, 247, 252-3, 256-7
உயிர், 216
உயிர்ச் சமத்துவம், 67
உரிமை, 71, 78; சலுகை, 62-3
உரிமை ஒழிப்பு, 77
உரிமையும் வேதாந்தமும், 70
உருவ வழிபாடு, 96, 432, 450
உரையாசிரியர்கள், 216
உலக இயந்திரம், 410
உலக ஒருமை, 88
உலக சகோதரத்துவம், 60
உலகப் பொருள், 106, 460
உலகமாகிய கனவு, 393
உலகாயத ஆசை, 460
உலகாயதக் கொள்கை 96
உலகாயதர், 436
உலகாயதவாதி, 17
உலகுக் கவர்ச்சி விதி, 389
உள் (நுட்ப) உடல், 175-6
உள்நோக்கு, 122
உள் வாங்குஞ் சத்தி, 393

எ

எகிப்திய ஆன்மா புலம்பல், 195-6
எகிப்தியர், 175, 194
எகிப்து, 362
எட்வின் ஆர்னுல்டு, 43, 378
எதிர்மறைத் தியானம், 173
எதிர்மறை வழி, 174, 392
எயின்ஸ்டீன், 389 (அடிக் குறிப்பு)
எல்லாம் விளையாட்டே, 305

ஏ

ஏசுநாதர், 69, 94-95, 199, 211, 314-315
ஏதென்ஸ், 19, 74
ஏர்லி லாட்ஜ், 13
ஏழையும் பூதமும் (கதை), 367-9

ஐ

ஐம்பூதங்கள் விரிவு, ஒடுக்கம், 216-7

ஒ

ஒய். எம். ஹெச். ஏ., 474
ஒருமை, 75, 77-8
ஒருமை உணர்ச்சி, 75
ஒருமையில நிலைத்த மனம், 76
ஒருமையை நோக்கி முன்னேறுவது, 98-99
ஒரே எண்ண வெறியார் (Monomaniacs) 47
ஒழுக்க நிலை 405, நெறி, 477
ஒழுக்க முறை நூல்கள், 404
ஒழுக்கச் சக்திகள், 415
ஒற்றுமையில் வேற்றுமை, 75, 78
ஒன்றே தெய்வம் எனும் இயக்கம், (Unitarian) 80

ஓ

ஓம், இதன் பொருள், 417

க

கங்கைக் கரையில் கிணறு வெட்டல், 96
கடப்பாடறிதல், 360
கடமை, 396-8, 405
கடவுள் (விளக்கம்), 29-30, 76

கடவுள், ஒவ்வொருவருமே, 83
கடவுள் (கொடுங்கோல்), 84
கடவுள் நிந்தை, 89
கண்ணபிரான், 258, 287
அரசர், 289
கண்ணபிரான் பூரணத்துவம் எய்தினவர், 259
கண்ணின் அத்தாட்சி, 106
கத்தோலிக்க மதம், 454
கபிலர், 220-1, 227, 237
கரு அணுக்கள், 140-41
கரும காண்டம், 1, 2, 248
கரும சாதனையின் இரகசியம், 359
கரும சாதனையின் முடிபு, 401
கருமத்தின் நோக்கம், 316
கருமப் பலன், 382
கருமம், 313, 15
கரும யோக நூல், 405
கரும யோகத்தின் இரகசியம், 319, 374
கரும யோகம், 393-4, 406, 411, 414
கரும யோக முறை, 392
கரும யோகி, 385, 406, 410, 415
கருமானுஷ்டான அடையாள முறை, 363
கர்மா (செய்கை), 311
கல்லூரிகள், 465
கல் வழிபாடு, 50
கவர்ச்சி, 403
கவிஞர் (பாட்டு), 114
கவிதைப் பசி, 484
கள்வனும் பொற்குவியலும் (கதை), 437-38
கற்பொழுக்கம், 355
கனவு, அதன் படைப்புச் சக்தி, 97
கனவு, அதன் மறைவு, 60
கனவு, நல்லதும் கெட்டதும், 60
கனவுகளின் விளைவு, 465
காபா, 430
காரண காரியச் சங்கிலி, 278
காரண காரியத் தொடர்பு, 168, 388
காரணமே காரியமாகும், 144, 148
காலதேச வர்த்தமானங்கள் (தொடக்கம்), 301
கிரீஸஸ், 45
கிரியைகள், 429, 433
கிறித்தவ சமயம், 408
கிறித்தவர், 92; அவர் சொல், 391
கிறித்தவன், 250
கிறித்து, 23, 103, 423
கிறித்துவின் மொழி, 436
கிறித்துவும் புத்தரும், 399, 402
கீதை, 419
கீதை இரண்டாவது அத்தியாயம், 293-6
கீதையில் உபநிடதங்களின் விரிவுரை, 277
கீதையில் பற்றின்மைக் கொள்கை, 274
கீதையில் சீவன்முக்தன், ஞானி, முனிவன், 65
கீதை மொழி, 253, 260, 263-5, 266-72, 275-83, 374, 385, 400-1, 420
குகைகள், 96
குடியரசுவாதி, 81
குடியாட்சி, 82
குலமுறைக் கொள்கை, 222, 231
குருக்ஷேத்திரப் போர்க்களம், 262, 287, 290
குறிகள், 429
குறை, 422
கேஸ்பர், 203
கைம்மாறு, 422-23
கொடுங்கோலர், 68
கோவில், 309-10
கோவில் குளங்கள், 95

கோரர், யோகி, 288
கௌரவர், 262
கௌதம புத்தர், 314-15

ச

சகுண உபாசனை, 450, 454, 459
சகோதரத்துவம் (உலக), 60
சங்கரர், 4, 9, 288
சங்கற்பம், 137, 227, 233
சங்கிதை, 1
சச்சிதானந்தம், 111-112
சதபதப் பிராம்மணம், 290
சக்திகள், இரண்டு, 71
சக்திகள், தெய்வங்களின், 421
சந்நியாசினி, 473
சந்திரமண்டலம், 32
சமணர், அவரின் முயற்சி, 64
சமத்துவம், 65, 76, 77
சமநோக்கு, 65
சமம், 41
சமயம் (விளக்கம்) 53; வளரும் இயல்புடையது, 272-3
சமயங்கள், 465
சமய சாத்திரம், 417
சமய தாகம் (கதை) 438
சமயத்தின் குழந்தை வகுப்பு, 102, 104
சமய நூல், 405
சமயப்பொறை, 468-71
சமயமும் பௌதிக வாதமும், 73
சமயானுட்டானம், 391, 404
சமரஸம், 80, 292
சமூக வாழ்க்கை, 77
சமூக வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள், 96
‘சமூகம்’ என்ற கடவுள், 101
சலுகை, உரிமை, 62-3
சாங்கியம், 3, 6-9, 213
சாங்கியமும் வேதாந்தமும், 178, 227
சாங்கியர், 178, 271; இவர்களின் ஆராய்ச்சி, 147, 224
சாட்சி மாத்திரம், 381
சாதனை (பயிற்சி), 159
சாதிகள் பலநூறு, 96
சாதிப் பிரிவினை, 72
சாதி, மதம் என்ற பாகுபாடு, 105
சாத்தான், சிறிய, 427
சாத்தானும் கடவுளும், 65
சாத்துவிக எதிர்ப்பு, 322
சாத்துவிகச் சகிப்பு, 324-5
சாத்துவிக புருஷர், 400
சாந்த நிலை, 326 சாந்தம், 395
சாந்தோக்ய உபநிடதம், 288
சாந்தோக்ய உபநிடத மொழி, 277, 286
சால்டியர், 194, 196
சாவின்மை, 98
சாவுக்கு முடிவு, 110
சித்தம், 237
‘சிம்சிம்’ கிணறு, 430
சிரிப்பைத் தூண்டும் ஆவி, 166
சிலுவை, 423,—அடையாளம், 362
சிலேடன் லிசியம் பீரோ, 474
சிவப்பிந்தியர், 409
சிவோஹம், 171
சிற்றின்ப நுகர்ச்சி, 417
சிற்றின்பம், 415
சீர்திருத்தக்காரர், 429-30
சீனதேயத்தான், 316
சீறு, 22
சுகர் கதை, 383-4
சுதந்தரம், 393
சுயநலம், 427
சுயநலம் இன்மை, 300
சுருதி, விளக்கம், 2
சுவர்க்கம், 95, 182, 415
சுவர்க்கமும் நரகமும், 166, 167
சுவஸ்திகா அடையாளம், 362

சுவாமிகளின் நகைச்சுவை, வயிற்றுவலி, 94
சுவாமிகள் கடல் கடந்து சென்றது, 97
சுவாமிகள் முழுப்பட்டினி, 112
சுவாமிகள், இந்தியக் கிழவரும் (நிகழ்ச்சி), 457
சுவிசேஷங்கள், நான்கு, 261
சுவேதாச்வதர உபநிடத மொழி, 286
சூக்குமப் பிரபஞ்சம், 145
சூட்சும சரீரம், 138
சூர்ணி, 3
சொல்லின் வலிமை, 363
சொல்லும் பொருளும், 433
சோம்பேறிகள், 90

ஞ

ஞான இயல், 1
ஞான காண்டம், 1, 248
ஞான சாத்திரங்கள், 411
ஞானம், 312
ஞான யோகம், 415
ஞான யோகமுறை, 392
ஞாஞசிரியன், 338
ஞானியர், 172, 174
ஞானியர், இரண்டு விதம், 66
ஞானியர் வழிபாடு 434, 451

ட

டிப்பணி, டீகா, 3

த

தக்கிணை, 284
தத்துவ சாத்திரம், 454
தமம், 41
தயானந்தர், சுவாமி, 288
தவறுகள் 85
தனி உரிமை, 62
தனித் தன்மை, விளக்கம், 301-2, 456-7
தனித் தொகுதி, 487
தன்மாத்திரைகள், நுண்ணணுக்கள், 217, 218, 227
தன்னடக்கம், 384
தன்னலம், 129, 130, 437
தன்னல மறுப்பு, 376-7, 415
தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரம் (மேற்கோள்), 308
தாதியின் உதாரணம், 381
தாந்தே, இதாலியக் கவி, 407
தாயின் அன்பு, 355-6
திதிட்சை (பொறுத்தல்), 41, 42, 161, 162
தியானம் (சமாதி) நிலை, 240, 241
தியானம், 417
திருத்தம், மேலான, 411
திருஷ்ண நிலை (திருஷ்ண திரிச), 391
திரையும் காட்சியும் 182
தீட்டு, 67
தீமைத் தொழில், 373-4 [325
தீமையை எதிர்ப்பது கடமை, 323
தீரர்கள், 393 [யினர், 411
தீர்க்கதரிசிகள், 448; இருவகை
துயரம், 426
துருவநட்சத்திரம், 102
துவைதக் கொள்கை, 1, 14, 102, விளக்கம், 34, 39, 124, 303-4
துவைதம், 'இரட்டைக் கொள்கை', 144
துவைத லட்சியம், 102
துவைதி, 298
துறவு நிலை, 326
துன்பம், 394-5
துன்ப வாதிகள், 408
தூய மனமுடையவர்கள், 51
தெய்வ இயல், 426, இயல்பு, 484-92
தெய்வங்களின் சத்தி, 421
தெய்வத்தன்மை, 424

தெய்வ வழிபாடு, 152
தென்புலத்தார், 171, 476
தேவயானம், 30
தேசிய வாதிகள், 101
தொலைப் பேச்சு, 466
தொழிலின் முறைச் சாத்திரம், 393

ந

நகைச்சுவை, சுவாமிகளின், 94
நசிகேதன் கதை, 116, 124
நடுவு நிலை, 74
நபி, 450
நரகம் (நிலையம்), 89, ஏழாவது, 427
நரம்புகளில் நுண் இயக்கங்கள், 465
நற்கருமம், 374
நன்மை செய்தல், 366
நன்மை தீமை செய்கிற சக்தி, 373
நன்மை தீமை விளக்கம், 405
நாகரிகம், 471
நாட்டின் பொற்காலம், 64
நாத்திகர்கள், 22, 93, 436
நாமமும் உருவமும், 433
நாம வழிபாடு, 433
"நானே அது!" 112, 123; "—அவன்!", 162
நான்கு நிலைகள் ('ஆசிரமங்கள்'), 327
நான்கு மார்க்கங்கள், 403
நிகழ்காலம் ஒன்றே உண்மை, 94
நியதி, 388-91
நியாய, 3,—முரண்பாடு, 75
நியாய முறை, 418
நியூட்டன், 312
நிலக்கவர்ச்சி விதி, 312
நிலையுடைமை, 188, 189
நிவிருத்தி, 377
நிஷ்காம கருமம், 292, 316-7
நீகிரோவன், 98
நீதி சாத்திரம், 74
நீதி நெறி, 76
நீதி நெறியின் இலட்சியம், 78
நுட்ப உடல், 138
நுண்ணுயிர்கள், 420
'நேதி, நேதி', 392
நையாயிகர், 388
நோய்க் கிருமிகள், 426

ப

பகவத் கீதை, 2
பகுத்தறிவு, 228, 229
பசிபிக்கு மகாஸமுத்திரம், 94
படிப்பில் மதிப்பு, 455-6
படைப்பு, 408-9
படைப்பு கற்பனை ஓவியம், 87
பட்டுப் பூச்சியின் கூட்டுச் சிறை, 172
பணத்தால் விளையும் பந்தனை, 415
பக்தி (அன்பு) ஒரு சக்தி, 61
பக்தியோகம், 415
பக்தியின் பிறவடிவங்கள், 415
பரபக்தி, 416
பரப்பிரம்மம், 417
பரமான்மா, 450
பரம்பரைக் கொள்கை, 472
பரம்பொருள், 416
பரிணமம், 8, 141, 237
பரிபூரணத்துவம், 391, 404-5
பலவீனம், 420-1
பழமொழி, 408
பழைய மனிதன், 380
பனிமலைகளில் தூங்கும் ஆசை, 85
பன்மை, வேற்றுமை உணர்வு, 99
பன்றி அவதாரம் (கதை), 86
பாண்டவர், 262
பாதிரிமார், 434, 472, 481
பாபிலோனியர், 175, 194, 362
பாம்பு வழிபாடு, 451
பாரஸீகம், 23
பாரஸீகர், 200, 481
பாரம்பரிய முறை, 221, 231

பாரிச வாயு, 90
பாரிசிகள், 199
பார்ஸிகள், 80
பால ஸந்யாசியார் கதை, 334, 337
பாலஸ்தீனம், 13
பாலைவனம், சுவாமியின் அனுபவம், 152
பாவம், 85
பாவமும் பாவியும், 370
பாவ விலங்குகள் நாய், நரி (கதை), 159, 160
பாஸ்டன், 46
பாஷ்யகாரர்கள், 2, 215, 216
பாஷ்யம், 3
பிச்சைக்காரர்கள், 422-4
பிட்சே, எச், 202
பிண்டம், அண்டம், 212
பிரகிருதி, 147, 148, 234, 235, 236
பிரகிருதியில் இறைவர், 74
பிரதி கருமம், 372
பிரதிச் செயல், 137-38, 223
பிரபஞ்ச இரகசியம், 124
பிரபஞ்சத்தோடொன்றுவது, 405
பிரபஞ்சப் பற்று, 392
பிரபஞ்சம், 390, 393
பிரபஞ்சமே ஒரு குறி, 431-2
பிரம்மம், 416, சகுண, 416, 429
பிரம்ம ஸமாஜம், 474
பிரவிருத்தி, 377
பிரளய படைப்பு வட்டம், 5
பிரளயம், 214
பிராணன், 216, 237
பிராணயாமம், 237
பினிசியர், 362
புதிய ஏற்பாடு, 261
புத்த சமண மதங்கள், 429
புத்த சமயம், 19, 22, 257, 411
புத்தரின் துதி பாடல், 64
புத்தரின் பேச்சு, 85
புத்தர், இருபத்தைந்தாவது 400,
புத்தர்கள், 73
புத்தர்களின் முயற்சி, 64
புராட்டெஸ்டென்டு மதம், 454
புராணக் கதை, 86
புருடன் பல, கவரும்சக்தி, அறிவு, 235
புருடன், 239
புரோகிதர், 251-2, 257, 284
புரோகிதர், ஆன்மிகமும், 68
புரோகிதர், தாழ்ந்த ஜாதியானும் (கதை), 67
புரோகிதர் வேதாந்தமும், 67
புரோகிதன், 476
புலனுகர்ச்சி, 395
புலன்கள், 137
பூரண சாத்விகம், 399
பூரணத் தன்னல மறுப்பு, 376, 405-6, 411
பூரணத் துன்ப நீக்கம், 407
பூரணத்துவம், 374, 383-5, 386, 404
பூரண பேதமின்மை, 409
பூரணப் பேரானந்தம், 11
பூரணப்பற்று நீக்கம், 400
பூரணுகுதி, 396
பூரணுனந்தம், 407, 409
பெருந்தவறு, 418
பெரும் மயக்கம், 96
பெரு மன்னரும் முனிவரும் (கதை), 440-1
பேதைமை, 404
பேப்டிட்ஸ்ட், 80
பேய் பிசாசுகள், 90, 97
பேரின்பப் பேற்றுக்கும் நெறி, 116, 127
பேரின்பம், 421
பைதகோரஸ், 199, 227, 237
பைபிள், 433
பொருளாதாரக் கொள்கை,
பொருளாதாரப் போராட்டம், 256

போதாயனர், 288
போராட்டம், 77, 96
பௌதிக தத்துவ ஆராய்ச்சி, 323-4 (அடிக் குறிப்பு).
பௌத்தர்கள், 3
பௌத்தன், 251

ம

மகத்து '(அறிவு), 6, 7, 219, 225, 227, 236
மகா நிர்வாண தந்திரம், 328
மதக் குருக்கள், 448
மதங்களை ஆராய்தல், 435
மதச் சின்னங்கள், 452
மதத்தின் மூன்று பகுதிகள், 361
மதோன்மத்தன்,—மத்தர், 408-9, 410
மத்துவர், 4
மத்தேயு, 199
மந்திரங்கள், 452
மமகாரம், 394
மரணம், 420-1
மர வழிபாடு, 450
மறைப்பு, 415
மறைவற்ற மறைபொருள், 105-115
மன அடக்கம், 161
மனத்துக்குரியது, 76
மனத்தின் வெளிப்போக்கு, 122
மனத்துறவு, 395
மனத்தை வெல்வது, 66
மனமே படைத்துவிடும், 167
மனித இயற்கை, 74
மனிதர் இயல், 425
மனிதர் நான்கு வகுப்பினர், 377
மனிதன் மூன்று பொருள்களாலானவன், 130
மஹாபாரதம், 186, 187, 287
மாக்ஸ் முல்லர், 74
மாதர்களுக்கு ஆன்மாக்கள், 463
மாயை, 169
மாயை எப்படி வந்தது? விளக்கம், 9, 11
மாயையின் ஆட்சி, 158
மாஸ்பரோ-ஏ-எர்மன், 194
மித்தை, 417
மிலேச்சர்கள், 198
மில்டன், 284
மின்புலன், 87
'மீடியங்கள்' ஆவிகளோடு பேசுவோர், 93, 283, 458-59
மீமாம்சகர், 248
முகம்மதிய மதம், 449
முகம்மதியர், 316
முடிவற்ற தன்மை, 107
முடிவற்ற பரம்பொருள், 110
முதற்றர விரர், 402
முக்தி, 66
முக்தி நிலை, 410-1
முழுச் சமத்துவம், 409
முழுத் தியாகம், 415
'முன் இருப்பு' 192
மூட நம்பிக்கைகள், 291
மூலப் பொருள், 239
மூன்று அவத்தைகள், 156-57
மூன்று குணங்கள், 266, 321
மூன்று சக்திகள், 214
மூன்று நிலை, 54
மூன்று பொருள்கள், 165
மெத்தடிஸ்டு, 80
மெய்யன்பு, 415
மெய்யுணர்வு, 478
மெய்ஞ்ஞான சாத்திரம், 478
மெய்ஞ்ஞானப் படிகள், 40
மோஸஸ், 53, 274, 362
மௌன கோபுரங்கள், 200

ய

யஜுர்வேதம், 2
யாஞ்ஞவல்கியரும் மைத்திரேயியும், 128-36

யூதர்கள், 13, 69, 80, 199, 481
யூனிட்டி கிளப், 474, 478-9
யூனிட்டேரியன் சர்ச், 474, 478-9
யோகங்கள், 414
யோக நிலை, 461-62
யோக நெறிகள் நால்வகை, 414
யோகம், 414
யோகிகள், 271
யோகியார் ஒரு, 399
யோசேப்பு, 314

ர

ரஜோகுணம், 399
ராஜயோகம், 416
ரிட்ஜ்வே கார்டன்ஸ், 13
ரெயில்வே இஞ்சின், 109
ரோமர்கள், 481

ல

லண்டன், 55
லிங்கன், 259
லெஸ்ஸிங், 203

வ

வடமொழி, 249
வணிகர், 422
வயிற்றுவலி, சுவாமிகளின், 94
வருங்காலச்சமயம், 79-104
வழிபாட்டுச் சடங்குகள், 449
வாக்கு, 433
வாணிபம், 440
வாழ்க்கை, 375
வாழ்க்கையின் நோக்கம், 380
வாழ்க்கையின்பரம இரகசியம், 419
வாழ்க்கையின் முடிவு (இலட்சியம்), 307-8
வாழ்வின் பெரும் பாடம், 381
வாழ்வின் முழு இரகசியம், 419
விசிஷ்டாத்துவைதம், 4, 145, இதன் விளக்கம், 36, 39, 125
விடுதலை, 393, 417
விடுதலை (முக்தி), 99
விடுதலை பெறுவது, 66
விதி, 206
'வியப்புலகில் அலைஸ்', 168
வியாச சூத்தி, 3, 4, 383
வியாசர், 287, 383
வியாத கீதை, 358
வியாப்தி, 388
விவர்த்த வாதம், 9
விவிலிய நூல், 448
விழிப்பு, 439
விஷ்ணு புராணம், 288
வீடு பெறுவது, 66, 404-5
வெளி உதவி, 89
வெற்றி, உண்மையான, 422
வெற்றிக்குரிய இரகசியம், 418
வேதங்கள், 1, (ஆதி சமய நூல்கள்), 3, 4, 19, 31, 33, 116, 209-11
வேதங்கள் அநுதி, 250
வேதங்கள் சொல்வடிவம், 249
வேதநூல், 82, அதன் அவசியம், 80, அதன் சக்தி, 79
வேதம் 'இருக்கு', 248
வேதம் (ஞானம்), 97, 248
வேதாந்தம், 1, 3, 8, 11, 13, 18-19, 21-7, 55-6, எது அன்று 1, எந்தக் கொள்கைக்கும் பகையன்று, 79, கூறும் கடவுள், 93, 97, கேட்கும் பெரிய பிரச்னை, 90, தொன்மையானது, 97, 103, நாகரிகத்தின் அமிசம், 15, மூன்று படிகள், 38
வேதாந்திகள், 30, 73
வேதாந்திகளின் மனம், 74
வேள்விகள், 116
வேள்வித் தீ, 396
வேற்றுமையில் ஒற்றுமை, 75, 78, 327

வைதிக சமயக் கொள்கை, 1
வைராக்கியம் (பற்றுதல்), 109, 424

ஸ்ரீ

ஸ்ரீபாஷ்யம், 288
ஸ்ரீமத் பகவத் கீதை, 379, 386
‘கீதை’ பார்க்க

ஷ

ஷோபனேர், 132, 203, 228
ஷ்னுரேர், ஏ்.

ஸ்திதப் ப
ஸோலன்,
ஸ்பென்ஸ

ஹ

ஹம்பிரி டேவி, விஞ்ஞானி, 166
ஹார்வர்டு, 1
ஹிந்துக்கள், 175
ஹீப்ரு இருடி மன்னர், 446
ஹீப்ருக்கள், 193
ஹெக்கல், கார்ல், 194, 199
ஹெரடோட்டஸ், 194
ஹெல்லெனிஸ், 199
ஹ்யூம், 203

னகர், 292, 383
வ சக்திகள் (பிராணன்), 138
வன் முத்தர், 52
ஜர்மானியக் கருத்து, 22
ஜனர்கள், 3, 379